கல்விக் கலை

ஆக்கியோன் :

ப. துரைக்கண்ணு முதலியார்,
முதல்வர், டாக்டர் அழகப்ப செட்டியார் ஆசிரியர்க் கல்லூரி,
காரைக்குடி.

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்
தேனும்பேட்டை :: சென்னை–18

முதற்பதிப்பு—மார்ச், 1962

விலை ரூ. 10–00

Kabeer Printing Works, Madras (4613)

முன்னுரை

'கல்விக் கலை' எனப் பெயரிய இந்நூல் அரசினர் அன்பால் வெளியிடப் பெறுவது. இந்நூல் மொழிபெயர்ப்பு நூலன்று; கல்விக் கோள்களை முதற்கண் உளத்தமைத்து முறைப்படுத்தி, மேற்புலக் கல்வியாளர் நூல்களை ஒப்பு நோக்கி, என் பட்டறிவோடு பொருத்திக் கண்டு, கல்விக் கலை தமிழகத்தில் நன்கு விரிந்து பரவ வேண்டும் என்னும் குறிக்கோளோடு எழுதிய முதனூல். கலையெல்லாம் கற்கப் பெறுவன என்றாலும், கற்றலும் ஒரு கலையே ஆகலான் இந்நூல் 'கல்விக் கலை' எனப் பெயர் தாங்கி வெளி வருகின்றது.

இற்றைக் காலம் தமிழுக்குத் தலையிடமும், தலைமைக்குத் தமிழிடமும் நல்கி வரும் காலம். 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்று தமிழுணர்வு பொங்கி வருங் காலம். அரசியல் மொழியாக, அனைத்து நிலைகளிலும் பயிற்று மொழியாகத் தமிழ் வளர்ந்து வருங் காலம். எனவே மறுமலர்ச்சி நெறி தழுவித் தமிழ் மணம் கமழத் தமிழில் கலை நூல்கள் இல்லையெனும் குறை இல்லையாம்படி இந்நூல் யாப்புற்று வெளிவருகின்றது.

தமிழ் மேற் காதலும் தமிழ் வளர்ச்சியில் ஆர்வமும் காட்டி வரும், சென்னை ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி முதல்வர் திரு. M. R. பெருமாள் முதலியார் போன்றார் எண்ணத்தை மலர்விக்கும் இந்நூலென்று எண்ணுகிறேன். இதனை யொட்டியும் தழுவியும் துறை நூல்கள் இன்னும் பெருகித் தமிழன்னை மலரடி அணிபெறும் எனவும் எண்ணு கிறேன். கல்வித் துறையில் அரும்பிய இம் முதனூல் பல கலைமலர்க்கு வழிகாட்டியாய் முன்னோடியாய் இலங்குமென்பது என் எதிர்பார்ப்பு.

இந்நூற் கைப்படியினைப் பார்த்துதவிய என் மாணவனும், இப்போது என்கீழ் தமிழ் விரிவுரையாளனுமாய்ப் பணியாற்றும் திரு. ரெ. சிங்கார வடிவேலன், எம்.ஏ., பீ.டி.,க்கு என் நன்றி உரித்தாகுக. இந்நூலை வெளியிட்டருளும் அரசினருக்குக் கடப்பாடுடையேன். ஆசிரிய மாணவரும், ஆசிரியக் குலத்தாரும் இந்நூலாற் பயனெய்துவர் என்பது என் துணிவு.

இங்ஙனம்

காரைக்குடி,
3–7–1961

ப. துரைக்கண்ணு முதலியார்

பொருளடக்கம்

II. பள்ளி ஆட்சி

I

கல்வி யாது?

கல்வி நாகரிகத்தினும் தொன்மையது. கல்வி வாழ்க்கையே நாகரிக வாழ்க்கை. ஆதிகாலம் தொடங்கிக் கல்வியின் இன்றியமையா மையை உணராதார் இலர். கல்வி என்னும் சொல் 'கல்' என்பதனடி யாகப் பிறந்ததொன்று. 'கல்' என்ருல் கல்லி 'எடு' அல்லது 'தோண்டு' என்று பொருள். 'கல்வி கரையில' என்பது முதுமொழி. அங்ஙனமே, இக்காலத்தில் கல்வியின் வகைகள் பலவாகிவிட்டன. கல்லி எடுபடும் பொருள்கள், வளரும் குழவியின் உள்ளே மறைந்து கிடக்கும் பல்வகை ஆற்றல்களே. அவற்றினை அறிவாற்றல், செயலாற் றல் என்ருலும் பொருந்தும். குழவியின் உள்ளத்தில் மறைந்துள்ள ஒளி கல்லுவதின் பயனுக வளருகின்றது. ஒளியல்லாது உள்ளத்தில் இருள் படிந்து கிடந்தால் ஒளி எவ்வகையானும் பிறக்காது. கல்வியின் உச்சநிலை உள்ளொளியைப் பெருக்குவதேயாகும். எல்லாக் கல்வியும் கல்லுவதனை அடிப்படையாகக் கொண்டது என்று கருதுவது மிகை என் பாரும் உளர். [1] 'ஆடம்ஸ்' என்பார் ஆங்கிலச் சொல்லாகிய 'Education' என்பதன் லத்தீன் அடிச் சொல் educere என்பது உணர்த்தும் பொருள் பொருத்தமற்றது என்பர். ஏனெனில் ஒரு மாணுக்கன் தனது நாட்டின் வரலாற்றினை அறியாத நிலையில், ஆசிரியர் கல்லி எடுப்பதன் பயனுக ஒரு போர் நிகழ்ந்த ஆண்டினை அவன் உள்ளத்திலிருந்து பெற இயலாது. அதைப்போன்று இலக்கணம் கற்பிக்காது இலக்கணத்தைக் கல்லியெடுக்க இயலாது. அற வழியில் பழகாத ஒருவன் அறப்பண்பினை உணர முடியாது. முன்னரே இல்லாத ஒன்றினைத் தோண்டி எடுக்க முடியாது. இருப்பதைத்தான் தோண்டியெடுக்க முடியும். அதனுல் 'கல்லுதல்' என்பதற்குப் பதிலாக 'வளர்த்தல்' என்பதனைப் பொரு ளாகக் கொள்ளுதல் சிறந்ததென்பர் ஆசிரியர். மாணுக்கனது உள்ளப் பாங்கினை உணர்ந்து வினுக்களை விடுத்தும் விடைகளை இறுத்தும் கருத் துக்களைப் பெற்றும் உள்ளத்தை ஊக்கி, மாணுக்கனேடு தொடர்பு கொள்ளுவதே கல்விக்குச் சாலச் சிறந்த முறை. நமது குழவிகள் இயற்கை அன்னையின் மடியில் வளருகின்ருர்கள். அந்நிலையில் அவ் வளர்ச்சியினை, நல்ல முறையில் திருத்தி அமைக்கக்கூடிய வன்மை கல்விக்கு உண்டு. இயற்கை அன்னையே குழவியைச் சிறந்த முறையில் வளர்க்கக் கூடியவள் என்றும், செயற்கை முறைகள் அவ்வளர்ச்சியினைக் குறைவுறச் செய்கின்றன என்றும் கல்வியாளர்கள் ஒரு சிலர் கருது கிருர்கள்.

---

1. Adams:

நாம் வாழும் உலகம் தோன்று தொட்டுப் பலப்பல மாறுதல்களை அடைந்துள்ளது. மனிதனே அவற்றிற்கெல்லாம் காரணம். இயற்கை வாழ்வினின்றும் செயற்கை வாழ்வுக்காக மனிதன் இயற்கையையே மாற்றி அமைத்துள்ளான். காடுகளை அழித்து விளை நிலங்களாக்கிய வன் மனிதனே. தன் வாழ்க்கைக்குப் பயனற்ற விலங்குகளை அழித்துப் பயனுள்ளவற்றை வளர்த்துத் தனது வளர்ச்சியைச் செம்மைப்படுத்திக் கொண்டவன் மனிதனே. மனிதன் நல்லாரோடு இணங்கும்போது நல்லவனாக மாறுகின்றான். தீயவரோடு பழகும்போது தீயவனாக மாறு கின்றான். இன்று உலகம் அளிக்கும் காட்சி மாற்றங்களின் கண்காட் சியே ஆகும்; மனிதனுடைய அகவாழ்க்கையிலும் மாறுதல்கள்; புற வாழ்க்கையிலும் மாறுதல்கள்; இவற்றின் வேகம், கண்டறிய முடியாத நிலையில் உள்ளது. உலகத்தின் ஒரு பக்கத்தில் நிகழும் மாறுதல்கள் மற்றொரு பக்கத்தினை வியப்புறுத்துகின்றன. ஆனால் இம் மாறுதல்க ளெல்லாம் வீணுக்கல்ல. இவை மனித வாழ்க்கையைச் செம்மைப் படுத்துவதற்கே நேர்பவை.

கல்வியின் வழியாகப் பிறந்தவை கலைகள். கலைகள் எல்லாம் மனித னுடைய திறன்களை வெளிப்படுத்துபவை. அவை யாவும் உலகத்தில் பல மாறுதல்களை உண்டாக்கியுள்ளன. மனிதனுடைய சிந்தனை எல் லாம் அறிவுக் களஞ்சியமாகின்றது. அறிவுக் களஞ்சியத்தின் செயற் படு பொருள்களெல்லாம் கலைகளாகின்றன. எல்லாவற்றிற்கும் கல்வியே அடிப்படையாகும். மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதே கல்வியின் சிறந்த நோக்கம். "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என வள்ளுவர் வற் புறுத்துவர். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பதும் முதுமொழி. எனவே மனித வாழ்வுக்கு இவ்விரண்டும் இன்றியமை யாதவை என்பது போதரும். இவ்விரண்டின் அடிப்படையிலே வாழ்க்கை வளம் பெற வேண்டும் என்பதனை நமது முன்னோர் அறுதி யிட்டுக் கூறினர். ஆனால் கல்வி எண்ணோடும் எழுத்தோடும் மட்டும் நின்றால் போதுமா? என்பது இன்றைக் கல்வியாளருடைய வினா. அன் னார் "வாழ்க்கையே" கல்வி என்பர்; கல்வி, வாழ்க்கையின் புகுமுகம் என்பர்; வாழப் பயிற்சி பெறுவதே கல்வி என்பர்; எனவே கல்விக் கூடங்கள் எல்லாம் வாழ்க்கைக்கூடங்களாக அமையவேண்டும் என்று வற்புறுத்துவர்; கல்விக்கூடம் அளிக்கும் பயிற்சியும் வாழ்க்கையும் வேறுபட்டனவாயின், கல்வி பயனற்றது என்பர். மனிதன் வாழப் பிறந்தவன். ஆகையால் வாழ்க்கைக் கல்வியே பயன் தரும் என்பர். கல்விப் பயனால் புற வாழ்க்கையில் மனிதன் தன்னை உணர்ந்துகொள்ள வேண்டும். உலகத்தோடு பொருந்த ஒழுகும் முறையைக் கற்காதவர் பல நூல்களைக் கற்றிருந்தும், அறிவில்லாதவரே என்று திருவள்ளுவர் ஆணித்தரமாக இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே வற்புறுத்திவிட் டார். உலக வாழ்க்கையை அறிந்தாலன்றிக் கல்வி சிற்றுயிர்க்கு உற்ற

துணையாகாது. அதனால் மனிதன் புறவாழ்க்கையில் தனது நிலையை அறிந்துகொள்வதோடு தான் ஈடுபாடு கொள்ளவும் வேண்டியவனாகிறான். மேலும் மனிதன் தனது அகத்தையும், புறத்தையும் மாற்றி அமைத்துக் கொள்ளும் இயல்புடையவன். எத்தகைய மாறுதல்கள் நன்மையைப் பயக்கும் பயவா என்பவற்றைக் கல்விக்கலை, அவனுக்கு உணர்த்துகின்றது. அவன் பெறும் அகவாழ்க்கையின் ஆற்றல்கள் புறவாழ்க்கையில் மாறுதல்களை உண்டாக்குகின்றன. அகவாழ்க்கையில் பெறக்கூடிய நன்மைகள் புறவாழ்க்கையிலும் நன்மையைத் தேடுகின்றன. ஒரு சமயம் அகம் புறத்துக்கேற்றவாறு மாறுதல் அடைகின்றது. மற்றொரு நிலையில் அகம் புறத்தை நல்ல முறையில் மாற்றி அமைக்கின்றது.

வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளுவதற்கு [1] அஃறிணை உலகத்தோடு மட்டுமன்றி [2] உயர்திணை உலகத்தோடும் ஒட்ட ஒழுகல் வேண்டும். இதனால் சமூக வாழ்வின் பண்புகளைக் கல்வி புகட்டியும் பழக்கியும் செயலாற்ற வேண்டியதாகிறது. பிறரோடு கலந்து பழகி மகிழ்தல், சமூக வாழ்க்கையின் அடிப்படை. அத்தகைய வாழ்க்கையில் மகிழ்ச்சி பெற முடியாதவர்கள், ஒளியுள்ள பகற் காலத்திலும் உலகத்தில் இருளையே காண்பர். இதைத்தான்

> " நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
> பகலும்பாற் பட்டன்று இருள்."

என்று திருவள்ளுவர் கூறுகின்றார். மக்களுக்குரிய பண்புகளை வளர்த்தல் சமூகக் கல்வியின் குறிக்கோள். மக்கட் பண்பு இல்லாதவர்கள் " அரம்போல் கூர்மையான அறிவுடையவரானாலும் அஃறிணைப் பொருளாகிய மரத்தைப் போன்றவரே யாவர்.

> " அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட் பண்பு இல்லாதவர்."

என்று வள்ளுவம் கூறும். கல்வியின் பயனால் வாழ்க்கைப் பண்புகள் வளரவேண்டும்; மக்களும் பண்பாளராக வேண்டும். இது கல்வியின் சமூகப் பயனை எடுத்துக் காட்டுகின்றது. " பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல் " என்ற கலித்தொகைக் கூற்றும் ஈண்டு நோக்கற்பாலது. இதனாலன்றோ மனிதன் தன் வளர்ச்சிப் பருவத்தில் எய்தக் கூடிய நற்பண்புகள் யாவும் அவனது எதிர்கால வாழ்க்கையை வகுக்க உதவுகின்றன. எனவே கல்வி வாழ்க்கையை உருவாக்குகின்றது. இஃது உலகம் அறிந்த உண்மை. ஆனால் இது மிக எளிய கருத்தாயினும் செயலுக்கு அரிய ஒன்று. இக்கருத்தின் மாண்பினை நமது கல்விக் கூடங்கள் நினைவில் இறுத்திக் கொள்ள வேண்டியது இன்றியமையாத

---

1. Inanimate 2. Animate

தோன்றன்றோ? இன்றைய உலகில் கல்வியின் உயிர்நிலை இதுவே. பழங்காலத்திலும் இந்த உயிர்நிலைக் கருத்தே உயர்ந்த கல்வியாளர் களை ஊக்கி உள்ளது. அவர்கள் பெற்ற அறிவெல்லாம் இக்கருத்தின் அடிப்படையில் இயங்கிய சிந்தனையே ஆகும். அமெரிக்காவில் உள்ள ஒரு தனியார் பள்ளி: தன் குறிக்கோள் "[1] பிள்ளைகளை வாழ்க்கைக்கு வழிப்படுத்துவதே" என்று பறை சாற்றி உள்ளது. ஆகையால் கல்வி நிலையங்கள் பாடங்களைத் திணிக்கும் பொறிகள் அல்ல; மக்களை உரு வாக்கும் மாடங்களாகும். மக்களை உருவாக்குவது என்றால் அஃது எளிய பொறுப்பு அன்று. அப்பெரும் பொறுப்பினை உணர்ந்தவர்களே ஆசிரியப் பெருந்தகையார்கள். அப்பொறுப்பினை நிறைவேற்றிச் செயலாற்றுபவையே உண்மையான கல்விக்கூடங்கள்.

1. The great business of living

II
சூழ்நிலை

வாழ்வதெப்படி என்பதை வகைப்படுத்துவது கல்வியின் நோக்கமாயின், வாழ்க்கை என்பது யாது? அதனைக் கல்வி யாங்ஙனம் வகைப்படுத்தும்? இதனை உணர்த்துவதற்கு உயிர் நூல்கள் துணை புரிகின்றன. வாழ்வாங்கு வாழ்வதெப்படி என்பதனை ஆழ்ந்து உணரும் போது கல்வியின் தன்மையும் அதன் பொறுப்பும் தெளிவாகின்றன. குழந்தை வளர வளரக் கல்விச்சாலை அதற்கு வாழ்வாங்கு வாழும் வழி காட்டுகிறது. வாழ்க்கை என்பதில் மனிதனுடைய செயல்கள் அனைத்தும் அடங்கும். இவற்றினை வரையறை செய்ய இயலாது. இவற்றுள் எப்பொறுப்பினைக் கல்விக்கலை ஏற்று நடத்தக் கூடும் என்பதும் ஐயப்பாடு. இத்தகைய இடர்ப்பாட்டில் [1] உயிரியல் உதவுகின்றது. எல்லா உயிர்களும் தமது சூழ்நிலைக் கேற்பத் தம்மைப் பொருத்திக் கொள்ளுகின்றன. பொருத்திக் கொள்ளும் தன்மையே உயர்திணை, அஃறிணைப் பொருள்களை வேறுபடுத்துகின்றது. சூழ்நிலை இயற்கை உலகமாகவும், மனித உலகமாகவும் மதித்தற்குரிய கருத்துலகமாகவும் பரந்துள்ளது. உயர்திணைப் பொருள்கள் சூழ்நிலைக்கேற்ப இயங்கும் தன்மையன. மனித வாழ்க்கை, வாழ்நாள் முழுவதும் சூழ்நிலைக்கு ஏற்ற பெற்றி பொருத்திக் கொள்வதேயாகும். கல்வியின் அடிப்படை இதனைத் தலைமைக் குறிக்கோளாகக் கொண்டது. இதனால் மனிதத் தன்மையை வேண்டியபடி மாற்றிச் சூழ்நிலைக்கேற்ப இயைத்துக் கொள்வதற்குக் கல்வி உதவுகிறது. சூழ்நிலையை மாற்றி அமைப்பது ஒரோ வழி. தனி ஒருவன் அதனைச் செய்ய இயலாது. அவன் தன் சூழ்நிலைக்கேற்றவாறு தன்னைப் பொருத்திக் 'கொள்ளத்தான் இயலும். ஆனால் தனி ஒருவனுடைய ஆற்றல், சூழ்நிலையையும் மாற்றக்கூடும்: மனிதன் தனக்கேற்றவாறு அம்மாறுதல்களின் பயனை எய்தக்கூடும். பொதுவாக மனிதன், சூழ்நிலை தன்னை மிஞ்சும்படி விடுவதில்லை. இயற்கையாகவே சூழ்நிலையை மாற்றி அமைக்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு. மனிதத் தன்மை தொன்று தொட்டு மாறுமலே இருப்பது கண்கூடு. அதனால் அவன் சூழ்நிலையோடு போராடுகின்றான்; அச்சூழ்நிலையில் தனது வாழ்க்கைக்குத் தடையாக உள்ளவற்றை நீக்கி அவற்றைத் தனது நல் வாழ்வுக்கு உரிய முறையில் மாற்றி அமைக்கின்றான். எனவே, எவ்வகையானும் மனித இனமும் சூழ்நிலையும் ஒன்றிய நிலையில் அமைகின்றன.

---

1. Biology

சூழ்நிலையோடு இயைபு பெறுங்கால் மனிதன் தன்னை மாற்றிக் கொள்ளுகின்றான். சூழ்நிலையை மாற்றி அமைக்கின்றான். அல்லது இருமருங்கும் மாற்றம் நேர்கின்றது. எது மாறுதல் பெறவேண்டும் என்பதைக் கல்விக் கருத்துக்கள் முடிவு செய்கின்றன. மாற்றி அமைப்பதெல்லாம் கல்வியின் செயற்பாடுகள். மனிதனுக்கும் சூழ்நிலைக்கும் உள்ள உடன்பாடுகளை உறுதிப்படுத்த உதவுவதே கல்விக் கலையின் நோக்கம். இதனை இதனால் இதைக்கொண்டு முடிக்கலாமா என்பதனை ஆய்வதே கல்விப் பண்பு. அதனை ஆய்ந்து அறுதியிடுவதே கல்வியின் பயன்.

மனிதனைச் சூழ்நிலையோடு இயைபு படுத்துவதே கல்வியின் பணி என்றால், கல்வியாளர்கள் மனிதனையும் உணர வேண்டும். அவன் வாழும் உலகினையும் அறிய வேண்டும். மனிதனை உணர்வதென்பது மனிதனுடைய தன்மையையும் அதனை உருப்படுத்தும் உள்ளத்தினையும் அதன் ஆற்றலினையும் திரிபற அறிவதே ஆகும். ஒவ்வொருவனுடைய ஊக்க ஆக்க ஆற்றல்களின் வளர்ச்சியினையும் நன்கு அறிய வேண்டும். [1] புற உலகில் உள்ள சூழ்நிலைகள் முழுவதையும் அறிய வேண்டும். கல்வியாளர்களின் பொறுப்பு மிகப் பெரியது; அகன்றது; நுணுகி அறியற்பாலது. உலகத்தை மட்டும் அறிவதோடு நில்லாது அண்டத்தையும் அறிய முனைவது இன்றைய கல்வியாளரின் அறிவுப் பரப்பு. இன்றைய உலகத்தை மட்டும் அறிவதோடு நில்லாது வருங்கால உலகத்தையும் முற்கூட்டியே உணர வேண்டியதும் அதன் கடமையாகும். இன்றைய மனிதத்தன்மை நாளை எங்ஙனம் மாறுமோ என்பதை அறிய வேண்டியதாகிறது. இங்ஙனம் மாறுதல்களையே மாட்சிமையாகக் கொண்ட மனிதனையும் அவன் வாழும் உலகத்தினையும் மூன்று காலங்களிலும் அறிய வேண்டியது கல்வியாளரின் கடமை. கல்விக் கலையின் நிலைக்களம் மிகப் பெருகுவதோடன்றி, அஃது இயங்குவதற்கு அறிவும் அகன்றதாக அமைய வேண்டும். கலைகள் யாவினும் கல்விக் கலையே மனித இனத்துக்கு நன்மை பயக்கக் கூடியது.

> "இம்மை பயக்குமால்; ஈயக் குறைவின்றால்;
> தம்மை விளக்குமால்; தாமுளராக் கேடின்றால்;
> எம்மை உலகத்தும் யாம்காணேம்! கல்விபோல்
> மம்மர் அறுக்கும் மருந்து."

என்று கல்வியை மருந்தாக்கும் நாலடி மாண்பு காண்க.

---

1. Objective world

III

ஏன் கல்வி ?

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" என்றும், "கற்கை நன்றே, கற்கை நன்றே; பிச்சை புகினும் கற்கை நன்றே" என்றும், "கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க்கு உற்ற துணை" என்றும் பலபடக் கல்வி வற்புறுத்தப் பெறுகின்றது. மனிதன் தனது [1] குலக்கூறோடு பிறக்கின்றான். அதன் சார்புற்ற அவனது திறமைகள் கல்லாது பெற்றவை; அதன் பயனாக அவன் தனது சூழ்நிலைக்கேற்பத் தன்னைப் [2] பொருத்திக் கொள்ளுதல் இயலாது. மனிதன் கல்லாது இயற்கையாகவே தன் அறிவை வளர்த்துக் கொள்ளுதல் ஒருவகையான் சிறந்ததாயினும், அவ்வகையான் ஐயம் திரிபு அறக் கற்றல் இயலாது. இன்றைய உலகம் எல்லாப் படியாலும் மிக்க விரைவாக முன்னேறிக்கொண்டு இருக்கின்றதல்லவா ? மனிதன் அத்தகைய உலகத்தை அறிவதோடு மட்டுமன்றி அதன் வேகத்தை எட்டிப் பிடிக்க வேண்டியவனாகின்றான். குலக்கூறாய் அமைவன மிகக் குறைந்த அளவின. பெற்றோரறிந்த எல்லாம் அவர்களுடைய பிள்ளைகள் பெறுவதில்லை. ஏதோ ஒரு சிறிது ஆற்றல் பெற்றாலும் அவற்றையே நம்பி வாழ்வதென்றல் ஒவ்வாது. மனிதப் பிறவிகள் எல்லாம் உலகத்தில் வளர்ச்சி பெற்றுள்ள நாகரிகத்தை அறிவதோடன்றி, அதன் பயனையும் பெறவேண்டும். ஆகையால் உலக அறிவினை உலகத்தோடு ஒட்டி வாழ்ந்து பெறவேண்டி இருக்கின்றது. நாகரிகமே இல்லாத ஓரிடத்தில் குழவிப் பருவத்திலிருந்து பிள்ளைகள் தாமாகவே இயற்கையோடு வளர்ந்தால், அவர்கள் காட்டார்களாகத் தான் தோற்றமளிப்பார்களே அன்றி மனிதத்தன்மை நிறைந்தவர்களாகத் தோன்றார். மனிதப் பிறவிகளில் சில அத்தகைய நிலையிலேயே இன்றும் காட்சி அளிக்கின்றன. அவற்றிற்கும் உலக வாழ்க்கைக்கும் எவ்வகையானும் தொடர்பு கிடையாது. நாகரிகம் இயங்காத ஓரிடத்தில் குழந்தைப் பருவத்திலிருந்து வளர்ந்தாலும் அவர்கள் நாகரிகப் பொருள்கள் பலவற்றினை அறிய முடியாது. அவற்றை எல்லாம் தமது வளர்ச்சிக்கும் வாழ்க்கைக்கும் பயன்படுத்திக்கொள்ளாது, பயனற்றவை

1. Heredity 2. Adjustment

யாக உதறித் தள்ளுவார்கள். ஆனால் இக்குழவிகளை நாகரிக உலகில் வளரவிட்டால் அக்குழவிகள் பலவற்றினைக் கண்டு அறிந்துகொள்ள முடியும். மற்றவர்கள் செய்வதை அவர்களும் பார்த்து அவர்களைப் போலத் தாமும் செய்யப் பழகுவார்கள். ஆனால் அவர்கள் எதைச் செய்தாலும் அதன் பயனை அறிய முடியாது. கிளிப் பிள்ளைகளைப் போலப் பேசப் பேசியும், குரங்கினத்தைப் போலச் செய்வதைச் செய்தும் பொருளற்ற வாழ்வினை வாழ்வார்கள். நாகரிகப் பொருள்கள் எல்லாம் அவர்களுக்குப் பொருளற்றவையாகக் காட்சி அளிக்கும். இளமையில் [1] வழிகாட்டி இல்லாது வளரும் குழவிகள் வழிகெட்டுத் திகைக்க நேரிடும். ஆசிரியனுடைய வழியில் வளருபவர்கள் விரைவாகவும், மிகுதியாகவும் உலக அறிவைப் பெறலாம். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது நாம் அறிந்த முதுமொழி. "இளமையிற் கல்" என்பது ஔவையின் வாக்கு. இவற்றிற்கேற்ப இளமையிற் கற்கும் திறனைப் பெற்றால், யாண்டு பலவாக, அத்திறன் வளர்ச்சியுற்று வாழும் உலகினை நன்கு அறிந்துகொள்ள உதவும். வயது முதிர்ந்தவர்களிடையே காணும் திறங்கள் எல்லாம், அன்னார் இளமையில், கற்கும் வழிகளிற் கற்றதனால் விளைந்தவை ஆகும். இத்தகைய திறனைத் தந்தை தன் மகார்க்கு அளிக்க முற்படுகின்றான். ஒவ்வொரு குடும்பமும் அதன் குழந்தைகட்கு இத்திறனை அளிக்கின்றது. இத்தகைய தந்தை தாயர் பொறுப்பே கல்வியாக உருவெடுத்துள்ளது. இக்கல்வியே அனுபவத்திரளாகவும், வாழ்க்கை வழிகாட்டியாகவும், சமூகத்தின் இணக்கக் கருவியாகவும் வழி வழியாக வழங்கப்பெற்று வளர்ச்சி பெற்றுள்ளது. தொன்று தொட்டு ஒவ்வொரு காலத்து மக்களும், தமது வழியினோருக்குத் தாமறிந்த அனுபவங்களைக் கல்விப் பயனாக அளித்து வந்துள்ளார்கள். அனுபவத்திரளே கல்விக் கலையாக உருப்பெற்று வளர்ச்சி யடைந்துள்ளது. அதனாலன்றோ கல்வியே மனிதன் கண்டறிந்த முதற் கலை என்று கொள்ளுவதற்கு ஏதுவாகின்றது? உலகத்தில் மனிதனுக்குத் தேவையான பலப்பல பொருள்கள் காணப் பெறலாம். ஆனால் அவற்றின் பயனை அறிந்தாலன்றோ அவற்றைப் பயன்படுத்த இயலும்? எனவே ஒருபுறம் மனிதன் உலகத்தில் மாறுதல்கள் உண்டாக்குகின்றான். அதே நேரத்தில் அவற்றின் பயன்களை உலக மக்கள் அறிந்து வருகின்றார்கள். இன்றைய உலகம் மாறுதல் உறுவதில் வேகம் மிக்கது. இன்று மனித வாழ்க்கையே [2] சிக்கல் உறுகிறது. அறிவு பெருகுகின்றது. "உலக சமுதாயம்" என்று ஒன்று உருவாகிக் கொண்டிருக்கின்றது. உலகப் போக்கு வரவுகள் மிக எளிதாகி விட்டன. அறிவுப் பரப்பின் அகலத்தையும், ஆழத்தையும் மனிதன் தொடர்ந்து அறிகிறான். ஆகையால் ஒருவன் தனது வாழ்க்கை முழுவதும் கல்விக் கருத்தோடு வாழ

---

1. Teacher-guide 2. Complex

வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. [1] மனிதத்திறன் வாழ்நாள் முழுவதும் வளர்ச்சிபெற வேண்டியுள்ளது. அதனால் உற்ற சூழ்நிலையோடு பொருத்திக் கொள்ளுதல் மட்டும் போதாது. குழவிப் பருவத்தில் சூழ்நிலை சிறியது. ஆனால் வயது வளர வளரச் சூழ்நிலை உலகமே ஆகின்றது. அவ்வுலகத்தோடு ஒட்டி ஒழுகுதல் கட்டாயமாகின்றது. உலகச் சூழ்நிலையே இன்றைய மனிதனைப் பல கோணங்களிலிருந்து தாக்குகின்றது. அதனால் அவன் தனது வாழ்க்கையினைத் தனது வாழ்க்கை நலனுக்கு ஏற்றவாறு பொருத்திக்கொள்ள வேண்டியவனாகிறான். இத்தகைய அமைவு ஒவ்வொரு வளர்ச்சிப் பருவத்துக்கும் தக்கபடி மாறிக்கொண்டே உலகத்தோடு ஒட்டிய உயர்நிலையை அடைகிறது. இன்றைய நிலையோடு ஒன்றுவதன்றி வருங்காலத்தில் உலகினை மாற்றி அமைக்கும் திறனையும், வளர்த்துக்கொள்ள வேண்டியதாகிறது. அல்லாக்கால் உலகத்தின் முற்போக்கு இல்லாமற் போகுமன்றோ? எனவே மனிதன் பழமையில் முளைத்துப், புதுமையில் திளைத்து, முன்னேற்றத்திற்கும் வழி அறிய முனைகின்றான். வளரும் பருவம் ஒவ்வொன்றிலும் சூழ்நிலை, உள்ள வளர்ச்சிக் கேற்பப் பெருகுகின்றது. குழவி நிலையில் கைகால்களின் துடிப்பும், இளங்காளைப் பருவத்தில் [2] மனவெழுச்சியின் அலைவும், பெருங்காளைப் பருவத்தில் பிழைக்க வழி தேடும் முயற்சியும், மனை வாழ்க்கை அமைத்தலும், முதுமையில் பிழைக்கும் வழியைத் தேடித் தன்னைக் காத்துக்கொள்ளும் வகை வகுத்துக் கொள்ளுதலும் ஆகிய இயற்கைப் பொறுப்புக்கள் ஏற்படுகின்றன. இப்பருவ நிலைகளில் எல்லாம் மனிதன் தனது சூழ்நிலையைத் தனதாக்கிக் கொண்டு தனது வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்ளுகிறான். இப்பொழுது நிலவும் குடியாட்சியில் எல்லாக் குடிமக்களுக்கும் இத்தகைய பொறுப்பு மிகுதி. குடிமக்கள் எல்லோரும் நல்ல முறையில் தம்மை அமைத்துக் கொள்ளுவதற்குக் கல்வியே உறுதுணையாகிறது. வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ள இயலாமை பெரும்பாலும் அறியாமையினாலன்றோ! ஒவ்வொரு நாடும் நல்ல முறையில் தாம் மட்டும் வாழ்வதோடு பிறநாடுகளையும் வாழ்விக்க வேண்டும் என்ற கருத்து, உலக அரங்கில் உறுதிப்பாடு பெறுகிறது. கடந்த இரண்டு உலகப் போர்களுக்குக் காரணம் நல்ல முறையில் கல்வி மனித உள்ளங்களைத் திருத்தாமையே என்று பேரறிஞர்கள் கண்டறிந்து விட்டார்கள். ஆகவே தனி ஒரு மனிதன் களவு, கொலை முதலிய தீயவழியில் ஈடுபட்டால் நீதிமன்றம் எவ்வாறு தண்டனை விதிக்குமோ, அவ்வாறே அத்தகைய தீமைகளைத் தனி ஒரு நாடு இழைத்து வெற்றி முழக்கம் செய்துகொள்ளுவதும் உலக நீதிமன்றத்தில் தவறாகக் கண்டிக்கப்படுகிறது. அதனால் வருங்கால மக்களுக்குப்

---

1. Education has become a life process 2. Emotional instability

போர் மனித இனத்தை அழிக்கும் பழிச்செயல் என்று கருதக்கூடிய உளநிலையைக் கல்வி உண்டாக்க வேண்டும் என்று உலக அமைதியை நாடும் ஐ. நா. அவையினர் கோருகின்றனர். இஃதன்றி ஒவ்வொரு நாட்டிலும் தனி ஒவ்வொரு மனிதனும் வாழ்வதற்குக் கல்வி வழி வகுக்க வேண்டும் என்று உலக அரங்கில் முயற்சிகள் நடைபெறுகின்றன. எந்த மனித உள்ளம் போருக்கு வித்திட்டதோ அதே உள்ளத்தில் அமைதியும் அன்பும் பிறக்கவேண்டும் என்று கருதுகின்றார்கள். அவனவன் அவனவனுடைய திறமைக்கேற்ப உழைப்பதும், அவனவன் அவனவனுடைய தேவைக்கேற்ப வாழ்க்கையினை வகுத்துக் கொள்ளுவதும் கல்வியால்தான் ஏதுவாகும் என்பது வெள்ளிடை மலை.

IV

கல்வியின் நோக்கங்கள்

கல்வியின் நோக்கங்கள் பல. அவற்றுள் பெரும்பான்மையவை பொதுத்தன்மையன. ஏன் எனின், அவை மக்கட் பொதுவுக்கே உரித்தானவை. எஞ்சிய நோக்கங்கள் எல்லாம் அவரவர்களுடைய விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப வகுக்கப் பெற்றவை.

[1] வழி வழி நோக்கம் :

பழங்காலந் தொடங்கி ஒவ்வொரு நாட்டிலும் அதன் மக்கள் எந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கல்வி பயின்றனரோ அதுவே வழி வழியாகக் காலங்கடந்தும் கல்வியின் சிறந்த பற்றுக் கோடாக நின்று அம்மக்களை ஊக்க வேண்டும் என்பது வழி வழி நோக்கமாம். காலப்போக்கில் எத்தகைய மாறுதல்களும் பழைய நோக்கத்தை மாற்றி அமையா. பழைய நிலையில் எந்த வகையில் சமூகம் அமைந்ததோ அந்தச் சமூகப் பண்புகளை ஒரு சிறிதும் மாருதும் மாற்ருதும் காப்பாற்றக்கூடிய தன்மையை, வழி வழி நோக்கத்தார் கல்வி ஏற்பாடு பெற்றுள்ளது. நன்ருகக் கற்றவனே மேதையாகக் கருதப் பெற்ருன். மேதைகளே நாட்டாட்சியில் பங்கு பெற்றனர். அவர்கள் கற்ற கல்விக்கும் ஆற்றும் சேவைக்கும் தொடர்பு இல்லாது இருந்தாலும், அவர்கள் தமது நாட்டுக்குரிய கல்விப் பயிற்சியைப் பெற்ருக வேண்டும். மிகப் பழைய நாடாகிய சீனத்தில் அண்மைக் காலம் வரையில் சீன இலக்கியங்களில் தேர்ச்சி பெற்றவர்களே சிறப்பாளர்களாகக் கருதப் பெற்றனர். நமது நாட்டிலும் வேத காலத்தில் வளர்க்கப்பெற்ற கல்வியின் பயனே இன்றும் மறைமுகமாக ஆதரவு பெறுகிறது. இந்துவாகப் பிறந்த ஒவ்வொருவனும் தன்னை அறிந்து, மும்மலன்களை ஒடுக்கி, நிலையில்லா உடல் வாழ்வினை அகற்றிப் பேரின்ப நிலையில் இரண்டறக் கலப்பதே வாழ்க்கையின் தத்துவமென்று கருதுகின்ருன். அதனுல் அத்தகைய வாழ்க்கைக்கு ஏதுவாகிய பலவாய பண்புகளை நமது நாட்டினர் வளர்த்து வந்தார்கள். சீனமும் நமது நாடும் மிகத் தொன்மை வாய்ந்தவை. அதனுல் சீனருக்கும், இந்தியருக்கும் மிகப் பழமையில் அமைந்த வாழ்க்கை நோக்கங்கள் கல்வி நோக்கங்களாக அமைந்து நெடுங்காலமாக மக்களை இயக்கி வந்துள்ளன.

---

1. Traditional aim

[1] அறிவுப் பயன் :

எல்லாக் கல்வியும் அறிவை வளர்ப்பதற்கு என்பது ஒரு நோக்கம். ஆசிரியன் மாணுக்கனை அறிவுக் களஞ்சியமாக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். [2] அரிஸ்டாடில் காலந்தொடங்கி முன்னோர் கண்ட அறிவுப் பெருக்கம் யாவற்றினையும் கல்வியாகக் கற்பிக்கக் கல்வியாளர் கள் முயன்றுள்ளார்கள். இந்நோக்கத்தையொட்டியே பல நூல்கள் வெளியாகின. புத்துலகத் தொடக்கத்தில் அறிவினைத் திரட்டிப் பாகு பாடு செய்து எளிதாக மக்கள் கற்றுக் கொள்ளுவதற்கு ஏற்ற முறைகள் பல தொடங்கின. அறிவுக் களஞ்சியத்தினை [3] அறிவியல் வழியாகச் செப்பஞ் செய்யும்போது அறிவுக் களஞ்சியமே பல வகையாகித் தனி ஒரு மனிதன் எல்லாவற்றையும் கற்க இயலாது என்பது தெளிவாகி விடும். அதனால் அறிவுத்துறை ஒவ்வொன்றையும் தனித்தனியே கல்லாது எதை வேண்டுமென்றாலும் கற்கக்கூடிய மன நிலையை மாண புறச் செய்வதே கல்வியின் நோக்கம் என்று ஆங்கிலேயக் கல்வியாள ரான [4] ஜான் லாக் வற்புறுத்தியுள்ளார். இவரைப் பின்பற்றியே ஃபிரெஞ்சு நாட்டுப் பேரறிஞரான [5] ரூஸோ தன்னுடைய [6] எமிலிக்கு எல்லா அறிவையும் புகட்டாது அதனைப் பெறக்கூடிய முறையினை மட்டும் கற்பிப்பதே தனது கடமை எனக் கருதினார்.

மக்கள் வாழ்வதற்கு அறிவு இன்றியமையாதது; அழிவு வராமல் ஒருவனைக் காக்கக் கூடியதும் அவனது அறிவே; பகைவர் களுங்கூட அழிக்க முடியாதது அறிவு. இதனையே

> " அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
> உள்ளழிக்க லாகா அரண்."

என்பர் வள்ளுவர். அழிவு வராமல் ஒருவனைக் காப்பது அறிவு என் னும் கருவியேயாகும். அறிவே பகைவர்களாலும் அழிக்க முடியாத அவனுடைய உள்ளரண்.

> " அறிவுடையார் எல்லாம் உடையார், அறிவிலார்
> என்னுடைய ரேனும் இலர்."

அறிவுடையவர் எல்லாச் செல்வங்களும் பொருந்தியவர்கள். அறிவுச் செல்வம் இல்லாதவர்கள் எதை உடையவராயினும் இல்லாதவரே ஆவர் என்றும் திருவள்ளுவர் அறிவுடைமையை அழுந்த மொழிவர். அறிவுடை யார் அறிவினையே நோக்கமாகக் கருதுபவர்: அறிவுப் பெருக்கத்துக்கா கவே அறிவு எனக் கருதுவர்; அதனால் வாழ்க்கைப் பயன்களைக் கருதுவ தில்லை. அந்நோக்கமுடையவர்கள் அறிவுப் பயனைப் பற்றியே நினைக்க மாட்டார்கள். அவர்கள் படித்த வண்ணமே இருப்பார்கள். ஆசிரி

---

1. The Intellectual aim 2. Aristotle 3. Scientific
4. John Locke 5. Rousseau 6. Emile

யர்களும், பேராசியர்களும் இத்தகைய நோக்கினை உடையவர்கள். ஒரு சில அறிவுத் துறைகள் பயனற்றவையாக இருக்கலாம். எல்லா வற்றையும் கற்பது பொருளற்றதாகும். எல்லா நூல்களும் ஒரு வகையில் இவை நன்மை பயப்பவை, இவை தீமையவை என்று மறைமுகமாக உணர்த்துகின்றன. அதனால் அறிவுப் பெருக்கமே நோக்குடையவர்கள், ஓரளவு பயனற்ற நூல்களை நீக்கிப் பயனுள்ளவற்றையே கற்றல் நல்லது. 'கண்டது கற்கப் பண்டித னுவான்' என்பது நம் மொழியிலுள்ள ஊக்கம் ஊட்டும் பழமொழி. அண்மைக் காலம் வரையில் நாம் எல்லா நூல்களையும் பயின்று வந்தோம். எந்த நூலின் பயனையும் நாம் கருதியது கிடையாது. பல கற்பதினுல் நமது அறிவு பலவாகின்றது. ஆயகலைகள் அறுபத்து நான்கு என்று நமது இலக்கியம் ஒருவாறு வரையறை செய்துள்ளது. இவற்றை எல்லாம் பெறுவதற்கே நமது முன்னேர் அரும்பாடு பட்டனர். அங்ஙனம் அறிவு பெற்ருேர் பல்கலை வல்லவராகவும், கலைஞர்களாகவும், புலவர்களாகவும், பேராசிரியர்களாகவும் பாராட்டப் பெற்றனர். தற்காலத்தில் பிழைப்பதற்குப் பயன் பெறக்கூடிய நூல்களை மட்டும் நாம் படித்துவிட்டு மற்றவற்றை வேண்டாமென்று புறக்கணிக்கின்ருேம். ஆனல் உலகம், அறிந்த அறிவு யாவற்றையும் அறிவதே கற்பவன் கடமை என்றும், கற்பிப்போரின் பொறுப்பு என்றும் கருதுகிறது. இத்தகைய குறிக்கோளுக்கு அடிகோலியவர் அரிஸ்டாடில். அவர் காலந் தொடங்கி இந்நோக்கம் கல்வியாளர்களிடையே வளர்ந்துள்ளது.

[1] பண்பாட்டு நோக்கம் :

அறிவு வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது பண்பாடு. எனவே அறிவுப் பயன் வேறு ; பண்பாட்டுப் பயன் வேறு என்று கருதுவது ஏற்புடைத்தன்று. அறிவுப் பயன் கருதுவோர்கள் பல நூல்களைக் கற்று அறிவுப் பெருக்கத்தை அடைகின்றனர். அறிவு வளர்ச்சியால் எல்லாரும் விரும்பத் தக்க பண்பு உருவெடுக்கின்றது. அது நிலையாக மக்களால் ஒழுகப்பெற்று நிலையான பழக்க வழக்கம் ஆகின்றது. பண்பட்ட வாழ்க்கையில் பதிவுற்றவர்கள் பண்பற்றவர்களின்றும் வேருகக் கருதப் பெறுகின்றனர். ஒழுங்குபட்ட அற வாழ்க்கைக்கு ஓரளவு கல்வியறிவு வேண்டற்பாலது. நமது நாட்டில் பண்டைப் பண்பாடு பல மாறுதல்கள் பெற்று இந்தியப் பண்பாடு என உலகத்தில் புகழ்பெற்றுள்ளது. நமது நாட்டினர் ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளைக் கற்றதனுலாகிய ஒருவகை ஒழுக்க நெறிகளை வளர்த்துள்ளனர். இன்னேர் மேனுடுகளின் பழக்க வழக்கங்களையே மேற்கொள்ளுகின்றனர். வேத காலத்து ஒழுக்க நெறிகளை வேத நூல்கள் முதலியவற்றினின்று வடமொழியில் பயின்று அவற்றின் வழியே நிற்பவரைக் காண்

---

1. The Culture aim.

கிறோம். தமிழ் மக்கள் தமிழ் மறைகளைப் பயின்று அவற்றின் வழி நிற்கின்றார்கள். இங்ஙனம் இந்திய நாட்டு மக்கள் ஒருசில வகைகளில் வேறுபட்டாலும் பொதுவாக இந்தியப் பண்பாடு ஒருநிலைப்பட்டதாக விளங்குகின்றது. இப்பண்பாடுகளை எல்லாம் கற்றறிவதே கல்வியின் பயனாகக் கருதப்படுகின்றது. மேனாட்டுக் கல்வி பரவுவதற்கு முன் சிறப்பாக அறிவுப் பயனையும் ஒழுக்கப் பயனையும் நமது நாட்டினர் கல்விப் பயன்களாகப் போற்றி உள்ளார்கள். ஒழுக்கப் பயன் என்றால் அக்கல்வியால் ஒருவகை மனப்பான்மையையும், ஒழுகலாற்றையும் வளர்ப்பதேயாகும். பண்பாளர் எல்லாம் அறிவாளிகள் என்று கருதுவது பொருந்தாது. அறிவாளிகள் ஒரு சிலருள் அவர்களுக்குரிய பண்புகளையே காணமுடியாது. இங்கிலாந்து தேசத்தில் ஆக்ஸ்போர்டு கல்லூரிகளில் பயில்வோர்களுக்குச் சான்றாண்மை வளருகிறது என்று கூறுகிறார்கள். அதனால் அவற்றின் வழி வழிப் பண்பாட்டின் பெருமை உலகறிந்த தொன்றாக விளங்குகிறது.

[1] முழு வாழ்வுப் பயன் :

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் கல்விப்பயன்களைக் கண்டறிய கல்வியாளர்கள் முற்பட்டார்கள். [2] ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர் என்னும் சமூக அறிவியல் ஞானியார் கல்விப்பயன்கள் பலவற்றினை ஒப்புநோக்கி மனிதன் எங்ஙனம் முழு வாழ்வு வாழ இயலும் என்பதனை அறிய முனைந்தார். கல்விப்பயன்கள் பலவெல்லாம் தனி மனிதனுக்கும் அவன் தோன்றிய சமூகத்திற்கும் யாங்ஙனம் பயன் தருகின்றன என்பதனை ஆராய்ந்தார். எங்ஙனமாயினும் கல்வி முதற்கண் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வழி கற்பிக்க வேண்டும்; வாழ்க்கையை நடத்த வழிகாட்ட வேண்டும்; தலைமுறையினரைப் பெற்றெடுக்கவும், வளர்க்கவும், திண்ணியராக்கவும் வேண்டும்; சமூகத்தோடு ஒட்டி ஒழுகவும், அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளவும் உருவாக்க வேண்டும்; பண்பாட்டுக் கண்களாகிய கலை, இலக்கியம் முதலியவற்றைச் சுவைக்கக் கூடிய தகுதியினைத் தரல் வேண்டுமென்று கருதினார்.

ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர் வகுத்த கல்விப்பயன், வாழ்க்கையின் எல்லாக் கோணங்களையும் தழுவியது; மற்றவர் கண்ட பயன்கள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டது. ஆனால் கல்வி முழுப்பயனையும் அளிக்கவல்லது என்பதை எங்ஙனம் அறிவது என்பதுதான் கடினம். அங்ஙனம் முழுவாழ்வினை வாழக் கல்வி பயன்படுகிறது என்பதனைப் புறத்தே கண்டாலன்றிக் கருத்தளவிலே காண்பதரிது. முழுப்பயன் என்று கூறுவதனால் கல்வித்திட்டத்தை எங்ஙனம் வகுத்தால் முழுப்பயனைப் பெறமுடியும் என்பதற்கு ஸ்பென்ஸர் வழி காட்டவில்லை. ஆயினும் அமெரிக்க நாட்டில் ஸ்பென்ஸருடைய

1. The complete living aim. 2. Herbert Spencer

கருத்தோடு ஏனைய கல்வியாளர்களாகிய [1] ஹெர்பார்ட், [2] ஃப்ரோபெல், முதலானோருடைய கருத்துக் குவியல்களும் அமெரிக்கர்களுடைய சிந்தனையைக் கிள்ளின. அதனால் 1918ஆம் ஆண்டில் “நாட்டுக் கல்விக் குழுவினர்” அமெரிக்க வாழ்க்கையினை ஏழு பிரிவுகளாக்கி, அவை எல்லாவற்றிற்கும் வகை செய்யக்கூடிய கல்வியே பயனுடைத்து என்பதனைக் கண்டார்கள். அவை முறையே நோயற்ற வாழ்வு, இல்லப்பணி, பிழைக்கும் வழி, குடிமை, ஓய்வுச் செலவு, அறப்பண்பு, அடிப்படைப் பயிற்சிகள் என்பன. அவையெல்லாம் நிரல் நிறையில் அமைந்தவையல்ல. ஆயினும் அவை முழுப்பயன் என்பதனை ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர் வழியில் அமெரிக்கக் கல்வியின் திறத்தைச் சுட்டிக் காட்டின.

[3] ஒருபடித்தான வளர்ச்சியின் பயன் :

ஒருபடித்தான வளர்ச்சியின் பயன் பெறுவதற்கு மனிதன் எல்லா வகைகளிலும் வளர்ச்சி அடைய வேண்டும். உடலோம்பல், அறிவுப் பெருக்கம், அறவழி, கலைவழி இன்னோரன்ன பல வகைகளிலும் மனிதன் தனது ஆற்றலைக் கல்வியால் வளர்த்துக் கொள்ள வேண்டும். இது மனிதனுடைய முழு வளர்ச்சியை நாடுகிறது; மனிதன் ஒருவகையில் மட்டும் வளர்ச்சியுறுதல் நலத்தினைப் பயக்காது என்பதனை வலியுறுத்துகிறது. ஏனெனின் உடலை மட்டும் வளர்த்து உள்ளத்தைச் சுருக்கினாலும் ஊனினைச் சுருக்கி உள்ளத்தைப் பெருக்கினாலும் மனிதன் முழு வளர்ச்சி எய்தல் இயலாது. உடலை மட்டும் வளர்த்தவன் உணர்ச்சி வயத்தனாகவும் குறையறிவாளனாகவும் வளர்ச்சி அடைவான்; எனவே விலங்கை ஒப்பான். அறிவை மட்டும் வளர்த்தவன் தனது சிந்தனையில் சிதறுண்டு கிடப்பானே அன்றி, செயலாற்றலில் தயங்கி நிற்பான். அறிவை மட்டும் வளர்த்தவன் அன்பை அறியான்; எனவே மரம் போல்வான். ஆகையால் இரண்டு வகையிலும் ஒருங்கமைந்த வளர்ச்சியே சமநிலை பயக்கும். ஆனால் ஒருங்கமைந்த என்பதன் பொருள்தான் விளக்கமாக வேண்டும். ஒருங்கமைந்த வளர்ச்சியினை யாங்ஙனம் அறிய இயலும்? அதனை அளத்தலும் இயலுமா? அஃது அகத்தின் நிகழ்ச்சியா? அல்லது புறத்தின் தோற்றமா? அல்லாக்கால் ஒருங்கமைந்த என்பதனால் எல்லா வகையிலும் வளர்ச்சி அளவொத்த வளர்ச்சியா அல்லது எல்லா வகைகளிலும் முழுமை வளர்ச்சியா என்பவை ஐயப்பாடுகள். ஒரே அளவில் வளர்ச்சி என்றால் [4] “அரைகலி முழு மொட்டை”யாக அல்லவோ வளர்ச்சியை அடையமுடியும். பலவகையிலும் முழு வளர்ச்சியை எய்துவதும் இயலாது. தனி ஒருவன் அனைத்துக் கலை வல்லவனாக விளங்குதல் அரிது.

---

1. Herbart 2. Froebel 3. The Harmonious Development aim 4. Jack of all trades, master of none

[1] உளப்பயிற்சி தரும் பயன் :

"கல்வி கரையில கற்பவர் நாட்சில." கற்றறிந்தாருடைய கல்வியும் கை மண்ணளவே. எனவே எல்லாக் கல்வியையும் பெறுவதைக் காட்டிலும் எந்தக் கல்வியையும் கற்பது யாங்ஙனம் என்பதை அறிவது பயனாகக் கருதப்பட்டது. இச்சாரார் உள்ளத்தைச் செம்மைப் படுத்துவது கல்வியின் நோக்கமாகும் என்பர். கிரேக்க இலத்தீன் மொழிகளை வழிவழியாக உளப்பயிற்சிக்காகக் கற்று வந்த மக்கள் அவற்றினைக் கல்லாது விடுவார்களோ என்று எண்ணிய கல்வியாளர்கள், கிரேக்க இலத்தீன் மொழிகளைக் கற்றால் உள்ளப் பயிற்சி பெறமுடியும் என்று பறைசாற்றினார்கள். பல நூல்களைக் கற்றுக் கருத்துக்களைத் திணித்து உள்ளத்தை நிறைத்துக்கொள்வது ஒரு சாராருடைய கொள்கை. ஆனால் மற்றவர் உள்ளத்தில் பல பெற்றிகளாகிய நினைவாற்றல், ஆய்வுத்திறன், கருத்தமைதி முதலியவற்றினை வளர்த்தால் போதும் என்று கருதினர். அறிவைப் பெறும் வழியை அறிந்து கொண்டால் எந்த அறிவினையும் பெறுவது எளிது என்பதே இக் கொள்கையினரின் கூற்று. உடலைப் பண்படுத்துவது எங்ஙனம் கல்விப் பயனாகுமோ அதைப்போன்று உள்ளத்தினைச் செம்மைப் படுத்துவதும் கல்விப் பயனாகும் என்பர் இக்கூற்றினர்.

[2] அறவழிப்பயன் :

அறவழிப் பயனும் ஒழுக்கப் பயனும் பெரும்பான்மை ஒன்றுபட்டவையே. அறவழி நிற்போர் ஒழுக்க முடைமையைப் பேணுவர். கல்வி, ஒழுக்கத்தினை வளர்க்காதுவிட்டால் அக்கல்வி உலகுக்குப் பயன் தராது. அறிவுடைமையும் கல்வியின்பாற் படும். உலகம் பண்புடையவரிடத்தில் பொருந்தியுள்ளதால் இயங்குகின்றது. கல்வி மக்கட் பண்பினை வளர்க்கும் தன்மை உடையதாக வேண்டும். இதனாலன்றோ ஹெர்பார்ட் என்பார் கல்விப்பயனை [3] நல்லொழுக்கம் என்று நயந்துரைத்தார். இஃது எல்லோருக்கும் உடன்பாடாகும். கல்வி வாழ்க்கைக்கு ஏதுவானால் நல்லொழுக்கமே இன்பமான நல்வாழ்க்கைக்குக் காரணமாகும். ஒழுக்கத்தை வருந்திக் காப்பதே கல்வி அளிக்கும் ஊக்கம். ஆனால் தீய ஒழுக்கமும் தீய பயிற்சியால் உண்டாகிறது. தீய பழக்கத்தினையே தீயவர்கள் பரப்புகிறார்கள். [4] சார்லஸ் டிக்கென்ஸ் என்ற [5] நெடுங்கதை ஆசிரியர் [6] ஆலிவர் டுவிஸ்ட் என்னும் நெடுங்கதையில் [7] ஃபாகின் என்னும் தீமையே உருவாகக் கொண்டவன் இளஞ் சிறார்களைத் தீய ஒழுக்கத்தில் பயிற்சி செய்தான். அதனால் சிறுவர்கள் பலர் தீயவழியில் நின்றார்கள். அவருடைய

1. The Mental discipline aim 2. The Moral aim 3. Morality 4. Charles Dickens 5. Novel 6. Oliver Twist 7. Fagin

பயிற்சி சாலையை கல்விச்சாலை என்று கருதுவது? மனிதன் இரு தன்மைகள் உடையவன். ஒன்று அறிவுத் தன்மை; மற்றொன்று விலங்குத்தன்மை. விலங்குத் தன்மையை விலக்கி நற்பண்புகளோடு நலமுடன் வாழ்தலே நல்வழியும் நன்னெறியும் ஆகும். எனவே மனிதன் தன்னை அடக்கி உலகத்தோடு ஒட்ட ஒழுகப் பயிற்சி பெறுவதே கல்வியெனக் கூறுவது ஒழுக்கத்தினையே வற்புறுத்து கின்றது.

ஒழுக்கமே கல்வியின் விழுப்பம் என்று கருதுவது, கல்வியின் பல பயன்களுள் ஒன்ருகத்தான் கருதலாம்; ஒழுக்கம் ஒன்றே என்று அறுதியிடுவது சரியன்று. நமது பள்ளிகளில் ஒழுக்கக் கல்விக்காக ஓர் [1] அகவையை ஒதுக்கியுள்ளார்கள். அங்ஙனம் ஒழுக்கத்தை மட்டுமே விளக்கிக் கொண்டிருந்தால் ஒழுக்கம் ஏட்டளவில்தான் நிற்கும். ஒழுக்கத்தினை மட்டும் ஓதிக்கொண்டால் வாழ்க்கைக்கு வேண்டிய பல துறைக்கல்விப் பயிற்சி வேண்டாமா? ஹெர்பார்ட் கட்சியினர் ஒழுக்கம் ஒன்றினையே வற்புறுத்துவது மிகையாகும். ஒழுக்கத்தின் அடிப்படையில் சமூகத்தில் ஒன்றி வாழ்வதே எல்லாக் கலைகளிலும் மிக்கது என்று ஓர் ஆங்கிலக் கல்வியாளர் கூறியுள்ளார். இன்றைய உலகத்தில் வாழ்க்கையின் இடர்ப்பாடுகள் வளர்ந்துகொண்டே வருகின்றன. அந்நிலையில் மக்கள் ஒருவரை ஒருவர் நம்பி நட்புக் கொண்டு ஒத்து வாழவேண்டியதாக இருக்கிறது; சமூகக் கோட்பாடுகள் பலவற்றுக்கு அஞ்சியும், அடங்கியும் வாழவேண்டியதாக இருக்கிறது. இத்தகைய வாழ்க்கைக்கு அடிப்படை, ஒழுக்கமும் உயர் குணமுமே ஆகும். இவற்றைக் கல்விச்சாலைகள் நன்முறையில் வளர்க்க வேண்டியது கடமை.

[2] சமூகப் பயன் :

குழவிப் பருவத்திலிருந்து நல்ல சூழ்நிலையில் பிள்ளைகளை வளர்க்க வேண்டியது முறையாகும். பிறவியிலேயே பிறந்த விலங்குத் தன்மைகளைக் கல்வியால் கடிந்து வாழ வழி வகுத்தலும் கடமையாகும். தனக்கென வாழ்பவன் தன்னலக் காரணுகிப் பிறர் நலம் விரும்பாத வனுவான். தனித்து வாழ்பவனுக்கு ஒழுக்கக் கட்டுப்பாடு வேண்டிய தில்லை. எல்லா ஒழுக்கமும் சமூக வாழ்வில்தான் விளக்கம் பெறுகிறது. தன்னலம் பாராது பிறர் நலம் பேணுபவர் சமூகத்தில் உயர்வு காண்பார்கள். தனிப்பட்ட ஒருவன் சமூகத்தில் சார்பில்லாது தன்னலத்தையே அடக்கிஞல் துறவியாகின்ருன். எனவே தனி ஒருவனுடைய ஒழுக்கம் சமூகச் சார்பு பெற்றது; சமூகப் பயனுக்கு அடிகோலுவது. ஆகவே ஒழுக்க உயர்வு சமூக உயர்வினையே சுட்டும். சமூகப் பயன் அறிந்து உன்னற் பாலது. பிற பயன்களைக் காட்டி

---

1. Period 2. The Social aim

லும் அதுவே சிறந்ததாகக் கருதப்படுகிறது. சமூகத்தில் திறமையோடு ஒவ்வொருவரையும் ஈடுபடுத்துவது சிறந்ததொரு கல்விப் பயனுகும். தனி ஒரு மனிதன் தானுகவே திறமையோடு பிறருக்குச் சுமையாகாத படி வாழவும், தனது சூழ்நிலையை நன்ருக உணர்ந்தவனுகி அதற் கேற்பத் தன்னைப் பொருத்திக்கொண்டு தனக்காகவும் சமூகத்துக் காகவும் வாழ வழி வகுத்துக்கொள்ளவும், கல்வியே உறுதுணையாவது எனக் கருதுப. அங்ஙனம் வகுத்துக்கொள்ளும் வழியானது அறவழி யாகவே அமையவேண்டியது இன்றியமையாததாகின்றது. தனது சமூகத்துக்குத் தன்னுல் எவ்வகை இடர்ப்பாடும் இன்றித் தன்னுல் இயன்றவரை நன்மையையே நாடுவது, நல்லொழுக்கத்தின் பாற்படும். ஆயினும் கல்வி மனித சமுதாயத்துக்கு மட்டும் வழிகாட்டுவதோடு இயற்கையோடும் மனிதன் வாழவேண்டிய நிலையுள்ளதால் சமூகத் தோடு வாழ சமூகக்கல்வியும், இயற்கையோடு இயைபுகொள்ள அறிவியற்கல்வியும் வேண்டியவையாகும்.

[1] பிழைக்கும் வழிப்பயன் :

பிழைப்பதற்கு வழிகாட்டும் கல்வியே சிறந்ததாகக் கருதுவார் பலர். "பத்தும் பசிவந்திடப் பறந்து போகும்". ஆகையால் கல்விப்பயன் பசிப் பிணியைப் போக்க உதவவேண்டும். ஆயிரக்கணக்கான மக்கள் கற்றவரும் கல்லாதவருமாகப் பிழைக்க வழியின்றித் துன்பப்படுவது கண்கூடு. நமது நாட்டில் ஆங்கிலக்கல்வி கற்றவர்களுக்கு மட்டுமே அயலார் ஆட்சிக்காலத்தில் பிழைக்கும் வழி கிட்டியது. மக்கள் ஆங்கிலத்தைக் கற்ருர்கள். இப்போது தொழிற்கல்வி மேம்பாடுற் றுள்ளது. அதனுல் நமது இளைஞர்கள் அதனையே நாடுகின்ருர்கள். எதற்கோ எனின் அக்கல்வியினைக் கற்று அதிக ஊதியம் பெறுவதற்கே யாகும். எனவே அதிக வருவாயினைத் தரும் கல்வியினையே மக்கள் நாடுகிருர்கள். ஆனுல் கல்வி கற்ருர் பலர் பிழைக்க வழியின்றி வருந்து கிருர்கள். ஆகையால் அவர்களுடைய கல்வி பயனற்றதன்ருே? எக்கல்வியும் உயிர் வாழ்வதற்கு வழிகோல வேண்டியது தலைக்கடன். எனினும் கல்வியின் பரந்த பயன் அறிவுப் பெருக்கமும் ஒழுக்க ஒழுக லாறும் தன்னகத்தே கொண்டதாகையால் வயிறு வளர்த்தற்கு மட்டும் வழிகாட்ட எதிர்பார்ப்பது கல்விப் பெருமையினைக் குறைப்படுத்துவ தாகும். வயிற்றினை வளர்க்கவும் வேண்டும்; வாழ்க்கையின் தரத்தினை உயர்த்திக் கொள்ளவும் வேண்டும்; ஆகவே இவ்விரண்டையும் தந்துத வுவதே கல்வியாகும்.

மனித வாழ்க்கை வயிறு வளர்ப்பதற்கு மட்டுமா? அல்லது வயிற்றை வளர்ப்பதுதான் மனித வாழ்வா? என வினவுவார் உளர். மனிதன் தனக்காகவும் பிறருக்காகவும் வாழவேண்டியது கடமை என்று

---

1. The Living aim.

கல்வியின் சமூகப்பயனை ஆராயுங்கால் கண்டோம். வாழ்க்கையினைப் படம் பிடித்துக் காட்டுவதன்றே கல்வியாலாய பயன். பிழைக்கும் நேரமின்றி ஒய்வு நேரத்தினை நல்ல முறையில் பயன் படுத்தக் காட்டுவதும் கல்வியின் ஒரு பயன். உடலோம்புதலோடு உயிரோம்புதலும் கல்வியின் பிறிதொரு பயனாக அமைதல் வேண்டும்.

> " உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
> அற்றே தவத்திற் குரு."

தனக்குற்ற துன்பத்தினைப் பொறுத்தலும் பிற உயிர்களுக்குத் துன்பம் இழையாதிருத்தலும் கல்வியால் உறும் ஒரு பண்பாகும்.

> " கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
> மற்றீண்டு வாரா நெறி."

கற்க வேண்டியவற்றினைக் கற்று மெய்ப்பொருளைக் காண்பதும் கல்வியின் பயன். ஆகையால் உற்றது தாங்கும் பொறையும் உயிர்க்குத் தீங்கிழையா நிறையும் கல்வியின் முடிந்த முடிபாகக் கோடல் சாலும். கல்விப்பயன் மிகப்பரந்ததாகும். எனவே பரந்த நோக்குள்ள கல்வியன்றே முழுக்கல்வியாகும். இலக்கியமும் சமூகக் கல்வியும் பழமையைப் புகட்டுகின்றன; அறிவியலும் கூடிவாழியலும் புதுமையைப் புகுத்துகின்றன; ஆக இரண்டும் கலந்தது முழு வாழ்க்கையாகும். இன்றைய உலகு வெகு விரைவில் மாறுபாடு எய்திய வண்ணமாக இருக்கிறது; வெறும் வயிற்றுப் பிழைப்புக்காக ஒரு தனித் துறையில் பயிற்சி பெற்றால் பிற துறைகள் ஒன்றும் அறியாது, முன்னேறும் உலகில் பின் தங்கியாக நிற்கவேண்டும். குமரப் பருவத்தில் ஒரு துறைக் கல்வியினைப் பெற்றால் முதிர்ந்த பருவத்தில் மாறுதல் உறும் உலகில் அது பயனுறாது ஒழியலாம். இங்கிலாந்தில் [1] வயது, [2] நாட்டம், [3] ஆற்றல் ஆகிய மூன்றையும் அறிந்து கல்வி வகுக்கப்படுகிறது. இதை ஒட்டியே, [4] ஏட்டுக் கல்விப் பிரிவும், [5] தொழிற் கல்விப் பிரிவும் [6] இரண்டும் விரவிய பிரிவுமாக மூவகைக் கோலத்தில் கல்வி பகுக்கப்பட்டுள்ளது. எனவே, இன்றைய உலகில் எங்கும் நாட்டின் வளர்ச்சிக்கேற்ற கல்வி முறையை வகுக்கிறார்கள். மக்களது நாட்டம் முழுவதும் நாட்டின் தேவையாகையால் கல்வித் திட்டங்கள் மாறிக்கொண்டே வருகின்றன. ஆயினும் பொதுக் கல்வியோடு தொழிற் கல்வியையும் கலந்த திட்டங்கள் உருவெடுக்கின்றன. இதற்கிடையில் எல்லா மக்களுக்கும் ஒரளவு [7] பொதுக் கல்வி வேண்டற்பாலது என்ற எச்சரிக்கையினை ஓர் இயக்கத்தினர் தொடங்கியுள்ளார்கள். எதுவாயினும் ஒவ்வொரு நாட்டிலும் மக்களின் ஊதிய நிலையை

---

1. Age 2. Aptitude 3. Ability 4. Grammar Schools
5. Technical Schools 6. Secondary Modern Schools
7. General education

எத்தகைய கல்வி உயர்த்தக்கூடியதோ, அதனையே திட்டவட்டமாக எல்லாரும் நாடுகிறார்கள். நமது நாட்டில் [1]பல நோக்குக் கல்விச் சாலைகள் ஐந்தாண்டுத் திட்டங்களில் ஆதரவு பெற்று வருகின்றன. இத்தகைய நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டும் நம் இளைஞர் கள் பல நாட்டங்களைக் கருதியும் பல் தொழிற் பள்ளிகளை அரசினர் அமைத்துள்ளனர். பிள்ளைகளின் நாட்டங்களை நன்கு அறிவதற்கு [2]உளவியல் அறிஞர்கள் வழிகாட்டிகளாக உதவி செய்கின்றார்கள்.

[3]குடிமைப் பயன் :

தொன்றுதொட்டு முடியாட்சியில் குடிகளை நன்மக்களாக்கி முடி யுடை மன்னன் காத்தான்; மதித்தான்; மாசறு செங்கோலோச்சினான். குடிகளெல்லாம் அரசனுடைய செங்கோலினையே நோக்கி வாழ்ந்தனர். கல்வி அறிவுப் பயனுக்காகவே வளச்சியுற்ற அக்காலத்தில் குடிமக்கள் சான்றாண்மையோடு வாழ்க்கை நடத்தினார்கள். அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐவகைப் பண்புகளோடு வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ற சூழ்நிலை அறிவுடைய அரசன் அளித் தானுதலால் மக்கட் பண்பு மாட்சி பெற்றுக் குடிமைப் பண்பினை உயர்த் திற்று. அரசன் அவையில் பங்கெடுக்கக் கூடிய பண்புகள் மக்களி டையே வளர்ந்தன. அறநெறியிலிருந்து வழுவிய மன்னனை மக்கள் கடிதலும் உண்டு. குடியாட்சி வளர்ந்த ஏதென்ஸ் நகரத்தில் ஒவ்வொரு குடிமகனும் தனக்கேற்ற விருப்புள்ள கல்விப் பயனை நாடு வதற்கு உரிமை வழங்கப் பெற்றது. அதனால் கல்வி பொதுப் பயனை யும் சமூகப் பயனையும் புறக்கணிக்க நேர்ந்தது. தனி ஒருவனுடைய நாட்டம் ஏற்புடைத்தா அல்லது சமூகப்பயனைக் கருதுவதுதான் கல்வி யின் நோக்கமா என்றதொரு சிக்கல் எழுந்தது. அதனால் இவ்விரண் டுக்கும் ஒத்ததான ஓர் இடைநிலை வேண்டியதாயிற்று. ஒவ்வொரு வனும் அவன் வாழும் சமூகத்தில் ஒப்பற்றவன் என்ற ஓர் ஒப்புதல் உறுதியாயிற்று. பல கலைகளிலும் ஒருபடித்தான பயிற்சி நாட்டு மக்கள் எல்லோரும் பெறவேண்டும் என்று திட்டமும் வேண்டியதா யிற்று. அஃதாவது ஒரு மனிதனை உடலோம்பல், உள்ள வளர்ச்சி, பண்பாட்டு நிலை ஆகிய பல படிகளிலும் வளர்ச்சி பெறுவித்து முழு மனிதனுக்குகிறோம். இத்தகைய முழு வளர்ச்சி பெற்ற ஒவ்வொரு வனும் சிறந்த குடிமகனுகத் திகழ்கின்றான். [4]பிளேடோ முதல் [5]அரிஸ்டாடில் வரை ஒவ்வொரு கிரேக்க மேதையும் குடிமைப் பண் பினையே வற்புறுத்தினார்கள். ஒரு சிறந்த குடிமகன் என்பான் தனது பல திறன்களும் ஒருங்கே வளர்ந்தவன் எனக் கருதினார்கள். நல்ல குடிமகன் குடிமைப் பண்புகளில் மேம்பாடுற்றவன்; மிதப் போக்கு

1. Multipurpose Schools 2. Psychologists 3. The Citizenship aim 4. Plato 5. Aristotle

டையவன்; பரந்த உள்ளம் உடையவன்; நெஞ்சுக்கமிக்கன்; நீதி வழுவாதவன் ஆவான்.

குடியாட்சியில் ஒவ்வொரு குடிமகனும் தனது நாட்டாட்சியில் பங்கு கொள்ள வேண்டிய பொறுப்புள்ளது. இன்று வாக்காளனாக இருப்பவன் நாளை ஆட்சியாளனாக மாற நேரலாம். பழங்காலத்தில் குடியாட்சி நாடுகள் மிகச் சிறியவை. அவற்றில் நேர்முகமாகப் பங்கெடுக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் இருந்தது. இன்றைய குடியாட்சி நாடுகள் எல்லாம் மிகப் பெரியவை. அவற்றின் ஆட்சியில் நேர்முகப் பங்கு இல்லாமற் போனாலும் வாக்குரிமைக்குள்ள பங்கு ஒவ்வொருவருக்கும் உண்டு. இருபத்தொன்று வயது நிறைந்த ஒவ்வொருவருக்கும் இத்தகைய உரிமையைச் செலுத்துவதற்கு வேண்டிய கல்வியறிவு அடிப்படையாக அளிக்க வேண்டியது கடமையாகிறது. நமது நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சியில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கே வாக்குரிமை வழங்கப் பெற்றது. இன்றைய உலக அறிவு வளர்ச்சி பெறும் வேகத்தில், குடிமக்களுக்குப் போதிய கல்வி அறிவு இருந்தாலன்றி அவர்கள் அறிவாற்றலோடு தமது நாட்டின் நடை முறைகளை அறிய இயலாது. தேர்தல் காலத்தில் தகுதியுள்ள போட்டியாளர்களைத் தேர்ந்தெடுக்கப் போதிய அறிவு வேண்டும். தமது நாட்டின் வரலாறு, பொருளாதாரம், ஆட்சி அமைப்பு ஆகியவற்றை நன்றாக அறிய வேண்டியது கடமை. இவற்றோடு நாநலம் என்னும் நலனுடைமையும், கேட்டார் பிணிக்கும் தகைமையும் கேளாரும் வேட்ப மொழியும் சொல் வன்மையும் உள்ளவனாக இருக்கவும் வேண்டும். தமது நாட்டின் ஆட்சி அமைப்பை அறிவதோடு தமது உரிமையையும் கடமையையும் உணரவேண்டும். இதனாலன்றோ நமது அரசினர் மக்களுடைய கல்விப் பொறுப்பினை ஏற்று அவர்களுக்குப் பதினான்கு வயது வரையில் கட்டாய இலவசக் கல்வி அளிப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். நமது நாட்டைப் பொறுத்த வரையில் குடிமக்களைச் செம்மைப்படுத்தக் கல்வி அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு குடிமகனும் தனது முழு ஆளுமையை வளர்ப்பதற்கு வழி வகுத்திருக்கிறார்கள். நமது மக்கள் ஒருவரோடொருவர் ஒன்றி வாழவும், கூடி நலம் பாராட்டவும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையோடும் சமூக உணர்ச்சியோடும் தானடங்கத் தன்குடி விளங்க என்ற மரபு வழுவாது நல்வாழ்வு வாழ்வதற்கும், பொறை யுணர்ச்சியோடு உறவாடுவதற்கும், நாட்டின் நலனை நாடுவதற்கும், நாட்டுப் பற்றோடு நயம் பாராட்டுவதற்கும் கல்வி பயனுறும்படி உயர்நிலைக் கல்வியின் உறுதிகள் உள்ளன. நாட்டுப் பற்றானது நாட்டு வெறியினைத் தூண்டாதபடி "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பழந் தமிழரின் பண்பாட்டு அடிப்படையில் நமது நாட்டு குடிமக்களெல்லாம் உலகத்தோடு ஒப்புறவு கொண்டு உலகக் குடிமக்களாக வாழவேண்டும் என்ற நல்லெண்ணத்தை நமது நாட்டுக் கல்வித் திட்டம் நயந்துரைக்கிறது.

மக்களாட்சியின் பொறுப்பு மக்களுடையதாகையால் குடிமைப் பண்புகளை மட்டும் வளர்க்கக்கூடிய கல்வியோடு நிற்காது, மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கும் உதவும்படி கல்வித்திட்டம் அமைந்துள்ளது. குடிமைக்காக நல்கும் குடிமைக் கல்வி குறுகியதாகும். ஆனால் பலதுறைக் கல்வித் திட்டமே—குடிமக்களுடைய பொதுப்பட்ட முழு வாழ்க்கையின் தரத்தினைப் பல வழியாக உயர்த்துவதே—இன்றைய குடியாட்சி நாடுகளின் அகன்ற பொறுப்பாக அமைந்துள்ளது.

* கல்வியாளர்கள் கண்ட பயன்கள் :

[1] ஜான் மில்டன் என்ற ஆங்கிலக் கவிஞர் தனக்குரிய பணிகளையும் பொதுப் பணிகளையும் நீதி வழுவாமலும் அறிவாற்றலோடும் பரந்த உள்ளத்தோடும் புரிய உதவுவதே முழுக்கல்வியின் பயன் என்று கருதினர். ஜான் லாக் என்பார் உயரிய பண்பாட்டினைக் கல்வியின் சிறந்த பயனாக வற்புறுத்தினர். ரூஸோ என்ற ஃபிரெஞ்சு நாட்டுப் புரட்சித் தந்தை இயற்கையே கல்வியை இனிது ஊட்ட வல்லது என்றும், எக்கல்வி முறையும் நிகழ்காலத்தை மறந்து எதிர் காலத்திற்குக் கல்வி புகட்டுவதாகக் கூடாதென்றார்.

[2] பெஸ்டலாசி என்ற ஸ்விஸ் பெரியார் பள்ளிப் படிப்பில் தேர்ச்சியுறுவது மட்டும் கல்வி அன்று என்றும், வாழ்வாங்கு வாழ வழி வகுப்பதே கல்வி என்றும், ஒவ்வொருவனும் தனது எல்லாத் திறன்களையும் வளர்த்துக் கொள்வதே வேண்டற் பாலது என்றும் நிறுவினர். அவர் வழி வந்த ஜெர்மானிய [3] ஃப்ரோ பெல் என்பார் ஒவ்வொருவனுடைய உள்ளக் கிடக்கையின் இயற்கைக்கு ஏற்றவாறு ஆற்றலை வெளிப்படுத்தக் கல்வி உதவுகின்றது என்றார். [4] ஜான் டூயி என்ற அமெரிக்கர்—[5] பயன் வழி நிறுவிய பேரறிஞர்—கல்வி எப்பயனையும் கருதியதன்று எனக் கூறிப் பெற்றோர், ஆசிரியர், மாணக்கர் முதலானோர் கல்விப் பயனைக் கற்பனை செய்வது வழக்கமென்று பலரோடும் மாறுபாடுற்றார். எனவே கல்வியே அதன் பயனாகும்; கல்வியின் வளர்ச்சியே கல்வி கண்ட பயன் எனவும் எடுத்துக் காட்டினர். அவருடைய இறுதிக் காலத்தில் பொருளாதாரத் துறையிலும் அரசியல் வாழ்விலும் சமுதாயம் நலமுற ஒவ்வொருவனும் கல்விப் பயனை நாடுவதே நன்மை எனத் திருத்தமும் கூறினர்.

நமது நாட்டினர் கண்ட பயன் :

நம் நாட்டினர் பழங்காலம் தொடங்கி, இன்றைய வாழ்க்கைப் பயனைக் கருதாது தன்னைத் தான் அறிவதே கல்விப் பயனாகக் கருதினர்கள். அன்னர், மனிதன் தன் வளர்ச்சியின் பயனைக் கருதாது தனது ஐம்புலன்களை அடக்கித் தன்னைத்தான் அறிவதே முக்கிய

---

* The Educationalists Aim 1. John Milton 2. Pestallozi 3. Froebel 4. John Dewey 5. Pragmatism

பயனாகக் கொண்டார்கள். மாணாக்கர் தமக்குரிய இளைஞர் வாழ்க்கையினை மேற் கொண்டார்கள். ஊனினை உருக்கியும், உள்ளொளி பெருக்கியும், உவப்பிலா ஆனந்தத்தைக் காண முயன்றனர்கள். உண்ட உணவெல்லாம் நாவின் சுவைக்கு அல்லாது உடலை வளர்த்தற் பொருட்டே என்று கண்டார்கள். தன்னை அறிந்து கொள்ளுதல், தன்னடக்கம், பணிவு—ஆகிய பண்புகளால் தம்மை அடக்கி அகத்தூய்மையினால் புறத்தூய்மையை உண்டாக்கிப் பரம்பொருளோடு இரண்டறக் கலப்பதே சிறந்ததாகக் கருதினர்கள். எனவே இத்தகைய கல்வி இம்மையைக் கருதாது மறுமையையே நாடுவதால் இஃது இன்றைய உலகுக்கு ஒவ்வாதது என்பது வெள்ளிடை மலை. தமிழ் நாட்டினர் "அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே" என்றும் "மாந்தர் மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு" என்றும் கொண்டார்கள்.

[1] சமூக நலப் பயன் :

கல்வியின் நோக்கம் சமூக நலப் பயனா? தனித்தன்மைப் பயனா? என்பது ஈண்டெழும் வினா. தனி ஒவ்வொருவனும் தனது ஆற்றலை வெளிப்படுத்த உதவுவதே கல்விப்பயன் என்பது ஜான்டுயி முதலிய கல்விப் பேரறிஞர்கள் கண்ட உண்மையாகும். ஆனால் எல்லா ஆற்றல்களும் நன்மையைப் பயப்பவை அல்ல. ஒரு சில பிறவற்றைக் காட்டிலும் சிறந்தவை. மற்றும் சில தீயவை. உட்பகை, கயமை, புறங்கூறல், பொய், பொச்சாப்பு ஆகிய தீய குணங்கள் வெளிப்படுவதை யாரும் விரும்பமாட்டார்கள். ஒவ்வொருவன் உள்ளத்திலும் நன்மைப் பண்புகளிடையே பூசல் நிகழ்கின்றது. இவையெல்லாவற்றையும் ஒருங்கே வெளிப்படுத்தல் இயலாது. சமூக வாழ்க்கையில் ஒருவருடைய வெளியாற்றல் மற்றொருவருக்கு இடுக்கண் விளைவிக்கக் கூடும். அதனால் தன்னால் பிறருக்குத் தடை அல்லது இடையூறு ஏற்படாதபடி தான் நடந்து கொள்ள வேண்டியது தகைமையாகும். தான் ஓர் உரிமையை நுகரும்போது அதே உரிமையை மற்றொருவர் நுகர்ந்தால் மோதல் ஏற்படலாம். இக்காரணம் பற்றியே தனி ஒருவனுடைய வெளியாற்றல் உரிமையோடு நிகழ்தல் கூடாது; கட்டுப்பாடு பெற வேண்டும். மேலும் தனி ஒருவனுடைய ஆற்றல் பிறரோடு கலந்து உறவாடும் போதுதான் வெளியாகக் கூடியது. மனித இனம் இயற்கையாகத் தன்னந்தனியே வாழும் உயிரினமன்று. தனியாக வாழ்பவனது வன்மை எல்லாம் ஆற்றலின்றி வற்றிக்கிடக்கும். எனவே தனி ஒருவனுடைய வாழ்க்கை அவன் சமூகத்தினருடைய வாழ்க்கையோடு பின்னிக் கிடக்கின்றது. அப்படியானால் சமூகத்தின் கடமையைச் செலுத்தும் ஒருவன் தன் படைப்பாற்றல், தனக்கென வாழும் உரிமை, தனது விருப்பு வெறுப்புக்களோடு தன்னை அமைத்துக்

1. The Social welfare aim

கொள்ளும் நிலைமை ஆகியவை சமூகத்தில் அடங்கிவிடுமன்றோ! ஒவ்வொருவனும் தனக்கல்லாது தனது நாட்டுக்கே வாழவேண்டும் என்ற கட்டளையில் தனது உரிமை இழப்பானன்றோ! [1] சர்ஜான் ஆடம்ஸ் என்பார் கல்வியின் பயன் [2] தன்னை உணர்ந்து கொள்ளுதல் என்றார். [3] ஸர் பெர்ஸி நன் என்பார் கல்வியின் பயன் [4] தன்னியல் வளர்த்தல் என்பார். எதுவாயினும் தனி ஒருவன் தனது சமூகத்துக்கு மாறாகப் பழக்க வழக்கங்களை வளர்த்தல் தவறென்றே கொள்வர். எக்கல்வியும் தனி மனிதனை உறுப்பாகக் கொண்டு சமூகத்தினைப் படைத்தல் வேண்டும். தனி ஒருவனைத் தனியாகக் கொண்டால் அவன் சமூகத்தோடு தொடர்பு கொண்டு மேம்பாடுற்றவனாக விளங்குதல் வேண்டும். சமூகத்தில் ஒரே தன்மையுடைய இருவரைக் காண முடியாது. அவ்விருவருக்குள் வேற்றுமையே காணப்படும். இங்ஙனமே சமூக உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாறுபட்டவர்களாகவே இருப்பது இயற்கை. இம்மாறுபாட்டினைக் கல்வி புறக்கணிக்கக் கூடாது. எல்லாரும் ஒரே வகையினர் என்று கொண்டால் பொதுவான ஒருவகை ஒழுக்கத்தினை உண்டாக்க முடியும். ஆனால் சமூகத்தில் ஒவ்வொரு உறுப்பினருடைய தனியாற்றலையும் வெளிப்படுத்திப் பயனுறச்செய்ய இயலாது. ஒவ்வொருவரும் தன்னுரிமையோடு தனது உள்ளத்தில் மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிப்படுத்தினால் தனது சமூகத்திற்கு அதன் பயன் உரித்தாகும். வளரும் பருவத்தில் ஓரளவு ஒவ்வொரு மாணாக்கரின் நன்மைக்காகவே கட்டுப்பாட்டினை வற்புறுத்தலாம். ஆனால் அஃது கல்விப் பயனை அளிக்காது. ஆசிரியன் ஒரு சிறந்த தோட்டக்காரனாக விளங்க வேண்டும். தோட்டத்தில் உள்ள ஒவ்வொரு செடியையும் தோட்டக்காரன் கருத்தோடு இயற்கையாக வளருவதற்கு உதவுகின்றான். அவனைப்போல் ஆசிரியனும் இயற்கையாக மாணாக்கர்கள் வளர்ச்சியுறுவதற்கு வழி வகுத்தலே சாலச் சிறந்தது. எனினும் தான் தோன்றியாக வளர்ச்சியுறுதல் பொருந்தா வளர்ச்சியாகும். தன்னியல் வளர்ச்சி எல்லாம் சமூக வழியில் அமைதலே நன்று என்று ஸர் பெர்ஸீநன் என்ற பெரியாரும் ஒத்துக்கொள்ளுகிறார். சமூகத்தின் வழியில் தன்னியல் வளர்ச்சி தன்மதிப்பு வளர்ச்சிக்கு மாறுபட்டதாகாது. கல்வி தன் வளர்ச்சி பயப்பதென்றால் அது சமூகப் பண்பினையும் வளர்த்தற்குரியது. ஒவ்வொருவனுடைய ஆளுமையினையும் சிறக்கச் செய்வதே கல்வியின் சிறந்த பயனாகக் கருதுவது சால்புடைத்து. தன்னியல் வளர்ச்சி சமூகத்தோடு உறவும் தொடர்பும் கொண்டது. ஆனால் தனி ஒருவனுடைய ஆளுமை தனிப்பட்டதோடு அல்லாது ஒப்பற்றும் விளங்குவது. அதுவே மனிதனுடைய வெற்றிக் கட்டமாகும். மனிதனை மனிதனாக்குவதும் அவனுடைய ஆளுமையைச் சிறக்கச் செய்வதும் கல்வியின் சிறந்த பயன்கள்.

1. Sir John Adams 2. Self-realisation 3. Sir Percy Nunn 4. Self-development

V

கல்விப் பொருளின் நிலைக்களன்

நாகரிகமே கல்வியின் நிலைக்களன். நாகரிகத்தை ஐந்து [1] நிறுவனங்கள் காப்பாற்றுகின்றன. அவையாவன :—[2] இல்லம், [3] பள்ளி, [4] தொழில், [5] அரசு, [6] ஆலயம். இவையாவும் பழமையைப் போற்றியும் புதுமையைப் புகுத்தியும் ஒரு முற்போக்கமைந்த எதிர் காலத்தை உருவாக்கியும் தருகின்றன. இவை ஐந்தனுள் இல்லமே நாகரிகத்தின் ஆணி வேராகும். மனித வாழ்க்கை வளம்படவேண்டுமானால் மனிதன் பிறந்த இல்லத்தில் ஆற்றலைப் பெறவேண்டும். பழங்காலத்தில் பள்ளிக்கூடங்கள் தனியாக இல்லை. இல்லமே பள்ளியாகவும் இருந்தது. பிற்காலத்தில் இல்லம் இல்லமே ஆகிப் பள்ளிக்கூடம் ஒரு தனி இல்லமாயிற்று. பெற்றோரே யாவர்க்கும் முதலாசிரியர்கள். எனவே தனித்து ஒதுங்கிய பள்ளியின் ஆசிரியரும் பெற்றோரோடு ஒரு நிலை எய்தினர். பிள்ளையை வளர்ப்பவை, தான் பிறந்த இல்லமும், பயின்ற பள்ளியும் ஆகையால் அவை இரண்டும் எந்த அளவுக்கு ஆளுமைத்திறனை வளர்க்கின்றனவோ அவ்வளவுக்குத் தொழில் திறன் உண்டாகிறது. பள்ளிப் பருவம் கடந்த பிறகு தான் ஏற்கும் தொழிலிலும் பெறக்கூடிய தன் வளர்ச்சி நாகரிக நிலைக்களனாகிறது. ஒருவன் தனது தொழிலை ஒழுங்காகவும் பாதுகாப்போடும் நடத்த வேண்டுமென்றால் பாதுகாப்பு அளிக்கக்கூடிய அரசு வேண்டும். இங்ஙனம் முறையே இல்லம், கல்விச்சாலை, தொழில், அரசு ஆகிய எல்லாவற்றிற்கும் அழியாநிலை அளிக்கக்கூடியது, விண்ணிறைந்தும் மண்நிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய் எண்ணிறந்து எல்லையிலாதவனை நினைவூட்டும் திருக்கோயிலாம். ஆக இவை ஐந்தும் நமது நாகரிக உயிரின் ஐம்பொறிகளாக ஒருங்கே திகழ்கின்றன. இவை ஒவ்வொன்றும் தனியாகப் பிறந்த மனிதனைச் சிறிது சிறிதாக மனித உலகத்தில் மாண்புறச் செய்கின்றன. வளரும் குழந்தை தனது பிறந்த இல்லத்தில் தன்னைப் பேணும் தாய் தந்தையர், உடன் பிறந்தார் கொண்ட ஒரு சிறிய சூழ்நிலையில் பழகக் கற்றுக்கொள்ளுகிறது. இல்லத்தை விட்டுப் பள்ளிக்குச் சென்றவுடன் ஆசிரியரோடும் பள்ளித் தோழர்களோடும் பழக்கம் பெறுகிறது; தொழில் நிலை ஏற்றபோது அதற்கு உடன் உழைக்கும் தோழர்களுடைய நட்பும் தொடர்பும் ஏற்படுகின்றன. அப்போது நாட்டின் குடிமகன் என்ற நிலையில் தனது நாட்டு மக்களோடு நாட்டின் கட்டுதிட்டத்துக்கு அடங்கிய தொடர்பு உண்டாகப் பெறுகிறது. எந்த

1. Agencies 2. Family or home 3. School 4. Occupation 5. State 6. Church

நாகரிகத்திலும், ஆலய வழிபாடு உண்டாகையால் மனிதன் ஆலயத்தில் இன்பமும் துன்பமும் இல்லாஞகிய கடவுளே வணங்கும்போது தனக்கு உவமை இல்லாதாஞேடு உறவு கொள்ளுகிருன்.

மனிதனுடைய உடல் வளர்ச்சியோடு உள்ள வளர்ச்சி வேண்டற் பாலது அல்லவா! மேற்கூறிய ஐந்து நிலேயங்களும் முறையே தனித் தனி ஒழுக்கங்களே வளர்க்கின்றன. "தந்தை தாய்ப் பேண்," "தந்தை சொல்மிக்க மந்திர மில்லே," "தாய் சொல் துறந்தால் வாசக மில்லே" ஆகிய இன்னேரன்ன மூதுரைகள் இல்லத்தில் வளரும் குழந்தையிடத்து வளரவேண்டிய பண்பாடுகளே உணர்த்துகின்றன. நமது குழந்தைகள் நல் இல்லங்களில் அமரருள் உய்க்கக்கூடிய அடக்க முடைமையைப் பெறுகிருர்கள். மலேயினும் மாணப்பெரிதாகிய அடக் கத்தினே வளர்க்கக்கூடியது நமது இல்லங்கள் என்ருல் அவற்றின் ஒழுக்க அமைப்பு யாங்ஙனம் அமைய வேண்டுமென்பதைக் கூருமலே உணரலாம். பெரியோர்க்குப் பணிதல் என்னும் பெரும் பண்பு சமூகத்திலுள்ள பெரியோர்களேப் பணிவதற்கும், எல்லாவற்றைக் காட்டிலும் நாட்டை ஆட்சி புரியும் சட்டத்துக்கு அடங்குவதற்கும் பயன்புரியும் அன்ருே! வணக்கமே வாழ்விக்கும் ஆகையால், அதற்கு ஏற்ப நமது இல்லங்கள், வளரும் குழந்தைக்கு வாழ்க்கையின் அடிப் படைப் பயிற்சி அளிக்கின்றன.

பள்ளிகள் குழவிகளின் உடல் உள்ள வளர்ச்சிகளில் ஈடுபாடு கொள்ளுகின்றன. உள்ளத்தின் வளர்ச்சியைக் காண்பதற்கு உடலத் தின் வளர்ச்சியும் வேண்டும். உடலத்தை ஆட்சி புரிவதற்கு உள்ளம் வளரவேண்டும். உள்ளம் வளராது விட்டால் உடலம் அறிவுப்பாதையி னின்று வழுவி விடும். ஆகையால் பள்ளிகள் உள்ளத்தையும் உடலத் தையும் பேணிக் காக்கின்றன. இவ்விரண்டையும் வளர்த்த பிறகு உற்ற பருவத்தில் வாழ்க்கையை நாடி நமக்குற்ற தொழிலில் ஈடுபடு கிருேம். அப்போது பொதுவான நாட்டு வாழ்க்கைக்கும் உலக வாழ்க் கைக்குமே நம்மால் இயன்ற தொண்டாற்ற வேண்டும். இத்தொண்டா னது நம்மை நமது நாட்டு வாழ்க்கையோடும் உலக வாழ்க்கையோடும் தொடர்பு படுத்துவது. ஒவ்வொருவரும் தம்மால் இயன்றவற்றைப் பணி வழியாகவோ பொருள் வழியாகவோ உதவி, தாம் நுகர்வதற்கு வேண்டியவற்றைப் பெறுகிருர்கள். நன்ருக ஆராய்ந்து அறிந்தால் நம்முடைய ஒவ்வொருவரது உழைப்பினேக் கொண்ட தொழில் நமது நாட்டுக்கு மட்டும் அல்லாது உலகத்துக்கே பயனுகின்றதென்பது தேற்றமாகும். இத்தகைய உலகத்தோடு ஒன்றுபட்ட வாழ்வு உலக ஒற்றுமையை மிகப் பரந்த அளவில் நமக்கு அறிவுறுத்துகின்றது. நமது தொழிலே நாம் நடத்துவதற்கு நமக்குப் போதிய பாதுகாப்பு அளிப்பது நமது அரசாங்கமாகும். அரசாங்கம் எல்லாருக்கும் பொது வானது; குடியாட்சியில் ஒவ்வொரு குடிமகனுக்கும் உரித்தானது; ஆட்சி புரிவதில் நடுநிலே வழுவாது அவரவர்களுடைய செயலுக்கு

ஏற்றவாறு அவரவர்களுக்கு நன்மை இயற்றினல் நன்மையையும், தீமை புரிந்தால் தீமையையும் திருப்பித்தர வல்லது; எது நன்மை எது தீமை என்று வரையறுக்கவும், ஒழுகலாற்றினை ஒழுங்கு செய்யவும் சட்டதிட்டங்கள் உளவாகலான், அவற்றிற்கு ஏற்ப ஒவ்வொருவரும் வாழவேண்டித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. பிளேடோ என்னும் கிரேக்கப் பெருமானர் நாட்டாட்சியின் அடிப்படை நீதிவழுவா நெறி முறை எனக் கூறிப் போந்தார். எனவே வாழ்வாங்கு வாழ வற்புறுத்து வது நம்மை ஆளும் ஆட்சியாகும். மனிதன் தனது உள்ளத்தைத் தூய்மைப்படுத்தக் கடவுளுறை கோயிலுக்குச் செல்லுகின்ருன்—அங்கு தனது உள்ள வரம்புக்கு அப்பாற்பட்ட ஒரு நிலையில் தன்னை இறுத்திக் கொள்ளுகின்றமையால் மனத்துக்கண் மாசிலணுகி அனைத்தும் அறன் என்று அறிந்து, பிற ஆகுல நீர என உணருகின்ருன். அறத்தான் வருவதே இன்பம்; மற்றெல்லாம் புறத்தவை என்னும் விளக்கம் பெறு கின்ருன். மாசற்ற மன நிலையில் அன்பும் இரங்கலுமே ஆட்சி செலுத்துவதைக் காண்கின்ருன். எனவே மனிதனை உற்ற வழியில் உணர்த்திச் செலுத்துவது ஆலய வழிபாடு. வாழ்க்கைப் போக்கு ஒன்று இருக்க, வாழ்வாங்கு வாழ்தல் யாங்ஙனம் என்று சுட்டிக் காட்டு வதும் ஆலய வழிபாடு. மனிதன் தனது உள்ளத்தினை அளவு கடந்து உயர்த்திக்கொள்ள வழிகோலுவதும் ஆலய வழிபாடு.

மேற்கூறிய ஐந்து சூழ்நிலைகள் வேறுபட்டனவாகவும் ஒன்ருே டொன்று தொடர்புடையனவாகவும் தொண்டாற்றி மனிதனைத் தனது முழு வளர்ச்சிக்கு ஈர்த்துச் செல்லுகின்றன. ஒவ்வொருவனும் தனது முழு உணர்வினைப் பெறுவதற்கு இவ்வைந்தும் உதவக்கூடும். இல்லத் திலும் பள்ளியிலும் இளமையும் குமரப் பருவமும் கடந்து விடுகின்றன. மாணவன் இளமைப் பருவத்தினது வணங்குதற் பண்பின் வழியாகக் குமரப் பருவத்தின் முழு வளர்ச்சியினைப் பெறுகிருன். எஞ்சிய மூன்று சூழ்நிலைகளில் மனிதப் பருவம் செல்லுகிறது—அப்போது தனக்கென மட்டும் வாழாது பிறர்க்குரியாளனுகின்ருன்; தான் என்ற [1] தன்மை உணர்ச்சி [2] சமூக உணர்ச்சியோடு கலந்து விடுகின்றது; ஆயினும் சமூக உணர்ச்சியில் தனது [3] தனித் தன்மையை இழக்காது வகிக் கின்ருன்.

மனித இனம் மட்டுமா ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு தனிப்பட்ட சூழ்நிலைக்கேற்ப ஏற்ற முறையில் வளரும் தன்மையைப் பெறுகின்றது என்பது உணரற்பாலது! விலங்கினங்களும் குடும்பமாக வாழ்கின்றன—தாய்ப்பபற்ருேடு வளருகின்றன. மனித இனத்தைப் போன்று விலங்கினங்கள் குடும்பமாகக் கூடி வாழ்கின்றன. ஆனல் மனிதன் தனது ஒருசில மாண்புகளினல் விலங்கினத்தினின்று வேறு

1. Individual consciousness 2. Social consciousness
3. Individuality

படுகின்ருன். கற்பனையாற்றல், பகுத்தறிவு, தொகுத்தறிவு, புதுநிலைப் படுத்தும் அறிவு ஆகியவை மனிதன் உள்ளத்தினைச் செம்மைப் படுத்துகின்றன.

இதனுல் பள்ளியில் பயிலும் கல்வி மட்டுமே கல்வியின் தொடக்கமும் முடிவும் என்று கருதுதல் பிழையாகும். வாழ்க்கையின் பல நிலைகளிலும், நிலைமைகளிலும் நமக்குப் படிப்பினைகள் பல ஏற்படுகின்றன. எனவே வாழ்க்கை முழுவதும் நாம் கல்வி கற்கின்ருேம் என்று கூறுவதே பொருந்தும். பல நிலைமைகள் நமது வாழ்க்கையில் குறுக்கிடுகின்றன. அவை ஒவ்வொன்றும் நமக்குப் படிப்பினை ஆகின்றன. மனித இனம் இன்றைய நிலையில் தனது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொண்டுள்ளது; இன்னும் உயர்த்திக்கொள்ள அனுபவங்களை ஆராய்கின்றது. வாழ்க்கையே ஒரு பெரும் பள்ளி; வாழ்வின் அனுபவமே கற்கும் கல்வி; உலகத்தின் முற்போக்கே ஆசிரியம்.

VI

பள்ளியில்தான் கற்க வேண்டுமா ?

தொன்று தொட்டுக் கல்வி என்ருல் பள்ளி யென்றும், பள்ளி என்ருல் கல்வி யென்றும் இவ்விரண்டையும் ஒன்ருேடொன்று தொடர்புபடுத்துகிருேம். பள்ளியில் பயிலுதல் என்பது மரபு; பள்ளியில்தான் கல்வி தொடங்கிப் பள்ளியோடு கல்வி முடிவடைகிறது எனக் கருதுவதும் மரபு. பள்ளியிற் கற்காத கல்வியைக் கல்வியாகக் கருதாதவரும் உளர். கல்விக்கூடம்தான் அறிவுக்கூடம்; கல்விச்சாலையே அறிவுச் சாலை என்று சட்டம் பேசுவதும் ஒரு பழக்கம். மக்களுடைய தன்னுணர்ச்சியையும் ஆற்றலையும் வெளிப்படுத்துவதோடு வளர்ப்பதற்கென்றே பள்ளிச் சாலைகள் ஏற்பட்டுள்ளன. பிற பயிற்சிகள் தரும் நிலையங்கள் பிறவெல்லாம் தொடர்ந்த ஒழுங்கான பயிற்சி தருவதில்லை. சிற்சில சமயங்களில் சிற்சில நிலைமைகளும் அவற்றின் அறிவுறுத்தல்களும் மக்களுக்கு ஆங்காங்கு பயன் தருகின்றன. ஆனல் பள்ளிச் சாலைகள் ஒரே குறிக்கோளைக் கொண்டவை—அவை வளரும் பிள்ளைகளை வளர்ப்பவை. அவை பிள்ளைகளின் அறிவுத்திறனை வெளிப்படுத்திப் பொறுப்புணர்வுடையவர்களாக்கிச் சமூகத்துக்கு அளிக்கின்றன. பள்ளிகளில் நிகழும் கல்வித்தொண்டு சமூகநலச் சிறப்புத் தொண்டாகவே விளங்குகின்றது. எனவே பள்ளிக் கல்வி குழந்தைப் பருவம் முதல், கலைக் கல்வியோடு தொழிற்கல்வி இறுதி வரையில் கல்விப் பொறுப்பினை ஏற்கின்றது.

பள்ளியே கல்விக்குப் பொறுப்பென்ருல் அஃது ஒரு தனிப்பட்ட சமூகச் சூழ்நிலைகொண்டதாக வேண்டும். இளஞ்சிருர்களுடைய கல்விக்கு வழிகோலும் பெரியவர்கள் சிருர்களுக்கென ஒரு சூழ்நிலையைக் கட்டுப்படுத்த வேண்டுவது இன்றியமையாதது. அத்தகைய [1] கட்டுப்படுத்திய சூழ்நிலையில் சிறுவர் சிறுமியர் இயங்குகின்றனர். அவர்களுடைய சிந்தனையும், உணர்வும் வளர்கின்றன. [2] நேர்முகக்கல்வி என ஒன்று எப்போதும் அமைவதில்லை. எல்லாக் கல்வியும் சூழ்நிலையைக் கட்டுப்படுத்திய [3] மறைமுகக் கல்வியேயாம். சூழ்நிலையினைக் கண்காணித்த வண்ணம் ஒழுங்குப்படுத்தாது விட்டால் தற்செயலாக நிகழும் சூழ்நிலைப் பயன்களுக்குப் பிள்ளைகள் ஆட்படுவார்கள். அத்தகைய சூழ்நிலை தீமையும் பயக்கலாம். எனவே பள்ளிச் சூழ்நிலை தனிப்பட்ட முறையில் பிள்ளைகளின் மன வளர்ச்சிக்கும் மாண்பின் மாட்சிக்கும் உற்றதோர் அமைப்பினைப் பெறுகிறது. அத்தகைய சூழ்நிலையே

---

1. Controlled environment 2. Direct education
3. Indirect education

[1] கல்விச் சூழ்நிலையாகும். பள்ளிகள் தோன்றியதன் காரணம் யாது? குழந்தைகள் நேர்முகமாக வாழ்க்கையில் சமூகத்தோடு கலந்து அறிவினைப் பெறுவதென்றால் அஃது எல்லா நிலையிலும் எல்லாராலும் இயலாது. சமூகம் பழமையில் தோன்றி உருவடைந்ததொன்று. வழி வழியாகப் பெற்ற சமுதாய வாழ்க்கை வழிகள் மிகவும் [2] சிக்கலானவை; அவை எளிதில் அறிய இயலாதவை. அவற்றினை வாய் வழியாக அறிந்து தேர்ச்சி பெறுவது கடினம். ஆகையால் அவற்றினை வரிவடிவமாக்கி நூல்களாக யாத்துப் பிள்ளைகளுக்கு ஏற்ற முறையில் வழங்கினாலன்றி அறிதல் எளிதன்று. அதனால் சமூக வாழ்க்கையில் அறிந்து கொள்ள இயலாதன திரட்டப்பெற்று ஒரு முகமாகவும் பல முகமாகவும் பருவத்திற்கு ஏற்றவாறும் சிறிது சிறிதாகவோ அல்லது [3] மையவட்டங்களாகவோ முறை செய்து பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. இதனால் பிள்ளைகள் தமது நாட்டினரதும் பிற நாட்டினரதும் ஆகிய அறிவுக் களஞ்சியத்தினைப் பல நூல்களின் வழியாகப் பெறுகிறார்கள். பிள்ளைகள் அவரவர்களுடைய இல்லத்திலும் புறத்திலும் பேசக் கற்றுக்கொள்கிறார்கள். ஆனால் பள்ளிக்கூடங்கள், படிக்கவும் எழுதவும் கற்றுக் கொடுக்கின்றன. இவை மட்டுமா! எதைத்தான் நம் பள்ளிகளும் கல்லூரிகளும் கலைக்கூடங்களும் கற்றுத்தரவில்லை. அவை இன்றைய உலகறிந்த அறிவியல் அறிவினை எல்லாம் தொகுத்துக் கற்பிக்கின்றன. அரசியல், சமூகம், பொருளாதாரம், மதம் இன்னோரன்ன பிற எல்லாவற்றினையும் அழுத்தம் திருத்தமாக நம் கல்வி நிலையங்கள் புகட்டுகின்றன. தற்செயலான சூழ்நிலை கற்பிப்பதைக் காட்டிலும் சிறந்த முறையில் பள்ளிச்சாலைகள் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு சூழ்நிலைகளை அமைத்துக் கற்பிக்கின்றன; மாசுகளை நீக்கித் தூய்மைப்படுத்துகின்றன. அத்தகைய முறையில் கற்பிக்கும் எல்லா நிறுவனங்களும் ஒருபடித்தான சமூகப் பண்பாட்டினை உண்டாக்கித் தருவன.

குழந்தைகள் சிக்கலான சூழ்நிலையை எப்படி அறிய இயலும்? எனவேதான் பள்ளி, சூழ்நிலையை எளிமையாக்கி அவர்கள் அதனோடு கலந்து நன்கு அறிந்து கொள்ளக்கூடியதும், சிறிது சிறிதாக விளங்கிக் கொள்ளக் கூடியதுமான நிலையில் அமைத்து உதவுகிறது. உலக நாகரிகம் மிகவும் சிக்கலானது; எளிதாக அறிந்துகொள்ள இயலாதது; அதன் பெற்றிகள் எல்லாம் நன்மை பயப்பனவல்ல. எனவே தீமைத் தன்மையினவற்றை அகற்றி நன்மை பயப்பனவற்றை மட்டும் நமது பிள்ளைகளின் உள்ளங்களைக் கவரச் செய்யவேண்டும். சமூகத்தில் உள்ள நல்லவர்கள் நல்லவற்றினையே ஆய்ந்தெடுத்து அவற்றினைப் போற்றி வருங்காலத்துக்குப் பயக்கின்றார்கள். இத்தகைய பணியில்

1. Educational environment 2. Complex
3. Concentric

பெரிய ஈடுபாடு கொண்டவை நமது பள்ளிகளே. சமூகத்தைத் தூய்மை படுத்தக்கூடிய உலகியற் குழாங்கள் ஒன்றல்ல—பல. அப்பலவற்றுள் ஒழுங்குள்ளவையும் ஒழுங்கற்றவையும் உண்டு; பண்புள்ளவைகளும் பண்பற்றவைகளும் உண்டு. இவ்விரண்டு வகையினவும் ஒரே சமயத்திலும் பல்வேறு சமயங்களிலும் வளர்ந்துள்ளன. குடும்பம், ஊர், நகர், நாடு முதலியன ஒழுங்காக வளர்ந்தவை. சில காலங்களில் தற்காலிகமாக யாதாயினும் ஒரு தன்னலம் நோக்கி ஏற்பட்டவை. வாணிபக் கூட்டங்கள், இனச் சார்புகள், வேற்றுமை இயக்கும் சமயங்கள், மதங்கள், பொருளாதாரத்தையே நோக்கும் பொருளாளிகள், சிற்றினங்கள், கொள்ளைக் கூட்டங்கள், திருட்டுக் கழகங்கள், அரசியற் கட்சிகள்—இவை யாவும் தந்நலத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் எவை பொதுவாகப் பொது மக்களுக்கு நல்வாழ்வினை நல்குகின்றனவோ, அவற்றின் பண்பாடுகள் வளரும் பிள்ளைகளுக்கு நல்லறிவினை ஊட்டும். அவற்றினை எல்லாம் ஒருமுகப் படுத்துவது; சமநிலைப் படுத்துவது; ஓர் அகன்ற உலக சமுதாயத்தினை அறிவுறுத்துவது; பல வேற்றுமைகளில் ஓர் உயரிய ஒற்றுமையினைக் காட்டுவது; நற்பண்புகள் நிறைந்த ஒரு மாசற்ற நெஞ்சுடைமையை மாண்புறச் செய்வது; மாட்சியினை ஆட்சிகொள்ளக்கூடிய அகநிலை புறநிலைகளை உருவாக்கிக் காட்டுவது—ஆகியவை பள்ளிச்சாலைகளின் தலையாய பணிகளாகும். அமெரிக்கா போன்ற நாடுகளில் பல இன மக்கள் பல்வேறு பழக்க வழக்கங்கள் ஆகியவை உலவும் வேற்றுமைகளிலும் ஒரு மனித ஒற்றுமை—மனிதத்தன்மை எதிரொளிக்கக் கூடிய காட்சியினை அந்நாட்டுக் கல்விச் சாலைகள் கண்முன்னே அளிக்கின்றன எனக் கூறுவது மிகையாகாது. பல்வேறு சூழ்நிலைகளை ஒருமைப்படுத்திக் காட்டுவதோடு மக்களுடைய பல்வேறு உளப்பாங்குகளிலும் ஓர் ஒருமைப் பாட்டினை எடுத்து விளக்குவதும் பள்ளியின் பிறிதொரு கடமை ஆகும். பல்வேறு சமூகங்களில் தோன்றும் பிள்ளைகள் ஒவ்வொருவரும் மாறுபட்டிருப்பது கண்டறிந்து பல்வேறு உணர்வுகளை, அவர்கள் நாட்டத்தை நாடி உருவாக்கலாம். வளர்ச்சி மனிதத் தன்மையை மாறுபடச் செய்துகொண்டே இருக்கும். தனித்தன்மை அடிக்கடி வேறுபடும். ஒற்றுமைப்பாடு சிதைந்துவிடும். அதனால்[1] ஒற்றுமை எய்திய தனித்தன்மை பெறுவதற்குப் பள்ளிகள் அமைக்கும் சூழ்நிலைகள் பழக்க வழக்கங்களை நல்ல முறையில் வளர்க்க உதவும். எல்லா வேறுபாடுகளையும் ஓர் ஒற்றுமைப் படுத்துவது மட்டுமின்றிப் பிள்ளைகளுடைய நடத்தைகளை வேற்றுமையின்றி ஒழுங்குபடுத்துவதும் பள்ளிகளின் கடமை ஆகும். இவற்றை எல்லாம் எப்படி அமைப்பது, எப்படித் தூய்மைப்படுத்துவது, எப்படிச் சமநிலைப் படுத்துவது, எங்ஙனம் நன்மைகள் தீமைகள் என்று பாகுபடுத்துவது, சமூகப் பண்புகளில் எவற்றினை ஆய்ந்தெடுப்பது, ஒரு

1. Unsplit personality

மைப்பாட்டினை உண்டாக்குவதற்கு, எவ்வெக் குறிக்கோள்களை இன்றியமையாதனவாகக் கொள்ளுவது என்றினையவற்றினை எல்லாம் ஆராய வேண்டி உள்ளது. ஆயினும் பள்ளிகளின் தனிப்பட்ட தன்மையை நாம் புறக்கணிக்க முடியாது.

இன்றைய சமூக நிலையில் ஒரேவகைப் பண்பாட்டினைக் காண்பதரிது. சமூகம் ஒன்றென்று கருதினாலும் பன்மைப் பொருளில் ஒரு சமூகத்தினைப் பலவாகக் கருத வேண்டியதாகிறது. மக்களும் ஓரினத்தாரல்லர்; பல இனங்களாகப் பிரிந்து வாழ்கின்றனர்கள். இன்றைய ஒரு நகரத்தில் பல்வேறு சமூகங்கள், பல்வேறு மக்களினங்கள், வேறுபட்ட பழக்க வழக்கங்கள், எல்லாம் மாறுபாட்டினையே அறிவூட்டக்கூடிய நிலையில் உள்ளன. பழங்காலத்தில் 'ஒரு மன்பதை என்றால் பலவகை ஒற்றுமைகளோடு ஒரு நாற்பாங்கு எல்லையுள்ள நாட்டில் காணப் பெற்றது. இன்று ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு பழக்கம், தெருவில் மற்றொன்று, கடைத் தெருவில் மூன்றாவது, ஆலய வழிபாட்டில் நான்காவது, இத்தகைய பல சூழ்நிலைகள் இடத்துக்கு இடம், நேரத்துக்கு நேரம், ஆளுக்கு ஆள் வேறுபட்டுள்ளன. சமூகம் இத்தன்மைத்து என்றால் பள்ளிச்சாலையும் அதைப் போன்று அமைவது கூடாது; பல வேறுபாடுகளிலும் ஒருமைப் பாட்டினைக் கண்டு வளரும் பிள்ளைகளுக்கு ஒரு பரந்த நோக்கோடு கூடிய புதிய சூழ்நிலையினை உருவாக்கித் தரவேண்டும். அப்போதுதான் பிள்ளைகள் ஒற்றுமை உள்ளத்தோடு பள்ளிச் சமூகத்தில் உருப்பெறுவார்கள். வளரும் பிள்ளைகள் சமூகத்திலேயே வளரலாம் என்று விட்டுவிட்டால் இன்றைய நிலை பிள்ளைகளைத் தான்தோன்றிகளாக மாற்றிவிடும். பள்ளிகள் மட்டுமே பல பாடங்களின் வழியாகப் பெற்ற அறிவினை எச்சூழ்நிலையிலும் பொருத்திக் கொள்ளும் திறமையினை அளிக்கக்கூடும். [1] ரோஜர் ஆஷாம் (1515–1568) என்ற ஆங்கிலக் கல்வியாளர் நல்லதொரு கல்வி பள்ளிச்சாலையிலன்றி வேறொரு நிலையத்தில் கிடைக்குமா என்று ஐயமுற்றார். அனுபவம் துன்பம் இல்லாது அறிவினைத் தராது என்றும், கற்றலே நல்லதென்றும், இருபது ஆண்டு அனுபவத்தில் கற்கக் கூடியவற்றை ஓராண்டில் பள்ளிக் 'கல்வி கற்பிக்கவல்லதென்றும் வற்புறுத்தியுள்ளார். பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்குத் தாமாகவோ, குடும்ப ஆசிரியர்களைக் கொண்டோ, கற்பிக்கும் கருவிகள் பலவற்றை மேற்கொண்டோ, கல்வி பயக்க இயலாது. ஒழுங்கற்ற கல்விமுறை யாரை வேண்டுமானாலும் ஓர் ஆசிரியனாக்கிவிடும். பெற்றோர்களும் தமக்கு வாய்ப்பு நேரும்போது பிள்ளைகளுக்கு ஆசிரியராகின்றனர்கள். ஆனால் நம் பள்ளி ஆசிரியர்கள் ஆசிரியத் திறமையினைப் பயிற்சியால் பெற்றவர்கள்; முறை அறிந்தவர்கள்; அவர்களுடைய ஆசிரியப் பணி பயன்படத்தக்கதாக அமையும். பள்ளியே

1. Roger Ascham

ஒரு சமூகத்தினை உண்டாக்குகிறது; கூடிவாழ்வினை அங்கு உண்டு. கூடி வாழ்வதற்கேற்ற பண்புகள் அங்குத்தான் வளரும். ஒத்துணர்வு, நன்னெறி ஆகிய பண்புகளைப் பள்ளிக் கல்வி பெறச் செய்கின்றது. கூடி வாழ்வதால் பொதுத் திறன்கள் வளர்வதோடு தனித்திறன்களும் வெளியாகின்றன. பள்ளியாட்சியில், இன்றைய மாணாக்கர்கள் பங்கு கொள்ளுவதால் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்களை உணர்கின்றார்கள். இப்பயிற்சி நாளைய சமூகத்தில் குடிமகனாக விளங்குவதற்கு வழி கோலுகின்றது. இங்ஙனம் நம் பிள்ளைகள் குறித்த சில ஆண்டுகள் பயிற்சி பெறுவதால், பன்னெடுங்காலமாக மனித இனமே வாழ்ந்து பெற்ற நன்மைகளை எல்லாம் நல்ல பள்ளிகள் கல்வித் திட்டத்தின் வழியாகக் கற்றுக் கொடுத்து விடுகின்றன.

VII

கல்விசார் பிறநிலையங்கள்

பள்ளி பயக்கும் பண்பாட்டினைச் சமூக நிலையங்கள் பல கெடுத்து விடுகின்றன என்பது இன்றைய ஆசிரியரின் கூக்குரல். பிறந்த இல்லம், பள்ளிச்சாலை, தொழில் நிலையங்கள், அரசாங்கம், திருக் கோயில்கள் ஆகியவை மிக நெருங்கிய கல்விச்சார்புடையவை என்று முன்னர்க் கண்டோம். இவை ஐந்தும் ஒருபடித்தானவை. இவை யன்றிச் சமூகங்களில் தோன்றியுள்ள நிலையங்கள் பல. அவை நேர் முகமாகக் கல்விச் சார்புடையனவல்லவாயினும் மறைமுகமாகப் பிள்ளை களின் பிஞ்சு உள்ளங்களை நன்மைக்கும் தீமைக்கும் வயப்படுத்து கின்றன. உலகம் முழுவதும் பல நாடுகளில் அரசாங்கமே மதச்சார் பற்றதாக அமைக்கப்பட்டுள்ளது. கடந்த சில நூற்றுண்டுகளாக மதப் பூசல்கள் மல்கி மக்கள் வாழ்க்கையினையே துன்புறுத்தின. அவை எல்லாம் இன்று மறைந்து ஒழிந்ததாகக் கருதுகின்றோம். பள்ளியில் பயிலும் பிள்ளைகள் பல மதச் சார்புடையவர்கள்; அவரவர்களுடைய இறையில்லங்கட்குச் செல்லுபவர்கள்; அவை வெவ்வேறு சூழ்நிலைகளை உடையவை. அச்சூழ்நிலைப் பண்புகள் ஆசிரியன் அறிய வேண் டியவை. இறைநிலையங்கள் எல்லாம் மக்களுடைய உள்ளங்களைத் தொடக் கூடியவை. சமய ஆசானும் ஓர் ஆசிரியன்; மிக்க வன்மை உள்ள செல்வாக்கும் உடையவன்.

முதியோருடைய ஞான வளர்ச்சிக்கே மதவழிபாடு அடிகோலுவது. எல்லா இறை நிலையங்களும் எல்லாம் வல்ல இறைவனையே வழுத்துகின் றன. ஆலய வழிபாடு பழங் காலங்களில் கடமையாக இருந்தது. கிறித் துவ ஆலயங்களில் ஞாயிறுப் பள்ளிகள் ஏழைப் பிள்ளைகளுக்குக் கல் விப் பணியாற்றுகின்றன. இந்து மத நிலையங்களும், மடங்களும் மதக் கல்வியோடு பொதுக் கல்வியிலும் ஈடுபாடு கொள்ளுகின்றன. இறை நிலையங்கள் எல்லாம் ஒவ்வொன்றும் தனித்தனி வழிகளைக் கற்பித்தா லும் பரம்பொருள் ஒன்றே யென்றும் அதனைத்தான் எல்லா மதங்களும் தொலைநோக்காகக் கொண்டு இயங்குகின்றன என்றும்[1] ஒத்துணர்வினை நம் பள்ளிகள் வற்புறுத்தல் வேண்டும். எனவே இறை நிலையங்களின் செல்வாக்கினைக் கல்வி உலகம் கருதாதிருக்க முடியாது.

நம் நாட்டிலுள்ள நாடகசாலைகள் பொது மக்களுக்கு ஒய்வு நேரங் களில் களிப்பூட்டும் சாலைகளாகத் தொன்று தொட்டு உள்ளவை. கொடுங்கோல் ஆட்சிக் காலங்களில் நாடகசாலைகள் நசுக்குற்றன. ஒரு காலத்தில் நாடகங்கள் மதச் சார்பு உள்ள புராணங்களை மக்களுக்குக்

1. Religious Oneness

காட்டி மதப் பற்றினை வளர்த்தன. ஒரு சில நாடகக்காரர்கள் பல மக்களுடைய சுவைகளுக்கு ஏற்றவாறு கதைகளைக் கற்பனை செய்து பொருளுக்காக நடித்தனர். அரசியற் குற்றங்களைக் குத்திக் காட்டுவதற்கும் சமூகக் குறைபாடுகளைக் குத்திக் காட்டவும் இப்போது நாடகங்கள் நடைபெறுகின்றன. எதுவாயினும் நாடகக் காட்சிகள் நம் பள்ளிப் பிள்ளைகளை வயப்படுத்தக் கூடியவை. அவை நன்மை அல்லது தீமையைப் புகட்டக்கூடும். இன்றைய பள்ளிகளில் ஆசிரியர்கள் பாடங்களை எல்லாம் நாடகங்களாகக் கற்பனை செய்து பிள்ளைகளுக்கு வாய்ப்பு அளித்து நடிக்கச் செய்கின்றார்கள். கடினமான பாடங்கள் எல்லாம் [1] நாடக முறையில் நன்கு புரிந்து விடுகின்றன. அத்தகைய முறை உளவியலுக்கும் உடன்பாடாகும். பார்க்கும் பிள்ளைகளும், பங்கெடுக்கும் பிள்ளைகளும் பாடங்களை நன்கு அறிகிறார்கள். பங்கெடுக்கும் பிள்ளைகளுடைய திறன்கள் வெளியாகி வளர்கின்றன. நாடகங்களின் வழியாக நற்பண்புகளை வளர்ப்பதுதான் நல்ல கல்வி முறையாகும். சமூகத்தில் நடைபெறும் நாடகங்கள் குறைபாடுள்ளவையாக இருந்தால் அவற்றினை அரசாங்கம் தடுக்கவேண்டும். தமிழ் நாட்டில் நாடகக்கலை முத்தமிழில் ஒன்றாகிய நாடகத் தமிழாகப் போற்றி வளர்க்கப் பெற்றது என்பதனைத் தமிழ் மக்கள் நினைவூட்டிக் கொள்ள வேண்டும். அஃது இயல் இசைத் தமிழ்களோடு சேர்ந்து மக்களை உய்வித்துள்ளது. இன்றும் தமிழ் நாடகங்கள் ஒரு சில மதச் சார்பு உள்ளவாயினும் மதச் சார்பு அற்றவாயினும் மக்களுடைய உணர்ச்சியைத் தட்டி எழுப்பி அவர்களுக்கு நல்லறிவினைப் புகட்டுகின்றன. நாடகத் தமிழ் ஒன்று உண்டு என்பது நாம் மறக்கற்பாலதன்று. நாடகங்கள் கலையாக வளர்ந்து நன்மையைத் தந்துள்ளன. மேலே விளக்கத்தால் கல்வியில் நாடகத்தின் செல்வாக்கும், பங்கும் பெறப்படும்.

திரைக்காட்சி

இன்று நாடகக்கலை, நசிவுற்றுத் திரைக் காட்சியாக உருமாறி அன்றோ எல்லா மக்களையும் ஈர்க்கின்றது? எல்லா நாடுகளிலும் திரைக் காட்சி சாலைகள் உள்ளன. நம் பள்ளிகளிலுங்கூடக் கண் வழிக் கல்வி மிக்க முன்னேறி உள்ளது. பொதுவாக நல்ல அறிவுப் படங்கள் திரையிடப்படுகின்றன. கல்வித் தொடர்புடைய படங்கள் மாணாக்கர்களுக்கு எவ்வகைக் கடினமான பாடத்தினையும் தெளிவாக்குகின்றன. தற்போது எல்லாப் பாடங்களையும் படமாக்கும் ஆற்றல் வளர்ந்துள்ளது. [2] அணு வரலாறே படமாகி உள்ளதைக் காண்கின்றோம். படங்களின் வழியாகக் கற்றுக்கொள்ளும் மாணாக்கர்கள் வெகு ஆரவாரத்தோடு இருக்கின்றார்கள். இவற்றின் பயனாக மாணாக்கர்கள் கடினமான பாடத்தையும் அறிந்து கொள்ள முடிகிறது. பள்ளிகளிலேயுங்கூட நாடகக் கதை

1. Dramatisation 2. History of Atom

கள், செய்திகள், [1] நாப்பறைகள் ஆகிய எல்லாம் [2] படமாகின்றன. ஒவ்வொரு பள்ளிச் சாலையிலும் [3] படங்களுடைய நூல் நிலையங்களே உள்ளன. இவற்றால் மாணாக்கர் நன்மையே பெறுகின்றார்கள் எனக் கூறுவது மிகையாகாது. நாட்டில் பொது மக்களுக்காகத் [4] திரைப்பட நிலையங்கள் உள்ளன. அங்கு திரையிடும் படங்கள் பொதுவாகப் பொது மக்களுடைய பல விருப்பு வெறுப்புக்களைத் தழுவியவை. அவை எல்லாம் கல்வியாக உதவும் என்று கூற முடியாது. ஒரு சில நன்மையைப் பயக்கலாம். பல, இளஞ் சிறார்களுக்குத் தீமையே பயக்கின்றன. அவற்றினை இளைஞர்கள் பார்க்கக்கூடாது என்று பெற்றோர்களே தடுக்கின்றார்கள். ஒரு சில படங்கள் [5] சிறுவர்களுக்கு அல்ல என்ற கட்டுப்பாட்டோடு ஓடுகின்றன. அவற்றினை இளைஞர்கள் கண்ணுற்றால் கெட்டுப் போவார்கள். எல்லாப் படங்களும் [6] தணிக்கைக்குப் பிறகுதான் வெளி வருகின்றன என்றாலும், அவை எல்லாருக்கும் நன்மையைப் பயக்கும் என்று சொல்ல இயலாது. ஆனால் கதைப் படத்தைத் திரையிடுவதற்கு முன் நாட்டு [7] நடைமுறை உலகச் செய்திகள் ஆகியவற்றைக் கட்டாயமாகக் காட்டுவதால் பொதுமக்கள் ஒரோவழி, திரைப் படத்தின் வழியாக நன்மை அடைகின்றார்கள்.

தமிழ் நாட்டில் தமிழ்ப் பேசும் படங்கள் பெருவாரியாக வெளியாகின்றன. அவற்றால் இளைஞர்களே அன்றிப் பெரியவர்களும்கூடப் பிழை செய்கிறார்கள் என்றதொரு கருத்து நிலவுகிறது. இதனைக் கல்வியாளர்கள் கண்டறிய வேண்டும். ஆனால் இவை பொது மக்களுக்கு ஓய்வு நேர வழிபாடாகிவிட்டது. இவற்றை நல்ல முறையில் பயன் படுத்தினால் இளைஞர்களுக்கே அன்றி முதியவர்களுக்கும் சிறந்த கல்விச் சார்புடையவையாக விளங்கும்.

[8] ஒலி பரப்பிகள் :

உலகெங்கும் [9] வானொலி நிலையங்கள் பெருகிவிட்டன. மக்களுக்கு ஓய்வுள்ள நேரங்களில் இவை பல செய்திகளையும் பொருள்களையும் ஒலி பரப்புகின்றன. இவற்றின் நன்மைகளை மறுக்க இயலாது. பள்ளிக் கல்வியோடு இத்தகைய [10] செவி வழிக் கல்வியும் வேண்டுமா என்பதனை ஆராய வேண்டும். இசை மிகுதியாக ஒலி பரப்பப்படுவதால் பொது மக்களுடைய செவிகள் இசை நயம் பெறுகின்றன. [11] நல்லிசையே மக்களை வயப்படுத்தக் கூடியது. அதனால் நல்லிசை வல்லுநர் இசை வழங்க வேண்டியதாகிறது. அங்ஙனமே நல்ல அறிவாளிகள் பல [12]கல்விப் பொருள்களைப் பற்றிப் பேசினால் நன்மை உண்டு. அவர்

---

1. Propaganda 2. Documentaries 3. Film libraries 4. Cinema houses 5. For adults only 6. Censorship 7. News-reel 8. Loud speakers 9. Radio stations 10. Audio education 11. Good music 12. Educational broadcasts

களுடைய பேச்சுக்கள் சிறந்தவையாகும் என்பதில் ஐயமில்லை. அவற்றைச் செவியுறும் பொது மக்கள் நன்மையே அடைவார்கள். நமது கல்விச் சாலைகளில் வானொலி நிகழ்ச்சிகளைப் பரப்புவதற்கென்றே வாரந் தோறும் ஓரிரு [1] அகவைகள் ஒதுக்கப் பெறுகின்றன. ஆசிரியர்கள் பிள்ளைகளை முற்கூட்டியே பேச்சினை அறிந்து கொள்ளுவதற்குத் [2] தகுதியாக்கிப் பேச்சினைக் கேட்ட பிறகும் [3] பேச்சுப் பொருளினை அறிவுறுத்துகிறார்கள். இன்றைய உலகில் [4] தொலைக்காட்சிகள் பேருதவி புரிந்துள்ளன. எந்த ஊரிலாவது ஒரு வகுப்பறையில் சிறந்த முறையில் கற்பிக்கக்கூடிய ஓர் ஆசிரியனுடைய பாடத்தைப் பல நாடுகளில் பல வகுப்பறைகளில் மாணாக்கர்கள் ஆங்காங்கே இருந்தவாறே அவ்வாசிரியனைக் காட்சிப் பொருளாகவும் அவனுடைய பாடத்தைச் செவிப் பொருளாகவும் கற்கக் கூடிய வாய்ப்பும் திறனும் வளர்ந்துள்ளன. இத் தகு முறைக் கல்விப் பரப்பினை [5] பெருநாட்டு வகுப்பறை என வழங்குகிறார்கள். எனவே ஒலிபரப்பியின் மூலம் செவி வழியாகப் பெறும் கல்வியின் பயனை ஏற்றுக்கொள்ள வேண்டியதாகிறது.

[6] செய்தி இதழ்கள் :

செய்தித் தாள்கள் பொது மக்களுடைய உள்ளத்தை நிரப்பக் கூடியவை; சிந்தனையை எழுப்பக் கூடியவை. இவை தோன்றிய காலம் முதல் இடையறுது [7] ஆசிரியன், நண்பன் ஆகிய நிலைகளில் நின்று பொது மக்களுக்குப் பணியாற்றி வருகின்றன. [8] செய்தித் தாளினர் ஆசிரியருக்கு ஒப்பாவர். எழுதவும் படிக்கவும் அறியும் வரையில் பள்ளி ஆசிரியர் பணி புரிகின்றார். எழுதப் படிக்கக் கற்றுக்கொண்ட பிறகு சமூகத் தொடர்பு நன்கு விளக்கமாகிறது. சமூகத் தொடர்புகளோடு சிறந்த இடம் பெற்றவை செய்தித் தாள்கள். இவற்றினைப் படித்து அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றலைக் கொடுத்தவர் பள்ளி ஆசிரியர். அத்திறன்களைக் கொண்டு நாட்டு அறிவினையும் உலக அறிவினையும் போற்றி வளர்ப்பவர்கள் செய்தித் தாளினர். நாள்தோறும் அவர்கள் வெளியிடும் பல பொருள்கள் பொது மக்களுடைய உள்ளங்களைக் கவர்கின்றன. செய்திகள் பல வகையினவாகும். அவரவர்கள் தமக்கு வேண்டியவற்றைப் படித்துக் கொள்ளுகிறார்கள். சிலர் எல்லாவற்றையுமே பரக்கப் படிக்கின்றார்கள். செய்தித் தாள்களில் அடங்கியுள்ள பொருள்கள் பரந்த அறிவினைத் தரக் கூடியவை. இவையன்றி நாள் தோறும் அவற்றின் ஆசிரியர்கள் இன்றியமையாத நிகழ்ச்சிகளைக் குறித்து அவர்கள் கருத்துக்களை அறிவிக்கின்றார்கள். பெரும்பாலும் அவை மக்களுடைய கருத்துக்களையே மாற்றக் கூடியவை. பழங்காலத்

---

1. Periods 2. Preparation 3. Follow-up lessons 4. Television 5. Continental class room 6. Newspapers 7. Teacher friend 8. The Newspaper editor begins where the teacher ends

தில் எழுத்தறிவில்லாதவர் பலர். இன்று அவர்களுடைய எண்ணிக்கை குறைந்து வருகிறது. படிக்காதவர்களும் படிக்க இயலாதவர்களும் கூடச் செய்தித் தாள்களைப் படிக்கச் சொல்லிக் கேட்டுத் தாளில் உள்ள பொருள்களை அறிந்து கொள்ளுகிறார்கள். அதனால் செய்தித் தாள்கள் படிக்காதவர்களுக்கும் அறிவினை அளிக்கின்றன. ஏழை மக்களும் எளி தில் அறிவு பெற இலவசப் படிப்பகங்களும், நூல் நிலையங்களும், காலையிலும் மாலையிலும் வேலையில்லா நேரத்திலும் பொது மக்கள் அங்கு சென்று கற்பதற்கு வாய்ப்பளிக்கின்றன. செய்தித் தாள்கள் அளிக்கும் அறிவினைப் பள்ளிச் சாலைகள் அளிக்க இயலாது. செய்தித் தாள்கள் மக்களுடைய உள்ளங்களையே உருவாக்குகின்றன. நல்ல தாள் ஆசிரியன் நல்ல முறையில் பொது மக்களை ஈர்த்துச் செல்லு கிறான். ஒரு சிலர் தந்நலத்தைக் கருதிக் கெடுக்கின்றார்கள். அதனால் பள்ளிச் சாலைகள் படைக்கும் கல்வி இளைஞர்களுடைய எண்ணவாற் றலை வளர்க்க வேண்டும். நன்றாகக் கற்றறிந்தவர்கள் செய்தித் தாள் ஆசிரியருடைய கருத்துக்கள் மாறாக இருந்தால், அவற்றினை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எல்லாருக்கும் உடன்பாடான கருத்துக்கள் கொண்ட செய்தித் தாள்களே பொது மக்களால் பாராட்டப் பெறும். தீது தரக் கூடியவை ஒதுக்கப்படும். எனவே நல்ல செய்தித் தாள்கள் சிறந்த கல்விப்பணி செய்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒவ் வொரு நாட்டிலும் இவற்றிற்குச் சிறந்த இடமுண்டு. எனவே செய்தித் தாள் ஆசிரியர்கள் மறைமுகமாகத் தமது எழுத்துக்களின் வாயிலாக எழுத்தறிவிக்கின்றார்கள்.

நாளிதழ்களே அன்றி வாரந்தோறும் அல்லது மாதந்தோறும் வரும் வெளியீடுகளும் உள்ளன. அவை இலக்கியம், நகைச்சுவை, பொருளாதாரம், தொழில் ஆகிய பலபடியான துறைகளுக்கு உதவி புரி கின்றன. சிறுகதைகள், பெருங்கதைகள் கொண்ட இதழ்கள் பள்ளிப் பிள்ளைகளாலும் மற்றவர்களாலும் படிக்கப் பெறுகின்றன. பலவகை விளையாட்டுக்களைப் பற்றியும் இதழ்கள் வெளியாகின்றன. இவையன்றி அகப்பொருள் அடங்கிய இதழ்கள் இன்னோரன்ன பிற,—பலவகை மக் களுக்கு விருப்பம் அளிக்கக்கூடிய வகையில், வெளியாகின்றன. இவை எல்லாம் பள்ளிகளில் தொடங்கும் படிப்பாற்றலை வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வளர்க்கக் கூடியவை. படிப்பதும் எழுதுவதும் இருதிறன் கள்; இத்திறன்களாலான பயன்கள் கிட்டாவிட்டால் இவற்றைப் பெற்ற பயன்தான் என்ன? எனவே செய்தித் தாள்களின் கல்விச் சார்பினை அளவிட்டுக் கூறுவது இயலாது.

[1] விளம்பரங்கள் :

இற்றை நாளில் விளம்பரங்கள் ஒரு கலையாகவே வளர்ந்துள்ளன. இவை செய்தித் தாள்களிலும் மற்ற வெளியீடுகளிலும் அகத்தும் புறத்

1. Advertisements

தும் இடம் பெறுகின்றன. இவையன்றி மக்கள் செல்லும் பாதைகளிலும் பொது இடங்களிலும் இவை கண்களைக் கவர்கின்றன. இவை எல்லாம் படிக்கத் தெரிந்த மக்களை ஈர்த்து அவை விளக்கவேண்டிய செய்திகளை அறிவித்தற் பொருட்டே ஏற்பட்டவை. எல்லா விளம்பரங்களும் நல்லனவே என்று கூறமுடியாது. ஆனால் அவை கண்களைக் கவரக்கூடிய நிலையில் உள்ளன. அவற்றின் விளைவுகளைத் தவிர்க்க முடியாது. குழந்தைகளும் பெற்றோர்களும் படித்தவர்களும் படிக்காதவர்களும் அவற்றைக் கண்ணுறுகிறார்கள். இவற்றைத் தடுப்பதற்கும் வெறுப்பதற்கும் பள்ளிச் சாலைகள் நல்ல உள்ள நிலையை உண்டாக்குகின்றன. நமது நாட்டில் திரைப்பட விளம்பரங்கள் பொது இடங்களை அருவருப்புக்கு உள்ளாக்குகின்றன என்றும் அவை பிஞ்சு உள்ளங்களைக் கெடுத்துவிடுகின்றன என்றும் நம்மவர்கள் கருதுகிறார்கள்.

[1] நூல் நிலையங்களும் காட்சி சாலைகளும் :

நூல் நிலையங்களும் காட்சி சாலைகளும் பள்ளிகளுக்கே உரியவை எனக் கருதிய காலம் மாறிவிட்டது. அவற்றின் வழியாகக் கல்விச் சாலைகள் பிள்ளைகளுக்குப் பயன்களைத் தந்துள்ளன. இன்று ஒவ்வொரு நாடு நகரங்களிலும் பொது நூல் நிலையங்கள், படிப்பகங்கள், பொதுமக்களுக்கெனக் காட்சி சாலைகள் ஏற்படுத்தியுள்ளார்கள். அரசாங்கமே இவற்றை ஏற்று நடத்துகின்றன. குடிகள் அறிவிலிகளாக வாழ்வதே நாட்டுக்குத் தீமை அளிக்கும் என்று சமூகத் தொண்டர்கள் பறை சாற்றுகிறார்கள். சமூக மக்கள் ஓய்வு நேரங்களில் பலவற்றைப் படித்து அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டே பொது நூல் நிலையங்களும் படிப்பகங்களும் ஏற்பட்டுள்ளன. இவை அன்றிக் காட்சி சாலைகள் நேர்முகமாகப் பல வகைப் பொருள்களின் பயன்களை விளக்குவதற்காகவும் அறிவிப்பதற்காகவும் உள்ளன. [2] சுற்று நூல் நிலையங்கள் ஊர்கள்தோறும் சென்று சாலை ஓரங்களில் நின்று பொதுமக்களுக்குப் புத்தகத்தை வழங்கிப் படிப்பார்வம் ஊட்டுகின்றன. காட்சி சாலைகள் பலவகையின. ஒவ்வொன்றும் அறிவுக் களஞ்சியம். இவை எல்லாம் கல்விச் சார்புடையவை.

1. Libraries and exhibitions 2. Mobile libraries

VIII

குழந்தை வளர்ச்சி

கல்விக்கலை மனிதனுக்காகவே தோன்றியது. ஆகையால் குழவிப் பருவம் முதல் மனிதனுடைய தொடர்ந்து நிகழும் வளர்ச்சியினைக் கல்வியினால் செப்பஞ் செய்ய இயலுகின்றது. அதனால் மனித வளர்ச்சியின் பருவங்களைப் பாகுபடுத்தி ஒவ்வொன்றினுடைய இயற்கைப் பாங்கினை உணர்தல் வேண்டும். வளர்ச்சியின் அறிகுறி மாறுதல்களைக் காட்டுவது. அது தொடர்ந்து உண்டாவது. வளர்ச்சி இயற்கையின் பாற் பட்டது. அது பெற்றோரின்பாற் பெற்ற தன்மையினைச் சார்ந்தது. அதனோடு குழந்தை வளர்வதற்கு ஏற்ற நல்ல இயற்கைச் சூழ்நிலை வேண்டற் பாலது. குழவிகளின் உடல் உள்ள வளர்ச்சிகளை நன்றாக அறிவதற்கு உதவும் நூல்கள், மனித உடல் நூலும் உள நூலுமாகும். இயற்கை வளர்ச்சி சூழ்நிலை வளர்ச்சியோடு ஒட்டியது. வளர்ச்சி தொடர்ச்சி உள்ளது என்பது அறிந்ததொன்று. ஆனால் வளர்ச்சியினைக் காட்டும் ஒரு வரைபடம் தொடர்ச்சியினைக் காட்டாது; உயரங்களையும் மேடுகளையும் காட்டக்கூடும். எதுவாயினும் வளரும் பருவங்கள் வேறுபட்டவை. அவை ஏழென்று [1] சேக்சுபியர் பெருமான் அவர் இயற்றிய ஒரு நாடகத்தில் வருணித்துள்ளார்.

குழந்தைப் பருவம் :

இப்பருவம் குழவி பிறந்தது முதல் நான்கு ஐந்து ஆண்டுகளைக் குறிக்கும். ஒரு காலத்தில், பிறந்த குழந்தைகள் பெருவாரியாகப் பல காரணங்களால் இறந்து படுவது உண்டு. குழவியைப் பேணுதல் ஒரு கலை என்பதனைத் தாயர்கள் அறியாதிருந்தார்கள். அவர்களுடைய அன்பே தாய்மையாக, வளரும் குழந்தைகளுக்குப் பணியாற்றியது. குழந்தை வளர்க்கும் பாங்கினை அறிய வேண்டியது தற்போது தாயின் தலையாய கடனாக வற்புறுத்தப்படுகிறது. அதன்படி நடவாததனால் குழந்தைகள் நோய்வாய்ப்பட்டு மடிகின்றன என்ற கருத்து வலியுறுத்தப் பெறுகிறது. குழந்தை அழுதுகொண்டே பிறக்கிறது. அங்ஙனம் அழுவது பிறவித் துன்பத்தினை வெளியிடுதலாகும் என்று ஒரு தத்துவ அறிஞர் கூறுகின்றார். மிகச் சிறிய பச்சிளம் மதலையாயினும் அதன்

1. Shakespeare

வளர்ச்சியும் உடற்கட்டும் தன்னகத்தே கொண்டுள்ளது; நான்கு மாதங்களில் தலை நிமிர்ந்து விடுகிறது; ஒன்பதில் நிமிர்ந்து உட்காருகிறது; பதினெட்டில் குறுநடை போடுகிறது. ஆறுவயதிற்குள் பள்ளி செல்வதற்கு முன் தத்துவதும், தாவுவதும், ஒரு காலில் நிற்பதும், நடனமாடுவதும் தவளையைப் போன்று பாய்வதும் ஆகிய பலவகை ஆற்றல்கள் உண்டாகின்றன. விளையாடும்போது கைகால் திறன்கள்—சிறப்பாக கைத்திறன் எழுதுவதற்கும் படம் வரைவதற்கும்—உதவுகின்றன. அழுகை, குதலை, மழலை மொழிகளாக மாறிச் சிறிது சிறிதாகப் பேச்சாகின்றது. சிறிது சிறிதாகத் தன்னை அடக்கி ஆட்கொள்ளும் பழக்கத்தினைப் பெறுகிறது. தன்னடக்கமே தற்காப்பாகின்றது. பலவகை [1] இயல்பூக்கங்கள் உந்துகின்றன. அவற்றினைத் தன்னடக்கத்தால் மீறுமல் தடுத்துக் கொள்ளுகின்றது. தனது உரிமையைப் பிறருடைய உரிமைகளுக்குத் தடையாகாமற் செலுத்த வேண்டும் என்று அறிந்து கொள்ளுகிறது. இவற்றை எல்லாம் முறையே நல்ல வழிகாட்டியின் உதவியைக்கொண்டு பெற்றுவிட்டால் குழந்தையின் வளர்ச்சி நல்ல முறையில் அமைந்துவிடும். [2] இருபதாம் நூற்றுண்டு குழந்தைகளின் சிறப்பினை எடுத்துக்காட்டும் காலமென்று கருதுகிருர்கள். எனினும் முந்திய நூற்ருண்டுகளிலும் குழவிகளுடைய பெருமை எடுத்து ஓதப்பெற்று வந்தது. ரூஸோ குழந்தைகளுக்கு இயற்கை வழியை வகுத்தருளினுர். பெஸ்டலாசி இளையவரின் பெருமையை அகக்கண்ணுல் கண்டு அவர்பால் அன்பும் இரக்கமும் கொண்டு தொடக்க நிலைக் கல்வியைத் திருத்தி அமைத்தார். ஃப்ரோபெல் சிறுவர் விளையாட்டு நன்மைக்கே என்று நயம்பட உரைத்தார். மாண்டிசோரி அம்மையார் பிள்ளைகளின் வாழ்க்கை விந்தைகளை வளம்பட வகைப்படுத்திக் காட்டினுர். பின்னர் தோன்றிய உளநூலார் பலர் குழந்தைகளைப்பற்றி உவகையோடு ஊன்றி ஆராய்ச்சி நிகழ்த்தியுள்ளார்கள். எதுவாயினும் குழவிகள்பால் இயற்கையான பரிவன்பும் அவர்களுடைய வளர்ச்சியில் அழகினையும் காணுக்கால் அவற்றின் உள்ளங்களை அறிய இயலாது.

சிறு பிள்ளை :

குழந்தைகளின் அடுத்த பருவம் ஐந்து முதல் பன்னீராட்டை வரையிலாகும். எல்லா நாடுகளிலும் ஆறு முதல் பன்னிரண்டு வரையில் குழந்தைகளுக்குத் தொடக்க நிலைக்கல்வி உரித்தாகின்றது. பன்னிரண்டைக் காட்டிலும் ஆறு முதல் பதினென்று இறுதி தான் ஒரு பருவமென்ற வரையறையும் செய்யப்பட்டுள்ளது. இப்பருவத்தில் உடல் வளர்ச்சி தொடர்ந்து உண்டாகிறது. ஓர் ஆண்டுக்கு இரண்டங்குலம் வளர்ச்சியென்று கூறுகிருர்கள். இப்பருவத்தில் இயற்கைச் சூழ்

1. Instincts 2. The Age of the child

நிலைகளாலும் சமூக உறவுகளாலும் உந்தப்பட்டு சிறு பிள்ளைக்கு அறிந்து கொள்ளும் ஆவல் உண்டாகின்றது. இதனை நல்லாசிரியர்கள் நன்ருக ஊக்கிக் கல்விக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பாடத் திட்டங்களும் கற்பிக்கும் முறைகளும் இந்த இயல்பூக்கத்தினைப் பயன் படுத்தாது குழந்தைகளின் வினுக்களைக் குறுகிய நோக்கத்தோடு கட்டுப்படுத்தி விடுகின்றன. அதனுல் அவர்களுடைய ஆசிரியம் பல வகை இழுக்குடையதாம். இப்பருவத்தில் சிறப்பாக பதினென்று அல்லது பன்னிரண்டு வயதில் குழந்தைகளுக்கு நினைவாற்றல் மிகுதி. அப்போது அவர்களுக்கு வேண்டிய மனனப் பயிற்சி அளித்து இலக்கிய இலக்கணங்களை நெட்டுருச் செய்வித்தல் உண்மையில் இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பதற்கு இலக்கியமாகும். முதிர்ந்த வயதில் நெட்டுருச் செய்தல் நீடித்து நினைவில் நில்லாது என்பது அறிந்ததே. ஆதலால் வாழ்க்கையில் பயன்படக் கூடியவற்றினை இப்பருவத்தில் பிள்ளைகள் நினைவில் இறுத்திக் கொள்ளுதல் மிக நன்று. பண்பாட்டினைச் சரிப்படுத்துவதற்கும் இதுதான் தக்க பருவம். நல்ல கட்டு திட்டத்தில் வளரும் பிள்ளை தன்னடக்கத்தைப் பெறுவது திண்ணம். அல்லாக்கால் இயல்பூக்கங்களுள் ஒருசில, பிள்ளையை மிஞ்சித் தாண்டவமாடும். [1] போர் ஊக்கம் அதனுல் எழும் [2] வெகுளி [3] ஈட்டு ஊக்கம் அதைச் சார்ந்த [4] உடமை உணர்ச்சி ஆகியவை நன்மையையும் தீமையையும் பயக்கக் கூடியவை. ஆகையால் அவற்றினை நல்ல வழியில் நாட்டமுறச் செய்தால் நன்மை உண்டு. அல்லாக் கால் அவை கூட்டு வாழ்க்கைக்கு இழிவை உண்டாக்கும். ஒருசில இயல்பூக்கங்களை எதிர்முறையில் வளர்த்தால் அவை நாளடைவில் [5] தன் மதிப்பில் ஒரு பற்றினை உண்டாக்கி பெருமையுறச் செய்யும். இப்பற்று வளர்ந்தால் சான்ருண்மை வளரும். இதற்காகவே பிள்ளைகளை அதிகமாக அடக்கி ஒடுக்காமல் அவர்களுக்குரிய உரிமையை வழங்கி அவர்களுக்கே உரிய தன்மையினை வெளிப்படுத்த வாய்ப்பளிக்கிருேம்.

[6] குமரப் பருவம் :

சிறு பிள்ளைப் பருவ இறுதி முதல் ஆண் பெண் மனிதப் பருவம் வரையிலும் அதாவது பன்னிரண்டு முதல் பதினெட்டு வயது வரையில் நீடிக்கும் பருவமே குமரப் பருவமாகும். இப்பருவத்தில் உடலும் உள்ளமும் பெரிய மாறுதல்களைப் பெறுகின்றன. ஆனுல் பெண்கள் ஆண்களைவிட விரைவாக இப்பருவத்தில் ஒருசில ஆண்டுகளிலேயே மங்கைப் பருவம் அடைந்து விடுகிருர்கள். எனவே ஆண்களைவிடப்

---

1. Instinct of Pugnacity 2. Anger 3. Instinct of collection 4. Instinct of possession 5. Self-regarding sentiment 6. Adolescence

பெண்கள் பன்னிரண்டு முதல் பதினன்கு வயது வரையில் விரைவாக வளர்ச்சி அடைகிருர்கள். நெட்டையாகியும் விடுகிருர்கள். உடற் பருமனேயும் உடற்பாரத்தையும் பெறுகிருர்கள். பின்னர் இந்நிலே மாறுகிறது. பெண்களின் வளர்ச்சி நின்று விடுகிறது. ஆண்கள் உயரமாகவும் பருமனுகவும் வளருகின்ருர்கள்; உடற்கட்டு ஏற்படு கின்றது. அதன் பயனுல் நீண்ட நேரம் நன்ருக ஓடி ஆடிக் களேப் புருத. உடல் வலிமை பெறுகிருர்கள். இப்பருவத்தில் [1] காதலூக்கம் பிறக்கிறது. உள்ளத்தில் நிகழும் பல இயக்கங்கள் பெரும்பாலும் அவர்களே வளர்க்கும் தன்மையையும் புறச் சூழ்நிலேயையும் சார்ந்தவை. [2] பால்வகைக் கல்வி கூடாதென்ற கட்சியினர் இன்று அதை அளிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிருர்கள். ஆனல் எதைக் கற்பிப்பது, யார் கற்பிப்பது என்ற இரு கட்டங்களில் மாறுபாடு கொள்ளுகிருர்கள். ஆண், பெண் கலந்த கல்விச் சாலேகளில் இப்பருவத்தார்க்குப் புகவு தரலாம் என்போர் அவர்கள் கருத்தினே ஆணித்தரமாக விளக்கவுமில்லே.

இப்பருவம் மிக்கதோர் குழப்பத்தையும் இடுக்கண்களேயும் பயக்கக் கூடியது. பதினன்கு முதல் பதினெட்டு வயது வரை உள்ள ஆண் பெண்கள் தம்மைப் பற்றி மிகுதியாக எண்ணிக்கொள்ளுவர். வாழ்க்கை யில் அவர்கள் அறிவன யாவும் மற்றவர்கள் அறியாதவை என்று நினேத்துக் கொள்ளுவர். அதனுல் பெற்ருேரும் ஆசிரியரும் அவர்க ளுடைய ஆழ்ந்த கருத்துப் போக்கிலேயே அவர்களோடு ஒத்துழைக்க வேண்டும். இல்லேயேல் அவர்கள் பல பிழைகள் செய்வார்கள். [3] விடுதலே உணர்ச்சி, பெற்ருேரின் பாதுகாப்பினின்று விலகும் மனப் பான்மை, படிக்கும் பாடத்தைப் படிக்காது, வாழ்க்கையை அறியும் ஆவல், அஞ்சாமை, புறவயப்படுதல் ஆகியவை வெகு விரைவில் அவர் கள்பால் உண்டாகின்றன. இளேஞர்கள் பலர் இவற்ருல் விளேயும் பல துன்பங்களுக்கு ஆளாகின்றனர். ஒரு சிலர் [4] இளங்குற்றவாளிகளா கின்றனர். நெறி பிறழாது அவர்களேக் காக்க வேண்டியது பெற்ருேரும் ஆசிரியரும் ஏற்க வேண்டிய கடமை.

இப்பருவத்தைப் [5] பகற்கனவு காணும் பருவமென்று கூறுவாரும் உளர். அதனுல் குற்றமில்லே. பகற்கனவில் காணும் காட்சிகளே நினேவுக்காட்சிகளாக்கி அவற்றின் நிலேக்களன்களேக் கண்டறிய ஏற்ற வழிகளே வகுத்துத் தந்தால் நல்ல காட்சிகளெல்லாம் நன்மையைப் பயக்க இயலும். உதாரணமாக ஓர் ஆண்பிள்ளே வீரச்செயல் புரியும் காட்சியைக் கண்டானென்ருல் அவனுக்கு அத்தகைய வாய்ப்பினே அளித்தல் நல்லது. அல்லது ஒரு பெண் இரக்கமுள்ளவளாகக் காட்சி அளித்தால் அவளுக்கு இரக்கச் செயலாற்றும் வாய்ப்பினே அளித்தல் பயனுடைத்தாகும். பகற்கனவுகளெல்லாம் வாழ்க்கையோடு ஒட்டாது

1. Sex instinct 2. Sex education 3. Love of freedom 4. Juvenile delinquents 5. Day dreams

வெறும் கனவுகளாக நின்றால், அவை இயல்புக்கு மாறானவையாம். இப்பருவத்தில் ஆண்களிடத்தில் திறமை, வீரம், தறுகண், ஆண்மை ஆகியவற்றினையும், பெண்களிடையே அவர்களுக்குரிய நற்பண்புகளாகிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவற்றோடு திண்மையையும் வளர்த்தல் நலம். ஆனால் குமரப் பருவத்தில் எல்லாப் பிள்ளைகளும் பெண்களும் நல்ல பற்றுக்களோடுதான் காட்சி அளிக்கின்றார்கள் என்று நினைப்பது ஓரளவு நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்ளுவதாகும். [1] புறமுகப் பிள்ளைகள் செயலாற்றுதலில் முந்துபவர்கள். அவர்கள்பால் பகற்கனவாவது, சிந்தனை, சிந்திக்கும் ஆற்றலாவது இல்லை. அவர்கள் எதிர்காலத்தை நோக்கியவர்களாக உந்தப்படுகிறார்கள். இப்பருவம் வாழ்க்கையில் மிக இன்றியமையாத ஒன்றாகும். ஒருவன் அல்லது ஒருத்தி தன்னை ஆக்கிக் கொள்ளுவதும் அழித்துக்கொள்ளுவதும் இப் பருவத்தில்தான். பால் உணர்ச்சி மேலிட்டால் இருபாலர்களும் ஒருவரை ஒருவர் விரும்புவார்கள். இவ்வுணர்ச்சியை விழிப்போடு அறிந்து தொடக்கத்திலேயே வேறு நல்ல வழியில் திருப்பி விடுவது நல்லது. அன்று குழவிகள்பால் இரக்கம் கொண்ட உலகம் இன்று பெரும்பிள்ளைகள்பால் பரிவு கொண்டு அவர்களுடைய கட்டாயக்கல்வி பதினான்கோடு முடிவுறாது பதினெட்டு வரையில் நீடிக்குமாறு திட்டமிடுகிறார்கள். இக்குமரப்பருவம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையின் மலர்ச்சிப் பருவம் என்று கருதப்படுகிறது. இப்பருவத்தில் மிக்க விரைவான வளர்ச்சி—உடல் வளர்ச்சி, அறிவாற்றல், மனத்திண்மை, அடக்கமுடியாத—எல்லாவற்றையும் அறிய உந்தும் ஆவல், தன்னைப் பற்றிய பெருமதிப்பு, தான் செய்வதெல்லாம் சரியென்ற மனப்பான்மை, தான் கண்டறிவதை மற்றவர் அறியாரென்ற உளப்பாங்கு, எம்மாறு பாட்டினையும் ஏற்றுக்கொள்ளும் மனப்போக்கு, வரம்பு கடந்த புறநோக்கு ஆகிய எல்லாம் இக்குமரப் பருவத்தவை என்பதனைக் கல்வியாளர்கள் கட்டாயமாக அறிதல் வேண்டும்.

[2] முதிர்வுப் பருவம் :

இப்பருவம் பத்தொன்பது முதல் முப்பத்தைந்து வயது வரை ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானது. இப்பருவத்தில் உடல் உள்ளம் ஆகிய இரண்டும் நல்ல முதிர்வு பெற்றுப் பொலிவடைகின்றன. இருபாலருக்கும் இப்பருவத்தில் முதன்மை பெற வேண்டுமென்ற ஆற்றலும் ஒருவரை யொருவர் மிஞ்சுவதற்கு உறுதிப்பாடும், உயர்வும் பெற வேண்டும் என்ற ஊக்கமும் அமையும். ஆனால் பேராசை மட்டும் நன்மை அல்லது தீமையைப் பயத்தல் உண்டு. அவரவர்களுடைய தொழில்களில் முன்னேற்றம் பெற முந்துவதும் இப்பருவத்தில்தான். ஆனால் இத்தகைய ஆசைக்கு ஓர் அளவு வேண்டும். தந்நலத்தையே

1. Extrovert 2. Adult hood

கருதினால் பிறர் நலம் கெடும். மகளிர் ஒருசிலர் எல்லா நலத்தையும் கணவனும் குழந்தைகளுமே பெறவேண்டும் என்ற பேரவாவினைக் கொள்வார்கள். இப்பருவத்தில் ஒருவருடைய பழக்கங்கள் குணங்களாக உறுதியாகின்றன.

[1] நடுப் பருவம் :

முப்பத்தைந்து முதல் ஐம்பது, ஐம்பத்தைந்து வயது வரை நடுப் பருவம் என்று கொள்ளலாம். 'ஓரெட்டில் வாராத புத்தியும், ஈரெட்டில் வாராத கல்வியும், மூவெட்டில் வாராத பிள்ளையும், நாலெட்டில் வாராத செல்வமும் வரா' என்பது ஒரு பழைய வாக்கு. இப்பருவத்தில் ஒருவன் தனது உச்சநிலையை அடைதல் இயல்பு. ஒருவனது வாழ்க்கைத் திட்டம் உறுதி பெறுவதும் இப்பருவத்தில்தான். ஒருவன் தான் தன்னுடைய சாதனைகளைப் பின்னோக்கிப் பார்க்கலாம்; அல்லது வருங் காலத்தில் தான் இயற்றவிருக்கும் சாதனைகளையும் எதிர்நோக்கலாம். தனது வாழ்க்கை முழுவதும் தனது ஆற்றலால் உந்தப்பட்டு முன்னேறிய ஒருவன் தொடர்ந்து வெற்றி காண்பது உண்டு. எது வாயினும் கடமை உணர்ச்சி மேலிட்டால், தான் மட்டும் அல்லாது எல்லாரும் அவரவர் கடமைகளை ஆற்றவேண்டும் என்று விழைவான். அவனிடம் பணியாற்றுதல், ஓய்வெடுத்தல் ஆகியவை ஒரு பழக்கமாக ஏற்பட்டுவிடுகிறது. பலரும் தமது வாழ்க்கையில் ஒரு தேக்கத்தைத் தவறாக உண்டாக்கிக் கொள்ளுகிறார்கள். ஆனால் இப்பருவத்திலும் உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளராது; உறுதியோடு நல்லன பல வற்றைத் தமக்குத் தேடிக்கொள்ளலாம். பலர் கல்லாது விடுகின்றார்கள். புதியனவற்றில் ஆர்வம் குறைவுறுகிறது. தொடர்ந்த முயற்சி மட்டும் இருந்தால் இப்பருவத்தில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தனது உள்ளத் தன்மையை வளர்த்து உள்ளொளியைப் பெருக்கி அதனால் தளரும் உடலுக்குத் தளரா ஊக்கத்தினைத் தந்து, சமூகத்தொண்டில் ஈடுபாடு கொண்டு நன்மை புரியலாம். அவர்கள் இளைஞர்கள் பலருக்கு வாழ்க்கையில் பிழையாத வழிகாட்டலாம். இத்தகைய உதவி யில்லாது ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்க்கை இழந்துள்ளார்கள். எனவே நடுப்பருவத்தினர் நல்ல பழக்கங்களுக்கு வழிகாட்டியாக நின்று ஆசிரியர்களாக எதிர்கால மக்களுக்குத் தொண்டாற்றுவது சாலச் சிறந்தது.

[1] முதுமைப் பருவம் :

ஐம்பது ஐம்பத்தைந்து முதல் அறுபத்தைந்து வரையில் ஆண் பாலர்களுக்கு முதுமை எய்துகிறது. இதற்கு அடுத்த பருவமே கிழட்டுப் பருவம். ஒரு சிலர் அறுபதாவது ஆண்டிலும் திடத்தோடு இருக்கின்றார்கள். இப்பருவத்தின் இறுதியில் தனது வாழ்க்கையின்

---

1. Middle age 2. Senescence

பொறுப்புக்களைத் தனது வழியினரிடம் ஒப்பிக்க வேண்டியதாகிறது. ஏன் எனின் தன்னால் உழைத்து ஊதியம் தேட இயலாத நிலையினை உடல் அடைகிறது. நமது நாட்டில் ஐம்பத்தைந்து வயதுக்கு அப்பால் வேலையிலிருந்து ஓய்வு பெறுகிறார்கள். அறுபதில் கட்டாய ஓய்வு வற்புறுத்தப்படுகிறது. நடுப்பருவத்தில் ஒருவன் தன்னைப் புத்துணர்ச்சி பெறாது தேக்கவிட்டால் இப்பருவத்தில் வாழ்க்கையில் தேக்கம் எளிதில் ஏற்பட்டுவிடும். அப்பருவத்தில் எழுச்சி பெற்ற புதிய ஆற்றல்கள் இப்பருவத்தில் முதிர்வு பெற்றுச் சமூகத்துக்குப் பயன் தரும். அறிவாற்றலுக்கு முடிவு இல்லை. ஆகவே அறிவு வாழ்க்கையின் இறுதி வரையில் ஆக்கத்தை அளிக்கக் கூடியது. கல்வி அறிவால் இப்பருவத்தில் அறிவு முதிர்ச்சி அடைகிறது. புத்தக அறிவுதான் வேண்டற்பாலது என்று கருதுவது தவறு. வயதுக்கு ஏற்றவாறு பேரறிவாளன் திருவினைப் பெற இயலும். அறிவென்பது எப்பொருளின் ஆழத்தினையும் அறிந்து ஏற்ற கருத்தினை உருவாக்குவதே. எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு. இத்தகைய அறிவு நூலறிவோடு அனுபவப் பயனும் கலந்த தொன்று. நூலறிவில்லாதவனும் பேரறிவினைப் பெறுவது உண்டு. நூலறிவு இருந்தும் பேரறிவு இல்லாதது கண்கூடு. இப்பருவத்தில் மக்கள் மாண்பும் மதிப்பும் பெறுவது இயல்பு. தொடர்ந்த தொழிலிலிருந்து ஓய்வு பெற்றாலும் தனக்கு விருப்புள்ள துறையில் தனது அனுபவத்தினை நாட்டுக்கும் சமூகத்துக்கும் நல்குவது நல்லது.

[1] கிழட்டுப் பருவம் :

இப்பருவமே வாழ்க்கையின் இறுவாயாகும். கிழப்பருவத்தில் ஒருவனுக்கு நல்ல நினைவாற்றல் இருந்தால் ஒரு பெரும் பேறாகும். கல்வியில் ஈடுபாடுள்ளவர்கள் "பாடை ஏறினும் ஏடது கைவிடேல்" என்பதற்கும், "யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு" என்பவற்றிற்கும் இலக்கியமாவர். ஒருவன் பிறந்தது முதல் இருபதாண்டு வரையில் உணர்வு ஊட்டமும் உடல் வளர்ச்சியும் பெறுகிறான். பிறகு வளர்ச்சியின்றி வயது செல்லுகிறது. உடல் உழைப்பு, வளர்ச்சிக்கு ஏற்றவாறு முதிர்வுப் பருவம் வரையில் உச்ச நிலை அடைந்து பிறகு குறைவுறுகிறது. பிறப்பிக்கு மாற்றல் காளைப் பருவத்தில் தொடங்கி முப்பது முப்பத்தைந்து வரையில் தொடர்கின்றது. ஆனால் அறிவு வளர்ச்சி மட்டும் உடல் வளர்ச்சியோடு வளர்ந்து நில்லாது கிழப்பருவம் வரையில் முதிர்ச்சி பெற்றுச் செல்லுகிறது. ஐம்பது வயதில் முதுமை காரணமாக அறிவுத்திறன் குன்றுமென்று கருதுவது பிழையாகும்.

---

1. Old age

கிழப் பருவத்தில் உடல் தளர்ந்தாலும் உடல் அசைவு தளர்வதில்லை. நோயற்ற வாழ்க்கைதான் வேண்டற்பாலது. உடல் வன்மை குன்றலாம். உள்ளம் மெதுவாக அசைவுற்றாலும் அதன் ஆற்றல் குறைவதில்லை. ஆயினும் முன்னைய பருவங்களில் மனிதன் தனது வாழ்க்கையை வாழ்ந்த ஒழுக்கத்தைப் பொறுத்து முதுமைப் பருவம் நல்லதாக அமையும். முதியவர்கள் தமது இறுதி நாட்களை வீணாக்காமல் இளைஞர்களுக்குத் தமது அனுபவத்திறன்களை அறிவுறுத்தல் கடமையாம். இதற்குக் கைம்மாறாக இளைஞர்கள் முதியவர்கள்பால் வணக்கம் செலுத்தியும் அவர்களுக்கு வாழ்க்கை உதவி அளித்தும் போற்றுவது கடமை.

IX

[1] கல்வியின் பாங்கு

உலகத்தை அறிந்துகொள்வதே கல்வி என்பர்; உலக அறிவே கல்வி அறிவு என்பர். ஆனால் உலக அறிவினை எல்லாம் நமது கல்வி நிலையங்கள் ஊட்ட இயலுமா? இத்தகைய ஆராய்ச்சி உலக அளவிற்கே பரந்ததாகும். ஆனால் நாம் கருதும் கல்விக்கலை பள்ளிக் கல்வியை மட்டுமே பருப் பொருளாகக் கொண்டது—அத்தகைய கல்விக் கலைக்கு வரலாறு, குறிக்கோள், நடைமுறை, தத்துவ அறிவு ஆகியவை உள்ளன. கல்விக் குறிக்கோள் என்பது கல்வி வரலாற்றில் பிறந்த தொன்று. கல்விச்சார்பு கல்விப்பயனை ஒட்டியது. கல்வியறிவு இவை எல்லாவற்றையும் தழுவியது.

கல்வி வரலாறு கல்வியின் வளர்ச்சியை விளக்குவது. அது நாகரிக வரலாற்றின் அடிப்படையாகப் பிறந்ததொன்று. கல்வி எங்ஙனம் நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டதோ அங்ஙனம் கல்வியே நாகரிக வாழ்க்கைக்கு அடிகோலியாயிருந்தது. கல்வியின் வரலாற்றுக்குக் காரணமாயிருந்த கல்வியாளர்கள் பலர். கல்வியின் தொடக்கம் மிகத் தொன்மை வாய்ந்தது. மிகப் பழைய நாகரிகங்கள் வளர்ந்த நாடுகளிலேயே கல்விக்கலை பிறந்திருந்தது. அது பல நூற்றாண்டுகளுக்கிடையே வளர்ச்சி பெற்றதோடு ஒரு சில நாடுகளில் மலர்ச்சியும் பெற்றது. கல்வி வரலாற்றை நோக்குங்கால் கல்வியின் கொள்கை வளர்ச்சியும் நடைமுறைப் பயிற்சியும் பெருகி வந்தமையை அறியலாம். இயற்கையாக நிகழும் மனித வளர்ச்சி நமது ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டது; எப்படி வளர்ச்சி அடைகிறோம் என்று அறிய இயலாதது. அஃது இயற்கை விதிகளுக்கு உட்பட்டது. ஆனால் உடலும் உள்ளமும் பள்ளிச்சாலைகளில் வளர்ப்பு விதிகளுக்கு உட்படுத் தப்பெறுகின்றன. அதனால் வளர்ச்சி புலனாகிறது. இங்ஙனம் இதன் பயனெல்லாம் கல்விவரலாற்றில் விரிவுறக் காணலாம்.

வரலாற்றில் வளர்ந்த கல்வி பொதுநிலை எய்தியபோது அறிவியலின் ஆட்சிக்கு உட்படுகிறது. எனவே கல்வி இயல் கல்வியின் தரத்தையும் கல்வியின் திறத்தையும் வகுத்தவழி நிற்கின்றது. கல்விப் பயிற்சி கல்வி இயலாகின்றது. கற்பிப்போன் ஏவுதற் கருத்தாவாகின்றான். மாணாக்கன் செயப்படு பொருளாகின்றான். எனவே கல்வி செயல் முறையை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் இச்செயல்முறைக்கு அடிப்படை விதிகள் உள்ளனவா என்பது வினா. இதற்கு விடையாகத் தான் கல்வி இயல் கருத்துக்கள் பலவற்றினை வழங்கி உதவுகின்றது.

---

1. The Nature of Education.

கல்வி இயல் கருதுவதெல்லாம் கற்பிக்கப்படுவோனின் உடல் நிலையினையும் உள்ளப் பாங்கினையும் அறிந்து அவற்றிற்கேற்பக் கல்வி தொடங்க வேண்டும் என்பதே. உடல் நிலையை அறிவது யாங்ஙனம்? [1] உடல் நூலின் வழியாக அறியலாமன்றோ! அங்ஙனமே உள்ளத்தினை அறிவதற்கு [2] உளநூல் உதவுகின்றது. உள்ளத்தினை அறியும் ஆற்றலைத் [3] தருக்க நூல் அறிவிக்கின்றது. [4] உணர்வாற்றலை [5] முருகியல் எடுத்துக் காட்டுகின்றது. [6] செயலாற்றலை [7] அறவியல் விளக்குகின்றது. சமூக அறிவுத்திறனைக் [8] கூடிவாழியல் சீர்தூக்கிப் பார்க்கின்றது. இவை எல்லாம் கல்விக் கலையோடு தொடர்புற்ற அறிவியல்களாகும்.

எப்படிக் கற்பிப்பது என்பது கற்பிக்கும் முறையின்பாற் பட்டது. கல்வியாளர்கள் பலர் இதனைப் பலபடியாகக் கண்டுள்ளார்கள். இன்றைய உலகில் அறிவு வளர்ச்சி பெருகிவிட்டது. இதனால் கற்பிப்பது யாது என்ற வினாவிற்கு இடமில்லை. எப்படிக் கற்பிப்பது? என்பதே பெருஞ்சிக்கல். எதைக் கற்பித்தாலும் ஏட்டுப்படிப்பாக நின்றுவிடாது மாணுக்கன் தன் அனுபவத்திலும் அப்படிப்பினையை அறிய வேண்டும் என்பது எல்லா முறைகளின் பயனாகக் கருதப்பெறுகின்றது. அனுபவத்தோடு ஒட்டாத கல்வி பயனற்றதென்பதனைக் கூறுமலே அறியலாம்; அனுபவத்தோடு ஒட்டாத கல்வி உள்ளத்தைத் தொடாதது; ஆசிரியனையும் மாணுக்கனையும் எந்திரமாக்கிவிடுவது. உண்மையான கல்வி ஆசிரியனுடைய உள்ளத்தையும் மாணுக்கனுடைய உள்ளத்தையும் இணக்கமுறச் செய்யும். கல்விமுறை ஒரோ வழி கற்பிக்கும் பாடத்தினை ஒட்டியதேனும் அஃது மாணுக்கனுடைய உடல்நிலை, உள்ளப் பாங்கு, உறவாடும் பண்பு ஆகிய மூன்றையும் சார்புற்று நிற்கின்றது. [9] மனிதனைப்பற்றிய அறிவியல்களெல்லாம் கல்வி இயலுக்கு அடிப்படையாகும். செயல் முறைக் கல்வியின் பல வழிகளே கல்வி இயலின் பொதுத் தன்மைகளை அறுதியிடுகின்றன.

கல்வி எங்ஙனம் செயலாற்றப்படுகிறது என்பதே கல்வியின் [10] ஆட்சி முறையைக் குறிப்பது. கல்வியின் ஆட்சி எங்ஙனம் கல்விக் குறிக்கோளினை நழுவவிடாது காக்கின்றது? கல்வியின் ஆட்சி [11] உறுப்புக்கள் யாவை? அவ்வாட்சியில் பள்ளிக்கூடங்கள் எங்ஙனம் அமைக்கப்பெறுகின்றன. ஒழுக்க முறைகள் யாவை? பள்ளிகளின் [12] மேற்பார்வைத் திட்டங்கள் என்ன? இவையோடு பள்ளி நலன், சுற்றுப்புறம், சூழ்நிலை, பள்ளிப் பணிகள், மாணுக்கருடைய களியாட்டங்கள், குற்றத் திருத்தங்கள், ஆசிரியர்கள், அவர்களது பணி அமைப்புக்கள்,

---

1. Physiology 2. Psychology 3. Logic 4. Conation 5. Aesthetics 6. Volitions 7. Ethics 8. Sociology. 9. Social Sciences 10. Educational Administration 11. Educational Agencies. 12. Educational supervision

ஊதிய நிலை, பணியாற்றும் ஒழுங்குகள் முதலியவை இப்பகுதியில் அடங்கும். கல்வி ஆட்சிமுறை நன்கு அமைந்தாலன்றிக் கல்வி நல்ல முறையில் மக்களுக்குப் பயன் தராது. இஃது அரசாங்கத்தின் பொறுப்பு. இப்பொறுப்பில் பொதுமக்களுடைய பங்கு மிக்கிருத்தல் நலம். சிறந்த கல்வியாளர்களுடைய பேருதவியும் நன்மையைத் தரும். ஒவ்வொரு நாட்டிலும் உருவாகும் சமூகத்தைக் கல்வி ஆட்சியே நல்லுருவாக்கக் கூடியது.

இவை எல்லாவற்றைக் காட்டிலும் கல்விச் செயல் முறையின் [1] தத்துவம்தான் முக்கியமானது. கல்விப் பயிற்சி ஒவ்வொருவருடைய வாழ்க்கையின் பெரும்பகுதியில் நடைபெறுகிறது. கல்வியின் பேரால் பலவற்றினைப் படிக்கிறோம். அவை எல்லாம் பயனுள்ளவையா அல்லது பயனற்றவையா என்பதனை அறிய வேண்டும். கல்வியின் பயன் எங்ஙனம் நன்மையைப் பயக்கும் என்பதனை அறிய [2] கல்விச் சிந்தனையாளர்கள் பலர் பலபடியாகச் சிந்தனை செய்கின்றார்கள். பொதுவாக உலக நிலையில் மக்கள் ,பெறும் கல்வி மாண்புடையதா? அஃது அவர்களுடைய வாழ்க்கையைச் செம்மைப் படுத்துகிறதா? அவர்களது முற்போக்குக்கு வழி காட்டுகின்றதா? அவர்களுக்கு நன்மையை நல்குகின்றதா—இவை எல்லாம் கல்விப் பொருளில் அடங்கியிருத்தல் வேண்டும். இப்பொருளினை ஆராய்ந்து அறிவதே கல்வியின் தத்துவம். கல்வி பொதுத்தன்மையது; எல்லார்க்கும் உரியது; உலக மக்களுக்குப் பொதுவான சொத்து. அதை அறியும் வழியில் யாரும் குறுக்கிடக் கூடாது. வீசும் காற்றினை உள்ளிழுப்பதைப் போலவும், பாய்ந்தோடும் நீரினைப் பருகுவது போலவும் எல்லா மக்களுக்கும் கல்வி பயிலுவதற்கு உரிமை உண்டு. அத்தகைய கல்விச் செல்வத்தின் பயன், அறம், பொருள், இன்பம் என முப்பாலாக நமது இலக்கியங்கள் கூறுகின்றன. இம் முப்பாலின் வழியாக நான்காவதாகிய [3] வீடு பெறற்பாலது. வீடு பேற்றினையே உலக அறிவாளிகள் வாழ்க்கையின் இறுவாயாக அறிதியிட்டுள்ளார்கள். எனவே நாம் கற்கும் கல்வி இவற்றிற்கு வழி வகுக்கின்றதா என்பதனைக் கல்வித் தத்துவம் கண்காணிக்கின்றது.

[4] கொள்கை முறையும் நடை முறையும் :

கல்வி என்றாலே [5] கற்றல் அல்லது [6] கற்பித்தல் என்பனவாகிய செயல்களே உள்ளத்தில் தோன்றும். கற்பித்தல் ஒரு [7] கலை. அதனைப் பயிற்சியாலும் பழக்கத்தாலும் பெறுது, அதன் கொள்கை முறைகளைச் சிந்தித்தாலும் பயின்றாலும் பெற இயலுமா? இயலாது. எனவே "கலைக் கொள்கைகள் கறிக்குதவா" என்பது வெள்ளிடைமலை. ஆனால் கலைக் கொள்கைகள் ஒவ்வொன்றினையும் நல்லாசிரியர்கள்

1. Philosophy 2. Educational philosophers 3. Salvation 4. Theory-practice 5. Learning 6. Teaching 7. Art

வகுப்பறைகளில் செயல்படுத்தாது விடுவதில்லை. நல்ல முறைகளின் பயனே நல்லாசிரியமாக விளங்குகிறது. வகுப்பறையில் தான் தோன்றியாகத் தனது மனம் போன போக்கில் ஆசிரியப்பணி புரிந்தால் மாணவர்களுக்குக் கல்வி நலன் கிட்டாதென்பதைக் கூறவேண்டியதில்லை. கல்விச் சிந்தனையாளர்கள் உலக வரலாற்றில் தாம் கண்ட கருத்துக்களையும் கூற்றுக்களையும் தமது வழியினருக்கு மட்டும் அல்லாது வழிவழியாக வாழும் உலக மக்களுக்கே உதவியுள்ளார்கள். மூன்று நூற்றுண்டுகளுக்கு முன், கற்பிக்கும் பாடத்திற்குப் பிள்ளையா அல்லது கற்கும் பிள்ளைக்குப் பாடமா என்ற சிக்கல் இருந்து வந்தது. இப்போது பிள்ளையையே முதன்மையாகக் கருதுகிறார்கள். மேலும் உளவியல் சோதனையாளர்கள் கல்விக் கலையைத் தமதாக்கிக் கற்கும் மாணுக்கர்களைத் தமது சோதனைப் பொருள்களாக்கி உள்ளார்கள். இதனால் வகுப்பறை வெறும் பாடம் கற்பித்தற்கன்று என்றும் அஃது ஒரு மானிட உறவுக்கூடம் என்றும் கருதலாயிற்று. இத்தகைய ஆசிரிய மாணுக்கர் உறவு நிலை வளர்வதுதான் உயரிய ஆசிரியமாகக் கருதப்பெறுகிறது.

[1] கொள்கை முறையினரும் [2] நடை முறையினரும் ஒருவரையொருவர் இகழ்ந்து கொள்ளுவதுண்டு. நடைமுறையினர் மற்றவரை கையாலாகாதவர், வாய்வீச்சுக்காரர் என்று பழிப்பர். நடைமுறையினரெல்லாம் செக்குமாடு போன்றவர்களென்றும் அவர்கள் ஒரே முறையில் தான் தமது பணியாற்ற முடியும் என்றும், அவர்கள் கற்ற வழியிலேயே கற்றுக் கொடுக்கத்தான் முடியுமென்றும், பல முறைகளைக் கையாளுவதற்கு இயலாது என்றும் கொள்கை முறையினர் மறுப்புக் கூறுவர். இருவர் கூற்றும் உண்மையே.

கொள்கை முறையினர் கல்விக்கலையினையே செயல் முறை உள நூலாக [3] அறிவியல் வழியில் ஒரே முறையில் கற்பிக்கின்றார்கள். நடைமுறையினர் கல்விக்கலை நூல்களை யெல்லாம் நீக்கி அவர்கள் கண்ட வழியிலேயே செல்லுகிறார்கள். அனுபவத்தால் உண்டானவை எல்லாம் அறிவுச் சோதனைக்குப் பழங் காலத்திலேயே உட்படலாயின. கிரேக்க அறிஞரான [4] பிளேடோவின் உரையாடல்கள் இத்தகைய போக்கினைக் குறிக்கும். எனவே சிந்தனையாளன் செயலாளனுக்கு உயர்ந்தவனாகிவிட்டான். [5] தத்துவ ஞானிகளே அரசு ஏற்க வேண்டுமென்றும் அல்லது அரசர்கள் தத்துவ ஞானிகளாக இருத்தல் வேண்டும் என்றும் மேற்கூறிய பிளேடோ வற்புறுத்தியது இப்போக்கினை இயம்புகிறது. [6] அரிஸ்டாடிலும் கருத்துக்கும் செயலுக்கும் உள்ள உயர்வு தாழ்வினை எடுத்துக் காட்டியுள்ளார். கருத்து ஒரு முழுமையினை எய்தக்கூடியது. அதனை விளக்குதல் கூடும். நடைமுறை

1. Theorists 2. Practical men 3. Scientific method
4. Plato's dialogues 5. Philosophers 6. Aristotle

அனுபவத்தாலானது; தற்செயலாக உருவானது. ஒரோ வழி ஒரு கருத்தினை மட்டும் தான் ஒட்டியது. கருத்தறிவின் உயர்வு நமது பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நிலைபெற்றுவிட்டது. கருத்தறிவு மட்டும் பெற்றவர்கள் மென்மையான தொழிலை விரும்புகிறார்கள். கருத்தறிஞரெல்லாம் சிந்தனையாளர்; மற்றவர் செயலாளர். ஆனால் இன்று கருத்து வேறு; செயல் வேறு என்ற மாறுபாடு மறைந்து விட்டது. அறிவியலின் அடிப்படையே செயல் முறையின் சோதனை யாக விளங்குகிறது. சோதனை, கருத்தும் செயலும் ஒருங்கமைந்த தொன்று. செயல் முறையோடு சிந்தனை முறையும் ஒட்டிக்கொண்டது. புதிய அறிவியல் முறையும் சிந்தனையும் செயலும் ஒருமுகமாக நிற்கின் றன. கல்வித்துறையில் கருத்தாளர்களையும் கல்வித் தத்துவ அறிஞர் களையும் கல்வி உள நூலாளரையும், கல்விச் செயலாற்றுபவர்களாகிய ஆசிரியர்மார்களும் மேலாளர்களும் குறைகூறுகின்றார்கள். இரு திறத் தினரும் தொடர்பற்றுத் துலங்குகிறார்கள். ஒன்று—நடைமுறை ஆசிரியன் எழுப்பும் சிக்கல்களுக்குக் கருத்தாளர்கள் விடிவு காட்ட வேண்டியது கடன். அங்ஙனம் அல்லாது நடை முறையாளர்களே இப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டால் கருத்தாளர்கள் ஒதுக்கம் அடை கிறார்கள்; அல்லது கருத்தாளர்கள் தமது மனம் போன போக்கெல் லெல்லாம் சிந்தித்து முடிவு காணாது குழப்பிக் கொள்ளுகிறார்கள். அது போழ்து அவர்களுடைய சிந்தனைகள் வீணாகின்றன. நடைமுறை யாளர்கள் இடர்ப்பாடுறும் சிக்கல்களைத் தீர்க்கக்கூடிய விளக்கத்தைக் கருத்தாளர்கள் உதவினால், அவர்களுடைய பணி போற்றத்தக்க தாகும். பொறுப்புள்ள ஆசிரியர்கள் மாணாக்கர்களோடு கல்வியுறவு கொள்ளும்போது ஐயங்களும் சிக்கல்களும் எழுந்த வண்ணமாக இருக்கும். அவற்றை எல்லாம் கருத்தாளர்கள் கருத்தில் கொண்டு அகற்றும் வழிகளை வகுத்து உதவவேண்டும். சிறந்த [1]கல்வி உள நூலாளர்கள் கல்விக் கருத்துக்கும் உளப் பகுப்பு இயலுக்கும் சார்பு கண்டதே கல்விக் கருத்தாளர்களுக்கும் செயலாளர்களுக்கும் ஒற்று மைக்கு அடிகோலிற்று.

1. Educational Psychologists

X

கல்விக் கலையும் உளநூலும்

உளநூல் மக்களுடைய நடத்தை பற்றிப் பொதுவாகக் கூறுவது. இதனைப் [1] பொது உளநூல் என்பர். உளநூல் கருத்துக்களைக் கல்வித் துறையில் கையாள முற்பட்டபோது [2] கல்விசார் உளநூல் உருப் பெற்றது. உளநூல் தத்துவங்களைக் கல்விப் பயிற்சியில் பயன்படுத்து வதே கல்விசார் உளநூல் எனக் கருதினர். ஆனால் இன்று கல்வி உள நூல் பொது உளநூலுக்கே கருத்துக்களை உதவக் கூடிய நிலையைப் பெற்றுள்ளது. கல்வி உளநூல் கற்கும் ஒவ்வொரு மாணுக்கனுடைய உள்ள இயல்பையும் நடத்தையையும், கற்பித்தல், கற்றல் ஆகிய வற்றின் அமைப்பையும், இன்னோரன்ன பிறவற்றையும் [3] மாணுக்கனை நடுவாகக் கொண்டு அறியப் பயன்படுகிறது. எனவே இன்று கல்விக் கலை உளநூலைப் பெரிதும் சார்ந்துள்ளது. இத்தகைய சார்பு இன்று நேற்றன்று—பழங்காலந் தொடங்கி வழிவழி வந்ததேயாகும். கிரேக்கப் பெருமாணுகிய [4] பிளேடோ எழுதிய [5] ‘ரிபப்ளிக்’ என்னும் நூலில் கல்விக் கலையைக் காட்டிலும் உளநூலைப் பற்றியே விதந்து கூறி யுள்ளார். ஆனால் இவ்விரண்டையும் பிரித்தறியாத வண்ணம் இயைபு படுத்தியுள்ளார். அதுவே அவருடைய நூலின் பெருமையாகும். கல்விக் கலையினை அறிவியற்படுத்தியவர் அவரே. கற்பித்தல் என்ருல் எதைக் கற்பித்தல் என்று அறுதியிட வேண்டுமென்றும், யாருக்கு என்பதனை அறிய வேண்டுமென்றும், இவ்விரண்டையும் தொடர்பு படுத்திய கல்வியே, ஒழுங்குமுறைக் கல்வி என்றும் கூறியுள்ளார். செயல் முறையாளர்கள் பயனையே கருதுகிருர்கள். அவர்கள் கையாளும் ஒவ் வொரு முறை அளிக்கக்கூடிய பயன்களையும் அளவிடுகிருர்கள். ஆனால் எல்லா முறைகளும் எதை அடிப்படையாகக் கொண்டவை என்பதனை மட்டும் மறந்துவிடுவார்கள். அதுதான் மனித உள்ளம். எடுத்துக் காட்டாக நாம் நல்ல உணவினைப் பற்றி ஆராயும்போது பலவகை நல் லுணவுகளை ஆராய்ந்து அறிகிறோம். ஆனால் எல்லா உணவும் எல்லா ருக்கும் பொருந்திய உணவாக மாட்டா. உணவாராய்ச்சி உணவை ஏற்றுக்கொள்ளும் வயிற்றை அறிந்தல்லவோ நிகழவேண்டும். இத்தகு முறையில் பிளேடோ கல்விக் கலையை ஆராய்ந்து உதவினுர். அவர்க் குப் பிற்காலத்தவராகிய [6] ரூஸோ கல்வியாளர்கள் குழவிகளை அறிய வேண்டும் என்று வற்புறுத்தினுர். [7] பெஸ்டலாசி என்பார் கற்பித்தலை

---

1. General Psychology 2. Educational Psychology 3. Pupil-centred education 4. Plato 5. Republique 6. Rousseau 7. Pestalozzi

[1] உளநூல் மயமாக்க வேண்டும் என்றார். [2] ஃப்ரோபெல் குழந்தைகளது [3] இயல்பூக்கங்களை ஒட்டிக் கல்விஅமைய வேண்டும் என்றார். [4] மாண்டிசோரி அம்மையார் குழவிக்கு வேண்டற்பாலது [5] உரிமை என்று உறுதி கூறினர். எல்லாக் கல்விப் பெரியாரும் உளநூல் சார்புற்ற கல்வியே பயனுடைக் கல்வி என்றல்லவோ வற்புறுத்தியுள்ளார்கள்! உளநூல், வளர்ச்சியுற்ற காலம் முதல் கல்விக் கலைக்குப் பெரிதும் தொண்டாற்றியுள்ளது. [6] அரிஸ்டாடில் உளநூலினை அவர் கண்டபோக்கில் ஒழுங்கு படுத்தியுள்ளார். அவர் உடலோடு இணைந்த உள்ளத்தை ஆன்மா என்று கருதி, அதுவே உடலத்துக்கு உயிரளிக்கக் கூடியது என்று கருதினர். அந்த ஆன்மா ஒருசில மனப் பெற்றிகளாகிய புலக்காட்சி, நினைவாற்றல், கற்பனை, பகுத்தறிவு ஆகியவைகளின் சேர்க்கையே. இவை யாவும் தனித் தனியாக இயங்காது ஒற்றுமையாகவே இயங்கு கின்றன. நாளடைவில் உளநூலார் மனப்பெற்றிகளே உள்ளத்தின் தனித்தனி தன்மைகளென்றும் உள்ளத்தின் இயக்கங்கள் என்றும் கருதினர்கள். எடுத்துக் காட்டாகப் பகுத்தறிவு என்ற ஒரு மனப் பெற்றி பகுத்தறிவினை வளர்க்கின்றது. நினைவு என்ற மனப்பெற்றி நினைவாற்றலை வளர்க்கின்றது. இத்தகைய கருத்துக்கள் கல்விக் கலைக்கே ஒரு புதிய நோக்கத்தினைத் தந்தன. எதைக் கற்றுக்கொடுத்தாலும் இத்தகைய மனப்பெற்றிகளை வளர்ப்பதே கல்வியின் தலையாய கடமையாயிற்று. கற்றுக் கொடுப்பது யாது என்பதைப் பற்றிக் கவலை நீங்கிவிட்டது. இக்கருத்தடிப்படையில் பழைய இலக்கியங்களைப் பழைய முறையில் பல மனப்பெற்றிகளை வளர்க்கும் என்று கல்விச்சாலைகளில் கட்டாயமாகக் கற்பித்தார்கள். உடலும் உள்ளமும் வேருமோ என்ற ஆராய்ச்சி தொடங்கியும் முடிந்தும் முடியாத நிலையிலும் இருந்தது. உடலினின்று வேறுபட்டு உள்ளம் இயங்காது என்பர். இரண்டும் ஒன்றியது என்று கண்டவர்கள் திண்மையான உள்ளம் திடமான உடலிற்றான் உண்டு என்றார்கள். ஆனல் உடல் பாதிக் கப்பட்டவன் நனவு நிலையை இழந்துவிடுவது கண்கூடு. எனவே உள்ளம் என்பது நனவுநிலை என்றதோடு ஒப்பிடப்பட்டது. உள்ள நிலையை எங்ஙனம் அறிவது? [7] அகக் காட்சி அல்லது [8] தற்காட்சி முறையாலன்றோ அறிய இயலும். இத்தகைய தற்காட்சி உளநூல் கொள்கையால் கல்விக் கருத்துக்கள் செல்வாக்குப் பெற்றன. இதுவே [9] வழிவழியாக வந்த உளநூல் கொள்கையுமாகும். [10] மனப் பெற்றிகள் வளரும் தத்துவமும் தற்காட்சி உளநூலைச் சார்ந்ததாயிற்று. ஆனல் நாளடைவில் தற்காட்சியும் [11] நனவு நிலையும் மறுக்கப் பெற்றன. இவற்றல் அறிவியற் பாதையில் நலன் கிட்டவில்லை. [12] அறிவியலைச்

1. Psychologising 2. Froebel 3. Instincts 4. Montessori 5. Freedom 6. Aristotle. 7. Introspection 8. Self-introspection 9. Traditional 10. Faculties 11. Consciousness 12. Science

சார்ந்தது எதுவாயினும் [1]அளந்தறிய இயலவேண்டும். ஆனால் நனவு நிலையைத் தற்காட்சி முறையால் அளக்கலாகாதல்லவா! எனவே நனவு என்பதனை நீக்கினர். கட்புலனால் நாம் [2]பார்த்து [3]அறியக்கூடியது, ஓர் [4]உயிருள்ள பொருளின் நடத்தையையே. அத்தகைய நடத்தையை நடைமுறையாகக் கொண்ட உளநூல் கல்விக் கலையினைப் பெரிதும் மாறுபடச் செய்தது. [5]நுண்ணறிவு, [6]முன்னேற்றம், [7]அயர்வு, பயனுள்ள கற்கும் முறைகள், [8]நினைவாற்றல், [9]மறத்தல், [10]மனவெழுச்சிகள், [11]ஒழுக்கம் முதலானவற்றைப் [12]புறநிலைகளில் உளவியலார் தற்போது அளக்கின்றனர்கள். அத்தகைய அளவுகளின் விளைவுகள் பயனாகின்றன. கல்விக் கலைவாணர்கள் சிறப்பாக [13]தொகுமுறை உளநூலாலும் [14]பகுமுறை உளநூலாலும் பயனடைந்துள்ளார்கள். * ஆய்வுமுறை உளநூலார்கள் இயற்றியுள்ள தொண்டு அளவுகடந்தது. அவர்கள் [15]கற்றல் வழி [16]பயிற்சி மாற்றம் நுண்ணறிவு ஆகியவற்றினைப் புறநிலைகளில் நன்றாக ஆராய்ச்சி செய்துள்ளார்கள். எனவே கல்வியாளர்கள் இத்தகைய உளநூல் ஆராய்ச்சியினைப் பயன்படத் தக்க வழியில் கற்பித்தலுக்கும், கற்றலுக்கும் ஆன முறைகளுக்காக எதிர் பார்க்கின்றனர்கள். ஆனால் உளநூலார். [17]பாட ஏற்பாட்டினையோ அவற்றின் [18]கருத்துக்களையோ மாற்றப் புகுவது வேண்டாத செயல். இன்று [19]நுண்ணறிவுச் சோதனைகளும் [20]அளவைகளும் [21]புள்ளி விபரங்களும் அவற்றின் [22]முறைகளும் அளவு கடந்து விட்டன. அவற்றால் கல்விக்குரிய [23]குறிக்கோள்கள், [24]தத்துவங்கள் ஆகிய எல்லாம் இருட்டடைப்புப் பெற்றுவிட்டன.

ஓர் ஆசிரியன் கற்பித்தல் துறையில் ஈடுபடுவதற்கு முன் உளநூல் அடிப்படையில் மனிதவளர்ச்சி, நடத்தை ஆகியவற்றினை நன்றாக அறிந்தவனாதல் வேண்டும். மாணாக்கர்களுடைய திறமை, விருப்பு வெறுப்புக்கள், கற்றல் திறன், ஆயத்தம் ஆகியவற்றின் நுட்பங்களை அறியக்கூடிய திறமையுள்ளவனாதல் வேண்டும். கற்பித்தல் முறைகளின் பயன்களை [25]உளப்பாட்டுத் தன்மையின் அடிப்படையில் ஒன்றுக்கு ஒன்றின் நன்மை தீமையோடு அறியக்கூடிய திறமையும் வேண்டும். ஆசிரியப் பயிற்சி பெறுபவர்கள் உளநூல் அடிப்படையில் கல்விக் கலையைக் கற்கின்றனர். அதனால் அவர்கள் தாம் கற்கின்ற

---

1. Measurement 2. To see 3. To know 4. Organism 5. Intelligence 6. Progress 7. Fatigue 8. Remembering 9. Forgetting 10. Emotions 11. Character 12. Objective states 13. Descriptive 14. Analytical 15. Learning Process 16. Transfer of Training 17. Curriculum 18. Subject matter 19. Intelligence Tests. * Experimental Psychologists 20. Scales 21. Statistics 22. Methods 23. Ideals 24. Philosophies 25. Individuality

முறைகளின் குறைகளையும் நிறைகளையும் தாமாகவே மதிப்பிட்டுச் செயல் முறையில் கற்றல் நிலையைப் பற்றி நன்கு அறிந்துகொள்ள முடியும். ஒரு நல்லாசிரியன் தனது வகுப்பறையினை [1] ஆய்வுக்களமாகக் கருதவேண்டும். மாணவர்களே சோதனைப் பொருள்களாவார்கள். ஆசிரியன் கண்ட சோதனைக் கருத்துக்கள் கற்பிக்கும் முறைகளைத் திருத்தும் வழிகளைத் தேற்றமாக்கும். இந்நிலையில்தான் ஒவ்வோர் ஆசிரியரும் சோதனைக் குறிப்புக்களை நுணுக்கமாக அறிந்து அவற்றின் கருத்துக்களை நடைமுறையில் செயலாற்றக்கூடிய திறனைப் பெறுவார்.

---

1. The class room as a Laboratory

XI

உயிர்நூல் அடிப்படையில் கல்விக் காட்சி

மனிதனும் ஒரு விலங்கினமே எனக் கூறினுல் மனிதர்கள் எதிர்ப்பார்கள். ஆம்! மனிதன் தன்னைத் தொன்றுதொட்டு உயர்வாகக் கருதிக் கொண்டமையே அதன் காரணம். அஃதன்றி அவன் விலங்கினங்களைப் பற்றியும் அவற்றின் சிறப்பினைப் பற்றியும் அறியாமையே காரணமாகும். ஆயினும் மனிதனும் ஒரு விலங்காகிருனு? அல்லது மனிதன் உயிரினங்களுள் வெறும் மனிதனு? ஒரு விலங்கும் வெறும் விலங்குதானு? 1859-ஆம் ஆண்டில் இனங்களின் தோற்றம் என்ற நூலினை இயற்றிய காலம் முதல், உயிர் இனங்கள் யாவும் ஓர் இடையருத தொடர்பால் வளர்ந்தவை என்று உலகம் அறிந்தது. கல்விக்கும் உயிர்நூலுக்கும் தொடர்பு காணும்போது 'உயிர் வாழ்வன' என்ற வாழும் உயிர்கள் யாவற்றினையும் ஒன்ருகக் கருத வேண்டும். வாழ்வாங்கு வாழ்வதற்கு உயிர் வாழ்வன பற்றிக் கற்றறிந்தாலன்றி வாழ இயலாது. உயிர் வாழ்வனவெல்லாம் தம் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தம்மைப் பொருத்திக் கொள்ளுகின்றன. ஒவ்வொரு உயிரின் உள்ளாற்றல் புறநிலையோடு இயைபு பெருவிட்டால் வாழ்க்கையே இயங்காது. [1] ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர் முழுவாழ்வு வாழ்வதற்குக் கல்வி நமக்கு வழி காட்டுகிறதென்று கூறியதைக்கண்டோம். [2] உயிர்நூலும் உயிர் வாழ்வன யாவும் முழு வாழ்க்கையை யாங்ஙனம் அமைத்துக் கொண்டன வென்று ஓரளவு அறிவிக்கின்றது.

கல்வி இயலுக்கும் உயிர் இயலுக்கும் உள்ள ஒரு புடைத்தான ஒப்புமை வேற்றுமைகள் அறியற்பாலன. ஒன்று, உடலுருவத்துக் கேற்றவாறு அமைந்த [3]மூளையின் அளவு. இரண்டு, விலங்கினங்களைக் காட்டிலும் மனித இனத்தின் [4]நீண்ட குழவிப் பருவம். மூன்று, [5]மூளையே உள்ளத்தின் நிலைக்களனுக விளங்குதல். காண்டாமிருகத்திடம் ஏற்ற மூளை அமைப்பை நாம் காணலாம். ஒரு சிறிய விலங்கினத்துக்கும் மூளைப்பகுதி உண்டு. [6] முதுகெலும்புயிர்கள் எல்லாவற்றிற்கும் மூளை, முதுகு நடுநரம்பின் தொடர்ச்சியாக அமைப்புப் பெற்றுள்ளது. மனிதனுடைய மூளை அளவினையும் மற்ற விலங்கினங்களின் மூளை அளவினையும் ஒப்பு நோக்கினுல் ஒரு சில விந்தையான கருத்துக்களை உணரலாம். முதுகெலும்பு விலங்குகளுள் மனிதனுடைய மூளையே பேரளவினது. [7] மனிதக்குரங்கின் மூளை அதன் உடல் எடையில்

---

1. Herbert Spencer 2. Biology 3. The Size of the cerebrum
4. Prolonged infancy 5. Brain as the organ of the mind
6. Vertebrates 7. Ourang outang

இருபத்தொன்பதில் ஒரு பங்கு. குழந்தையின் மூளை அதன் எடையில் ஏழில் ஒரு பங்கு; மூன்று வயதில் பதினெட்டில் ஒன்று; காளைப் பருவத்தில் நாற்பத்தைந்துக்கு ஒன்ருகக் குறைந்துவிடுகிறது. ஒரு யானையின் மூளை பன்னிரண்டு பவுண்டு எடையும் திமிங்கிலத்தின் மூளை பத்துப் பவுண்டு எடையும் மனிதன் மூளை மூன்று பவுண்டு எடையுமாகக் கணக்கிட்டுள்ளார்கள். எடைகளை ஒப்பு நோக்கினுல் மனிதனுடைய மூளை யானை, திமிங்கிலங்களைக் காட்டிலும் பெரியதாகக் காணலாம். மனிதனுக்கும் மனிதக் குரங்குக்கும் ஏறக்குறைய மூளை ஒரே எடையாக உள்ளது. மனிதக் குரங்கின் முதுகெலும்பின் எடையைக் காட்டிலும் அதன் மூளை, இருபது மடங்கு எடையுள்ளது. மனிதனுடைய மூளை, அவனுடைய முதுகெலும்பு எடைக்கு நாற்பத்தொன்பது மடங்கு மிகுதியானது. மனிதனுடைய மூளை, முதுகெலும்பு மண்டலத்தை மட்டும் பகுத்தறிந்தால் முதுகெலும்பு நரம்புகள் இரண்டு சதவிகிதமும் சிறுமூளைப் பகுதி பதினொன்று சதவிகிதமும் பெரு மூளையின் பல பிரிவுகளெல்லாம் சேர்ந்து எண்பத்தேழு சதவிகிதமுமாக அமைந்துள்ளது. பெரு மூளையும் [1] நெற்றிப் பிரிவும் சேர்ந்து மனிதனுடைய மூளையை மற்ற விலங்கினங்களின் மூளையைக் காட்டிலும் சிறக்கச் செய்கின்றன.

மூளை அளவிற்கும் கல்விக்கும் உள்ள தொடர்பு யாது என்பதனை அறிய வேண்டும். பெரு மூளையுள்ள விலங்கினங்கள் தமது உடலத்தை அடக்கி ஆளும் திறமை உள்ளவை. பல்லியைக் காட்டிலும் சுண்டெலிக்கு மூளை அதிகமாயினும் அது தனது உடலை அடக்க முடியவில்லை. பெரு மூளையின் அமைப்பான நரம்பணுக்களின் பொருத்தப்பாடு மனிதனுடைய மூளையை மற்ற விலங்கினங்களின் மூளையைக் காட்டிலும் சிறப்பாக்குகின்றது.

உயிரினங்களின் மூளை அளவு கல்வி இயலுக்கு முதன்மையானது. மூளை பெரிதாயின் கல்விக்கும் அதற்கும் தொடர்பு யாது? நமது செயல்கள் அனைத்தும் நமது உடலிலுள்ள நரம்பு மண்டலத்தின் ஆக்கத்தைப் பொறுத்தவையாகும். நரம்பு மண்டலம் மூன்று பகுதிகளைக் கொண்டது: (a) [2] வெளி நரம்பு மண்டலம் (b) [3] நடு நரம்பு மண்டலம் (c) [4] ஆட்சி மண்டலம். [5] நரம்புகள் செய்தியை வெளிப்புறத்திலிருந்து [6] மூளை, [7] முதுகெலும்பு நரம்பு, [8] முகுளம் ஆகிய மையங்களுக்கு எடுத்துச் செல்லுகின்றன. இவற்றிற்குப் [9] புலனரம்புகளென்றும் [10] உட்செல் நரம்புகளென்றும் பெயர். செய்திகள் சேர்ந்த மையங்களிலிருந்து நரம்புகள் வெளிச் செல்லுகின்றன. இவற்றிற்கு

1. Frontal lobe 2. Peripheral nervous system 3. Central nervous system 4. Autonomic system 5. Sensory or afferent nerves 6. Cerebrum 7. Vertebral nerves 8. Medulla Oblongata 9. Sensory nerves 10. Afferent nerves

[1] வெளிச்செல் நரம்புகள் என்று பெயர். நடு நரம்பு மண்டலத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று, முதுகெலும்பு நரம்புகள்; இரண்டு, மூளை; மூன்று, முகுளம். முதுகெலும்பு நரம்புகளுக்கும், மூளைக்கும் இடையில் முகுளம் அமைந்துள்ளது. இது பெரு மூளைக் குக்கீழ் முதுகெலும்பின் தொடக்கத்தோடு சிறு கோள வடிவத்தில் அமைந்துள்ளதால் மூளைக்குச் செல்லும் நரம்புகளெல்லாம் இதன் வழியாகச் செல்ல வேண்டும். இதன் வழியாக மேலும் கீழும் செல்லும் நரம்புகள் உடலின் இரு பக்கங்களையும் நரம்புமயமாக்குகின்றன. முதுகெலும்பு நரம்புகள், முகுளத்தின் கீழ் தொடங்கி முதுகெலும்பின் வழியாக மூளைக்குச் செல்லும் நரம்புகளும் மூளையிலிருந்து வெளிச் செல்லும் நரம்புகளுமாக அமைந்துள்ளன. மூளை இரு பகுதிகளா லானது. ஒன்று [2] பெரு மூளை; மற்றொன்று [3] சிறு மூளை. சிறு மூளை யின் இயக்கம் உடலைச் சார்ந்தது. உடலின் ஒரு நிலையைக் காப்பதே அதன் வேலை. நாம் நிற்கிறோம்—நடக்கிறோம்—நடனமாடுகிறோம்—சாய்கிறோம்—நிமிர்கிறோம். இவ்வெல்லா நேரங்களிலும் நமது உடல் சாய்ந்து விழாதபடி சிறுமூளை காக்கின்றது. பெருமூளை பல பாகங் களைக் கொண்டது. நமது புலன்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் இட முண்டு. நமது நனவு, சிந்தனை, திண்மை ஆகியவற்றிற்கு இதுவே இடமாகும். நமது செயல்கள் [4] இயக்கு (விருப்பச்) செயல்கள், [5] அனிச்சைச் செயல்கள் என இரு வகைப்படும். முதுகெலும்பு நரம்புகள் நிகழ் செயல்களை இயக்குகின்றன. ஆனால் புலன்கள் வழியாக ஏற்படும் தூண்டல்களுக்கேற்பத் துலங்கல்கள் பழக்கத்தால் எளிதாகின்றன. அறிதல், உணர்தல், முயலுதல் ஆகிய உள்ளச் செயல்கள், உள்ள எழுச்சிகள், பொருத்தப்பாடுகள் சிக்கல்களை அறுக் கும் சிந்தனைப்பாடுகள்—ஆகியவை எல்லாம் பெரு மூளைக்கே உரியவை. இயல்பூக்கங்களினாலான வாழ்க்கைப் படியை உயர்த்தி அறிவூக்கங்கள் நிலைக்கு உயர்த்துவது மனிதனுடைய பெரு மூளையாகும். உயிரினங் களில் விலங்கினங்களே இயல்பூக்கங்கள் மிகுந்தவை. மூளை பெரிதாகும் நிலையில் இயல்பூக்கங்கள் குறைவதில்லை. ஆனால் உயிரினங்கள் இயல் பூக்கங்களைத் தழுவாமல் அவற்றுள் [6] நல்லூக்கங்களோடு தமது அனு பவத்தையும் இணைத்து உயர்நிலை அடைகின்றன. மனித இனம் மட்டுமே பெரு மூளையினால் எல்லையில்லாக் கற்கும் திறனை வாய்க்கப் பெற்றது. இயல்பூக்கத்தில் ஈடுபடும் இனங்கள் எந்திரத்தைப் போன்று இயங்குபவை. [7] தூண்டலுக்கேற்ற [8] துலங்கலை எதிர்பார்க் கலாம். ஆனால் இயல்பூக்கங்களையே தூய்மைப் படுத்தக்கூடிய கல்வி கற்கும் மனித இனத்தின் துலங்கல்களை முற்கூட்டிக்கூற இயலாது.

---

1. Efferent nerves 2. Cerebrum 3. Cerebellum 4. Voluntary actions 5. Reflex actions 6. Refined instincts 7. Stimulus 8. Response

இயல்பூக்கங்களின் இயக்கத்துக்குச் சிந்தனை வேண்டுவதில்லை. ஆனால் கற்றவனுடைய செயல்களெல்லாம் சிந்தனையின்பாற் பட்டவை. கல்வி கற்ற ஒவ்வொருவனும் தான் இயங்குமுன் தான் கொண்ட கருத்து சமூக அனுபவத்தோடு ஒட்டினாலன்றி இயங்குவதில்லை. ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள ஒரு சிறிது வேறுபாட்டினை அறியலாம். இருபது வயதுள்ள ஒரு பெண் எந்த நிலையிலும் சிந்தனை வயப்பட்டு ஓர் உறுதிப்பாடு கொள்ளுகிறாள். அவளுடைய விருப்பு வெறுப்புக்கள் உருப்பெறுகின்றன. வாழ்க்கையின் பண்பாடுகள் அமைவுறுகின்றன. ஆனால் இருபது வயதுள்ள ஆண்மகன் உறுதிப்பாடற்றுச் சிறு பிள்ளைத் தனமாகவே காணப்படுகிறான். எனினும் நாளடைவில் பெண்ணைக் காட்டிலும் அவனது மூளையின் இயக்கம் வன்மையும் செம்மையும் பெறுகின்றது.

உயிர்நூலின் அடிப்படையில் கருதுங்கால் உயிரினங்களுக்குக் கல்விப் பழக்கம் நல்ல பொருத்தப் பாட்டினை உண்டாக்கும் இயல்புடையது. உடலின் பொருத்தப் பாட்டைக் காட்டிலும் உடலை அடக்கி ஆளக்கூடிய உள்ளத்தின் பொருத்தப்பாடே சிறந்ததாயிற்று. உயிரினங்கள் அனுபவத்தில் பொருத்தப்பாட்டினைப் பெறுகின்றன. மரத்தின் உணவை எட்டுவதற்கு ஒட்டைச்சிவிங்கியின் கழுத்து நீண்டுள்ளது. யானை துதிக்கையைப் பயன்படுத்துகிறது. குரங்கு மரத்தின் மீது ஏறுகிறது. ஆனால் மனிதன் ஏணியின்மீது ஏறியும் அல்லது துரட்டுக் கோலால் அறுத்தும் உயரப் பொருளைப் பெறுகிறான். எனவே மனிதனுடைய மூளை சூழ்நிலைக்கேற்ற உயர்வான பொருத்தப்பாட்டிற்கு உதவுகிறது.

நீண்ட குழவிப் பருவம் :

விலங்கினங்களின் குழவிப் பருவம் மிகக் குறுகியது. தாய் விலங்கின்பால் விலங்குக் குட்டியின் சார்பு குறுகிய காலத்ததே. மனித இனங்களில் குழவிப் பருவமும் பெற்றோர் சார்பும் நீடித்தவை. உள்ள வளர்ச்சியின் சிக்கல்கள் பெருகப் பெருகக் குழவிப் பருவம் நீடிக்கின்றது. ஒருசில விலங்கினங்கள் எடுத்துக்காட்டாக [1] ஓராங் ஒட்டாங்—பிறந்து ஒரு மாதம் கழிந்த பிறகும் நடக்கத்தான் கற்றுக்கொள்ளுகின்றன. ஆனால் சிற்றினமாகிய குரங்கு மரமேறுகின்றது. மனித இனத்தில் குழவிப் பருவம் மருத்துவச் சட்டத்தின்படி ஏழாண்டு வரையிலும் ஆகும். அரசாங்கச் சட்டங்களில் பெண்களுக்குப் பதினெட்டு வரையிலும் ஆண்களுக்கு இருபத்தொன்று வரையிலும் பருவ முதிர்ச்சி வரையறை செய்துள்ளார்கள். ஓரளவு கல்வியை முடிப்பதற்குப் பெற்றோர் துணைகொண்டு இருபத்தைந்து வயது வரையில் பிள்ளைகளுடைய படிப்பு நீடிக்கின்றது. இத்துணைக் காலம்

1. Ourang outang

வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய முன்னேற்பாடு வேண்டிய தாகின்றது. நீண்ட குழவிப்பருவம் இருப்பதன் காரணம் எல்லா இனங்களும் சிக்கலுற்ற சூழ்நிலையில் தாம் வாழ்வதற்கு வழி வகுத்துக் கொள்ள வேண்டிய கட்டாய நிலையே ஆகும். இதனாலன்றோ மனித இனம் தாய்மைப் பொறுப்பினைச் செலுத்துவதற்குக் குடும்பமாக வாழ் வதாயிற்று. குழந்தை ஓடி விளையாடத் தொடங்கிய பிறகு சிறிது சிறிதாகத் தனது நாகரிகத்தையும் பண்பாட்டையும் பழமையிலும் புதுமையிலும் நன்றாக அறிந்து தன்னைப் பொருத்திக்கொள்ள வேண்டியதாகிறது. இளமையில்தான் இத்தகைய பொருத்தப்பாடு ஏற்படுவது மனித இனத்துக்கு நன்மையைத் தருகின்றது. இதனால் "இளமையிற் கல்" என்றும், "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்றும் வற்புறுத்துகிறோம்.

மூளையே உள்ளத்தின் உறுப்பு :

உள்ளத்தின் உறுப்பு யாது என்பதனைப் பலபடியாக நமது முன்னோர்கள் ஆராய்ந்துள்ளார்கள். அரிஸ்டாடில் உள்ளக் கிளர்ச்சி யெல்லாம் [1] இதயத்தில் உண்டாகின்றன என்று கண்டார். பழங்கால மருத்துவர்கள் இதயத்தை அறிவின் இருப்பிடமாகவும், [2] மண்ணீரல் களிப்பின் நிலைக்களனாகவும், கோபம் [3] பித்தப்பையின் பிறப்பிட மாகவும், காதல் [4] ஈரல் ஊற்றாகவும், தற்பெருமை [5] மூச்சுப் பைகளின் எழுச்சியாகவும் கருதினர். இன்றும் உள்ளமென்றால் இதயத்தையே கருதி அன்பு, உணர்ச்சி, பண்பாடு ஆகியவற்றைப் பிறப்பிக்கும் இட மாகவும், தலையினை அறிவின் இருப்பிடமாகவும் கருதுகின்றார்கள். அதனால் மூளைக்கும் இதயத்துக்கும் கல்வி வேண்டற்பாலது எனக் கருதுவது நோக்கத் தக்கது. நான்குவகை ஆராய்ச்சியால் இன்று மூளையே உள்ளத்தின் உறுப்பு என்று கருதுகிறார்கள். உளநோய்கள் மூளையில் உண்டாகும் சில [6] புண்களால் ஏற்படுகின்றன. உட்செல் நரம்புகள் மூளைக்குச் சென்றும், வெளிச்செல் நரம்புகள் மூளையிலிருந்து பிரிந்தும் வருவதால் நரம்பு மண்டலமே மூளையின் தோற்றுவாயாகவும் இறுவாயாகவும் விளங்கக் காணலாம். மூளையில் யாதாயினும் ஒரு பகுதி குறைவுற்றால் தவளையைப் போன்ற ஒரு சிற்றினத்திலேயே மாறுபாடு காணப்படுகிறது. எனவே உள்ளத்தினது தன்மை முழு மூளையின் இயக்கத்தினைச் சார்ந்துள்ளது. காய்ச்சல் காலங்களிலும் மது அருந்திய காலத்தும் உணர்வு இழத்தல் கண்கூடு. ஆட்கோளாறுகளெல்லாம் மனக் கோளாறே. மனக் கோளாறென்பது மூளைக் கோளாறென்று கருதவேண்டும். பெரிய தலை உள்ளவர்களுக்கு மூளை பெரியது என்று நினைக்கிறோம். மூளையினது எடை நுண்ணறிவு உள்ளவர்களுக்கு

1. Heart 2. Spleen 3. Gall 4. Liver 5. Lungs
6. Lesions

அதிகமென்று கூறுகிறார்கள். இவற்றால் அறியக்கூடியது மூளையினுடைய தலைமையே உள்ளத்தின் நிலைமை என்பது. கல்வியின் பயனால் மூளையின் புல நரம்புகள் இயங்கும். நரம்புகள் நன்றாகப் பயிற்சியுற்றாலன்றிக் கல்விப்பயனால் பெறக்கூடிய உள்ளத்தின் ஆற்றல்களாகிய [1] புலக்காட்சி, [2] உற்றுநோக்கல், அறிவாற்றல், முயற்சி ஆகியவை பெறல் இயலாது. உளப்பழக்கங்கள் எல்லாம் மூளையின் பழக்கங்களே; உள்ளத்தின் திறமை மூளையின் திறமையே எனக் கூறுவது மிகையாகாது. மூளையின் உயிரணுக்கள் வளரும் பருவத்தில் நல்ல தூண்டல்களைப் பெறாமலும் இயங்காமலும் கிடந்தால் பின்னால் முழு வளர்ச்சியினைப் பெறா. வளரும் பருவத்தில் நடு நரம்பு மண்டலத்தைக் கல்வி இயங்கச் செய்ய வேண்டும். பதினெட்டு வயதுக்குள் மூளையின் முழுப் பயனைப் பெறுதல் நல்லது. இருபத்தைந்து வயதுக்குமேல் ஒரு புதிய மொழியையாவது புதிய கலையையாவது கற்றுத் தேர்ச்சி பெறுதல் அவ்வளவு எளிதன்று. ஒரு சிலரே முதுமையில் புதிய கலைகளைக் கற்று வல்லுநர் ஆகியுள்ளார்கள். வயது எதுவாயினும் முயற்சி திருவினை ஆக்கும் எனக் கருதுவதும் உண்டு. புல நரம்புப் பயிற்சியும் இயக்க நரம்புகளின் பயிற்சியும், இளமையில் நன்றாக ஏற்படாவிட்டால் அறிவுப் பயிற்சி, உணர்ச்சி, முயற்சி ஆகிய மூன்றும் நல்ல முறையில் வளர்ச்சி அடையமாட்டா. ஆகவே மாணுக்கனின் நரம்பு மண்டலம் ஆசானுடைய தொழிற்சாலைபோன்றது. மனிதன் மனிதனாவது கல்வி ஒன்றினால்தான். கல்வி, மூளை இல்லாதவனுக்கு மூளையைப் புதிதாக உண்டாக்குகிற தென்பதன்று. பிறவியில் உள்ள மூளை எல்லாருக்கும் உரியது. ஆனால் ஒவ்வொரு மூளையின் ஆற்றலுக்கும் வழி கோலுவதே கல்வியின் தலையாய கடமை.

உயிரினங்கள் முதற்கண் வாழவேண்டியமையால் அவ்வாழ்வு உள்ளாற்றலை வெளிப்படுத்திச் சூழ்நிலைக்கேற்ற பொருத்தப்பாட்டினை முதன்மையாக்குகிறது. உயிருடன் இருப்பதும் வாழ்வதும் எல்லாம் நடைமுறை. உயிர் வாழ்ந்த பிறகு மனித இனத்தைப் போன்ற உயிரினம் பற்றுக்கோடுகளையும் குறிக்கோள்களையும் அமைத்துக் கொள்ள இயலும். அத்தகைய பற்றுக்கோடுகளும் குறிக்கோள்களும் வாழ்வாங்கு வாழ உதவவேண்டும். இந்த அடிப்படையே கல்வித் தத்துவமாகிய [3]பயனளவைக் கொள்கை என்பதனை உருவாக்கியுள்ளது. அதன்படி வாழ்க்கையோடு ஒட்டக்கூடிய கொள்கையே உண்மைக்கு உடன்பாடு. எனவே எத்தகைய கல்விக் கொள்கையும் பழமை புதுமை என்று வேறுபாடின்றி அதனுடைய செயல் முறையில் உயர்ந்த கல்வி வழியினை வகுத்துதவ வேண்டும்.

இரண்டாவதாக உயிரினங்கள் எல்லாம் உயிர்ப்பற்றுள்ளவை என்பது கூறாமலே விளங்கும். எந்த உயிரும் தன் சூழ்நிலையில் நேர்

1. Perception 2. Observation 3. Pragmatism.

முகமாக உறவாடும்போது செயல் முறையில் இயங்குவது அதனுடைய உணர்வன்றோ! முதற்கண் மனித இனம் பயன்படுவதை அறிவது பகுத்தறிவு. அப்பகுத்தறிவு வளர்ச்சியுற்று எழும் சிக்கல்களைத் தீர்க்கின்றது. விலங்கினங்களில் நுண்ணறிவு செயல்களுக்குப் பயன்படுகின்றதே அன்றிக் [1]குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கன்று. [2] உணர்வு நிலை நன்கு வாழ்வதற்குப் பயன்பட்டாலன்றி பயனற்றதாகும்.

மூன்ருவதாகக் கல்வி பயனுடையது. கல்வியால் நல்ல பழக்க வழக்கங்கள் இயல்பாகின்றன. கல்வி கற்ருல், ஒருவன் வாழ்வாங்கு வாழ்கின்ருன். எனவே கல்வி, உலகத்தில் வெற்றி காண ஒரு புதிய ஆற்றலாக உதவுகின்றது.

நான்காவதாக மனித இனம் ஆயினும் அல்லது எந்த உயிரினமாயினும் பொருத்தப்பாட்டில் எதையும் பெறுவதில்லை. ஆனல் ஒவ்வொன்றும் அதனதன் சூழ்நிலைக்கேற்பத் தம்மைப் பொருத்திக் கொள்வதோடு நில்லாது தமக்கு உரிய சூழ்நிலையைத் தேடிக்கொண்டு, அதற்கேற்ப இயங்கிக் கொள்ளுகிறது. அத்தகைய இயங்குதலே உண்மையான கல்வி ஆகும். குழவி பேசுவதிலும் செய்வதிலும் கல்வி கற்றுக் கொள்ளுகிறது. இவற்றிற்கு வேண்டிய சூழ்நிலையை ஆசிரியர் அமைத்துத் தருகிருர். ஆசிரியர் கற்றுக் கொடுத்தால் பிள்ளைகள் அசைவற்று இருக்கிருர்கள். பிள்ளைகள் தாமாகவே கற்கும்போது சுறுசுறுப்பாக இருக்கிருர்கள். தாமாகவே கற்பதற்கு ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு வழியைக் காட்டவேண்டும். கல்வி [3]உள்ளப்பதிவு மட்டுமன்று. [4]வெளியீடுமாகும். ஆசிரியர்கள் அளிக்கும் ஒவ்வொரு உள்ளப் பதிவுக்கும் வெளிப்பதிவு உண்டாலன்றிக் கல்வி இல்லை என்று கருதவேண்டும். இங்ஙனம் கல்வி, உணர்வோடு மட்டும் நில்லாது நரம்பு மண்டலத்தோடு பொருந்தியதாகவும் ஆகின்றது. [5]ஃப்ரோபெல் இத்தகைய ஆசிரியக் கருத்தினை வற்புறுத்தியுள்ளார். கல்வி என்பது வெறும் ஏட்டுப்படிப்பன்று. அது கற்றவற்றை அறிந்து தெளிதலே ஆகும். பிள்ளைகள் எழுதுவதும், வரைவதும், கற்பனை செய்வதும், இயற்றுவதும், கண் வழியாகக் காண்பதும் கல்வி ஆகுமே அன்றிப் பாடத்தினை நெட்டுருச் செய்தல் அன்று. ஆசிரியர்கள் தமது முறையினை ஆய்ந்தும், அறிந்தும், ஆவன செய்தும், அளந்தும், திருத்தியும், மாணவர்களுக்கேற்ப அமைத்தும், தமது பணியினைத் திறமையாக ஆற்றியும், தமது தரத்தினை உயர்த்தியும் அமைத்துக் கொள்ளுவதுதான் ஈதல் மரபாகும்.

---

1. Ideals 2. Consciousness. 3. Impression 4. Expression 5. Froebel.

XII

உடல் நூல் அடிப்படையிற் கல்விக் காட்சி

கல்வி கற்கும் மாணவரை உடல் வேருகவும் உள்ளம் வேருகவும் பகுத்து ஆராயலாம். உயிர், உடலைச் சார்ந்ததும் உள்ளத்ததுமாகும். உயிரினங்களில் மனிதப் பிறவியே மிகவும் உயர்ந்தது. எல்லா உயிர்களுக்கும் ஓர் ஒருமைப்பாடு உண்டென்பதே தத்துவ அறிஞருக்கும் அறிவியலாருக்கும் ஒத்த கருத்தாகும். உடலின்றி உயிர்வாழ இயலாது. உடலோடு உயிர் ஒன்றியது. உயிர் என்பதே உள்ளமும் உடலும் ஒன்றியவற்றின் துடிப்பாகும். உள்ளப் பயிற்சியைவிட உடற்பயிற்சி முதன்மையானது. அதுவே இயற்கையின் வழியாகும். உள்ளம் ஒரு குடிலாகிய உடலத்தில் உள்ளதன்று. ஆனல் அஃது உடலோடு வளரும் தன்மைத்து; நல்ல உடலத்தில் நன்ருக வளருகிறது; மெல்லிய உடலத்தில் அதன் வளர்ச்சி குறைவுறுகிறது.

உள்ளத்தின்மீது உடலத்தின் செல்வாக்கு :

நடு நரம்பு மண்டலம் உடலத்தையும் உள்ளத்தையும் ஒழுங்குபடுத்துகிறது. புல நரம்புகள் உடல் உறுப்புக்களை இயக்குகின்றன. ஒரு மரத்துண்டின்மீது ஊசியைக்கொண்டு குத்தினுல் மரம் அசைவற்றுள்ளது. ஆனுல் ஊசியை ஒரு மனிதன் காலில் குத்தினுல் அவன் காலை இழுத்துக் கொள்ளுகிருன். எனவே மனிதனுக்குப் புலன் உணர்ச்சி நரம்பு மண்டலத்தால் உண்டாகிறது. புலன் உணர்ச்சியின் விளக்கமே கல்வியாகும். உள அசைவின் உச்சநிலையே உறுதிப்பாட்டு நிலையாகும். உடற் பயிற்சி உடலின் தசைகளை மட்டும் கட்டுப்படுத்துவதோடு நில்லாது உள்ளத்தினையும் உறுதிப்படுத்துகிறது. நடு நரம்பு மண்டலத்துக்கு மூளை நடு அலுவலமாக விளங்குகிறது. நரம்பு மண்டலம் உடலத்தையும் உள்ளத்தையும் இணைக்கிறது. உள்ள உணர்வு எல்லாம் நரம்புகளின் வழியாகச் செல்லுகின்றது. எல்லாக் கல்வியும் புலன் வழியாகவும் உடற்றசைகளின் வழியாகவும் செல்லுகின்றது. எனவே, புலப்பயிற்சியும் செயல் வினைகளும் உடலை வளர்க்கும் வழிகளாகும். பெரு மூளையில் நரம்புகள் ஆற்றலோடு இயங்கினுலன்றி உள்ளம் எதையும் பெற இயலாது. எல்லா நரம்பு இயக்கங்களும் உணர்வு மண்டலத்தை எட்டுவதில்லை. எடுத்துக் காட்டாக (அனிச்சைச்) செயல்கள் வெளி நரம்பு மண்டலத்தோடு நின்றுவிடுகின்றன. ஆனுல் உணர்வு மண்டலத்தை எட்டுவதெல்லாம் நரம்பு மண்டலத்தை ஒட்டியவை. இதனுலன்ரே உடல் நூலார்கள் [1]உளவழி நரம்பு இயங்

---

1. No psychosis without neurosis.

காது உள்ளத்தடுமாற்றம் இல்லை என்பர். உள்ளத் 'துடிப்பெல்லாம் மூளையின் துடிப்பேயாகும். உணர்வு மண்டலமும், நரம்பு மண்டலமும் ஒன்றுக்கொன்று சார்புள்ளவை. கல்விப் பணியாற்றுவதற்கு உடலத்தின் நலன் இன்றியமையாதது. ஆகையால் உள்ளத்தின் நலன் மூளையினுடைய நிலைமையைப் பொறுத்தும் மூளை அடங்கியுள்ள உடலத்தின் திண்மையைப் பொறுத்தும் அமைகிறது. நன்முக உறங்கி இளைப்பாறிய பிறகு மூளை உளப்பணியைச் சிறப்பாக நடைபெறச் செய்கிறது. மூளை ஓர் எந்திரத்தைப் போன்றது. இரத்த ஓட்டத்தினுல் அதில் உயிர்க்காற்று அளிக்கப்பெறுகிறது. நல்ல காற்றும் நல்ல உணவும் இன்றியமையாதன. இடைவிடாது இரண்டு மூன்று மணி நேரம் மூளைக்கு வேலை கொடுத்தால் அது சோர்வடைகிறது. குழந்தைகள் பதினைந்து அல்லது இருபது மணித்துளிகளில் சோர்வடைந்து விடுகிருர்கள். நீண்ட நேரம் மூளை இயங்கவேண்டுமானுல் போதிய உடல் வன்மை வேண்டற்பாலது. உடல் சோர்வுற்றபோது உள்ளமும் சோர்வடைந்து விடுகிறது. பகலெல்லாம் உடலோடு உழைப்பவர்கள் இரவில் நன்முக உறங்கிவிடுகிருர்கள். நன்முக உண்ட பிறகும் நமக்கு உறக்கம் வந்துவிடுகிறது. ஏனென்முல் மூளையில் உள்ள இரத்தமெல்லாம் உணவைச் செரிப்பதற்காகப் பயன்பட்டு விடுகிறது. அப்போது உள்ளம் சுறுசுறுப்பு இழந்துவிடுகிறது.

உடலத்தின்மீது உள்ளத்தின் செல்வாக்கு :

உள்ளக்கவலை, கலக்கம், அச்சம், சோர்வு ஆகிய நிலைகள் உடலுறுப்புக்களுக்கு அயர்வு தருகின்றன. அல்லது ஒரு கிளர்ச்சி, களிப்பு ஆகியவை உடலத்துக்கு ஊக்கம் தருகின்றன. எனவே உள்ளத்தின் நிலைக்கு ஒத்தவாறு உடல் இயங்குகிறது. உடலின்றி உள்ளமில்லை— உள்ளமின்றி உடலமில்லை என்பது வெள்ளிடை மலை. உடலத்தைப் பேணி உள்ளத்தை வளர்ப்பது கடனுகும். உடலுக்கு வேண்டிய உணவு, நற்காற்று, அதனேடு சேர்ந்த உயிர்க்காற்று, களைப்பைப் போக்கக்கூடிய உறக்கம், பொழுதுபோக்கு ஆகியவை உடலத்தையும் உள்ளத்தையும் நன்முகப் பாதுகாக்கும். பிள்ளைகளுக்குப் பாடம் கற்றுக் கொடுப்பதால் அவர்களுடைய மூளைக்குத் தூண்டுதல் உண்டாகிறது. ஆனுல் அளவுக்கு மீறினுல் பிள்ளைகள் சோர்வடைவார்கள். மூளைக்கு அடிக்கடி ஓய்வு அளித்தல் நலம். ஆனுல் விழித்திருக்கும் போது நாம் உணர்வோடு இருக்கின்றேம். அப்போது உள்ளம் தூண்டலுக்கும் துலங்கலுக்கும் கருவியாக இருக்கின்றது. ஒரே வகையான வேலையில் அல்லாது வேறு வேறு பணிகளில் உள்ளத்தை மாற்றி வந்தால் அயர்வு குறையும். அயர்வு ஏற்பட்டவுடன் கவனக்குறைவு உண்டாகிறது. வளரும் பருவத்தில் பிள்ளைகளுக்கு அயர்வு மிகுதியாக ஏற்படும். அவர்கள் அதனைப் பொருட்படுத்தாது உள்ளத்தை அளவுமீறி ஊக்கிவந்தால் அவர்களுடைய வளர்ச்சி குறை

யும். சிறுபிள்ளைப் பருவத்தில் பெற்றோர்களிலும் ஆசிரியர்களிலும் சிலர் கல்வியின் பெயரால் சிறுபிள்ளைகளை நசுக்கிப் பிழிந்து விடுகிறார் கள். அதனால் சிறுபிள்ளைகள் நன்றாக உடல் வளர்ச்சி பெறுவதில்லை. ஆசிரியர் வகுப்பறையில் வெகு விழிப்போடு பிள்ளைகளைக் கவனிக்க வேண்டும். ஓர் அகவை என்ற நாற்பத்தைந்து மணித்துளிகளும் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டுமென்று ஒரு முகமாக இடைவிடாது பாடம் சொல்லிக் கொடுப்பது பயனற்றது. அவர்கள் உள்ளம் ஏற்றுக் கொள்ளும் நிலையில் உள்ளதா என்று கவனிக்க வேண்டும். அவர்க ளுடைய கவனம் குறைவுறும் காட்சியே ஆசிரியருக்கு அறிகுறி. அளவு கடந்த பாடங்கள், நினைத்தபடி தேர்வுகள், தேர்வுகள் காரணமான பொதுவாகப் பிள்ளைகளுக்கு ஏற்படும் [1]உள்ளத் துடிப்பு, தேர்வு பெறாத வருடைய [2]உள்ள அதிர்ச்சி, ஆசிரியருடைய [3]அறைகூவல், ஆர்ப்பாட் டங்கள், பெற்றோர்களுடைய அதட்டல்—மிரட்டல்கள் இன்னோரன்ன பிறவெல்லாம் நமது பிஞ்சுகளின் உள்ளங்களைக் கசக்கி அவர்களுக்கு மனத்தாங்கலை உண்டுபண்ணி [4]உடல் குன்றும்படியாகச் செய்கின்றன. குழவி உள நூலார்கள் கூறும் அறிவுரைகள் அறியற்பாலன. குழவிகள் குழவிகளாகவே வளர்வதற்கு அவர்கள் போக்கில் ஆசிரியர் செல்ல வேண்டும். ஆசிரியர் போக்கில் குழவிகளை ஈர்க்கக்கூடாது. விளையாடு வதும், உண்ணுவதும், உறங்குவதும் குழந்தைகளது உரிமை. அவர்கள் விளையாடும் நேரமே கற்றல் நேரமாகக் கருதவேண்டும். பள்ளிக்கூட நேரங்களுக்கு அவர்களைக் கட்டுப்படுத்தக்கூடாது. ஏழாண்டுப் பருவமுள்ள பிள்ளைகள் இரண்டு மணி நேரமும், ஒன்ப தாண்டுப் பிள்ளைகள் மூன்று மணி நேரமும், பன்னீராண்டுப் பிள்ளை கள் நான்கு மணி நேரமும்தான் படிக்க இயலும். ஏட்டுக்கல்வி காரண மாக நம் பிள்ளைகள் புத்தகப் புழுக்களாக மாறி உடலோம்பலை மறந்து விடுகிறார்கள். கற்பிக்கும் முறைகள் பிள்ளைகளின் உள்ள வளர்ச்சிக்கு ஏற்ற பெற்றி அமைதல் அவசியம். மூளைக்கு அடிக்கடி ஓய்வு கொடுத் தல் நலம். காட்சிப் புலன்கள் மிகுதியாக இயக்கப்பெற்றால் செவிப் புலன்களுக்கு இயக்கம் தரலாம். இசையில் ஈடுபடுதல் ஒருவகை ஓய்வு தரக்கூடியது. ஓவியம் தீட்டுதலுக்குப் பிறகு கணிதம், மொழிப்பாடம் ஆகியவற்றைத் தொடங்கலாம். சிறிது நேரம் செய்யுள் ஒப்புவித்தலும் நல்லது.

ஆசிரியன்மார் தாம் கற்றுக்கொடுக்கும் பாடங்களுக்கு மட்டும் தம்மை ஓரளவு பொறுப்பாக்கிக் கொள்ளுகிறார்கள். ஆனால் முழு அளவுக்கும் பிள்ளைகளுடைய உடல் ஓம்பலைக் கண்காணிக்க வேண்டும் என்பதைக் கருதுவது கிடையாது. பெற்றோர்களுக்கொப்ப ஆசிரியர் களுக்கும் தமது மாணவர்களுடைய உடல்நிலை அறிய வேண்டிய

1. Mental excitement 2. Mental shock 3. Admonitions 4. Physical shrinkage.

ஒன்று. நல்ல காற்ருேட்டமுள்ள வகுப்பறைகள், உட்காரும் வசதிகள், வகுப்பறையின் பொருந்திய வெளிச்சம் ஆகிய பல ஒழுங்குகள் தற்போது பள்ளிகளில் வற்புறுத்தப் பெறுகின்றன. கரும்பலகை எல்லாப் பிள்ளைகளும் பார்க்கக்கூடிய இடத்தில் பொருத்தப்படுகிறது. பிள்ளைகள் கட்புலன் கெடாதபடி அவர்கள் புத்தகங்களைப் படிக்கக் கற்கிருர்கள். [1] செவியறைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு முன்னிடம் கொடுக்கப்படுகிறது. நேராக உட்காரவும் ஒழுங்காக நிற்கவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிள்ளைகள் கல்வித்தரத்தில் குறைந்திருந்தால் காரணத்தை அறிய ஆசிரியர்கள் அக்கறை கொள்ளுகிருர்கள். நோய், சோம்பல், அல்லது மடைமை ஆகிய காரணங்களுள் யாதென்று அறிந்து திருத்த முயற்சிக்கின்ருர்கள். தமது பிள்ளைகள் உடற்கூற்று வண்ணத்தையும் கற்றுக்கொண்டு நோயற்ற வாழ்வினை வகுத்துக் கொள்ளுகிருர்கள். பள்ளியில் மட்டுமின்றிப் பள்ளிக்கு வெளியிலும் மாணுக்கர்களுடைய ஈடுபாட்டினை அறிய ஆசிரியர்கள் விழைகின்ருர் கள். இவற்றை யாவும் அறிந்து மாணவருடைய முழு வளர்ச்சியினைப் பாதுகாக்கிருர்கள். நம் பள்ளிகளில் உள வளர்ச்சியோடு உடல் வளர்ச்சிக்கும் உடற்பயிற்சி அளிக்கின்ருேம். விளையாட்டுக்கள், உடற் பயிற்சிப் போட்டி ஆட்டங்கள் ஆகியவை நடைபெறுகின்றன. இவை எல்லாம் ஒன்றுக்கொன்று மாணவரின் உடலை வளர்க்க உதவுகின்றன. இளமையில் விளையாட்டுக்கள் நரம்புகளையும் தசைகளையும் வளர்க் கின்றன. அடுத்த பருவத்தில் பதினுன்கு வயது வரையிலும் உடற் பயிற்சி உடல் வளர்ச்சிக்கு உதவுகின்றது. நல்ல காளைப் பருவத்தில் போட்டி விளையாட்டுக்கள் பிள்ளைகளுக்கு உடற்கட்டினை அமைத்துத் தருவதோடு உடல் ஊக்கத்தையும் தந்து உதவுகின்றன. மாணவரை உடலும் உள்ளமும் இணைந்த ஒரு போகு முழுவெண்ணுக ஆசிரியர்கள் கருதவேண்டும். அந்தந்தப் பருவத்துக்கு ஏற்றவாறு இம் மூன்று வகை உடற்பயிற்சிகளும் உள்ள வளர்ச்சிக்கு உதவுகின்றன.

1. Short of hearing.

XIII

[1] சமுதாயச் சார்புற்ற கல்வி

ஒருவன் தன்னை உற்ற சூழ்நிலையில் பொருத்திக் கொள்ளுவதே கல்வியின் பயன் எனக் கருதினால் அச்சூழ்நிலையைப் பயக்கும் சமுதாயத்தோடு கூடிவாழ் பயிற்சி அளித்தல் கல்வியின் பொறுப்பாகும். சமுதாயத்தின் சூழ்நிலை எத்தன்மைத்து என்பது அறியற் பாலது. மனிதனுடைய கூடிவாழ் இயல்புக்கும் தான் பெறும் கல்விக்கும் இயைபு உண்டாவது யாங்ஙனம்? வாழத்தொடங்கும் குழவி தன்னையும் அறியாது உலகத்தையும் அறியாது இயங்குகிறது. தொடக்க மனிதனுடைய அறியாமைக்குக் குழவியின் அறியாமை ஒக்கும். அறிய வேண்டியவற்றை எல்லாம் அனுபவத்தின் வழியாகவே அறிய வேண்டும் என்றால் இயலாது. மனித இனத்தின் திரண்ட அனுபவங்களெல்லாம் வழிவழியாக வளர்ந்து சமூகத்தையும் அஃது அளிக்கும் சூழ்நிலையையும் உருவாக்குகின்றன. பண்டைக்காலம் தொடங்கி மனிதன் இயற்கையை வென்று தனதாக்கியுள்ளான். பலப்பல நிகழ்ச்சிகள் பல்வேறு அனுபவங்களைத் தந்து மனித உள்ளத்தையும் பண்பாட்டையுமே வளர்த்துள்ளன. மனித இனமும் அறிவுப் பெருக்கத்தால் தான் உண்மையை அறிந்து வருகிறது. இவையெல்லாம் கூடியதே [2] ஞான சம்பந்தமான சூழ்நிலை. இச் சூழ்நிலையில் மாணக்கர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பொருத்தப்பாடு பெறுகின்றனர். இங்ஙனம் சமூகத்தின் திரண்ட அனுபவமே நாம் பெறும் சமுதாயச் சார்புற்ற கல்வியின் நிலைக்களனாகும். கல்வி என்பது வெறும் ஏட்டுப்படிப்பு ஆகாது. மனித இனத்தின் ஞான சம்பந்தமான சூழ்நிலையில் படிப்படியாகப் பொருத்திக்கொள்ளுவதே உண்மையான கல்வியாகும்.

இத்தகைய பொருத்தப்பாடு படிப்படியாக ஏற்படுகிறது. குழந்தை பிறந்தது முதல் மூன்று வயது வரையில் பிறந்த இல்லத்தில் வளருகின்றது. அப்போது அதன் உடல் அதன் வயமாகிறது. மூன்றாண்டுகளுக்குப் பிறகு பள்ளிச் சூழ்நிலையில் ஏறக்குறைய இருபத்தைந்து வயது வரையில் கல்வி ஈடுபாடு நடைபெறுகிறது. அப்போதுதான் ஞானசம்பந்தமான சூழ்நிலையின் அறிமுகத்தால் நல்ல பொருத்தப்பாடு உண்டாகிறது. அப்போது சூழ்நிலையிலுள்ள சமூகத்தினரை அறிந்து

---

1. The Sociological Basis of Education. 2. Spiritual environment

கொள்ளுதல், அவர்களுடைய சாதனைகளை உணர்ந்து கொள்ளுதல், குறிக்கோள்களை அமைத்துக் கொள்ளுதல் ஆகியவை நடைபெறுகின்றன. உலக உணர்வு உண்டாகிறது; உலகத்தில் தான் அறியாத தொன்றில்லை என்ற பெருமிதம் உண்டாகிறது.

இன்றைய உலகில் நிலத்துக்கு அப்பால் வெட்டவெளி தன்னில் இலட்சக்கணக்கான கல்தொலைவிற்கு அப்பாலுள்ள கோள்களை அடையவும் அவற்றோடு தொடர்பு கொள்ளவும் அறிவுச் சூழ்நிலை விரிவடைந்துள்ளது. அச்சூழ்நிலை தரும் ஆற்றல் அளவுகடந்து உள்ளது. அதனைப் பெறுவதற்குப் பலப்பல கலைகள் உருவாகியுள்ளன. பல்கலைக் கழகங்கள், ஆய்வுக் கூடங்கள் எங்கும் தோன்றியுள்ளன. இன்றைய சமுதாயமும் வெகுவிரைவில் சூழ்நிலை நுணுக்கங்களைப் பெருக்கி விட்டது. வெந்தழலினில் இரதம் வைத்து ஐந்து லோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம் என்றும் விண்ணவரை ஏவல் கொளலாம் என்றும் கூறும் மொழிகள் மெய்யாகி வருகின்றன. எந்த அருஞ் செயலையும் செய்வதற்குச் சோர்வுறாதிருந்தால் தக்க பெருமையை முயற்சி உண்டாக்கித் தரும். இதனையே.

> " அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
> பெருமை முயற்சி தரும் "

என்று வள்ளுவர் கூறுவார். இன்றைய உலகம் எல்லா முயற்சிகளிலும் முன்னிற்ப தோடல்லாமல் வெற்றி கண்டு வருகிறது. இப்பெரும் சூழ்நிலையில் தன்னைப் பொருத்திக் கொள்ளுவதும் தன்னிடத்தைத் தேடிக்கொள்ளுவதும் மாண்பாகும். [1] உயிர் நூலாசிரியர்கள் மானிடக் கரு பல்வேறு உயிரினங்களின் வாழ்க்கை நிலைகளைப் பெற்றபிறகு உடல் உருவத்தினைப் பெறுகின்றதென்று கூறுகிறார்கள். இதனையே [2] தனி உயிர் வரலாறு, இன உயிர் வரலாற்றினைத் திருப்பிக்கொண்டே உள்ளதென்று கூறுவர். அங்ஙனமே மனித உள்ளம் முதிர்வுப்பருவம் எய்துவதற்கு முன் மனித இனத்தின் ஞானசம்பந்தமான வரலாற்றுப் படியில் முதிர்வு பெறுகிறது. அறிவு நிறைந்த உள்ளம் உலக அறிவு நிறைந்த உள்ளமாகும். உலக அறிவு கல்வியினால் அடையப் பெறுகிறது. கல்வி உளம் நிறைந்த மக்களை ஈன்று உதவுகிறது. அதனால் கிரேக்கர்களுடைய பேராசிரியராக விளங்கிய [3] சாக்ரடீஸ் தமது ஆசிரியப் பணியைப் பல உள்ளங்களைப் பேணி வளர்க்கும் [4] மருத்துவச்சியின் பணியென்று கருதினார்.

கல்வியே சமுதாயத்தின் அடிப்படையில் அமைந்தது. ஏனென்றால் மனிதன் கூடிவாழ் உயிரினங்களில் ஒன்றுவான். ஞானசம்பந்தமான சூழ்நிலை வழிவழியாக மனித சமுதாயத்தின் உண்மை, வாய்மை,

---

1. Biologists 2. Ontogeny repeats Phylogeny 3. Socrates
4. Intellectual Midwifery.

மெய்மை ஆகியவற்றின் விழுமிய பொருளதிகாரமே ஆனதால் கல்வி இயற்றுவது சமுதாயப் பணியாகும்.

அறிவுச் சூழ்நிலையைக்கொண்டு, உளநூலார் மனித உள்ளத்தின் நனவுநிலையை மூன்ருகப் பகுத்துள்ளார்கள். அவையாவன: [1] அறிதல் நிலை, [2] உணர்தல் நிலை, [3] இயற்றல் நிலை என்பன. எனவே உள்ளம் ஒரு பொருளைப்பற்றி [4] அறிகிறது. அதைப்பற்றி உள்ளத்தில் [5] உள்ளுகிறது. அதன் பயனுல் செயல்படுத்தத் தக்கதைச் [6] செயல்படுத்துகிறது. அதனுல், ஞானசம்பந்தமான சூழ்நிலையில் அறிவின்பாற் பட்டது—அறிவது; உணர்வின்பாற் பட்டது—உள்ளுவது; செயப்படுபொருளாவது—உள்ள உறுதியின்பாற் பட்டது. அதனுல் உள்ளம் உள்+மை ஆகிய உண்மையை நாடுகின்றது. உள்ளுணர்வு உணர்வின்பாற் பட்ட அழகினை நாடுகின்றது. உள்ள உறுதிப்பாடு நன்மையை இயற்றுகின்றது. ஆகவே ஞானசம்பந்தமான உயர் நிலைகள் உண்மை நிலை, அழகு நிலை, நன்மை நிலை என்பன. இவை மூன்றும் அடங்கிய சூழ்நிலை: ஒன்று—அறிவியல்கள், இரண்டு—கலைகள், மூன்று—செயற்பாட்டு நிகழ்ச்சிகள் என மூன்று பிரிவுகளாகும். அறிவியல் துறை இருவகைத்து. பொருளதும், உள்ளத்ததும் என்று பொருளதனை இருகூருக்கி உயிருற்றது, உயிரற்றது என்பர்.

[7] அறிதல்:

அறிதல் முதல்நிலை. [8] அறிவியற்கலைகள் அறிவாற்றலை வளர்க்கின்றன. "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்பதற்கிணங்க உள்ளத்தால் உள்ளி உள்ளதன் உண்மையினை உணர்வதே அறிவியல் ஆக்கமாகும். உலகத்தில் உள்ள பொருள்களெல்லாம் [9] உயிர் உள்ளவை, [10] உயிரற்றவை ஆகிய இருவகையின. உயிர் அற்ற பொருள்களைப் பற்றி உணர்விப்பவை [11] அறிவியற் கலைகள். உயிர் உள்ளவைகளை உணர்விப்பது [12] உயிரியற் கலை. எல்லாப் பொருள்களும் [13] புலன்களின் வழியாக நமது உள்ளத்தை அவாவுகின்றன. பொருள்களையன்றி உள்ளம் தனித்து இயங்காது. உள்ளம் [14] அகத்தது. பொருள் [15] புறத்தது. எல்லாப் பொருளும் உள்ளத்தின் [16] புலன் உணர்வுத் தொகுப்பேயாகும். எனவே அறிவெல்லாம் பொருளைப் பற்றியது. பொருள் புறத்ததாகையால் முதற்கண் அறிவு புறத்ததாகிப் பின்னர் அகத்ததாகின்றது. புறத்ததாகிய பொருளை விரிக்கும்

---

1. Cognition 2. Conation 3. Volition 4. Knowing 5. Feeling 6. Willing 7. Cognition 8. Sciences 9. Animate 10. Inanimate 11. Physical Sciences 12. Biological Sciences 13. Senses 14. Subjective 15. Objective 16. Sensations

அறிவியற் கலையைப் போன்றவை [1] நிலநூல், [2] சுரங்கக்கலை, [3] வான நூல், [4] இரசாயனம் ஆகியவையும் [5] அறிவியல்களே.

உயிர் நூலில் அடங்கியவை பல: [6] பயிர் நூல், [7] விலங்கு நூல் மற்றும் [8] மனித இனநூல், [9] பொருளாதார நூல் [10] சமூக வளர்ச்சி நூல் முதலியவை. இவையும் பொருள்களின்பாற் பட்டவை. மனித [11] உள்ளம் தன்னை அறியும் முயற்சியில் அஃது இயங்கும் தன்மையை அறிவதோடு, அதன் விளைவையும் அறிகின்றது. உள்ளம், [12] புலன் உணர்ச்சி, [13] புலக்காட்சி, [14] நினைவாற்றல், [15] கவனம், [16] பகுத்தறி வாற்றல் ஆகிய வழியில் இயங்குகின்றது. அங்ஙனம் இயங்குவதால் உள்ளம் பல ஆக்கங்களைத் தேடுகின்றது. அவையெல்லாம் பாகுபாடு பெறும்போது [17] மொழி, [18] இலக்கியம், [19] கணிதம், [20] மெய்யறிநூல் முதலியவற்றினைத் தந்துதவுகின்றன. உள்ளத்தைப் பற்றிய நூல் [21] உளநூல். உள்ளம் தன்னை அறிந்துகொள்ளுவது [22] அகக்காட்சியா லாகும். அகக்காட்சி உண்டாவது [23] உற்று நோக்குதலாகும். ஆய் கருவிகளால் உள்ளத்தினைச் சோதனை செய்யலாம். மற்றவர்களுடைய செயல்களை உற்று நோக்கினால் அவர்களுடைய உள்ளப்போக்கினை அறிதல் கூடும். உள்ளத்தைப் பற்றிய அறிவியல்களாவன, [24] தருக்கம், [25] அறநூல், [26] மொழிநூல் முதலியவை. இவற்றோடு [27] எழிலியலும் (முருகியல்) ஒன்றாகும். தருக்கம், எழிலியல், அறநூல் ஆகிய மூன்றும் [28] அறிதல், [29] உணர்தல், [30] இயற்றல் ஆகியவற்றோடும் [31] உண்மை, [32] அழகு, [33] நன்மை ஆகியவற்றோடும் ஒப்புமை பெறுதல் காண்க.

உள்ளக் கருத்துக்கள் சொற்களாகப் பேசப்படுவதால் மொழி உரு வாகிறது. [34]இலக்கணம் மொழியின் இருப்பு நிலையை உணர்த்து கிறது. மொழியின் வழியாக [35]இலக்கியங்களை அறிகின்றோம். இலக் கியம் நமது [36]உணர்ச்சியால் எழுச்சி பெற்ற கருத்தோவியமாகும். மொழியைக் கற்பதற்குப் பேசுதல், படித்தல், எழுதுதல், இலக்கணமறி தல் ஆகியவற்றை அறிகிறோம். இதன் உயர்நிலை [37]ஒப்பிலக்கண அறி வாகும். கணிதம் உள நூல்களின் சார்புற்றது. எந்த அறிவியலும் கணிதத்தை அடிப்படையாகக் கொண்டது. கணிதம் எண்களின் கூர்

---

1. Geomorphology 2. Minerology 3. Astronomy 4. Chemistry 5. Physical Sciences 6. Botany 7. Zoology 8. Anthropology 9. Economics 10. Sociology 11. Mind 12. Sensations 13. Perceptions 14. Memory 15. Attention 16. Reasoning 17. Language 18. Literature 19. Mathematics 20. Philosophy 21. Psychology 22. Introspection 23. Observation 24. Logic 25. Ethics 26. Philology 27. Aesthetics 28. Knowing 29. Feeling 30. Willing 31. Truth 32. Beauty 33. Goodness 34. Grammar 35. Literature 36. Emotions 37. Comparative Philology

மையைக் காட்டுவது. கணிதம் பல வகைத்து. அவை [1]எழுத்துக் கணிதம், [2]வடிவக் கணிதம், [3]முக்கோணக் கணிதம், [4]பகுத்தறி வடிவக் கணிதம், [5]நுண்ணியற் கணிதம் ஆகியவை.

கருத்துக்கள் வேறு, அவை செயல்படுவது வேறு எனக் கருதுவது தவறு. இவை இரண்டும் உண்மையும், வாழ்க்கையும் போன்றவை. உண்மை வாழ்க்கையின் அறிவியல். வாழ்க்கை உண்மையின் செயற்பாடு. [6]கொள்கைத் திரட்டு அறிவியல் ஒவ்வொன்றுச்கும் செயல்படும் கலைகள் உண்டு. எடுத்துக் காட்டாக [7]விஞ்ஞானம் கொள்கைத் திரட்டு அறிவியல்—அதன்பாற் செயல்படுவது [8]பொறி இயற் கலை இயல்; [9]நில உட்கூற்றியல், கொள்கைத் திரட்டு அறிவியல்—அது அதன்பாற் செயல்படும் கலை [10]உலோகக் கலை. [11]வான இயல் வெம்மை தண்மை நிலையறியும் கலையாகிறது. [12]இரசாயனம்—[13]தொழில் துறை இரசாயனமாகிறது; [14]மானிட உடல் நூல்—[15]மருத்துவக் கலையாகிறது. மானிட நூல், உளநூல், சமூக நூல்கள் ஆகியவை ஆசிரியக் கலைக்குப் பயன்படுகின்றன. அறநூல் [16]ஒழுக்கக் கலையாகிறது. [17]கணிதம், [18]கட்டட இயலாகிறது. இவ்வாறு தொடக்க நிலையில் எல்லாம் [19]கலை வடிவம் பெற்ற பிறகு சிறிது சிறிதாகக் [20]கொள்கை அடைவு பெற்றன. எடுத்துக் காட்டாக ஆசிரியம் புலவழி நிலையிலிருந்து புற ஆய்வுநிலை எய்தியும், வழக்க முறையில் தொடங்கியும் சென்றும், பகுத்தறி முறை அறிவியல் முறை வரையில் கலையாகி உள்ளது.

அசையாப் பொருள்களின் அறிவியல்களைப் படிப்பதால் [21]உற்று நோக்கல், [22]உட்காட்சி, [23]உய்த்து உணர்வு ஆகிய பயிற்சிகள் உண்டாகின்றன. உற்று நோக்கலால் ஒற்றுமை வேற்றுமை காண்கின்றோம். உய்த்து உணர்வினால் உண்மையின் பயனை உணர்கின்றோம். உட்காட்சியால் உண்மையின் பொருளை அறிகின்றோம். இத்தகைய பயிற்சி உள்ளத்துக்குப் பொது நிலைப்படுத்தல் தகுதியைத் தருகிறது; பொதுமைக் கருத்துக்களைத் திரட்ட முற்படுகின்றது; காரண காரிய அளவைகளையும் இலக்கணங்களையும் அறிகின்றது.

அசையாப் பொருள்களின் இலக்கணங்களை அறிவதைப் போன்று பல உளநூல்களையும் அறிமுகப் படுத்த வேண்டும். மனிதன், தான் பேரண்டத்தில் ஒரு சிற்றண்டம் என்பதை உணர வேண்டும். அவனுக்குச் சிந்தனையாற்றல் வளரவேண்டும். தருக்க முறையில் காரண

---

1. Algebra 2. Geometry 3. Trignometry 4. Analytic Geometry 5. Calculus. 6. Theoretical Sciences 7. Physics 8. Engineering 9. Geology 10. Metallurgy 11. Weather 12. Chemistry 13. Industrial Chemistry 14. Physiology 15. Medicine 16. Conduct 17. Mathematics 18. Civil Engineering 19. Art 20. Science 21. Observation 22. Insight 23. Inference.

காரியப் பொருத்தப்பாடுகள் இணையவேண்டும். அத்தகைய உள நிலையில் மெய்யறி நூலை நுகர வேண்டும். நுணுக்க ஆராய்ச்சி இயல், எழிலியல், இலக்கிய இயல் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றுத் தனது உண்மை, வாய்மை, மெய்மை ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளவேண்டும். இவற்றுள் மிகக் கடினமானது, மெய்மைத் திறனுகிய செயலாற்றுவது. *'அறிவே நற்குணம்' எனக் கருதுகின்ருேம். ஆனல் உண்மையை உணர்ந்த பிறகு அதனைச் செயல்படுத்துவது பெரும்பான்மை கிடையாது. அறிவுப் பயனல் நற்குணப் பயனை எய்தலாம். நற்குணத்தை நழுவ விட்டுத் தீய வழியிலும் செல்லலாம். எல்லாம் அறிந்ததனல் நற்குணம் கிட்டிவிடுமென்று கூறமுடியாது. நமது பாடத் திட்டங்கள் அறிவியல்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். அவை ஒவ்வொன்றினைச் சார்ந்த கலைகளைத் தொடர்பு படுத்த வேண்டும். இவை இரண்டையும் அறிந்த பயனல் திருவினையாக்க வாழ்க்கைப் பயிற்சி வகுக்கப்படல் வேண்டும்.

[1] உணர்தல்: ஞானசம்பந்தமான சூழ்நிலையில் மனவெழுச்சியை மாண்பாக்கும் பயிற்சி மிக இன்றியமையாதது. கலையும் சமயமும் உள்ளத்தைப் பண்படுத்தக் கூடியவை. மனவெழுச்சிச் சூழ்நிலை என்பது மனிதன் தன் உணர்வுகளை எல்லாம் வெளிப்படுத்தி உருவாக்குவதேயாகும். அறிவாற்றலால் உண்மை வெளியாவதைப் போன்று உணர்வாற்றலால் சூழ்நிலை எழில் பெறுகிறது. மனவெழுச்சியின் மாண்புற்ற நிலையே கலையாகின்றது. கலை, கருப்பொருளையும், உணர்வுலகையும், அசையாப் பொருளையும், உள்ளத்தையும், உண்மையினையும், குறிக்கோளினையும் ஒருங்கே காண்பது. ஆய கலைகள் அறுபத்து நான்கு என்பர். சிற்பம், செதுக்கு, ஓவியம், இசை, இலக்கியம் ஆகியவற்றை ஐம்பெருங்கலை என்பர். மற்றவை எல்லாம் இவற்றினடியாகப் பிறந்தவை. சிற்பம், செதுக்கு, ஓவியம் ஆகியவை கட்புலனைக் கவரக் கூடியவை. இசையும் இலக்கியமும் செவிப்புலனை ஈடுபடுத்தக் கூடியவை. இசைத்தற் கலையின் எழுச்சி யெல்லாம் அகத்ததாகும். இலக்கியம் வாழ்க்கையை வடிவமாக்கித் தருவது. இலக்கியத்தின் உண்மைப் பயனே மெய்யறி நூலாகின்றது. மெய்யறி நூலின் உருவமே இலக்கியமாகும்.

எழிற் காட்சியைக் கண்டு உணர்வு வயப்படும்போது புறத்தே உருப்பெறுவது கலை. எல்லாம் வல்ல இறைவனை வழிபடுங்கால் எழும் உணர்வு சமயமாக உருப் பெறுகின்றது. தனி ஒரு மனிதன் தனது சிந்தனை வயப்பட்ட கடவுட் கருத்தினை வெளிப்படுத்துவது சமயமாகாது. அது சமயக் கொள்கையாகும். அல்லது அவனுடைய நம்பிக்கைக் கூற்ருகும். சமயத்தின் பெயரால் மனிதன் செய்வதெல்லாம் சமயமாகாது. எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி உணர்வதே உண்மை

* Knowledge is virtue 1. Conation

யான சமயமாகும். அங்ஙனம் உணர்ந்ததைக் கருத்தாக்கி வெளியாக்கினுல் சமய இயலாகும். அதைச் செயல்படுத்துவதே சமய வழிபாடாகும். எல்லாம் வல்ல இறைவனை மனக்கோயிலில் வழிபடுவதே சிறந்த சமயமாகும். இறைவன் என்றும் உள்ளவன்; எல்லாம் அறிந்தவன்; அன்பே உருவானவன். இத்தகைய இறைவனை உணர்வது உள்ளத்தை அகலப்படுத்துவதோடு மாண்பாக்குவதுமாகும். சமயம் கற்பித்தல் பாடமன்று. அதனைக் கற்பிக்க முற்பட்டால் அஃது ஒரு சமய நூலாகி விடும். அதன் பண்பாடுகளை எடுத்தோதினுல் அறநூலாகி விடும். சமயக் கல்வியால் மக்களாட்சி இடர்ப்பாடு உறுமென்று கருதி மக்களாட்சியைச் சமயச் சார்பற்றதாக உருப்படுத்தி யுள்ளார்கள். அதனுல் சமயம் பள்ளிகளில் கற்பிக்காது வளர விடுவது நன்றென்று கருதுகிருர்கள். ஆனுல் பலர் சமய சார்பற்ற கல்வியை உயிரற்ற கல்வி, மறக் கல்வி என்றெல்லாம் இகழ்கிருர்கள்.

நம் பள்ளிகளில் பெரிதும் புறக்கணிக்கப்படுபவை சூழ் நிலையில் காணப்பெறும் பல கலை அழகுகள். அவற்றை நமது மாணவர்கள் சுவைக்கவும் அவற்ருல் அவர்களது உள்ளம் நெகிழவும் பண்பாடு பெறவும் செய்யாமல் விடுகிருேம். எழில் உணர்வே மனித உள்ளத்தைக் குழையச் செய்வது. கலைகளும், சமயங்களும் இவ்வகையில் இன்றியமையாதவை. அவை குழவி உள்ளங்களை ஈர்ப்பதோடு அவற்றைத் தமது எழிலால் வண்ணமுறச் செய்யக் கூடியவை. உள்ளம் அமைதியோடு ஒருமைப்பாடு உறுவதும், இன்புறுவதும் அழகுக் கலையில்தான். அழகினையே மதிக்கும் மாணவர் உள்ளம் அழகற்றதை வெறுக்க முற்படும். அழகுக் கலைகள் அழகுற்ற குணங்களை வளர்க்கும். நல்லவை எல்லாம் அழகுணர்ச்சியைப் படிப்படியாகத் தரும். தீயவை எல்லாம் அழகற்றதாக வெறுக்கப்பெறும்.

சுவை உணர்ச்சி நம் பள்ளிகளில் மாணக்கரிடையே பெரிதும் வேண்டற்பாலது. அழகுணர்ச்சியே சுவையுணர்வுக்கு அடிப்படை. பல கலைகள், சமய வழிபாடு, இலக்கியம், ஒழுக்கம் ஆகியவை எல்லாம் அழகு நிரம்பியவையாகையால் மாணக்கருடைய உள்ளத்தைத் தொடக் கூடியவை. இவற்றுள் "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பதனை மாணக்கரிடையே வற்புறுத்தினுல் அவர்கள் ஒழுக்கத்தின் அடிப்படையில் நல்லவற்றினைப் பழகிக் கொள்ளுவார்கள். மாணவருக்கு இன்றியமையாதவை, அவர்களுடைய ஒழுக்கங்களாகிய வைகறைத் துயிலெழுதல், நீராடுதல், தூய ஆடை அணிதல், காலந் தாழ்த்தாது நேரத்தோடு பள்ளிக்குச் செல்லுதல், பள்ளியில் ஒழுங்காக நடந்து கொள்ளுதல், அவர்களுடைய பள்ளி அறைத் தூய்மை, தட்டு முட்டு மரச்சாமான்கள் ஆகியவற்றை ஒழுங்கு படுத்துதல், வகுப்பு அறையை அணி செய்தல் ஆகிய அழகு படுத்தும் செயல்களெல்லாம் அழகுணர்ச்சியை உண்டாக்கக் கூடியவை; சுவை உணர்ச்சியின்பாற் பட்டவை. சுவைத்தலுக்கு நினைவாற்றல்

வேண்டியதில்லை. எனவே குழவிப் பருவத்தில் சுவை உண்டாகக் கூடியது. பிள்ளைகள்பால் வளரும் சுவையை ஆசிரியர்கள் கண்ணும் கருத்துமாக வளர்க்க வேண்டும். இளமையிலிருந்து அவர்களை வயப் படுத்தக்கூடியது தாயின் தாலாட்டு இசை. அவர்களுடைய நடை உடைகளிலும் நாம் அழகினைக் காண்கின்றோம். நமது கண்களைக் கவரக் கூடிய அவர்கள்பால் காணப்பெறும் அழகுணர்ச்சியையும், அதன் வெளியீட்டையும் கண்காணித்து வளர்க்க வேண்டும். பொதுவாக இத்தகைய அழகுணர்ச்சி குமரப் பருவத்தில் ஆண்களிடத்தில் குறைவுறுவதும், பெண்களிடத்தில் நிறைவுறுவதும் இயல்பு. ஆகையால் இவை இரு பாலரிடத்தும் வளருவதற்கு ஏற்ப வழி கோலுவது ஆசிரியக் கடமையாகும். நம் பள்ளிகளெல்லாம் அழகுணர்ச்சியை ஊட்டக் கூடியவையாக அமைக்கப் பெறவேண்டும். ஆசிரியன்மார்கள் ஒவ்வொருவரும் தமது வகுப்பறையினை அழகாக அமைத்துக் கொண்டால் தலைமையாசிரியர் மற்ற பொது இடங்களை அழகு படுத்திக் கொள்வார். கட்டிடம் எவ்வளவு எளிமையாக இருந்தாலும் அதனைத் தூய்மையாக வைத்துக் கொண்டும், அதன் சுற்றுப்புறத்தை மரம் செடி கொடிகளால் அழகு படுத்திக் கொண்டும் கல்வித் தொடர்பான படங்களைச் சுவர்களில் மாட்டிப் பள்ளி முழுவதும் ஒழுங்கினை வற்புறுத்தியும், பள்ளிப் பிள்ளைகளைச் சீருடையணியச் செய்தும் பள்ளி முழுவதும் எங்கும் அழகு மயம் நிறைவித்தால் பிள்ளைகளிடையே சுவையோடு கூடிய ஒழுங்கு நிலவும். இங்ஙனம் அழகு படுத்தும் பணியில் பிள்ளைகள் பங்கு வேண்டற்பாலது. பங்கு பெறுவதாலேயே பிள்ளைகள் பயிற்சி பெறுவார்கள். பயிற்சியின் பயனாக சுவை உணர்ச்சி வளர்ச்சிப்பெறும். ஆசிரியர்களும் சுவை உணர்ச்சி உள்ளவர்களாக இருத்தல் நலம். இல்லாதொழியினும் அவர்கள் பிள்ளைகளுடைய சுவை உணர்ச்சியைப் பழித்தலும், ஏசுதலும் கூடாது. ஆசிரியர்களுள் ஒரு சிலர் அரசாங்கத் [1]தணிக்கையாளர் வருகையின்போது வகுப்புச் சுவர்களிலெல்லாம் [2]பல கருத்துப் படங்களையும், நிலப் படங்களையும் [3]வரைபடங்களையும், உருவப் படங்களையும் கண்டபடி எல்லாம் ஒட்டியும், அடித்தும், மாட்டியும் அழகுக் கேடு செய்து வருவது மிகக் கண்டிக்கத்தக்கது. மேலும் இவற்றை எல்லாம் தணிக்கையாளர் வருகையை முன்னிட்டுப் பிள்ளைகளை வற்புறுத்தியும் அதட்டியும் செய்வதால் யாருக்கு என்ன பயன் என்பதை அறிதல் எளிது. தணிக்கையாளர் சென்ற பிறகு இவற்றிற் சில கிழிந்தும், மற்றவை ஒரு பாதி காற்றில் பறந்து கொண்டும், மற்றொரு பாதி சுவரோடு ஊசலாடிக் கொண்டும், பிறகு நாளடைவில் எல்லாம் குப்பையோடு குப்பையாகியும் விடுகின்றன. இத்தகைய அழகுக்கேடு மாணாக்கரிடையே சுவையை ஊட்டுமா அல்லது அகற்றுமா என்பதனைத் தொடக்க நிலை முதல் பெரும் பள்ளி ஆசிரியர்கள் வரையில் எல்லாரும் சிந்திக்க வேண்டும். கலை

1. Inspectors 2. Illustrative Pictures 3. Graphs

யைக் காணும் ஆற்றலையும், கலைச் சுவை அறியும் உணர்ச்சியையும் கலையைக் [1]கற்பனை செய்யும் திறனையும் உண்டாக்குவதே உள்ள உணர்ச்சியை ஒரு நிலைப்படுத்துவதாகும். கலைகளில் மட்டும் அல்லாது [2]இலக்கியத்திலும் கலையழகைக் காணப் பழகுவது அதன் பாற்படும். இலக்கியங்கள் கருத்தோவியங்களாகும். அவற்றில் [3]கருத்தழகு, [4]சொல்லழகு, [5]நடையழகு ஆகியவை எல்லாம் நிறைந்துள்ளன. அவை படித்தாலும், பக்க நின்று கேட்டாலும் [6]அகத்தெழுச்சி தரக் கூடியவை. அவற்றை ஆக்கிய புலவர்கள் தாம் பெற்ற விழுமிய அனுபவத்தைப் பிறரும் பெறச் செய்துள்ளனர். "தாமின்புறுவது உலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என்பர் திருவள்ளுவர். இலக்கியத்தின் செய்யுள் வடிவம் [7] காவியமாகவும், [8] நாடகமாகவும், [9] பாட்டாகவும் வழங்குகின்றது. இவை யாவும் [10] நுகர்தற்குரியவை. நுகரும் போது இன்பம் பெருகுவதோடு புதுமை இன்பமும் எய்த இயலுகின்றது. இக்கருத்தினை உவமானமாக ஒரு குறளில்

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

என்று திருவள்ளுவர் கூறுகின்றார். எனவே கலைகளின் நுகர்தல் திறனை வளர்த்து நல்ல உணர்ச்சிகளை வளர்ப்பது நல்லது. பெரும்பான்மை தீய உணர்ச்சிகளால் நமது மாணவர்கள் கெடாவண்ணம் நல்ல வழிகளில் உள்ள உணர்ச்சிகளைப் பயனுறச் செய்வது ஆசிரியர்களின் தலையாய கடன்.

[11] திருவினையாக்கம் :

வழிவழியாக வகுத்த வாழ்வு தொன்றுதொட்டு உலகை அறிந்தும் ஆய்ந்தும் வகைப்படுத்திக் கொண்ட தொன்று. ஆங்காங்கே மக்கள் உற்ற சூழ்நிலையை விளக்கமாக்கிக் கொண்டார்கள். அத்தகைய விளக்கம் மக்களுடைய அறிவுப் பெருக்கமாக வளர்ச்சியுற்றது. இதுவே அறிவாக்கம் ஆகும். அங்ஙனம் வளர்ச்சியுற்ற உலகினை வழிவழி வந்த மக்கள் புலன்களால் நுகர்ந்து அகத்தினால் அறிந்து உணர்வு வயப்பட்டு உள்ளக் கிளர்ச்சியோடு வாழ்ந்தார்கள். அறிவுப் பெருக்கம் அகத்ததாகையால் அதன் ஆற்றலின் வெளியீடு மனிதனது ஆக்கமாகும். ஆக்கத்துக்கு வழியாவது ஊக்கம். ஊக்கத்தை உறுதியாகத் தம் கைப்பொருளாக மக்கள் கொண்டார்கள்.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை"

---

1. Creative skill 2. Literature is Art 3. Thought 4. Diction 5. Style 6. Emotion. 7. Epic 8. Drama 9. Lyric 10. Enjoyment. 11. Volition

என்பது வள்ளுவம். இன்றைய உலகம் ஊக்கத்தோடு ஆக்கத்தைத் தேடிய உலகமாக ஒளிருகின்றதன்றோ! இதுவே மனிதனின் திருவினையாக்கம்; மனிதனின் வெறுப்பு நீங்கிய விருப்புக் கோலம். இதனை உருவாக்கிய மக்கள் [1] தனித்தனியாகவும், [2] சமூகமாகவும், ஒரு [3] நாட்டினராகவும் உருப்பெற்றுள்ளார்கள். ஒழுங்குபட்ட தனியார்கள் ஒன்றிய கூட்டமே சமூகமாகவும், அவர்கள் வகுத்துக்கொண்ட நிலப்பரப்பில் தமது நலத்தை நழுவவிடாது கட்டிக்காத்துத் தாமென்ற உணர்வு கொண்டதால் நாட்டினராகவும் வாழ்ந்தார்கள். அவர்களுடைய விருப்பாற்றல்களே பலவகை ஆக்கங்களாகப் பல நாடுகளில் உருப்பெற்றுள்ளன. மக்கள் தனித்தனியாகச் செயலாற்றி [4] அறவழி உண்டாக்கினார்கள். சமூகமாகச் செயலாற்றிச் [5] சட்டங்களும், [6] கோட்பாடுகளும் உண்டாயின. நாட்டினராக ஒருமைப்பாடு பெற்றபோது தம்மை ஆட்சி செய்துகொள்ள [7] அரசினை அமைத்துக் கொண்டார்கள். இவற்றை எல்லாம் வரைந்து உதவுவது [8] வரலாறு. இவ்வரலாற்றின் கண் [9] அறிஞர் பலருடைய வாழ்க்கைகள் இடம் பெறும். அவர்களுடைய [10] சாதனைகளுக்குச் சான்றுகள் வரலாற்றுக் குறிப்புக்களே. அன்னாருடைய [11] அடிச்சுவடுகளை நாம் பின்பற்றுகிறோம். அவர்களுடைய வாழ்க்கை நமக்கு [12] அகத்தெழுச்சியை நல்குகிறது. மனிதன் தனது [13] உரிமைக்காக அரும்பாடுபட்டு அதைப்பெற்ற காட்சியினை வரலாறு விரித்துக் கூறும். இத்தகைய உரிமையின் அடிப்படையில் [14] அரசியல் அமைப்புக்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இவை ஒரு நாட்டினர், தாம் பல கோணங்களில் வாழ்வாங்கு வாழவேண்டி வாழ்க்கையில் வகுத்துக் கொண்டவை. சட்டங்களும் சமூகத்தினுடைய வாழ்க்கைத் திட்டங்கள். அவை நன்மையைக் காப்பாற்றித் தீமையை அகற்றக்கூடியவை. கடமை இவை என்றறிந்து சான்றாண்மையை மேற்கொண்டு நடப்பவர்கள் நல்லவையே இயல்பான கடமை எனக் கருதிப் பல பண்புகளோடு வாழ்ந்த வாழ்க்கைகளும் வழிகாட்டும் திருவினைகளே.

இவற்றை எல்லாம் நமது மாணவர்கள் அறியவேண்டியது கடமையாகும். ஒப்புரவறிதல் தலையாயது. மனிதன் தனித்து வாழ்வது இயலாது என்பதைப் பிள்ளைகள் அறிய வேண்டும். சமூக வாழ்க்கையே சிறந்ததென்பதை அறிவுறுத்த வேண்டும். சமூக வாழ்க்கையில் [15] தனி 'ஒவ்வொருவனுக்கும் இடம் உண்டென்றும் சமூகம்' அத்தகைய ஒருமைப்பாடுற்ற குழுவென்றும் அறிதல் வேண்டும். மாணவர்கள் முறையே தமது [16] இல்லம், [17] பள்ளி, [18] நகராட்சி, [19] அரசாட்சி, [20] திருச்

1. Individual 2. Society 3. Nation. 4. Morality 5. Laws 6. Regulations 7. Government 8. History 9. Great men 10. Achievements 11. Footprints 12. Inspiration 13. Freedom 14. Constitution. 15. Individual 16. Home 17. School 18. Civic administration 19. Government 29. Church

சபை ஆகியவற்றிற்குப் பணிவுடையராக ஒழுகுதல் கடமை என்பது விளங்க வேண்டும். வரலாறு வழங்கும் திருவினைகள் பிள்ளைகளுக்குப் பல எடுத்துக்காட்டுகளாகி அவர்களை நல்ல குடி மக்களாக்குகின்றன. கல்வியின் ஒரு பெரும் பயன் அஃது அன்றோ!

நமது பிள்ளைகளை ஞானசம்பந்தமான சூழ்நிலையில் பொருத்த வேண்டியது பள்ளிகளின் கடமையாகும். எனவே கல்வி ஏற்பாடு இதன் சார்புற்றதாக வேண்டும். கல்வி ஏற்பாட்டின் பாடங்கள் பலவெல்லாம் உலக மக்களுடைய விழுமிய வாழ்க்கையின் வரலாற்றுக் குறிப்புக்களே. இவற்றைக் கற்பிப்பதால் பிள்ளைகளிடையே மனிதப் பண்பும் சமூக ஒழுக்கமும் வளருகின்றன. இதன் பயனை முழுவதும் பெறுவதற்கே [1]பரந்த கல்வி வேண்டுமென்பர் ஒரு சாரார். பரந்த கல்வி எற்றுக்கோ எனின், பரந்த மனப்பான்மை எய்துதற்கே ஆகும். எல்லாப் பாடங்களையும் கற்றல் அரிய தொன்றாகலானும் கல்வி கரையில கற்பவர் நாட்சில வாகையாலும் இன்றியமையாதவற்றை எல்லாருக்கும் உரிமையாக்கி ஒரு சிலவற்றை விருப்பப் பாடமாக்குவது நல்லது. அப்போது மாணவர்கள் தம்முடைய விருப்புக்கேற்பவும், தகுதிக்கேற்பவும் கற்றறிவார்கள். பொதுப்பாடங்களும் விருப்புப் பாடங்களும் போதிய பட்டறிவினைத் தரும்; உள்ளத்தை விரிவடையச் செய்யும்; அறியும் ஆற்றலைத் தரும்; எச்சூழ்நிலையையும் உணர்விக்கும். இதனால் உள்ள வளர்ச்சியும் நுகர்தற்றிறனும் வளருமே அன்றி எல்லாரும் எல்லாவற்றையும் அறிந்து கலைக் களஞ்சியமாக உலவ இயலாது. இங்ஙனம் நமது முன்னோர்கள் ஆக்கித்தந்த அறிவுச் செல்வத்தினை நாம் பெறுவதால், கல்விப் பயன் யாது என்பது அறியத்தக்கதாம். கல்வி வழியாக நமது தலைமுறைச் செல்வங்கள் பேணிப் பாதுகாக்கப் பெறுகின்றன. நமது முன்னோர்கள் உழைத்த பயனை நாம் அறிந்து அவர்கள் வழியில் வாழையடி வாழையாக வழிபடுகின்றோம். அவர்கள் தேடித்தந்த செல்வத்தினைப் போற்றி வளர்க்கின்றோம். நம் பள்ளிகள் இப் பெருஞ் செல்வத்தினைப் பாதுகாப்பதோடு நில்லாது நமது வளரும் வயதுக்கேற்றவாறும் வடித்துத் தருகின்றன. இன்றைய உலகம் நமது முன்னோர்கள் ஆக்கித் தந்ததாகையால் நாம் அஃதைக் காப்பது கடமை. அதைக் கவிழவிட்டால் பின்னர் ஈடுசெய்ய முடியாது. கல்வி வழியாகவே அதனைப் பேணிக் காப்பாற்றுகின்றோம். ஒவ்வொரு நாட்டிலும் எல்லா மக்களுக்கும் போதிய கல்வி அறிவு பிறந்தால் அன்றி அறிவுச் சூழ்நிலையை அறிய இயலாது. உலகம் நிலைபெற்று வளர உலக மக்களின் அறிவினை வளர்த்தல் தனித்தனி நாடுகளின் பொறுப்போடு மட்டும் நில்லாது, இன்று [2] உலக அரங்கின் பொறுப்பாகவும் கருதப்படுகிறது. அங்ஙனம் உலக அரங்கிலும் இப்பொறுப்பாற்றல் மேற்கொள்ளப்பெறுகிறது.

---

1. Liberal Education. 2. U.N.O.

சமூகம் எல்லாவகையிலும் முன்னேறிவருவது கண்கூடு. அதன் முன்னேற்றக் கூறுகளை அறிய வேண்டியது [1] கல்வி நிலையங்களின் கடமை. சமூகத்தின் புதிய தேவைப்பாடுகளுக்கு ஏற்பக் கல்வி நிலையங்கள் இன்றைய இளைஞர்களை உருவாக்கித் தரவேண்டும். எல்லாப் படிகளிலும் மக்களுடைய தேவைக் கேற்பக் கல்வி ஏற்பாடு மாறிக் கொண்டே வருவது சமூகத்தினுடைய முற்போக்குக்கு அறிகுறியோடல்லாது கல்வி நிலையங்களின் விழிப்பு நிலைக்கும், பொறுப்பாற்றலுக்கும் அடையாளமுமாகும்.

ஒவ்வொரு தலைமுறையும் முன்னோர் தேடித்தந்த செல்வத்தினையும் கருத்தினையும் பாதுகாத்தும், போற்றியும், மேலும் மேலும் முன்னேற்றம் பெறுவதற்கு வழி கோலவும் வேண்டும் அல்லவா? கல்வியின் பயனால் உள்ளவற்றை அறிகின்றோம்; கட்டிக் காக்கின்றோம்; பழைய கோட்பாடுகள் நழுவாமல் நடக்கின்றோம். நிலைபெற்ற வாழ்வில் பழமை காண்கின்றோம். ஆனால் இவற்றோடு வருங்காலத்து முன்னேற்றத் திற்கும் வழி கோலுகின்றோம். முன்னேற்றத்துக்கு வழிவகுப்பவர்கள் பெரும்பாலும் பேரறிஞர்களும், பேரறிவாளர்களும் ஆவர். பழமையைப் புதுமையில் காண்பதற்கு அறிவு கொளுத்துபவை இலக்கியங்களும் வரலாறுகளுமாகும். அறிவியல் இன்றைய உலகில் வளர்ந்து கொண்டே செல்வதால் முன்னேற்றத்துக்கு ஏதுவாகிறது. நாள் தோறும் மனிதன் இயற்கையோடு இசைவுற்றும், இயற்கையை மாற்றியும், இயற்கையின் உதவியால் ஆவன இயற்றிக்கொண்டும் உலக அறிவைப் பெருக்குகின்றான். அறிவியலாரின் பேருதவியால் உலகம் முன்னேற்றம் அடைகிறது. சமூகம் வளரவேண்டுமானால் கல்விப் பயனைச் சமூகம் சமூகத்தினருக்கு அளிக்க வேண்டிய பொறுப்புள்ளது. கல்வி சமூகச் சார்புற்றது என்பதே கல்வியின் மெய்யறிநூல். எத்தகைய கல்வியினை அளிப்பது என்பதே, சமூகத்தின் முதற் சிக்கல். பள்ளிகள் கல்விப் பணியை ஏற்று நடத்துகின்றன. அவற்றின் முதற் பணி பிள்ளைகள் சமூகத்தில் இியையவும் தங்கடன் ஆற்றவும் தம் பங்கினைத் தேடிக்கொள்ளவும் உதவுவதே ஆகும். வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்து கொள்ளுதலே வாழ்க்கையில் பங்கெடுத்துக்கொள்ளுதல் ஆகும். அதனால் நம் பள்ளிகள் பிள்ளைகளுக்கு வெறும் புத்தகங்களையும் துணைக்கருவிகளையும் முதன்மையாக்காது சமூக அனுபவங்களை அளிக்க வேண்டியது கடமை. அனுபவத்திற்குப் பிறகு புத்தகங்களிலுள்ள கருத்துக்கள் பொருளுள்ளவையாகும். அனுபவத்தில் அறியாத புத்தகக் கருத்துக்கள் பொருளற்றவையாகும். புத்தகங்களெல்லாம் உண்மையான நேரடி அனுபவங்களை அளிக்க இயலாது; வாழ்க்கையே அனுபவத்தைத் தரக்கூடியது. அதனால் ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு நேர் அனுபவங்களை அளித்து அவர்கள் கற்பவற்றைத்

---

1. Educational Institutions.

துலங்குமாறு செய்ய வேண்டும். ஞாயிற்றைப் பற்றிய ஒரு மொழிப் பாடத்தை நடத்தும் ஆசிரியர் கதிரவனின் வட்ட வடிவத்தையும் கதிர் களையும் வரைபடமாகக் கரும்பலகையில் வரைந்து பாடத்தை நடத்து வதைக் காட்டிலும் வகுப்பறைக்கு வெளியே பிள்ளைகளை அழைத்துச் சென்று விண்ணில் ஒளியோடு காட்சி தரும் கதிரவனைக் காட்டிப் பாடத்தை நடத்தினுல் நேர் அனுபவத்தில் ஞாயிற்றைப் பற்றிப் பிள்ளைகள் அறிவதோடு அப்பாடத்திலுள்ள கருத்துக்களையும் கருத் தமைந்த மொழியையும் நன்ருக அறிந்துகொள்ளுவார்கள் அல்லவா! மேலும் மாணவர்களுக்கு அவர்கள் செய்யும் ஒவ்வொன்றும் சமூகச் சார்பு உற்றதென்ற உணர்ச்சி வளரவும், வளர்க்கப்படவும் வேண்டும்.

XIV

கல்விக் கருத்தும் உளநூல் வளர்ச்சியும்

கல்வியின் நோக்கங்கள் பலவாயினும் கல்வியாளரெல்லாம் கல்வியின் பயன், கல்வி கற்கும் மாணுக்கனது நடத்தையை மாற்றுவது என்பதில் உடன்பாடு கொள்வர். கல்விக்கும் நடத்தைக்கும் பொருத்தப்பாடு உண்டு என்ருல் உளநூலே நடத்தையின் இயல்பு காணும் அறிவியல். நடத்தையைத் திருத்துவதற்கும், மாற்றுவதற்கும் உளநூல் இன்றியமையாதது. சர்ஜான் ஆடம்ஸ் என்பார் கற்பி என்ற செயப்படுபொருள் குன்ருவினைக்கு இரண்டு செயப்படுபொருள்கள், ஒன்று இரண்டாம் வேற்றுமையிலும் மற்ருென்று நான்காம் வேற்றுமையிலும் உண்டென்று கூறுவர். ஆசிரியர் இராமன் என்ற மாணுக்கனுக்கு இலக்கணம் கற்பிக்கிருர் என்ருல் அவருக்கு இலக்கணம் மட்டும் தெரிந்தால் போதாது. இராமனைப் பற்றியும் தெரியவேண்டும். இராமனைப் பற்றி அறிவதற்கு, உளநூல் உதவியாகும். இலக்கண ஆசிரியராகையால் அவர் இலக்கணம் அறிந்தவரே ஆவர். அவர் உளநூலின் உதவியால் இராமனைப் பற்றிய உட்டிறன், அவனுடைய வளர்ச்சி, பருவங்கள், அவனுடைய உள்ளச் சிக்கல்கள், அவன் சூழ்நிலைகள், அவற்றின் மோதல் ஆகியவற்றை அறிய வேண்டும். மேலும் அவனுடைய கற்கும் திறன், நாட்டம், ஆர்வம், நினைவாற்றல், பகுத்தறிவாற்றல் ஆகியவற்றையும் அவர் அறிய வேண்டியது கடமையாகும். அப்போதுதான் அவர் அவனுடைய உளப்பான்மைக்கு ஏற்றவாறு பாடத்தைக் கற்பிக்க இயலும்.

மனிதன் உள்ளமும் உடலும் இயைந்த உயிரி. மனிதன் உடல் மட்டுமன்று; உயிர் மட்டுமன்று. உயிரற்று உடலாயின் பிணம். உடலற்று உயிராயின் விண்ணவன். உளநூல் உடலும் உயிரும் ஒன்றிய மனிதனைக் காண்பது. ஆனல் அஃது ஆராயும்போது உடலைப் பற்றிய பொருள்களைத் தனித்தனியாக ஆராய்தலும் மரபு. உள்ளத்தைப்பற்றி மட்டும் மூன்று வகையாக அறியக்கூடும். அவையாவன: ஒன்று—உடலைப்பற்றிய உண்மைகள்; இரண்டு—உள்ளத்தைப் பற்றிய உண்மைகள்; நனவு நிலையின்போது அகக்காட்சியில் தனது உள்ளனுபவத்தை உள்ளத்தே அறிதல். மூன்ருவது—நடத்தை உண்மைகளைப் பிறருடைய உற்று நோக்காலும், தானே தனது நடத்தையை அறிதலாலும் உணர்வது. அகக்காட்சியால் அறிவது இயலாதென்று நடத்தைக் கொள்கையினர் கூறுவாராயினும் அற்றன்று. அகக்காட்சியால் அறிவது ஒரு முறை. புறத்தே பிறர் அறிவதும் ஒரு முறை.

அறிவுக்காகவே அறிவை வளர்க்கும்போது அறிவினல் பிறருக்கும்

4613—6

பயன் உண்டாகிறது. அறிவாற்றலால் எதிர்காலத்தில் நடக்கப் போவதையும் அறியமுடியும். அங்ஙனமே உளநூல் அறிவினுல் மனிதன் ஒரு குறித்த சூழ்நிலேயில் எங்ஙனம் நடந்துகொள்வான் என்று முற்கூற முடியும். இத்தகைய முற்கூறக்கூடிய ஆற்றலால் குறித்த சூழ்நிலேக்கு ஏற்றவாறு மனிதனுடைய நடத்தையைக் கட்டுப்படுத்த முடியும். இந்த அடிப்படையில் எழுந்ததே கல்விச் செயல் முறை. நம் பள்ளிகளில் திருந்திய சூழ்நிலேயை உண்டாக்குகிருேம்; தீமையை அகற்றுகிருேம்; நன்மையின் காட்சி எங்கும் புலனுகிறது. அத்தகைய சூழ்நிலேயில் பிள்ளேகளுக்கு அனுபவங்களேத் தரல்வேண்டும். அதனுல் உயர்நிலேக் குறிக்கோள்கள் அவர்கள் உள்ளத்தே எழும்; விரும்பத் தக்க பழக்கங்கள் உண்டாகும். இத்தகைய நடைமுறைக் கட்டுப் பாட்டில் பிள்ளேகள் பெறும் அனுபவம் நல்லதாகும். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பது நமது முதுமொழி. ஆசிரியர்கள் பிள்ளேகளுடைய நடத்தையை முன்னறியும் திறன் பெற்றவர்களாகை யால் ஒரளவு அவர்களுடைய நடத்தையையும் கட்டுப்படுத்த இயலும். நடத்தைக் கட்டுப்பாடு புறக்காரணத்தால் நிகழாது. அகத்தே எழும் கட்டுப்பாடு சாலச் சிறந்தது. இதனே உளநூல் அறிவால் வளர்த்துக் கொள்ளலாம். தனது ஊக்க நிலேயையும், அதனுல் உந்தப்படும் தனது செயல் நிலேயையும் நன்ருக அறிந்து கொள்ளக்கூடிய ஒருவர் மற்ற வரை உற்று நோக்கின், அதன் பயனுக மற்ருெருவருடைய செயல் உந்தப்பெறும் ஊக்கு நிலேயை அறியலாம். எனவே உளநூல் தன்னே அடக்கிக் கொள்ளுவதற்கும், மற்றவர்களேச் சரிப்படுத்துவதற்கும் பயனுறக் கூடியது. பின்னேயது ஆசிரியரின் தலேயாய பணியாகும். "சும்மா இருக்கின்ற திறமரிது" என்றதற்கு ஒப்ப நாம் எதையாகிலும் செய்து கொண்டே இருக்கிருேம். மனிதன் சிந்தனே செய்யாவிட்டால் அல்லது சிந்தனே ஆற்றலே இழந்துவிட்டால் உயிரற்று விடுகிருன் என்று தருக்கம் கூறுகின்றது. அங்ஙனமே உயிருள்ள நிலே என்ருல் மனிதன் எதையாகிலும் செய்து கொண்டே இருக்கவேண்டும். உயிரற்ற நிலேயில் சிந்தனேயில்லே—செயல் இல்லே. பிறவி முதல், செயல்கள் தொடங்கி நாளடைவில் மாறுபட்டு ஒவ்வொரு பருவத்திலும் வேற்று நிலே அடைந்து புதிய மாறுதல்களேப் பெறுகின்றன. தொடக்க நிலேச் செயல்கள் மரபு நிலேயை ஒட்டிய வென்பர். இதனே இயல்பூக்கமென்று சொல்லுவார்கள். இயல்பூக்கம் மரபு நிலேயை ஒட்டியது. "உளநூலின் கருத்துக்கள்" என்ற வெளியீட்டில் ஜேம்ஸ் என்ற பேரறிஞர் குழவி நிலேச் செயல்களெல்லாம் மரபு வழியில் வந்த இயல்பூக்கங்களே என்றும் இத்தகைய இயல்புச் செயல்கள், குரங்கு வகைகளிலுங்கூட அவ்வளவு மிகுதியாகக் காண்பதற்கில்லே என்றும் கூறியுள்ளார். இக்கொள் கைக்கு முரணுக [2] ஷாஃபர் என்பார் இயல்பூக்கத்தைப் பற்றிய

1. James 2. Schaffer

கருத்துக்கள் உளநூலில் இடம் பெறுவதற்குத் தகுதி அற்றவை என்று கண்டித்துள்ளார். எதுவாயினும் இயல்பூக்கங்கள், கற்றல் நிகழும் வரையிலும்—கற்றலால் அவை மாறுபாடு அடையும் வரையிலும்—மனிதப் பிறவி உட்பட எல்லாப் பிறவிகளுக்கும் உரித்தானவை. கற்றல் நிகழும் போதும், நிகழ்ந்த பிறகும் செயற்பாடு கற்பதனாலாய பயன் உடைத்தாம். ஆனால் [1] மரபு நிலையை நம்மால் ஒழித்துக்கட்ட முடியாது. குழந்தைகள் எல்லாம் பெற்றோரைப் பின்பற்றுகின்றன. அவர்களுடைய செயற்பாடுகளைப் போல் தம் செயல் முறையை அமைத்துக் கொள்ளுகின்றன. இதனை அறிவியல் மேம்பாடுற்ற உளநூலார் கூடிவாழ் மரபு அல்லது திறன் என்பர். அதாவது சூழ்நிலையும், கற்றலும் விளைத்த விளைவென்பர். இஃது ஒரோ வழி உண்மையாயினும் அவர்கள் ஏன் பெற்றோரைப் பார்த்துப் பழகவேண்டும் என்பது ஆராயத்தக்கது. இத்தன்மையே மரபு நிலையை வலியுறுத்துவது. இஃது எல்லா உயிரிகளுக்கும் பொதுவானது. பிறந்த குழந்தை அதன் உடலமைப்பினால் அதன் இயக்கத்தைப் பெற்றோரிடமிருந்து பெறுகின்றது. இதனோடு [2] வாரன் என்பார் பட்டியல்படி அறுபத்தாறு [3] மறிவினைகள், குழந்தை உயிர் வாழ்வதற்கு உறுதுணையாகின்றன. பின்னர் நாளடைவில் நீண்ட குழவிப் பருவத்தில் கற்றல் பயனாக இயல்பூக்கங்கள் எல்லாம் [4] ஆற்றல்களாக மாறி விடுகின்றன. இவ்வாற்றல்கள் பல [5] திறன்களாகின்றன. ஒவ்வொரு திறனும் அடிப்படையில் ஓர் அறிவினைக் குறிப்பதாகும். ஆனால் அறிவோடு திறன் எப்போதும் அமைவதில்லை. எண்ணும் எழுத்தும் அறிவது அறிவின்பாற்படும். சிந்தனை அறிவுப் பெருக்கத்தினால் உண்டாவதொன்று. கருத்துக்கள், காட்சிப் பொருட்கள், பொதுமைக் கருத்துக்கள் ஆகியவை எல்லாம் அனுபவத்தின் பாற்பட்டவை. காட்சிப் பொருளையும், பொதுமைக் கருத்துக்களையும் உதவியாகக் கொண்டு வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளலாம். இங்ஙனம் நமது அறிவு அறியாமையிலிருந்து தொடங்கி அறிவாற்றலாக வளர்ச்சியடைகிறது. குழவிப் பருவத்தில் தன் நினைப்பு தாண்டவமாடுகிறது. தன்னலம் வளருகிறது. தனது அறிவும் திறனும் தனக்கே பயன்படுகின்றன. இங்ஙனம் வளர்ச்சியுறும் பிள்ளை சமூகத் தொல்லையாக நேரிடும். பிள்ளைப் பருவம் வரையில் இத்தகைய தன்னலப் பாங்கு வளரக்கூடாது. இதனை அடக்குவதற்கும் உயர்நிலைக் குறிக்கோள்கள் துலங்கவும் கல்வி ஊக்கவேண்டும். அறிவு, திறன், உயர்நிலைக் குறிக்கோள், சமூக உணர்ச்சி, சமூகத்தில் பொருத்தப்பாடு, அதற்குரிய பண்பாடு ஆகியவற்றை வளர்ப்பதே கல்வியின் விழுமிய நோக்கமாகும். கல்விப் பயனுக்குட்பட்ட நடத்தைகள் துலங்குவதே சிறந்தது.

1. Heredity 2. Warren 3. Reflex action 4. Capacities 5. Abilities

கல்விக்கும் உளநூலுக்கும் இயைபு காண்பது கற்றல் நிலை. கற்றல் நிலைக்குச் சமமானது கற்பித்தல் முறை. மாணக்கர்கள் எளிதாக எதையும் கற்றுக்கொள்ள வேண்டுமானல், கற்பித்தல் முறைகள், கற்றல் முறைகளோடு ஒருமைப்பாடு பெறவேண்டும்.

நமது செயல்களில் ஒருவகை பிறவியிலேயே ஏற்பட்டவை—நம்மைக் காப்பாற்றக் கூடியவை-என்று மேலே கண்டோம். மற்றெரு வகை கற்றலால் செயலாற்றும் செயல்கள். கற்றல் இன்றி நாம் நமது சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு பொருத்தப்பாடு பெற முடியாது. ஆறறிவுள்ள மனிதன் மட்டுமே கற்க முடியும். மேலும் மனிதப் பிறவியில் மட்டும்தான் கற்கும் பருவம் நீடித்துள்ளது. கற்றல் என்பது ஒரு குறித்த பருவத்துக்குத்தான் உரியது என்று கூற முடியாது. அது வாழ்க்கை முழுவதும் நடைபெறுவது. இதுகாறும் தூண்டல்கள், துலங்கல்கள் ஆகியவற்றைப் பற்றிக் கண்டோம். கற்றலால் ஏற்படும் துலங்கல்கள் வேறு. கற்றல் வழியாக, ஆசிரியன் புதிதாக ஒன்றையும் மாணக்கன் உள்ளத்தில் புகுத்திவிட முடியாது. கற்றல் இயற்கை ஆற்றல்களையும் பட்டறிவையும் அடிப்படையாகக் கொண்டது. கற்றல் ஒரு விழைவு அல்லது தூண்டல் அல்லது உந்தலால் ஏற்படுவது. யாதாகிலும் ஒன்று இல்லாமல் பொருத்தப் பாடும் இராது; கற்றலும் நிகழாது. 'வெறுங் கைமுழம் போடாது' என்பது ஈண்டு நோக்கற் பாலது. எனவே உள்ளத்தில் ஒரு தூண்டுதல் ஏற்படுவதைக் கருதி மேனடுகளில் முற்போக்குப் பள்ளிகள் தொடங்கியுள்ளார்கள். 'குழந்தை வளர்ப்புப் பள்ளிகளிலுங்கூடக் குழந்தைகள் செயல் முறையில் ஒரு நோக்கத்தால் உந்தப்பெற்றுக் கற்கின்றன. அத்தகைய குழந்தைகள் ஆற்றலோடு வளரப்பெறுமலும் உள்ளம் உந்தப் பெறுமலும் இயற்றும் செயல்கள் நோக்குடைச் செயல்களாகா. அவர்களை இருண்ட அறைகளில் உட்கார வைத்து அவர்கள் விரும்பாததும் அவர்கள் உள்ள நிலைக்கு ஒப்பாததுமான பாடங்களைத் திணித்தலும் நெட்டுருச் செய்ய வற்புறுத்தலும் கற்றலுக்கு அடையாளமாகா. பக்குவமடைதல், அனுபவம், தன்னியக்கம் ஆகிய மூன்றும் கற்றலுக்கு நிலைக்களன்கள். பக்குவமடைதல் என்பது உடல் உறுப்புக்கள் நன்ருக வளர்ச்சியுற்று இயங்கும் பக்குவம் அடைவதாகும். இத்தகைய பக்குவம் பெறுவதற்கு முன் கற்பித்தல் பயனற்றதாகும். வளர்ச்சியை ஒட்டிய கற்பித்தலே பயன் தரும். எனவே பருவத்துக்கு ஏற்றவாறு கற்பித்தல் நடைபெறுவது நல்லது. பாட ஏற்பாடும் வளர்ச்சிக்கு ஏற்றவாறு அமைக்கப் பெறுகின்றது. உடற்பயிற்சி ஆசிரியர்கள் வளர்ச்சிக்கு ஒப்ப விளையாட்டுக்களைப் பிள்ளைகளுக்கு அளிக்கின்ருர்கள். உடல் உறுப்புக்கள் நன்ருக வளர்ச்சியுருது ஒரு சிறுவன் தன் அளவுக்கு மீறிய ஆட்டங்களில் ஈடுபாடு கொண்டால்

---

1. Nursery Schools

அவன் உடல் சுருங்கியவனுகின்ருன். அவனது இயற்கை வளர்ச்சி தடைப்படுகிறது. குழவிப் பருவத்தில், உள்ள வளர்ச்சியையும் உடல் வளர்ச்சியையும் வேறுபடுத்திக் காண்பது தவறு. உடல் வளர்ச்சியே உள்ள வளர்ச்சி எனக் கருதப்படுகிறது. ஆனல் உடல் வளர்ச்சி உயிரியல் வழியில் நிற்றலாலும், உள்ள வளர்ச்சி சூழ்நிலையை ஒட்டியதாலும் வேறுபாடு நாளடைவில் தேற்றமாகும். குழந்தை தனது தாய்மொழியில் எளிதில் பயிற்சி பெறுவதையே உள்ள வளர்ச்சிக்கு அடையாளமாகக் கொள்ளுகின்றனர். இதனை அளந்தறிய ஆராய்ச்சிகள் பல நிகழ்ந்துள்ளன. பத்துமாதக் குழந்தை தெளிவாகத் தாய்மொழிச் சொற்களை ஒலிக்கிறது என்றும், பதினெட்டு மாதத்தில் அஃது அறியும் சொற்கள் இருபத்து இரண்டு என்றும், நான்கு வயதுக் குள் அதனுடைய சொற்களஞ்சியத்தில் ஆயிரத்து எண்ணூறு சொற்கள் ஆட்சி பெறுகின்றன வென்றும் கண்ட ஓர் ஆராய்ச்சி உண்டு. சொற் களஞ்சியப் பெருக்கமும், ஒலி வடிவத்தின் தெளிவும், உள்ள வளர்ச்சியும் வளர்ச்சிக்கு அறிகுறி என்பர். வாக்கியங்களில் பேசும் திறனும், உரையாடலும் அத்தன்மையவே. எனவே உடல் உறுப்பு வளர்ச்சியும், உள்ளப் பக்குவமும் உள்ள நிலையும் சூழ்நிலையினை அடிப் படையாகக் கொண்டவை. பிள்ளைகளுக்கு ஏற்றவாறு கற்பிக்கும் பொறுப்பு பள்ளியைச் சார்ந்தது. நல்லாசிரியன் நல்லதொரு சூழ் நிலையை ஏற்படுத்தும் திறன் உடையவன். பிள்ளைகளுடைய [1] முற்று தல் நிலையைப் [2] பாடத் திட்டத்தை அமைப்பதற்கு அடிப்படையாகக் கொள்ள வேண்டும். அதற்கு ஏற்ப விளையாட்டுத் திட்டங்களும் அமையவேண்டும். குழவிகளின் முற்றுதல் நிலையை வயதுக்கு ஏற்ற வாறு அளவிட முடியாது. மற்றும் முற்று நிலையைச் சில படிகளாகவும் பிரித்தறிதல் அரியதொன்ரும். உதாரணமாகத் தொடக்கநிலை மாண வர்கள் ஆய்வுத்திறன் அற்றவர்கள் என்று கருதுகிரும். அதனல் அவர்கட்குப் பாடங்களை உருப்போடுவதற்குத்தான் வாய்ப்பளிக் கிரும். ஆய்வுத்திறன் முற்று நிலையையும், பட்டறிவையும் ஒட்டியது. எனவே எல்லா வகைப் பிள்ளைகளும் ஆய்வுத்திறன் பெற்றுள்ளார்கள் என்று கொள்ளுவதே நல்லது. பெண் பிள்ளைகள் ஆண்களைக் காட்டி லும் முற்று நிலையை முன்னரே பெற்று விடுகிருர்கள். அதனல் அவர் களுடைய ஒழுகலாறுகள் ஆண்களைக் காட்டிலும் நன்ருக அமை கின்றன. சமூக உளப்பாட்டுத் தன்மை இரு பாலர்களுக்கும் பால் வேறு பாட்டிஞல் ஏற்படுவதன்று. அவர்களுடைய சூழ்நிலைப் பண்பாட்டினைச் சார்ந்தது. குமரப்பருவ மாணவர்களை வெகு விழிப்போடு கண்காணிக்க வேண்டும். நல்ல முற்று நிலையில் உள்ள வளர்ச்சிக்குப் பலவகை [3] ஊக்கிகளும், அவற்ருல் உண்டாகும் கற்கை ஆற்றல்களும் இன்றி யமையாதவை. கல்வியில் பெறும் முன்னேற்றம் வெகு ஆற்றலோடு

---

1. Maturity 2. Curriculum 3. Motivation

வளருகின்றது. ஆனால் தோல்வி மனமுறிவை உண்டாக்கி மேலும் கற்றலைத் தடைப்படுத்துகிறது. பிள்ளைப் பருவத்தில் தோல்விகளுக்குக் காரணம் அறிந்து, அவற்றை நீக்கவேண்டும். பிள்ளைகளே உணரும் வெற்றிகளை ஊக்கிகளாக அமைத்து மேலும் மேலும் அவர்கள் வெற்றிகளுக்கு வழி கோலுவது நல்லது.

எல்லா அறிவும் புலன் வழியாக உள்ளத்தே நுழைகின்றது. அடுத்த நிலை புலக் காட்சிகள். இன்பங்கள் உட்புலக் காட்சித்திரளை உண்டாக்கிப் பட்டறிவைப் பரிணமிக்கின்றன. இதை ஒட்டிய அனுபவத் திரள் பெருகுகின்றது. அனுபவத்திற்கேற்பக் கற்றல் அமைகின்றது. புதிதாகக் கற்பது பட்டறிவோடு ஒட்டிக் கற்றதாகின்றது. எடுத்துக்காட்டாக நெருப்பைத் தொட்டதால் நெருப்பின் அனுபவத்தைப் பெறுவதோடு நெருப்பைப் பற்றியும் கற்றுக் கொள்ளுகின்றோம். மதி உள்ளவர்கள் முன்னை அனுபவத்தை வழிகாட்டியாகக் கொண்டு புதிய அனுபவத்தைப் பெறுகிறார்கள். மதியிலிகள் முன்னை அனுபவத்தைக் கொண்டு பயனடையாது, மீண்டும் தமக்கு ஊறு தேடிக் கொள்ளுகிறார்கள். முற்று நிலையைச் சார்ந்தது அனுபவம். அனுபவங்கள் எல்லாம் செயற்பாடுகளால் பெறக் கூடியவை. அனுபவங்கள் திறமையை வளர்ப்பதோடு நன்றாக அறிந்து கொள்ளும் வாய்ப்பினையும் அளிக்கின்றன. இன்றைய கல்வி உள்ளக் கிளர்ச்சியின் அடிப்படையில் அமைக்கப் பெற்றுள்ளது. இந்த உள்ளக் கிளர்ச்சியே வாழ்க்கையில் பொருத்தப்பாடு பெறுவதற்கும் அடிப்படை. உள்ளக் கிளர்ச்சி, அழகுணர்ச்சி, நோக்குடைச் செயல் ஆகியவற்றை, அவை வாழ்க்கையில் பொருத்தப்பாடு பெறும்போது புறத்தே நிகழும் செயல்களால் கண்டு அறியக்கூடும். இதனையே ஜான் டூயி அனுபவம் என்ற கருத்துக்கு விளக்கம் என்று கருதினார். [1] பயன்வழிக் கொள்கையினர் இதனாலன்றோ சிறிய பிள்ளைகளுக்குப் புத்தகப் படிப்பு மட்டும் போதாதென்று கூறினார். அப்பிள்ளைகள் நேர்முகமாக மக்களோடும் பொருள்களோடும் பழகுவதால் மிகுதியாக அறிந்து கொள்ளுவரென வற்புறுத்தினார். புத்தக வாயிலாகவும் குறியீடுகளின் வாயிலாகவும் அறிவது தேவையேயாயினும், அவற்றோடு ஒன்றிய செயல்களால் அறிதலே எளிதாகின்றது.

[2] தன்னியக்கம் கற்றலின் மூன்றாவது நிலை. தன்னியக்கம் என்பது தானாகவே இயங்குவது. ஆசிரியர் ஊக்கத்தினை அளிக்கின்றார். கற்கும் வழி காட்டுகின்றார். ஆனால் மாணாக்கனுக்குப் பதிலாக அவர் பாடத்தைக் கற்றல் இயலாது. ஆசிரியர் கற்பித்துக் கொண்டே போனால் மாணாக்கன் கற்றாலன்றி அவர் கற்பித்ததாக ஒத்துக் கொள்ள முடியாது. ஒருவன் கொடுத்தால் மற்றொருவன், கொடுப்பதைக் கைநீட்டி வாங்கவேண்டும். கைநீட்டி வாங்குதல் தன்னியக்கம். கொடுப்பது கற்பித்தல். தன்னியக்கமே கற்றலாகும். ஆசிரியர் கற்பித்த பாடங்க

1. Pragmatists 2. Self-activity

ளெல்லாம் கற்ற பாடங்களாகா. ஆசிரியர் கற்பிக்காமலும் கற்றல் இயலும். எதுவாயினும் தன்னியக்கத்தோடு கற்றல் சிறந்தது.

கற்றலுக்குப் பயனுறும் செயல்கள் இருவகையவாம். ஒன்று [1] இயக்கக் கல்வி. மற்ருென்று [2] கருத்துக் கல்வி. கற்றல் முறைகள் ஒரு சில வருமாறு :– [3]முயன்று தவறிக் கற்றல்,[4] பார்த்துக் கற்றல் [5] உற்று நோக்கிக் கற்றல். [6] ஆக்க நிலையுற்ற மறிவினை, [7] உள்நோக்கு வழிக்கற்றல் ஆகியவை. (1) **முயன்று தவறிக் கற்றல் :** இம்முறையில் எதையும் தவறுதலின்றித் தொடக்கத்திலேயே சரியாகக் கற்றுக் கொள்ளுவது கடினம். குழந்தைகள் நடப்பதற்கு முயன்றும், தவறியும் இறுதியில் நடக்கக் கற்றுக்கொள்ளுகின்றன. முயற்சி திருவினை ஆக்கும் என்பது பன்முறை தவறினும் முயற்சி பயனளிக்கும் என்பதனை வற்புறுத்துகிறது. முயன்றும், தவறியும் விடா முயற்சியால் வெற்றி கண்டவர்கள் பலர் (2) **கண் பார்க்கக் கை செய்யும் :** என்ற பார்த்துக் கற்றல் முறையில் பெற்றோர்கள் ஒழுக்கங்களைப் பிள்ளைகள் பார்த்துப் பின்பற்றுகின்றனர். நல்ல முன் மாதிரிகள் இடையே பிள்ளைகள் பழகினால் அவற்றைப் பார்த்து அவர்களும் நன்முறையில் பழகுவார்கள். நாம் அறியாத பலவற்றினைப் பிறர் செய்யும்போது பார்த்துக் கற்றுக் கொள்ளுகிறோம். பெரும்பாலும் நமது கற்றல் முறைகளெல்லாம் பார்த்துக் கற்றுக் கொள்ளுதலேயாம். (3) **உற்று நோக்கிக் கற்றல் :-** இது முதல் இரண்டு முறைகளைக் காட்டிலும் மேலானது. உற்றுநோக்குதலால் கற்கவேண்டியதை ஐயம் திரிபு அறக் கற்றுக் கொள்ளுகிறோம். உற்று நோக்குதல் முறையில் கற்க வேண்டியதை நேர்முகமாகக் கற்பதோடு தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ளுகிறோம். ஆக்கநிலை உற்ற மறிவினை, உள்நோக்கு வழிக்கற்றல் ஆகியவைகளும் எஞ்சிய இரண்டு கற்கும் முறைகளை உணர்த்துகின்றன.

கற்றல் விதிகள் சில கல்வி வல்லாரால் வலியுறுத்தப் பெறுகின்றன. [8] தார்ன் டைக் என்ற அமெரிக்க நாட்டுக் கல்வியாளர் மூன்று [9] விதிகளைக் கூறியுள்ளார்.

[10] **பயன் விதி :** இவ்விதிப்படி கற்கும்போது ஏற்படும் பயன் கற்றலோடு இணைந்து விடுகிறது. மாணுக்கனுக்கு இன்பம் தரும் கல்வி பெரிதும் விரும்பப்படுகிறது. துன்பத்தைத் தருவது விலக்கப் படுகிறது.

[11] **பயிற்சி விதி :** பயிற்சி காரணத்தால் எதையும் நன்ருகக் கற்றல் இயலும். "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்"

---

1. Motor learning 2. Ideational learning 3. Learning by Trial and Error 4. Learning by Imitation 5. Learning by observation 6. Conditoned reflex 7. Learning by Insight 8. Thorndike 9. Laws of Learning 10. Law of effect 11. Law of exercise

என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இசைக் கருவிகளை வாசிக்கக் கற்றுக்கொள்பவர்கள் நன்ருகச் சாதகம் செய்கிருர்கள்.

[1] ஆயத்த விதி: நல்ல பக்குவ நிலையில் கற்கத் தொடங்கினுல் கற்றல் எளிதாகிறது. சிறிய குழந்தைகளுக்குப் "பாப்பாப் பாட்டு' விருப்பம். அவை அவர்கள் பருவத்துக்கு ஏற்றவை. மாணுக்கர்களுடைய உளநிலையின் ஆயத்தத்தைக் கண்டு ஆசிரியர் பாடத்தைத் தொடங்க வேண்டும். ஆயத்தம் இல்லாத நிலையில் எதையும் கற்க முடியாது. ஆயத்த நிலை ஏற்படும் வரையில் ஆசிரியர் வாளா இருக்க வேண்டியதில்லை. ஆயத்த நிலையை உண்டு பண்ணக்கூடிய முறைகளைக் கையாளலாம்.

கற்றலுக்கு [2] அக்கறை அடிப்படை. பார்த்துச் செய்வதிலுங்கூட எதன்மீது கவர்ச்சி உண்டாகிறதோ அதைத்தான் பிள்ளைகள் பார்த்து அறிந்து கொள்ளுவதோடு பார்த்துச் செய்யவும் முற்படுவர். அவர்களிடம் அக்கறை இருந்தால் கற்பிக்கும் பணி ஆசிரியருக்கு வெகு எளிதாகிறது. அது இல்லாதபோது ஆசிரியர், மாணுக்கரிடையே பாடத்தின் மீது ஒரு பக்கம் அக்கறை உண்டுபண்ணியும், மற்ருெரு பக்கம் அக்கறை அற்ற நிலையில் பாடத்தை வற்புறுத்தியும் பணியாற்ற வேண்டியதாகிறது. கற்பிக்கும் பாடங்களைக் கவர்ச்சியுறச் செய்தாலன்றி மாணுக்கரிடையே அக்கறை ஏற்படாது என்பது ஆசிரியத்துக்கு அடிப்படை என்று [3] ஹெர்பார்ட் என்பார் வற்புறுத்தினுர். கல்வி கவர்ச்சியுள்ளதாக வேண்டும், பள்ளிக்கூடமும் வகுப்பறையும் பிள்ளைகளை ஈர்க்க வேண்டும் என்ற உண்மை ஒப்புதல் பெற்றுள்ளது. அக்கறை என்பது உணர்ச்சி வகைப்பட்டது. மாணுக்கன் ஒருவனுக்கு அக்கறை ஏற்பட்டிருக்கிறது என்பது அவனுக்கு யாதாகிலும் ஒன்றின்மீது [4] நாட்டம் உள்ளது என்பதற்கு அறிகுறி. அஃது அவனுடைய கவனத்தைக் கவர்ந்துள்ளது என்று பொருள். அக்கறையோடு ஒன்றைச் செய்ய விரும்புவது, அதனுல் பெறக்கூடிய இன்பப் பயனைக் கருதியேயாகும். குழவிப் பருவத்தில் ஏற்படும் அக்கறைகளெல்லாம் [5] இயல்பூக்கங்களின் வழியாகத் தோன்றுபவை. இயல்பூக்கங்கள் குழந்தைகளிடம் உளப்போக்குகளை உண்டாக்குகின்றன. உளப்போக்கு [6] படைக்கும் உளப்போக்கென்றும் [7] நடைமுறை உளப் போக்கென்றும் இரு வகைத்து. இத்தகைய உளப் போக்குகள் அக்கறைக்கு ஊற்று நிலைகளாகின்றன. பழைய கவர்ச்சிகள் புதிய கவர்ச்சிகளுக்கு வழி கோலுகின்றன. அவற்றுள் [8] பயின்ற கவர்ச்சிகளும் ஒன்று. படிப்பில் அக்கறை ஏற்பட்டு விட்டதென்ருல் மாணுக்கன் முயற்சியின்றிப் படிப்பான். ஆசிரியரையும் எதிர்பார்க்க மாட்டான்.

---

1. Law of Readiness 2. Interest 3. Herbart 4. Aptitude 5. Instincts 6. Creative tendencies 7. Routine tendencies 8. Acquired interests.

ஆசிரியர் உண்டாக்கும் கவர்ச்சியைக் கவனிக்க மாட்டான். அது தரும் இன்பப்பயனை நேராகப் பெறுவான். அக்கறை அற்ற ஒரு படிப்பில் ஈடுபடும்போது மாணுக்கர் சலிப்படைகின்ருர்கள். பழம் பள்ளிகளில் இருந்த கட்டுப்பாடுகளும் கட்டாயங்களும் பிள்ளைகளுக்குச் சலிப்பையே அளித்து வந்தன. ஒரோ வழி ஒருசிலர் முன்னேற்றம் பெற்ருர்கள். இன்றைய பள்ளிகள், பிள்ளைகளுடைய விருப்பத்தை ஒட்டி நடைபெறுகின்றன. கல்வித் துறையில் அக்கறை என்பது பலவகை நன்மையினைப் பயக்கக் கூடியது. அவை சில வருமாறு: நன்ருகக் கற்க வேண்டும் என்ற உறுதிப்பாடு, கற்றதன் பயன்பெற வேண்டும் என்ற அவா, சான்ருண்மை பெறவேண்டும் என்ற நோக்கம், சமூகப் பண்பாடுகளை வளர்த்துக்கொள்ள வேண்டு மென்ற விருப்பம், அல்லது நல்வாழ்வு வாழ வழி கற்க வேண்டு மென்ற பரந்த எண்ணம் முதலியவை. இவை எல்லாம் உடனடியாக நிகழ்பவை. அதனுல் ஆசிரியன் உடனடியாக அக்கறையைப் பயன்படுத்தித் தனது கற்பித்தற் பணியைத் தொடங்க வேண்டும்.

கல்வியில், மாணுக்கர்களிடையே அக்கறையை உண்டாக்குவதற்கு ஆசிரியருக்குத் தமது பாடத்தில் அக்கறையும், மாணுக்கர் பால் அக்கறையும் தேவை. ஆசிரியர் கற்பிக்கும் பாடத்தில் மாணுக்கருடைய உளநிலைக்குப் ஏற்பப் பொருளும், முறையும் அமைய வேண்டும். மிக வெளிய பாடம் அல்லது மிக அரிய பாடம் அல்லது ஆசிரியன் தவருன கற்பிக்கும் முறை—ஆகியவற்ருல் அக்கறை அற்றுப் போகும். பாடப் புத்தகங்களைப் படிக்கச் சொல்லி விட்டு வாளா அமர்ந்திருக்கும் ஆசிரியரும், அமர்ந்த இடத்திலிருந்து அசையாத ஆசிரியரும், மாணவர்களை மவுனமாகப் படியென்று சொல்லிவிட்டுத் தன் வேலை பார்க்கும் ஆசிரியரும் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்புகள் மட்டுமல்லாது மாணவர்கள் இடையே இயற்கையாக உண்டாகும் அக்கறைக் கொல்லிகளாகி அவர்களைப் பிறர் உதவாக்கறைகள் எனக் கூறும்படியும் செய்து விடுகிருர்கள். ஆசிரியர் எத்துணைதான் கவர்ச்சியைப் பெருக்கி அக்கறையை ஊட்டினுலும் அவருடைய வகுப்பில் துலங்கலற்ற காட்சி ஏற்படலாம். பிள்ளைகள் கற்பிக்கும் பாடத்தினைக் கவனித்துக் கொண்டே இருப்பார்களாயினும் அவர்களிடையே முயற்சி நீடிக்கிறது என்பது அறிகுறியன்று. முயற்சி என்பது அளவுக்கு மிஞ்சி உழைத்தலை அடிப்படையாகக் கொண்டது. பொதுவாகக் கவர்ச்சியற்ற ஒரு வேலையைச் செய்யும்போது உழைப்பு மிகுகிறது. முயற்சி பிடித்த மற்றதையும் ஒரு கடமைப்பாட்டோடு இயற்றும் ஒரு வகை ஆற்றல்; அது கடமையை அடிப்படையாகக் கொண்டது; [1] ஊக்கிகள் தளராது அழுத்தத்தோடு இருக்கும் நிலை முயற்சி நிலையாகும். உண்மையான முயற்சி, வெறுப்பு நிலையிலும் விருப்பத்தைத் தேடும். ஊக்கம் தளர்வ

1. Motivation

தாயின் அதை வலுப்படுத்தும். அப்போதைக்கு ஏற்படும் அக்கறையை மட்டும் தூண்டாமல் எதிர்காலப் பயனை நோக்கிய நீடித்த அக்கறை உண்டாக்கி வாழ்க்கைக் குறிக்கோளினை எட்டும்படி செய்தல் ஆசிரியர் கள் கடமை. இதனால் பிள்ளைகள் எவ்வளவு கடினமான உழைப்பாயி னும், உளப்பாடாயினும் சிறிதும் தவறாது பணியாற்றுவார்கள். அக்க றையும் தளர விடமாட்டார்கள். அக்கறையும் முயற்சியும் ஒன்றுக் கொன்று கற்றலுக்கு உதவி புரிபவை. சிறிய பிள்ளைகளிடையே அப் போதைய அக்கறையை மட்டும் உண்டாக்குவது நலம். அவர்களுக்கு வாழ்க்கையைப் பற்றியும் குறிக்கோளைப் பற்றியும் இரு துறை நிகழ்ச்சி யிலும் அக்கறை கொள்ளுங்கள் என்று ஒரு சிலர் அதையும் ஒரு பாட மாகக் கற்றுக் கொடுக்கிறார்கள். அப்போதைய அக்கறைக்கு வேண்டிய சூழ்நிலையை மட்டும் வெற்றியோடு உண்டாக்கி விட்டால், பிள்ளைகளுக் குத் தாமாகவே அக்கறை பிறந்துவிடும். இச்சைக் கவனம் பின்னால் ஏற்படும். முயற்சி ஒரு செயலை முடிப்பதற்கு எடுத்துக் கொள்ளும் ஒரு பணி. விருப்பம் முயற்சி நாடும் பொருளினை அடைவதற்கு உந்து வது. எனவே முயற்சி விருப்பத்தின் அடிப்படையாகின்றது.

கற்றலுக்குக் கவனம் வேண்டற்பாலது. கவனத்தை ஈர்ப்பது ஆசிரியரின் கடமை. நனவு ஓடிக்கொண்டும், தாவிக் கொண்டும் இருக்கும். இதனாலன்றோ 'மனமெனும் குரங்கு' என்று அதற்குப் பெயர். தூண்டல்கள் பலவகை. எல்லாத் தூண்டல்களும் [2] உறைப் புள்ளவை அல்ல. இதனால் கவனம் அடிக்கடி மாறுகிறது. புதுமைப் பொருள் கவனத்தை ஈர்க்கிறது. ஆசிரியர் கவனக் கூறுகள் பலவற் றைக் கையாளவேண்டும்.

மாணுக்கர்களுடைய நலத்தையே வழிப்படுத்தியும் திருத்தியும் அமைக்க வேண்டியது பள்ளியின் முதற் கடமை. பள்ளிச் சூழ்நிலை வழியோடு கற்றலுக்குத் துணை செய்வது. நன்றாகக் கற்றலுக்கு உறு துணையாவது ஆசிரியரின் வழிகாட்டலே. பிள்ளைகளுடைய உடலும் உள்ளமும் ஒழுங்காக வளர்ச்சி பெற ஆசிரியர் ஆவன செய்தல் அவர் கடமையாகும். பிள்ளைகளுக்கு ஏற்ற முறையில் அனுபவமும், செயல் களும் வகுத்துத் தரவேண்டும். மாண்டிசோரி அம்மையாருடைய திட்டப்படி ஆசிரியை [3] வழிகாட்டி. உற்ற சூழ்நிலையை உருவாக்கித் தருவது அவளுடைய பெரும்பணி; நல்ல முறையில் காப்பாற்றுவதே அவள் கடன். பிள்ளைகள் கற்றலில் அவர்களுடைய உள்ளச் செயற் பாடுகளும், அவர்கள் கொள்ளும் அக்கறையும், அவர்கள் புறத்தே அக்கறை மீதூர ஆற்றும் பணிகளும் தலையாயன. அன்றி ஆசிரியர் தனது குரலோசையை வகுப்பறையில் தானே வடித்துக் கேட்டுக் கொள்ளும் பாடப்பொழிவுகள் கற்பித்தலுக்கு அடையாள மாகா. இத்தகைய காட்சி இன்று நமது பள்ளிகளில் தொடக்கநிலை

1. Voluntary attention 2. Intensity 3. Directress

முதல் இறுதி நிலை வரையில் நிகழ்கிறது. இத்தகா முறை " வால்மட்டும் நுழையவில்லை " எனக்கற்ற மாணுக்கனையே உருவாக்க இயலும். இத்தகு முறையிலேயே மெய் கண்டார் பலர் எனப் பறை சாற்றுபவரும் உளர். ஆனால் அத்தகைய முறையில் பிள்ளைகள் உடலும், உள்ளமும் பொருந்திய வழியில் கற்றல் நிகழ்ந்திராது. நமது பள்ளிகளில் பிள்ளைகளுடைய விருப்பு, வெறுப்பு, ஆர்வம், உடல்நிலை, உள்ள நிலை ஆகிய எதற்கும் இடம் கிடையாது. ஆசிரியர் ஆட்சியே இன்று நிலவுகிறது. பிள்ளைகள் தாமாகவே கற்பதற்கொப்ப வகுப்பறையை ஆக்கி அமைக்க வேண்டிய பொறுப்பே ஆசிரியரது. பிள்ளைகளுக்குக் கவர்ச்சியற்றதும் அவர்களுடைய அக்கறையை ஈர்க்காதது மான ஒரு வகுப்பறை, கைதியை அடைக்கும் அறைக்கு ஒத்ததாகும். பிள்ளைகள் ஒரு செயற்பாட்டில் அக்கறைகொண்டு அதில் ஈடுபாடு கொள்ளும்போது இயற்கைக் கொப்ப ஈடுபடுபவர்களாவர். இன்றைய பள்ளிகளில் பாடநேரங்கள் நாற்பத்தைந்து மணித்துளிகளாக வகுக்கப் பட்டிருக்கிற நிலையில் எந்திரம் இயங்குவது போலப் பிள்ளைகளுடைய அக்கறையும் கவனமும் மாறுவதற்கு இயலுமா என்பது சிந்திக்கத் தக்கது. பிள்ளைகளுடைய உள்ளம் பல கருத்துக்களை அடைத்து வைக்கக் கூடிய ஒரு பேழையன்று. பலவகை அறிவுகளைப் பெறுவதைக் காட்டிலும் அவற்றைப் பெறக்கூடிய திறனைப் பெறுவதே முதன்மைத்து. ஆசிரியர் ஒருசிலர் பிள்ளைகளுக்கு அளவு மீறிக் கற்றுக் கொடுக்கிறார்கள். அளவு மீறிக் கண்காணிக்கிறார்கள். இவை இரண்டும் பிள்ளைகளுடைய வளர்ச்சியைப் பாதிக்கக் கூடியன. ஆசிரியர் தமது உதவியில்லாது பிள்ளைகள் தாமே கற்கும் சூழ்நிலையை உண்டு பண்ணுவதே உளநூலின் அடிப்படையில் எழுந்த சிறந்த ஆசிரியம்.

XV

கல்வியும் தருக்கமும்

தருக்க நூல் மனிதனை ஓர் ஆறறிவுயிர் என்று கருதுவது. மனிதனுடைய சிந்தனைகள் ஒழுங்காக அமைகின்றனவா என்று ஆராய்வது; காரண காரியங்களை அடிப்படையாகக் கொண்டனவா என்றும் அறிவது. மனிதன் ஒரு சிந்திக்கும் உயிரினத்தான். சிந்திக்காவிட்டால் அவன் உயிரற்றவன். அவனிடத்தே சிந்தனையும் உயிரும் எக்காலும் ஒன்றியவை. உயிருள்ளவன் சிந்தனையுள்ளவன். எங்ஙனம் சிந்திக்க வேண்டும் என்று அறுதியிடுவது தருக்கம். எல்லாத் துறைகளுக்கும் பொதுவானது சிந்தனை. [1] உயிரியல், [2] உடலியல், [3] உளவியல் எல்லாம் மனிதனுடைய இயற்கையினையும் அவனுடைய உடல் உறுப்புக்களைப் பற்றியும், உள வளர்ச்சியைப் பற்றியும் விவரிக்கின்றவை. [4] சமூக இயல், மனிதன் தன்னை எப்படிச் சூழ்நிலைக்கேற்பப் பொருத்திக் கொள்ளுகின்றான் என்பதை விளக்குகிறது. கல்வி நூல் மனிதனுடைய உள்ள வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதொன்று. ஒழுங்கு ஒரு [5] குறிக்கோளினைப் பற்றி இயலும். குறிக்கோள்கள் [6] அறிவுநிலை, [7] இயற்றல் நிலை, [8] உணர்ச்சி நிலை ஆகியவற்றை முறையே உண்மை நன்மை பான்மை என உணர்த்துகின்றன. இம்மூன்றையும் [9] தருக்கம், [10] அழகியல், [11] அறிவியல் என்ற அறிவியல்கள் அறிவுறுத்துகின்றன. தருக்கம் சிந்தித்தலாகிய உளச் செயலினைச் சரியென்றும் பிழையென்றும் அறுதியிடும் துலாக்கோல். அழகியலும் அறிவியலும் தருக்க நூலைச் சார்ந்தவை. ஏனென்றால் அவற்றின் இலக்குகள் தருக்க முறைக்கு முரண்பாடுறக்கூடாது. மனிதன் ஆய்வுத்திறன் பெற்றவன்; பகுத்தறிவுள்ளவன்; தொகுத்தறிவும் உடையவன். இத்திறன்களே மனிதனை விலங்கினங்களிலிருந்து வேறுபடுத்துகின்றன. உளநூல் மனிதனை அறிவது. அவனுடைய உள வளர்ச்சியை அளவிடுவது. உளவளர்ச்சியை அறிந்தாலன்றிக் கல்வி வளர்ச்சிக்குக் கால்கோள் செய்ய முடியாது. தருக்க நூல் உளநூலுக்கு இன்றியமையாதது. கல்வி மனிதனுடைய உடலத்தையும் உள்ளத்தையும் சார்ந்தது. தருக்கம் அவனுடைய உள வெளிப்பாட்டினை மதிப்பிடுவது. எனவே தருக்கம் கல்வியாளனுக்குச் சிறந்ததொரு கைக்கருவியாகும்.

தருக்க நூல் உலக அறிவினையே ஆய்ந்து மனிதனுடைய சிந்

---

1. Biology 2. Physiology 3. Psychology 4. Sociology 5. Ideals 6. Cognition 7. Volition 8. Conation 9. Logic 10. Aesthetics 11. Ethics

தனையை அதன் அளவுகோலால் அளவிட்டு இது பிழையுற்ற சிந்தனை, இது பிழையற்றது என்று கூறுவதனுல் கல்வியாளனும் தருக்க முறையினை அறிந்து பிழையற்ற முறையில் மாணவர்களை ஈர்த்துச் செல்ல இயலுகிறது. எல்லா அறிவும் புலக் காட்சிகளில் தொடங்குகிறது. கருத்துக்களாக உருவெடுத்துத் துணிவுகளாக மாறும்போது அவை காரண காரியங்களுக்கு உடன்பாடுற்றவையாக அமைந்தாலன்றி அவற்றைப் பிழையற்றவையாகக் கருத இயலாது. ஆசிரியர் தாமும் தருக்க முறையில் சிந்தித்தலும் உரையாடலும் வேண்டும். தமது ஆசிரியம் தருக்க அடிப்படையில் அமைய வேண்டும். தருக்கம் அறிந்த காரணத்தால் மட்டுமே தருக்க முறையில் ஆய்வினை நிகழ்த்த முடியும் என்று கூற இயலாது. தருக்கம் ஓரளவு தருக்க முறைக்கு உதவி செய்யும்; திருத்தமான முறையில் சிந்தனை செய்ய உதவியுமாகும். பிழைகளை அறிவதற்கும் உற்றுழியுதவும். ஆசிரியரும் சரியான முறையில் சிந்தனை செய்வதற்கும் உதவுவதோடு பிள்ளைகளுடைய சிந்தனைகளில் உள்ள குற்றங்களை எடுத்துக் காட்டவும் உதவும். பிள்ளைகள் அவர்களுடைய குறைந்த அனுபவத்தின் காரணமாக ஆய்ந்தோய்ந்து சிந்தியாமல் அவசர முடிவுகளுக்கு வந்து விடுவார்கள். அதனுல் ஆசிரியர் தருக்க அறிவாளியாக இருந்தால் அவர் நேர்முகமாகப் பயனடைவதோடு தமது மாணுக்கருக்கும் மறைமுகமாக அப்பயனை அளித்தல் கூடும்.

தருக்கமும் உளநூலும் ஆசிரியருக்கும் இன்றியமையாதவை எனக் கண்டோம். உளநூல் மனச்செயற்பாடுகளை அறிய உதவுகின்றது. அது பொதுப்பட உள நிகழ்ச்சிகளை விவரிக்கின்றது. ஆனுல் தருக்கமும் அந்நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி அவற்றினைச் சரியான முறையில் திருப்பிக் கல்விக் குறிக்கோளை எய்தும் திறனைப் பெற உதவுகிறது. கற்பிக்கும் முறைகளைத் தருக்க வழியில் அமைக்க வேண்டியது கடமை. ஆசிரியருடைய முறையில் கற்பவை பழுதற்றவைகளாக வேண்டும். மாணுக்கன் ஐயம் திரிபு அறச் சிந்தனை செய்ய வேண்டும். அவனுடைய சிந்தனை தருக்க முறையில் அமைதல் நல்லது. ஆசிரியமும் தருக்க முறையில் பொருந்தப்பாடுற வேண்டும். அப்போது வெளியிடும் கருத்துக்கள் சரியான முறையில் அமைவுறும்.

குழந்தையினுடைய கல்வி மனித இனத்தினர் எந்த வரிசையில் கற்றுத் தேர்ச்சி பெற்றனரோ அந்த வரலாற்று முறையில் அமைய வேண்டுமென்று ஸ்பென்சர் கூறியுள்ளார். அதனுல் மனித வர்க்கத்தினர் இழைத்த பிழைகளெல்லாம் ஒவ்வொருவரும் மீண்டும் இயற்ற வேண்டியதில்லை. ஆசிரியர் மாணவருக்கு வகுக்கும் வழியில் பயிற்சி பெற்று வளர்ச்சி பெற வேண்டும். உளவியல் முறையில் எல்லாவற்றையும் கற்றல் இயலாதென்று [1] ஆரம் ஸ்ட்ராங் போன்ற

1. Armstrong

கல்வியாளர்கள் கூறியுள்ளனர். இளைஞர்கள் தாமாகவே தாம் கற்க வேண்டியவற்றை அறிந்து கற்றல் இயலாது. அதனால் [1] பகுத்தறி முறையில் ஆசிரியர்கள் பல கருத்துக்களை யாங்ஙனம் உய்த்து உணர்ந் தனரென்று அறிவதன் மூலம் முறையினை ஆசிரியர்பால் அறிந்து கொள்ளுதல் எளிதாகும். [2] தொகுத்தல் முறையிலும் பல பொருள் களைத் தொகுத்தே பள்ளிகளில் உண்மையைக் கற்பிக்கின்றோம். ஆனால் முதற்கண் உண்மையைக் கண்டறிந்த பேரறிஞன் முறையில் நமது மாணவர்கள் கற்றபாடு இல்லை. தொகுத்தறி முறையில் ஆசிரி யர் வழிகாட்டியாக நின்று அறிய வேண்டிய உண்மையைச் சுட்டிக் கொண்டே கற்பிக்கின்றார். எனவே இதுகாறும் கண்ட கருத்தில் முதலாசிரியன் கொண்ட இடர்ப்பாடு மாணவருக்கு இல்லை. பழங் காலத்தில் புதுக்கருத்துக்களைச் சொற்களாகவும், பாக்களாகவும் ஆசிரியர்கள் கற்பித்தார்கள். மாணுக்கர்கள் அவற்றினைக் கற்ற வழி நின்றார்கள். கருத்துக்களைப் பொதுப்பட அறிந்த பின்னரே அவற் றைப் பகுத்தறிந்து விளக்கம் பெற்றார்கள். கல்வி முறை, அறிவு வளரும் முறையோடு ஒட்டியது. அறிவியல் வளரும் இக்காலத்தில் ஒவ்வொரு புதிய கருத்தின் அடிப்படைகளைத் தேடுகிறோம்; தேர் கிறோம்; ஆய்வு முறைக்கு உட்படுத்துகிறோம். அதனால் யார் எதைச் சொன்னாலும் உண்மை என்று உடன்படுவதில்லை. பகுத்தறி வதைக் காட்டிலும் தொகுத்தறி முறையே இன்று ஆக்கம் பெறுகிறது. எல்லா அறிவையும் ஓரளவு உள்ளப்பாடின்றிப் பெறுவதில்லை. கல்வி யின் பயன் நம்மைச் சிந்தனைச்சிற்பிகளாக்குவதே ஆகும். சிந்தனை யாளர்களே சிறந்த அறிவாளிகள்.

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு."

என்றபடி அறியாமையை நீக்கி மெய்யுணர்வைப் பெறுபவர்க்கு உள்ளத் தில் ஓர் இன்பநிலை உண்டாகும்; அதுவே பேரறிவாளன் திரு. ஆசிரியர் தமது ஆசிரியப் பணியின் வழியாக மாணவர்களைக் கற்க வேண்டியவைகளைக் கற்று சிந்திக்கச் செய்கிறார். அவர் மாணுக்கனுக் குப் பதிலாகக் கற்க இயலாது; சிந்தனை செய்யவும் முடியாது. பல முறைகளை ஆசிரியர் மேற்கொண்டு மாணவர்களுடைய உளநிலைக்கு ஏற்றவாறு அறிவு வழியில் செலுத்தித் தமக்குத் தாமே சிந்திக்க வழி காட்டுகின்றார்.

ஆசிரிய முன்னுரையின் பொன்னுரைகள் பல உள. ஒன்று, [3] உருவத்திலிருந்து அருவத்துக்குச் செல்லுவது. உருவம் புலன் வழியது. அருவம் உளப்பாட்டினது. அருவம் கருத்தின் பாற் பட்டது. கருத்தினை அறிந்த பிறகு மீண்டும் உருவத்தின்

1. Deductive 2. Inductive 3. Concrete to abstract

உண்மையை விளக்க வேண்டும். அப்போது புலன்வழி நுகரப் பெற்ற உருவத்தின் சிக்கல்கள் தெளிவாகும். [1] எளிதிலிருந்து சிக்கல் என்பது மற்றொரு முதுமொழி. ஆசிரியர் எளியவற்றைக் கற்பித்த பிறகு அதன் வழியாகச் சிக்கலுற்றவைகளை விளக்குகிறார். [2] திட்டமானதிலிருந்து திட்டமற்றதை விளக்கு என்பது மற்றொரு முதுமொழி. மொழி ஆசிரியர் பழைய முறையில் எழுத்துக்களைக் கற்றுக்கொடுத்தார். நெடுங்கணக்கு அறிந்த பிறகு ஓரெழுத்து, ஈரெழுத்து, மூன்றெழுத்து வரிசையாகப் பலவெழுத்துச் சொற்களைக் கற்பித்து அதன் பிறகு தொடர்களைக் கற்பிப்பது வழக்கம். திட்டமுள்ளதைக் கற்பித்த பிறகு திட்டமற்றதைக் கற்பி என்னும் கூற்று, [3] அறிந்தவற்றின் வழியாக அறியாதவற்றினைக் கற்பித்தல் என்ற முதுமொழிக்கு முரணாகும். எனவே பிள்ளைகளுடைய உளப்போக்கினை அறிந்து கற்பித்தலே சாலச்சிறந்தது. பாடங்களைத் திட்டமிடும்போது தருக்க முறையில் திட்டமிட வேண்டும்.

தருக்கம்—எண்ணம், சொல், செயல்—ஆகிய மூன்றிலும் ஆட்சி பெறுகிறது. ஒருவன் மாறி மாறிப் பேசுவானேயானால் அவன் தருக்க முறையற்றுப் பேசுகிறான் என்றாகும். பாட ஏற்பாட்டில் தருக்க முறை கையாளப் பெறுகிறது. வகுப்பில் மாணவருக்குப் பாடம் கற்பிக்கும் போது தருக்க முறையும் கற்பிக்கப்படுகிறது. பாடக்குறிப்பு எழுதும் போது தருக்க முறையில் அதை அமைக்கிறோம். [4] ஹெர்பார்ட் என்ற கல்வியாளர் பாடக்குறிப்பு வரைதல் பற்றி [5] முறைமை தழுவிய [6] ஐந்து படிகளைத் தந்து உதவியுள்ளார். அவை தருக்க முயையில் அமைந்தவை. அவை பாடத்தினை நிரல்நிறை முறையாகக் கற்பிப்பதைப் பற்றிக் கூறுகின்றவை. கற்பிக்கும் பிள்ளையை முதலில் பற்றுக்கோடாகக் கருதி அதற்கேற்ற பாடத்தைத் தேர்ந்தெடுத்துப் பின்னர் கற்பிக்கக் கூறுகின்றோம். பாடத்தினைக் கண்டவாறு கற்பியாமல் காரண காரிய முறையில் வரிசைப் படுத்துகின்றோம். ஆசிரியர், கருத்துலகத்துக்கும் மாணக்கனின் உள்ள உலகத்துக்கும் இடையில் இடம் கொள்ளுகிறார். அவர் கருத்துக்களைப் பிரித்தும் ஒழுங்குபடுத்தியும் தொகுத்தும் அளிக்கும்போது பிள்ளையினுடைய உள்ளமும் அம்முறையில் திருந்திவிடும். அதனால் கற்பிக்கும் பொருளின் தருக்க முறையை அறிவதோடு, பிள்ளையின் உள ஒழுங்கினையும் ஆசிரியர் அறிய வேண்டும். ஆசிரியர் உலகக் கருத்துக்களின் வளர்ச்சியை அறிந்து தமது மெய்யறிவை வளர்த்துக்கொள்ளுகின்றார். மாணக்கன் தனது உள்ள வளர்ச்சியை ஆசிரியருடைய அறிவொளியில் காண்கின்றான். ஆசிரியர் உலக அறிவினைப் பெறுவதற்குச் சிந்திக்கிறார். மாணவனையும் மாணவனுடைய உளப் போக்கினைப் பற்றியும் சிந்தனை

---

1. Simple to Complex 2. Definite to indefinite 3. Known to unknown 4. Herbart 5. Formal 6. Five steps

செய்கிறார். இவற்றிற்கிடையே உலக அறிவுக் கருத்துக்கள் மாணவன் மீது மோதுகின்றன. இம்மூன்று நிலைகளில் ஆசிரியர் மாணவன் உள நிலையைக்கண்டு அறியும் தன்மையைப் பொதுவாக அறிந்து, கற்பிக்க இருக்கும் பொருளின் தன்மையைச் சிறப்பாக ஆய்ந்து மாணவனுக்குக் கற்பித்தலை, உளநூல் முறையிலும், தருக்க முறையிலும் ஒருங்கே நிகழ்த்துகிறார். அறிவுச் சார்புற்ற கல்வியெல்லாம் பிள்ளைகளுடைய உள்ளத்தில் பொதிந்து கிடக்கும் ஆற்றல்களைத் தேர்ந்தும் திருத்தியும் உயர்ந்த தரமாக்கும். பிள்ளைகளுடைய இயற்கை ஆற்றல்கள் உள்ளத்தின்பால் புலன் வழியாக நிகழும் மோதல்களாகச் சிதறுற்றுக் கிடப்பவையாகும். இவற்றை அறிவதே உள்ளத்தை அறிவது. இஃது ஆசிரியப் பணியின் முதல்நிலை. கற்பிக்கப் போகும் கருத்துக்களைத் தருக்க முறையில் அமைப்பது இறுதிநிலை. இவ்விரண்டினையும் ஒருங்கே நிகழச் செய்வது ஆசிரியநிலை.

உளநூல் முறையில் ஓர் அனுபவத்தை எடுத்துரைப்பதென்பது அதன் வளர்ச்சி முறையில் எடுத்து இயம்புவதாகும். அது வரலாற்று முறையில் அமைவது. இயற்கை வளர்ச்சி முறையில் நிகழ்வது நல்லது. தருக்க முறை கருத்து நிகழ்ச்சியின் இறுதி நிலையைக் கருதுவது. எடுத்துக்காட்டாக ஒரு புதிய நாட்டினை அறிபவர் அதைப்பற்றிய பல குறிப்புக்களைத் தான் கண்ட வழியில் வரைகின்றார். அஃது உளப்பாங்கு முறை. நாடு முழுவதும் கண்டறிந்த பிறகு அதன் தேசப்படம் வரைந்து காண்கிறார். அது தருக்க நோக்கத்தின்பாற் பட்டது. இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்தவை. தருக்க முறை பழைய அனுபவத்தைத் திரட்டி புதிய அனுபவத்திற்கு வழி வகுக்கிறது. எனவே இரண்டு முறைகளும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல.

ஒவ்வொரு பாடமும் இரண்டு கூறுகளை உடையது: ஒன்று அறிவியல் முறையது. மற்றொன்று ஆசிரியருடைய போக்குடையது. இரண்டும் மாறுபாடுற்றவை அல்ல. அதனால் இரண்டும் ஒன்றன்று. அறிவியலார் பாடக்கருத்தினை நன்றாக ஆய்ந்து பல பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியிலும் புதிய கருத்துக்களின் திறனை மதிப்பிட்டு அறிகின்றார்கள். ஆனால் ஆசிரியர் ஒரு பாடக் கருத்தினை ஓர் அனுபவமாக மாற்றி அமைக்கச் சிந்திக்கிறார். அதனை ஒட்டிய பட்டறிவு பிள்ளைகளின்பால் உள்ளதா என்று தேடுகிறார். அதனோடு புதிய கருத்தினை ஒட்டுவதற்குச் சிந்தனை செய்கிறார். கருத்தைப் பற்றித் தான் அறிந்தவற்றைக் கொண்டு பிள்ளைகளுடைய தேவைகளோடும், செயல்களோடும் ஒட்டவைத்துப் பொருள் விளக்குவதே அவர் பணி. பாடக் கருத்து மட்டும் அவருக்கு முக்கியமன்று. பிள்ளைகளின் வளரும் அனுபவங்களோடு அதனை அனுபவமாக்குவதே அவர் பொறுப்பு. ஒரு புதிய கருத்தினை அறிவது வேறு. அக்கருத்தினைக் கற்றல் வேறு. இரண்டும் கற்றலைச் சார்ந்தவை. முன்னது ஆசிரியர் உதவியின்றிக் கற்பது. பின்னது ஆசிரியர் உதவியை நாடுவது.

ஆசிரியர் மாணவருடைய கற்றலுக்கு ஒத்துழைக்கிருரே அன்றி அவரே கற்றுக்கொடுப்பது இயலாத தொன்று. ஏனெனில் கற்றல் நிலையிலும் தானே அறிதல் நிகழ்கிறது. எனவே கற்பிக்கும் முறை கற்றல் முறையைத் தொடர வேண்டும். அம்முறையில் மாணவர் தாமே கண்டறிதல் உண்டாகும். இன்று ஆசிரியர்கள் பலர் கருத்துக்களை முதன்மையாகக் கொண்டு கற்பித்தலை நிகழ்த்துகின்ருர்கள். இங்ஙனம் கற்பிப்பது மாணவர்கள் கற்கும் போக்கினைப் புறக்கணிப்பதாகும். கற்றல் நிலையோடு தொடர்புற்ற கற்பித்தல் முறை இயற்கை முறையில் அறிந்து கொள்ளும் ஆற்றலை அளிக்கும். ஆசிரியர்களுள் பெரும்பான்மையோர் மாணவர்களையும் அவர்கள் கற்றல் நிலையையும் ஒரு பொருட்டாக மதியாது தாம் கற்பிக்கப் புகும் பொருள்களால் உந்தப்பெற்றுப் பாடச் செய்திகளையே ஆண்டுதோறும் வகுப்பு தோறும் பிள்ளைகளிடையே திணிக்க முற்படுகிருர்கள். இத்தகைய ஆசிரியப் பணி பயனற்று விடுகின்றது. எனவே கற்பித்தல் கண்டறிதல் முறையினின்று வழுவிஞல் அது கற்றல் முறையினின்று வழுவியதாகும். கண்டறிதல் முறையே உள்ளம் உண்மையை நாடும் முறையாகும். கற்பித்தல் இயற்கையைப் பின்பற்றி இயற்கையாகக் கண்டறியும் ஊக்கு வினையைத் தூண்டும் நெறியாகும்.

[1] புள்ளி விவரமும் கல்வியும் :

கல்விக்கலை அறிவியல் நிலையை எய்தியுள்ளது. ஆஞல் அது பௌதிகத்தைப் போன்றும், இரசாயனத்தைப் போன்றும் ஒரு துல்லியமான அறிவியலாகாது. ஏனெனின் அதன் பொருளெல்லாம் மனித இனத்தைப் பற்றியதும், அவ்வினத்தின் சமூக உறவினைப் பற்றியதுமாகும். ஒவ்வொரு மனிதனும் தனித்தனித் தன்மை உடையவன். எல்லா மனிதர்களும் ஒரே தன்மையினராகக் கருதுவதற்கில்லை. அவர்கள் இணையற்ற சமூகமும் நிலைபெற்ற தன்மை உடையதன்று. அது மாறிக்கொண்டே உள்ளது. எனவே கல்விக்கலையில் பல மாறுபடும் விவரங்களைப் புள்ளியிட்டுப் புள்ளி விவரங்களைப் புள்ளிக்கலை நுட்பத்தோடு திறன் காண வேண்டியதாகிறது. ஆசிரியர் பல திறப்பட்ட மாணுக்கர்களுக்குக் கற்பிக்க வேண்டும். திறன்கள் பிள்ளைக்குப் பிள்ளை வேறுபட்டவை. அவற்றைத் தனித்தனியாக அளவை செய்யாவிட்டால் ஒவ்வொரு மாணவனைப் பற்றியும் அறிய இயலாது. அதஞல் மாணவ உள்ளத்தை அறிய அளவை வேண்டியதாகிறது. ஆசிரியர்கள் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும்போது தொடக்கநிலை, இறுதிநிலை ஆகிய வரம்பின்றிக் கற்பிக்கின்ருர்கள். ஆண்டு முழுவதும் கற்பிக்கும்போது பிள்ளைகள் கற்பிக்கும் வழியில் ஊர்ந்து வருகின்ருர்களா என்று காணவேண்டும். எனவே அப்போதைக்கப்போது கற்றல் திறனையும் கற்றவற்றையும் அளவிட வேண்டியதாகின்றது. ஒரு பாட

1. Statistics

மாயின் கற்றல் திறனையோ கற்றவற்றையோ அளவிட்டு மதிப்பிட இயலும். ஆனால் ஒரு மாணவனின் ஒழுக்க வளர்ச்சியை அளவிடுவது எளிதன்று. எனவே அளவிடும் கருவிகளைப் பெருக்கிக் கொள்ளுவதோடு அளவிடும் திறன்களையும் நயம்பட அமைத்துக் கொள்ள வேண்டியதாகிறது. [1]புள்ளி விவர முறைகள் [2]அறிவுத் திறன் தேர்வுகளை [3]அளவு கோலுவதற்கும் [4]ஒரு தரப்படுத்துவதற்கும் உதவுகின்றன. தரம் அறிந்து விட்டால் தனி ஒவ்வொருவனுடைய திறனையும் அல்லது ஒரு சிறிய குழுவின் திறனையும் ஒப்பிட்டு அறிய முடியும். புள்ளி விவர நுட்பங்களைக் கொண்டு மாணுக்கரைத் தமது நிலைகளுக்கு ஏற்ப வகைப்படுத்தலாம். எவ்வகைத் தேர்வாயினும் மதிப்பெண்கள் நமக்கு ஒன்றும் உணர்த்துவதில்லை. புள்ளி விவர முறைப்படி மாணவனைப் பற்றிய விவரங்களை அறியலாம். திறன்கள் பலவகை. [5]அறிவுத் திறன், [6]நாட்டம், [7]சாதனை, [8]உளப்பான்மை ஆகியவற்றை அளத்தல் இயலும். மற்றும் [9]எண்ணியல் இடை, [10]வழக்கிடை, [11]மையநிலை, கால விளக்கம், தர விளக்கம் ஆகியவை எல்லாம் அறியக் கிடப்பன. இவற்றின் வழியாக ஒவ்வொரு தேர்வின் ஈவுகளைப் பல வகைகளில் ஆய்ந்து அறியலாம். புள்ளி விவரமறிந்த கல்வியாளர் தேர்வின் ஈவுகளைப் பயன்படுத்திக் கொள்ள முந்துவர்.

உளவியல் ஆராய்ச்சியில் தொடங்கிய புள்ளி விவர முறைகள் கல்விச் சிக்கல்களின் ஆராய்ச்சிக்குப் பேருதவி புரிந்துள்ளன. புள்ளி விவரங்கள் பல நிலைமைகளை எண்களின் வழியாக அறியுமாறு உள்ளவற்றை உள்ளவாறே எடுத்து இயம்புவன. அவற்றின் துணைகொண்டு ஆசிரியர் தமது பணியைத் திருத்தி அமைத்துக் கொள்ளலாம். நமது நாட்டில் புள்ளி விவரங்களை எளிதாக அறிகின்றோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்குள் ஆறு வயது முதல் பதினோரு வயது வரை உள்ள பிள்ளைகளுள் எண்பத்தொரு சதவீதம் கட்டாயக் கல்வி அளிக்கப் பெறுவர் எனத் திட்டமிடுவதற்கும் இத்துணைப் பள்ளிகளுக்கு இத்துணை ஆசிரியர்கள் தேவைப்பாடென்று அறுதியிடுவதற்கும் பலப்பல சிக்கல்களை அறிவதற்கும் புள்ளி விவரங்கள் பேருதவி புரிகின்றன. ஆசிரியர்கள் ஓரளவு புள்ளி இயலை அறிந்தால் அவர்களுடைய திறனையும் பிள்ளைகளுடைய அறிவையும் கணக்கிட்டு அறியக்கூடும். பல கல்விக் கருத்துக்கள் கல்வி உலகில் நிலவுகின்றன. அவை ஒவ்வொன்றின் தரத்தையும் [12]புற ஆய்வு செய்து அறியலாம், [13]முறைமைக் கட்டுப்பாட்டுக் கொள்கை, [14]பயிற்சி மாற்றம், [15]பெற்றி உளவியல் ஆகியவை புள்ளி விவரங்களோடு ஆய்வு நிகழ்த்திய ஞான்று ஒதுக்கத் தக்கவையாயின.

---

1. Statistical methods 2. Intelligence tests 3. Scale 4. Standardised 5. Intelligence 6. Aptitude 7. Achievement 8. Attitude 9. Mean (average) 10. Mode 11. Median 12. Experiment 13. Theory of Formal Discipline 14. Transfer of training 15. Faculty Psychology

XVI

கல்வி ஏற்பாடு

I

எந்தக் கல்வித் திட்டத்திலும் பாட ஏற்பாடு மிக இன்றியமையாத தாகும். இதனை ஒழுங்காக வரையறை செய்யாவிட்டால், நாடிய பலன் கைகூடாது. கற்பிப்பது என்ன என்ற வினவுக்குப் பாட ஏற்பாடு என்பது விடையாகும். நம் பள்ளிகளில் அந்தந்த நிலைக்கு ஏற்ற வாறு ஒரு சில பாடங்களைக் கற்பிக்கிறார்கள். அவற்றைக் கற்றால்தான் கற்றதற்கு அடையாளம் என்று கருதுகிறார்கள். எக்காரணத்தால் அப்பாடங்களை மட்டும் கற்பிக்க வேண்டும் என்ற வினா ஆராய்தற் குரியது. நாம் கற்பிக்கும் பாடங்களுள் எத்துணை அளவு உண்மை யான கல்வியாகும் என்பதையும் அறியவேண்டும். பலர் பள்ளிகளில் நிகழும் பாட ஏற்பாடுகளை அறிந்து குறை கூறுகிறார்கள். அவற்றைக் கற்பதால் கல்விப்பயன் கிட்டவில்லை எனச் சுட்டிக் காட்டுகிறார்கள். ஆனால் குறைபாடு எதுவாயினும் நமது கல்வி நிலையங்களில் தொன்று தொட்டு வழி வழியாகக் கற்பித்த பாடங்கள் இன்று நிலை பெற்று விட்டன.

பாடத்தொகுதி எச்சார்புற்றதாக அமைய வேண்டும்? அது சமூ கத்தின் அடிப்படையிலா, அல்லது அரசாங்கத்தின் திட்டத்திலா, அல்லது பிழைக்கும் வழியை வகுப்பதிலா, அல்லது பொதுவாக மனிதன் உள்ள வளர்ச்சிக்கு ஏற்பவா, அல்லது கல்வியின் குறிக்கோள் களுக்கு ஒப்பவா யாங்ஙனம் பாடங்களைப் பொறுக்கிப் பாடத் தொகுதி யில் இணைப்பது என்பன அன்றும் இன்றும் அவிழாத சிக்கல்களாம். பழங்கால முதல் எல்லாக் கல்வியும் பயனுறும் அடிப்படையில் எழுந் துள்ளது. மக்களுடைய அன்றாட வாழ்க்கைக் கூறுகளே கல்வியின் தொடக்க நிலையாயின: மனிதப் பருவத்தில் பொறுப்பேற்க வேண்டிய தொழிலே இளமைப் பருவத்தில் கல்விப் பயிற்சியாக அளிக்கப் பெற்றது. நாட்டின் பல தொழில்கள் இளைஞர்களுக்கு இளமையில் கல்வியாயின. பயனற்ற கல்வி பழுதுள்ளதாகக் கருதப்பெற்றது. கிரேக்க நாட்டில் [1] ஸ்பார்டா மன்னனாகிய [2] ஏஜிஸிலாஸை இளைஞர் கள் என்ன கற்க வேண்டும் என்று வினவியபோது அவர்கள் மனிதர் களான பிறகு என்ன செய்வார்களோ அதனைக் கற்க வேண்டுமென்று கூறினார். கிரேக்கர்கள் பாட ஏற்பாட்டினை அதன் பயன் கருதி அமைத்தார்கள். அவர்களே பாடங்களைத் தனித்தனியாகப் பாகுபாடு

1. Sparta 2. Aegesilaus

செய்தார்கள். பாடங்கள் உடல், உள்ளம், அறிவாற்றல், பண்பு, கலை முதலிய வாழ்க்கையின் பல கோணங்களையும் குறை நிறை இன்றி ஒருங்கே வளர்த்தன. அறிவுப் பகுதியில் ஏழுபரந்த கலைகள் இணைக் கப் பெற்றன. அவையே இடைக்காலத்தில் [1] முப்பாடமாகவும், [2] நாற் பாடமாகவும் பிரிவுற்றன. முப்பாடத்தில் இலக்கணம், [3] சொற்கோப்புக் கலை, [4] தருக்கம் அடங்கின. இம்மூன்றும் கிரேக்கர்களுடைய வாழ்க் கைக்குப் பெரிதும் பயனுற்றன. அவர்களுடைய குடியாட்சியில் பேச் சுத்திறன் இன்றியமையாததாயிற்று.

> " சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
> வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து."

என்ற வகையில் பேச்சுத் திறமைக்கு முப்பாடத் தொகுதி பயனளித் தது. இவை அரசியலுக்கு மட்டும் பயன்பட்டதோடன்றி அறிவுத் திறனை வளர்ப்பதற்கும் தேவையாகக் கருதப் பெற்றன. நாற்பாடம் என்ற தொகுதியில் கணிதம், [5] வடிவக்கணிதம், வானநூல், இசை ஆகியவை அடங்கின. இங்ஙனம் பல நாட்டு மக்களுடைய கல்வி அவரவர்களுடைய தேவைக்கேற்ப அமைந்தாலும் வழி வழியாக வந்த மனிதன் அவனுடைய நாட்டு மக்களின் உள்ள வளர்ச்சியையே தானும் பெற்றுத் தனது சமூகத்தில் உறுப்பினனுனான். அதனால் கல்வி உள்ளத் தலைமுறையை வழி வழியாக ஈன்றெடுக்கிறது என்பர். கிரேக் கர்களுடைய முதல் ஆசிரியரான [6] சாக்ரடீஸ் அறிவுக் குழந்தைகளைப் பெற்றெடுக்க உதவும் [7] " மருத்துவப் பணியாளர் " என்று தம்மைக் கருதிக் கொண்டார். அவரது பணி சிறுவர் உள்ளங்களிலிருந்து கருத் துக்களை வெளியாக்குவதென்றார். இதனால் வெளி உலகின் தூண்டுதல் களுக்கு உள்ளம் துலங்குவது ஓர் செயன் முறையாகும். தனது தலை முறையினர் வாழ்ந்த வாழ்க்கையை வாழ்வதால் பின்னோர் வழி நிலை பெறுகிறது. மனிதனின் தனிப்போக்கு நீங்கியும், தனது விருப்பு வெறுப்புக்கள் ஒருமைப்பாடு பெற்றும் சமூகப் பண்பு பெருக்க மடை கின்றது. எனவே கல்வியினை நாகரிகத்தின் பொழிப்பு அல்லது அடக்கம் என்றால் மிகையாகாது.

எப்படிக் கற்பிப்பது என்பது முறையைச் சுட்டுவது. ஆசிரியர்கள் பெரும்பாலும் என்ன கற்பிப்பது என்பதைக் குறித்துச் சிந்தனை செய்வ தில்லை என்று அறிஞர்கள் பலர் கருதுகின்றனர். எந்தப் பாடமாயினும் சரி என்று எதையும் கற்றுக்கொடுக்க விரும்புவர் ஆசிரியர். எதைக் கற்றுக் கொடுத்தால் என்ன என்று நினைப்பவரும் உண்டு. எந்தப் பாடமாயினும் சரி பிள்ளைகளுக்கு நன்றாக கற்றுக் கொடுக்க வேண்டும், அவர்கள் நன்றாகப் படிக்க வேண்டும் என்று நினைப்பவரும் உண்டு.

---

1. Trivium 2. Quadrivium 3. Rhetoric 4. Logic 5. Geometry 6. Socrates 7. Intellectual Midwife

எதுவாயினும் கற்க வேண்டியவை யாவை? இன்றைய உலகில் நாடு, சமூகம், அரசு, பிழைக்கும் வழி, குடிமை இன்னோரன்ன பிற உள. இவற்றிற்கு இன்றைய மனிதன் முன்னேற்பாடாக வேண்டும். அல்லது இப்பாடங்களின் விழுமிய பயன்களைக் கருதிப் பாடங்களைப் பொறுக்கி எடுக்க வேண்டும். அல்லது மனிதனை இயக்கி அவன் தானுகவே கற்கும் வழிக்கு உற்ற பாடங்களைக் கற்பிக்க வேண்டும். கல்வி அறிஞர்கள் பலர் பலவாறுக இவ்வினுக்களுக்கு விடையளித்துள்ளார்கள்; பாட ஏற்பாடு யாது என்பதனைப் பொதுப்பட விளக்கி உள்ளார்கள்; அஃது உள்ளக் கட்டுப்பாட்டுக்கு அடங்கியதாக வேண்டுமா அல்லது சமூக வாழ்விற்குப் பயனுறவேண்டுமா என்றும் பலவாறுக ஆராய்ந்திருக்கிருர்கள். ஆசிரியன் ஒரு சிற்பி; பாட ஏற்பாடு அவனது ஒரே ஆயுதம். மாணுக்கன் ஒரு பொருள்; அவனது ஆற்றல் குறிக்கோள். அவன் பணியாற்றும் கலைக்கூடம் ஒரு பள்ளி. இந்த உவமையில் வேறுபாடு ஒன்று அறியத் தக்கது. கலைஞன் கலையூட்டும் பொருள், உயிரற்ற அஃறிணைப் பொருள். ஆனல் மாணுக்கன் உயிரும் உயிர்ப்பும் உள்ள உயர்திணைப் பொருளன்ருே? உயிரற்ற பொருளாகிய கல் அல்லது மண் கலைஞன் கட்டுக்கு அடங்கும். ஆனல் உடலும் உயிரும் உள்ள மாணுக்கன் அடங்க முடியாது. கலைஞனுக்கு உள்ளம் உள்ளது. மாணுக்கனுக்கும் உள்ளம் உள்ளது. எனவே இவ்விரண்டு உள்ளங்கள் இயைந்து ஒருமைப்பாடு எய்துதல் வேண்டும். மாணுக்கனுடைய இயல்பு தன்னியக்கம். ஆதலால் ஆசிரியர் மாணுக்கனை ஓர் உயிரற்ற பிண்டப் பொருள் என்று கொள்ளுதல் கூடாது. ஆசிரியருடைய பணிகள் மூன்று படியாக அமைதல் வேண்டும். ஒன்று மாணுக்கன் கற்றலுக்கும் பின்பற்றுதலுக்குமான ஒரு நிலைமையை உண்டுபண்ணுதல், இரண்டாவது அவனை ஊக்குவித்தல், மூன்ருவது அவனுக்கு வேண்டியபடி வழிகாட்டி அவனை இயங்கும்படி செய்து அவன் முழு அளவில் துலக்கமுற்றுத் தனது சாதனையை அடையச் செய்தல். எனவே பாட ஏற்பாடு என்பது மாணுக்கன் ஏதோ ஒரு பொருளைப் போன்று உண்பதற்கு ஆன உண் பொருளன்று; மேலும், மாணவனும் சில பாடங்களை அவன் கற்குமாறு பிணைப்பதற்காகப் பிறந்தவன் அல்லன்; அல்லது அவன் ஒரு கொள்கலனும் அல்லன். கல்வி ஏற்பாடு அவனுடைய உள்ள நிலைக்கும் தகுதிக்கும் ஏற்ப அமைவது; அவன் விருப்பு வெறுப்புக்கு அடங்குவது; அவனுலேயே ஆக்கிக் கொள்ளக் கூடியது. அவன் விரும்பியவற்றைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளக் கூடியது. அது சமூகம் அளித்த அறிவுக் களஞ்சியம். அந்த அறிவுக் களஞ்சியத்திலிருந்து தான் அறிந்து கொண்டு அந்தச் சமூகத்தோடு உறவு நிலை கொள்ள உதவக் கூடியது.

பாட ஏற்பாடு ஒரு நிலைத்து அன்று. அது மாறிக்கொண்டே இருக்கும் தன்மைத்து. சமூகத்தில் மாறுபாடுகள் நடைபெற்ற வண்ணமாகக் காட்சி அளிக்கின்றன. இன்றைய உலகில் புதிய மாறுபாடுகளை

நாள்தோறும் காண்கின்றோம். ஆனால் அவற்றை எல்லாம் உடனடியாக நமது பள்ளிகள் ஏற்றுக்கொள்ளலாமா? முதற்கண் அவை யாவும் தக்கவையாக வேண்டும். கண்ட மாறுதல்களை எல்லாம் பாட ஏற்பாட்டில் நுழைத்துக் கொண்டால் அவை நல் வாழ்க்கைக்கு ஆக்க மாக அல்லாது கேடாக விளையும். எந்த மாறுதல்கள் நிலைத்த நன்மை அளிக்கக் கூடியவையோ, அவற்றைத்தான் பாட ஏற்பாட்டில் இணைத் துக் கொள்ளுவது நல்லது. இங்ஙனம் சமூகம் மாறிக்கொண்டே காட்சி அளித்தாலும் மனிதனுடைய இயற்கைத் தன்மை மட்டும் நிலையானது. உளநூலார் ஒருசிலர் மனித இயற்கையும், அடிக்கடி மாறுபாடு அடைந்து கொண்டே உள்ளது என்றும், அம்மாறுதல்களைப் பெறச் செய்வது கல்வியின் கடமை என்றும் கருதுகின்றனர். இதைக் கண்டித்து மனித உள்ளத்தின் இயக்கம் என்றும் ஒரே தன்மைத்து என்றும், புறவுலகில்தான் மாற்றம் ஏற்பட்ட வண்ணமாக உள்ள தென்றும் கூறுவார் சிலர். ஆனால் பாட ஏற்பாட்டில் அடங்கிய ஒரு சில பாடங்கள் நிலையாக மனித இயற்கையைப் பண்படுத்துவதோடு அவனை ஒவ்வொரு வளரும் பருவத்தும் நிறைவுறவும் செய்கின்றன. எடுத்துக்காட்டாகப் பொதுக்கல்வியின் உட்கருவாக உள்ளது தாய் மொழி. கல்வி இருதன்மைத்து. ஒன்று—தனி ஒருவனைச் சார்ந்தது. மற்றொன்று—சமூகச் சார்புற்றது. இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புற்றவை. இவ்விரண்டும் கற்பிக்கும் செயல் முறையில் முதலிடம் பெற்றவை. இத்தொடர்பு நிலை நிறைவு பெறுவதின் வழியாக வாழ்க்கை நிறைவு பெறுகிறது.

சமூகத்தின் நோக்கம் அறுதியிடப் பட்டாலன்றிக் கல்விப் பயனை அறுதியிட முடியாது. "அறம், பொருள், இன்பம் வீடும் பயக்கும்; புறங்கடை நல்லிசையும் நாட்டும்; உறுங்கவலொன்று உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க்கு உற்ற துணை" எனக் கல்விப் பயனை நமது நூல்கள் கூறும். இஃது எல்லா மக்களுக் கும், எல்லாக் காலத்தும் பொருந்தத முற்றது. இக்காலத்தில் அத்தகைய விழுமிய பயனைக் குறிக்கோளாகக் கொள்ளாது பலவகைப் பயன்களை நாடிச் சமூகங்கள் பாட ஏற்பாட்டினை அமைக்கின்றன. ஒவ்வொரு சமூகமும் அதன் இளைஞர்களுக்குக் கல்வி ஏற்பாட்டினை அமைத்துக் கொடுக்கிறது. மாறுதல் அடையாத நிலைச் சமூகமாயின், கல்வி ஒரே தன்மையாகி விடும். அதனால் முன்னேற்றம் உண்டாகாது. சமூகத்தில் மாறுபாடுகள் ஏற்பட்டுக் கொண்டே இருந்தால் இளைஞர்கள் அவர்களது வாழ்க்கைக்குத் தம்மை உருவாக்கிக் கொள்வதோடு சமூகத்தையே ஒழுங்காகத் திருத்தியும் வளர்ச்சிக்கு வழிகோலியும் வகை செய்யத் தம்மைச் சரிப்படுத்திக் கொள்ளுவார்கள். கல்விப் பயனுக்கும் பாட ஏற்பாட்டுக்கும் உள்ள காரியத் தொடர்பினை மறந்து விடுவதுண்டு. ஒரு காலத்தில் வாழ்க்கைத் தொடர்பற்ற கல்விக்காகப் பரிந்து பேசிய வர் பலர். பாட ஏற்பாட்டைப் பற்றி அறியும்போது நமது சமூகத்

திற்கும் பள்ளிகளுக்கும் காரியத் தொடர்பு என்னவென்றும் கல்விப் பயனுக்கும், கற்பிக்கும் பாடங்களுக்கும் பொருத்தம் என்னவென்றும் ஆராயாது விட்டால் சிந்தனை வீணாகும். சமூகம் கொள்ளும் குறிக் கோள்களையே நமது பள்ளிகள் ஏற்க வேண்டியதாகிறது. பள்ளிகளின் குறிக்கோள்களை நிறைவு செய்யப் பாட ஏற்பாடு அமைய வேண்டிய தாகிறது. மேலும் பிள்ளைகளுடைய வயதுக்கு ஏற்றபடி பாடங்களின் அளவினைத் திருத்தமாகக் குறிக்கவும் வேண்டும். பெரும்பாலும் புதிய பாடங்கள் பழைய பாடங்களைக் குறித்துவிடுகின்றன. எனவே பழைய பாடங்களும், புதிய பாடங்களும் பாடத்திட்டத்தை நிரப்பிவிடுகின்றன. எப்பாடமாயினும் அஃது இன்றியமையாததா என்பதை ஆராயாது பள்ளி நேரத்தில் எல்லாப் பாடங்களுக்கும் நேரத்தைப் பகிர்ந்து கொடுப்பது பெருஞ்சிக்கலாகிவிட்டது. பாடங்கள் பலவற்றுள் ஒன்றை ஒதுக்குவதும், மற்றொன்றை ஏதோ ஒரு காரணம் பற்றி இணைத்துக் கொள்ளுவதும் வழக்கமாகிவிட்டது. எங்கும் புதிய அறிவு வெளியாகிக் கொண்டே இருக்கிறது. அதற்குப் போதிய இடம் அளித்தாலன்றிப் பள்ளிக்கூடங்கள் புதியனவற்றின் வேகத்தினைப் பிடிக்க முடியாது. மற்றும் பிள்ளையினுடைய உளப்பாட்டுத் தன்மையினுள் ஒட்டாத கல்வி பயனற்றதென்று நாம் அறிவோம். எனவே கல்வி பிள்ளையினுடைய இயற்கையோடு இயைய வேண்டும். சமூகத்தோடு உறவு கண்டும் நாட்டின் பொருளாதாரத்தோடு நாட்டம் கொண்டும் நடைபெற்றால் ஒரு வகையாகப் பல கோணங்களில் ஒற்றுமை காணப்படும். பாட ஏற்பாடு ஒரு படியை மட்டும் குறித்து அறிவிக்கக்கூடாது. குழவிப் பருவக் கல்வி முதல் முதியோர் கல்வி வரையில் பாட ஏற்பாட்டினை ஆராய்தல் வேண்டும். குழவிப் பள்ளிகள், [1]தொடக்க நிலை, [2]உயர் நிலை ஆகிய எல்லாம் தளத்தின் மீது தளமாகக் கட்டப் பெற வேண்டியவை. அவ்வாறல்லாது தொடக்கநிலை அமைக்கும் தளத்தின்மீது உயர்நிலை, கல்லூரியின் தொடக்க நிலை, உயர்நிலையின் இறுதி என்று கொண்டால் உயர்நிலைப் பாட ஏற்பாடு தலையும், காலும் அற்றதாகக் காட்சி தரும். எனவே பாட ஏற்பாடு பிள்ளையின் [3]வளர்பருவம் ஒவ்வொன்றிற்கும் ஏற்றவாறு [4]குறுக்கு ஒருமைப்பாடும், கல்வியின் நோக்கம் அதனோடு அந்தந்த நிலைக்கு ஏற்றவாறு கல்விச் செயல் முறையில் [5]நெடுக்கு ஒருமைப்பாடும் பெறுதல் நல்லது. கல்விக்கும் சமூகத்துக்கும் உடன் பாடு வேண்டுமென்றால் அந்தச் சமூகம் ஒரு திட்டத்தோடு குடி ஆட்சிப் பண்பு பெருகி வளர்ச்சி பெற்றதாக இருக்க வேண்டும். வளரும் சமூகத்தின் மனிதத் தேவைக்கு ஏற்பப் பாட ஏற்பாடும் கற்பிக்கும் முறைகளும் அமைய வேண்டும். கல்வியின் தரம் ஒவ்வொரு பிள்ளையி னுடைய முழு வளர்ச்சிக்கும் அவனைச் சூழ்ந்திருக்கும் குடி ஆட்சிச்

---

1. Elementary 2. Secondary 3. Stages of child growth
4. Horizontal 5. Vertical

சமூகத்தில் பங்கு பெறுவதற்கும் உற்றதாக வேண்டும். பள்ளிச் செயற்பாடுகள் பிள்ளைகளின் தனித் தன்மையையும், சமூகத் தன்மையையும், பொருளாதாரத் தன்மையையும் இன்னும் மற்ற தேவைகளையும் யாங்ஙனம் நிறைவேற்றுகின்றன என்பது இவற்றின் அளவுகோலாக அமைய வேண்டும். பாடங்கள் பலவாக இருந்தால் அவற்றுள் எவை கட்டாயப்பாடம் என்றும் எவை விருப்பப் பாடம் என்றும் வரையறை வேண்டும். எல்லாப் பாடங்களிலும் [1] உட்கரு என ஒருசில பாடங்கள் உண்டு. அவை எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாயப் பாடமாக வேண்டும். பாட ஏற்பாட்டின் உட்கருப் பாடங்கள் முதல் நிலைகளில் எல்லாருக்கும் உரித்தாகும். இவை யாவை, இவற்றின் அடக்கம் எவ்வளவு என்று திட்டவட்டமான ஆராய்ச்சி நிகழவில்லை. இதைக் காட்டிலும் உற்ற பயனை அடைவதற்கு எங்ஙனம் ஒருமைப்பாடுறச் செய்வது என்பதையும் ஆராய்தல் வேண்டும். நமது பாட ஏற்பாடுகளில் ஒரு காலத்தில் ஒருசில பாடங்கள் நுழைந்திருக்கலாம். அவை தொன்று தொட்டு இடம் பெற்றுவிட முடியாது. அதனாலேயே நமது பள்ளிகள் அவற்றை விடாது பிடித்துக் கொள்ளுகின்றன. [2] பயிற்சி மாற்றத்தில் நம் ஆசிரியர்களுக்கு அழுத்தமான நம்பிக்கை உண்டு. பொதுவாகக் குழந்தைகளின் தேவைகள் எவை என்று அத்தேவைகளுக்கேற்பப் பாடங்களை அமைத்தல் மரபு. ஆனால் தனித் தனிக் குழந்தையும் அன்றைய அப்போதைய தேவைகளை ஒட்டி வளர வேண்டும். பாட ஏற்பாட்டில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஆசிரியர்கள் குறிக்கும் குறிக்கோள்கள் செயற்படுகின்றனவா (சாதனை ஆகின்றனவா) என்று கண்டறிய வேண்டும். பெரும்பாலும் பள்ளிகளில் பல பாடங்களைப் பல அகவைகளில் பகுத்துக் கற்பிக்கிறார்கள். இவை ஒவ்வொன்றின் தொடர்பை அறியாது பிள்ளைகள் இவற்றைத் தனித்தனியாகக் கற்கின்றார்கள். எனவே ஓர் அளவு பாட எல்லைகளைத் திருத்தி அமைத்து அவற்றின் ஒருமைப் பாட்டினைப் பிள்ளைகளின் தேவைக்கு ஏற்ப உணர்த்த வேண்டியது கடமை. * ஒருமைப்பாடு நிகழ வேண்டுமாயின் அது பிள்ளைகளின் வாழ்க்கையிலும் செயல்களிலும் மிளிர வேண்டும். ஆனால் இன்று ஆசிரியர்கள் தனிப்பாட மேதைகளாகத் தமது பாடத்திலேயே ஆழ்ந்து கிடக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தமது பாடத்திற்கே பேரிட மளிக்கப் போட்டியிடுகிறார்கள். பிள்ளைகளுடைய தேவைகளை அவர்கள் சிந்திப்பதில்லை. தனிப்பாட மேதைகளாக இருந்தாலும் அவர்கள் பொதுப்படப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் ஆர்வம் கொள்ள வேண்டாமா?

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்றதனால் எண்ணும் எழுத்தும் கண்ணெனப்

---

1. Core 2. Transfer of training * Integration

போற்றப்பட்டன. [1] படித்தல், [2] எழுதுதல், [3] கணக்கறிதல் ஆகிய மூன்றும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதனவாகக் கருதப் பெற்றிருந்தன. இவையே அடிப்படைக் கல்வியாக என்றும் கருதப் பெறுவன. இவையே போதிய உள்ளப் பயிற்சியை அளிக்கக்கூடியவை எனவும் நினைக்கிறோம். ஆனால் அன்று தொடக்க நிலைக் கல்வி போதுமென்று கருதிய மக்கள், இன்று இரண்டாம் நிலையாகிய உயர்நிலைக் கல்வி எல்லாருக்கும் கட்டாயமாக வேண்டும் என்று கருதுகிறார்கள். சமூக வாழ்க்கை நாளுக்கு நாள் மிகச் சிக்கலாகவும், தொழில் நுட்ப வாழ்க்கையில் ஈடுபாடு பெரிதாகவும் எங்கும் தொழிற்சாலைகளும், எந்திரசாலைகளும், பாட்டாளிகளும் பெருகி வளருவதாலும் இவற்றை எல்லாம் கல்வி நிலையங்கள் அறிவதோடல்லாது அவற்றிற்கு ஏற்பப் பாட ஏற்பாட்டினைத் திருத்தி அமைக்கக் கடமைப்பட்டுள்ளன. எண்ணுக்கும் எழுத்துக்கும் மேலானவை இயற்கை அறிவும் சமூக அறிவும். [4] மூலக் கல்வியோடு நில்லாது கல்விக்குரிய பிள்ளைகள் பலதிறப்பட்ட பயிற்சியைப் பெற்று முழு வளர்ச்சியை அடைவதற்குக் கல்வி நிலையங்கள் பொறுப்பென்று வற்புறுத்தல் கண்கூடு. அதற்கு உடல் வளர்ச்சி, சத்துள்ள உணவு அருந்துதல், நலப்பாடு, திறன், ஆற்றல், மனப்பான்மை ஆகிய எல்லாம் வேண்டும். இவை மட்டுமா? ஒவ்வொரு பிள்ளையின் வேற்றுமையையும் அறிந்து தகுதிக்கேற்ற விருப்பப் பாடங்களைக் கற்பித்தல் கடமை. வேற்றுமைப்படிப் பிள்ளைகளை அணிவகுத்து அவர்கள் அடையக்கூடிய திறன்களைப் பெறுமாறு செய்ய வேண்டும். குழந்தைகளின் திறமைகளையும், விருப்பங்களையும் ஓரளவு அவர்களுடைய பதினான்காம் வயதில் கண்டறியக்கூடும். அப்போது அவர்களுடைய பாடங்களைப் பகுதிப் படுத்தாது மூலப்பாடங்களில் ஓரளவு குறைத்து அவர்களுக்கு உற்ற பாடங்களைக் கற்பதற்கு வழி வகுத்தல் நல்லது. இங்ஙனம் உயர்நிலைத் தகுதிக்கு அப்பால் கல்லூரி நிலையிலும் திறமைக்கு ஏற்ற பாடங்களை அளித்து உதவலாம். அதனால் பாட ஏற்பாடு [5] நெகிழ்ச்சி உள்ளதாக அமையவேண்டும். பாடங்களின் பாகுபாட்டோடு படிக்கவேண்டிய [6] பரப்பையும் வகுக்க வேண்டும். ஒவ்வொரு பாடப் பரப்பிலும் வேண்டிய அளவு [7] தொடர்புள்ள பாடங்களோடு ஒருமைப்படுத்திக் கூறியது கூறல் என்னும் குற்றத்தை நீக்கலாம். பாட ஏற்பாடு மேற்கூறியவற்றால் பிள்ளைகளுக்கு ஏற்ப அமைத்தல் நன்று. இருக்கும் பாட ஏற்பாட்டிற்கு ஏற்பப் பிள்ளைகளை வற்புறுத்திப் பொருத்துதல் கூடாது. இப்போது கற்பித்தலுக்கு வேண்டிய துணைக்கருவிகள் மலிந்து உள்ளன. [8] வானொலிப் பெட்டி, [9] தொலைக்காட்சிப் பெட்டி, [10] திரைப்படத் துண்டுகள் இவற்றோடு

---

1. Reading 2. Writing 3. Arithmetic—3 R's 4. Core education 5. Flexible 6. Area 7. Correlative Subjects 8. Radio 9. Television 10. Film Strips

கற்பிக்கும் எந்திரங்களும் உதவுகின்றன. இன்றைய பாட ஏற்பாட்டில் அவற்றைத் தேடுவார் இல்லை. அவற்றைப் பயன்படுத்தக் கூடிய வகையில் பாட ஏற்பாடு திருத்தம் பெற்றால் ஆசிரியர்கள் அவற்றைத் தேடுவார்கள்.

II

உலக நிலையில் மாறுதல்கள் வெகு விரைவாக ஏற்பட்டு வருவது நாம் அறிந்ததே. எங்கணும் மாற்றங்கள்; குடும்ப நிலைகளில் மாறுதல்கள்; எங்கும் மாற்றுக் கோலம்; புரட்சி வேகம். அன்று குடும்பத்தில் தாயர், தந்தையர், பிள்ளைகள் ஒன்றாக வசித்தார்கள். உறவினர்கள் ஒரே ஊரில் வசித்தார்கள். குடும்பத்தில் பிள்ளைகள் ஒருவரை ஒருவர் பார்த்துப் பல பண்புகளைக் கற்றுக் கொண்டார்கள். தவறி விடும் பிள்ளைகளுங்கூட மற்ற பிள்ளைகளைப் பார்த்துத் திருந்திக் கொண்டார்கள். குடும்ப நெறி குடும்பத்தினருக்கு நன்மையை நல்கிற்று. குடும்பம் முழுவதும் வாழ்வதற்கு உதவிற்று. உழைப்பு, ஓய்வு நேரக்களிப்பு, கடவுள் வழிபாடு, மகிழ்ச்சிச் செலவு [1] இறைமைச் செலவு ஆகியவற்றில் எல்லாம் குடும்பம் முழுவதும் பங்கு கொண்டது. இன்று ஒரு குடும்பமே பல குடும்பங்களாக ஓரிடத்திலல்லாது பல இடங்களில் கல்வி காரணமாகவும், பிழைப்புக் காரணமாகவும் சிதறி வாழ்கின்றது. அன்று குடும்பப் பொருளாதாரம் ஒரு வகைத்து. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் ஆகிய எல்லாம் குடும்பத்தினர் உழைப்பாலேயே வரப்பெற்றன. இன்று குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் அவரவர்கள் பாடுபடும் இடங்களில் பிரிந்து வாழ்கின்றமையால், அவரவர்கள் தனித்து வாழ்க்கை நடத்த வேண்டியதாயிற்று. குடும்பத்தின் சிறு பிள்ளைகள் பள்ளிகளில் ஒப்படைக்கப் படுகிறார்கள். அவர்களுக்குப் பள்ளிதான் தாயரும், தந்தையரும் ஆவர். சிறு குழந்தைகளுங்கூடப் பெற்றோரிடமிருந்து விலகிப் பிரிய வேண்டியதாகிறது. ஏனென்றால் தாய் ஓரிடத்திலும், தந்தை ஓரிடத்திலும் பிழைக்க முற்படுகின்றார்கள். பிரிந்த குழந்தைகள் குழந்தை வளர்ப்புப் பள்ளியில் சேர்க்கப் பெறுகின்றனர். அன்று கல்வியாளர்கள் குடும்பத்தினை முதற்கல்வி நிலையமாகக் கருதினார்கள். தாயர் தந்தையர் குழவிகளின் முதலாசிரியர்களாக இருந்தவர்கள். அவர்களுக்குப் பதிலாக இல்லங்களைப் போலவே குழவிப் பள்ளிகளை அமைத்து அப்பள்ளிகளைக் [2]குழவி இல்லங்கள் எனப் பறை சாற்றுகிறார்கள். ஆனால் இன்று குழந்தை வளர்ப்புப் பள்ளிகளே குழந்தைகளின் வளர்ப்பு இல்லங்களாகப் பொறுப்பேற்கின்றன. பெற்றோர் பணச் செலவு மட்டும் செய்தலன்றி வேறு ஓர் உதவியும் தம் பிள்ளைகளுக்குச் செய்வதில்லை.

---

1. Pilgrimage 2. Casei De Bambini

குடும்ப வாழ்க்கை மாறுபாடுற்றது மட்டுமன்று; எங்கும் நகர வாழ்க்கை, மக்கள் நெருக்கம், வெட்ட வெளிகளில் எல்லாம் தொழிற் சாலைகள், புகைபோக்கிகள், செயற்கை வாழ்க்கையின் காரணமான நோய்கள், அவற்றைத் தடுக்கும் பல முறைகள் என மாற்றுக்கோலம் விரிவடைந்துள்ளது. எனினும் புத்தம் புதிய நோய்கள் மருத்துவர் களுக்குத் தொல்லை தருகின்றன. உட்கொள்ளும் காற்று, சுற்றுப்புறச் சூழ்நிலை, பொறையின்மை, விருப்பு வெறுப்புக்கள், சுயநலம், ஆசைப் பேய்த் தாண்டவம், மோசம், நடிப்பு இன்னோரன்ன பிற தீமைகளெல் லாம் புதிது புதிதாக உண்டாகி, இன வாழ்க்கை நிலையை இன்னல் படுத்துகின்றன. இவை யாவும் வளரும் பிள்ளைகளை வாட்டாது, பள்ளி நிலையத்தைத் தூயதாக்கிப் பிள்ளைகளின் பழக்க வழக்கங்களை நல்ல முறையில் நடத்திச் செல்ல வேண்டிய பெரும் பொறுப்பினைப் பாட ஏற்பாட்டில் நுழைத்தல் சிறு பொறுப்பு ஆகாது. குடும்பக் கட்டுப் பாடின்றிப் பிரிந்து வாழ்கின்ற நிலையில் பாலிடை வேற்றுமை உந்தப் படுவதாலும் பாலுணர்ச்சி ஊட்டக்கூடிய நூல்கள், விளம்பரங்கள், திரைப்படங்கள் [1] மட்டமான பாலுணர்ச்சியை ஊட்டுவதாலும் [2] பால் வகைக் கல்வியால் பாலினப் பண்புகளை வளர்க்க வேண்டும் பொறுப்பும் புதிதாக ஏற்பட்டுள்ளது எனலாம்.

அறிவியல் வளர்ச்சியில் அமைக்கப் பெற்றுள்ள [3] பேரளவாக்கச் சாலைகள், [4] பெருமுறைத் தொழில்கள், [5] தொழில் அமைப்புக்கள், [6] பொது நலத் திட்டங்கள் ஆகிய பலவெல்லாம் பொதுவாகக் குடிமக் களுக்கும், சிறப்பாக இளம்பிள்ளைகளுக்கும் விளங்காதவை. அவர் களுடைய [7] தகுதியாற்றலுக்கும் [8] நாட்டத்துக்கும் ஏற்றவாறு அவர்கள் [9] தொழில்முறை வழிகாட்டியை நாடி தமக்குரிய தொழிலைத் தெரிந் தெடுத்துக் கொள்ள வேண்டியதாகிறது. எங்கும் அறிவியலால் அமைந்த புத்தம் புதிய பலவகை வாழ்க்கை வசதிகளாய வானொலிப் பெட்டி, மின்சாரம், தொலைபேசி, குளிரூட்டி, உணவு சமைக்கும் கருவிகள் ஆகியவை மக்களுடைய பழைய முறை வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொண்டிருக்கின்றன. இவற்றின் நன்மை தீமைகளை ஆசிரியர்கள் அறிய வேண்டியதும் கடமை. இவை யெல்லாம் நன்மை பயந்தால் சமூகம் ஏற்றுக்கொள்ளுகிறது. இவை யன்றிப் பலப்பல நிலையங்கள், சங்கங்கள், கூட்டங்கள் அவை கண்ட பலப்பல கருத்துக்களைப் பிஞ்சு உள்ளங்களில் அறிவுறுத்துகின்றன. இவற்றோடு பலவகைப் புத்தகங்கள், விளம்பரங்கள், திரைப்படங்கள் வாழ்க்கை வழிகளைப் பலபடியாக புனைந்து காட்டுகின்றன. இத் தகைய மோதல்களை எல்லாம் தீமை பயக்காது தடுக்கும் பொறுப்பு

---

1. Yellow literature 2. Sex education 3. Large Scale Industries 4. Heavy Industries 5. Industrial establishments 6. Social Welfare Schemes 7. Abilities 8. Aptitude 9. Vocational Guidance

புதிய பொறுப்பாகும். பழமையில் பள்ளிப் படிப்பு ஒருவகையாக இருந்தது. இன்று பாட ஏற்பாட்டினைப் பல மாறுதல்களுக்கேற்பத் தள்ளுவதைத் தள்ளிக் கொள்ளுவதைக் கொண்டு திருத்தி அமைக்க வேண்டிய இன்றியமையாமை கல்வியாளர்களை நோக்கிய வண்ணமாக உள்ளது. இவையன்றி மக்களாட்சியில் மாணுக்கன் வாழ்கின்றதால் கடமைகளை நன்ருக உணர்ந்து நல்லதொரு குடிமகனுகப் பொறுப் பேற்கக் கல்விப் பயிற்சி இடம் தர வேண்டியதாகிறது. ஆட்சிமுறை, நாட்டாட்சி, நகராட்சி, குடிமகனின் கடமை, உரிமை ஆகிய எல்லாம் பாட ஏற்பாட்டில் இடம் பெறவேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் தன்னைப் பொறுத்த வரையில் நன்ருகப் பல பயிற்சிகள் பெற்று உடல் நலத்தோடு வாழப் பள்ளிகள் வகை செய்ய வேண்டும். விளையாடு மிடங்கள், உடற் பயிற்சித் திடல்கள், உடல்நலங் காக்கும் வசதிகள், மருத்துவப் பணிகள், மதிய உணவு, எழில் உணர்வு, இசை, கலை வளர்ச்சி ஆகிய இவற்றிற்கெல்லாம் பள்ளிகள் வழி வகுக்க வேண்டும். சமயக் கல்வி, கடவுள் வழிபாடு இவற்றிற்கும் இடம் தரவேண்டும். பிள்ளைகள் பல சிக்கலான வாழ்க்கையில் நல்ல பொருத்தப்பாடு பெற வழிகாட்டவும் வேண்டும். இப்பொறுப்புக்களை எல்லாம் பள்ளிகள் தான் ஏற்றுக்கொள்ள முடியும். ஏன்? பள்ளிகள் இவற்றை வசதி யோடு அளிப்பதற்கே அமைக்கப் பெற்றுள்ளன. சமூகத்தில் எப் போதும் திருத்தம் பெற்ற சூழ்நிலையை நமது வளரும் பிள்ளைகள் காணஇயலாது. பள்ளிகளில் பயிலுவதற்கும், பயிற்சி பெறுவதற்கும் கற்றல் முறை எப்போதும் உண்டு. ஒவ்வொரு பயிற்சிக்கும், பாடத் துக்கும் தனித்தனியாக ஆசிரியர்கள் அறிவோடு திறனை அளிக்கும் வல்லுநர்களாக விளங்குகிருர்கள். பள்ளிகளிற் சிக்கல்கள் கிடையாது. கருத்து வேற்றுமைக்கு இடமில்லை. சிந்தனையும், செயலும் ஒருமைப் பாடு பெறுகின்றன. ஒவ்வொரு பிள்ளையும் தன்னை அறிந்து தன்னடக் கத்தோடு வளர்ச்சிபெற வழியுண்டு. பள்ளி வாழ்க்கை, பண்பு நிறைந்த குறிக்கோள்களுக்கு அடங்கியது. இப்பண்பாடுகளெல்லாம் பிள்ளைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களைப் பயப்பதால் அவர்கள் நல்ல குடிமக்களாக நாட்டிற்கு நன்மை செய்ய வழி உண்டு. ஆனல் அவர் கள் நல்ல குடிமக்களாக வாழ்வதற்கு மக்களாட்சி முறைக்கு ஒப்பக் கல்வி ஏற்பாட்டினை வகுக்க வேண்டும். 'மக்களாட்சி' முறைப்படி பள்ளி வாழ்க்கை வகுப்பது இப்போது கல்வியாளர்களின் கடமை யாகும். மக்களாட்சி வாழ்க்கையின் பண்புகள் பலவாகக் கருதப்படு கின்றன. அவை திடீர் என்று தோன்றியவை அல்ல. அவை வழி வழியாக மக்கள் வாழ்வில் வளர்ந்தவை. உரிமை வேட்கை, கட்டுக் கடங்கி நடத்தல்—அதாவது சட்டத்துக்கு அடங்குதல், உடன்பிறப் புணர்வு, பகுத்தறிவு, அறிவியல் வளர்ச்சி, [1] ஒருமை நிலை, சமுதாய

1. Equality

நீதி, பொறையுடைமை ஆகிய பலப்பல பண்புகள் மக்களாட்சியில் குடிமகனுக்கு உரித்தானவை. சாதி, மதம், பிறப்பு, பணக்காரன், எளியவன் ஆகிய எவ்வித வேறுபாடுமின்றி எல்லா மக்களுக்கும் கடவுள் முதல் தந்தை என்ற கருத்தூன்றி மக்களோடு பழகுவது மிகச் சீரிய ஒழுக்கமாகும். மக்களுக்குள் வேற்றுமை இன்றிச் சமத்துவத்தோடு 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' என்ற மனப்பான்மை மிகவும் சிறந்தது. நாட்டிலுள்ள எல்லா ஆட்சி நிலையங்களும் மக்கள் நலனுக்கு வழி செய்யுமாறு உதவ வேண்டும். எல்லா மக்களும் பல்வேறு வகையில் வேறுபட்டவர்களாகையால் பொதுவாக நல்ல குணத்தையே பாராட்டி வேறுபட்டவற்றைப் பொருட்படுத்தாதபடி பொறையுணர்வினை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றை எல்லாம் பாட ஏற்பாட்டில் பள்ளி நுழைத்து உதவவேண்டியது கடமையாகிவிட்டது.

III

பொதுவாகக் கல்வி ஏற்பாடு என்பது பிள்ளைகள் பெறவேண்டிய பொருளறிவு, திறன், மனப்பான்மை ஆகியவற்றைப் பள்ளியில் பெற வேண்டுமென்று வலியுறுத்துவதொன்று. அது சமூக அனுபவத்தோடு ஒட்டியதாக இருக்க வேண்டும். சமூக அமைப்பில் மாறுதல்கள் உண்டானால் அவற்றிற்கேற்பப் பாட ஏற்பாட்டின் அமைப்பும், பொருளடக்கமும் மாறுதல் பெறவேண்டும். வரலாற்று முறையில் காணும்போது பாட ஏற்பாட்டின் மாறுதல்கள் மிக மெதுவாகப் பல ஆண்டுகள் வரையில் நிகழ்ந்துள்ளன. வரலாற்றின் இடைக்காலம் தொடங்கிப் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை உயர்நிலைப் பள்ளிப் பாடத் திட்டம் அதிகமாக மாறவில்லை. அன்று ஐரோப்பிய நாடுகளில் இலத்தீன் மொழி உயர்நிலைப் பாடமாக இருந்தது. அதன் அடிப்படையில் மேற்படிப்பும், உள்ள வளர்ச்சியும் மாணவர்கள் பெற்றார்கள். மறுமலர்ச்சிக் காலத்தில் பண்டைய கிரேக்க இலத்தீன் மொழிகள், இலக்கியங்கள் முதலியவற்றை மொழித் திறனைப் பெறுவதற்கு ஐரோப்பியர்கள் படித்தார்கள். பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்கை அறிவியல் நூல்களும், மக்களியல் நூல்களும் பாட ஏற்பாட்டில் நுழைந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டிலன்றோ அறிவியல் நூல்கள் இடம் பெற்றன! இன்றும் பண்டைய மொழிகளில் ஆர்வம் மக்களிடையே குறைந்த பாடில்லை. நம் நாட்டில் சமக்கிருதம், பாரசீகம், அரேபியம் ஆகிய மொழிகள் பண்டைய மொழிகளாக நம்மைப் பிணித்துள்ளன. சமக்கிருத மொழியை இந்துக்கள் ஒருசிலர் தமது தாய்மொழியோடு கற்கின்றார்கள். இஸ்லாமியர்கள் அங்ஙனமே தமது தாய்மொழியாகிய உருது மொழியோடு பாரசீகம், அரேபிய மொழிகளைக் கற்க விழைகிறார்கள். பண்டைய மொழிகளைக் கற்பதால் உளப்பயிற்சியும்,[1] முறைமைக்

1. Formal discipline

கட்டுப்பாடும் உண்டாகும் என்ற நம்பிக்கை இன்னும் நம்மிடையே உள்ளது. ஆனால் இவை இத்தகைய நன்மை பயக்கும் என்பதனை உளநூலார்கள் மறுக்கின்றார்கள். புதிய பாடங்களெல்லாம் பாட ஏற்பாட்டில் நுழைந்தபோது அவை இலத்தீனைப் போன்று உள்ளப் பயிற்சி அளிக்குமென்று நம்பினார்கள். அறிவியல்கள், வரலாறு, நிலநூல் ஆகிய பாடங்கள் பழைய முறைகளிலேயே கற்பிக்கப் பெற்றன. இவற்றிற்கும் சமூக அமைப்பு மாறுதல்களுக்கும் தொடர்பு ஒரு சிறிதும் இல்லாது பள்ளிகள் கல்விப் பணியாற்றின.

சமூகத்தில் ஏற்படும் மாறுதல்கள் எல்லாவற்றையும் பள்ளிகள் தமது பாட ஏற்பாட்டில் எதிரொலிக்க வேண்டுமா என்று வினவலாம். மாறுதல்கள் நல்லனவாகவும், தீயனவாகவும் இருக்கலாம். சமூகத்திலுங்கூட மாறுதல்களை எல்லாரும் ஏற்றுக்கொள்ளத் தயங்குவார்கள். புதிய பழக்கங்கள் நுழைந்தால் பழையனவற்றைக் கைவிடமாட்டார்கள். சமூகம் பழமையையே விரும்பும் தன்மை உள்ளது. பொருளாதார மாறுதல்கள் பலவாக ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும் அவற்றின் செல்வாக்கினை நமது பள்ளிகள் தடுத்து வந்துள்ளன. புரட்சி ஏற்பட்ட நாடுகளில் பழமை சிதறடிக்கப்பட்டு அரசாங்கம் கல்வி ஏற்பாட்டைக் கட்டுப்படுத்தி அதன் கொள்கைக்கேற்ப மாற்றிவிட்டது. ஒரோ வழி இத்தகைய கட்டுப்பாடு அந்நாடுகளில் புத்துணர்வு அளித்ததை மறுக்க முடியாது. மக்களாட்சி நாடுகளிலுங்கூட இரண்டாவது உலகப் பெரும் போருக்குப் பிறகு மாறுதல்களின் இன்றியமையாமை ஏற்பட்டது. இதனால் புதிய பாடங்கள் பாட ஏற்பாட்டில் நுழைவுற்றன. பள்ளிக் கூடக் கால அட்டவணை இப்பாடங்களால் நிரம்பிவிட்டது. இனியும் புதுப்பாடங்கள் நுழைந்தால் பழம் பாடங்களை நீக்கவேண்டிய நிலை உண்டாகும். பாட ஆசிரியர்கள் அவரவர்கள் பாடத்துக்கு நிறைய [1] அகவைகள் விரும்புகிறார்கள். கற்பிக்கும் முறைகளிலும் மாறுதல்கள் பல ஏற்பட்டதால் பிள்ளைகள் தாமாகவே கற்றுக்கொள்ளக்கூடிய பொருள்கள் பல நீக்கப்பெற்றன. இன்று பிள்ளைகளுடைய அக்கறை, விருப்பம், செயல்படுமுறை, உறும் பயன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பாட ஏற்பாட்டில் பாடங்கள் பல விரவியுள்ளன. ஆசிரியர்களும் வீணைகப் பாடங்களை வளர்த்தாது வேண்டியவற்றை மட்டும் தெளிவாகப் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வழி கோலுகிறார்கள்.

இவ்வளவு திருத்தங்கள் பாட ஏற்பாட்டில் இடங்கொண்டும் குறைபாடுகள் இன்னும் காணப் பெறுகின்றன. பாட ஏற்பாட்டில் அடங்கிய பாடங்கள் எல்லாம் தனித்தனியாகக் காட்சி அளிக்கின்றன. ஒன்றுக்கொன்று தொடர்பற்றது போல் பிள்ளைகள் அவற்றை ஒன்றுக்கொன்று போட்டியாகக் கற்கின்றார்கள். எல்லாப் பாடங்களிலும் [2] ஒருமைப்பாடு புலனாகவில்லை. கற்பிக்கும் பாடங்கள் கல்லூரி செல்லாத மாணவர்

1. Periods 2. Integration

களுக்குங்கூட வெறும் ஏட்டுக் கல்வியாகக் கற்பிக்கப் பெறுகின்றன. அவற்றின் வாழ்க்கைப் பயன் அல்லது வாழ்க்கையோடு ஒட்டிய திறன் அல்லது ஒரு தொழிலுக்கும் அப்பாடத்துக்கும் அமையக்கூடிய நேர்ச்சி ஆகிய எதுவும் இல்லாமல் பாடம் பாடமாக அதனை நெட்டுருச் செய்வதும் தேர்வு மனப்பான்மையால் உந்தப்பெறுவதுமாக மாணவர்கள் இப் பாடங்களைக் கட்டிக் கொண்டுள்ளார்கள். இஃது ஒரு பற்றற்ற நிலை. எப்பாடமும் உடலையும் உள்ளத்தையும் தொட்டாலன்றி வெறும் ஏட்டுப் படிப்பாகத் தொடங்கிப் பயனற்ற படிப்பாக முடியும். ஆசிரியர்கள் ஒரு சிலர் தாம் நேர்முகமாகக் கற்பிக்காது பாடப் புத்தகத்தின் வழியாகக் கற்பிக்கிறார்கள். அந்நிலையில் ஆசிரியர் ஒருவர் வேண்டுமா என்ற எண்ணம் மாணவர் உள்ளத்தில் எழுகிறது. ஆசிரியர் புத்தகத்தி லுள்ள பாடத்தை அவரும் படிக்காது பிள்ளைகளைப் படிக்கச் சொல்லிப் பாடக் கருத்தை அறிந்துகொள்விக்கும் ஏவுதல் பணியோடு நின்றுவிடுகிறார். அல்லது தேர்வு காரணமாக வினா விடைகளைக் கொடுத்துத் தம் பணியை முடித்துக் கொள்ளுகிறார். நம் பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்பிலும் தேர்வுப் பூதம் தாண்டவமாடுவதோடு ஆசிரியர்களையும் மாணாக்கர்களையும் ஆட்டிப் படைக்கின்றது. எனவே இரு சாராருக்கும் தேர்வு தான் [1] இலக்கு. அதில் வெற்றிதான் வீடு பேறு; கற்பிக்கும் முறைகளும் அதற்கு அடிமையே. கைத்திறன், எழில் உணர்வு ஆகியவற்றை வளர்க்கக்கூடிய பாடங்கள் பாட ஏற்பாட்டில் போதிய இடம் பெறுவதில்லை. பெரும்பாலும் ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங்களுக்குப் புதிய மெருகு இடுவதில்லை. பழமையில் அவர்கள் கற்ற முறையிலும் அளவிலுமே கற்றுக் கொடுக்கிறார்கள். எனவே ஒவ்வொரு பாடமும் வழிவழியாகக் கற்ற பாடமாகவே கற்பிக்கப் படுகிறது. எந்தப் பாடப் பொருளையும் இன்றைய பயனோடு இணைப்பதே கிடையாது. ஆகையால் பல இடர்ப்பாடுகளுக்கிடையே படிக்கும் பாடங்கள் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு வழிகோலியாகவும் அவர்கள் வாழவேண்டிய உலகத்தில் அவர்களுக்கு வழிகாட்டியாகவும் பயன்படாது ஒழிகின்றன. பாடங்கள் பெரும்பான்மை பழமை வாய்ந்தவை. அவற்றை அறிவது வேண்டற்பாலது. ஆனால் அவற்றைப் புதுமையோடு ஒட்டாது, பயனைக் காட்டாது பாடத்தைப் பாடமாகவே கற்பித்துவிட்டால் பிள்ளைகளுடைய உள வளர்ச்சி உண்டாகாதல்லவா? அதனால் [2]சிக்கல் முறை, [3]தன்னூக்க முயற்சி முறை ஆகியவற்றைப் பயன்படுத்திப் பழமையான பாடங்களுக்குப் புதுமை கற்பிக்கின்றார்கள். ஒவ்வொரு பழைய பாடமும் ஒவ்வொரு உளப் பயிற்சி அளிக்கவல்லதால் அதை அதன் ஒழுங்கு முறையில் மட்டுமே கற்பிக்கவேண்டும் என்று வற்புறுத்துவோரும் உண்டு. அல்லாது இப்பாடங்களை ஏதோ நினைத்த வண்ணம் அல்லது வேண்டியவாறு பயன்படுத்தி வந்தால் அவை ஒவ்வொன்றின் முழுப்பயனைப் பிள்ளைகள்

1. Goal 2. Problem method 3. Project method

பெற முடியாதென்று கருதுவார் உளர். சமூக அறிவியல் என்ற புதுப் பாடத்தைப் பற்றி நமக்குத் தெரியும். அது வரலாறு, நிலநூல், ஆட்சி முறை, பொருளாதாரம், அரசியல் ஆகிய சமூக அறிவியல் நூல்கள் திரண்டு சேர்ந்த ஒரு பாடமாகும். இப்புதிய பாடத்தை வெறுப்பார் உண்டு. இதில் கலந்த எல்லாப் பாடங்களையும் பிள்ளைகள் தனித் தனியாகக் கற்று விழுப்பம் பெறவேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் கல்லூரி நிலையில் தனித்தனிப் பாடங்களும் அவற்றிற்கு உரிய உள்ளப் பயிற்சியும் ஒருங்கு சேர்ந்தது ஒத்துக்கொள்ளக் கூடியது. ஆனால் பள்ளி நிலையில் அவற்றின் பகுதிகளில் சிலவற்றைத் துண்டித்துவிட்டு எஞ்சியவற்றைப் பாடமாக்கி அவற்றின் வாயிலாக உள்ளப் பயிற்சியில் ஓரளவு பெற வேண்டுமென்பது தவறு என்று பலர் கண்டிக்கிறார்கள். எனவே பள்ளிப் படிப்பில் அறிவியலறிஞர்களையும், வரலாற்றுப் புலவர்களையும், மொழித்திறன் ஆய்வாளர்களையும் உண்டு பண்ண நினைப்பது இயலாதது. ஆகையால் பள்ளிப் படிப்பின் குறிக்கோளுக்கு ஏற்பப் பாடங்களைத் தனியாகவும், இணைத்தும் கற்பிப்பதே நல்லதாகும். நம்முடைய பள்ளி ஏற்பாடுகளைக் கூர்ந்து கவனித்தால் அவை ஒரு மூலத்தின் அடிப்படையில் எழுந்தவையாகவும் இல்லை. வாழ்க்கையை ஒட்டியவையாகவும் இல்லை. மூலப்படிப்பு யாது? அதில் அடங்கக்கூடியவை யாவை? என்பவற்றையும் ஆய்வாரில்லை. மூலப் படிப்பு வேண்டுபவருங்கூடத் தாய்மொழி, வரலாறு, நிலநூல், பொது அறிவியல் என்பன போன்ற பாடங்களையே சுட்டுகிறார்கள்.

பொதுவாகப் பாடங்கள் பயனுற வேண்டுமானால் அவற்றின் குறிக்கோள்கள் செயற்படும் கட்டத்தையும் சார்ந்தவையாக இருத்தல் வேண்டும். எந்தப் பாடத்தையும் வீணாக வளர்த்துப் பிள்ளைகளுக்குச் சலிப்பு உண்டாகும் வரை நடத்துவது பயனற்றது. தனித்தனி மாணவர்கள் வேற்றுமைக்கு ஏற்பப் பாடத்தை ஒழுங்குபடுத்தி விரிக்காமலும், திரிக்காமலும் அமைக்கக்கூடியவரே திறமை உள்ள ஆசிரியர். பிள்ளைகளுடைய கவர்ச்சியைக் கடைப்பிடித்து நேரத்தை மாற்றியும் பாடப் பகுதிகளைப் பிள்ளைகளுடைய விருப்பிற்கு ஒப்ப நிரல்நிறையைத் திருத்தியும் கற்றலில் [1] ஓசை யொழுங்கைக் காப்பவரே திறமை உள்ள ஆசிரியர். இங்ஙனம் பாடங்கள் அமைந்தால் [2] தனியார் வேற்றுமைகளைப் புறக்கணியாது எல்லாப் பிள்ளைகளையும் பாடத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்ய முடியும். பாட நேரத்தை வகுப்பது, பிள்ளைகளுடைய வளர்ச்சித் தேவைக்கு உதவுவது, அவர்களுடைய கவர்ச்சி நேரங்களில் பாடங்களைப் புகட்டுவது; பல பாடங்களை இணைப்பது—இவையன்றோ கட்டாயப் பாடங்களைத் திட்டமிடுதலில் கவனிக்க வேண்டியவை!.

1. Rhythm 2. Individual differences

IV

எல்லாப் பள்ளிகளுக்கும் மூலப் பாடங்கள் இன்றியமையாதவை. பள்ளிக்கூடத் தரத்துக்கேற்பத் தனித்துறை அமைத்துப் புலமை அளிக்க வேண்டிய பாடங்களுக்கு வகை செய்யலாம். அல்லாது ஒரே பள்ளியில் மூலப் பாடங்களையும், ஏனைய தனித்துறைப் பாடங்களையும் இணைத்துக் குழப்பி ஒவ்வொரு பள்ளியிலும் ஒரே வகையான பாட ஏற்பாட்டினை வகுத்துக் கொள்ளுவது சரியான முறை அன்று. பாடங்களைத் தனித்தனியாகப் பிரித்துச் சொல்லிக் கொடுப்பதும் பாடங்களை ஒருமைப்படுத்துவதுமான இரண்டு வழிகள் உண்டு. பாடங்களை ஒருமைப்படுத்துவதால் பிள்ளைகளுக்குத் தனிப்பாட அறிவுப் பயன் குறைவுறுமா என்ற சிக்கல் எழும். பாடங்கள் தனித்தனியாக இயங்கும் போது ஒரே பகுதிகள் இரண்டு மூன்று பாடங்களில் [1] திரும்பத் திரும்ப இடம் பெறலாம். அங்ஙனம் ஒவ்வொரு பாடத்திலும் ஒரே கருத்துக்களைக் கூறுது அவற்றை ஒரே பாட வழியாகக் கற்பித்தலே இணைப்பு முறையாகக் கருதப் பெறுகிறது. இணைப்பது என்ருல் ஆசிரியருடைய பணிகளை இணைப்பதா? அல்லது இரண்டு மூன்று பாடங்களுக்குப் பதிலாக மூன்றையும் ஒன்ருகச் சேர்த்து ஒரே பாடமாகச் சேர்த்துக் கொள்ளுவதா? அல்லது பிள்ளைகளுடைய செயற்பாடுகளை ஒன்ருக இணைப்பதா? அல்லது பிள்ளைகளின் பலபடியான வளர்ச்சியைத் தொகுத்தலா? எனவே இணைப்புப் பாடமென்பது கல்வி உலகில் ஒரு வெற்றுக் கூப்பாடாகி விட்டது. ஆனல் இணைத்தல் என்பதுதான் என்னே என அறிதல் வேண்டும். பிள்ளைகள் என்ற முறையில் அவர்களுக்கு வேண்டிய தேவைப்பாடும், இன்றைய மக்களாட்சியில் வாழும் சமூகத்தின் தேவைப்பாடும் இயைபு பெறுவதே இணைத்தலாகும். எனவே இணைத்தல் என்பது நமது விருப்பம்போல் இணைத்தலன்று. அஃது அடிப்படையில் இணைத்தலாகும். இன்றைய பாட ஏற்பாடு அத்தகைய அடிப்படையில் எழுந்ததன்று. ஆனல் அது வழிவழியாக வந்த பாடங்களைப் பிள்ளைகளுடைய பலவகைத் தேவைகளுக்குச் சரிக்கட்டுகிறதென்ற ஒரு கொள்கை நிலையில் நின்றுவிடுகின்றது. உண்மையாக அவை தனி ஒவ்வொரு பிள்ளையினுடைய வளர்ச்சிக்கும் வழி செய்யுமா, சமூகத்தின்' தேவைகளுக்கு ஈடுகட்டுமா, பண்பாடுகளை வளர்க்குமா, குடிமைப் பயிற்சி அளிக்குமா, என்பவற்றை ஆராய்தல் வேண்டும். இப்போதுள்ள பாட ஏற்பாடு இவற்றை அளிப்பதில்லை என்பது கண்கூடு. எனவே பாட ஏற்பாடு பிள்ளைகளுடைய தேவைக்கேற்ப நெகிழ்வுள்ளதாக வேண்டும். பாட ஏற்பாட்டை ஆசிரியர்கள் தவிர மற்ற யாரும் வகுக்கக்கூடாது. கல்விப் பொறுப்பேற்ற ஆட்சியினர் சில நாடுகளில் தமது ஆணையாகப் பாட ஏற்பாட்டைப் பிறப்பிப்பது கல்வி வளர்ச்சிக்கு ஊறுகும். சில நாடுகளில் ஆசிரியர்கள்

1. Overlapping

திட்டப்படி செயற்படுத்த வேண்டியதாகிறது. இங்கிலாந்து தேசத்தில் ஆசிரியர்கள் தாமாகவே சிந்தித்து அவரவர்களுடைய பள்ளிக்கு ஏற்றபடி நல்ல பயனைப் பெறுவதற்குக் கற்பிக்கும் முறைகளை வகுத்துக் கொள்ளலாம் என்ற உரிமை உண்டு. அவர்களுக்கு வேண்டிய பாடங்களைச் சேர்த்துக் கொள்ளவும், நீக்கிக்கொள்ளவும் உரிமை உண்டு. இதனால் நாம் அறிவது தனித்தனிப் பள்ளிகள் தமது தேவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப ஒரு சிறிதும் கட்டுப்பாடின்றி எத்திட்டத்துக்கும் வாயைப்பொத்திக் கொண்டு அடங்காது தாமே சிந்தனை செய்து தமது மாணவர்களுக்கு ஒத்த பாடத்திட்டத்தை வகுத்துக் கொள்ளலாம். ஆனால் உயர்நிலைப் பள்ளித் திட்டம் கல்லூரியாளர்களால் கணிக்கப்படுகிறது. உயர்நிலைக் கல்விக்கும் ஓர் உரிமைநிலை உரித்தாக வேண்டும். இதன் அடித்தளம் தொடக்கநிலை ஏற்பாட்டினையும், மேல் தளம் கல்லூரித் திட்டத்தினையும் தழுவி இருப்பதால் இது காலும் தலையும் அற்ற ஒரு நிலை என்று முன்னர்க் கண்டோம். உயர்நிலைப் பள்ளித் திட்டம் தனித்து இயங்க வேண்டும். அது கல்லூரித் தேவைக்கு வழிகோல வேண்டியதில்லை. கல்லூரியின் முன்தானையைப் பற்றிக் கொண்டு இயங்க வேண்டியதில்லை. உயர்நிலைப் பள்ளி அளவில் எல்லாப் பாடங்களையும் மாணவர்கள் கற்றல் வேண்டும். தனித்துறைப் புலமை மாணவர்கள் தாமாகவே பெறும்போது அதனை தனித்துறைப் புலவர் கல்லூரி நிலையில் பயன்படுத்திக் கொள்ளலாம். வீணாகத் தனித்துறைப் புலமையைச் சுட்டுவதும் வற்புறுத்துவதும் உயர்நிலைக் கல்வி அளவுக்கு வேண்டியதில்லை. உயர்நிலைக் கல்வியின் பழமையைக் கூர்ந்து கவனித்தால் அது முதிர் பருவத்துக்கு வேண்டிய பாட ஏற்பாட்டைத் தன்னகத்தே கொண்டதாகக் காணலாம். பிள்ளைகளுடைய செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு மூலப்பாடங்களை அவர்கள் வளர்ச்சிக்கு ஏற்றவாறு வகுப்பதே முறையாகும். பிள்ளைகள் பொருள்களையும் மக்களையும் முதலில் ஒன்றுகக் கருதுகின்றனர். நாளடைவில் இரண்டின் வேறுபாடுகளை அறிந்து தமது நடத்தையை மாற்றிக் கொள்ளுகின்றனர். இத்தகைய மாறுபாட்டுக் காட்சியே அறிவியலுக்கும் சமூக அறிவியலுக்கும் தொடக்க நிலை. இவற்றைப் பிரித்துப் பிரித்து வேறுபடுத்திக் காட்டுவது நன்றன்று. வாழ்க்கையில் இவை வேறுபாடுற்றுக் காட்சி அளிப்பதில்லை. இவ்விரு இயல்புகளையும் வாழ்க்கையோடு ஒன்றியதாகக் கற்பிப்பதே பாட ஏற்பாட்டின் விழுமிய நோக்கமாக வேண்டும். குழவிப் பருவத்தில் மொழிப்பயிற்சி குழவி வளர்வதற்கும், தனது சூழ்நிலையை அறிவதற்கும் இன்றியமையாததாகிறது. மொழிவழியாக குழந்தைகள் சுற்றுப்புறத்திலுள்ள பொருள்களையும் மக்களையும் அறிந்து கொள்ளுகிருர்கள். மொழிவழியாகவே அறிவும் சூழ்நிலையும் அறியப் பெறுகின்றன. இத்தகைய மொழிப் பயனைப் பல கோணங்களில் மாணவர்களுக்குக் கிட்டாது மொழியை ஏட்டுக் கல்வித் திட்டத்தில் அடக்கி விட்டோம். மொழிப் பாடங்கள்

மொழிச்சார்புற்றவையாகவே அமைந்து விட்டன. மொழிப்பயன் மொழியாளருடைய கட்டற்ற வெளியீட்டுக் கருவியாகவும், பண்பாட்டின் உறை கோயிலாகவும் மாணவர்களிடையே வளருவதில்லை. குழந்தைகளின் ஆடல் பாடல்களும் மகிழ்ச்சி அனுபவங்களும் அவர்களின் செவியை ஈர்க்கக்கூடிய ஒலிகளும் கண்ணைக் கவரக்கூடிய காட்சிகளும் ஆகிய இன்பநிலையே மொழிவழியின் விழுமிய எழில் உணர்வு நிலை. இங்ஙனம் இயற்கையாக வளரும் தன்மை வாய்ந்த அந்நிலையை அவர்களுடைய செயற்பாடுகளில் வளர்ச்சியடைய உதவவேண்டியது பாட ஏற்பாட்டின் தலைக்கடன். இதனைக் கலைகளின் வழியாக வளர்ப்பதோடு பொதுவாக எழில் உணர்வு மனப்பான்மையைத் தளரவிடாது வளர்க்கவும் வேண்டும்.

நமது நாட்டின் உயர்நிலைப் பாட ஏற்பாட்டினைப் பல்லாண்டுகளாகக் குறை கூறியுள்ளோம். அஃது ஒரு குறுகிய குறிக்கோளில் அமைந்துள்ளதென்றும், அதன் உள்ளுறையில் வேண்டுவனவும், வேண்டாதவனவும், பொருளற்றனவும், தேவையில்லனவும் ஆகிய பலவற்றைக் கொண்டுள்ளதென்றும், அது தனி ஆளுமையை வளர்க்க வழி அற்றதென்றும், செய்முறையில் கற்றலுக்கு வழி கோலாததென்றும் வெறும் ஏட்டுப் படிப்புக்கே உரியதென்றும், அது பல்வகைப் பிள்ளைகளுடைய திறனுக்கும் ஆற்றலுக்கும் ஏற்றதன்று என்றும், பல தொழில்களுக்கும் இன்று வளர்ந்து உலகத்தையே மாற்றி அமைக்கும் பொறியியல் தொழில் நுட்பங்களைப் பெறுவதற்குப் பயனற்றதென்றும், அது வெறும் தேர்வுகளையே குறிக்கோளாகக் கொண்டதென்றும் பலவாறு குறைகூறுகின்றனர். உயர்நிலைப் பள்ளிப் பாடத்திட்டம் கல்லூரிப் பாடத்திட்டத்தை இன்னும் பற்றிக் கொண்டிருக்கிறதா அல்லது தனித்துள்ளதா என்பதை ஆசிரிய மாணவர்கள் ஆய்ந்து அறியவேண்டும். 1958ஆம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் புதியதொரு திட்டம் வகுத்தளிக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தை நன்ருக அறிந்து அது குறுகிய நோக்குள்ளதா அல்லது கல்லூரிக் கல்விக்கு வழி கோலுவதா என்பவற்றை உயர்நிலைக் கல்விக் குறிக்கோள்களைக் கொண்டு சிந்திப்பது நல்லது. இந்தத் திட்டமுங்கூட ஒரோவழி கல்விச் சார்பு அற்றது என்று கருத இடமுண்டு. ஆயினும் இறுதித் தேர்வுகள் காரணமாகத் தேர்வுக் குறிக்கோள் கல்விப் பயன்களைப் பெற வொட்டாது தடுக்கின்றது. ஏட்டுப் படிப்பு குறைந்த பாடில்லை. பிள்ளைகளும் பெரும்பான்மையோர் ஏட்டுப் படிப்புக்குப் புதியவர்கள். அவர்கள் செயற்பாடுகளின் வழியாகத்தான் தமது அறிவைப் பெருக்கிக் கொள்ள இயலும். மேனுடுகள் பலவற்றுள் பிள்ளைகளுடைய கவர்ச்சி, அக்கறை, தகுதி ஆகியவற்றைப் பரந்த அளவில் அறிந்து அவர்களுடைய உடல், உள்ளம், உணர்வு, எழில், உவகை, சமூகப் பண்பு ஆகியவற்றைப் பரந்த அளவில் வளர்ப்பதற்கேற்பப் பாடத்திட்டங்கள் வகுக்கப் பெறுகின்றன. இவற்ருேடு வாழ்க்கைக் கல்வியும், அனுபவங்களும் அளித்து

அவர்கள் வாழ வழி கற்பிக்கிறார்கள். எனவே தனி ஒவ்வொரு பிள்ளையி னுடைய முழுத் திறமையை வளர்ப்பதற்குப் பரந்த நோக்குடைய பாடத் திட்டம் அமைக்கப் பெறுகிறது. ஆனால் ஒவ்வொரு பாடத் தலைப்பிலும் பொருள் பெருவாரியாகி மாணவர்களின் உள வளர்ச்சிக்கு மிக்கதாய்ப் பல்குவதனால் பல பாடங்களைப் படிக்கவேண்டிய கட்டாயமும் ஏற்படுகிறது. அப்பாடங்களின் ஒருமைப்பாட்டினை அறியாது தனித் தனியாகக் கற்பதால் உற்ற பயனைப் பெறாது அவற்றின் வாழ்க்கைத் தொடர்பினைப் புரிந்து கொள்ளாது பாட ஏடுகளை நெட்டுருச் செய்யும் புத்தகப் புழுக்களாக்கும் தன்மை உடையவை பாடத் திட்டங்கள் என்று குறைகூறுகிறார்கள். இக்குறைபாட்டினை நீக்க வரலாறு, நில நூல், ஆட்சி முறை, பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றின் சாரங் களைத் திரட்டிச் சமூக அறிவியல் என்ற ஒன்று புதிய திட்டங்களில் வகுக் கப்படுகின்றது. அங்ஙனமே இயற்கைச் சூழ்நிலையினை அறிவிக்கக் கூடிய அறிவியல், வேதிநூல், [1] நலப்பாடு, பயிர் நூல், உயிர் நூல், உடல் நூல் ஆகியவற்றைத் திரட்டிப் [2] பொது அறிவியல் என்ற தலைப்பில் அவற்றின் சாரத்தையும் ஒரு புதிய பாடமாக உண்டாக்கியுள்ளார்கள். இங்ஙனம் இணைக்கப் பெற்ற புதிய பாடங்களைக் கற்பிக்க புதிய முறைகள் வேண்டியதாகின்றன. இவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இணைத்த பாடங்களை மீண்டும் பிரித்துத் தனித்தனிப் புலமையை வற் புறுத்துவது கண்கூடு. இங்ஙனம் செய்வதால் பாடங்களின் சுமை பிள்ளைகளுக்கு மிகுகின்றது. பிள்ளைகள் இணைப்பின் பயனை இழக்க நேரிடுகிறது. தனித்தனிப் பகுதி ஆசிரியர் தனக்குற்ற பகுதியில் திளைக்க முயல்கின்றார். மாணாக்கனை மறந்து ஒழிகின்றார். அவனது உள்ள வளர்ச்சியை அறவே மறந்து விடுகின்றார். பாடத்தைக் கற்பிக்கின்றாரே யன்றி மாணாக்கனைப் பாடத்தையறிய வைக்கவில்லை. மாணாக்கனுடைய திகைப்பையும் அவரது ஆற்றல் மிகுதியால் அறிய விழைவதில்லை. இறுதியில் தேர்வு காரணமாக எல்லாப் படிப்பும் வினா விடை வடிவம் பெறுகின்றது; தேர்வுக்குப் பிறகு அனுபவத்தில் ஒட்டாத காரணத்தால் மறந்தொழிகின்றது. இங்ஙனம் நிகழ்வதற்குப் பாட ஏற்பாட்டினைக் குறைகூறுவதா என்று சிந்திக்க வேண்டும். எந்தப் பாடப் பொருளும் மாணவனுடைய அனுபவத்தை ஒட்டினா லன்றி, அதன் பயன் ஒட்டாது. பாட ஏற்பாட்டின் பகுதிகள் பிள்ளை களுடைய உணர்வினை வளர்க்க வேண்டும்—உள்ளத்தைத் தொட வேண்டும்—உடல் அனுபவம் தரவேண்டும். அல்லாக்கால் அவை பயனற்றவை. மற்றும் எதைக் கற்றாலும் அயர்வு, வெறுப்பு அல்லாது இன்பம் நிலவ வேண்டும். அத்தகைய அனுபவம் மாணவர்களுக்கு வாழ்வோடு ஒட்டியதாகும். அவர்களுடைய வாழ்க்கையை மிளிரச் செய்வதாகும். எனவே ஒவ்வொரு பாடத்திலும் பொருளற்ற பகுதிகளை

1. Hygiene 2. General Science

நீக்கிப் பிள்ளைகளுடைய விருப்பை வளர்க்கக்கூடிய பொருள்களை மட்டும் செயல்முறையில் கற்பிக்க வேண்டும். எவை பிள்ளைகளுக்கு விருப்பமுள்ளவை, இன்றியமையாதவை என்பவற்றைத் தனிப்பாடத் துறைப் புலமையாளர்கள் கூறுவதில் பயனில்லை. அவற்றை நல்லாசிரியர்களும் அவர்களுடைய மாணுக்கர்களுமே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். நல்ல பாட ஏற்பாடுகள் வகுப்பதற்கு ஒவ்வொரு மாநிலத்திலும் ஆசிரியக் கல்லூரிகளோடு இணைந்த பாட ஏற்பாட்டு ஆராய்ச்சிக் கழகங்கள் பணியாற்றினுல் அவை அப்போதைக்கப்போது சமூகத் தேவைகளுக்கு ஏற்பவும், பிள்ளைகளுடைய உளவளர்ச்சிக்கு ஒப்பவும் அறிவியல் முறையில் உள அளவியல் உதவிகொண்டு பயனுள்ள பணியாற்ற முடியும். எல்லாவற்றையும் இளம் பிள்ளைகள் கற்க வேண்டுமென்று பாடங்களைத் திணிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தம்முடைய உதவியின்றி அவற்றை அவர்களாகவே கற்றறிந்து கொள்ளும் வழிகளில் பயிற்சி தராது விடுகிருர்கள். எங்ஙனம் கற்பிப்பது என்பது ஒரு சிக்கல். மாணவர்கள் கசடறக் கற்கக்கூடிய வழிகளை வகைப்படுத்தி உதவுவது மற்ருெரு சிக்கல். இவ்விரண்டையும் அறிந்த ஆசிரியர்களே திறமையுள்ளவர்கள் என்பது கூருமலே விளங்கும். மாணவர்கள் கற்கும் முறைகளில் தேர்ச்சி பெற்ருல் அவர்கள் தமக்கு வேண்டியவற்றை ஆசிரியருடைய வழியில் கற்றுக்கொள்ள இயலும் அல்லவா? மேலும் தாய்மொழியில் கற்கும்போது எதையும் கற்றறிந்து கொள்ளுவதற்குத் தடையிராது அல்லவா? அன்று வேற்றுமொழியாகிய ஆங்கிலத்தில் கற்றகாலத்தில் உயர்நிலை அளவில் கற்றவை கடிது ஒழிந்தன. இன்று அத்தகைய அவலநிலை இல்லை. கற்ற அளவில் கற்றவையின் வாழ்க்கைப் பயன் உற்ருல் அந்த அளவின் அடிப்படையில் பேரறிவினைப் பெறமுடியும். அல்லாது கண்டவற்றை எல்லாம் திணித்துக்கொண்டால் அஃது உடலிலும், உள்ளத்திலும் ஒட்டாது நீங்கிவிடுகிறது. பிள்ளைகளின் பதினெரு வயதுக்கு அப்பால் அவர்களுக்கு வேற்றுமை காணப்படுகிறது என்று ஒரு சாராரும், பதின்மூன்று வயதுக்கு அப்பால் ஏற்படுகின்றது என்று மற்ருெரு சாராரும் கூறுகின்றனர். எதுவாயினும் பிள்ளைகளுக்குரிய பல வேற்றுமைகளுக்கு ஏற்றவாறு பாட ஏற்பாடு இடம் தரவேண்டியது முதன்மையானதொன்று. அவர்களுடைய திறன்களும் பலபடியாகக் காணப்படுவதால் அவற்றினை நன்ருக வளர்ப்பதற்குப் பாட ஏற்பாடு உதவவேண்டும். இங்கிலாந்து தேசத்தில் இத்திறன்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள். [1] நூல்களைக் கற்கும் திறன், [2] தொழில் திறன், [3] செயல் திறன் ஆகிய மூன்றிற்கும் முறையே [4] ஏட்டுப்பள்ளிக்கூடங்கள், [5] தொழிற் பள்ளிகள், [6] கைத்திறன்

1. Academic ability 2. Technical skill 3. Motor skill 4. Grammar School 5. Technical School 6. Secondary Modern School

அளிக்கும் பள்ளிகள் அங்கு உண்டு. இப்போது நமது நாட்டில் ஏட்டுப்பள்ளிகள், [1] பல்நோக்குப் பள்ளிகள், [2] பல்நோக்குப் பொறியியற் பள்ளிகள் ஆகியவை உள்ளன. முதல் வகைப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் கல்லூரிக் கல்வியினை நாடுகிறார்கள். இரண்டாவது மூன்றாவது பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தமது திறனுக்கு ஏற்ற துறைகளில் பயிற்சி பெறுகிறார்கள். சென்னை மாநிலத்தில் 1958ஆம் ஆண்டுத் திட்டத்தின்படி முதல் ஏழாண்டுகள் கல்வி எல்லாருக்கும் உரியவகையில் வெகு நல்ல முறையில் 'திருத்தி அமைக்கப் பெற்றுள்ளது. [3] மேல் உயர்நிலைக் கல்வி நான்கு தொடர்ந்த ஆண்டுகளுக்கென வகுக்கப்பட்டுள்ளது. மேல் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் ஏட்டுப் படிப்பையாவது அல்லது பல்தொழில் பிரிவில் ஏதாவது ஒன்றினை யாவது தமது விருப்பத்திற்கும் தகுதிக்கும் ஏற்ப ஓரளவு புதுக்கல்வி யோடு பெறலாம். அல்லது இறுதித் தேர்வுக்குப் பிறகு பல்தொழில் பள்ளிகளில் பயின்று ஒரு தொழிலில் திறமை பெறலாம். பதினொரு ஆண்டுகளுக்கு மேல் உயர்நிலை மாணவர்கள் அவர்களுடைய கவர்ச் சிக்கும், விருப்புக்கும் ஏற்பக் கல்லூரித் தகுதியைப் பெறுவதற்கு வழிகள் உண்டு. நமது நாட்டின் ஐந்தாண்டுத் திட்டங்களின் பலவகையான தேவைப்பாடுகள் உணரப்படுகின்றன. அவற்றை நிறைவு செய்யப் பல்வேறு பயிற்சிகள் இருபாலர்களுக்கும் அளிக்கப் பெறுகின்றன.

பாட ஏற்பாட்டின் அடிப்படைத் தத்துவம் :

பாட ஏற்பாடு மிகப் பரந்ததாக அமைதல் வேண்டும். அஃது அறிவு சார்ந்த உலகச் சூழ்நிலையைத் தன்னகத்தே கொண்டதன்றோ! அந்தந்த நாடுகளின் கல்விக் குறிக்கோள்களுக்கு ஏற்ப பாடங்கள் இடம் பெறுகின்றன. இப்பாடங்களின் வாயிலாகப் பிள்ளைகள் கல்விக் குறிக்கோள்களை எய்த வேண்டும். சமூக வாழ்க்கைக்கு உருவாக்கும் பாட ஏற்பாடு என்றால் தனித்த முறையில் ஒவ்வொரு பிள்ளையினுடைய வளர்ச்சி புறக்கணிக்கப்பெறும். எனவே பாட ஏற்பாடு தனித் தன்மையையும், சமூகத்தன்மையையும் அளித்து உதவவேண்டும். வெறும் பிழைப்புக்காக வகுக்கப்பெறும் பாடத்திட்டம் குறுகிய மனப் பான்மையை உண்டுபண்ணும். மேலும் எல்லாவற்றையும் கற்றுக் கொள்ளுவது இயலாத ஒன்று. பொதுப்பட அடிப்படை அறிவினை பெறுவதற்குப் பாட ஏற்பாடு வழிகோலவேண்டும்.

பாட ஏற்பாடு ஒரே வகையாக அமைதல் சரியன்று. பாட ஏற்பாட்டுக்குப் பிள்ளைகளா, அல்லது பிள்ளைகளுக்கு ஏற்ற பாட ஏற்பாடா என்ற வினாக்களைப் பாட ஏற்பட்டினர் மனத்தில் ஆராய்தல்

1. Multipurpose School 1. Polytechnics 3. Higher Secondary education

நலம். எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரே வகையான பாட ஏற்பாடென்றால் அது பிள்ளைகளை வற்புறுத்தும் வழியாகும். பலதிறப்பட்ட பிள்ளைகளுக்குப் பலவகையான பாட ஏற்பாடுகள் வேண்டும். மாறுபட்ட சூழ்நிலை உள்ளவர்களுக்கு அவற்றிற்கேற்ற பாட ஏற்பாடு அமைதல் நல்லது. நகரில் உள்ள பள்ளிகள், தொழிற்சாலைகள் அருகில் உள்ள பள்ளிகள், உழவுத்தொழில் அருகில் உள்ள பள்ளிகள் ஆக ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக அந்தந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப அங்குள்ள பிள்ளைகளுக்குப் பாட அமைப்புக்கள் வேண்டுமென்று கருதுவர் சிலர். இதைத்தடுத்து எல்லாப் பிள்ளைகளுக்கும் பொதுப்பட கல்வித்திட்டம் அமைக்க வேண்டும் என்று கருதுவர் சிலர். ஆனால் ஒரே பாடத் திட்டமாயினும் அது பல சூழ்நிலைகளுக்கு ஏற்ப நெகிழ்வுறுமாறு அமைதல் நன்று. அந்தந்தச் சூழ்நிலைக்கேற்ப ஆசிரியர்கள் முறைகளை மாற்றி பொருத்தப்பாடு செய்வதும் நல்லது.

மனித வாழ்க்கை எப்போதும் முன்னேற்றப் பாதையில் செல்வதைத்தான் நாம் வரலாற்றில் காண்கிறோம். பாட ஏற்பாடு வாழ்க்கையினையே சித்தரிப்பதென்றால் முன்னேற்றத்தையும், பிள்ளைகள் அறிந்துகொள்ளப் பாட ஏற்பாடு இடம் தரவேண்டும். வாழ்க்கையில் வேண்டாதனவற்றை நீக்கவும், வேண்டியவற்றைச் சேர்த்துக் கொள்ளவும் வழி இருக்க வேண்டும். ஆனால் ஒரு சிலர் பழமையெனில் அதை நீக்கக்கூடாதென்று வாதாடுகின்றனர். ஒரு சிலர் பழமை பண்பாடுடையதன்று என்று கருதிப் புதியனவற்றையே வரவேற்கிறார்கள்.

> "பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல கால வகையி னானே"

என்பதனை மறந்துவிடுகின்றனர். நமது பள்ளிகள் சமூகத்தில் நுழையும் புதுமையினை மிக விழிப்பாகக் கவனித்துப் பாட ஏற்பாட்டில் அந்தந்தப் பிரிவில் இணைத்துக் கொள்ளுவதே சிறந்த முறையாகும்.

எந்தப் பாட ஏற்பாட்டிலும் பிள்ளைகளுடைய [1] ஒய்வு நேரத்திற்கு வேண்டிய திட்டத்தையும் இணைக்க வேண்டும். பிள்ளைகள் ஒய்வு நேரங்களில் தமக்கு விருப்பமான துறைகளில் ஈடுபாடு கொள்ளலாம். இலக்கிய மனத்தினர் இலக்கியத்திலும், பருக்கலைகள், நுண்கலைகள் ஆகியவற்றையும் தமது விருப்பத்திற்கு ஏற்றவாறு கொண்டு ஒய்வு நேரங்களைப் பயனுறக் கழிக்கலாம். இளமையிலிருந்து நல்ல முறையில் ஒய்வு நேரங்களைக் கழிக்கப் பழகிக்கொள்ளும் பிள்ளைகள் மனிதப் பருவத்தில் நல்லவர்களாக வாழ்க்கையை நடத்துவார்கள் என்பது திண்ணம். மாணவர்களுக்கு ஒய்வு நேரம் மிகுதி. அதைப் பயனுறும் முறையில் கழிக்காது தீய முறைகளில் காலத்தை வீணாக்கினால் அவர்

1. Education for Leisure

களுடைய வாழ்க்கையே கெட்டுப்போகும். சமூகத்திலுங்கூட மக்களுடைய ஓய்வு நேரம் பயன்படாமல் வீணுகின்றது. மக்களை யும் ஈர்த்துப் பள்ளிகளில் அவர்களுடைய ஓய்வு நேரங்களுக்கு வழிகாட்டினுல் பள்ளிகளுக்கு அவர்கள் உதவி செய்வார்கள். ஒவ்வொரு பள்ளியும் [1] இனநிலையம் ஒன்றினை ஏற்படுத்திச் சேர்த்துக் கொள்ளலாம். இனநிலையத்தின் சார்பாக மாலை நேரங்களில் சமூகத் தினர் நூல் நிலையத்தில் வந்து படிக்கவும், படிப்பகத்தில் செய்தித்தாள் களிலிருந்து நாட்டின் நடப்பினை அறியவும் பள்ளியில் கைத்தொழில் கூடத்தில் கைத்தொழில் கற்றுக்கொள்ளவும் சமூகத்தாருக்கு உதவக் கூடிய பாட ஏற்பாடு பள்ளிக்கு நன்மை பயக்கும். பாட ஏற்பாடு என்ருல் வெறும் பள்ளிப்பாடங்களென்று கருதுவது தவறு. பாட ஏற்பாடு வாழ்க்கை முழுவதையும் தன்னகத்தே கொண்டது. மாணுக் கன் வகுப்பறையில் பெரும்பான்மை பெறுவது ஏட்டுப்படிப்பு. பள்ளி யின் நூல்நிலையம், அறிவியல் ஆய்வறை, கைத்தொழிற்சாலை, விளையாட்டிடம், பிள்ளைகளோடு பழகுதல், ஆசிரியரோடு பழகுதல், பலவகைப் பள்ளிப் பணிகள், குடிமைப் பயிற்சித் திட்டத்தில் பங்கு பெறுதல் ஆகிய எல்லாம் மாணவர்களுடைய பள்ளி வாழ்க்கையின் பல கூறுகளாகையாலும், அவையெல்லாம் அவர்களுடைய தனித்தன்மையை வளர்க்கக்கூடியவையாகையாலும் இவை யாவுமே பாட ஏற்பாடெனக் கருதுதல் மிகையாகாது. பிள்ளைகள் எல்லாருக்கும் இன்றியமையாத அறிவும், ஒருசில திறன்களும், முருகுணர்ச்சியும் வேண்டற்பாலன. அவை பாட ஏற்பாட்டில் கட்டாயமாக இடம் பெறவேண்டும். அவற் றினை மூல பாடங்களென்று முன்னரே குறித்துள்ளோம். அவற்றை ஏராளமாகத் திணிக்க வேண்டியதில்லை. அவற்றின் சாரங்களை மட்டும் நன்ருக அனுபவத்தில் ஒட்டி அறிந்துகொள்ளும் வகையில் கற்பித்தால் போதும். பாட ஏற்பாடு சமூக வாழ்க்கையோடு ஒட்டியதாக அமைந்தா லன்றி அதன் பொருள் நுகர்வு உண்டாகாது. வாழ்க்கையில் மக்கள் பலவற்றை இயற்றி இன்பம் பெறுகிருர்கள். எங்கும் ஆக்கக் காட்சி. அத்தகைய படைப்பீடுபாட்டிற்குப் பள்ளிகளில் செயல்முறைகள் அமையவேண்டும். பிள்ளைகள் பள்ளிக்கும் வாழ்க்கைக்கும் வேறுபாடு காணுதிருக்கவேண்டும். அங்ஙனமே சமூக மக்களும், பள்ளி தமது வாழ்க்கையோடு பொருந்தியதென்று உணரவேண்டும். [2] ட்ரூமென் கெல்லி என்பார் எதிர்காலத்துக்கு வேண்டியதை நோக்கிப் பாட ஏற்பாடு அமையவேண்டும் என்ருர். அதாவது எதிர்காலத்தில் அண்மையிலோ, சேய்மையிலோ மாணவர்களுக்கு உதவக்கூடிய வற்றை முற்கூட்டியே பாட ஏற்பாடக அமைத்துக் கொள்ளுதலே நலம் என்று கருதினுர். [3] கில் பேட்ரிக் என்பார் வெறும் பழமையையே கற்றுக் கொடுக்காது நீக்கி அன்ருட மாணவர்களுக்கு அல்லது புதிய

1. Community centre 2. Truman kelly 3. Kilpatrick.

வர்களுக்கு இன்றியமையாத தேவைப்பாட்டினைக் கருதிப் பாட ஏற்பாடு அமையவேண்டும் என்று கருதினர்.

எதுவாயினும் அறிவியல் முறையில் பாட ஏற்பாடு வகுக்கப் பெறவேண்டியது மிகமிகத் தேவை. எதிர் காலத்திய தேவைப்பாடுகளை நன்றாக மதிப்பிடுதலும் வேண்டும். ஒரு புதிய பாடத்தைச் சேர்த்துக் கொள்வதென்றால் அதன் எதிர்காலத்துப் பயன் யாதென்று ஆராய்தல் நல்லது. எதனையும் சேர்த்துக்கொள்ளுவதற்கு முன் நன்கு ஆராய்தல் நலம். எந்தப் பாடத்தின் வழியாகவும் எதை வற்புறுத்திக் கற்றுக் கொடுக்க நினைக்கின்றோம் என்பதனை அறுதியிட வேண்டும். பொருள் முதன்மைத்தா அல்லது அஃது உள்ளத்திற்கு அளிக்கும் பயிற்சி முதன்மைத்தா என்பதனை அறுதியிடவேண்டும். எனவே ஒவ்வொரு பாடத்தின் நோக்கங்களும், குறிக்கோள்களும் யாவை என்பதனை உணர்த்துவது சிறந்தது. ஒவ்வொரு பாடத்தின் வாயிலாகவும் பாட ஆசிரியர்கள் கூறும் பயன்களைப் பெறுவதற்கு இயலுமா என்பதனையும் சோதனை செய்யவேண்டும். எடுத்துக்காட்டாக [1] ரூஸோ என்ற கல்விப் பேரறிஞர் [2] எமிலிக்கு உடற்பயிற்சி வழியாக அறிவுவளர்ச்சி அளிக்க முயன்றார். இற்றை நாளில் உடற்பயிற்சி அறிவுத்திறனை வளர்ப்பதோடு அறப் பண்புகளையும் பெருக்கம் செய்யுமென்று கருதுகிறார். [3] பெர்சி நன் என்பார் பள்ளிகளைப் பற்றிப் பொதுவாகப் பேசும்போது அவை அறிவை மட்டும் கற்றுக்கொள்ளும் இடமல்ல வென்றும் அவை பிள்ளைகளைப் பல செயல்முறைகளில் ஈடுபாடு கொள்ளுவதற்கு வேண்டிய ஒழுங்குத் திட்டத்தைப் பயிற்சி மூலம் அளிக்கும் கூடமென்றும் வற்புறுத்துகிறார். இதை அறிவதற்கு இரண்டு வகைப் பள்ளிகளையும் நன்றாகக் கூர்ந்து கவனிக்கவேண்டும். இவ்விரு வகைப் பள்ளிகளில் நிகழ்த்திய ஆராய்ச்சிகளில் பிள்ளைகள் பெரும்பான்மை வெறும் ஏட்டுப் படிப்பைக் காட்டிலும் செயல் முறையிலேயே விருப்பமும் வெற்றியும் காட்டினர். பிள்ளைகள் குழுக்களாகக் கூடித் தமக்கு விருப்பமுள்ள பாடங்களை வகுப்பது நல்லது எனக் கூறியுள்ளோம். அங்ஙனம் பிள்ளைகள் கூடும்போது ஒவ்வொரு குழுவின் உறுப்பினர்கள் எல்லாரும் ஒரு மனதாக விரும்பும் பாடத்தினை முடிவுசெய்து ஏற்காது குழுவில் உள்ள வாய்த்திறன் வாய்ந்த பிள்ளைகள் எடுத்துக் கூறும் விருப்பமே குழுவின் விருப்பமாக இணக்கம் பெறுகிறது. அமெரிக்க நாட்டில் இன்று இருவகைப் பள்ளிகள் ஒன்றுக்கொன்று முரணாக நடை பெறுகின்றன. ஒரு வகை பழையவழிப் பள்ளிகள். மற்றொரு வகை [4] முற்போக்குப் பள்ளிகள். பழைய வழிப் பள்ளிகளில் ஒழுக்கம் கட்டுப் பாடு. முற்போக்குப் பள்ளிகளில் பிள்ளைகளுடைய விருப்பமே ஒழுக்கம். அவர்களை யாரும் கட்டுப்படுத்துவார் இலர். இவ்விரண்டின் பாட

---

1. Rousseau 2. Emile 3. Percy Nunn 4. Progressive Schools

ஏற்பாட்டின் நடைமுறைப் பயன்களை ஆராய்தல் பயனுடைத்தாம். பாட ஏற்பாட்டினை ஆராய்வதென்றே ஒரு பணி உண்டு. பாட ஏற்பாட்டு ஆராய்ச்சி என்றால் அஃது ஆசிரியருடைய ஆசிரியத்தையும் மதிப்பிடுதலாம். ஆராய்ச்சி நடைபெறும் போது ஆசிரியர்கள் மிக விழிப்போடு பணியாற்றுகிறார்கள். இந்த ஊக்கமே ஆராய்ச்சி நல்கும் பெரும் பயனாகும். எனவே நிலைத்த பாட ஏற்பாடு மாணக்கர்களுக்கு நன்மை பயக்காது. மாறுதல்கள் பெறும் இன்றைய உலகத்தில் பாட ஏற்பாடு புதிய மதிப்பீடு பெறவேண்டும். மாணவர்களும், பாட ஏற்பாடும் வேறு என்று கொள்ளுதல் கூடாது. மாணவர்களைப் புறக் கணித்துப் பாடத்தை மட்டும் ஏற்றுபவர்கள் பாடப் பித்தர்கள். மாணவர்களை மையமாகக் கொள்ளுவதே உளநூல் முறை. ஆசிரியருக்கு மாணவர்களும் பாடமும் பிரிக்க முடியாதவை. ஆசிரியர் பாடத்தில் தேர்ச்சி பெறவேண்டியதோடு மாணவர்கள்பால் அன்பும், இரக்கமும் காட்டவேண்டும். ஒருவகைப் பள்ளிகள் பிள்ளைகளை எப் போதும் கண்காணித்தும், வழி காட்டியும் அடக்கு முறை கையாண்டும் நடைபெறும். மற்றும் சில பள்ளிகளில் பிள்ளைகளுக்கு உரிமையும் தாம் தொடங்காற்றலும் அளிக்கப் பெறுகின்றன. ஒருவகைப் பள்ளிகள் பழமையையே போற்றுகின்றன; கட்டுப்பாட்டினை வற்புறுத்துகின்றன. மற்றொரு வகைப் பள்ளிகள் பிள்ளைகளிடையே எழும் ஆற்றலுக்கு இடம் தருகின்றன; புதுமை, மாறுபாடு, முற்போக்கு இவை ஊக்கந் தருபவை யாகின்றன. எந்தப் பள்ளிகளில் கடமைகளை வற்புறுத்தல் அதிகப்படு கிறதோ, அவற்றில் கொடுங்கோன்மையும் பெருகுகிறதென்றும் பிள்ளை களின் தனித்தன்மை குன்றுகிறதென்றும் கூறுப. இந்தச் சிக்கலுக்குக் காரணம் பிள்ளைகளுடைய அனுபவத்திற்கும் கற்பிக்கும் பாடங்களின் பொருளுக்கும் இடையில் உள்ள வேற்றுமையே ஆகும். பிள்ளைகள் தமது அனுபவத்தை ஒட்டிய பாடங்களை விரும்புகின்றனர். மேலும் அவர்கள் பாடங்களில், தமது ஊக்கங்களும், கவர்ச்சிகளும், மனப் பான்மைகளும் இயைபு பெற்றால் கவர்ச்சி மிகும். எனவே ஆசிரியர்கள் இவற்றினைப் பிள்ளைகளோடு ஒட்டி இடைவெளி ஏற்படாத படி பாட ஏற்பாட்டினை அமைப்பதே சிறந்த முறையாகும். பாடப் பொருள்கள் வேறு, பிள்ளைகளின் அனுபவங்கள் வேறு என்று கருதுவது தவறு. பாடப் பொருள்கள் மாற்றி அமைக்க முடியாதவை அல்ல. பிள்ளைகளுடைய அனுபவங்கள் வளர்பவை, நெகிழ்வுள்ளவை. இவை இரண்டும் ஒரே செயல்முறையின் இரு முனைகள். ஒரு கோட் டிற்கு இரண்டு முனைகள் என்றாலும் பொருந்தும். இரண்டு முனை களும் ஒன்றாகச் சேர்வதே கற்றலும் கற்பித்தலும் இரண்டறக் கலக்கும் நிலை. கற்பித்தல் வேறு கற்றல் வேறு என்று காணறியா நிலை. கற்பிக்கும் நிலை அதோடு கலந்து உறவாடும் நிலை. இவை இரண்டை யும் மாறுகோளாகக் கொள்ளுவது கல்வியின் இடர்ப்பாட்டு நிலை.

V

பாட ஏற்பாட்டில் அடங்கிய பாடங்கள் கல்வியாளர் தம் அறிவுத் திறனால் தொகுக்கப் பெற்றவை. ஒவ்வொரு துறையும் அவர்கள் தனித்து ஆராய்ச்சி செய்வதற்குப் பகுத்துப் பகுத்துக் காணும் காட்சி. சிறந்த அறிவாளி ஒவ்வொரு பகுதியையும் தனது அறிவுத் திறனுக்கு உட்படுத்தி ஆய்வு செய்வது அறிவுநிலை. அறிவியல் நூல்களில் இவற்றின் பாகுபாடுகளின் உச்சநிலை காணலாம். ஆனால் மாணவர்களுடைய அளவில், அவற்றைத் தேவைப்பாடுகள், பெறும் வழிகள் ஆகிய இரண்டு கூறுகளில்தான் காணவேண்டும். அங்ஙனம் தேவைப்பாடுகளை நிறைவு செய்யும்போது சிக்கல்கள் எழுந்தால் தடையின்றி அவற்றை ஆராய்ந்தறியலாம். ஆனால் மாணவர்கள் தாம் பெறும் அறிவினைப் பயன்படுத்த அறிந்து கொள்ளுவதே வேண்டற்பாலது. ஒவ்வொரு சிக்கலும் உற்றதொரு வாழ்க்கைச் சிக்கலேயன்றி தனித்ததொன்றன்று. கல்வியின் குறிக்கோள்களைப் பிள்ளைகள் மீது வற்புறுத்துவதைக் காட்டிலும் பிள்ளைகள்பால் கல்வியை வற்புறுத்தலாம். குறிக்கோள்களை எய்துவதற்குப் பிள்ளைகளுடைய உள்ளம் முற்றியதன்று. மாணவர்கள் தமது கல்வி அனுபவத்தால் உண்மையைக் காணவேண்டுமே அன்றி உண்மைகளைக் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை.

பிள்ளைகளுடைய அனுபவங்களை ஒட்டிய பாட ஏற்பாடு ஒருமைப்பாடின்றிச் சிதறும் என்று கருதுவதும் உண்டு. சிறுசிறு அனுபவங்களாக இருந்தால் அவை சிதறும். அதனால் பாடங்களைப் பெரும்பகுதிகளாகப் பிரித்து அவற்றைப் பிள்ளைகளுடைய அனுபவங்களோடு ஒட்டுவது நல்லது. அனுபவங்களை ஒட்டிய பாடஏற்பாடு அனுபவங்கள் அற்ற தனித்தனிப் பாடப் பகுதிகளைக் காட்டிலும் என்றும் சிறந்தது. சிறிய அனுபவங்கள் ஆயினும் அவை ஒன்றோடொன்று ஒட்டிய அனுபவத் திரளாகும். பாடங்களின் பொருள்களை [1] இணைத்து இணைத்து அவற்றின் பல ஒற்றுமைகளைக் காட்ட எடுத்துக்கொள்ளும் முயற்சிகளெல்லாம், மாணவர் அனுபவங்களை ஒன்று திரட்டுவதற்கேயாகும். ஒரு தனிப் பாடத்தின் பொருள்கள் [2] அளவை ஒழுங்கில் தொகுக்கப் பெற்றவையாயினும் அவை பிள்ளைகளுடைய அனுபவங்களோடு ஒட்டியவையாகா.

பாட ஏற்பாடு அமைக்கும் கல்வியாளர்கள் தனித்தனிப் பாடங்களின் பொருள்களைக் காட்டிலும் மாணவர்கள் தாமாகவே பொருள்களைக் கண்டறிந்து தொகுக்கும் திறனையும் அதனைச் செயல்படுத்தும் அறிவையும் மேலாகக் கருதுகிறார்கள். எல்லாப் பொருள்களையும் ஆசிரியர் வழங்கவேண்டியதில்லை என்பது அவர்கள் கூற்று. இது சிறந்ததே. ஏனென்றால் எல்லாப் பாடங்களையும், எல்லாப் பொருள்

1. Integration 2. Logical order

களையும் ஆசிரியர் பால் மட்டுமே அறியத் துணிவது அறியாமை; அருமையுங்கூட. ஆசிரியன் பின்னணியில் வழிகாட்டியாகத்தான் விளங்க முடியுமே அன்றி முன்னணியில் தேரோட்டியாக நின்று பிள்ளைகளின் கல்வித் தேரை ஓட்டிச் செல்பவன் அல்லன். எனவே தாமாகவே கற்கும் திறனைப் பிள்ளைகள் ஆசிரிய உதவியைக் கொண்டு அறிந்து கொள்ளுதல் கடன். அந்த நிலையில் வள்ளுவத்தின் வாய்மைக்கு ஒப்ப

> " எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு."
> " எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு."

ஆகிய இரண்டும் உண்மையாகும். ஆனால் பாடப் பொருள்களைக் கற்க வேண்டாவோ?

பெரும்பாலும் பள்ளிகள் பெருஞ் சுமைப் பாடங்களைப் பிள்ளைகள் மீது சுமத்தி அவற்றைக் கற்கக் கட்டளை இடுகின்றன. பொருள் அல்லவற்றையும் பொருளாக மாணவர்கள் பொருட்படுத்திப் பொருள் மயமாக்கின்றனர்கள். அவர்கள் தாமாகவே பொருள்களை அறியும் ஆற்றல் பெறுவதற்கு ஊக்கமற்றுவிடுகிறார்கள். ஆனால் ஒரு சில பள்ளிகள் சிறந்த தேவையானவற்றை மட்டும் பொறுக்கி எடுத்துத் தருகின்றன. அல்லது அவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்படிப்புக்கு வேண்டியவற்றை மட்டும் அளிக்கின்றன. உதாரணமாக ஐந்து வயதில் ஒரு குழந்தையைத் திவாகர நூலை நெட்டுருப் போடச் சொன்னால் அது மிகவும் கொடுமையாகும். நெட்டுருச் செய்தவை கருத்தாகாது எழுத்தாகும். ஆயிரத்தெட்டு மந்திரங்களைப் பொருளறியாது நெட்டுருச் செய்யும் பழக்கத்தோடு ஒத்ததாகும். வெறும் பொருளறிவையும் அதனோடு சார்ந்த திறனையும் அறிவாற்றலோடும், குணப் பண்புகளோடும், ஆளுமையோடும் சரிக்கட்டுவது சரியன்று. எந்தப் பாட ஏற்பாட்டிலும் பொருட் பொட்டலங்களை வழங்குவது கூடாது. மாணவர்கள் சிந்திக்கும் வழியிலும் அவர்களுடைய பழக்க வழக்கங்கள் நன்மையாக அமையவும், உடல் உள்ள வளர்ச்சி ஒருங்கே உண்டாகவும், நடத்தை மனப்பான்மைகள் சீரியமுறையில் சிறக்கவும் வகைவகுப்பதே ஏற்றது. ஆனால் இவற்றைத் தனித்தனியாகவோ மொத்தமாகவோ ஆசிரியர் தந்து உதவமுடியாது. இப்பண்புகள் எல்லாம் மனித உடலிலும், உள்ளத்திலும் ஊன்றியிருப்பவை. இவற்றைப் பெருக்க இயலாது. மாணவர்கள் சிந்தனை ஆற்றலை இயற்கையாகவே பெற்றுள்ளார்கள். ஆகவே ஆசிரியர்கள் தாங்கள்தான் சிந்தனை ஆற்றலை அளிக்கின்றோம் என்று கூறுவது பிழையாகும். எனவே இயற்கையாக உடலிலும், உள்ளத்திலும் அமைந்த பல குணங்களைத் தகுந்த சூழ்நிலைகளால் மாற்றவும், திருத்தவும் ஓரளவு முடியுமே அன்றி இல்லாத

தொன்றை இயற்ற இயலாது. கல்வியாளர்கள் மாணவர்களுடைய பண்பாடுகளை வளர்க்கிறோம் என்கிறார்கள். ஆசிரியர்கள் செய்வதெல்லாம் உற்ற சூழ்நிலைகளில் மாணவர்களுடைய துலங்கல்களை நல்ல முறையில் வெளிப்படுத்துமாறு செய்வதொன்றேயாகும். அதனால் நல்ல கருத்துக்கள், குறிக்கோள்கள், செயல்கள், கவர்ச்சிகள் ஆகியவற்றை இயற்கைச் சூழ்நிலையிலும் சமூகவட்டத்திலும் அமைத்து உதவுவதே ஆசிரியத்தின் அடிப்படையாகும்.

பாட ஏற்பாடுகளிற் பண்பாடுகளுக்கு இடமுண்டா என்பது ஒரு வினா இன்றைய பாடங்கள் எல்லாம் வெறும் கருத்துக்களையே வழங்குகின்றன. அவை திறன்களை அளித்து உதவுகின்றனவா? நிகழ்ச்சிகளைக் காரண காரியங்களோடு அறிவிக்கின்றனவா? அவற்றில் பெரும்பாலும் விரித்துக் கூறும் ஆற்றலும் சுருக்கிக் கூறும் திறனும் அளிக்கப் பெறுகின்றன. யாரால்? எப்போது? ஏன்? என்ற வினாக்களுக்கு விடை கூறப்படுகின்றன. எப்போதாகிலும் இது நல்லதா, தீயதா, ஏன், என்று வினவுவதில்லை. இதன் விடைகளெல்லாம் ஒவ்வொருவருடைய கருத்தைச் சார்ந்ததென்று கழறி விடுகிறார்கள். இதுவே குடியாட்சியின் உரிமைப் பண்பாடு என்றும் கருதலாம். குடியாட்சியிலும் ஒருமித்த கருத்து நல்லதாக இருந்தால் உடன்படுதல் நலம். தீயதாக இருந்தால் கடிதல் கடமை. கல்விநிலையம் ஒன்றே சமூகத்தில் நுழையும் பல பழக்க வழக்கங்களைச் சீர்தூக்கி மதிப்பிடும் தகுதி வாய்ந்தது. நல்லவையாயின் பொருட்படுத்தலாம். தீயவையாயின் பறைசாற்றத் தயங்கக் கூடாது. பண்பாடு என்பது எல்லாருக்கும் உடன்பாடாகும். எல்லாரும் ஒரு பண்பினை ஒப்புக் கொள்ளுவதென்றால் அதனுடைய மதிப்பு எல்லாரும் ஒத்துக்கொள்ளத் தக்கது. நல்ல பண்புகள் எல்லாம் சமூகத்தினை ஒழுங்கு படுத்துகின்றன. எனவே பாட ஏற்பாட்டின் அடிப்படையில் மதித்தற்குரிய வினைத் தூய்மை, வாய்மை, பண்புடைமை, சான்றாண்மை, அருளுடைமை, ஆகிய பல அடங்கியிருத்தல் இன்றியமையாத வொன்று.

நல்லதொரு பாட ஏற்பாட்டினை நல்குவதென்றல், வாழ்க்கையில் பல சிக்கல்களை ஆய்வீதற்கு ஒப்பாம். நமது பள்ளிகளில் நடைபெறுவன எல்லாம் பாட ஏற்பாட்டில் அடங்கியவை. பிள்ளைகள் பெறும் அனுபவங்களெல்லாம் பாட ஏற்பாட்டின் வழி வந்தவையே. பாட ஏற்பாடென்றால் வெறும் பாடங்களையும் அவை ஒவ்வொன்றின் திட்டங்களையும், வகுப்பதென்று கொள்ளுதல் தவறு. அதன் .அடிப்படையில் அறிவுசார் ஒழுங்கு முறையும் உண்டு. அது நாம் வாழும் உலகத்தினைச் சித்தரிப்பது; வருங்காலத்தினை வகுத்துதவுவது; வாழ்க்கையில் பங்கெடுத்துக்கொள்ள உதவுவது; ஒருமை எண்ணத்தையும் உயரற நெறியையும் எடுத்துக் காட்டுவது; உலகத்தோடு வாழ ஒப்புரவை உணர்த்துவது. ஆனால் பள்ளிகளைப் பொறுத்த வரையில் எவற்றைக் கற்பிப்பது என்ற வகையில் ஒருமைப்பாடு கிட்டாது. ஒரு சாரார்

வாழ்க்கைக் குறிக்கோளினை வற்புறுத்துவர். பிறிதொரு சாரார் பண்பாடென்பர். மற்ருெரு சாரார் உயர்நிலைக் கல்விக்கு அடிப்படை என்பர். நமது பள்ளிகளுக்கு மக்களாட்சியில் பெரும் பொறுப்பு உண்டு. கல்வி விரும்புபவர்களுக்கு இடம் அளித்தாக வேண்டும். எல்லாரையும் சேரவாரும் என்று சேர்த்துக் கொள்ளுவதால் கல்விப் பயனைப் பெரிது விழையும் சிலர் கும்பலில் காணப்படாது விடப்படலாம்; எனவே இரு சாராரையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பு உண்டு.

VI

உலகத்தை அறிவதற்கு மனிதன் உண்டாக்கிய கருவிகள் இரண்டு. அவை இரண்டும் உலகத்தை மாற்றி அமைக்கவும் வல்லன. அவற்றுள் ஒன்று எழுத்து. மற்ருென்று எண். "எண்ணெழுத் திகழேல்" என்பது நம்முடைய கோட்பாடு. "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப, இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்பதும் நாம் போற்றும் வள்ளுவர் குறிக்கோள். [1] மக்கள் இயல் நூல்களெல்லாம் எழுத்தின்பாற் பட்டவை. [2] இயற்கை அறிவியல் நூல்களெல்லாம் எண்ணின்பாற் பட்டவை. இயற்கை இயலின் திலகம் கணிதம். அது எண்ணலளவைக்கு வழி காட்டுவது. மக்களியல் நூல்களுக்குத் திலகம் போன்றது இலக்கியம். எல்லாப் பாடங்களும் இவ்விரண்டனுள் அடக்கம் பெறும். இவற்றின் வழியாகப் பிறந்த பாடங்களெல்லாம் பயனற்றவை அல்ல. ஆனல் அவை ஒவ்வொன்றினையும் கற்பிக்கும்போது எடுத்துக்கொள்ளும் நேரமும், உழைப்பும் எய்தும் கல்விப் பயனுக்கு மிக்கவை.

பாட ஏற்பாடு என்பதற்கும் பாடங்களின் வகைகள் என்பதற்கும் ஒரு சிலர் மாறுபாடு காணுமல் ஒன்ருகவே கணித்து வந்தனர். ஆனல் இரண்டிற்கும் வேறுபாடு உண்டென்று அறிய வேண்டும். பாட வகைகள் ஒவ்வொன்றும் தனித்தனியாகப் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் அனுபவங்களை வகைப்படுத்திக் கற்பித்தற்குரியவை. பாட ஏற்பாடு மொத்த அனுபவங்களைப் பொதுபடக் குறிக்கும். இப்பொருளினையே [3] முற்போக்குக் கல்வியாளர்கள் அடிப்படையாகக் கொண்டு தமது பாட ஏற்பாட்டில் வகுத்துக் கொண்டனர். அவர்கள் ஏற்பாடெல்லாம் பிள்ளைகளுடைய விருப்புக்களையும், தேவைகளையும் மூலமாகக் கொண்டவை. இவர்களுடைய கொள்கைக்கு மாருகக் கல்வியாளர்கள் ஒரு சிலர் பிள்ளைகளை மறந்துவிட்டுப் பாடங்களையே பெரிதாகக் கருதினர்கள்.

---

1. Humanities 2. Natural Sciences 3. Progressive Educators

கற்றற்குரியவை :

தொடக்கத்தில் மக்களியல் நூல்களையே பெரிதும் வருந்திக் கற்றதுண்டு. இதனால் மனிதன் உயர் பண்புகளைப் பெற முடியுமென்ற நம்பிக்கை வளர்ந்தது. இக்கல்வி வளர வளர மனிதனுடைய பகுத்தறிவு வளர்ந்து அவனுடைய விலங்குத் தன்மை எல்லாம் குறைவுற்றதென்று நம்பிக்கை நிலவிற்று. பகுத்தறிவுப் பாடங்கள் அறிவாற்றலைப் பெருக்கின. சாதாரணமாகப் புல நுகர்ச்சிக்கும், மெய்யுணர்வுக்கும் உரியவை ஒரு சிறிது மட்டமான கல்வியாகக் கருதப்பெற்றன. உள்ளத்தையும், உடலத்தையும் இருபிரிவாகக் கண்டவர்கள், புலன் உடலின் பாற்பட்டதென்றும், பகுத்தறிவு நூல்கள் உள்ளத்தைச் சார்ந்தவையென்றும் கருதினர். அறிவாற்றற் கல்வி உயர்ந்த வகுப்பினருக்கே உரியதாயிற்று. புலனுணர்வும், மெய்யின்பமும் கீழோருக்கென்று ஒதுக்கப் பெற்றன. மேலோருடைய கல்வி பயனைக் கருதிச் சிறப்படையவில்லை. ஆனால் அத்தகைய கல்வியின் பெருமதிப்புக் காரணமாக அதை மேலோர் விரும்பினர்கள். கீழோருடைய கல்வி பெரிதும் பயன் தருவதாயிற்று. அதன் பயன் காரணமாகவே பயனைக் கோரியவர்களும் அவர்களுடைய கல்வி ஏற்பாடும் குறைவுற்றனவாக மக்கள் கருதினர். மேலோர், கீழோர் என்ற மக்களுள் வேற்றுமை காரணத்தால் கல்வி ஏற்பாட்டிலுங்கூட மேலோர் கல்வி, கீழோர் கல்வி என்ற பாகுபாடு ஏற்பட்டது. ஆனால் மக்களுக்குள் வேற்றுமை எல்லாம் குடியாட்சி என்னும் புயலில் பறந்துகொண்டிருக்கிறது. மேலும் அறிவியல் வளர்ச்சியின் காரணமாகப் புலனுணர்ச்சியும், மெய்யறிவும் வெறும் அறிவாற்றலை வளர்க்கும் கல்வியைக் காட்டிலும் சிறந்ததாகக் கருதப் பெற்றன. சமூகத்திலுள்ள "எல்லோரும் ஓரினம்" என்ற கருத்து வளர வளரக் கல்வியில் உயர்வு தாழ்வு என்ற வேறுபாடும், மக்களுள் வேறுபாடும் மறையத் தொடங்கின. எல்லாக் கல்வியும் பயனுற்றது என்ற பாகுபாட்டினை எய்திற்று. பயனுற்றவையே எல்லாருக்கும் உரிய தென்ற கருத்தும் நிலவிற்று.

[1] ஹெர்பெர்ட் ஸ்பென்சர் என்ற ஆங்கிலேயப் பேரறிஞர் வழிவழியாக வந்த கல்வி ஏற்பாட்டில் உள்ள பாடங்களின் பயன்களை ஆராய்ந்து [2] கற்றற்குரியவை யாவை என்ற ஒரு நூலினை வெளியிட்டார். சமூகம் வாழ வகை செய்யக்கூடிய பாடங்களை நிரல் நிறையாக்கினர். ஒன்று—தன்னை ஆண்டு கொள்ளுவதற்குரிய செயற்பாடுகள். இரண்டு—நேர்முகமாக வாழ்க்கைத் தேவைப்பாடுகளைப் பெற்று மறைமுகமாகத் தன்னை ஆண்டு கொள்ளக்கூடிய செயற்பாடுகள். மூன்று—பிள்ளைகளை வளர்ப்பதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் பயன்படக்கூடிய செயற்பாடுகள். நான்கு—நல்ல முறையில் சமூக உறவும் அரசியல் தொடர்பும் அமைதற்குரிய செயற்பாடுகள். ஐந்து—வாழ்க்கையின்

1. Herbert Spencer 2. "What knowledge is of most worth"

ஒய்வு நேரத்துக்கும் தனது விருப்பு உணர்வுகளுக்கும் நிறைவு தரக் கூடிய பல்வகைச் செயற்பாடுகள். இங்ஙனம் பயனை நோக்கிய திட்டம் பழைய வழிக்கு முரணாயிற்று. இலக்கியக் கல்வி அன்று ஆட்சி செலுத்தியது. ஸ்பென்சரின் திட்டத்தில் அது கடைநிலையைப் பெற்றது. ஏனென்றால் உணர்வின்பாற் பட்டதெல்லாம் எழிற்கலையானதால் இன்ப நுகர்ச்சி வாழ்க்கையின் ஒய்வு நேரத்துக்கு ஒதுக்கப் பெற்றது. எனவே ஒய்வு நேரத்துக்குரிய ஈடுபாடு கல்வியின் ஒய்வு நேரப் பகுதிக்கே உரியதெனக் கொள்ளப்பெற்றது. [1]ஜார்ஜ் கோம்பே பாடங்களை மேலிருந்து கீழ் வரிசையாக நான்கு வகைப்படுத்தினார். ஒன்று—உடல் உறுப்பமைதி. இரண்டு—உள்ள அமைதி. மூன்று—பௌதிக அறிவியலோடு இணக்கம். நான்கு—சமூக அறிவியலில் தேற்றம். இங்ஙனம் வெளியிடப்பெற்ற புதிய வழி வகைகள் கல்வியாளரைச் சிந்தனையின்பாற் செலுத்தின. சிந்தனையும் அறிவியல் அடிப்படையில் நிகழ்ந்தது. கல்விப் பயன்களை வரையறை செய்தவர்கள் அவற்றின் தரத்தினையும் சிந்திக்கலானார்கள். அறிவியல் ஆற்றலில் ஆழ்ந்த சிந்தனைகளைக் கல்வியாளர்கள் தமக்குரியவை எனச் சிந்திக்கலானார்கள். கல்வி ஏற்பாட்டின் பாடங்களைப் பெருக்குவதும், வரிசைப்படுத்துவதும் தமது உரிமையென்று முன் வந்தார்கள். எனவே அமெரிக்க நாட்டில் அன்று கல்விப் பேரறிஞராக விளங்கிய [2] ஜான்டூயி தமது சிந்தனையைத் தமது நாட்டிற்கும், கல்வி உலகத்துக்கும் உதவியருளினார். அவருடைய [3] கருவிக் கொள்கையும், [4] பயன் வழி உண்மைக் கொள்கையும் கல்வி ஏற்பாட்டின் தரத்திற்குச் செல் வாக்களித்தன.

[5] ஃப்ரான்க்ளின் பாபிட் என்ற அமெரிக்கப் பேரறிஞர் கல்விப் பயனைக் கருதி தமது கருத்தினை வெளியிட்டார். அவருடைய இரண்டு கருத்துக்கள் ஒன்றுக்கொன்று மாறுபாடுற்றவை: முதலாவதாக மாணாக்கர்கள் பயிலும் கல்வியால் அவர்களுடைய உள்ளப் பெருக்கம், கூரிய திறனாய்வுத் திறன், நேரிய பண்புடைமை, ஒழுக்கம், மெய் யுணர்வு ஆகியவற்றைத் தமது அகத்தே வளர்த்துக்கொள்ளுதல். இரண்டாவதாகக் கல்வியின் பயன் உலக நடப்பில் சிறந்த முறையில் தம்மை நடாத்திக் கொள்ளுதல். இவ்விரண்டனுள் டூயியைப் பின் பற்றுபவராய்ப் பின்னதையே பாபிட் தனக்கு உடன்பாடென்று அறி வித்தார். இவருக்கு முன்னர் ஐக்கிய அமெரிக்காவின் தேசியக் கல்விக் கழகம் உயர்நிலைப் பாட ஏற்பாட்டினை ஆராய்ந்தபோது ஏழு முக்கிய மான பிரிவுகளை வற்புறுத்தி அவற்றுள் எவ்வகையான பாடங்களும் அடங்கியவை என்று திட்டம் விதித்தது. அவையாவன: அடிப் படைப் பாடங்கள், நல்ப்பாடு, குடும்பக்கலை, தொழிற்கல்வி, குடிமைப்

---

1. George Combe 2. John Dewey 3. Instrumentalism
4. Pragmatism 5. Franklin Bobbit

பயிற்சி, ஓய்வு நேரப் போக்கு, அறத்தொடு நிற்றல். இவற்றை ஒட்டி [1] பாபிட் பத்துப் பிரிவுகளைத் தமது பாட ஏற்பாட்டின் பகுதிகளாக எடுத்துக் காட்டினர். அவை: (1) மொழிப் பயிற்சி, (2) நலப்பாடு, (3) குடிமைப் பயிற்சி, (4) சமூகப் பழக்கம், (5) உள்ளத் திறன், (6) ஓய்வு நேரப் போக்கு, (7) சமய வழிபாடு, (8) பெற்ருேர் பொறுப்பு, (9) பொதுச் செயற்றிறன், (10) தொழிற்றிறன் என்பன. [2] சார்டர்ஸ் என்பார் கல்விக் குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு பாட ஏற்பாட்டை வகுக்க வேண்டும் என்ருர். ஒவ்வொரு குறிக்கோளினையும் தனித்தனியாகச் சிறு பிரிவுகளாக்கி அவை ஒவ்வொன்றையும் மேலும் மேலும் பகுத்து இறுதியில் மாணவர்கள் செயலாற்ற வேண்டிய தனித் தனிச் செயல்கள் வரையில் பாடங்களைப் பகுக்க இயலும் என்ருர். இங்ஙனம் பாட ஏற்பாடு மாணவர்களுடைய பலவகைத் தேவைகளுக்கு ஏற்றபடி அமைக்கலாம் என்பதாயிற்று. ஒவ்வொரு செயலிலும் தனித் திறனைப் பெறுவதும், தேர்வில் தவறிய மாணவர்களுடைய இடர்ப்பாடுகளை அறிந்து அவற்றைத் தவிர்க்கப் பாடங்களைப் பொறுக்கி எடுத்தலும், மற்றும் மாணவர்கள் வாழும் தனித்தனிச் சமூக ஒழுக்கத்தில் பயிற்சி அளித்தலும் அல்லது அவரவர்களுடைய தொழில் சூழ்நிலைக்கு ஏற்றபடி மாணவர்களுக்குப் பொருத்தப்பாட்டுப் பயிற்சி அளித்தலும் இன்னோரன்ன பிற தேவைகளை நிறைவேற்றலும் ஆகிய பல்வகை நெகிழ்வுகளைப் பாட ஏற்பாட பெற்றது.

இன்று அமெரிக்க நாட்டில் பாட ஏற்பாட்டின் சீர்திருத்தக்காரர்கள் ஒருசாரார் கருவிக் கொள்கையினைத் தழுவியவர் [3]. பிறிதொரு சாரர் [4] பயன்வழி உண்மைக் கொள்கையினர். இவர்கள் யாவரும் டூயி என்ற பேரறிஞருடைய கருத்துக்களால் உந்தப் பெற்றவர்கள். டூயி பாட ஏற்பாட்டமைப்பை வெகு எளிதாக்கிவிட்டார். கருவிக் கொள்கை என்பது தனிப்பட்ட முறையில் முன்னேற்பாடாக வரையறை செய்தல் பொருத்தமற்ற முறையென்று இடித்துரைப்பது. குறிக்கோள்கள் ஒவ்வொரு பாடத்தின் அளவினை வரையறுப்பதற்கு உதவுமேயன்றிப் பாடத்தையே உண்டாக்குவதற்கு உரியவல்ல என்ருர். பாட ஏற்பாடு அமைப்பும், அனுபவ அமைப்பும் ஒன்றே. எனவே பாட ஏற்பாடு பழைய அனுபவங்களை மாற்றியும், திருத்தியும் மாணுக்கனுடைய சிக்கல்களைத் தீர்க்கும் முறையில் அமைக்கப் பெறுவதே ஆகும். இங்ஙனம் டூயி மாணுக்கனுடைய கவர்ச்சிகள், தேவைகள் ஆகியவற்றைப் பெரிதாகக் கருதினர். மற்ருெரு குழுவினர் மாணுக்கருடைய திறமையை அடிப்படையாகக் கொண்டு பாடங்களை வகுக்க வேண்டும் என்ருர்கள். மாணுக்கர்களுடைய தேவைகள் என்று பொதுப்படக் கூறினல் வயதுக்கு

---

1. Bobbit—How to make a curriculum 2. W. Charters Natural Society for the study of Education XIV Year Book-Part I 3. Instrumentalists 4. Pragmatists

ஏற்றவாறு தேவைகளை வகைப்படுத்த வேண்டியதாகிறது. குருளையர்களுடைய தேவைகள் வேறு. காளையர்களுடைய தேவைகள் வேறு. இரு பிரிவினருடைய இன்றைய தேவைகள் ஒரு வகை. பிற்காலத்திய தேவைகள் மற்றொரு வகை. இவையெல்லாம் கற்றல் முறைகளோடு முரண்படக்கூடாது. இவையன்றிப் பாட ஏற்பாடு இன்றைய சமூகத்தின், குறைபாடுகள் உள்ள தேவைகளுக்கேற்ப அமைதல் வேண்டுமா அல்லது நாளைத் திருத்தம்பெறும் சமூகத்தின் குறிக்கோள்களைத் தழுவியதாக வேண்டுமா என்ற சிக்கல்கள் எழலாம்.

[1] வழி காட்டல் :

மாணுக்கருடைய வாழ்க்கை வளத்தைப் பெருக்குவதும் அனுபவங்களைத் திருத்துவதுமாகிய பொறுப்பு பள்ளியைச் சார்ந்ததாம். பாடங்களை இவற்றிற்கேற்ப வகுப்பது பள்ளியின் பொறுப்பாகும். எனவே பள்ளி ஒரு வழிகாட்டு நிலையமாக விளங்குகிறது. எல்லா அரசாங்கங்களும் மக்களாட்சிப் பொறுப்பில் ஒவ்வொரு குடிமகனுடைய தனிப்பட்ட திறனைக் கண்டறிந்து வளர்க்கும் வசதிகளைப் பள்ளிகளின் வாயிலாக வழங்க வழி வகுக்கின்றன. மாணவர்களிடையே ஒருவர்க்கொருவர் வேற்றுமையாகக் காணப்படுகிருர்கள். ஆகையால் அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாகக் கூர்ந்து நோக்கி அவரவர்களுடைய கவர்ச்சிகளையும், நாட்டங்களையும், தகுதியாற்றல்களையும் இவற்ருேடு இடர்ப்பாடுகளையும் அறிந்து குறிப்புக்கள் எழுத வேண்டியது தேவையாகிறது. இப்பணிக்கு உளநூல் பெரிதும் உதவுகிறது. எனவே கல்வித் துறையில் வழிகாட்டுதல் ஒரு நிலைத்த பாட ஏற்பாட்டின் தனிப் பெருமையைத் தகர்த்துவிட்டது. கல்வியாளர்கள் வழிகாட்டுதலையே முதன்மையாகக் கருதலானுர்கள். எனவே கல்வி என்ருலே வழிகாட்டுதல் என்ற பொருளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. வழிகாட்டுதல் என்ருல் பாடங்களைக் கற்றலில் வழி காட்டுதலோடு தனித்தனியாக ஒவ்வொரு மாணுக்கனுக்கும் ஆளுமை வளர்ச்சிக்கும் வழிகாட்டுதல் என்ற பெரும்பொருளும் பெற்றுவிட்டது. எல்லாக் கல்வியும் வாழ்க்கைப் பயனை அளிக்கவல்லதென்ருல் கல்வியின் அடிப்படையில் வழிகாட்டுதலே கல்விப் பணியாகிறது.

VII

பாடங்கள் :

மனித வாழ்க்கையில் பலப்பல கவர்ச்சிகள் உண்டு; இவை எல்லாம் பொதுவாக நோக்கும்போது மனிதப் பிறவியின் பலபடியான இயல்பூக்கங்களால் உண்டாக்கப் பெற்றவை. பல்வேறு கவர்ச்சிகள் குழவிப் பருவத்திலிருந்து பலப்பல செயல்களுக்குக் காரணமாகின்றன;

---

1. Guidance

பல்வேறு செயல்கள் தனித்தனிச் சிறப்பு பெறுகின்றன. அவற்றினை வகைப்படுத்தி நோக்கினல் அவையாவும் மனிதப் பிறவியின் தொன்று தொட்டு வளர்ச்சியுற்ற பழக்கங்களாகக் காணப்பெறும். உடல் வளர்ச்சிக்கான செயல்கள், உள வளர்ச்சிக்கான பாடுகள், அறிவுப் பெருக்கத்துக்கான முயற்சிகள், உணர்ச்சி பண்படையும் வழிகள், ஒருவரோடொருவர் மொழிவழியாக அளவளாவுதல், எண்களைப் பயன் படுத்தும் முறைகள், உவகை ஊட்டக்கூடிய இசை ஒலிகள், வீரத்தை வளர்க்கக்கூடிய பழைய வரலாறுகள், வழிவழியாக வந்த கைத்திறன் கள், கலைகள், சமயக் கொள்கைகள் இவையெல்லாம் ஒவ்வொரு குழவி யும் அறிந்து சமூகத்தில் தன்னைப் பொருத்திக்கொள்ள வேண்டியதற் கான இன்றியமையாத கூறுகளாம். இதனைச் சூழ்நிலைக்கு ஒப்ப மக்கள் இயற்றும் எதிர்வினை என்று கருதுகிறோம். சூழ்நிலைக் காட்சி களே பலவகைப் பாடங்களாகவும் அப்பாடங்கள் அமைந்த நிலையே பாடத் திட்டமாகவும் உருவெடுத்துள்ளன. பாடங்கள் வளர்ந்து கொண்டே வருகின்றன. இதற்குக் காரணம் மனிதனுடைய ஆற்றல் களின் வளர்ச்சியே ஆகும். ஆற்றல்களெல்லாம் செயல் முறைகளின் வழியாக வெளியாகின்றன. பயனுறும் செயல் முறைகள் மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகின்றன. அங்ஙனம் நன்மை பயக் கும் அனுபவங்கள் பெருகப்பெருக அவையெல்லாம் பாடங்களாக உருப் பெறுகின்றன. இன்று நம் பள்ளிகளில் பாடச்சுமை அதிகமாகி விட்ட தென்ற குரல் எழுகின்றது. இது பொருளற்ற கிளர்ச்சி. உலகம் முன் னேறிக் கொண்டுள்ளது. கடந்த ஐம்பது ஆண்டுகளில் மனிதனுடைய அறிவு அளவையிலும், குணத்திலும் பெற்றுள்ள முன்னேற்றம் உலகம் இதுவரையில் காணுதது. கல்வியாளர்கள் இதனை நன்கு அறிவார்கள். பாடங்களின் எண்ணிக்கை வளர்ச்சியை யாராலும் தடுக்க முடியாது. அனுபவத் திரள்களன்றோ இப்பாடங்கள்! அதனல் பாடங்களென்ற பீதி வேண்டாம். மாணவர்களுடைய தேவையினையும், கவர்ச்சியினை யும் அறிந்து சமூகத்தின் அனுபவங்களைத் தரச் செயல்முறைகளைக் கையாளுமாறு டூயி பெருமானுர் பறைசாற்றினர். ஒவ்வொரு பிள்ளை யும் எல்லாப் பாடங்களையும் கற்க வேண்டியதில்லை. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்றதனல் எல்லாப் பாடங்களுக் கும் கலைகளுக்கும் அடிப்படையான அவை இன்றியமையாதவை. இவற்றை எல்லாரும் பொதுவாகக் கற்க வேண்டும். இவை மூலப் பாடங்களுக்கும் மூலமாகும். இவற்றோடு ஒரு சில அனுபவங்கள் வேண்டற்பாலவை. அவைதான் பாடத்திட்டத்தின் உட்கருவாகும். அஃது இன்றி மாணவர்களுடைய சமூக உறவு முழுத்தன்மை பெற இயலாது. அதுவே குழவிப் பருவம் முதல் நமது பிள்ளைகளை உண்டி கொடுத்து வளர்ப்பதைப் போன்று வளர்க்கின்றது. மூலப்பாடங்கள் பாடங்களாக அமைப்புப் பெற்றாலும், அவை யாவும் செயற்பாடுகளாக அமைய வேண்டியவை. செயற்பாடுகள் உடல் உறுப்புக்கள் மட்டு

மன்றி உள்ளத்துக்கும் பயிற்சி அளிக்கக் கூடியவையாகும். எடுத்துக் காட்டாக (i) கணித நூல் நெட்டுருச் செய்வது அன்று. அது பல வகைப் பயிற்சியை அளிக்க வல்லது. அது பலவகைத் தந்திரங்களைப் போன்றது; பார்த்துப் பார்த்துப் பழக வேண்டியது; செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது. சிறந்த ஆசிரியர், மாணவர்களைக் கணிதக் கருத்துக்களைக் கண்ட அறிஞர்கள் கொண்ட ஆற்றலின் வழியே, அழைத்துச் செல்வர். அறிஞர்கள் செயல் முறைகளிலேயே உண்மைகளைக் கண்டார்கள். அவர்களைப் போன்று மாணவர்களும் உந்தப் பெறுதல் வேண்டும். உயர்நிலையில் மாணவர்கள் கணிதப் பேரறிஞர்கள் வழியில் தாம் கண்ட கூற்றுக்களை வகைப்படுத்திப் (ii) [2] பொது விதி காணுதல் வேண்டும். அங்ஙனமே கட்டுரை வரைதலும். கட்டுரை, ஆசிரியர் கட்டுப்பாட்டில், இணக்கம் இன்றி இன்னலோடு வரையும் உரை அன்று. அது மொழியாற்றலின் வெளியீடு. அஃது ஒரு கடிதமாக இருக்கலாம்; ஆனால் அஃது ஒரு [3] நோக்குடைத் தொழிற்பாடு. வகுப்பிதழுக்கு வரையும் கட்டுரையாக இருக்கலாம். அல்லது தனது நாட்குறிப்புப் புத்தகத்தில் குறிக்கும் பொருளாக இருக்கலாம்; எனவே செயல்முறை உடலையும் உள்ளத்தையும் பிணைத்த தொன்று. இதனாலன்றோ '[4] நன்' என்பார் எல்லாப் பாடங்களையும் விளையாட்டு முறையில் குழவிப் பருவத்தில் தொடங்கி வயது ஏற ஏற விளையாட்டு நீங்கி முறை முதிர்ந்து ஒழுக்கத்தினை ஒட்டவேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார்.

குழவிப் பள்ளிகள் :

நம் நாட்டில் பாட ஏற்பாடு தொடக்க நிலையிலிருந்து தொடங்குகிறது. ஐந்து வயது முடிந்த பிள்ளைகள் ஆறுவது வயதின் தொடக்கத்தில் தொடக்கநிலைப் பள்ளிகளில் சேருகின்றார்கள். தொடக்க நிலைக்கு முன் நிலை ஒன்று உண்டு. அந்நிலைப் பள்ளிகள் குழந்தை வளர்ப்புப் பள்ளிகள் ஆகும். அவை ஆங்கிலப் பெயர் பெற்று [5] கிண்டர் கார்ட்டன் பள்ளிகள் எனவும், [6] நர்ஸரிப் பள்ளிகள் எனவும், [7] மாண்டிசோரிப் பள்ளிகள் எனவும் சில வகைகளாகப் பணியாற்றுகின்றன. இப்பள்ளிகளில் இரண்டரை வயது முதல் ஆறு வயது வரை குழந்தைகள் சேர்க்கப் பெறுகின்றன. இக்குழந்தைகட்கும் பள்ளி வேண்டுமா என்றால் வேண்டுமென்றே கொள்ளவேண்டும். ஒரு குழந்தையை ஏழு வயது வரையில் வெகு விழிப்பாக வளர்க்க வேண்டும். அதன் பின்னர் யார் அதனை வளர்த்தாலும் கவலை இல்லை என்றார் ஒருவர் ஏன்? குழவிப் பருவத்தில் ஏற்படும் பழக்கம், நடத்தை,

---

(i) & (ii) Hughes and Hughes—Learning and Teaching
2. Generalisation 3. Purposive activity 4. Sir Percy Nunn.
5. Kindergarten 6. Nursery 7. Montessori

மனப்பான்மை, விருப்பு வெறுப்புக்கள் குழந்தைக்கு அடிப்படைப் பண்புகள் ஆகின்றன. எனவே அதனைப் பேணி அன்போடு அதன் உடலமும், உள்ளமும் நன்ருக வளரும்படி உதவிபுரிய வேண்டியது பெருங் கடமையாகும். அப்பருவத்தில் பாட ஏற்பாடு என்று ஒன்று இல்லை. ஆனல் அதன் கல்வி அதன் உடல் உள்ள வளர்ச்சியோடும் அதன் சிறு சமூக உறவோடும் ஒட்டியது. குழவிகளின் வளர்ச்சிக்கு இன்றியமையாத் தேவைப்பாடுகள் உள. அவற்றினை நிறைவு செய்வதும் குழந்தைகளுக்கு மகிழ்ச்சி அளிப்பதும் அவர்களுக்கான கல்வித் திட்டமாகும். குழந்தைகளின் தேவைப்பாடுகள் யாவை என்று அவற்றின் சமூகச் சூழ்நிலையை அறிந்தும், குழந்தைகளை அறிந்தும் உற்ற பொருத்தப் பாட்டினை உண்டாக்கி அமைப்பதே அந்நிலை ஆசிரியன்மாரின் கடமையாகும். நாள்தோறும் குழந்தைகளிடையே நல்ல பழக்கங்கள் வளர்கின்றனவா என்று ஆசிரியர் கண்காணிக்க வேண்டும். நல்லதொரு சூழ்நிலையில் பிள்ளைகளுடைய பிறவித் திறமைகள் வெளியாகும். இத்தகைய பள்ளிகள் குழந்தைகளுக்கு விளையாடுமிடத்தைப் போன்ற காட்சி யளித்தலே நல்லது. விளையாடுவதும் அதன் வழியாக உற்றதைக் கற்பதும், நல்ல பழக்க வழக்கங்களை வளர்த்துக் கொள்ளுதலும், உடலோம்புதலும், உறங்குதலும், சத்துள்ள உணவை உண்ணுதலும் ஆகிய இவற்றின் காட்சியே அன்றிக் குழந்தை வளர்ப்புப் பள்ளிகளில் பாட அகவைகள் என்றும், பாடங்கள் என்றும், ஆசிரியர் திணிப்பு என்றும், பிள்ளைகளுடைய துன்பம் என்றும், தண்டனை என்றும், வெகுமதி என்றும் நிலவும் பிறகாட்சிகளுக்கு அங்கு இடமில்லை. ஆறு வயது வரையில் குழந்தைகள் அவரவர்கள் இல்லங்களில் வளருவதே நல்லது. ஆனல் இல்லச் சூழ்நிலை தவறுமாயின் பள்ளிச் சூழ்நிலையே சிறந்தது. நமது நாட்டில் ஏழைகள் பெரும்பான்மை யோராகையால் அவர்களுடைய இல்லங்களில் குழந்தைகள் வளர்ப்புக்கேற்ற சூழ்நிலை காணல் அரிது. அதனல் நன்ருகப் பேசக் கற்றுக்கொள்ளவும், நல்ல முறையில் வளர்ப்புப் பெறவும் தனித்த பள்ளிகள் குழந்தைகளுக்கென வேண்டற்பாலன. கட்டாயக் கல்வி ஆறு வயது முதல் என்று வகுத்திருக்கும் நமது அரசினர் குழந்தைப் பருவத்துப் பயிற்சியினை வாளாவிட்டிருப்பதேனே? தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பது நமது முதுமொழி. ஆகையால் தொட்டிலை விட்டு இறங்கி ‘குறுகுறு’ நடந்து ‘துரு துரு’ வென்று அழித்தல் தொழிற் புரியும் நமது குழவிகளைப் பேணுதற் பொருட்டு வளர்ப்புப் பள்ளிகள் எண்ணற்றவை நமது நாடு நகரங்களில் வீதிகள்தோறும் வேண்டுமல்லவா?. இன்றுள்ள அவ்வகைப் பள்ளிகள் நமது மாநிலத்திலேயே ஓர் ஐம்பதுக்கு மேல் இல்லை என்று கொள்ளலாம். இவற்றுள் கிறித்தவமதக் குருமணிகள் நடத்தும் பள்ளிகள் மிகச் சிறந்தவை. ஆனல் இப்பள்ளிகளிலுள்ள பாட ஏற்பாட்டினைப் பற்றித் தொடக்க நிலைப்பள்ளி மாநிலக் குழுவினர்

அறிக்கையில் காணக்கூடிய கூற்று போற்றத்தக்கது. ஆனால் அது தவறெனக் குறிப்பிடும் நிலை கண்டிக்கத்தக்கது. என்னை? அங்குப் பிள்ளைகளுக்குப் பழக்கம் தருபவை எல்லாம் மேனாட்டுப் பண்பாடுகளி லும், அவற்றின் வரலாறுகள், நில நூல்கள், ஆங்கில மொழி ஆகியவை மட்டுமே. குழந்தைகளுடைய தாய் நாட்டைப் பற்றியும், அவர் களுடைய அண்மையில் உள்ள சூழ்நிலையைப் பற்றியும், பண்பாடு களைப் பற்றியும் அறியாது வளர்தல் நன்மையைப் பயக்காது அல்லவா? குழுவினருள் ஒருவர் ஒரு குழந்தையைச் சுட்டி, மூன்று பறவைகளின் பெயரை வினவ, அக்குழந்தை ஆங்கில நாட்டு மூன்று பறவைகளின் பெயர்களை வெகு எளிதாகக்[1] கூறிற்றும். ஆனால் அக்குழந்தையினைப் பள்ளிக்கு அருகே பறக்கும் காக்கையைத் தெரியுமா என்று கேட்ட போது அக்குழந்தை அதற்குக் கற்றுக் கொடுக்கவில்லை என்று பகர்ந் தது. அதனால் குழுவினர் இந்நிலைமையைப்பற்றி வன்மையாகக் கண்டித்துள்ளார்கள். குழந்தைகள் நேர்முகமாகப் பார்த்து கற்க இயலாதவற்றினைக் குழந்தைகளுடைய உள்ளத்தில் திணிப்பது தவறு என்று சுட்டியுள்ளார்கள். எனவே குழந்தை வளர்ப்புப் பள்ளிகள் நமது நாட்டுச் சூழ்நிலையினைக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டியது கடமையாகும். குழந்தைகளுக்குத் தேவை யாதென அறிந்து அளிக்கப் பெறும் அனுபவம் எதுவாயினும், அதுவே குழந்தை வளர்ப்புப் பள்ளியின் சிறந்த பாட ஏற்பாடாகும். குழந்தைப் பருவத் துக்கும் ஒருசில பள்ளிகளில் ஒருசில பாடங்கள் எனத் திட்டமிட்டுக் கொண்டு குழந்தைகளை வற்புறுத்துவது தவறாகும்.

தொடக்க நிலை:

ஆறு வயது முதல் பதினோரு வயது வரை கட்டாயக் கல்வித் திட்டம் பல ஆண்டுகளாக நமது நாடு முழுவதும் நடைமுறையில் இருந்துள்ளது. பின்னர் ஆறாண்டுகள்—நடுநிலைப் பள்ளியிலும் உயர்நிலைப் பள்ளியிலும்—படித்த பிறகு பள்ளி இறுதித் தேர்வு நடை பெறும். 1958ஆம் ஆண்டில் பாட ஏற்பாடு முழுவதும் மாற்றி அமைக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி பழைய பதினோராண்டுப் படிப்பு பத்தாண்டாகக் குறைக்கப் பெற்றுள்ளது. குறைக்கப் பெற் றுள்ள பத்தாண்டோடு கல்லூரிப் பகுதியிலிருந்து ஓராண்டினை உயர் நிலைக் கல்வியோடு இணைத்துக் கல்லூரிக் கல்வியை நான்காண்டுகளுக் குப் பதிலாக மூன்றாண்டுப் பட்டப் படிப்பாக மாற்றி மொத்தப் பள்ளிப் படிப்பினைப் பதினோராண்டுகளாக ஆக்கி உள்ளார்கள். பதினோராண்டுப் பள்ளிப் படிப்பு மேல் உயர்நிலைக் கல்வி எனப் பெயர் பெற்றது. இதனை இரு பிரிவுகளாக்கி முதல் ஏழு ஆண்டுகள் தொடர்ந்த தொடக்கநிலைக்

1. The birds named were: Nightingale, Sparrow, and Robin.

கல்வியாகவும், பின்னைய நான்காண்டுகள் மேல் உயர்நிலைக் கல்விப் பிரிவாகவும் வகுக்கப் பெற்றுள்ளது. இவ்விரண்டு பிரிவுகளுக்கும் ஏற்ற முறையில் பாட ஏற்பாடு அரசாங்கம் செய்துள்ளது. இப்பாட ஏற்பாட்டுக்கு இணையாக ஆதாரக் கல்விப் பாட ஏற்பாடும் நடைமுறையில் உள்ளது. இதன் பாட ஏற்பாடும் முதல் ஏழாண்டுகள் ஒரு பிரிவாகவும், கடை நான்காண்டுகள் ஒரு பிரிவாகவும் அமைக்கப் பெற்றுள்ளது.

தொடக்க நிலைப் பள்ளிக்கான பாட ஏற்பாடுகள் பொதுவாகப் பல பாடங்களைத் தம்மகத்தே கொள்ளுகின்றன. அனுபவங்களின் பெயர்களெல்லாம், பாடங்களின் பெயர்களாகின்றன. இதனால் பாட ஏற்பாடு நெருக்கமானதென்றும் சுமை உள்ளதென்றும் கூறக் கேட்கின்றோம். பாட ஏற்பாட்டினர் தொடக்க நிலைக் கல்வியில் பாட ஏற்பாட்டின் குறிக்கோள்களை நழுவவிடலாகாது. எவ்வளவுதான் கல்விக் கருத்துக்கள் வளர்ந்தாலும் வழிவழி வந்த திட்டங்கள், புதிய வழியில் பாடங்களை அமைப்பதைத் தடுக்கின்றன. தொடக்க நிலைப் பள்ளி குருவையர்களுக்குரியது. நகர்ப் புறமாக இருந்தால் ஒரு சிறிய சமூகத்தினருடைய குழந்தைகள் அங்குக் கல்வி கற்க வருகின்றார்கள். ஆசிரியர் அவர்களுடைய அனுபவத்தைக் குடும்ப எல்லைக்கு அப்பால் விரிவு பெறச் செய்தல் வேண்டும். இஃதன்றி மக்கள் வாழ்க்கையில் பெற வேண்டிய இரு திறன்கள் இப் பருவத்திலேயே பெறவேண்டும். ஒன்று சிந்தனையாற்றல், மற்றொன்று உள்ளத்தில் உள்ளியதை மொழி வழியாக வெளியிடுதல். பள்ளிப் பருவத்தில் சிந்திப்பதற்குப் பள்ளி என்ன உதவி புரிதல் வேண்டும் என்பது முதன்மையானது. மனிதன் நாகரிகத்தை வளர்க்கும்போது பல சிந்தனைகள் செய்துள்ளான். மனித வாழ்க்கை மூன்று தளங்களில் எப்போதுமே வளர்ச்சி பெற்றுள்ளது. அவற்றை மூன்று உலகங்களென்றும் கூறலாம். ஒன்று பொருளுலகம், இரண்டு ஆன்மீக உலகம், மூன்று அவனுடைய இன உலகமாகிய மனித உலகம். மனித உலகம் மற்ற இரண்டையும் ஒருங்கு சேர்த்து மனிதக் குணத்தை இரு பிரிவாக்கி உள்ளது. ஒன்று உலக வாழ்க்கை; இரண்டு ஆன்மீக வாழ்க்கை. ஆனால் மூன்று உலகங்களைப்பற்றிய கருத்துக்கள் மொழிவழியில் பல கலைகளாகவும், அறிவியல்களாகவும் வெளியிடப் பெறுள்ளன என்று முன்னர் அறிந்தோம். தொடக்க நிலைப் பள்ளியில் இவற்றை எல்லாம் மாணவர் உள்ளத்தில் நுழைப்பது யாங்ஙனம் ஆயினும் குருவையர்களது முற்று உள்ளத்தில் இவற்றை யாவும் எளிய அனுபவங்களின் வாயிலாகச் சிறிது. சிறிதாக உள வளர்ச்சிக்கு ஏற்றவாறு அளித்தல் கடமை. இவற்றை முழுவதும் ஒன்றன்பின் ஒன்றாக அளித்தல் கூடாது. ஆனால் அவற்றினை மாணவர்களின் வளர்ச்சிக்கும், அவர்களுடைய தேவைகளுக்கும் ஏற்றவாறு அளித்தல் வேண்டும். மாணவர்கள் திறமை, கவர்ச்சி ஆகிய இரண்டையும் கவனிக்காது கற்பிக்கத் தொடங்கினால்

கற்றல் நிகழாது. தொடக்கக் கல்வித் திட்டம் இவற்றை அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும்.

தொடக்க நிலையில் நான்கு வகை அனுபவங்கள் பிள்ளைகளுக்கு இன்றியமையாதவை. புலன் வழி அனுபவங்கள் முதன்மையானவை. எல்லா அறிவும் புலன்களின் வாயிலாகத் தொடங்குகின்றன. இவை நேர்முகமாகப் பெறுபவை. இவற்றைப் பெறுவதற்குச் செயல் முறைகள் சிறந்தவை. இரண்டாவதாக—நேர்முகமாகப் பெற இயலாத அனுபவங்களை ஆசிரியர் வாயிலாகக் கேட்டு அறிந்து கொள்ளுதல். படிக்கும் திறன் பெற்ற பிறகு சிறுவர் நூலகத்தில் பிறர் அனுபவங்கள் வரையப் பெற்றுள்ள புத்தகங்களைப் பார்த்து அறிந்துகொள்ளுதல். இதுவே [1] பிறர்நிலை அனுபவத்தைப் பெறும் வழியாகும். மூன்றாவதாகக் கருவிப் பாடங்கள். படித்தல், வரைதல், கணக்கிடுதல் இவற்றோடு பேசுதல் ஆகியவை தலைசிறந்த கருவிப் பயிற்சிகள். சொல்வதெழுதும் எந்திரங்களும், தட்டெழுத்து எந்திரங்களும் உண்டான பிறகு கையெழுத்துப் பயிற்சியைக் கைவிட்டோம். அங்ஙனமே தொலைபேசியும், தந்திச் செய்தி அனுப்புதல் முறையும் உண்டான பிறகு விரிவாக எழுதும் பழக்கத்தையும் கைவிட்டோம். ஆனால் தொடக்க நிலையில் கடிதம் எழுதுதல், கட்டுரை வரைதல் ஆகிய இவற்றிற்கு அடிகோல வேண்டியது கடமை. பிள்ளைகள் பாடங்களை இப்போது வாய்விட்டுப் படிப்பதில்லை. வாய்க்குள்ளே படிக்கும் பழக்கம் உயர்நிலைகளில் தொடங்க வேண்டியதொன்று. நல்ல ஒலி முறையோடு எடுத்தல், படுத்தல், நலிதல் ஆகிய வகையோடு சொற்களை ஐயம் திரிபு அற ஒலித்துப் படிக்கப் பயிற்சி வேண்டற்பாலது. பேசும் பழக்கம் இளமையிலேயே இழுக்கில்லாது இலங்குதல் வேண்டும். இளம் பிள்ளைகள் எண்களோடு நன்றாகப் பழகுவது கிடையாது. ஒரு சிலர் எண்களோடு திளைக்கின்றார்கள். எண்களும் அளவைகளின் மொழியன்றோ!

நான்காவதாக இளைஞர்கள் இல்லங்களுக்கு அப்பாலுள்ள சமூக மக்களோடு பழகப் பயில வேண்டும். தொடக்க நிலைப்பள்ளி ஒரு சிறு சமூகச் சூழ்நிலையைத் தந்துதவுகிறது. பிள்ளைகள் அயலாரோடு பழகிக் கற்றுக்கொள்ளுகிறார்கள்; நட்புக்கொள்ளுகிறார்கள். பள்ளி விளையாட்டுத் திடல், உடற் பயிற்சி வகுப்பு, பள்ளி விழாக்கள், வெளிச் செலவுகள், திருவிழாக்கள் ஆகியவை பழகிப் பெறக்கூடிய பயிற்சி தந்து திறனையும் ஆளுமையையும் வளர்க்க ஏதுவாகின்றன. மக்களாட்சியில் வளர்க்கவேண்டிய பண்புகளாகிய நீதி, பிறர்நலம் பேணல், ஒற்றுமை, ஒத்துணர்வு, உடன் பிறப்புணர்வு, கடமை உணர்ச்சி ஆகியவை மாணவர்களிடையே உண்டாகும். இப்பண்புகளைப் பாடங்

1. Vicarious experience

களாகக் கொண்டு கற்பித்தல் இயலாது. இவை பள்ளித் திட்டத்தின் நிகழ்ச்சிகளில் போதிய இடம் பெறவேண்டும்.

இவை நான்கும் இரண்டு பெரும் பிரிவுகளிலடங்கும். ஒன்று தனித்தனிப் பிள்ளை, தன்னை ஆளாக்கிக் கொள்ளுதல். இரண்டு சமூகத்தோடு பழகுதல். எனவே இவற்றினை மாணவர்கள் பெறுவதற்கு நமது தொடக்க நிலைப் பள்ளிகள், மூன்று விழுமிய குறிக்கோள்களைத் தம்மகத்தே கொள்ளுதல் நல்லது. அவையாவன: (1) திறன்கள் பலவற்றைப் பெறுவதற்குக் கருவிப் பாடங்களில் தேர்ச்சி; (2) அறிவு சால் சொத்துக்களாகிய அறிவியல், இனவழி, சமயம், கலை, இலக்கியம் ஆகிய வகைகளில் ஒரு வகை நுண்ணறிவும் (3) பள்ளிப் பொதுச் செயல்பாடுகளில் பங்குமாகும்.

கருவிப் பாடங்களைத் தனித்தனியாக வழங்குவதா அல்லது இணைத்துக் கற்பிப்பதா என்பது ஒரு சிக்கல். முற்போக்குப் பள்ளிகள் பிள்ளையை மையமாகக் கொண்டு இயங்குபவை. அப்பள்ளிகளில் பிள்ளையினுடைய தேவைப்பாட்டினை அறிந்தே செயல் முறைகள் வகுக்கப் பெறுகின்றன. தேவைப்பாட்டின் அடிப்படையில் இப்பள்ளி களில் இணைப்புக்கள் நிகழ்கின்றன. எதுவாயினும் மூன்று [1] Rகள் என்ற ஆங்கிலத்தில் வழங்கப்பெறும் படித்தல், எழுதுதல், கணக் கிடுதல் ஆகியவற்றில் ஒழுங்காகத் திறன் அளிக்காவிட்டால் பிள்ளைகள் பிற திறன்களை இவற்றின் அடிப்படையில் பெறுவது அருமை. பள்ளிச் செயற்பாடுகள் எல்லாம் மாணக்கருடைய வளர்ச்சிக்கு வழி கோலுபவையாகையால், அனுபவங்களெல்லாம் ஒன்றியவை. செயல் முறைகள் என்ருல் செயல்கள் புரிவதற்குப் பள்ளியில் உரிமை உண்டு என்று பொருள். பாட ஏற்பாடு முழுவதும் செயல்களை மையமாகக் கொள்வதும் பிழை. அல்லது பாடங்களை மையமாக்குவதும் பிழை. ஆனல் இரண்டும் ஒவ்வொரு பள்ளியிலும் இன்றியமையாதவை. மாணவர்கள் கற்கும் பொருளும், அவற்றுள் ஏற்படும் அவர்களுடைய சிக்கல்களும் அவர்களுக்கு அனுபவங்களின் வாயிலாக நேரும். வளர்ச்சிக்கும் ஏதுவாகும் பலன்களும் பாட ஏற்பாடாக அமைந் தால் நலம். பாடங்களை இணைத்துக் கற்பிப்பது என்பது அத்தகைய இணைப்புப் பாடங்கள் இணைவதனுலானதன்று; அனுபவங்களை இணைத்துப் பிள்ளைகளுடைய வாழ்க்கை நிலைகளாக்குவதேயாம். பல பாடங்களின் பொருள்களை [2] அலகு முறையில் பாகுபாடு செய்து அந்தந்தப் பாடங்களின் பொருள்களை ஏற்றவாறு இணைத்துக் காட்டி எல்லாப் பாடங்களின் அறிவுகளையும் ஒன்ருக ஒன்றுவித்து அறிவுக் களஞ்சியத்தில் சேர்த்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக குடிமைப் பொறுப்பு என்ற பொருளினை அலகு முறையில் நடத்தினல் அதைச் சார்ந்த கருத்துக்கள் எல்லாம் பல பாடங்களிலிருந்து கொள்ளப்

1. The three R's. 2. Unit

பெறும். அங்ஙனமே போக்குவரத்து என்ற பாடப் பகுதிக்குப் பல பாடக் கருத்துக்கள் வேண்டியவையாகும். தொடக்க நிலைப் பிள்ளைகளுக்கு வெறும் பாடங்களே யன்றி அவர்களுடைய எழில் உணர்வு வளர்தற் பொருட்டு பயிற்சிகள் சில அளிக்கவேண்டியது இன்றியமையாதது. பலவகை விளையாட்டுக்கள், நடனம், இசை, இசைப்பாட்டு கதைகள் சொல்லுதல், நாடகங்கள், நடித்தல், ஓவியம், சிறு கைத்தொழில், களிமண் வேலை, மரவேலை, பொம்மை, தைத்தல் இவை எல்லாம் [1] படைப்பாற்றல் அல்லது [1] ஆக்கவன்மை உண்டாக்கி விடும். இவற்றால் நல்ல முறையில் எழில் உணர்வு தோன்றி வளரும். இத்தகைய எழிலுணர்வினை வளர்க்கும் கல்வி சமூக மரபு நிலையோடு ஒட்டினாலன்றி அவை உடல் உள்ளங்களை உருவாக்கா. இன்றைய உலகில் மக்களின் பண்பாடே திரைப்படமாக்கப் பெற்றுத் திரை உலகினைத் தனியாக உண்டாக்கி உள்ளது. பிள்ளைகள் வாரத்துக்கு இரண்டு அல்லது மூன்று முறை திரைக் காட்சிக்குச் செல்லுகின்றார்கள். முதிர்ந்தோரைக் காட்டிலும் அவர்களுக்குத் திரைப் படங்களில் கவர்ச்சி மிகுதியாக உள்ளது கண்கூடு. பிள்ளைகளால் மதிக்கப் பெறுபவர்கள் பெரும்பாலும் திரைப்படத்தில் பங்கு பெறுபவர்களே யாவர். திரைக் காட்சிகள் எந்த அளவு பிள்ளைகளுடைய கற்பனையாற்றல்களைப் பெருக்குகின்றன என்பதை இதுவரையில் கல்வியாளர் ஆராயவில்லை. திரை, நாடகம், வானொலி இவற்றில் பங்கு பெறுபவர் பலர் நமது பிள்ளைகளின் மனத்தைக் கவர்கிறார்கள். அவர்களைப் பிள்ளைகள் தமது எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளுகிறார்கள். எனவே திரை, நாடகம், வானொலி பிள்ளைகளுடைய [2] மனவெழுச்சி உட்பாட்டினை [3] ஒருமைப் படுத்துகின்றன. திரைக்காட்சிகளிலும், நாடகங்களிலும் பல குறைபாடுகள் இருப்பினும் மாணவர்களுடைய உள்ளத்தினை அவை கவர்கின்றன என்பதனை ஆசிரியர்கள் அறிதல் வேண்டும். இவ்விரண்டு துறைகளும் பொதுமக்கள் உளவியலுக்கு ஏற்றபடி பழைய பண்பாட்டினையும், பொது வாழ்க்கையையும் ஆடல்களாகவும், பாடல்களாகவும், கூத்துக்களாகவும், குரவைகளாகவும் உருவாக்கி உதவுகின்றன. இவை பிள்ளைகளுடைய மனத்தைக் கவர்கின்றன. பிள்ளைகளும் நடிக்க விரும்புகிறார்கள். தமது பாடக் கருத்துக்களைத் திரைப்படங்களில் காண விழைகின்றார்கள். கம்பியில்லாத் தந்தி, கடல் வழித் தந்தி, வான ஊர்தி, வீரச் செயல்கள், தொழில்கள் சம்பந்தமான பல வகைச் செயல்கள், வேலைப்பாடுகள், வாழ்க்கை ஓவியங்கள் எல்லாம் திரைகளின் வழியாகப் பிள்ளைகளுடைய மனத்தைச் செப்பஞ் செய்கின்றன. எனவே திரைப்படமும், வானொலியும் மனித உலகத்தில் ஒரு புதிய நோக்கினை உண்டாக்கியுள்ளன.

1. Creative skil 2. Emotional tone 3. Integrate

உயர்நிலைக் கல்வி :

முதிர்ந்த பருவம் பன்னிரண்டு முதல் இருபது வரையில் எனக் கொள்ளலாம். நமது மாநிலத்தில் இப்பருவத்திற்குள் கல்லூரிப் படிப்பே முடிந்துவிடுகிறது. பழைய ஏற்பாட்டில் பன்னிரண்டு முதல் ஆறுண்டுகள் உயர்நிலைக் கல்வியும் அதன் பின்னர் நான்காண்டுகள் கல்லூரிக் கல்வியுமாக நமது பிள்ளைகள் பட்டத் தேர்வு எழுதினுர்கள். இக்கணக்குப்படி கல்லூரிக் கல்வியே இருபது வயதுக்குள் முடிவுறு கிறது. புதிய ஏற்பாட்டில் தொடர்ந்த தொடர்நிலைக் கல்வி ஏழாண்டுக ளென்றும் மேல் உயர்நிலைக் கல்வி நான்காண்டுகள் என்றும் அதன் பின்னர் மூன்காண்டுகள் பட்டப் படிப்பு என்றும் கண்டோம். இப்பாகு பாடும் இருபது வயதுக்குக் கல்லூரிப் பட்டப் படிப்புக்கு வழி வகுத் துள்ளது. அமெரிக்க நாட்டில் தொடக்கநிலை ஆறு வயது முதல் பதி ஞெரு வயது வரையில், அதன் பின்னர் மூன்றுண்டுகள் இளைய உயர் நிலை, பின்னர் மூன்றுண்டுகள், முதிர்ந்த உயர்நிலை, அதன் பின்னர் இரண்டாண்டுகள் [1] இளங் கல்லூரி ; பின்னர் இரண்டாண்டுகள் [2] முதிர் கல்லூரி. அதற்கப்பால் ஈராண்டுகள் பல்கலைக் கழகப் படிப் பென்றும் ஆக மொத்தம் பதினெட்டாண்டுக் கல்வி இருபத்து மூன்று வயது இறுதி வரையில் நீடிக்கும் திட்டம் உள்ளது. இங்கிலாந்து தேசத்தில் தொடக்க நிலை ஆறுண்டுகள், உயர்நிலை ஆறுண்டுகள் ஆக மொத்தம் பள்ளிப் படிப்பு பன்னிரண்டாண்டுகள்.

உயர்நிலைக் கல்வியைக் கல்லூரிக் கல்வியோடு ஒட்டவிடுதலும் கல் லூரியைச் சார்ந்து நடைபெறுவித்தலும் கூடாதென்று கூறுவர் பேரறி ஞர். நமது நாட்டில் அத்தகைய நிலை இருந்துள்ளது. பெற்றேர்களும், பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்புக்கு வழியென்றே கருதினர். ஆனல் உயர்நிலைக் கல்வி தனிப்பட்ட ஒரு பள்ளியிறுதிக் கல்வியினை அளிப்ப தென்றும் அதனுடைய நோக்கங்களும் குறிக்கோள்களும் தனிப்பட் டவையென்றும் அக்கல்வி அளவினைக் கடந்தவர்கள் பல துறைகளிலே பயிற்சி பெற்று வாழ்க்கை நடத்தலாம் என்றும் யாரும் கருதியதே கிடையாது. இதுவரையில் பள்ளியிறுதி வகுப்புக்குப் பின்னர் பெரும் பான்மையோர் அலுவலகங்களில் எழுத்தர்களாகவும் அல்லது ஆசிரியர் களாகவும் பிழைப்பைத் தேடினர். இதுவரையில் கல்லூரியை நாடாத வர்களுக்குப் பள்ளியிறுதிக் கல்வி ஒரு வழியும் வகுக்காது ஒழிந்தது. இன்று திருத்தப்பெற்ற ஏற்பாட்டின்படி பல உயர்நிலைப் பள்ளிகளைப் பல்நோக்குப் பள்ளிகளாக மாற்றி அமைத்துள்ளார்கள். எட்டாண்டு களுக்குப் பிறகு மாணவர்கள் தமது தகுதிக்கும் நாட்டத்துக்கும் ஏற்ப ஒரு தொழிற்றுறையினைத் தேர்ந்து அதன் வழியில் கல்வியை நிறைவு செய்துகொள்ளும் வாய்ப்பினைப் பெறலாம். கல்லூரிக் கல்வியினை எய்துபவருங்கூடக் குறைபாடற்ற தகுதியோடு கல்லூரியைச் சேராது

1. Junior College 2. Senior College

தமது தகுதியை ஓராண்டு உயர்நிலைக் கல்வியிலேயே அதிகமாகப் பெற்றுக் கல்லூரிக்குத் தகுதி உள்ளவர்களாக்கிக் கொள்ள வழி வகுத்துள்ளார்கள். பன்னோக்குப் பள்ளிகள் மாணவர்கள் பலருடைய தகுதிப்பாட்டினுக்குத் தக்கவையாக அமைந்துள்ளதால் மாணாக்கரிடையே ஏட்டுக் கல்விப் பெருமையும் தொழிற் கல்வித் தாழ்மையும் இல்லாது கல்வியில் உயர்வு தாழ்வு அற்ற ஒரு ஒத்தநிலை உண்டாகியுள்ளது. கல்வி பெறும் வழிகள் ஏட்டு வழியே அன்றித் தொழில் வழியிலும் அமைக்கப் பெற்றுள்ளது. மாணவர்கள் அவரவர்களுடைய துறைகளைத் தேர்ந்தெடுக்கப் பள்ளி ஆசிரியர்களும் அத்துறையில் பயிற்சி பெற்ற வழிகாட்டிகளும் உதவுகிறார்கள். ஒரு மாணாக்கன் தனது துறையைப் பிழையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டாலும் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு மாற்றிக்கொள்ள வழிவகை பல்நோக்குப் பள்ளிகளில் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க நாட்டு உயர்நிலைப் பள்ளிகளில் அமைத்துள்ள ஏற்பாடு உயர்நிலைக் கல்விக்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்குதல் கூடும். அங்கு உயர்நிலைப் பள்ளி [1] எல்லாருக்கும் உரித்தானது; [2] எல்லாம் பொருந்தியது. எல்லாருக்கும் உரித்தானது என்றதனால் இப்பள்ளிகளில் நிகழும் கல்வி ஏற்பாடு பரந்த நோக்கமுடையதாகும். பிள்ளைகளைப் [3] பன்னுடை முறையில் பொறுக்கி எடுப்பதில்லை. எல்லாருக்கும் என்றதனால் எல்லாருக்கும் ஒரேவகையான கல்வியை அளிப்பதில் மாணவருடைய ஆற்றல், திறன் ஆகியவற்றைக் கருதியதாகக் கல்வி அமைய வேண்டும். தொடக்க நிலையில் பள்ளி எல்லாருக்கும் உரித்து. பாடங்களும் எல்லாருக்கும் ஒரேவகையின. ஆனால் மாணவர்கள் உயர் நிலையை எய்திய உடனே அவர்களிடையே திறன்வழி வேறுபாடுகள் மல்குகின்றன. அவற்றிற்கேற்ப உயர்நிலைப் பள்ளியில் பாட ஏற்பாடு அமைய வேண்டியதாகிறது. தனியார் வேற்றுமைக்கு ஒப்ப அஃது அமையவேண்டும். அதனால் உயர்நிலைப் பள்ளி எல்லாம் பொருந்திய தாக அமைய வேண்டியதாகின்றது.

உயர்நிலைக் கல்வி நீடிக்கும் ஆறு ஆண்டுகளை முதனிலை மூன்று, இறுதிநிலை மூன்று என பிரிக்கின்றார்கள். முதல் மூன்றாண்டுகளில் நிலையான பாடங்கள் தொடக்க நிலையைப் போன்று தொடர்ந்து நிகழும். இவையோடு மாறுபாடுள்ள பாடப் பகுதியும் உண்டு. கணிதம் ஒரு பாடம். எழுத்தியற் கணிதம், கோண கணிதம், [4] வாணிபக் கணிதம் ஆகியவை அதன் மாறுபாடுகள். பிள்ளைகள் நிலையான பாடங்களோடு அவரவர்களுடைய தகுதிக் கேற்பத் தமது ஆற்றலுக்கு ஒப்ப ஒரு பாடத்தினைக் கற்கும் வகை உண்டு. இறுதி மூன்றாண்டுகளில் பிள்ளைகளுடைய விருப்பு, திறன்களுக்கு ஏற்றபடி அவைகளை

---

1. Cosmopolitan 2. Comprehensive 3. Selection
4. Commercial arithmetic

வகைப்படுத்தி முதல் மூன்ருண்டுகளில் பிள்ளைகள் விரும்பிப் படித்த பாடங்களைத் தொடர்ந்து அவை ஏட்டுப் படிப்பு வகையானல் அதனையே தொடர்ந்து படிக்கவும், அல்லாது கைத்திறன் விருப்பாயின் அதற்கேற்ற பாடங்களும் பலப் பலவாக அளிக்கப்பெறும். எனவே இறுதி நிலை ஏட்டுப் படிப்பு, பொதுக் கல்வி, கைத்தொழிற் கல்வி ஆகிய மூன்று பிரிவுகளாக வழங்கப் பெறுகிறது. ஏட்டுக் கல்வியினர் கல்லூரிப் படிப்புக்கும், கைத்திறனுளர் ஒரு குறித்த தொழிலுக்கும், பொதுக் கல்வியினர் படித்தவர் எண்ணைச் சேர்ந்தவர்களாகவும் மூன்று வகையாகின்றனர். இப்பிரிவுகளைப் போன்றே இங்கிலாந்து தேசத்திலும் இரண்டு வயது முதல் ஐந்தரை வயது வரையில் குழவிப் பள்ளிகளும் ஐந்தரை முதல் பதினென்று வரை தொடக்க நிலையும் பதினென்றுக்கு அப்பால் மூன்று பிரிவாக ஏட்டுப் படிப்பிற்கு ஏட்டுக் கல்விச்சாலையும், மற்றும் பொதுக் கல்விச்சாலையும், கைத்திறன் உள்ள பிள்ளைகளுக்குப் பல் தொழில் பள்ளிகளும் ஆகப் பதினருண்டு வரை பணியாற்றுகின்றன.

நமது மாநிலத்தில் தொடர்ந்த தொடக்கநிலைத் திட்டத்தில் ஏழாண்டுப் படிப்பில் தாய்மொழி, கணிதம், பொது அறிவு, சமூக அறிவியல், ஆங்கிலம் ஆகியவை பாடங்களாகவும் தொடர்ந்தே உயர் நிலையிலும் பாடங்களாகவும் பாட ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளன. ஒன்பதாவது வகுப்பில் கல்வித் திட்டம் இரு கிளைகளாகப் பிரிகின்றது. ஒன்று ஏட்டுக் கல்வியின் தொடர்ச்சி. மற்ருென்று தொழிற் கல்வி. தொழிற் கல்வி பல்நோக்குடையது. பல்நோக்குப் பள்ளிகள் பலவாக மாற்றி அமைக்கப் பெறுகின்றன. அவற்றில் [1] செயலக இயல், [2] புகுமுகப் பொறியியல், [3] அச்சக இயல், [4] பஞ்சாலை இயல், [5] பயிர்த்தொழில் [6] நுண்கலை, [7] குடும்பக்கலை ஆகியவை அவரவர்களுடைய தகுதிக்கேற்றவாறு அளிக்கப் பெறுகின்றன. பல்நோக்குப் பள்ளிகள் பல திறன்களுக்கு ஏற்றவையாகின்றன. ஏட்டுக் கல்வியினர் கல்லூரியிலும் பல்நோக்குப் பள்ளியினர் பல்தொழில் பள்ளிகள் அல்லது பொறியியற் கல்லூரிகள் ஆகியவற்றிலும் தொடர்ந்து கற்க வழி உண்டு. பல்நோக்குப் பள்ளிகளில் பொதுக் கல்வியும் அளிக்கப் பெறுகின்றது. அதன் பயனுல் அவன் சிறந்த குடிமகனுக வாழவும் அவனுடைய வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளவும் வகை உண்டாகிறது. உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் பெறும் பயிற்சி அவர்களுக்குப் பொதுக் கல்வியோடு தொழிற் கல்வியும் அளிப்பதால் அவர்கள் பல திறன்களைப் பெற்ற குடி மக்களாக இன்றைய உலகில் வாழ்வதற்கு வழி ஆகின்றது. அங்ஙனமே ஆதாரக் கல்வித் திட்டத்திலும் முதல் ஏழாண்டுகளுக்குப் பிறகு .மேல் உயர்நிலைக் கல்வித் திட்டத்தில் அவர்களுக்கு உரித்தான

1. Secretarial 2. Pre-Engineering 3. Printing technology 4. Textile technology 5. Agriculture 6. Fine Arts 7. Home Science.

தொழிலை மையமாகக் கொண்ட திட்டம் அமைக்கப் பெற்றுள்ளது. விருப்புப் பாடங்களைப் பொறுக்கியெடுக்க வழிகாட்டி ஆசிரியர்கள் ஒரு சிலர் பள்ளிகளில் தொண்டாற்றுகிறார்கள். உடற்பயிற்சி எல்லா நிலைகளுக்கும் உண்டு.

VIII

பாடங்களும் செயல்களும் :

இதுகாறும் அறிந்தவற்றை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை பாட ஏற்பாட்டின் பாடங்கள். அவற்றைக் கற்பிக்கும் முறைகள் கல்விப் பயன்களை எய்தும் வண்ணம் அமைய வேண்டும். மனிதத் தேவைப்பாடுகளையும் நிறைவு செய்யவேண்டும். மாணவர்களுடைய திறன்களுக்கு ஒப்ப அமைய வேண்டும். கற்றல் முறைகளுக்கு ஒப்பவும் அமைய வேண்டும். கற்பிக்கும் பொருள், முறை, மாணுக்கன் ஆகிய மூன்றும் ஒரு முக்கோணமாகும். இவை மூன்றின் கலவையே ஓர் அனுபவம்; அல்லது செயல். கற்பிக்கும் பாடம் ஒரு புத்தகத்திலுள்ள ஒரு சில பத்திகளாகக் காட்சி அளிக்கலாம். ஆசிரியர் சொற்களாலும், படங்களாலும், கரும்பலகைகளாலும் வேறு துணைக் கருவிகளாலும் பாடத்தோடு இயங்குகின்ருர். கற்றல் நிலையில் மாணவர்கள் பல துலங்கல்களைப் பெறுகின்ருர்கள். சூழ்நிலை, மாணவருடைய உளநிலை, ஆசிரியருடைய கற்பிக்கும் முறை, மாணவர்களை ஆற்றுப்படுத்து முறை—இவையெல்லாம் துலங்கல்களுக்குக் காரணமாகும். விரும்பத்தக்க துலங்கல்களை வெளியாக்குவதே ஆசிரியத்தின் குறிக்கோள்.

எந்தப் பாடமாகிலும், செயலாகிலும் என்னை? ஆசிரியர் அதனை யாங்ஙனம் கற்பிக்கின்ருர், மாணுக்கன் என்ன கற்றுக்கொண்டான், என்பவற்றைச் சார்ந்ததே கல்வியின் மதிப்பாகும். இவை அல்லாது என்ன பாடம், செயல் முறையாது, என்பவை முதன்மையன்று. எடுத்துக்காட்டாகக் கோண கணிதம் கற்கும் மாணுக்கன் தேற்றங்களை நெட்டுருச் செய்து ஒப்பிக்கும் திறமையினை மட்டும் பெற்ருல் அவன் அதன் பயனுய பகுத்தறிவாற்றலைப் பெருதுவிடுகின்ருன். பாட ஏற்பாட்டினர் பெரும்பான்மையோர் ஒரு பாடத்தினைத் திட்டத்தில் புகுத்திவிட்டால் மட்டும் மாணவர்கள் அதன் பயனைப் பெற்று விடுவார்களா என்பதை அறிதல் வேண்டும். அப்பாடம் திறமையுள்ள ஆசிரியர் ஏற்றுக் கற்பித்தாலன்றி அதன் பயனை மாணவர்கள் பெற முடியாது. எடுத்துக்காட்டாக உளநூல் எல்லாருக்கும் இன்றியமையாதது. அது மனிதனுடைய இயற்கையைப் பற்றியும், நடத்தையைப் பற்றியும் விரிப்பது. மனிதன் தன்னைத் தானே அறிந்து கொள்ளுவது மிக உயரிய குறிக்கோளாகும். அதனுல் அதை எல்லா நிலைகளிலும் எல்லாப் பிள்ளைகளுக்கும் பாடமாக்குவது நல்லதென்று கருதுவது தவறு. அதை நன்ருக உணர்ந்த

ஆசிரியர் மட்டுமே தமது அனுபவ முறையில் எடுத்து விளக்கினாலன்றிப் பாடத்தின் நன்மை பாடமாகக் கொண்ட எல்லாருக்கும் பயனளிக்காது. இத்தகைய முதியோர் தமது நிலையில் நின்று அவர்கள் கருதும் பாடங்கள் பலவற்றினைப் பாட ஏற்பாட்டில் நுழைப்பது தவறாகும்.

எந்தப் பாடமும் செயலும் தனியாளுமைக்குத் தக்கதாக வேண்டும். வாழ்க்கையில் பொருத்திக் கொள்ளுவதற்குப் பயனுடையதாக வேண்டும். அந்தப் பாடத்தைக் கற்பதால் பிள்ளைகள் பெறும் திறன்கள், மனப்பான்மை, முருகுணர்ச்சி, குறிக்கோள்கள் யாவை என்பவை இன்றியமையாதவை. அப்பாடத்தின் பயனாகத் தனது குடும்பத்தோடும், சமூகத்தோடும், நாட்டுச் சிக்கல்களோடும், பொருளாதார வாழ்க்கையோடும் தன்னைப் பொருத்திக்கொண்டு தனது உடலையும், உள்ளத்தையும் நல்ல முறையில், அறிவு நிலையில், அறவழியில் ஓர் அமைவுறும் நிலையினைப் பெறுதல் வேண்டும். அல்லாக்கால் அப்பாடத்தால் கிட்டும் பயன் ஒன்றுமில்லை யென்றே சொல்லிவிடலாம். பாடங்களும் அவற்றைச் சார்ந்த செயல் முறைகளும் ஒத்த நிலையில் அமைந்தாலன்றிப் பல பயன்களின் மதிப்பைப் பெற இயலாது. பள்ளியைத் தவிர மற்ற நிலையங்கள் நமது பிள்ளைகளுக்கு அறிவைப் புகட்டுகின்றன. வெளிச் சூழ்நிலையில் அறிந்தவற்றைப் பள்ளிகளில் மீண்டும் பாடங்களின் வழியாகப் புகுத்துவது வீண் முயற்சியாகும். ஆனால் வெளிச் சூழ்நிலையில் பெற்ற தீயனவற்றை அறிந்து அவற்றைக் களைந்து, திருத்தமான முறையில் மாணவர்களைத் திண்ணியராக்குவது நல்லது. வெளிச் சூழ்நிலையில் இல்லம், வீதிப் பழக்கம், விளையாட்டிடம், திரைப்பட நிலையம், நாடகம் இவையன்றி இயற்கைப் பொருள்கள், பயிர் வகைகள், பல காட்சிகள் இவையெல்லாம் புலநுழைவு பெறுகின்றன. எல்லாவற்றைக் காட்டிலும் சமூகத்திலுள்ள மக்களுடைய செல்வாக்குப் பிஞ்சு உள்ளங்களில் அதிகமாகப் பதிந்துவிடுகிறது. ஆசிரியருடைய அறிவுசார் ஈடுபாடு பிள்ளைகளுக்கு ஒரு சிறிதுதான் கிட்டுகின்றது. மற்றதெல்லாம் சமூகத்தின் தொடர்பு. அது நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ ஏற்படலாம், சமூகத்தினருள் பெற்றோர்கள், தோழர்கள், பேச்சாளிகள், எழுத்தாளிகள், பொதுமக்கள் கருத்தின் ஆதிக்கம் ஆகியவற்றின் செல்வாக்கு நமது பிள்ளைகளின் மீது அதிகம். ஆயினும் இன்று பள்ளிக்கூடங்கள் தனியாளுமை வளர்ச்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு பள்ளியிலேயே சமூக வாழ்வினை வாழும் வழி அளிக்க முயல்கின்றமையால் பள்ளியின் செல்வாக்கு குறைந்ததன்று. குழவிப் பருவமுதல் இச்செல்வாக்குத் தொடங்குகிறது. அதே சமூகத்தில் இன நிலையங்களும், சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள பொது நூலகங்கள், கண்காட்சி சாலைகள், வானொலி நிலையங்கள், பேசும் படங்கள், வெளிச் செலவு வசதிகள், தொழிற்சாலைகள், பல வெளியீடுகள், பொதுக்கூட்டங்கள், நாப்பறைகள், வெறுப்புணர்ச்சிகள் ஆகியவையும் பிள்ளைகளை ஈர்க்கின்றன. எனவே பள்ளிகள் சமூகத்திலேயே தலைமை

யைத் தேடிக்கொள்ள வேண்டும். சமூகத்திலுள்ள பல நிலையங்களில் அதன் செல்வாக்குப் பரவவேண்டும். பள்ளியின் பாட ஏற்பாடு பள்ளிக் கல்வியோடு மட்டும் நின்றுவிடாது மாணவர்களுடைய வெளி அனுபவப் பயன்களையும் ஒருங்கு சேர்த்து அவற்றையும் நல்ல முறையில் கல்விச் சார்புற்றவையாகத் திருத்தி அமைக்க வேண்டும். இவை யாவும் எல்லா அனுபவங்களையும் ஒத்த நிலையில் வற்புறுத்தும்.

நமது பிள்ளைகள் பாடங்களைக் கற்கும்போது இரண்டு வகையாகக் கற்கின்றார்கள். ஆசிரியர் ஒப்படைத்த பாடங்களைக் கட்டாய நிலையில் முழுவதும் கற்கின்றார்கள். அதே சமயத்தில் அப்பாடங்களைச் சார்புற்ற உடன் நிகழ் கற்றலும் அவர்கள் அறிந்தும் அறியாமலும் ஏற்படுகின்றது. கட்டாயப் படிப்பு ஆசிரியர் கட்டாயப்படுத்துவது—முதனிலைப் படிப்பாகின்றது; பிந்தியது வழிநிலையாகின்றது. இவ்வகையான முதனிலைக் கல்வி மட்டும் மதிப்பீடு பெறுகின்றது. இது பொருத்தப்பாட்டினுக்கு உதவுகின்றதா என்பது ஆராயத் தக்கது. எடுத்துக்காட்டாக மாணவன் ஒருவன் தாய்மொழியினைக் கற்றுக்கொண்டால் அஃது அவனுக்கு நேரடியாக மாணவ வாழ்க்கையிலேயே பயனுறும். அல்லாது ஆங்கில மொழியைக் கற்றுக்கொள்ளத் தனது நேரத்தினைச் செலவிட்டால் அதன் பயன் தாய்மொழி ஆட்சி உள்ள நாட்டில் கிட்டாதொழியும். கணித நூலைக் கற்கும் மாணவன் நடைமுறைக் கணிதத்தை நன்றாகக் கற்றுத் தேர்ச்சி அடைந்தால் அஃது அவனுடைய நடைமுறை வாழ்க்கையில் பயனுறும். அல்லாது கோண கணிதத்தையும் எழுத்தியற் கணிதத்தையும் கற்க நேரத்தைப் போக்கினால் அவை நடைமுறைக்கு உதவுமா என்பது ஐயப்பாடு. மூன்றாவதாகத் தனது நாட்டாட்சியைப் பற்றியும், தனது நாட்டு மக்களின் பொருளாதார வாழ்க்கையைப் பற்றியும் முதற்கண் அறியாது எகிப்தின் பழைய நாகரிகத்தினைப்பற்றி அறிய நேரத்தைக் கடத்தல் பயனுறுதல்லவா? எனவே தொடக்க நிலையிலிருந்து பள்ளியிறுதிவரை நேரடியான வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியவை மிகவும் இன்றியமையாதவை.

இதனால் ஒவ்வொரு பாடத்தையும் வாழ்க்கைத் துறையோடு ஒட்ட வைத்துத் திட்டத்தை வகுத்தல் பொருளுள்ளதாகும். இங்ஙனம் அமைத்தால் பாடம் விரிந்து அமையும். அப்போது ஆசிரியர் ஒப்படைக்கும் பகுதிகள் மட்டுமல்லாது உடனிகழ் கற்றல் அனுபவங்களும் அஃதில் இடம் பெறும். ஒவ்வொரு பாடத்திலும் முதனிலைக் கருத்துக்கள் வாழ்க்கை அனுபவங்களோடு ஒட்ட ஒட்ட உடனிகழ் கற்றலும் வாழ்க்கையில் பயனுறும். நடைமுறைக் கணக்கோடு உயர்நிலைக் கணக்குக்கற்ற மாணவர்கள் பரந்த அறிவினைப் பெறுவார்கள். நடைமுறைக் கணக்கு வாழ்க்கைக்குப் பயன் தருகிறது. உயர்நிலை—அறிவாற்றல், திறன், முருகுணர்ச்சி, உள்ளப்பயிற்சி ஆகிய பல குணங்களையெல்லாம் நடைமுறையிலுங்கூடப் பயனளித்து மாணவனுடைய செல்வாக்கினைப் பெருக்க உதவும். எந்தப் பாடங்கள் எல்லா வகையான

திறன்களையும் வளர்க்கக்கூடும் என்பது பெரும் சிக்கல். ஒருசில பாடங்கள் அடிப்படைத் திறனையும், அதனோடு உடன்நிகழ் திறனையும் வளர்க்கக் கூடுமென்பர். மொழிகள், கணிதம், அறிவியல் ஆகியவை மாணவருடைய சிந்தனையாற்றலை வளர்ப்பதோடு திருந்திய முறையில் சிந்தனை செய்வதற்கும் உதவுமென்பர். ஒரு தேற்றத்தை நிரூபிக்கும் மாணாக்கன் ஒரு சிறிது பிழைபடச் சிந்திப்பானேயானால் தேற்ற விளக்கம் தவறிவிடுகிறது. மாணாக்கனே தவறினை உணர்ந்து விடுகிறான். சமூக அறிவியல் பாடத்தில் தனது விருப்பம்போற் கருத்துக்களை வரைகின்றான். பிழை உள்ளதாயினும் அதனை அவன் அறிந்துகொள்ள வழி இல்லை. துல்லிதமான அறிவியற் பாடங்களில் பெறும் சிந்தனையாற்றல் மற்ற பாடங்களுக்கு உதவாதென்று கருதுகிறார்கள். அங்ஙனம் பயன்பட்டாலும் ஒரு சிறிதளவே என்றும் கூறுகிறார்கள். இங்ஙனம் ஒரு பாடத்தின் திறன் மற்ற பாடத்தின் திறனை மாற்ற முடியுமா என்பதை ஆராய்ச்சி செய்தே அறிய வேண்டும். ஆங்கிலம், வரலாறு, இலத்தீன், கோண கணிதம் ஆகிய பாடங்களைக் கற்கும் மாணவர்களையும், ஆங்கிலம், வரலாறு, சமயற்கலை, தையற்கலை கற்கும் மாணவர்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அவர்களுடைய தொடக்கத் திறனையும் வளர்ந்த திறனையும்.பிரித்தறியலாம். அறிவியல், கணிதம், சமக்கிருதம் ஆகிய பாடங்களில், வாணிபப் பாடங்கள், கைத்தொழிற் பாடங்கள் ஆகியவற்றைக் காட்டிலும் பல திறன்களை மாணாக்கர்கள் ஓரளவு பெறக்கூடும். ஆனால் இரு திறத்தாருக்கும் திறனளவில் வேறுபாடு ஒரு சிறிதே காணப்பெறும் என்று கூறிவிடலாம். திறன் பெரும்பான்மை பாடங்களால் அளிக்கப் பெறுகின்றது என்பதைக் காட்டிலும் நல்ல அறிவாற்றல் உள்ள மாணாக்கன் பள்ளிப் படிப்பு இல்லாமலே பள்ளிப் படிப்பு உள்ளவனைவிடத் தனது திறனைப் பெருக்கிக் கொள்ள இயலும் என்று கருதுவது பொருத்தமானது.

பல பாடங்களுள் இன்றும் நாளையும் இன்றியமையாதனவான பாட அறிவு முதன்மைத்தா, அவற்றில் திறனை அடைவது பயனுற்றதா அல்லது பழைய வரலாற்று நூல்கள், அறிவியல்கள் முதலியவற்றில் அறிவு பெறுவது முக்கியமா என்பது மற்றொரு வினா. பொதுவாக வரலாற்றுப் பாடத்தை யாரும் இகழ்வதில்லை. அதனால் ஒரு பயனும் இல்லை என்று வாதம் செய்பவர் உளர். நடைமுறைக்கும், வரலாற்றுக்கும் சம்பந்தமே இல்லை என்றும் கூறுவர். இது பெரும் தவறு. புதிய வரலாறு பழைய வரலாற்றின் அடிப்படையில் தோன்றுகிறது. புதிய அறிவியலும் பழமையிலிருந்து தோன்றுகிறது. தனிப்பாட வல்லுநர்கள் ஒவ்வொரு பாடத்தையும் வரலாற்று முறை அறிந்து கற்றுக் கொடுக்கிறார்கள். நடைமுறையினை நாளிதழ்கள் நினைவூட்டுவதோடு அறிவுறுத்துகின்றன. ஆனால் அவற்றுள் கொள்ளத் தக்கவை தள்ளத் தக்கவை யாவை என்று அறியவேண்டும். அவற்றுள் எவை நிலைத்தவை, நாளியல்பினவை என்பதனையும் அறிதல் வேண்டும்.

இக்காரணத்தால் எப்பாடங்கள் இன்றைக்கும் நாளைக்கும் உதவக் கூடியவை என்பதை அறிந்தும் பாட ஏற்பாட்டில் இடம்தரவேண்டும்.

பாட ஏற்பாட்டில் இடம் பெறக்கூடிய பாடங்களையும் செயல்களையும் பற்றி நாம் கண்டவற்றைத் தொகுத்தறியலாம். (1) பாடங்களும் செயல்களும் செய்தித் திறன்கள், பழக்கங்கள், நல்ல மனப்பான்மைகள், முருகுணர்ச்சி ஆகியவற்றைக் கொண்டும் இயற்கை உலகத்தோடும் குடும்பம், சமூகம், பொருளாதாரம், நாடு இவற்றேடும் உறவு கொள்ளுவதற்கும், உடலுறுப்பு, உள்ளம், உள்ள வளர்ச்சி இவற்றை அடிப்படையாகக் கொண்டும் அறவழியில் இறைவழியில் அறிவாற்றலுக்கு வழி வகுக்கக்கூடியவையாகவும் அமையவேண்டும். (2) இங்ஙனம் பாடங்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவை இதர சமூக நிலையங்களால் அளிக்கப் பெருதவையாக இருத்தல் நலம். அல்லாக்கால் கருத்துக்களும், அனுபவங்களும் கூறியது கூறல், செய்ததைச் செய்தல் ஆகக் கூடாது. (3) எல்லாப் பாடங்களும், செயல்களும் ஒரு முழுக் கல்விச் செல்வாக்கினை அளிக்கக் கூடியவையாக வேண்டும். அப்போதுதான் அனுபவங்கள் ஒத்த நிலையில் ஏற்படும். (4) பொதுவாக எல்லாப் பாடங்களையும், செயல்களையும் அவ்வவற்றின் முதனிலைப் பயன்களைக் கருதி அமைக்க வேண்டுமே யன்றி உடன் நிகழ் பயன்களை இணைத்துக் கொள்ளக் கூடாது. (5) ஆனல் ஒரு வாழ்க்கைச் சிக்கலில் பயன் படக்கூடிய ஒரு கருத்து அல்லது திறன் அல்லது பழக்கம் உண்மையாகவே பயனுற்ருல் அது நன்ருக ஆளுமையில் ஒன்றிவிடுகிறது. அப்போது அந்த அனுபவத்தின் உடன் நிகழ் ஆற்றல்களும் பயனுறும். (6) இங்ஙனம் வாழ்க்கையில் பயனுற்ற ஒரு கருத்து, மேலும் மேலும் திறனய்வு பெறுவதற்கு இடமளிக்கும். பாடக் கருத்துக்களும் செயல்களும் இன்றைய தேவைகளை நிறைவு செய்தலோடு நாளைக்கும் வழி வகுக்கக்கூடியவையாயின் அவற்றை வற்புறுத்தல் தலையாய கடன். அவற்றை விட்டு வெறும் ஏட்டுப் படிப்பானவற்றையும், பழம் புராணத்தையும், பயனற்றவற்றையும் பாட ஏற்பாட்டில் நுழைத்துக்கொண்டு பிள்ளைகளுக்கு அலுப்பையும் வீணன முயற்சியையும் தூண்டுவது இன்றைய வாழ்க்கைப் பயனுக்கு இடராகும். (7) எல்லாவற்றைக் காட்டிலும் பிள்ளைகளுடைய கவர்ச்சிகள், விருப்பம் ஆகியவற்றிற்கு ஏற்ற பாடங்களையும், செயல்களையும் கண்டறிந்து பாட ஏற்பாடு அமைப்பதே சீரியதாகும்.

நமது நாட்டில் பாட ஏற்பாடு உரிமை பெற்ற பிறகு எல்லா மாநிலங்களிலும் மாற்றி அமைக்கப் பெற்றுள்ளது. அதற்கு முன்னர் ஆங்கில ஆட்சியில் இருந்த ஏற்பாடு எல்லாம் ஏட்டுப் படிப்பு வழியேயாகும். ஒரு சில பல்தொழில் பள்ளிகளும் பொறியியற் கல்லூரிகளும் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. ஏட்டுப் படிப்புக்கு ஏற்றம் மிகுதியாக இருந்தது. கல்லூரிப் பட்டங்கள் ஏழைகளையும் செல்வர்களையும் கவர்ந்தன. நம் நாடு நமதான பிறகு எங்கும் ஒரு மறுமலர்ச்சி;

மக்களிடையே விழிப்பு ஏற்பட்டது. நமது நாடும் பல துறைகளில் மேலைய நாடுகளைப் போன்று முன்னேற்றம் பெற முனைந்தது. மக்கள் அவரவர்களுடைய பொருளாதார நிலைக்கும் தகுதிக்கும் ஒப்பப் பல கோணங்களிலும் பயிற்சிபெற ஆர்வம் கொண்டனர். ஐந்தாண்டுத் திட்டங்கள் 1951 முதல் தொடங்கப் பெற்றன. நடுநிலை அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் கல்வியைப் பரப்புவதற்கும் நமது நாட்டுத் தேவைப்பாட்டினைக் கருதி அதை அமைப்பதற்கும் வழிசெய்து வருகின்றன. இப்போது எங்கும் கலைக் கல்லூரிகள், தொழிற் கல்லூரிகள் அவற்றை இணைக்கும் பல்கலைக் கழகங்கள் உயர்நிலைப் பள்ளிகள் பல் தொழிற் பள்ளிகள், தொடக்கநிலைப் பள்ளிகள் [1] சர்வோதயப் பண்பிலமைந்த ஆதாரப் பள்ளிகள், கல்லூரிகள், நுண்கலை, சமூகக்கலை, எழிற்கலை ஆகிய இன்னோரன்ன பிற எல்லாத் துறைகளிலும் மக்கள் மாண்புற எங்கும் கல்வி ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இவற்றுள் நாம் உயர்நிலைக் கல்வி ஏற்பாட்டைக் காண்போம்.

மொழிகள் :

மொழிச் சிக்கல்கள் நமது நாட்டிலும் மிகுந்து விட்டனவென்று பரந்த நோக்குடையவர்கள் கண்டித்து வருகிறார்கள். மாநிலங்கள் மொழிவழியில் அமைக்கப்பெற்று வருகின்றன. அரசியல் அமைப்பில் பதினான்கு இந்திய மொழிகள் ஒப்புதல் பெற்றுள்ளன. இவற்றோடு ஆங்கிலம் ஆடல் உறுகிறது. ஆங்கிலமாகிய அயல் மொழியை அகற்ற வேண்டும் என்பார் ஒரு சாரார். ஆங்கிலம் ஆங்கிலேயருடைய மொழி அன்று ; அஃது உலகப் பொது மொழி, அதனால் அதை நமது நாட்டுச் சிறுவர்களும் சிறுமிகளும் கற்றல் நலம் என்று கருதுபவர் மற்றொரு சாரார். நமது நாட்டின் தந்தையாலும் அரசியல் அமைப்பாலும் அறுதியிடப்பெற்றுள்ள இந்தியப் பொது மொழியாகிய இந்தி மொழியை நாட்டின் பொது மொழியாக்க வேண்டுமென்று கருதுபவர் பிறிதொரு சாரார். தாய்மொழி இந்தி அல்லாதவர்கள் இந்தியை எதிர்த்து வருகின்றனர். இந்தி மொழியாளர்கள் இந்தியே வேண்டும் என்கிறார்கள். நடுநிலையாளர் ஒரு சிலர் ஆங்கிலத்தோடு இந்தியும் ஒட்டி வழங்கலாம் என்பர். இந்தி அல்லாத ஏனைய தாய் மொழியினர் தமது தாய்மொழி வழியில் தொடக்கநிலை முதல் கல்லூரி இறுதி வரையில் கல்வி வேண்டுமென்று கருதுகிறார்கள். இதற்கிடையில் இந்தி மொழி வழியில், இந்தித் தாய்மொழி மாநிலங்களில் கல்வி பரவி வருகின்றது. இங்ஙனம் மொழிப் போராட்டம் எங்கும் பரவி விட்டது. நமது மாநிலத்தில் கல்லூரிக் கல்வி தமிழ் மொழியில் அமைக்கப் பெற்று வருகின்றது. இவ்வளவு இடர்ப்பாடுகளுக்கிடையே வட மொழியையும் புறக்கணிக்க முடியவில்லை. அதன் பயனை விரும்புபவர்கள் பெறுவதற்கு அஃது ஒரு

1. Sarvodaya philosophy

விருப்பு மொழியாகிவிட்டது. வடமொழி உருவந்தாங்கிய இந்தி மொழி வடமொழிக்கு ஊறுவிளைக்குமோ என்று வடமொழியாளர் கருதுகின்றனர் கள். இவ்வளவு குழப்பத்துக்கிடையில் நமது பள்ளிகளில் நமது அரசினர் அதுவும் நமது மாநிலத்தில் நல்ல முறையில் மொழித் திட்டத்தை வகுத்துள்ளார்கள். தாய்மொழி அடிப்படையில் மட்டுமே பிற மொழிகளைக் கற்க முடியும் அல்லவா? அதனால் தொடக்க நிலையில் தாய்மொழிக்குத் தக்க ஏற்றத்தைத் தயக்கமின்றித் தந்துள்ளார்கள். ஆங்கிலப் பித்து விடாத காரணத்தாலும், ஆங்கில வாணர்களுடைய நல்லெண்ணத்தைப் புறக்கணிக்கலாகாதென்ற எண்ணத்தாலும் ஆங்கில மொழி, தாய்மொழி கற்ற நான்காண்டுகளுக்குப் பிறகு, ஐந்தாவது ஆண்டில் கற்பிக்கப்படுகிறது. தாய்மொழி கல்வித் தொடக்க முதல் மேல் உயர்நிலைப்பள்ளி இறுதிவரையில் இயற்கையில் கட்டாய மொழியாகும். பல இந்திய மொழிகள் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் தமிழ் நாட்டில் வாழும் ஏனைய மொழியாளர்களுடைய தேவைப்பாட்டிற்கும் வடமொழி இந்தி ஆகிய பொது மொழிகளை விரும்புவோருடைய விருப்பத்துக்கு இசையுமாறு இரண்டாவது மொழி உயர்நிலைப் பள்ளியிலும் மேல் உயர்நிலைப் பள்ளியிலும் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. தாய்மொழி அல்லாத பிறிதொரு இந்திய மொழியை இந்திய நாட்டு மக்கள் கற்க வேண்டியது கடமையாகும். மூன்றாவது மொழியாக வற்புறுத்தப் பெறுவது ஆங்கிலம் அல்லது இந்திய மொழி அல்லாத இலத்தீன் ஃப்ரெஞ்ச் மொழிகள். பின் இரண்டு மொழிகளுக்கு ஆங்கிலத்தின் அடிப்படை வேண்டுமன்றோ! எனவே இவை இரண்டையும் உயர்நிலைப் பள்ளியிலும் மேல் உயர்நிலைப் பள்ளியிலும் அதாவது நான்காண்டுகள் எட்டாவது வகுப்பில் தொடங்கிப் பதினோராவது வகுப்பு வரையில் கற்க வழி உண்டு. இப்புதிய திட்டத்தில் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் தமிழ் மொழியினைத் தமிழ் மக்கள் தக்கபடி கற்பதற்குப் பாடத் திட்டம் அமைந்துள்ளமை மெச்சத் தக்கது. மேலை நாடுகளில் அவரவர் மொழிக்குக் கொடுத்துள்ள உயர்வும் தரமும் பாராட்டுக்குரியன. எனவே உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் தமது தமிழறிவை அத்தரத்துக்குத் தாழ்வுறாது உயர்த்திக்கொள்ள வேண்டியது கடமை.

தாய்மொழியில் நன்றாகப் பேசுவதற்கும், படிப்பதற்கும், எழுதுவதற்கும் நமது மாணவர்கள் பயிற்சிபெற வேண்டியது கட்டாயம். ஆசிரியர்களும் எல்லா வாய்ப்பினையும் அவற்றிற்கு ஏற்ப அளிக்க வேண்டும். இன்றைய நிலையில் தாய்மொழி மறுமலர்ச்சி பெற்றுள்ளது. மாணவர்கள் இடையே பற்றும் வளர்ந்து வருகிறது. அதனை வளர்க்க வேண்டியது ஆசிரியர் கடமை.

கணிதம் :

கணிதம் தொடக்க நிலையிலிருந்து தொடங்கும் ஒரு பாடம். தொடக்க நிலையில் நடைமுறைக் கணிதத்தையே கற்பிக்கின்றார்கள். பிள்ளைகளுடைய வாழ்க்கையோடு ஒட்டாத கணிதம் அவர்களுக்கு வேதனையை உண்டாக்குகிறது. பல தவறுதல்கள் செய்து இறுதியில் ஆசிரியராகப் பதவி ஏற்பவர்கள் தமது இளமைத் தவறுதல்களை மறந்து தமது மாணுக்க இளைஞர்கள் செய்யும் தவறுகளை மன நெகிழ்வோடு அறிய முயற்சி செய்யாது அவர்கள் கணக்குச் சரியாக செய்ய இயலாமைக்கு வன்மையாகக் கண்டித்து அவர்களுடைய ஊக்கத்தைக் கெடுத்து விடுகிறார்கள். எல்லா மாணவர்களும் கணித மேதைகளாக இயலாவிட்டாலும் பள்ளியிறுதி வகுப்பு வரையில் அவர்களுக்கான கணிதத்தை அவர்கள் அறிந்துகொள்ளப் போதிய அறிவு உண்டென்பதற்கு ஐயமில்லை. எழுத்தியற் கணிதம், கோண கணிதம் என்ற இரு பகுதிகளில் பொதுவாக மாணவர்கள் இடர் உறுகிறார்கள். பள்ளியிறுதியோடு நின்றுவிடும் மாணவருக்கு இவ்விரண்டு சிறப்புப் பகுதிகள் பயன்படுவதில்லை. பள்ளியிறுதிப் படிவங்களில் இவற்றை நடைமுறைக் கணிதத்தோடு [1] கலவைக் கணித என்ற ஒன்றினைக் கற்றுக் கொடுக்கிறார்கள். எனவே மாணவர்கள் ஒரு சிலர் கலவைக் கணிதத்தையும் மற்றவர்கள் பொதுக் கணிதத்தையும் கற்கின்றார்கள். ஆனால் பொதுக் கணிதத்திலும் வாழ்க்கையில் பயன்படாத எழுத்தியல் கோண கணிதப் பகுதிகளை நுழைத்துப் பொதுக் கணிதத்தையும் கடினமாக்குவது வழக்கமாகி விட்டது. ஆசிரிய நிலையில் எல்லாம் எளிதாகக் காணலாம். மாணவருடைய நிலையில் அல்லவோ கணிதத் திட்டத்தினை வகுக்க வேண்டும்!

பொது அறிவு :

தொடக்க நிலையில் இதை இயற்கைப் பாடமாகவும் தோட்ட வேலையாகவும் கற்பிக்கிறார்கள். இந்த இரண்டு பகுதிகளும் நேரடியாகக் கற்பதற்கு வாய்ப்புள்ளவை. ஆனால் ஆசிரியர்கள் இவற்றைப் புத்தகப் பாடமாக்கி விடுகிறார்கள். தொடக்க நிலையில் மட்டும் புத்தகப் பாடமாக்கப் படுவதில்லை. உயர் நிலைகளிலுங்கூடப் பொது அறிவு என்ற பெயரில் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட பொது அறிவாகப் பாடங்கள் அமையாது தனித்தனியாக மனித உடல் நூல், அறிவியல், இரசாயனம், பயிரியல், விலங்கியல் ஆகிய பகுதிகளாகப் பிய்த்துப் பிய்த்துக் கற்பிப்பதனால் பொது அறிவியல் எற்றுக்கோ என்று நினைக்க வேண்டியதாகிறது. உயர்நிலை அளவில் தனித்துறைப் புலமையை நாம் கைவிட்ட பாடில்லை. பொது அறிவியலில் கற்பவை எல்லாம் நடைமுறை வாழ்க்கையோடு நாட்டம் பெருது விட்டால் இளமைப்

1. Composite Mathematics

பருவத்தில் இப்பாடங்கள் நெட்டுருப் பாடங்களாகத் தொடங்கி மறக்கும் பாடங்களாகி மறைகின்றன. இந்நிலையில் மாணவர்கள் பொது அறிவு கடினமாக உள்ளது என்ற குறைப்பட்டுக் குமுறுவது கண்கூடு. ஒவ்வொரு பகுதியின் பாடம் ஒவ்வொன்றினையும் தக்க துணைகளோடு கற்பியாது வெறும் ஏட்டுப் பாடமாகவும், வினு விடையாகவும், கற்பித்தல் கூடாது. ஒரு சிலர் சோதனைகளைக் கரும்பலகையிலேயே வரைந்து காட்டி விடுகிறார்கள். கரும்பலகை பரிசோதனைக்கு உதவுமா, அது வேண்டிய தூண்டலை உள்ளத்தில் இயற்றுமா என்பதை ஆசிரியர்கள் அறிய வேண்டும். அரசினர் திட்டத்தில் மாணுக்கர்கள் ஒவ்வொருவரும் சோதனைகள் செய்தே கற்கவேண்டும் என்ற ஆணை இருந்தும் கூடப் பிள்ளைகளுக்கு வாய்ப்பளிக்காது விடுவது பெரும் குறையாகும். பொது அறிவுப் பாடத்தால் உயர்நிலைத் தகுதியில் நமது மாணவர்கள் பெரிய அறிவியலறிஞர்களாக மாற இயலாது. ஆனல் அவர்கள் உயர் நிலைப் பருவத்தின் பின்னர் அறிவியலார்களாவதற்கு வித்திட்டுக் கொள்ளலாம். ஆசிரியர்களும் அவர்களுக்கு வேண்டிய ஆக்கத்தைத் தந்து ஊக்கத்தை ஊட்டலாம். மற்ற பிள்ளைகள் சூழ்நிலையிலுள்ள அறிவியல் நிகழ்ச்சிகளை அறிவதற்கு வழி வகுத்துக்கொள்ள வேண்டாமா? அல்லது அறிவியல் முறை யாதென்றுவது அறிய வேண்டாமா? பத்தாண்டுகள் அறிவியலைக் கற்றும் மாணவர்களுக்கு அறிவியல் மனப்பான்மை இல்லாததன் காரணம் யாதென்று அறிவியல் ஆசிரியர்கள் ஆராயவேண்டும். எனவே இஃது ஆசிரியத்தின் ஊக்கமின்மையா? அல்லது அவர் முறையின் குறைபாடா என்பவை முதற் சோதனை. அறிவியலில் எந்தப் பாடத்தையும் மாற்றி அமைத்துக் கொள்ளுதல் நலம். பிற நாடுகள் அறிவியல் முன்னேற்றத்தை நூலளவிலும் பத்திரிகை அளவிலும் ஆராய்ச்சிப் பட்டங்களுக்கு உற்ற கட்டுரை அளவிலும் முன்னேற்றமாகக் கருதவில்லை. ஆனல் அவர்கள் அறிவியல் பலவற்றை இயற்றி உதவுகிறார்கள்; உலகைத் திடுக்கிடச் செய்கிறார்கள். நமது இளைஞர்களாகிலும் புத்தறிவைப் பெற அறிவியல் ஆசிரியர்கள் உதவுவார்களா?

சமூக அறிவியல் :

பழைய ஏற்பாட்டில் வரலாறு, நிலநூல், நகராட்சி ஆகிய பாடங்களைத் தனித்தனியே கற்பித்து வந்தார்கள். இவை இயற்கையாகத் தொடர்புற்றவையாயின் ஒன்றோடொன்று ஒட்டாது தனித்தனிப் பாடங்களாகவே கற்பிக்கப் பெற்றன. இவையும் புத்தகப் பாடங்களாகின. இறுதியில் வினு விடைகளாக மாறி இருந்தன. அவற்றிலும் தேவையான தேர்வு வினுக்கள் மட்டுமே வீறுபெற்றன. மற்றவை ஒதுக்கமுற்றன. நாம் உரிமைபெற்ற பிறகு சமூக வளர்ச்சியை நன்ருக அறிதற் பொருட்டுச் சமூகத்தோடு நல்ல முறையில் நல்ல பண்புகளோடு உறவாடுதற் பொருட்டும் பொறையுணர்வு, ஒருவருடைய உரிமை, மற்ற

வருடைய கடமை, ஒத்துரிமை, உடன் பிறப்புணர்வு, உலகத்தோடு ஒட்ட ஒழுகல், "யாதும் ஊரே யாவருங் கேளிர்" ஆகிய பரந்த நோக்கத்தைப் புகுத்தவும் தனது தனித்த நாட்டு நல்லதொரு குடிமகனுகத் தொடங்கி உலகக் குடிமகனுக வளரும்படிக்கும் உதவக்கூடிய வாழ்க்கைப் பயிற்சியினை அளிக்கவல்ல ஒரு பாடக் காட்சியினைக் காண விழைந்தவர்கள் சமூக அறிவியல் என்ற ஒரு பாடத்தைச் சமைத்து உதவினுர்கள். கடந்த பன்னீராண்டுகளாக நமது மாநிலத்தில் இப்பாடம் வழி வழி ஆசிரியர்களிடத்தே ஒரு கிளர்ச்சியை உண்டாக்கி நமது பள்ளிகளில் உருவெடுத்தது. இப்புதிய பாடத்தைக் கண்டு புழுங்கியவர்கள் பலர்; புத்துயிர் பெற்றவர்கள் சிலர்; மெய்ம்மயிர்ச் சிலிர்ப்பு அடைந்தவர்கள் மற்றையோர். இதை நல்ல முறையில் அறிந்து கொண்டவர்கள் நல்ல பயனைத் தமது மாணவர்களுக்கு அளிக்கின்றனர். நமது வாழ்க்கை நமது முன்னேர் தேடிவைத்த செல்வம் என்பதனை உணரும் வகையில் வரலாற்றுப் பகுதியையும் மனிதன் இயற்கையின் உதவியால் தனது தேவைப்பாடுகளை நிறைவு செய்து கொள்ளுகிருன் என்பதை அறிய நில நூலையும் இதரவற்றிற்கு மற்றவற்றையும் தொடர்புகொண்டு பெறுகின்ருன் என்றும் அறிய நிலநூலை வரலாற்றுப் பகுதியோடு இயைபுபடுத்தி இக்கருத்துக்களை செயல்முறையிலும் வெளிச் செலவு செய்தும் கற்றுக்கொள்ளுகிருர்கள். இவையே இப்பாட ஏற்பாட்டினரின் நோக்கம். ஆனல் அஃது அல்லாது இதற்கும் ஒரு பாடப் புத்தகம் இயற்றிப் புத்தகப் பாடமாக்கிச் சிறு குறிப்புக்களும், வினு விடைகளும் உண்டு பண்ணி நெட்டுருச் செய்து தேர்வெழுதும் நிலைமை நீடித்தால் இதனைக் கற்பதனுலாய பயன் என் கொல் என்றே வினவ நேரும். அதனுல் இந்தக் கலவைப் பாடத்தின் குறிக்கோள்களை ஒரு சிறிதும் நழுவ விடாது மாணவர்களுக்குக் கற்பித்தல் ஆசிரியரது கடமை.

ஓவியம் :

குழந்தைகள் எழுதத் தொடங்குவதற்கு முன்னே கோடுகளையும் வட்டங்களையும் எந்த எழுதுகோலைக் கையில் ஏந்திஞலும் தரையிலும் சுவரிலும் எங்கும் கீறிக் களிப்பெய்துகிருர்கள். வட்டம் வட்டமாக அவர்கள் சுழித்துக்கொண்டே இருப்பதை நாம் பார்க்கின்ருேம். எழுதத் தொடங்குவதற்கு முன்னரே அவர்கள் பார்க்கின்ற பறவைகளையும், விலங்குகளையும் சித்திரமாக வரைகின்ருர்கள். இவையெல்லாம் குழவிப் பருவத்திலேயே சித்திரம் தீட்டும் ஆற்றல் உள்ளதென்பதைக் காட்டுகின்றன. இதை மதித்துத் தொடக்கநிலைப் பள்ளி முதல் எட்டாவது வகுப்பு வரையில் சித்திர வகுப்பு வாரத்துக்கு ஓர் அகவை உண்டென்பது நமக்குத் தெரியும். நமது குழந்தைகளிடத்தில் இயல்பாக உள்ள சித்திர வன்மையைச் சித்திர ஆசிரியர் வளர்க்க வேண்டியது கடமை. ஆனுல் அவ்வகுப்பை ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பாக நமது பள்ளிகள் கருதுகின்றன. நன்ருகச் சித்திரம் வரையக்

கூடிய மாணவர்கள் அழகுணர்ச்சியை வளர்க்க முடியும். அழகுணர்வு தன்னையும் தன் சூழ்நிலையையும் அழகாக்கிக்கொள்ள உதவும். நன்ருகப் பள்ளிகளில் சித்திரம் வரையக் கற்றுக்கொண்டவர்கள் தமது வாழ்க்கை முழுவதும் அதைத் தமது ஒய்வுநேரத் தொழிலாகக் கொள்ளுகிருர்கள்.

மாணவப் பருவத்திலேயே சித்திரம் பல பாடங்களுக்குத் துணை புரியுமன்ருே! எல்லாப் பாடங்களிலும் அவற்றைச் சார்ந்த பல சித்திரங் கள் வரைய வேண்டியதாகிறது. எடுத்துக்காட்டாக கோண கணிதப் படங்கள் வரையவேண்டும். அறிவியற் பாடத்தில் துணைக்கருவிகள், சோதனைகள் ஆகியவற்றின் படங்கள் வரைய வேண்டி இருக்கிறது. சமூக அறிவியல் பாடத்தில் தேசப் படங்கள் வரையவேண்டும். இவற்றை எல்லாம் நன்ருக வரைவதற்குச் சித்திர வகுப்பன்ருே உதவ வேண்டும். ஆசிரியர்களுக்கும் இப்பயிற்சி வேண்டற்பாலது. கணித ஆசிரியர் அறிவியல் ஆசிரியர்கள், சமூகப்பாட ஆசிரியர் ஆகியோர் கரும்பலகையில் ஒழுங்காகப் பாடங்களை விளக்கும் படங்களை வரை யாது தமது விருப்பம்போல் கோணல் மாணலாக வரைகின்ருர்கள். கரும்பலகையில் தாய்மொழியன்றி வேறு எந்த மொழியினை எழுதி ஞலும் ஒழுங்காக எழுதுவதில்லை. அலட்சியமாக எழுதுகிருர்கள். இவர்கள் எழுதுவது பிள்ளைகளுக்கும் விளங்குவதில்லை. ஆசிரியர் அக்கறை இல்லாது எழுதுவதை மாணவர்கள் கண்டு ஆசிரியரை மதிப் பிடுகிருர்கள் அல்லவா! ஆசிரியர் விளக்குவதை மரணவர்கள் நன்ருகப் புரிந்து கொள்ளுவதற்கல்லவா கரும்பலகை பயன்படுகிறது? ஆகை யால் எதை வரைந்தாலும் ஆசிரியர் ஒழுங்காக வரைதல் கடமையாகும்.

ஒரு சில பள்ளிகளில் சித்திரத்துக்கு ஏற்றமளிக்கின்றனர். பள்ளி யில் கண்காட்சி ஏற்படுத்துவதென்ருல் சித்திர ஆசிரியரை எல்லாரும் தேடுகின்ருர்கள். சித்திர ஆசிரியர் அப்போது விழித்துக்கொண்டு மாணக்கரைத் தேடுகின்ருர். அவர்களுக்குச் சித்திரம் வரையத் தெரியுமா என்றும், வண்ணம் தீட்டத் தெரியுமா என்றும் வினவுகிருர். ஒருசில நாட்களில் 'பள்ளி மாணவருள் பலர் அவர்கள் இயற்றக் கூடியவற்றைத் தந்துதவுகிருர்கள். இவ்வாறு ஆண்டுக்கு ஒருமுறை மாணவர்கள் ஊக்கம் பெறுகிருர்கள். கண்காட்சி முடிந்தவுடன் எல்லாம் மறக்கப்பெற்று விடும். ஆசிரியரும் மாணவரும் அயர்ந்து விடுவார்கள். ஒருசில பள்ளிகளில் சித்திரக்கலை அறை என்று ஒன்று காணலாம். அத்தகைய பள்ளிகளில் ஊக்கம் பெறும் மாணவர்கள் ஒய்வு நேரங்களில் சித்திரம் வரைந்து இன்புறுவார்கள். நமது மாநில உயர்நிலைப் பாடத் திட்டத்தில் பலவகைச் சித்திரங்களில் பயிற்சி அளிக்க இடம் வகுத் துள்ளனர். பள்ளியில் ஓர் அறையையும் கட்ட ஆணை உண்டு. தொடக்கநிலை வகுப்புக்களைத் தொடர்ந்து உயர்நிலை இறுதி வரையில் ஓர் அகவைக்குப் பதிலாக இரு அகவைகள் சித்திரத்திற்கு ஒதுக்கப் பெற்றுள்ளன.

இசை :

இசை பெரும்பான்மை ஆண் பள்ளிகளில் கற்றுக்கொடுப்பதில்லை. பெண் பள்ளிகளில் இது கற்பிக்கப்படுகிறது. எக்காரணத்தால் ஆண் பிள்ளைப் பள்ளிகள் இதைக் கற்றுக்கொடுப்பதில்லை என்பது அறியத் தக்கது. சிறந்த இசைக் கலைஞர்களில் பெண்கள் சிலர், ஆண்கள் பலராவர். ஆனால் பள்ளி ஆண்டு விழாவின்போது கலப்பு நிகழ்ச்சி களில் பாடக்கூடிய ஆண் பிள்ளைகளை ஆசிரியர்கள் தேடுகிறார்கள். இசை ஆசிரியரைக் கொண்டு நிகழ்ச்சிகளுக்காகச் சில இசைப் பாட்டுக் களைக் கற்றுக்கொடுக்கிறார்கள். விழா முடிந்தவுடன் இசை நசித்துப் போகும். இசைப்பவர் யாரும் இரார். புதிய திட்டத்தில் உயர்நிலை மூன்று வகுப்புக்களில் ஈரகவைகள் ஒதுக்கப் பெற்றுள்ளன. ஆண்பாற் பிள்ளைகளும் தொடக்கநிலை முதல் இசைப்பயிற்சி பெற்றுத் தமது வாழ்வில் இசை காண்பது நல்லது. ஆசிரியர்களும் தம்மால் இயன்ற வரை இசைத்திறமை பெற்றுத் தமது தகுதியை உயர்த்திக் கொள்ளு வதும் நல்லது.

ஆங்கிலத் தாய்மொழிச் செய்யுட்கள் அல்லது எம்மொழிச் செய்யுட் களாயினும் நமது ஆசிரியர்களும் மாணவர்களும் உரைநடையைப் போன்று படிக்கின்றார்களே அன்றி அதனதனுக்கேற்ற இசையோடு இசைப்பதில்லை. அதனால் செய்யுட் பாடங்கள் இசையற்ற உரைநடைப் பாடங்களாகின்றன. மாணவர்கள் உரைநடைக்கும், செய்யுளுக்கும் வேறுபாடு காண்பதில்லை. இசையோடு ஒலித்தால் மாணவர்கள் செய்யுளின்பம் காண்பார்கள்.

கைத்தொழில் :

இது கைவேலையாகத் தொடக்க நிலையில் தொடங்குகிறது. ஆசிரியர் விடாக் கண்டனாக இருந்தாலன்றிக் கைத்தொழில் வகுப்புக் கள் கண்ணோட்ட வகுப்புக்களாகி விடும். பிள்ளைகள் உட்கார்ந்து எழுந்து செல்லுவார்கள். வகுப்பு நேரம் வீணாக்கப்படும். அக்கறை உள்ள ஆசிரியர் ஒவ்வொரு பிள்ளையின் பயிற்சியையும் கவனித்துப் பணியாற்றுகிறார். ஊக்கமுள்ள பிள்ளைகளுக்கு அதிகப் பயிற்சி அளிக் கிறார். பிள்ளைகளுடைய படைப்பாற்றல் வெளியாகிறது. நமது மாநில அரசினர் திட்டத்தில் தோட்டக்கலை, நூல் நூற்றல், நெய்தல், மரவேலை, குடும்பக்கலை, உலோக வேலைப்பாடு ஒவ்வொன்றுக்கும் திட்டம் வகுத்துள்ளது. இவற்றுள் குடும்பக்கலை பெண் பள்ளிகளுக்கு உரியது. இதனோடு தையல் வேலைப்பாடுகள் கற்றுக்கொடுக்க வேண்டு மென்று அக்கலையும் இணைக்கப் பெற்றுள்ளது. உதவிக் கலைகளாகத் தையற்கலை, மின்சாரக் கம்பி போடுதல், தோற்கலை, புத்தகங் கட்டுதல், களிமண் வேலை, காகிதம் செய்தல் ஆகியவற்றிற்கும் திட்டமுள்ளது.

எல்லாப் பிள்ளைகளுக்கும் கைத்திறன் உண்டென்ற நம்பிக்கை

முதற்கண் ஆசிரியர்பால் தோன்ற வேண்டும். பிள்ளைகள் தமது இல்லச் சூழ்நிலையில் தாம் விரும்பாமலே பக்கலில் பார்த்துப் பார்த்துக் கற்றுக் கொள்ளுகிறார்கள். பல குடும்பங்களில் தொழிலாளிகள் உண்டு. அத்தகைய குடும்பத்துப் பிள்ளைகள் பெரியவர்கள் செய்யும் தொழிலைக் கண்ணால் கண்டும் அவர்கள் அதைப்பற்றிப் பேசுவதைக் காதால் கேட்டும் அதைப்பற்றி அறிந்து கொள்ளுவதோடு ஆர்வமும் பெறுகிறார்கள். பிள்ளைகள் பெரும்பாலோர் தமது தந்தையருடைய தொழிலைப்பற்றி நன்றாக அறிந்து கொள்ளுகிறார்கள். தொழிலாளியாக இருந்தால் ஓரளவு அத்தொழிலினையும் கற்றுக்கொள்ளுகிறார்கள். தொழிலாளி தனது வீட்டிலேயே தனது தொழிலை நடத்துபவராக இருந்தால் தொழிலை நன்றாகக் கற்றுக்கொள்ளுகிறார். எனவே பள்ளி மாணவர்களுக்குத் தாம் கல்லாமலே கற்ற ஒரு தொழில் தெரியுமென்பதில் சிறிதும் ஐயம்கொள்ள வேண்டியதில்லை.

சிலவாண்டுகளுக்கு முன் யான் எமது எடுத்துக்காட்டு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரை அழைத்து மாணவர் கைத்திறன் கண்காட்சிக்காக ஏற்பாடு செய்யச் சொன்னேன். அவர் தமது உடனாசிரியர்களைக் கலந்து இயல்வதைச் செய்வதாகக் கூறிச் சென்றார். ஆசிரியர்கள் கூடுவதற்கு முன் மாணவரை வினவி அவர்கள் அறியும் தொழில் அல்லது தொழில்கள் விருப்புத்தொழில் ஆகியவற்றைக் கேட்டு ஒவ்வொரு வகுப்புக்கும் பட்டியல் போடச் சொன்னேன். தலைமை ஆசிரியர் விவரத்தைச் செப்பிச் சுற்றறிக்கை விடுத்தார். அன்று மாலை ஆசிரியர்கள் எல்லாரும் மாணவர்களுக்கு ஒன்றும் தெரியாதாம் என்று தலைமை ஆசிரியரிடம் கூறிவிட்டுச் சென்றார்கள். அடுத்த நாள் தலைமை ஆசிரியர் யாம் விரும்புவது நடைபெறாதென்று ஆசிரியர்கள் தமக்குக் கை விரித்தபடியே எனக்கும் கைவிரித்துவிட்டார். கைத்திறன் கண்காட்சி பலவற்றினை யான் தலைமை ஆசிரியனாக இருந்த ஆண்டுகளில் தொடர்ந்து நடத்தியதோடு, பிள்ளைகள் அவரவர்களுடைய திறன்கள் வளரப்பெற்ற காரணத்தால் திறமைசாலிகளாகப் பல தொழில்களில் தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டதும் எனக்குக் கண்கூடு. மேற்படிப்புப் படிக்க வழியற்றவர்கள் ஏட்டுப் படிப்பு எட்டாதவர்கள் நமது நாட்டில் வாழவேண்டும் அல்லவா? அத்தகையோர்க்கு இளமையில் ஆற்றலின் ஆக்கமும் நமது பள்ளிகள் தந்துதவினால் பல தொழில்களில் அவரவர் தகுதிக்குரிய ஒன்றினைத் தேர்ந்து வாழ வழி வகுத்துக் கொள்ளுவார்கள். நமது பள்ளிகளில் பள்ளி யிறுதித் தேர்வில் நூற்றுக்கு முப்பது நாற்பது பிள்ளைகளுக்கு மேல் தேர்ச்சி தேடி உதவ இயலாத நிலையில் எஞ்சிய அறுபது பிள்ளைகளுக்குப் பள்ளிகள் வழி வகுக்காவிட்டால் அவை தோன்றியிருத்தலில் தோன்றாமை நன்று. அல்லது நூற்றுக்கு நூற்றுவர் தேர்ச்சி பெற வழி காணவேண்டும்.

ஒரு நாள் கைவிரித்த தலைமை ஆசிரியரை அழைத்துக் கொண்டு

ஒரு படிவப் பிரிவுக்குச் சென்றேன். நீண்டதொரு காகிதமும் எழுதுகோலும் என் கையில் இருந்தன. பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் என்னென்ன கை வேலை தெரியுமென்று கேட்டேன். அதற்குமுன் அவர்களுடைய ஆற்றல்களைப் பற்றியும் திறமைகளைப் பற்றியும் அவர்களுக்கு யாதாகிலும் ஒன்று இரண்டு வேலைகள் தெரிந்திருக்குமென்றும் கூறி ஆர்வப்படுத்தினேன். ஒருவர் பின் ஒருவராக நின்றார்கள். ஒவ்வொரு மாணவனும் தனக்குத் தெரிந்த ஒரு தொழிலின் பெயரைக் கொடுத்தான். பலர் இரண்டு மூன்று தொழில்களின் பெயர்களைக் கொடுத்தார்கள். நாற்பத்தைந்து பிள்ளைகள் உள்ள அந்த வகுப்பில் தொழில்களை வகைப்படுத்தும்போது அறுபத்திரண்டு வகைகள் எண்ணப்பெற்றன. தலைமையாசிரியரை மற்ற வகுப்புக்களுக்குச் சென்று பட்டியல் தொகுக்கும்படிக் கேட்டுக்கொண்டேன். அவரும் பற்றோடு பட்டியலைத் தொகுத்துப் பல கச்சாப்பொருள்களைத் தந்துதவி வேண்டிய வசதிகளை உண்டாக்கிக் கண்காட்சியினை ஏற்படுத்தினார். அப்போது பள்ளியின் ஐந்நூறு மாணவ மாணவிகள் நூற்றி இருபத்தைந்து கைத்தொழில்களை இயற்றிக் காட்சி அளித்தார்கள். அஞ்ஞான்று கைத்தொழில் ஆசிரியர் தலை நிமிர்ந்து நின்றார். பிள்ளைகளின் தொழிற்றிறனைக் கண்டவர்கள் மகிழ்ந்தார்கள். பிள்ளைகளுடைய ஆற்றலுக்கும், திறமைக்கும் வாய்ப்பிருந்தால் அவர்களுடைய கைவன்மையை வரம்பின்றிக் காணலாம்.

குடிமைப் பயிற்சி :

இஃது நமது மாநிலத்தில் நாம் உரிமைபெற்ற பிறகு புதியதாகப் பாட ஏற்பாட்டில் சேர்த்துக் கொள்ளப் பெற்றது. வருங்காலத்தில் நல்ல குடிமகனாவதற்கு இளமையிலேயே அளிக்கும் பயிற்சி இது. சமூக உணர்ச்சி, ஒழுங்கு முறை, பொறுப்பேற்கும் பயிற்சி, பணி புரியும் மதிப்பு, ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல், தொண்டாற்றுதல் ஆகிய இன்னோரன்ன நற்பழக்கப் பயிற்சியால் நல்ல குடிமகனாக விளங்கச் செய்தல் இதன் நோக்கம். இதன் வழியாகப் பலப்பல நல்ல பண்புகளை மாணவர்களிடையே வளர்க்க இயலும். அதனால் பள்ளியின் பல சூழ்நிலைகளில் மாணவர் தமது பொறுப்பாற்றிப் பணி புரிதல் முதற்கண் பழக்கமாகத் தரப்படுகிறது. மக்களாட்சியில் பொறுப்பேற்க வேண்டியவர்களாகையால் இளமையிலேயே பிள்ளைகளைப் பள்ளிக் குடியாட்சியின் உறுப்பினர்களாக்குகிறார்கள். பள்ளிப் பொது ஆட்சியோடு வகுப்பாட்சியிலும் மாணவர்க்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. ஒவ்வொரு வகுப்பினையும் ஐந்து ஆறு குழுக்களாகப் பிரித்தல், ஒவ்வொன்றுக்கும் மாணவர்த் தலைவனைத் தேர்தல், மாணவர் சிக்கல்களைத் தீர்த்து வைத்தல், எல்லாப் பொறுப்பையும் மாணவர்களே ஏற்றுக் கொள்ளுதல், பள்ளியினை மாணவர்கள் தமதெனக் கொண்டு பெருமையை அடைதல் ஆகியவற்றிற்கெல்லாம் குடிமைப் பயிற்சி

உதவுகிறது; பிற்போக்கு மாணவர்களை முற்போக்கு மாணவர்கள் திருத்துவது. அவர்களுடைய குறைபாட்டினை நீக்குவது; அவர்களுக்குப் பாடங்களைக் கற்றுக்கொடுப்பது; ஆசிரியர்களுக்கு உதவி புரிவது ஆகியவை எல்லாம் மாணவர்களுக்குப் பள்ளியின்பால் ஊக்கமும் அவர்களைத் தலை மாணாக்கர்களாகுவதற்குப் பழக்கமும் அளிக்கின்றன.

இத்தகைய நல்லதொரு பயிற்சி அளிக்காது நமது ஆசிரியர்கள் சோம்புவது வருந்ததத்தக்கது. பாடத்திட்டப்படிப் பல பழக்கங்களை மாணவர்கள் பெற்றால் நல்ல பண்புடையவர்களாவார்கள் என்பது திண்ணம். அல்லாது குடிமைப்பயிற்சி வகுப்புக்களைத் தேர்வுப் பாடங்களுக்காகப் பயன்படுத்துவது ஆசிரியத்துக்கே இழுக்காவதன்றி மிகவும் வன்மையாகக் கண்டிக்கத் தக்கதுமாம். நல்ல முறையில் குடிமைப்பயிற்சி நடைபெறும் பள்ளிகளில் மாணவர்கள் அளிக்கும் காட்சி மாண்புற்றது. அங்குள்ள பிள்ளைகளின் நடத்தை, ஒழுக்கம், நல்ல குணம் யாவும் பாராட்டத் தக்கவை. ஒவ்வோர் ஆசிரியரும் குடிமைப் பயிற்சித் திட்டத்தை நன்குக உணர்ந்தவர்கள். ஆசிரியப் பயிற்சிக் காலத்திலும் அதனை அறிந்தவர்கள். ஆகையால் வகுப்பாசிரியர் ஒவ்வொருவரும் அதன் இலக்கணங்களை நன்குக அறிந்து திட்டப்படி பயிற்சி தரவேண்டும். குடிமைப் பயிற்சியை ஓர் ஏட்டுப் பாடமாகக் கருதுவது தவறு. பள்ளி அறையில் அது நடைபெற வேண்டியதில்லை. வகுப்பறையில் நடைபெறுவதெல்லாம் துப்புரவு ஒன்றே ஆகும். மற்றவை யாவும் வெளியில் நடைபெற வேண்டியவை. இளமையில் இப்பயிற்சி தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்ற முதுமொழிக்கு இலக்காகும். ஆசிரியர் இக்கடமையினைத் தவிர்க்கலாகாது.

அறக்கல்வி :

நமது நாடு சமயச் சார்பற்றது. சமயப் பிணக்குகள் அரசியலைப் பாதிக்கக் கூடாதென்று அறிந்த அரசியல் அமைப்பினர் நமது நாட்டினைச் சமயச் சார்பற்றதாக முன் மொழிந்துள்ளார்கள். எம்மதமும் சம்மதம் என்பது பேரறிவாளர் கண்ட முடிவு. பள்ளிப் பிள்ளைகள் பல மதத்தினர். அதனால் ஒரு மதத்தைச் சார்ந்த மாணாக்கர்கள் பிற மதங்களைக் குறை கூறுதபடியும் அவர்கள் தமது மன நிறைவினை அதில் காணும்படியும் ஆசிரியர் ஓர் ஒத்துணர்வு மனப்பான்மையைப் பரவச் செய்தல் நலம். ஆனால் நமது பள்ளிகளில் சமயக்கல்வி இல்லை. அக்காரணத்தால் நமது பிள்ளைகள் கடவுள் நம்பிக்கையின்றிக் கடைத்தேற முடியும் என்பது பொருளன்று. நாம் செய்யும் பல செயல்களையும் நமக்கு மேலான ஒருவர் கண்காணிக்கின்றாரென்றும் நன்மையைச் செய்தால் நலனடைவோம் என்றும் தீமையைச் செய்தால் துன்புறுவோம் என்றும் நமது மாணவர்களுடைய பிஞ்சு

உள்ளங்கள் நன்கறியச் செய்ய வேண்டும். ஆசிரியர் தமது மதத்தை உயர்த்தியும் மற்றவர்கள் மதத்தைத் தாழ்த்தியும் பேசக்கூடாது.

மதச் சார்பற்ற நாட்டில் நம் பள்ளிகளில் அறவழியே இறைவழி என்பதை வற்புறுத்தி அறவழிகளை விரித்துரைக்க வேண்டும். தமிழ் நாட்டில் திருக்குறளைப் போன்ற அறநூல் வேறொன்றில்லை. தமிழ் இலக்கியத்தில் நீதி நூல்கள் பல உள. ஆசிரியர்கள் ஒரு திட்டத்தைத் தாமே வகுத்து அதன் வழியில் அற வாழ்க்கையை வற்புறுத்த வேண்டும். வையத்து வாழ்வாங்கு வாழ்வதெப்படி என்பதனை வள்ளுவத்தின் வழியாக வழிகாட்டுவதே நமது தமிழ் நாட்டுக்குச் சிறந்தது.

அறக்கல்வி ஒன்று உண்டா என்று வினவுவார் உளர். அறக் கல்வி ஆசிரியர் என்று ஒருவர் பணியேற்ருல் மற்றவரெல்லாம் மறக் கல்வி ஆசிரியர்களா என்ற ஐயம் பிறக்குமல்லவா! பாட ஏற்பாட்டி லுள்ள பாடங்களெல்லாம் அறப்பண்பு அற்றவையா என்ற ஐயப்பாடும் நிகழும். எல்லாப் பாடங்களும் அறவழியின்பாற் பட்டவை என்பதற்கு ஐயமில்லை. அதனலன்ரே ஹெர்பார்ட் என்ற கல்விப் பேரறிஞர் எல்லாக் கல்வியையும் திரட்டி அறவழி எனப் பொருள் கூறலாமென்று எடுத்துக் காட்டியுள்ளார்.

XVII

கல்வி வரலாறு

கல்வி வரலாறே நாகரிக வரலாறு எனக் கொள்ளுதல் பொருந்தும். கல்விப் பொருளைக் குறித்து யாரும் எதையும் பேசுவதைக் கேட்கின்றோம். படியாத பாமரருங்கூடக் கல்வியைப்பற்றி விரிவுரை செய்வர். குழவி பிறந்த நாள் முதல் கல்வி தொடங்குகிறது. தாய், முதல் ஆசிரியை. அதன் உடலை வளர்க்கத் தனது பாலைக் கொடுத்துக் குடிக்கக் கற்றுக்கொடுக்கிறாள். அது முதல் கல்வி தொடங்குகிறது. அவள் கற்றுக் கொடுப்பதெல்லாம் குழவி தன் உடலைப் பேணுவதற்கே ஆகும்; ஒவ்வொரு பண்டத்தையும் சுவைத்துண்ணக் கற்றுக்கொடுக்கிறாள்; உடலைக் காத்துக்கொள்ளப் பலப் பல எச்சரிக்கைகள் தந்து உதவுகிறாள். 'தாயோடு அறுசுவைபோம்' என்ற வாக்கு தாய் தான் பெற்ற குழவியை நல்ல உணவுப் பொருள்களைக் கொடுத்து வளர்க்கிறாள் என்பதனை விளக்கும். 'ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே' என்பதும் அதுவே. தந்தை தனக்குத் தெரிந்தவற்றை எல்லாம் பிள்ளைக்குக் கற்றுக் கொடுக்கிறான். சிறந்தவனாக அவன் விளங்குமாறு வழி செய்கிறான். "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே". எனவே தாயும் தந்தையும் முதல் ஆசிரியர்களாகத் தொன்றுதொட்டு விளங்கியுள்ளார்கள். நமது நாட்டில் மட்டுமன்று; எல்லா நாடுகளிலும் எல்லா மக்களிடையிலும் எந்த நாகரிகத்திலும் தொன்மையிலும் இன்றைய நன்மையிலும் இதுவே வழிவழி வந்த கல்வி வழக்கு. விலங்கினங்களுங்கூடக் குழவிப் பருவத்தில் தமது குட்டிகளையும் குஞ்சுகளையும் போற்றி வளர்க்கின்றன. தாய்ப்பூனை தன் குட்டிகளுக்கு எலிபிடிக்கக் கற்றுக் கொடுப்பதைக் கண்டவர்கள் வியப்படைந்து விடுவார்கள். சிற்றினமாகிய கோழியும் தனது குஞ்சுகளைப் பேணி இரைதேடக் கற்றுக் கொடுக்கிறது. எனவே பண்டைக்காலத்தில் விலங்கோடு விலங்காகவும் மனித இனத்தோடு மனிதனாகவும் வாழ்ந்த ஆதி மக்களும் தமது பிள்ளைகளுக்குத் தமக்குத் தெரிந்தவற்றைக் கற்றுக் கொடுத்தார்கள். இன்றும் அவர்கள் இருக்கும் பகுதிகளில் அத்தகைய பொறுப்பாற்றலைக் காணலாம்.

பண்டை மக்களுக்கிடையே அவர்களுக்குத் தெரிந்தவற்றை அவர்கள் குழந்தைகளுக்குக் கற்பித்துப் பழகச் செய்தல் என்ற முறையொன்றே கல்வி ஆகும். அவர்களுடைய நாகரிகமும் எளியது. அவர்கள் கற்றுக்கொடுக்க வேண்டிய பழக்கங்களும் எளியவை. அவர்களும் அவர்களுக்குற்ற கூட்டத்தார்களோடு பொருத்தப்பாடு கொண்டார்கள். இன்று நாம் மிகுதியாக வற்புறுத்தும் சமூகக் கல்வி

யும் அவர்களிடையே காணப்பட்டது. இன்றைய நாகரிகச் சூழலில் சமூகத்தில் பொருத்தப்பாடு காண்கின்ருேம். அன்றைய எளிய சமூகத்தில் அவர்களும் பொருத்தப்பாடு கண்டார்கள்.

ஆதி மக்கள் எளிய வாழ்க்கை நடத்திஞர்கள். கல்வி என்ருல் வாழ்க்கை என்று இன்று பொருள் தருகிருேம். அன்றும் பழைய மக்கள் தமது குழந்தைகளுக்கு வாழ்க்கையைக் கற்றுக்கொடுத்தார்கள். அவர்கள் வாழ்க்கை எல்லாம் வேட்டையாடுதலும் மீன் பிடித்தலும் வயிற்றை வளர்த்தலுமே ஆகும். இயற்கையோடு போராடுவதோடு மக்களோடு மக்களும் போரிட்டுக் கொண்டார்கள். அவர்கள் வழி பட்ட தெய்வங்களெல்லாம் இயற்கைக் கோலக் காட்சிகளேயாம். அவற்றிற்கெல்லாம் அவர்கள் மனம்போன போக்கில் பலியிட்டுத் தெய்வக் கடமை நிறைவேற்றும் மனப்பான்மை கொண்டார்கள். அன்றைய கல்வி முறை மிக்க எளியது. எதையுமே பார்த்துத்தான் கற்றுக்கொள்ள வேண்டும். சிறுவர்கள் ஒரு சிறிது காலம் தந்தையோடிருந்து பழக்கம் பெறுவர். வேட்டையாடும்போது பெரியவர்களோடு சிறியவர்கள் செல்வர். வேட்டையாடிக் கற்றுக்கொள்ளும் சிறிது காலத்திற்குப் பிறகு தனித்து வேட்டையாடும் திறமை பெறுவர். பழைய மக்களுக்கிடையே ஒரு கூட்ட உணர்ச்சி வளர்ந்தது. ஏனென்ருல் அவர்கள் கூட்டம் கூட்டமாக வளர்ந்தார்கள். ஒரு கூட்டத்தாருக்கும் மற்ருெரு கூட்டத்தாருக்கும் எப்போதும் பூசல் நிகழ்ந்தது. ஆகையால் கூட்டத்தின் பாதுகாப்புக்காகத் தனி உயிரைப் பற்றிக் கவலே கொள்வதில்லே. தான் தனது என்ற மனப்பான்மை எல்லாம் கூட்டு மனப்பான்மையோடு கலந்தது. அவர்களிடையே வளர்ந்த பழக்கங்கள் எளிதில் மாறுபாடு கொள்ளுவதில்லே. கூட்டு வாழ்க்கையின் நடைமுறையே சமூகக் கல்வியாயிற்று. கூட்டத்தில் உறுப்பினர் ஆவதற்கு அவர்களது திறமையை வெளிப்படுத்த வேண்டும். எவ்வளவு வதைத்தாலும் பொருட்படுத்தக்கூடாது. கூட்டத்தில் உறுப்பேற்ற பிறகு சமய வழிபாடுகளேக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுடைய கடவுளர்கள் பலர். ஒவ்வொன்றுக்கும் உரிய சடங்குகளேச் செய்யக் கற்க வேண்டும். நாளடைவில் கடவுள் வழிபாட்டுக்கெனச் சூரர மகன் ஒருவனே ஏற்படுத்திக் கொண்டார்கள். அவன் தெய்வ வழிபாட்டுக்கு மட்டுமின்றிக் கல்விக்கும் உறைவிடமாஞன்.

தொன்மை மனிதன் தனக்கென உண்டாக்கிக் கொண்ட கல்வி ஏற்பாடு, வகையிஞலும், பயஞலும், நாகரிக மனிதனுடையதற்கு வேறுபட்டது அன்று. இன்றைய மனிதனேப் போன்று அவனும் வாழ்க்கையை உணர்ந்துகொள்ள முயன்ருன். உண்மை யாதென அறிந்தான். இயற்கையையும் செயற்பாடுகளேயும் விளக்கிக் கொண்டான். இகத்துக்கும் பரத்துக்குமுள்ள தொடர்பினேயும் அவன் கண்ட வழியில் முடிவு செய்துகொண்டான். வழிவழிப் பழக்க வழக்கங்கள்

அவனுடைய வாழ்க்கையில் தாண்டவமாடின. ஏட்டுக்கல்வி அவன் அறியாததொன்று. அவன் அறிந்ததெல்லாம் செயல் முறையிலே யாகும். எதைச் செய்வது, எப்படிச் செய்வது என்பவை அவனுடைய கல்வியின் அடிப்படை. சூரர மக்கள் பெருகியபோது அவர்களே அறிவுக் களஞ்சியங்களாயினர். அவர்கள் விளக்கியதே மதமாயிற்று. அவர்கள் வழியினர் மதக்குருமாராயினர்.

பண்டைக்கால மக்கள் அவர்களுடைய பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளுவதற்கு அஞ்சினார்கள். அவர்களுக்கு உற்ற சூழ் நிலைக்குப் பொருத்தப்பாடு பெற்ற பிறகு சூழ்நிலை மாருத வரையில் அவர்கள் கல்வியும் மாறுவதில்லை. உலகத்து வாழ்க்கையிலேயே அவர்களுடைய முன்னோர்களுடைய ஆவிகள் அவர்களைக் காப்பதாக எண்ணினார்கள். அதனால் அவர்களுக்கு உற்றவற்றை உறுவதென்று கொண்டு உற்ற வாழ்க்கையையே உறுதியாக நம்பினார்கள்.

கீழை நாடுகளில் பழங்கல்வி :

1. சீனத்துக்கல்வி : பண்டைய மனிதனுடைய கல்வி வாழ்க் கைப் போராட்டத்தை நடத்த அமைந்ததொன்று. கீழை நாடுகளில் மக்களிடையே பண்பாடுகள் மிகமிக வளர்ந்ததால் அவற்றை வழி வழி யாகச் செலுத்த வேண்டியதாயிற்று. எனவே கல்வி [1] புனர் ஆக்க மாக விளங்கிற்று. ஆனால் மக்களிடையே புதிய கருத்துக்கள் வளர வளர மிகப் பழமை எல்லாம் பெருஞ் சுமையாயின.

சீன தேசத்து மக்கள் நீண்ட காலமாகக் [2] கன்பூசி என்ற சமயப் பெரியாரது கோட்பாடுகளை ஏற்று வந்தார்கள். கடவுளால் உண்டாக் கப்பட்டது இயற்கை. இயற்கையோடு ஒட்டுவது கடப்பாடு. ஒட்டும் வழியை அறிவது கல்வி. இத்தகைய நெறியில் ஈடுபாடு அளிப்பதே கல்விப் பயன் என்று கருதப் பெற்றது. கன்பூசி வகுத்த வழியில் மக்கள் வாழ்ந்தமையால் கல்வி ஏற்பாடு அதன் அறத்தை வற்புறுத் தியது. சீன மக்கள் குடும்ப வாழ்க்கையைப் பெரிதும் போற்றினர். அவர்களுக்குக் குடும்பக் கடமைகள், சிறியவர் பெரியவர்க்குள்ள உறவு ஆகியவை இன்றியமையாதவை. அவர்களுடைய கல்வி ஏற்பாடு ஏட்டுப் படிப்பாகவே அமைந்ததொன்று. அதில் தேர்ச்சிப் பெற்ற வர்கள் தம்மைத் திருத்திக் கொள்ளுவதோடு மற்றவரையும் திருத்தும் பெருமை பெற்றார்கள். அவர்களே அரசாங்கத்தில் உறுப்பினரானார் கள். கல்வி மேதைகளே அரசினர் ஆனார்கள். அரசனுக்கும் குடி களுக்கும் உள்ள உறவு; கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள கடமை வாழ்க்கை; உடன் பிறந்தாருக்குள் ஒத்த உணர்வு; நண்பருக்குள் நட்பு ஆகியவையே அடிப்படைக் கல்விக் குறிக்கோள்கள். “நீ விரும் பாதவற்றைப் பிறருக்குச் செய்யாதே” என்ற எதிர்மறைக் கல்வி

1. Recapitulation 2. Confucious

குழவிப் பருவமுதல் அறிவுறுத்தப்பட்டது. ஒவ்வொரு மாணவனுக்கும் மக்கள் பழகிவந்த நல்லொழுக்கங்களாகிய இயற்கைப் பழக்கங்களை ஏடுகள் எடுத்தோதின. அவற்றை எல்லாம் நெட்டுருச் செய்து தேர்வுகளிலே கட்டுரை வரையும் வன்மையை மெய்ப்பிக்க வேண்டும். இதனால் தேர்வு முறை சீனத்தில் தொடங்கிய தென்பர்.

எந்த நாட்டிலும் சீனத்தில் நடைபெற்றதைப் போல முறை தழுவிய கல்வி முறை இல்லை; எந்த நாட்டுக் கல்வி முறையும் மக்களுடைய அறப் பண்புகளை நேராக வளர்ப்பதற்கு அமைந்ததில்லை; மரபு நிலை, பழக்கம், நினைவு, உணர்வு, செயல் ஆகிய எதுவும் மக்களிடையே ஒரு படித்தாகக் கல்வி வழியில் வற்புறுத்தப் பெறவில்லை. தொடக்க நிலையில் மொழிப்பாடம், இலக்கியம் ஆகியவை தொடங்கப் பெற்றன. உயர் நிலையில் எல்லாவற்றையும் நெட்டுருச் செய்தல் நிகழ்ந்தது. சீன எழுத்துக்கள் சித்திரம் போன்றவை. ஒவ்வொரு கருத்துக்கும் ஓர் உருவம். நெடுங்கணக்கில் எத்துணை எழுத்துக்கள் என்று அறுதியிடவில்லை. ஏறக்குறைய ஒரு மதிப்பு இருபத்தையாயிரம். இவற்றை எல்லாம் மனப்பாடம் செய்யவேண்டும். பெயர்ச் சொற்களும், வினைச் சொற்களும் அறச் சொற்களாகவே பயின்றன. மொழியோ வழக்காறற்றது.

அங்குப் பள்ளிகளென்று தனித்த கட்டிடங்கள் கிடையா. பொது நிலையங்களிலும் ஆலயங்களிலும் இல்லங்களில் ஓர் அறையிலும் பட்டத் தேர்வில் தவறிய மாணவர்களால் கற்பித்தல் நடைபெற்றது. ஆண்டு முழுவதும் பள்ளி உண்டு. தொடக்க நிலைக்கப்பால் பிள்ளைகள் படிப்பதில்லை. உயர்நிலைக் கல்வியில் தவறியவர்கள் ஆசிரியப் பணியை ஏற்றுக்கொண்டார்கள். கல்லூரிகள் தனியாருக்குச் சொந்தமானவை. ஒரு சில அரசாங்க உதவி பெற்றன. கல்வி முறை, வாய்விட்டுப் பெருங் குரலில் படித்தலும் நெட்டுருச் செய்து நினைவில் இறுத்திக் கொள்ளுதலுமே யாகும்.

சீனக்கல்வி சமூகத்தின் நிலைப்பையும், மன்னர் மாமன்னராட்சிமைகளின் அழியாமையையும், பழமையின் பெருமையையும் பாதுகாத்தது. உள்ளத்தின் நினைவாற்றல் வளர்க்கப் பெற்றது. மொழித்திறன் வளர்ந்தது. ஆனால் வெறும் ஏட்டுப்படிப்பாக அமைந்ததால் நடைமுறைக்குப் பயனுறவில்லை. மக்களுடைய நடைமுறைகள் எல்லாம் அவர்கள் ஒழுக்கத்தின்பாற் பட்டன. எனவே ஏட்டுப்படிப்பின் பயன் அரசியலுக்கே உரித்தாயிற்று.

2. இந்தியக்கல்வி : பழங்காலத்திய இந்தியக்கல்வி பலவகையாக விளங்கிற்று. சமயம், மெய்யறிவு ஆகியவற்றில் இந்திய முறையே அதற்கு நிகர். பிராமணக் கல்வி, சமயக் கல்வி, பௌத்தக் கல்வி, திராவிடக் கல்வி ஆகிய எல்லாம் நமது நாட்டுக்கு உரியன.

3. பிராமணக்கல்வி : பிராமணக் கல்வி ஆரியர்களால் ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் தொகுதி தொகுதியாக கி. மு. 1000க்கு முன்னர்

இந்தியாவுக்குள் நுழைந்தார்கள். அவர்களுடைய மதம், இயற்கை வழிபாடு. ஞாயிறு, திங்கள், இந்திரன், அக்கினி, வருணன், வாயு ஆகிய இயற்கைக் காட்சிகளெல்லாம் கடவுளர்கள். ஆரியர்கள் அவற்றிற்கு வேள்விகள் நிகழ்த்தினார்கள்.

ஆரியர்களைப்பற்றி நாம் அவர்களுடைய வேதங்களிலிருந்து அறிந்துகொள்ளுகிறோம். வேதங்கள் நான்கு. அவை வழி வழியாக வாய் முறையால் குடும்பங்களில் போற்றப் பெற்றன. மந்திரமோதிகள் வேள்விகளை நடத்த உதவினார்கள். அவர்கள் வேதங்களை நன்றாகக் கற்றவர்கள். நாளடைவில் மறை மொழிகளெல்லாம் மந்திரங்களாயின.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப" என்றபடி மந்திர மொழி மக்கள் மொழிக்கு வேறாயிற்று. தந்தை மகனுக்கும் மகன் அவன் மகனுக்குமாக மந்திரங்கள் [1] வாய் மொழியாக வளர்ந்தன. மதக் குருமார்களுடைய பரம்பரை பெருகிற்று. மறை மொழிகளைப் பொருள்பட மதக்குருமார்கள் விதந்துரைத்த ஞான்று பிராமணங்கள் தோன்றின. ஒவ்வொரு வேதத்துக்கும் பிராமணங்கள் உண்டு. வனங்களில் தவங்கிடந்தவர்கள் வேள்விகள் இயற்றாது சிந்தனை வழி நின்றார்கள். மெய்யறிவைப் பெற்றார்கள். அவர்கள் கண்ட கருத்துக்கள் எல்லாம் உபநிடதங்களாயின. அவற்றுள் சிறந்தவை வேதத்தின் முடிவுகள். அவற்றையே வேதாந்தமென்கிறோம். இறைநிலை, உயிர்நிலை இரண்டும் இரண்டல்ல ஒன்று என்று கருதினார்கள். மனித வாழ்க்கையின் வேறுபாடுகள் கருமத்தின் காரணமாகப் பெற்றவை போன்ற கருத்துக்களெல்லாம் உபநிடத வழிகள். வேதங்கள், பிராமணங்கள், உபநிடதங்கள் ஆகியவை பிராமண இளைஞர்களுக்கே கற்பிக்கப் பெற்றன. அவர்கள் பெரும்பாலும் குருக்கள் பரம்பரையினர். சத்திரியர்களுக்கும், வைசியர்களுக்குங்கூட அவர்களே மதாச்சாரியர்களும், கல்வியாச்சாரியர்களும் ஆனார்கள். வேதக்கல்வி பெருகிவிட்டபடியால் அவையெல்லாம் சூத்திரங்களாக இயற்றப் பெற்றன. தர்ம சூத்திரங்கள் கல்விக்கென ஏற்பட்டன. இவற்றை இயற்றியவர்கள் கௌதமர், ஆபஸ்தம்பர், வசிஷ்டர், பௌதாயனர் முதலாயினோர் ஆவர். மனுதர்ம சூத்திரம் பிற்காலத்தியது. இங்ஙனம் இயற்கை மத வழிபாடு வேத சுலோகங்களிலும், வேத முறைகள் பிராமணங்களிலும் ஆத்ம நெறி உபநிடதங்களிலும் இடம் பெற்றன.

ஆசிரிய மாணவ உறவு நமது நாட்டில் பண்டைக்காலத்தில் இருந்ததைப் போன்று எந்த நாட்டிலும் இல்லை. வேதங்களெல்லாம் ஆசிரியர்களுக்குக் கடவுளர் நிலை அளித்தன. "ஆச்சார்ய தேவோ பவ" என்ற வாசகம் இதனை விளக்கும். பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற கடவுளர்களே முதல் ஆசிரியர்களாகக் கருதப் பெற்றார்கள். வரலாற்றுக் காலத்

1. Oral transmission

தில் மக்கட் பெரியாராக விளங்கிய சங்கராச்சாரியர், இராமானுச ஆச்சாரியர், மத்துவாச்சாரியர், வல்லபாச்சாரியர் ஆகியோரெல்லாம் ஆயிரமாயிரம் மக்களுக்கு ஆச்சாரியர்களாக விளங்கியவர்கள். ஆச்சாரம் என்பதற்கு ஒழுக்கம் என்பது பொருள். "ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்". ஒழுக்கத்தோடு அறநெறியில் தமது பணியாற்றுதல் பிரம்மத்தைப் பெறும் வழியென்று கருதினர்.

பண்டைய ஆசிரியர்கள் தமது மாணாக்கர்களுக்கு இம்மையையும் மறுமையையும் அறிவித்தார்கள். மாணாக்கர் ஆசிரியரை நாடி வந்தார்கள். ஆசிரியர்கள் பேருள்ளம் படைத்தவர்கள். உண்மையை நன்மையாகக் கடைப்பிடித்தவர்கள். இனவேறுபாடிருந்த அந்தக் காலத்தும் இனத்தைக் கருதாது குணத்தைக் கருதி மாணவர்களை ஏற்றுக்கொண்டார்கள். சத்தியகாம ஜபலன் என்பான் ஒருவன். அவன் ஓர் ஆசிரியரை அடைந்து தன்னை ஏற்கும்படி வேண்டினான். ஆசிரியர் அவனுடைய இனத்தைப்பற்றி வினவினார். அவன் தாய் பல இடங்களில் பணிபுரிந்த ஞான்று அவனைப் பெற்றெடுத்ததால் அவனுக்கே இனம் தெரியாதென்று கூற, ஆசிரியர் அவன் உண்மை உரைத்தமைக்கு அவனைப் பிராமணன் என ஆட்கொண்டு மாணாக்கனாக ஏற்றுக்கொண்டதாகக் கூறுவதுண்டு. ஆசிரியர் மாணாக்கருக்கு நல்ல முறையில் கற்பித்து நன்மாணாக்கராக்கினால் அன்றி ஆசிரியருக்குப் பெருமை இல்லை. கற்கவேண்டிய கலைகள் அறுபத்து நான்கு. யாதாயினும் ஒரு கலையிலாவது மாணாக்கன் திறமை பெற இயலும். ஆனால் ஆசிரியருக்கு இரண்டு கூறுகள் வற்புறுத்தப் பெற்றன. ஒன்று அனுபவம், மற்றொன்று தரிசனம். ஏட்டறிவு மட்டும் ஒத்துக்கொள்ளப் படவில்லை. அவரவர்களுக்குத் தெரிந்தவற்றைச் செயல்முறையில் செய்து காட்ட வேண்டிய தகுதி வற்புறுத்தப் பெற்றது.

மாணவர்கள் அக்காலத்தில் பள்ளியிற் பயிலவில்லை; ஆசிரியருடைய இல்லத்துக்குச் சென்றனர். அங்கு உடன் வாழ்ந்தனர். ஆசிரியர் குடும்பத்தோடு ஒன்றியிருந்தனர். ஆசிரியரும் மாணவரைப் பிள்ளைகளாகவே ஏற்றுக் கொண்டனர். மாணவர்கள் ஆசிரியரை வணங்குதல், அவர் இல்லத்தில் சேவை செய்தல், நீர் நிரப்புதல், விறகு கொண்டு வருதல், பசுமாடுகளை மேய்த்தல், நிலத்தை உழுது பயிர் செய்தல் ஆகிய பல பணிகளை விருப்போடு செய்தார்கள். அறிவு கடவுளால் தரப்படுவது. ஆனால் பொது அறிவு இயற்கையோடு வாழும் போது பெறுவதென்று கொண்டனர். மாணவர்கள் பள்ளிக்கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. ஏழையும், செல்வரும் வேறுபாடின்றிக் கருதப்பெற்றனர். சாந்திப முனிவர் துறவிருக்கையில் கண்ணனும் குசேலரும் மாணாக்கராக இருந்தனர். இருவரும் எல்லாப் பணிகளையும் ஏற்றுச் செய்தனர். துவாரகை மன்னன் மகன் என்ற காரணத்தால் கிருட்டினனுக்குத் தனிச்சலுகைகள் இல்லை என்ற வரலாற்றால் அக்

காலக் கல்விநிலே புலனுகும். மாணுக்கர்கள் பத்தாண்டுகளுக்குக் குறையாது பயின்று அதன் பின்னர் ஆசிரியக்கையுறை செலுத்திச் சென்றனர்.

ஆசிரிய மாணவ உறவு பண்டைக் காலத்துச் சிறக்க அமைந் திருந்தது. அடக்கத்தையும், பணிதலேயும் மாணுக்கர் நன்ருகப் பழகிக் கொண்டனர். ஆசிரியருடைய சொல் திறம்பாது நடந்து கொண்டனர். வைகறைத் துயில் எழுந்தனர். ஆசிரியருக்கு முன்னர் எழுந்தனர். ஆசிரியருக்குப் பின் உறங்கினர். ஆசிரியர் முன் அடிபணிந்து நின்றனர். ஆசிரியர் பெயரையும் நாவினுல் உரையா தொழுகினர். நாள்தோறும் ஆசிரியர் அடிபணிந்தனர். ஆசிரியரும் மாணுக்கரைத் தமது பிள்ளேகளேப்போன்று கருதினர். அவர்களுக்கு எல்லா நூல் களேயும் கற்பித்தனர்.

கல்வி ஏற்பாடு அன்றறிந்த எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டிருந்தது. அதில் வேதங்கள், பிராமணங்கள், உபநிடதங்கள், அறுவகை அங்கங்களாகிய ஒலி இயல், வான இயல், எழுத்தியல், இலக்கண இயல், மரபியல், சந்த இயல் ஆகியவையும் அறுபத்திளுன்கு கலேகளும் அறநூல்களும் அடங்கின. இவை எல்லாவற்றையும் நூற் பாக்களின் வாயிலாகப் பிள்ளேகள் நெட்டுருச் செய்தனர். ஆசிரியர் அப்போதைக் கப்போது பொருள்களேயும் விளக்கினுர். அறவழிகளே அறிவுறுத்தினுர். ‘பஞ்ச தந்திரம்’ ‘இதோபதேசம்’ என்ற நூல்கள் தோன்றின.

அக்காலத்தில் குருகுலங்களில் பத்து மாணுக்கருக்கு மிகுதியாகப் படித்ததில்லே. அதனுல் தனி ஒவ்வொரு மாணுக்கனேயும் ஆசிரியர் நன்கு அறிந்து கற்பித்தார். மாணுக்கர்களும் ஆர்வம் நிறைந்து கற்ருர்கள். ஒரு நாளேக்கு இருபத்து நான்கு மணி நேரம் போதவில்லே என்று பாரத்துவாசர் கேட்டதாகவும் இந்திரன் இருபத்தாருக்கித் தருவ தாகக் கூறியதாகவும் கூறுவதுண்டு. மாணுக்கர்கள் தமது ஆசிரியரைப் பெருமைப் படுத்திஞர்கள். ஒவ்வொரு மாணவனும் தனது ஆசிரியரின் பெயரைச் சொல்லி அவருடைய மாணுக்கர் என்று சொல்லிப் பெருமைப் பெற்ருன். பண்டைய குறிக்கோளின்படி ஒவ்வொரு மாணுக்கனும் கல்வி அறிவில் நான்கில் ஒரு பங்கு பெற்ருேரிடமிருந்தும், இரண்டா வது பங்கு ஆசிரியரிடமிருந்தும், மூன்ருவது பங்கு உடன் மாணுக்கரிட மிருந்தும், நான்காவது தன் முயற்சியாலும் பெற வேண்டும் என்று இருந்தது.

4. **தொழிற் கல்வி:** குருமார்களுடைய பரம்பரையினர் குருக்க ளாகவே வேதங்களில் பயிற்சி பெற்றனர். சத்திரியர்களும் வைசியர் களும் அவர்கள் தொழிலுக்கேற்ற கல்வியைப் பெற்றனர். சத்திரிய மன்னர்களும் வேதங்களிலும் அறநூல்களிலும் பயிற்சி பெற்றனர். போர்ப் படைப்பயிற்சியிலும் போர்ப் பயிற்சியிலும் திறமை பெற்றனர். யானே ஏற்றம், குதிரை ஏற்றம், தேரோட்டுதல் அவர்கள் கற்ற

மற்றைய பாடங்கள். இவற்றையும் பிராமணர்களிடமிருந்தே சத்திரியர்கள் கற்ருர்கள். பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் துரோணர் அல்லவா ஆசிரியர். அர்த்த சாத்திரம் ஏற்பட்டபோது அதனையும் கற்க வேண்டியதாயிற்று. "தண்ட நீதியை"க் கற்று நியாயம் வழங்கினர்கள். இதிகாசங்கள், தர்மசாத்திரம், நீதி சாரம், பஞ்ச தந்திரம், இதோபதேசம் ஆகியவற்றையும் அவர்கள் கற்ருர்கள். வைசியர்கள் பயிர்த் தொழில், வாணிபம், கணிதம், சில மொழிகள், அவரவர்களுடைய வணிக நுணுக்கங்கள் ஆகியவற்றைக் கற்றனர். பெரும்பான்மை தந்தையிடமிருந்து மகன் வாணிபத் தொழிலைக் கற்றுக் கொண்டான். மாணவ தர்ம சாத்திரப்படி ஒரு வைசியன் பசுமாடுகளை வளர்க்க மாட்டேன் என்று கூறுதல் தவறு. அவனுக்குப் பல அணிமணிகள் முத்துக்கள், பவழங்கள், பொன்கள், கலிங்கம் முதலிய பட்டாடைகள், வாசனைப் பொருள்கள் தெரிந்திருக்க வேண்டும். விதை விதைத்தல் முதல் நிலத்தின் பாகுபாடு முதலியவை வரை அவன் அறிந்திருக்க வேண்டும். எண்ணலளவை, எடுத்தலளவை, நிறுத்தலளவை, பல வாணிபப் பொருள்களின் நோட்டங்கள், பல நாடுகளைப்பற்றிய நன்மை தீமைகள், வாணிபத்தில் மிச்சம்-இழப்பு, வேலையாட்களுக்குக் கொடுக்க வேண்டிய நிறை கூலி, பலர் மொழிகள், பொருள்களைத் தொகுக்கும் திறன், வாங்கல் விற்றல் முறை ஆகியவை அவன் அறிந்தவையாக வேண்டும்.

தொழிலும் தொழிலாளிகளும் :

தொழிற் கல்வி அன்று தொடங்கி இன்று வரையில் மேம்பாடுற்ற தொன்று. சிற்றூர் வாழ்க்கையில் ஒவ்வொரு தொழிலாளியும் வேண்டிய வனுகிருன். தச்சன், பொற்கொல்லன், கரும் பொற்கொல்லன், குயவன், வண்ணுன், சேணியன், மருத்துவன், உழவன் இன்னோரன்ன பல திறப்பட்ட தொழிலாளிகள் ஏற்பட்டார்கள். ஒவ்வொரு தொழிலாளியும் தனது குடும்பத்திற்குத் தனது தொழிலைக் கற்பித்தான். தொழிலை அடிப்படையாகக் கொண்டு சாதிகள் பலவாயின. எனவே அந்தந்தத் தொழிற் கூட்டத்தினரிடையே தொழில் நுணுக்கங்கள் வளர்ந்தன. இது வழிவழியாக இரத்தத்தில் ஊறியதோடன்றி அந்தந்த இடத்தில் அதனதன் திறன் நிலைபெற்று விட்டது. இன்றைய நிலையில் பண்டைய தொழில்களெல்லாம் சிறிய தொழில்களென்றும், குடிசைத் தொழில்களென்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆக்கம் பெற்று வருகின்றன. இத்தொழில்களைச் செயல் முறையில் கற்றுக்கொண்டாலன்றி ஏட்டு முறையில் எய்தல் இயலாது. நமது பள்ளிகளில் பல தொழிலாளிகளின் பிள்ளைகள் படிக்கின்ருர்கள் அல்லவா! அவர்களுடைய பரம்பரைத் தொழிலைக் கண்டறிந்து அவர்களை அதில் ஊக்குவித்தால் அவர்கள் பிழைக்க வழி உண்டாகும். இன்றும் நமது நாட்டின் பல நகரங்கள் ஒவ்வொரு தொழிலுக்குச் சிறந்ததாகக் காண்கிருேம். காஞ்சிபுரம்

என்றால் பருத்தி, பட்டாடைகள் நெய்தலில் சிறந்ததென்கிறோம். காசி என்றால் பொன்னணிகளும், துப்பட்டாக்களும் சிறந்தவை என்கிறோம். இதைப்போன்ற ஊர்மக்கள் அவரவர்களுடைய தொழிலை வழிவழியாகத் தந்து அதன் திறனைப் போற்றியும், காப்பாற்றியும் உள்ளார்கள். கைத்தொழிற் கல்வி நமது நாட்டிற்கே மிகத் தொன்மையது.

5. பௌத்தக் கல்வி: பௌத்தம் வேதங்களையும், வேத மரபுகளையும் எதிர்த்துத் தோன்றியது. பல பிறவிகளிலிருந்து விடுதலை பெறப் பௌத்தம் ஒரு பரந்த வழியைக் காட்டிற்று. அதன் கல்வி முறை பிராமண முறையிலிருந்து வேறுபட்டது. பௌத்தக் கல்வியைக் கற்பித்தவர்கள் பிராமணர் அல்லாதார் அல்லது பௌத்தர்களாதல் வேண்டும். எல்லாச் சாதியினருக்கும் பௌத்தம் வழி திறந்தது. சத்திரிய மன்னர்கள் அதைத் தழுவினார்கள். இறையுள வளர்ச்சி பெறப் பௌத்தம் வனவாழ்க்கையையும், தவத்தையும் வற்புறுத்தியது. ஆனால் பௌத்தர்கள் பௌத்த விகாரங்களில் பிக்குகளாகப் பௌத்த வாழ்க்கை நடத்தினார்கள். வாழ்க்கையின் தூய்மை அதன் தலைக் கோட்பாடு. உணவைப் பிச்சையெடுத்தே உண்ணுதல் கடமை.

பௌத்த விகாரங்கள் அல்லது மடங்கள் கல்வி நிலையங்களாக விளங்கின. இவையன்றிப் பல்கலைக் கழகங்களும் தோன்றின. இவற்றில் எல்லாம் பௌத்த நூல்கள் கற்பிக்கப் பெற்றன. மாணாக்கர்கள் விகாரங்களில் பயின்றார்கள். எண்ணும் எழுத்தும் கற்பிக்கப் பெற்றன. அவற்றோடு பௌத்த மதக்கல்வியும் சேர்ந்தது. எல்லா நூல்களும் மதச் சார்புற்றவை. பௌத்தருடைய பொன்மொழிகளையும், சாதகக் கதைகளையும் பிள்ளைகள் கற்றார்கள். ஆசிரியர் வாய்மொழியாகக் கூறப் பிள்ளைகள் திரும்பத் திரும்பச் சொல்லிப் பாடத் தேர்ச்சி பெற்றார்கள்.

புத்தர், வாழ்க்கையின் பல இடர்ப்பாடுகளுக்கெல்லாம் அறியாமையே காரணம் என்று அறிவுறுத்தினார். அறியாமையை நீக்குவதற்கு அறிவு இன்றியமையாதது. பௌத்தப் பள்ளிகளெல்லாம் பௌத்த மதக் கொள்கைகளைப் பரப்பி நாப்பறையறைந்து மன இருளை நீக்கி அறிவாகிய ஒளியை உண்டாக்கின.

6. தமிழகத்துக் கல்வி: வடவேங்கடம்-தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்தில் தமிழ் அறிஞர்களும் புலவர்களும் தமிழ் வளர்த்த பெருமைக்குச் சங்க இலக்கியங்கள் சான்றாகும். சங்க இலக்கியங்கள் மிகத் தொன்மையவை என்பதை நாம் கூறவேண்டியதில்லை. சங்கத் தமிழ் மூன்று என்பது மரபு. சங்க இலக்கியங்கள் கோல முத்தமிழ் கொலுவிருந்த காட்சி காட்டுவன. தமிழகக் கல்வி சங்க காலத்தில் மிகச் சிறந்து விளங்கிற்று என்றால் அக்காலத்துக்கு முன் மிகப் பண்டைய காலந் தொடங்கித் தமிழ் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழைக் கற்றவர்களும், கற்பித்தவர்களும் மல்கி இருக்கவேண்டும். சங்க இலக்கியங்களில் ஆசிரியர் என்ற சொல் காணப்படுகிறது. ஆசிரியன் என்ற சொல் ஆசிரியரையும் குறிக்கலாம்; நூல் ஆசிரியரையும்

குறிக்கலாம். ஆசான் என்ற சொல்லும் உள்ளது. எடுத்துக்காட்டுக்கள்: ஆசிரியர் பூங்குன்றனுர், மதுரை வேள் ஆசான். இன்னேரன்ன பல வற்றுள் பாலாசிரியன் என்றும் ஒரு சொல் உளது. எடுத்துக்காட்டு: மதுரைப் பாலாசிரியர் நப்பாலனுர். இளம் பாலாசிரியன் என்ற சொல் லும் உண்டு. இவற்ருல் இளம் பாலாசிரியரைச் சிறிய குழவிகளின் ஆசிரியர் என்றும் பாலாசிரியரைத் தொடக்கநிலே ஆசிரியரென்றும் கொள்ளுதல் பொருந்தும். ஆசான், ஆசிரியன் என்ற சொற்கள் நடு நிலே உயர்நிலே ஆசிரியர்களுக்கும் பேராசிரியன் என்னும் சொல் கல் லூரிப் பேராசிரியர்களுக்கும் பொருத்தமுறுமென்று கொள்ளுதல் குற்ற மன்று. மணிமேகலே ஆசிரியரான சாத்தனுருக்கு முத்தமிழ் ஆசான் என்ற பட்டம் உண்டு. அதனுல் அவரை இயல், இசை, நாடகமாகிய முத்தமிழிலும் ஆசான் என்று கொள்ளுதல் பொருந்தும். கணக்காய னுர் என்பது மற்ருெரு சொல். எடுத்துக்காட்டு: மதுரைக் கணக் காயனுர் மகனுர் நக்கீரனுர். கணக்கு என்பதைத் தமிழ் எழுத்துக்கள் வரிசையாகிய தமிழ் நெடுங்கணக்கு என்றும், ஆயம் என்பதை ஒரு குழுவென்றும் பொருள் கொண்டு கணக்காயம் என்பதைப் புலநெறி வழியாக விளேயாட்டு முறையில் பிள்ளேகள் கற்பிக்கப் பெற்ருர்கள் என்று கொள்ளுவது மிகையாகாது. கணக்காயத்தின் ஆசிரியர் கணக் காயனுர் ஆவார். அவருக்கு மகனுர் திருமுருகாற்றுப்படை இயற்றிய ஆசிரியர். அல்லது கணக்கு என்பதைக் கணித நூலாகக் கொண்டு கணக்காயனுர் என்பதைக் கணித நூலே ஆய்வோருடைய ஆசிரியர் என்று பொருள் கொள்ளுதலும் சால்புடைத்தே ஆகும்.

தமிழ் நாட்டில் சாதி வேறுபாடின்றி எல்லா மக்களுக்கும் கல்வி புகட்டப்பட்டது. தமிழ் நூலாசிரியர்களுடைய பெயர்களே ஒரு சிறிது ஆராய்ந்தால் அவர்கள் பல இனத்தவர் என்று அறிய லாம். தமிழ் மக்களுள் பால் வேறுபாடு காரணத்தால் உயர்வு தாழ்வு இல்லே என்பதையும் அறியலாம். ஏனென்ருல் அவர்களும் ஆண்பாற் புலவர்களேப் போன்று பாக்கள் யாத்து அளிக்கின்ருர்கள். நிற்க, அகத்தியரது பன்னிரு மாணவர்களேப் பற்றி அறிகிருேம். அவர்களுள் காக்கை பாடினியார் என்பவர் பெண்பாற் புலவர். காக்கை பாடினி யார் தொல்காப்பியருக்கு முந்தியவர் என்பர். சிறு பெரு என்று இருவர் கூறுவர். மற்றைய ஆசிரியர்களேப் பற்றி ஆராயுங்கால் அதங் கோட்டாசான் என்பார் நான்கு வேதங்களில் சிறந்தவரென்றும், தொல் காப்பியனுர் ஐந்திரம் என்ற வடமொழி இலக்கணத்தை நிறையக் கற் றவரென்றும் அறிகின்ருேம். அதனுல் அக்காலத்தில் தாய்மொழிக் கல்வியின் அடிப்படையில் வேறு மொழிகளேயும், மொழி இலக்கணங் களேயும் மாணவர்கள் தமது விருப்புக்கேற்பப் பயின்ருர்கள் என்பது போதரும்.

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் என்று கூறியவதனுல் ஆசி ரியருடைய உயர்நிலே சொல்லாமலே விளங்கும். ஆறில்லா ஊருக்கு

அழகு பாழ் என்பதைப் போலக் கணக்காயர் இல்லாத ஊர் நன்மை பயத்தல் இல்லை என்றும் அக்காலத்தில் கருதி உள்ளார்கள். இடைக் காலத்தில் தோன்றிய நன்னூலில் நூலைக் கற்பிக்கும் ஆசிரியனுடைய இலக்கணங்களை அறிய நாம் வியப்படைவோம்.

" குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மிணையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே."

நல்லாசிரியன் என்பவன் உயர்குடிப் பிறப்பும், மிக்க அருளும், கடவுள் வழிபாடும், மேன்மையும் பல நூல்களில் தேர்ச்சியும், நூற் பொருள்களை மாணுக்கர் விளங்கிக் கொள்ளும்படி சொல் வன்மையோடு கற்பிக்கும் திறமையும், நிலத்தைப் போன்று பொறையும், மலையைப் போன்ற எடுப்பும், தன்னைச் சார்ந்தவருக்கு அறிவினை அள்ளிக் கொடுக் கும் வன்மையும், எல்லாக் கருத்துக்களையும் மெய் நடுநிலையில் காண்ட லும், கண்டோரெல்லாம் தன்னை விரும்பக்கூடிய மென்மையும், உல கத்தை அறியக்கூடிய அறிவும் ஆகிய இவை போன்ற உயர் குணங்களை உடையவனுதல் வேண்டும்.

" மொழிகுண மின்மையு மிழிகுண வியல்பும்
அழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலும்
கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோ ரிலரா சிரியரா குதலே."

கற்பிக்கும் திறன் இன்மையும், இழி குணமும், அழுக்காறும், பேராசையும், வஞ்சனையும் உடையவர்கள் ஆசிரியராகத் தகாதவர்கள்.

" ஈத லியல்பே யியம்புங் காலைக்
காலமு மிடனும் வாலிதி னேக்கிச்
சிறந்துழி யிருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொரு ளுள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பிமுக மலர்ந்து
கொள்வோன் கொள்வகை யறிந்தவ னுளங்கொளக்
கோட்டமில் மனத்தின் நூல் கொடுத்த லென்ப."

பாடஞ் சொல்லும் முறையையும் நன்னூல் நுதலி உள்ளது. பாடஞ் சொல்லும் காலமும் இடமும் இன்றியமையாதவை. இறைவழி பாட்டுக்குப் பிறகே பாடம் தொடங்கவேண்டும். சொல்லப்படும் பாடத் தைத் தன் மனத்தகத்தே முற்கூட்டித் திறம்பட அமைத்துக்கொள்ள வேண்டும். பாடஞ் சொல்லுங்கால் விரைவாகவும், கோபித்துக் கொண் டும் தொடங்கக் கூடாது. முக மலர்ச்சியோடு மாணுக்கனுகிய கொள்ப

வனுடைய கொள்வகை அறிந்து அவன் உளம் கொளக் கற்பித்தல் வேண்டும். இன்று உள இயலாரும், கல்வி இயலாரும் வற்புறுத்தும் பெருங் கருத்தினை நன்னூலார் வெகு எளிதில்,

"கொள்வோன் கொள்வகை யறிந்தவ னுளங்கொளக்
கோட்டமில் மனத்தின் நூல்கொடுத்த லென்ப."

என்று கூறியுள்ளமை காண்க.

7. **கிரேக்கக் கல்வி:** கிரேக்கக் கல்வியின் தத்துவம் மிகத் தலை சிறந்த வொன்றாகவும், அன்றும் இன்றும் வழிகாட்டியாகவும் விளங்கி யுள்ளது. கிரேக்கர்கள் நாகரிக நிலையினை எய்தியவர்கள். வாழ்க்கைத் தரங்கள் அவர்களிடையே வளர்ச்சியுற்றன. கல்வி ஓர் உருப்பெற்றது. தனி ஒவ்வொருவனுடைய வளர்ச்சிக்கொப்பத் தகுந்த இடமளித்தது. கல்வித் திட்டம் வளர்ந்துகொண்டே வந்தது. தனி ஆளுமைத் திறன் வளர்ச்சி முதல் முதலாகச் சமூக நிலைபேற்றினுக்கும், நலனுக்கும் முரண்பாடற்றதாகக் கருதப் பெற்றது. சமூக ஒழுங்கும், சமூக நிலையங்களும் தனி ஆளுமைத் திறனை வளர்த்ததோடு சமூகத்தினருடைய உரிமைகளையும் காப்பாற்ற வழி வகுத்தன. இத்தகைய தனியார் வளர்ச்சிக்கும் அதனால் இடர்ப்பாடுறாத சமூக வளர்ச்சிக்கும் வழி வகுப்பதே கிரேக்கக் கல்வியின் குறிக்கோளாயிற்று.

முதற்கண் தனி மகன் தனதுரிமையை அரசியலிற் கண்டான். [1]கிரேக்க நகர நாடுகள் நேர்முகக் குடியாட்சியை மேற்கொண்டவை. அதனால் ஒவ்வொரு குடிமகனும் தனது நாட்டாட்சிக்குக் கட்டுப்பட்டவனானான். அரசும் அவனுடைய நன்மையை நாடிற்று. தனி ஒருவனுடைய உரிமைகளும் உருப்பெற்றன. அற வாழ்க்கையையும் குடி ஆட்சியே வழிகாட்டி வற்புறுத்திற்று. தனி ஒவ்வொரு கிரேக்கனும் நாட்டுக்குக் கட்டுப்பட்டவன். அதே சமயத்தில் தனது வாக்குரிமையைப் பெற்றவன். கிரேக்கர்கள் நடைமுறை வாழ்க்கையை வகுத்துக் கொண்டு ஒவ்வொருவரும் அறநிலை பிறழாது ஒழுக வழி வகுத்தார்கள். அவர்களுக்குக் கல்வியின் மீதிருந்த ஆர்வமும் பாராட்டத்தக்கது. அறிவைப் பெருக்கிக் கொள்ளுவது அறிவுக்காகவே என்ற கருத்து அவர்களிடையே வளர்ந்தது. அதனால் அவர்கள் இயற்கை இகந்தவை யாகிய எல்லாவற்றையும் துருவி அறிந்தார்கள். கிரேக்கர்களை மதச் சார்பு வாட்டியதில்லை. எதுவாயினும் சரி, எதுவரையிலாயினும் வழக்காடலாம் என்ற பிளேடோ பெருமானுடைய அறைகூவல் கிரேக்கர்களுடைய அறிவாற்றல் வன்மைக்கு எடுத்துக்காட்டு. அறிவு எல்லாருக்கும் பொதுவென்றும் அதை வளர்த்தவர்களே அறிவாளியாவர் என்றும் கருதினர். எந்த அறிவாளி எழுதிய நாடகமாயினும் அதற்குப் பொது மக்கள் விரிவுரை செய்யும் திறமையும் பெற்றிருந்தார்கள். முதல் முதலில் கற்றவர்களெல்லாம் ஆசிரியரானார்கள்; கவிஞர்களுமானார்கள்.

---

1. Greek city states

பின்னர் சோஃபிஸ்ட்டுகளான பண்பாளர்களும் மெய்யறிஞர்களும், ஆசிரியர்களும் பேராசிரியர்களும் ஆயினர். கிரேக்கர்கள் தமது வாழ்க்கையில் காரண காரியங்களை அறிந்து வாழ்ந்தவர்கள். ஸாக்ரடீஸ் ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தான் அறிய வேண்டுமென்று வற்புறுத்தினர். அவர் காட்டிய வழியில் அறிவும் அறமும் இரண்டும் இணைந்து தனியாளுமையை உருப்படுத்தின. எழில் உணர்விலும் கிரேக்கர்கள் எடுப்பாக வளர்ந்தார்கள். கலையை உண்மையாகவும் ஓர் அனுபவமாகவும் அஃது எல்லாருக்கும் உரியதாகவும் எல்லாரும் அறியத் தக்கதாகவும் கொண்டார்கள். கல்லோவியம், சொல்லோவியம், வண்ண ஓவியம், இசை ஓவியம் ஆகிய பருக்கலைகள், நுண்கலைகள் எல்லாவற்றிலும் அழகினைக் கண்டார்கள். அவர்கள் வரைந்த உரை நடை, மேடைப் பேச்சு, வரலாறு ஆகியவெல்லாம் கலை அழகினைக் கொண்டன.

கிரேக்கர்களுடைய வாழ்க்கைக் குறிக்கோளினை அரிஸ்டாடில் இன்பமாகவும் அழகாகவும் வாழ்வதே என்று கூறியுள்ளார். ஆனால் கிரேக்க வாழ்க்கை இம்மைக்கு அமைந்ததே அன்றி, மறுமையைத் தேடவில்லை. அவர்களுடைய நாகரிகமெல்லாம் இக்குறிக்கோளினையே எடுத்துக் காட்டுகின்றது. இன்று ஒரு சில குடிஆட்சி நாடுகளில் மதச் சார்பற்ற கல்வியை வற்புறுத்துகிறர்கள். அத்தகைய கல்வி கிரேக்கர் களிடையே வளர்ந்தது. இத்தகைய கல்வி வளர்ந்த வரலாறும், அது செயல் முறையில் உருப் பெற்றதும் அதுபோழ்து குறிக்கோள்கள் வளர்ந்த பெற்றியும், கற்பித்த முறைகளும் இன்றைய நமது கல்விச் சிக்கல்களைத் தீர்க்க வழிகாட்டியாக உதவுகின்றன.

[1] ஹோமர் காலத்தில் கிரேக்க மக்கள் வீரத்தையும் அறிவையும் போற்றினர்கள். [2] அகிலெஸ் செயற்பெருமை கொண்ட வீரன். [3] ஓடிசியஸ் அறிவுப் பெருமை கொண்ட மன்னன். இவ்விருவரும் கிரேக்க மக்களுக்கு எடுத்துக் காட்டுகளாக விளங்கினர்கள். வீரன் தீரச் செயல்களைச் செய்பவனுகக் காட்சி அளித்தான். அறிவாளன் அறிவோடு தனது செயற்பாடுகளை நிகழ்த்தினன். வீரமும் அறிவும் பொதுமக்களுக்குப் பயனைத் தந்தன; ஹோமர் காவியங்கள் இவற்றைப் படம் பிடிக்கின்றன.

கிரேக்க மக்கள் ஒவ்வொருவரும் தமது திறனை நாட்டுக்கே நல்கினர்; திறன் மட்டும் அல்லாது பண்புடையவராகவும் இருந்தனர். பல கலைகளிலும், அறிவியல்களிலும் மெய்யறிவிலும் மேன்மை பெறுவதே மெச்சத்தக்கதாகக் கருதப்பெற்றது. இவற்றைப் பிறப்பிப்பதே கல்வியின் குறிக்கோள். இக்குறிக்கோள் நாட்டுக்கு மட்டுமன்று; ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிய பயிற்சியாயிற்று.

கிரேக்க நாட்டில் வளர்ந்த கல்வித் திட்டங்களுள் இரண்டு நாடுகள்

1. Homer 2. Achilles 3. Odysseus

வேறுபாடுற்ற இரண்டு குறிக்கோள்களை வற்புறுத்தின. அவையாவன: [1] ஸ்பார்டாவும் [2] ஏதென்சும்.

8. **ஸ்பார்டா நாட்டுக் கல்வி :** ஸ்பார்டா நாட்டில் தனிமகன் தனக்கென வாழாது நாட்டுக்கே வாழ்ந்தான். தனி ஒவ்வொருவனும் உடல் வளர்ச்சியோடு வன்மை, திண்மை, வீரம் ஆகியவற்றை வளர்த்து குடிமகனுவதையே நோக்கமாகக் கொண்டான். ஸ்பார்டர்கள் தமது குழந்தைகளை வளர்ப்பதில் அக்கறை கொண்டார்கள். அதற்கு ஸ்பார்டா அரசு முழு ஆதரவு தந்தது. ஆண் மகனைப்போன்று ஸ்பார்டப் பெண்களும் நாட்டுச் சேவையில் ஈடுபட்டார்கள். ஆண்களும், பெண்களும் தமது உடல், பொருள், ஆவி எல்லாம் நாட்டுக்கே தந்தார்கள். குழவி பிறந்த ஏழாண்டுகள் வரையில் தாய் அதன் நலத்தினைப் பாராட்டினுள். அதன் பின்னர் குழந்தைகள் வளர்ப்பினை அரசு ஏற்றுக்கொண்டது. பொது மன்றங்களில் குழந்தைகள் வளர்ந்தார்கள். பணிதல், உடற்பயிற்சி செய்தல், தீரத்தை வளர்த்தல், இடுக்கண் தாங்குதல் முதலிய பயிற்சிகள் பன்னிரண்டு வயது வரையில் அளிக்கப் பெற்றன. இங்ஙனம் பிள்ளைகள் வளரும் பொது மன்றங்களே பள்ளிகள். உண்ணுதல், உறங்குதல் எல்லாம் பொது இடங்களிலேயாகும். பதினெட்டு வயதுக்குப் பிறகு போர்ப் பயிற்சி அளிக்கப் பெற்றது. பயிற்சி பெறுங்கால் இளைஞர்களுக்கு மூத்தவர்கள் பயிற்சி அளிக்கவேண்டும்; இருபது முதல் முப்பது வயது வரையில் பல போர்த் திறன்களைப் பெற்று நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டும். குடிமகனுன பிறகு குடும்பத்தோடு வாழாது பொது உண்டிச் சாலைகளில் உண்டு பொது இடங்களில் உறங்குவதே சட்டம்.

ஸ்பார்டக் கல்வி ஏற்பாடு அறிவையேனும் எழிலையேனும் வளர்க்கவில்லை. முழுவதும் உடல் வன்மையையும் ஒழுகலாற்றையும் மட்டுமே வற்புறுத்தியது. வேண்டாத கல்வியினை ஸ்பார்டர்கள் வேண்டவில்லை. அவர்கள் வாழ்க்கைக்கு வேண்டியவற்றை மட்டும் கற்றுக் கொண்டார்கள். போர்க் காலத்தில் போர் புரியவும் தன்னலம் பாராது நாட்டு நலம் நாடவும் போர் செய்து வெற்றி பெறவும் மட்டுமே அவர்களுக்குக் கல்வி வேண்டற்பாலதாயிற்று. அவர்கள் ஒரு சிறிது படிக்கவும் எழுதவும் கற்றுர்கள். அத்திறன் ஒரு சிலருக்கு மட்டுமே தரப்பட்டது. அவர்கள் விழாக் காலங்களில் நடனம் புரிவது மரபு. அதற்கு வேண்டிய இசையும், இசைக்கல்விப் பயனும் ஒரு சிலருக்கே உரித்தாயின. பொதுப்பட எல்லாரும், ஓட்டம், தாவுதல், குதித்தல், உருளை எறிதல், வாள் வீசுதல், குத்துச் சண்டை, கட்டிப் புரளுதல் ஆகியவற்றையே இன்றியமையாத பொதுப் பயிற்சிகளாகப் பெற்றனர். ஆண் பிள்ளைகள் இடுக்கணுக்கு வளையாதபடி பொறுத்துக் கொள்ளுதலைத் தரும் பயிற்சி மிகக் கொடியது. இளைஞர்களையும் காளையர்களையும் அடிக்கடி கோலால்

1. Sparta 2. Athens

அடிப்பது உண்டு. அடியைப் பொறுத்துக் கொள்ளுவது ஒரு திறன். ஆனால் அடியைத் தாங்காமல் உயிர் துறப்பதும் உண்டு. ஒழுக்கத்தினை எப்படிக் கற்பிப்பது என்பது நமது சிக்கல். பிள்ளைகளுடைய வாழ்க்கை எல்லாம் பொது மன்றத்தில் பலருடைய இடையில் நடைபெறுவதால் அவர்களுடைய செயல்களெல்லாம் அப்போதைக்கப்போது பெரியவர்களுடைய உடன்பாடு மறுப்பினைப் பெற்றன. எந்தச் செயலும் மறைவில் நிகழுவதற்கு வாய்ப்பில்லை. பெரியவர்களுடைய கண்காணிப்பே பிள்ளைகளை ஒழுக்க வழியில் வளர்த்தது. ஓய்வு நேரங்களில் பெரியவர்கள் பல வினுக்களைக் கேட்டுப் பிள்ளைகளை ஊக்குவிப்பார்கள். பிழை உள்ள விடையினைப் பகர்ந்த பிள்ளையினுடைய கட்டை விரலைப் பெரியவன் கடித்துத் துன்புறுத்துவதே தண்டனை. ஒவ்வொரு ஸ்பார்ட மனிதனும் ஆசிரியன்; ஒவ்வொரு இளைஞனும் அவனுடைய மாணுக்கன். ஸ்பார்டப் பெண்கள் வீரர்களைப் பெற்றெடுக்கக்கூடிய தாயர்களாகப் பயிற்சி பெற்ருர்கள். ஆண்களும் பெண்களும் பெற்ற பயிற்சி யாவும் அவர்களுடைய உடலையும் உள்ளத்தையும் கல்லாக்குவதற்கே ஆகும். களவு தீச் செயலாகக் கருதப்படவில்லை. போர்க் காலத்தில் களவாடுவது கண்ணியமாகக் கருதப்பெற்றது. ஆனால் களவாடி அகப்பட்டால் தண்டனை விதிக்கப்பட்டது.

9. அதீனியக் கல்வி முறை: ஸ்பார்டா நாட்டில் குடும்ப வாழ்க்கை குன்றியது. ஏதென்சு நாட்டில் குடும்பம் நாட்டு வளர்ச்சிக்கு நன்மையை நல்கிற்று. ஸ்பார்டக் கல்வி உடலையும், மறப்பண்பினையும் மாண்புறச் செய்தது. அதீனியக் கல்வி உடற்பயிற்சி அறப்பயிற்சி ஆகியவற்ருேடு வனப் புணர்ச்சியையும் அளித்தது. ஸ்பார்டா நாட்டில் குடிமக்கள் நாட்டின்மீது நாட்டம் பெற்ருர்கள். அவர்கள் நாடும் அவர்களும் ஒன்றேயானுர்கள். ஏதென்சு நகரில் ஒவ்வொரு அதீனியனும் தனியாளுமைத் திறனை வளர்த்துத் தனக்கென வாழ்ந்தும், தனது சமூகத்துக்குரியாளனுகவும் வளர்ந்தான். ஏதென்சு நகரம் ஸ்பார்ட்டாவைப் போன்று போர்ப்பயிற்சியுடையதாகக் காணவில்லை. அதீனியர்கள் எளிய வாழ்க்கையிலும் வனப்பு மிக்கு வளர்ந்து இன்பத்தை நுகர்ந்து, உள்ளத்தை வளர்த்து ஆண்மையினையும் பெருக்கிக் குடும்ப வாழ்வு வாழ்ந்து நாட்டுப் பொதுப் பணிப்பற்றும் கொண்டு நயம்பட வாழ்ந்தார்கள். நாட்டாட்சிகளில் அக்கறை கொள்ளாதவன், துப்பற்றவனுகக் கருதப்பெற்ருன். அக்கறை கொண்டவர்கள் திறமையாளராகக் கருதப் பெற்றனர். ஆய்ந்து ஓய்ந்து பாராது எக்காரியத்தையும் அவர்கள் இயற்றுவதில்லை. ஒரு காரியத்தைச் செய்வதற்கு முன் அதைப்பற்றி உரையாடியும் வாதாடியும் அறிந்து கொண்ட பிறகே அதைச் செய்தார்கள். பள்ளிகளெல்லாம் தனியாரால் நடத்தப் பெற்றன. அரசினர் பதினுறு வயது முதல் இருபது வயது வரையில் உடற்பயிற்சியும், போர்த்திறமையும் அளித்தார்கள். தனியார் பள்ளிகளெல்லாம் அரசினரால் தணிக்கை செய்யப்பட்டன. பொது வாழ்க்கை

யில் குற்றம் இழைத்த காளேயர்களுக்குப் போதிய தண்டனை விதிக்கப் பட்டது.

பள்ளிப்படிப்பு ஏழாவது வயதில் தொடங்கிற்று. எட்டு அல்லது ஒன்பது ஆண்டுகள் படிப்பு நீடித்தது. படிப்பின் தரம், பாடங்களின் எண்ணிக்கை, உயர்வு ஆகியவை அந்தந்தக் குடும்பத்துக்கு ஏற்றபடி அமைந்தன. ஏதென்சு பிள்ளைகள் இரண்டு வகைப் பள்ளிகளில் படித்தனர். ஒன்று மற்றென்றுக்கு வேறானது. ஒன்று பிற்பகலிலும் மற்றென்று முற்பகலிலும் நடைபெற்றன. இசைப் பள்ளிகள், ஆலயங் களிலும் பொது மன்றங்களிலும் நடைபெற்றன. இசைப் பள்ளிகளில் இசையோடு இலக்கியமும் கற்பிக்கப் பெற்றது. பல நூல்களெல்லாம் பெரியவர்களுடைய வரலாறுகளையும், தீரச்செயல்களையும் கற்பித் தன. செய்யுளெல்லாம் இசையோடு பாடப்பெற்றன. சுருதியும் மிருதியும் குழைந்த பயிற்சியே வாழ்க்கையை இசை உள்ளதாக்கிக் கொள்ள உதவும் என்று கருதப் பெற்றது. உடற்பயிற்சி உள்ளப் பயிற்சியோடு ஒன்றியது. போர்க்காலங்களில் கோழைமைப்படாதபடி போர் வன்மைக்காக உடற்பயிற்சி அளிக்கப் பட்டது. உடற்பயிற்சி யினால் உளம் வன்மை பெற்றது. மனவெழுச்சி மாண்புற்றது. பகுத்தறிவு மேம்பாடுற்றது. உள்ளம் பெருக்கமுற்றது. உள்ள நிகழ்ச்சியும், மெய்ப்பாடும் ஒன்றி இயங்கின. விளையாட்டுக்களிலும், ஓட்டங்களிலும் இன்று போல் அன்று சிலர் மட்டும் பங்கெடுத்தார் அல்லர். வெற்றியை நாடித் திறமையினைக் குறைத்துக் கொண்டார் களும் அல்லர். ஒழுங்கோடும், அழகோடும் உள்ள ஒரு நிலையோடும் திறமையோடும் பங்கு கொள்ளுவதே சிறந்த வெற்றியாகக் கருதப் பெற்றது. ஓட்டப் பந்தயங்கள் மணல் வெளியில் நடைபெற்றன. பந்தங்களை ஏந்தி அவர்கள் ஓடினார்கள். எல்லாப் போட்டிகளைக் காட் டிலும் அறிவைப் பயனுறச் செய்யும் விரைவும், வீரமும் பெரிதாகக் கருதப்பெற்றன. ஒவ்வொரு பயிற்சியும் ஒவ்வொரு திறமையை அளித்தது. ஒழுங்காக அணிவகுத்துப் பயிற்சி செய்தலே சிறந்த முறையாக விளங்கிற்று.

இசைப் பள்ளிகள் என்றால் வெறும் இசையினை மட்டும் கற்றுக் கொடுக்கும் பள்ளிகள் அல்ல. உடற்பயிற்சி உடலுக்கென்பது போன்று, இசை உயிருக்காயிற்று. செய்யுள், நாடகம், வரலாறு, சொற்பொழிவுக் கலை, அறிவியல், இசை இவை யாவும் இசைப்பள்ளிகளின் பாடத் திட்டத்தில் அடங்கின. இவை கிரேக்கத் தொடக்க நிலை இசைப் பள்ளிகளிற் கற்பிக்கப் பெற்றன. பிள்ளைகள் பாடங்களை நெட்டுருச் செய்தார்கள். அவற்றை இசைக் கருவியோடு இசைத்தார்கள். இசைக் கருவியை மீட்டவும் கற்றுக் கொண்டார்கள். ஆசிரியர்களும் இசை வாணர்கள். இவற்றிலெல்லாம் தனித் திறமையும், முதன்மையும் பாராட் டப் பெற்றன. செய்யுளுக்கேற்ற இசையை மாணவர்கள் உய்த்து உணர்ந்தார்கள். முருகுணர்ச்சியை வளர்த்தார்கள். இசை உள்ள

செயலையே வளர்த்தனர். தீயவற்றை வெறுத்தனர். இசை வளர்ச்சி மனித ஒழுக்கத்தை இசைபட மாற்றி அமைத்தது. இசைபட வாழ்தல் என்பது தமிழ் நாட்டு முது மொழி என்பதை இங்கு அறிதற்பாலது. படித்தல், எழுதுதல், இலக்கியம் கற்றல் எல்லாம் இசை வழியில் அமைந்தன. கிரேக்கப் பள்ளிகள் இசைக்கல்வியாலும், உளப்பயிற்சிக் கல்வியாலும் நன்னெறியைப் பிள்ளைகளிடையே வளர்த்தன.

ஆசிரியர் தான் கற்பித்த எல்லாவற்றிற்கும் தானே ஓர் எடுத்துக் காட்டாக விளங்கினார். ஆசிரியர் வேறு, அவர் கற்பிக்கும் முறை வேறு அன்று. மாணவனுடைய நடத்தை, ஒழுங்கு எல்லாம் ஆசிரியனுடைய உறவுப் பயனால் உருப்பெற்றன. அதீனியக் கல்வி வெறும் முறைமை தழுவிய உயிரற்றதன்று. அது செயல் முறையிலும், இன்ப நுகர்ச்சி முறையிலும், தன்மை வெளியீட்டிலும், தன்னடக்கத்திலும் உயிருற்றதாகச் செயற்பாட்டிலேயே அமைந்தது. இன்று கல்வி முறை செயல் முறையில் அமைவதற்கும், தனித்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் கல்வியாளர்கள் வழி தேடுகிறார்கள். அன்று கிரேக்கக் கல்வி செயற்பாட்டில் தொடங்கியது. பின்னர் அதன் வழியாகக் கற்றல் திறனைப் பெற்றது. நன்னடத்தையினை விளையாட்டுக்கள் வளர்த்தன. எல்லாக் கல்வியும் செயற்பாடுகளின் பழக்கத்தை அளித்தது. செயற்பாடுகளுக்குப் பிறகு கற்றல் நிகழ்ந்தது. அதனால் அறிதல் முறையில் கற்றல் அமைவு பெற்றது. வாழ்க்கையிலுங்கூட அறிவு முறை பயனளித்தது. ஒரு செயற்பாடு நிகழ்ந்த பிறகே அறிவு பிறக்கின்றது என்ற கொள்கையை அடிப்படையாகக் கிரேக்க ஆசிரியர்கள் கொண்டனர்.

கிரேக்கக் கல்வி தனித்தன்மையைச் சமூக நிலையங்களோடு தொடர்பூட்டி வளர்த்தது. அதனால் தனி ஆளுமைத் திறன் சமூகத்துக்குப் பயன்பட்டது. எனவே கிரேக்கக் கல்வி குடி ஆட்சி மக்களுக்கு உரிய கல்வியாக அமைந்து தனித்தன்மையையும் வளர்த்துச் சமூக நலனையும் நாடிற்று.

10. புதிய கிரேக்கக் கல்வி: பழைய கிரேக்கக் கல்வி வரலாற்றில் ஸ்பார்டர்களுடைய கல்வி முறையைப் பற்றியும், அதீனியர்களுடைய மாறுபட்ட கல்வித் திறனைப் பற்றியும் அறிந்தோம். ஸ்பார்டாவில் நாட்டுத் தொண்டுக்கே கல்வி முறை அமைந்ததால் தனி ஆளுமைத் தன்மை ஒடுக்கப்பெற்று நாளடைவில் பழமையிலேயே தேக்கமுற்றுப் புத்துயிர் பெறாது அழிந்தது. ஆனால் ஏதென்சு நகரத்தில் தனித்தனி மக்களுடைய வளர்ச்சிக்கும், உரிமைக்கும், சமூக ஒற்றுமைக்கும், நலனுக்கும் சமநிலை அளிக்கும் கல்வி ஏற்பாடு அமைந்ததால் அதீனிய மக்கள் [1] பெரிக்கிளீஸ் பொற்காலத்தைப் பெற்றார்கள். கிரேக்க நாகரிகம் உயர்ந்தோங்கிற்று. அரசியலில் வல்லுநர்கள் தோன்றினர்

1. Pericles

கள். கலைகள் உச்சநிலை எய்தின; அறிவியல் அடிப்படையில் துவங்கின; நாடகக்கலை [1] துன்பியல், [2] இன்பியல் பாகுபாட்டோடு பேரளவில் வளர்ச்சி பெற்றது. எல்லாத் துறைகளிலும் அதீனியர்கள் உறவினைக் கண்டார்கள். தனி ஒவ்வொருவனும் தனது ஆளுமையை உச்சநிலை வரையில் வளர்த்துக் கொண்டதனால் குடிமகன் பொறுப்புள்ளவன் என்ற நினைவு தளர்ந்தது. பெரிக்கிளீஸ் காலத்தில் குடி ஆட்சியில் வணிகர்கள் இடம் பெற்றார்கள். செல்வநிலை உயர்வுற்றது. பழைய கல்விநிலை தாழ்வு பெற்றது. ஏதென்சு குடியரசு பேரரசாக மாறியதால் அரசியல் அறிவும், திறனும் பேரரசினை நடத்தக் கூடிய வகையில் மாறுபாடு பெற வேண்டியதாயிற்று. பழைய முறைக் கல்வி இப்புதிய தேவைப்பாட்டிற்கு ஒவ்வாததாயிற்று.

பேரரசு முழுவதும் கிரேக்கர்கள் பரவினார்கள். பல புதிய கருத்துக்கள் பரவின. அவை நாடு முழுவதும் புதிய கிளர்ச்சியை உண்டாக்கி விட்டன. ஏதென்சு நாகரிகம் எங்கும் பரவியது. சிறிய பிணக்குகள் ஏற்பட்டதனால் ஆணையாளர் ஆணை செலுத்தினார்கள். புதிய கருத்துக்கள் பழமையைத் தாக்கின. எனவே ஏதென்சு நகரம் பல கருத்துக்களுக்கு உறைவிடமாயிற்று. பழைய துன்பியல் நாடகங்களின் வாயிலாகக் கடமைக்கும், தன்னலத்துக்கும் உள்ள மாறுபாடுகள் வெளியாயின. புதிய வாழ்வில் தன்னலம் தலைவிரித்தாடிற்று. இன்பியல் நாடகங்கள் கடமை மீது தன்னலத்தின் வெற்றியை வரைந்தன. பழைய இலக்கியங்களில் கிரேக்கக் கடவுளர்கள் இடம் பெற்றிருந்தார்கள். புதியவற்றில் மனிதனுடைய சூழ்ச்சியும், தன்னல வாழ்க்கையும் காணப் பெற்றன. பொதுப் பணி ஆர்வம் குறைந்த காட்சியும் பண்பற்ற வாழ்க்கைத் தாண்டவமும் கவிஞர் இலக்கியங்களில் இடைமிடையப் பெற்று எதிரொலித்தன. மெய்யறிஞர்கள் சமய அறிவினை நீத்துப் புறக் காட்சிக்கு உரிய அண்டம், உலகம் அவற்றிலுள்ள ஆற்றல்கள், மனித நிலை ஆகியவற்றை ஆராயத் தொடங்கினார்கள். புதிய வாழ்க்கைக்குரிய பண்புகளை வகுக்க முனைந்தார்கள். சோஃபிஸ்டுகள் என்ற கூட்டத்தினர் புத்துணர்ச்சியால் உந்தப்பெற்று நாடெங்கும் பரவினர். 'சோஃபிஸ்டு' என்ற சொல்லுக்குப் பொருள் 'அறிவாளி' என்பது. ஆனால் அவர்கள் தம் மதிப்பை நாளடைவில் இழந்துவிட்டார்கள். கிரேக்கப் பேரரசில் அவர்களை எங்கும் காணலாம். புதிய கல்வியை அவர்கள் எங்கும் பரப்பினார்கள். மக்களுக்கு எதையும் கற்பிக்கும் ஆற்றல் உடையவரானார்கள், பழைய நாகரிகத்தையும், கருத்துக்களையும் எள்ளி நகையாடினர். மனிதனே எல்லாப் பொருள்களையும் அளந்து மதிப்பிடக்கூடிய ஆண்மையாளன் என்றார்கள். உண்மை, மெய்மை, அறிவின் தன்மை ஆகியவெல்லாம் அகத்தவை என்றார்கள். பேரரசு முழுவதும் மக்கள் உள்ளத்தில் கிளர்ச்சி

1. Tragedy 2. Comedy

பொங்கியது. ஒவ்வொருவருக்கும் உரிமை வேட்கை மீதுற்றது. வாழ்க்கை வாய்ப்புக்கள் ஏதென்சு நகராட்சியோடு நின்றபோது குறைந்திருந்தன; பேரரசான பிறகு அவை பெருகின; பல துறைகளில் மேம்பாடு பெற மக்களிடையே போட்டி பெருகிற்று. சமூகப் பொருளாதார, அரசியல், அறிவியல் துறைகள் பெருகின. பொது மன்றங்களிலும், நீதிமன்றங்களிலும் புதிய திறம் பெற்றவர்கள் தேவையாயினர். நாவன்மையும், எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருளை ஒட்டியும் வெட்டியும் பேசுவதற்குத் திறமையும் பொதுமக்கள் பெறலாயினர். அரசியற் பணிகளில் வெற்றி பெறுவதற்கு உயர்நிலைப் பயிற்சியும் பெற வேண்டியதாயிற்று. இவ்வளவும் புதிய கல்வியின் பொறுப்பாக உருவெடுத்தன. இவை எல்லாவற்றையும் கற்பித்தற்கு முன் வந்தவர்கள் [1] சோஃபிஸ்டுகள்.

சோஃபிஸ்டுகள் ஏதென்சு நகரத்துக்கு மட்டும் உரியவர்களல்லர். அவர்கள் கிரேக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள். பழங் கல்வியின் குறைபாடுகளைக் கண்டார்கள். ஏதென்சு பேரரசின் மக்கள் முற்போக்குக் கல்வி இன்றி முன்னேற முடியாத நிலையினை அறிந்தார்கள். அவர்களுள் பெரும்பான்மையோர் பல நாடுகளைச் சுற்றிப் பல அனுபவங்களைப் பெற்றவர்கள். பேச்சுத் திறமையில் வல்லவர்கள். யாரையும் மடக்கி அவர்கள் பேச்சில் மயக்கிவிடுவார்கள். அவர்களே மேடைப் பேச்சுக் கலையை வளர்த்தார்கள். நடைமுறைச் சிக்கல்களை மாணவர்களுக்கு விளக்கி அவற்றை விடுவிக்கும் வழிகளையும் விளக்கினர்கள். நாளடைவில் அவர்கள்மீது வெறுப்பு வளர்ந்தது. எல்லாம் அறிந்தவர்கள் என்று அவர்கள் சொல்லிக்கொண்டதனுல் எதுவும் தெரியாதவர்கள் என்று மக்கள் அவர்களைக் கருதினர்கள். பணம் பெருமல் அவர்கள் எதையும் கற்றுக் கொடுப்பதில்லை. போதிய பணம் பெற்ருலன்றி அவர்கள் நன்ருகக் கற்றுக் கொடுக்க மாட்டார்கள். மேலும் அவர்களுடைய பண்புகளெல்லாம் தாழ்ந்துவிட்டன. அவர்கள் நேர்மையற்றவர்கள் என்று எங்கும் புறக்கணிக்கப்பட்டார்கள். ஆயினும் சோஃபிஸ்டுகள் மக்களிடையே புதிய உணர்ச்சியை ஊட்டினர்கள் என்று கூறுவது மிகையாகாது. அவர்களுடைய பண்பற்ற ஒழுக்கமெல்லாம் தனி மனிதன் உயர்வுள்ளவனே என்று வற்புறுத்தியதே ஆகும். தனி ஒவ்வொருவனும் தனது வாழ்க்கைக்குத் தானே பொறுப்பென்றும் அப்பொறுப்பினை ஆற்றுவதற்கு அவனே வழி வகுத்துக் கொள்ளவேண்டும் என்றும், தமது அரசியற் பங்கினைத் தானே திட்டமிட்டுக் கொள்ளவேண்டும் என்றும் பழமையை ஏற்றுக் கொள்ளுவதும் தள்ளுவதும் அவன் விருப்பு வெறுப்பே என்றும் பொது நன்மைக்காக நேரம்,பொருள், தொண்டு ஆகியவற்றைத் தானே திட்டமிட்டுக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தியதே அவர்கள் இழைத்த தீங்காகக்

1. Sophists

கருதப் பெற்றது. கல்வியைப் பொறுத்த வரையில் அது நடைமுறையையும், பயனையும் வற்புறுத்தும் வழியாயிற்று. [1] ஸாகிரடீஸ் சோஃபிஸ்டுகளை நினைப்பதற்கும், பேசுவதற்கும், செயலாற்றுவதற்கும் கற்பிக்கும் ஆசிரியர் என்றே கருதினர். ஆயினும் ஏதென்சு நகரத்தில் வளர்ந்த தனித்தன்மை, ஸ்பார்ட்டா நகரத்தின் சமூகத் தன்மையையும் விஞ்சியது. அதனால் தான்தோன்றிகள் பலராயினர். நாட்டின் கட்டுற்ற ஒற்றுமை கட்டற்றுத் தளர்ந்து விட்டது. எனவே புத்துணர்வுக் காலத்தில் மூன்று பெரிய மேதைகள் தோன்றினர். அவர்களுடைய கருத்தோவியங்கள் இன்றும் சிந்தனைச் செல்வங்களாக விளங்குகின்றன. அன்னவர் ஸாகிரடீஸ், பிளேடோ, அரிஸ்டாடில் ஆகியவர் ஆவர்.

ஸாகிரடீஸ் [கி. மு. 469–399]:

ஸாகிரடீஸ் யாரிடத்தும் கல்வி பயின்றதில்லை என்று அவரே கூறி விட்டார். ஆனால் சோஃபிஸ்டுகளுடைய ஆற்றல் அவரை ஈர்த்தது. மனிதனே எல்லாப் பொருள்களையும் அளவிட்டு மதிப்பிடக் கூடியவன் என்றால் அவன் தன்னை அறிந்து கொண்டாலன்றி அளவிடலாகாதென்று அறிவுறுத்தினர். [2] ப்ரோடகாரஸ் எல்லா அறிவும் புலன் வழியாயது என்றார். ஆனால் ஸாகிரடீஸ் அறிவெல்லாம் எண்ணங்களாலும், கருத்துக்களாலும் ஆனவை என்றும் அவை எல்லோருக்கும் உடன்பாடுள்ளவை என்றும் கூறினர். புல நுகர்ச்சி எல்லாம் அகத்தவையாகையால் புறத்தே அவற்றிற்கு ஏற்புடைமை கிட்டாதென்றார். [3] தான் தன்னை அறிதல் ஓர் அகக் காட்சிச் செயற்பாட்டினையும் உள்ளத்தை ஒருமுகப்படுத்தல் தன்மையையும் உணர்த்திற்று. எனவே தனி ஒருவனுடைய உணர்வில் அறப் பண்பாடு அமைந்துள்ளதாகச் ஸாகிரடீஸ் சுட்டிக் காட்டினர். சோஃபிஸ்டுகள் செல்வாக்கில் அவரவர் ஒரு கருத்தினைக் கொள்ளுவதும், இயம்புவதும் வழக்கமாக இருந்தது. ஆனல் ஸாகிரடீஸ் அக்கருத்துக்கள் யாவும் எல்லாருக்கும் உடன்பாட்டுத் தன்மை உடையதாக வேண்டுமென்று வற்புறுத்தினர். அறிவும் அறனும் ஒன்றென்றார். அறன் எல்லாருக்கும் பொதுவானது. எனவே அறிவும் அத்தன்மையது. அறிவூட்டுவது என்பது உள்ளத்தில் சிந்தனை ஊட்டுவதாகும். அறிவு அனுபவத்திலிருந்து உண்டாகுவது. அனுபவம் நல்லதாகவே அமைதல் வேண்டும். அனுபவத்தால் பெற்ற அறிவு வாழ்க்கைக் கலைக்கு ஊற்றிடமாகும். இத்தகைய கருத்துக்களை ஸாகிரடீஸ் அறிவுறுத்தினர்.

ஸாகிரடீஸ் முறை வினாக்களின் வாயிலாக உரையாடல் வழியில் அமைந்தது. இம்முறை அறிவு, அறச்செயலில் அமைந்ததென்று எடுத்துக்காட்டினர். எளியவர்கள் வாழ்க்கையிலிருந்து பேருண்மை

1. Socrates 2. Protogoras 3. Self-knowledge

களை அவர் விளக்கினர். எடுத்துக்காட்டாக ஒரு தேரோட்டி போட்டியில் தேரை ஓட்டலாம். ஆனால் தேருக்குரியவன் பார்வையாளனாகத்தான் இருக்க வேண்டும். தேருக்கு உரியவன் ஓட்டக்கூடாதோ எனின் தேர் ஓட்டுதல் தேர் ஓட்டிக்குத்தான் தெரியுமே அன்றித் தேருக்குரியவனுக்குத் தெரியாது. ஸாகிரடீஸ் முறை இக்காலம் வரை கல்வி முறைகளுள் பேரிடம் பெற்றுள்ளது. அம்முறை உரையாடலில் தொடங்குகிறது. தொகுத்தறி முறையில் செல்லுகிறது; இறுதியில் நடத்தை பற்றியாவது வாழ்க்கை பற்றியாவது ஒரு பொது உண்மையை விளக்குகிறது. புலக்காட்சிப் பொருள்களை எல்லாம் உளவியற் போக்கில் பொதுமைக் கருத்துக்களாக்கி இம்முறை உதவுகின்றது. தருக்க முறையில் பேரினக் கருத்தினைச் சிற்றினமாக்கவும், சிற்றினக் கருத்துக்களைப் பேரினமாக்கவும் உதவுகிறது. ஸாகிரடீஸ் முறை அறிவுப் பெருக்கத்தை வற்புறுத்தியது; வாழ்க்கையோடு ஒட்டியது. சோஃபிஸ்டுக்கள் நடைமுறை வாழ்க்கைக்கு உதவுவதற்கு வேண்டிய அறிவினைத் தந்தார்கள். ஆனால் ஸாகிரடீஸ் அத்தகைய அறிவு அறவழியிலமைந்ததாகவும் எல்லாருக்கும் உடன்பாடுள்ளதாகவும் அமைய வேண்டுமென்றார். சொற்போர் முறை அறிவியல் முறைக்கு உடன்பாடென்றார். தரம் வகுத்தல், வரிசைப் படுத்தல், திறங்காணல் ஆகியவை எல்லாம் அறிவியல் முறையைச் சார்ந்தவை.

ஸாகிரடீஸுடைய முறை அறவொழுக்கத்தை அறிவுறுத்தப் பெரிதும் பயன்பட்டது. ஆனால் பள்ளிப் பாடங்களாகிய மொழி, கணிதம் முதலியவற்றைக் கற்பிக்கப் பயனுறுமா என்பதில் கருத்து வேறுபாடுகள் உள. இப்பாடங்களெல்லாம் பொருள்கள் நிறைந்தவை. நமது பிள்ளைகளுடைய அனுபவத்தில் பொருட் கருத்துக்கள் இருந்தாலன்றி இம்முறையில் அனுபவத்தைத் திருத்தி அமைக்க முடியாது.

பிளேடோ: [கி. மு. 420–348]

ஸாகிரடீஸ் எளிய குடும்பத்தில் ஒரு கல் தச்சருடைய பிள்ளையாகப் பிறந்தார். ஆனால் பிளேடோ செல்வக் குடும்பத்தில் பிறந்தவர்; ஸாகிரடீஸுடைய மாணாக்கர்; சிறந்த கிரேக்க மெய்யறிஞராக விளங்கியவர்; பல நூல்களை இயற்றியவர்; பிளேடோ தன் ஆசிரியர் முறையில் தனது கருத்துக்களை வெளியிட்டார். கொள்கைகளில் ஆசிரியரோடு உடன்பாடுற்றார். அறிவுக் களஞ்சியமே கருத்துக் களஞ்சியம் என்றார். கருத்துக்களுக்கும் பொருள்களுக்கும் வேறுபாடு உண்டு. கருத்து அழிவற்றது; உருவத்தை ஆக்கித் தருவது. நாம் காணும் பொருள்களாகிய நாற்காலி, மேசை முதலியவை எல்லாம் உயர்ந்த உண்மைப் பொருள்கள் அல்ல. அவை உயிர் ஊட்டக்கூடிய, உருவம் அளிக்கக்கூடிய உண்மையாகிய ஆற்றலிலிருந்து செய்யப் பெற்றவை. கருத்துக்கும் பொருளுக்கும் ஒற்றுமை உண்டானால் பொருளின் பயன்

கிட்டுகிறது. அத்தகைய உயர் உண்மை நல்லதே. அவ்வுண்மையினைப் பெறுவதே கல்வியின் நோக்கம்.

பொருள்களுக்கு அல்லாது கருத்துக்கு மட்டும் ஏற்றம் தந்தது அறியத் தக்கது. அழகுள்ள பொருள்கள் உள. ஒரு வண்ண ஓவியம், நேர்த்தியான மலர், பேரழகுள்ள ஒரு பெண்—இவை மூன்றும் அழகுள்ளவை என்றால் அவற்றின் அழகு எல்லா அழகுப் பொருள்களுக்கும் உரியது. இம்மூன்று பொருள்கள் மட்டும் சிறப்பானவை அல்ல. ஒரு வீரன் தான் பிறந்த நாட்டுக்குத் தன்னைத் தற்கொடை செய்து கொண்டான் என்றால், அவனுடைய செயலில் நன்மை காணப்படுகிறது. ஓர் ஆசிரியன் தனது வாழ்நாள் முழுவதையும் பிள்ளைகளின் கல்விக்காகச் செலவிட்டான் என்றால் அவன் ஒரு நல்ல கருத்து உடையவனாகின்றான். வீரன் இறந்துபடுகின்றான். ஆசிரியன் பணியிலிருந்து விலகுகின்றான். அழகுள்ள பொருள்கள் அழிகின்றன. எல்லாப் பொருள்களுக்கும் ஓர் இறுதி உண்டு. ஆனால் அழகென்னுங் கருத்தும் நன்மை என்னும் நற்பண்பும் அழிவதில்லை. அதனால் என்றும் நிலவக்கூடிய உண்மைக் கருத்துக்களும், அழியாவனப்புக்களும் பற்றற்குரியவை. அவை என்றும் மாறாதவை. அவற்றை ஆக்கவும், அழிக்கவும் இயலாது. உண்மை, அழகு, நன்மை ஆகியவை முக்காலத்துக்கும் உரியவை. இதைப் போன்ற கருத்தினை நமது நாட்டினர் சத்தியம் (உண்மை) சுந்தரம் (அழகு) என்று வகுத்தனர். வள்ளுவரும் உண்மை வாய்மை மெய்ம்மை என்று வகுத்தருளினார். இத்தகைய உண்மைக் கருத்தினை உணர்வதற்கு ஆறாவது புலன் ஒன்றினை இயக்கத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும்.

பிளேட்டோ [1]"ரிபப்ளிக்" என்ற ஒரு நூலில் கல்வியைப் பற்றி விரிவுரையாற்றுகிறார். ஒவ்வொருவனிடமும் மூன்று பொறிகள் உண்டு. அவை: அறிவாற்றல்; மனவெழுச்சி அல்லது ஆர்வம்; விருப்பம் என்பன. அறிவு, மனவெழுச்சியையும் ஆசையையும் அடக்கினால் வாழ்க்கை நலமுற அமைகிறது. இம்மூன்று பொறிகள் வாய்ந்தார் சமூகத்தில் மூன்று வகுப்பினராகக் காணப்படுகிறார்கள். ஒருசாரார் மெய்யறிஞர்கள். மற்றொரு சாரார் போர் வீரர்கள். பிறிதொரு சாரார் வணிகர்கள். மெய்யறிஞன் ஆட்சி புரிந்தால் சமூகத்தில் நீதி நெறி விளக்கமுறும்; போர்வீரர் நாட்டைப் பாதுகாத்தலும், தொழிலாளி முதல் இரண்டு வகுப்பினருக்கும் அடங்கித் தானும் வாழ்ந்து அவர்கள் வாழ்க்கைக்கும் உதவுதலும் நடைபெறும் என்றார். இங்ஙனம் பிளேட்டோ மக்களிடையே வேறுபாட்டினைக் கற்பிக்கவில்லை. ஆனால் மக்களுடைய நாட்டத்தையும், ஆற்றலையும், திறமையையும் கண்டு பிரிக்க வேண்டுமென்று சொன்னார். இதனை மக்கட் பிரிவு என்று கருதலாகாது. ஏனெனில் பாட்டாளியின் வழியினரும் அவர்களுடைய

1. Republique

திறமையால் உயர்நிலையை எய்தலாம். அவரவர்களுடைய திறமைகளே பாகுபாட்டின் அடிப்படை. இன்றும் திறமைக்கேற்ற கல்வி என்று நாம் பறை சாற்றுகின்றோம். எல்லாருக்கும் ஒரு வகைத்தான கல்வி இயலாதென்கிறோம். இன்றும் மாணாக்கரைப் பாகுபாடு செய்யவேண்டும் என்று சொல்லுகின்றோம். இக்கருத்தினையே பிளேட்டோ அவர் தம் மெய்யறிவு வழியில் உணர்த்தினார். பொன்களில் தங்கம், வெள்ளி, செம்பு, உள்ளவாதலைப் போன்று மூன்று பிரிவினர் சமுதாயத்துளர். அவரவர்கள் தரத்துக்கு ஏற்ப வகுத்தல் நலம் என்றார். ஒவ்வோர் பொன்னுக்கும் உறுபயன் உண்டன்றோ! அதனதன் மதிப்புக்கேற்பப் பயன்படுத்துதல் அறிவு முறையாகும்.

பிளேட்டோவின் கல்வி முறை பொருளடக்கத்திலும் திறத்திலும் மிகப் பரந்து விளங்குவது. முதல் இரு வகுப்பினருக்கு மட்டும் கல்வித் திட்டம் உண்டு. மூன்றாவது வகுப்பினராகிய பாட்டாளிகள் புறக் கணிக்கப் பெற்றுள்ளார்கள். கல்வி குழந்தை பிறந்தது முதல் பள்ளிப் பருவம் வரை திட்டத்துக் கடங்கும்; பிறகு ஒழுங்கு முறைக்கல்வி; அஃது அரசினரைச் சார்ந்தது; ஏழு வயது முதல் பதினேழு வரையில் நீடிப்பது; பண்புகளை வளர்க்காத எப்பாடத்தையும் கல்வி ஏற்பாட்டில் சேர்த்துக் கொள்ளக்கூடாது. கல்வி ஏற்பாடு இரு வகையது. ஒன்று—இசை; மற்றொன்று—உடற்பயிற்சி. இசைத் திட்டத்தில் நீதிக்கதைகள் உண்டு. இவை கடவுள் நன்மையின் உருவம் என்றே கற்பனை செய்ய வேண்டும். தொடக்க நிலையில் கட்டுத் திட்டம் கூடாது. உடற்பயிற்சி செவிப் புலனையும் கட்புலனையும் வளர்ப்பதோடு நோயற்ற வாழ்வுக்கு வழி செய்ய வேண்டும். பல உடற்பயிற்சிகள், விளையாட்டுக்கள் ஒரே வகையில் பிள்ளைகளுக்கு அளிக்க வேண்டும். உடல் வன்மையுள்ள வர்கள் போர்ப்பயிற்சி பெறலாம்.

பதினேழு முதல் முப்பது வயது வரையில் உயர்நிலைக்கல்வி தகுதி உள்ளவர்களுக்கே உரித்தாகும். இப்பருவத்தில் இலக்கியம், அறிவியல் முதலியவற்றைக் கற்கலாம். முப்பது முதல் முப்பத்தைந்து வயது வரையில் மற்ற தகுதியுடையவர்களும், பண்புகள் வளரப் பெற்றவர் களும், புலநெறி வாழ்க்கைக்கு மேலான உயர்நிலையின் அழியா உண்மை நிலையினைச் சிந்திப்பதற்கு மலைக்குகையில் ஐந்தாண்டுகள் கழிக்க வேண்டும். இங்ஙனம் அறிவு பெற்ற [1] மெய்யறிவாளரே ஆட்சி யின் பொறுப்பை ஏற்கத் தகுதி உடையவர்கள். இருபது ஆண்டுகள் பணி செய்த பிறகு உலக வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெற்று வனத்தில் தவம் கிடக்கலாம்.

கல்வி உலகத்துக்குப் பிளேட்டோ 'நல்கிய நன்மை என்றும் சிந்தித்தற்குரியது. முதல் முதலாக அவர் ஒரு கல்வி ஏற்பாட்டினைத் தந்ததோடு பாடத்திட்டத்தையும் பலபடிகளுக்கு ஏற்ப வகுத்து உதவி

1. Philosopher-kings

னர். கல்வி உலகில் ஓர் [1]உயர் குறிக்கோட் கருத்தினைக் கல்விக்கு வரையறை செய்தார். பாடங்களும் இதற்குப் பிறழாமல் தேர்ந்தெடுக்கப் பெற வேண்டும். இதனால் ஃப்ரோபெல், மான்டிசோரி ஆகியோருக்கு இவர் முன்னோடியாக விளங்கினர். இன்று கல்வியாளர்கள் மாணவர் தகுதிக்கேற்ற கல்வி அளிக்கப் பெறல் வேண்டுமென்று கூறுகிறார்கள். இதற்கொப்பப் பிளேடோ தகுதிகளைப் பிரித்துக் காட்டியது மல்லாமல் தகுதிக்குத் தக்க கல்வியினையும் உணர்த்தி நின்றார். ஆண்கள் வேறு, பெண்கள் வேறு என்று அவர் கருதவில்லை. இன்று நாம் இருபாலருக்கும் தனித்தனிக் கல்விமுறை வேண்டுமென்று சொல்லுகிறோம். ஆனால் பிளேடோ இருபாலரும் இயற்கை வளங்களை ஒத்த நிலையிற் பெற்றவர்கள் என்று விளக்கினர். கல்விப் பொறுப்பு அரசாங்கத்தது. அரசாங்கம் சமூக வளர்ச்சிக்காகக் கல்விப் பொறுப்பினை ஏற்க வேண்டும் என்றார். அறிவிலிகள் அரசினராதல் அடுக்காததென்றும் மெய்யறிவாளரே அவராதல் வேண்டுமென்றும் கூறிய அவரது திட்டம் கல்வி உலகத்துக்கு மட்டுமே அன்றி அரசியல் உலகத்துக்கும் உரிய மெய்யறிவாகும்.

அரிஸ்டாடில்: [கி. மு. 384–322]

ஸாகிரடீஸ் மாணவர் பிளேடோ. பிளேடோவுக்கு மாணவர் அரிஸ்டாடில். இவர் ஒரு சிறந்த கல்வியாளர். இவரை ஒரு பல்கலைக் கழகமென்றே கொள்ளலாம். இவர் அறியாத தொன்றில்லை. இவரை அறிந்தவர்களெல்லாம் இவரைப் போன்ற ஆசிரியரைப் பெறுதல் அரிதென்று என்றும் கருதுகிறார்கள். இவர் வகுத்த கலைகள் கல்வி உலகத்தில் பல நூற்றாண்டுகள் ஆட்சி புரிந்தன. எல்லாக் கலைகளைக் காட்டிலும் அரசியற் கலையே மேலானதென்றார். அதனைச் சமூகத்தினருக்குப் பெரு நன்மைகளை உதவக்கூடிய ஒரு கலையாகக் கருதினர். அரசு செம்மையாக நடைபெறுவதற்கு நற்பண்புகள் உள்ள குடிமக்கள் வேண்டுமல்லவா! அத்தகையோரை உருவாக்குவதே கல்விப் பணி என்று கருதினர்.

கருத்துக்கள் நிலைபெற்றவை என்றும் பொருள்கள் அழியக் கூடியவை என்றும் கூறும் பிளேடோ போன்றார் கருத்துக்கு மாறாகக் கருத்துக்கள் பொருள் வழி அல்லாது நிலை பேறுடையவை அல்ல என்று அரிஸ்டாடில் கருதினர். தனி மனிதன் நன்மை நிலைபேற்றினைத் தன் உணர்வில் காணவேண்டுமென்றார் பிளேடோ; ஆனால் அரிஸ்டாடில் மக்கள் தமது வாழ்வில் காணவேண்டுமென்று இயம்பினர். ஒவ்வொருவனும் தான் வேண்டும் நல்வாழ்க்கையின் பயனைச் சமூக உறவில் இன்பமாகக் காணலாம் என்றார். மனிதன் [2] அரசியல் உயிரி அவனுக்குப் பண்போடு கூடிய அறிவு மட்டும் போதாது. அப்பண்பு

1. Idealistic concepts 2. Political animal

செயலாற்றலில் விளங்கினலன்றி அதனை அறிய இயலாது. அறிவுப் பேறு நல்லது. அத்தகைய அறிவுற்ற செயலைச் செய்து நன்மை பயத்தல் வேண்டும். போர் தொடுப்பது அமைதிக்காக; பணி புரிவது ஓய்வுக்காக; அரசியல் ஈடுபாடு சிந்தித்து அறிவைப் பெறுவதற்காக என்று தருக்க முறையில் அதனதன் பயனை எடுத்தோதினர்.

அரிஸ்டாடிலுடைய கல்வி முறை அவருடைய ஆசிரியரது முறையினின்றும் வேறுபட்டது. உரையாடல் முறை அவருக்கு உடன்பாடன்று. அவர் [1]புறவய முறையாகிய அறிவியல் முறையையே ஏற்றுக் கொண்டார். உண்மையை இயற்கைப் பொருள்களிலும் சமூக வாழ்க்கையிலும் மக்களுடைய உணர்விலும் காணவேண்டும் என்றார். முதற்கண்—உடற்பயிற்சியும், இரண்டாவதாக—உள்ளத்தில் பகுத்தறிவற்ற தகுதியிலிருந்து எழும் ஆர்வங்கள், மனவெழுச்சிகள், பலவகை வேட்கைகள் இவற்றினைக் கல்வி வயப்படுத்துவதற்கு இசை, இலக்கியம், அறிவியல் முதலியவையும், மூன்றாவதாக—ஆன்மாவின் பகுத்தறிவுப் பகுதிக்கு இன்றியமையாத அறிவியல்களும், மெய்யறிவுகளும் அவர் கல்வித் திட்டத்தில் அடங்கியவை. முதலிரண்டு பகுதிகளைச் செயல் முறையில் கற்றால் மூன்றாவது நிலைக்கு அவை அடிப்படையாகும். மூன்றாவது நிலையே பகுத்தறிவுற்ற நிலை.

உலகங்கண்ட அறிவியலாருள் முதலிடம் பெறுபவர் அரிஸ்டாடில். பிளேட்டோ பேரறிஞர்; மெய்யறிஞர். அரிஸ்டாடில் பல பாடங்களை உருவாக்கியவர். அவற்றை அறிவதற்கு அறிவியல் முறையை வகுத்துதவினர். உடல்நூல், பொறியியல், இயற்கை அறிவு, அறிவியல் ஆகியவை ஒருசில பாடத்துறைகள். அரிஸ்டாடில் உலகப் புகழ் பெற்ற வெற்றி வீரராகிய அலெக்ஸாந்தருக்கு ஆசிரியராவர். உலகத்தின் நூலாசிரியர்களுள் முதலிடம் அவருக்கே உரியது. அவருடைய நூல்களெல்லாம் அவர் இயற்றிய பேச்சுரைகளின் பதிப்புக்களேயாம். தொகுத்தறி முறையில் அவர் கல்வி இயக்கத்தைத் தொடங்கித் தந்தார். ஆனால் அவர் இயற்றிய நூல்களைப் படிக்கத் தொடங்கிய மாணாக்கர்கள் தொகுத்தறிந்த அவருடைய கருத்துக்களை நேர்முகமாகக் கற்ற காரணத்தால் அம்முறை குன்றிவிட்டது.

உரோமானியருடைய கல்வி முறை:

கிரேக்கர்கள் மெய்யறிவைப் பெறுவதற்கு [2] ஆய்ந்தறி முறையில் ஈடுபாடு கொண்டு காலத்தைப் போக்கினர்கள். ஆனால் உரோமானியர்கள் [3] செய்து காட்டுபவர்களாக விளங்கினர்கள். கிரேக்கர்கள் [4] அகவயத்தில் ஆற்றலைக் காட்டினர்கள். உரோமானியர்களுடைய ஆற்றல் [5] புறவயத்ததாயிற்று. கிரேக்கர்கள் எல்லாப் பொருள்களிலும்

---

1. Objective method 2. Speculative methods 3. Practical methods 4. Subjective 5. Objective

சமன்பாட்டையும், இசையையும், பொருத்தப்பாட்டையும் கண்டார்கள். ஆனால் உரோமானியர்கள் பொருள்கள் தகுதியும் பயனும் பொருந்தியவையா என அளவிட்டார்கள். கிரேக்கர்கள் பல உயர்நிலைக் குறிக்கோள்களையும், பண்பாடுகளையும் போற்றினார்கள். ஆனால் உரோமானியர்கள் அவற்றைக் காப்பாற்றும் வழியினை வகுத்தார்கள். உரோமானியர்கள், கிரேக்கர்களைக் கையாலாகாத கனவு காண்பவர்களென்று கருதினார்கள். ஆனால் கிரேக்கர்கள் உரோமானியர்களை நாகரிகமற்றவர்களாகக் கருதினார்கள். எதுவாயினும் கிரேக்கர்கள் எல்லாவற்றிலும் தமது பெருமையை இழக்கவில்லை. உரோமானியர்கள் எப்போதும் வீரம் கொண்டு வாழ்ந்தார்கள்.

கல்வி முறை :

குழவியைப் பேணுதல் தாயின் பொறுப்பு. பிள்ளையாக வளர்த்தல் தந்தைக்குக் கடமை. உரோமானிய இல்லமே பள்ளியாக விளங்கிற்று. இளமை முதல் மகன் தந்தையோடு பல பணிகளில் அனுபவம் பெற்றான். பழக்க வழக்கங்களிலெல்லாம் நன்னெறியே வற்புறுத்தப் பெற்றது. பிள்ளைகளைக் கட்டுத்திட்டத்தோடும் கடுமையோடும் வளர்த்தார்கள். தொடக்கநிலைப் பள்ளியில் எழுதவும், படிக்கவும், கணக்குப் போடவும் கற்றுக் கொடுத்தார்கள். இப்பள்ளிகளெல்லாம் தனியாருடையவை. இவை இல்லங்களிலும், பொது மன்றங்களிலும், ஆலயங்களிலும் தோன்றின. இங்குப் பாடங்கள் கற்பிக்கப் பெற்றாலும் இவை உரோமானியப் பிள்ளைகளுக்கு இல்லக் கட்டுத்திட்டத்திலிருந்து ஒரு விடுபாட்டிடமாகவே விளங்கின. இரண்டாவது நிலை இலக்கணப் பள்ளிகள். இவற்றில் கிரேக்க இலத்தீன் மொழிகளைக் கற்பித்தார்கள். மேலும் கணிதம், இசை, உரையாடல், கோணகணிதம், வானநூல், மருத்துவம், கட்டிடக்கலை ஆகியவையும் கற்பித்தார்கள். ஆசிரியரும் மாணவரும் இலக்கியங்களை வரலாற்றுக் கலையோடு ஒருங்கே கற்றார்கள். மூன்றாவது நிலையாகப் பொது வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய [1] பேச்சுக்கலையினைக் கற்பித்தார்கள். பேச்சாளிகள் பேசும் பொருளை மட்டும் அறிவதோடு பேச்சுக்குச் செவிசாய்க்கும் மக்களுடைய தன்மையையும் அறியவேண்டுமென்று கருதப்பெற்றது. உரோமானிய வெற்றி வீரர்கள் சிலர் சிறந்த பேச்சாளிகள். பேசும் திறமையே பலரைப் பெருந்தலைவர்களாக்கியது. மெய்யறிவுடையோனைக் காட்டிலும் பேச்சாளியின் பெருமை பரந்து விளங்கிற்று. பேச்சாளிகளில் சிலர் தலைவர்களாகவும் விளங்கினார்கள். சமூகத்திலும், மேடையிலும், பத்திரிகையிலும்; நீதி மன்றத்திலும், ஆட்சி மன்றத்திலும், பல்கலைக் கழகத்திலும் பல படியாகப் பேச்சாளியே பெரும் புகழ் பெற்றான். புகழுரை பகர்தல், இகழுரை இவர்தல், சொல்லாடல், சொற்போர்

1. Oratory

நிகழ்த்துதல் ஆகியவற்றைச் [1] சொற்கோப்புக்கலைப் பள்ளிகளில் கற்றுக் கொடுத்தார்கள். இலக்கிய அறிவு, பெருஞ்சொல் ஆக்கம், சொற்களைக் கோத்தல், மனித உணர்ச்சித்திறன், மனிதர்களை ஊக்கும் ஆற்றல், பணிவு, நன்மை, மென்மை, சட்டம் ஆகியவற்றின் திறன், நல்ல நாவாற்றல், கேட்டார் பிணிக்கும் தகைமை, சோர்வின்மை, அஞ்சாமை ஆகியவெல்லாம் பழக்கத்தில் வளர்ந்தன. அடுத்த நிலை பல்கலைக் கழகங்கள். இவற்றைப் பேரரசர்கள் ஆதரித்தார்கள்.

இடைக்காலக் கல்வி : இயேசுநாதர்

உரோமப் பேரரசு பெரும் பெயர் பெற்ற காலத்தில் கடவுள் மகனுகப் பிறந்தருளிய ஏசுநாதர் பெரும் பேராசிரியராஞர். இருளைப் போக்கிப் பேரொளிக்கு வழி காட்டினர். இவர் யூதர்களுடைய இலக்கியத்திலும், சட்டத்திலும் வல்லுநர். தமது மாணுக்கர்களுக்கு மட்டுமல்லாது யூத மக்களுக்கும் அருள் வாழ்க்கையினைப் புதுக்கி வைத்தார். அவருடைய மாணுக்கர்கள் எளியவர்கள். ஏனென்ருல் உயர்ந்த மக்களைக் காட்டிலும் எளியவர்களே பெருங்கூட்டத்தினர். அவருடைய பேச்சுரைகளைக் கேட்கப் பெருங் கூட்டங்கள் கூடும். அவர் எங்குச் சென்ருலும் அவர் பின்னர் அவர் சொல்வதைக் கேட்கப் பெருந்திரளாக மக்கள் பின் செல்வார்கள். அவர் பேச்சுக்கள் மற்ற ஆசிரியர்களைப் போன்று புத்தகக் கருத்துக்களின் வெளியீடுகள் அல்ல. அவருடைய கருத்துக்கள் கேட்டவர்களுடைய மனத்தைத் தொட்டதோடல்லாது அவரோடு பிணிக்கும் தகைமை வாய்ந்தவை. அவருடைய பேச்சுக்கள் நீண்ட சொற்பொழிவுகளாக அமைந்தவையும் அல்ல. மாணவர்கள் சூழ அவர் அமர்ந்த உடன், ஓர் அமைதி நிலவும். அதற்கு ஒரு நேர வரையறை கிடையாது. ஏசு பெருமான் தனக்குச் செவி சாய்ப்பவர்களைப் பார்ப்பதில்லை. குழந்தைகள் இடையில் ஆசிரியர் அமர்வதைப் போல் காட்சி அளிப்பார். "எளிய உள்ளம் படைத்தவர்கள் வாழ்க; விண்ணுலகு அவர்களுடையது" என்று ஒருசில வார்த்தைகளைச் சொல்லி அதோடு நிறுத்தி விடுவார். மறுபடியும் அமைதி. இதைப் போன்ற பேச்சுக்கள் அறவுரைகளின் பாற்படும். முறைகளை விளக்க மக்கள் வாழ்க்கையை ஒட்டிய சிறு கதைகளைக் கற்பனை செய்வார். அவர் கதைகள் தெய்வீக உண்மை நிறைந்தவை. பேச்சுரைகளுக்கும் அறவுரைகளுக்கும் வேறுபாடு உண்டு. பேச்சாளர்கள் சொல்லையும், பொருளையும் பிணைத்துப் பிணைத்துப் பேசுவார்கள். சொல்லை நாடும்போது பொருள் நழுவி விடும். அல்லது பொருளைத் திரிக்கும்போது சொல்லழகு குன்றிவிடும். பேச்சாளர்கள் பேச்சின் வேகத்தினை விரும்புவார்கள். அறவுரைகள் ஆழ்ந்த சிந்தனையின் பாற்பட்டவை. ஆரவாரமற்றவை. ஒவ்வொரு சிந்தனையும் சிற்பக்

1. Schools of Rhetoric

காட்சி. சொல்லும் கருத்தும் குழைந்து அகத்திலும் புறத்திலும் அமைதி நிலையில் வெளிவருவது. அத்தகைய உரைகள் முக்காலும் உண்மை பொருந்தியவை; எல்லாருக்கும் உடன்பாடானவை; உலகத்துக்கே உரியவை. ஏசுபெருமான் அத்தகைய உரைகளை நிகழ்த்தினர். இடையிட்டு ஒவ்வொரு உரையைக் கூறியமையால் அவருடைய மாணவர்கள் அவற்றை மனத்தில் அமைத்துக் கொண்டார்கள். ஒரோவழி ஏசுநாதர் வினுக்களுக்கும் விடையளித்தார். ஒரு முறை யூதர்கள் அவரைச் சூழ்ந்து ஒரு நெறி தவறிய மனைவியை நிறுத்தி [1] மோசஸ் சட்டப்படி அவளைக் கல்லாலெறிந்து கொல்ல வேண்டும் என்றூர்கள். அச்சட்டத்தைப் பற்றி அவருடைய கருத்தை வினவ, அவர் விடை தராது வாளா இருந்தார். விடை அளிக்குமாறு வற்புறுத்த அவர் அவர்களுள் யார் பாவமற்றவரோ அவரை முதற் கல்லினை அவள்மீது எறியும்படி சொன்னர். இத்தகைய விடை யாரையும் சிந்தனையில் செலுத்திவிடும் அல்லவா? மற்றொரு முறையிலும் ஏசுநாதர் மக்களுக்குக் கற்பித்தார். அது [2] கண்வழிக் கல்வி முறையாகும். அவர் இயற்றிய பல விந்தைகள் பல உண்மைகளைக் காட்சியின் வழியாக விளக்கின. ஒரு திருமணத்தில் மதுவைத் தந்து உதவியது ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். அதன் உட்கருத்தினை உற்ற நூலில் கண்டுகொள்க. இத்தகைய அவர் இயல்புகளும், செயல்களும் விந்தையானவை மட்டுமல்லாது உண்மையை உணர்த்தும் ஆசிரிய வழிகள் எனவும் அறியவேண்டும். நான்காவதாக ஏசுநாதர் தமது மாணுக்கர்களுக்கு வேண்டிய பயிற்சி அளித்து அவரது கருத்துக்களைப் பறைசாற்றப் பணித்தார். பறைசாற்றுவது ஆசிரியத் தன்மை பொருந்தியது. அங்ஙனம் செய்யும் நாப்பறைக்குத் தமது மாணுக்கர்களுள் ஐவருக்கு ஆசிரியத்தினைக் கற்பித்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து எங்கும் கிறித்தவப் பறை சாற்றச் செய்ய உதவியதால் அவர் ஆசிரியருக்கு ஆசிரியராகவும், பெரும்பேர் ஆசிரியராகவும் பெரும்பேர் இயவுளாகவும் பன்னெடுங்காலமாக விளங்குகிருர்.

ஏசுநாதருக்குப் பின்னர் கல்வி வளமெல்லாம் கிறித்தவ மடாலயங்களில் மறைவுற்றன. மடாலய வரலாறு, கல்வி வரலாறே என்றுல் ஒக்கும். மடாலயங்களில் முதற்கண் ஊனினை உருக்கி உள்ளொளியைப் பெருக்கும் முறையில் வாழ்க்கை அமைந்தது. பணிதல், எளிமை, பிறர் நலங்காணல்—ஆகியவை உயரிய பண்பாடுகளாக விளங்கின. மடாலயத்தினர் உடல் உழைக்க வேண்டும் என்ற கோட்பாட்டின்படி ஒவ்வொருவரும் ஒரு தொழிலில் ஈடுபாடு கொண்டார்கள். அதனல் ஒவ்வொரு தொழிலும் பெருமையைப் பெற்றது. சமூகத் தொண்டும் பணிகளுள் ஒன்றுயிற்று; ஏழு மணி நேரம் உடலுழைப்பு; இரண்டு மணி படித்தல்; இவற்றிற்கிடையே பல நேரங்கள் வழிபாடு

1. Moses 2. Visual education

ஆகியவை எல்லாம் மடாலயத் திட்டங்கள். ஏழு முதல் பதின்மூன்றும் நூற்றுண்டு வரையில் மடங்களே கல்விக்கு உறைவிடமாக இருந்ததால் மடத்தினரே கல்விப்பணியாற்றினர். மடங்களே பள்ளிகள், பல் தொழில் பயிற்சி நிலையங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள், நூலகங்கள், புலவர்களைப் போற்றும் பல்கலைக் கழகங்கள் ஆகியவையாக விளங்கின.

மடாலயப் பள்ளிகளில் மதச் சார்புற்ற கல்வியே கற்பிக்கப்பட்டது. குருமார்கள் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தார்கள். பதினெட்டு வயது முடிவதற்குள் பிள்ளைகளை மடங்களில் சேர்த்துக் கொண்டார்கள். மடத்தில் சேராத பிள்ளைகளுக்குப் பள்ளிகள் தனித்தொண்டு புரிந்தன. மடாலயங்கள் கல்வி அறிவையே காப்பாற்றி உதவின என்று கூறுவது பொருந்தும். பல இடங்களில் கிடைக்கப்பெற்ற பல நூல்களின் ஏட்டுப்படிகள் அங்கே காப்பாற்றப் பெற்றன. அவற்றை எல்லாம் செல்லரிக்காதபடியும் எழுத்துக்கள் மறைந்து போகாதபடியும் மடாலயத்தினர் புதிய ஏட்டுப்படிகளை வரைந்து புதுப்பித்துக் கொண்டார்கள். கன்னி மாடங்களிலுங்கூட இப்பணி நிகழ்ந்தது. கிரேக்க உரோமானியக் கல்வியோடு கிறித்தவ மத நூலாகிய * விவிலியத்திலும் மடாலயத்தினர் கற்றுத் தேர்ச்சி பெற்றனர். கற்றற்குரிய பாடங்கள் ஏழாக வகுக்கப் பெற்றன. பிளேடோ காலத்தில் [1] இலக்கணம், [2] சொற்கோப்புக்கலை, [3] சொற்போர் முறை ஆகிய மூன்றும் [4] முப்பாடமாகப் பிரிவுற்றன. பின்னர் [5] கணிதம், [6] கோணவியல், [7] இசை, [8] வானநூல் ஆகியவை [9] நான்கு பாடத் தொகுதியாகப் பிரிவுற்றன. இவற்றோடு கட்டடக்கலை, மருத்துவம், மெய்யறிவு என்பவையும் சேர்ந்தன. ஆனால் [10] குயின்டிலியன் சொற்போர் முறையையும் கணிதத்தையும் பரந்த கல்வித் திட்டத்திலிருந்து நீக்கிவிட்டார். இப்பாடங்களெல்லாம் இன்றுபோல் அன்று பொருளடக்கம் பெறவில்லை. எடுத்துக் காட்டாகக் கோணவியலில் நில நூலின் அடிப்படைப் பொருள்கள் இடம் பெற்றன. வானநூலில் அறிவியல் இடம் பெற்றது. இலக்கணத்தோடு இலக்கியம் ஒரு பகுதியாயிற்று. சொற்கோப்புக் கலையோடு வரலாறும் சேர்ந்தது.

மடாலயத்தினர் ஒழுங்கான [11] சமய வாழ்க்கையை நடாத்தி வந்தனர். அதோடு [12] புலமை வாழ்க்கையையும் நடைபெற்று வந்தது. இவ்விரண்டும் கலந்த நன்மையால் [13] ஆன்மீகம் வளர்ந்து ஓர் [14] அனுபூதி வாழ்க்கைக்கு வழி உண்டாயிற்று. அனுபூதியினர் புலநெறியைத் தவிர்த்து உள்ளத்தை உள்ளடக்கி ஆன்மீகத்தோடு இயைபு கண்டு

---

* Bible 1. Grammar 2. Rhetoric 3. Dialectic 4. Trivium 5. Arithmetic 6. Geometry 7. Music 8. Astronomy 9. Quadrivium 10. Quintilian 11. Religious life (Monasticism) 12. Scholasticism 13. Spiritualism 14. Mysticism

தன்மை எல்லையற்ற பரம்பொருளை முன் இருந்தபடி இருக்கச் செய்து கொண்டனர்.

பொது மக்களிடையே [1] மறப்பண்பு ஒரு கலையாக உருவெடுத்தது. இது சமுக ஒழுக்கங்களை வளப்படுத்திற்று. சமூகத் தொண்டு இதன் சிறந்த பண்பு. மடாலயங்கள் எங்ஙனம் மதவாழ்க்கைக்கு உதவி புரிந்தனவோ, அங்ஙனம் பொது மக்களிடையே ஒழுக்க வாழ்க்கைக்கு நல்வீரர் பண்பு இயக்கம் நன்மை பயந்தது. புலமைப் பண்பியக்கம் பொதுமக்களுடைய அறிவினைத் தூண்டியது. அதன் பயனால் பல்கலைக் கழகங்கள் ஆங்காங்குத் தோன்றின. இவ்வியக்கத்தினர் எக்கருத்தை யும் குருட்டுத்தனமென்று தள்ளாது ஆதாரங்களைக் கற்பித்து அறிந்து கொண்டனர். இதனால் பல கொள்கைகள் ஆதாரத்தோடு உருவாயின. ஆனால் புலமைப் பண்பியக்கம் மறுமலர்ச்சிக் காலத்தில் கிரேக்க உரோமானிய இலக்கியங்களை மனித இனத்துக்கே சிறந்தன வென்று எடுத்தோதியது. அரிஸ்டாடிலைக் காட்டிலும் பிளேடோ சிறந்தவராகக் கருதப்பெற்றார். [2] வெற்றுநிலைக் கருத்துக்களெல்லாம் எடுத்தெறியப்பட்டன. [3] பொருள்களை நேராக அறியும் ஆற்றலில் ஆர்வம் கிளம்பியது. பரந்த கல்வி தாழ்ச்சியிலிருந்து மீட்சி பெற்றது. மனிதன் விடுதலை பெற்று விருப்பப்படி தனது தனித்தன்மையை வளர்த்துக்கொள்ள வழிபெற்றான். வாழ்க்கையில் சமூகத்துக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்கக்கூடிய முறையிலும் பயிற்சிபெற்றான். ஆனால் பண்டைய கிரேக்க இலத்தீன் ஏற்பாடு [4] மக்கண்மைக் கல்வி யாகக் கருதப்பெற்றது. இக்கல்வி ஏற்பாடு மொழிகளையும் இலக்கியங் களையும் மட்டுமே கொண்டது. எனவே, இது மக்கண்மைக் கல்வி என்று பெயரளவில் நின்றது. மறுமலர்ச்சியை ஒட்டிப் பதினேழாவது நூற்றாண்டில் [5] காட்சி இயக்கம் வளர்ச்சியுற்றது. இதை ஓர் உண்மைப் பற்றுக்கோட்டியக்கம் என்றும் கூறலாம். மக்கண்மைக் கல்வி இயக்கத் தினரும் ஓர் உண்மைப் பற்றுக் கோட்டியக்கத்தினரே. கல்வியாளர் களுக்கும் கல்விநிலையங்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு செயல் முறைக் கல்வி வளர்ச்சி பல கல்விக் கருத்துக்களை வழங்கி உதவியது. இவ் வியக்கத்தினரைச் சமூக உண்மைப் பற்றுக் கோட்டினர் எனலாம். இத்தகைய சமூக நடைமுறைக் கல்வி வளர்ச்சியை அறிவியற்றிறனுக்கு உட்படுத்தி அறிவியற் கலையை வளர்த்தவர் சிலர் அறிவாராய்ந்த உண்மைப் பற்றுக் கோட்டினரானார்கள். இக்காலத்துக் கல்வியாளர் பலருள் ஒருவராகிய 'காமினியஸ்' என்பாரைப் பற்றி ஒரு சிறிது அறிவோம்.

---

1. Education of Chivalry (Knight errantry) 2. Abstract concepts (கருத்துப் பொருள்) 3. Concrete objects (காட்சிப் பொருள்) 4. Humanistic studies 5. Realis(m)tic Movement

காமினியஸ்: [1592–1670]

கல்வி வரலாற்றில் காமினியஸுக்குப் பேரிடம் உண்டு. அவருடைய கருத்துக்கள் பல பள்ளிகளில் செயலாற்றப் பெறுகின்றன. அவருடைய ஈடுபாடெல்லாம் சமயச் சார்பு பெற்றிருந்தன. மதக்கல்வி பொதுக்கல்வியோடு இணைக்கப் பெற்றாலன்றிச் சமூகத்திற் புதிய உணர்ச்சியை உண்டாக்க இயலாதென்று அவர் கண்டறிந்தார். மனித வாழ்க்கையின் இறுதி இறைவனடி சேர்வதென்றார். எனவே, கல்வி இதற்கு வழிகோல வேண்டும். இறைவனடியின் பேரின்பத்தைப் பெறுவதற்குப் பொதுவாக மக்கள் அகவெழுச்சிகளை அடக்கி அறநெறியை வகுத்தார்கள். ஆனால் காமினியஸ் வகுத்த வழி முற்றிலும் புதியதொன்று. தன்னை அடக்கிக் கொள்ளுவது தன்னையும் புறஉலகத்தையும் அறிந்தாலன்றி இயலாதென்று கண்டார். அறிவு, ஒழுக்கம், கடவுளன்பு ஆகியவை கல்வியின் குறிக்கோள்கள். இவற்றைப் பெறுவதற்குப் பொருள் அமைந்த முறையில், பாட நூல்கள் ஆகியவற்றைத் திருத்தவேண்டும். மனித அறிவு முழுவதையும் கலைக் களஞ்சியத்தைப் போன்று உருவாக்கி அறிந்தவற்றின் துணைகொண்டு அறியாதவற்றை அறிந்து எல்லா அறிவையும் பெறவேண்டும். இயற்கை உலகை அறிவது முதற்கண் இன்றியமையாதது. எனவே காமினியஸ் புதிய முறையில் உலக அறிவினையே நூல் வழியாக வகுக்க முற்பட்டார். புலன்களும், அறிவாற்றலும், இறைக் காட்சியும் நமது அறிபொருளின் ஊற்றுக்கள். இவை மூன்றும் ஒரே அளவில் நமக்கு விளக்கம் தந்தால் வாழ்க்கை பிழைபடாது. அவருடைய புது முறைகளில் நாம் அறிய வேண்டியவை. 1. அறியவேண்டியவற்றைக் கற்பிக்க வேண்டும். (பொருளையாவது கருத்தையாவது நேர்முகமாக அறிவித்தல்) 2. கற்பிப்பவை எல்லாம் நடைமுறைக்கு வேண்டுவனவாயும் பயனுள்ளனவாயும் இருத்தல் வேண்டும். 3. கற்பிப்பவை எல்லாம் சிக்கலின்றி நேராக அறிந்து கொள்ளுபவையாக வேண்டும். 4. கற்பிக்கும் பொருளை வரலாறு, வளர்ச்சி, விளக்கம் ஆகியவற்றோடு கற்பிக்க வேண்டும். 5. எப்பொருளைக் கற்பிக்கும்போதும் முதற்கண் அதன் பொதுவியல்பினைக் கூறிப் பின்னர் சிறப்பியல்பினைக் கூற வேண்டும். 6. எப்பொருளைப் பற்றி அறிந்தாலும் அதனுடைய முதன்மை, பிற பொருள்களோடு ஈடுபாடு பற்றிய முழு விளக்கம் ஆகியவை அறிதல் வேண்டும். 7. ஒவ்வொரு பொருளையும் தனித்தனியாக அதன் சிறப்பைக் கருதி ஒரு சமயத்தில் ஒரு பொருளை மட்டும் கற்பித்தல் வேண்டும். 8. ஒரு பொருளை நன்றாக அறியும் வரையில் அதை விட்டு விடக் கூடாது. 9. பல பொருள்களின் வேறுபாடுகளை அறிந்தாலன்றிப் பொருள்களிடையே உள்ள மாறுபாடுகளைத் தெளிவாக அறிய இயலாது.

இம்முறைகளெல்லாம் ஆசிரியருக்கும் பெரும் பயனுற்றவை. பெரும்பாலும் மொழிகளைக் கற்பிக்கும் போது சொற்கள் முதலிடம்

பெறுகின்றனவே அன்றிச் சொற்களில் அடங்கியுள்ள பொருள்களேனும் கருத்துக்களேனும் முதலிடம் பெறுவதில்லை. சொற்களைத் தொடர்ந்து இலக்கண விதிகளும் அமைப்புக்களும் சிறப்பிடம் பெற்றன. அதனால் பள்ளிகளைக் குழந்தைகள் வெறுத்தனர். இவை யெல்லாம் முறை யற்றவை என்று காமினியஸ் கண்டித்தார். பள்ளிக்கூடங்களில் வகுப்புக்களைப் பிரித்துதவினார். குழந்தைப் பள்ளிகள், தாய்மொழிப் பள்ளிகள் எனப் பள்ளிகளை இருவகையாக்கினார். குழந்தைகளைப் பற்றி அவருடைய கருத்துக்கள் பிற்காலத்தவரை ஈர்ப்பவை. அவை 'கிண்டர் கார்டன்' முறைக்கு முன்னோடியாயின. தாய்மொழிப் பள்ளி ஆறு முதல் பன்னிரண்டு ஆண்டு வரை பிள்ளைகளுக்கு உதவியது. ஆறு முதல் பன்னிரண்டு வயது வரையில் ஒவ்வொரு வகுப்புக்கும் காமினியஸே பாடப் புத்தகங்களை வரைந்தார். ஆனால் அவை [1]செக் மொழியில் வரையப் பெற்றன. அவருடைய பெரியதொரு நூல் *'தி கிரேட் டைடாக்டிக்'; கல்விச் சார்புற்ற இந்நூல் மிகச் சிறந்தது. இதனை எல்லா ஆசிரியர்களும் வாசித்தல் நலமென்று கூறுவதுண்டு. அறிவுக் களஞ்சியம் முழுவதையும் இஃது ஓர் ஒழுங்கு முறையில் முப்பத்து மூன்று பிரிவுகளில் தன்னகத்தே கொண்டுள்ளது.

காமினியஸுடைய புத்தகங்கள் செர்மானிய நகரங்களில் பரவின. அனைத்தறிவுப் பள்ளிகள் என்ற உயர்நிலைப் பள்ளிகளைப் போன்றவை அவர் கண்டவை. அனைத்தறிவுப் பள்ளிகளில் ஏழு வகுப்புக்கள். ஒவ்வொரு வகுப்பின் முகப்பில் ஒரு கட்டளையறிவிப்பு. முதல் வகுப்பில் படிக்கத் தெரியாதவர்கள் நுழையக்கூடாது; இரண்டாவது வகுப்பில் கணிதம் தெரியாதவர்கள் நுழையக் கூடாது; மூன்றாவதில் பேசத் தெரியாதவர்கள் நுழையக் கூடாது; நான்காவதில் வரலாறு தெரியாதவர்கள் நுழையக் கூடாது; ஐந்தாவதில் இயற்கை மெய்யியல் தெரியாதவர்கள் நுழையக் கூடாது; ஆறாவதில் பகுத்தறிவில்லாதவர்கள் நுழையக் கூடாது; ஏழாவதில் மதச்சார்பற்றவர்கள் நுழையக் கூடாது. இத்திட்டத்தினை அனைத்தறிவுப் பள்ளி ஏற்பாடு என்ற நூலில் வரைந்துள்ளார். உயர்நிலைப் பள்ளிக்கு அப்பாற் பல்கலைக் கழகத்தில் ஒவ்வொரு பாடத்தையும் விளங்கக் கற்கவேண்டும். அதற்கும் அப்பால் [2]ஒளிக்கல்லூரி என்பதில் அறிவியல் முறையில் ஒவ்வொரு பாடத்திலும் அறிவும், தெளிவும், ஒளியும் பெறுதல் வேண்டும்.

காமினியஸ் எழுதிய நூல்கள் அவர் காலத்திற்குப் பின் கல்வி வளர்ச்சிக்கு வழி காட்டின. அவை சமயச் சார்புடையவையாயினும் உயரிய ஆசிரிய முறையில் அமைக்கப் பெற்றவை. காமினியஸ் பல்லாண்டுகள் ஆசிரியராக விளங்கியவர். தொகுத்தறி முறையை அவருடைய அனைத்தறிவுக் கொள்கைக்கு ஏற்றதாகக் கண்டார்.

---

1. Czech * மிகப் பெரும் கல்வி நூல் (The Great Didactic)
2. College of Light

அவருடைய செல்வாக்கால் கல்வி ஏற்பாடுகள் மாற்றி அமைக்கப் பெற்றன. புதிய பொருள்களும், புதிய முறைகளும் பள்ளிகளுக்குள் நுழைந்தன. அவர் இயற்றிய தொண்டு கடவுளுக்கு அடுத்து இரண்டாவதாக நின்று ஒரு புத்தம் புதிய இறையறிவுரையை மக்களுக்கு அளிக்கக் கூடியதென்று பலர் பாராட்டினர்.

குழந்தையின் வளர்ச்சியே கல்வி வளர்ச்சிக்கு அடிப்படை. இயற்கை வளர்ச்சியென்று ஒன்றுண்டு. அம்முறையில் பல திறன்கள் ஒன்றன்பின் ஒன்றாக வளரும். இவ்வளர்ச்சியை ஒட்டியே கற்பிக்கும் முறை நிற்றல் வேண்டும். இவைபோன்ற பழைய கருத்தாகிய மனப் பெற்றியில் காமினியஸ் நம்பிக்கை கொண்டவர். ஆனால் ஐம்புலன்களை மனிதனுடைய அறிவு வாயில்களாக அறிந்தார். புலநெறிக் கல்வியே குழவிப் பருவத்துக்கு உற்றதெனக் கண்டார். கற்பனையாற்றல் ஐம் புலன்களுக்கு அப்பாற்பட்ட ஒன்று. அது குழந்தையின் அறிவுக்கும் அதனுடைய ஆன்மீக வளர்ச்சிக்கும் உதவுமென்று கருதினர். நினைவைப் பழக்கத்தால் வளர்ப்பது நன்று. நெட்டுருச் செய்வதற்கு முன் ஒரு பொருளைப் பற்றிய புலனறிவைப் பெற வேண்டும். நன்றாக அறியாதவற்றை நெட்டுருச் செய்தல் வேண்டாமென்றார். நன்றாக அறிவதற்குக் கரும்பலகை, சித்திரங்கள், படங்கள் முதலியவற்றை வற்புறுத்தினர். ஆய்வறிவு ஒரு பொருளை நன்றாக அறிவதற்கு உறு துணையாகும். என்னவென்று அறிவதற்கும், உண்மையைத் தேடு வதற்கும் பயனை அளவிடுவதற்கும் அஃது உதவும். காமினியஸுடைய பள்ளி ஏற்பாடு ஒவ்வொருவரும் சிந்திக்கத் தக்கது. அதன்படி நான்கு நிலைகள்; ஒவ்வொரு நிலைக்கும் ஆறாண்டுகள்; ஒவ்வொரு வளர் நிலைக்கும் ஏற்றபெற்றி பாடத் திட்டம்; தாய்மொழிப் படிப்பு ஒவ்வொரு இல்லத் திலும்; தாய்மொழிக் கல்வி ஒவ்வோர் ஊரிலும்; உயர் நிலையில் அனைத் தறிவுக் கல்வி ஒவ்வொரு நகரத்திலும்; பல்கலைக்கல்வி ஒவ்வொரு மாநிலத்திலும்; பாடத்திட்டம்—ஆண்டு, மாதம், வாரம், நாள், மணி அளவில் வகுக்கப் பெறவேண்டும். அத்தகைய பிரிவுகளுக்கேற்பப் பாடப் புத்தகங்கள் அமையவேண்டும். பள்ளி நேரத்தைப் பற்றிக் காமினியஸ் கூறுவது நமக்கு வியப்பைத் தரும். குழந்தைகள் நான்கு மணி நேரத்திற்கு மிகாமலும் சிறு பிள்ளைகள் ஆறு மணி நேரத்திற்கு மிகாமலும் பயில வேண்டும். விடுமுறைகள் தொடர்ந்து இல்லாது அடிக்கடி வேண்டும். அவருடைய கல்வி முறைகள் பெரும்பாலும் உள நூல் திறனை அடிப்படையாகக் கொண்டவை. அவருடைய [1] அனைத்தறி கொள்கை அனைத்தறிவினையே அளிக்க முயன்றது. அவருடைய கல்வி ஏற்பாடு ஓர் அகர வரிசை ஏற்பாட்டுக்கு ஒத்தது. பிள்ளைகள் அறிய இயலாதவை விண்ணிலும், மண்ணிலும், நீரிலும், நிலத்தாழத்திலும், உடலிலும், உள்ளத்திலும் இறைவன் கட்டளையிலும், கலையிலும்,

1. Pansophism

பொருளாதாரத்திலும், அரசியலிலும் எதனிலும் இல்லை என்பது அவர் கொள்கை. இஃது அனைத்தறிவுக் கல்வியின் திட்டத்தினை விளக்குகிறது.

கல்வி முறையை வகுத்தவர்களுள் காமினியஸ் முதலிடம் பெற்றவர். அவருடைய நூல்கள் மிகப் பெரியவை. அவருடைய பரந்த உள்ளத்தைப் போன்று அவருடைய கல்வித் திட்டமும் பரந்து காணப்பட்டது. கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க்குற்ற துணை என்ற குறிக்கோளினை அவருடைய கல்வித் தத்துவத்தில் காணலாம்.

[1] ஜான் லாக் [1632–1704]:

மறுமலர்ச்சியை ஒட்டிய கிறித்தவ மதச் சீர்திருத்த இயக்கத்தின் வெற்றி நாள் முதல் இலத்தீன் மொழியின் ஏற்றம் குறைவுறத் தொடங்கியது. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் அதனுடைய இடத்தினை [2] ஃப்ரெஞ்சு மொழியும் அந்தந்த நாட்டுத் தாய் மொழிகளும் பற்றிக் கொண்டன. கல்விப் பணியிலும் ஒரு புதிய திருப்பம் உண்டாயிற்று. கற்பவற்றைக் காட்டிலும் கற்றல் முறை முதன்மையாகக் கருதப் பெற்றது. இதுவே ஓர் [3] ஒழுங்கு முறைக்கல்வி இயக்கத் தொடக்கமாகும். உண்மைப் பற்றுக்கோட்டு முறையும் இதற்கு ஒரு வழியில் அடிகோலிற்று. சமயச் சார்பும் இதற்குத் துணை புரிந்தது. கிறித்தவ சமயம் மனிதத் தன்மையிலுள்ள தீமை எல்லாம் நீங்குவதற்கே கல்விச் செயல்பாடு வேண்டுமென்று கருதிற்று. அதனால் இதற்கொப்பக் கல்வி முறையில் ஒழுங்கும், ஒழுக்கமும் வேண்டற்பாலவையாயின. உளநூற் பாங்கில் அரிஸ்டாடில் காலத்திய மனப்பெற்றிகளின் வளர்ச்சிக்கு ஒவ்வொரு திட்டமும் நல்லதென்று உடன்பாடு பெற்றது. மொழிக் கல்வியும் கணிதமும் அத்திட்டங்களை வகுக்கக் கூடியவையாயின. இதைப் பற்றி ஜான் லாக்கின் கருத்தினை உணர்க.

ஆசிரியன் உடலையும் உள்ளத்தையும் உருவாக்க வேண்டும்; நல்ல பழக்கங்களைத் தொடங்கி வைக்க வேண்டும்; பின்னர் நல்லறிவைப் புகட்ட வேண்டும்; மனித இனத்தினைப் பற்றி அறிவிக்க வேண்டும்; நல்லவற்றை நாடுவதற்கு வழி காட்டவேண்டும். அப்போது மாணவன் ஆற்றல், உழைப்புத் திறன் ஆகியவற்றைப் பெறுகின்றான். கற்றுக் கொடுக்கும் பாடங்களெல்லாம் அவனுடைய பல மனப்பெற்றிகளை வளர்ப்பதற்கே ஆகும். அவன் சோம்பாது தன் பணியில் கட்டுண்டு, அவன் இயற்றக்கூடியவற்றின் திறனில் ஓர் இன்பத்தைக் காட்ட வேண்டும்.

கல்வி ஓர் [4] ஒழுக்க முறையென்று லாக் கருதினார். எல்லா அறிவும் [5] புலக்காட்சியாலும் [6] அறிவாற்றற் காட்சியாலும் தோன்று

---

1. John Locke 2. French 3. Disciplinary conception 4. Discipline 5. Perception of the senses 6. Perception of the intellect

பவை. இவற்றிற்கு அடிப்படை அனுபவம். புலனறிவை லாக் விதந்துள்ளார். அதனால் பொய்மையிலிருந்து மெய்மையை அறிவதற்கே தொகுத்தறி முறையைப் புலனறிவு முறைக்குப் பயன்படுத்தினர். அவருடைய மெய்யறிவுக் கருத்துக்களும், உளநூற் கொள்கைகளும் அவர் கொண்ட கல்விக் கொள்கையோடு ஒருமைப்பாடு பெறவில்லை. பிறவியில் மனித உள்ளம் ஒரு வெற்றேடு; பிறந்த பின்னர் புற ஒழுக்கத்தின் பயனாக பழக்க வழியில் திறன்களும், குணங்களும் அதற்குள் நுழைவு பெறுகின்றன. இதை [1] வெற்றேட்டுக் (தபூலரசக்) கொள்கை என்பர். இயற்கைக் கொள்கையினர் இதனை மறுத்து இயற்கையாகவே திறன்களெல்லாம் உள்ளத்தில் வளருகின்றன என்று கூறுவர். ஆனால் ஒழுக்கத்திலெழுந்த பழக்க வழக்கங்களால் குழவியின் உள்ளம் வளர்ச்சி பெறுகின்றதென்று லாக் பிடிவாதம் கொண்டார். உள்ள வளர்ச்சி வெறும் படிப்பால் ஏற்படுவதன்று; ஆழ்ந்த எண்ணத்தாலும் தொடர்ந்த சிந்தனையாலும்தான் உண்டாகும் என்றார். "கல்வியைப் பற்றிய நினைவுகள்" என்ற அவருடைய நூல் நமக்கு அவரது கருத்துக்களை வழங்குகின்றது. கல்வியின் கூறுகள் மூன்று: அவை உடலை வளர்ப்பது, நன்னெறியைப் பெருக்குவது, அறிவைப் பரப்புவது. திடமான உள்ளம் திடமான உடலத்தது. இவற்றுள் ஒன்றை நீக்கி மற்றொன்றை விரும்பினால் வாழ்க்கை குறைவுறும். வெட்டவெளி வாழ்க்கை, உடற்பயிற்சி, உறக்கம், எளிய உணவு, நேரான உடை ஆகியவை உடலைப் பேணுவன. கல்விக்கும், படிப்பிப்பதற்கும் 'லாக்' வேறுபாடு கண்டார். ஒழுங்குக் கல்வியாளர்கள் இரண்டையும் ஒன்றாகக் கண்டார்கள். ஆனால் லாக் கல்வி முழுவதையும் ஓர் ஒழுக்க முறையாகக் கருதினர். ஏனெனில் படிப்பித்தல் பொருளறிவினை மட்டும் புகுத்த வல்லது. ஆனால் கல்வி ஒழுக்கத்தை உருவாக்குவது. திடமான உடலம் துன்பத்தைத் தாங்குகிறது. திடமான உள்ளம் தாங்கல்களைத் தாங்க வல்லது. ஒரு மனிதன் ஆய்ந்த அறிவின் காரணமாகத் தனது விருப்புக்களை நீக்கி நன்மை நெறியினைப் பற்றுகிறான். இத்தகைய ஆற்றல் குழவிப் பருவம் முதல் தொடங்க வேண்டும். குழந்தைகள் விரும்பும் பலவற்றினை அவர்களுக்குத் தரலாகாது. அவர்களுக்கு நல்லவை என்று கருதக்கூடியவற்றை மட்டும்தான் தரல் வேண்டும். இதுவே ஒருவகை ஒழுக்க முறையாகும். பல வகை விருப்புக்களை அடக்குவது வாழ்க்கையின் ஓர் ஒழுங்கு முறை. இயற்கை ஆர்வங்களை ஒடுக்கி ஒழுங்குபடுத்துவது ரூஸோவின் கொள்கைக்கு முற்றிலும் முரண்பட்டது. ரூஸோ பழக்கங்களே கூடாதென்றார். நல்ல பழக்க மென்பது ஒரு பழக்கமும் உண்டாகாது தடுத்துக் கொள்ளுவது என்றார். ஆனால் லாக் பழக்கத்தை வற்புறுத்தினர். பழக்கங்கள் ஆய்வறிவைக் காட்டிலும் எளிதாகப் பெறக்

1. Tabula Rasa

கூடியவை. ஒழுக்க முறை பெற்ரேர் முதல் ஆசிரியர் வரையில் வற்புறுத்த வேண்டியதொன்று. அறிவுக் கல்வியைப் பற்றி அவர் கூறுவது அறியத் தக்கது. அறிவுக் கல்வி அறப்பழக்கத்தின் அடிப்படையில் அமைய வேண்டும். யாதாயினும் ஓர் அறிவியலில் தேர்ச்சி அளிப்பது கல்விப் பணி அன்று. மாணவர்களே உரிமையோடு பல அறிவுக் கலைகளை ஆய்ந்து அறிந்து கொள்ள வேண்டியது அவர்கள் கடமை. அங்ஙனம் பலவற்றை ஆராயும் போது உள்ளம் இயக்கப்படுகிறது; சிந்தனை உரிமை பெறுகிறது. இங்ஙனம் மனத்தின் செயல் வளர வேண்டுமே அன்றி மனத்தில் பல பொருள்களைத் திணித்துக் கொள்ளுவது கல்விப் பயன் அன்று. இத்தகைய ஆற்றலை அளிக்கக் கூடியது கணிதம். கணிதத்தைக் கற்போர் சிறந்த கணித வல்லுநர் ஆதல் கருத்தன்று. அவர்கள் ஆய்ந்து அறியும் திறன் பெறுவதற்கே யாகும். மனிதன் ஆறறிவுயிர் ஆயினும் அவன் பகுத்தறிவுத் திறனைப் பயன்படுத்தாது விடுவானேல் அவனுக்குப் பகுத்தறிவு குறைபடும். ஒவ்வொருவரும் கணித வழியாக ஆய்வுத் திறனைப் பெற்று விட்டால் பிற அறிவினை அம்முறையில் பெறுவது எளிது.

ரூஸோ : [1712–1778]

ரூஸோ வெகு எளிய குடும்பத்தில் பிறந்தவர். பல நோய்க்கு உட்பட்டவர். ஆனல் மனவெழுச்சி வாய்ந்தவர். எங்கும் சுற்றித் திரிந்த தனல் வாழ்க்கையின் பெருமையையும் இழிவுற்ற வாழ்க்கையின் தீமையையும் நன்கு அறிந்தவர். [1] 'சமுதாய ஒப்பந்தம்' என்ற அவருடைய நூல் பரிசுக்கு உரியதாயிற்று. அது முதல் அவருடைய அறிவும் ஆற்றலும் விளம்பரமாயின. [2] "எமிலி" என்ற அவரது மற்ருெரு நூல் அவரை ஒரு கல்விப் பேரறிஞராக்கியது. எமிலி என்பவன் அவர் கருத்தில் உண்டாகிய ஒரு சிறுவன். அவன் அவருடைய இயற்கை முறையில் கல்வி பெறுகிருன். எமிலி என்ற நூலின் வழியாக அவர் ஐரோப்பிய சமூகத்தின் இழிவைச் சுட்டிக்காட்டி வருங்கால மக்களுக்கு நல்ல முறையில் கல்வி அளித்தால் நாடு நாடாகும், மக்கள் மக்களாவார் என்று பறை சாற்றினுர். அன்று துலங்கிய கல்வி ஏற்பாட்டில் குழந்தையை ஒரு சிறு மனிதனுகக் கருதி அவனுக்கு அவன் விருப்பத்துக்கு மாருகப் பலவற்றைக் கற்பித்தார்கள். ரூஸோ இம்முறையைக் கண்டித்துப் பறிகொடுத்த உரிமையைக் குழந்தைகளுக்கு மீண்டும் அளித்தார். குழந்தை நிலையில் முதியவர்கள் போல் அவர்களுக்குப் பொருத்திக் கொள்ளத் தெரியாது. முதியவர்கள் அவர்களுடைய உள்ளத்தை அறிவதில்லை. முதியவர்கள் என்ன நினைக்கின்ருர்களோ அதனையே குழந்தையும் நினைக்கிறது என்று கொள்ளுகிருர்கள். அது தவறு. குழந்தைகள் தமது இயற்கையில் வளர்ச்சி பெற வேண்டும்.

1. Social Contract 2. Emile

அவர் இயற்கை என்று வற்புறுத்தியதை அறிந்து கொள்ள வேண்டும். குழந்தைகள் முதியவர்களிடையே வளரக்கூடாது. இயற்கை தீமை அற்றது. இயற்கை கற்பிப்பவை எல்லாம் நல்லவை. இயற்கையோடு மனிதனுடைய செயற்கை சேர்ந்தால் தீமை உண்டாகிறது. முதியவனுடைய மூச்சு குழந்தையினுடைய குழாத்துக்கே கெட்டது. ஆகையால் குழந்தையைச் சமூகத்திலிருந்து பிரித்து இயற்கை வனப்பிற்கிடையும் வியப்புச் சூழ்நிலையிலும் வளரவிட வேண்டும். கல்வியின் நிலைக்களன் மூன்று; அவை இயற்கை, மனிதன், பொருள்கள் என்பன. இயற்கை குழந்தையினுடைய உள்ளத்து ஆற்றலை வளர்க்கிறது. மனிதன் குழந்தைக்குச் சமூகச் சூழ்நிலையை அளிக்கிறான். பொருள்கள் அவனைச் சுற்றிலுமுள்ள இயற்கைச் சூழ்நிலை. இம்மூன்றும் ஒருமைப்பாடு பெற்றால் கல்விநிலை உயர்ந்ததாகிறது. ஆனால் இம்மூன்றும் ஒன்றுபட இயலாது. ஏனெனில் மனித உள்ளாற்றலும், சமூகமும், குழந்தையின் உள்ளாற்றலோடு ஒற்றுமைப்படா. குழந்தைகளின் உள்ள ஆற்றல் வேறு. அதை ஆசான் நன்கறிய வேண்டும். குழந்தை அதன் உள்ளப் போக்கில் வளரவேண்டும். இங்ஙனம் குழந்தையை மையமாக ரூஸோ வற்புறுத்தியது அவர் கல்வி உலகத்துக்குத் தந்துதவிய பெருங்கருத்து. குழந்தையை நடுப்பொருளாகக் கருதியதும் குழந்தைச் செயல்களை இயற்கை ஆற்றலாகக் கொண்டதும் ரூஸோவை ஃப்ரோபெலுக்கு முன்னோடியாக விளங்கச் செய்கின்றன. செடிகொடிகள் நன்றாகப் பயிராக்கப் பெற்றால் வளருகின்றன. அதைப் போன்று மனிதன் கல்வியால் வளர்க்கப் பெறவேண்டும். இயற்கையில் வளரும் எமிலி துன்பமில்லாது வளரக்கூடாது. துன்பத்தை எமிலி அறியவேண்டும். குழந்தைகள் தம்மால் இயலாதவற்றை மிகுதியாக அறியவேண்டும். அங்ஙனமே குழந்தைகளை நன்றாக உற்று நோக்குவதற்குப் பயிற்றப் பெற்றோரும் ஆசிரியரும் அறிந்து கொள்ளவில்லையே யென்றும், அவர்களுக்கு யாராவது கற்றுக்கொடுக்க மாட்டார்களா என்றும் ரூஸோ ஏங்குகிறார். எமிலி, வாழ்க்கை என்னும் தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும். அவன் மனிதனாகவேண்டும். இதனால் ஒரு தொழிற் கல்வியைப் பிள்ளைகள் வளருமுன்னரே தொடங்குவது கூடாதென எச்சரிக்கின்றார். எதிர் காலத்தை நோக்கி எமிலிக்கு என்ன கற்றுக்கொடுப்பது? இன்று எமிலி நன்றாக வாழத் தெரிந்து கொண்டால் நாளை எந்த நிலைமையிலும் தன்னைப் பொருத்திக்கொள்ள முடியும். எனவே குழந்தை வளர்ச்சி, உள்ள ஆற்றலை அடிப்படையாகக் கொண்டு பெருக வேண்டும். குழந்தை உள்ளம் ஒரு வெற்றேடு என்ற வெற்றேட்டுக் கொள்கை தக்கதன்று. சமூகத்தோடு ஈடுபாடு வளரும் குழந்தைக்கு நன்மை பயக்காது. நகரங்கள் மனித இனத்துக்கு நரகங்களே. குழந்தைகள் கெடுவதெல்லாம் முதியவரோடு சேர்ந்தே. ஆனால் இயற்கையோடு உறவு கொண்டால் தீயவழி நாடாது. எனவே இயற்கை நல்லது. மனிதனால் ஏற்படும் செயற்கை தீயது.

ரூஸோ குழந்தைகள் தாமாகவே கற்றறிந்து கொள்ள வேண்டும் என்றூர். அவர்களுக்குப் பேச்சுரை நிகழ்த்தலாகாது. பேச்சுக்களுக்கு அவர்கள் செவி சாய்க்க மாட்டார்கள். செவி சாய்த்தாலும் ஒன்றையும் மனத்தில் இறுத்திக்கொள்ள முடியாது. வகுப்பில் கத்திக்கொண்டே இருக்கும் ஆசிரியர் கத்தும் பிள்ளைகளைத்தான் உருவாக்குவார். அடிக்கடி ஆசிரியர் பழமொழிகளையும் அறநெறிகளையும் பேசுகின்றூர். பிள்ளைகள் அவற்றை அறிவது அரிது என்று அவர் உணர்வதில்லை. வெற்றுப் பேச்சின் மீது குழந்தைகட்கு விருப்பமில்லை. வகுப்பில் பேசிக்கொண்டே பாடஞ்சொல்லுவது அறிவியலுக்கும் உளநூலுக்கும் பொருத்தமற்ற ஓர் ஆசிரிய முறை. குழந்தைகள் விரும்புவதெல்லாம் [1] காட்சி சார் பொருள்கள் ; அவற்றைக் கையிலேந்திக் காண்பது அவர்களுக்கு இன்பம் ; [2] கருத்தியல் மொழிகள் அவர்களுக்கு வேண்டா.

ரூஸோவின் முறை :

இயற்கை குழந்தைகளைக் குழந்தைகளாகவே காண விழைகிறது. குழந்தைகளை மனிதர்களாகக் காண விழைந்திலது. முற்றிய முதுமைப் பருவத்துப் பாடங்களெல்லாம் முற்றுத குழந்தைகளுக்கு வேண்டாம். இங்ஙனம் ரூஸோ உள்ள வளர்ச்சிக்கு ஏற்ற கல்வி ஏற்பாட்டுக்கு வழி வகுத்தார்.

குழவிப் பருவம் :—பிறவி முதல் ஐந்தாண்டுகள் வரையில் :—இப் பருவத்தில் உடலைப் பேணுதல் வேண்டும். மெலிந்த நிலையில் உள்ள உடல், உதவியை நாடுகிறது; வன்மையோடுள்ளது பணி புரிகின்றது. மெலிந்த குழந்தை கெட்ட குழந்தை; பலமுள்ளது நல்ல குழந்தை. தாயும் தந்தையும் இப்பருவத்தில் வெகு விழிப்போடு குழந்தையை வளர்த்தல் வேண்டும். வளர்ச்சியைத் தடை செய்யும் ஆடைகளையும் அணிகலன்களையும் தவிர்க்க வேண்டும். குழந்தை இயற்கைப் பொருள்களோடு விளையாட வேண்டும். பொம்மை, விளையாட்டுக் கருவிகள், ஆகிய செயற்கைப் பொருள்களைத் தொடக்கூடாது. குழவிப் பருவத்திலேயே குழந்தைகளுடைய உடல் வன்மை பெறவேண்டும். எந்த வெம்மை தண்மை நிலைக்கும் அவர்கள் சோராமல் வளர்க்கப்பெற வேண்டும்.

பிள்ளைப் பருவம் :

ஐந்து முதல் பன்னிரண்டு வயது வரையில் பிள்ளைப் பருவமாகும். இப்பருவத்தில் புலன்கள் ஆட்சி செலுத்தும்; ஆய்வுத் திறன் இராது; அதனுல் கல்வி எதிர் மறை முறையில் அமைய வேண்டும். நல்ல ஒழுக்கங்கள் வேண்டும் என்று வற்புறுத்த வேண்டியதில்லை. பிழை செய்யாது வளர்ந்தால் போதும். காலம் எப்படியோ கழிந்தால் நல்லது.

---

1. Concrete objects 2. Abstract words

நாள் முழுவதும் ஓடுவதும் தாவுவதும் விளையாடுவதுமாகப் பிள்ளைகள் காலம் கழிக்கலாம். அங்ஙனம் செய்வதில் அனுபவங்கள் திருத்தம் பெறுகின்றன. கல்வியால் அனுபவம் திருத்தம் பெறுகிறதல்லவா? "ஒன்றும் தெரியாத பன்னிரண்டு வயதுப் பிள்ளையை என்னிடம் கொடு. பதினைந்து வயதுக்குள் குழவிப் பருவம் முதல் கல்வி கற்ற பிள்ளைக்குத் தெரிந்த அளவில் தேர்ச்சி தந்து விடுகிறேன்; கல்வி கற்ற பிள்ளை படித்தவற்றை எல்லாம் நெட்டுருச் செய்திருக்கும். மற்ற பிள்ளை அதனுடைய அறிவைப் பயன்படுத்தும்" என்கிறார் ரூஸோ. எனவே பிள்ளைகள் எதையும் படிக்கக் கூடாது. புத்தகங்கள் வேண்டா. கற்பவற்றை ஆயத்தம் செய்து புத்தகங்கள் அளிக்கின்றன. புத்தகங்கள் குழந்தைகளுடைய துன்பங்கள். ஆகையால் குழந்தைகள் தாமாகவே தமது முயற்சியால் எதையும் அறிந்து கொள்ளவேண்டும். புத்தகப் படிப்பெல்லாம் நாம் அறியாதவற்றைப் பற்றிப்பேசுவதற்கும் எழுதுவதற்கும் உதவுகின்றன. மொழிக்கல்வி மிகவும் பயனற்றது. குழந்தைகளுக்கும் பழக்கம் வேண்டுமென்று கருதுகிறார்கள். அது கூடாது. பழக்கங்களையே தவிர்க்கக்கூடிய பழக்கமே பிள்ளைக்கு நல்லது. பழக்கங்கள் உண்டானால் பிள்ளைகள் அவற்றிற்கு அடிமையாகி விடுகிறார்கள். மனிதன் நாகரிகத்தோடு பிறக்கின்றான். ஆனால் அடிமையாகி இறக்கின்றான். எமிலி கற்றுக்கொள்ள வேண்டிய அறநெறி எல்லாம் பிறருக்குத் தீங்கிழைக்காதது ஒன்றே. [பன்னிரண்டு வயதுக்குள் நமது பிள்ளைகள் வள்ளுவத்தின் அறத்துப்பாலை நெட்டுருச் செய்துவிடும். அதன் அனுபவத்தைப் பெற இயலுமா? அல்லது அதன் வழி நிற்கத்தான் முடியுமா? நம் பள்ளிகளில் பல பாடங்கள் வெறும் பாடங்களாகவே அனுபவத்தில் ஒட்டாமலும் நடைமுறை வாழ்க்கைக்கு நயம்படாமலும் ஆண்டாண்டுதோறும் நடைபெற்று வருகின்றன.] எமிலிக்கு சமூகக் கல்வி வேண்டா. அவனுக்கு ஆய்ந்தறி வன்மை ஏற்படும் வரையில் வேண்டா. அவனுக்கு உடல் வளர்ச்சியும், புல வளர்ச்சியும் வாழும் அனுபவங்களும் மட்டும் போதும்.

பெரும் பிள்ளைப் பருவம் :

இப்பருவம் பன்னிரண்டு முதல் பதினைந்து வயது வரையில். இப்பருவத்தில் அறிவுக்கல்வி தொடங்கலாம். உண்மையை உணரக் கூடிய அறிவுத்துறைகளே நல்லனவாம். இயற்கை அறிவியல், மொழி, கணிதம், கைத்திறன், கல்வி, இசை, சித்திரம் வரைதல், சமூகத் தொடர்பு ஆகியவை அறிவுத்துறைகளாம். முன்னைய பருவங்களில் உடல் வளர்ச்சி, புலனறிவு வளர்ச்சி, நுண்ணறிவு ஆகியவற்றைப் பெற்ற எமிலிக்கு [1] உள்ளம் வேண்டும். அதைப் பெறக் குழுப் பழக்கம் நல்லது. சமூகத்தில் காணும் துன்பங்களை அறிய மருத்துவ

1. Heart

சாலைகளுக்கும், சிறைச்சாலைகளுக்கும் சென்று பார்க்கவேண்டும். நல்லவற்றையும் அறிந்து கொள்ள வரலாற்றுப் பாடம் உதவலாம். நீதிக் கதைகள் கற்கலாம். கைத்திறக் கல்வியின் நோக்கம் எந்தத் தொழிலையும் வெறுக்காததற்கே ஆகும். சித்திரம் எழில் உணர்வை வளர்க்கும். சமூகத் தொடர்பு ஒற்றுமை வாழ்க்கையை உறுதிப் படுத்தும்.

முற்றிய பருவம் :

பதினைந்து முதல் இருபது வயது வரையில். இப்பருவத்தில்தான் உண்மையான கல்வி தொடங்க வேண்டும். ஆனால் கல்வி இதன் தொடக்கத்தில் அல்லவா இறுதி அடைகின்றது! ரூஸோ எமிலிக்கு இப்பருவத்தில் சமயம், அறநெறி, சமூக அறிவு ஆகியவற்றைக் கற்றுக் கொடுக்கவேண்டும் என்கின்றார். சமூகத்தோடு உறவாடும்போது பல ஒழுக்கங்கள் வளரும். அறநெறிக் கல்விக்கு ஆசிரியருடைய பண்பாடுகளே எடுத்துக் காட்டாக விளங்கவேண்டும். பால் உணர்ச்சி யைப் பக்குவமாக ஒரு நல்ல வழியில் திருப்புதல் வேண்டும். சமயக் கல்வி, எல்லாம் வல்ல கடவுளைப்பற்றி வற்புறுத்துவது நலம்.

பெண்பாலர் கல்விக்காக அவருடைய எடுத்துக்காட்டு சோஃபி. எமிலிக்கு வகுத்த கல்வி முறை சோஃபிக்கு வேண்டாமென்றார். பெண் பாலர்களுக்கு வேண்டியவை எல்லாம் ஆண்பாலரோடு அன்பு கொள்ளு வதே; அவர்களால் ஆதரிக்கப் பெறுவதே; அன்போடு பழகுவதே. உடற்பயிற்சி, தையற்கலை, அதைச் சார்ந்த பல பிரிவுகள் இவை யாவும் அவர்கள் தம்மை அழகுபடுத்திக்கொள்ள வேண்டியவை. அவர்கள் ஆண்களுடைய குணங்களை நன்றாக அறிந்து கொள்ளத்தக்க பயிற்சி வேண்டற்பாலது. குடும்பக் கலையில் தேர்ச்சி பெறவேண்டும். உயர் நிலைக் கல்வியே அவர்களுக்கு வேண்டாமென்று ரூஸோ வற்புறுத்து கிறார்.

கல்வி இயற்கையின்பாற் பட்டதென்றும், செயற்கை முறை அன் றென்றும், அஃது உளவளர்ச்சி என்றும், புறவய ஈடுபாட்டினால் இயலா தது என்றும், இயல்பூக்கங்கள் ஆர்வங்கள் ஆகியவற்றின் உந்துதலால் உண்டாவதென்றும், புறவயக் கட்டாயத்தினால் ஏற்படும் துலங்கல் அன் றென்றும், அஃது இயற்கைத் தன்மையும் வன்மையும் பெருகிய தொன் றென்றும், வெறும் பொருளறிவு அன்றென்றும், அஃது வாழ்க்கையே என்றும், எதிர்காலத்துக்கு ஆயத்தம் அன்றென்றும், எதிர்காலம் பிள் ளைப் பருவத்தில் எட்டாததொன்று என்றும், இன்னோரன்ன யாவும் ரூஸோவின் கல்விக் கருத்துக்கள். பத்தொன்பதாவது நூற்றாண் டில் கல்வியாளர் பலர் பல்வேறு வகையாகக் கல்வி உலகத்துக் குத் தந்தவை பலவாயினும், ரூஸோவின் கல்வி முறையெல்லாம் எதிர் மறை முகத்தான் அமைந்தது. இதற்குக் காரணம் பண்டைய முறை யில் பிள்ளைகள் ஆசிரியருடைய அடக்கத்தில் இலக்கியம், சமயம்

முதலியவற்றின் மேம்பாட்டில் சிக்கலுற்று, முதியவர்கள் மதிக்கக்கூடிய அறிவினைப் பெற்றுச் சமய நிலைகளில் உடன்பாட்டினைக் கொண்டு நிறுத்த முறையான் நின்ற பண்பாட்டிற்கு ஒப்ப மனவெழுச்சிகள் தீட்டப்பட்ட கல்வி நிலையைக் கொண்டிருந்ததே. எனவே அக்கட்டவிழ்க்க எதிர்மறைத் திட்டம் ஏற்புடையதாயிற்று. ரூஸோ நாள் வரையில் கற்றறிந்தவர் எல்லாம் நன்ருகக் கற்றவர்கள்; சமூகப் பண்பாடுகளை உடையவர்கள். ஆனல் ரூஸோ அவர்களைக் கற்றறிந்தவர்களாகக் கருதவில்லை. கற்றறிந்தவர் உடலையும் உள்ளத்தையும் நன்ருக வளர்த்தவரே என்று கருதினர். பண்டைய முறையில் எந்தப் பயிற்சியையும் பெற வழியிருந்ததால் பயிற்சி பெற்று விடலாம். ஆனல் ரூஸோ பயிற்சியை முதன்மையாகக் கருதவில்லை. பிள்ளைகள், உந்தப்பெறும் அக்கறையையே முதன்மையாகக் கருதினர். ஒன்று [1] முயற்சியால் வளர்ந்த கல்வி. மற்ருென்று பிள்ளையின் [2] அக்கறையால் வளர்ந்த கல்வி. இவ்விரண்டையும் ஒன்றுபடுத்த இன்று முயற்சி நிகழ்கின்றது. கல்வி முயற்சி எல்லாம் இயல்பூக்கங்களின் வழியாகத் தொடங்கப் பெறவேண்டுமென்று கருதுகிருேம். இவற்றை ஒடுக்கியவர்கள் பழங்கல்வியாளர்கள். குழந்தை முதலில் மொழிதலாகிய மொழி, அதன் அழுகையே. முதியவர்கள் குழந்தையின் விருப்பத்துக்குக் குறுக்கிடுகிருர்கள். அவர்கள் குழந்தைகளுக்கு அளிக்கும் முதற் பரிசு கட்டுப்பாடு. அவர்கள் பெறும் பெரியோர்களுடைய கவனம் அவர்களை உட்படுத்தும் துன்பங்கள். கல்வி இயற்கையை அடக்கத் தக்கதன்று. குழந்தையை ஒரு சிறு மனிதனுகக் கொண்டு ஆசிரியன் அவனைப் பெரிய மனிதனுக்குகிருன். குழந்தை சிறிய மனிதனு? குழந்தை பெரிய மனிதனுக வேண்டியதுதான். மனிதனைப்பற்றி அறிய வேண்டியதுதான். ஆனல் மனிதனைப் பற்றிய கருத்துக்கள் அவனுக்கு எட்டாதவையாக இருந்தால், அவன் அவற்றை அறிதலைக் காட்டிலும் அறியாமை நன்று. எனவே குழந்தை வளர்ச்சி இன்பம் பெறுவதாகவும், அறிவு கொளுத்துவதாகவும், சமநிலை வளர்ச்சியாகவும், பயனுள்ளதாகவும் அமைய வேண்டும். குழந்தைகள் கற்கும் வழி வெகு எளிது. புலக்காட்சிகளெல்லாம் கருத்துக் காட்சிகளாகி அதன் பின்னர் அறிவுக் காட்சிகளாக வேண்டும். உள்ளம் இயங்கும்போது புலன்களே முதல் வழிகாட்டிகளாகின்றன. புத்தகங்கள் குறுக்கிடக் கூடாது. உலகமே புத்தகம். உலகக் கருத்துக்களே பாடங்கள். படிக்கும் குழந்தை வெறும் சொற்களைப் படிக்கிறது. அது சிந்திப்பதில்லை; சொற்களைக் கற்றுக் கொள்ளுகின்றது. அறிவுத்திறனை வளர்த்துக் கொள்ளுவதில்லை. எடுத்துக்காட்டாக நிலநூலை வகுப்பறையில் கற்பது பயனில்லை. அதை வெட்டவெளியில் அல்லவா—இயற்கையில் அல்லவா—காடுகளிலும், கழனி

1. Education of effort 2. Education of interest

களிலும் குன்றுகளிலும் அல்லவா—அண்டத்தில் கதிரவனின் முன்னிலையிலும், அவன் செலுத்தும் வெப்பத்தில் ஏற்படும் வெப்ப நிலைகளிலும், மேகங்களைக் கண்டும் மழைப்பொழிவைப் பார்த்தும் அல்லவா கற்கவேண்டும்! வானநூலை வகுப்பறையில் கற்றல் இயலுமா? வெளியிலல்லவோ—அண்டத்தினை அண்ணாந்து பார்த்துக் கோள்களைக் கண்டறிந்தல்லவோ—வானநூலைக் கற்கவேண்டும். அறிவியல், இரசாயனம் ஆகியவற்றைச் சோதனைச் சாலையிலும் இயக்க வினையிலுமல்லவோ கற்றல்வேண்டும். கணிதத்தை அது பயன்படும் இயற்கை நிலைகளிலும் பொருளாதார உறவுகளிலும் அல்லவோ அறிதல் வேண்டும். அல்லாது பொருளைக்கண்டு அறிய இயலும்போது அதன் அடையாளத்தை விரும்புவது ஏன்? பிள்ளைகள் அடையாளத்தைப் பற்றிக் கொண்டு பொருளை மறந்து விடுகிறார்கள். இத்தகைய ரூஸோவின் கருத்துக்கள் ஆசிரியத்துக்கு அருமையானவை. இவற்றுள் எதனையும் நல்லாசிரியன் மறுக்க இயலாது.

ஜான் லாக், தான் இயற்றிய கல்வியைப் பற்றிய நூலில் குழந்தையைப் பற்றி எழுதி உதவினார். ஆனால் ரூஸோ குழந்தையின் இயற்கையை அறிந்து பல கல்விக் கருத்துக்களைப் பிறப்பித்தார். எனவே தொடக்கக் கல்வி எல்லாம் குழந்தை வாழ்க்கையையும் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு இயங்க வேண்டும். "பெருமக்களே! மனிதப் பண்பாடு உங்களுக்கு உரித்தாகுக. அதுதான் முதன்மையது. குழவிப் பருவத்தை ஆதரியுங்கள். அதன் இயல் பூக்கங்கள், இன்பங்கள், ஆடல்பாடல்கள் ஆகியவற்றை ஆர்வத்தோடு ஆதரியுங்கள்" இங்ஙனம் குழந்தையின் பெருமையை ரூஸோ கருத்தாக அளித்தார். பெஸ்டலாசி செயற்படுத்தினார்.

பெஸ்டலாசி [1746—1827]:

ஐந்து வயதில் தந்தையை இழந்துவிட்டதால் தாயன்பால் வளர்ந்த பெஸ்டலாசி தாயைப் பற்றிய பல நினைவுகள் தமது உள்ளத்தைத் தொடக் கண்டார். தாயின் தற்கொடை உணர்ச்சி தனக்கும் உண்டாயிற்று. உலக இன்பங்களைக் காட்டிலும் உள்ளத்திற் பெறும் இன்பமும் உண்மையை நாடும் உள்ளமும் பேரின்பம் தருபவை எனக் கண்டார். ரூஸோவின் எமிலியைக் கற்று இன்புற்றார். தனக்குப் பிறந்த மகனை எமிலியைப் போல வளர்க்கவும் எண்ணம் கொண்டார்; [1] லியோனார்டும் கெர்ட்ரூடும் என்னும் தமது நூலைக் கல்வி வெளியீடாகவும் கருதினார். ஆனால் அதை ஒரு பெருங்கதையாக மக்கள் படித்தனர். [2] கெர்ட்ரூட் அல்லது குழந்தைக்குக் கற்பிப்பதெப்படி என்ற மற்றொரு நூல் கல்விக்கலை நூலாக விளங்கிற்று. [3] "ஸ்வான் சாங்" (இறுதிப்

1. Leonard and Gertrude 2. Gertrude (How Gertrude teaches her children) 3. Swansong

பாட்டு) "எனது அனுபவங்கள்" என்ற நூல்கள் அவருடைய கல்வியின்பாற் பட்ட இறுதிக் கருத்துக்களை விளக்குகின்றன.

பெஸ்டலாசி காலத்தில் பள்ளிகளின் நிலைகள் கேடுற்று இருந்தன. பள்ளிகள் மேற்பார்வை இருந்தும் நன்றாக இல்லை. ஆசிரியர்கள் பாடங்களை நெட்டுருச் செய்வதையே வற்புறுத்தினர். உயர்நிலை மக்கள் தாழ் நிலையினரை வெறுத்தார்கள். அப்போது ஃபிரெஞ்சுப் புரட்சிக்காலம். ஏழைகளுக்குக் கல்வி கூடாதென்ற மனப்பான்மை மேலிட்டகாலம். ஏழைகளுக்கோ கல்வியினைப் பற்றிக் கருத வாய்ப்பும், நேரமும், விருப்பும், பயனும் இல்லை. அவர்களுக்குப் பள்ளியும் இல்லை. பள்ளிக்கூடங்களெல்லாம் பாழுற்ற கட்டிடங்கள். பள்ளி அறைகள் பள்ளி நேரங்களிலுங்கூடக் குடும்ப அறைகளாயின. ஆசிரியர்கள் ஆசிரியப் பயிற்சி பெறுதவர்கள். கண்டவர்களெல்லாம் ஆசிரியப் பணியை மேற்கொண்டார்கள். கொத்தன், தையற்காரன், முடவன், தொழிலாளி முதலியவரெல்லாம் ஆசிரியர்கள். இக்கேடுற்ற நிலையில் பெஸ்டலாசி தமது கல்விப் பணியைத் தொடங்கினர். அவரால் ஒரு பள்ளி தொடங்கப் பெற்றது. அது பாட்டாளிகளின் ஏழைப் பிள்ளைகளுக்காகவே ஏற்படுத்தப் பட்டது. பெஸ்டலாசிக்கு ரூஸோவின் இயற்கைக் கொள்கைகளைச் செயற்படுத்த வேண்டுமென்ற ஆசையும் உண்டு. இப்பள்ளியில் பிள்ளைகள் நூல் நூற்றல், ஆடை நெய்தல், காய்கறித் தோட்டங்களை வளர்த்தல் முதலிய தொழில்களைச் செய்து கொண்டும், ஒரோவழி படிக்கக் கற்றுக்கொண்டும், வாய்பாடுகளை நெட்டுருச் செய்து கொண்டும் காலங் கழித்தனர். இம்முயற்சி கல்வியையும் தொழிலையும் தொடர்பு படுத்தவில்லை. ஆனல் இரண்டும் ஒன்றாக நடைபெறலாம் என்ற காட்சி ஒன்றையே தந்தது. இப்பள்ளி ஐந்தாண்டுகளில் மூடப் பெற்றது. பிள்ளைகளின் பெற்றோர்களே இதை வெறுத்தார்கள். பதினெட்டாண்டுகள் பெஸ்டலாசியின் உள்ளத்தில் பல கருத்துக்கள் உருவாயின. [1] 1798-இல், தான் பள்ளி ஆசிரியராகப் பணி ஏற்பதாக அறிவித்தார்; அவருடைய பல சோதனைகளின் உண்மைகளைச் செயல் படுத்த விழைந்தார். [2] சுவிட்சர்லாந்திலுள்ள [3] 'ஸ்டான்ஸ்' என்னுமிடத்தில் ஃப்ரெஞ்சுப் புரட்சிப் போரில் மாண்ட பெற்றோர்களுடைய அனாதைக் குழந்தைகளின் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். இப் பள்ளியிலும் கல்வியையும் கைவேலையையும் ஒன்றாக்கினர். ஆனல் கை வேலைகளின் வழியாகக் கல்வி அனுபவத்தைத் தந்தார். முதலில் குழந்தைகளின் உள்ளங்களைத் திறக்க வேண்டும். அவர்களுடைய தேவைப்பாடுகளை நிறைவு செய்யும்போது பெரியவர்கள் அவர்களுடைய உள்ளங்களைத் தொடவேண்டும். அன்பு உறவே புத்துணர்ச்சியாக வேண்டும். இத்தகைய அன்பு நிலை வழியாக அறிவு வளருதல்

1. "I will turn school master", Pestalozzi announced as if by inspiration 2. Switzerland 3. Stanz

வேண்டும் என்று கூறுகிறார். "கல்விக்கலையை [1] உளநூல் மயமாக்க விரும்புகிறேன்" என்றார். ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தார். பல கல்விக் கருத்துக்களைச் சோதனை செய்தார்.

பெஸ்டலாசியின் கல்விக் குறிக்கோள்கள் தனி ஒவ்வொருவனுடைய வாழ்க்கையையும் இன்பமுடையதாகவும், நன்மையுடையதாகவும் மாற்றி அமைக்க வேண்டும் என்ற அடிப்படையின. கல்வி ஒவ்வொருவனுடைய உரிமையாகும்; சமூகத்தைச் சீர்திருத்துவதென்றால் தனி ஒவ்வொருவரையும் திருத்த வேண்டும். ஒவ்வொருவரும் தனக்குத் தானே உதவி செய்து கொள்ளவேண்டும். மற்றோருடைய உதவி குழந்தையினுடைய தன்னிலையுணர்வினைப் பிறக்கச் செய்வது. ஒவ்வொரு குழந்தைக்கும் தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டிய ஆற்றல் உண்டு. அஃது உள்ளத்தே மறைந்து கிடக்கின்றது. கல்வி வழியால் அவ்வாற்றலை வளர்க்க வேண்டும்.

ரூஸோவின் கொள்கைக்கு ஏற்பக் குழந்தை தனிமையாக விருப்பப்படி வளரக்கூடாது. கட்டுத் திட்டத்தில் வளர்வதே நல்லது. ஆனால் ரூஸோவைப் போல் இயற்கை முறைக் கல்வியே சிறந்தது. மனிதன் ஒரு செடியினைப் போல் வளர்கின்றான். குழந்தை ஒரு சிறிய செடியைப் போல் தோன்றி மரத்தைப் போல் வளர்கிறது. அதனால் குழந்தைக்குள் மனித வளர்ச்சி அடங்கி உள்ளது. உளநூல் சார்பற்ற பள்ளிகள் பிள்ளைகளை வளரவொட்டாது தடுக்கின்றன. பெஸ்டலாசி வகுத்த கல்வித் திட்டம் எமிலியைப் போன்ற பல வசதிகளை உடைய பிள்ளைக்கு அன்று. அத்திட்டம் பாமர மக்களுக்கும் உரியதென்று பெஸ்டலாசி வகை செய்தார். [2] 'எல்லாருக்கும் கல்வி' என்ற இயக்கத்தைத் தொடங்கினார். எப்பிள்ளையாயினும் நன்றாக உற்று நோக்கினால் அதன் உள்ளத்தின் ஆற்றலையே ஆசிரியர் உணர முடிகிறது. எனவே புலக்காட்சிகளின் வழியாகக் கல்வி அறிவினைப் புகட்டுவது பொருள்களின் வழியாக அமைவதே என்றார். இன்று [3] சொற்களுக்கு முன் பொருள்கள் என்று ஆசிரியப் பள்ளிகள் அறைகூவுகின்றன. இதனைப் பெஸ்டலாசி ஒரு பொருளைப் புலன் வழியாக நேராக அறிந்தால் அது பிள்ளைகளுக்கு நேர் அனுபவத்தைத் தருவதென்றார். ஏன்? எந்த அறிவும் நேரல் முறையில் பயனளிக்காதது.

கல்வி முறையில் பெஸ்டலாசி ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கினார். அவர் ஆசிரியத்துக்கு உதவிய கருத்துக்கள் போற்றற்குரியவை. குழந்தைகள் ஒரு பொருளை உற்று நோக்கி அதைப் பற்றி அனுபவ வழியில் அறிந்து பேசுதல் நல்லது. பிள்ளைகள் கற்கும் போது அவர்கள் எவ்வளவு கற்றார்கள் என்று அளவிடுதல் கூடாது;

---

1. "I wish to psychologise education" 2. Education for all 3. Things before words

அல்லது அவர்கள் கற்கும் முறையினைப் பார்த்து நகைத்தலும் கூடாது. பிள்ளையின் வளர்ச்சிக்கேற்றபடி படிப்படியாகப் பொருளறிவினைக் கொடுக்க வேண்டும். ஒன்றினைக் கற்ற பிறகு மற்றொன்றினைத் தொடங்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் தனித்தன்மை உடையதென்பதை ஆசிரியர் அறியவேண்டும். பிள்ளைகளின் உள ஆற்றலை வளர்ப்பதே தொடக்க நிலைகளின் வழியாகும். கருத்தறிவைப் பெறுவது இரண்டாவது நிலை. அறிவோடு அறிவைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றலும் திறனும் பிள்ளைகளிடையே வளர வேண்டும். ஆசிரியரும் மாணவரும் அன்பு உறவு கொள்ளுதல் நல்லது. கற்பித்தல் கற்றலுக்காக அமைந்ததே. பண்பாடுகளும், மதச்சார்புகளும் தாய் தந்தையர்களின் உறவோடு வளர வேண்டியவை.

பெஸ்டலாசி ஒரு சில ஆசிரிய முறைகளைத் தந்து உதவியுள்ளார். எண்களைக் கற்பிக்கும்போது கோடுகளின் மீது புள்ளிகளை இட்டுக் கற்பித்தல்; கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் கற்பதற்கும் இம்முறைகளே பயன்பட்டன. பிள்ளைகள் கோடுகள், முக்கோணங்கள், நாற்கரங்கள் ஆகியவற்றை வரையலாம்; பொருள்களைப் பார்த்தும் வரையலாம். பின்னங்களைக் கற்பிப்பதற்கும் செயற்பாட்டு முறை; பொருள்களைப் பார்த்து அட்டைத் துண்டுகளில் உருவம் அமைத்தல்; இம்முறை கோணவியலுக்கும் பயன்படுதல்; பயிர் நூல், உயிர் நூல், நிலநூல் ஆகியவற்றிற்கு உரிய பொருள்களை உற்று நோக்கி அறிதல், களிமண் உருவங்கள் செய்தல்—ஆகியவை பெஸ்டலாசியின் முறைகளாம்.

பள்ளிகளெல்லாம் இல்லங்களாகத் துலங்க வேண்டும் என்பது பெஸ்டலாசியின் குறிக்கோள். ஆசிரியர் அன்னை அன்போடு இயங்க வேண்டும். ஒரு முறை தந்தையர் ஒருவர் பெஸ்டலாசியின் பள்ளிக்குள் நுழைந்தார். அங்கு ஆசிரிய மாணவரிடையே நிலவிய காட்சியைக் கண்டு வியப்புற்றார். பெஸ்டலாசி அத்தந்தையர் கூறியதைப் பெரும் பாராட்டாக மதித்தார். இஃதன்றோ கல்விக் காட்சி! இன்று நம் பள்ளிகளில் அத்தகைய உறவினை விரும்புகிறோம். ஆசிரியர் பிள்ளைகளுக்காக விழைந்தாலன்றி மாணவர்கள் உயர முடியாது. பிள்ளைகளுடைய பல குறைபாடுகளைக் கண்டு இரங்கி நிறைபாடுகளாக்க வேண்டும். அப்போதுதான் பிள்ளைகள் மனச்சிக்கல்களிலிருந்து விடுதலை பெற்று நல்ல பற்றுணர்ச்சிகளை உண்டாக்கிக் கொள்வார்கள். பிள்ளைகளைத் தண்டித்தல் கூடாது. தண்டனை பிடிவாதத்தை வளர்க்கும். ஆனால் ஒரோவழி 'இல்லங்களில் தண்டித்தல் உண்டென்றால் பள்ளியில் தண்டித்தலுக்குப் பதிலாகக் கண்டித்தல் கண்ணியமாகும்.

பெஸ்டலாசியின் கருத்துக்களெல்லாம் அவருடைய அல்லலுற்ற வாழ்க்கையின் அனுபவத் திரள்களேயாம். அவை பள்ளிக்கூடங்களில் ஒரு புதிய உணர்ச்சியை உண்டாக்கின. பழைய முறைக் கல்விக்குப்

பதிலாகக் கல்வி உலகில் [1] சோதனை முறை தொடங்கிற்று. அது வெறும் சோதனை அன்று. சோதனையின் முடிவுகளைக் காண முயற்சிகளும் உருவெடுத்தன. பெஸ்டலாசியின் வாழ்க்கையே பல சோதனைகள்; சோதனைகளில் கண்ட பல முறைகள், அவருக்கே விளங்காதவற்றை விளக்கிக்கொள்ளும் முயற்சியாயின. எனவே பெஸ்டலாசியின் வாழ்க்கை வரலாறே அவர் பல கருத்துக்களைக் கல்வி உலகுக்காக வளர்த்த வரலாறாகும்.

[2] ஹெர்பார்ட் [1776–1841]:

ஹெர்பார்ட் பெஸ்டலாசியைத் தொடர்ந்து கல்விப் பணியாற்றினர். அவர் பல்கலைச் செல்வர். பெஸ்டலாசியின் வழியினரென்றும் மாணக்கரென்றும் அவரைக் கூறுவார்கள். ஆனால் இருவரும் தனித்தனியே கல்விக் கருத்துக்களை வளர்த்தனர். பெஸ்டலாசியின் கருத்துக்கள் உருவெடுக்கு முன்னரே ஹெர்பார்ட் தமது பணியைத் தொடங்கி விட்டார். பெஸ்டலாசியின்பால் ஹெர்பார்ட்டுக்கு பெருமதிப்புண்டு. ஆனால் பெஸ்டலாசியையும் அவர் மிஞ்சிவிட்டார். புலனறிவு வளர்ச்சி புலக்காட்சியை வளர்ப்பதற்குப் பெஸ்டலாசி உற்று நோக்கல் வேண்டும் என்றார். ஆனால் புலக்காட்சி எப்படி அறிவையும் நன்னெறியையும் வளர்க்குமென்று கூறவில்லை. அதனால் ஹெர்பார்ட் புலக்காட்சியைப் பட்டறிவின் வழியாகக் கருத்துக்களாக மாற்றலாம் என்று வழி காண்பித்தார். பெஸ்டலாசியின் புலக்காட்சி முறை, வேறு முறைகளுக்கு வழி வகுக்கக்கூடியது. அது பிள்ளைப் பருவத்துக்கு உரியது. அதனால் ஹெர்பார்ட் பெஸ்டலாசிக்கு மேல் ஒருபடி சென்றார். அனுபவம், மனித உரையாடல், கற்பித்தல் ஆகிய எல்லாம் உலகத்தின் நல்லறிவை நல்க வேண்டும். எனவே கணிதத்தையும் கிரேக்க இலத்தீன் மொழிகளையும் இலக்கியம் வரலாறு ஆகியவற்றையும் இன்றியமையாப் பாடங்களாகக் கருதினர்.

ஹெர்பார்ட் அவர் காலத்தில் நிலவிய உளநூலெல்லாம் ஒரு கானலைப் போன்று பொய்யானவை என்றார். ஜான்லாக் கல்விப் பணியில் குழந்தையை நடுப்பொருளாகக் கருதினர். ரூஸோ குழந்தையின் உரிமையை வழங்கினர். கருத்தாக வழங்கிய ரூஸோவின் உரிமையை வகுப்பறையிலும் ஆசிரியரிடத்திலும் பெஸ்டலாசி ஒப்புவித்தார். ஆனால் ஹெர்பார்ட் அதனை அறிவியல் முறையில் நிலையாக்கினர். பெற்றி உளவியல் அன்று நிலை பெற்றிருந்தது. மனப்பெற்றிகள் கொள்ளத் தகாதவை என்று ஹெர்பார்ட் கூறினர். பெற்றிகள் என்று கூறுபவை எல்லாம் தருக்க முறையில் உள வளர்ச்சியைக் கற்பனை செய்பவை. பெற்றி உளவியற் கருத்துப்படி குழந்தை பிறக்கும்போதே பல பெற்றிகளோடு பிறக்கின்றது என்பது தவறென்றார். உள்ளத்

1. Experimental method 2. Herbart

தில் யாது நிகழ்கிறதென்று ஒவ்வொரு பெற்றியைப் பற்றியும் பெற்றிக் கருத்தினர் கூறமுடியுமா என்று வினவினர். பல கூறுகளாகப் பிரிக்க முடியாத ஒரு முழு உள்ளத்தினைப் பல பிரிவுகளாகக் கட்டப் பெற்ற உள்ளமென்று கொள்வது தவறென்று கண்டித்தார். அறிதல், உணர்தல், இயற்றல் ஆகிய மூன்று பெரும் பெற்றிகள் சிறு சிறு பெற்றிகளாகவும் திறன்களாகவும் பிரிக்கப் பெறுதல் ஒக்குமா என்றார். பிறவியில் ஒரே ஆற்றல் உள்ளது. அது நரம்பு மண்டலத்தின் வழியாகச் சூழ்நிலையோடு உறவு கொள்ளுவது. எனவே ஆசிரியர் இயற்கையால் வரும் அனுபவத்தையும் சமூகத்தோடு உறவு கொள்ளுதலால் வரும் பொருத்தப்பாட்டினையும் ஒன்றை அறிவு வளர்த்தற்காகவும், மற்றொன்றைப் பரிவும் அன்பும் பெறுவதற்காகவும் பயன்படுத்த வேண்டும். அதனால் அனுபவங்களின் வழியாக உண்டாகும் கருத்துக்கள் உள்ளத்தில் வளர்கின்றன. ஆனல் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் ஆற்றல் எதுவும் வளருவதில்லை. மன வளர்ச்சி புறவயத்தின் செல்வாக்கினைப் பொறுத்தது. எனவே உள்ளம் எதையும் [1] தன்வயப்படுத்தல் தன்மை வாய்ந்தது. கல்வி, உள்ளம் எதைப் பெற வேண்டும் என்றும், எங்ஙனம் பெற வேண்டும் என்றும், எவ்வகையில் உருவாக வேண்டுமென்றும் கண்காணிப்பது. எனவே ஹெர்பார்ட் உள்ளத்தின் தன்வயப்படுத்தல் ஆற்றலாகிய அறிவோடு புணர்த்தல் என்ற கருத்தினைத் தந்துதவினர். உள்ளத்தில் [2] உட்புலக் காட்சித் திரள் வளருகின்றது. ஹெர்பார்ட், உள்ளத்தின் உள்ளாற்றல் அல்லது இயற்கை ஆற்றலை மறுத்து ஆசிரியர் செய்யக்கூடியதெல்லாம் தன்வயப் படுத்தல் முறையில் உள்ளத்தை வளர்ப்பதே ஆகும் என்றார். ஆசிரியருக்குப் பிள்ளையின் பட்டறிவும் கவர்ச்சியும் தெரிய வேண்டும் என்றார். பிள்ளைகளுக்குக் கற்பிப்பது என்பது பிள்ளை அறியும் திறமையை அறிந்து கற்பிப்பது. எனவே நுண்ணறிவோடு அல்லது பழைய அனுபவத்தோடு புதிய அனுபவத்தை ஒட்டுவதே ஆசிரியப் பணி. உள்ளத்தின்உட்புலக் காட்சியின்பாற்பட்ட அடிப்படைக் கருத்துக்கள் செயற்படுவன. செயல்கள் ஒழுக்கத்தை வளர்ப்பன. எனவே, கல்வியின் குறிக்கோள் அறப்பழக்கம். ஒவ்வொருவன் உள்ளத்திலும் நற்குணம் வளர வேண்டும். அஃது ஒவ்வொர் அனுபவத்தையும் ஒட்டியது.

[3] ஹெர்பார்ஷியன் முறை :

நற்குணத்தை அளிப்பது கற்பித்தலின் குறிக்கோளாகும். மற்றொன்று [4] பலவழி ஆர்வங்கள். ஆசிரியம் ஆர்வத்தைத் தூண்டுவது. வெறும் தகவல்களைச் சேர்த்துக்கொள்வது அன்று. இருந்தும் இல்லா

1. Assimilation 2. Apperception 3. Herbartian
4. Many-sided interests

மலும் இயங்கும் ஒன்று. ஆனல் மாணுக்கன், கற்பித்த கருத்துப் பொருளைப் பற்றுக்கோடாகக் கொண்டு மேலும் மேலும் அறிய ஆவல் கொள்ளும் கூற்றுக்குப் பலவழி ஆர்வம் என்று பகரலாம். எனவே ஆர்வம் என்பது ஓர் உள்ளநிலை அல்லது உளச் செயற்பாடு. அஃது ஒரு கருத்தினைப் பட்டறிவோடு புணர்த்தக்கூடியது. ஒவ்வொரு மனிதனுக்கும் செயற்பாடுகளில் ஆர்வமுண்டு. ஒவ்வொருவனுக்கும் ஒன்றில் திறன் ஏற்படுகிறது. இஃது இறுதிக் கட்டம். ஆனல் தொடக்க நிலையில் பல ஆர்வங்கள் நிகழ்கின்றன. செயற்பாடுகள் பலவாகின்றன. இவற்றைக் கண்காணிப்பது கல்விப்பணியாகும்.

பாடங்கள் கருத்துக்களை உதவுகின்றன. கருத்துக்கள் அன்றோ செயற்படுகின்றன! கருத்துக்களெல்லாம் [1] "உறுப்பின ஒற்றுமை" உள்ளவை. ஆர்வம் பாடத்தில் கவனத்தை ஈர்ப்பதற்கு மட்டும் அன்று. அது புதுக் கருத்துக்கள் யாவற்றையும் பழையவற்ருேடு ஒட்டி உள்ளத்தை அகலப்படுத்துவது. ஆசிரியர் மாணவனின் தனித்தன்மையைப் பல ஆர்வங்களில் திருப்பி அவற்றின் வழியாக ஒழுக்கத்தைப் பெற முயல வேண்டும். தனித்தன்மைகள் பல. ஆனல் பலவழி ஆர்வங்கள் என்ருலும் அவை [2] ஒருமைப்பாடு உடையவை. ஆசிரியர் தனித்தன்மையோடு பல்வழித் தன்மையையும் இயைபு படுத்த வேண்டும். இதனல் தனி மகனின் ஒழுக்கம் வளர்ச்சியுறும்.

தன்வயப்படுத்தலை [3] ஒழுங்கென்றும், [4] முறையென்றும், [5] அறிவோடு புணர்தலைத் [6] தெளிவென்றும், [7] தொடர்புறுத்தலென்றும் ஹெர்பார்ட் விளக்கியுள்ளார். தெளிவு என்றதனல் கருத்துக்கள் பிள்ளையினுடைய உணர்வில் தெளிவாக வழங்கப் பெற வேண்டும் என்பது உள்ளிடை. தெளிவு அல்லாக்கால் [8] தன்வயப்படுத்தல் இயலாது. புதிய கருத்தினைப் பழையவற்ருேடு ஒட்டுதல் தொடர்புறுத்தலாகும். உட்புலக்காட்சி தொடர்புறுத்தலைச் சார்ந்தது. ஒழுங்காகத் தொடர்புறுத்தப் பெற்றது ஒழுங்கெனப்படும். ஒரு சமயம் சில கருத்துக்கள் பட்டறிவோடு படாது தனித்து நிற்கும்போது உள்ளம் இயக்கம் பெறுகிறது. அப்போது உள்ளத்தில் கருத்துக்கள் ஒருமைப்பாடு எய்துகின்றன. இவற்றை ஹெர்பார்ட்.[9] முறைமை தழுவிய கற்பித்தல் படிகள் என வகுத்துள்ளார். அவை [10] முன்னேற்பாடு (இதனை ஊக்குவித்தல் அல்லது [11] ஊக்குநிலை என்கிருேம்) [12] எடுத்துக் கூறல், [13] ஒப்பு நோக்கல் அல்லது [14] பொதுமை பிரித்தல், [15] பொதுவிதி காண்டல், [16] செயற்படுத்தல் என்று பிரிக்கப் பெறுகின்றன. இவை கற்பித்தலுக்கு உற்ற துணை. ஆசிரியர் இவற்றை ஏற்றுக்கொள்ளலாம்.

---

1. Organic unity 2. Unity 3. System 4. Method 5. Absorption 6. Clarity 7. Association 8. Assimilation 9. Formal 10. Preparation 11. Motivation 12. Presentation 13. Comparison 14. Abstraction 15. Generalisation 14. Application

[1] ரஸ்க் என்பார் [2] அறிவுப் பாடங்களைக் கற்பிக்க இவை வேண்டற்பாலவை என்கிறார். ஆனால் செயல் முறைப் பாடங்களாகிய கணிதம், ஓவியம் ஆகியவற்றிற்கு இவை பயனுறுதவை. ஏனென்றால் பிள்ளைகள் தனித்தனியே இவற்றின் செயல் முறையில் ஈடுபடுகிறார்கள். எதுவாயினும் இங்ஙனம் ஹெர்பார்ட் முறைப்படி கற்பித்தலை அக அமைப்பில் அல்லாது புற அமைப்பில் நிகழ்த்துவது ஒவ்வாதது.

இணைப்பு அல்லது தொடர்புறுத்தல் ஓர் ஆசிரியப் பணியென்று ஹெர்பார்ட் அறிவுறுத்தியுள்ளார். பள்ளியின் பல பாடங்கள் தனித் தனிக் காட்சியாக மாணுக்கருக்கு விளங்குகிறது. அவற்றை ஒன்றோடொன்று தொடர்புறுத்தி ஏற்ற பெற்றி அவற்றின் ஒற்றுமையைப் பட்டறிவில் காண வேண்டும். இத்தகைய தொடர்புகள் உள வளர்ச்சிக்கு ஏற்ப அமைய வேண்டும். ஹெர்பார்ட் பாடங்களை [3] ஒருமுகப்படுத்தல் என்னும் திட்டத்துக்கு உள்ளாக்கினர். அதாவது எல்லாப் பாடங்களையும் ஒரு மூலப் பாடத்தோடு இணைப்பது. எடுத்துக்காட்டாக இலக்கியத்தை வரலாற்றோடு இணைப்பது. ஒருமுகப்படுத்துவதற்குப் பதிலாக இணைத்தலை ஒருசிலர் மேற்கொண்டார்கள். கீழ் நிலைகளில் ஒருமுகப்படுத்தலும் மேல் நிலைகளில் இணைத்தலும் ஏற்புடையதாயின.

ஹெர்பார்ட்டுக்கு முன்னோர்கள் ஒரு சிலர் ஒழுக்கத்தையும் மற்றவர்கள் ஆர்வத்தையும் கல்வியின் நடுப்பொருளாகக் கூறிப் போந்தார்கள். ஆனால் ஹெர்பார்ட் பிள்ளை ஒழுக்கத்தையும் ஆர்வத்தையும் இணைத்தார். பட்டறிவு வயப்படுத்தல் முறையால் கருத்துக்களின் ஒருமைப்பாட்டினை உணர்த்தினர். ஆசிரியர் பிள்ளையின் ஆர்வங்களை அறிந்து இயக்கத் தன்மையை உணர்ந்து குறிக்கோளுக்கு வழி வகுக்க வேண்டும் என்றார். பாடங்களைக் கற்பித்தல் வேறு; ஒழுக்க வளர்ச்சி வேறு என்பதைக் கண்டித்தார். ஆனால் அவருடைய முறைமை தழுவிய படிகள் முற்றிய பிள்ளைகளுக்கு உரியவை. அவர்களை மனத்திற் கொண்டே பல்வகை ஆர்வங்களென்று வற்புறுத்தினர் போலும்! ஆனால் ஹெர்பார்ட்டின் பல கருத்துக்கள் இப்போது பழமையாகி விட்டன. எனினும் அவை வேறுபட்ட கருத்துக்களாகிக் கல்வி உலகில் பயனுறுகின்றன.

ஃப்ரோபெல்: [1782–1852]

பெஸ்டலாசியும் ஃப்ரோபெல்லும் கருத்துக்களில் உடன்பாடும் செயல்களில் தொடர்பும் கொண்டவர்கள். ஃப்ரோபெல் குழவிகளின் மீது பற்றுக்கொண்டவர். எனவே குழந்தைப் பள்ளிகளைப்பற்றி அவருடைய சிந்தனை சென்றது. ஃப்ரோபெல் குழந்தை ஆர்வம், அனுபவம், செயற்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கற்பித்தல் தொடங்க வேண்டுமென்றார். ஹெர்பார்ட் கற்பித்தல் பிள்ளைகளிடையே

1. Rusk 2. Knowledge 3. Concentration

ஒழுக்க வளர்ச்சிக் கென்றார். ஃப்ரோபெல் பிள்ளைகளை ஊக்கி அவர்களுடைய செயல்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்று வற்புறுத்தினார். குழந்தைகள் தாமாகவே இயங்குகின்றன; இயக்கத்தினால் கருத்துக்களைப் பெறுகின்றன என்று கருதினார். குழந்தைகளின் இயற்கையை ஆசிரியர் நன்றாக அறியவேண்டுமென்றார். பாடங்கள் எல்லாம் குழந்தைகளின் வாழ்க்கையை ஒட்டியவையாக வேண்டும். அப்போது குழந்தைகள் தாமாகவே செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள். குழந்தைப் பள்ளி ஒவ்வொரு குழந்தையும் முழு வளர்ச்சியை அகத்தும் புறத்தும் பெறுவதற்குப் பயிற்சி அளித்து உதவ வேண்டும். குழந்தை [1] தானாகவே இயங்கித் தனது ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். குழந்தைகள் ஒன்றோடொன்று ஒன்றி வாழ கடமைகளையும் உரிமைகளையும் அறியவும் வேண்டும். ஃப்ரோபெல்லின் பள்ளி ஒரு சிறிய குழந்தை உலகம். அதில் தனித்தனிக் குழந்தையின் உரிமை காக்கப்படுகிறது; பொறுப்புக்கள் பங்கீடு பெறுகின்றன. குழந்தைகள் ஒருவரோடொருவர் ஒற்றுமையாகப் பழகுகின்றனர் என்று [2] 'ஹியூஸ்' என்பார் கூறியுள்ளார்.

குழவிப் பருவம் ஃப்ரோபெல்லின் உள்ளத்தைக் கவர்ந்தது. ஃப்ரோபெல் ஓர் ஆசிரியர்; பல கருத்துக்களைச் செயற்படுத்திக் கல்வி முறையை மாற்ற அரும்பாடுபட்டவர். குழந்தைப் பருவத்தில் பிள்ளைகளை நன்றாக வளர்க்காவிட்டால் அவர்களை ஐந்து வயதுக்குப் பிறகு திருத்த முடியாதென்று முடிவு கொண்டார். எனவே தொடக்க நிலையில் பிள்ளைகளை அதாவது மூன்று வயது முதல் வளர்க்கும் பொறுப்பினைக் கண்காணிக்க வேண்டுமென்று கருதினார். அப்பருவத்தில் ஆசிரியர்களைக் காட்டிலும் தாயர்களே பொறுப்பாளிகள் என்று கண்டார். அத்தகைய குழவிப் பள்ளிகளைக் கிண்டர் கார்ட்டன் என்று வகுத்தார்.

இப்பருவத்தில் குழவிகள் தாமாகவே தட்டுத் தடையின்றி இயங்குகின்றன அல்லவா? இஃது அவர்களுடைய விளையாட்டுப் பருவம். விளையாட்டால் அவர்களுக்கு வளர்ச்சி உண்டாகிறது. அகத்தும், புறத்தும் முரண்பாடில்லை. உரிமை, மகிழ்ச்சி ஆகிய நன்மைகள் பல காணப் பெறுகின்றன. குழந்தை விளையாட்டுக்களை வாளா விட்டு விட்டால் அவை பயனற்று விடுகின்றன. அப்பருவத்தில் அவற்றைத் திருத்தி அமைத்தால் விளையாட்டு வழியில் கற்கும் ஆற்றல் பிறக்கும் என்று கருதினார். கிண்டர் கார்ட்டனைப் பற்றி அவரே கூறுவதாவது: அது குடும்ப வாழ்க்கை, நாட்டு வாழ்க்கை, மனித வாழ்க்கை ஆகிய மூன்றையும் வளர்க்கும் நிலையம். இயல்பூக்கங்களினால் உந்தப்பெறும் செயற்பாடுகளைத் திருத்துவது; ஆசிரியர் அவற்றை அறிய வேண்டும்; அறிந்து திருத்தினால் குழந்தைகள் உருப் பெறுவார்கள். குடும்பத்திலும், நாட்டிலும், மனித இனத்திலும் அவர்களுக்கு இடமேற்படும்

1. Self activity 2. Hughes

கிண்டர் கார்ட்டனில் குழந்தைகள் தாமாகவே அறிந்து கொள்ளு கின்றன; கற்றுக் கொள்ளுகின்றன. மனித இனமே உருப்பெறு கின்றது. பலவகைகளில் குழந்தை விளையாட்டு வழியாகவே வளர்ச்சி பெறுகிறது. அஃது ஒரு குழந்தைகளின் தோட்டம்; மகிழ்ச்சி தரும் இடம்; விளையாடுமிடம்; குழந்தைகளின் உடல் உள்ளம் ஆகியவை இயற்கையாகவே இயங்குமிடம்; பூங்காவில் பூக்கள் பூக்கின்றன. குழந்தைத் தோட்டத்தில் குழந்தைகள் வளருகின்றார்கள். குழந்தை கள் கூடுகிறதால் அஃது ஒரு பள்ளி அன்று. அது குழந்தைச் செடிகள் வளரும் தோட்டம்; அது குழந்தைகளின் இன்பச்சோலை.

ஃப்ரோபெல் குழந்தைகளுக்கான பல விளையாட்டுக்களை இயற்றி உதவினார். அவர்களுடைய விளையாட்டுக்களைப் பயன்படுத்தினார். கிண்டர் கார்ட்டனில் கற்பித்தல் ஒன்றும் கிடையாது. அங்குக் குழந்தை களின் உள்ளாற்றல் வெளியாகும் காட்சி மிக்கது. உடலும் உள்ளமும் ஒருங்கே ஒருமைப்பாட்டுடன் இயங்குகின்ற இயற்கைக் காட்சியன்றோ அது! ஆசிரியருடைய இடர்ப்பாடு அங்கு இல்லை. அவர்கள் விருப் புக்களை ஆசிரியர்கள் கண்டு அவற்றிற்கேற்ப விளையாட்டுக்களுக் குத் திருப்பம் தருகிறார்கள். குழந்தைகள் கை அசைதலை முதற்கண் அறிகின்றன. இரண்டாவது பாட்டு. அஃது அவர்களுடைய செவிக்கு இனியது. பாட்டைக் கேட்டவுடன் அவர்கள் பாடுவார்கள். மூன்றாவது நிலையிலன்றோ அவர்கள் பேசக் கற்றுக்கொள்ளுகிறார்கள்! இக்கருத்துக் களை ஒட்டிக் குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்கள், அசைந்து நடிக்கும் களியாட்டங்கள், நடித்துப் பாடும் பாட்டுக்கள், நடித்துச் சொல்லும் சிறு கதைகள், விருப்பு விளையாட்டுக்கள் இவைதான் அவர் களுடைய பாட ஏற்பாடு. ஃப்ரோபெல் பள்ளியின் விளையாட்டுப் பொருள்களைக் கண்டு வியப்புறலாம். பிள்ளைகள் கூடிக்கூடி உணர் வோடு நடிக்கும் திறன் மெச்சத் தக்கது. பாட்டுக்களைக் கூடிப்பாடி மகிழ்வார்கள். கை வேலைகள், காகிதம் கத்தரித்தல், மடித்தல், களி மண்ணால் உருவம் சமைத்தல், பாய் பின்னுதல், பல வண்ணங்களைக் கொண்டு கோடும் கோலங்களும் வரைதல் ஆகியவை அவர்களது நாள் நிகழ்ச்சிகள். சிறு குழந்தைகளுக்குக் கதை என்றால் மகிழ்ச்சி. கதை களைப் பாக்களாகப் பாடி மகிழ்வார்கள். பிறகு மழலைச் சொல்லால் கேட்டதைச் சொல்லி இன்புறுவார்கள். கூடிப் பாடுதல், கூடி ஆடுதல், கூடி மகிழ்தல், எச்செயலிலும் இன்பங் காணுதல், இவையன்றோ பிள்ளை களின் இயல்புகள்! இவற்றைக் கல்விப் பயன் தரும்படி ஃப்ரோபெல் வகுத்தமைத்தார். குழந்தைகளின் இயற்கையிலேயே குழந்தைக் கல்வியைக் கண்டார். உள்ளாற்றலின் வழியாக வெளியீடு பெற்ற செயல்களில் வளர்ச்சியை அறிந்தார். குழவிப் பருவத்தில் கல்வி விளையாட்டாக அமையவேண்டும் என்ற இயற்கை வழியை இயற்றித் தந்தார். குழவி மயம் என்றால் குழவி அதன் உலகத்தில் அது தானே இயங்கும் காட்சி மயம். குழந்தை அதற்குண்டான சமூகத்தில் அது

தன்னைப் பொருத்திக் கொள்ளுவது. எனவே கல்வி ஏற்பாடு குழந்தைகளின் கவர்ச்சிகளையும், விளையாட்டுக்களையும் அடிப்படையாகக் கொண்டது.

எல்லாம் விளையாட்டென்ருல் கற்றல்தான் என்னை? விளையாட்டு முறையில் தொடங்கினுல் கல்வி மதிப்புப் பெருது என்று இதைக் குற்றமாக ஒரு சிலர் கருதியதுண்டு. ஆயினும் ஃப்ரோபெல்லின் "விளையாட்டு முறை," குழவிக் கல்வியின் மாண்பு காட்டுவது. இளமையிலேயே கைத்திறனை வளர்க்கக்கூடிய விளையாட்டுப் போக்கில் கைவேலை, இயற்கைப் பொருள்களை இயற்கையோடு நேராக அறிவதால் உறும் இயற்கைப் பாட அறிவு, குழந்தைகள் தாமாகவே இயங்குவதால் அவர்களுடைய உள்ளாற்றலுக்கு உண்டாகும் பயிற்சி, உலகத்தில் குழந்தை பழகுவதால் குழந்தைச் சமூக உணர்ச்சியின் வளர்ச்சி ஆகிய இவை எல்லாம் ஃப்ரோபெல் கல்வி உலகத்துக்குத் தந்த கருத்துக்கள். இவை யாவும் இன்றும் போற்றப் பெறுகின்றன. இன்று உலக முழுவதும் ஃப்ரோபெல்லின் கிண்டர் கார்ட்டன் பள்ளிகளைக் காணலாம். இவற்றிற்குத் தந்தை ஃப்ரோபெல் என்பதைக் கல்வி உலகம் மறக்க முடியாது.

மான்டிசோரி: [1870–1952]

இத்தாலிய மருத்துவ அம்மையாராய மான்டிசோரியார் உள மருத்துவத்தில் தேர்ச்சி பெற்றவர். மன ஆற்றல் குறைவுற்ற குழந்தைகளுக்கென ஒரு பள்ளி திறக்கப்பெற்றபோது டாக்டர் மான்டிசோரி அம்மையார் அதன் இயக்குநர் ஆனுர். நுண்ணறிவு குறைவுற்ற குழந்தைகளைத் திருத்துவதில் மாபெரும் வெற்றி கண்டார். அதனுல் பொது நிலையான குழந்தைகளுக்குக் கற்பிக்கும் முறைகளிலுங் கூடக் குறைபாடு இருக்குமெனக் கண்டார். ஏனென்ருல் இந்த அம்மையார் பள்ளியில் படித்த மாணவர்களும் பொது நிலையான மாணவர்களும் ஒரு வேறுபாடு மின்றித் தேர்வு பெற்ருர்கள். "உலகமே, என்னுடைய முட்டாள் குழந்தைகள் எங்ஙனம் திருந்தப் போகின்றன என்று எதிர் நோக்கி யிருந்தது. ஆனுல் பொது நிலையான குழந்தைகள் ஏன் அறிவுக் குறைபாடோடு வளரவேண்டும் என்பதே எனக்கு வியப்பைத் தருகின்றது" என்று கூறினுர். முட்டாள் குழந்தைகளுக்குப் பயன் பெறும் நிலைகள் பொது நிலையான குழந்தைகளுக்கும் பயன்பட்டால் பின்னவர் நல்ல தேர்ச்சி அடைவார்களென்று உள்ளினுர். சில ஆண்டுகள் பள்ளிகளில் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் முறைகளை உளநூல் அடிப்படையில் சோதனை செய்தார். இறுதியாகக் குழந்தைகள் நிலையில் அவர்கள் தாமாகவே கற்றுக்கொள்ளுவது சிறந்த முறையாகக் கருதினுர். தான் கண்ட உண்மைகளைக் குழந்தைகளிடையே கண்டு தேர்வதற்காக மூன்று வயது முதல் ஏழு வயது வரையில் உள்ள பாட்டாளிகளின் குழந்தைகளைச் சேர்த்து ஒரு பள்ளியை நடத்தினுர்.

அஃது இலவசப்பள்ளி. குழந்தைகள் மட்டும் நாள்தோறும் பள்ளிக்கு வரவேண்டுமென்ற கட்டளை மட்டும் இருந்தது. அம்மையார் தமது முறையில் அக்குழந்தைகளுக்குக் கற்பித்தார். தாம் நினைத்ததுபோல் வெற்றி கண்டார். அக்குழந்தைகளுக்குத் தாமாகவே கற்கும் ஆற்றலை அளித்த பெருமை உலகெங்கும் பரவியது. மான்டிசோரி அம்மையாருடைய புகழ் ஐரோப்பா முழுவதுமன்றி அமெரிக்க நாட்டிலும் பரவியது. அம்மையாருக்கு எங்கும் வரவேற்பு, மாநாடுகளின் ஆரவாரம் ஆகியவை பெருகின. கல்வியாளர்கள் அவர் முறைகளை அறிய ஆர்வம் கொண்டனர். முதலாவது உலகப்போர் முடிவில் மான்டிசோரி முறைகளைக் கொண்டு குழந்தைப் பள்ளிகள் எங்கும் அமைக்கப் பெற்றன.

மான்டிசோரிப் பள்ளிக்குக் [1] குழந்தை இல்லம் என்று பெயர் ஏற்பட்டது. குழந்தை நிலையில் குழந்தைகளுக்கு ஏற்ப, அவர்கள் இயற்கையாக வளர்ச்சி பெறக் கட்டற்ற உரிமையோடு ஓடி விளையாட ஏற்படுத்தப் பெற்ற பள்ளிகளாகையால் அவை உண்மையாகவே குழந்தை இல்லங்களே. உருவமைந்த சிறியதும் பெரியதுமான வண்ணம் தீட்டிய கட்டைத் துண்டுகள், மணிகள், கணக்கு அட்டைகள் இன்னும் பலவித விளையாட்டுக் கருவிகள், சிறிய கரும்பலகைகள் ஆகிய பலவற்றோடு குழந்தைகள் உரிமையோடு விளையாடும் பள்ளிக் காட்சி பார்ப்பவர்க்கு வியப்பையும் குழந்தைகளுக்குக் களிப்பையும் தரும். குழந்தை விரும்புவதைத்தான் எடுத்து விளையாடும். அழுது கொண்டே இருக்கும் பிள்ளையைப் பள்ளியில் சேர்ப்பதற்குப் பெற்றோர் அழைத்து வந்தவுடன் அழும் குழந்தை பள்ளிக் குழந்தைகள் களிப்போடு இருக்கும் காட்சியைக் கண்டவுடன் தாய் மடியிலிருந்து தானாக இறங்கி மற்ற குழந்தைகளோடு சேர்ந்து அமர்ந்து விடும். தாய் அழைத்தால் மீண்டும் போகாது. குழந்தையோடு குழந்தையாக ஒன்றி விடும். குழந்தைகள் விருப்போடு விளையாடும் கருவிகள், அவர்களுக்கென இருக்கும் நாற்காலிகள் ஆகியவை அங்கு உண்டு. பசியெடுத்தால் இயக்குநர் உண்பதற்கு உணவு அளிப்பார். குழ்ந்தை அயர்ந்து விட்டால் படுத்து உறங்கலாம். பள்ளி விடுதியில் தங்குவது முண்டு. அல்லது இல்லங்களுக்குச் சென்று வருவது முண்டு. நல்ல மான்டிசோரிப் பள்ளியைப் பயிற்சி பெறும் ஆசிரியர் சென்று பார்க்க வேண்டும். அவை மான்டிசோரி முறையில் ஒரு சிறிதும் வழுவாத பள்ளிகளாக இருத்தல் நலம். பெயரளவில் மான்டிசோரிப் பள்ளிகள் பல உள.

உளநூல் அடிப்படையில் கல்வி அமைய வேண்டிய முறையினை மிக அழகாக அறிவியல் முறையில் வகுத்து உலகுக்கு உதவிய பெருமை மான்டிசோரி அம்மையாருக்கே உரியது. கல்வியாளர்கள் மற்றவர்களைப்போல, அம்மையார் வெகுவாகக் கல்விக் குறிக்கோள்களை முன்

1. Casei de Bambini

மொழியவில்லை. நடைமுறையிலும் செயல் முறையிலும் குழந்தைகள் வளர்வதற்குற்ற சூழ்நிலைகளை உண்டாக்கியும் அவர்கள் உரிமையைப் பறிக்காது உற்றுழி உதவியும் காப்பாளர்களான ஆசிரியைகளைக் கொண்டு இல்லத்தை வகுத்தும் குழந்தை இல்லமாகவே ஏற்படுத்திய பெருமை அம்மையாரைத் தான் சாரும்.

[1] இயல்பான வளர்ச்சிக்கு உதவி புரிவதே கல்விக்கலையாம். குழந்தைகளினுடைய உள் ஆற்றலை வெளிப்படுத்த உதவுவதே அது வாகும். உற்ற சூழ்நிலையைக் குழந்தை இல்லம் ஏற்படுத்துகின்றது. ஆசிரியப் பணி யெல்லாம் குழந்தையின் தனித் தன்மையை வெளி யாக்க உதவுவதேயாகும். குழந்தைகள் தாமாகவே எச்செயலையும் தொடங்க வேண்டும். ஆசிரியக் கட்டளை எதுவும் இடக்கூடாது. எந்த அனுபவத்தையும் குழந்தை தானே பெறுகிறது. குழந்தைக்குக் கட்டுப்பாடு ஒன்றும் கிடையாது. குழந்தை உள்ளாற்றலை வெளியிட வேண்டுமானல் அதன் குற்றத்தை அதுவே திருத்திக் கொள்ளவேண்டு மானல் அதன் உரிமையைத் தடைப்படுத்தக் கூடாது. உரிமை என்ருல் குழந்தை தனக்கு ஊறு தேடிக்கொள்ளும் வரையில் உரிமை தரக் கூடாது. குழந்தை உரிமையோடு பல செயல்களைச் செய்யும்போது அதைத் தூரத்திலிருந்து குழந்தை அறியாமல் பார்க்கலாம். மான்டி சோரி வகுத்த உண்மையில் ஒரு பெருமை உண்டு. குழந்தை தன் தேவைப்பாடுகளுக் கெல்லாம் பிறரை நாடியிருந்தால் அதற்கு அதன் உரிமை குறைந்து வரும். எனவே கற்றலில் ஓர் உரிமை; தான் பலபடி யாக இயங்குவதிலும் உரிமை; உண்ணுதல் உடுத்தலிலும் உரிமை. இவ் வுரிமையில் குழந்தை தனது உள்ளாற்றல்களை வெளிப்படுத்துகின்றது. இங்கு வகுப்பறைக் கோலத்தை ஆசிரியர் புனைந்து கொள்ள வேண்டிய தில்லை. தனிக் குழந்தைக்குத் தனிப்பட எந்தத் திருத்தம் வேண்டுமோ அதைத்தான் தனியாகத் தரவேண்டும். தனித் தனிக் குழந்தையைத் தனியாகக் கவனிப்பதே ஆசிரியரின் பெருமை. ஒவ்வொரு குழந்தை யைப் பற்றியும் ஆசிரியர் தனித் தனியாகக் குறிப்புப் புத்தகம் போட்டு அதனுடைய வளர்ச்சியை விளக்கமாகக் குறித்துக்கொள்ளுவது அவர் கடமை.

மான்டிசோரி அம்மையார் புலனெறிக் கல்வியில் மிகுந்த நம்பிக்கை கொண்டார். ஐம்புலன்களுள் சிறப்பானது [2] தொடுபுலன் என்று கண்டார். குழந்தைகள் எதையும் தொட்டு அறிய ஆவல் கொள்ளு மல்லவா ? அதனுல் தொடுதல் புலனைச் செம்மைப் படுத்தப் பலவகைப் பழக்கங்கள் உண்டு. குழந்தை வெந்நீரையும், தண்ணீரையும் தொட்டு வெந்நீர், தண்ணீர் என்ற சொற்களை அறிவதோடு பொருள் வேறு பாட்டினையும் அறிந்து கொள்ளும். மற்ற கருவிகள் பலவகை வடிவங் களாலான மரத்தாலும், இரும்புத் தகடுகளினுலும் ஆனவை; வண்ணம்

1. Normal growth 2. Sense of touch

தீட்டப் பெற்றவை. வடிவங்களின் வேறுபாடு, வண்ணங்களின் அறிவு படிப்படியாகப் பொருளுக்கும் சொல்லுக்கும் [1] தொடர்புறுத்தல்; அடுத்த கட்டத்தில் [2] மீட்டறிதல்; இறுதிக் கட்டத்தில் [3] மீட்டுக் கொணர்தல்; இவை கட்புலனை உறுதிப்படுத்துபவை. மூன்றுவது செவிப் புலனையும் பயிற்றுவித்தல். புலநெறிப் பயிற்சி இக்குழவிப் பருவத்தில் பெரும் பயன் அளிக்க வல்லது. ஒரு முறை இந்நூலாசிரியர் ஒரு மான்டிசோரிப் பள்ளியில் கண்ட காட்சி மிக வியக்கத் தக்கது. ஒரு காட்சியை மட்டும் கூறுதல் போதும். ஓர் ஆசிரியை குழந்தைகள் ஒரு சிலரின் கண்களைக் கட்டி மறைத்து விட்டாள். குழந்தைகள் வரிசையாக நின்றன. மற்ருெரு குழந்தை ஒரு மரத்தட்டில் பல வண்ணத் துணித் துண்டுகளை ஏந்திக் கண் கட்டப்பெற்ற ஒவ்வொரு குழந்தையிடமும் சென்றுள். கண் கட்டப்பெற்ற குழந்தை ஒரு துணித்துண்டை எடுத்து அதைக் கையால் தொட்டு அதன் வண்ணத்தைக் கூறியது. இங்ஙனம் ஒவ்வொரு குழந்தையும் தான் எடுத்த துணித்துண்டின் வண்ணத்தைப் பிழையின்றிக் கூறிற்று. கண்ணைக் கட்டியிருந்தும் வண்ணத்தைக் கைப் புலனல் அறிந்து சொல்லக்கூடிய பயிற்சி வியக்கத்தகு பயிற்சியாகும். புலநெறிப் பயிற்சியோடு ஒட்டி வாசித்தல், கணக்கு, எழுதுதல் ஆகியவையும் பொருள்வழி கற்பிக்கப் பெறுகின்றன. மான்டிசோரிப் பள்ளியில் குழந்தைகள் பெறும் பயிற்சி தன் கையே தனக்குதவி என்ற அடிப்படையில் அமைந்தது. தமது தேவைகளைக் குழந்தைகள் தாமாகவே நிறைவு செய்து கொள்ளுகின்ருர்கள். தமது ஒழுங்குகளைத் தாமே ஒழுங்குபடுத்திக் கொள்ளுகிருர்கள். துப்புரவு உணர்ச்சி அவர்களுக்குப் பழக்கத்தில் உண்டாகிறது.

மான்டிசோரிப் பள்ளியில் பணியாற்றுபவர்களுக்கு ஆசிரியர் என்று பெயர் இல்லை. அவர்கள் இயக்குநர்கள் ஆவர். அவர்கள் உளநூலில் தேர்ச்சி பெற்றவர்களாதல் வேண்டும். குழந்தைகளைக் கவனித்து ஒவ்வொரு குழந்தைக்கும் தனிக் குறிப்பு எழுதக்கூடிய திறமை வேண்டும். பிள்ளைகள் விருப்பை அறிந்து உற்ற சூழ்நிலையை அமைத்துத் தரவேண்டும். பொறுமை, இரக்கம், அன்பு, அக்கறை, பொறுப்பு ஆகியவை வேண்டற்பாலன. மான்டிசோரிப் பள்ளியில் வகுப்புக்கள் என்ற வரையறை கிடையாது. கிண்டர் கார்ட்டன் முறையில் வகுப்புக்கள் உண்டு; பிள்ளைகள் வகுப்புக்களாகக் கூடுவார்கள். மான்டிசோரி முறையில் ஒவ்வொரு குழந்தையும் ஒரு வகுப்பு. புலநெறிப் பயிற்சி இரண்டிற்கும் உடன்பாடு. ஆனல் மான்டிசோரி முறையில் அது நேர்முகமாக அளிக்கப் பெறுகிறது. அதன் உதவியால் அறிவு வளருகிறது. ஒவ்வொன்றுக்கும் ஆசிரியக் கருவிகள் உண்டு. மான்டிசோரி முறையில் பிள்ளைகள் எதை வேண்டுமென்ருலும் எடுத்துக் கற்றுக் கொள்ளலாம். ஆனல் கிண்டர் கார்ட்டனில் ஆசிரியை பொறுக்

1. Association 2. Recognition 3. Recall

கிக் கொடுக்கும் கருவியை மட்டும் தான் பயன்படுத்த வேண்டும். மான்டிசோரி ஆசிரியை பின் நின்று குழந்தைகளைக் கண்ணுறல் வேண்டும். கிண்டர் கார்ட்டனில் குழந்தையோடு குழந்தையாக ஆசிரியை பணி புரிய வேண்டும்.

மான்டிசோரி அம்மையார் உளநூல் முறையை அடிப்படையாகக் கொண்டு வகுத்த முறை அறிவியல் முறையாகும். பிள்ளையின் தேவைப் பாட்டினை அறிவதே உளநூலில் ஆசிரியத்தின் சிறந்த கட்டம். தனித் தனிக் குழந்தைகளுள் வேறுபாட்டை அறியவேண்டிய கடனை அவர் வற்புறுத்தினர். இங்ஙனம் தனித்தனிக் குழந்தையை அறிய வேண்டிய தல்லவோ ஆசிரியர் கடன்! நமது நாட்டில் நல்ல மான்டிசோரிப் பள்ளிகள் தேவை. மான்டிசோரிப் பயிற்சி ஆசிரியர்களுக்கு அளிக்கப் படுகிறது. ஆனல் பயிற்சியோடு மான்டிசோரி ஆசிரியர்கள் மான்டி சோரி அம்மையார் கொண்டிருந்த உள்ளத்தைப் பெறுதல் வேண்டும். மான்டிசோரி உள்ளம் என்பது ஒரு தனிப்பட்ட உள்ளம். அஃது எல்லா நிலைகளிலும் உள்ள ஆசிரியர்களுக்கு வேண்டற்பாலது.

ஜான் டூயி [1859—1952]:

ஜான் டூயி அமெரிக்காவின் சிறந்த பேரறிஞர்; கல்விக் கலைஞர்; சிந்தனையாளர்; மெய்யறிவாளர்; பெரும் பேராசிரியர்; கீழை நாடுகள் முழுவதும் அழைப்புக் கிணங்கிச் சென்று கல்வி மாநாடுகள் கூட்டியவர். கல்விக் கலையைப் பற்றியும், ஆசிரியத்தைப் பற்றியும், மெய்யறிவைப் பற்றியும் பல நூல்கள் இயற்றியவர். முற்போக்குக் கல்வி முறையில் சிறந்த அறிவாளி. அவருடைய [1] பயனளவைக் கொள்கை கல்வி உலகுக்கே புதியது. [2] கருத்துக் கொள்கை, [3] புறவுண்மைக் கொள்கை, [4] இயற்கைக் கொள்கை ஆகிய மெய்யறிவுகளெல்லாம் அதனதன் காலத் துக்குள் உற்றவையும் உரியவையுமாயின. இருபதாவது நூற்றாண்டில் சமூக இயக்கங்கள் சீர்திருத்தங்கள் பலவாயின. அவற்றிற் கேற்பக் கல்விக் கருத்தும் மாறுபாடுற்றது. அது முதற்கண் [5] பயன் வழி உண்மைக் கொள்கையாகத் தொடங்கியது. பின்னர் [6] கருவிக் கொள்கையாயிற்று. இறுதியில் [7] செய்காட்சிக் கொள்கையுமாயிற்று. இவை எல்லாம் முற்போக்குக் கல்விக்கு ஒரு புதிய தத்துவம் உண்டாக் கித் தந்தன. ஜான் டூயி [8] 'குடியாட்சியும் கல்வியும்' என்ற ஒரு நூலை இயற்றினர். இப்புதிய கல்வித் தத்துவத்தை உருவாக்கித் தந்தார். உள்ள வளர்ச்சி இயற்கையானது. மனிதனுடைய பல செயல்கள் அவனுடைய பல சூழ்நிலைகளைக் கருதி நிகழ்கின்றன. இவை எல்லாம் நாள்தோறும் அவனுடைய உள்ள வளர்ச்சிக்குக் கருவிகளாகின்றன.

---

1. Pragmatism 2. Idealism 3. Realism 4. Naturalism 5. Realistic pragmatism 6. Instrumentalism 7. Experimentalism 8. Democracy and Education

உள்ள வளர்ச்சி அவனுடைய பல சிக்கல்களை விடுவிக்க உதவுகிறது. எனவே மனிதனுக்கு உள்ளம் ஒரு கருவிப் பொருளாகிறது. உள்ளம் வேறு அறிவு வேறு அன்று. நாம் வெளியிடும் கருத்துக்களெல்லாம் உள்ளத்தின் செயற்பாடுகளே. நாம் நமது சூழ்நிலையோடு பொருத்திக் கொள்ளும்போது நமக்கு ஊறு விளையாதபடி பொருத்திக் கொள்ளுகிறோம். அப்போது உள்ளம் பல கருத்துக்களைத் தந்து கருவியாக உதவுகிறது. இதுவே டூயி கொண்ட கருவிக் கொள்கை.

அறிவு, செயற்பாடு ஆகிய இரண்டனுள் செயற்பாட்டின் வழியாகவே அறிவு பெருகுகிறது என்று டூயி உய்த்து உணருகிறார். எனவே நிரல் நிறையாகச் செயற்பாடு, இரண்டாவது—அனுபவம், மூன்றாவதாக அனுபவத்தின் வழியே அறிவுப் பெருக்கம். இம் மூன்றையும் தனித் தனியாகப் பிரிப்பது தவறு. எப்போதும் அறிவு எச்செயலையாயினும் சார்ந்தது. அதனால் அறிவைச் செயலிலிருந்து பிரிக்க இயலாது. ஒரு சில செயற்பாடுகள் இயல்பூக்கங்களாலும் கவர்ச்சிகளாலும் நடைபெறுகின்றன. இவை பெரும்பாலும் குடிவழி வந்தவை. நடைமுறையில் எழும் சூழ்நிலைகளில் பல தூண்டல்கள் நிகழுகின்றன. அவற்றிற்கெல்லாம் பொருத்தப்பாடு தேடும்போது நுண்ணறிவு வளர்கின்றது. இத்தகைய அறிவு சமூக நிலைக்களனில் பிறப்பதால் அது சமூக வளர்ச்சிக்கு வழி வகுக்கக் கூடிய சமூகக் கருவியாக விளங்குகிறது.

அனுபவந்தான் உண்மைப் பொருள். இயற்கைச் சூழ்நிலையிலும் சமூக உறவு நிலையிலும் பல அனுபவங்கள் பெறுகின்றோம். இவ்வனுபவங்களைத் திருத்தி அமைத்தலே கல்விக் கடன். மாறுபடும் சூழ்நிலைகளுக்கேற்ப அனுபவங்களும் மாறிக்கொண்டே இருக்கின்றன. மாறுபடும் சூழ்நிலைகளுக்கு ஒப்பத் துலங்கும்போது ஒரோ வழி புதிய அனுபவத்தோடு பிறருடைய பல அனுபவங்களையும் திரட்டிப் பயன்படுத்திக் கொண்டால் அவை எல்லாம் கருவிப் பொருளாகின்றன. நாம் பள்ளியில் கற்கும் எல்லாப் பாடங்களும் பழைய அனுபவங்களின் திரளாகிப் புதிய வாழ்க்கைச் சிக்கல்களை விடுவிப்பதற்குப் பயன்படுகின்றன. இதனால் டூயி கருவிக் கொள்கையினரானார். நாம் கல்வி கற்பதால் சிந்திக்கும் உண்மையைப் பெறுகிறோம். சிந்தித்தல் என்பதை ஒரு கலையாக நாம் கற்றுக்கொள்ள வேண்டுவதில்லை. ஆனால் சிந்தித்தல் ஒரு கருவிப் பொருளாக வாழ்க்கையில் எழும் சிக்கல்கட்குப் பயன் தருகின்றது.

[1] பயன் மதிப்புக்கள் (பெருஞ் சுட்டுக்கள்) பல. ஒருவருடைய பயன் மதிப்புக்கள் மற்றவருக்கு பயனற்றவையாகும். அதனால் ஒவ்வொருவரும் தாம் தேர்ந்த வழி, பயன் மதிப்புக்களை உண்டாக்கிக் கொள்ளவேண்டும். இதனைத் தன்னந் தனியாக உண்டாக்கிக் கொள்வது பயனற்றது. இவற்றைச் சமூகத்தோடு உறவு கொள்ளும்போது

1. Values

உண்டாக்க வேண்டும். இங்ஙனம் டூயி சோதனைக் கொள்கையினரு மானார். டூயி வகுத்த பயனளவுக் கொள்கையின்படி ஒவ்வொரு கருத்தையும் சோதித்து உண்மை அறியவேண்டும். அதனால் அக்கருத்தினை உண்மையாகவே கொண்டு தேரும்போது அஃது உண்மையினின்றும் வேறுபடுகிறதா என்று அறியவேண்டும். அதனால் ஆக்கித் தரப்பட்ட அறிவினைத் தேர்தலின்றி ஏற்றுக் கொள்ளலாகாது. புலன் வழியால் அறிவு உண்டாகிறது என்பது உடன்பாடன்று. இங்ஙனம் டூயி கொள்கை கருத்துக் கொள்கைக்கு மாறுபட்டது. கருத்துக் கொள்கையினர் உள்ளாற்றலுக்கு ஏற்றம் கொடுத்தார்கள். உள்ளம் அனைத்தாற்றல் வாய்ந்ததென்று கருதினார்கள். புறவுண்மைக் கொள்கையினர் உள்ளமும் பொருளும் ஒன்றென்று கருதினார்கள். உள்ளத்தான் வருவதே செயற்பாடுகளென்று கருதினார்கள். இவை இரண்டையும் பயனளவுக் கொள்கையினர் ஒதுக்கிவிட்டனர். எத்தகைய அறிவும் அனுபவத்தின் பயனே என்று முடிவு கட்டிவிட்டார்கள். அறிவு ஆராய்வதொன்றன்று. அறிவே ஆராய்ச்சியால் உண்டாவது. அறிவு ஒரு கருவியாகும். அது முடிந்த முடிவன்று. அறிவுக்கும் செயற்பாட்டுக்கும் அடிக்கடி [1]இடைவினை நடைபெறுவதே பயன் மதிப்பளிக்கக் கூடியது. இங்ஙனம் பயனளவுக் கொள்கை வன்மைபெற்றது.

முற்போக்குக் கல்வி

ஒவ்வொரு மனிதனும் தன்னைச் சுற்றிலுமுள்ள சமூகச் சூழ்நிலைக்கு ஏற்பத் தன்னைப் பொருத்திக் கொள்ளுவது தொடர்ந்த ஒரு செயல். அஃது ஒவ்வொரு முறையும் வளர்ச்சிக்குத் துணைபுரிவது. அன்றைய பொருத்தப்பாடு ஒரு குறிக்கோளை ஒட்டியது. பொருத்தப்பாட்டின் செயற்பாடு கற்பிக்கும் திறன் உள்ளது. அஃது அனுபவத்தின் பண்பையும் மாற்றி அமைக்கக்கூடியது. எனவே கல்வி எப்போதும் இறுதிக் கட்டத்தைப் பெறுவதில்லை. புதிய செயல்பாடுகள் திருத்தப்பெறும் அனுபவங்கள். அவற்றால் திறமை வளர்ச்சி உண்டாகின்றது. எனவே கல்வியாளர்கள் மற்றவர்களைப் போன்று டூயி ஒரு திட்டவட்டமான குறிக்கோளைக் குறிக்கவில்லை. குறிக்கோள்கள் வாழ்க்கை நிலைகளுக்கு ஏற்றவாறு மாறிக்கொண்டே செல்லும். எத்துணை வாழ்க்கை நிலைகளோ அத்துணை குறிக்கோள்கள். ஆதலால் அவற்றை ஒரு பட்டியல் போட்டு வரையறை செய்யமுடியாது. எல்லாக் கல்வியும் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. அதன் வளர்ச்சிக்குத்தான் கல்வி வழியாகவேண்டும். வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கல்வி மேலும் மேலும் கல்விக்குத்தான் வழி செய்யவேண்டும்.

கல்வி வருங்கால வாழ்க்கைக்கு முன்னேற்பாடு என்று ஒரு சிலர் கருதுகிறார்கள். கல்வி முன்னேற்பாட்டுக்காகவும் நாள்தோறும் வாழ்

1. Interaction

வதற்காகவும் நடைமுறைக்கு உதவுவதற்காகவும் அன்றைய வாழ்க்கைக்குப் பயன்படுவதற்காகவுமே அமையவேண்டும். கல்வி அனுபவத் திரள்களைச் சேர்க்கின்றதே அன்றி ஃப்ரோபெல் கூறியதைப் போன்று வித்து முளைத்து விரிவதுபோல் கல்வி ஒன்றையும் விரிக்கச் செய்வதில்லை. குறிக்கோள் கருவியாகவும் ஊக்கு நிலையாகவும் செயற்பாட்டினை இயக்குகின்றது.

முற்போக்குக் கல்வியின் தந்தை டூயி என்று அறிந்தோம். சமூக நலன் முன்னேற்றம் பெறக்கூடிய ஒரு குடியாட்சி, சமூகம், ஆகிய இரண்டும் அதன் நோக்கங்கள். தனி ஒருவனுடைய திறமைகள் வளர்தல், அவற்றால் அவன் தன்னைப் பொருத்திக்கொள்ளுதல், அவனால் ஆனவற்றை நிறைவு செய்துகொள்ளுதல் ஆகியவையே கல்வியாகும். எனவே கல்வியே வாழ்க்கையாக அமையவேண்டும். வாழ்க்கை என்பது வாழும் வினை, ஒரு செயல், செயலின் வழியாகப் படைப்பு. அதனால் கற்கவேண்டியதைத் திரட்டி ஆசிரியர் தரலாகாது. கல்வியே வளர்ச்சி. வளர்ச்சி தொடர்ச்சியாக உள்ளது. ஆசிரியர் அத்தகைய வளர்ச்சிக்கு வேண்டிய வாய்ப்புக்களை அறியவேண்டும். சிந்தனையைச் செலுத்தச் சிக்கல்களை உண்டாக்க வேண்டும். சிந்தனைகள் வளர உள்ளம் வளருகிறது. ஒவ்வொருவனும் மாறிக்கொண்டும், வளர்ந்து கொண்டும் [1] ஆளுமையைப் பெறுகிறான். வளர்ச்சி என்றால் முன்னேற்றம்; வளர்ச்சியே முற்போக்கு; முற்போக்குத்தான் கல்வியின் உச்சநிலை. கல்விநிலை ஓர் இயங்கும் நிலை. வாழ்க்கையும் தேக்கமுறாது முன்னேறுகின்றதொன்று. முன்னேற்றம் ஒவ்வொரு மனிதனுடைய அனுபவத்தாலும் உண்டாவது. கல்வி அனுபவத்தை மாற்றித் மாற்றித் தூய்மைப் படுத்திக்கொண்டே செல்லுகிறது. சமூக உறவு சிக்கலான சமூகத்தைத் தெளிவாக்கிக் கொள்வதோடு சமூக உணர்ச்சியையும் உண்டாக்குகிறது. சமூக உணர்ச்சி சமூகப் பழக்க வழக்கங்களைத் தூய்மைப் படுத்துகிறது. சமூகச் செயற்பாடுகளோடு ஈடுபாடுகொண்டு சமூகத்திறனை வளர்க்கச் செய்கிறது. அதனால் கல்வியே ஒரு சமூகச் செயல் முறை. சமூகத் திறமையே கல்வியின் நோக்கம். 'டூயி'யின் கல்விக் கருத்து எல்லாருக்கும் பொதுவானது. குடியாட்சியில் ஒவ்வொருவருக்கும் கல்வி வாய்ப்புக்கள் அளிக்கவேண்டும். கல்வி எல்லாருடைய உரிமைச் செல்வம். குடியாட்சியின் நன்மை என்றால் கல்வி ஒரு சமூக நடுவிடத்தைப் பெறுவதே. ஒவ்வொருவருடைய தனித் திறமை சமூகத்தின் திறமைக்கு வழிவகுக்கும். சமூக நலன்கள் குடியாட்சியில் எல்லாருக்கும் உரித்தாகும். எனவே சமூக நிலையங்கள், சமூக நலனைப் பொதுப்பட நாடினாலன்றிக் குடியாட்சியின் நன்மையை நல்காது. சமத்துவம் குடியாட்சியின் உயிர்நிலை. பயனளவுக் கொள்கையே பாடுபடுவதின் பெருமையை மறைமுகமாக வற்புறுத்துவது.

1. Personality

டூயி பள்ளியை ஒரு சமூக நிலையமாகக் கருதினர். சமூகப் பணிகளுக்காகப் பல திறன்களை வளர்க்க வேண்டுமென்றார். பள்ளிக் குடும்பம் ஒரு சமூகம். அது சமூகத்தின் சின்னம். ஆனால் சமூகத்தில் காணப்படும் தீமைகளை அகற்றி நன்மைகளையே அது வளர்க்கும். இச் சிறு சமூகத்தில் பல வாழ்க்கை அனுபவங்களை வாய்மொழியாலும், தம்முடைய அனுபவத்தாலும் மாணவர் பெறுவர். பள்ளிகளுக்கு உயரிய நோக்கங்கள் வேண்டும். அவற்றைப் பெறுவதற்குப் பிள்ளைகள் முந்த வேண்டும். கட்டுப்பாடு பள்ளிச் சமூக வாழ்க்கையில் எழக்கூடிய பள்ளிச் சமூகக் கட்டுப்பாடாகும். எல்லாச் செயல்களும் ஒற்றுமையோடு நடைபெற வேண்டியவையாகையால் கட்டுப்பாடு அவ்வொன்றிய வாழ்க்கையில் பிறக்கும். பிள்ளைகளிருக்கும் இடத்தில் இரைச்சல் இருக்கத்தான் செய்யும். அவர்கள் சிக்கல்களை விடுவிக்கும்போது ஆற்றலோடு உரையாடுவார்கள். அப்போது ஆசிரியர் அவர்களுடைய நல்ல பழக்கங்களைப் பாராட்டுவார். எனவே அங்கு ஒரு கட்டற்ற கட்டுப்பாடு நிகழும். பிற பள்ளிகளில் பிள்ளைகள் வற்புறுத்தப் பெற்ற கட்டுப்பாட்டோடு ஏதோ புத்தகத்தைப் படித்துக்கொண்டும் கற்பிக்கக் கேட்டுக் கொண்டும், வாயடைத்தும், கை பொதிந்தும் அசைவற்றும் அமர்ந்தும் கிடக்கின்றார்கள். அஃது ஓர் அவலக்காட்சி. பள்ளி மேற்பார்வையிலும் பிள்ளைகளுக்குப் பங்கு உண்டு. ஆசிரியர்களும் பிள்ளைகளும் ஒத்த நிலையில் பொறுப்பேற்கிறார்கள். சமூக இயக்கங்களில் இருவரும் பங்கு கொள்ளுகிறார்கள். பள்ளியைச் சுற்றிலுமுள்ள பெற்றோர்களும், மற்றவர்களும் பள்ளியோடு தொடர்பு கொள்ளுகிறார்கள். எனவே பள்ளி சமூகத்துக்குள் நுழைகிறது. சமூகம் பள்ளிக்குள் நுழைகிறது. டூயி தனது கல்வி முறையில் செயற்பாட்டின் தத்துவத்தை வேண்டியுள்ளார். செயல் வழியில் கற்றல் ஒரு முறையாயினும், அதனோடு அதைக் கல்வி மயமாக்கிய பெருமை அவருக்குத்தான் உண்டு. மேலும் பிள்ளைகள் ஒவ்வொருவரும் தன்னியக்கத்தில் ஈடுபட வேண்டுமென்பது அவருடைய சோதனைக் கொள்கைக்கு உடன்பாடானது. சிக்கல் முறை நல்ல பயிற்சியை அளிப்பதோடு சமூகத் திறனையும் அளிக்க உதவுகிறது. "நாம் எப்படி நினைக்கிறோம்" என்ற ஒரு நூலில் அவர் வகுத்துள்ள முறையை ஆசிரியர் அறிய வேண்டும். செயற்பாடு நிகழும்போது ஓர் இடர்ப்பாடு நிகழும். அதனைத் தவிர்த்து வெற்றி கண்டால் மேலும் மேலும் தொடரும் அனுபவம் உண்டாகும். ஒவ்வொரு நிலையையும் அறிந்து அதை நன்றாக உணர்ந்து செய்தல் வேண்டும். தனக்கு ஏற்படும் கருத்து இங்ஙனம் சோதனைக்குட்படுகிறது. இது வெறும் புலநெறி அறிவன்று. வெற்றுப் படிப்பினை நெட்டுருச் செய்யாது இங்ஙனம் செய்து அறிவது உண்மையைத் தேர்ந்து அறிவதற்கு ஒப்பாம். டூயி முறை, ஹெர்பார்ட் முறைகளை மிஞ்சியது. ஹெர்பார்ட்டின் இரண்டாவது கட்டத்தில் எடுத்துக்கூறல் உண்டு. ஆனால் எடுத்துக்கூறல் மாணாக்கனுடையது.

ஹெர்பார்ட் பாடங்களுக்குள் தொடர்புறுத்தல் என்ற ஒரு புதிய கருத்தை உண்டாக்கினர். பாடங்கள் வழி வழியாக வந்தவை. டூயி வாழ்க்கைக் கருத்துக்களின்[1] ஒருமைப் பாட்டினை விளக்கிக் காட்டினர். ஒருமைப்பாடு ஒரு சிக்கலைத் தீர்ப்பதில் எழுவது. வாழ்க்கையில் தனித்தனிப் பாடங்களாக அனுபவங்கள் ஏற்படுவதில்லை. தனிப் பாட அறிவும் பயன்படுவதில்லை. வாழ்க்கை அனுபவம் எல்லாம் திரண்டவை. எனவே பாட ஏற்பாடே பிள்ளையினுடைய அனுபவங்களை ஒரு சிக்கலின் நடுவில் ஒருமைப் படுத்துவது. ஆசிரியருடைய பொறுப்பு மிகுதி. அவர் பொறுப்பு செயற்பாடுகளைக் கண்காணித்து ஒரு சமூகச் சூழ்நிலையின் வளர்ச்சியை உண்டாக்குவதேயாம். வகுப்புச் சமூக ஒழுங்கினைப் பாதுகாக்கும் ஆசிரியர் ஒரு சமூகத் தொண்டர். அவருக்கு பாட ஏற்பாட்டை மாணவரோடு கலந்து அமைக்க உரிமை உண்டு அவருடைய விருப்பு வெறுப்புக்களுக்கு வாய்ப்பில்லை. அவருடைய பணியெல்லாம் சூழ்நிலைகளை அமைத்துத் தருதலும் பிள்ளைகளுடைய அனுபவங்களுக்கு வழிகாட்டுதலுமேயாகும். பள்ளித் தணிக்கையாளர்கள் ஆசிரியருக்கு உறுதுணையாக வேண்டும்.

டூயி சிறந்த கல்விக் கருத்துக்களைத் தந்தவர். அவருடைய முற் போக்குக் கல்வி உலகில் ஒரு மாபெரும் கிளர்ச்சியை உண்டு பண்ணி உள்ளது. கல்வி காலத்தின் கண்ணுடியென்று கருதினர்; வாழ்க்கை யைத் திருவினையாக்கும் என்று கொண்டார். அத்தகைய வாழ்க்கை குழவிப்பருவம் முதல் அதன் கூறுகள் என்றும், திருவினையும், போராட்ட மும், பொருத்தப்பாடும் முன்னேற்பாடும் துலங்குவதென்றும் காட்டி ஞர். சிக்கல் முறையில் தொடங்கி செயல்திட்ட முறையில் பள்ளிகளில் கல்வி நிலவவேண்டுமென்ருர். அதனுல் செயல் பள்ளிகளென்றும் முற் போக்குப் பள்ளிகளென்றும் புதிய பெயர்கள் கொடுத்து ஒரு முற் போக்குக் கல்வித் திட்டத்தை வகுத்தார். மூலக் கல்வி ஏற்பாடு ஒன்றும் உருவாக்கினர். சமூக உறவுநலன் கல்வியின் அடிப்படையென்ருர். இருபதாம் நூற்ருண்டின் சிறந்த கல்வியாளர் ஜான் டூயி என நாம் போற்ற வேண்டும்.

காந்தி அடிகள் [1869–1948]:

காந்தியண்ணல், தமக்கென வாழாது நமது தாய் நாட்டுக்கே தம்மை உரிமையாக்கி நாட்டு மக்களை மக்களாக்கி அவர்களிடையே ஒருமைப்பாட்டினை அறிவுறுத்தி அமைதியை அறமாக்கி உலகுக்கே தமது தூய வாழ்க்கையினைத் தமது உள்ளொளியால் விளக்கி நமது நாடும் உலகமும் நல்வாழ்வு வாழ வகுத்த பெருமான். கல்விக் கருத் துலகத்திலும் ஒரு புதிய திருப்பத்தினை உண்டாக்கி யருளினர்.

---

1. Integration

மேனுட்டுக் கல்வி அறிஞர்களையும் விஞ்சக்கூடிய கல்வி அமைப்புக் கருத்தினை நமக்குத் தந்துதவினர். அவர் உண்மையின் உறைவிடம்; பெருமையின் நிலைக்களன்; உண்மையே கடவுள்; கடவுளே உண்மை; தீமையைத் தீமையால் அகற்றுது நன்மையால் அகற்ற வேண்டும்; நன்மை அன்பின் அடிப்படையில் எழுவது; 'நன்மை கடைப்பிடி'; மறப்போரைவிட அறப்போர் எதையும் இயற்ற வல்லது; கடவுட் பணியே மக்கட் பணி; சமூகம் வாழ்வதற்கு முதலாளியும் பாட்டாளியும் அறவழி நிற்க வேண்டும் என்பன காந்தியங்கள்.

நமது நாட்டு மக்கள் எல்லோரும் கல்வியறிவு பெறவேண்டும் என்று கருதினர். கல்வி வெறும் ஏட்டுக் கல்வி அன்று. அஃது ஒவ்வொருவனுடைய முழு வளர்ச்சியை அவனவன் திறனுக்கேற்ப உடல், உள்ளம், ஆன்மீகம் ஆகிய மூன்றின் வாயிலாகவும் நிலைபெறச் செய்வது. அதாவது முழுத் திறமை மூன்றிலும் இடம்பெற்று ஒன்றி வளர்வதே கல்வி. எந்த ஆசிரியரும் ஒரு கோணத்தில் மட்டும் பணி புரியலாகாது. இளமையில் ஒழுக்கம் உருவெடுக்க வேண்டும். ஒழுக்கமற்ற கல்வி உதவாதது. பிள்ளைகளுக்கும் மற்றவருக்கும் உடற்பயிற்சியால் உடல் வன்மை வேண்டும். இசைவழியால் உடற் பயிற்சி உடலை முயற்சியின்றி இயங்கச் செய்யும். அப்போது சோர்வு இராது. கற்கும் கல்வி வெற்றுக் கல்வியாகாது. அது நிறைவுற்ற கல்வி ஆவதற்குக் கை உழைப்பு வேண்டும். கைத்திறன் அறிவுத்திறனை வளர்க்கும். ஆன்மீகப் பயிற்சி உள்ளத்தைத் தொடக்கூடியதாக வேண்டும். எனவே, அவருடைய கல்விக் குறிக்கோள்கள் பல நோக்குடையவை. ஏனென்றால் நாட்டில் கண்ட பல குறைபாடுகள் பல வழியில் திருத்தம் பெற்றாலன்றி நன்மை பயக்காதென அவர் கண்டார். நமது நாட்டுக் கல்வி நமது பண்பாட்டில் அமைய வேண்டும். தாய்மொழி தனது அரியணை ஏறவேண்டும். பிள்ளைகள் அவரவர்களுடைய சூழ்நிலையில் வளருவது நல்லது. ஆசிரிய மாணவ உறவு நல்லுறவு ஆக வேண்டும். பிள்ளைகளுக்குக் கல்வி ஒரு சுமையாதல் கூடாது. கல்வி எல்லாருடைய உரிமை. ஆனால் நமது நாட்டின் எளிமையைக் கண்டு கல்விப் பயனால் ஒவ்வொருவரும் உயிர் வாழ்வதற்கு வகை செய்துகொள்ள வேண்டும். இதற்கு உறுதுணையாவது தொழிற் கல்வி. தொழில் வேறு, கல்வி வேறு என்றில்லாது தொழிலை நடுவாகக் கொண்ட கல்விதான் சிறந்தது. கல்வி கற்றவுடன் கல்விப் பருவம் கடந்த பிறகு ஒவ்வொரு பிள்ளையும் நேராக ஒரு தொழிலுக்குச் செல்ல வேண்டும். அப்பொழுது தான் கல்வி வாழ்வதற்கு ஒரு திறன் அளிப்பதாகும்; கல்வி பயனுடைத்துமாகும். மேற்கூறியபடி கல்வி முக்கோண வளர்ச்சிக்கு வழி வகுத்து ஒழுக்கத்தை உருவாக்க வேண்டும். திறனும் ஒழுக்கமும் உள்ள ஒருவன் நல்ல குடி மகனுவான். அவன் சமூக உறவாடும் பொதுச் சமூகத்தொண்டில் ஊக்கமும் பெறுவான். உலக அமைதி நிலைபெற மனித உள்ளங்களைக் குழவிப் பருவத்திலிருந்து உருவாக்க வேண்டும்.

இங்ஙனம் காந்தியார் நாட்டுக்கேற்ற ஒரு கல்வித் திட்டத்தை வகுத்தருளினர்.

காந்தியார் வகுத்த கல்வியை ஆதாரக் கல்வி அல்லது வாழ்க்கை மூலக்கல்வி எனலாம். வாழ்க்கைக்குத் தொழில் இன்றியமையாதது. தொழிலோடு இயற்கைச் சூழ்நிலையும் சமூக உறவும் கல்விக்கு நிலைக் களனுகின்றன. தன்கையே தனக்கு உதவி மட்டும் அல்லாது பிறருக்கும் உதவியாகும் முறையில் கைகால்கள் வழியாக மன வளர்ச்சி மாண்புறு கிறது. பதினன்கு வயது வரையில் இத்தகைய அடிப்படைத் திட்டத் தில் ஒவ்வொரு பிள்ளையும் பயிற்சி பெற்ருல் வாழக் கற்றுக் கொள்ளுவ தோடு சிறந்த குடிமகனுகவும் வாழ இயலும். காந்தியார் வகுத்த திட் டப்படி ஆதாரப் பள்ளிகளில் பொதுவான அடிப்படைச் செயல்கள் நடைபெறுகின்றன. அவற்றுள் முதற்கண் பிள்ளைகள் துப்புரவாகவும், நோயற்றும் வாழ வகை; ஆதாரத் தொழிற் பயிற்சி; குடிமைப் பயிற்சி; கலைப் பயிற்சி; ஒவ்வொரு பிள்ளையும் தன்னம்பிக்கை கொள்ளுதல் ஆகியவை. காந்தியாருடைய தொழில் முறைக் கல்வி வெறும் தொழி லைக் கற்றுக் கொடுப்பதென்று கருதுவது பிழையாகும். தொழிலை மட் டும் இது நடுவாகக் கொள்ளவில்லை. இதன் மாண்பு வாழ்க்கையினையே நடுப் பொருளாகக் கொண்டுள்ளதென்பது நோக்கத் தக்கது. வாழ்க் கைக் கல்வியை அன்றே சிறந்த கல்வியென்று மேனாட்டறிஞர்கள் கருதி யுள்ளார்கள்! தாய்மொழி வழியாக இத்தகைய கல்வியை நடத்தினுல் ஏழு வயது முதல் பதினன்கு வயதுக்குள்ளாகப் பழைய உயர்நிலைக் கல்வி அறிவினை மாணவர் பெற இயலும். நமது மாநிலத்தில் வகுத் துள்ள புதிய திட்டத்தில் ஆதாரக் கல்வியும் மேல் உயர்நிலை வரையில் உருவாக்கப் பெற்றுள்ளது. இது பதினோராண்டுக் கல்வித் திட்டம். முதல் ஏழாண்டுகள் ஓர் இணைப்பு. அது தொடக்க நிலையாகும். பின் நான்கு ஆண்டுகள் உயர்நிலையும், மேல் உயர்நிலையும். இத்திட்டம் முழுவதும் காந்தி அடிகள் காட்டிய வழியில் அமைந்துள்ளது. இதைச் செயல்படுத்துவதற்கு ஆசிரியர்களுடைய ஊக்கம் மிகுதியும் வேண்டற் பாலது. இன்றைய நிலையில் அவர்களுடைய ஆற்றல் இன்றி ஆதாரப் பள்ளிகள் ஆதாரமற்ற நடைமுறையில் நடைபெற்று வருகின்றன. தொடக்க நிலையில் ஆசிரியர்கள் ஊக்கம் காட்டிவிட்டால் பிள்ளைகளது வளர்ச்சி வேகத்தைப் பின் நிலைகளில் அக்கறையற்ற ஆசிரியர்கள் யாரும் அதைத் தடுக்க முடியாது. ஆதாரப் பள்ளி உயிருடையது. மாணவர், ஆசிரியர், சுற்றுப்புறம், சூழ்நிலை, சமூகம் ஆகிய எல்லாம் தொடர்புற்றது. இவை யாவும் உயிர்ப்புறுவதே இதன் உயிர்நிலை. இந்த உயிர்நிலையே அதன் உயர்நிலை. இதை வளர்ப்பது ஆசிரியர் களின் கடமை.

XVIII

மாறிய கல்வியும் மக்கட் பண்பும்

குடியரசும் வல்லரசும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுத் தமது குறிக்கோள்களை உயர்வுற்றதாகப் பரப்பிவரும் இக்காலத்தில், கல்வியாளர்களும் இவற்ருல் உந்தப்பெற்று மாறிய கல்விக் கொள்கைகளைப் பறைசாற்றுகின்ருர்கள். இவை இரண்டுக்கும் முறையே அமெரிக்காவும் உருசியாவும் தலைமை பூண்டு தமது தனி மேம்பாட்டினைப் பறை சாற்றுகின்றன. எப்போதும் கல்வித் திட்டம் சமூக வளர்ச்சிப் பண்புகளையும் அவற்றின் தத்துவங்களையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பெற வேண்டும். எனவே அரசியற் கருத்துக்கள், சமூகப் பண்பாடு ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று சார்பு கொண்டு நிலைபெறும் அரசியல் திட்டம் கல்விக் கருத்துக்களை உருவாக்குகின்றது. குடியரசுகளும் வல்லரசுகளும் தமது நாப்பறையில், தனி ஒவ்வொரு குடிமகனுக்கும் நன்மையையும் நல்வாழ்க்கையையும் நல்குவதாக நவில்கின்றன. ஆனால் நடைமுறையில் வல்லரசுகள் தமது அரசுகளுக்கு ஊறு விளையாதபடி குடிகள் தமக்கென வாழாது தத்தமது நாட்டுக்கே வாழ வேண்டுமென்று வற்புறுத்துகின்றன. எனவே அவற்றில் தனி ஒரு மனித வளர்ச்சியைக் கண்டாலும் அஃது அவனுடைய நன்மைக்குப் பயனுருது நாட்டுக்கே உரித்தாகின்றது. அவனுடைய வளர்ச்சி நாட்டுக்கு நன்மை பயக்காவிட்டால் நசுக்கப் பெறுகிறது. ஆகையால் தனி ஒருவன் தனித்துத் தனது உரிமையோடு வாழ வழி இல்லை. இத்தகைய கூற்றினைப் பழைய கிரேக்க நாடுகளில் ஒன்ருகிய ஸ்பார்டாவில் கண்டோம். அந்நாட்டில் கூடி வாழ்க்கை பாடி வாழ்க்கையில் அமைந்தது. மனித வாழ்க்கை நாட்டுக்காகவே வாழப் பெற்றது. ஸ்பார்டக் குடிகள் ஸ்பார்டர் அரசுத் திட்டங்களுக்கு அடி பணிந்தனர். ஒருவனுடைய பிறப்பு வளர்ப்பு நாட்டின் நலனைக் கருதியே நடைபெற்றது. இன்று உருசியாவில் எல்லா மக்களும் பாட்டாளிகள். பிறந்த பிள்ளை நாட்டுக்குரியது. அது வளரும் பருவத்தே நாட்டின் கொள்கையில் வளர்ந்து தன்னை ஈன்ற தாய் தந்தையரைத் தனது நாடாகவே கருதுகின்றது.

குடியரசு நாடுகளில் தனி ஒவ்வொரு மனிதனுக்கும் நாடு உரிமை வழங்குகின்றது. தனி ஒவ்வொரு மனிதனும் தனக்கென வாழ்வதோடு தனது நாட்டுக்கும் நன்மை பயக்கின்ருன். நாட்டின் நலனுக்காகத் தனி ஒவ்வொருவனுடைய வளர்ச்சி நாடப் பெறுகிறது. இல்வாழ்க்கை அரசியல் வாழ்க்கைக்கு அடிப்படை. நாட்டின் மரபிலும் பண்பாட்டிலும் குடியரசினர் நன்மையைக் காண்கின்ருர்கள். தனி ஒவ்வொருவ

னும் தனது சமூகத்தின் உறவில் தன்னை அறிந்து கொள்ளுகின்றான். தன் வளர்ச்சியின் நன்மையைத் தனது சமூகத்துக்கும் நாட்டுக்கும் உரிமையாக்குகின்றான். ஒத்துணர்வு, உடன் பிறப்புணர்வு, சமஉரிமை எல்லாருக்கும் உரியவை. இவற்றை அரசு காப்பாற்றி ஒவ்வொருவருக்கும் நல்குகின்றது. தனி ஒவ்வொரு குடிமகனுடைய உரிமையைச் சமூகம் அளிக்கின்றது. அத்தகைய உரிமை வேட்கையில் வளரும் சமூகம் அரசை ஏற்கின்றது; உரிமைக்கு ஊறு விளையாதபடி காக்கின்றது. எனவே கல்வி தனி ஒவ்வொருவனுடைய வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றது. ஒவ்வொரு குடிமகனும் சமூகத்தில் மட்டுமன்றிக் குடியரசிலும் இடம் பெறுகின்றான். தனது அறிவு வளர்ச்சி தன்னுடையதாகின்றது. தான் சிந்தித்தாலன்றித் தன்னறிவு வளராது. நல்லனவற்றைத் தனது சிந்தனையில் அறிகின்றான்; தீயனவற்றைத் தனது சிந்தனையில் உணர்ந்து அகற்றுகின்றான். அரசு பிறப்பிக்கும் கட்டளைகளையும் தான் சிந்தித்துத் தனது உடன்பாட்டினையும் மறுப்பினையும் உரைக்கின்றான். குடியரசு நாடுகளில் ஒவ்வொருவருக்கும் கல்வி உரிமை உண்டு. கல்வி அறிவைத் தூண்டுவது. அறிவில்லாக் குடிகள் தமது அரசினை அறிவோடு வளர்க்க இயலாது. அறிவு உரிமை வேட்கையை அடிப்படையாகக் கொண்டது. நமது நாட்டில் அயலவர் ஆட்சியில் அறிவை வளர்த்துக் கொண்டவர்கள் அடிமையை அகற்ற அரும்பாடு பட்டார்கள். அவர்கள் கொண்ட உரிமை வேட்கை நாட்டின் உரிமையை உருவாக்கிற்று. இன்று நமது கல்வித் திட்டங்கள் ஒவ்வொரு வளரும் பிள்ளைக்கும் உரிமை வேட்கையை உணர்த்துகின்றன. குடியாட்சியின் பண்புகளை வளரும் பருவத்தே வளர்க்கின்றன. அமெரிக்காவைப் போன்ற நாடுகளில் மக்கள் மக்களாட்சியை நிறுவிய பிறகு தமது வழி வழி மக்களுக்கு அதன் பண்புகளைக் கல்வி வழியாக ஊட்டி வருகின்றார்கள். நமது நாட்டிலும் குடியாட்சியின் அடிப்படையில் சிறு பள்ளிகள் முதல் பெரும் பள்ளிகள் வரையில் பலப்பல குடியாட்சிப் பண்புகள் வளரும் பருவத்தே ஊட்டப் பெறுகின்றன. குடியரசுகளுக்குக் கல்வி அறிவு இன்றியமையாதது. கற்றறிந்த குடி மக்களே தமது அரசினை நன்றாக நடத்த முடியும். எனவே குடியரசு நாடுகளில் கல்வியைக் கட்டாயமாகவும் இலவசமாகவும் தனி ஆண் பெண் இரு பாலர்களுக்கும் குடியரசுகள் வழங்குகின்றன. அமெரிக்காவில் கல்வியின் வளர்ச்சி அளவுகடந்துவிட்டதால் குடியரசின் நன்மைகளை அந்நாட்டு மக்கள் பெற்று இன்புறுகிறார்கள்.

குடியரசுக் கல்வியைத் திட்டமிடுவதற்குப் பல வழிகளில் கல்வியாளர்கள் தமது கருத்துக்களை உருவாக்கியும் செயலாற்றியும் உள்ளார்கள். சிறு பிள்ளைகள் பெரும் பிள்ளைகளாக வளர்ந்து தமது ஆட்சியில் பங்கு கொள்ள வேண்டியவர்களாகையால் வளரும் பருவத்தே அவர்கள் எய்த வேண்டிய நிலைக்குப் படிப்படியாக அவர்களுக்குக் கல்வி அளிப்பதென்ற முன்னேற்பாட்டினைக் கொண்டே கல்வித் திட்டம் வகுத்தார்

கள். இதன்படி தொடக்க நிலையில் நடுநிலைக்கும், நடுநிலையில் உயர் நிலைக்கும், உயர்நிலையில் கல்லூரிக்குமாகத் திட்டம் வகுக்கப் பெற்றது. படிப்படியான உயர்நிலைக்கு ஏற்றபடி அதனதன் கீழ்நிலை முன்னேற் பாடு செய்யும் பழக்கம் தக்கதன்று. இத்தகைய பழக்கத்தை உயர் நிலைக் கல்விக் குழுவினர் கண்டித்துள்ளார்கள். ஒவ்வொரு நிலையும் தனித்து இயங்க வேண்டுமென்று வற்புறுத்தியுள்ளார்கள். இதை யொட்டியே சென்னை மாநிலத்தின் 1958ஆம் ஆண்டுத் திட்டம் தொடக்க நிலைக் கல்வியை தொடர்ந்த ஏழாண்டுகளுக்கும் உயர்நிலையினை நான் காண்டுகளுக்கும் கல்லூரிப் பட்டக் கல்வியினை மூன்றுண்டுகளுக்கும் தனித்தனிக் கட்டமாக ஒன்றுக்கொன்று சார்பின்றி வகுத்துள்ளது. கல்வி, வாழ்க்கையை அறிவது. அல்லது கல்வியே வாழ்க்கை என்று கொண்டால் வாழ்க்கைக் கல்வி, பயிலும் காலத்திய வாழ்க்கையினைக் குறித்தல் வேண்டும். அல்லாது அன்றைய வாழ்க்கையினை அறியாது பிற்காலத்திய வாழ்க்கைக்கு முன்னேற்பாடு செய்யும் கல்வி உண்மை யான கல்வியாகாது. இன்றைய வாழ்க்கையை அறியுமுகத்தான் அதன் பழமையினை வேண்டிய அளவு அறிந்து கொள்ளுவதற்கும் எதிர்காலத் தினை ஓரளவு உய்த்துணர்ந்து கொள்ளுவதற்கும் கல்வி உதவுவது நன்று. பிள்ளைகள் இன்றைய நிலையில் வாழ்கின்றுர்களாகையால் அன்றுட நிலையினைப் பற்றி அவர்கள் கல்வியின் வாயிலாக அறிந்து கொண்டால் அவர்களுடைய வாழ்வில் ஏற்படும் சிக்கல்களை அறிந்து தெளிவு பெற இயலும். கால வயதுக்கு அப்பாற்பட்ட காலத்தில் அறிந்துகொள்ள வேண்டியவை அவர்களுக்கு முற்கூட்டி விளக்கம் தராது. எனவே [1]கால வயது [2]மனவயதுக்கேற்ற, அவ்வப்போதைய வாழ்க்கைக்கு வேண்டிய கல்வியினைக் கற்ருல், வளரும் பருவத்தே வாழ்வாங்கு வாழ இயலும். அல்லாது முதிர்வுப் பருவங்களின் அனு பவங்களை முன்னேற்பாடுகளாக்கிஞல் அவற்றின் பொருள்களடங்கிய பாட ஏற்பாடுகளும் பாடப் புத்தகங்களும் பொருளற்றவையாகும். குடியாட்சியில் எப்பருவத்தினராயினும் அவரவர்களுடைய அறிவுக்கு ஏற்றபடி அவர்கள் வாழ்க்கைப் பொருளை அறிய வேண்டிய உரிமை உண்டு. எனவே பிள்ளைகளுக்கேற்றபடி அவர்கள் வாழ்வோடு ஒட்டிய கல்விச் செயல்பாடுகளில் ஈடுபட்டாலன்றி, அவர்கள் பெறும் அனு பவங்கள் அவர்களுடைய வாழ்க்கையோடு ஒட்டாது உதிர்ந்து விடும். ஆசிரியருடைய வற்புறுத்தலால் அவை நிகழலாம். வெற்றி தரலாம். ஆனல் அஃது கல்வியாகாது. டூயி அவர்கள் கருத்தினை முன்னர்க் கண்டோம். பள்ளிச் சூழ்நிலையும் புறநிலையும் பிள்ளைகளுடைய திறத் துக்குப் போதிய அனுபவங்களைத் தந்து உதவினுல் அவர்கள் அப்போது அறிந்தவற்றை உதவியாகக் கொண்டு எதிர்காலத்துக்கு முன்னேற்பாடு செய்துகொள்ளுவார்கள். ஏனென்றல் இன்றைய

1. Chronological age 2. Mental age

நிலையை அறியாதவர்கள் நாளையைப் பற்றி அறிவது கடினம். குடியாட்சியில் இளைஞன், இளைஞனாகக் கல்வியைப் பெற்றாலன்றி முதிர் பருவத்தில் சிறந்த குடிமகனாதல் இயலாது. அன்றியும் ஒவ்வொரு திறனையும் வளர்ப்பதற்கு அதை வளர்க்கக்கூடிய பாடத்தில் பயிற்சி தருவது தவறு. எடுத்துக்காட்டாகக் கணிதம் ஒரு திறனை வளர்க்கு மென்றும் உள்ளத்தை உறுதிப்படுத்துவதற்கு வேறு ஒரு பாடம் உண்டென்றும் கருதுவது உண்டு. [1]பண்பாட்டு வரன்முறைக் கொள்கை என்று கல்வியாளர்களும், [2]புனர் ஆக்கக் கொள்கை என உளநூலாரும் கருதுவதைப் போன்று புனர் ஆக்கமாவது வரன்முறை யாவது பிள்ளை வளர்ச்சியில் உண்டென்று கருதுவது தவறு. பிள்ளை களுடைய சில அழித்தல் செயல்களை வழிவழியினருடைய பண்பென்று நினைப்பார் உண்டு. இன்று வளரும் பிள்ளைகள் இன்றைய சூழ்நிலைக் கேற்ப அவர்கள் வளர்ச்சியடைய வேண்டுமே அன்றி அவர்களுடைய முன்னோர் வழிநிலையில் பழகலாகாது. மரபுப் பழக்கங்கள் நன்மை யாயின் நல்லவை. அல்லது தீயவையாயின் தீயவையாகும்.

குடியாட்சிக் கல்வி எல்லோருக்கும் உரியது. செல்வர்களுக்கு மட்டும் அஃது உரியதன்று. இவ் வேறுபாட்டால் சமூகத்தில் படித்த வர்களென்றும், படிக்காதவர்களென்றும் இருவகையினர் ஏற்பட்டார்கள். இன்றைய சமூகத்திலும் நமது நாட்டில் இது கண்கூடு. வெறும் புத்தகங்களை மட்டும் படித்துவிட்டால் அறிவு பெருகிவிடாது. செயல் முறை அறிவு வேண்டற்பாலது. குடியாட்சியில், குடியாட்சி முறை களில் பிள்ளைகள் பயிற்சி பெற வேண்டியது அவசியம். எனவே பிள்ளைப் பருவத்தில் வெறும் பொருட் கல்வியும், முன்னேற்பாடாக மனப் பெற்றிகளை வளர்க்கும் பாட அறிவும் குடியாட்சிக்குப் போதிய பயிற்சி ஆகா. குடியாட்சி நாடுகள் பலவற்றில் குடியாட்சிக்கு உற்ற கல்வித் திட்டம் காணப்பெறுவதில்லை. அமெரிக்காவில் மட்டும் அதன் அமைப்பு மிகவும் பாராட்டுதற்குரியது. சிறந்த குடியாட்சி நாடாகிய ஆதென்சில் கல்வி எல்லாருக்கும் உரித்தாயிற்று. ஒவ்வொரு குடி மகனும் குடிமைப் பண்புகளில் சிறந்து விளங்கினான். குடியாட்சியில் சிறக்க வேண்டுமானால் எல்லாக் குடிமக்களும் ஆண் பெண் வேறு பாடின்றி இளைஞர் முதியவர் உட்பட்ட யாவரும் கல்வி பெறவேண்டும். தனி ஒவ்வொரு குடிமகனுக்கும் கல்வி உரிமை உரித்தாக வேண்டும். கல்வி சமூகத்தன்மை உடையது. வெறும் கற்றலை யாரும் பெறலாம். ஆனால் குடியாட்சி முறையில் கல்வியைக் கற்றல் மேலானது. வாழ்க் கையே கல்வியாதல் நாம் அறிந்ததே! கற்றல் நேர்முகமாக ஆசிரிய மாணவருக்கும் நிகழ்ந்தால் பயனில்லை. சூழ்நிலை வழியாக நிகழுவதே கல்வி. குழவிப் பள்ளிகளில் ஆசிரியரும் குழவிகளும் சமூகச் சூழ் நிலையை அளிக்கின்றார்கள். சூழ்நிலை எவ்வளவு மாறுபட்டுக் காணப்

1. Culture epoch theory 2. Recapitulation theory

படுகின்றதோ அந்த அளவுக்குக் கல்வி பயனுறும். குழவியைச் சுற்றிலுமுள்ள வாழ்க்கை அமைப்பும் சூழ்நிலையும் குழவியின் துலங்கல்களைக் கட்டுப்படுத்தப்பட்ட நிலையின் வழி நல்லாசிரியமாக அமைகின்றது. வெறும் பாடப் பொருள்களைமட்டும் பிள்ளைகளுக்குத் திணித்தல் கல்வியாகாது. பிள்ளைகளின் அனுபவத்தை ஒட்டாதது கல்வி அன்று. பிள்ளைகளை அமைதியாகக் கட்டுப்படுத்திக் கற்பிக்கலாம். ஆனால் அஃது அவர்களுடைய உடலைக் கட்டுப்படுத்துவதே அன்றி உள்ளத்தை ஈர்ப்பதாகாது. பிள்ளைகளது உள்ளங்கள் கற்பிக்கும் பாடத்தில் ஒன்றினாலன்றிக் கல்வி நிலைபெறாது. இன்றைய சமூகம் முன்னாள் கல்வியால் உருவாக்கப்பெற்றதொன்று. எனவே நல்ல சமூகம் வேண்டுமாயின், இன்றைய சமூகம் நாளைய சமூகத்தின் திட்டங்களை வகுத்துக் கல்வி நிலையங்களுக்கு அளிக்கலாம். பிள்ளைகளிடையே நாள்தோறும் மாறுதல்கள் நல்ல முறையில் அமைந்தால் அவை வளர்ச்சிக்கு அறிகுறியாகும். பள்ளியில் பிள்ளை வளர்ச்சி தொடங்கி, வாழ்க்கை இறுதிக் கட்டம் வரையில் நடைபெறுகின்றது. அறியாத நிலையில் பள்ளியில் தொடங்கும் அறிவு ஆயுள் இறுதி வரையில் வளர்கிறது. முற்றாத நிலையில் தொடங்கும் கல்வி முற்றிய முதிர் பருவ நிலைக்கு வழிகாட்டுகிறது. குடியாட்சியில் பள்ளியின் பணி, உடல் வளர்ச்சி மட்டுமன்று; உடல் வளர்ச்சிக்கு நல்லுணவும் நல்ல உடல் பயிற்சியும் நலப்பாட்டுச் சூழ்நிலையும் இன்றியமையாதவை; ஆனால் உள வளர்ச்சியை நாடுவது கல்வி. கல்வியின் வளர்ச்சியால் சமூக உணர்வு வளர்ச்சி உண்டாகிறது; இவை இரண்டும் கலந்த ஆளுமை வளர்ச்சியால் ஆன்மீக வளர்ச்சியும் நடைபெறுகிறது.

குடியாட்சியில் ஒவ்வொரு குடிமகனும் குடிமகளும் கருத்தாற்றலோடு விளங்கவேண்டும். ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அல்லது அதற்குரிய ஏற்பாட்டினையும் தாமாகவே தனித் தனியாக விருப்பு வெறுப்பற்றுச் சீர்தூக்கிச் சிந்தனை செய்யக் கல்விச் சாலைகள் பயிற்சி அளிக்க வேண்டும். பிறர் ஒருவருடைய கருத்தினைத் தாம் சிந்தியாது ஏற்றுக் கொள்ளுதல் தவறு. அச்சு நாடுகளில் ஆளுங்கட்சியின் கொள்கைகள் பறைசாற்றப் பெறுகின்றன. அவற்றிற்குச் செவி சாய்ப்போர் சிந்தியாத ஏமாளிகளாகின்றனர். குடியாட்சி நாடுகளிலும் இத்தகைய நாமுழக்கம் உண்டு. ஆயினும் எந்தக் கட்சியின் கொள்கையானாலும் அது குடியாட்சியின் குறிக்கோள்களுக்கு முரண்படமாட்டாது. [1] தன் கோட்புகுத்தல் தகாதது. அதற்குப் பணியாது புறக்கருத்துக்களைத் தமது சிந்தனைக்கு உட்படுத்துவது தகைமையுடையது. கல்வி நிலையங்களில் பெறும் அனுபவங்கள் எல்லாம் சிந்தனையின்பாற் பட்டவை. எனவே குடியாட்சி நாடுகளில் ஆசிரியம் சிந்தனையைத் தூண்டும் வழியில் அமைதல் வேண்டும். ஆசிரியர்

1. Indoctrination

கற்பிப்பதை மாணவர்கள் தமது சிந்தனையில் ஒட்டாது ஏற்றுக் கொள்ளுதல் கூடாது. சிந்தனை செய்வதற்கு பட்டறிவு, முறை, செயற்பாடு, கண்டறிதல் ஆகியவை வேண்டற்பாலவை. இதனால் சிக்கல் முறை, செயல்திட்ட முறை முதலிய சிந்தனையை வளர்க்கும் முறைகள் நல்லாசிரியத்தின்பாற் பட்டவை. பிள்ளைகள் ஓர் அனுபவ நிலையில் தம்மை உட்படுத்திக் கொண்டு, தொடர்ந்த அக்கறையோடு அதன் இடர்ப்பாட்டில் தமது சிந்தனை ஆற்றலைப் பெருக்கிப் பல பொருள்களை நாடி, விடைகண்டு, அதன் ஏற்புடைமையை அறுதியிடுகிறார்கள். இத்தகைய அனுபவம் பல மனப்பெற்றிகளை வளர்ப்பதோடன்றிப் பிள்ளைகள் தாமே சமஉரிமையோடு சிந்தனையாற்றுவதற்கும் வழி வகுக்கின்றது. நடைமுறையிலோ ஆசிரியர்களே பிள்ளைகளுக்கு யாது கற்பிக்க வேண்டுமென்று அறுதியிடுகிறார்கள். அவர்களுடைய திட்டம் பிள்ளைகள் வளர்ச்சியையே நாடியது; பிள்ளைகளுடைய அக்கறைகளை ஒட்டியது; புதிய அனுபவங்களைத் தரக் கூடியது; பழையனவற்றோடு புதியனவற்றை ஒட்டியும் திருத்தியும் புத்தம் புதிய அனுபவத்தைத் தந்து கொண்டே இருக்கக் கூடியது; பிள்ளைகளைக் குழு உணர்ச்சியோடு கூட்டக் கூடியது; குழுக்களில் ஒருவரோடொருவர் உசாவி புதிய அனுபவங்களைத் திரட்டிக் கொள்ள உதவுவது: இவை குடியாட்சி நாடுகளில் குடியாட்சிப் பண்புகளின் அடிப்படையில் பிள்ளைப் பருவமுதல் வளர்க்கக்கூடிய ஒழுங்குகளாகும்.

குடியாட்சி நாடுகளில் உள்ள பள்ளிகளில் ஆசிரியருடைய நாட்டமும் அவர் கொள்ளும் தத்துவமும் அவர் பணியாற்றும் திட்டமும் இன்றியமையாதவை. பிள்ளைகளைக் கைப்பொம்மைகளாகவும் சோதனைப் பொருள்களாகவும் நினைத்துப் பல படியாகத் திட்டங்களை மாற்றியும் திரித்தும் அமைத்துக்கொண்டே இருந்தால் பிள்ளைகளுடைய முன்னேற்றம் தடைப்படும். பழைய கட்டாய முறைகள், கவர்ச்சியற்ற பாடங்கள், வாழ்க்கை அனுபவத்தைத் தொடாத பொருள்கள் ஆகியவை பிள்ளைகளுக்குக் கல்வியின்பால் வெறுப்பை வளர்த்தன. குடியாட்சிப் பண்பில் கற்பிக்கப் பெறும் முறைகள் பிள்ளைகளுக்கு ஊக்கமளிக்கின்றன. பிள்ளைகளுக்கு எதையும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற உந்துதல் உள்ளத்தே நிகழ்வதொன்று. அவர்களுடைய வேட்கை மிக்கது. அஃது அவர்களது உள்ளத்தே நிகழும் அறிவு வேட்கை. அதனை ஆசிரியர் அறியாது தான் மேற்கொண்ட வழியில் அவர்களை ஈர்த்தால் கற்றல் நிகழாது இடர்ப்பாடு நேரிடுகிறது. பிள்ளைகளுடைய பலவினாக்களுக்கு விடை அளிக்க வேண்டியது ஆசிரியர் கடமை. பிள்ளைகளுடைய பல கவர்ச்சிகளை அறிந்து அவற்றிற்கேற்பப் பாடங்களைத் திருத்தி அமைத்தலும் கடமை. எனவே பிள்ளைகள் தாம் பெறும் அனுபவங்கள் தமக்குப் பொருளாகும் வரை கற்கின்றார்கள். அவை பொருளற்று விட்டால் கல்வி உயிரற்று விடுகிறது; பிள்ளைகள் திறமையற்று விடுகிறார்கள். பிள்ளைகளது ஊக்கங்கள்—

பாட ஏற்பாடு, ஆசிரிய முறை, ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகிய எல்லா வற்றின் சார்புற்றவை. நமது இல்லங்களில் குழந்தைகள் பல கேள்விகளைக் கேட்டு நம்மைத் தொல்லை செய்கின்றார்கள். அதனால் பிள்ளைகள் தாம் அறியாதவற்றை அறிந்து கொள்ள விரும்புகிறார்கள் என்றே நாம் அறியவேண்டும். அவை ஒவ்வொன்றுக்கும் விடைகளை அளித்து விளக்க வேண்டியது நமது கடமை. பிள்ளைகளுக்கு நல்லூக் கங்கள் பெறும் வழியினைப் பெற்றோரும் ஆசிரியரும் வகுக்க வேண்டும். ஆசிரியப் பயிற்சி பெற்று ஆசிரியச் சேவை செய்து இளஞ் சமூகத்துக்கு நன்மை பயக்க வேண்டுமென்ற ஊக்கம் நல்ல ஊக்கமாகும். அத் தகைய ஊக்கத்தோடு பெறும் ஆசிரியக் கல்வி நன்மை பயக்கும். அல்லாது ஓர் ஆண்டில் பாதி நாட்கள் வேலை செய்து முழு ஆண்டுச் சம்பளத்தைப் பெறலாம் என்றும், எழுத்தர் வேலைச் சம்பளத்தைக் காட்டிலும் ஆசிரியச் சம்பளம் அதிகம் பெறலாம் என்றும் ஊக்கங்கள் கொள்ளுவது நல்லவையன்று. நல்லூக்கங்களே குடியாட்சி அனுபவங் களுக்கு நல்லவை.

நம் பள்ளிகளில் ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பித்தற் பொருட்டு எளிய ஊக்கங்களை எட்டிப் பிடிக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு பெற்றால்தான் கல்லூரிப் புகுமுக வகுப்பில் சேர இயலுமென்று பெற்றோர்கள் தமது பிள்ளைகள் விரும்பாத பாடங்களை எல்லாம் வற்புறுத்திக் கற்கச் செய்கின்றார்கள். ஆசிரியர்களும் ஆட்சிப் பொறுப்பினர் தம்மைக் குறைவாக நினையாததற்குத் தமது ஒவ்வொரு பாடத்தையும் தேர்வளவுக்கு வற்புறுத்தியும் கண்டித்தும் வருத்தியும் வசைமொழி பெய்தும் பிள்ளைகளை உரியவராக்கி விடுகின்றார்கள். இவை யெல்லாம் பொருளற்ற ஊக்கிகள். பயனற்ற கல்வியைப் பிள்ளைகள் கட்டாயத்தால் கற்றுத் தேர்வுக்குப் பிறகு மறந்துவிடுகின்றார்கள். இங் ஙனம் நமது நாட்டில் பல நிலைகளிலும் நடைபெறுவது கண்கூடு. இதனால் குடியாட்சிக்கு உண்மைப் பயன் இல்லை. பொருளற்ற கல்வி யைப் பிள்ளைகள் பயனற்றதாகக் கருதுகிறார்கள். எனவே பயிலுங் கல்வி பயனளித்தால் பிள்ளைகள் தொடர்ந்து கற்பார்கள். நல்லூக்கங் களோடு ஒட்டிய கல்வியைப் பிள்ளைகள் மறக்க மாட்டார்கள். பிள்ளை களுடைய நாட்டம், விருப்பு, குறிக்கோள்கள், கவர்ச்சிகள் ஆகிய எல்லாம் நல்லூக்கங்கங்களின் அடிப்படையில் உண்டாகுபவை. எனவே குடியாட்சிக்கு நன்மை பயக்கக்கூடிய கல்வி குடியாட்சி முறை யில் பள்ளிகளில் அமைதல் வேண்டும்.

மக்களாட்சியில் வளரும் மன்பதை உறுப்பினர்களுக்கிடையே போட்டி மனப்பான்மை பெருகுவது இயல்பு. அஃது அறிவியல் வளர்ச்சி யால் வருவாய் பெருகிக் கொண்டே வருகின்றதனால் ஏற்படும் ஒரு விளைவாகும். இப்போட்டி தீங்கு இழைக்காமல் நலனையே பயப்பதற்குப் போதிய மன்பதை ஒழுங்குகளோ அல்லது ஒழுக்க வளர்ச்சியோ ஏற் படவில்லை. சமூகம் முழுவதும் பொருளை நாடியே நிற்கின்றது

மக்களிடையே வறுமைப் பிணியைப் போக்குவதற்கும் போதுமென்ற மனத்தை உருவாக்குதற்கும் ஆவன தேடுவாரில்லை. இவற்றிற்கு வழி கண்டால் மட்டும் பொருள் உண்டாகுமா என்ற மனநிலை மக்களிடையே உள்ளது. சமூக நலப் பணியாளர்கள் ஒரு முடிவு கண்டால் அதனை மற்றவர்கள் எள்ளி நகையாடுகிறார்கள். அரசியலாரோ மக்கட் பொதுநலனைத் தனிப்பட்ட ஒன்றாகக் கருதாமல் பொருளாதாரத்தோடு இணைத்துக் குழப்பிக் கொள்ளுகிறார்கள்.

மக்களாட்சியில் சமூக அறிவியலையே கல்வி தன் குறிக்கோளாக நாடி இருப்பதால், அதன் நாட்டத்தில் ஆட்டம் பெறுகிறது. பள்ளித் திட்டங்களை இயக்கிக் கொண்டே இருக்கும் நாகரிகத்துக்கு ஏற்பக் கல்வி இயங்க வேண்டியதாகிறது. தொடக்க நிலையில் கல்வி அரசினர் உதவி பெறுவதற்கும், மதச்சார்பு அற்றதாக அமைவதற்கும், கட்டாயக் கல்வித் திட்டத்தை வகுப்பதற்கும், தொழிற் கல்விப் பயிற்சி அளிப்பதற்கும், அவரவர்களுடைய திறனுக்கேற்றவாறு அறிவு புகட்டுவதற்கும் இன்றைய முற்போக்கை நாடும் இயக்கத்துக்கு ஏற்றவாறு குறிக்கோள்களையும் பயன்களையும் மாற்றியமைப்பதற்கும் என்றின்ன பல நோக்கங்கட்காகத் திட்டங்கள் பள்ளிகளிலேயே அப்போதைக்கப் போது புதுமை பெறுகின்றன. இவற்றை எல்லாம் பொதுமக்கள் மறந்து விடுகின்றார்கள். எங்கும் பள்ளிக் கல்வித் திறன் அற்றவர்களைக் கடுமையான தேர்வுக்கு உட்படுத்தி அவர்களுக்குக் கல்வி அளிக்க வேண்டுமென்று அறுதி இடுகிறார்கள். ஒரு சிலர் மதச் சார்பற்ற பள்ளிகளெல்லாம் மூடப் பெறவேண்டும் என்று கூறுகிறார்கள். இன்று தனித்துறைப் புலமையாளர்களோடு கல்வியாளர்கள் தொடர்பு கொண்டு கல்வி கற்பிக்கும் முறைகளைத் திருத்திய வண்ணமாக உள்ளார்கள். மொழிக் கல்வியின் பல கோணங்களில் இன்று முன்னேற்றம் காணப்படுகின்றது. ஒலிப்பதிவுத் தட்டுகள் ஒவ்வொரு மொழியின் தூய ஒலிகளை எதிரொலிக்கின்றன. மொழி ஆய்வுக்கூடங்களில் பாடங்கள் நாடாக்களில் பதிவு செய்யப்படுகின்றன. மாணாக்கர்கள் தமக்கு வேண்டிய பாடங்களை ஒலிப்பதிவுகளில் கேட்டுப் பயனடையலாம். தொலைக்காட்சிப் படங்கள் வாயிலாக நூற்றுக்கணக்கான அறைகளில் ஒரே நேரத்தில் ஆசிரியர் ஒருவர்—முப்பது மணித்துளிகள் நேரத்தில் ஒரு பாடத்தினைக் கற்பித்து விடுவார். பாடங்கள் தொலைக் காட்சியின் மூலமாக உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கற்பிக்கப்பெறுகின்றன. இங்ஙனம் புதிய கற்பிக்கும் முறைகளையும் கற்கும் வழிகளையும் [1] தொலைக்காட்சி, [2] நாடாக்களின் வழியாகவும், [3] திரைக் காட்சி, [4] வானொலி, [5] ஒலித்தட்டுகள், கற்பிக்கும் எந்திரங்கள் ஆகியவற்றின் வழியாகவும், ஆய்வுக் கழகங்கள் பலபடியாக ஆராய்ச்சி செய்

1. Television 2. Tape recorder 3. Film show
4. Radio 5. Gramaphone records 6. Teaching Machines

கின்றன. மாணுக்கர்கள் சிந்தனையைத் தூண்டிச் செயற்படுத்து வதோடு அவர் தம் கண்ணையும் காதையும் பயன்படுத்த வேண்டிய தாகிறது. கற்பிக்கும் எந்திரங்களுக்காக ஏராளமான பணம் செலவாகிறது. புது முறைப் பள்ளிகள் என்று நாம் கருது பவை கூட இன்றைய முன்னேற்றத்தின் வேகத்தாற் பின்னணி யில் நின்று விடும் போல் உள்ளன. இன்றைய ஆசிரியர்கள் புத்தறிவும் புதிய திறன்களும் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பாடப் பொருள் முதன்மையானதா? அல்லது கற்பிக்கும் முறை முதன்மை யானதா என்பது பொருளற்ற வாதம். கற்பிக்கும் வாயிலில் இரண்டும் பிரிக்க முடியாதவை. ஒன்று மாறுபடும்போது மற்றென்றினையும் மாறு படுத்தும். இவ்விரண்டனுள் எதனை வற்புறுத்துவது என்று பிணங்கித் தயங்காது சிலையில் எழுத்தைப் போல் கற்பிப்பதே நெறி முறையாகும். நமது சிக்கலுற்ற சமூகத்தில் மக்கள் பலவகையினருக்குப் பயனுறும் அறிவையும் திறனையும் ஏற்றபெற்றி கற்பிப்பதே கல்வியின் தலையாய நோக்கம்.

இன்றைய எந்திர வளர்ச்சியில் கற்பிக்கும் முறை எல்லாம் எந்தி ரங்களோடு ஒன்றிவிடும். ஓர் எந்திர அலுவலர் எந்திரத்தின் இயக்கத் தைக் கண்காணிப்பார். ஆனால் ஆசிரியர்கள் நீக்கப் பெறுவார்களோ என்றால் ஆசிரியர்கள் இலரேல் எந்திரங்களில் பாடங்கள் உருவாக முடி யாது. பிள்ளைகளுக்கு வேண்டிய பாடங்களை அவர்கள் திறனறிந்து உருவாக்க வேண்டும் அல்லவா! ஆசிரியர்கள் அயல் மொழிகளில் மாணுக்கர்களுக்குப் பன்முறை பயிற்சி அளிக்க வேண்டியதில்லை. அதனை எந்திரங்கள் அளித்து விடும். ஆனால் ஆசிரியர்களன்றே மாணுக்கர்களோடு நேர்முகமாக உரையாடி அவர்களுடைய மொழி அறிவை மதிப்பிட வேண்டும்; அவர்களுக்கு நல்ல மனப்பான்மையை ஊட்ட வேண்டும்; அவர்களுக்குக் கூடிவாழ் படிப்பினைப் புகட்ட வேண் டும். எனவே எந்திர உதவியால் பயனற்ற பணிகளெல்லாம் நீங்கப் பெற்றால் உண்மையான ஆசிரியப் பணிக்கு வேண்டிய நேரம் கிடைக் கும். எந்திரங்கள் வாணிப முறையில் வெகு விரைவில் பரவலாம். சட்டாம்பிள்ளை போன்ற எந்திரங்களினால் ஆசிரியர்களின் எண்ணிக் கையும் தேவையும் குறைவுறலாம்; கல்விச் செலவும் குறையலாம்; எல் லாம் எந்திர மயமாகலாம். எதுவாயினும் குடியாட்சி, குடிகள் ஒருவரோ டொருவர் உறவாடும் தன்மையது. எனவே எந்திர மயம் குடிகளை வற் புறுத்தலாமே யன்றிக் குடிகளிடையே வளர வேண்டிய மக்கட் தன் மையை உண்டாக்க முடியாது. பள்ளியிலும் சமூகத்திலும் கூடிவாழ் முறையில் பொருத்தப்பாடும் சமூகப் பண்பும் ஒருவரை யொருவர் உணர்ந்து கொள்ளக்கூடிய நாட்டமும் உண்டாகும்.

XIX

[1] கற்பிக்கும் கலை

பழங்காலத்தில் ஆசிரியர்கள் உறுதியான உள்ளமும் நிறைந்த ஊக்கமும் உள்ளவர்கள்; ஆசிரியத்தில் சிறந்தவர்கள். தமது ஆளுமைத் திறத்தில் உயர்வுள்ளவர்கள். அவர்களுடைய தோற்றமே அச்சத்தையும் மதிப்பையும் உண்டாக்கின. மாணுக்கர்கள் அவர்களைக் கண்டவுடன் நடுங்குவார்கள். வகுப்புக்கள் கடுமையான காட்சி அளித்தன. ஆசிரியர்கள் மாணுக்கர்களைத் திருத்தி வெற்றி கண்டார்கள். பெற்ருேரும் அவர்கள்பால் மதிப்புக் கொண்டு இருந்தார்கள். இளஞ் சிருர்களைத் தொடக்கத்திலிருந்து வணக்கி அடக்கமுற வளர்த்தார்கள். அவர்களுடைய அறியாமையைப் போக்கி அவர்களுக்கு அறிவு கொளுத்திச் சிறக்கச் செய்தார்கள். கற்பித்தல் ஒழுங்காக நடைபெற்றது. மாணுக்கர்கள் ஆசிரியர் வகுத்த வழி நின்று நலனடைந்தார்கள். பொதுவாக ஒவ்வொரு மாணுக்கனுடைய அறிவுக்கு ஏற்பக் கற்பிக்கும் திறமை அவர்பால் இருந்தது. ஒவ்வொரு மாணுக்கனுக்கும் நல்லது எது என்பதனை அவர்கள்தான் நன்ருக அறியக்கூடும் என்று வீரம் பேசினுர்கள். அடக்கமுடமை, வணக்கம், உழைப்பு, அறிவு முதலியவற்றை மாணுக்கர்கள் வெறுப்பார்களென்றே அறிந்து அவற்றினை வற்புறுத்தினுர்கள். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்ற உண்மையைக் கண்டார்கள். பள்ளிக் காலத்தில் வணங்காத பிள்ளை வாழ்க்கையில் வணங்காது என்பதனை அறிந்தார்கள். இந்த முறை வெற்றியை அளித்தது.

இம்முறை ஆசிரியத்துக்கு உடன்பாடாகுமா என்ற வினு இன்று எழுகின்றது. இம்முறையால் மாணுக்கர்கள் அன்று போல் இன்றும் சிறந்த அறிவாளி ஆகின்ருர்கள். ஆனுல் அவர்களுடைய பலபடியான வேறு திறன்களெல்லாம் வளர்ச்சி உருது குன்றிவிடுகின்றன. பழம் பள்ளிகளில் மாணுக்கர்கள் தமது இயற்கை உரிமையைப் பறிகொடுத்து அடக்கு முறையிலன்ருே அடங்கினுர்கள்! இம்முறை குழந்தைகளைக் குழந்தைகளாகக் கருதவில்லை; வயது முதிர்ந்தோரை வணக்குவதைப் போல் வயதில் இளையவர்களை வணக்கிற்று. ஒரு சிறிய பிள்ளையைச் சிறிய மனிதன் என்று இம்முறை கொண்டது. குழந்தைகளுடைய உரிமையைப் பிடுங்குவது சரியா? பள்ளியின் வகுப்பு அறைகள் பிள்ளைகள் வளரும் வளர்ச்சிக்கு அறைகளா அல்லது பிள்ளைகளை அடக்கி அடைத்து வைக்கும் சிறைச்சாலைகளா? பள்ளிச்சாலைகளை

---

1. The Art of Teaching.

எல்லாம் சிறைச்சாலைகளாக மாற்றி, வளரும் குழந்தைகளை ஒடுக்கி அவர்கள் உளப்பாங்கிற்கு எட்டாத பாடங்களை எல்லாம் கட்டாயப் படுத்திக் கற்கச் செய்து, பின்னர் மறந்து விடச் செய்வதே இத்தகைய அடக்குமுறையின் பயன் என்பது தெளிவு. ஒரோவழி பிள்ளைகள் பண்புகள் பலவற்றினைப் பயின்றுள்ளார்கள்; கற்றறிவாளர்களானார்கள். ஆனால் அவர்கள் கற்ற முறை கடிதற்குரியது. மேனாட்டுப் பல கதைகள் இத்தகைய ஆசிரியரைக் கேலி ஓவியங்களாகச் சித்தரிக்கின்றன. அன்றைய ஆசிரியர்கள் தமது கடுமையினை அறிந்தவர்களே ஆயினும் நம் மொழியில் உள்ள பழமொழிகள் மறக்கற்பாலனவல்ல. அவை 'அடியாத மாடு படியாது' 'அடி உதவுவதைப் போல் அண்ணன் தம்பி உதவ மாட்டான்' என்பவை. இளமையில் அடிபெற்று வளர்ந்தவர்கள் பெற்றோரான பிறகு அடித்தல் முறை நல்லதென்றே கருதினார்கள். ஆனால் இம்முறையினை உள நூலாசிரியர்களும் உடல் மருத்துவர்களும் கண்டிக்கிறார்கள். பழங்காலத்தில் இம்முறை பயனளித்த தாயினும், இன்று இஃது கண்டிக்கற்பாலது. பழம் பள்ளிகளெல்லாம் மனிதத் தன்மை அற்ற ஆசிரியர்களுடைய மன்றங்கள். அவை மாணாக்கர் களுடைய வளர்ச்சியினைக் குன்றச் செய்தவை. அன்று ஆசிரியரை மாணாக்கன் அணுக இயலாது. இருவரும் நேர்முகமாக ஒருவரை ஒருவர் காணுவது என்றால் அதன் விளைவு கொடியது. ஆனால் இன்று இருவரும் புன்னகை பூத்து அளவளாவும் காட்சி இனியது. இன்றைய இளைஞனை அடக்கு முறையால் அடக்கலாம். ஆனால் அடக்கு முறை யால் அவனது உள்ளத்தைப் பண்படுத்த இயலாது. அன்றைய ஆசிரியர்பால் எழுந்த அடக்கு முறை, இன்றைய மாணாக்கர்பால் எழும் ஒழுங்கு முறையாக மாறி வருகின்றது. ஒழுங்கு முறை மாணாக்கர் களுடைய உரிமை ஆற்றலில் வளர்ந்த ஒழுக்க முறையாக மிளிர் கின்றது. புறத்தை வற்புறுத்திப் பெறும் அடக்கத்தைக் காட்டிலும் அகத்தை அள்ளும் அடக்கம் சிறந்ததாயிற்று. அன்றைய ஆசிரியர்கள் அவர்களுடைய மாணாக்கர் ஒவ்வொருவரையும் அறிந்தவர் என்று நினைத்துக் கொண்டார்கள். ஆனால் இன்றைய ஆசிரியர்கள் தொடக் கத்திலேயே ஒவ்வொரு பிள்ளையையும் அறிந்து அதன் பிறகு ஆசிரியத் தொடர்பு பெறுகிறார்கள்; வேண்டிய அளவு கற்பிக்கிறார்கள். தண்டனை விதிப்பதும்கூட உடன்பாட்டு நேர் நிலையில் அன்றி எதிர்மறை நிலையில் அளிப்பதில்லை. பிழை செய்த பிள்ளையையும் பரிவோடு நோக்கிப் பிழைக் காரணத்தை அறிந்து பிழையைக் கடியாது பிழை இழைத்தலைத் தடுக்கின்றார்கள்.

புதிய கல்வி முறைகள் நமது பள்ளிகளை உளநூல் கருத்துக்களின் அடிப்படையில் அமைக்கின்றன. பள்ளியிற் சேர்ந்த குழந்தைகள் தமது சூழ்நிலையினை நீத்துத் தம்மைவிட வயது முதிர்ந்தோர்—தமக்கு ஒவ்வாத வேறுபட்ட வயது முதிர்ந்தோராகிய ஆசிரியர் ஆகியோருடைய பழக்க வழக்கச் சூழ்நிலையில் சிக்கிக் கொள்ளுகிறார்கள். இதனால்

குழந்தைகள் தமது உரிமையோடு பழகத் தயக்கமடைகிறார்கள். தம்மை அறியாமலே பிழை செய்கிறார்கள். உதவி பெறுவதற்கும் தயக்கம், அவர்களுடைய உள்ளத்தில் ஒரு பூசல்: ஆசிரியர்களைக் கண்டு அஞ்சுகிறார்கள். பள்ளிச்சாலையே தமது விருப்புக்குப் புறம்பான தென்று மனப்புழுக்கம் கொள்ளுகிறார்கள். இத்தகைய ஓர் அவல நிலையிலிருந்து சிறிது சிறிதாக மீட்சி பெறுகிறார்கள். ஆயினும் பிள்ளைப் பருவத்தில் இயற்கைக்கும், வயது முதிர்ந்தவர்களுடைய ஒழுங்கு நிலைக்கு ஒப்ப நடந்து கொள்ள வேண்டிய பொறுப்புக்கும் வேறுபாடு காணப்படுகிறது. பிள்ளைகளெல்லாம் துள்ளித் திரிகின்ற காளையர்கள். அவர்கள் சிறிது நேரம் ஓடியும் ஆடியும் ஒரு சிறிது நேரம் அமர்ந்தும், எதையாகினும் செய்து கொண்டும் இருப்பது இயற்கை. அன்னாரை ஓடாமலும் ஆடாமலும் ஒடுக்கி அவர்களுடைய துடுக்கு அடக்கி அவர்களைக் காலை முதல் மாலை வரையில் வகுப்பில் மடக்கி வைப்பது பெரும் பாவம் அன்றோ! நல்லாசிரியர் ஓரளவு பிள்ளையினுடைய எதிர்ப்பினை விட்டுக் கொடுக்கிறார். பிள்ளைகளுடைய எதிர்ப்பு எல்லாம் தம்மைச் சூழ்நிலையில் பொருத்திக் கொள்ளும் வழியே நிகழும் எதிர்வினை யாகையால் ஆசிரியரும் பிள்ளைகளுடைய நன்மையைக் குறித்து அவர்களுடைய தன்னுணர்ச்சி, தன்னம்பிக்கை ஆகியவை வளருவதற்காக விட்டுக் கொடுக்கிறார். ஆனால் ,பணிவும் அடக்கமும் பெரிதும் காணப் பெறும் மாணக்கன் எதிர்ப்புத் தன்மை நீங்கப் பெற்று எந்திரத்தைப் போல் வணங்க முற்படுகிறான். மனத் தடுமாற்றம் கொண்ட பிள்ளைகளை நல்லாசிரியர் கடுமையாகக் கடிந்தால் தடுமாற்றம் மிகும் அல்லவா! அதனால் அவர்கள் அத்தகைய பிள்ளைகளுடைய கவனக் குறைவின் காரணத்தை அறிய முற்படுவார்கள். அதன் காரணம் பள்ளியைச் சார்ந்ததாகவும் அல்லது வீட்டுச் சூழ்நிலையைச் சார்ந்ததாகவும் இருக்கலாமன்றோ! அல்லது பிள்ளைகளுடைய உடல் நிலை, உள்ள நிலை, உணர்ச்சி நிலை முதலானவற்றினைச் சார்ந்ததாகவும் இருக்கலாமன்றோ? அங்ஙனம் ஆசிரியர் தமது மனப்போக்கில் வாளா இருக்கும் பிள்ளைகளை எல்லாம் கடிந்து அச்சுறுத்தி வந்தால் அவர்களுடைய பள்ளி வாழ்க்கை எங்ஙனம் நலமுறும்? எனவே பள்ளிப் பிள்ளைகளுடைய ஒவ்வொரு குறைபாட்டிற்கும் ஒரு காரணம் இருந்தே தீரவேண்டும். அக் காரணத்தை அறிய விழைகின்றவனே நல்லாசிரியன். எல்லாக் குறைபாட்டினுக்கும் பிறப்பிடம் பிள்ளைகளுடைய இல்லங்களேயாம். பெரும் பான்மை இஃது உண்மை ஆகும். இல்லச் சூழ்நிலையை நன்றாக அறிந்து கொள்ள வேண்டியது ஆசிரியக் கடமை. தாயற்ற நிலை, தந்தையற்ற துன்பம், வீட்டிற்கு முதற் பிள்ளையாக இருத்தல், தனி ஆண் பிள்ளையாகுதல், கடைசிக் குழந்தையின் கவனிப்பற்ற நிலை, பெரிது உழைக்கும் தாய், பெற்றோரின் கடுமை, பெற்றோரின் அடக்க முறை, தந்தை தாயருக்குள்ள பிணக்குகள், உடன் பிறந்தாரோடு உற்ற மனத்தாங்கல்கள் இன்னோரன்ன பிற காரணங்கள் ஒன்றோ பலவோ

பிள்ளைகளுக்கு மனக் கசப்பினை ஏற்படுத்திப் பள்ளிச் சூழ்நிலையில் தடுமாற்றத்தை உண்டாக்குவது இயல்பு.

நம் பிள்ளைகளிடமிருந்து அவர்களுடைய திறன்களைப் பேரளவு வெளியாக்க வழி வகுக்கலாம். பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒன்றாகச் சேர்ந்து அளவுக்கு மிஞ்சி அவர்களுக்குப் பேராசையை ஊட்டி ஊக்குவித்தாலும் அவர்கள் பெரும்பாலும் நேர்மாறாக நமக்குக் காட்சி அளிப்பது உண்டு. இதனால் நன்மைக்கு மாறாகத் தீமையும் ஏற்படுவதும் உண்டு. எனவே பிள்ளைகளுடைய உளநிலையை அறிந்து, மனப்பான்மை உணர்ந்து, அவர்களது ஆற்றலுக்கு ஏற்றபடி அவர்களுடைய அறிவையும், திறனையும், மன உறுதியையும், தன் மதிப்பையும், வளர்த்தால் அவர்களது வளர்ச்சிக்கு உண்மையான உதவி புரிதலாகும். பள்ளிகள் எல்லாப் பிள்ளைகளையும் ஒரு வார்ப்புப் பொருள் போன்று ஆக்குவதில் பயனில்லை. பிள்ளைகள் இயற்கையாகவே வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலையை அளித்து உதவுவது சிறந்த ஆசிரியமாகும். பலத்த அடக்குமுறையும் கட்டுப்பாடும் இயற்கை வளர்ச்சிக்கு இழுக்காகும். கட்டுப்பாடற்ற வளர்ச்சி நல்லது என்பதை யாவரும் ஒத்துக் கொள்ளுவார்கள். துடுக்கடக்காத பிள்ளைகள் துள்ளி ஓடுவார்கள் அல்லவா? அவர்கள் நல்ல நிலையில் துலங்குவது எங்ஙனம்? ஆசிரியர்கள், பிள்ளைகளுடைய மனம் போகிறபடி விட்டுவிட்டால் அவர்களை எப்படித் திருத்த இயலும் என்று வினாச் சில எழும். விளையாட்டே பிள்ளைகளுடைய இயற்கை. ஆசிரியர் அவர்களை விளையாட விட்டுக் கொண்டே இருந்தால் அவர்களைக் கற்கச் செய்வது எப்படி? பிள்ளைகள் உரிமை வழியில் வளர வேண்டியது இன்றியமையாதது. உரிமை வழியிலேயே பொறுப்பு, தன்னடக்கம், தாமாகவே பணிதல், தோழமை ஆகிய பண்புகளைக் குடியாட்சி அமைப்புப் பள்ளிகளில் வளர்ப்பது சாலச் சிறந்தது. ஆனால் இப்பண்புகளெல்லாம் நேர்மாறாகக் கெடுதலும் ஊட்டும் அல்லவா? தன்னுணர்ச்சி இறுமாப்பாகவும் பிடிவாதமாகவும் ஆடம்பரமாகவும் செருக்காகவும் வளரலாம். உரிமை, அறிவு மழுக்கத்தையும் சோம்பலையும் அக்கறையின்மையையும் பொறுப்பற்ற பேச்சையும் உண்டாக்கலாம். ஆசிரியரோடு கொண்ட உறவு அச்சமின்மையில் இருந்து பணிவின்மையாக மாறலாம். தனது எண்ணம் பிடிவாதமாகத் திருப்ப முறலாம். மாணவர் ஆட்சியில் நடைபெறும் பள்ளி மாண்பிழந்து நகைக் கூத்தாகவும் கேலி விளையாட்டாகவும் மாறக்கூடும். இவை எல்லாம் நிகழாமற் போனாலும் ஓரளவு நிகழ இடமுண்டு.

பழைய முறைக் கல்வி பிள்ளைகளுக்கு மிகவும் வேண்டியவற்றைத் தேடித்தந்தது. புது முறைக்கல்வி அதைத்தான் செய்ய முற்படுகின்றது. ஆனால் அதுதான் பிள்ளைக்கு நல்லது என்று புலனீடாகவும் திட்டவட்டமாகவும் கூற இயலுமா? ஆசிரியனுக்குத்தான் ஒரு பிள்ளையைப் பற்றி எல்லாவற்றையும் அறிய இயலுமா? இதை அறிய வேண்டி

யதே ஆசிரியத்துக்கு இன்றியமையாதது. அல்லாக்கால் வயது முதிர்ந்தவனாகிய ஆசிரியன் தனது விருப்பத்தினைப் பிள்ளையினுடைய கடமையாக வற்புறுத்துவானன்றோ? ஆசிரியர்கள் குழந்தைகளோடு பழகுகிறார்கள்; அவர்களுக்காகத் தமது பணியினை ஆற்றுகிறார்கள். இக் குழந்தைகள் எல்லாம் வளரும் மனிதப் பயிர்களாவார்கள். கடவுளால் படைக்கப் பட்டவர்கள் அறிவோடும், திறனோடும், மகிழ்வோடும் மாண்பு பெற்று மாநிலத்தில் வாழ வழி கற்றுக்கொள்ளுமாறு படைத்தவராகிய கடவுள் எதிர்பார்க்கின்றார். இவை எல்லாவற்றையும் வகுத்துத் தரவேண்டிய கடமை ஆசிரியருடையதாகும். இப்பெரும் பணியினை ஏற்று நடத்தும்போது இடர்ப்பாடுகள் இடையிடக்கூடும். அதனால் சிறிதும் தளராது அறநெறியிலேயே ஒழுகவேண்டும். இதுவே ஆசிரியனுடைய கடப்பாடு.

மேற்கூறிய குறிக்கோள்களைப் பழைய முறையும் புதிய முறையும் ஏற்றுக்கொள்ளும். பழைய முறையில் ஆசிரியன் ஒரே நெறியில் நின்றான். மாணாக்கனுக்கு நன்மை பயப்பது அவன் மேற்கொண்ட அறநெறி. அத்தகைய நன்னெறியை நயம்படக் கருதாது, ஓதுக்குவது முறையாகுமா எனக் கருதுதல் வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் கல்வியின் வழியாக அதற்கு வேண்டிய பாதுகாப்பும் வளர்ப்பு நிலையும் பெறுதல் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. இவ்வழியினை வகுக்க ஆசிரியர் குழந்தையைக் குழந்தையாகக் கருதுவதோடு பரிவும் இரக்கமும் கொண்டு உறவாட வேண்டும். தனி ஒரு பிள்ளையை மட்டும் அங்ஙனம் கருதுவதோடு நில்லாது ஓர் ஆசிரியனுடைய பொறுப்புக்கு அடங்கிய தன் வகுப்புப் பிள்ளைகள் எல்லோரையும் அங்ஙனம் கருத வேண்டியது கடமையாகும். அப்படிக் கருதாததே இன்றைய அவல நிலை; ஆசிரியத்தின் குறைபாடு; மாணாக்கர்கள் வாழ்க்கையில் தோல்வியுறக் காரணம். எனவே ஆசிரியர் ஒவ்வொரு குழந்தையையும் நல்ல முறையில் பேணுதல் தொழிற் கடமையே அன்றிக் கடவுட் கட்டளையுமாகும். பிள்ளைகளைப் பிள்ளைகளாகக் கருதினால்தான் பிள்ளைகள் ஆசிரியர்பால் பெறும் அன்பிலேயே வளர்ந்து ஆசிரியருடைய பேரருளில் இரண்டறக் கலந்து விடுவார்கள். பொதுவாக ஆசிரியர்களைக் கேட்டால் அவர்கள் மாணாக்கர்கள் மீது அன்பு கொண்டுள்ளதாகக் கூறுவார்கள். ஆனால் முதன்மையாகக் கருத வேண்டியது ஆசிரியர்கள்பால் மாணாக்கர்களுடைய உறவு நிலை யாது என்பதே. வெளிப்படையாக அவர்கள் ஆசிரியர்களைக் கண்டால் அஞ்சுவார்கள்; பணிவும் காட்டுவார்கள். உள்ளத்தின் உறவு யாது என்பதை அவர்களுடைய புற ஒழுக்கத்தில் தான் கண்டறிய இயலும்.

நம் ஆசிரியர்கள் பலர் மாணாக்கர்கள் ஒரு சிலரை மட்டும் வழுத்துவது வழக்கம். அதற்குக் காரணம் அவர்களுக்குத்தான் தெரியும்; சிறப்பாக அத்தகைய ஆசிரியர்களின் அன்பெனும் பிடியில் அவர்கள் அகப்பட்டுக் கொண்டதே காரணமாகும். ஒரு மாணாக்கன் தவறிழைத்

தால் ஆசிரியர் குற்றம் சாட்டத் தலைமையாசிரியர் அல்லது முதல்வர் சட்டத்தைப் புரட்டிப் பார்த்து மாணக்கனைக் குற்றவாளி ஆக்கிக் குற்றத்திற்கு ஏற்பத் தண்டனை விதிக்கிறார். மாணக்கர்கள் தவறிழைத்தற்குத் தமது பொறுப்பு எவ்வளவு என்பதனை அறியத் துணியும் ஆசிரியர் எத்துணை பேர். முதற்கண் தமது பிழையை அறிந்து அல்லவா மாணக்கன் இழைத்த தவற்றினை அறியவேண்டும். ஒரு பாடத்தினைக் கற்பித்த பிறகு தேர்வு நிகழ்த்துவது வழக்கம். தேர்வில் தேறிய பிள்ளைகளை நன் மாணக்கர் என்றும், தவறியவர்களைக் கடை மாணக்கர் என்றும் பாகுபாடு செய்து வருகிறார்கள். நன் மாணக்கருக்குப் பாராட்டுதல்; கடை மாணக்கருக்கு கடுமையான தாக்குதல்— இவையே வகுப்பறையின் காட்சிகள். இத்தகைய பழைய முறை நெடுங்காலமாக நமது வளரும் சிறுவர்களை நசுக்கி வந்துள்ளது. தனது மகன் அல்லது மகள் கடை மாணவராகி விட்டால் பெற்றோனாகிய ஆசிரியனது மனநிலைப்படி இருக்கும்? எவ்வளவு சுறு சுறுப்பாகவும் அக்கறையாகவும் தனது குழந்தையைத் திருத்த முயலுவான் என்பது சொல்லாமலே விளங்கும். கற்றுக்கொள்ளாத பாடத்தினை மாணவர்களுக்கு ஏற்ற முறையில் அல்லவா மீண்டும் கற்பிக்க வேண்டும்? ஆசிரியர் தமது கடமைகளை ஆற்றுவதில் மிக்க விழிப்போடு பலவகைகளில் ஓர் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். ஆசிரியருடைய பழக்கங்கள் ஒரு சிறிதாயினும் தளருமேல் மாணக்கர்கள் பலபடியாகத் தமது ஒழுங்குகளில் தளர்ந்து விடுவார்கள்.

ஆசிரியர்களாயினும் மாணக்கர்களாயினும் எவராயினும் தமது திறனை மற்றவர்கள் ஒப்புக்கொள்ளுவதில் ஒரு மகிழ்ச்சி அடைவர். இதனை யாரும் மறுக்க முடியாது. ஆசிரியர்களோ புகழுரை எங்கிருந்தாவது கிட்டுமா என்று காத்துக்கொண்டும், சிலர் தேடிக்கொண்டும் இருக்கிறார்கள். புகழ் கிடைத்தவுடன் அவர்கள் உடலும் உள்ளமும் பூரிக்கின்றன. பூரிப்பு ஆர்வத்தை ஊட்டுகிறது; புதிய ஆற்றலைப் பிறப்பிக்கின்றது. இதைப்போன்ற பாராட்டுதலை மாணக்கர் மனமும் நாடும் அல்லவா! நல்லாசிரியர்கள் இத்தகைய தூண்டுதலை மறுத்தல் கூடாது. கடை மாணக்கர்களிடத்திலுங்கூட யாதாகிலும் குணம் பாராட்டுதற் குரியதாக இருக்கும். அதனைக் கண்டறிந்து பாராட்ட வேண்டும். எல்லா மாணக்கர்களையும் ஒரு முகமாகக் கருதவேண்டும். ஆசிரியருக்கு வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற கூற்று தீயது. எந்த ஒரு வகையிலாவது வெற்றி காணும் ஒரு வாய்ப்பினைப் பெற்றால் அம்முதல் வெற்றி அவனுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிக்கும். நம் பள்ளிகளில் நடத்தும் தேர்வுகள் ஒரு வகுப்பில் உள்ள எல்லா மாணக்கர்களுக்கும் ஏற்றவை என்பது ஆசிரியருடைய எண்ணம். அவை தேர்வுறாத மாணக்கர்களுக்குப் பொருத்தமற்றவை என்பது கண்கூடு. அத்தகைய மாணக்கர்களுக்கு உற்ற வகையில் ஓர் எளிய தேர்வினை நிகழ்த்தி வெற்றி காணச் செய்தால் அவர்களுடைய உறக்க

முற்றிருக்கும் உள்ள நிலை விழிப்புப் பெறும். இவ்வெற்றியினால் அம் மாணவர்கள் ஒரு மலர்ச்சி பெறுவார்கள்.

ஆசிரியர்களுக்குள் தகுதி ஒன்றேயாயினும் அனுபவமும் கூட ஒத்தது ஆயினும் கற்பிக்கும் முறையும் ஒரே முறையாயினும் ஒரு சிலரே கற்பிக்கும்போது சுவைபடக் கற்பிக்கிறார்கள். மாணாக்கர்கள் எல்லோரும், சுவைபடக் கற்பித்தால் பாடம் கடினமாயினும் எளிதாகக் கற்றுக் கொள்ளுவார்கள். பிறர் எவ்வளவுதான் உழைத்துக் கற்பித்தாலும் வகுப்பில் ஒரு மந்த நிலை தான் உண்டாகிறது. பாடத்தின் மீதும் பிள்ளைகளிடத்திலும் அக்கறை உள்ள ஆசிரியர் பாடத்தினை மாணாக்கர்களுடைய அகக் குறிப்பறிந்து ஏற்றவாறு சுவைப்படுத்த வேண்டும். மாணாக்கர்களுடைய சுவைப் போக்கினை அறிந்து அவற்றைப் பாடத்தில் பெய்தால் ஒரோ வழி பாடம் சுவை பெறலாம். எப்படிப் பெய்வது என்பதை விளக்குதல் இயலாது. கற்பிக்கும் பாடம் மாணாக்கர்கள் அறிந்தவற்றோடும் பார்த்த பொருளோடும் செய்தனவற்றோடும் ஒட்டி இருந்தாலன்றி அவர்களுடைய உள்ளத்தில் ஒட்டாது. இவ்வழி பழைய ஆசிரியர்களுக்கும் புதிய முறைகளில் கவர்ச்சி கொள்ளும் ஆசிரியர்களுக்கும் உடன்பாடானது. எவ்வளவு தான் வாயால் பேசினாலும் புத்தகங்களைப் புரட்டிப் படித்துக் காட்டினாலும் கருத்துக்களைத் திரட்டி எழுதிக் கொடுத்தாலும் இத்தனைக்கும் மாணாக்கர்களுடைய கவர்ச்சியைப் பெறாவிட்டால் பாடம் இனிக்காது; பட்டறிவோடு ஒட்டாது; உள்ளத்தில் படியாது; உணர்ச்சியைத் தட்டாது. எந்த வகையில் கற்பித்தால் மாணாக்கர்களுடைய கவனத்தையும் விருப்பையும் தேர்ச்சியையும் ஈர்க்குமோ அதுதான் சுவைபடக் கற்பித்தலாகும். இம்முறையில்தான் ஆசிரியம் வெற்றி காண முடியும். மாணாக்கர்களுக்குப் போதிய தூண்டலை அளிக்கவும் துலங்கல்களைப் பெறவும் போதிய அடைவினைப் பெறுவிக்கவும் கூடும்.

பழைய முறைக் கல்வியில் ஓர் இழுக்குத் தொடர்ந்து வந்தது. மாணாக்கன் ஆசிரியனைக் கண்டு அச்சம் கொண்டதோடு நடுக்கமும் கொண்டான். ஆசிரியனுடைய ஆணையிடும் உரிமை மாணாக்கர்பால் அச்சுறுத்துதற்கே செலுத்தப்பட்டது. மாணாக்கர்கள் கைகட்டியும் வாய் பொத்தியும் வணங்கினார்கள். வாய்விட்டு ஏனென்று வினவவும் நடுங்கினார்கள். ஆனால் இன்று ஆணை கூட்டுறவிலும் ஒத்துரிமையிலும் பிறந்து உரிமையோடு கூடிய கடமையாக மலர்கின்றது. ஆணையைப் பிறப்பிக்கலாம்—ஆனால் அது தன்னாட்சித் தன்மையிலிருந்து பிறந்தால் அடக்கத்தோடு ஒடுக்கத்தையும் உண்டாக்கும். புத்துலக ஆசிரியன் உயிர்ப்பினை ஊட்டக் கூடியவன்; உள்ளத் தடையினைச் செய்யமாட்டான். அவன் பாடத்தைக் கற்பிக்கும்போது அவனை வகுப்பில் உள்ள மாணாக்கர்கள் எல்லாம் தொடர்ந்து செல்வார்கள். அவன் அவர்களை இழுத்துச் செல்ல வேண்டியதில்லை. எனவே எப்போதும் ஆசிரியனுக்கும் மாணாக்கருக்கும் இடையே நம்பிக்கையும் ஒருவரை

ஒருவர் புரிந்து கொள்ளக்கூடிய தூய உறவும் கூட்டுறவில் அமைந்த ஒற்றுமை மனப்பான்மையும் வேண்டியதாகின்றன. பாடப் பணியிலும் பள்ளிப் பணியிலும் ஆசிரியரும் மாணக்கரும் தனித்து நில்லாது ஒற்றுமையோடு கலந்து பல திட்டங்களை வகுத்துச் செயலாற்றுகிறார்கள். இங்ஙனம் கூட்டுறவுப் பொருத்தப்பாடும் கூடிவாழ் நடத்தையும் வளர்ச்சி அடைகின்றன.

ஆசிரிய நிலைக்கு எய்திய பிறகு பொறுமையும் ஓரளவு பண்பும் தன்னம்பிக்கையும் உள்ளவுறுதியும் ஆசிரியத்தில் பெருமதிப்பும் புதிய முறையினர் கற்றுக்கொள்ள வேண்டும். பழைய ஆசிரியர்கள் ஆசிரியத்துக்கே தம்மை உரிமையாக்கிக் கொண்டார்கள். அதற்குத் தம்மைக் காணிக்கை ஆக்கினார்கள். இன்றைய ஆசிரியர்கள் மாணக்கர்களுடன் உறவாடுவதுடன் நில்லாது ஆசிரியத்தில் மனவெழுச்சி பெற வேண்டும்; கல்விப் பணியாளன் என்று மட்டும் கருதுதல் கூடாது. இளைஞர்களுக்காகவே தமது வாழ்க்கை உரித்தாகுமென்ற உறுதி கொள்ளுதல் வேண்டும்.

கற்பித்தல் செயல் முறை:

கற்பித்தற் செயல் முறையில்—மாணவர், கற்கும் பொருள், பள்ளி, பள்ளியின் சூழ்நிலை, ஆசிரியருடைய குறிக்கோள் ஆகியவை எல்லாம் அடங்கும். அறையில் அமைந்திருக்கும் வசதிகளாகிய மேசை, நாற்காலி, ஒளியோட்டம், காற்றோட்டம், துப்புரவு, சுற்றுப்புறம், அமைதி ஆகியவையும் கற்பித்தல் பணிக்குத் துணை புரியும். ஆசிரியருடைய கல்வியைப்பற்றிய சிந்தனைகள் பல்வேறாக மாறிக்கொண்டும் அவர் உள்ளத்தை இயக்கிக் கொண்டும் இருத்தலால் அவருடைய ஆசிரியத்திலும் வேறுபாடு நிகழ்ந்து கொண்டே இருக்கும். ஒரு சிலர் ஒரே குறிக்கோளைப் பற்றுக்கோடாகக் கொண்டு ஒரே பழக்கத்தை வகுப்பறையில் கையாளுவதுண்டு. இத்தகைய ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு நெட்டுருப் பாடங்களை வழங்குவதையே தமது பெரும்பணியாகக் கருதுகிறார்கள். ஆற்றலுடையவர்கள் முற்போக்குப் பள்ளிகளில் பணியாற்ற விழைகிறார்கள். மற்றும் சிலர் பழமையைப் பாடங்களாகப் பகுத்துப் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதுதான் தமது வேலை என்று கருதுகிறார்கள். இன்னும் மற்றவர்கள் நடைமுறையைப் பாடங்களாக்கிப் பழையனவற்றை வேண்டிய அளவு மட்டும் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். எனவே அவரவர்களுடைய கருத்துக்கும் ஆற்றலுக்கும் ஒப்ப வகுப்பறைப் பணிகள் இன்பத்தைத் தருகின்றன. அல்லது வகுப்பொழுங்கு கெட்டால் துன்பமும் ஏற்படுகிறது. ஆசிரியர் ஒரு சிலர் [1]பாடங்களை மட்டுமே கற்பிப்பதுண்டு. மற்றவர்கள் [2]பிள்ளைகளை நோக்கிக் கற்பிப்பதுண்டு. பிள்ளைகள் முக்கியமா அல்லது பாடங்கள் முக்கியமா

1. Teach the subject 2. Teach the pupil

என்பது கருதற்பாலது. பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர் பாடத்தி லேயே தமது முழுக் கவனத்தைச் செலுத்தி விடுவார்; பிள்ளைகளைக் கவனிக்க மாட்டார். அவருடைய சிந்தனை எல்லாம் ஒவ்வொரு பாடப் பகுதியையும் நிரப்புவதும் குறைப்பதுமாகத்தான் அமையும். அப்படிச் செய்வதால் அவர் தன்னைச் சிறந்த ஆசிரியராகக் கருதிக் கொள்ளுவார். பள்ளி நாட்களோடு விடுமுறை நாட்களிலும் வகுப்புக்கள் நடத்திப் பாடங்களைத் திட்டப்படி முடிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப் பார். அவர் பற்றிக் கொண்டிருப்பது பாடம். மாணவர்களைப் பற்றி அவருக்குக் கவலை இல்லை. அவர் மனம் திளைப்பதெல்லாம் பாடத்தோடு நின்றுவிடும். ஆற்றல் உள்ள ஆசிரியர்கள் பிள்ளைகளைக் கவனிப்பார் கள்; பிள்ளைகளுடைய ஊக்க நேரங்களை அறிவார்கள்; அவர்களுடைய விருப்புக்களை அறிவார்கள்; அவர்களுடைய பட்டறிவைத் தேடுவார் கள்; ஆர்வத்தை உண்டாக்குவார்கள். இத்தகு முறையில் பிள்ளை களுடைய அகக் குறிகளைக் கண்ணுற்றவாறே பாடம் நடைபெறும். பாடத்தையும் வழிவழி முறையில் கற்பிக்காமல் பிள்ளைகளுடைய உள்ளாற்றலுக்கு ஏற்றவாறு அதைப் பலபடியாக மாற்றியும், திருத்தி யும் அமைத்துக் கொள்ளுவார்கள். பிள்ளைகளுடைய இணக்கமறிந்து அவர்களுக்கு ஏற்றவாறு இணங்குவார்கள். பிள்ளைகளுக்கு ஊக்கம் ஊட்டுவதே அவர்களுடைய கவலை. பிள்ளைகள் ஊக்கம் பெற்றுவிட்டால் பாடம் எவ்வளவு கடினமாயினும் எளிதாகிவிடும். பிள்ளைகள் தாமாகவே பாடத்தைக் கற்றுக் கொள்ளுவார்கள். கற்றல் நிலை எய்திய பிறகு கற்பவை வெகு எளிது. பாடத்தைச் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்—பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் இருவருள் யார் ஆசிரியத்தை அறிந்தவர் என்று அறிவது எளிது. ஒவ்வோர் ஆசிரியருக்கும் [1] உறுதிப் பொருள்களின் அளவை வேண்டும். வேறு வேலை கிடைக்காததால் ஆசிரியத் தொழிலுக்கு வருபவர் வேறொரு பணியின் மீது நாட்டம் உள்ளவர். ஆசிரியப் பணியை ஏற்றுக் கொள்ளுபவர் வெறும் பிழைப்புக்காகவும் பணத்துக்காகவும் ஆசிரியர் ஆவது ஆசிரியத்துக்கு இழுக்காகும். அத்தகையோர் ஆசிரிய வாழ்க்கைக் குறிக்கோள்கள் அற்றவர்கள். நமது குடி ஆட்சியின் எதிர்காலம், நாம் வகுக்கும் கல்வித் திட்டத்தை ஒட்டியது; நல்லாசிரி யர்களை ஒட்டியது; நல்லாசிரியப் பணியை ஏற்க விருப்பமற்றவனும் ஆசிரியத்தின் மேன்மையை அறியாதவனும் ஆசிரியக் குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்புகள். மற்றவர்களுங்கூட ஆசிரியத்தில் நம்பிக்கையோடு, கல்வித் தத்துவங்களில் ஆழ்ந்த கருத்துக்களை நிறையக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு சிக்கலையும் தீர்க்க வழி காட்டும்போது அவர் புதுப் புதுத் தத்துவங்களைச் சிந்தனை செய்வார்.

உள்ளத்தை ஒழுங்குபடுத்துவதென்பது ஒரு கல்வித் தத்துவத்

1. Scale of values

தைச் சார்ந்தது. அதன்வழி கற்கும் மாணவர்கள் அறிவியற் பெற்றிகளாகிய ஆராய்ந்தறிதல், நினைவு வளர்த்தல், கற்பனை, மனஉறுதிப்பாடு ஆகியவற்றைப் பெற இயலும். இவற்றைப் பெறுவதற்குக் கணிதம், பழைய மொழிகள் ஆகியவற்றைக் கற்றனர்கள். இங்ஙனம் ஒரு [1] முறைமை தழுவிய பயிற்சியில் ஈடுபாடு கொள்ளும் ஆசிரியர் அவருடைய ஆசிரிய முறையை அதற்கென்றே வகுத்துக் கொள்ளுவார். அவர் கருதுவதெல்லாம் ஒரு சில மனப்பெற்றிகள், ஒவ்வொன்றுக்கும் ஏற்றவாறு முறையினை அமைத்துக் கொள்ளுதல் ஆகியவையே. வகுப்பறையை மகிழ்விடமாக மாற்ற வேண்டுமென்று கருதுபவரோடு அவர் முரண்படுவார். கல்வியின் பயனால் ஒழுங்கு முறைமையையும் இன்பத்தினையும் ஒருங்கே எப்படிப் பெறக்கூடும் என்பார். இவர் போன்றவர்கள் வருங்கால வாழ்க்கைக்கு வழி காட்டும் ஆசிரியர்கள்; தமது குறிக்கோளுக்கு ஒப்ப அவர்கள் பாடப் பொருள்களையும் முறைகளையும் வகுத்துக் கொள்ளுவார்கள். தேர்வுகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுடைய முறை, இவற்றினின்றும் வேறுபட்டது. இவை யாவுமின்றிப் பிள்ளைகள் ஒரு குடியாட்சிச் சமூகத்தில் வாழப் பழகிக் கொள்ளுவதென்றால் கற்பிக்கும் முறையும் கற்பிக்கப்பெறும் பொருள்களும் வேறாகவே அமையும்.

பல நாடுகளில் பல்வேறாக முறைகளும் கற்கும் பொருள்களும் மாறுபடுகின்றன. நல்ல குடிமகனாக ஆக்குவதென்றால் ஒருவகை; குடியாட்சியில் அங்கம் வகிப்பதென்றால் மற்றொரு முறை; குடிமகனாகி நாட்டாட்சிக்கு அடங்கி நடப்பதென்றால் பிறிதொரு முறை. கிரேக்கக் கல்வி—ஸ்பார்டாவிலும் ஆதென்சிலும் அமைந்த முறைமையினை அறிந்தோம். ஆதென்ஸ் பேரறிவாளரைத் தந்துதவியது. ஸ்பார்டா போர் வீரர்களை உருவாக்கியது. செர்மனியர்கள் இட்லர் காலத்தில் நாக்ஸி ஆட்சிக்கு அடிபணிவதற்குக் கற்றனர்கள். ‘இட்லர் நம:’ என்று நாமாவளி பாடினார்கள். வல்லரசுகள் குடிகளைச் சிந்திக்க வொட்டாது தடுக்கக் கல்வி அமைத்தன. செர்மனியிலும் இத்தாலியிலும் போர்ப் பயிற்சி மீதுற்றது. உருசியாவில் கம்யூனிசச் சமூகத்தில் வாழ உருசியக் கல்வி முறை உதவுகிறது. நமது நாட்டில் குடியரசில் நல்ல குடிமகனாக வாழப் பங்கெடுத்துக் கொள்ளுவதற்கும் நாட்டு முன்னேற்றத்தில் நாட்டம் கொள்ளுவதற்கும் பல துறைகள் ஏற்றம் பெறுவதற்கும் திறமையினை வளர்ப்பதற்கும் கல்விப் பொருள்களும் முறைகளும் அமைந்துள்ளன.

பாடத்தைச் சொல்லிக் கொடுப்பதைக் காட்டிலும் பிள்ளைக்குக் கற்பிப்பதுதான் முறை என்று சிறந்த கல்வியாளர்கள் அறிவுறுத்துகிறார்கள். பிள்ளைகளுடைய வளர்ச்சியே கல்வியை மதிப்பிடும் கருவி. பாட ஆசிரியர்கள் வெறும் பாடக் கருத்துக்களைத் திணிப்பது கல்வி

---

1. Formal discipline.

அன்று. பாட ஆசிரியர் ஒவ்வொருவரும் பாடக் கட்டு ஒன்று, திட்டக் கட்டு மற்றொன்று, தண்டனை விதிகள் பிறிதொன்று ஆகியவையோடு பணியாற்றுபவர்கள். இல்லங்களிலுங்கூடத் தாய் தந்தையர் இம்முறையில் ஆசிரியப் பணியை மேற்கொள்ளுவர்.

ஒரு வகுப்பறைக்குள் நுழைந்தவுடன் ஆசிரிய மாணவ உறவு தெற்றென விளங்கும். ஒரு சில வகுப்பறைகள் அமைதிக் காட்சியை அளிக்கும். மற்றோர் அறையில் இரைச்சல் கேட்கும். அவ்வறையில் மாணாக்கர்கள் சிறுசிறு குழுக்களாகப் பாடங்களை ஆராய்வார்கள். ஆசிரியர் இங்குமங்கும் சென்றுகொண்டு உதவி புரிவார். இவ்விருவகை வகுப்புக்களில் நடைபெறும் ஆசிரிய முறையும், ஒழுங்கு முறையும், கற்பித்தலும், கற்றலும், கற்றலின்பயனும், உள வளர்ச்சியும் அல்லது பிள்ளை வளர்ச்சியும் ஆகியவெல்லாம் நன்கு விளங்கும். கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரிய மாணவ உறவு தலையாயது. இருவரிடையே நல்லுறவும், நன்னம்பிக்கையும் இன்றியமையாதவை. அவர்களுக்குள் வேறுபாடின்றி ஒன்றாகக் கற்கின்றார்கள். இதைத்தான் 'உப அத்தியயனம்' என்றார் போலும். ஆசிரியருக்கு உபாத்தியாயர் என்றல்லவா நமது நாட்டில் பெயர். வகுப்பறையில் ஆசிரியர் குரல் மட்டும் கேட்பதுண்டு. இஃது ஆசிரியம் அன்று. மாணாக்கர்கள் செயல் முறைகளில் ஈடுபட வேண்டும். ஒவ்வொரு பிள்ளையையும் தனித்தனியாக ஆசிரியர் மதிப்பதோடு கருதவேண்டும்; பொறுமையை இழக்காது பிள்ளைகளுடைய குறைபாடுகளை அறிந்து தீர்க்க வேண்டும். குழு உணர்ச்சிகள், ஒற்றுமைப் பழக்கங்கள் ஆகியவற்றைத் தூண்டிக்கொண்டே இருத்தல் கடமை. தவறும் பிள்ளைகளைத் தனியாகத் திருத்தவேண்டும். புரட்டல், மிரட்டல் ஆசிரிய ஒழுங்கன்று. கற்பது எது என்பதனையே பிள்ளைகளோடு உசாவித் தீர்மானம் செய்ய வேண்டும். பிள்ளைகளுக்கு ஏற்ற செய் வேலையையோ அல்லது பாடத்தையோ கணித்தல் நல்லது. கற்பித்தல் முறைகளுக்குப் பள்ளிப் பழக்கங்கள் உறுதுணையாக வேண்டும். ஒரே வழியில் ஆசிரியத்தை அமைத்துக்கொண்ட பள்ளியில் வேறு வழியில் ஒரு நல்லாசிரியர் தமது பணியை அமைத்தால் இடர்ப்பாடு நிகழ்தல் இயல்பு. எனவே பள்ளி மரபுக்கு அது பிற்போக்காயினும், முற்போக்காயினும் ஏற்ற பெற்றி ஆசிரியர் செயலாற்ற வேண்டும். ஓரோவழி சிக்கலுறும் பிள்ளைகள் வகுப்பறை இயல்நிலையைக் கெடுத்துவிடுவார்கள். அவர்களைத் தனித்தனியாகக் கவனிக்க வேண்டும். வகுப்பறையில் ஒழுங்கு உண்டாகிவிட்டால் ஆசிரியர் பணி எளிதாகும் என்று சொல்வர். ஆனால் ஒழுங்கு வேண்டுமென்று ஆசிரியர் அறை கூவினால் ஒழுங்கு ஏற்பட்டுவிடாது. அமைதியைக் கோராமலே நல்லாசிரியர்கள் அமைதியைப் பெறுகிறார்கள். ஆனால் அமைதி வகுப்பறையில் வேண்டற்பாலது. அஃது ஆசிரியரைப் பொறுத்தது. அமைதி இல்லை என்றால் பிள்ளைகள் வளர்ச்சி பெற முடியாது. குடியாட்சித் திட்டத்தில் பிள்ளைகளே அவர்களுடைய வகுப்பறைச் செயல்களுக்குப்

பொறுப்பாவார்கள். அவர்கள் பொறுப்பில் தன்னடக்கம், குழு உணர்வு, பொறுப்புணர்ச்சி ஆகியவை தாமே வளர்ச்சி பெறும். பொறுப்பாற்றல் களில் தனியாளுமை வளர்ச்சி உண்டு. பள்ளி நிறுவனங்கள், தனித் தனி மாணுக்கர் வளர்ச்சிக்கு வசதிகள் அளிக்க வேண்டும். குடியாட்சி நாட்டுப் பள்ளிகளுக்கு இது தலையாயது.

கற்பித்தற் செயல்முறை பிள்ளைகளுடைய விரும்பத்தக்க மாறுதல் களை உண்டாக்குவதே வேண்டற்பாலது; அறிவாற்றல், நல்ல பழக்கங் கள், திறன்கள், குறிக்கோள்கள், மனப்பான்மைகள், முருகுணர்ச்சி, திறனாய்வு முதலியவை வளர்ச்சியின் துலக்கங்கள். வளர்ச்சி இன்றேல் கற்பித்தற் செயல்முறை பயனற்றதே. தனிஒவ்வொரு பிள்ளையின் செயற்பாடுகளில் திருந்திய மாறுதல்கள் உண்டாக்குவதே கல்வியின் பயன். இம்மாறுதல்களை அளவிடுவதற்கும், மதிப்பிடுவதற்கும் வழி உண்டு. கற்பித்தலால் ஏற்படும் விளைவுகள் எல்லாவற்றையும் வரைதல் இயலாது. ஆனால் தலையாயவற்றைக் குறிக்கக் கூடும். அவையாவன: கருத்துக்களைப் பதிய வைத்தல், நற்பழக்கங்களை உண்டாக்குதல், திறன்களை வளரச் செய்தல், சிந்தனை யாற்றல், ஒழுக்க வளர்ச்சி, இலட்சியங்களை அமைத்துக் கொள்ளுதல், நல்லனவற்றை மகிழ்ச்சி யோடு நாடுதல் ஆகியவை சில. இன்றும் நமது பள்ளிகளில் கால அட்டவணைகளில் ஒரு நேரம் ஒரு பாடம், இரண்டாவது நேரம் இரண் டாவது பாடம். மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு நேரங்களுக்கு ஏழு பாடங்கள். ஒரு சில பள்ளிகளில் எட்டாவது நேரத்தில் எட்டாவது பாடமும் காணலாம். எட்டுப் பாடங்களை ஆசிரியர் கற்பித்தல் என்றும் மாணவர்கள் கற்றல் என்றும் ஒரு நம்பிக்கை அல்லது ஓர் ஏமாற்றம் கல்வி என்ற பெயரால் ஆசிரியரை வதைத்தும், பிள்ளைகளை வருத்தியும் நடைபெறுவது கண்கூடு. இஃது கால அட்டவணையின் கொடுங்கோன் மையா, அல்லது வழிவழி வழக்கத்தின் வற்புறுத்தல் வினையா என்று ஆராய்ந்தறிவது பயனுடைத்தாம். கற்பித்தலும், கற்றலும் அவ்வளவு எளிதா என்ற வினு நிகழும். ஆசிரியர் ஒரு வகுப்பில் பாடமென்றும், மற்றொரு வகுப்பில் மனப்பான்மை என்றும், பிறிதொரு வகுப்பில் திறமை என்றும், வேறொரு வகுப்பில் ஒழுக்கம் என்றும் இங்ஙனம் கல்விப் பயன்களைப் பிரித்துப் பிரித்துக் கற்றுக் கொடுப்பதில்லை. மனப்பெற்றிகள் எல்லாம் பல்வேறு நிலைமைகளில் பல வழியாக வளரு கின்றன. ஆனால் இவ்விளைவுகள் ஆசிரியர்கள் மேற்கொள்ளும் முறை களால் நேர்கின்றன.

கருத்துப் பொருள்களும், பழக்க வழக்கங்களும் ஆசிரியர்கள் எப் போதும் கற்பிப்பவை. வகுப்பறையில் பாடங்களைப் [1] பன்முறைப் பயிற்சி அளிப்பது தொன்று தொட்டு வரும் வழக்கம். பழைய ஆசிரி யர்கள் இப் பன்முறைப் பயிற்சியில் சிறந்தவர்கள். எந்தப் பாடமாயி

---

1. Drill

னும் அதை இம்முறையால் பிள்ளைகளை அச்சுறுத்தியும் அடித்தும் கற்பித்து விடுவார்கள். பண்டை நாள் புத்தகங்களும் இதற்கு ஏற்றவை. நம் நாட்டுப் பள்ளிகளிலுங்கூட இக்கற்பித்தல் முறையை வகுப்பறைகளில் காணலாம். வாய்பாடு, வரலாற்றுப் பாடத்தின் தேதிகள், போரின் பெயர், செய்யுட் பாடம், மொழிப் பாடம் ஆகியவற்றைத் தொடக்கத்திலிருந்து இறுதி வரையில் நெட்டுருச் செய்து ஒப்பித்தல் மரபு. தேர்வு நோக்கி வினாக்களுக்கு விடைகளை மனனம் செய்தல்; ஆசிரியர்கள் வினாக்களையே கட்டிக் கொண்டு விடாது முயறல், பிள்ளைகள் வினாக்களையும் விடைகளையும் பாராயணம் பண்ணுதல் ஆகிய அலங்கோலங்கள் சிறந்தவை அல்ல என்பது கண்கூடு. பாடங்களுள் ஒரு சில பகுதிகளுக்குப் பன்முறைப் பயிற்சி வேண்டற்பாலது தான். வாய்பாடு போன்ற பகுதிகள் பன்முறைப் பயிற்சிக்கே உற்றவை எனக் கருதலாம். ஆனால் வாய்பாட்டினையும் இப்பழைய முறையில் அல்லாது, புதிய செயல் முறையில் அல்லவோ கற்றுக் கொடுக்கிறார்கள். ஈண்டு மான்டிசோரி முறை வியக்கத்தக்கது.

[1] சிந்தனை ஆற்றலை வளர்த்தற்குக் கற்பிக்கும் முறை வேறு; [2] எண்ணாது விடை அளித்தலுக்குக் கற்பிக்கும் முறை வேறு. பன்முறைப் பயிற்சிப் பாடம் எண்ணாது விடை அளித்தலுக்கு ஏற்றதாகும். ஆனால் சிந்தனை வளர்த்துக் கற்பிப்பது—பிள்ளைகள் தாமே சிக்கல்களை அறிதல், பல பொருள்களைத் தேடுதல், பல சான்றுகளோடு ஒப்பு நோக்குதல், கருத்துரைகளைத் தயாரித்தல், முடிவுகளைக் கண்டு சோதனை செய்தல்ஆகிய திறன்களை வளர்க்கும். கல்வியின் பயன் அனுபவம் பெறுதலாகையால், அதன் செயல்முறையில் சிந்தனை பேரிடம் பெறும். பெற்ற அனுபவங்களை அடிக்கடி மாற்றித் தூய்மைப் படுத்திக் கொள்வதும் சிந்தனையால் புதிய கருத்துக்கள் உண்டாவதும் நாம் அறிந்தவை. எனவே புதிய கருத்துக்கள் மாணவருடைய பழைய அனுபவங்களைச் செப்பம் செய்கின்றன. கற்குங் காலத்தில் மாணவர்கள் வாழ்க்கையில் எழும் சிக்கல்கள் பல உண்டாகி அவற்றைத் தீர்க்க வேண்டிய ஆற்றல்கள் உண்டாகும். சிந்தனை அல்லாது கற்கும் கல்வி எல்லாம் உருப்போடும் பாடத்துக்கு ஒப்பாகும். உருப்போட்டதை ஒன்றும் அறிந்து கொள்ளாது குருட்டுப் பாடமாக ஒப்பிக்கலாம் அல்லவா? சொற்களைத்தான் உருப் போடுகிறார்களே யன்றிச் சொல்லொடு புணர்ந்த பொருள்களை அறிந்து கொள்ளுவதில்லை. நமது தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்கள் பெரும்பாலும் நெட்டுருப் போடுபவர்களே என்பார்கள். மாணவர் பிறர் அவர்களைப் புத்தகப் புழுக்களென்பர்.

சிந்தனை தொகுத்தறி முறை, பகுத்தறிமுறை—ஆகிய இரண்டு வகையில் நிகழும். சிந்தனையை வளர்ப்பது இவற்றுள் ஒரு

---

1. Thought 2. Automatic

முறை மட்டுமன்று. இரண்டும் கலவையாகவே உதவும். சிக்கல்களை எழுப்புவதிலிருந்து சிந்தனையை வளர்த்தல் தொடங்க வேண்டும். ஆசிரியர் அல்லது பாடப்புத்தகம் குறுக்கிடக் கூடாது. சிக்கல் சிந்தனையை வளர்க்கக் கூடியதாக வேண்டும். அல்லாக்கால் சிந்தனைச் செயற்பாடு துலக்கமுறாது. பெரும்பாலும் ஆசிரியர்கள் கற்பித்தலையும் பயிற்சி அளித்தலையும் ஒன்றாகக் கருதுகிறார்கள். குதிரைகள் பயிற்சி பெறுகின்றன. யானை முதலிய விலங்கினங்கள் பயிற்சி பெறுகின்றன. பயிற்சி பெறுவதற்குச் சிந்தனைச் செயல் வேண்டியதில்லை. ஆனால் சிந்தனையைத் தூண்டற்கே பிள்ளைகளுக்குக் கற்பிக்கின்றோம்.

கல்வியின் பயன் கருத்தை வளர்ப்பது என்று கூறுபவர் பலர். மாணவர் இல்லத்திலும் சமூகத்திலும் சிந்தனை ஆற்றலோடு நல்லவர்களாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். ஒழுக்க வாழ்வுக்குப் பள்ளிகள் மட்டும் பொறுப்பாகா. சமூகத்தைச் சுற்றிலும் ஒழுக்கத்தை வளர்க்கும் அல்லது கெடுக்கும் நிலையங்கள் பல உள. பழம் பள்ளிகளில் ஒழுக்கக் கல்வியென்று ஒன்று உண்டு. அதை நேர்முகமாகக் கற்பிப்பது வழக்கம். பிள்ளைகள் பல நீதிகளை உருப்போட்டு ஒப்பிப்பார்கள். பாடப் புத்தகங்களிலும் நீதிக்கதைகள் ஒரோ வழி உண்டு. ஆனால் எல்லா நீதிகளையும் கற்றவர்கள் நன்னெறியோடு ஒழுகினார்களா என்பது ஐயப்பாடு. சில பள்ளிகளில் மதக் கல்வியும் உண்டு. மதச்சார்பற்ற நீதிக்கதைகள் கற்றுக் கொடுப்பதும் வழக்கம். நம் பிள்ளைகள் 'நன்மை கடைப்பிடி' என்று நூறு முறை எழுதிவிட்டால் நல்லவர்களாகி விடுவார்களா? எனவே அறவொழுக்கத்தை நேரல் முறையில்தான் பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தல் நல்லது. கற்பித்தல் செயற்பாட்டில் சிற்சில நிலைமைகளில் பிள்ளைகளுடைய ஒழுக்கம் சோதனைக்கு உள்ளாகும்போது அவர்களுடைய ஒழுக்கத்தையே கண்காணித்தல் நலம். இங்ஙனம் சிந்தனையில் எழுந்த ஒழுகலாறு நிலைபெற்று வளரும். வெறும் கட்டுத் திட்டத்தில் ஒழுக்கம் வளராது. புதுக் கல்வியின் நோக்கம் தொடர்ந்த வளர்ச்சியினைப் பிள்ளைக்கு அளிப்பது. அதற்குப் பலவகை வாய்ப்புக்களை அளிப்பதே புதுமுறை. வினாக்களுக்கு விடைகளை அளிப்பது எளிது. ஆனால் சிக்கல்களுக்கு விடைகளைத் தயாரிக்க முடியாது. சிக்கலைத் தீர்க்கும் முறையைப் பிள்ளைகள் விழுப்பம் தரக்கூடிய சிக்கல் நிலைகளில் பயன்படுத்துவார்கள். புதுக் கல்வியில் ஆசிரியரும் மாணவரும் புதிய அனுபவங்களுக்கு உரியவர்களாகிறார்கள். அப்புதிய உறவில் ஆசிரியருடைய பழக்கங்கள் மாணாக்கருக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகவும் பண்பட்டவைகளாகவும் விளங்கினால் ஒழுக்கக் கல்வி வேறு வேண்டா. ஒழுக்கத்தினைத் தனியாகக் கற்றுக் கொடுக்க இயலாவிட்டால் அதனை மாணவர்கள் பல நிலைமைகளில் பிடித்துக் கொள்ள முடியும். பழங் காலங்களில் இந்த ஆசிரியருடைய மாணாக்கனென்றால், அந்த ஆசிரிய

ருடைய குணநலன்கள் எல்லாம் அவர் மாணக்கரிடம் காணக்கூடு மென்ற உறுதி இருந்தது.

கல்வி கற்கும் ஒருவன் குற்றங்களைத் தவிர்த்து உண்மைகளைக் கண்டறிந்து ஒழுங்காகச் சிந்தனை செய்ய இயலும். இதனோடு கற்பதைச் சுவைத்து இன்புறுவதற்கும் திறமை உண்டாகும். சுவை உணர்ச்சி உள்ளத்தைத் தொடுவது. நம் பிள்ளைகள் கல்வியின் பயனால் வாழக் கற்பதோடு வாழ்க்கையில் இன்பத்தையும் காணக் கற்க வேண்டும். அதுவே மனித வாழ்க்கையின் மாண்பு. இந்த அழகுணர்ச்சி கல்வியின் பெரும் பயனாகும். ஆசிரியர் உற்றபோதெல்லாம் இவ்வுணர்ச்சியைத் தூண்டவேண்டும். இவ்வுணர்ச்சியைப் பெறுவதற்குக் கற்பிக்க இயலாது. நல்ல புத்தகங்களைச் சுவைக்கவேண்டுமென்றால் மாணவர்களுக்கு அத்தகைய புத்தகங்களை வழங்க வேண்டும். தாமாகவே பிள்ளைகள் அவற்றால் ஈர்க்கப்பெற்று அவற்றைப் படித்து இன்புறவேண்டும். அல்லாது பிள்ளைகளுக்குப் புத்தகங்களின் பட்டியலைத் தந்து படிக்கும்படிக் கட்டாயப் படுத்தினால் அவர்கள் வேண்டுதல் வேண்டாமை நிலையில் படிப்பார்கள். எனவே சுவைத்தலைக் கற்பிக்கவும் இயலாது; கட்டாயப்படுத்திச் சுவைக்கவும் இயலாது. ஆசிரியரே சுவைக்கும் திறன் உள்ளவராதல் வேண்டும். மாணவன் தமது கற்பித்தல் பணியில் சுவையைக் காணவேண்டும். ஆசிரியர் சுவைத்தாலன்றிப் பிள்ளைகள் சுவைக்க முடியாது. ஒரு புத்தகத்தைக் கொடுத்து அதனைப் படித்துச் சுவைத்தலைப் பற்றிக் கட்டுரை எழுதச் சொன்னால் பிள்ளைகள் எழுதிவிடுவார்கள். கட்டுரை கருத்தமைவுறும். ஆனால் சுவை அறிவகத்தது. அது மன எழுச்சியைத் தரக்கூடியது. சுவைத்தலுக்கு அடிப்படையாகப் பிள்ளைகள் படைப்பாற்றல் பெறுவர். சித்திரம் வரைதல், வண்ணம் தீட்டுதல், செதுக்குதல் முதலியவற்றைப் பழக்கினால் அவர்கள் ஒப்பு நோக்கிச் சுவை உணர்ச்சியைப் பெறுவார்கள். கல்விச் செயல் முறையில் பிள்ளைகளுக்குச் சுவை உணர்ச்சி அளிப்பது ஒரு முதன்மைக் கட்டம்.

XX

[1] கற்பிக்கும் முறைகள்

கற்பிக்கும் முறைகள் செயல்பாடுகளோடு தொடர்புடையவை. இவற்றை ஆசிரிய வணிகரின் நுணுக்கங்கள் அல்லது தந்திரங்கள் என்றும் சொல்லுவதுண்டு. ஆசிரிய முறைகள் கல்வியாளர்கள் பலரால் அப்போதைக்கப்போது அறிவுறுத்தப்பெற்றவை. ஹெர்பார்ட் ஓர் பாடத்தை எந்த முறையில் வகுப்பது என்ற திட்டம் வகுத்தார். அவருடைய ஐந்து படிகள் பல ஆண்டுகளாக நமது வகுப்பறையில் ஆக்கம் பெற்றன. ஆசிரியருடைய முறைகள்[2] கல்வியின் தத்துவத்தைப் பெரும்பாலும் ஒட்டியவை. மேலும் ஆசிரிய மாணவ உறவும் கற்பிக்கும் முறைகளுக்கு அடிப்படையாகும். எல்லாவற்றைக் காட்டிலும் மாணவ வளர்ச்சியும் முன்னேற்றமும் முறைகளை உறுதிப்படுத்துபவை. இன்றைய பள்ளிகளில் ஆசிரியர் பிள்ளைகளுக்குப் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதற்கல்லர். இதுவே புதிய கல்வித் தத்துவம். அன்று பாடங்களைக் கற்க இயலாத பிள்ளைகள் ஒதுக்கப்பெற்றார்கள். ஒதுக்கம் பெற்ற பிள்ளைகள் நாளடைவில் பள்ளியையும் விட்டு அகன்றார்கள். இன்று பிள்ளைகளுக்குக் கற்கும் முறைகளில் ஏதாவது பாடத்தில் இடர்ப்பாடு ஏற்பட்டால் அல்லது தமது உள்ள வளர்ச்சிக்குக் கடினமாயிருந்தால், ஆசிரியர் அவர்களுடைய தகுதிக்கு ஏற்ற பாடத்தை எளிதாகக் கற்கும்படி அமைத்து உதவுவார். பிள்ளைகளுக்குக் கற்பிப்பது என்றதன் அடிப்படை யாதோ எனின், ஒவ்வொரு பிள்ளைக்கும் அவனுக்கேற்ப ஒரு கல்வி வழியைப் பள்ளியில் அமைத்துத் தருவதேயாகும். பாடத்தைக் காட்டிலும் பிள்ளை வளர்ச்சி கருதற்குரியது.

பண்டைய ஆசிரியர்கள் கற்பிக்கும் செயல் முறைகள் எல்லாவற்றையும் ஒரே முறையாக வடித்துக் கொண்டார்கள். ஹெர்பார்ட் முறை ஓரளவு இதற்கு உதவிற்று. பாடங்களெல்லாம் கற்பிக்கும்போது ஹெர்பார்ட்டிய உருவத்தைப் பெற்று விடுவதுண்டு. ஹெர்பார்ஷியன் படி முறையினை எதிர்த்தவர் ஜான் டூயி. கல்வி பலர் பங்கீட்டு முறையில் வளர்வதானால் பிள்ளையைக் காட்டிலும் பாடப்பொருள் முக்கியமானதானால் வகுப்பறை குடியாட்சியின் செயல் முறையில் இடம் பெறத் தகாதது என்று அவர் கண்டித்தார்.

கற்பிக்கும் முறைகளைப் பற்றி எழுந்த நூல்கள் பல உள. அவை ஆசிரியக் கல்லூரிகளில் பலபடியாகப் பொது முறைகள் என்றும் சிறப்பு

---

1. Teaching methods 2. Educational Philosophy

முறைகள் என்றும் விரிவுரையாக்கம் பெறுகின்றன. ஹெர்பாட்டைத் தழுவாத ஆசிரியர்களும் கற்பித்தல் முறை ஒன்றினைத் தமக்கென வகுத்துள்ளார்கள். இன்றைய கல்வித் தத்துவத்தைத் தழுவிய பள்ளி களில் ஒரு கற்பிக்கும் புதுமுறை ஒன்று இயலுமா என்பது ஆராயத் தக்கது. ஒரு முறை மட்டுமே நல்லதென்று அறுதியிடவும் இயலுமா? பள்ளிகளில் கற்பிக்கும் பாடங்கள் பல்லாண்டுகள் ஒரே வகையினதா யுள. ஆனால் ஒவ்வொரு வகுப்பிலும் ஆண்டுதோறும் பிள்ளைகள் அந்தந்த வகுப்பு ஆசிரியருக்குப் புதியவரல்லவா? ஆகையால் எந்த ஆசிரியரும் வகுப்பு மாணவர்களை அறிந்து கொண்ட பிறகே அவர் களுக்கேற்ற ஒரு முறையை உண்டாக்கிக் கொள்ளுவார். ஆசிரிய முறை எதுவாயினும் ஒரு சில வழிகள் பொதுவானவை. அவை பிள்ளைகளை வினவுதல், வகுப்பு ஒழுங்கு, பயன்படுத்தும் கருவிகள், தேர்வுகள் ஆகியவை. கற்பிக்கப் பெறும் பிள்ளைகள் அல்லாது முறை களைப் பற்றி ஆராய்வது முறையன்று. முறை என்பது நாம் எப்படிக் கற்பிக்கப் போகிறோம் என்பதை விவரிப்பது. [1]எதை, [2]எப்படி, என் பவை இங்கெழும் சிக்கல். கற்பவைகளும் முறைகளும் ஒன்றியவை. ஓர் ஆசிரியர் படிக்கக் கற்றுக் கொடுப்பார், மற்றொருவர் கணிதம், மூன்றாவது ஒருவர் வரலாறு—இங்ஙனம் தனித்தனி ஆசிரியர் தனித் தனிப் பாடத்தைக் கற்பிக்கும்போது அந்தந்தப் பாடத்துக்கேற்ற முறை செயற்படுகிறது. அதனால் கற்பித்தற் பொது முறைகள் என் பவை யாவை என்ற வினா எழும். கற்பித்தலுக் கெல்லாம் பொதுப்பட ஒரு சில முறைகள் இருந்தாலும் வகுப்பு, பிள்ளைகள், ஆசிரியரின் தத்துவம், அவருக்குப் பயனுறும் ஆசிரியக் கருவிகள், சமூகச் சூழ்நிலை ஆகியவை கையாளும் முறையைக் கட்டுப் படுத்தும். ஆசிரியக் கல்லூரிகளில் கல்வித் தத்துவ ஆசிரியர் அல்லது பாட ஆசிரியர் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மாதிரிப் பாடங்கள் கற்பித்து மாதிரி முறையோடு விளக்குவதுண்டு. அத்தகைய பாடங்களில் ஆசிரியத் தின் பல கூற்றுக்கள் அமைக்கப் பெறும். இன்று அப்பாடங்களை [3]மாதிரிப் பாடமென்று கூறுவதில்லை. [4]விளக்கப் பாடமென்று கூறு கிறார்கள். ஒரு மாதிரியைக் கற்பித்தல் முறையில் அமைக்க இயலாது. கற்பித்தல் மிகவும் ஒரு சிக்கலான பணியாகும். ஆசிரியரும் மாண வரும் ஒரு நாள் முழுவதும் ஓர் அறையில் நேரத்தைக் கழிக்கிறார்கள். அப்போது ஆசிரியர் மாணவருக்குப் பலவற்றைக் கற்பிக்கிறார். அவர் களுடைய ஆளுமையை வளர்க்கலாம்; ஒழுக்கத்தை வளர்க்கலாம்; திறன்களை வற்புறுத்தலாம்; நல்ல மொழி பேசுவதற்கு வாய்ப்பளிக்க லாம்; நல்ல பழக்கங்களுக்கு வழி வகுக்கலாம்; மனவெழுச்சி மிக்குள்ள வர்களைப் பொறுமையாக்கலாம்; அசைவற்றவர்களுக்கு ஆற்றல் அளிக்கலாம்; உறக்க முற்றவர்களை எழச் செய்யலாம்; மனப்பான்மை

1. What 2. How 3. Model lesson 4. Demonstration lesson

களையும் குறிக்கோள்களையும் பண்படுத்தலாம்; இவை யாவும் படிக்கக் கற்றுக் கொடுக்கும்போதும், கணக்குச் சொல்லிக் கொடுக்கும்போதும் நிகழ்வதும் உண்டு. ஈண்டு கையாளப் பெறும் முறைகள் யாவை, முறைகள் எத்தனை என்று வகைப்படுத்தியும் தொகுத்தும் கூற இயலுமா? பிள்ளைக்குப் பிள்ளை, பாடத்துக்குப் பாடம், நேரத்துக்கு நேரம் முறைகள் மாறிய வண்ணமாக அமையலாம். இவற்றிற் கெல்லாம் ஒரு பொது முறை என்று வகுக்க இயலாது. ஆனல் எல்லாவற்றிற்கும் அடிப்படை ஆசிரியருடைய தத்துவம்; பிள்ளைகளுடைய வளர்ச்சி; முன்னேற்றம்; ஆசிரியருடைய அறிவு என்பவை.

எடுத்துக் காட்டாக ஒரு பாடத்தின் ஒரு பகுதியை ஆசிரியர் கற்பிக்கும்போது அதை எந்த முறையில் கற்பித்தால் பயன் உண்டு என்பதை அவர் அறிவார். அப்பாடத்துக்கு அமைக்கப்பெறும் முறை ஒன்ருகும். அம்முறையில் அவர் நன்ருகப் பாடத்தைச் சொல்லிக் கொடுக்கலாம். ஆனல் அப்பாடமல்லாது எப்பாடத்தைக் கற்பிக்கும்போதும் அப்பாடத்தோடு தாம் நினையாத பலவற்றினையும் கற்பிக்கின்ருர். இரண்டு வகுப்பறைகளில் ஓர் ஆசிரியர் பிள்ளைகளுக்கு ஒரே பாடத்தை ஒரே முறையில் பிள்ளைகளுக்குச் சமத்துவ உரிமைகள் வழங்கிக் கற்பிக்கலாம். மற்ரெரு வகுப்பில் அதே முறையில் பிள்ளைகளை ஒடுக்கியும், அடக்கியும் கற்பித்தல் நிகழலாம். இவ்விரண்டு வகுப்புக்களிலும் கையாளும் முறை ஒன்றே. ஆனல் பரந்த அளவில் விரிந்த நிகழ்ச்சி அகன்ற மாறுபாடுறும். ஆதலால் முறை எதுவாயினும் பிள்ளைகளுடைய உள்ள வளர்ச்சிக்கு ஏற்ப அது மாறுபட வேண்டும். சிறப்பாகப் பிள்ளைகளை அறிந்து கொள்ளுதல் எல்லா முறைகளுக்கும் இன்றியமையாதது. நன்ருகத் திட்டம் வகுக்காமல் எந்தப் பாடத்தையும் கற்பித்தல் கூடாது.

கற்பித்தலெல்லாம் இரு தன்மைத்து. ஒன்று [1] நேர்முறை; அதாவது பிள்ளைகளை நேராக விரும்பிய இடங்களுக்கு அனுப்பிப் பார்த்துக் கற்கச் செய்தல். காட்சிப் பொருள்கள், உருவங்கள், படங்கள் ஆகியவற்றை உருப்படுத்திக் காட்டிக் கற்பிப்பது. அறிவியற் பாடமாயின் சோதனைப் பொருள்களோடு சோதனை இயற்றிப் பிள்ளைகளுக்குக் காண்பித்துக் கற்கச் செய்வது. இரண்டாவது [2] நேரல் முறை. அதாவது கற்பவற்றை விவரிப்பது; வாய்மொழியாகக் கற்பிப்பது; பாடப் புத்தகங்களில் கற்கும் பகுதியைக் காட்டிக் குறிப்பெடுத்துக் கற்கச் செய்வது. இவை இரண்டும் கற்றல் அனுபவங்களைத் தரும்.

[3] விளக்குதல் என்பது பல எடுத்துக்காட்டுகளைக் காட்டிப் பிள்ளைகள் அவற்றைப் பார்த்துக் கொள்ளுதல் என்பது. இதனல் அவர்களுடைய குறிக்கோளை உயர்த்துவது. [4] குறிப்புணர்த்தல் என்

1. Direct method 2. Indirect method 3. Demonstration
4. Suggestion

பது பிள்ளைகள் ஒரு சிக்கலைத் தீர்ப்பதற்கு முன் அவர்களுக்கு அறிய வேண்டிய சிலவற்றைப் பரந்து விளக்காமல் உணர்த்துவது. மூன்ருவதாக ஆசிரியரும் மாணவரும் உரையாடி ஓர் செயலை நிகழ்த்துவதற்கும் அனுபவத்தைப் பெறுவதற்கும் பெற்ற அனுபவத்தை வகைப் படுத்தித் தொகுத்து, ஓர் உரையாக்க உதவி செய்தல்—இவை மூன்றும் வழி காட்டுதல் முறையாகும். ஊக்குதல் என்பது ஓர் மாணவனை ஒரு கருத்து அல்லது செயற்பாடத்தில் வெற்றி காணும் வரையில் அதனை அவன் விடாது கற்க முயற்சி அளிப்பது. இதனைக் குறிப்புணர்த்துதல் வழியாகவும், அறிவுணர்த்துதல் வழியாகவும் நிகழ்த்தலாம். இறுதியாகப் பிள்ளைகள் கற்றவற்றைத் தேர்வுக்கு உட்படுத்துதல். இஃது ஒவ்வோர் அகவை நேரத்திலும் நிகழலாம். அல்லது வாரத்துக்கு ஒரு முறை, மாதத்திற் கிருமுறை அல்லது ஒரு முறை, ஆண்டுக்கு மும் முறை நடைபெறலாம். இஃது ஒவ்வோர் அகவை நேரமும் நிகழ்வது சிறந்தது. அதாவது ஒவ்வோர் அகவையிலும் ஓர் அளவு பாடத்தை ஆசிரியர்கள் நடத்துகிருர்கள். கற்பித்தவற்றை மாணவர்கள் கற்றறிந் தார்களா என்று அறிவது மிக மிக இன்றியமையாதது. கற்ருலன்றிக் கற்பித்தல் நடைபெற்றதாகக் கொள்ளலாகாது. எனவே கற்பித்த வற்றை உடனடியாகத் தேர்வுக்குட்படுத்தி விட்டால் மாணவர்கள் கற்றமை அல்லது கற்காமை தெளிவாகும். இச்சோதனையைக் [1]காகிதம் எழுதுகோல் தேர்வு முறையில் பத்து மணித் துளிகளில் தேர்வு நடத்தி ஐந்து மணித்துளிகளில் அதை மதிப்பிட்டு ஆசிரியர் அறிந்து கொள்ள லாம். நாற்பத்தைந்து மணித்துளிகளுடைய அகவையில் முப்பது மணித்துளிகள் பாடங் கற்பித்தலுக்குப் பயனுற்ருல் போதும். உடனடியாகப் புது வகைக் கேள்விகளில் தேர்வு நிகழ்த்திஞல் அப்போதைக் கப்போதே மாணவர்கள் கற்றல் திறனையும், ஆசிரியர் கற்பித்தல் திறனையும் அறிந்து கொள்ளலாம்.

கற்பித்தற் செயற்பாட்டில் ஒருசில விதிகள் முக்கியமானவை. [2] "G" (காரணி) என்று சொல்லப்படும் பொது நுண்ணறிவு பிள்ளை களுக்கிடையே வேறுபடும். அதஞல் அவர்களுடைய கற்றல் திறன் மாறுபாடுறும். அது மிகக் குறைவாக இருந்தால் கற்க வேண்டியதை எளிதாகக் கற்க இயலாது. [3] "S" காரணி என்ற குறிப்பிட்ட அறிவு பிள்ளைகளிடையே உள்ள வளர்ச்சியை வேறுபடுத்திக் காட்டும். ஒரு பிள் ளைக்குள்ள கவர்ச்சி மற்ருெரு பிள்ளைக்கு இராது. அதஞல் ஒரு குறித்த திறனை அடிப்படையாகக்கொண்ட பாடத்தை அஃது இல்லாத பிள்ளைகள் கற்க இயலாது. பிள்ளைகள் தமது உடல் நலம் உளப்பான்மை ஆகிய வற்றில் வேறுபாடு கொண்டும் இருப்பார்கள். ஒரு வகுப்பில் சிறிய வயதுள்ள பிள்ளைகளுக்கு [4] முற்றுநிலை ஏற்பட்டிராது. பதிஞெரு

1. Paper-pencil Test 2. General Intelligence (G Factor) 3. Specific Intelligence (S Factor) 4. Maturation

வயதுள்ள பிள்ளை பதினெட்டு வயதுள்ள பிள்ளையின் செயலாற்றலைக் கொள்வது கடினம். பிள்ளைகளின் குடும்ப நிலைகளிலும் வேறுபாடுகள் பல. அவற்றால் ஏற்படக்கூடிய [1] பொருத்தப்பாடும், [2] பொருத்தப்பாடு இன்மையும் குடும்பத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலைகளும் பெரிதும் கற்றலில் வேறுபாடு விளைவிக்கும்.

எல்லாவற்றைக் காட்டிலும் ஆசிரியருடைய கற்பிக்கும் திறனை மிகுதியாகக் கருத வேண்டும். ஒவ்வோர் ஆசிரியருக்கும் இரண்டு இடர்ப்பாடுகள் நிகழலாம். ஒன்று எப்படிக் கற்பிப்பது. எப்படிக் கற்பிப்பது என்பது எளிது. ஏனென்றால் ஆசிரியக் கல்வி கற்றவர் பல கற்பித்தல் முறைகள், கல்வியின் நோக்கங்கள், கல்வித் தத்துவத்தின் பல மதிப்புக்கள் ஆகியவற்றை நன்றாக அறிவார்; அதனால் எப்படிக் கற்பிப்பது என்பது எளிது. அந்தந்த முறைகளைக் கையாண்டு கற்பிப்பதென்பதே விடை. இரண்டாவதாக எப்படித்தான் கற்பிக்க வேண்டும் என்ற நிலைக்கு ஆசிரியருடைய முழுத்திறன் வேண்டற்பாலது. அதற்கு உதவுபவை: பள்ளிச் சூழ்நிலை, பள்ளியின் மரபு நிலை, மாணவ நிலை ஆகிய பல. ஆசிரியருடைய நடைமுறை ஆசிரியப் பணியை உறுதிப் படுத்துவது. ஆசிரியரது ஆற்றல் நிலையும் நடைமுறை நிலைமைகளும் எங்கும் வேறுபடுவது இயல்பு. நல்லாசிரியருக்கு அவருடைய கொள்கை ஆற்றலும் நடைமுறைக்கு அதை அமைத்துக் கொள்ளும் திறனும் இன்றியமையாதவை. ஆசிரியத்தின் பண்பாடுகள் நடைமுறையில் நிகழா என்ற மனப்பான்மை தவறு. ஏனென்றால் ஆசிரியத்தின் கருத்துக்கள் பெரும்பான்மை நடைமுறையில் எழுந்த கூற்றுக்களேயாம்.

கற்பித்தல் முறைகளைப் பொதுவாகக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம். (i) [3]பாடப் புத்தகத்தின் வழியாகக் கற்றல் முறை. (ii) [4]உரையாடிக் கற்பது. (iii) [5]விரிவுரையாற்றல். (iv) [6] பன்முறைப் பயிற்சி. (v) [7]செய்து காட்டல் (vi) [8] சோதனை அல்லது செய்காட்சி முறை. (vii) [9] செயல் திட்ட முறை. (viii) [10] நடித்தல் முறை (ix) [11] தன்னியக்க முறை.

ஆசிரியர் கற்பிப்பது வாய் வழியாகப் பாடப் புத்தகம் பார்த்துப் படிப்பது. எனவே ஒன்று செவியையும், மற்றொன்று கண்ணையும் சார்ந்தது. வாய்மொழி வழியாகக் கற்பித்தல் சிறிய குழந்தைகளுக்கு நல்லது. அவர்கள் செவி வழியாகச் சொற்களைக் கேட்பது, கண் வழியாக அச்செழுத்துக்களைப் பார்ப்பதைக் காட்டிலும் சிறந்தது. பாடப் புத்தகத்தை மையமாகக் கொள்ளும் மாணவன் தன்னுடைய தரத்துக்கேற்பக் கற்பதும் மீண்டும் மீண்டும் கற்பதும் ஒவ்வொரு கட்

1. Adjustment 2. Maladjustment 3. Text-book 4. Discussion 5. Lecture 6. Drill 7. Demonstration 8. Experiment 9. Project 10. Dramatisation 11. Self-activity

டத்திலும் தேர்வு பெறுவதும் தனக்குக் கடினமானவற்றைக் குறித்துக் கொண்டு ஆசிரியரை உசாவி அறிவதும் இயலும். இம்முறையின் பயஞக நாளடைவில் மாணவர்கள் தாமாகவே பல நூல்கஃள ஆராய்ந்து கற்றல் ஏதுவாகும். ஆனுல் பாடப் புத்தகத்தையே ஆசிரியர் கைக் கொண்டு அதிலுள்ள பாடத்தைத் திருப்பித் திருப்பிப் படித்தும், மீண்டும் அதனையே பிள்ளைகளைப் படிக்கச் செய்தால் பிள்ளைகளுக்குப் பாடத்தில் கவர்ச்சி இராது. ஆசிரியருடைய வாய்மொழி ஒலிப்பு, முகக் குறி, நடித்தல், விளக்குதல் ஆகியவை வாய்மொழிக் கல்வியின் குணங் கள். இவை பிள்ளைகளுடைய கவனத்தை ஈர்க்கக் கூடியவை; அவர் களுக்குக் கவர்ச்சி அளிக்கக் கூடியவை. முற்றுநிலே எய்தும் வரையில் ஆசிரியர் நேர்முகமாக மாணுக்கரோடு பேசியும் உசாவியும் கற்பித்தல் உறவு அமைப்பது நல்லது. மேலும் பாடப் புத்தகங்கள் ஆசிரியருடைய விரிவாற்றல் அளவுக்கு எழுதப் பெறுவதில்லே. ஆனுல் ஆசிரியர் தமது ஆற்றல் நிலேயிலும் மாணவ நிலேக்கேற்பவும் தமது வாய்மொழித் திறனே வெளிப்படுத்தி ஏற்றவாறு விளக்குதல் பாடப் புத்தகத்தின் துணையைக் காட்டிலும் சிறந்தது. காட்டாக ஒரு வகுப்பில் வாரத்துக்கு ஆறு அகவை வீதம் ஐந்து நாட்கள் கொண்ட நாற்பது வாரங்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கப் பெறுகிறது. இருநூற்று நாற்பது அகவைகள் ஆசிரியர் எடுக்கும் நேரம்; குறித்த ஒரு புத்தகத்தில் நூறு பக்கங்கள் இருக்கலாம்; அல்லது நூற்றைம்பது பக்கங்களாகலாம். அப்புத்தகத் தைப் படிக்கக் கூடிய மாணுக்கன் பத்து மணி நேரத்தில் படித்து விடலாம். அவன் பார்த்துப் படிப்பதால் ஏற்படும் திறன் யாது ஆசிரியர் விளக்கத்திஞல் ஏற்படும் திறன் யாது என்பவை சொல்லா மலே விளங்கும். ஆண்டு முழுவதும் ஒரு பாட ஆசிரியர் வெறும் பாடப் பொருளே மட்டும் கற்பித்தல் பெருந் தவருகும். பிள்ளைகள் தன்னியக்கம் பெற வேண்டும். கற்பித்தவற்றைச் செயல் முறையில் காண வேண்டும். எழுச்சியுற்ற பிள்ளைகளைத் தனித்துக் காண வேண்டும். அவர்கள் கற்றலுக்கு நேரம் வேண்டும். இவை யாவும் நிகழ்ந் தாலன்றிக் கற்பித்தலும் கற்றலும் ஆகிய இரண்டு முனைகள் ஒன்ருகச் சேரமாட்டா. ஆசிரியரடியில் கற்ற மாணுக்கனின் திறம் வேறு. அது முகம் முகத்தைப் பார்த்துக் கற்ற திறன்; இரண்டு உள்ளங்கள் ஒன்றிய திறன்; இரண்டு உணர்வு இரண்டறக் கலந்த திறன்; ஆனுல் வெறும் புத்தகத்தைப் படித்துத் தேர்ச்சி பெற்றவர்கள் எத்திறனைத் தான் பெற்றுள்ளார்களோ அவர்களுக்குத்தான் தெரியும். புத்தகச் சொற்கள் பேசமாட்டா. அவற்றிற்கு உயிரில்லே. மாணுக்கன்தான் அவற்றிற்கு உயிர் ஊட்ட வேண்டும். அவை கண்களை மட்டும் ஈர்க்குமே அன்றி உடலேயும், உள்ளத்தையும் உருவாக்கமாட்டா. ஆசிரியர் வாய்வழியாகச் சொல்லக்கூடியவற்றையெல்லாம் ஒரு புத்தகத் தில் நிரப்பித்தர முடியாது. எனவே பாடப்புத்தகம் ஒரு துணையே அன்றி அஃது ஆசிரியருடைய இடத்தைப் பெற்றுவிடாது. திறமை உள்ள

ஆசிரியர் பாடப் புத்தகத்தைப் பிள்ளைகளுக்கு வீட்டில் படிப்பதற்கு விட்டு விட்டு, ஊற்றுமடை திறந்தாற்போன்று தமது கருத்துக்களை வரையாது கொடுக்கும் வள்ளலைப்போல் பிள்ளைகளுடைய ஆர்வத்தை அளந்து அளந்து, திறனைத் தெரிந்து தெரிந்து, ஏற்றபெற்றி இவர்பால் அவர்களுக்குக் கவர்ச்சி ஒரு சிறிதும் தளராது தமது உள்ளம் அவர் களுடைய உள்ளங்களையெல்லாம் கலந்து இடம் பெறப் பாடத்துக்கு உருத் தருவார். புத்தகங்கள் சராசரித் திறன் உள்ள பிள்ளைகளுக்கு மட்டுமே உதவக் கூடும். மாணவர்களுள் வேகமாகக் கற்பவர்கள், மெதுவாகக் கற்பவர்கள் என்ற இரண்டு வகையினர் உண்டு. வேக மாகக் கற்பவர்கள் புத்தகப் பாடத்தைக் கற்றபிறகு மேலும் கற்பதற்கு வருந்திக் கொண்டிருப்பார்கள். மெதுவாகக் கற்பவர்கள் பாடத்தை அறிந்துகொள்ள இயலாது தவித்துக் கொண்டிருப்பார்கள். எதுவாயினும் இருவருக்கும் ஆசிரியரே உறுதுணை. ஆசிரியர் பிள்ளை களுடைய நிலைமைக்கு ஏற்றவாறு பட்டறிவை ஒட்டியும் அவர்களுடைய வேறுபடும் திறன்களுக்கு ஏற்பவும் தனித்தனி இயல்புகளுக்கு ஏற்றவாறும் கற்பிப்பார். பிள்ளைகள் பெற வேண்டிய பழக் கங்களையும் ஆய்வுத் திறனையும் புத்தகங்கள் அளிக்கமாட்டா. அவை சிந்திப்பதற்கு வாய்ப்பளித்தாலும் சிந்தனை முடிவுகளைத் தந்து விடுகின்றன. அவை பகுத்தறி சிந்தனையை வளர்க்க முடியாது. பாடப் புத்தகம் பிள்ளைகளுக்கு நெட்டுருச் செய்வதற்கு உதவுவதைப் போலப் புத்தகத்தையே தனது கற்பித்தல் கருவியாகக் கருதும் ஆசிரியர் சோம்பேறியாகி விடுவார். அத்தகைய ஆசிரியர் புத்தகத்துக்கு அப்பால் சிந்திப்பதில்லை. புத்தகத்தையே வகுப்பில் படித்துவிட்டுத் தாம் பாடத்தைக் கற்பித்துவிட்டதாக நினைத்துக் கொள்ளுவார். அத்தகைய ஆசிரியர்களுடைய பாடக் குறிப்புப் புத்தகத்தை நன்ருக ஆராய்வதோடல்லாது வகுப்புக்குச் சென்று அவ ருடைய கற்பித்தல் பயனைத் தணிக்கையாளர்கள் கண்டறிய வேண்டும். பாடப் புத்தகம் ஒன்றையே நம்பும் ஆசிரியருக்கு ஒரு பத்துப் புத்தகங் களையாவது கொடுத்து அதே பாடத்தைப் பற்றிப் பார்த்துப் படித்துக் கற்பிக்கச் செய்தல் வேண்டும். நல்லாசிரியர்—புத்தகங்களை மட்டு மன்றி, ஆசிரியக் கருவிகள், அவருடைய இரக்க உள்ளம், பிள்ளைகள் மீதுள்ள அன்பு, அவருக்குரிய கவர்ச்சி ஆகியவற்றை எல்லாம் ஒருங்கே பயன்படுத்துவார். புத்தகங்களை நாம் நீக்க முடியாது. நல்ல புத்தகங்களை நாம் விரும்ப வேண்டும். ஆனல் நல்ல புத்தகங் களை எப்படிப் படிப்பதென்று கற்பிப்பது ஆசிரியருடைய கடமை.

[1]சொல்லாடல் முறையால் நிகழும் கற்பித்தல் பிள்ளைகளுக்கு அக் கறையை உண்டாக்குவதோடு அவர்களுடைய தன்னியக்கத்தையும் தூண்டக்கூடும். புத்தகங்களைப் படித்த பிறகும், பேச்சுக்களைக்

1. Discussion

கேட்ட பிறகும், மற்ற வகையில் கற்றுக் கொண்டதை நன்ருக அறிந்து கொள்வதற்கும், சொல்லாடல் முறையில் மாணவர் திறன் வளரும். சிக்கல்களைத் தீர்ப்பதும் இம்முறையே. சில வேளைகளில் இம்முறையில் பாடம் நிகழ்த்தும்போது சொற்கள் மட்டும் ஆடுமே அன்றிக் கருத்துக் கள் ஆடுவதில்லை. ஆசிரியர் ஒரு புறம், மாணவர் மற்ருெரு புறமாகப் பயனற்ற பேச்சுக்களை நுழைத்து விடுவர்; அல்லது ஆசிரியர் மட்டுமே பேசிவிடுவார். அதனுல் இருவரும் கலந்ததும், பாடத்தோடு சார்புற்றதும், சிந்தனையைத் தூண்டக் கூடியதுமாக நன்ருகத் தெளிவு பெறக்கூடிய முறையில் சொல்லாடல் நிகழ வேண்டும். இம்முறையின் முற்றிய நிலையில் ஆசிரியர் நீக்கப் பெற்றுப் பிள்ளைகள் தாமே பங்கெடுப் பதாக அமைய வேண்டும்.

ஹெர்பார்ட் முறைகள் பழையன என்று கண்டோம். முதன் மூன்று படிகளாகிய ஊக்குநிலை, எடுத்துக் கூறல், ஒப்பிடலும் தொடர்புறுத்த லுமாகிய மூன்ருவது நிலை, ஆகிய மூன்றும் ஒன்ருேடொன்று பின்னி யவை. அவற்றைத் தனித்தனியாகப் பிரிப்பது கடினம். பின்னிரண்டு நிலைகளாகிய பொது விதி காணுதல், செயற் படுத்தல் ஆகியவையும் முதல் மூன்று படிகளோடு அரிமா நோக்கு அல்லது தவளைப் பாய்த்துப் பெறக்கூடும். இவை ஐந்தும் ஆற்ருெழுக்காக அமைவதுகடினம். மேலும் படிகளின் முறையே பாடத்தை நடத்தினுல் ஒரு [1]கற்பித்தல் எந் திரம் இயங்குவதைப் போன்ருகும். இவற்ருல் நாம் அறியக் கிடப்பது யாதோ எனின் அவை ஓர் அறிவு அனுபவத்தின் தொடக்க இறுதிக் கட்டங்களை வகைப் படுத்துவதோடல்லாது அனுபவத்தைப் பொருள் உள்ளதாக்கும் என்பதே.

[2]விரிவுரையாற்றல் முறை வாய் முறையினின்றும் வேறுபட்டது. இஃது ஆசிரியர் மட்டுமே நிகழ்த்துவது; பிள்ளைகள் செவிசாய்த்துக் குறிப்புக்கள் வரைந்து கொள்ளுவது; விரிவுரையாளர் சொல்லுவதெல் லாம் இன்றியமையாதவை. ஒரு சிறிது செவி சாய்க்காது விட்டால் சொல்லிய பொருள்கள் நழுவி விடும். இம்முறை உயர்நிலை வகுப்புக் களுக்கும் ஏற்றதன்று. கல்லூரிகளில் ஓரளவு இடம் பெறலாம். ஆனுல் நம் பள்ளிகளில் தொடக்கநிலை முதல் இறுதிநிலை வரையில் ஆசிரியர் ஒரு பேச்சு எந்திரமாக ஆகி விடுகின்ருர். பாடத்தைப் பேசித் தீர்த்து விடுகின்ருர். பிள்ளைகள் கேட்டாலும் கேட்காவிட்டாலும் அவருக்கு அக்கறையில்லை. அவர் கடன் பேசித் தீர்ப்பது. பிறகு அவர் பேசி யதைச் சொல்லி மாணவர்களை எழுத வைப்பது இதன் அடுத்த கட்டம். ஆசிரியர் ஒரு சிலர் அவர் கொடுக்கப் போகும் குறிப்புக்களையே பேசி விட்டு (படித்துவிட்டு அல்லது ஒப்பித்து விட்டு) அதையே சொல்லி எழுதச் செய்வதும் உண்டு. இம்முறை ஒரோ வழி கல்லூரி வகுப்புக் களில் பயன்படலாம். ஆனுல் மாணவர்கள் விரிவுரை நிகழ்த்தும்போது

1. Teaching machines 2. Lecturing

குறிப்பெடுக்கும் பயிற்சியைப் பெற வேண்டும். ஆசிரியரும் தமது உரையில் புதிய கருத்துக்களை அளிக்க வேண்டும். மேற்கோள்களுக் காகப் பிள்ளைகளுக்குத் தக்க நூல்களைச் சுட்ட வேண்டும். பாடப் பொருளின் மீது சுவை உண்டாக்க வேண்டும். எந்த முறையைக் கையாண்டாலும் ஆசிரியர் அதற்கேற்ப ஒரு சில முக்கியமான கட்டங் களில் வாயுரை நிகழ்த்தினால் நன்மை பயக்கும். ஒரு பொருளைக் குறித்து மாணவரிடையே சொல்லாடல் நிகழும்போதும், அல்லது மாணவர்கள் புத்தகங்களிலிருந்து கருத்துக்களைத் திரட்டும்போதும், சோதனை நிகழ்த்தும் போதும், நடித்தறியும் போதும் அல்லது ஒரு செயல் திட்ட முறையில் ஈடுபாடு கொள்ளும் போதும், எந்த வகுப்பா யினும் சரி, ஆங்காங்கே வாயுரை நிகழ்த்தல் பிள்ளைகளுக்குக் கற்றலில் ஊக்கமும் உதவியும் அளிக்கும். எப்போது பிள்ளைகளுக்கு அத்தகைய உரை நிகழ்த்த வேண்டுமென்பதையும், எப்போது பிள்ளைகளிடமிருந்து கற்றல் திறனை அறிய உசாவ வேண்டும் என்பதையும் ஆசிரியர் கட்டாய மாக உணர வேண்டும்.

மேற்கூறிய ஒரு சில பொது முறைகளோடு மற்றும் சில உள. [1]பயிற்சி அளித்தல் அல்லது பன்முறைப் பயிற்சி அளித்தல் என்பது ஒரு கற்பிக்கும் முறை. ஓரளவு இம்முறை கற்பித்தலுக்கு உரியது. சில திறன்கள் நமது மாணவர்களிடையே ஊன்ற வேண்டும். அதற்குப் பன்முறைப் பயிற்சி வேண்டற்பாலது. பன்முறைப் பயிற்சியினால் பிள்ளைகளுக்குச் கைப்பு ஏற்படுகின்றது என்று கூறுவார் உண்டு. கைப்பு அளிப்பினும் பன்முறைப் பயிற்சி செவிக்கு உறுதுணையாகிறது. பன்முறைப் பயிற்சியால் ஓரிரு முறை செவி சாய்க்காத பிள்ளைகள் மற்றொரு முறை செவி வழி கற்பதற்கு வாய்ப்பு உண்டாகிறது. குழந் தைகள்பால், நிகழும் பலவகை உடற் பயிற்சி விளையாட்டுக்கள் இசை யால் நெகிழ்வதுண்டு. அங்ஙனம் நெகிழ்தல் ஒரு முறையோடு நில்லாது பன்முறை கைப்பின்றி நிகழ்கிறது. குழந்தைப் பிள்ளைகள் பன்முறை உடலை இயக்குதலை வெறுப்பாகக் கொள்ளுவதில்லை. இங்ஙனம் நெகிழ் வதால் அவர்களுடைய உடல் இசைப்பயனாகி விடுகிறது. உடற்பயிற்சி இசையோடு கூடியதால் பிள்ளைகளுடைய களிப்பு அதிகரிக்கிறது. அவர்களுடைய திறமை கூர்மையாகிறது. தம் திறனைக் காணும் பிள்ளைகள் பெருமை கொள்ளுகின்றார்கள். பன்முறைப் பயிற்சியின் நன்மையை மட்டும் பிள்ளைகள் அறிந்து விட்டால் அதனை அவர்கள் வெறுக்காது விரும்புவார்களென்பது திண்ணம். ஒரோவழி ஆசிரியர்கள் தம்முடைய குறைபாட்டின் காரணமாகப் பன்முறைப் பயிற்சியின் பேரால் கூறியது கூறல் என்னும் குற்றத்தைச் செய்கின்றார்கள். எளிமை யான கருத்தையும், மிக எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய பொருளை யும் கூறிக் கூறிப் பிள்ளைகளுடைய கவனத்தையும் இழக்கின்றார்கள்.

---

1. Drill.

பன்முறைப் பயிற்சி தனியாள் வேற்றுமை, பிள்ளைகள் தாமே அறியும் பழக்கம் ஆகியவற்றிற்கு முரண் எதுவாயினும் படித்தல், எழுதுதல், இசைத்தல், எந்திரப் பயிற்சி, நெட்டுருச் செய்ய வேண்டிய சூத்திரம், வாய்பாடு—ஆகியவற்றிற்கு ஆசிரியர் மேற்கொள்ளும் பன்முறைப் பயிற்சி நன்மை பயக்கக்கூடியது. பலவகைப்பாக்கள், சூத்திரங்கள் முதலியவற்றைத் திருத்தமாகவும், எளிமையாகவும், வேகமாகவும், பிழையற ஒப்பிப்பதற்குப் பன்முறைப் பயிற்சி கைகண்ட முறையாகும். ஒரே பாடத்தைப் பல ஆண்டுகள் திரும்பத் திரும்பக் கற்பித்த ஆசிரியர் அவருக்கேற்பட்ட பன்முறைப் பயிற்சியால் அப்பாடத்தில் எளிமை காண்கின்றார். அற்றை நாட்களில் ஏட்டுப் பள்ளிகளில் ஒவ்வொரு பாடத்துக்கும் ஒரு மாணக்கனைச் சட்டாம்பிள்ளையாகப் பள்ளி ஆசிரியர் ஏற்படுத்துவதுண்டு. காட்டாக, வாக்குண்டாம் படித்துவிட்ட மாணவன் வாக்குண்டாம் படிக்கும் மாணவர்களுடைய பாடத்தை ஆசிரியருக்குப் பதிலாகக் கேட்டும் கற்பிப்பதும் உண்டு. அதே சமயத்தில்தான் நல்வழி கற்றுக் கொண்டிருந்தால் நல்வழிச் சட்டாம் பிள்ளையிடம் தன் பாடத்தை ஒப்பித்துக் கற்றுக் கொள்ளுவதுண்டு. இம் முறை கணிதத்துக்கும், பள்ளியில் கற்பிக்கப் பெறும் எல்லாப் பாடங்களுக்கும் உரித்தாயிற்று. ஆசிரியர் மூத்த மாணவர்களுக்கு மட்டும், அவர்களுக்குரிய பாடங்களை நேர்முகமாகக் கற்பிப்பார். மற்ற மாணவர்கள் எல்லோரும் ஒவ்வொரு வகையில் சட்டாம் பிள்ளைகளாகித் தாம் கற்றதைக் கேட்டும், திருத்தியும், சொல்லியும், கற்பித்தும், பன்முறைப் பயிற்சியால் தாம் ஒவ்வொரு பாடத்திலும் தேர்ச்சி பெறுவதுண்டு. எனவே பன்முறைப் பயிற்சி மிகத் தொன்மையது. வழிவழியாக இப்பயிற்சி நல்லாசிரியமாக விளங்கியது. இந்தக் காலத்தில் இம்முறை மீண்டும் வகுப்பில் ஏற்றம் பெறுவது நல்லது. பயிற்சிக்கு வேண்டிய பொருள்களை ஆசிரியர் முற்கூட்டியே ஏற்படுத்தி விட்டால் பிள்ளைகள் தாமாகவே கற்றலைத் தமதாக்கிக் கொள்ளுவார்கள். அத்தகைய பொருள்கள் தனியாள் வேற்றுமையையும் பொருட்படுத்தி வகைப்படுத்தப் பெற்றிருந்தால் எல்லா வகை மாணவருக்கும் நன்மை பயக்கும். அப்போது மாணவர்கள் [1]தான் தொடங்காற்றலைப் பெறுவார்கள். பன்முறைப் பயிற்சி தொடங்கும் பழைய பயிற்சிகளில் குறைபாடிருந்தால் அவற்றை நீக்கி நல்ல முறையோடு தொடங்குதல் நல்லது. வாசித்தலில் பயிற்சி பெறும் மாணவன் பிழையுற்ற முறைகளில் பயிற்சி பெறுவது நல்லதன்று. அதனால் குறைபாடுற்ற பழக்கத்தைக் களைந்து, புதிய பழக்கத்தைத் தொடங்குவது சிறந்தது. பிழையுற்ற முறையிலேயே பயிற்சி பெற்றால் பயனில்லை. எல்லாப் பாடங்களுக்கும் இப்பயிற்சி முறை தகும் என்று கொள்ளுதல் தவறாகும். ஒரோவழி ஒரு குறித்த பெற்றிக்கு மட்டும் தேவையாகலாம். அல்லது மாணவன் தானாகவே ஒரு பொருளை அவாவி

---

1. Initiative

ஆர்வத்தோடு கற்கத் தொடங்கும்போது பன்முறைப் பயிற்சி தனது ஆற்றலை நிறைவாக்கும். பயிற்சியின் வழியாக விரும்பிய பொருளும் அதைப் பயன்படுத்தும் திறனும், அதனுலாய பயனும் கிட்டும். பெற்ருேர் ஒரு சிலர் இளம் பிள்ளைப் பருவத்தில் தமது குழந்தைகளைப் பன்முறைப் பயிற்சி வழியாகப் பலவற்றை நெட்டுருச் செய்யும்படி வாட்டுகிருர்கள். அப் பருவத்தில் பிள்ளைகள் தாமாக உற்ற சூழ்நிலையில் தக்கவற்றைக் கற்பதுவே சிறந்தது.

[1] செய்து காட்டல் முறை :

அறிவியலார் சோதித்தறியாது எந்தக் கருத்தையும் ஏற்றுக் கொள்ளுவதில்லை. உள்ளத்தில் உள்ளி ஒரு கருத்தினை எய்துவது ஒரு மரபு. ஆனல் அறிவியலார் எதையும் நேர்முகமாகக் கண்டு அறியாமல் அதைப் பற்றிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளுவதில்லை. இத்தகைய அறிவியல் முறை ஆசிரியத்துக்குப் பெரும் பயனுயிற்று. ஆசிரியர்களும் ஒரு பொருளினை நேர்முகமாகக் காட்டி விளக்காது ஒரு கருத்தினை வற்புறுத்துவதில்லை. ஒரு பொருளைப் பற்றி நேரல் முறையில் விளக்குவது ஒரு முறை. ஆசிரியர் இம்முறையில் விளக்குங்கால் சொற்களைப் பயன்படுத்துகிருர். வகுப்பறையின் ஓர் ஒலி பெருக்கியாகிவிடுகிருர். மாணவர்கள் செவி சாய்க்கின்ருர்கள். அவர்களுடைய கவனம் ஆசிரியர்கள்பால் அழுத்தமாக இராது, "வால் மட்டும் நுழையவில்லை" என்ற கதைப் பழமொழி இதன் பயனுக்கு எடுத்துக் காட்டு. ஆனல் மெய்ப்பித்தல் முறையில் மாணவர்கள் பொருளினைப் பொருளாகக் காண்கிருர்கள். பொருளைப் பார்த்து ஆசிரியரோடு தாம் அதைப் பற்றி அறிந்து கொள்ளுகிருர்கள். பொருளைப் பார்த்தலால் பிள்ளைகளுடைய உள்ளத்தில் கருத்துக்கள் தாமாகத் தோன்றிவிடுகின்றன. ஆசிரியர் கூற்றைக் கேட்டு அறிந்துகொள்ளாமல் தாமாகவே அறிவது நல்லது. உள்நாட்டில் உள்ள ஓர் ஆசிரியர் கடலைப் பற்றி எவ்வளவுதான் சொற்களால் விளக்கினுலும் மாணவர் கடலை நேர்முகமாகப் பார்த்து அறிந்துகொள்ளுவதற்கு ஒப்பாகாது. பொருளைக் காட்டி விளக்கும் முறை பெரும்பயன் அளிக்கவல்லது. இம் முறையின் பயனுல் கணிதம், பொது விஞ்ஞானம், வரலாறு, நிலநூல் ஆகிய பள்ளிப் பாடங்களை நல்லாசிரியர்கள் வெகு ஆர்வத்தோடு கற்பிக்கிருர்கள். மொழிகளையுங்கூட இம் முறையினுல் நன்ருக விளக்குதல் இயலும்.

செய்து காட்டல் முறை பயனளிக்கக்கூடிய தென்பதை ஆசிரியர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். சொற்களைக் காட்டிலும் நேரே காட்டுவதால் பிள்ளைகள் உள்ளத்தில் காட்சிகள் பதிந்து விடுகின்றன. ஒரு பாடத்தைக் கற்பிப்பதற்கு முன் அதனைக் காட்டல் இயலுமா என்று

1. Demonstration

ஆசிரியர் ஆய்ந்தறிய வேண்டும். நேர்முகப் பொருளினையே நேர்முகமாகக் காட்டுதல், அதனுடைய உருவத்தைச் செய்து காட்டுதல், அதன் பகுதிகளைச் செய்து ஒன்றாக இணைத்து ஓர் உருவமாக்குதல், அதன் நிழற் படத்தைக் காட்டுதல் அல்லது அதன் வரை படத்தை [1] வரைபட ஒளியாக விளக்குதல், ஆகியவை செய்து காட்டல் முறையின்பாற் பட்டவை. ஆசிரிய முறைகளாகிய பேச்சுரை, சொல்லாடல், சோதனை செய்தல் ஆகியவற்றின் போது பொருள்களை செய்து காட்டல் நல்லது. ஒரு சிலர் பேச்சுரைகள் நிகழ்த்தும்போது பொருள்களை நேராகவும் படங்களின் வழியாகவும் காட்டிக் காட்டிக் கருத்துக்களைப் பதியவைப்ப துண்டு. உடற்பயிற்சி ஆசிரியர் தம்முடைய உடலத்தை இயக்கிக் காட்டினால் அதைக் காணும் பிள்ளைகள் தாமாகவே தமது உடலை இயக்கிப் பழகுவார்கள். கையெழுத்துப் பழகுதல் இளமையில் நல்லது. ஆசிரியர் கரும்பலகையில் தாம் எழுதுவதை அழகாக எழுதிக் காட்டினால் அதைப் பார்த்து மாணவர்கள் பழகுவார்கள். நீரில் நீந்துதல் கற்பிக்கும் ஆசிரியர் தான் நீரில் மூழ்கி நீந்திக் காட்ட வேண்டும். தச்சு, நெய்தல், சமையல் ஆகியவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அவரவர்களுடைய தொழிலை செய்து காட்டாது வாயளவில் பேசி விட்டால் கற்பித்தலாகாது. இங்ஙனம் செய்து காட்டல் வாயுரையைக் காட்டிலும் கற்க வேண்டிய கருத்துக்களை ஆணித்தரமாக விளக்க வல்லது.

[2] சோதனைச்சாலை முறை :

செய்து காட்டல் முறையில் பொருளை மட்டும் ஆசிரியர் காட்டி விளக்குகிறார். சோதனை முறையால் காட்டிய பொருளைக் கண்ணால் பார்ப்பதோடல்லாது அதைச் சோதித்து அதன் கூற்றுக்களை ஆராய்ந்து மாணவர் அறிகின்றனர். ஒரு சோதனைச் சாலையில் பொருளைக் கையால் தொட்டும் அதை ஆராய்ந்தும் அறிவது வழக்கம். சோதனை முறைப்படி ஆசிரியர் கற்க வேண்டியதை மாணவர் தாமாகவே அறிந்து கொள்ளும்படிக் கேள்விகளை விடுத்து அறிய வேண்டியவற்றைத் தாமாகவே சோதனை செய்து சரி பார்த்துக் கொள்ளத் திட்டம் வகுக்கிறார். பொருள்களோடு அவற்றைப் பற்றி அறியக்கூடிய அனுபவங்களைத் தந்துதவுவதே இம்முறையின் அடிப்படை. மாணவர் பார்ப்பதையும், கேட்பதையும், சொல்லுவதையும், செய்வதையும் திருத்தமாக நடைபெற வழி காட்ட வேண்டியது ஆசிரியர் கடமை. சோதனை முறையில் மாணவர்கள் சோதனைப் பொருள்கள் எத்துணையாயினும் ஓர் ஆர்வத்தோடு கூர்ந்தறியும் மனப்பான்மையோடு சோதனை செய்தாலன்றிப் பயன் கிட்டாது. ஆசிரியரும் அவ்வண்ணமே ஆர்வம் நிறைந்தவராதல் வேண்டும். அல்லாக்கால் சோதனைப் பொருட்

1. Epidiascope 2. Experimental or Laboratory method

கள் எத்துணையாயினும் அவை முறையறியா ஆசிரியரிடத்தில் ஒரு நன்மையும் பயவாது. ஆனால் முறை அறிந்த ஆசிரியர் சிறிய அளவு பொருள்களைத் துணைக் கொண்டு பேரளவு ஆர்வத்தை மாணவரிடையே பரப்பி விடுவார். எல்லாவற்றிற்கும் சோதனை முறை சிறந்தது என்று கொள்ளுதல் மிகையாகும். சோதனையால் அறிய வேண்டியவற்றை மட்டும் அம்முறையால் அறியலாம். சோதனைக்குப் பிறகு புத்தம் புதிய கருத்துக்கள் மாணவர் உள்ளத்தில் நிகழ வேண்டும். எல்லாப் பாடங் களுக்கும் சோதனை முறையை வற்புறுத்தாது செய்து காட்டல் வழியில் பல சிக்கலுற்ற பொருள்களை ஆசிரியரது வாயுரை வன்மையால் வெகு எளிதில் விளக்கலாம்.

[1] கண்டறி முறை :

கண்டறி முறை என்பது மாணவர்களைத் தாமாகவே தாம் கற்க வேண்டியதைக் கண்டறியச் செய்வதாகும். ஆசிரியர் இம் முறையை மேற்கொண்டால் பிள்ளைகள் அறிந்து கற்றுக்கொள்ளுவதற்கு வழி கோல வேண்டும். ஆசிரியர் உற்ற சூழ்நிலையை மட்டும் உண்டாக்கித் தரவேண்டியது கடமை. இம்முறை அறிவியலார் கையாளும் முறை யாகும். அன்று ஆர்க்கிமிடீஸ் கண்ட உண்மையும், நியூட்டன் அறிந்த புவியீர்ப்புத் தத்துவமும், ஐன்ஸ்டீன் கண்ட காட்சியும் இம் முறையினாலன்றோ! அதனால் பிள்ளைகளுக்கு ஆசிரியர் அறிவிப்பு ஒரு சிறிதேயாம். பிள்ளைகள் தாமே மற்றவற்றைக் கற்றறிதல்-உண்மையான கல்விக்கு வழியாகும் என்பதாகிய [2] ஸ்பென்சர் பெருமானின் கூற்று பின்னர் அறிஞர் பலரால் ஆக்கம் பெற்றது. பிள்ளைகள் தாமாகவே எதையும் கற்றறிந்தால் அவர்களுக்கு உளத்திறன் உண்டாகிறது. அசைவற்றுப் பாடத்துக்குச் செவி சாய்க்காது அசைவுற்றுத் தாமாகவே செயற்படின் அடிப்படையில் வேண்டியவற்றைக் கற்றறிகின்றர்கள். ஆனால் பெரிய மேதைகள் நிலையில் உண்மைகளைக் கண்டறிந்து உலகத் துக்கு உதவ வேண்டுமென்பது இம்முறையின் நோக்கமன்று. ஓரளவு பிள்ளைகள் தாமாகவே ஆசிரியர் உதவியைக் கொண்டு கற்க வேண்டு மென்பதே இம் முறையின் குறிக்கோள். ஆசிரியர் பெரும் பங்கு கொள்ளாது வழிகாட்டியாக கற்றல் நிலையை மட்டும் உந்தினால் மாணவர்கள் தாம் கற்க வேண்டியவற்றைக் கற்றறிவார்கள். மாணவ ரிடையே சிக்கல்களை எழுப்பி அவற்றைத் தீர்த்துவைக்கச் சொல்லுவது முண்டு. இங்ஙனம் தீர்க்கும்போது பிள்ளைகள் கருத்துக்கள் பலவற் றைப் புதிதாக அறிந்து கொள்ளுவார்கள். இத்தகைய முறையில் மாணவர்கள் ஈடுபாடு பெறும் காரணத்தால் இது [3] பொது அறிவியல் பாடத்துக்கே உரியதென்பார் உளர். ஆனால் இஃது எல்லாப் பாடத்துக்கும் உரித்தாகும். பள்ளிப் பாடங்கள் எதுவாயினும் மாணவர்

1. Method of Discovery 2. Shencer 3. General Science

கற்றலில் பெரும் பங்கு கொண்டால் அவர்களுக்குப் பெரும் பயன் கிட்டுவது கண்கூடு.

[1] டால்டன் முறை :

இதை டால்டன் திட்டமென்றும் சொல்லுவதுண்டு. இம்முறையில் ஆசிரியருக்கும் மாணவருக்கும் ஓர் ஒப்பந்தம் நிகழ்கின்றது. மாணவர் ஒரு குறித்த காலத்துக்குள் தம்மிடம் ஒப்படைத்த பாடங்களைத் திட்டப்படி முடித்து விடுவதாக ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறார்கள். ஒப்பந்தம் செய்த பிறகு, மாணவர் தம் விருப்பப்படிப் பாடங்களை நேரத்துக்கு ஏற்றவாறு வகுத்துக் கொண்டு தமது பணிகளை ஆற்றலாம். ஆனால் முதல் ஒப்பந்தம் முடிவு பெறுகின்ற வரையில் புதியதொரு ஒப்பந்தம் நிகழ்வதில்லை. இம்முறையில் தனி ஒவ்வொரு மாணவரும் தன்னுடைய போக்கில் அதிக இடர்ப்பாடுருமல் தனக்கென வகுத்துக்கொண்ட பாடப் பகுதிகளை நிறைவு செய்வார். ஒவ்வொரு வகுப்பறையும் வகுப்பறையாகக் காட்சி அளிக்காது. அஃது ஆய்கூடமாகத் தோன்றும். ஆசிரியர், வகுப்பில் பாடம் கற்பிப்பது போன்ற பணியை மேற்கொள்வதில்லை. [2] கலந்துரையாளராக விளங்குவதே அவர் கடமை. ஒப்பந்தம் பெற்ற பிள்ளைகள் [3] தாம் தொடங்காற்றல் பெற்று [4] தகுவழி காணும் திறமையோடு தமது ஒப்பந்தத்தை நிறைவேற்றுவர். ஒப்பந்த காலத்தில் மாணவர்கள் தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு ஒவ்வொரு பணியையும் கட்டுப்பாடின்றிச் செயலாற்றுவார்கள். இதனுல் ஒவ்வொரு மாணவரும் மெதுவாகவும், விரைவாகவும் தமது ஆற்றலுக்கு ஏற்றபடி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவார்.

டால்டன் முறையில் நடைபெறும் பள்ளிகள் உள. இம்முறையில் நம்பிக்கை உள்ள ஆசிரியர்கள் பலர் இருந்தார்கள். இம்முறையின் பயனைக் கண்டு மகிழ்வுற்றவர்களும் உண்டு. எல்லாம் மாணவப் பணியாகையால் ஆசிரியர்கள் சோம்பி இருக்கலாம் என்று கருதுவது தவறு. ஒப்பந்தம் நிறைவேற்றும்போது அந்தந்தப் பாட அறைகளுள் ஆசிரியர் நுழைந்து பிள்ளைகளுடைய ஐயங்களைத் தீர்த்து வைப்பார். பிள்ளைகள் படிக்கவேண்டிய புத்தகங்களைத் தந்து உதவுவார். பிள்ளைகள் ஒப்பந்தத்தைத் தீர்த்தவுடன் அவர்களுடைய வேலைகளை மதிப்பிடுவார். மதிப்பினைக் குறிப்பதற்கு ஒவ்வொரு பிள்ளைக்கும் வரை படம் வைக்கப்படும். இவற்றைக் கண்ணுற்றுல் பிள்ளைகள் பணிகளை முடிக்கக்கூடிய வேகம் அறியப் பெறும்.

டால்டன் பள்ளிகளில் வகுப்பறைக்குப் பதிலாக ஒவ்வொரு பாடத்துக்கும் ஓர் அறை உண்டு. பாட அறைகளில் அந்தந்தப் பாடத்துக்கு ஏற்ற புத்தகங்களும் போதனைக் கருவிகளும் வைக்கப் பெற்றிருக்கும்.

---

1. Dalton Plan 2. Consultant 3. Initiative 4. Resource

பிள்ளைகள் தமது விருப்புக்கேற்பப் பாட அறைகளுக்குள் சென்று தமது பணியை ஆற்றுவார்கள்.

டால்டன் முறை குழந்தைகளுக்குச் சரியானதன்று என்று ஒதுக்குவதும் உண்டு. இஃது அறிவுள்ள பிள்ளைகளுக்கே ஏற்றதாகையால் ஒப்பந்தப் பொறுப்பற்ற பிள்ளைகளுக்கு இம்முறை பயனளிக்காது என்று கருதுவதும் உண்டு. ஆசிரியரும் மாணவரும் மொழிப் பாடங்களில் பேசிப் பழகினுலன்றி மாணவருக்கு மொழிப் பயிற்சி ஏற்படாதல்லவா ? இம்முறையால் அத்தகைய பேச்சுப் பயிற்சிக்கு வழியில்லை. அன்று இம்முறை ஏற்றதாக இருந்த காலத்தில் ஆங்கில மொழி வழியாக இது நடைபெற்றது. அம்மொழியில் பிள்ளைகளுக்கு ஏற்ற புத்தகங்கள் இருந்தன. இன்று தாய்மொழி வழியில் இம்முறை நடைபெற வேண்டுமானுல் போதிய பாடப் புத்தகங்கள் இல்லை யென்பர். ஆயினும் இம்முறையின் அடிப்படை கல்வியாளர் போற்றக்கூடியது; ஆசிரியர்கள் சிந்திக்கத் தக்கது. இயன்ற வரையில் ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு பாடத்தையாவது டால்டன் மயமாக்கிப் பிள்ளைகளை இப்புதிய முறையில் பழக்கலாம்.

[1] செயல் திட்ட முறை :

டால்டன் முறையைப் போன்று செயல் திட்ட முறையும் ஆசிரியத்துக்கு அணி செய்வதொன்று. பழங்கல்வி, மாணவர்கள் கற்றதை எல்லாம் நெட்டுருச் செய்யுமாறு வற்புறுத்தியது. அம்முறையால் அவர்களுடைய சிந்தனையைத் தூண்டுதல் இயலாதொழிந்தது. ஹெர்பார்ட் கண்ட ஐந்து படிகள் புதிய பொருளைப் பழம் பொருள்களோடு ஒட்டவைத்து வேண்டிய மட்டும் பொருளறிவை ஏற்றுக்கொள்ள உதவின. ஆனுல் ஆசிரியர் அளிப்பதே பிச்சையாக இருந்தது. அம்முறையில் மாணவன் தானுகவே கற்றறியும் வாய்ப்புக்கு வழி இல்லை. செயல் திட்ட முறையில் [2] ஜான் டூயியும் [3] கில்பேட்ரிக்கும் புதிய ஐந்து படிகளைத் தந்து உதவியுள்ளார்கள். இவை செயல் முறைத் திட்டத்துக்கு அடிப்படையானவை. இத்திட்டத்தில் மாணவர்கள் முன்னணி பெறுகின்றுர்கள். ஆசிரியர் பின்னணியில் வழிகாட்டியாக விளங்குகிறுர். இவற்றுல் மாணவர்கள் சிந்தனை செய்கிறுர்கள். தாம் தொடங்காற்றலைப் பெறுகிறுர்கள் ; அவர்களே ஒரு திட்டத்தைச் செயலாற்றுகிறுர்கள்.

செயல் திட்டமென்பது பொதுப்பட எல்லாப் பாடங்களுக்கும் உரித்தாகும். ஆனுல் ஆசிரிய முறையில் அது ஒரு பெருத்த சாதனையை அளிக்கக்கூடிய கற்கும் செயல்முறை என்று கொள்ளுதல் பொருந்தும். சமயற் கலையில் மாணவிகள் தேர்ச்சி பெறுகிறுர்கள். ஒரு வகுப்பு நேரத்தில் ஓர் உண்டியைத் தயாரித்தல் என்பது ஒரு செயல் திட்டம்.

---

1. Project Method 2. John Dewey 3. Kilpatrick

தையற் கலையாயின் மாணவிகள் ஒரு சிலர் சேர்ந்து ஒரு குறித்த ஆடையைத் தைத்துத் தமது கலைவளம் காணுதலும் ஒரு செயல் திட்டம். ஆதாரப் பள்ளிகளில் பயிர்த்தொழில் கற்கும் மாணவர்கள் ஒன்று சேர்ந்து நிலத்தைப் பண்படுத்தி விதை விதைத்து நீர் பாய்ச்சிக் கதிர்கள் முற்றும் வரையில் கண்காணித்து அறுவடை செய்து தானியங்களைச் சேர்ப்பதும் ஒரு செயல் திட்ட முறை. எனவே ஒரு செயல் திட்டம் செயல்படக்கூடிய ஒரு சிக்கற் பொருள்; அதைத் திட்டமாக வகுத்து முடித்துத் திறன் காணுவது செயல். ஒரு சில திட்டத்துக்குப் பல கருவிகள், முறைகள் வேண்டியனவாகும். சோதனை முறைக்கும் செயல் திட்டத்துக்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. சோதனை முடிந்த பிறகு நாம் காண்பது சோதனையினால் ஏற்படும் ஒரு சிறு பயன்; பௌதிகமாயின் ஒரு பௌதிக நிகழ்ச்சி; வேதியற் சோதனையாயின் ஒரு வேதியல் எதிர்வினை. ஆனால் ஒரு செயல் திட்டத்தின் முடிவில் பிள்ளைகள் ஒரு தோட்டத்தை உருவாக்கலாம். பாலத்தைப் போன்ற மாதிரி ஒன்றைச் செய்து முடிக்கலாம். அல்லது ஒரு கப்பல் உருவத்தைச் செய்யலாம். எனவே செயல் திட்டத்தின் முடிவில் செயற் பாட்டினால் உண்டான ஒரு வினை பொருள் உண்டு.

ஒவ்வொரு செயல் திட்ட முயற்சியிலும் பிள்ளைகள் கூடி [1] கலந்தாய்வார்கள். பிறகு இரண்டாவதாகத் [2] திட்டம் வகுப்பார்கள். மூன்றாவதாக [3] வேலையைத் தொடங்கி நிகழ்த்துவார்கள். நான்காவதாக வேலை முடிந்தவுடன் [4] மதிப்பிடுவார்கள். ஒவ்வொரு நிலையிலும் மாணவர்களுடைய ஈடுபாடு மிக முக்கியமானது. ஒவ்வொரு நிலையிலும் நடைபெறுவதெல்லாம் அவர்களுடையதே. திட்டம் நிகழும்போது ஆசிரியர் பின்னணியிலிருந்து வழிவகைகள் கூறுவார். திட்டத்தைப் பொறுக்கி எடுப்பதே மாணவர்களுடையதாக நிகழும்; அல்லது ஆசிரியர் திட்டத்தை வகுத்துத் தருவார்.

செயல் திட்டத்தால் மாணவர்களுடைய பட்டறிவும், பொருளறிவும், திறனும் புதிய நிலைகளில் பயன்படுவதோடன்றி விழுப்பம் பெறுகின்றன. செயல் திட்டமுறை பள்ளிப் படிப்பினுக்கு அனுபவ மதிப்புக்களைத் தருகின்றது. கற்கும் கல்வி வெறும் ஏட்டுச் சுரைக்காயாக நில்லாது கறிக்கு உதவுகின்றது; அஃதாவது அனுபவ நிலைகளில் பயனுடைத்தாகின்றது. செயற்பாடு நிகழும்போது இறுதியில் வெற்றியைக் காண விழையும் மாணவர்கள் ஊக்கம் பெறுகின்றார்கள். அதனால் அவர்கள் நடத்தும் திட்டம் அவர்களுடையதாகவே கருதப் பெறுகிறது. செயலாற்றல் அவர்கள் கடனாகவும் இறுதி வெற்றி அவர்களுடையதாகவும் கருதப் பெறுகின்றன. பிள்ளைகள் ஈடுபாடு பெறுது ஆசிரியர் கற்பிக்கும் பாடங்கள், ஆசிரியர் பொறுப்பின்மையையும் திறமைக் குறை

1. Purposing stage 2. Planning stage 3. Executing stage 4. Judging stage.

வையும் காட்டுகின்றன. செயல் திட்டம் நிகழும்போது வழிகளும் கருவிகளும் கைக்குதவா விட்டால் பிள்ளைகள்தாமே அவற்றைத் தேடும் அனுபவத்தைப் பெறுகின்றுர்கள். இங்ஙனம் அவர்களுடைய பழக்கங்கள், தாம் தொடங்காற்றல், முன்னறிவாற்றல், [1] புதுப் பாங்குடைமை—ஆகியவை உண்டாகின்றன. புத்தகங்களையும் பல இதழ் வெளியீடுகளையும் துருவி ஆராய்ந்து பொருள்களைத் தேடும் திறனும் வளர்கின்றது. செயற்பாடு நிகழும்போது சித்திரம் வரைதல், வண்ணம் தீட்டுதல், கைத்திறன் வளருதல்—ஆகிய திறன்களுக்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. திட்டம் வகுத்தபடி ஒவ்வொரு படியிலும் வெற்றியைக் கண்டு, பிறகு இறுதியைக் காண்பதற்கு வேண்டிய பொறையும் பொறுப்பும் மாணவரிடையே உண்டாகின்றன. ஒரு திட்டம் செயற்பட மாணவர்கள் குழுக்களாகப் பணி புரியும்போது அவர்களிடையே ஒருமைப்பாடு, பொறுப்பிற் பங்கீடு, ஒற்றுமையோடு பணியாற்றல், தனித்தனியாகப் பொறுப்பேற்றல், தலைமை தாங்குதல், தலைவனைப் பின்பற்றுதல் ஆகிய பல பண்பாடுகள் இயற்கை நிலையில் ஏற்பட்டு உதவுகின்றன.

செயல் திட்ட முறையில் குறைபாடுகள் கூறுவதும் உண்டு. இத் திட்டம் நேரத்தைப் போக்குவதென்றும் பணச் செலவுடையதென்றும் கூறுவர். இறுதியில் வெற்றியைக் காண்பதற்குப் பங்கெடுக்கும் பிள்ளைகள் முறைகளை நழுவ விடுவார்கள்; இறுதியினையே குறிக்கோளாகக் கொள்ளுவார்கள்; ஆகையால் இறுதி வெற்றி முதன்மை பெறும். அதனுல் பிள்ளைகள் குறுக்கு முறைகளில் பிறழ்ந்து விடுவார்கள்; கற்க வேண்டியவற்றைக்கல்லாது தவறிவிடுவார்கள்; பிள்ளைகள் சுறுசுறுப்பாகக் காட்சி அளிப்பார்கள்; ஆனுல் பலவற்றைக் கற்கின்றுர்களா என்பது ஐயம்; மேலும் அவர்கள் கற்றதெல்லாம் திட்டத்துக்குக் கருவியாகின்றனவே அன்றி உண்மையில் கற்றல் நிகழ்ச்சிகளா என்பவையும் ஐயப்பாடு. கற்றல் முழுவதும் [2] இடை நிகழ்ச்சிகளன்றே! அதனுல் இடைநிகழ் கற்றல்களை வரிசைப்படுத்தி மீண்டும் அவற்றை நன்குகப் பெறுவதற்குப் பயிற்சி அளிக்கவேண்டும். கல்வியாளர்கள் பலர் செயல் திட்ட முறையே சிறந்ததென்று கருதுகிருர்கள். பள்ளிப்பாடங்கள் எல்லாவற்றையும் செயல் திட்டத்தில் அமைக்க இயலுமா என்பது ஆராயத் தக்கது. ஆனுல் இம்முறை தோன்றிய பிறகு நம் நாட்டில் பஞ்சாபிலுள்ள மோகா என்னுமிடத்தில் இது தொடங்கப் பெற்றது. நமது மாநிலத்தில் ஈரோடு மாவட்டத்தில் லண்டன் சமயத்தார் பள்ளியில் வெகு ஆர்வத்தோடு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இம்முறையைப் பள்ளிகளில் செயல்படுத்துவதற்கு ஆசிரியர்களுடைய ஆர்வமும் திறனும் மிக வேண்டற்பாலவை. இம்முறையினுல் மாணவர்களுக்கு நன்மை கிட்டுமே அன்றி அவர்களுடைய கற்றல் தடைபடாது. ஆனுல் ஒவ்

1. Originality 2. Incidental

வொரு செயல் திட்டத்திலும் ஆசிரியத்தின் விழுமிய முறைகளைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். காட்டாக நேர்முகக் கற்றல், ஒழுங்காகக் கற்றல், கற்கவேண்டிய பொருள்களை உரையாடிக் கற்றல், சோதனை முறை ஆகியவை இம்முறைக்கு விழுப்பம் தரக்கூடியவை. இவை யெல்லாம் ஒருங்கு திரண்டு திட்டத்தின் உறுப்பானுல் மாணவர் நன்மை யைப் பெறுவர். கல்வியின் குறிக்கோள், ஒவ்வொரு பிள்ளையின் உளப் பான்மை, கற்றல் முறை, பாடங்கள், அவற்றை ஒட்டிய செயற்பாடுகள், கற்பிக்கும் முறை இவையெல்லாம் திட்டத்தில் இடம் பெறலாம். மாண வர், ஆசிரியர், கற்கும் பாடம் ஆகிய மூன்று முனைகளும் ஒன்ருகச் சேர்ந்து இயங்கக்கூடிய இயற்கைக் காட்சியினை இத்திட்டம் தரவல்லது. கல்வி என்ருல் வாழ்க்கை அனுபவம் தரக்கூடியதாக வேண்டும் என்று கருதுகிருேம். செயல் திட்டமுறை வாழ்க்கைத் திட்டத்தின் பாற்பட் டது. நாம் காணும் வெறும் பள்ளிப் படிப்போடு இது நிற்பதன்று. பாடச் செயலை வாழ்க்கைத் திட்டமாகச் செயல்படுத்த வல்லது. ஆசிரிய முறைகளும் இதனுல் பல பயன்களைப் பெறக்கூடியது.

1. நடிப்பு முறை :

உள்ளத்தோடு உடல் இயங்கினுல் கற்றல் நன்கு நிகழ்கின்றது. இதையே செயல் முறையில் கற்றல் என்று கூறுகிருேம். ஒரு பொருளை உற்று நோக்கும்போதும் ஒரு பாடத்தை வாய்விட்டுப் படிக்கும்போதும் மெல்லிய தசைகள் இயங்குகின்றன. நாம் கருத்தை அல்லது உணர்ச்சியை வெளியிடும்போது இயற்கை எதிருன்றல் நிகழ்கின்றது. பேசுவதும் எழுதுவதும் தசைகளின் எதிருன்றலே யாம். மூளையில் பல கருத்துக்களைக் குழப்பிக்கொண்டு இருப்பதைக் காட்டிலும் கைகளால் சிலவற்றை இயற்றி ஆற்றலை வெளிப்படுத்துதல் மேலானதென்று கல்வியாளர் கூறுவர். சிந்தித்தலிலுங்கூடப் பல உறுப் புக்கள் இயங்குகின்றன. கற்றலின் அடிப்படை குழவிப் பருவத்திலும் விலங்கினங்களிலும் பல வாழ்க்கை நிலைமைகளுக்கு ஏற்பவும் உடலத் தின் வழியாக எதிருன்றலை வெளியிடுவதேயாம். ஒரு பெரியவர் நம்மை ஒரு விருந்துக்கு அழைத்தால் அழைப்பினை ஏற்றுக்கொண்டு புன்னகை பூக்கின்ருேம். முகமலர்ச்சி காட்டுகின்ருேம்; பெரியவராகையால், கைகளைத் தூக்கி அஞ்சலி செய்கிருேம். ஆகா, சரி, நன்றி என்று சொல்லாலும் கையாலும் நமது மகிழ்ச்சியை அறிவிக்கின்ருேம். பெரி யவர் அழைப்புப் பல இயக்க எதிருன்றல்களைப் புறத்தே மெய்ப்பித்து விடுகிறது. உடலியக்கம் பேசுகிறது. சொற்கள் குறைகின்றன. சொற்களின் குறைகளை இயக்க எதிருன்றல்கள் நிறைவு செய்கின்றன. குழந்தைகள் பேசும்போது அங்கங்களை எல்லாம் இயக்கித் தமது கருத் தினைப் புறத்தே வெளியிடுகின்றன. ஒரு விலங்கினைக் கண்ட குழந்தை

1. Dramatic Method

அதை விவரிப்பதற்குத் தனது கைகால்களை அசைத்து நிமிர்ந்து, குனிந்து குதித்து சொல்லாலும் வேறு ஒலிகளாலும் வெளிப்படுத்து கின்றது. இங்ஙனம் உள்ளத்தோடு மெய் அசைவது இயல்பூக்கத்தின் பாற்பட்டது. பிள்ளைகள் மகிழ்ச்சி வெளியீட்டால் களிநடம் புரிவார்கள். பெரியவர்களைப் போன்று மெத்த மகிழ்ச்சி என்ற ஒரு தொடர் மொழி யோடு முகத்தை அசையாது பேசமாட்டார்கள். அவர்களுடைய ஆர வார மெல்லாம் உடலத்தை ஆட்டக்கூடியது. எனவே பிள்ளைகள் நடிக் கும் திறனைப் பெறுவது எளிது. அதனால் அவர்களுக்கு இயற்கை இன்பம் உண்டு. உடல் இயங்கும்போது இயங்குதல் நிலையில் உடலும் உள்ளமும் இரண்டறக் கலக்கின்றன.

பிள்ளைகளுக்கு நடிப்புத் திறமையை வெகு விழிப்போடு அளிக்க வேண்டும். மிகைபட நடித்தலும் குறைபட நடித்தலும் கூடாது. இடைப்பட நடித்தல் நல்லது. எண்ணங்களும் சொற்களும் உடலசை வும் ஒன்றிய நிலையே நடிப்பு நிலை.

பள்ளிப் பாடங்கள் பலவற்றினை நடித்தலுக்காக்கி ஆசிரியர் உதவக்கூடும். எவ்வளவு கடினமான பகுதியாயினும் அதனை ஒரு முறை நடித்தாலும் நடிக்க எதிர் நின்று பார்த்தாலும் எளிதில் அறிந்து கொள்ள இயலும். சிறிய வகுப்புக்களில் எல்லாப் பாடங்களையும் பிள்ளைகள் நடித்தே கற்கும் வாய்ப்புக்களை நல்குவது நல்லது. பெரிய வகுப்புக்களிலுங்கூட மொழிப் பாடங்கள், வரலாறு ஆகிய இரண்டை யும் நடித்துப் பயன் அடைதல் கண்கூடு. ஆசிரியர் தாய்மொழி வழி யாகப் பாடங்களையே நாடகங்களாக மாற்றிப் பிள்ளைகளை நடிக்கச் செய்து பாடத்தில் இன்பம் பயக்கலாம். ஒவ்வொரு வகுப்பறையையும் நாடக மேடையாக்கிப் பிள்ளைகளை நடிக்கச் செய்வது மிக நல்லது. ஆண்டுக்கு ஒரு முறை மட்டும் பள்ளி விழாவில் ஒரு சிலரை மட்டும் தேடிப் பிடித்து நடிக்கச் செய்கிறோம். நம் பள்ளிகளில் சிறிய வகுப்பு மாணவர்களுக்குப் பாடங்களை நடித்துக்கற்கும் வாய்ப்பினை அளித்தால், அவர்கள் ஐயம் திரிபு அற நடித்தவற்றைக் கற்றுக் கொள்ளுவார்கள். நடித்தல் வகுப்புக்கள் நடைமுறையாக அமைய வேண்டும். மாணவர் களுடைய பலப்பல திறன்கள் அப்போது வெளிப்பட்டு நடிப்புக் காட்சி பெறுவதோடு பாடங்களையும் நன்ருகக் கற்றுக் கொள்ள உதவும்.

[1] தன்னியக்க முறை :

ஆசிரிய முறைகள் எல்லாவற்றிற்கும் தானகவே கற்றுக்கொள்ளு தல் முறை பொதுவானது. தானகவே கற்றுக்கொள்ளும் திறனை எப்படி வளர்ப்பது என்ற வினு எழுவது இயற்கை. பிள்ளைகள் பாடும் திறன், நீந்தும் திறன், படிக்கும் திறன் ஆகியவற்றை எப்படிப் பெறு கின்ருர்கள். அதைப் போலத் தாமாகவே கற்றுக்கொள்ளும் திறனையும்

1. Self activity method

அவர்கள் பெற இயலும். தன்னியக்கத்தை மாணவர்களிடையே வளர்ப்பதே குறிக்கோளென ஆசிரியர் தம் பணியைத் தொடங்க வேண்டும். தாஞகக் கற்றுக்கொள்ளக்கூடிய வழிகளைப் பெறுவதற்கு வேண்டிய அனுபவங்களை ஆக்கித் தர வேண்டும். பொதுவாக நம் பள்ளிகளில் ஆசிரியர் ஒரு சிலர் எல்லாப் பாடங்களையும் தொடக்க முதல் இறுதி வரையில் தான் கற்றுக் கொடுப்பது கடன் என்று கருதி அதன்படி பணி யாற்றுகிருர். எப்படிக் கற்பது என்ற முறைக்குப் பிள்ளைகளை ஆற்றுப்படுத்தி விட்டால் எதையும் கற்றுக்கொள்ளுவது எளிதாகும். வாழ்க்கை முழுவதும் கற்றல் தொடர்ந்து நடைபெற வேண்டியது இன்றியமையாததாகையால் கல்வியின்பால் இயற்கைக் கவர்ச்சியை ஊட்ட வேண்டியது அவசியம். பிள்ளைகளை அதிகமாக வற்புறுத்திஞல் கவர்ச்சியும் திறனும் குறைவுறும். மற்ருெரு சாரார் வற்புறுத்தலை விட்டுப் பிள்ளைகளுக்கு உரிமை தந்துவிட்டால் தாமாகவே பொறுப்பினை உணர்ந்து அக்கறையை வளர்த்துக் கொண்டு கற்பிக்கும் திறனைப் பெறுவர் என்பர். இளமைப் பருவத்தில் பிள்ளைகளுடைய அக்கறையை வளர்ப்பதற்கு நல்ல முறையில் வழி காட்ட வேண்டும். அவர்கள் தாமாகவே தம்முடைய முற்ருத துணிவுகளுக்கு அவர்களை இயக்கிக் கொள்ளுதற்கு விட்டுவிடுவது தவருகும். அவர்கள் கவர்ச்சியும் திறனுமின்றித் தாமாகவே இயங்கத் தொடங்கிஞல் தட்டுத் தடுமாறிக் கற்றல் அல்லது [1] முயன்று தவறிக் கற்றல் நிகழும். இதனை டூயி பின் வருமாறு விளக்கியுள்ளார். பிள்ளைகளுக்குக் கட்டற்ற உரிமை அளித்து விட்டால் அவர்கள் தற்செயலாகத் தோன்றும் கருத்தேற்றங்களால் உந்தப்பெற்று எதனையும் பயனுறும்படி கற்றுக்கொள்ள இயலாது. வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களைவிட திறமையும் முழு அனுபவமும் உள்ளவர். எனவே பிள்ளைகளுக்கு அவர் எந்தத் திட்டத்திலும் வழிகாட்ட வேண்டியது அவரது கடமை. அவர் தாமாகக் கற்க இயங்குதலுக்கு வேண்டிய சூழ்நிலையைக் கண்டறிந்து பிள்ளைகளை அதில் பொருத்தி அவர்களோடு தானும் இயங்கிக் கற்றற் பயனைக் கிட்டுவதற்கு வழி வகுக்க வேண்டும்.

கற்பிக்கும் முறைகள் ஒவ்வொன்றும் ஒரு சில திறன்களை அளிக்க வல்லன. வாழ்க்கையில் ஏற்படும் பல சூழ்நிலைகளுக்கு ஏற்பப் பொருத்திக்கொள்ளுவதற்கு இத்திறன்களெல்லாம் பயனளிக்கக் கூடியவை. கற்றலுக்கு அறிவுசார் வளம் தேவை. ஒரே முறையில் கற்பிக்கும் ஆசிரியர் மாணவர்களுக்குப் பல திறன்களை அளிக்க விரும்புகிருர். ஆஞல் பல முறைகளில் அன்ருே பிள்ளைகள் பல திறன்களைப் பெறக் கூடும். ஒவ்வொரு திறனையும் வளர்க்கும்போது பிள்ளைகள் தாமாகவே இயங்கித் திறன்களில் தேர்ச்சி பெறுவதற்கு வாய்ப்புத்.தரல் வேண்டும். எனவே தன்னியக்கம் ஒரு தனிப்பட்ட முறையன்று; அஃது இயலாத

1. Method of Trial by Error

தொன்றன்று ; அஃது எட்டிப்பிடிக்க முடியாததொன்று. அஃது எல்லா மாணுக்கருக்கும் இயலும். ஆனல் ஆசிரியர் ஒவ்வொரு முறையிலும் பிள்ளைகளை இயங்குமாறு போதிய வாய்ப்பளித்தால் அவர்கள் நாளடைவில் தன்னம்பிக்கை பெற்றுத்தாமே இயங்கித் தம் முயற்சியில் ஈடுபடுவது திண்ணம்.

[1] இயக்க முறைகள் :

எந்தக் கல்வி ஏற்பாடோ, எத்தகைய பாடத் திட்டமோ—நல்லாசிரியர்களால் நல்ல முறைகளில் இயக்கப் பெருவிட்டால் அவை பயனற்றவை. கல்வி ஏற்பாடு குறைபாடுற்றதாக அமையலாம்; பாடத்திட்டம் இழுக்குடையதாக இருக்கலாம். ஆனல் நல்லாசிரியர் அவற்றைக் கண்ணுருமல் மாணவர்களுடைய கவர்ச்சியையும், நாட்டத்தையும், எதிர்வினைகளையும், துலங்கல்களையும் கண்ணுற்ற வழியாக அவற்றைத் திருத்தி அமைத்துக் கொள்ளுவார். ஆசிரியத்தில் ஈடுபடும்போது பிள்ளைகள் எத்துணைப் பாடங்களை அறிந்து கற்றுக்கொண்டு அறிவினைப் பெருக்கிக் கொண்டார்கள் என்று கண்ணும் கருத்துமாக நல்லாசிரியர் நயம்பட விளக்குவாரே அன்றிப் பட்டியற்படி எத்துணையளவு தன் கடனுகிய பாடத்தை முடித்தாகிவிட்டது என்பதைக் கருத மாட்டார். ஒருவன் ஒரு பொருளைப் பெற்றுக்கொண்டாலன்றி அப் பொருளைக் கொடுத்ததாகக் கருத முடியாது. அங்ஙனமே ஒரு மாணவன் ஒரு பாடத்தினைக் கற்றுக்கொண்டாலன்றி அப்பாடத்தைக் கற்பித்ததாக ஓர் ஆசிரியர் கருத முடியாது. எனவே ஆசிரியர் மாணவர் கற்றலைத் தான் நோக்க வேண்டுமே அன்றித் தான் கற்பிப்பதை மதிப்பிட்டுக் கொள்ளுதல் ஆசிரியமாகாது. எந்த முறையும், ஆசிரியரையும் மாணுக்கரையும் ஒன்றுபடுத்தி அவர்கள் இரு உள்ளங்களையும் உறவாடச் செய்வது. உள்ளத்தோடு உறவாடுதல் மாணவனுடைய தனி ஆளுமையை வளர்த்தற் குரியது. நல்ல முறைகள் மாணவர்களுக்குப் புத்துணர்ச்சி அளிக்கக்கூடியவை. எனவே மாணவர்கள் பெறும் மனப்பான்மை மதிப்பீடு பெறும். நல்லாசிரியத்தின் மாண்புகள் பள்ளிகளிடையே அக்கறைய்த் தூண்டித் தமது கற்றலில் கவர்ச்சியை உண்டுபண்ணுதலும் ஆசிரியனுடைய பேரறிவுத் திருவில் இயக்கம் பெறுதலுமாம். அவை நன்முறைகளின் பயன்கள். 'செய்வன திருந்தச் செய்' என்பது நமது பழைய மொழி. நம் பள்ளிகள் எடுத்துக் கொள்ளும் பொறுப்புக்கள் எவையாயினும் அவற்றைத் திருத்தமாகச் செய்யவேண்டியது கடமை. எல்லாவற்றையும் பாடமாகக் கருதிக் கோட்பாடுகளாக ஓதிவிட்டால் நல்ல பழக்க வழக்கங்கள் செயற்பாடுகளில் நிகழாது ஒழிந்துவிடும். பள்ளி ஒழுக்கங்கள், பள்ளி வாழ்க்கையோடு

1. Activity Methods

வளர வேண்டும்; பாடி வாழ்க்கையில் விளக்கம் பெறவேண்டும்; விளையாட்டுத் திடலில் வினைத்தூய்மையாக விளங்க வேண்டும்.

இற்றை நாட்களில் பொறுப்புணர்ந்த ஆசிரியர்கள் ஒரு சிலரே என்று குறை கூறுகிறார்கள். அவர்கள் காலை முதல் மாலை வரையில் பேசிப் பேசிக் கடனைத் தீர்க்கின்றார்களே அன்றிப் பிள்ளைகள் படிப்பதற்கு அளவு கடந்த குறிப்புக்களைத் தருகின்றார்களே அன்றிப் பிள்ளைகளை இயக்கி அவர்களுடைய முயற்சியால் அவர்கள் கற்றறிந்து கொள்ளுவதற்கும், கல்வியில் வாழ்க்கையைக் காண்பதற்கும், பள்ளியின் வழியாகச் சமூகத் தொடர்பு கொள்ளுவதற்கும் வழி வகுப்பதில்லை.

எல்லாக் கல்வியும் பிள்ளைகளின் சிந்தனையை வளர்க்க வேண்டும்; பிள்ளைகள் தெளிவாகச் சிந்திக்க வேண்டும்; சிந்திக்குங்கால் விருப்பு வெறுப்புக்கள் இடைப்படாமல் சிந்தனை வளர வேண்டும். எந்தப் பாட ஆசிரியரும் மாணவர்களிடையே சிந்தனையை வளர்க்கலாம். தெளிவான சிந்தனை தெளிவுற்ற மொழிவழி வெளியீடு பெறும். நம் பள்ளிகளில் பலவகைக் கவர்ச்சிகள் உண்டானால் பிள்ளைகள் பலவற்றுள் அக்கறை கொண்டு தமது ஆற்றலை வெளிப்படுத்துவார்கள்.

(1) இயக்கு முறை என்றால் அது பிள்ளைகளுடைய உடலத்தையும் உள்ளத்தின் செயலாற்றலையும் தூண்டல் வேண்டும். (2) கற்றல் வெறும் ஏட்டுப்படிப்பாக அமையாது காட்சிக்குரியதாகவும் உண்மைப் பொருளாகவும் விளங்க வேண்டும். (3) கல்வியையும் வாழ்க்கையையும் வேறுபடுத்தாமலும் பள்ளியையும் சமூகத்தையும் பிரிக்காமலும் அமைய வேண்டும். (4) பிள்ளைகளுடைய கற்றலில் ஒரு விருப்பும் அவர்கள் பணியில் திறனும் தேர்ச்சியும் வளர வேண்டும். (5) பிள்ளைகளிடையே நல்ல பழக்கங்கள், மனப்பான்மைகள், மதிப்பீடுகள் பெருக வேண்டும். (6) வெறும் ஏட்டுக் கல்வியைத் திணிக்காது திருத்த முறையில் கற்றலுக்கு வழி கோல வேண்டும். (7) கற்ற கல்வியைச் செயல் படுத்தும் திறன் உண்டாக வேண்டுமே அன்றிக் கற்றவற்றை ஒப்பிக்கும் பழக்கத்தை ஒதுக்க வேண்டும். (8) பாடம் பாடமாக வற்புறுத்தப் பெறாது தனியாளுமையை வளர்க்கக் கூடிய தூண்டல்களாக நிகழ வேண்டும். (9) ஒவ்வொரு பிள்ளையினுடைய தகுதிக்கும் திறனுக்கும் ஒப்பக் கற்பித்தல் நிகழ்வுற்றுக் கற்பித்தல் செயற்பாட்டில் எல்லாப் பிள்ளைகளுக்கும் இடமளிக்க வேண்டும். (10) ஆசிரியர் மாணவரிடையே நல்லுறவு நிலவ வேண்டும். (11) பிள்ளைகளுடைய கவர்ச்சிகளையும், அக்கறைகளையும் பெருக்கி அவர்களிடையே படைப்பாற்றல் வளர்க்க வேண்டும். (12) ஆசிரிய முறையே நன்மையைக் கோரிய வண்ணம் மாறிக் கொண்டே இருக்க வேண்டும்.

இயக்க முறை நன்று இயங்குவதற்கு வகுப்பறைகளில் பாடங்களிடையே வேறுபாடுகளை நீக்கிப் பொதுப்பான்மைகளை இணைத்துச் செயல் திட்ட முறைகளை வகுக்கலாம்; பிள்ளைகள் குழுக்களாகக் கூடிக் கல்விப் பணியாற்றலாம்; தாமாகவே புத்தகங்களைத் தேடிக் கொள்ளலாம்;

தடைகளை எழுப்பி உரையாடல் நிகழ்த்தத் தெளிவு காண்பதோடு தன் வெளியீட்டினை வளர்த்துக் கொள்ளலாம்; ஆசிரியர் தனி ஒவ்வொரு பிள்ளையையும் கவனித்துக் கற்பிக்கலாம்; செய்து காட்டல் முறையில் பொருள்களைத்தேடி அவற்றைக் கண்ணுற்றுக் கற்கலாம்; பாடங்களில் வரும் பல நிகழ்ச்சிகளை நடிப்பு முறையில் அறியலாம்; செவி வழி கண்வழிக் கருவிகளைப் பயன்படுத்திப் பல பாடங்களை விளக்கிக் கொள்ளலாம். இவையெல்லாம் செயற்பட பள்ளித் திட்டங்கள் பொதுப் பட உதவி புரிய வேண்டும். நல்ல நூல் இன்றியமையாதது. பள்ளியில் தனி ஒவ்வொரு பிள்ளைக்கும் கண்காணிப்பும் வழிகாட்டுதலும் பள்ளித் திட்டத்தில் வேண்டும். மாணவர்கள் குடியாட்சி முறையில் பள்ளியில் பழக வேண்டும். பாடப்புறச் செயல்களும்,[2] பள்ளிப் புறச் செயல்களும் திட்டமாக நிகழவேண்டும். பிள்ளைகளுடைய உடலோம்பல் நலப்பாட்டின் வசதிகள் அமையவேண்டும். பிள்ளைகளிடையே வேறுபாடின்றிப் பள்ளி ஒழுக்கங்களில் அவர்கள் பங்கு கொண்டு தமது படைப்பாற்றலைப் பள்ளிக்குதவுமாறு உரிமைவேண்டும். ஓய்வு நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும் பிள்ளை பள்ளியைத் தமது இல்லமாகவே கருதி ஓய்வு நேரப்பணிகளில் ஈடுபடுவதற்கு ஓர் ஓய்வு நேரத் திட்டம் பள்ளி வகுத்துதவ வேண்டும். பள்ளியே ஒரு சமூக நிலையமாக விளங்கவேண்டும்.

---

1. Extra Curricular activities 2. Intramural activities.

XXI

கற்பித்தல் மட்டும் போதுமா ?

நிறைய உலகறிவுள்ள ஆசிரியர்கள் தமது திறமைக்கும், உழைப்புக்கும் ஏற்றவாறு மாணுக்கர்கள்பால் பயன் கிட்டவில்லையே என்ற வருத்த முறுகின்றனர். நன்ருக வகைப்படுத்தப்பட்ட மாணுக்கர்கள் உள்ள வகுப்பில் பணியாற்றினுல் அவர்களுக்கு நிறைவு தரக்கூடிய பயனைக் காண்பது எளிதாகின்றது. மாணுக்கர்களது உள்ளத்தையும் ஒழுக்க உயர்வையும் தமது கைகளாற் பெறுவிப்பது தாம் அடையும் பெறும் பேறு எனக் கொள்கின்றனர். ஆனுல் அத்தகைய மாணுக்கர்கள் எத்துணை பேர்? நாள் தோறும் ஓர் ஆசிரியர்பால் பழகும் பலருள் அத்தகைய மாணுக்கர்கள் ஒரு சிலர் அன்றே! இந்நிலையில் பொது மக்களுடைய கிளர்ச்சி பெரியதாகின்றது. செய்தித்தாள் ஆசிரியர்கள் கல்வித்தரக் குறைவினைப்பற்றி எடுத்துக் காட்டுகின்ருர்கள். மற்றவர்கள் அறிந்தும் அறியாமலும் குற்றங்கள் காட்டுகின்ருர்கள். இவை எல்லாவற்றையும் கருதுவோமாஞல் ஒரு காரணத்தினை உணரலாம். பொதுவாக மாணுக்கர்களுடைய திறமை மேற் படிவங்களில் குறைவுறக் காண்கிருேம். மிகத் திறமையுள்ள மாணுக்கர்களோ தமது ஆற்றலின் வேகத்துக்கு ஏற்றவாறு கல்விப் படைப்பு விரிவடையாதல் பற்றி தளர்ச்சியும் ஏமாற்றமும் அடைகின்றனர். இன்னேரன்ன பல காரணங்களால் மாணுக்கர்கள் ஒரு சிலரே உயர் வகுப்புக்கள் வரையில் கற்றுப் பயன்பெறுகின்ருர்கள்.

இந்த நிலைக்குக் காரணங்களைப் பலவாருகக் காண்பதுண்டு. பணத் தட்டுப்பாடு, பள்ளிகளில் இடவசதியின்மை, கல்வி வசதிக் குறைவு, நல்ல பயிற்சி பெற்ற திறமை உள்ள ஆசிரியர்கள் போதாமை இவை யாவும் கருதற்பாலவை. ஆனுல் இவை எல்லாவற்றைக் காட்டிலும் ஆழ்ந்து நோக்கி நாம் அறியாக் காரணம் ஒன்றினை அறிய வேண்டும். நமது மாணுக்கர்கள் தத்தம் திறமைக்கு ஏற்றவாறு நமது கல்வி நிலையங்களில் போதிய பயிற்சி பெறுகின்ருர்களா என்பதனைத் துருவி ஆராய்தல் வேண்டும். மாணுக்கர்கள் தம்தரத்திற்கு ஏற்ற தர உயர்வுக்கும் ஆசிரியர்கள் எதிர்பார்க்கும் உயர்வுக்கும் இடையே ஒரு இடைவெளியினைக் காணலாம். மாணுக்கர்களுடைய அடைவு ஒன்று; அவர்கள் அடைய வேண்டிய தகுதி மற்ருென்று. இவை ஒன்றுக்கொன்று அகன்று கொண்டே வருகின்றன. கற்பிக்கும் முறைகளின் நுட்பங்களும் கல்விச் சார்புற்ற கொள்கைகளும் ஒருபுறம் பெருகப் பெருக நம் மாணுக்கர்களுடைய அடைவு குறைந்து கொண்டே வருகின்றது. ஆசிரியர் பயிற்சியும் ஏட்டுக்

கல்வியின் உரம் பெருகுகிறதேயன்றி நடைமுறைப் பயிற்சியில் குறைவுறுவதாகக் குற்றம் சாட்டப் பெறுகிறது. பொது மக்கள் நம் பள்ளிகளில் குறைவு காண்கிருர்கள் என்ருல் குறைகள் இருந்தாலன்றிக் குறைவினைக் காண முடியாது. பெற்ருேர் தமது பிள்ளைகளைத் தமது விருப்பப்படி பள்ளிப்படிப்பு நிறைவு பெறுவதற்கு முன் நிறுத்திவிடு கின்ருர்கள். கட்டாயக் கல்வி நடைபெறும் நாடுகளில் கட்டாய ஆண்டு முடிவுற்ற உடனே அயர்வு பெற்றவர்கள் போல் வெளியேறு கிருர்கள். அத்தகைய மாணவர்கள் அடைந்த பயன்தான் என்ன? வாழ்க்கைக்குப் போதிய திறனைப் பெற்றுள்ளார்களா அல்லது அவர்கள் கற்றபாடங்கள் பலவற்றினைப் பயனுக்குவார்களா என்பவை ஐயப்பாடு. ஆசிரியர்கள் பெரும்பாலும் வகுப்பறை நுட்பங்களைச் செம்மைப் படுத்துவதும், கற்பிப்பதற்கு உதவும் கருவிகளைப் பெருக்குவதும் பல வகை ஆயத்தங்களைக் கற்பனை செய்து கொள்ளுவதுமாகத் தமது சிந்தனை எல்லாம் செலுத்திப் பணியாற்ற வேண்டிய பொறுப்பாகிய கற்பித்தலில் மட்டுமே ஊக்கம் காட்டுகிருர்கள். ஆனல் கற்பித்தலைப் போன்று கற்றலும் முக்கியம் அல்லவா? நம் மாணக்கர்கள் நாம் கற்பிக் கும் பாடங்களில் ஒரு பாதி அளவினைக் கற்றுத் தேர்ச்சி பெற்ருல் நிறைவு அடைந்து விடுகிருேம். ஆசிரியர்கள் நன்ருகத் தமது பாடத்தினை ஆயத்தம் செய்து கொண்டு தமது உயர்ந்த தகுதி யோடு கற்பிக்கத் தொடங்கினல் அவருடைய பணி முடிந்து விட்ட தாகக் கருதுகின்ருர். இஃது ஓரளவுக்குத் தான் உண்மை. எப்படிக் கற்றுக் கொடுப்பது என்பதனை ஆசிரியர் கருதுகிருர். மாணக்கர்கள் எப்படிக் கற்பது என்பதும் முன்னதைப்போன்று முக்கியம் வாய்ந்தது. மாணக்கர்கள் எளிதாகக் கற்றுக் கொள்ளும் வழியினை வகுக்கவேண்டிய தன்ருே மிக இன்றியமையாக் கடமை. ஆசிரியர்கள் தாம் கற்றுக் கொடுத்தால் மாணக்கர்கள் கற்றுக் கொள்ளுவார்கள் என்று நினைத்துக் கொள்ளுகிருர்கள். அதனல் மாணக்கர்கள் கற்காவிட்டால் அஃது ஆசிரியர் கற்பிக்கும் முறையின் குறைபாடு என்று கருதவேண்டாமா? பாடப் புத்தகத்திலிருந்து ஒன்றன்பின் ஒன்ருகக் கற்பிப்பதால் மாணக்கர்கள் தமக்கு நிலைத்த பயன் அளிக்கக்கூடிய ஒன்றினைக் கற்றுக் கொள்ளுவதில்லை. பிள்ளைகள் கற்றுக்கொடுத்தால் கற்றுக் கொள்ளுவார்கள் என்று நினைத்துக் கொள்ளுகிருேம். தொடக்க நிலைப் பள்ளியில் ஒழுங்காகத் தேர்ச்சி பெற்ற மாணக்கன் உயர்நிலைப் பள்ளியில் தொடர்ந்து தேர்ச்சி பெறுவான் என்று எண்ணிக் கொள்ளு கிருேம். தொடக்க நிலைக் கல்வியின் தேவை வேறு, உயர்நிலையின் சூழ்நிலை வேறு என்பதனைச் சிந்திப்பதில்லை. புதிய முறைகளைக் கையாளுகிருேம். ஆனல் மாணக்கனுடைய சூழ்நிலையும் புதியதா கிறது. இவற்றிற்கு ஏற்றவாறு மாணக்கன் பொருத்தமுற உதவாது அவனைத் திகைக்க விட்டுவிடுகிருேம். ஓர் உதவியும் இன்றி மாணக் கன் அல்லல் உறுகிருன். புறச் சூழ்நிலையின் இடுக்கண்களோடு

அவன் எவ்வகை உதவியும் வழிகாட்டலும் இன்றித் திகைக்கிருன். ஆசிரியர்களோ தமது நேரான உதவியின்றி அவன் தானுகவே கற்றுக் கொள்ளுகிருன் ஏன்று தவருக எண்ணுகின்றனர். அவன் எதைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று சிந்தனையைச் செலவிடுகிரேம். அவன் எப்படிக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று சிந்திப்பதில்லை. இங்ஙனம் ஆயிரக்கணக்கான நமது மாணுக்கர்கள் நமது கல்வி கற்பிக்கும் செயல் முறையில் சிக்குண்டு சிதறுகின்றனர். நீரில் நீந்துவதற்குக் கற்றுக் கொடுக்க நமது நாட்டில் ஒரு பழைய வழக்கம் உண்டு. சிறுவர்களை நீரில் தள்ளிவிட்டு அவர்கள் தாமாகவே கையை அடித்தும் காலை உதைத்தும் நீந்தக் கற்றுக் கொள்ளுவது வழக்கம். ஆனல் நீரில் மூழ்கும் பிள்ளைகளுக்கு நீந்த உதவி அளிக்காவிட்டால் எத்துணை பேர் நீந்தக் கற்றுக் கொண்டு உயிர் பிழைத்திருப்பார்கள்; உதவியின்றிக் கற்றுக்கொள்ள இயலாது. உதவி அளிக்கா விட்டால் உதவி பெருது நீரில் மூழ்கி உயிர் துறப்பவர்களைப் போன்று கல்வி கற்காது கசடராவார்கள். எனவே ஆசிரியர்கள் பிள்ளைகள் கல்வி எளிதாகக் கற்றுக் கொள்ளும் பல வழிகளை வகுத்து அவர்களுடைய உள்ள ஆற்றல்கள் வீணுகாமல் வளர்ச்சியுற உதவவேண்டும். கல்வி பயிலும் மாணுக்கன் கற்கும் நிலையில் செயலற்று இருக்கக்கூடாது. கல்வித் தரம் உயருவதற்கு ஆசிரியப் பயிற்சியின் தரத்தை மட்டும் உயர்த்தினுல் போதுமா? கல்வித் தரம் உயர்வதென்ருல் தலை மாணுக்கர்களை ஆக்குவதெப்படி என்ற விஞவினுல் அல்லவா ஈடுபாடு கொள்ள வேண்டும். அல்லது நல்லாசிரியர்கள் எப்போதும் நன் மாணுக்கனை உருவாக்க முடியுமா? நல்லாசிரியர்கள் நமக்குத் தேவை. ஆனல் நல்லாசிரியர்களால் தலை மாணுக்கர்கள் தாமே உருவாகிவிடுவார்கள் என்று கொள்ளுதல் பிழையாகும். ஆசிரியர்கள் பெறும் பயிற்சி போன்று மாணுக்கர்களும் போதிய பயிற்சியினைப் பெறுதல் வேண்டும். இயற்கை அறிவோடு கூடிய மாணுக்கனும் ஒரு வகைப் பயிற்சியோடு மட்டுமே சிறக்க முடியும். அல்லாக்கால் அவனுடைய நேரமும் உழைப்பும் வீணுகும். வழியறியாது பயிலும் மாணுக்கன் தான் கற்க வேண்டிய அளவினைக் கண்டு திகைப்பால் மனமுறிவு கொள்ளுகிருன். எனவே கற்றல் விரும்பத்தக்கதாக இல்லாது, கற்க வேண்டிய கட்டாயத்திற்காக வலிந்து கற்பதானுல் எய்தும் பயன் குறைவுறும்.

கற்பிக்கும் முறையில் பயிற்சியளிப்பது போலக் கற்றல் முறையிலும் பயிற்சி அளித்தால் மாணுக்கர்களுக்கு இடர்ப்பாடு நீங்காதா என்பது விஞ. ஆசிரியர் மாணுக்கர்களுக்குக் கற்றல் முறையில் தனிப்படப் பயிற்சி அளிக்க வேண்டும். அம் முறையினை மாணுக்கன் பின்னர் தானுகவே கற்பதற்குப் பயிற்சி பெறும் வகையில் நல்கவேண்டும். ஒவ்வொரு நிலையிலும் கற்பவற்றிற் கெல்லாம் ஆசிரியருடைய துணையை நாடுவது இயலாது. உயர்நிலைப் பள்ளியின் உயர் வகுப்புக்களில் பெருவாரியான பாடங்களைக் கற்கும்போது மாணுக்கன் தன்

னுதவி அற்றவனும் ஆசிரியருடைய உதவியையே நாடுபவனும் அல்லலுறுகின்றான். இதனால் கற்றலின்மீது விருப்பு வளருவதில்லை. வகுப்பில் வெறுப்பு உணர்ச்சி பெருகுகிறது; ஒழுங்குமுறை குறைகிறது. இவ்வகை மாணாக்கர்கள் பலர். ஆகையால் ஆசிரியர்கள் அவர்களைத் தனிப்பட்ட முறையில் ஈர்த்துச் செல்லாது பொதுப் படையாகத் திட்டத்தின்படி வகுத்த பாடங்களைக் கற்பித்தால் விருப்புள்ளவர்களும், வெறுப்புள்ளவர்களும் பயன் அடைவார்களா என்பது ஐயம். தேர்வில் தோல்வி பெறும் மாணாக்கர்களைப் பற்றிய ஆராய்ச்சி எங்கும் உள்ளது. நல்லாசிரியர்களால் நல்ல முறையில் கற்பிக்கப் பெற்ற மாணாக்கர்கள் தேர்வு பெறாததன் காரணத்தைத் தேடுகிறார்கள். தேர்வு பெற்றவர்களோ முதல் வகுப்பிலேயே பெருவாரியாகத் தேர்வு அடைவதில்லை. இவை எல்லாவற்றிற்கும் ஆய்வு உண்மைக்குப் புறம்பாகவே நடைபெறுகிறது. காரணங்கள் பல கண்டறியப் படுகின்றன. ஆசிரியர்கள் நல்லாசிரியர்களா? ஆசிரியர்கள் பாடங்களைப் பதனிட்டு மாணாக்கர்களுக்குத் தந்ததால் மாணாக்கர்கள் தம்பால் ஒருவிதச் சிந்தனையும் உழைப்பும் இன்றிக் கற்றார்களா? மாணாக்கன் தானாகவே கற்றுத் தேர்ச்சி அடையவேண்டிய நிலையில் நல்ல முறையில் பாடங்களைப் பகுத்தும் திரட்டியும், வேண்டியது வேண்டாதது என்று பிரித்தும், தனது தேவைக்கு ஏற்றவாறு கொள்வதைக் கொண்டும் தள்ளுவதைத் தள்ளியும் அறிந்ததைத் தனது அறிவுப் பேழையில் அழியாச் செல்வமாக்கிக் கொண்டானா? மாணாக்கர்களுள் பெரும்பான்மையோர் சிந்தனை செய்வதற்குத் தயங்குவது ஏன்? தாமாகவே தமது பாடங்களில் வரும் சிக்கல்களைத் தீர்க்க இயலாது, மற்றவர்களுடைய விடைகளைத் தடையின்றி ஏற்றுக்கொள்ள நெகிழ்வதேன்? அஃது அவர்களுடைய இழுக்கினைக் காட்டுகிறது அல்லவா? நமது உயர்நிலைக் கல்வியில் மாணாக்கர்கள் எல்லாரும் பெரும்பயன் அடையாததற்குக் காரணம் அவர்கள் கற்றல் முறையில் கல்லாதது அல்லவா? கற்றல் முறையினில் போதிய பயிற்சி பெற்றால் இயற்கை அறிவு எவ்வளவு குறுகியிருந்தாலும் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுவார்கள் அல்லவா? சிந்தனை முறையில் செம்மை அடைவார்கள் அல்லவா? இதனால் கல்வியின் பயன் வீணாகாது கிட்டுமல்லவா? இவற்றையெல்லாம் நல்லாசிரியர்கள் சிந்தனை செய்தல் கடன்.

XXII

செவி வழி—கண் வழிக் கல்வி

இன்று கல்வி உலகில் செவிவழி கண்வழிக் கல்வி மிகவும் வற்புறுத் தப்படுகிறது. செவியால் பெறும் கல்வியினைச் செவிச் செல்வம் என்று வள்ளுவம் கூறும். செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம். அச்செல் வம் செல்வத்துளெல்லாம் தலை.

> " கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு
> ஒற்கத்தின் ஊற்றாந் துணை."

கற்றிலனாயினும் கற்றாரிடம் கேட்டு அறிந்து கொண்டால் அங்ஙனம் கேட்டறிந்தது அவனுக்குப் பெருந்துணையாகும்.

> " எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
> ஆன்ற பெருமை தரும்."

எவ்வளவு சிறிதே ஆயினும் நல்லவற்றைக் கேட்டறிந்தால் அந்த அள விற்கு நன்மை எய்தும் என்பன பொய்யாமொழி வாக்கு. நாம் கற்கும் கல்வி செவிவழியாக ஆசிரியர்பால் பெறுவதாகையால் செவிச் செல்வமே கல்விச் செல்வம் என்றும் கருதலாம். ஆனால் வள்ளுவர் கல்விச் செல் வத்தையும் செவிச் செல்வத்தையும் ஒப்பு நோக்கிச் செவிச் செல்வத் தினைச் செல்வத்துளெல்லாம் தலையாகக் கருதினார். ஆகையினால் கல் லாதவனும் கேள்விப் பயனால் கற்றவனாக முடியும். ஆனால் செவிவழி கண்வழிக் கல்வி என ஈண்டு ஆராய்வது இன்று ஆசிரியரன்றிச் செவி வழியும் கண்வழியும் செலுத்தக்கூடிய அறிவே செவிவழி கண்வழிக் கல்வி எனக் கருதப்படுகிறது. இவ்விரண்டு வகைக் கல்விகளுக்கும் வேண்டிய கருவிகள் மல்கி விட்டன. இன்றைய நாகரிகம் இக்கருவி களை உதவுகின்றதாகையால் இவற்றைப் பயன்படுத்தாது பழைய முறையில் கற்பிப்பதைக் கண்டிக்கிறார்கள். இவற்றைப் பயன்படுத்து வதனாலேயே கல்வி முறைகளெல்லாம் திருத்தம் பெற்று விடுமென்று கருதுவது மிகையாகும். இவை எந்த அளவு பிள்ளைகளுடைய அறியா மையை நீக்கப் பயன் தரக்கூடும் என்பதை ஆசிரியர் அறிய வேண்டி யது கடமை. இதுகாறும் மாணாக்கர்கள் புத்தகங்களின் வழியாகவும் ஆசிரியரது பேச்சு மொழிகளாலும் அறிந்தவை மாணாக்கருள் ஒரு சில ருக்கே சென்று சேர்ந்தன. ஆனால் இக்கருவிகள் கற்பித்தலுக்கும் கற்ற லுக்கும் உயிர் ஊட்டுகின்றன. கண்வழியும் செவிவழியும் மாணாக்கர் கள் பெறுவது பல செய்திகளாகும். இவற்றால் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. நமது வாழ்க்கையில் ஒலி பரப்பியும் திரைக்காட்சி யும் பலபடியாக ஊக்குவிப்பதும் மாறுபடுத்துவதுமான செயல்கள் புரி

கின்றன. அவை நமது இல்லங்களிலும் தெருக்களிலும் பொதுவிடங்களிலும் எங்கும் நம்மைத் தொடருகின்றன. சில வேளைகளில் அவை பொழுதுபோக்காகி விடுகின்றன. சில வேளைகளில் நமக்குப் பல செய்திகளை அறிவிக்கின்றன. இவற்றின் நோக்கங்களை அறியாது பொது மக்கள் அவர்களுடைய விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்றவாறு இவை அமைகின்றமையால் இவற்றின் நன்மை தீமைகளை அறிய இயலவில்லை. இவற்றை அறியத் துணிவோமாஞல் இவை இடைவிடாது தொடருகின்றமையால் இன்று வெறுப்பவர்கள் நாளை விருப்பு அடைகின்ருர்கள். இவற்ருேடு எப்போதும் ஈடுபாடு உடையவர்கள் இவை வழியாக அறிந்தவைகள் எல்லாம் உண்மைகள் எனவே கருதுகின்ருர்கள். தொலைக் காட்சி, வானெலி, திரைப்படங்கள் ஆகியவை உலக மக்களை அவற்றுக்கு அடிமைகளாக்கி விட்டன. இதஞல் எதிர்காலத்தில் மக்கள் காட்சிகளைக் காணுமலே கண்டதாகவும் ஒலிகளைக் கேளாமலே கேட்டதாகவும் கருதுவார்கள் என எதிர்பார்க்கலாம். இவற்ருல் நாகரிகமும் என்ன மாறுதல் அடையும் எனக் கூற இயலாது; நல்வாழ்க்கைக்குப் பழுதும் ஏற்படாதவாறு காக்கவேண்டியது கடமையாகின்றது. வருங் கால மக்கள் உண்மைக் கல்வி வழியில் நில்லாது இவற்றினையே பின்பற்றுவார்களோ என்று நினைத்தல் பிழையாகாது. இவற்ருல் மனித உள்ளம் சிந்தனை ஆற்றலை இழக்காதபடி காக்கவேண்டியது கடமை. நம் பிள்ளைகள் ஒலி பரப்பியின் மூலம் கண்டவற்றைக் கேட்டுக்கொள்ளுதல் கூடாது. அதைப் போலக் கண்ட திரைக்காட்சிகளையும் காணக் கூடாது. ஒவ்வொன்றையும் அறிந்து, பார்க்க வேண்டியதைப் பார்த்தும் பார்க்க வேண்டாததைத் தள்ளியும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். எனவே பிள்ளைகளுக்கு ஆய்வுத்திறன் இன்றியமையாததாகின்றது.

பார்க்கும் படங்களையும் கேட்கும் ஒலிகளையும் பிள்ளைகள் எழுதிப் பழகிஞல் பயன் உண்டு. காட்சிகளைக் காட்டி அவற்றின் உரைகளைத் தந்து விட்டால் கற்பிக்கும் முறைகளில் ஒரு மாறுதலும் நிகழாது. அங்ஙனமே ஒலியினைக் கேட்பது ஆசிரியர் ஒலியை எந்திரத்தின் வழியாகக் கேட்பதற்கு ஒக்கும். இவற்ருல் மாணுக்கருடைய செயற்பாடு யாதும் இருக்காது. திரைப்படங்களைப் பார்ப்பதால் பார்த்தவற்றை நன்ருக மாணுக்கர்கள் அறிந்து கொள்ளுகிருர்கள். நேர்முகமாக அறிந்து கொள்ளுவதே நல்ல கல்வி முறையாகையால் திரைக்காட்சிகளால் பிள்ளைகள் பார்க்கும் அனுபவத்தையாவது முழுவதும் பெறுகிருர்கள். ஒலிகளைக் கேட்பதாலும் படங்களைப் பார்ப்பதாலும் உள்ளுணர்வு உண்டாகின்றது. ஆஞல் அவற்றைச் சொற்களாக வடித்தாலன்றி அறிதல் திறனை அளக்க இயலாது. பார்க்கும்போதும் கேட்கும்போதும் எல்லாம் அறிந்த எண்ணம் பிறக்கிறது. எல்லாம் அறிந்ததாகவும் நினைவு உண்டாகிறது. இவற்ருேடு நில்லாது பார்த்ததையும் கேட்டதையும் அலசிப் பேசி சீர் தூக்கி ஆய்ந்தாலன்றி அறிந்து கொண்டதாகக் கருதக்கூடாது.

ஒரு பொருளைப் பற்றி அறியாமலே அறிவோம் என்று நினைப்பதைக் காட்டிலும் அறியேம் எனக் கூறிக்கொள்வது நல்லது. இன்று எங்கும் செவி வழியாகவும் கண்வழியாகவும் எத்துணையோ செய்திகள் விளக்கங் கள் அறிவிப்புக்கள் நம்மை வயப்படுத்துகின்றன. ஆனால் பார்த்த வற்றையும் கேட்டவற்றையும் ஆய்ந்து அறியப் பயிற்சி இன்றியமையா தது. புதிய எந்திரங்களை வெறுக்காது அவற்றை மக்கள் சமுதாயத்தின் உண்மையான முன்னேற்றத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இவற்றின் நற்பயனையே நாகரிகத்தின் வருங்காலம் நாடி நிற்கின்றது. அல்லாக்கால் இவற்றின் வழியே கட்சியாளர் நாப்பறைகள் பிஞ்சு உள் ளங்களைக் கெடுத்து விடும். நம் பள்ளிகளில் திரைப்படச் சுருள்களைக் காட்டினும் திரைப்படத் துண்டுகளைக் காட்டி மாணக்கர்கள் சிந்திப்ப தற்குப் போதிய நேரம் கொடுத்து ஒவ்வொரு காட்சியினையும் தாமாகவே அறிந்து திறனாய்வு செய்யக்கூடிய வாய்ப்பினை அளித்தல் சிறந்ததாகும். அங்ஙனமே செவிவழியாகச் சொல்பவற்றையும் ஆசிரியர் பொருளின் திறனறிந்து நல்லவற்றையே பிள்ளைகள் செவிசாய்க்க உதவுதல் நன்று.

XXIII

* அறிவுரை பகர்தலும் வழி காட்டுதலும்

அறிவுரை பகர்தல் என்பது ஒருவருக்கொருவர் உசாவிக்கொண்டு ஆலோசனை கூறிக் கொள்ளுதல்; இருவரும் சேர்ந்து சிந்தித்தல்; கருத்துக்களைப் பெறுதல் ஆகியவற்றை நிகழ்த்துதலாம். அறிவுரை உசாவப்படும்போது இருவர் கூடுவர். அறிவுரைப்போர் ஒருவர் அறிவுரை வேண்டுபவருடைய நிலைமையை ஆய்ந்தறிந்து அறிவுரை பகர்வார். அறிவுரைத்தல் என்பதனைச் செவியறிவுறூஉ எனக் கொள்ளுதல் ஒருவாறு பொருந்தும். ஆனால் அறிவு வழி காணலும், நிற்றலும், அறிவுரை பெறுவோன் கடனாகும். ஒரு சிக்கலைப் பற்றி அறிவுரை பகரவல்லார் ஒருவருடன் அறிவுரை பெற விழைவான் ஒருவன் கலந்து ஆலோசிப்பது இதன் நிலைக்களன். இந்நிகழ்ச்சியில் அறிவுரை ஆசிரியர் பலபடியாக வினாத் தூண்டல்களின் வழியில் மாணவனைத் தெளிவு பெற்றுத் துலங்கும்படி செய்வார். ஒரோ வழி சிக்கலைத் தீர்க்கும் முகத்தான் ஒரு சில கருத்துக்களும் வழங்குவதுண்டு. ஆனால் பெரும்பான்மை மாணவனே சிக்கலைத் தீர்த்துக்கொள்ள உதவி செய்வது மரபு. மாணவனுடைய சிக்கலைப் பட்டறிவோடு ஒட்டச்செய்து வினா விடை வழியாகச் சிக்கலைத் தெளிவாக்கி மாணவனையே முடிவு காணச் செய்வதுண்டு. இஃது ஸாகிரடீஸ் வகுத்த முறையில் அமைந்த கல்விச் செயற்பாட்டு முறை. அறிவுரைத்தல் ஓர் உதவி புரிவதற்கு ஒப்பாகும். செய்யும் உதவி மாணவனுடைய திறனுக்கு ஏற்பது; அவனைச் சிந்திக்கும் வழியில் நடத்திச் செல்லுவது; சிறிது சிறிதாக அறிவுரையை நாடாது தனக்குத்தானே உதவி புரிந்து கொள்ள வழி செய்வது.

அறிவுரைத்தலால் அறிவுரை பெறுவோன் தன்னை அறிந்து கொள்ளுகிறான்; அவன் தனக்குத்தானே உதவி புரிந்து கொள்ள ஆற்றல் பெறுகிறான். அங்ஙனமே அறிவுரை பகர்வோரும் குமரப் பருவத்துப் பிள்ளைகள் பலருடைய தன்மைகளை அறிந்து கொள்ளுவதோடு அவர்களுக்கு அறிவுரை பகரும் பழக்கத்தையும் அனுபவத்தையும் பெற்று அவர்களும் வளர்ச்சியைப் பெறுகிறார்கள்.

வழி காட்டல் என்பது மற்றொரு சொல் கல்விச் செயல் முறையில் பயன்படுத்துவது. வழி காட்டுவது வழி பெற விரும்புவோனுக்குப் பல வழிகளில் அவனுடைய இயற்கை ஆற்றலை அறிவதற்கு உதவுவதும் அவன் தன்னுடைய வாழ்க்கையைத் தனக்கும் சமூகத்துக்கும் நன்மை பயக்குமாறு வகை செய்து கொள்ளும்படி செய்தலுமாகும்.

---

* Counselling and guidance.

நம் பள்ளிகளில் வழிகாட்டல் திட்டம் ஒரு சில இடங்களில் உண்டு. அது கல்விச்சார்புற்றது. உற்ற சூழ்நிலைக்கு மாணவன் தன்னைப் பொருத்திக் கொள்ளுமாறு உதவுவது. தன்னுடைய திறனுக்கும் கவர்ச்சிக்கும் ஏற்பத் தனது எதிர்காலத்துக்கு ஒரு திட்டத்தினையும் வகுத்துக்கொள்ள வழி காட்டுவது. பள்ளிகளில் இஃது ஒரு இன்றியமையாத பணி. வழி காட்டி ஆசிரியர் ஒவ்வொரு மாணவனைப் பற்றியும் குறிப்பு வைத்திருப்பார். அவனவனுடைய நாட்டத்துக்கும் தகுதிக்கும் ஏற்ப அவனுக்குக் கல்வி, சமூகம், தொழில் ஆகிய எத்துறையிலேனும் அவன் பொருத்தம் பெற உதவுவார். இத்திட்டத்தில் தனி ஒரு மாணவன் தன்னைப்பற்றி நன்றாக அறிந்து கொள்ள உதவி பெறுவதோடு தன்னுடைய எதிர்காலம் நன்றாகப் பயன்படும்படித் தனக்கு உதவி புரிந்து கொள்ளுகிறான். வழி காட்டுதலால் தனி ஒருவனுடைய சிக்கல்கள் தீர்க்கப் பெறுகின்றன என்பது பொருளன்று. ஆனால் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளுவதற்கு உதவி அளிக்கப் பெறுகிறது. எனவே வழி காட்டுதலும் கல்விச் செயல் முறையின்பாற் பட்டது. அஃது உள்ள உறுதியோடு அறிவு முறையில் தனது பணிகளை நல்ல முறையில் நடத்திக்கொள்ள உதவுவது. வழி காட்டுவோர் வழி பெற விரும்புபவரையே அறிய முயற்சிப்பாரே அன்றி அவருடைய சிக்கலை அறிவதற்கு முற்படமாட்டார். மாணவர்கள் பலருக்குத் தமது இடர்ப்பாடுகளை அறிந்து கொள்ளத் தெரிவதில்லை. அதனால் வழி காட்டுவோர் அவர்களுடைய தேவைப்பாடுகள், திறன்கள், அக்கறைகள் ஆகியவற்றை அறிந்து சொல்லி அவர்கள் மனிதனாகவும், குடிமகனாகவும் தம்மை உருவாக்கிக்கொள்ள உதவுவார். ஆனால் அவர் மாணவர்களிடத்தில் இல்லாத திறமையினைப் புகுத்தக் கூடியவரல்லர். மாணவர் தமது ஆற்றலைத் தாம் அறிந்து தாமாகவே மதிப்பீடு செய்து அது பயனுறும்படி நாளடைவில் தமக்கு வழிகாட்டிக் கொள்ளுவர். வழி காட்டுவோர் ஒவ்வொருவரைப் பற்றிய குறிப்புக்களைத் தம்மிடத்தே பெற்றிருப்பதால், தாமாகவே ஒவ்வொருவரையும் அழைத்து அறிவுரை கூறுவதில்லை. அறிவுரை வேண்டும்போது அவர் தமது பணியாற்றுவார். தாமாகவே தமக்கு வழி காட்டிக்கொள்ளத் திறமை பெற்று விட்டால் வழி காட்டுவோரின் பணி முடிவுற்றதெனலாம். வழி காட்டுவது தனிப்பட்ட மாணவர்களுடைய நேர்ச் சிக்கல்களையும் மனவெழுச்சி சார்ந்த சிக்கல்களையும் தீர்ப்பதற்கு மட்டும் அன்று. அது நம் பள்ளிகளில் எல்லாப் பிள்ளைகளுக்கும் உரித்தானது. கல்விச் சார்புற்றதும் தொழிலுக்கு வகை செய்வதுமான வழி காட்டுதல் ஒரு வகை. பிள்ளைகள் ஒரு சிலர் மந்த புத்தியோடு பிற்போக்கில் தயங்கிக் கொண்டிருந்தால், அவர்களுக்குரிய நேர்முகச் சிக்கல்களை உளநூல் பெற்றியலில் ஆவன செய்யும் பணி வேறு. இப்பணிக்காகச் சில பள்ளிகளில் உளநூல் வல்லுநர் இத்தகைய பிள்ளைகளுக்கு உதவி புரிவார். எதுவாயினும்

எல்லாப் பிள்ளைகளுக்கும் வழி காட்டுதல் ஓர் இன்றியமையாத பள்ளிப் பணி என்று கருதவேண்டும்.

அறிவுரை பகர்தலுக்கும் வழிகாட்டுதலுக்கும் வேறுபாடு உண்டு. அவை இரண்டும் ஒன்றல்ல. வழிகாட்டல் பள்ளி முழுவதும் பரந்த ஒரு தொண்டு. அறிவுரைத்தல் வழி காட்டுதற் பணியில் ஒரு முதன்மைக் கட்டம். அறிவுரை பகர்தல் உற்ற ஒரு நிலையில் எழுவது. அந்நிலை வகுப்பறையில் அல்லது ஆசிரிய மாணவரோடு பேசும்போது அல்லது பாடப் புறச்செயல்கள் நிகழும்போது ஏற்படலாம். அறிவுரை பகர்வோருக்கும் மாணுக்கருக்கும் இடையே நல்லுறவும் நன்னம்பிக்கையும் அடிப்படையில் வளரும். அத்தகைய உறவுக்கு ஆசிரியரே அடிகோல வேண்டும். ஆசிரியர் நாள் முழுவதும் மாணவரைக் கண்ணுற்ற வண்ணமாக இருப்பார். அவர்களுடைய பல சிக்கல்களையும், தேவைப்பாடுகளையும் அறிவார். அவர்களுடைய அறிவுப் பெருக்கத்துக்கு உதவி புரிந்து கொண்டே இருப்பார். அவர் பாடங்களை நடத்தும்போது வழிகாட்டியாகவும் விளங்குவார்.

கல்வி வழிகாட்டி ஆசிரியர் ஒவ்வொரு மாணவனைப் பற்றியும் சிந்தனை செய்வார். இம்மாணவன் எதற்குத் தகுதி வாய்ந்தவன்? எவ்வகைக் கல்வி இவனுடைய திறனை வெளிப்படுத்தி இவனை வளரச் செய்யும்? இவ்விரண்டு வினுக்களும் மாணவனைப் பள்ளி ஏற்பாட்டில் அமைவுறச் செய்வதற்கு வேண்டாற்பாலன. பள்ளியில் எந்த அனுபவங்களைப் பெற்ருல் அவை அவனுடைய தகுதிகளுக்கு உற்றவையாகுமென்றும் அவன் நலமுற்றுப் பள்ளிப் பயனைப் பெற இயலும் என்றும் அறிய உதவும். இவ்வினுக்களுக்கு விடை அறிய மாணவனுடைய திறன்களும் கவர்ச்சிகளும் யாவை என்பவற்றை வழிகாட்டி ஆசிரியர் அறிய வேண்டும். அவற்றிற்கேற்பப் பள்ளியில் பல வாய்ப்புக்கள் அளிக்கப் பெறவேண்டும். பள்ளியில் அறிவுரை பகர்வோர், வழி வகுத்து உதவுவோர் வேண்டும். மாணவனுடைய திறன்களை எங்ஙனம் அறிவது? ஒரு சிலர் தேர்வுகளைத் தந்து அறியலாம் என்பர். மற்றும் சிலர் மாணவனை உசாவி அவனுடைய பள்ளி வாழ்க்கையையும் செயற்பாடுகளையும் கண்ணுற்று அறியலாம் என்பர். தேர்வுகளெல்லாம் தரம் பெற்றவையாகையால் அவற்றின் ஈவுகள் ஒரு தரம் படுத்தப் பெற்ற நிலைமையைத் தான் காட்டும். மேலும் ஒவ்வொரு தேர்வும் முழு ஆளுமையின் ஒரு பகுதியைத்தான் அளவிட உதவும். அதனுல் தேர்வுகளைத் தள்ளியும், தனியாள் ஆராய்ச்சிக் குறிப்புக்களை நீக்கியும் [1]நேர்முகமாக மாணவனைக் கண்டு அவனைப்பற்றி எல்லாவற்றையும் அறிந்து கொள்ளுதல் நல்லதென்று கருதுகிருர்கள். ஒரு மாணவனை நேர்முகமாகக் கண்டு பேசும்போது அவன் ஓர் இடர்ப்பாட்டினை மட்டும் அறிவிக்கத் தொடங்குவான். அதனோடு வேறு பலவற்றைப் பிணைத்து

1. Interview

விடுவான். அவற்றுள் சிலர்க்கு அவனுடைய பொருளாதாரத்தைப் பற்றியவையும், சமூக உறவினைப் பற்றியவையும் அல்லது உடற்பிணி அல்லது மன உட்பாட்டு நிலைகள் ஆகியவையும் சேர்ந்துவிடும். எனவே உரையாடி அறியும்போது ஒரு மாணவனுடைய பல சிக்கல்கள் வெளியாகும். பிள்ளைகளுக்கு ஒரு தொழிலைப் பொறுக்கி உதவுவதற்கு முன், மாணவர்கள் பாட ஏற்பாட்டில் எப்பாடத்தினை நன்ருக அவர் களுடைய திறமைகளுக்கேற்பக் கற்றுக் கொள்ளுவார்கள் என்றறிந்து வழிகாட்ட வேண்டும். காட்டாக, கணிதத் திறன் மட்டும் உள்ள ஒரு மாணவனுக்கு அவ்வழியிலேயே ஈடுபாடு அளித்தால் அவன் அத்துறை யில் மேம்பாடு பெறுவான். எனவே அறிவுரை ஆசிரியர் மாணவ னுடைய திறனுக்கேற்ற வளர்ச்சிக்கு வழி வகுத்தால் அவ்வழி அதற் குற்ற தொழில் துறைக்கு ஏற்றதாக அமையுமென்று கில்பேட்ரிக் வற்புறுத்துகிருர். அறிவுரை பகரும் ஆசிரியர் ஒரே நாளில் ஒரு குறித்த தொழிலுக்குத் தான் தகுதி உள்ளவன் என்று முடிவு காண இயலாது. அவனைப் பல துறைகளில் பணியாற்றச் செய்து அவ னுடைய அனுபவத்தை மதிப்பிட்டு அதன் பின்னர் அவனுக்கு வழி காட்ட வேண்டும். ஒரு மாணவன் தன்னை அறியாமலே தனது வாழ்க் கையை வகுத்துக் கொள்ளுவது கண்கூடு. இது விதிப் பயனுல் ஏற் படுவதென்று கருதுவார் உளர். எதுவாயினும் வழிகாட்டி ஆசிரியர் மாணவனுடைய வளர்ச்சி வரலாற்றினை அறிய வேண்டுவது இன்றி யமையாதது. பழைய வளர்ச்சியே புதுமைக்கு வழிகோலுகிறது. மாணவன் நாள்தோறும் செய்வது அவன் நாளை என்ன செய்வான் என்பதற்கு அறிகுறியாகும். எனவே அறிவுரை பகர்வோர் பழைய வளர்ச்சி வரலாற்றினை அடிப்படையாகக் கொள்ளுதல் அவசியமாகும்.

கல்வி வழி காட்டுதல் கல்வி ஏற்பாட்டு வானத்தில் நடுவண் வான் மதியாய் விளங்குவது. சில சமயங்களில் இஃது ஒருவருடைய பணியோடு நில்லாது, பலருடைய துணைகளை நாடும் அளவிற்கும் கொண்டு செல்லும். அவர்கள் எல்லாருடைய துணையினுல் வழி காட்டு தல் நன்மையைப் பயக்கும். மாணவர்கள் பலர் தமக்குற்ற பாடங்களைத் தம்முடைய திறனுக்கு அப்பாற்பட்டவை என்று அறிந்து புழுங்குகிருர் கள். அப்பிள்ளைகளுக்கு ஏற்பப் பாடங்களைக் குறைத்து எளியவற்றை அவர்களுக்குத் தந்து உதவுதல் நலம். ஒரு வகைப் பாட ஏற்பாட்டில் மாணவன் தேர்ச்சி பெருது தவறிவிட்டால் மீண்டும் அதையே திரும்பிக் கற்று மீண்டும் தவருது, புதிய பாட ஏற்பாட்டினைத் தந்து வெற்றி காண உதவுவது நல்லது. வகுப்பறையில் வகுப்பை நோக்கிப் பாடஞ் சொல்லாது மாணவர் ஒவ்வொருவரையும் அறிந்து பாடஞ் சொல்லுதல் நல்லுதவியாகும். மாணவனே கற்கும் பொறுப்பினை ஏற்குமாறு ஆசிரி யம் அமைதல் வேண்டும். மாணவர்களை அடிக்கடி கண்டு பேசுவதும் அவர்களுடைய இடர்ப்பாடுகளை அறிவதும் பாட ஏற்பாட்டிலேயே ஓர் இடம் பெறுவது நல்லது. ஆசிரியர், மாணவர்களுடைய கவர்ச்சி விருப்

புக்களை அறிந்து அவற்றிற்கொப்ப அவர்களுக்கு ஈடுபாடு அளித்தல் தன்னம்பிக்கையை வளரச் செய்யும். இவை போன்ற வழிகளில் ஆசிரியர் இயங்கினாலன்றி வழிகாட்டும் பண்பு நன்மை பயக்காது. தனி ஒவ்வொரு மாணவனுக்கும் அவன் வளரக்கூடிய தக்க சூழ்நிலையை அளிக்காது விட்டால் வழிகாட்டுதல் வன்மை பெறாது. பல்வேறு பணிகளிலும் கலைகளிலும் தொழில்களிலும் சிறப்புப் பயிற்சி இயற்கைத் திறன் மாணவர்களுக்கு நல்லது. மற்றும் ஏட்டுப் படிப்புக்கு உதவாதவர்களுக்கும், பல திறன்கள், பல கவர்ச்சிகள் உள்ள எல்லாருக்கும் பலப்பல வாய்ப்புக்களை நம் பள்ளிகளில் உண்டாக்கி அளிக்க வேண்டும்.

நல்ல கல்வி ஏற்பாட்டின் சிறந்த பெற்றி கல்வி வழி காட்டுதலுக்கு உதவுதல். ஒரு சில பள்ளிகளில் கல்வி வழி காட்டுதலுக்கும், கல்வி ஏற்பாடு, ஆசிரியம் ஆகியவற்றிற்கும் தொடர்புள்ள நிலை இன்றியமையாதது. வழிகாட்டி நிலையத்தோடு மாணவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய கட்டளை உண்டு. மாணவர்கள் வழிகாட்டி நிலையத்திற்குச் செல்வார்கள்; வழிகாட்டி நிலையத்தைப்பற்றி அறிந்து கொள்ளுவார்கள். ஒரோ வழி ஒரு சில உதவிகளும் பெறுவார்கள். இத்தகைய உதவி பயனற்றது. வழிகாட்டி நிலையம் பயனுற வேண்டுமானால் அது பள்ளியோடு ஒன்றிப் பணியாற்ற வேண்டும். அல்லாக்கால் வழிகாட்டி ஆசிரியர்கள் மாணவரை அறிய முடியாது. அல்லது மாணவர்கள் அவர்களுடைய உறவைப் பெற முடியாது. எந்த நன்மையைப் பயக்கும் செயலும் பள்ளிப் பழக்கத்தோடு கூடியதாக வேண்டும். வகுப்பு ஆசிரியருடைய உதவி இப்பணிக்குச் சாலச் சிறந்தது. எனவே வழிகாட்டி ஆசிரியர் வகுப்பாசிரியரோடு கலந்து பல்வேறு வழியில் மாணவர்களுக்குத் திருப்பம் தந்து வேண்டிய பொருத்தப்பாடுகளுக்கு உதவ வேண்டும். வகுப்பு ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் இதில் பொறுப்புண்டு. ஆனால் வழிகாட்டி ஆசிரியர் மட்டும் எல்லாருடைய பொறுப்புக்களையும் இணைத்து மாணவனுக்கு ஏற்பக் குணங்காண்பார்.

வழிகாட்டுதல் இயக்கம் கல்வி வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டம். இன்றைய உயர்நிலைப் பள்ளித் திட்டத்தில் பல வகைப் பாட ஏற்பாடுகள் பல்வேறு திறன்களுக்கென வகுக்கப் பெற்றுள்ளன. சமூகம் சிக்கலுற்ற நிலையில் காட்சி அளிக்கின்றது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு வாழ்க்கையினை வகுக்க மிக்க இன்னலடைகிறார்கள். அங்ஙனம் பிள்ளைகளும் தமது தகுதி யாது, அதற்கேற்பத் தாம் தேடிக் கொள்ளக்கூடிய வாழ்க்கை வழி எது என்றெல்லாம் அறிய விழைகிறார்கள். பெரும்பான்மை அண்டை வீட்டுக்காரன் சட்டக் கல்லூரியில் சேர்ந்தால் தானும் சட்டக் கல்லூரி; அல்லாது பொறியியற் கல்லூரி என்றால் தானும் பொறியியல்; அல்லது எந்தத் துறையில் ஆட்கள் தேவைப்பாடும் வருவாயும் அதிகமாகக் கிட்டுகிறதோ அதை நாடுவதும் அவாவுதும் நாம் எங்கும் நமது நாட்டில் காணக்கூடிய காட்சி. அல்லது கணிதம், விஞ்ஞானத் துறைகளில் தகுதி உள்ளவர்

களையும், அஃது அற்றவர்களையும் காண்கிறோம். இயற்கைத் திறன் ஒன்று; கற்ற கல்வி வேறு; ஏற்கும் பணி பிறிதொன்று: இத்தகைய முறை கெட்ட பொருத்தப்பாடுகள் நாம் காணும் நமது சமூகக் காட்சிகள். அங்ஙனம் அல்லாது நமது திறனை நாம் அறிய வாய்ப்புக்கள் இருந்தால் நமது தகுதிக்கேற்பச்செய்ய வேண்டிய தொழிலைத் தேடிக் கொள்ளலாம். இப்பெரும் பணியில் பொறுப்பேற்க வேண்டியது நமது பள்ளிகளும் கல்லூரிகளும் அன்றோ!

சமூகத்தைத் திருத்துவது கல்வி நிலையங்களின் பொறுப்பென்று நாம் சொல்லாமலே விளங்கும். குழந்தைக்கு வழிகாட்டுவதற்கும், அதைத் திருத்தி வளரச் செய்வதற்கும் பள்ளியே பொறுப்பேற்க வல்லது. பள்ளியிலன்றோ நம் பிள்ளைகள் பலவகை நல்ல பழக்கங்களைக் கற்றுக் கொள்ளுகின்றனர். பல்வேறு அனுபவங்களை முற்போக்குப் பள்ளிகள் தரக்கூடியவை. முற்போக்கு ஆசிரியர்களும் பல முறைகளால் தனி மாணுக்கரை அடிக்கடி வேறுபாடுறும் சூழ்நிலைகளுக்கு ஏற்பப் பொருத்திக்கொள்ள உதவுகின்றனர்.

வழி காட்டுதல் குழவிப் பருவ முதல் தொடங்கும் பணி. 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்ற நமது பழைய மொழியில் புதிய கருத்துக்களை நிரம்பக் காணலாம். தொடக்க நிலை ஆசிரியர் தனி ஒவ்வொரு பிள்ளைக்கும் குறிப்பேடு வைத்து ஒவ்வொரு பிள்ளையையும் கண்காணித்து அன்போடு வழிகாட்டி ஆதரவு தந்து உடல் உள்ள வளர்ச்சிக்கு உதவி புரியலாம். நடுநிலைப் பள்ளியில் பிள்ளைகள் ஒரு புதிய சூழ்நிலையைக் காண்கிறார்கள். அவர்களுக்கு ஒரோவழி ஆதரவு அற்றநிலை பீடிக்கிறது. பிள்ளைகள் வளர்ச்சியடைகிறார்கள். அவர்களுக்குக் கல்வியின் மீதும் அவாவும் தன்னம்பிக்கையும் உண்டாகின்றன. இவற்றை நடுநிலை ஆசிரியர் கண்டறிந்து அவர்களுக்கு நல்ல முறையில் அறிவுரை பகர்ந்து திருத்தமுறப் பொருத்தப்பாடு பெறுவதற்கு வழிகாட்டி உதவ வேண்டும். பெரும் பள்ளிகளில் பல் நோக்குத் திட்டங்கள், தனித் தனிப் பாட ஆசிரியர்கள், பள்ளித் தனித் திட்டங்கள்—ஆகியவற்றை எல்லாம் பிள்ளைகள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். உயர்நிலைத் தொடக்கத்தில் பள்ளி ஏற்பாட்டை அறிந்து கொள்ள வழிகாட்டுதல் இன்றியமையாததாகிறது. விருப்புப் பாடங்கள் பல. பல்நோக்குத் திட்டங்கள் நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் எட்டாவது வகுப்புக் [1]கிளை முகத் தோற்றத்தை அளிக்கின்றது. இவ்வகுப்பு இறுதியில் மாணவர்கள் அவரவர்கள் விருப்பப்படி அல்லது தகுதிக்கேற்றபடி தாம் தமக்குற்ற பாடங்களைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளுவது என்பது ஒரு முக்கியமான வினா. ஆனால் இன்றைய நிலையில் இவை வினாக்குறியாகப் பிள்ளைகளையாவது ஆசிரியர்களையாவது பெற்றோர்களையாவது வாட்டுவதில்லை. படியாத பெற்றோர்கள் பிள்ளையின்

1. Delta class

விருப்புப் பாடத்தைப் பற்றிக் கவலை கொள்வதில்லை. ஐயோ பாவம்! அவர்கள் என்ன அறிவார்கள் !! பள்ளிகளாவது அவர்களை அழைத்துக் கேட்பதில்லை. பிள்ளைகளோ ஒருவரோடொருவர் கலந்து பேசிக் கொண்டு நண்பர் குழாங்கள் ஒரே பாடத்தினை விரும்புகிறார்கள். பள்ளிகள் பல்நோக்கு வகுப்புக்களுக்குப் பிள்ளைகளைத் திரட்டி வகுப்புக்களை நிரப்பும் பணியில் ஈடுபடுகின்றன. ஒரு சில பள்ளிகளில் கணக்கில் அதிக மதிப்பெண் பெற்ற மாணாக்கர்களைப் பொறியியலுக்கும் ஆங்கிலத்தில் தேர்ச்சி உள்ளவர்களை எழுத்தர் வகுப்புக்கும் இன்னும் மற்றவரை பயிர்த் தொழிலுக்கும் சேர்த்து அந்தந்த வகுப்புக்களில் அந்தந்த மாணவர்களை நிரப்பிக் கொள்ளுகிறார்கள். தவறாக ஒரு பிள்ளை ஒரு வகுப்பில் சேர்ந்து விட்டால் அவன் அதில் பொருத்திக் கொள்ள இயலாது மட்கித் தேர்வு பெறாது இறுதியில் பள்ளிப் படிப்பும் முடிவு பெறாது நின்று விடுகின்றான். ஆசிரியர்களாவது பள்ளியாவது இந்தக் குறைபாட்டினைத் தீர்ப்பதற்கு அக்கறை கொள்ளுவதில்லை. தேர்ச்சி பெறாத பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள் உடனே உதவாக்கறைகள் என்று பட்டஞ்சூட்டி விடுவார்கள். இங்ஙனம் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பள்ளிகளில் அல்லலுறுவதும் திரும்பத் திரும்ப தேர்வு பெறாது பள்ளிகளை விட்டு வெளியேறுவதுமே நமது நாட்டு இளைஞர்கள் கேடுறுவதற்குக் காரணம். எனவே கல்விப் பாதைகளில் வழிகாட்டவேண்டிய அவசியம் கூறாமலே விளங்கும். கிளைமுக வகுப்பில் சரியானபடி பிள்ளைகள் கண்காணிக்கப் பெற்றால் அவர்களுக்கு உரிய பணியில் பயிற்சி பெற்று நாளடைவில் அவர்களுடைய வாழ்க்கைத் தொழிலுக்குத் தம்மை உருவாக்கிக் கொள்ளுவார்கள். இங்ஙனம் தனிப்பட வழிகாட்டி உதவுவதோடு பொதுவாக மாணவன் ஒவ்வொருவனுடைய முழு வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளக்கூடிய வழிகாட்டுதலும் பள்ளி தந்துதவ வேண்டும். வழிகாட்டி ஆசிரியர் பிள்ளையினுடைய உடல் வளர்ச்சியையும் நோயற்ற வாழ்க்கையையும் அறிந்து அறிவுரை பகர்தலும் உதவி புரிதலும் வேண்டும். பிள்ளைகள் தமது குடும்ப நிலைகளால் பீடிக்கப்பெற்று வகுப்புக்களில் [1]பொருத்தப்பாடு இன்மையோடு வருந்தி நிற்பார்கள். வகுப்பில் ஒரு பிள்ளை பாடத்தைக் கவனியாமலும் படிக்காமலும் அசையாது அமர்ந்திருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகையால் எது என்று அறிந்து அதற்கேற்றபடி பொருத்தப்பாடு தந்து உதவவுது வழிகாட்டி ஆசிரியரின் கடமை. பள்ளியின் பொதுச் செயற்பாடுகளில் பங்கெடுக்கத் தெரியாது பிள்ளைகளுள் ஒரு சிலர் தயங்குவதுமுண்டு; ஒதுங்கியும் நின்றுவிடுவார்கள்; அத்தகைய பிள்ளைகளுக்கு வழிகாட்டி ஆசிரியர் உதவி புரிந்து அவர்களுக்கேற்ற பங்கினை அளிக்க வேண்டும். பொருத்தப்பாடின்மை இல்லத்தின் அடிப்படையில் உண்டாவதென்று அறிந்தோம். அஃது அல்லாது

1. Maladjustment

மாணவர் ஒரு சிலர் சுருக்கென்ற உணர்ச்சி உள்ளவர்கள், கூச்சமுள்ளவர்கள், தன்னம்பிக்கையற்றவர்கள், தம்மைத் தாழ்வாக நினைத்துக் கொள்ளுபவர்கள், உடற்பாட்டுத் தடை உள்ளவர்கள், சினமுள்ளவர்கள் ஆகிய இவ்வியல்புகளுடையோர் பலப்பல குறைபாடுகளால் பள்ளி வாழ்க்கையில் இடர்ப்பாடுற்று இன்னலடைவார்கள். அந்தந்தக் குறைபாட்டினை நன்கு அறிந்து ஏற்ற வழியில் அவர்களைத் திருத்தி அதனால் அவர்களுடைய திறனுக்கு ஊறு விளையாது வாழ்க்கை கேடுறாது அவர்களுக்கு வழிகாட்ட வேண்டியது ஆசிரியரின் கடமை அன்றோ! பள்ளிகளில் ஓய்வு நேரத்தைப் பிள்ளைகள் நலமுறவும் பயன் உறவும் கழிப்பதற்கு அவர்களுக்கு வழிகாட்டுவதும் ஒரு பணியாகும். இருபாலர் பயிலும் பள்ளிகளில் குமரப் பருவத்தில் பால் ஈர்ப்பு உணர்ச்சிகள் மீதூறுமாகையால் பால்வகைக் கல்விவழியால் பாலினப் பண்பினை வளர்க்க வேண்டியதும் வழிகாட்டி ஆசிரியருடைய பொறுப்பு. இங்ஙனம் பல்வேறு வகையில் உதவினால் ஒவ்வொரு மாணவனும் தன் திறமையை வளர்த்துக் கொள்ள இயலும்.

1. [1]தொழில்முறை வழிகாட்டல்:

தொழில் முறை வழிகாட்டல் பல நோக்கு வழி காட்டல்களுள் பாட்டாளி உலகில் பேரிடம் பெற்றுவிட்டது. தனி ஒருவனுக்கு அவனுடைய திறமையின் அடிப்படையிலும் அத்தொழிலின் உள்ளார்ந்த தரத்தின் மதிப்பீட்டிலும் தன் தொழிலைத் தேர்ந்தெடுப்பதற்கும், அதில் முன்னேற்றம் பெறுவதற்கும் தொழில் முறை வழிகாட்டல் உதவுகின்றது. அஃதாவது அந்தந்தத் தொழிலுக்குரியவனை அத்தொழிலில் பொருத்தி விடுவது சிறந்த வழிகாட்டலாகும். பெரும்பான்மை இது நம் மக்களிடையே நிகழாத தொன்று. பெரும்பான்மை நமது இளைஞர்கள்[2]முட்டுச் சந்தில் நுழைபவர்களைப் போன்று கல்லூரி இறுதி வரையில் சென்று விடுகின்றார்கள். எந்தத் துறையில் தனிப் புலமை பெற்றாலும், பட்டந்தாங்கினாலும் எத்தொழிலைத் தேர்ந்தெடுப்பதென்று அறியாது திகைக்கின்றார்கள். அவர்களுக்குக் கல்லூரிகள் வழிகாட்டா தொழிகின்றன. தனித்துறைப் புலமையை மேலும் பெருக்கிக் கொண்டாலும் இறுதியில் அவர்கள் துறையில் பணிபுரியாது வயிறு வளர்க்க வேறொரு துறையில் புகுந்துவிடுகிறார்கள். இதனால் எத்துணை அளவு நமது இளைஞர்களின் திறன் நமது நாட்டுப் பணிகளுக்குப் பயனாகின்றது என்பது நாம் அறிந்ததொன்று. தொழில் முறை வழிகாட்டல் பள்ளிக்கும் கல்லூரிக்கும் அப்பாலும் தொடர்ந்து நிகழவேண்டிய தொன்று. ஒருசிலர் தமக்குரிய வேலைக்காகக் காத்திருந்து இறுதியில் வேறு ஏதாவது கிட்டியதொன்றை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். மற்றும் சிலர் தற்காலிகமாக ஒரு வேலையினை ஒத்துக்

1. Vocational guidance 2. blind alley

கொண்டு வாழ்க்கை முழுவதும் வேறு தமக்குரிய வேலைகிடைக்காத தால் அதிலேயே காலங்கழித்து விடுகிறார்கள். மேலும் இப்போது வெகு வேகமாக மாறுபாடடையும் பலவகைத் தொழில்களுக்குப் புத்தம் புதிய தேர்ச்சி பெற்றோரை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். அதனால் பலர் நெடுந்தூரம் தாம் நினைந்து ஏற்றுக் கொண்ட பணியில் பதவி ஏற்க வழியற்றுப் பாழடைகிறார்கள். தொழில் துறையைத் தேர்ந்தெடுக்கும் போது மிக விழிப்போடு சீர் தூக்கிப் பார்க்க வேண்டும். பெருந்தகுதி உள்ளவர்கள் சிறு தொழில்களில் பாடுற்றால் அவர்களுக்கு ஏற்படும் இழப்பு அதிகம். ஒரு சிலர் இரண்டு மூன்று தொழில்களுக்குத் தம்மை ஆக்கிக் கொள்ளுகிறார்கள். ஆனால் ஒன்று மட்டும் அவர்களுக்குப் பற்றுக்கோடு. மற்றவற்றில் பெற்ற திறன் வீணாகின்றது.

நம் பள்ளிகள் பிள்ளைகள் ஒவ்வொருவருடைய ஆற்றல்களையும், திறன்களையும் அறியவேண்டியது கடமை. பிள்ளைகள் பள்ளியிலும் வகுப்பறையிலும், வெளியிலும் இயற்றும் பல செயல்கள் அவர்களைப் பற்றி மதிப்பிடுதற்குப் பயன்படும். அல்லது அவர்களுக்குப் [1]பேட்டி அளித்துப் பல விவரங்களை அவர்களிடமிருந்து பெறுதல் நல்லது. அல்லது[2] வினா அறிக்கைகளுக்கு விடைபெற்று அறிவதுமுண்டு. பெற்றோர்களை அணுகி அவர்களிடமிருந்து பெறும் விபரங்களும் பயன்படும். இவை யாவற்றையும் தனியாள் ஆராய்ச்சிக் குறிப்பில் வழிகாட்டி நிலையம் வரைந்து வைத்துக் கொள்ளுவது நல்லது.

வழிகாட்டுதலை வேறாகவும் பள்ளி ஏற்பாட்டினை வேறாகவும் கருது தல் கூடாது. இரண்டும் ஒன்றோடொன்று இணைந்து நடைபெறுவ தற்கு வகுப்பு ஆசிரியர்கள் வழி காட்டுதற் பணியை அறிந்து கொள்ள வேண்டும். அங்ஙனமே பள்ளியைப் பற்றியும் வழிகாட்டி ஆசிரியர் அறிந்தாலன்றித் தம்முடைய பணியை அழுத்தம் திருத்தமாக இயற்ற இயலாது. பள்ளி ஆசிரியர்களும் வழிகாட்டி ஆசிரியர்களும் ஒரே குறிக்கோளினைக் கொண்டவர்கள். கல்விக் குறிக்கோள்கள் செவ்வனே நடை பெறுவதற்கன்றோ பள்ளி ஆசிரியர்கள் பணி புரிகின்றார்கள். அப்பணியைப் பயன்பட இயற்றுவதற்கு வழிகாட்டி ஆசிரியர்கள் உதவுகின்றார்கள். இரு திறத்தாரும் முக்கியமாக அடிப்படைக் கல்வித் தத்துவத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். சமூகத் தேவைபாடுகள் மாறிக்கொண்டே உள்ளன; பிள்ளைகளுடைய ஆற்றல்கள் பலவானவை; எனவே எந்தக் கல்வி ஏற்பாடும் பிள்ளை களுடைய திறனோடு தொடர்புடையதாக வேண்டும். ஆகையால் வழி காட்டல் திட்டமும் ஒருங்கு இணைந்து இயங்கவேண்டும். பள்ளியில் பயிலும் மாணவர்கள் ஏதோ சில ஆண்டுகள் படிக்க வேண்டியவற்றைப் படித்து ஏட்டறிவு பெற்று, ஏதோ ஒரு வழியில் வளர்ந்து பள்ளி இறுதியில் தேர்ச்சி பெற்றும் பெறாமலும் வெளியேறுவதைப் பார்க்கிறோம். ஆனால்

1. Interview 2. Questionnaire

ஒவ்வொரு மாணவனும் பள்ளியில் படிக்கும்போது தனது ஆற்றல்களை யும் திறன்களையும் நன்கு வளர்த்துக்கொண்டு, நல்ல பழக்க வழக்கங் களைப் பெற்று, நன்னெறியை உணர்ந்து, பள்ளி இறுதியில் வெளி யேறும்போது தனது குடிக்கும், நாட்டுக்கும் நல்லவனுகவும், பயனுள்ள வனுகவும் விளங்குமாறு தன்னை ஆக்கிக் கொள்ளுவது உண்டு. இவற் றைப் பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டியது பள்ளியில் கடன். வழிகாட்டி ஆசிரியர் இந்தப் பரந்த நோக்கினையே கொண்டு பள்ளி ஆசிரியர்களோடு கலந்து ஆவன செய்யவேண்டும். பள்ளிகளில் ஒவ் வொரு பிள்ளைக்கும் [1] திரட்டுப் பதிவேடு வகித்துப் பிள்ளையைப் பற்றி பல குறிப்புக்கள் எழுதவேண்டும். ஒவ்வொரு பிள்ளையையும் ஆசிரியர் நன்ருக அறிய வேண்டியது கடமை. அதனோடு பிள்ளைகள்பால் அன் பாக நடந்து கொண்டால் அவர்கள் கட்டாயமாகத் தமது தரத்தை உயர்த்திக் கொள்ளுவார்கள். வகுப்பாசிரியர் தனித்தனிப் பிள்ளையின் வேற்றுமையை அறிந்து அதற்கேற்பக் கற்றலின் கவர்ச்சியை உண்டு பண்ண வேண்டும். கற்பித்தல் முறையிலும் பிள்ளைகளை வகைப்படுத்தி ஒவ்வொரு தரத்தினருக்கு ஒரு வகையான முறையில் கற்பித்தால் வெற்றி காணமுடியும். பிள்ளைகள் தவறினுலும் காரணத்தை அறிந்து திருத்த முறைகளைக் கையாள வேண்டும். எனவே எந்த ஆசிரியரும் பாடங்களை முக்கியமாகக் கருதாது பிள்ளைகளைத் தமது குறிக்கோளாகக் கொண்டு கற்பித்தால் வழிகாட்டுப் பொறுப்பில் பெரும்பகுதி அவர்களு டையதாகி விடும். நல்ல குணமுள்ள ஆசிரியர்கள் பிள்ளைகளோடு நல்ல முறையில் பழகி அவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களைத் தந்து உதக்கூடும்.

வழிகாட்டி ஆசிரியர் பொதுவாக உளநூலில் தேர்ச்சி பெற்றவர். குழந்தை வளர்ச்சியை நன்ருக அறிந்தவர், பிள்ளைகளைப் பற்றிக் குறிப்பெழுதும் திறமையாளர். வழிகாட்டும் நுணுக்கங்களாகிய பேட்டி அளித்தல், தரமாக்கப்பட்ட தேர்வுகளைக் கொடுத்துத் தரம் அறிதல், அவற்றின் ஈவுகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல், அறிவுரை பகர்தல் ஆகிய பல பணிகளில் தேர்ச்சி பெற்றவர்; இவையன்றிப் பல தொழில் களைப் பற்றியும் அறிந்தவர். அதன் பயனுகத் தொழிலைப் பொறுக்கி எடுப்பதற்கு வழிகாட்டியாகவும் விளங்குவார். இவருடைய தொண்டு முழுவதும் பள்ளி ஆசிரியர்களுடைய பணியோடு தொடர்பு பெற்ருல் வழிகாட்டல் நன்கு நடைபெறும். வழிகாட்டி ஆசிரியர் உதவியால் பள்ளி மாணவர்களுடைய கோணல்கள் வளராது அப்போதைக் கப்போது திருத்தம் பெறும். பிள்ளைகளும் திருத்தம் பெற்று நன்றி பாராட்டுவார் கள். பிள்ளைகள் அவரவர்கள் திறனுக்குரிய பாடங்களைப் பொறுக்கி எடுக்க உதவி பெறுவதால் படிப்பு எளிதாகும். பிள்ளைகள் முன்னேற்றம் பெற்ருல் தேர்வுகளில் வெற்றி காண்பார்கள். ஆசிரியர்கள் வழி

1. Cumulative Progress record

காட்டுதலால் தமது ஆசிரியத்தில் மகிழ்ச்சி கொள்ளுவார்கள். பெற்றோர்களும் அத்தகைய பள்ளியைப் பற்றி நன்மதிப்புக் கொள்ளுவார்கள். வழிகாட்டும் பணிக்குப் பயிற்சி பெற்றவர்களே தகுதி உள்ளவர்கள் என்று கருதுவது மிகையாகும். எல்லா ஆசிரியர்களும் கற்பிக்கும் பயிற்சியோடு பொதுவாகக் கல்வியின் தத்துவத்தையும், உளநூலையும் படித்தவர்கள். ஒவ்வொரு மாணவனும் தனிப்பட்டவன் என்று அவர்களுக்குத் தெரியும். மாணவரோடு பழகுதலும் அவர்கள் அறிந்ததே. ஆகையால் ஆசிரியர்களுக்கு வேண்டுவனவெல்லாம் பிள்ளைகள்பால் அன்பும் அக்கறையுமே ஆகும்.

வழிகாட்டி ஆசிரியர் வகுப்பு வகுப்பாகப் பிள்ளைகளுக்குப் பொதுப்பட வேண்டிய பொருள்களைப் பற்றி அறிவுரைகள் பகருவதுமுண்டு. கீழைமுக வகுப்பில் மாணுக்கர் எல்லாரும் அறிய வேண்டிய விபரங்கள் பொதுத் தன்மையன. அவர்கள் பல தொழில் துறைகளைப் பற்றி அவ்வகுப்பில் அறிய வேண்டும். அப்போது மாணவர்கள் தாமாகவே சிந்தனை செய்து தமது விருப்புக்கும் திறனுக்கும் ஏற்ற பல்நோக்கு முறைகளுள் யாதாயினும் ஒன்றைப் பற்றிச் சிந்திப்பார்கள். அப்போது மாணவர்கள் பல சந்தேகங்களைக் கேட்டறிந்து விளக்கிக் கொள்ளுவார்கள். இவையன்றி எல்லா மாணவருக்கும் உரித்தான பொருள்களைப் பற்றித் தனித்தனியாக விளக்குவதைக் காட்டிலும் மாணவர் பலரை ஒரே கூட்டத்திலறிந்து பொதுப்பட விளங்குமாறு செய்வதால் மாணவர்களும் தமது இடர்ப்பாடுகளுக்கு வேண்டிய நீக்க முறைகளைப் பெறுவார்கள். [1] பொதுநிலையான மாணவர்கள் பொதுவாக அதிகக் கவனம் பெறுவதில்லை. உயர்ந்த தரமுள்ள மாணவர்களும் மட்ட மாணவர்களும் மட்டுமே வழிகாட்டி ஆசிரியருடைய கவனத்தை ஈர்க்கக் கூடியவர். அதனுல் வகுப்புக் கூட்டங்கள் பொதுநிலை மாணவருக்கு நன்மை பயக்கின்றன. பள்ளியின் தேவைப்பாடுகளைப் பற்றிப் பொதுவாகப் பிள்ளைகளிடையே பேசுவதால் அவற்றை முழுதாக்க இயலாதவர்கள் தனியாக அறிவுரை பெற வேண்டியவர்களாவார்கள். பொதுக் கூட்டங்களில் பள்ளியின் திட்டங்கள், பள்ளி விடுதிகளில் பெற வேண்டிய தொடர்பு, சமூகக் கூட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய பண்பாடு, முதிய மாணுக்கராயின் அவர்களுக்குப் பல தொழில்களைப் பற்றி அறிவுறுத்தல், தனி ஒவ்வொரு மாணுக்கரும் வளர்க்க வேண்டிய குணங்கள், மாணுக்கரின் பொறுப்புக்கள் ஆகியவற்றைப் பற்றி பிள்ளைகளுக்கு அறிவிக்கலாம்.

வழி காட்டுதல் நமது பள்ளிகளில் தனித்து இயங்கலாம். ஆனுல் வகுப்பு ஆசிரியர் மட்டும் வெகு திறமையோடு கற்பித்துத் தனி ஒவ்வொரு மாணவனுடைய வளர்ச்சிக்கும் வழி செய்தால் அவர் வகுப்பறையில் நல்லுறவை நிலைபெறச் செய்வார். வகுப்பாசிரியரை ஏன்

1. Normal

விரும்புகிருய் என்று ஒரு மாணவனேக் கேட்க அவர் எங்களுக்கு நன்ருகக் கற்பித்துக் கொடுக்கிருர் என்று அவன் பதிலுரை அளித்தான். கண்டிக்கும் ஆசிரியர்களே மாணவர்கள் விரும்பாது வெறுப்பதில்லே. அத்தகையோர் பாடங்கற்பித்தலில் வெகு திறமையோடு நடந்து கொள்ளுவார்கள். மாணவர்கள் எல்லாரையும் கற்கும்படி செய்வார்கள். எனவே திறமையோடு பணியாற்றும் ஆசிரியரைப் பிள்ளேகள் மீது அக்கறை கொள்பவராகக் கருத வேண்டும். வகுப்பில் பிள்ளேகள் பாடங்களே நன்ருகக் கற்காத காரணத்தால்தான் அவர்கள் வகுப்பறையிலேயே பொருத்தப்பாடு பெறுவதில்லே. அத்தகைய பிள்ளேகள் [1] மனவெழுச்சி இடர்ப்பாடுறும் பிள்ளேகளுக்கு ஒப்பாவார்கள். பிள்ளேகளே அறிந்து கொள்ளுவதே ஆசிரியத்தின் அடிப்படைத் திறனுகும். பிள்ளேகளேக் கற்றலில் ஊக்குவதற்கும், கற்றல் வழிகளேக் காட்டுவதற்கும், பாடத்தைப் படம் பிடித்துக் காட்டுவதைப் போலக் கற்பிப்பதற்கும், கற்பித்தல் தூண்டல்களுக்கு ஏற்பத் துலங்கல்களேப் பெறுவதற்கும், வகுப்பறையில் பாடத்திஞல் ஏற்படும் இடர்ப்பாடு நிலேமையை இன்பமயமாக்குவதற்கும் நல்லாசிரியர்களுக்கு நன்ருகத் தெரியும். வகுப்பறையில் நிலவும் காட்சி அங்குள்ள சமூக உறவினே எதிரொலிக்கக் கூடியது. ஆசிரியருடைய அன்பு, ஒவ்வொரு மாணவனேயும் அவர் கண்காணிக்கும் ஆவல், அவருடைய தரம், திறன் ஆகிய வெல்லாம் அவர் மாணவர்களுடைய நடத்தைகளின் வழி வெளியாகும். பள்ளி நேரங்களில் வகுப்பறையிலும் வகுப்பு வெளியிலும் விளேயாட்டுத் திடலிலும் பிள்ளேகளேக் கண்காணித்த வண்ணம் அவர்களுக்குப் பல உதவிகள் புரியும் ஆசிரியர் சிறந்த வழிகாட்டியாவார். மாணவர்களேயே [2] தம்மைப் பற்றிய சிறந்த குறிப்புக்களே வரையத் தூண்டிஞல் அவர்கள் தமது செயல்களேத் தாமே மதிப்பிட்டுத் தூய்மை பெறுவார்கள். அவரவர்களுடைய அறிவுத் திறன், தேர்வு, ஆளுமைத் தேர்வு ஆகியவற்றின் மதிப்பெண்களே வரைபடங்களாக்கித் தமது ஏற்றத் தாழ்வுகளேத் தாம் அறிந்து கொள்ளச் செய்தால் அவர்கள் பெரிதும் மகிழ்ச்சி பெறுவார்கள். இதஞல் அவர்கள் தமது நிலேயினேத் தாமே அறிந்து கொண்டு தமக்குத்தாமே வழிகாட்டிக் கொள்ளுவார்கள். ஆசிரியர் வழிகாட்டியாக நேர்ந்தால் அவர் வழி விரும்பும் மாணவரை நன்ருக அறிந்து கொள்ளுவதோடு அந்நிலே ஆசிரியர்களே அவர்கள்மீது இரக்கமும், கனிவும் உள்ளவராகவும் ஆக்குவார். மாணவர்களுக்கு மிக முக்கியமான சிக்கல்களாக இருப்பவை வழிகாட்டி ஆசிரியர்களுக்கு மிக எளியவையாக இருக்கலாம். ஆஞல் வழிகாட்டி ஆசிரியர் மாணவர் நிலேயில் அவற்றை அறிய வேண்டும். அறிவுரை பகர்வோர் மெச்சத் தக்கதை மெச்சிக், கண்டிக்கத் தக்கதையும் கண்டிக்க வேண்டும். அதன் பின்னர் அறிவுரை பகர்தல் நலம்.

---

1. Emotional maladjustment 2. Self-diary

வழி காட்டுதல் பணியை நம் பள்ளிகளில் பெரும் பணியாகக் கொள்ளுதல் தலைக்கடன். இனி ஆசிரியர்கள் வகுப்புக்குப் பாடங் கற்பிக்காது தனித்தனிப் பிள்ளைகளைக் கவனிக்க வேண்டுமென்ற கட்டாயம் ஏற்பட்டு விட்டது. ஒவ்வொரு மாணவனும் தனித்து வளர்ந்து இயங்க வேண்டி உள்ளது. பாட ஏற்பாட்டை வகுப்புக் கூட்டத்துக்குப் பரிமாறுவதைப் போல் பழையபடி பரிமாறிக் கொண்டிருந்தால் மெதுவாகக் கற்கும் பிள்ளைகள் பின்தங்கி விடுவார்கள். வகுப்பறையில் ஓட்டப் பந்தயம் நிகழுவதில்லை; ஆனால் வகுப்பு மாணவர் எல்லாரும் ஓடவேண்டும்; எல்லாரும் வெற்றி காண வேண்டும். ஆசிரியர்கள் எல்லாப் பிள்ளைகளுக்கும் தனி ஒவ்வொரு மாணவனுடைய முழு வளர்ச்சிக்கும் பொறுப்பாவார்கள். வகுப்பாசிரியருக்குப் பொறுப்புக்கள் பல. எனவே வழிகாட்டி ஆசிரியர் வழிகாட்டும் தத்துவத்தில் சிறந்த பயிற்சி பெற்றவராகையால் வகுப்பு ஆசிரியர்களுக்கு உற்ற உதவி புரிதல் வேண்டும். இருவர் பணிக்கும் வேறுபாடு பெரிதும் இல்லை என்று கண்டோம். மாணவர்களுக்குக் கல்வியைப் பற்றியும், தொழிலைப் பற்றியும் இடர்ப்பாடுகள் உண்டென்றும் அறிந்தோம். வழிகாட்டி ஆசிரியர் வெறும் குறிப்புக்களை மட்டும் எழுதி அறிக்கை தந்து விட்டால் போதாது. அவர் தலைமையாசிரியரோடும், வகுப்பாசிரியரோடும், பெற்றோரோடும், மாணவரோடும் கலந்து தமது அறிவுரையைப் பகர்ந்து ஆவன செய்ய வேண்டும். பள்ளி ஆசிரியர்களையும் அவர்களுடைய வகுப்பறைச் சிக்கல்களையும் எழுதித் தரச் சொல்ல வேண்டும். தனி ஒவ்வொரு மாணவனையும் தனது செயலைக் குறிக்காமல் தனது இடர்ப்பாடுகளை எழுதித் தரச் சொல்ல வேண்டும். இங்ஙனம் ஒரு [1] ஒப்பிடு பட்டியல் தயாரித்து விட்டால் அதைக் கொண்டு பொதுவான சிக்கல்களை எளிதாக அறிந்து அவற்றிற்கு வேண்டிய அறிவுரைகளைத் தந்து உதவலாம். பொதுவானவை நீங்கலாக தனிப்பட்ட சிக்கல்களை அந்தந்த தனி மாணவனைக் கொண்டு தீர்த்து வைக்கலாம். ஒவ்வொரு தனி மாணவனும் வழிகாட்டி ஆசிரியருக்குச் சிறந்த அறிவுக் களஞ்சியம். மேனாடுகளில் இத்தகைய குறிப்புக்கள் வெளியிடப் பெற்றுள்ளன. அவற்றினை நமது நாட்டு ஆசிரியர்கள் படித்து வழிகாட்டும் திறனைப் பெரிதும் பெருக்கிக் கொள்ளலாம்.

1. Check list

XXIV

[1] மதிப்பிடுதல்

எந்தப் பொருளின் தரத்தையாவது எடுத்துக் கூறுதலுக்கு மதிப்பிடுதல் எனல் பொருந்தும். அளவிடுதல் என்ற மற்றொரு சொல் உண்டு. ஒரு நிகழ்ச்சியை அறிவியல் அளவுகோலால் அளந்து திட்டவட்டமாகக் கூறுகிறோம். ஒரு மாணவன் குறுக்கெழுத்து எழுதுவானேயானல் அவனுடைய எழுதும் வேகத்தை அறிய ஒரு தேர்வு நிகழ்த்தி அவன் ஒரு மணித்துளிக்கு 150 சொற்கள் எழுதுகின்ருன் என அளவிடுகிரோம். அல்லது ஆசிரியர் இவனுடைய தரத்தை 'B' என்று மதிப்பிட்டால் அந்த மாணவனுடைய தரம் அவனுடைய வகுப்புச் சராசரித் தரமாகிய 'C'க்கு உயர்ந்தது என்ற பொருளினைத் தருகின்றது. பெரும்பான்மை அளவிடுதல் என்ற சொல்லையும் மதிப்பிடுதல் என்ற சொல்லையும் ஒன்ருகக் கருதிக் குழப்பிக் கொள்ளுவது தவறு. இன்று நமது பள்ளிகளையும் கல்லூரிகளையும் தேர்வு என்னும் பேய் பிடித்து வாட்டுகிறது. கல்வியின் பயன் தேர்வா அல்லது தேர்வின் பயன் கல்வியா என்றளவிற்குக் கல்வியின் கண்களை மூடிவிட்டுத் தேர்வின் கண்கள் கொடுமைக் காட்சி அளிக்கின்றன. எல்லா நிலைகளிலும் தேர்வு முக்கியமான இடம் பெற்றுவிட்டது. தேர்வில் வெற்றி பெறுவதற்கு வினு விடைகள் முக்கியம். இரண்டும் தெரிந்த மாணவர்கள் வெற்றி பெறுகிருர்கள். பாடங்களிலேயே உழன்று கொண்டு உள்ளவர்கள் வினுக்கள் வழியே தகுந்த விடைகளை வரையாது விழிக்கின்ருர்கள். மற்றும் ஓர் அவலக் காட்சியை நமது கல்வி நிலையங்களில் காணலாம். ஒவ்வொரு பாடத்துக்கும் ஒரு புத்தகம் உண்டு. பாடம் மொழியாயினும், கணிதமாயினும், அறிவியலாயினும், மக்கள் நூல்களாயினும், எதுவாயினும் பக்கம் பக்கமாக ஆசிரியர்கள் நடத்தி முடிக்க வேண்டிய திட்டம் உண்டு. அதன்படி அவர்கள் நடத்தும்போது பிள்ளைகள் ஒவ்வொரு பாடத்தின் பக்க எண்களைத்தான் நினைவு கொள்ளுகிருர்களே அன்றி, முக்கியமாகப் பாடப் பகுதியின் பெயரையாவது அல்லது தாங்கள் பெறும் அனுபவத்தையாவது அறிவதில்லை. [2] டாக்டர் புளும் என்பார் ஒரு நாள் மாலை நேரத்தில் ஒரு பூங்காவில் உலாவிக்கொண்டிருந்தபோது பட்டத் தேர்வுக்காகப் படிக்கும் ஒரு மாணவன் இரசாயனப் பாடப் புத்தகத்தைப் பார்த்துப் பார்த்து நெட்டுருச் செய்து கொண்டிருந்தபோது, அவனை என்ன படிக்கின்ருய் என்று வினவ, அவன் தனது தேர்வுக்கு இன்னும் ஒரு சில பக்கங்களைப் படித்து நெட்

1. Evaluation 2. Doctor Bloom, Evaluation expert of the University of Chicago

டுருச் செய்ய வேண்டுமென்று விடை அளித்ததாகக் கூறி வருந்துகிறார். எனவே கற்கும் பாடங்களெல்லாம் தேர்வுக்குக் காணிக்கையாகி நின்று விடுகின்றன. தேர்வுக்கப்பால் கற்றவை மறந்தொழிகின்றன. இதனு லன்றோ கல்வியாளர்கள் பலபடியாகத் தேர்வுகளின் குறைபாடுகளைத் திரும்பத் திரும்ப எடுத்துக் காட்டியுள்ளார்கள். ஆசிரியர்கள் தாம் கற்பிப்பது எதைக் கோரி என்றும் மாணவர்கள் தாம் கற்பதின் [1] இலக்கு யாது என்றும் அறியாது தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறுவதே குறிக்கோள் என்றும் கருதுகிறார்கள். ஆசிரியர்கள் மாண வனைக் கருதாது தாம் கற்பிக்கும் பாடத்தினையே பெரிதாகக் கருதிப் பாடத்தைத் தொடக்க முதல் இறுதி வரையில் நடத்தி முடித்துவிட்டால் அவர்கள் பணி முடிவுற்றதாகக் கருதுகிறார்கள். தேர்வுகளைக் கோரித் தேர்வுகளின் அமைப்புக்கு ஏற்றபெற்றி பெரிய வினாக்களுக்கு நீண்ட விடைகளைத் தந்து, மாணவர்கள் அவற்றை நெட்டுருச் செய்யும்படி வற்புறுத்துகிறார்கள். தேர்வுகள் கால அட்டவணைப்படி நிகழுகின்றன வாகையால், ஆசிரியர்கள் தேர்வுக்காலம் கிட்டும்போது உறங்கி எழு பவர்களைப்போல் தேர்வுப் பரபரப்பினைத் தாம் கொள்ளுவதோடு பிள்ளைகளுக்கும் தேர்வு நோயைத் தந்துவிடுகிறார்கள். பிள்ளைகள் தேர்வை எண்ணிப் புத்தகங்களை அப்புறப்படுத்திவிட்டுத் தேர்வு வினாக் களைத் தேடுவதில் காலங்கழிக்கிறார்கள். பாடத்தினைக் கற்பிக்கும் குறிக் கோள்கள் பலவாயினும் அவற்றுள் ஒன்றாகிய பொருள்களைத் திரட்டுதல் என்றதில் மட்டும் தேர்வு நிகழ்கின்றதே அன்றிக் .குறிக்கோள்கள் மற்றவற்றில் தேர்வு கிடையாது. எனவே வெறும் கருத்துக்களின் சுமை முழுவதையும் மாணவர்கள் நெட்டுருச்செய்து புத்தகப் புழுக் களாக மாறுகிறார்கள். தேர்வு வினாக்கள் பாடங்களின் பல பெற்றிகளைச் சோதிப்பதில்லை. எனவே இக்காலத்திய தேர்வுகள் உண்மையும் நம்பத் தக்கவையும் அல்ல. ஒரு மாணவனுடைய விடைகளை ஒரு தேர்வாசிரியர் மதிப்பிடுவதைப் போன்று மற்றொருவர் மதிப்பிடுவதில்லை. இருவர் மிக்க வேறுபாட்டோடு இரு மதிப்பெண்களைத் தருகின்றார்கள். அதனால் எது நம்பக்கூடியது என்ற சிக்கல் ஏற்படுகின்றது. தேர்வுகளுக்குச் சதவிகிதத்தில் மதிப்பெண்கள் வழங்குகிறார்கள். மதிப்பெண்கள் வெறும் எண்களாக ஆகின்றனவே அன்றி மாணவனுடைய திறனை எடுத்துக்கூறாது ஒழிகின்றன. ஆசிரியர்கள் மாணவர்களுடைய தேர் வெண்களின் வழியாகத் தமது கற்பித்தல் திறனை மதிப்பிட்டு அறிய இயலாமல் தமது பணியாற்றுகிறார்கள். இப்போதைய கல்வித் திட்டத் தின் சார்புற்ற தேர்வுகள், பாடத்திட்டங்கள், ஆசிரிய முறைகள், கற்பிக்கும் பொருள்கள் ஆகியவை கற்றலை நெட்டுருச் செய்தலுக்குத் தாழ்த்திச் சதிசெய்கின்றன. இந்தியக் கல்வியின் இந்நிலைமையை டாக்டர் புளும் கண்டித்துள்ளார். அவர் தேர்வு முறைகளைத் திருத்தி

1. Goal

உதவுவதற்கு மத்திய அரசாங்கக் கல்வி நிலையத்தோடு பணியாற்றிய வர். அவர் தேர்வு முறைகளை மட்டும் திருத்தி அமைத்தால் தேர்வுகள் நன்றாக நடைபெறுமே அன்றி ஆசிரிய முறைகள் மாறுபாடு பெறாமல் பழமையிலேயே நீடிக்குமென்று கருதித் தேர்வுச் சீர்திருத்தத்தைக் கல்விச் செயற்பாடுகளோடு இணைத்து ஒரு புதிய வழியினை அறிவுறுத்தி யுள்ளார். தேர்வு முறைகளை மட்டும் திருத்துவது எளிது. இன்றைய நிலையில் தேர்வுகள் மாணவர்களையே பீடிக்கின்றன என்று கண்டோம். கல்வி என்றாலே வினாக்களும் விடைகளும் என்றல்லவோ பிள்ளைகள் கருதுகிறார்கள்! கல்வியின் பயன் மாணவர்களுடைய முழுத்திறனைப் பெற உதவ வேண்டுமல்லவா! அதற்கு நமது பாட ஏற்பாடுகள், புத்த கங்கள், ஆசிரியக் கருவிகள், தேர்வு முறைகள் ஆகிய பலவெல்லாம் உதவி புரியலாம். நமது பள்ளிகளில் ஆசிரியர்கள் வகுப்புத்தோறும் தமது ஒலியைப் பெருக்கிய வண்ணம் உள்ளார்கள். மாணவர்கள் அசைவற்று கண்ணொன்று நோக்கக் கருத்தொன்று நாட ஆசிரியர்க ளுடைய கட்டுத்திட்டத்துக்கு அடங்கி வாய்பொத்தி நாளைக் கழிக்கின் றார்கள். ஆசிரியருடைய பணி பாடத்தைத் திட்டப்படி முடிப்பதும், தேர்வுக் காலத்தில் என்ன கேள்விகள் தேர்வில் வரலாம் என்று முன் கூறி மாணவர்களை அவற்றிற்குரிய விடைகளுக்கு ஆயத்தப்படுத்துவது மாகும். எனவே ஆசிரியர் கற்பித்தலையும் மாணவர்கள் கற்றலையும் தேர்வு அடக்கி ஆளுகின்றது. கல்வியில் ஒரு புதிய கருத்தைக் கண் டறிந்து இன்புற்றுத் திளைப்பதென்று அமைவு இருந்தால் கற்பித்தலும் கற்றலும் வேறுபட்டுக் காட்சி அளிக்கும். அப்போது கல்வி செயல் படுவதொன்றென்று கருதுவர். இன்றைய தேர்வு வினாக்கள் பெரும் பான்மை கல்வியின் நோக்கங்களையாவது, கற்றல் அனுபவங்களை யாவது சோதிப்பதில்லை. வினாக்கள் பழைய முறையின. ஒவ்வொன் றுக்கும் நீண்ட கட்டுரைகளே விடைகள். எதுவாயினும் ஆசிரியர்களா வது மாணவர்களாவது பள்ளிகளில் அக்கறையுள்ள காட்சியை அளிப்ப தில்லை. ஆசிரியருக்கும் அலுப்பு உண்டு; மாணவர்களுக்கும் சலிப்பு ஏற்படுகின்றது. 'பெரும் பாடங்களெல்லாம் பெருங் கடமைகளா கின்றன. ஆசிரியர்கள் மாணவர்கள் மீது இரக்கம் கொண்டு தேர்வுக் குரிய முக்கியமானவற்றை நடத்தி முடிக்கின்றார்கள். அதனால் வகுப் பறைகள் ஓர் அசைவற்ற காட்சியைத்தான் அளிக்கக்கூடும். ஏனென் றால் ஒரு சிறிதும் காலத்தை வீணாக்காது பாடங்கள் நடைபெற்றாக வேண்டும். எப் பாடத்தையும் நெட்டுருச் செய்தாலன்றி நினைவில் இறுத்த முடியாது. ஆசிரியர்கள் வகுப்பில் உள்ள மாணவர்களுடைய அதிக எண்ணிக்கையைப் பற்றிக் குறை கூறியதாக டாக்டர் புளூம் எடுத்து இயம்புகிறார். ஆனால் பேச்சு முறையில் பாடங்களை நடத்து வதால் பேச்சினை ஒவ்வொரு வகுப்பிலும் நாற்பது பிள்ளைகளுக்குப் பதிலாக நானூறு பிள்ளைகள் கேட்பதால் ஒன்றும் குறையுறுதென்று அவரே கூறுகின்றார். எனவே வகுப்பறைகளுக்குப் போதிய பிள்ளை

களை அடைத்துக்கொண்டு வகுப்பை நமது நாட்டில் நடத்துகிருர்கள். ஆனல் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து உறவாடிக் கற்றல் நிகழ்வதென்ருல் பிள்ளைகளுடைய எண்ணிக்கை உண்மையாகவே குறைவாக இருத்தல் வேண்டும்.

நமது நாட்டில் நடைபெறும் தேர்வுகள் பெரும்பாலும் தற்செயலாக ஒரு சிலருக்கு வெற்றி தரக்கூடியவையாக உள்ளன. விடைகளை நெட்டுருச் செய்த விஞக்கள் தேர்தலில் வந்து விடுவது உண்டு. ஏனென்ருல் ஆண்டுதோறும் ஒவ்வொரு பாடத்திலும் பழைய விஞக்களே திரும்பத் திரும்ப எல்லா நிலைகளிலும் கேட்கப்படுகின்றன. தேர்வாசிரியர் பாடத்தை நன்ருக அறிந்து பாட முழுவதிலும் கேள்விகளைப் பரப்பிக் கேட்பதில்லை. இதனல் அடுத்த தேர்வுக்கு வரும் மாணவர்கள் விடுபட்ட கேள்விகளுக்கு மட்டும் விடை அறிகின்ருர்கள். விஞக்களுக்கு விடைகள் கட்டுரையாகையால் மூன்று மணிகளுக்கு ஐந்து கட்டுரைகளுக்கு மேல் வரைய முடியாது. எனவே ஒரு பாடத்தின் ஒரு பகுதியில் மட்டும் ஐந்து விஞக்களைப் பொறுக்கி விடைகளை எழுதி முடித்துக் கொள்ளுகிருர்கள். விடைகள் தேர்வாசிரியர்களுடைய மனம்போன போக்கில் திருத்தப் பெறுகின்றன. ஒரு விடைத்தாளுக்கு ஓர் ஆசிரியர் ஐம்பது சதவீதம் மதிப்பெண் கொடுத்தால் மற்ருெருவர் முப்பது தான் கொடுக்கின்ருர். அதனல் மதிப்பீடு [1] அகவயமாகின்றது. இத்தேர்வுகள் நம்ப முடியாத நிலையில் ஆண்டு தோறும் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் ஒவ்வொரு தேர்விலும் மொத்தத்தில் ஐம்பது சதவீதமே வெற்றி பெறுகிருர்கள். ஒரு சமயத்தில் நல்ல மாணுக்கனும் தேர்வில் தவறி விடுகின்ருன். காட்டாக வகுப்பில் எல்லாத் தேர்வுகளிலும் நூற்றுக்கு நூறு பொதுக் கணிதத்திலும் கலவைக் கணிதமாகிய எழுத்தியற் கணிதம், கோணக் கணிதத்தில் பெற்ற மாணுக்கன் பள்ளி யிறுதித் தேர்வில் கலவைக் கணிதத்தில் நூற்றுக்கு நூறும் பொதுக் கணிதத்தில் நூற்றுக்குப் பத்து மதிப்பெண்களும் பெற்று தேர்வு பெருது தவறி விட்டான். இம் மாணுக்கன் மற்ற பாடங்களில் நூற்றுக்கு எழுபது, எண்பது பெற்றிருந்தான். இவன் உற்ற தோல்விக்கு அவன் காரணமா தேர்வு முறையின் கோலமா அல்லது ஆசிரியரின் குறையா என்பதனை அவன் தோல்வியுற்றபோது வாயளவில் ஐயோ பாவம் என்ருர்களே அன்றி அதைப் பற்றிச் சிந்தித்தவர் யாருமில்லை. உயரிய தகுதிகள் பெறக்கூடிய அம்மாணுக்கன் படிப்பை நிறுத்தி விட்டு ஒரு வணிக நிலையத்தில் கணக்கெழுதும் பணியில் அமர்ந்து விட்டான். எனவே நம்முடைய பல நிலையில் இறுதித் தேர்வுகளுடைய குறைபாடுகளைக் கல்வியாளர்கள் அறியாமலில்லை. ஆனல் நமக்கென்னவென்று வாளா இருக்கிருர்கள்.

நமது பாடத் திட்டங்களும் ஒவ்வொரு பாடத்தின் பல பொருள்

1. Subjective

களின் தலைப்புகளையே தருகின்றன. அதனால் ஆசிரியர்கள் ஒவ்வொரு தலைப்பின் பொருளடக்கத்தை விரித்து உரைப்பதிலேயே காலத்தைக் கழிக்கிறார்கள். வரலாறு, நிலநூல், பொது அறிவியல் ஆகிய பாடங்களாயின் ஒரே தலைப்பு தொடக்க நிலை முதல் கல்லூரி நிலை வரையிலும் பாடத் திட்டத்தில் இடம் பெறலாம். காட்டாக, அசோகரைப் பற்றித் தொடக்க நிலை முதல் பி. ஏ., எம். ஏ. வகுப்புக்கள் வரையில் மாணவர்கள் படிக்கின்றார்கள். தொடக்க நிலை நடுநிலை பாடப் புத்தகங்களை நாம் கண்ணுற்றால் எம். ஏ. படிக்கும் மாணாக்கன் கல்லாத சில பொருள்களை அப்புத்தகங்களில் காணக்கூடும். பிள்ளைகளுடைய மன வளர்ச்சிக்கு ஏற்பப் பொருள்களை விகிதப் படுத்துவது கிடையாது. அசோகரைப் பற்றி எந்த வகுப்பிற்குப் பாடம் எழுதினாலும் புத்தக ஆசிரியர் கண்ணுக்கு எட்டிய எல்லாப் பொருள்களையும் திணித்து எழுதி விடுகிறார். புத்தகத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு வகுப்பாசிரியர் எத்துணைப் பக்கங்களாயினும் அசோகரைப்பற்றி ஒரு சமயம் பிள்ளைகளைப் படிக்க ஏவியும், மற்றொரு சமயம் தானே படித்தும் பாடப் புத்தகத்திலுள்ள வினாக்களுக்கு விடை எழுதும்படியும் கூறி அசோகருக்கு மோட்சம் கொடுத்து விடுகின்றார். இதனால் ஆசிரியர் வற்புறுத்துவது செய்திகள்; பிள்ளைகள் நெட்டுருச் செய்வதும் செய்திகள். உள்ள வளர்ச்சிக்கு ஏற்பவும் வளரும் பருவத்திற்கு ஒப்பவும் நமது ஆசிரியர்கள் பாடங்களை அமைத்துக் கொள்ளுவதில்லை. எனவே வகுப்பு உயர உயர மாணவர்களுக்குப் பாடச்சுமை அதிகரித்துக் கொண்டே வருகிறது. அப்பாடங்கள் ஆங்கமல நீர்போல அவர்களுடைய உள்ளம், உணர்வு, அனுபவம் ஆகிய எவற்றோடும் ஒட்டா தொழிகின்றன. இவற்றைச் சுமையாகச் சுமந்து தேர்வில் கொட்டி விட வேண்டியது அவர்களுடைய கல்விக் கடமை. இந்த நிலைமையிலும் மாணவர்கள் எட்டி பழுத்ததைப் போன்று சிறந்த அறிஞர்களாகின்றார்கள் என்றால் நமது கல்வி நிலையங்களில் இவ்வகைத் தகா முறைகள் இருந்தும் சிறந்தவர்களாகின்றார்களே அன்றி இம்முறைகளால் அவர்கள் பயனுற்றார் அல்லர் என்று டாக்டர் புளும் ஆணித்தரமாகக் கூறுகின்றார்.

நடைமுறையைக் கண்டித்தால் நமது பள்ளிகளிலிருந்து நாம் என்ன எதிர்பார்க்க வேண்டும் என்ற வினா எழும். நம் பள்ளிகளில் பல பாடங்களைக் கற்பிக்கலாம். எப்பாடங்களாயினும் அவற்றின் வழியே பொருள்களையும் கருத்துக்களையும் மட்டும் நெட்டுருச் செய்து மறந்து விடுதலால் பயன் இல்லை. அவை யாவும் பிள்ளைகளுடைய நன்னெறியினையும் தனி ஆளுமைத் திறனையும் வளர்க்க உதவ வேண்டும். இவை இரண்டின் பயனாக அவர்கள் நாட்டுக்கும் தமக்கும் பயன் படுவார்கள். இப்பாடங்களின் வழியாக அறிவியற் பொருள்களையும் திறன்களையும் வளர்த்துக் கொண்டால் அவர்களுடைய சமூகத்திலும் தொழிலிலும் மேன்மை அடைவார்கள். அவர்களுடைய பாடங்களின்

பயனாக நன்மை தீமை அறியும் ஆற்றலும் சிந்தனை செய்யக்கூடிய திறமையும் பெறவேண்டும். பிறரோடு உரையாடியும் எழுதியும் தமது கருத்தைத் தந்தும் அவர்களுடைய கருத்தைப் பெற்றும் தமது அறிவைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். சமூக வாழ்க்கையில் பல்வேறு மக்களுடைய சிக்கல்கள் தம்மைச் சூழும் காலத்து, ஒரு குற்றமற்ற மனப்பான்மையோடு அவற்றில் பொருத்தப்பாடு பெறவேண்டும். நல்ல குறிக்கோள்கள் மாணவரிடையே வளருவதில்லை. அவர்களுடைய வாழ்க்கை பயனுறும்படி அவர்கள் மேற்கொள்ளும் விருப்பும் வெறுப்பும் நல்ல வகையில் அமைவதில்லை. பாட ஏற்பாடு எதுவாயினும் பாடங்கள் எதுவாயினும் கல்வியின் பல பயன்கள் நமது மாணவருக்கு உண்டாக வேண்டும் என்பதே முதன்மை. அதனால் கல்வி ஏற்பாடு செயல் முறையில் அமைந்து பல பயன்களைப் பயக்கவல்லதாக அமைந்தாலன்றிக் கற்றதனாலாய பயன் இல்லாதொழியும். கற்றவனுக்கும் கல்லாதவனுக்கும் வேறுபாடு இருப்பது நாம் அறிந்ததே. கற்றவனிடத்தில் கருத்து வேறுபாடு மட்டுமின்றிக் குணத்தைச் சார்ந்த மாறுதல்களும் நிகழ்கின்றன. எனவே கற்றவனிடத்தில் விரும்பத்தக்க மாறுதல்களைக் காண்கிறோம். பாட ஏற்பாட்டிலுள்ள ஒவ்வொரு பாடமும் இந்த மாறுதல்களை மாணவர்பால் உண்டாக்க வேண்டும். பாட ஏற்பாட்டிலுள்ள ஒவ்வொரு பாடமும் மாறுதல்களுக்கு வழிகோல வேண்டும். இம்மாறுதல்கள் குழந்தைப் பருவத்தில் பள்ளி நுழைந்தது முதல் பள்ளி யிறுதி வரையிலும் மட்டுமின்றி அதற்கு அப்பாலும் தொடர்ந்து நிகழ வேண்டும். மாணவர்களுடைய நடத்தைகளில் இவை உண்டானால் கல்விக் குறிக்கோள்களின் பேற்றினைப் பெற்றதற்கு அறிகுறியாகும்.

குறிக்கோள்கள் :

ஆசிரியர் தாம் கற்பித்தலால் மாணவருடைய நடத்தைகளில் என்ன மாறுதல்களை உண்டாக்க விரும்புகிறார் என்ற அடிப்படையில் அவரது ஆசிரியம் தொடங்க வேண்டும். பாடக் குறிப்பு எழுதும் நிலையில் அப்பாடத்தைக் கற்பித்தலால் தமது மாணவரிடையே என்ன நடத்தை வேறுபாடுகளை உண்டாக்கலாம் என்று சிந்தனை செய்ய வேண்டும். அங்ஙனம் அவர் முற்கூட்டியே எதிர்பார்க்கும் மாறுதல்களே குறிக்கோள்களானவை. ஒரு செயற்பாட்டின் இறுதியில் நிலை பெறக்கூடிய மாறுதலே குறிக்கோளாகும். மாணவர்கள் பொருளறிவினைப் பெருக்கிக் கொள்ளுவது; ஆற்றல்களையும் திறன்களையும் பெறுவது; சில கவர்ச்சிகளை வளர்த்துக் கொள்ளுவது; நல்ல மனப்பான்மைகளை உண்டாக்கிக் கொள்ளுவது; ஆகிய யாவும் உருக்கொண்ட மாணவன் பள்ளியிறுதியில் கல்விப் பயனைப் பெற்றவனாகக் காட்சி அளிப்பான். எனவே ஆசிரியரும் நல்ல முறையில் அமைய வேண்டும்; பள்ளியில் பயிலுமுன் தான் அறியாத பலவற்றைப்

பள்ளியிறுதியில் மாணவன் அறிந்தவனுகின்றான்; முன்னர் அவனுக்குத் தெரியாதவை தெரிகின்றன; முன்னர் அவன் உணர்ந்துகொள்ள இயலாதவை அவனுடைய உணர்வு பெறுகின்றன; தனக்கு நேரும் இடர்ப்பாடுகளைத் தானே தீர்த்துக் கொள்ளுகின்றான்; அவன் முன்னர் இயற்ற இயலாதவை அவனால் இயற்றப் பெறுகின்றன; அவனுடைய புதிய மனப்பான்மைகள் நல்லனவாகின்றன; எனவே கல்வியின் குறிக்கோள் மாணவர்களுக்கு அறிவு கொளுத்தவும், சிந்தனை வளர்க்கவும், ஊட்டவும், செயலாற்றவும் உதவுகின்றது.

குறிக்கோள்கள் பொதுவாக எல்லாப் பள்ளிகளுக்கும் உடன் பாடானவை. சிறப்பாக அவை தனி ஒவ்வொரு பாட ஏற்பாட்டுக்கும், ஒவ்வொரு தனிப் பாடத்துக்கும் உண்டு. இவை பொதுக் குறிக்கோள்களுக்கு முரண்படக்கூடாது. ஒரு பள்ளியில் உள்ள எல்லா ஆசிரியர்களுக்குள் பொதுக் குறிக்கோளில் பொறுப்பு உண்டு. ஒவ்வோர் ஆசிரியரும் ஒவ்வொரு தனி மாணவனுடைய வளர்ச்சிக்கு வழி கோலுகின்றார். நமது வகுப்பறைகளில் அந்தந்த வகுப்புக்கு ஏற்பவும் வகுப்பு நிலைக்கு உரியவுமான குறிக்கோள்களைக் கருத்தளவில் மட்டுமின்றிக் காட்சி அளவிலும் காணலாம். அஞ்சல் நிலையத்தைப் பற்றிய ஒரு பாடமென்றால் அதைப்பற்றி ஆசிரியர் வகுக்கும் முறையில் மாணவர்கள் நன்றாக அறிந்து கொள்ளுகிறார்கள். பொதுவான குறிக்கோள்கள் மறைமுகமாக விளங்கும். வகுப்பறையில் ஒவ்வொரு பாடத்தைப் பற்றிய குறிக்கோள்கள் நேர் முகமானவை, திட்டவட்டமானவை; பயனுள்ளவை.

குறிக்கோள்களைப் பற்றி ஆசிரியர் திருத்தமாகச் சிந்தித்தாலன்றி வகுப்பறையில், மாணவர்களுக்குத் திட்டமான அனுபவங்களை அளித்துத் தமது பாடத்தினை ஒழுங்காக நடத்த இயலாது. அவர் பாடவிறுதியில் தமது ஆசிரியப் பணிகளை அறுதியிட்ட குறிக்கோள்களோடு ஒப்பு நோக்க வேண்டும். ஆசிரியப் பணி தொடங்கும் இளைஞர்கள் தமது பாடக் குறிப்பில் ஒவ்வொரு பாடத்துக்கும் குறிக்கோள்களை வரைந்து கொள்ளுகிறார்கள். பெரும்பான்மை அவை கடனுக்கு எழுதுபவையாக முடிகின்றன. ஆங்கிலப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் பொது நோக்காக ஆங்கிலம் கற்பித்தல் என்று எழுதுகிறார். சிறப்பு நோக்கென்று அப்பாடத்தின் தலைப்பினைத் தந்து அதைக் கற்பிப்பதென்கின்றார். இவ்விரண்டு நோக்கங்களையும் ஆராய்வோமானால் அவற்றை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். ஆங்கில ஆசிரியர் ஆங்கிலம் கற்பிப்பேனென்கிறார். ஆங்கிலப் பாடத்தைச் சுட்டி அதைக் கற்பிக்கிறேன் என்கிறார். ஆனால் அப்பாடத்தின் வழியாகப் பிள்ளைகள் என்னென்ன பயன்களைப் பெறுவார்களென்று குறித்துக்கொள்ள வேண்டாமா? உரை நடைப்பாடமாக இருந்தால் வாசித்தல், வினாவிடை பகர்தல், புதிய சொற்கள்—தொடர்மொழிகள் அறிதல், அவற்றைப் பயன்படுத்தல்; நடிக்கக்கூடிய பாடமாயின் நடிப்புத்திறன் பெறுதல், இலக்கண மறிதல்

என்றால் இலக்கணத்தின் எப்பகுதியை அறிவித்தல்—இன்னோன்ன பலப்பல குறிக்கோள்களை வரைந்து கொள்ள இயலுமன்றோ ! இவை யாவையும் பாடக் குறிப்புகளாகக் கருதலாம். ஆனால் இவை ஒவ் வொன்றுக்கும் கற்றல் அனுபவங்களைத் தேடல் வேண்டும். அவ் வனுபவங்களின் வழியாகப் பிள்ளைகள் குறிக்கோள்களின் பயன்களைப் பெற வேண்டும். அப்பயன்களால் அவர்களுக்கு ஆங்கில அறிவு விரும்பிய அளவு அதிகமாக வேண்டும் அல்லவா !

ஆசிரியர் முறைப்படி குறிக்கோள்களை வரைந்து விட்டால் மட்டும் கற்றல் நிகழ்ந்து விடாது. குறிக்கோள்களை வகுப்பது எளிதன்று. நடுவிட அரசாங்கத்து மதிப்பீட்டைப் பற்றிய அறிக்கை ஒரு பாடத்தின் குறிக்கோள் ஒன்றினைப் பற்றி விதந்து கூறியுள்ளது. அதனை ஈண்டு அறியலாம்.

[1]பொதுக் குறிக்கோள் :

பிள்ளைகளிடையே நகர்நலப் பொறுப்பினை வளர்த்தல் :—இதனைப் பொருள்பட மாற்றி அமைப்பதற்கும் தெளிவு பெறுவதற்கும் கீழ்க் கண்ட வினாக்கள் பயன்படுகின்றன :—நகர் நலப் பொறுப்புணர்ச்சி உள்ளவன் செய்வது யாது ? அவன் செய்யாதது யாது ? நகர் நலப் பொறுப்புள்ளவனுக்கும் அற்றவனுக்கும் நடத்தைகளில் உள்ள வேறு பாடுகள் யாவை ? இங்ஙனம் குறிக்கோளினை நன்றாக ஆசிரியர் உணர்ந்தபிறகு மீண்டும் அதைப் பகுத்துக் காண்கின்றார். நகர் நலப் பொறுப்புணர்ச்சியுள்ள ஒருவன் யாவன் என்பதனை அறுதியிடுகின்றார். அவன் சமூக அமைப்பினை உணர்ந்தவனாவான் ; சமூகத்தில் காணப் பெறும் வேற்றுமைகளைக் கண்டால் துடிப்பான். திருத்தமற்ற சமூகப் போக்குகளைத் திருத்துவான். அவன் நெறி முறைக்கு அடங்கியவன் ; தனது பணிகளை ஆற்றுபவன் ; தனது நாட்டைப் பற்றிப் பெருமை கொள்ளுபவன் ; நல்வழியில் பிறரோடு கருத்து வேறுபாடு கொள்ளு பவன் ; பிறர் கருத்துக்களுக்குச் செவி சாய்ப்பவன் ; நாட்டுப் பொருள் களை விழைந்து கண்காணிப்பவன் ; நாட்டு வளங்களைக் காப்பவன் ; நாட்டுச் செல்வங்களை அழிக்காதவன் ; இங்ஙனம் ஒரு குறிக்கோளினைப் பகுத்துப் பகுத்து அறிந்து ஒவ்வொரு பகுப்பினையும் மாணவர்கள் பால் செய்வினையாக்கல் வேண்டும். ஒவ்வொரு குறிக்கோளும் பொருள் வரம்பினையும் அவ்வரம்புக்குள் மாணவ நடத்தையில் மாறுதல்களை யும் தன்னகத்தே கொண்டது. இதனால் ஒரு பாடம் ஏட்டுக் கருத்தினை மட்டும் அளிப்பதன்று. ஆசிரியர் ஒவ்வொரு குறிக்கோளைப் பற்றிய அனுபவங்களைத் திட்டமிடுவதிலும் தெளிவு பெறுகிறார்.

---

1. General objectives

கற்றல் அனுபவங்கள் :

குறிக்கோள்கள் முக்கியமானவை என்று கண்டோம். அவற்றை எய்துவதற்கு யாது செய்ய வேண்டும்? ஆசிரிய முறைகள் பல. அவை எல்லாவற்றையும் ஆசிரியர் வகுப்பறையில் பயன்படுத்தலாம். ஆனால் எல்லா முறைகளுக்கும் பொதுவாக அறியக் கிடப்பது ஒன்று உண்டு. அஃதாவது கற்றல் எப்போது நிகழ்கின்றதென்பது. மாணவன் ஓர் அனுபவத்தைப் பெற்றாலன்றிக் கற்றல் நிகழ்வதில்லை. கற்றல் நிலையில் அவனுடைய எதிரூன்றல் இன்றியமையாதது. எதிரூன்றல் அனுபவத்தை அளிக்கத் தக்கது. அனுபவமே கற்றலாகின்றது. கற்றல் அனுபவங்களென்றால் ஆசிரியர் கற்பித்தலும் கற்பித்த பொருளும் அனுபவங்கள் ஆகா. மாணவர்கள் சிந்தித்து உணர்ந்து செய்பவற்றைச் செய்து அனுபவங்களைப் பெறுகின்றார்கள். ஆசிரியர்கள் கற்றல் நிலைகளை வகுப்பு அறையில் உண்டாக்குகின்றனர். கற்றல் நிலையில் தூண்டல்கள் பல. மாணாக்கன் தூண்டல்களுக்கொப்பத் துலங்குகின்றான். செயல் முறைகளில் ஈடுபடும்போது கற்றல் உண்டாகிறது. வகுப்பறையில் நடைபெறும் ஆசிரியத்தில் பங்கு கொள்ளுகின்றான். எனவே தகுந்த கற்றல் அனுபவங்களை ஆசிரியர் தொடர்ந்து அளித்தாலன்றி மாணவனிடத்தில் விரும்பும் நடத்தை மாறுதல்கள் உண்டாகா.

கற்றல் அனுபவங்கள் குறிக்கோள்களுக்கு ஏற்ப மாறிக்கொண்டே இருக்கும். ஆனால் ஒரு சில அனுபவங்கள் பொதுவாகும். அதனால் கொடுக்கப்பெறும் அனுபவங்கள் குறிக்கோளோடு ஒட்டியவையா என்றும், மாணவர்களுக்கு அவை பயனுற்றவையா என்றும், அவர்களுடைய முற்று நிலைக்குத் தகுந்தவையா என்றும் சரி பார்க்க வேண்டும். ஒரே குறிக்கோளினை ஒட்டி ஆசிரியர் கற்றல் அனுபவங்கள் பலவற்றைப் புனையலாம். அல்லது ஒரு கற்றல் அனுபவம் அதனைச் சார்ந்த குறிக்கோளோடு பிற பலன்களையும் தரக்கூடும். ஆனால் கற்றல் அனுபவங்கள் பிள்ளைகளுடைய விருப்பாற்றல்களோடு ஒட்டியவையாக வேண்டும். ஒரு அனுபவத்தின் பயனாக எல்லாப் பலன்களையும் பெறுவது கடினம். அனுபவங்கள் ஒன்றன்பின் ஒன்றாகவும், ஒன்று மற்றொன்றுக்குத் துணையாகவும் பிள்ளைகளுடைய விருப்புக்களோடு நெகிழ்ந்தவையாகவும் நடைபெற்றால், ஆசிரியர் வேண்டும் பயன்களை மாணவர்களுக்கு அளிக்கலாம். அவ்வனுபவங்கள் எல்லா மாணவர்களுக்கும் ஒன்றானால் வெற்றிகாண முடியாது. அவரவர்கள் நுண்ணறிவுக்கு ஏற்ப ஒரோவழி தனித்தனி மாணவருக்காவது அல்லது நுண்ணறிவுத் தரத்தால் பிரிக்கப் பெற்ற மாணவர் தனித்தனிக் குழுக்களுக்காவது அளித்தாலன்றி எல்லா மாணவர்களும் பயன்பெற மாட்டார்கள். கற்றல் அனுபவங்களை வகுப்பறையில் அளிக்கலாம். வகுப்புக்கு வெளியில் தேடலாம். ஆசிரியரும்

மாணவரும் கூடி ஆலோசிக்கலாம். ஆனால் ஆசிரியர் முற்கூட்டியே திட்டமிடுதல் வேண்டும்.

எடுத்துக் காட்டு :

குறிக்கோள் உண்மைக்கும் நாப்பறைக்கும் வேறுபாடு காணுதற்குக் கீழ்க்கண்ட கற்றல் அனுபவங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. (1) நாளிதழ்களில் உள்ள தலைப்புக்கள், தலையங்கங்கள், விளம்பரங்கள் முதலியவற்றைப் படித்தறிதல். (2) ஒரே பொருளைப் பற்றிப் பல இதழ்கள் எழுதும் தலையங்கங்களைப் படித்து அதனதன் கருத்து வேற்றுமைகளை உணர்தல். (3) வணிக விளம்பரங்களில் உண்மைப் பகுதி, வாய்ப்பறைப் பகுதிகளை வேறுபடுத்துதல். (4) பிள்ளைகள் விற்பனையாளர்களாக அல்லது தேர்தல் வாய் வீச்சாளராக நடித்தல். (5) வானொலி வழியாகப் பல நாடுகளின் பறைசாற்றல்களுக்குச் செவி சாய்த்தல். (6) அரசியல் வகுப்பினர் பேச்சுக்களில் குற்றங்களைக் காணுதல். (7) பறைசாற்று முறைகளை ஒட்டி நாமுழக்கம் பழகுதல். (8) நாப்பறையாளர் ஒருவராகவும் உண்மையாளர் மற்றொருவராகவும் சொல்லாடல். (6) பத்திரிகை ஆசிரியருக்கு விளம்பரஞ் செய்யப் பெற்றிருந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றிக் கருத்துரை வழங்குதல். (10) பள்ளி வெளியீட்டுக்கு விளம்பரங்கள் புனைதல். (11) வாய்முழக்கிற்கும் உண்மைக்கும் வேறுபாட்டினை அறிவதற்கு ஒரு [1] சரிபார்க்கும் பட்டியல் வரைந்து பழகுதல். (12) வகுப்பு விளம்பரப் பலகையில் உண்மைச் செய்தி, உண்மை விளம்பரம், பொய் விளம்பரம் ஆகியவற்றைத் தனித்தனியாக வரைந்து பழகுதல்.


மேற்கூறிய கற்றல் அனுபவங்களோடு பிள்ளைகள் வெளியீடுகளுக்குச் செவி சாய்க்கும் திறனையும் பேசவும் எழுதவும் பழக்கத்தினையும் பெறுவார்கள். திறனாய்தல் (திறந்த உள்ளமுடைமை) உண்மை வேட்கை—ஆகிய நற்கூறுகள் மாணவரிடையே வளரும். பத்திரிகை படிப்பதற்கும் அதன் பொருள்களைத் துருவி ஆய்தலுக்கும் ஆற்றல் உண்டாகும்.

மதிப்பிடுதல் :

கற்றல் வெறும் கற்றலுக்கு அன்று. கற்றலின் பயனை நமது பிள்ளைகள் பெற வேண்டும். கற்றலின் குறிக்கோள்கள் பலவாக இருக்கலாம்; ஆசிரியர்கள் திறமை உள்ளவர்களாகலாம். ஆனால் கற்றலின் பயனைப் பிள்ளைகள் பெறுவிட்டால் கற்றலாற் பயனில்லை. கற்றல் அனுபவங்கள் பிள்ளைகளிடையே மாறுதல்களை உண்டாக்குவதற்காகும். கற்றல் நிகழும்போது கற்றல் பயனைப் பெறுகின்றார்களா என்று ஆசிரியர் அறிதல் நல்லது. ஏனென்றால் கற்றல் அனுபவங்கள் சிறப்புற்றவையாயின் நல்ல மாறுதல்களோடு பிள்ளை வளர்ச்சியை நல்ல முறையில்

1. Check list

அமைக்கும். மாறுதல்கள் உண்டாவதை அறிவதற்கு மதிப்பிடுதல் உதவுகிறது. எனவே ஒரு குறிக்கோளினை எத்துணை அளவு மாணவர்கள் எய்தி உள்ளார்கள் என்பதனையும், கற்றல் அனுபவங்கள் அளித்த பயனை அறிவதற்கும், கல்வியின் குறிக்கோளினை அடைந்த அளவினை அறிவதற்கும் மதிப்பிடுதல் பயன்படும். அதனால் மதிப்பிடுதல் என்பது தேர்வெழுதுவதைச் சார்ந்ததன்று. அதற்கு மதிப்பெண்கள் வேண்டாம். தனியாசிரியர்களுடைய திறமையினை அளப்பதற்கும் அன்று. மதிப்பிடுதல் ஒரு தொடர்ந்த நிலை. இஃது ஒரு முக்கோண நிலையுமாகும். ஒரு முனையில் குறிக்கோள்களும், 'அவற்றால் மாணவர்கள் அடையும் நடத்தை மாறுதல்களும்; இரண்டாவது முனையில் நடத்தை மாறுதல்களைப் பெறுவதற்குத் தக்க கற்றல் அனுபவங்களும்; மூன்றாவது முனையில் முன்னிரண்டு கட்டங்களிலும் நடைபெற்றவற்றிற்குச் சான்றும் ஆக மூன்று முனைகளாகும். கற்றல் அனுபவங்களும் கற்றல் நிகழ்ந்த சான்றுகளும் குறிக்கோள்களைப் பற்றுகின்றன. குறிக்கோள்களை வகுக்கும்போது மதிப்பிடுதலும் நிகழ்கின்றது. கற்றல் அனுபவங்களும் குறிக்கோள்களும் சார்புள்ளவை. ஒவ்வொரு கட்டத்திலும் உண்டாக்கப்பெறும் கற்றல் நிலைமை விரும்பத்தக்க மாறுதல்களைப் பிள்ளைகளிடையே உண்டாக்குகின்றனவா என்று அறிய மதிப்பிடுதல் பயனுறுகிறது.



மதிப்பிடுதல் என்ற சொல் கல்வித் துறையில் வழக்காறு பெறுவதொன்று. அளவிடுதல் என்பது மற்றொன்று. மதிப்பிடுதலில் வெறும் பொருளறிவு மட்டும் அளவைப் பெறாது. அஃது இன்றைய பள்ளி ஏற்பாட்டில் அடங்கிய முழு ஆளுமைத் திறனை அளக்க முற்படுவது. மதிப்பிடுதல் பணியிற் பலவகைத் தேர்வுகளைப் பயன்படுத்துகிறோம். அத்தேர்வுகள் நடைமுறையில் உள்ள சாதனைத் தேர்வுகளோடு நில்லாது, நாட்டம், ஆளுமை, பண்பாடுகள் ஆகியவற்றையும் அளவிடுகின்றன. [1] வினாப்பட்டியல் முறை, [2] பேட்டி அளித்தல், [3] உற்று நோக்கல், [4] வாழ்க்கைத் துணுக்குப் பதிவுகள் ஆகியவை முறையே தனித்தனியாக [5] மதிப்பிடுவதோடல்லாது எல்லா நடத்தைக் குறிகளையும் திரட்டி ஒரு தனியாளின் திறனை ஓவியமாக உருத்தந்து மதிப்பிடும் மாண்புடையன.

அளவிடுதல், தனிப்பட்ட ஒரு சாதனை, அல்லது வளர்ச்சியுற்ற ஒரு தனித்திறன். ஆற்றல் முதலியவற்றின் ஏதாவது ஒரு பெற்றியை

1. Questionnaire 2. Interview 3. Observation 4. Aneedotal records 5. Sociometric scales.

அளவிடுவது. மதிப்பிடுதல் தனியாள் பெறும் மாறுதல்களைப் பொதுவாகவும் சிறப்பாகவும் கல்வி ஏற்பாட்டின் குறிக்கோள்களோடு இயைபு காணுதலாகும். குறிக்கோள்களுக்கும் பிள்ளைகளுடைய நடத்தைக்கும் தொடர்புகள், பிள்ளைகளுடைய வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றைத் திருத்தமுறப் பல தேர்வுப் பொருட்களால் மதிப்பிட்டு அறியலாம். அளத்தல் என்பது 'யாதாகிலும் ஒரு பாடத்தில் ஒரு தேர்வினை நிகழ்த்தி அந்தத் தேர்வில் மாணவனுடைய தரத்தைக் கணக்கிட்டு அளந்து கூறுவது. காட்டாக, ஒரு வகுப்பு மாணவன் கணிதத்தில் ஐம்பது மதிப்பெண்கள் பெற்ருன் என்ருல் அவனுடைய கணிதத் தகுதியினை ஐம்பது மதிப்பெண்கள் என்று அளவிடுகிருேம். ஆசிரியர் அவனுக்கு 'B' தரம் அளித்தால் அவன் அந்த வகுப்பு மாணவர்களுள் 'B' தரம் உள்ளவன் என்பதாகும். மதிப்பிடுதல் முறை கல்வியின் முறை என்றும் கல்வியின் பயனுல் ஏற்படும் மாறுதல்களை அகச்சான்று, புறச்சான்றுகளோடு அறியக் கூடியது என்றும் கண்டோம். குறிக்கோள்களைக் கொண்டல்லவோ நடத்தைமாறுதல்களை வகுக்கின்ருேம். ஒவ்வொரு குறிக்கோளுக்கும் ஒரு மாறுதலை எதிர்பார்க்கின்ருேம். ஓர் அளவினைக் கொண்டு எல்லா மறுதல்களையும் அறிய இயலாது. ஒவ்வொரு நடத்தையையும் அறிய ஒருவகைத் தேர்வு வேண்டியதாகும். அதனுல் பல மாறுதல்களை அறியப் பலவகைத் தேர்வுகள் வேண்டற்பாலவை. மதிப்பிடுவதற்கு ஒரு சில வழிகள் பின் வருமாறு:

1. தேர்வெழுதுவது:

அத் தேர்வுகள் தரம் செய்யப்பட்டவையாகவும் இருக்கலாம். அல்லது ஆசிரியர் குறித்தவையாகவும் இருக்கலாம். ஆசிரியர் குறிக்கும் தேர்வுகள் தமது வகுப்பு மாணவர்களுக்கு ஒத்தவையாக இருக்கும். இத்தேர்வுகள் பொருளறிவு, ஒரு சிக்கலை விடுவிக்கும் வன்மை, திறனுய்வு முதலியவற்றைக் கண்டறிய உதவும்.

2. உற்று நோக்குதல்:

ஆசிரியர் மாணவர்களை நன்ருக உற்று நோக்கி அவர்களுடைய நடத்தை, ஒழுக்கம் முதலியவற்றைக் கவனித்தலால் அறியக் கூடியவை அதிகம். நேர்முகமாகப் பார்த்தவற்றைக் கொண்டு பிள்ளைகளைப் பற்றி ஓரளவு அறுதியிடக் கூடும்.

3. பேட்டி காணுதல்:

பிள்ளைகள் ஆசிரியரோடு தனியாகப் பேசும்போது ஆசிரியர் அவர்களுடைய கவர்ச்சி, அக்கறை, மனப்பான்மை முதலியவற்றை அறிந்து கொள்ள இயலும்.

4. வினாப்பட்டியல் :

வினாப்பட்டியலைக் கொடுத்து விடைகளைப் பெற்றால் பிள்ளைகளைப் பற்றிய பல விவரங்கள் அறியப் பெறும்.

5. பிள்ளைகள் தமது படைப்பாற்றலின் உந்துதலால் தமது திறன்களைக் கொண்டு பல பொருள்களைக் செய்கிறார்கள். காட்டாக ஓவியம் ஒன்றினை வரைந்திருந்தால் அப்பிள்ளையினுடைய வண்ணம் தீட்டும் திறன் அறியப் பெறுகிறது.

6. பிள்ளைகளைப் பற்றிய குறிப்புக்கள், வாழ்க்கைத் துணுக்குப் பதிவுகள், திரட்டுப் பதிவேடுகள் ஆகியவற்றை ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவருக்கும் வகுக்கின்றார்கள். இவை மாணவரைப் பற்றிய பல விவரங்களை அளிக்கக் கூடியவை. நூல் நிலையத்தின் பெயர் ஏட்டுப் பதிவும் அவர்களின் படிப்பாற்றலைப்பற்றி அறிவிக்க வல்லது.

மதிப்பிடுதலுக்காக மாணவர்கள் நடத்தையைப் பற்றிப் பல சான்றுகளைச் சேகரிப்பது இன்றியமையாதது. ஒருசில நுட்பங்களை ஆசிரியர் கவனிக்க வேண்டும். மாணவர் நடத்தைகள் பலவாகும். பல நடத்தைகளை ஒரே மதிப்பீட்டுக் கருவியைக் கொண்டு சேகரிக்கக் கூடாது. ஒரே மாணாக்கனுடைய மனப்பான்மை வேறு ; பொருளறிவு வேறு ; படைப்பாற்றல் வேறு ; ஒரு பாடத்திலுள்ள கவர்ச்சி வேறு ; திறன் வேறு; எனவே ஒவ்வொன்றையும் தனித்தனியாகத் தனிக் கருவி கொண்டு மதிப்பிடுதல் முறை. ஒரு சாதனைத் தேர்வைக் கொண்டு எல்லாவற்றையும் அளப்பதென்பது இயலாது.

மதிப்பீட்டு நுணுக்கங்கள் புறவயச் சான்றுகளை அளித்தல் வேண்டும். கையாளப் பெறும் நுணுக்கங்களெல்லாம் ஆசிரியரது அகவயத் ததேயாயினும் புறவயம் எற்றுக்கோ எனின் ஒரு நடத்தையினை மூவர் நால்வர் மதிப்பிட்டாலும் ஒரே ஈவு காண்டல் வேண்டும். எனவே ஒரு புறவயத்தேர்வில், விடைகளுள் வேறுபாடு இராது. அங்ஙனமே வாழ்க்கைத் துணுக்குப் பதிவுகளில் உள்ளதை உள்ளவாறே பதிவு செய்தால் அதை யார் வேண்டுமென்றாலும் விளக்கலாம். எதுவாயினும் பதிவுகள் புறவயமாக வேண்டியது முக்கியம்.

எந்தத் தேர்வும் [1]ஏற்புடைமை உள்ளதாக வேண்டும். அத் தேர்வு எந்த நடத்தையை அளக்க நின்றதோ, அதனைத் திருத்தமாக அளத்தல் வேண்டும். தேர்வுகள் [2] நம்பகம் வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும். அஃதாவது ஒரு தேர்வினை ஒரு குறித்த கட்டுப்பாட்டுக்குள் பலமுறை நடத்தினாலும் அதனுடைய முடிவுகளில் வேறுபாடு இருத்தலாகாது. நீண்ட தேர்வுகளில் நம்பகம் அதிகம் என்பார்கள். ஏனெனில் மாணவர்களுடைய நீண்ட தேர்வுகளில் பலவகை அறிவுகளைப் பதம் பார்ப்பதற்கு அதிக வாய்ப்புண்டு. தேர்வுகள் மாணவர்களைக் களைக்கச் செய்யக் கூடாது. அதனால் தேர்வினைச் சிறியதாக்கி விடக்கூடாது.

1. Validity 2. Reliability

சிறியளவாயின் நம்பகம்குறைவுறும். தேர்வுக்கு அளிக்கும் போதனை நீண்டதாகவும் கடினமாகவும் இருத்தல் கூடாது. தேர்வு நிகழும் போது மாணவர்கள் விளக்கத்தை எதிர்பார்த்தல் தவறு. தேர்வுகளின் ஈவுகளுக்குத் திறன் காணுதல் எளிதாக வேண்டும். அவை பயன்படவும் வேண்டும். [1] புள்ளி நுணுக்கங்கள் கடினமாயின் வகுப்பாசிரியர்கள் அவற்றை ஆய்ந்து திறன் காணுதல் கடினமாகும். [2] தரம்படுத்திய பல தேர்வுத் தரங்கள் வெளியிடப்பெற்றுள்ளன. தரங்களும், புள்ளி விளக்கங்களும் ஆசிரியருக்கு வேண்டிய விளக்கம் தருவதில்லை. தரம் படுத்தப்பட்ட தேர்வின் ஈவுகளையே இறுதியாகக் கொண்டால் அவை பெரும்பாலும் நம்பத்தக்கவையும் அல்ல. புள்ளி அளவைகளைப் பொருளுள்ள விளக்கங்களாக ஆசிரியர்கள் அறிந்து கொள்ளுதல் நல்லது. அல்லாக்கால் அவை வெறும் எண்களாகவே தோன்றும்.[3]

மதிப்பிடுதல் திட்டம் நன்மை பயத்தற்குக் கல்விக் குறிக்கோளின் பயன்களை ஆய்ந்தறியவேண்டும். அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு நுணுக்கம் வாய்ந்த தேர்வு வேண்டும். காட்டாகக் கூடிவாழ் நடத்தைகளை அறிவதற்கு உற்று நோக்குதலும், வாழ்க்கைத் துணுக்குப் பதிவுகள் செய்வதற்கு நீண்டநேரமும் வேண்டும். அதனால் உற்று நோக்குதலாலும், வினாப்பட்டியலாலும் கூடிவாழ் நடத்தையை அறிதல்கூடும். நூலகத்தில் வேண்டிய திறமை அறிவதற்கு மாணவர்கள் நூலகத்தில் இருக்கும்போது உற்றுநோக்கி அறிந்து கொள்ளுதல் மிகவும் நல்ல முறை. ஆனால் இங்ஙனம் மதிப்பிடுவதற்கு நீண்ட நேரம் செல்லும். இதனை ஓர் எழுதும் தேர்வு அளித்து மதிப்பிட்டுக் கொள்ளலாம். தரம் படுத்தப் பெற்ற ஆளுமைத் தேர்வுகளும் பலஉள. அவற்றின் தரங்களும் வெளியிடப்பெற்றுள்ளன. அண்மையில் [3] முற்போக்குக் கல்விக் கழகத்தினர் எட்டாண்டுகள் உழைத்து டாக்டர் ரால்ப் டைலர்தலைமையில் பல குறிக்கோள்களை ஒட்டிய மாணவர் வளர்ச்சியை மதிப்பிடுவதற்குப் பல நுணுக்கங்களையும் கருவிகளையும் இயற்றித் தந்துள்ளார்கள். முன்னர்ப் பல நடத்தைகள் மதிப்பிட இயலாதவையாகக் கருதப் பெற்றன. ஆனால் அவற்றிற்கு அக்கழகத்தின் மதிப்பீட்டு ஆசிரியர்கள் மதிப்பிடும் வழிகளை வகுத்துவிட்டார்கள். அவர்கள் இயற்றியுள்ள தேர்வுகள் சாதனைகளை அறுதியிடுவதோடு நடத்தைகளின் குறைபாடுகளையும் சுட்டிக் காட்ட வல்லவை. இவர்கள் வகுத்துள்ள தேர்வுகளை ஆசிரியர்கள் அறிதல் கடமையாம். விற்பனைக்காக வந்துள்ள தேர்வுகள் பல. ஆனால் அந்தந்த நிலைமையில் மாணவருடைய நடத்தையை அளப்பதற்கு வேண்டிய தேர்வினை வகுப்பறை ஆசிரியரே குறிக்கோள்களை ஒட்டி இயற்றிக் கொள்ளுவது நலமாகும். மதிப்பிடுதலின்

---

1. Statistical techniques 2. Norms 3. Eight year study of the Progressive Education Association under Ralph Tyler (Education for Social Competence by Quillen and Hanna)

பயனை அறிந்த பள்ளி நிலையங்கள் மாணவருடைய வளர்ச்சியைப் பெரிதாகக் கருதி, அறிவுரை பகர்தல், வழிகாட்டுதல், பாட ஏற்பாடு களைப் பிள்ளைகளுடைய தேவைக்கேற்ப மாற்றி அமைத்தல், ஆசிரியர் களே வேண்டிய தேர்வுகளை இயற்றிக் கொள்ளுதல் ஆகியவற்றினை உண்டாக்கிக் கொள்ளுகின்றன.

பொருளறிவு உணர்தல் ஆகியவற்றை மதிப்பிடுவதற்குக் கட்டுரைத் தேர்வுகள், புதியமுறைத் தேர்வுகளான சரி—தவறு, விடை பொறுக்குதல், இணைத்தல், நிரப்புதல், வரிசைப்படுத்துதல் ஆகியவை உதவும். கட்டுரைத் தேர்வு அகவயக் குறைபாடுகளைக் கொண்டதென்றாலும் அளந்தறியும் எல்லைக் குறைவுற்றதென்றாலும் தேர்வாசிரியரின் மனநிலையைப் பற்றியதென்றாலும் இதன் நிறைகள் பலவாகும். அறிந்த பொருள்களை வரிசைப் படுத்தியும், தொகுத்தும், விரித்தும், சுருக்கியும் கட்டுரைக் கோப்பில் வரைவதற்கு வாய்ப்பளிக்கக் கூடியது கட்டுரைத் தேர்வு ஒன்றே. மற்ற புதிய முறைத் தேர்வெல்லாம் அவ்வாய்ப்பினை நல்கா. அவற்றில் கட்டுரைத் தேர்வுகளின் குறைக ளெல்லாம் நிறைவுகளாகக் காணப்பெறும். ஒரே பாடத்தில் நூற்றுக் கணக்கான புதுமுறை வினாக்களை விடுத்து மாணவர்களின் பொருளறி வைப் பரந்த அளவில் தேர்வுக்குரியதாக்கலாம். புதிய முறைத் தேர்வுகள் புறவயமானவையாகையால் ஒரு விடைத்தாளை எந்த ஆசிரியர் திருத்தி னாலும் ஒரே மதிப்பெண்ணைத்தான் தருவார். கட்டுரையாயின் ஒரே கட் டுரைக்கு நான்கு ஆசிரியர்கள் நான்கு வேறுபட்ட மதிப்பெண்களை அளிப்பார்கள். புதியமுறைத் தேர்வுத் தாள்கள் எத்துணையாயினும் அவற்றை எளிதில் ஆசிரியர் திருத்திவிடுவார். மாணாக்கர்கள் ஒரு சில மணித்துளிகளுக்குள் விடை எழுதிவிடுவர்.

பலப்பல தரப்படுத்திய தேர்வுகள் அமெரிக்கா இங்கிலாந்து போன்ற நாடுகளில் வெளியிடப் பெற்றுள்ளன என்று அறிந்தோம். அவற்றிற் கெல்லாம் ஒவ்வொன்றுக்கும் தரம் கணிக்கப் பெற்றுள்ளன. இவற்றைத் [1] தனியாள் தேர்வுகளென்றும் [2] குழுத் தேர்வுகளென்றும் பிரிக்கலாம். தனியாள் தேர்வுகளும் நுண்ணறிவை அளப்பதற்கென்று இயற்றப்பெற்றன. நுண்ணறிவு இயற்கையாக உண்டாவது என்று கருதுகிறார்கள். அது இளமையில் வளர்ந்து இருபதாண்டுக்குப் பிறகு வளர்வதில்லையாம். நுண்ணறிவுத் தேர்வுகள் பெருவாரியாகத் தோன்றிய பிறகும் நுண்ணறிவினை அளக்க இயலுமா என்ற வினா வலுத்து வரு கிறது. நுண்ணறிவின் ஈவுகள் தேர்வு நிகழ்ந்த ஞான்று, அன்று நிலவிய சூழ்நிலையில், பிள்ளைகளிடையே அன்றுகிடந்த மன நிலையில் கண்ட அறிவாகையால் அன்றைக்குத்தான் உரித்தாகுமென்றும், தரப் படுத்தப்பட்ட தேர்வுகள் தரப்படுத்தப்பட்ட பிள்ளைகளுக்குத் தரப் படுத்தப்பட்ட சூழ்நிலையில் பயன்படா என்றும் கருதுவார் உளர்.

1. Individual tests 2. Group tests

குழு அறிவுத் தேர்வுகள் மாணுக்கர் பலருக்கு அளிக்கத் தக்கவை. மறுப்பு எதுவாயினும் நுண்ணறிவுத் தேர்வுகள் மாணவர்களுடைய மறைவுற்றுக் கிடக்கும் மதிநுட்பத்தினை வெளியாக்கக் கூடியவை. பாடங்களில் மந்த மதியினர் என்று கருதப்பெறும் மாணவர்கள் ஒரு சிலர் சிறந்த நுண்ணறிவு பெற்றவர்களாக விளங்குவர். அத்தகை யோர்க்கு ஆசிரியர் உற்றுழி உதவி சிறந்தவர்களாக்க வேண்டிய கடமை உண்டன்றோ! சிறு குழந்தைகளுக்கும் படிக்காதவர்களுக்கும் [1]சொல்லிலாத் தேர்வுகளும் உண்டு.

சில பண்பாடுகளை அறிவதற்கும் தேர்வுகள் உள்ளன. மனப்பான் மைத் தேர்வுகள் ஒருவர் உள்ளத்தில் நிகழ்வதாகிய அவர் உளமனப் பான்மையை அறிபவை. ஒருவர் வெளியிடும் கருத்துக்கும் உளப் பான்மைக்கும் வேறுபாட்டினை உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது என்கிறோம். ஆனால் மாணவர்களிடையே அது நிகழ்ந் தாலும் மனப்பான்மைத் தேர்வு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு ஆசிரிய மாணவ நல்லுறவு உதவி செய்யும். மாணவர்கள் உள்ளத்தில் ஒரு கருத்திருந்தால் ஆசிரியர் விருப்பத்தை அறிந்து அவர்கள் வேறொன்றினைக் கூறுவார்கள். அதனால் ஆசிரியர் திறந்த உள்ளத் தோடு மாணவருடைய கருத்தை வெளிப்படுத்தச் செய்யவேண்டும். பிள்ளைகளும் தமது கருத்துக்கு மதிப்புண்டென்று நினைக்கவேண்டும். எனவே பல பொருள்களைப் பொறித்த பட்டியலில் மாணவர்கள் தமது விருப்பம்போல் அவை சரியென்றும், பிழையென்றும் உடன்பாடல்ல வென்றும், தமது கருத்தினை வரையலாமென்று ஆசிரியர் உறுதி தரவேண்டும்.

அக்கறைத் தேர்வுகள் :

ஒரு மாணவன் தனியாக இருக்கும்போது தானாகவே ஒரு பணியில் ஈடுபாடு கொண்டால், அவன் அதில் அக்கறை கொண்டுள்ளான் என்று கூறலாம். இப்பணி தனது பாடத்தை ஒட்டியதாகவும் அல்லது பாட மற்ற வேறாகவும் இருக்கலாம். கல்விப் பணிகளில் அக்கறையை அறி வதற்குத் தேர்வுகள் உண்டு. ஒரு தேர்வில் இருநூறு பணிகளைப் பட்டியல் செய்து அதை மாணவர்களிடையே விடுத்து விருப்பம், விருப்பமில்லை, கவலையில்லை—ஆகியவற்றுள் யாதாவது ஒன்றினை ஒவ் வொன்றுக்கும் நேராகக் குறிக்கச் செய்யலாம். இதை ஆய்ந்து பொது வாக மாணவர்களுடைய விருப்பங்களை அறிந்து பள்ளி ஏற்பாட்டினை அவற்றிற்கேற்ப அமைப்பதுண்டு.

தொழில்களில் உள்ள அக்கறையை அறிதற்கும் தேர்வு நிகழ்த்து கிறார்கள். [2]க்யூடர் தொழில் தேர்தல் தாள் பட்டியலில் 504 தொழில் கள் குறிப்பிடப் பெற்றிருக்கும். இதை மாணவர்களுக்குக் கொடுத்தால்

1. Non-verbal tests 2. Kuder Preference record

அவர்கள் ஒவ்வொன்றுக்கும் நேரில் தம் உளப்பாங்கிற் கொத்தபடி விருப்பம், விருப்பமில்லை, கவலையில்லை என்று எழுதுவார்கள். இதன் ஈவுகள் பிள்ளைகளுடைய தொழில் விருப்பங்களை அறிய உதவும். இங்ஙனம் வாசிப்பு அக்கறைகளை அறிவதற்கும் தேர்வு உண்டு. உரையாடல், விளையாட்டு முதலியவற்றிலும் அக்கறைகளை அறிவதற்குத் தேர்வுகள் உள்ளன.

[1] நாட்டத் தேர்வுகள் :

மாணவர்களுடைய நாட்டத்தை அறிவதற்கும் தேர்வுகள் உண்டு. நாட்டத் தேர்வுகள் தொழில் முறை வழிகாட்டலுக்குச் சிறிது பயன்படக் கூடியவை. ஒவ்வொரு தொழிலுக்கும் வேண்டிய அடிப்படைத் திறன்கள் உளவாகையால் அத்திறன்களுள் ஒரு சில மிகைபட ஒரு மாணவனிடையே காணப் பெற்றால் அவனுக்கு அதில் நாட்டமுண்டென்று கருதுதல் வேண்டும். எழுத்தர் தொழில் நாட்டம், பொறியியல் நாட்டம் ஆகியவற்றை அளவிடத் தேர்வுகள் நடத்துகிறார்கள். காட்டாக [2] ஸ்டென் குவிஸ்ட் பொறிச் சேர்வுத் தேர்வு; [3] மின்னஸோட்டா எழுத்தர் திறன் நாட்டத் தேர்வு ஆகியவை அறிதற் குரியவை.

[4] ஆளுமைத் தேர்வுகள் :

ஆளுமைத் தேர்வுகள் தனி ஒரு மாணவரின் [5] வீறு பாடுகளை அறிய உதவுபவை. அவன் [6] அகநோக்குடையவனா, [7] புற நோக்குடையவனா, [8] ஆட்சி செலுத்துபவனா அல்லது [9] அடக்கமுடையவனா என்றும் அவனுடைய [10] மனவெழுச்சிகளை அளவிடுவதற்கும், [11] தன்னம்பிக்கை, [12] விடாப்பிடி, [13] விடா முயற்சி, [14] ஒத்துழைக்கும் தன்மை, [15] உள்ளக் கிளர்ச்சியின் நிலைத்த தன்மை, [16] உள்ளக் கிளர்ச்சியின் ஆட்சி, [17] பொறுப்புணர்ச்சி, [18] வேலைப் பழக்கங்கள், [19] மரியாதை, [20] கலந்து பழகும் தன்மை, [21] நேர்மை, [22] தலைமைத் தன்மை, [23] தான் தொடங்காற்றல் ஆகியவற்றை எல்லாம் அளந்து திரட்ட ஆளுமைப் பண்புகள் அடித்தளம் தரும்.

ஆளுமைப் பண்புகள் நூற்றுக்கணக்கானவை. அவை எல்லாம் [24] அடைமொழிகள். 17,950 அடைமொழிகளைப் பண்புப் பெயர்களாகப் பயன் படுத்தியுள்ளார்கள் என்று ஒரு கணக்குண்டு. இவை எல்லா

---

1. Aptitude Tests 2. Stenquist Mechanical Assembly Test 3. Minnesota Clerical aptitude Test 4. Individuality. 5. Personality traits 6. Introvert 7. Extrovert 8. Ascendance 9. Submissive 10. Emotions 11. Self-confidence 12. Persistence 13. Perseverence 14. Co-operativeness 15. Emotional Stability 16. Emotional control 17. Sense of responsibility 18. Habit of work 19. Courtesy 20. Sociability 21. Integrity 22. Leadership 23. Initiative 24. Traits (merely adjectives)

வற்றையும் வரிசைப் படுத்தி ஒவ்வொருவருடைய ஆளுமையையும் அளவிடுதல் இயலாது. இவை ஒவ்வொன்றும் தனிப்பட்டவையா அல்லது ஒன்ருேடொன்று சார்புற்றவையா என்றும் அறிதல் பயனுடைத்தாம். இவற்றுள் ஒன்று இல்லாவிட்டால் பல அதைச் சார்ந்திருந்தால் நீக்கம் பெறலாம். இன்று களிப்போடு காணப்பெறும் ஒருவனுடைய குணவியல்புகள் நாளை அவன் இடருற்றபோது மறைந்து விடக்கூடும். அதனுல் அவை எல்லாவற்றையும் இணைத்து ஒரு சிலவற்றை மட்டும் தொகுத்துள்ளார்கள். [1] காடல் என்பார் குணங்களைப் [2] புறத்தவை [3] அகத்தவை என்று பிரித்துள்ளார். புறத்தவை பெரும்பாலும் அகத்தின் உந்துதலைப் பெற்றவை. அகத்தவை காட்சிக்குரியவை அல்ல. அவை ஓரளவு வேறுபாடு உறுவதில்லை. ஆனுல் புறத்தவை அகத்துக்கு மாருகக் காட்சி அளிக்கலாம்.

ஆளுமைத் தேர்வுகள் தனி ஒவ்வொருவரின் ஆளுமைக் குணங்களை அளவிடுகின்றன. அவற்றுள் எழுதும் தேர்வுகள் உள. அவை [4] அகமுக—புறமுக இயல்புகளையும், [5] ஆதிக்க பணிவு இயல்புகளையும் அறிய உதவுகின்றன. நமது வகுப்பறைகளில் இத்தகைய பிரிவுள்ள பிள்ளைகளைக் காணலாம். [6] அகமுகர்கள் தனித்து அமைதியோடு தமது பணியைத் தன்னந் தனியாகச் செய்து கொண்டிருப்பார்கள். [7] புற—முகர்கள் பிறரோடு நன்ருகப் பழகிக் கொண்டும், களிப்போடு வெளியீடுபாடுகள் கொண்டும் காலங் கழிப்பார்கள். இதை அறிவதற்கு இருவகையினர் குணங்கள் அடங்கிய பட்டியலைத் தந்து பிள்ளைகள் தமக்குப் பிடித்தமானவற்றைக் குறியிட்டால் அதைக் கொண்டு அவர்கள் எவ்வகையினர் என்பதை அறியலாம். [8] ஆதிக்க—பணித் தேர்வு: மாணவர்கள் ஒரு சிலர் அடக்க முடையவர்களாகவும், சிலர் ஆதிக்கக் குணமுடையவர்களாகவும், மற்றும் சிலர் இடை நிலையினராகவும் இருப்பதை அறிய இத்தேர்வு உதவும். ஓர் எடுத்துக்காட்டு: நீ வகுப்புக்கு நேரஞ்சென்று வருகிருய். ஆசிரியர் கோபிக்கிருர். உன்னை வெளியே செல்லென்று கட்டளை இடுகின்ருர்.

(அ) நீ தலை குனிந்து வெளியே சென்று விடுவாய்.
(ஆ) வெளியே செல்லுவதற்குத் தயங்குவாய்.
(இ) வெளியே செல்லாமல் மறுத்து நிற்பாய்.

இவ்வாருன விஞவிடை முறையில் சோதிக்கலாம்.

மனவெழுச்சி நிலையை அளவிடத் தேர்வுகள் உண்டு. இஃது ஒருவருடைய வெறுப்பு, கவலை, பண்பாட்டு நிலை முதலிய மனவெழுச்சிகளை அளவிடக் கூடியது. [9] நகைப்பு எதிர்வினைத் தேர்வு, [10] உள வழி

1. Cattel 2. Surface traits 3. Source traits 4. Introversion-extroversion 5. Acendance-Submission 6. Introverts 7. Extroverts 8. Pressey x-O Test 9. Laughter Reaction Test 10. Psycho-Neurotic inventory

நோய் வினுப்பட்டியல் ஆகியவை முறையே நகைப்பு இயலையும் (அதாவது எந்தெந்தத் தூண்டுதல்களால் ஒருவன் நகைக்கிருன் என்பதை ஆராய்தல்,) உளவழி நோய் வினுப் பட்டியல் உளவழி நோய்களாகிய [1] கவலை, [2] கிலி, [3] உளமீச் சோர்வு, [4] பீடிப்பு முதலியவற்றைத் தொகுத்து ஆட்படுபவருடைய உளவழி நோயை அறிய உதவுகின்றன.

இவையின்றிப் [5] புறத்தேற்று நுண்முறைகளும் உள. உளநூலில் [6] புறத்தேற்ற மென்ற ஒரு கருத்துண்டு. இது, முதன் முதலில் அகமும் புறமும் போன்ற பாகுபாட்டினை உணர்த்திய [7] ஃப்ராயிடு என்பார் பயன்படுத்திய ஒரு கிளவி. இஃது ஒருவன் தன் உட் கூறுகளை மற்றவர்மீது சாட்டுதலைக் குறிக்கும். இதன் துணையால் ஒருவருடைய புலக்காட்சிகளையும் செயல்களையும் நோக்கி அவருடைய உள்ள இயல்பைக் கண்டறியலாம். இத்தேர்வுகள் செயல் முறையின்பாற்பட்டவை.

புறத்தேற்று நுண்முறைகளை மூன்று வகையாகப் பிரித்துள்ளார்கள். [8] அறிவோடு புணர் வகை, [9] விளக்கம் கூறுவகை ஆகியவைகள். [10] இயக்கத் தேர்வுகளுக்கு முறையே [11] ரோர்ஷாக் புறத்தேற்று நுண்முறை, [12] நிகழ்ச்சிப் படவிளக்க ஆளுமைத் தேர்வு, [13] பெண்டர் பார்வை இயக்க முழு நிலைத் தேர்வு, [14] மனித உரு வரைதல் தேர்வு என்று பெயர் வேறுபாடுண்டு.

மதிப்பீட்டின் நிகழ்ச்சிகளில் தானே [15] தன்னை அளந்து கொள்ளும் அளவைகள் ஒரு சில பள்ளிகளில் உதவுவதுண்டு. மாணவர் தம்மைத் தாமே அளந்து கொள்ளுதல் ஒரோ வழி நல்லது. மாணவர் தமது குறைபாடுகளைத் தாமே அறிந்து கொள்ளுவர். இத்தகைய ஒரு சில அளவைகள் குறிக்கோள்களைப் பட்டியலிட்டு மாணவருக்கு அளிக்க மாணவர்கள் அவற்றைக் கொண்டு தமது வளர்ச்சியைத் தாமே அறிந்து கொள்ளுவார்கள். பிள்ளைகளின் வளர்ச்சியை ஆசிரியர் அளவிடுவதென்ருல் அவர்கள் வெகு விழிப்பாக அளவிடுதல் வேண்டும். ஓர் ஆசிரியருடைய அளவைக்கும், மற்ருெருவருடைய அளவைக்கும் மாறுபாடு கூடாது. [16] ஒளி வட்ட விளைவால் மாணவர் சிலருக்கு உயர்ந்த மதிப்பீடு அளித்தல் கூடாது. ஆசிரியர்கள் பற்றற்ற உள்ளத்தோடு மாணவர்களிடையே விருப்பு, வெறுப்பு, காய்ப்பு, கவர்ச்சி முதலியவை அற்று அளவிடுதல் வேண்டும்.

[17] கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தின் குழவி நல நிலையத்தில் [18] "யார் என்று நினைத்துப் பார்" என்ற ஒரு தேர்வு மாணவர்கள் ஒரு

1. Anxiety 2. Phoebia 3. Neurasthenia 4. Obsession 5. Projective Technique 6. Projection 7. Freud 8. Apperceptive 9. Interpretative 10. Motor-Tests 11. Rorschach 12. Thematic Apperception Test 13. Bender Visual Motor Gestalt Test 14. Man Drawing Test 15. Self-rating scales 16. Halo Effect 17. University of California Institute of Child Welfare 18. "Guess Who"

வரை ஒருவர் மதிப்பிடுவதற்கு அளிக்கப் பெறுகிறது. வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களைப் பற்றியும் திரண்ட வர்ணனைகளை ஒரு சிறு புத்தக வடிவமாக்கிக் கொடுப்பார்கள். ஒவ்வொரு மாணவரும் அதைப் படிப் பார். ஒவ்வொரு வர்ணனையும் யாரைச் சுட்டுகிற தென்று நினைத்து அம் மாணவன் பெயரை அவர்கள் எழுதலாம். அஃது ஒருவருக்கு மேற் பட்ட மாணவரைக் குறித்தால் அவர்களுடைய பெயர்களையும் வரைய லாம். தன்னையே சுட்டினாலும் தன் பெயரையும் எழுதலாம். ஒரு மாணவனுடைய பெயரை எத்துணை மாணவர்கள் எழுதுகின்றார்களோ அவர்களின் எண்ணிக்கையே மதிப்பெண்ணாகும்.

[1]நட்பு ஆராய்தல் :

மாணவர்களிடையே உண்டாகும் நட்பினையும், உறவினையும் அள விடுதலும் உண்டு. வகுப்பறை ஒரு சிறு சமூக உறைவிடம். மாணவர் கள் பல கோணங்களிலிருந்தும், வேறுபட்ட சூழ்நிலைகளிலிருந்தும் ஒரு வரையொருவர் நோக்கி அறிந்து கூடிப் பழகுகிறார்கள். அப்போது ஒவ் வொருவரும் பிறரோடு தமது பொருத்தப்பாட்டினைத் தேடிக்கொள்ளு வார்கள். அதனால் ஒரு கூட்ட உணர்ச்சி பொதுவாக வளருவதுண்டு. மாணவர்களுக்குள் ஒரு சிலரை மற்றவர் விரும்புவார்கள். ஒருசிலர் ஒதுக்கம் பெறுவார்கள். ஒருவர் இருவர் தலைமைத் தன்மையுடைய வர்களாகச் சிறந்து விளங்குவார்கள். ஒருவர் இருவர் யாரோடும் பழகா மல் ஒதுங்கி நிற்பார்கள். ஒருவர் இருவரை மற்றவர்கள் விரும்பாது வெறுப்பார்கள். இவற்றை எல்லாம் அறிவதற்கு நட்புத்திறன் அளவை உண்டு. ஆசிரியர் மாணவர்களை உசாவி அவர்களுடைய சிறந்த நண்பர்களின் பெயரை எழுதச் சொல்லுவார். இருவர் மூவர் பெயர் களை எழுதலாம். ஆனால் ஐவருக்கு மேற்பட்ட பெயர்களை எழுதக் கூடாது. ஐவருக்கு மேற்பட்டும் எழுதலாம் என்று கூறுவாரும் உளர். சிறந்த நண்பர்களின் பெயர்களை மட்டும் எழுதினால் எளிதில் வகுப்பறையின் நட்பு நிலையை அறியலாம். சில சமயத்தில் ஆசிரியர் இதை வினவக் காரணம் என்ன என்று ஐயப்பட்டு மாணவர்கள் உண் மையை உரைக்காமலும் மறைப்பார்கள். எதுவாயினும் விபரங்களைப் பெற்ற பிறகு ஒரு சமூக உறவுத் தன்மையை விளக்கும் படம் வரைய லாம். கலப்பு வகுப்பாக இருந்தால் பெண்களுக்கு வட்டமும், ஆண் களுக்குச் சதுரமும் குறிகளாக வரைந்து பிள்ளைகள் பெயரின் முத லெழுத்தை அதில் பொருத்தி உறவுநிலை அறியலாம். உதாரணமாக இரு மாணவர்கள் ஒருவரை ஒருவர் நேசித்தால் அவர்கள் இரு வட்டங் களையும் இணைத்து இரட்டைக் கோடுகளும், பலருடைய நண்பராயின் அம்புக் குறிகளும், பலரால் வெறுக்கப்பட்டவராயின் வேறு ஓர் அடை யாளமும், யாரோடும் கலவாதவராயின் ஒதுங்கிய தனி வட்டங்

1. Social interplay

களும் சதுரங்களுமாக அப்படம் விளக்கும். இத்தகைய [1]நட்பு வரை படம் பிள்ளைகளுக்கு வகுப்பில் இடம் அளித்தலுக்கும், குழுக்கள் கூட்டு வதற்கும் சமூகப் பண்பு இல்லாதவர்களுக்கு அதனை அளிப்பதற்கும் பயன்படும்.

நமது மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அறிவுரை பகர்கின்றார்கள்; வழிகாட்டியாகவும் விளங்குகின்றார்கள்; அவர்களுக்கு வேண்டிய கல்வி அனுபவங்களைத் தருகின்றார்கள். பாட ஏற்பாட்டினை அவரவர்களுக்கு ஏற்றபடி திருத்தி உதவுகின்றார்கள்; மதிப்பீட்டு முறையில் கல்விப் பணியாற்றுகின்றார்கள்; ஆனால் மதிப்பீட்டினைப் பயனுறச் செய்வதென்றால் திரட்டிய பல விபரங்களுக்குத் திறன் கண்டு ஆவன செய்ய வேண்டும். ஆசிரியர்கள் தேர்வுகளைப் பற்றி அறிய வேண்டும்; மதிப் பெண்களின் பொருளறிய வேண்டும்; விபரங்கள் பல, பிள்ளைகளுக்குள்ள இழுக்கு, இடர்ப்பாடுகள் ஆகியவற்றின் காரணங்களை அறிந்து குறை தீர்க்க வல்ல வழிகளை வகுக்க வேண்டும். பிள்ளைகளின் நடத்தைகளைப் பற்றி ஆசிரியர்கள் பலர் சேர்ந்து திரட்டுபவற்றைத் தனித்தனியாகக் கருதாது அவை ஒன்றோடொன்று இடைத் தொடர்புள்ளவை எனக் கருதுதல் வேண்டும். அவை யாவும் தனி ஒவ்வொரு மாணவனைப் பற்றிய திரண்ட பொழிப்புரையாக விளங்கா நிற்கும். மாணவனின் தனித்தன்மையைப் பன்முகமாகப் பார்த்து ஒருமுகமாக அவனைப் பற்றிக் கருத்து உணர வேண்டும். அல்லாது ஒவ்வொரு குணத்தையும் பிய்த்துப் பிய்த்து மதிப்பிட்டால் முழுக்காட்சியை இழந்துவிட நேரிடும். ஒருவகை நடத்தையில் மேம்பாடு பெறுதல் மொத்த நடத்தையோடு சம்பந்தப்பட்டதென்று கோடல் முறை. ஒரு பொருளை அறிவதென்றால் அறிதல்தன்மை மனப்பான்மையை ஒட்டியது. திறன்கள் வளர வேண்டுமென்றால் அக்கறை இருந்தால்தான் திறன் வளர முடியும். எங்ஙனம் ஒரு பொருளைப்பற்றி அறிந்து கொள்ளுகின்றோமோ அங்ஙனம் அதை மதிப்பீடு செய்கிறோம்.

பள்ளிகளில் ஒரு திரட்டுப் பதிவேடு ஒவ்வொரு மாணுக்கனுக்கும் இன்றியமையாதது. பள்ளி நிலையம் முக்கியமென்று கருதுகின்ற எல்லாக் குறிக்கோள்களும் அதில் இடம்பெற வேண்டும். பிள்ளையினுடைய வரலாறே அதன் முகவுரை. அதில் பதிவு செய்யப் பெறுபவை எல்லாம் ஆசிரியர்களுக்கு உதவியாகும். அதைத் தலைமை ஆசிரியர் மட்டும் மூடி வைத்துக்கொள்ளக் கூடாது. வழிகாட்டி ஆசிரியர் அதை வைத்துக் கொள்ளலாம். ஆனால் அஃது ஆசிரியர் எல்லாருக்கும் வேண்டியபோது உதவ வேண்டும். காட்டாகப் பிள்ளையினுடைய உடல்நலத்தைப் பற்றிய பதிவு உடற்பயிற்சி ஆசிரியருக்குத் தெரியாதிருந்தால் அவனைக் கடுமையான உடற்பயிற்சிக்கு உட்படுத்தலாம். அதனால் அவனுடைய இருதயத் துடிப்பு நோய் அதிகமாகலாம். வகுப்பு ஆசிரி

---

1. Friendship chart

யருக்குத் தனி ஒவ்வொரு மாணுக்கனுடைய நுண்ணறிவு அல்லது அவனுடைய [1]பாடப்பொருள் அடைவு முதலியவை அறிந்தாலன்றித் தனியாள் வேற்றுமைக்கிணங்கத் தமது பாடத்தினை அமைக்கவேண்டும் பொறுப்பு ஏலாது. மாணவர்களும் அவர்களுடைய திறன்களை அறிந்தால், அல்லது தம்மைத்தாமே மதிப்பிட்டுக் கொண்டால், அவர்கள் தமது தேவைப்பாட்டுக்கேற்பக் குறைதீர்த்துக் கொள்ளுவார்கள். குறைகளல்லாது அவர்கள் நிறை கண்டால் மேலும் மேலும் வெற்றியைக் காண விழைவார்கள். இஃது ஆராய்ச்சியாளர்கள் கண்ட முடிவு. ஒவ்வொரு தேர்வுக்குப் பிறகும் பிள்ளைகளுடைய குறை நிறைகள் அவர்களுக்குத் தெரிய வேண்டும். ஒவ்வொரு தேர்வுக்குப் பிறகும் பிள்ளைகள் தமது சாதனையை அறிய வேண்டும். வழிகாட்டி ஆசிரியர் ஒரோ வழி ஒருசில விபரங்களை மாணவருக்கு அறிவிக்காமல் மறைத்துவிட்டால் நன்மையும் உண்டாகலாம்.

1. Achievement

XXV

[1] தனியாள் வேற்றுமைகள்

கடவுள் எல்லோரையும் ஒருமுகமாகப் படைத்தார்; அவர்களுக்குள் வேற்றுமையை நுழைக்கவில்லை என்று கூறுவர் பலர். ஆனால் எல்லா மக்களும் உயரத்திலும், எடையிலும், உடல் வன்மையிலும் உள்ளத் திறமையிலும் சமமானவர்கள் என்று யாரும் எடுத்துரைக்கவில்லை. கடவுளால் படைக்கப்பெற்ற மக்களுக்குள் கல்வித் துறையிலன்றோ வேறுபாடுகளைக் கண்கூடாகக் காண்கிறோம். அதனால் அவ்வேறுபாடு களுக்கு ஒப்ப எல்லாக் கல்விப் பயனையும் அடைதற்கு வழி வகுக்கின்றோம். குழந்தைகளிடையே வேறுபாடுகளைக் காண்பது எளிது. உடலிலும் உருவத்திலும் வேற்றுமைகள் கண்கூடு. உடல் மெலிந்த குழந்தைகள், பார்வை குறைவுற்றவர்கள், செவிப்புலன் குறைந்த வர்கள், வேறு வகைகளில் உறுப்புக் குறையினர்கள் ஆகியவர்க ளெல்லாம் வேறுபட்ட காட்சி அளிக்கின்றார்கள். இங்ஙனமே நுண்ணறிவிலும் பள்ளிப் படிப்பிலும் வேறுபாடு காண்பது எளிது. ஒவ்வொரு பிள்ளையும் பிறவி முதல் பல மாறுதல்களைக் கல்விப் பயனாலும், அனுபவத்தினாலும் பெறுகின்றான். இவையன்றி உடல் வன்மையாலும் உடற்கூறுகளாலும் வேறுபாடுகள். தசைகளின் அமைப்புக்கள், சுரப்பிகள், நரம்பு மண்டலத்தின் அமைப்பு ஆகியவை உடலமைப்பின் வேறுபாடுகளுக்குக் காரணம். மனவெழுச்சி, உணர்ச்சி ஆகிய உள்ளக் கூறுகளாலும் வேறுபாடுற்ற கவர்ச்சி யும் திறன்களும் அவர்கள் வளரவளர வேறுபாடுகளை அடை கின்றன. இவற்றால் ஆசிரியர் வெகு விழிப்போடு பாடங்களையும் முறைகளையும் வேறுபாடுகளுக்கு இணங்க மாற்றி அமைக் கின்றார். கல்வியின் ஒவ்வொரு பெற்றியையும் பிள்ளைகளது வளர்ச் சிக்கொப்ப ஆசிரியர்கள் அமைத்துக் கொள்ளுகிறார்கள். பிள்ளை களுடைய வளர்ச்சியும் வேறுபாட்டைக் காட்டுகின்றது. ஒவ்வொருவ ருடைய [2]பண்புக் கூறுகள் பருவம் பருவமாக எல்லாருக்கும் ஒரே அளவாக வளருவதில்லை. காட்டாக, முதிர்வுப் பருவம் எல்லாப் பிள்ளை களுக்கும் ஒரு குறித்த வயதில் ஏற்படுவதில்லை. எனவே ஒரு குறித்த வயதில் பல பிள்ளைகளிடையே பல வேற்றுமைகளைக் காண்கின்றோம். இவற்றால் தனியாள் வேற்றுமை இயல்பாகின்றது.

ஒரு குறித்த வயதில் ஒரு குறித்த பண்புக் கூற்றினை மட்டும் பிள்ளைகளிடையே கண்டறிந்தால் அது சராசரி அல்லது மைய நிலையி லுள்ள மாணாக்கனுக்கு உயர்வுற்றதா அல்லது குறைவுற்றதா என்று

1. Individual differences 2. Traits

உறுதியிடலாம். சராசரி என்பது குறித்த வயதுள்ள மாணவனுடைய சராசரிச் சிறப்பியல்புகளை விளக்குவது. மைய நிலையில் பெரும்பான்மையோர் காணப் பெறுவார்கள். உயர்வு நிலையில் உள்ளவர்களும் தாழ்வு நிலையில் உள்ளவர்களும் எண்ணிக்கையில் குறைவுறுவார்கள். இதை வரைப்படமாக விளக்கினால் இயல்நிலை விளைவினைக் காட்டும். ஆசிரியர்கள் பிள்ளைகளை அறிவுற்றவர்கள் அறிவற்றவர்கள் என்றும் திறமையுள்ளவர்கள், திறமையற்றவர்கள் என்றும் உருப்படுபவர்கள், உதவாக்கறைகள் என்றும் எடுத்து இயம்புகின்றார்கள். இயற்கையாக இவர்கள் இத்தகைய பாகுபாடுகளுக்கு உட்பட்டவர்கள் அல்லர். ஆனால் ஆசிரியருடைய எண்ணத்தில் மட்டுமே அவர்கள் அத்தகையோர் ஆவர். மையநிலைக்கு மட்டமானவர்களும் உயர்வானவர்களும் இங்ஙனம் பிரிக்கப் பெறுகிறார்கள். மாணவர்களைப் பிரிப்பது ஒருவகைப் படுத்துவதற்கே அன்றி நிரந்தரமானவொன்றன்று. இஃது ஒரு செயற்கைப் பாகுபாடு.

மையநிலைக்கு மிகத் தாழ்வுற்ற பிள்ளைகளின் எண்ணிக்கையும் மிக உயர்வுற்றவர் எண்ணிக்கையும் பெரிதும் வேறுபடுவதில்லை. காட்டாக, ஆயிரம் பத்து வயதுப் பிள்ளைகளுடைய நுண்ணறிவினை ஆராய்ந்துள்ளார்கள். அவர்களுள் ஒரு பிள்ளையினுடைய நுண்ணறிவு ஆறு வயதுப் பிள்ளையினுடைய சராசரியாகக் கண்டார்கள். உயர்வுநிலைகளில் ஒரே ஒரு பிள்ளை பதினான்கு வயது சராசரி நிலையை எய்தி இருந்தான். எனவே தாழ்வுற்ற நிலையில் ஆறு வயது அறிவும், உயர்வுற்ற நிலையில் பதினான்கு வயதுமாகச் சராசரி அறிவு வளர்ச்சியில் எட்டாண்டு வேறுபாட்டினை இஃது உணர்த்திற்று. மிக்க அறிவுள்ள பிள்ளை, திறமையற்ற பிள்ளையின் அறிவைக் காட்டிலும் எட்டு மடங்கு அறிவைப் பெற்றிருந்தது. நம் பள்ளிகளில் பிள்ளைகளை வகுப்புக்களாகப் பிரிக்கின்றோம். வகுப்புப் பிள்ளைகளிடையே வேறுபாடுகள் பெரும்பான்மை அதிகமாகக் காணப்படுவதில்லை. ஏனென்றால் வகுப்புக்களில் பெரும்பாலும் தரம்படுத்தப்பெற்ற பிள்ளைகள் சேர்க்கப் பெறுகின்றார்கள்.

பள்ளிப் பணிகளை ஆற்றுவதற்குப் பிள்ளைகள் பல திறன்களைப் பெற்றிருக்க வேண்டும். வாசித்தல், வரைதல், வண்ணம் தீட்டுதல், இசைத்தல் முதலியவற்றிற்கு நுண்ணறிவு, அறிவினை அடிப்படையாகக் கொண்ட நாட்டம், உடல்வன்மை, தோற்றம், சுறுசுறுப்பு, திண்மை, அக்கறை முதலான பெற்றிகள் வேண்டற்பாலன. எனவே ஒரு துறையில் வெற்றி பெறுவதற்குப் பல திறன்கள் இன்றியமையாதவை. ஒரு மாணாக்கனுக்குப் பல திறன்கள் ஓரளவு அமைந்திருந்தால் அவை பல படியாக இணக்கம் பெற்றுப் பயனுறும். எந்த ஆசிரியரும் ஒரே அளவு திறமைகள் உள்ள இரு பிள்ளைகளைக் காண முடியாது. ஏனென்றால் ஒவ்வொரு பிள்ளையும் தனித்தன்மை உடையது. இதனாலன்றோ பாட ஏற்பாடு தனித்தனிப் பிள்ளைத் திறமைக்கும் குறைபாட்டுக்கும் ஏற்ப அமைக்க வேண்டியதாகிறது. எனவே ஆசிரியர் தனித்தனிப் பிள்ளை

களின் இயற்கைத் திறமைகளைக் கண்டறிந்து அவற்றைப் பண்படுத்துவதே முறையாகும். இப்போதைய பள்ளிகள் பெரும்பான்மை அருவப் பொருளாகிய நுண்ணறிவினையே பாராட்டுகின்றன. மொழி, கணிதம், வரலாறு, அறிவியல் முதலிய பாடங்களில் பெறும் திறமைகளை மட்டுமே மதிப்பீடு செய்கின்றன. இவை எத்துணை வாழ்க்கைக்குப் பயன்படும் என்பதை ஆராய்ந்தால் அவை கறிக்குதவாத ஏட்டுச் சுரைக்காய் என்பர். வாழ்க்கையைக் கற்பிப்பதன்றோ கல்வி! பிள்ளைகள் பெறும் வாழ்க்கைக் கல்வி பள்ளிக்கு வெளியில் தரப்படுகிறது. ஆசிரியர்கள் பள்ளி மரபில் ஒட்டாத பிள்ளைகளைக் கண்டனம் செய்கிறார்கள். அத்தகைய பிள்ளைகளுக்கு வேறு திறன்கள் இருக்கலாம். பள்ளி மரபைப் பற்றியவர்கள் ஆசிரியர்களோடு திளைக்கலாம். அப்பேறு பெறாதவர்கள் பள்ளிப் படிப்பினை வேதனையாகக் கொள்ளுகிறார்கள். அவர்கள் வேறு துறைகளில் திறமையுள்ளவர்களே. அவர்களைப் புறக்கணிக்காமல் பள்ளிகள் பல திறமைகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். ஆசிரியர்களும் அவற்றைப் பாராட்டவேண்டும்.

எல்லாப் பிள்ளைகளும் ஒரே வேகத்தில் வளர்ச்சியடைவதில்லை. ஒரே வயதிலும் முதிர்வடைவதில்லை. அறிவுத் திறனைப் பெறுவதில் மாணவர்களிடையே வேறுபாடுகளைக் காணலாம். பிள்ளைகள் எல்லோரும் படிப்பில் ஒரு குறித்த காலத்திற்குள் முற்போக்குப் பெறுவதில்லை. ஒரு சிலர் விரைவில் கற்றுக் கொள்ளுவார்கள். இதனால் மெதுவாகக் கற்றுக் கொள்ளுபவரைத் திறமை அற்றவர்களென்றும் உதவாதவரென்றும் கருதுவது தவறு. ஆசிரியர்கள் வேறுபட்ட மாணவர்களுக்கு ஏற்ற பெற்றி உதவவேண்டும். வேகமாகக் கற்றுக்கொள்ளுபவர்கள் கற்கும் திறனை உடையவர்களென்பதில் ஐயமில்லை. ஆனால் அவர்களுக்கு வேறு திறன்கள் குறைவுற்றிருக்கலாம். மெதுவாகக் கற்கும் மாணவர்களுக்கு வேறு சில திறன்கள் இருக்கலாம். அதனால் வெறும் ஏட்டுப் படிப்பினரை மட்டும் சிறந்தவர்களாகக் கொள்வது நல்லதன்று. ஏட்டுப் படிப்புள்ளவர்கள் சிறந்தவர்களல்லர். தொழில் துறைகளில் தேர்ச்சி உள்ளவர்கள் தாழ்ந்தவர்களல்லர். பள்ளிகளும் ஆசிரியர்களும் மாணவப் பருவத்தில் எல்லாத் துறையினர்களையும் ஒருமுகமாகக் கருதவேண்டும். எனவே கல்வி பரந்த நோக்குடையதாக அமைதல் நலம். அறிவுத் திறனை மட்டும் போற்றாது திறன்கள் எல்லாவற்றையும் போற்றுதல் வேண்டும். பிள்ளைகளுடைய பல திறன்கள் வெளியாவதற்குக் கல்வி ஏற்பாடு வழிவகுக்க வேண்டியது அவசியம். வெறும் பாடங்களுக்கு மட்டும் இடம் தந்தால் பல பிள்ளைகளின் பல்வேறுபட்ட திறன்களுக்கு வாய்ப்புண்டாகாது. பள்ளிப் பாடங்களெல்லாம் இறுதியில் வாழ்க்கையை நடத்தவேண்டிய தொழில்களுக்கே வழிவகுக்கின்றன. வன்மை வேறு; மென்மை வேறு. மென்மையைக் காட்டிலும் வன்மைதான் சிறந்ததென்று கருதுவது தவறு. தொழில்களில் வேறுபாடு இல்லை. அவரவர்களுக்குற்ற தொழில்களையே அவரவர்கள் மேற்

கொள்ளுகிறுர்கள். எல்லாத் தொழில்களுக்கும் மதிப்புண்டு. தொழில்கள் அறிவு, கைத்திறன், சித்திரத் திறன் அல்லது எழுத்து வன்மை அல்லது மருத்துவம் அல்லது தச்சுத் திறன் ஆகிய பலப்பல ஆக்க வேலைகட்கு உரியவையான அவற்றினையெல்லாம் மதிப்புள்ளவையாக வேறுபாடின்றிக் கொள்ள வேண்டும். எத்துறையாயினும் ஒரு சிலர் மற்றவரைக் காட்டிலும் சிறந்தவர்களாதல் இயல்பு. [1] அடைவுத் திறன் ஈவு என்பது கல்வி உளநூல் தந்துதவும் ஒரு நுணுக்கம். [2] நுண்ணறிவுத் திறன் ஈவு என்பது மற்ருென்று. நுண்ணறிவுத் திறனுல் அடைவுத் திறன் உதவி பெறுகின்றதா என்பதைக் கண்டறிவது சாலச் சிறந்தது. இவை இரண்டையும் ஒப்பு நோக்குவதும் நல்லது. அடைவுக்கும் திறனுக்கும் பொருத்தப்பாட்டினை அறிவதும் நல்லது. மிகப் பிற்போக்குள்ள மாணுக்கன் தனது குறைவுற்ற திறனுல் அதிக அளவில் அடைவினைப் பெறுவது வியக்கத் தக்கது. காட்டாக ஒரு மாணுக்கனுக்கு இயற்கைத் திறன் 10 என்று கொள்வோம். ஆனல் அவன் அடைவு 15. மற்ருெரு மாணுக்கன் உடைய அடைவு 20. அவனுடைய திறனளவு 25. இவ்விருவருள் முதலாவது மாணுக்கனன்ருே பாராட்டுக்குரியவன்! இதனுல் இயற்கைத் திறனுள்ள பிள்ளைகள் கல்வித் திறமையில் குறைவுறுவது கண்கூடு. பள்ளிகள் சராசரித் திறனுள்ளவர்களையே கவனிக்க முற்படுகின்றன. எனவே இயற்கைத் திறனுள்ளவர்கள் அவர்களால் ஆனவற்றையும் இயற்ற இயலாது தவறி விடுகிருர்கள். பாட ஏற்பாடுகள், பாட அளவைகள், பாட [3]ஒப்படைகள், மிகப் பழைய ஆசிரிய முறைகள் ஆகியவை எல்லாம் மிக்க திறன் உள்ள பிள்ளைகளின் வளர்ச்சியைத் தடுக்கின்றன. நாட்டில் எங்கும் எல்லோருக்கும் கல்வி என்ற இயக்கமும் ஒவ்வொரு பிள்ளையும் ஒரு பொது நிலையான முற்போக்காவது பெற வேண்டுமென்ற திட்டமும், சமூகத்தில் சமத்துவத்துக்காக உண்டாகும் சழக்குகளும், முற்போக்குப் பிள்ளைகளுடைய பிற்போக்குக்குக் காரணமாகின்றன. நம் பள்ளிகளில் ஆசிரியர்கள் தனி ஒவ்வொரு பிள்ளையின் கண்காணிப்பை மேற்கொண்டுள்ளார்கள். ஒரு காலத்தில் கவனிக்காது கிடந்த குருடர், அங்கங் குறைந்தவர்கள், செவிடர்கள் இன்னோரன்ன பிற இழுக்குடையவர்களுக்கெல்லாம் அன்புப் பணி இயக்கம் ஆதரவு அளிக்கின்றது; அவர்களால் சமூக முன்னேற்றத்துக்கு ஒரு சிறிதும் நன்மை இல்லை என்று கருதுவாரும் உளர். எதுவாயினும் நமது அரசாங்கங்கள் குடிகள் எல்லோருக்கும் வழிவகுக்க வேண்டிய பொறுப்பினை ஏற்கவேண்டிய கடமை உண்டு. அதனுல் மிக்க திறன் வாய்ந்தவர்களுக்கு உதவாது விடுதல் நலமன்று. அவர்களுக்குப் போதிய வசதிகள் அளித்தால் அவர்களால் பிற்போக்குள்ளவர்களும் நன்மை பெறுவார்களென்று கருதவேண்டும்.

---

1. Achievement Quotient 2. Intelligence Quotient
3. Assignments

ஆசிரியர் பெரும்பான்மை தனியாள் வேற்றுமைகளைக் கண்டறிவதில்லை. அறிந்தாலும் அவற்றினைப் பொருட்படுத்துவதில்லை. ஒரே முறையில் எல்லாப் பிள்ளைகளையும் கவனிப்பதே வழக்கமாகி விட்டது. ஆனால் நல்லாசிரியர் தனி ஒவ்வொரு பிள்ளையின் இயற்கை வேறுபாடுகளையும், அவர்களுடைய உளப்பாங்குகளையும் அறிந்தால் ஆசிரிய முறைகளில் உள்ள பல இழுக்குகள் அறவே நீங்கும். ஆசிரியர்களும் பெற்றோர்களும் பிள்ளைகள் தம்மைப் போன்றவர்கள் என்று கருதுகிறார்கள். பெற்றோர்கள் தமது இளமைப் பருவத்தை மறந்து விடுகிறார்கள். அவர்களுடைய முதிர்வுப் பருவத்தில் எதையும் எளிதாக அறிந்துகொள்ளும் ஆற்றல் உண்டு. இளைஞர்களுங்கூட அவர்களைப் போன்று எதையும் விரைவில் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆசிரியர்கள் தமது ஒரே பாடத்தை ஒரே வகுப்புக்கு பல்லாண்டு கற்பித்துத் தேர்ச்சி பெறுகிறார்கள். அந்த அளவு தேர்ச்சியினைப் பாடத்தைத் தொடங்கும் மாணவர்களிடையே வற்புறுத்துகிறார்கள். இரு திறத்தாரும் தாம் பல ஆண்டுகள் கழித்துப் பெற்றுள்ள அறிவின் கூர்மையைப் பிள்ளைகளிடம் எதிர்பார்க்கின்றார்கள். பிள்ளைகளுடைய புலக் கூர்மைகளை, பற்றுக்களை, உணர்ச்சி வயங்களை, மதிப்புக்களை அறிவதற்கு வேண்டிய பொறுமையை இழக்கிறார்கள். பிள்ளைகளைப் பிள்ளைகளென்று கருதுவதில்லை. பிள்ளைகள் பிள்ளைகளே. அவர்களை உள்ளவாறே அறிந்து கொள்ளுவது ஆசிரியர் கடமை. தனி ஒவ்வொரு பிள்ளைக்கும் அதன் வளர்ச்சிக்கும் திறனுக்கும் ஏற்பக் கல்வியின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் மாற்றி அமைக்க வேண்டியது முறை. அதனால் எல்லோருக்கும் பொதுவான கல்வியின் நோக்கங்களும் குறிக்கோள்களும் பாதிக்கப்படுகின்றனவென்று கருதுதல் தவறு. எல்லாப் பிள்ளைகளுக்கும் அறிவு வளர்ச்சி உண்டு. ஆனால் வேறுபாடெல்லாம் அதன் வேகத்திலும் நேரத்திலும் மட்டுமே உண்டாகின்றது. மற்றும் பிள்ளைகளிடையே விருப்பிலும் வெறுப்பிலும் வேறுபாடு இயல்பு. ஆனால் எல்லாப் பிள்ளைகளுக்கும் புதுமையிலும் செயற்பாட்டிலும் விருப்பு உண்டு. எல்லாப் பிள்ளைகளுக்கும் காட்சிக் கருத்துக்களுக்கு வேண்டிய ஆற்றல் உண்டு. ஒரு சிலர் மட்டுமே கருத்தியல் திறன் உள்ளவர்கள். மருத்துவர் நோயுற்றவர்களைத் தனித்தனியாக அவரவர்களுடைய பிணி அறிந்து மருத்துவம் செய்கிறார். அதைப்போன்று ஆசிரியரும் மாணவர்களுடைய உடல்—உள்ள நிலைகளை அறிந்து ஆசிரியம் நிகழ்த்த வேண்டும்.

தனி ஒவ்வொரு பிள்ளைக்கும் ஏற்பத் தனித்தனிப் பாட அமைப்புக்கள் வேண்டுவதென்றால் பள்ளியின் பாட ஏற்பாடு சிதறுண்டு காணப்படும் என்று ஒரு சிலர் கருதுவர். இவர்கள் டூயி தரும் கருத்துக்களைத் தமக்கு வேண்டியபடி திருத்திக் கொள்ளுகிறார்கள். ஆனால் டூயி இதைப்பற்றிக் கூறுவது அறியத் தக்கது. முற்போக்குப் பள்ளிகள் தனி ஒவ்வொரு பிள்ளையையும் கவனிப்பதன் பெயரால், அவர்

களைப் பற்றிப் பல குணங்களையும் குற்றங்களையும் அறிந்து தம்மைக் குழப்பிக் கொள்ளுகிறுர்கள். அதனுல் ஒவ்வொரு பிள்ளையின் தனித் தன்மையை உணர்வதில்லை. அதற்கேற்ப அவருடைய முறைகள் அமைவதில்லை. ஒரு தனிப்பிள்ளையின் தனித்தன்மையை அறிவதற்கு உற்று நோக்கும் நேரத்தில் அதன் பேச்சையும் செயலையும் அறிந்தால் மட்டும் போதாது. அதன் தொடர்ந்த செயல்களை உற்று நோக்கினு லன்றி அதன் தனித்தன்மையை அறிய இயலாது. எனவே ஒரு பாடப் பொருளினைத் தொடர்ந்த செயற்பாடாக மாற்றி அமைத்தால் மாண வரின் தொடர்ந்த ஈடுபாடு உண்டாகித் தனித்தன்மை வெளியாகும். அதனுல் பாட ஒழுங்கு தனித்தன்மைக் கொள்கைக்கு முரண் அன்று. தனி ஒவ்வொரு பிள்ளையைப் பற்றியும் ஆசிரியர்கள் சிந்தனை செய்து குழப்பிக் கொள்ளுவதைக் காட்டிலும் அவர்களைப் பயனுறும் பணிகளில் ஈடுபடுத்தி இயற்கைத் திறன்கள் வெளியாகுமாறு உதவ வேண்டும்.

ஆசிரியம் தனி ஒவ்வொரு பிள்ளையையும் சார்ந்தது. ஆசிரிய முறைகள் தனி ஒவ்வொரு பிள்ளைக்கும் உதவ வேண்டும். தூண்டல் கள் ஒவ்வொரு பிள்ளையையும் தூண்டுதல் வேண்டும். அல்லது ஒரே தன்மையுடைய பிள்ளைக் குழுவினைத் தூண்டுதல் வேண்டும். பிள்ளை களுடைய துலங்கல்கள் அவரவர்களுடைய பட்டறிவு, கவர்ச்சி, திறமை ஆகியவற்றைப் பொறுத்தவையாகும். கற்பித்தல் தனித்தனிப் பிள்ளைக் கேற்ப நடைபெறுவது நல்லது. பாடப் பொருள்களும் முறைகளும் தனித்தனிப் பிள்ளைகளின் தேவைப்பாட்டினுக்கு உதவ வேண்டும். திறமையுள்ள ஆசிரியர் ஒவ்வொரு பிள்ளையையும் கண்காணிப்பார். அதனுல் நமது வகுப்பறைகளில் தனி ஒவ்வொரு பிள்ளைக்கும் தனித் தனியாகக் கற்பித்தல் வேண்டியதில்லை. ஒவ்வொரு ஆசிரிய முறையும் தனியாள் வேற்றுமைக்கு உதவுவது யாங்ஙனம் என்று அறிய வேண்டும். அதுவே நல்லாசிரியமாகும்.

XXVI

[1]மீத்திறம் பெற்ற பிள்ளைகளுக்குக் கல்வி

இயற்கைத் திறன் மிக்க பிள்ளைகள் கல்வியால் நலம்பெற்றுத் தமது வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்வது நமது நாட்டிற்கும் சமூகத்திற்கும் சிறந்த தொண்டாற்றுதற்கு நல்லது. ஒரு சிலர் தமது இசைகளாலும் நடிப்புத் திறனாலும் மகிழ்ச்சியூட்டுகிறார்கள். ஒரு சிலர் சிறந்த மருத்துவர்களாகத் தோன்றி உடற்பிணி அகற்றுகின்றார்கள். ஒரு சிலர் எந்திரங்களை இயற்றி யுதவி எங்கும் விஞ்ஞான மயமாக்கி உலகுக்கு விஞ்ஞான வாழ்வளிக்கின்றார்கள். உளநூலார் உதவும் கருத்துக்கள் நெஞ்சாழங்களைக் காண உதவுகின்றன. ஒரு சிலர் மனித நன்மையைக் கருதி உதவுகிறார்கள். மீத்திறன் மிக்கவர்கள் அவரவர்களுடைய துறையில் நாட்டுக்கும் சமூகத்துக்கும் நன்மை பயக்கின்றனர். பெரும் பதவியிலுள்ளவர்கள் எல்லாரும் மீத்திறன் மிக்கவர்களல்லர். மீத்திறன் மிக்கவர்களும் பெரும் பதவியைப் பெறுவதில்லை. மீத்திறன் மிக்கவர்களுள் ஒரு சிலர் தமது திறனுக்கேற்பப் பண்பாடு பெறாததால் அவர்கள் நாட்டுக்கு உதவி நல்குவதில்லை. பண்பாடு பெற்ற மீத்திறன் பெற்றவர்கள் ஒரு சிலர் பெறும் உதவிகளைப் பெறாது தமது திறன்களைப் பயன்படுத்துவதில்லை.

பொது நலனைப் பாதுகாப்பது ஒரு குடியாட்சியின் கடமை. ஒவ்வொரு குடிமகனும் தன்னால் இயன்றவரை பொது நலனுக்கு உதவினால் பொது நலன் சிறந்து விளங்கும். மிகத் திறமை உள்ளவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் பேருதவி புரியக் கடமைப் பட்டவர்கள். அதனால் மிகத்திறமை உள்ளவர்களுக்குத் தனிப்பட்ட பயிற்சி அளிக்க வேண்டியது கடமையாகின்றது. ஆனால் தனிப்பட்ட பயிற்சியை ஒரு சிலருக்கு மட்டும் அளித்தல் குடியாட்சியில் கூடாதென்று கருதுகின்றார்கள். எனவே தனி ஒவ்வொருவருக்கும் நுண்ணறிவு எதுவாயினும் பல வாய்ப்புக்கள் அளித்து அவர்கள் தமது திறமையினை அடைவதற்கு உதவ வேண்டும் என்கின்றனர். குடியாட்சியில் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு இருந்தாலும் அவர்கள் அவற்றைப் பயன்படுத்துமாறு கட்டாயப்படுத்துதல் கூடாது. பள்ளிகளில் ஒவ்வொரு பிள்ளைக்கும் பலவாய்ப்புக்கள் அளித்து அவர்கள் முழுத்திறனைப் பெறுவதற்கும் தமக்கும், தமது நாட்டுக்கும், பல நன்மைகளைத் தேடுவதற்கும் வழி செய்ய வேண்டும்.

இன்றைய உலகில் சமூகத் தலைமை பெறுபவர்கள் பெரும்பாலும் கற்றறிந்தவர்களே. எந்திரப் படைப்பாற்றல் உள்ளவர்களும் சிறந்த

1. Education of the Gifted

நுண்ணறிவு வாய்ந்த உயரிய கல்வியாளர்களே. ஒரு நூற்றாண்டுக்கு முன் எளியவனாயினும் திறமையுள்ளவனாயின் கல்லூரிக் கல்வியாவது பள்ளிக் கல்வியாவது இல்லாது பெரும் பதவி பெற முடிந்தது. அக் காலங்களில் தனித்திறமை ஒன்றே உயரிய தகுதிகளுக்கு வழியாயிற்று. ஆனால் இன்றைய நிலையில்[1] கல்வி சார்புற்ற திறமை ஒன்றே கண்ணியம் பெறுகின்றது. அதனால் உயர்நிலைக் கல்வி ஒவ்வொருவருக்கும் உற்ற துணையாம். இயற்கை அறிவினைக் காட்டிலும் உயரிய கல்வி பேருதவி புரிகின்றது. உயரிய கல்வியைப் பெறுபவர்கள் பெரும்பான்மை சமூகத் திலும் பொருளாதாரத்திலும் மேம்பட்டவர்கள். இவர்களே வழிவழி யாகப் பெரும் பதவியேற்கிறார்கள். அவர்களுடைய வழிவழி வசதிகளே உயரிய வாய்ப்புக்களைப் பெறுவதற்கு உதவுகின்றன. இயற்கைத் திறமை உள்ளவர்கள் வசதிக் குறைவினால் கல்விப் பேற்றினைப் பெறாது தமது திறமையினை வளர்க்காமல் ஒதுங்கி விடுகின்றார்கள். இதனால் பெரும் தகுதிகளெல்லாம் சமூகத்தின் ஒரு பிரிவினரிடையே உறைந்து விடுகின்றன. குடியாட்சியில் வசதியற்ற பிள்ளைகளுக்கு அவர்கள் திறமையைக் கண்டு போதிய கல்வி, ஊக்கம், வழிகாட்டல் ஆகியவை அளித்து உதவவேண்டும். வாய்ப்புக்கள் கல்விக்காகச் செலவு செய்ப வர்களுக்கு மட்டுமின்றிக் கல்வியைப் பெறுவதற்குப் போதிய தகுதி உள்ளவர்களுக்கும் அளித்தால் வருங்காலத்தில் நாட்டுக்கு நன்மை உண்டாகும்.

மீத்திறம் பெற்ற மாணவர்கள் கல்வி நிலையங்களில் சிறந்த பயிற்சி கள் பெற்றுச் சமூகத்துக்குப் பயனுறுவார்களானால், அவர்களுடைய சிறப்புக்கு ஓரளவு அவர்கள் கற்ற கல்வி நிலையமும் காரணமாகும். அங்ஙனமே திறம்பெற்ற மாணவர்கள் கல்வி கற்றும் பயனுறாவிட்டால் அவர்களுடைய தோல்விக்கு அவர்கள் கற்ற கல்வி நிலையங்களும் காரணமாகும். அத்தகைய மாணவர்கள் படித்த பள்ளி—கல்லூரிப் பாடத்திட்டங்கள் அவர்களுடைய திறமையை வளர்க்காது விட்டிருக்க லாம். பாட ஏற்பாட்டின் குறுகிய வாய்ப்புக்கள், கற்பித்தலின் குறை பாடுகள், கற்க உதவும் பொருள்களின் நிறையின்மை, இயற்கைத் திறன்மிக்க பிள்ளைகளுக்குப் போதிய வசதியின்மை ஆகியவையும் பிற காரணங்கள். எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரே வகையான பாடத்தைக் கற்பித்தால் ஆசிரியர் எல்லாரிடத்திலும் சராசரி மாணாக்கனுடைய திறனையே எதிர்பார்க்கின்றார். மீத்திறன் பெற்ற மாணாக்கன் பாராட்டுப் பெறுவதில்லை. அவனுடைய திறமை வெளியாகும் துறை அவன் பள்ளியில் இல்லாதுபோனால் திறமை பயனற்று விடுகின்றது. சிறந்த ஆசிரியர்களன்றோ திறமைக்குப் பாராட்டு அளிப்பதுடன் வளர்க்கவும் முற்படுவார்கள். சராசரிப் பிள்ளைகளுக்கு மட்டும் ஆசிரியம் அமைந் தால், மீத்திறம் பெற்ற பிள்ளைகள் கற்றலில் வெறுப்புக் கொள்வார்கள்.

---

1. Educated talent

ஆசிரியர் ஒரு சிலர் திறமை மிக்க மாணவர்கள் மீது அழுக்காறு கொண்டு வெறுக்கின்றனர்கள். பலர் அத்தகைய மாணக்கருக்குக் கற்பிக்கும் முறை அறியாமலும் அவர்களுக்குத் தனி வழி வகுக்கத் தெரியாமலும் விட்டுவிடுகின்றனர்கள். வகுப்பறையில் மெதுவாகக் கற்பவர் பலர்; அவர்களைக் கண்காணித்துச் செய்வன செய்வதற்குத் திகைக்கிறார்கள். மீத்திறம் பெற்றவர்கள் தாமாகவே கற்கும் திறமையுள்ளவர்களாகையால் அவர்களைப் பற்றி அவர்கள் கவனிக்க வேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை.

மீத்திறம் அறிதல் :

வகுப்பறையிலும் வெளியிலும் ஆசிரியர்கள், மாணவர்கள் பலரை உற்று நோக்கி அவரவர்களைப் பற்றிக் கருத்துக் கொள்ளுகிறார்கள். அவை எல்லாம் சரியென்று கருத இயலாது. அங்ஙனம் ஒளி வட்ட விளைவால் ஓர் ஆசிரியர் தம் மாணுக்களைப் புகழலாம். மற்றொருவர் உண்மையாக மீத்திறம் உள்ள மாணுக்கனை வெறுப்பால் இகழலாம். அவனுடைய தனித்தன்மை ஆசிரியருக்கு உடன்பாடற்ற தாகலாம். மற்றும் சிலர் இயற்கைத் திறனுக்கும் மாணுக்கன் அடைவுக்கும் வேற்றுமை காரணமாகத் திறனையும் அடைவையும் பிரித்துக் காணலாம். திறனும் அடைவும் ஒன்றோடொன்று ஒட்டியவை. ஆனால் அவை இரண்டும் ஒன்றல்ல. திறனோடு முதிர்வு நிலை, ஒழுக்கம், உழைப்பு, கற்கும் திறன் ஆகியவை எல்லாம் அடைவுக்கு வழி கோலுபவை. தேர்வுகள் பலவற்றின் உதவியால் மீத்திறன் உள்ள மாணவர்களைக் கண்டறிகிறோம். மீத்திறன் இருவகைத்து. அவை பொது, சிறப்பு என்பன வகையாகும். அறிவுத் தேர்வுகளும், நாட்டத் தேர்வுகளும் இவற்றை அறியப் பயன்படுகின்றன. எதுவாயினும் ஆசிரியர்கள் பிள்ளைகளின் இளமைப் பருவத்தில் அவர்களுடைய திறனைக் கண்டாலன்றி அவர்களுக்கு வேண்டிய பயிற்சியை அளித்து முழுத்திறனைப் பயனுறச் செய்ய இயலாது.

நுண்ணறிவுத் தேர்வுகளும் அவற்றின் அளவைகளும் பல ஆண்டுகளாகப் பயனுறுகின்றன. ஆனால் உளநூலார் நுண்ணறிவுத் தேர்வின் அளவைகளை நோக்கி ஐயப்படுகின்றனர்கள். உளப்பாங்கின் வெளியீடுகள் நரம்பு மண்டலம் அல்லது சுரப்பி மண்டலம் ஆகியவற்றை எப்படிச் சார்ந்தவை என்றும், நுண்ணறிவு தனிப்பட்டதா அல்லது பலதிறனைக் கொண்ட ஒரு வெளியீடா அல்லது நுண்ணறிவு சூழ்நிலையில் உண்டாகுவதா, என்றும் இன்ன பல வினாக்களை எழுப்புகின்றனர்கள். ஆயினும் நுண்ணறிவுத் தேர்வுகள் தனியாளின் நடத்தையை முற்கூட்டி அறிய உதவுகின்றன. இவற்றோடு இன்னும் பல ஆதாரங்களைக் கொண்டு மீத்திறன் மிக்க மாணவர்களைக் கண்டறியலாம். ஆனால் நுண்ணறிவுத் தேர்வின் குறைபாடுகளை மனத்தில் கொண்டு மீத்திறன் மிக்க மாணவர்களை அறிவது நல்லது.

மீத்திறன் மிக்கவர்களை அறிதற்குத் திரட்டுப் பதிவேடு, பள்ளித் தேர்வெண்கள், ஆசிரியருடைய உற்று நோக்குதல், பொறுப்புக்கள்—இவை யாவும் உதவுபவை. ஓர் ஆண்டில் மிகத்திறன் மிக்க பிள்ளை மறு ஆண்டில் தரத்தை இழக்கலாம். சராசரிப் பிள்ளைகள் திறமை பெற லாம். ஆகையால் அடிக்கடி தேர்வுகளின் உதவியால் பாகுபாட்டின் குறை நிறையினைக் கண்டறிய வேண்டும். பிள்ளைகளைப் பாகுபாடு செய் தலால் மீத்திறம் மிக்க பிள்ளைகளுக்குக் கற்பித்தல் முறை மாறுபட வேண்டும். அவரவர்களுடைய திறமைக்கு ஏற்பப் பள்ளி அவர்களுக்கு முழுப்பயிற்சி அளிக்க வேண்டும். அவர்களுக்கும் மற்றவருக்கும் வேறுபட்ட கல்வி அனுபவங்கள் அமைய வேண்டும். மீத்திறம் மிக்க வர்கள் வெகு எளிதில் அனுபவங்களைப் பெற்று விடுவார்கள். ஒவ்வொரு பள்ளியிலும் இவர்களுக்கெனத் தனிப்பட்ட திட்டம் வகுப்பதென்றால் மெதுவாகக் கற்கும் பிள்ளைகளைத் தாழ்ந்தவர்களாகக் கருதலாகாது. தனித்தனிப் பிள்ளைக்கு ஏற்பக் கல்வி வழங்க வேண்டியது பள்ளியின் கடமை. இங்ஙனம் வேறுபாட்டுத் திட்டங்கள் அக்கடமையை ஒட்டிய வையாதலைக் காண்க. இரு வகையினருக்கும் அடிப்படைத் தேவைப் பாடுகளாகிய உடலோம்பல், குடிமைக் கல்வி, அடிப்படைத் திறன்கள், முருகுணர்ச்சி வளர்த்தல், பண்பாடு ஆகியவை பொதுவானவை. மீத்திறம் மிக்க பிள்ளைகளுக்கும் பல முறைகளில் பள்ளிகள் வசதி அளிப்பது உண்டு. சில ஆண்டுகளுக்கு முன் தொடக்கநிலைப் பள்ளி களில் அத்தகைய பிள்ளைகளுக்கு ஓர் ஆண்டுக்கு ஒரு மேல் வகுப்புக்குத் தேர்ச்சி அளிக்காது, இரண்டு மேல் வகுப்புக்களுக்குத் தேர்வு அளிப்ப துண்டு. அதனால் அவர்கள் பத்து ஆண்டுப் படிப்பினை ஏழாண்டுகளில் பெறுவர். பி. ஏ., பட்டம் பதினேழு—பதினெட்டு வயதில் பெற்றவர்கள் இத்தகைய மீத்திறம் பெற்ற மாணவர்களே. நூற்றைம்பது நுண் ணறிவு ஈவு உள்ள பத்து வயதுப் பிள்ளை ஏழாவது வகுப்பில் பன்னி ரண்டு வயது சராசரி அறிவுள்ள பிள்ளைகளைக் காட்டிலும் அதிகமாகக் கற்றுக்கொள்ள இயலும். அப்பிள்ளை தன் வயது நுண்ணறிவு ஈவு 100 உள்ள பிள்ளைகள் வகுப்பில் கற்றல் அளவு அதிகமாகாது. அதனால் [1] தளர்த்துதல் முறை மீத்திறம் மிக்க பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக் கும் மிக நல்லது. அத்தகைய பிள்ளைகள் விரைவில் தமது படிப்பினை முடித்து விடுவதால் தமது கல்விச் செலவினையும் குறைத்துக் கொள்ளு வார்கள். தளர்த்துதல் முறை ஒரோவழி பிள்ளைகளிடத்தில் மனவெழுச் சிப் பொருத்தப்பாடு இன்மையையும் சமூக உறவு நிலையில் முரண்பாட் டினையும் உண்டாக்கும். ஏனென்றால் அறிவு வளர்ச்சியின் வேகத்தோடு மற்ற உளப்பாங்கின் வளர்ச்சிகள் நிகழுவதில்லை. மீத்திறம் மிக்க பிள்ளைகள் இளைஞர்கள். அவர்கள் வயது முதிர்ந்த பிள்ளைகளோடு உயர்வகுப்புக்களில் படிப்பதால் பொருத்தப்பாடின்மை நிகழுவது

1. Acceleration

இயல்பு. ஆயினும் மீத்திறம் மிக்க பிள்ளைகள் தளர்த்துதல் முறையால் நன்மையே பெறுவார்கள். அவர்களுடைய அடைவினை அறியும்போது முக்கியமாக அவர்களுடைய உடல் வளர்ச்சி, சமூகத்திறன், உள்ளக் கிளர்ச்சியின் ஒருமைப்பாடு ஆகியவற்றையும் அறியவேண்டும்.

[1] குழு பிரித்தல் :

ஒரே மன வயதுள்ள பிள்ளைகளை ஒன்ருகக்கூட்டி அவர்களுக்குக் கற்பித்தல் நிகழ்த்துவது மற்ருெரு முறையாகும். தளர்த்துதல் முறை நிகழும் பள்ளிகளில் மீத்திறம் மிக்க பிள்ளைகளுக்கன்றி மெதுவாகக் கற்பவர்களுக்கும் அவர்களுடைய மனவயதின் அடிப்படையில் சிறு குழுக்களாகக் கூட்டிக் கற்பித்தல் நடத்துவதுண்டு. இத்திட்டத்தில் காட்டாக ஐந்தாவது வகுப்பில் ஒன்பது முதல் பதினேரு மன வயது உள்ள பிள்ளைகள் படிப்பார்கள். ஆனல் அவர்களுடைய உடல் வயது எட்டு முதல் பதினன்கு வரையில் பரவி இருக்கலாம். இங்ஙனம் மன வயதும் உடல் வயதும் வேறுபட்ட ஒரு வகுப்பில் சிக்கல்கள் உண்டு. இளைஞர்கள் முதியவர்களோடு படிப்பதால், சமூகத் தன்மையில் முதிர் வடையாது முரண்படுவார்கள். மற்றும் மனவயதும் உடல் வயதும் வேறுபட்டுக் கொண்டே தொடரும். இதனல் உடல் வயதையும் நுண்ணறிவு ஈவையும் அடிப்படையாகக் கொண்டு திறனை நோக்கிப் பிள்ளைகளைக் குழுப்படுத்துவது நலம். எடுத்துக் காட்டாகப் பத்து அல்லது பதினெரு வயதுப் பிள்ளைகள் படிக்கும் ஐந்தாவது வகுப்பில் நுண்ணறிவு ஈவு 120 உள்ளவர்கள் ஒரு குழுவாகவும், 90 உள்ளவர்கள் மற்றென்ருகவும், எஞ்சியுள்ளவர்கள் பிறிதொன்ருகவும் பிரிக்கப் பெறலாம். அப்போது அவரவர்கள் திறனுக்கேற்பப் பாட ஏற்பாடும் பாட ஒப்படைப்பும் வேறுபடும். இத்தகைய பிரிவினைகளை ஒவ்வொரு வகுப்பிலும் உயர்நிலைப் பள்ளி, கல்லூரி ஆகியவை வரையில் செயற்படுத்தலாம். மற்ருெரு எடுத்துக்காட்டு: ஒரு வகுப்பிலுள்ள தனிப்பாட மொன்றுக்குப் பிள்ளைகளை நான்கு குழுக்களாகப் பிரித்துக் கற்பிக்கலாம். கணிதப்பாடம் என்று எடுத்துக்கொள்ளுவோம்—மீத்திறம் மிக்கவர்கள் ஒரு குழுவாகவும், மெதுவாகக் கற்பவர்கள் மற்ருெரு குழுவாகவும், பொது நிலையான மாணவர்களை இரு குழுக்களாகவும் பிரித்துக் கற்பிக்கலாம். கல்வியாளர்களும் உளநூலார்களும் மீத்திறம் மிக்க பிள்ளைகளுக்கு இம்முறை நல்லது என்றும் பயனுள்ளது என்றும் கூறுகிருர்கள். அல்லாது மிகத் திறமுள்ளவர்களோடு மற்றவர்களும் சேர்ந்து கற்ருல் அவர்கள் மிடியுற்றுக் காலத்தை வீணுக்கித் திறனைப் பாழ்படுத்திக் கொள்ளுவார்கள்.

1. Classification

[1] விழுப்பம் தருதல் :

மீத்திறம் மிக்க பிள்ளை பள்ளியிலும் அதன் சூழ்நிலையிலும் உள்ள தூண்டல்களுக்கு மிக்க பயனோடு துலங்குகிறது. ஆனால் பொது நிலை யான பிள்ளைகள் அவ்வளவு பயன் பெறுவதில்லை. மீத்திறம் மிக்கவர் களுக்கு ஊக்கமும், வழிகாட்டிக் கொள்ளும் திறமையும் உண்டு. அவர் களுக்கு வேண்டிவை எல்லாம் சமூக இயல்பும் உளநலனுமேயாகும். விழுப்பம் தருதல் முற்கூறிய தளர்த்துதல் முறைக்கும், திறன் ஒன்றிய குழு அமைப்புக்கும் தனித்தனிப் பிள்ளைக்கென வகுக்கும் ஒப்படை களுக்கும் இன்னோரன்ன பல முறைகளுக்கும் ஒக்கும். அவர்களுக் கெனத் தனி வகுப்புக்கள் என்றால் அவை விழுப்பம் பெறாவிட்டால் பய னில்லை. விழுப்பம் தரும் முறைகள் அவர்களிடையே படைப்பாற்றலை உண்டாக்கும். செய்யுள் கற்கும் பிள்ளைகள் பல செய்யுள்களைத் தாமாகவே படித்தலும் யாப்புணர்ச்சி பெற்றுச் செய்யுள் யாத்தலும் விழுப்பமுள்ள செயற்பாடுகள். பொது நிலையான பிள்ளைகளைக் காட்டி லும் அவர்கள் அளவில் அதிகமாகக் கற்பார்கள். அவர்களுடைய இயற் கைத் திறன்கள் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும்.

[2] விருப்பப் பாடங்கள் :

உயர்நிலையிலும் கல்லூரியிலும் தனித்தனி மாணாக்கர்கள் தமது விருப்பம்போல் அல்லது தமது வழிகாட்டி ஆசிரியர் வகுத்த வழிபோல் பாடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவார்கள். இங்ஙனம் தேர்ந்து கொள்ளுதல் அவரவர்களுடைய திறமை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். எந்திரத் திறன் உள்ள பிள்ளைகள் பள்ளி நிலையில் அதன் பயிற்சியைத் தொடங்கிக் கல்லூரி நிலையில் மீத்திறனைப் பெறவேண்டும். ஒரே திட்டத்தின் பாடங்கள் தனித்தனித் திறன்களுக்குப் பொருத்த மானவை அல்ல. இசை அல்லது ஓர் கலையில் திறனுள்ள பிள்ளை தனக்கு விருப்பமற்ற உயர் கணிதத்தை நீக்கித் தனது சுமையைக் குறைத்துக் கொள்ளலாம். எத்துறையில் திறன்மிக்குள்ளதோ அத் துறையில் புலமை எய்துவது சால்புடைத்து. சட்டத்துறையிலும் பொது ஆட்சி மன்றங்களிலும் பணியாற்றக் கூடிய திறமை உள்ளவர் களுக்கு விஞ்ஞானமும் வேதியல் நூலும் கட்டாயமாக வேண்டியதில்லை. நமது கல்வி ஏற்பாடுகள் பெரும்பான்மை பொதுக்கல்வி என்ற பெயரால் பல பாடங்களைக் கட்டாயப் படுத்துகின்றன. அதனால் மீத் திறம் மிக்க பிள்ளைகளுக்குப் பாதகம் ஏற்படாதபடி அவர்களுடைய திறமையை வளர்க்க வேண்டும்.

மீத்திறமிக்க பிள்ளைகளுக்குரிய கல்வித் திட்டம் ஒருசில இடர்ப்பாடு கட்கு உட்பட்டவை. அவர்களுக்குத் திறமை உள்ள ஆசிரியர்கள் வேண்டியதில்லை என்பார் உளர். அத்தகைய பிள்ளைகள் தாமாகவே

1. Enrichment 2. Electives

ஊக்கத்தோடு கற்கும் திறனைப்பெற்றுக் கொள்ளுவார்களாம். ஆயினும் ஆசிரியர்களுடைய திறமை மாணவர்கள்பால் எதிரொளிப்பதோடு அவர்களுடைய கல்விப் பயனையும் பெருகச் செய்யும். ஆசிரியர் நல்லவராதலோடு சிறந்த நுண்ணறிவு உடையவராகவும், ஆழ்ந்த அகன்ற கல்வித் திறனுள்ளவராகவும், மாணவரிடையே கிளர்ச்சி ஊட்டக்கூடிய வன்மை உள்ளவராகவும் பொறுப்புணர்ந்தவராகவும், அழுக்காறு, மிடி, சினம் அற்றவராகவும், மீத்திறம் மிக்க பிள்ளைகளைப் பற்றிய உளநூல் வல்லுநராகவும் இருத்தல் வேண்டும். அவர்களுக்கென வகுக்கும் ஆசிரிய முறை தனிப்பட்டதாக வேண்டும். தான் வகுக்கும் முறையை மாணவர்கள் அறிய வேண்டும். மாணவர்கள் தாமே சிந்தனை செய்வதற்கு வாய்ப்பளித்து அவர்களைச் செயலாற்றுவதற்கு உந்த வேண்டும். ஒப்படைகள் பிள்ளைகளிடையே [1]புதுப் பாங்கினைத் தூண்ட வேண்டும். திறன்கள் வளருவதற்கு ஏற்ற பயிற்சி வகுக்க வேண்டும். ஏன்? எப்படி? என்ன? என்ற வினாக்கள் கற்பிக்கும் கருவிகள். அவை பிள்ளைகளைச் சிந்தனையில் செலுத்தக்கூடும். புத்தகப் படிப்போடு வெளிச்செலவு அனுபவமும் உதவ வேண்டும். மாணவர்கள் தாமே தமது திறனை மதிப்பிடுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

மீத்திறம் மிக்க பிள்ளைகளுக்கு ஊக்கம் உரித்தானது. ஆசிரியர் ஊக்கங்களுக்கு வாய்ப்பும் வசதியும் அளித்து உதவ வேண்டும். வேலை செய்யும் பழக்கங்கள் தொடர்ந்து பெருக வேண்டும். எல்லாவற்றைக் காட்டிலும் அவர்களுடைய உள நலனுக்கும் உணர்ச்சி முதிர்வுக்கும் உதவ வேண்டும். அவர்களுடைய சமூக உணர்வு, உறவு ஆகியவற்றிற்குப் பள்ளிகள் உதவி செய்வது கடமை. பொதுவாக அவர்கள் வளர்ச்சிக்குத் தடைசெய்யாது தத்தம் ஆளுமையை வளர்த்துக் கொள்ளும் வகையினைப் பள்ளி உதவ வேண்டும்.

XXVII

[1]பண்பாட்டுக் கல்வி

"எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார் மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு"

அரிதாய பண்புடைமை என்னும் நன்னெறியினை எய்துதல் எளிது. உலகமே பண்புடையவரிடத்தில் பொருந்தி இருப்பதால் இயங்குகின் றது என்பர். அல்லாக்கால் அஃது மண்ணில் புகுந்து அழிந்து போகும். பிறரோடு கலந்து பேசவும் மகிழவும் இயலாதவர்க்கு உலகம் இருள் சூழ்ந்ததாகும். சமூகப் பழக்கத்தில் கல்வியுடையார் மேன்மை யுடையவர்; உவப்பத் தலைக்கூடுவர். கற்றவனுக்கு எதுவாயினும் நாடாகும்; ஊராகும். எனவே அவன் சாந்துணையும் கற்க வேண்டு மென்பர்.

பண்புடைமை கல்வியால் பெறுவது என்று கருதுகிறோம். பண் புடைமையே கல்வியின் சிறந்த குறிக்கோள். அஃது அல்லாது வேறு பயன்களை எல்லாம் அதை அடைந்த பிறகே பெற வேண்டும். ஒருவன் தனது ஆசைகளை அடக்கி விருப்பங்களை ஒடுக்கித் தன்னலம் பாராது அறிவு செலுத்தும் வழியில் செல்லுவது கடமை என்பர் [2]ஜான்லாக். திண்மையான உடற்பயிற்சி உள்ளத்தின் பண்பாட்டுக்கென்று கிரேக்கர் கள் உடல் வழியாக உள்ளத் தூய்மையினை எய்தினார்கள். அறிவை வளர்ப்பதும், உடலோம்புவதும், அழகுணர்ச்சி பெறுவதும், அறத்தான் வாழ்வதும் கிரேக்கக் கல்வியின் நான்கு பெற்றிகள். இவை ஒன்றோ டொன்று ஒன்றியவை. உடலோம்பலோடும், இசைப் பயற்சியோடும் அறக்கல்வி ஒன்றி நின்றது. சோபிஃஸ்டுகள் அறவாழ்வினை வாழ் வதற்கு வழிகளை வகுத்து அறநெறிகளைத் தனிப்பாடமாகக் கற்றுக் கொடுத்தார்கள். அரிஸ்டாடில் அறப்பண்புகளை ஒரு கலையைப் போல் கற்க வேண்டுமென்று எடுத்துரைத்தார். அதனை இயற்கையிலிருந் தும், பழக்கத்திலிருந்தும், பகுத்தறியும் திறனிலிருந்தும் இசையி லிருந்தும் பெறுவதற்கு வழி காட்டினார்.

அறப்பண்புகளை ஒரு தனிப்பாடமாகப் பிள்ளைகளுடைய பகுத்தறி வோடு ஒட்டிய வழி கற்பிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தியவர்கள் உளர். சூழ்நிலையில் தன்னைப் பொருத்திக் கொள்ளுவதே கல்வி என் றால் நல்ல சூழ்நிலை நன்னெறியினையும் பயக்க வல்லது. இதனாலன்றோ நம் பள்ளிகளில் நல்ல சூழ்நிலையை வற்புறுத்துகின்றனர். அதில் பொருத்தப்பாடு பெறுவதற்கு வழி வகுக்கின்றோம். மதாலயங்களில்

---

1. Moral Instruction 2. John Locke

ஞாயிற்றுக் கிழமைப் பள்ளிகள் சமயக் கல்வியோடு அறநெறிக் கல்வியையும் கற்பித்தன. இவற்றின் வழியே பொதுக் கல்வி நிலையங்களில் சமயக் கல்வி எடுபட்டாலும், அறநெறிக் கல்வி மட்டும் பாட ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது. அறக்கல்வியென்றும் புறக்கல்வியென்றும் பிரித்தலை டுயி கண்டித்துள்ளார். அறக் கல்வியால் பண்பாட்டினை உயர்த்துவது எனக் கருதுவது இயலாதென்றார். பொருளறிவினைப் பெறுவதற்கும் அதை உணர்ந்து கொள்ளுவதற்கும் பள்ளி நேரத்தில் பெரும் பகுதி ஆகிவிடுவதால் நல்வழிக் கல்விக்கு நேரம் இல்லை. அதனால் அதன் கருத்தினை வினா விடையாகக் கற்றுக் கொடுக்கிறார்கள். நல்வழியைப் பற்றிப் பாடமென்றால் அதன் கருத்துக்கள் பிறர் கருதுபவையாகும். அங்ஙனம் நல்வழியைப் பரப்புவது சமூகக் கூட்டங்களுக்குப் பொருத்தமாகும். ஆனால் பள்ளிகளில் பிள்ளைகள் தமது ஊக்கத்தாலும் பழக்கத்தாலும் அறிவைப் பெறுகின்றார்கள். அப்பழக்கங்களைப் பெறும்போது மற்றவர்களோடு உறவாடுகிறார்கள். அவர்கள் உறவாடும் நிலையும் சமூக உணர்ச்சி மீதூரும் கட்டமும் அவர்களை நல்வழியில் பழக்குகின்றன. வெறும் பொருளறிவினை மட்டும் கற்றால் அது பொருளறிவென்றே கருதப்பெறும். ஆனால் அதைப் பிறரோடு கூடிப் பெற்றால் அதில் அறநெறி மிளிர்வதைக் காணலாம். நல்ல குணங்களை நல்குவதற்கு எவை நல்லவை, எவை அல்லவை என்பவற்றைக் கண்டறிய வேண்டும். பண்பாடுகளைக் கற்பிப்பது பயனற்றது. ஆனால் அந்தந்தச் சூழ்நிலையில் அவற்றைச் செயலாற்றாது தவிப்பது கண்கூடு. சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு உள்ள காரணத்தால் நல்வழிக் குறிக்கோள்கள் பயனற்றவையாகிவிடுகின்றன. பிள்ளைகள் வாழும் சூழ்நிலையில் நன்மை செயற்படுவதில்லை. அவர்கள் காணும் காட்சிகளெல்லாம் முரணுற்றவை. சமூகத்தில் முரணுற்ற வாழ்க்கை நடைபெற்றால் பள்ளியில் வற்புறுத்தப்பெறும் குறிக்கோள்கள் பயனற்றவையாகும். அரிஸ்டாடில் ஒருவனுடைய குணத்தைப் பல நல்ல பழக்கங்களின் ஒற்றுமையாகக் கண்டார். பல பழக்கங்கள் நல்லவர்களுக்கும் தீயவர்களுக்கும் பொதுவாகின்றன. நன்மை தீமை ஆகிய இரண்டும் சூழ்நிலையில் வேறுபடுத்தப் பெறுகின்றன. வீரம் ஒரு நல்ல குணம். ஆனால் அதனை நல்லவர்களிடத்தில் மட்டுமல்லாது தீயவர்களிடத்திலும் காண்கிறோம். நமது பிள்ளைகள் பல நல்ல பழக்கங்களைச் செயற்பாட்டில் முரண்பாடுறாதபடி பெருக்கிக் கொள்ள வேண்டும். சொல்லும் செயலும் ஒன்றிய நிலையில் ஆளுமை ஒருமைப்பாடு நிகழும்.

அறக்கல்வி சமயக்கலைபோல் இணைந்தாலன்றிப் பயனற்றதென்று பலர் கருதுகின்றனர். அற வாழ்க்கையினைச் சமய வாழ்க்கையிலிருந்து பிய்த்துவிட்டால் அஃது உயிரற்றுவிடும். சமயச் சார்பற்ற கல்வி அறநெறியை ஆணித்தரமாக்காது. சமயக்கல்வி மனித இயற்கையை மாற்றி அமைப்பதோடு மாண்புறச் செய்ய வல்லது. மனிதன் தன்னைத் தானே தனது கல்வித் துணையால் உயர்த்திக் கொள்ள இயலாது.

மனிதன் கடவுள் நம்பிக்கையால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுகிறான். அவனால் அவனைக் காப்பாற்றிக் கொள்ள இயலாது.

பிள்ளைகள் தமது பல நடத்தைகளை இயல்பூக்கத்தின் உந்துதல்களால் பெறுகிறார்கள். நன்மை, தீமை என்பதை இளமையில் அறிய இயலாது. ஒரு செயலால் துன்பத்துக்குப் பதிலாக இன்பத்தைப் பெறும்போது அவர்கள் துன்பம் தரும் செயலை விட்டுவிடுகிறார்கள். பள்ளியில் பழகும்போது ஆசிரியர் ஆமோதிப்பதை அடுத்தும் அவர் வெறுப்பதைத் தடுத்தும் பழக்கங்கள் உண்டாகின்றன. மூன்றாவது நிலையில் தமது கூட்டத்தில் விரும்பப்பெறும் செயலினை மட்டும் கொள்ளுவதும், உடன்பாடற்றவற்றைத் தள்ளுவதுமான ஒருசில சமூகப் பழக்கங்கள் உண்டாகின்றன. இந்நிலைக்கு அப்பால் தமது ஒழுங்கைத் தாமே செம்மைப் படுத்திக் கொள்ளுவது நிகழ்கின்றது. ஒவ்வொரு செயலின் விளைவையும் அறிந்து கொள்ளுவதும், சட்டம், கோட்பாடு பொதுக் கருத்து ஆகியவற்றிற்குப் பணிதலும், தம்மைத் தாமே அடக்கிக் கொள்ளும் ஒரு நிலையினை எய்துவதும், தமது குறிக்கோளினைப் பற்றுக்கோடாகப் பற்றி வாழ்வதும் உயரியநிலையைக் காட்டும். இந்நான்கு குணப்பண்புகளில் வளரும் நிலைகள் [1]பகுத்தறி நிலை, [2]அடங்குதல் நிலை, [3]சமூக உணர்வு நிலை, [4]தன்னிலை ஆகியவை. நான்காவது நிலையை எய்துவதே மாணாக்கருடைய குறிக்கோளாக வேண்டும். நமது பள்ளிகள் நல்ல எடுத்துக் காட்டுகளையும், சூழ்நிலையினையும் தந்துதவவேண்டும். நான்கு நிலைகளும் எய்திய பிறகு பள்ளி இறுதி ஏற்பாட்டால் நன்மை பயக்கும். இதனால் கட்டாயக்கல்வி நாடுகளில் பள்ளியிறுதி வயதினை உயர்த்த முற்படுகின்றார்கள். நம் நாட்டில் கட்டாயக் கல்வி பதினொரு வயது வரைக்கு மட்டுமே உள்ளது. அவ்வயதுக்குள் பிள்ளைகள் அடங்குதல் நிலையைத்தான் அடைவார்கள். பள்ளியை விட்டு வெளியேறிவிட்டால் அவர்கள் மனம்போன போக்கெல்லாம் போவார்கள்.

ஒழுக்க வளர்ச்சி என்று ஒன்று உண்டு. பிள்ளைகளுடைய உள வளர்ச்சியோடு ஒழுக்க வளர்ச்சியும் உண்டாதல் இயல்பு. முற்றாத வயதில் வயது முதிர்ந்தவர்களுடைய குறிக்கோள்களை எல்லாம் வற்புறுத்துதல் கூடாது. அங்ஙனம் செய்வது ஒழுக்க வளர்ச்சிக்குத் தடையாகும். வயதுக்கேற்றவாறு கல்வியறிவு வளர்கின்றது. அங்ஙனமே அவர்கள் வயதுக்கேற்ற நடத்தையும் எதிர்பார்க்க வேண்டும். குழந்தைகள் குழந்தைகளே ; சிறுவர்கள் சிறுவர்களே; இயல்பூக்கங்களினால் உந்தப்பெறும் சிறு பிள்ளைகள் தமது ஒழுக்கத்தினை மாற்றிக் கொண்டே இருப்பார்கள். ஆனால் ஒழுக்க முதிர்வு ஏற்பட்ட பிள்ளையின் நடத்தை மாறாதது. இயல்பூக்கங்கள் நாளடைவில் சில பழக்கங்

1. Prudential stage 2. Submissive stage 3. Social stage (the counter part of the authoritarian) 4. Personal Stage

களைத் தந்து தன்னடக்கத்திற்கு வழி கோலுகிறது. ஆசிரியர் பார்வையிலும், அச்சத்திலும் அவை பலவாகின்றன. பள்ளி ஒழுங்கு பிள்ளைகளுடைய ஒழுக்க வளர்ச்சிக்கு ஏதுவாகின்றது. பற்றுக்கள் உண்டாகும் பருவத்தில் விருப்புக்களும் வெறுப்புக்களும் ஏற்படுகின்றன. அவற்றால் நல்ல குறிக்கோளும் நன்மை பயக்கின்றன. பற்றுக்கள் பலவகை. பெற்றோர், ஆசிரியர், பள்ளி, இல்லம், உடன்பிறந்தார், நண்பர், உறவினர், சமயம் ஆகியவை ஒரு சில பற்றுக்கள். இன்றைய மாணவர்கள் அரசியற் கட்சிகளில் சார்புகொள்ளுகிறார்கள். ஒரு சிலருடைய பற்றுக்கள் அளவிடமுடியாதவை. இன்று ஐ. நா. முதலிய சங்கங்கள் பிள்ளைகளுக்கு நாட்டுப்பற்று மட்டுமின்றி உலகத்தோடு ஒட்ட ஒழுகற் பண்பும் வளரவேண்டுமென்று திட்டம் வகுக்கின்றன. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது தமிழ்நாட்டின் [1]முதன்மைப் பற்று. நான்காவது நிலையாகிய தன்னிலையை எய்தும்போது [2]தன் மதிப்புப் பற்று ஒழுக்கத்துக்கு அடிப்படையாகின்றது. இந்த உயரிய நிலையினையே வள்ளுவர்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

ஒழுக்கமே எல்லாவற்றிற்கும் உயர்ந்தது. அஃது உயிரைவிடச் சிறந்தது எனக் கூறியுள்ளார்.

1. Master sentiment 2. Self-regarding sentiment

XXVIII

[1] ஒழுக்கமும் கட்டுப்பாடும்

Discipline என்ற ஆங்கிலச் சொல்லின் அடிச்சொல் Disciple என்பது. ஆசிரியர்—மாணுக்கர் உறவில் ஆசிரியக்குக் கட்டுப்பட்ட மாணுக்கரே Disciple என்ற சொல்லுக்கு உரியவர். நன் மாணுக்கரைப் பற்றி நன்னூலாருடைய சூத்திரம் காண்க.

அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோ
டெத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே.

அன்பு நிரம்பிய மனத்துடன் கூடி ஆசிரியன் எவ்வகையால் மகிழ்வானே அவ்வகையோடு பொருந்தி குளிருக்கு அனல் காய்பவன் நீங்காமலும் நெருங்காமலும் இருக்கின்ற நெருப்பைப்போல ஆசிரியனை நினைத்து அச்சங்கொண்டு நீங்காமலும் நட்புக் கொண்டு நெருங்காமலும் இருந்து, அவன் சென்றவிடத்தெல்லாம் நிழலைப் போலப் பின் தொடர்ந்து சென்று அறத்தினின்றும் வழுவாது வழிபடுதலாம். இங்ஙனம் அமைவுற்ற மாணுக்கன் அன்னத்தைப் போன்றவன். இத்தகைய மாணுக்கர்கள் நமது நாட்டில் அன்றும் இன்றும் என்றும் இருப்பர். அவர்கள் உள்ள வகுப்பு ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்ததொன்று. இன்று ஆசிரியர்கள் மட்டும் அல்லர்—அரசாங்கம் மட்டுமன்று—இந்திய அரசினரே மாணுக்கரிடை ஒழுங்கீனம் பெருகிவிட்டதென்று கூக்குரல் இடுகின்றுர்கள். இதற்குக் காரணம் பலர் பல படியாக மேடைகளில் எடுத்துரைப்பர். இதைத் தடுப்பதற்குப் பண்டைக் காலத்தின் குருகுல முறை வேண்டுமென்கிருர்கள். ஆசிரியர் மாணவரோடு நெருங்கிப் பழக வேண்டுமென்கிருர்கள். ஆசிரியக் குறைபாடுகள் நீங்க வேண்டுமென்கிருர்கள். ஆசிரியத் தகுதி உயர வேண்டுமென்கிருர்கள். ஆசிரிய முறைகள் மாற வேண்டுமென்கிருர்கள். ஏட்டுக்கல்வி பயனற்றுவிட்டது என்கிருர்கள். மாணவர்களை அடக்கி ஒடுக்க வேண்டுமென்றும் கூறுகிருர்கள். எதுவாயினும் இன்றைய கல்வி நிலையங்களும் அவற்றிலுள்ள வகுப்புக்களும் பெரிதாகி விட்டன. ஆசிரியர்கள் மாணவர்களை அறிந்து கொள்ளுவதற்கு நேரமும் வசதியும் இல்லை. பாடச் சுமை பெருகிவிட்டது. ஒவ்வோர் ஆசிரியரும் தமது பாடத்தின்மீது செலுத்தும் கவனத்தைப்போல் பிள்ளைகள் மீது செலுத்துவதில்லை. பிள்ளைகள் முக்கியமாகக் கருதப்பெற்ருல், அவர்களை நன்ருகக் கண்

1. Character and Discipline

காணித்தால், அவர்களுடைய அன்பைப்பெற முயன்றால், ஆசிரிய மாணவ உறவு மிளிர்ந்தால், தனி ஒவ்வொரு பிள்ளையையும் அறிந்து கொள்ள ஆசிரியர் முனைந்தால், கட்டுப்பாடு வற்புறுத்தப் பெற வேண்டியதில்லை. பிள்ளைகள் தாமே தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ளுவார்கள். ஒழுங்கின்மை நீங்கிவிடும். நமது வகுப்பறைகளில் ஆசிரியர் கற்பிக்காது மாணவர்கள் கற்றால் மாணவர்ப் பொறுப்பு அதிகமாகும்; மாணவர்கள் தாம் கற்கும் பயனை உணர்வார்கள். தாம் கற்கும் கல்வியின் திறனை அறிவார்கள். கீழ் வகுப்புக்களில் சிறிய பிள்ளைகளை அச்சுறுத்தி ஒழுங்குபடுத்துவது உண்டு. அத்தகைய வகுப்புக்களில் பிள்ளைகள் அடக்கமாகக் காணப் பெறுவார்கள். ஆனால் உடல் அசைவற்ற நிலையோடு உள்ளமும் அசைவற்று அவர்களுடைய கவனம் நிலைபெறாது நிலவும். அமெரிக்காவிலுள்ள முற்போக்குப் பள்ளிகளில் பிள்ளைகள் கட்டுப்பாடின்றித் தாமாகவே இயங்குவார்களாம். வகுப்பறையில் அமைதியை வற்புறுத்தக் கூடாதாம். ஒரு சில வகுப்புக்கள் அமைதியற்றுத்தான் இருக்குமாம். பிள்ளைகளைக் கட்டாயப்படுத்திக் கட்டுப்படுத்துதல் ஆசிரிய முறை அன்று. பிள்ளைகள் தம்மைத்தாமே கட்டுப்படுத்திக் கொள்ளுதல் ஒழுங்கு முறையாகும். வேலையில்லாது வகுப்பறையில் கட்டாயப்படுத்தி உட்கார வைப்பதும் உண்டு. சிறு பிள்ளைகளால் வேலை ஒன்றுமில்லாமல் அமைதியோடு அமர்ந்திருக்க முடியாது. வகுப்பறையில் அவர்கள் ஏதாவது தம் கவனத்துக்குப் பெற்றுக்கொண்டே இருக்கவேண்டும். பிள்ளைகளுடைய தளர்ந்த ஒழுக்கங்களுக்கு ஆசியர்களே காரணம். இளைஞர்களாகையால் இயற்கையாகவே அவர்கள் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் விரும்புவார்கள். கடுமையான ஆசிரியரை அவர்கள் வெறுப்பார்கள் என்று கொள்ளுவது தவறு. ஒழுக்க முறைகளில் வளர்ந்துவரும் பிள்ளைகள் ஒரு சிறிது தளர்வினையும் விரும்புவதில்லை. அவர்களைக் கண்டு பிற்போக்குப் பிள்ளைகளும் ஒழுங்கை விரும்பி முற்போக்கடைவார்கள். ஆசிரியர் மட்டும் பிள்ளைகளை அன்போடு ஆதரிக்கவேண்டும். பள்ளியில் பெறும் பயிற்சி ஒரு சமூகப் பயிற்சியாகும். அதுவே வெளிச் சமுகத்திலும் பழகுவதற்குப் பேருதவி புரியும். சென்னை மாநிலத்தில் குடிமைப் பயிற்சி வகுப்புக்களில் பல ஒழுங்குகள் வற்புறுத்தப் பெறுகின்றன. அவற்றைப் பெறும் வாய்ப்பினை ஆசிரியர்கள் நல்குவதில்லை. திட்டப்படி வழுவாத ஒழுக்கப் பழக்கத்தினைப் பெற்றுவிட்டால் மாணவர்கள் புதிய திருப்பத்தைப் பெறுவார்கள். ஒழுங்கும் கட்டுப்பாடும் பிள்ளைகளுடைய உள்ளங்களில் வளர வேண்டும். அவை புறத்தே நிகழ்ந்து மறைவது நமக்குக் கண்கூடு. பிள்ளைகள் இளமையில் ஒரு சிறிது கட்டுப்பாட்டோடு வளர்ந்தால், அவர்களுடைய உள்ளக் கிளர்ச்சிகளுக்கு ஓர் அமைதியைத் தேடிக்கொள்ளுவார்கள். "சிறு பிள்ளைகள் தமது உரிமையைத் தக்கபடி பயன்படுத்த இயலாது. பெற்றோரும் ஆசிரியரும் அவர்களுடைய திறனுக்கேற்றபடி ஒழுங்கும் கட்டுப்பாடும் அமைந்த

உறுதிகளை உணர்த்த வேண்டும். ஆனால் அவை அவர்களுடைய அறிவுக்கு அப்பாற்பட்டவையாதல் கூடாது. அவர்கள் அவற்றைப் பழக்கத்தில் அறிந்து கொள்ளுதல் வேண்டும். எப்போதும் ஆசிரியர்கள் உறுதிப்பாடுகளைத் தளர்த்துவது தவறு. பிள்ளைகள் உள்ளத்தில் பல இடர்ப்பாடுகள் நிகழும். புற உலகில் அவர்கள் பழகுவதற்கு அச்சம் கொள்ளுவது இயற்கை. அதனால் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அவர்களை அறிந்து, உற்ற வழியில் அவர்கள் ஒழுகலாற்றினை அன்போடு வழிகாட்டி வகுத்தால் அவர்கள் ஒழுங்கு வாழ்க்கையின் உண்மைப் பயனை எய்துவார்கள்"*

ஆசிரியர் பாடங்களுக்கு மட்டும் பொறுப்பே அன்றிப் பிள்ளைகளுடைய ஒழுங்குக்கும் பொறுப்பல்லர் என்று கருதுபவர்கள் இன்றைய ஆசிரியர்களுள் ஒரு சிலர் உண்டு. அப்பொறுப்பு, தலைமை ஆசிரியருடையதென்று அன்னார் வாளா விருப்பர். கற்பிப்பதற்கு வேறு ஆசிரியர், ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் வேறு ஆசிரியர் எனக் கருதுதல் தவறு. இவை இரண்டும் தொடர்புள்ளவை. அவற்றைப் பிரிக்க இயலாது. பெரும்பான்மை ஆசிரியத் திறமையே பிள்ளைகளை ஈர்த்து அவர்களை ஒழுங்கில் கட்டுப்படுத்தி விடும். ஆசிரியர் ஒரு சிலருடைய வகுப்புக்களில் பாடம் நிகழும்போது ஒழுங்கும் அதன் உடனிகழ்ச்சியாதல் காண்க. ஆனால் நன்றாகக் கற்றறிந்த ஆசிரியர் வகுப்பை நடத்தும்போதும் ஒழுங்கின்றி வகுப்பு அமைதி குறைவுற்றுக் காண்பதும் உண்டு. இதற்குப் பிள்ளைகளும் காரணமல்லர். ஆசிரியருடைய தகுதியும் குறை அன்று. ஆனால் அவருடைய ஆசிரியம் இழுக்குடையது. இத்தகைய ஆசிரியர்கள் அவர்கள் குற்றத்தை அறியாது பிள்ளைகளை வெறுப்பதும், கண்டிப்பதும், கண்டனம் செய்வதும் உண்டு. ஆசிரியம் நன்றாக அமைந்தால் தனி ஒவ்வொரு பிள்ளையும் வகுப்புச் செயற்பாட்டில் அல்லது ஆசிரியருடைய கற்பித்தலில் ஈடுபாடு பெறுவது திண்ணம். அப்போது கட்டுப்பாடு வேண்டியதில்லை, ஒழுங்கின்மை இராது. பிள்ளைகளுடைய கவனமெல்லாம் பாடத்தில் ஆழ்ந்து விடும். ஆசிரியருடைய புன்னகை பூத்த முகமும் பாட விளக்கத்தின் போது ஒவ்வொருவரைப் பற்றி அவர் மேற்கொள்ளும் அக்கறையும் வகுப்பு முழுவதும் நிலவும்படியான அன்பும் வகுப்பறையை விரும்பத் தக்க இடமாக்கும்.

ஆசிரியரது ஆளுமை வகுப்பறையில் மாணவரிடையே அச்சத்தையும் ஒழுங்கையும் உண்டாக்கக் கூடியது. ஆனால் எளிய ஆளுமையுடையவர்களும் வெகு எளிதில் வகுப்பறையைத் தம் வயமாக்கிக் கொள்ளுகின்றார்கள். அனுபவமுள்ள ஆசிரியர்களுக்கு வகுப்புக் கட்டுப்பாடு வெகு எளிதாகின்றது. அன்னார் தமது அனுபவத்தால் அத்

---

* Dr. Susan Isaacs (Teaching and Learning) by A. G. Hughes and E. H. Hughes

திறனைப் பெறுகிறார்கள். நமது ஆசிரியக் கல்லூரிகள் எத்துணை அளவு இதன் கருத்துக்களைக் கற்பித்தாலும் வகுப்பில் அவர்கள் பிள்ளைகளுடைய அடக்கத்தை ஆசிரியத் திறனாலன்றிப் பெற இயலாது. பல ஆண்டுகள் அனுபவம் மட்டும் பிள்ளைகளுடைய கவனத்தையும் வகுப்பு அமைதியையும் தந்துவிடாது. இதற்கு ஆசிரியத் திறமையே அடிப்படை. பள்ளியின் நிரந்தரமான ஒழுக்கங்களை அல்லது பழக்கங்களை பிள்ளைகளுக்கு ஓரளவு ஒழுக்கப் பயிற்சியாக அளிக்கலாம். இவற்றை ஆசிரியர் வற்புறுத்தாமல் நடை முறையாக்க வேண்டும். பள்ளி நேரம் முழுவதும் பிள்ளைகள் ஆசிரியர்களைக் கண்ணுற்ற வண்ணம் இருக்கின்றார்கள். அவர்களுடைய நடை, உடை, பாவனை, ஒழுங்குகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பிள்ளைகள் உற்று நோக்கிய வண்ணம் உள்ளார்கள். அதனால் ஒழுக்கம் நிறைந்த ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்டு. அவர்களைக் கண்டால் ஒழுக்கப் பழக்கம் உண்டாகும். ஒழுக்கம் நிறைந்த ஆசிரியர் ஒழுக்கமற்ற மாணாக்கனை எளிதில் திருத்தி விடுவார். தனி ஒவ்வொரு மாணாக்கன் மீதும் இரக்கம் கொள்ளும் ஆசிரியரை மாணவர்கள் வணங்குவதோடு வாழ்த்துவார்கள். ஒழுக்கமற்ற மாணாக்கனைத் தலைவனாக்கி ஒழுக்கப்பொறுப்புக்கள் அளித்து ஒழுங்கு முறையில் அவனை மட்டுமன்றி ஒழுங்கற்ற பிள்ளைகள் பிறரையும் ஒழுக்கத்தில் திருப்புவதுண்டு. பிள்ளைகளுடைய குற்றங்களை அதிகமாகக் கடியாமல் குணங்களைப் பாராட்டினால் பிள்ளைகள் தாமாகவே குற்றத்தைக் குறைத்துக் கொள்ளுவார்கள். இரைச்சலிட்டுப் பல கட்டளைகளை ஏவும் ஆசிரியர்களைப் பிள்ளைகள் விரும்புவதில்லை. கட்டளைகளைக் குறைவாகப் பயன்படுத்தும் ஆசிரியர்களே நல்லவர்கள். அத்தகையோர் வகுப்பறையில் தாம் வந்து நின்றவுடன் அமைதியைப் பெறுகின்றார்கள். யாதாகினும் ஒரு கட்டளையைப் பிறப்பித்து அதை வற்புறுத்தாது விடுவது ஆசிரியருக்கு இழுக்காகும். குடியாட்சி முறையில் ஒவ்வொரு கட்டளையையும் பிள்ளைகளோடு பேசித் தெளிவாக்கிக் கொண்டு கட்டளையைப் பிறப்பிப்பது ஒரு நல்ல முறை. காரணமின்றிப் பிள்ளைகளை வெறுத்தால் ஆசிரியர் வெறுக்கப்படுவது திண்ணம். உண்மையான அன்போடு பழகும் ஆசிரியரிடத்தில் மாணவர்கள் உண்மையாகவே அன்பு காட்டுகிறார்கள்.

முற்போக்குப் பள்ளிகளில் பிள்ளைகள் கட்டுப்பாடின்றித் தமது விருப்பம் போல் நடந்து கொண்ட பின்னர், அவர்கள் தாமாகவே ஒழுக்கங்களை வகுத்து அவற்றின்படி நடப்பது நல்ல முறை என்று கூறுவதுண்டு. ஆனால் பிற பள்ளிகளில் பள்ளி ஒழுக்கமென்று ஒன்று உண்டாகையால் அதற்கிணங்கப் பிள்ளைகள் பழகிக் கொள்ள வேண்டியது கடமை. அவர்கள் தாமாகவே ஒழுக்கங்களை வகுத்துக் கொள்ள முடியாது. ஆசிரியர்கள் அவர்களை ஒழுக்கங்களில் ஈடுபடுத்த வேண்டியது கடமை. நமது நாட்டில் சட்டாம் பிள்ளைகள் பரம்பரை என்று ஒன்று உண்டு. இதைக் கண்ணுற்ற ஆங்கிலேயர்கள் இதன் பயன்களை

அறிந்து அதைத் தமது நாட்டில் பரப்பினர்கள். இது அமெரிக்காவி லும் பரவியது. இன்று குடிமைப் பயிற்சியின் பெயரால் பிள்ளைகள் தம்மைத் தாமே ஆட்சி புரிந்து கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு பள்ளி யிலும் ஆட்சி மன்றம் என்று ஒன்று உண்டு. அதன் உறுப்பினர்கள் மாணவர்களே. அவர்களுக்கு வழிகாட்டியாக ஆசிரியர் விளங்குகிறார். மாணவர்கள் தமது ஒழுக்கக் கோட்பாடுகளைத் தாமே வகுத்துக் கொள்ளலாம்.

ஒழுங்கு உள்ளத்தே நிகழுவது; அது அகவயப்பட்டது. கட்டுப் பாடு ஒரு திட்டத்தின்பாற் பட்டது; அது புறத்தது. கட்டுப்பாடு ஒரோவழி கட்டுப்பட்டவர்களுடைய விருப்பமின்றியும் காட்சி அளிக்கும். கட்டுப்படுபவர்களுடைய விருப்பத்தோடு நிகழ்ந்தால் அது விரும்பத் தக்கது. கட்டுப்படுத்துபவை கட்டுப்பாட்டுக்கு உட்படுபவரைக் கட்டுப் பாட்டில் கட்டுறச் செய்யும். மாணவர்கள் ஆசிரியர் முன்னரும் பின்ன ரும் ஒரே ஒழுங்கில் கட்டுப்பாட்டினைத் தமது இயற்கை உந்துதலால் பெற்று நடந்து கொள்ளுவதே உண்மையான ஒழுங்கு முறையாகும். ஆசிரியர் முன்னர் மட்டும் அமைதியும் பின்னர் அமர்க்களமுமாக வகுப்பு அமைவுற்றால் அவ்வகுப்புப் பிள்ளைகளுக்கு ஒழுங்கீடுபாடு இல்லை என்றே கூறவேண்டும். "தானடங்கத் தன்குலம் விளங்க" என்ற ஒரு பழமொழி உண்டு. பிள்ளைகள் அறிய வேண்டியவற்றை அறிந்து நல்வழியில் தாமே அடங்க வேண்டும். ஒழுங்கினை ஆசிரி யரோ மற்றவரோ வற்புறுத்திப் பெறுதல் கூடாதது. பிள்ளைகள் தாமாகவே சிறிது சிறிதாகத் தமது ஒழுகலாற்றினை வகுத்துத் தம்மை அடக்கிக் கொள்ள வேண்டும். பணிவு ஏற்பட்டால் அடக்கம் எளிதாகி விடும். எனவே அடக்கமென்பது உளநிலை. அது தன்னடக்கமாகும். பிள்ளைகள்பால் தன்னடக்கம் ஏற்படுவதற்கு, இல்லங்களிலும் பள்ளி களிலும் நல்ல சூழ்நிலைகளும் எடுத்துக் காட்டுக்களும் விளங்குதல் வேண்டும். [1] தன் விருப்பத்திற்கிணங்கிய அடக்கம் என்ற ஒரு தொடர் மொழி உண்டு. தன் விருப்பம் என்றால் பிள்ளைகள் மனம் போன படி அடங்காதிருத்தல் என்று பொருளன்று. பிள்ளைகள் தாமாகவே பல கட்டுப்பாடுகளுக்குத் தம்மை உட்படுத்திக் கொண்டு அடக்கத் தோடு நடந்து கொள்ளுவது என்று பொருள். தன் விருப்ப நிலையில் புறத்திலிருந்து கட்டுப்பாடு வேண்டியதில்லை. இஃது அகக் கட்டுப் பாட்டின் ஓர் உயரிய நிலை. நமது பள்ளிகள் பல இவ்வகையில் அமைய வேண்டும். ஆனால் இஃது உண்மையாவதற்கு ஆசிரியர்கள் விழிப் பாகத் தாம் கண்காணித்த வண்ணம் இருக்கவேண்டும். இளம் பிள்ளை கள் தாமாகவே தம்மை அடக்கிக் கொள்ளுதல் இயலாது. அவர்களு டைய பழக்கங்களைச் சின்னஞ் சிறு வயது முதல் ஒழுங்காக்கிக் கொள்ள உதவினாலன்றி அடக்கம் உருப் பெறாது. பள்ளி, ஆசிரியர்கள், ஆசிரி

1. Permissive Discipline

யம் ஆகிய மூன்றும் பிள்ளைகளுடைய ஒழுங்குகளுக்கு வித்திடுவதோடு நில்லாது விழிப்போடு அவர்களை வளர்க்கவும் வேண்டும்.

ஒழுங்கன்றி நல்லாசிரியம் நிகழாதென்று கருதுவார் பலர். வகுப்பறையில் அமைதியோடுதான் ஆசிரியம் இயலும் என்பார்கள். அதனால் பள்ளியாட்சியின் தலையாய பெற்றியாக ஒழுங்கு முறையைக் கவனிக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். ஆனால் ஒழுங்கு முறைகளைக் கற்பித்து விட்டால் ஒழுங்கு ஏற்பட்டு விடாது. அல்லது ஒழுங்கு வேண்டுமென்று கட்டளையைப் பிறப்பித்து விட்டாலும் ஒழுங்கு உண்டாகி விடாது. ஆசிரியர் அமைதி, அமைதி, என்று இரைச்சலிட்டு அமைதியை வற்புறுத்தினாலும் ஏற்படும் அசைவற்ற அமைதியும் ஒரு சிறிது நேரத்திற்குப் பிறகு குலைந்து விடும். ஆனால் ஒழுங்கினை ஒழுங்காக ஒழுகும் பழக்கத்தில் கொண்டு வரவேண்டும். ஒழுங்கினை வகுப்பதற்கு ஒழுக்கக் கோட்பாடுகள் வேண்டும். கோட்பாடுகளை வற்புறுத்தினால் பள்ளி ஒழுங்குகள் ஒரு திட்டத்துக்கு உருவாகும்.

தண்டனை விதித்தல் :

"அடியாத மாடு படியாது", "அடி உதவுவதைப் போல் அண்ணன் தம்பி உதவ மாட்டான்" என்றும் "கண்ணை மட்டும் விட்டு விட்டு உடற்றோலை உரித்துவிடு" என்றும் "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்றும் தண்டனை விதிப்பதை உயர்த்திக் கூறுவதுண்டு. கடுமையான தண்டனை நமது நாட்டில் அண்மைக் காலம் வரையில் பிள்ளைகளுக்கு விதிப்பதுண்டு. கயிற்றைப் பிடித்துத் தொங்குவது, எழுத்தாணியை அடியில் வைப்பது, கால்களுக்கடியில் தீயிடுவது, பிரம்பினால் உடல் முழுவதும் கண்ட இடத்தில் அடித்து வாட்டுவது, புண்கள் உண்டாக அடிப்பது, பள்ளியை விட்டு ஓடிவிடும் பிள்ளைகளுக்கு விலங்கிடுவது, படியாத பிள்ளைகளைக் காலை மடக்கிக் கொண்டும் குனிந்தும் படிக்கச் செய்வது, பட்டினி போடுவது இவை போன்ற பிற நூலாசிரியர் கண்ட திண்ணைப் பள்ளிக்கூடப் பழக்கங்கள்.

உடலையும் உள்ளத்தையும் வேறுவேறாகக் கண்டவர்கள் உள்ளத்தின் வளம் யாவர்க்கும் ஒன்றே என்று கருதினார்கள். இஃது அரிஸ்டாடிலின் கூற்று. இதைத் தழுவியவர்கள் பிள்ளைகள் கற்காததற்குக் காரணம் அவர்களுடைய உடற்றசைகளின் வெறுப்பென்று கொண்டார்கள். அதனால் அறிவாற்றலை வளர்ப்பதற்கு உடலைத் தண்டித்து ஒடுக்க வேண்டும் என்று கருதினர். ரூஸோ மட்டும் பிள்ளைகளுடைய குற்றத்தைத் தண்டனை விதித்துக் கண்டித்தல் தகாதென்று எடுத்துரைத்தார். அவர்கள் குற்றம் இழைத்தால் அதன் விளைவுகளை அவர்களே அடைவர் என்று கருதினர். [1] டாக்டர் ஆடம்ஸ் என்பார் தண்டனைக் கால முதல் பிள்ளைகள் தாமாகவே

1. Dr. Adams

தம்மை ஒழுங்கு படுத்திக் கொள்ளும் காலம் வரையில் நிகழ்ந்த வற்றை மூன்று காலங்களாகப் பிரிக்கின்ருர். முதற்காலம் அடிமேல் அடி அடித்துப் பாடம் கற்பித்த காலம். ஆசிரியர்கள் மாணவர்களை அடித்துக் கொண்டே இருந்தார்கள். இடைக்காலத்தில் ஆசிரியர்கள் தமது ஆளுமைத் திறனும் வாழ்ந்த வகையாலும் மாணவர்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கி அவர்கள் வழியைப் பின்பற்ற உதவினுர் கள். [1] இரக்பி பள்ளியின் தலைமையாசிரியராக விளங்கிய [2] டாக்டர் ஆர்னுல்டின் பெருமையை அறியாதார் இலர். இந்தக் காலத்தில் மாணவர்களுக்கு எல்லா உரிமைகளும் வழங்க வேண்டுமென்று வற்புறுத்துகிருர்கள். ஃப்ரோபெல், மான்டிசோரி முதலானேர் குழந் தைகளைக் குழந்தைகளாகவும் சிறு பிள்ளைகளைச் சிறு பிள்ளைகளாகவும் நடத்துமாறு வற்புறுத்தியுள்ளார்கள்.

தண்டனைகள் பெரும்பாலும் குற்றத்துக்குத் தண்டனை என்ற முறையில் வழங்குவதுண்டு. அல்லது குற்றமிழைத்த பிள்ளைக்குத் தண்டனை விதித்தால் மற்றவர்கள் அக் குற்றத்தை இழைக்கமாட்டார் கள் என்பதும் ஒரு கருத்து. அல்லது குற்றமிழைத்த பிள்ளைகள் குற்றத்தை நினைந்து வருந்தித் திருந்துவதற்குத் தண்டனை விதிப்பதென்பதும் ஒரு கருத்து. வழி வழியாகப் பள்ளி ஆசிரியர்கள் குற்றத்துக்கு ஏற்ற தண்டனைகளை விதிக்கின்றனர். அபராதக் கட்டணம், பள்ளிப் பிள்ளைகள் முன்னர் குற்றத்தைக் கண்டிப்பது, வீட்டுக்கு அனுப்பாது பள்ளி நேரத்துக்கு அப்பால் நிறுத்துவது, திருப்பித் திருப்பித் தான் செய்த குற்றத்தைச் செய்ய மாட்டேன் என்று எழுதச் சொல்லுவது,* ஓர் அறையில் அடைத்து வைப்பது ஆகியவை ஒரு சில தண்டனைகள். இன்று அரசினர் சட்டங்களில் தண்டனை விதிக்கும் ஆசிரியர்களுக்குத் தண்டனை விதிப்பதற்கு இடம் உண்டு. தலைமை ஆசிரியர் ஒருவரே பிரம்பால் உள்ளங்கையில் ஆறடிகள் அடிக்கலாம். அவர் தண்டனைப் பதிவேட்டில் (தேதி, மாணவர் பெயர், குற்றம், தண்டனையின் விபரம், அவர் கையொப்பம் ஆகியவை அடங்கியவை) தான் விதித்த தண்டனையைப் பதிவு செய்ய வேண்டும். ஆனல் நமது மாநிலத்தில் குடிமைப் பயிற்சி அளிக்கும் சூழ்நிலையில் மாணவர்களுடைய குற்றத்தை அவர்களே அறிந்து திருத்திக் கொள்ள வழி வகுக்காது அவர்களைத் தண்டித்தால் பள்ளிக் குடியாட்சி முறைக்கு இழுக்காதல் காண்க. ஆசிரியர் வயது முதிர்ந்

1. Rugby School 2. Dr. Arnold

*நமது நாட்டில் ஒரு பள்ளியில் குற்றமிழைத்த பிள்ளையை ஓர் ஆசிரியர் வகுப்பறைக்குப் பின்னலிருந்த ஒரு வைக்கோல் அடைத்துள்ள அறைக்குள் தள்ளித் தாழிட்டுக் கொண்டதாகவும், பின்னர் கதவைத் திறந்து பிள்ளையைத் தேடியபோது அங்கு ஒதுங்கி இருந்த ஒரு மலைப்பாம்பு அவனை விழுங்கி விட்டதாகவும் ஒரு திடுக்கிடும் செய்தியை ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் சில ஆண்டுகளுக்கு முன் நான் படித்தேன்.

தவர்; உடல் வன்மை கொண்டவர்; மாணவன் தவறிழைத்திருக்கலாம். ஆனால் அவன் வயதில் சிறியவன். உடல் வன்மை குறைந்தவன்; அவன் தவற்றைக் கண்டு ஆசிரியர் சினம் கொள்ளுகிறார். தமது அமைதியை இழந்து நெறி பிறழ்ந்து சினமடங்கும் வரையிலாவது அல்லது தனது கை நோகும் வரையிலாவது அவனை அடித்து விடுகிறார். இவருடைய அடியைத் தாங்கிக் கொள்ளுகின்றானே அன்றி மாணவன் ஆசிரியரைத் திருப்பி அடிப்பதில்லை. ஆசிரியர் கொள்ளும் ஆவேசம் தமது நிலையை இழந்ததொன்று; அஃது ஒரு விலங்கு நிலை. பின்னர் அவர் தண்டித்தலின் விளைவைக் குறித்துப் பயந்தும், தாம் சினம் கொண்டதற்காக வருந்தியும் துன்பமடைவது யாம் கண்ட பல காட்சிகள். தண்டனை விதிப்பது நாகரிகம் அற்ற ஒரு செயலென்று கல்வியாளர்கள் கருதுகிறார்கள். குழவிப் பருவம் முதல் பிள்ளைகளை வழுத்துவதும், வளர்ப்பதும் மிக முக்கியமாகும். பிள்ளைகளின் இல்லங்களும் பள்ளிகளும் ஒன்றுபட்டால் இரண்டுக்கும் பொதுவான பிள்ளைகளுடைய நலம் ஒழுங்காக அமையும்.

XXIX
ஆசிரியப் பண்பாடுகள்

ஆசிரியராகவே பிறந்தாரல்லார் ஆசிரியர் ஆகார் எனக் கூறுவார் உளர். ஆசிரியரைப் போன்றேர் மாணுக்கர் என்றும், ஒரு பள்ளி அதன் ஆசிரியரைப் போன்றது என்றும் கருதுவார் உளர். நல்ல கட்டடங்களும் சிறந்த விளையாட்டுத் திடலும், விஞ்ஞான, வேதிய, உயிரியல், மக்கண்மை இயல்களுக்கான அறைகளும், நூலகங்கள் ஆகிய எல்லாவற்றிற்கும் வசதிகள் அமைந்தும் நல்லாசிரியர்கள் ஆங்கே பணியாற்ருது விட்டால் அவை யாவும் பயன்படா. இவை யாவும் உயிரற்ற அஃறிணைப் பொருள்களே. இவற்றிற்கு உயிரூட்டு பவர்கள், இவற்றை இயக்குநர்கள் ஆசிரியர்களே. மாணவர்களெல்லாம் அவர்கள் பருவத்தே பொம்மைகளுக்கு ஒப்பாவார்கள். அவர்களை ஆட்டிவைத்தாலன்றி அவர்கள் ஆடமாட்டார்கள். அவர்கள் எங்ஙனம் ஆட்டி வைக்கப் பெறுகின்றனரோ அங்ஙனமே அவர்கள் ஆடுவார்கள். நல்ல முறையில் ஆட்டி வைப்பவர்கள் நல்லாசிரியர்கள். நல்லாசிரியன் இலக்கணத்தை நன்னூலார் வகுத்துள்ளார்.

" குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலை பயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மிணையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே. "

உயர்குடிப் பிறப்பும், அருளும், இறைவழிபாடும், பெருந்தகைமை யும், பல நூல்களில் தேர்ச்சியும், மாணுக்கர்களுக்கு எப்பொருளை யும் தொடுத்துச் சொல்லுகின்ற சொல் வன்மையும், நிலத்தையும் மலையையும் நிறைகோலையும் பூவையும் ஒக்கின்ற குணங்களும், உலகத்தை அறியக்கூடிய அறிவும் பிற பண்புகளும் பொருந்தி இருக்கப் பெற்றவரே நல்லாசிரியராவார். ஆசிரியர் பொறுமை யிலும் பிள்ளைகளுக்கு உற்ற பருவத்தில் அவர்களுடைய முயற்சி அளவுக்குத் தகுதியாகப் பயன் தருதலால் அவர் நிலனுக்கு ஒப்பா வார். மலையைப் போன்ற அளவு கல்வியையும், மலையை அசைக்க முடியாததைப் போன்ற அசைக்கப்படாத கல்வி அறிவையும், பலராலும் அறியக் கூடிய உயர்ச்சியையும், தன்னிடம் எப்போதும் வற்ருத கல்விப் பொருளை மாணுக்கர்க்கு அளிக்கும் கொடைத் திறமையையும், உள்ளவர் ஆசிரியர். நிறைகோலைப் போன்று பொருளின் அளவை ஐயம் தீர உணர்த்தல் திறனும் பூமலர்தலைப் போன்ற முகமலர்ச்சியும் அவருக்கு இலக்கணமாம்.

ஆசிரியர் ஆகாதவர்க்கும் நன்னூலார் இலக்கணம் வகுத்துள்ளார். கற்பிக்கும் திறமை இல்லாதவன், இழி குணம் உள்ளவன், மாணுக்கருடைய திறனைக் கண்டு அழுக்காறு கொள்ளுபவன்; வஞ்சக நெஞ்சன், மாணவரை அச்சுறுத்துபவன் ஆசிரியனுக மாட்டான்.

நன்னூலார் இலக்கணத்துக் கொப்ப ஆசிரியர்கள் அமைவது அரிது! அரிது!! ஆயினும் அத்தகையோர் ஒரு சிலராவது இன்று ஆசிரிய வானில் ஒளிவிட்டாலன்றி இன்றைய ஆசிரியர்கள் நன்ருக உருப்பெற இயலாது. ஒவ்வோர் இலக்கணத்துக்கும் நேர்மாருன ஆசிரியரைத் தான் இன்று நம் பள்ளிகளில் காண்கின்ருேம். பயிற்சிக் கல்லூரிகளிலாவது நல்லாசிரியர்கள் பொறுப்பேற்ருல் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களுக்கும் ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்களுக்கும் எடுத்துக் காட்டுகளாக அவர்கள் விளங்கலாம். இன்று புது முறையில் ஆசிரியர்களுக்கு இன்றியமையாத தேவைப்பாடுகள் வரையறை செய்யப்படுகின்றன. ஆசிரியருக்கு உடல் நலம், மனநலம், நுண்ணறிவு, ஆளுமை ஆகியவற்ருேடு அகன்ற கல்வியறிவும் வேண்டும். ஆசிரியப் பணி மிகவும் கடுமையானதால் உடல்வன்மை உள்ளோர்களே அதை ஏற்றுக்கொள்ள முடியும். அடிக்கடி நோயுறுபவர்கள், இருமல் முதலிய நோயுற்றவர்கள், உடற்கட்டு அற்றவர்கள் சிறு பிள்ளைகளோடு பழகுதல் கூடாது. தொற்றுநோய் உள்ளவர்கள் பிள்ளைகளுக்கு அவர்களுடைய முற்று நோயைப் பரப்பி விடுவார்கள். இன்று அரசினர் கல்லூரிகளில் பணியாற்றுபவர் நீங்கலாக மற்ற ஆசிரியர்கள் உடல் நலச்சான்று பெறுவதில்லை. நோயுற்றவர்கள் பலர் ஆசிரியர்களாகின்ருர்கள். குளித்து ஆடை உடல் தூய்மைகளோடு ஆசிரியர் வகுப்புக்குள் நுழையவேண்டும். உடற்றூய்மை அகத்தூய்மைக்கு வழிகாட்டும். உடல் நலத்தைப் போன்று உள நலனும் நுண்ணறிவும் இன்றியமையாதவை. அறிவு நிறைந்த ஓர் ஆசிரியரே ஆசிரியத்துக்கு வேண்டிய தகுதியுள்ளவராவார். ஆசிரியம் நல்ல மன நலனைத்தான் நாடும். மனவெழுச்சி சார்புற்ற அமைதி இல்லாதவர்கள் அடிக்கடி பல குற்றங்களை இழைக்கின்ருர்கள். ஆசிரியருக்குப் பொறுமை மிகவும் வேண்டற்பாலது. மாணவர்களோடு பழகும்போது பொறுமையை இழந்து விட்டால் ஏற்படும் விளைவு மிகக் கேடாக இருக்கும். பல சூழ்நிலைகளும் சூழ்வினைகளும் சில சமயங்களில் ஆசிரியரை வருத்தும். இடர்ப்பாடுகள் பல ஏற்படும். பெற்ருேர், பிள்ளைகள், பள்ளித் தலைவர், பள்ளி ஆட்சியாளர்கள், அரசினர், தணிக்கையாளர்கள் ஆகியோர் ஆசிரியரைக் கண்காணித்த வண்ணம் இருக்கின்ருர்கள். பிள்ளைகளிடையே பழகுவதற்குப் பண்பாடுகள் வேண்டும். பிள்ளைகள்பால் அன்பு காட்டும் ஆசிரியருக்குத் தமது தொழிலில் இன்பம் உண்டு. தன் பணியில் ஆற்றல் இருந்தாலன்றி நல்ல ஆசிரியச் சூழ்நிலைகள் உண்டாகா. முகமலர்ச்சியும் மன அமைதியும் அன்பு கெழுமிய நோக்கும் வெற்றிக்கு வழிகள்.

ஓர் ஆசிரியருடைய ஆளுமைத் திறன் தனது உடல் உள்ள நலன்களைச் சார்ந்தது. ஆளுமைத் திறனில் அடங்கக்கூடிய பண்புகள் பலப்பல. ஆசிரியருடைய உருவங்கள் ஒரு காலத்தில் நகைப்பொருளாக்கப்பட்டன. ஆனால் அன்றிருந்ததைப் போன்று இன்று ஆசிரியர் ஏமாளியாக இல்லை. எனினும் ஆசிரியருக்கு நல்ல உருவத் தோற்றமும் தூய ஆடையும் நல்லொழுக்கங்கள் நிறைந்த உள்ளமும் இன்றியமையாதவை. இவை யாவும் கல்வித் தகுதியின் அடிப்படையில் அமையவேண்டும். கல்வியாலான பல திறன்களும் உள்ளவராதல் வேண்டும். ஒரு துறையில் மட்டும் தனிப்புலமை பெற்றவர் பல்லோராலும் விரும்பக்கூடிய ஆசிரியராகார். இன்று நம் பள்ளிகளில் பல துறைகளில் பயின்ற ஆசிரியர்கள் தொடக்க நிலைகளில் வேண்டுபவர்கள். 'உயர்நிலைகளில் தனித்துறைப் புலமையே வற்புறுத்தப் பெற்றாலும் பல துறையில் அடிப்படைக் கல்வியாவது பெற்றுள்ளவராதல் வேண்டும்.

ஆசிரியப் பண்பாடுகள் யாவை என்று பேரறிஞர்கள் ஆராய்ச்சி செய்து ஒரோவழி அறுதியிட்டுள்ளார்கள். தனி ஒவ்வொருவரையும் மதிக்கும் தன்மை, குழு மனப்பான்மை, பகுத்தறிவோடு நடந்து கொள்ளுதல், ஒற்றுமைத் திறன், அறிவாற்றல், கருத்துக்களை விருப்பு வெறுப்பற்று ஆயும் திறன், குழவி பேணல், குழவி உணர்தல், சமூகப் பழக்கம், நல்ல குடிமகனாதல், மதிப்பிடுதல் திறன், ஆசிரியத்தில் ஆர்வம் ஆகிய பன்னிரண்டு குணங்கள் ஆசிரியர்களுக்கு தேவைப்பாடுகளென்று ஆசிரியக் கல்வியை ஆய்ந்து அறிக்கை வெளியிட்ட அமெரிக்கக் கல்விக் குழுவினர் 1938ஆம் ஆண்டில் வரையறை செய்தார்கள். மற்றோர் ஆசிரியக் குழுவினர் ஆசிரியராகும் ஒவ்வொருவரும் கீழ்க்கண்டபடி வாக்குறுதி அளிக்கவேண்டும் என்று முடிவு செய்தார்கள். "நான் என் உடலத்தை நலத்தோடும் வளர்ச்சி பெறக் காப்பாற்றுவேன்; நான் நாள்தோறும் நன்றாகக் கற்று என்னுடைய உள்ளத்தை வளர்ப்பேன்; நன்மையை நாடி அதன்படி வாழ்வேன்; நான் மற்றவரோடு நல்லுறவோடும் நட்போடும் நன்மொழிகள் பேசி நல்லவனாக நடந்து கொள்ளுவேன்; பள்ளியிலும், இல்லத்திலும் பிறர்க்கு உதவியும் தொண்டும் செய்வேன். உலக அனுபவத்தினின்றும் நல்ல நூல்களினின்றும் நல்ல நண்பர்கள் வழியினின்றும் நல்லவற்றை நாடி நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ளுவேன். நன்மை கடைப்பிடித்துத் தீமையை அகற்றத் தலைமை ஏற்றுக் கொள்ளுவேன். ஆசிரியப் பெரும் பதவியில் இவற்றை எல்லாம் இடைவிடாது இயற்றி மன உறுதியோடு ஏற்றுக் கொள்ளுவேன்."

நல்லாசிரியர் கற்பித்தலில் பேரவாக் கொள்ளுவார். கற்பிக்கும் ஆற்றல் அவருக்கு அளவு கடந்தது. கற்பிப்பதில் இன்பம் காண்பார். தாம் கற்பிப்பது யாதென்றும் அறிவார். வயிற்றுப் பிழைப்புக்காக அவர் ஆசிரியரல்லர். ஆசிரியத்தில் மிக்க அக்கறை கொள்ளுவார்.

நல்லாசிரியர் தமது பாடத்தில் திளைப்பார். அவர் தொடுத்துக் கூறும் திறனை மாணவர்கள் சுவைப்பார்கள். பிள்ளைகள் அல்லலுறுவதில்லை. உவகையோடு தமது பாடத்தைக் கற்றுக் கொள்ளுவார்கள். பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு எப்படிக் கற்றுக் கொடுப்பதென்று நல்லாசிரியருக்குத்தான் தெரியும். நல்லாசிரியர் கற்பிக்கும்போது அன்பு மயமாகவும், புவிப்பொறையோடும், சினமின்றியும், பிற்போக்குப் பிள்ளையாயினும், அடங்காப் பிள்ளையாயினும் சினங் கொள்ளாமலும் காட்சி அளிப்பார். ஆசிரிய ஆர்வம் பிள்ளைகளை ஈர்க்கக் கூடியது. தனி ஒவ்வொரு பிள்ளையையும் நல்லாசிரியர் நன்கு அறிவார். ஒவ்வொருவரையும் கற்கும் செயலில் ஈடுபடுத்துவார். மெதுவாகக் கற்கும் பிள்ளைகளை ஆதரித்து அவர்கள் மீது சினவாது அணைப்பார். மாணவர்களுள் வேண்டியவர் வேண்டாதவர் என்று அவருக்கு இல்லை. பிள்ளைகளைக் குறைவாகப் பேசமாட்டார்; வசை பாடமாட்டார். தன்னோடு சரி சமமாக மாணவர்கள் எல்லாரையும் கருதுவார். பிள்ளைகளிடம் பரிவன்பு கொள்ளுவதும், புன்னகை புரிவதும், அவர்களிடையில் இன்புறுவதும், பெற்றோர் நிலையில் பழகுவதும், மாணவரோடு நட்புக் கொள்ளுவதும் நல்லாசிரியப் பண்பாடு. உடல் உருவத்தோடு உள்ளப்பெருக்கத்தையும் ஆசிரியர் கொள்ள வேண்டும். ஒன்பான் சுவைகள் நிரம்பியவர் திறமையோடு வகுப்பை நடத்துவர். பிள்ளைகள், ஆசிரியரைக் கண்டவுடன் அகமகிழ வேண்டும். இளம் பிள்ளைகள் முதற் பெரும்பிள்ளை வரையில் அன்போடுள்ள ஆசிரியர்களுக்குப் பெருமதிப்பு அளிக்கின்றார்கள். அன்பென்று சொன்னால் பிள்ளைகளைக் கட்டுப்பாடின்றிச் சுற்றவிடும் அன்பன்று. கட்டுப்பாட்டிற்கு அடக்கும் ஆசிரியரையே பிள்ளைகள் விரும்புவார்கள். கட்டுப்பாட்டினை நெகிழவிடும் ஆசிரியர் மீது பிள்ளைகளுக்கு மதிப்பு இராது. அவரை ஓர் ஏமாளி என்றே ஒழுங்கற்ற பிள்ளைகளும் கருதுவார்கள். பிள்ளைகளை ஒழுக்கவழியில் அன்போடு ஈர்த்து நிறுத்துவதுதான் பயனளிக்கக்கூடிய அன்பாகும். எல்லாப்.பிள்ளைகளும் பள்ளியை விட்டுப் பல ஆண்டுகள் கடந்த பிறகும் ஆசிரியர் ஒரு சிலரை மட்டுமே நினைவில் கொண்டு பாராட்டுகிறார்கள். அவர்களை அடக்காது நல்வழி காட்டாது காலத்தைப் போக்கிய ஆசிரியர்களை நினைப்பதில்லை. எந்த ஆசிரியர்கள் நல்லொழுக்கத்தோடு நல்ல முறையில் பிள்ளைகள் பால் அக்கறை கொண்டு கற்பித்தவர்களோ அந்த நல்லாசிரியர்களை நன்றியோடு நினைப்பது மட்டுமன்றிப் பிறரிடம் அவர்களைப் பற்றிப் பேசியும் பாராட்டுகிறார்கள். அன்னாருடைய பல பழக்கங்களையும் தமதாக்கிக் கொள்ளுகிறார்கள்.

மருத்துவர்கள் வழக்கறிஞர்கள் ஆகியோரோடு யாரும் எப்போதும் உறவு கொள்ளுவதில்லை. நோயுற்றபோது மருத்துவரிடம் செல்லுகிறோம். நோயற்றபோது மருத்துவரை நாம் நினைப்பதில்லை. வழக்குத் தீர்த்துக்கொள்ள வழக்கறிஞரை நினைக்கிறோம். பின்னர் அவரைப்

பற்றி நினைப்பதில்லை. ஆனால் குழவிப் பருவ முதல் பள்ளி கல்லூரி இறுதிவரையில் ஆசிரியர்கள் பலரோடு உறவாட வேண்டும். உறவு மேற்போக்கான உறவன்று; ஆசிரியர் உள்ளமன்றோ மாணவர் உள்ளத்தை மாண்புறச் செய்வது! ஆசிரியரது பேருள்ளம் மாணவரது சிற்றுள்ளங்களை ஆசிரியம் நிகழும்போது தொட்டாலன்றி ஆசிரியப் பயன் பிள்ளைகளுக்குக் கிட்டாது. எனவே ஆசிரியது அகநெகிழ்வு புறத்தோற்றத்தின் வழியாகப் பிள்ளைகளது உள்ளங்களோடு உறவாடும். ஆசிரியராகப் பணியாற்றுவோர் ஓரளவு பொதுக் கல்வியும் ஆசிரியப் பயிற்சியும் பெற்றவர்கள். உயர்நிலைப் பள்ளிகளில் உள்ளோர் பல்கலைக் கழகத்துப் பட்டங்கள் இரண்டு பெற்றவர்கள். தமது விருப்பப் பாடங்களில் தேர்ச்சி பெற்றவர்கள். ஆயினும் அவர்கள் வகுப்பில் பொதுப்படப் பிள்ளைகளுக்குப் பாடத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டிய கடனுக்கோ அல்லது கடமைக்கோ பாடத்தைச் சொல்லிக் கொடுப்பவர்கள் அல்லர். அவர்கள் வகுப்பறையிலுள்ள பிள்ளைகளை நோக்கி அவர்கள் பாடம் கற்பித்தல் வேண்டும். பிள்ளைகள் காலவயதிலும் மனவயதிலும் வேறுபட்டவர்கள். ஒரு வகுப்பிலுள்ள மாணவர்கள் எல்லாரும் ஒரே தரத்தினரல்லர். அதனால் ஒவ்வொருவருக்கும் பயன்படும்படி ஆசிரியம் அமைய வேண்டும். அல்லாக்கால் ஆசிரியர் வெறும் பாடத்தைக் கற்பித்தவராவார். பிள்ளைகளுக்குப் பாடத்தைக் கற்பிப்பதே அவருடைய கடமை. ஒவ்வொரு பிள்ளையும் அவரது பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டியது அவருடைய ஆசிரியப் பணி. அதனால்தான் கற்பிக்கும் பாடத்தைப் பிள்ளைகள் கற்றுக்கொள்ளுகிறார்களா என்று அவர்கள் கண்காணிக்க வேண்டும். பலதரப்பட்ட பிள்ளைகளுக்கு ஏற்ப அவருடைய முறை அமைய வேண்டும். அதனால் நாள்தோறும் கற்பிக்க வேண்டிய பாடங்களை முன்னேற்பாடாக்கிக் கொள்ள வேண்டும். பிள்ளைகளை அறிந்தவராகையால் அவர்களுக்கு ஏற்பப் பாடங்களின் கற்பிக்கும் முறைகளைப் பிள்ளைகளுக்கு உற்ற வழியில் சிந்தித்துப் பாடக் குறிப்புப் புத்தகத்தில் தமக்கு உதவுமாறு வரைந்து கொள்ளுதல் வேண்டும். பெரும்பாலும் ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பாடப் பொருளை மட்டும் புத்தகத்திலிருந்து பெயர்த்து எழுதிவிடுகின்றார்கள். அது பாடக்குறிப்பாகாது. எந்தக் கற்பிக்கும் முறையில் எந்தக் கற்பிக்கும் கருவியைக் கொண்டு ஒவ்வொருநாள் பாடத்தையும் கற்பிக்கத் தமது முன்னேற்பாட்டை வரையவேண்டும் என்பதேபாடக் குறிப்பாகும். எனவே நாள்தோறும் ஆசிரியர் தாம் கற்பிக்கும் பாடங்களை நன்றாகத் தான் அறிந்துகொண்டு கற்பிக்கும் முறைகளையும் வகுத்துக்கொள்ள வேண்டும். ஆசிரியருடைய முன்னேற்பாடு மிக மிக இன்றியமையாதது. பாடக்குறிப்பினை ஆசிரியர் பலர் வேண்டா வெறுப்பாக எழுதுகின்றார்கள். அரசாங்கக் கண்காணிப்பாளர்களுக்காக எழுதுகின்றார்கள். எத்துணை ஆண்டுகள் அனுபவம் உள்ள ஆசிரியராயினும் அவர் சொல்லிக் கொடுக்கும் பாடம் ஒன்றேயாயினும் ஆண்டுதோறும் பிள்ளை

கள் வேறுபட்டவர்கள். ஆண்டுதோறும் புதுப் பிள்ளைகளுக்கு ஏற்பப் பாடத்தைக் கற்பித்து ஆண்டாண்டு தோறும் புத்துணர்ச்சியையும், புதிய இன்பத்தையும் பெறுவதே ஆசிரிய இன்பம். அத்தகைய இன்பத்தை நுகர்வோர் பிள்ளைப்பருவத்தில் திளைப்பவர். கொடுத்த ஒரு பொருளைப் பெறும் ஒருவர் பெற்றாலன்றிக் கொடுத்ததாகக் கொள்ளப்பட மாட்டாது. அங்ஙனமே கற்பிப்பதை மாணவர்கள் கற்றாலன்றிக் கற்பித்ததாகக் கொள்ளப்படமாட்டாது. எனவே கற்பித்தலும், கற்றலும் உடனிகழ்ச்சிகள்.

ஆசிரியருடைய பல பழக்கங்களைப் பிள்ளைகள் அறிவார்கள், ஆசிரியர் ஒரு சிலர் உரத்த குரலில் தாம் அறிந்த எல்லாவற்றையும் பிள்ளைகள் மீது பொழிவார்கள். அவற்றை அறிய இயலாதவர்கள் ஆசிரியரைக் கண்ணுற்ற வண்ணமாக இருந்தாலும் அறிந்துகொள்ள இயலாத நிலையில் அல்லலுறுகிறார்கள். ஆசிரியர் வகுப்புக்கு ஏற்ற குரலில் எடுத்தல், படுத்தல், நலிதல் ஆகிய இலக்கணத்துக்கு ஒப்பத் தமது குரலை அமைத்துப் பிள்ளைகள் அறியத்தக்க முறையில் பேசுதலும் உண்டு. ஒரு சிலர் தாம் கற்பிக்கும் எல்லாவற்றையும் பிள்ளைகள் நெட்டுருச் செய்ய வற்புறுத்துவார்கள். ஒரோவழி அது நல்ல முறையாயினும் பிள்ளைகள் அறிந்து கொள்ளாதவற்றை நெட்டுருச் செய்தல் மறத்தலுக்கே யாகும். ஒரு சிலர் வகுப்புத் தொடக்க முதல் இறுதிவரையில் கரும்பலகையில் பிள்ளைகளுடைய முகத்தையும் பாராது எழுதிய வண்ணம் இருப்பர். அவை யாவற்றையும் பிள்ளைகளுக்கு விளக்கமாட்டார்கள். ஒரு சிலர் பாடம் கற்பிப்பதை அடிக்கடி விட்டுவிட்டு வகுப்பறையில் பிள்ளைகளுடைய ஒழுகலாற்றில் குற்றங்களைக் கண்டித்த வண்ணம் இருப்பர். ஒரு சிலர் பிள்ளைகளுக்குக் களிப்பூட்டி அவர்களுடைய களிப்போடு கை தட்டலைப் பெறுதலில் தமது ஆசிரியத்தின் வெற்றியைக் காண்பர். மற்றும் சிலர் பிள்ளைகளோடு ஒரு பிள்ளையாக ஒன்றி உறவாடிக் கற்பிப்பர்.

ஆசிரியம் ஒரு கலை. அதனுடைய படிகள் பல. அதற்கு இன்றியமையாதவை, மனிதத் தன்மையும் இளைஞர்களுடைய உள்ளங்களை வளர்க்கக்கூடிய தகுதியுமாகும். இளைஞர்களிடையே நிகழும் குற்றங்கள் பலவாயினும், குணங்கள் சிலவற்றைக் கண்டு குணநலம் பாராட்டுதல் ஒரு பண்பு. கல்வித் தகுதி, பண்பட்ட ஆசிரியம், தொகுத்து விரிவுரையாற்றும் ஆற்றல், இனிமையாக உரையாடும் திறன், பிஞ்சு உள்ளங்களை ஈர்க்கும் வன்மை, அவற்றின்பால் தமது உள்ளம் நெகிழும் மென்மை ஆகியவை ஒவ்வோர் ஆசிரியரது ஆளுமைத் திறத்தின்பாற்பட்டவை.

XXX

ஆசிரியரும் சமூகமும்

ஆசிரியப் பணியையே கண்டனம் செய்தார் இங்கிலாந்து நாட்டுப் பேரறிஞர் [1]'மெகாலே' என்பார். ஆசிரியம் எல்லாப் பணிகளுக்கும் தாழ்வானது என்று இடித்துரைத்தார். ஆசிரியர்கள் உதவாக்கறைக ளென்றும் அவர்கள் [2]இருசேலம் ஆசியாவில் உள்ளதா அமெரிக்காவில் உள்ளதா என்று அறியா அறிவிலிகள் என்றும் இழிவுரை கூறியுள்ளார். அவர் கூற்றின் வழி ஆசிரியப் பெருமக்கள் சமூகத்தில் யாங்ஙனம் கருதப் பெறுவார்களென்பது கூறுமலே விளங்கும். ஆயினும் ஆசிரியர் களுக்குரிய நிலையைச் சமூகம் அளிக்காது வாளா நிற்கின்றதே என்ற குறைபாடு உறுத்துகின்றது. நமது நாட்டில் மட்டுமன்று பிறநாடு களிலுங் கூட இக்குறைகள் உண்டு. மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் பொறியியலார் ஆகிய பிற பணியாளரைக் காட்டிலும் ஆசிரியர்களுடைய மதிப்பு குறைவுற்றுள்ளது என்பது தேற்றம். குறைவுற்ற நிலைக்கு ஆசிரி யர்களே பொறுப்பென்று அறிஞர்கள் மட்டுமன்றி ஆசிரியன்மார்கள் பலரும் கருதுகிருர்கள். பள்ளி ஆட்சியாளர் ஆசிரியர்கள்பால் நம்பிக் கையை நழுவவிடுகின்ருர்கள். தமது குழந்தைகளை ஆசிரியர்கள் திறமை உள்ளவர்களாக்குகின்ருர்கள் என்று அறிந்தும் பெற்ருேர்கள் வாளா இருக்கின்ருர்கள். நமது நாட்டில் பெற்ருேர்களுடைய மதியாமை நாம் அறிந்ததே. ஆசிரியர்களுடைய தாழ்ந்த நிலை அவர்களை வாழ்க் கையில் நன்ருகப் பொருத்தாது அவலத்தில் ஆழ்த்துவிக்கிறது. சமூகம் அவர்கள்பால் கொண்டுள்ள மதியாமையின் காரணத்தால் ஆசிரியர்கள் தமது பணியில் ஊக்கத்தை இழக்கின்ருர்கள். இன்றைய கல்வித் திட்டத்தில் உள்ள குறைபாடுகளே சமூகத்தினர் ஆசிரியர்கள் பால்கொண்டுள்ள மதிப்பின்மைக்குக் காரணமாகும் என்று கருதுவாரும் உளர். மாணுக்கருடைய ஒழுங்கீனங்களுக்கெல்லாம் ஆசிரியர்களுடைய தாழ்வுற்ற நிலையே காரணமென்றும் கருதுவார் உண்டு. ஆசிரியை களுக்கு மட்டும் இத்தகைய இன்னல் இல்லாதொழிவது மாணுக்கியர்க ளுடைய ஒழுக்க முறைக்கு எடுத்துக்காட்டாகின்றது.

சமூகத்தில் ஆசிரியர்களுடைய நிலை உயர்வதற்கு அவர்கள் தம் பணி செய்து கிடந்தால் நிலை உயருமென்று பேரறிஞர்கள் அறிவுறுத்து கின்ருர்கள். இன்றைய மாணவர்கள் நாளைச் சமூகத்தினராகையால் மாணவப் பருவத்தில் அவர்கள் எத்தகைய எண்ணங்களைத் தம்மைப் பற்றிப் பதியவைக்கின்ருர்களோ அவற்றையே நாளை அவர்கள் வயது

---

1. Macaulay 2. Jerusalem

வந்த பிறகு உருவாக்கிக் கொள்ளுகிறார்கள் என்பது தெளிவு. ஆகையால் ஆசிரியர்கள் எல்லா வகைகளிலும் எடுத்துக் காட்டாக இருந்தாலன்றி மாணவர்கள் ஆசிரியர்கள்பால் மதிப்பை உயர்த்தமாட்டார்கள். நம் நாட்டின் பண்டைக் காலத்திய ஆசிரியர்கள் வறுமையிற் செம்மையைக் கண்டதுபோல் நாமும் சான்றாண்மை நீங்காது வாழ்ந்தால் அவர்கள் எய்திய மதிப்பினைப் பெறுதல் இயலும்.

ஆசிரியப் பணி பல பாடப்பணிகளாக இன்று வகுக்கப்படுகிறது. ஆனால் எப்பணியாயினும் மாணவர்கள் ஆசிரியரைப் பல கோணங்களில் பார்த்து அறிகிறார்கள். எனவே எல்லாக் கோணங்களிலும் ஆசிரியர் எடுத்துக்காட்டாக இருத்தல் நன்று. பத்து ஆண்டுகள் பள்ளியில் படித்த ஒரு மாணுக்கன் இறுதியில் ஆசிரியர் பலரிடத்தில் பயின்றும் ஒரு சிலரை மட்டும் மதிக்கின்றானென்றால் ஏனையோரெல்லாம் அவன் உள்ளத்தில் இடம் பெறுவதற்குத் தகுதியற்றவர்களாகிறார்கள் என்பதே அதற்குக் காரணம். இதைக் கருதாது ஆசிரியர்களுடைய நிலை சமூகத்தில் உயர வேண்டுமென்று குறை கூறிக்கொண்டிருந்தால் மட்டும் குறை நீங்கிவிடாது. தமது மதிப்பினை உயர்த்திக்கொள்ளாத ஆசிரியர்கள் சமூகத்தில் என்ன ஈடுபாடு கொண்டாலும் அவர்களுடைய நிலை உயர்ந்துவிடாது. சமூக நலத் தொண்டர்களாயினும் அவர்கள் தொண்டர்களே அன்றி ஆசிரியர்க்குரிய மதிப்பினைப் பெற மாட்டார்கள். நல்லாசிரியர்களாக இருந்தால் அவர்கட்கு என்றும் மதிப்புண்டு. அரசினர் மதிக்கவேண்டும் என்று ஒரு சாரார் கூறினும் அரசினரைக் காட்டிலும் பொதுமக்கள் மதிப்பே விரும்பத் தக்கது. அரசியலில் ஈடுபாடு கொண்டால் நலமுண்டு என்று ஒரு சிலர் கருதுவர். இன்றைய நிலையிலுள்ள குடியாட்சியில் அரசியல் சழக்கிலும் பிணக்கிலும் ஆசிரியர்கள் சிக்கிக்கொள்ளாது அரசியலார்களுக்கும் உயர்ந்தவர்களாயிருத்தல் நலம். பொதுவாக ஆசிரியர்கள் சமூகத்துக்கு எந்த அளவு பயன்படுகிறார்கள் என்பதைக் கருதியே சமூகம் மதிப்பளிக்கின்றது. ஆசிரியர்களுடைய பணி சமூகத்தையே உருவாக்குவதாகும். ஆகையால் சமூகச் சிற்பிகள் ஆசிரியர்கள். அவர்களே சமூக நிலைக்குப் பொறுப்பாவார்கள். ஆயினும் அவர்களுடைய பணி மருத்துவர்கள், பொறியியலார் ஆகியோருடைய பணிகளைப் போன்று அப்போதைக்கப்போதே உடனடியாக நலனோ பயனோ பயக்கக்கூடியதன்று. ஆசிரியர்கள் பணி நெடுங்காலங் கடந்து பயனளிக்கும் இயல்புடையது. உடனடியாக அதன் பயனைச் சமூகம் காணமுடியாது. அதனால் சமூகம் நன்றி மறவாது தம்மை உருவாக்கிய சிற்பிகளுக்குக் கடமை செலுத்த வேண்டியது கடனாகும். எதுவாயினும் எச்சமூகத்திலும் நல்லாசிரியர்கட்கு நன்மதிப்பு விரும்பாமலே அதர் வினவி வந்து சேர்கின்றது.

II. பள்ளி ஆட்சி

1. கல்வி யாட்சி

கல்வியாட்சி பல நிலைக்குரியது. ஆட்சியாளர் ஆட்சிக்குரிய பல திட்டங்களை அறிதல் வேண்டும். நிலைக்குநிலை திட்டங்கள் வேருகலாம். தொடக்கநிலை, உயர்நிலை, கல்லூரி, தொழிற்கல்விப் பள்ளி, தொழிற் கல்விக் கல்லூரி ஆகிய வெவ்வேறு நிலைகள் உள்ளன. நம் நாட்டில் நாம் உரிமை பெறும்வரையில் பல நிலைக்கல்வி அயலவராட்சியில் அவர் கள் விரும்பிய வண்ணம் அமைந்து கிடந்தது. உரிமைக் காலந் தொடங்கிக் கல்வியின் முற்போக்கு பெருகிக்கொண்டு வருகிறது. பல நிலைக் கல்வி நிலையங்கள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் மாணவர் எண்ணிக்கை பெருகிவிட் டது. பள்ளிக் கட்டடங்கள் பலவாகக் கட்டப்படுகின்றன. ஆறு வயது முதல் பதினொரு வயதுவரை எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாயக் கல்வி யின் கட்டத்தை மூன்ருவது திட்டத்தின் இறுதியிலாவது முடிவுறச் செய்வதற்கு அரசினர் அரும்பாடு படுகின்றனர். அதற்குப் பின்னர் பதினன்கு வயது வரையிலென்ற ஒரு கட்டம் உள்ளது. அடித்தளத் தில் கல்வி பெருகப் பெருக மேல் தளங்களிலும் மாணவர் எண்ணிக்கை வளருமல்லவா? எனவே கல்வியாட்சி மிகவும் பொறுப்பு மிக்கதாகி விட்டது. தொடக்கநிலைக் கல்விக்காக அனைத்திந்தியத் தொடக்கநிலைக் கல்விக் குழுவும், உயர்நிலைக் கல்விக்காக அனைத்திந்திய உயர்நிலைக் கல்விக் குழுவும், கல்லூரிக் கல்விக்காகப் பல்கலைக் கழக மானியக் குழு வும், தொழிற் கல்விக்காக அனைத்திந்தியத் தொழிற்கல்விக் குழுவும் ஏற்படுத்திக் கல்வியின் முழு வளர்ச்சியைக் கண்காணிப்பதோடு அவற்றை நலமுற ஆட்சி செய்வதற்கும் வேண்டிய ஏற்பாடுகளை அரசினர் செய்து வருகின்றனர். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திய ஆட்சி அமைப்பே நீடித்து வந்தாலும் நாட்டின் முன்னேற்றத்தில் ஏற்படும் தேவைகளுக்கேற்பப் பல மாறுதல்களும் ஆட்சி அமைப்பில் உண்டாகி வருகின்றன. அப்போதைக்கப்போது மக்கள் முன்னேற்றத்திற்கு ஏற்பக் கல்வி ஏற்பாடுகளும் பாடத்திட்டங்களும் மாற்றியமைக்கப் பெறு கின்றன. ஆசிரியக் கல்வி மாற்றியமைக்கப் பெற்றுள்ளது. மக்களாட்சி யில் கல்வித் திட்டங்கள் மாறிமாறி ஏற்படுவதென்ருலும் ஆட்சி அமைப்பில் பொறுப்பேற்பவர்கள் கல்வி ஆட்சியைத் தொடர்ந்து நடத்துபவர்களாகின்றனர்.

கல்வி ஆட்சியில் நேரல் தொடர்பு ஆசிரியர்களிடத்தும் மாணவர் களிடத்துமாகும். இவ்விரு வகையினரும் சமூகத்தினராகையால் கல்வி யாட்சிசமூகத்தோடு தொடர்பு கொண்டதொன்று. அதனல் ஐந்தாண்டுத் திட்டங்களில் கல்விப் பொறுப்பினைச் சமூக நலத் துறையோடு இணைத் துள்ளனர். எனவே கல்வித் துறை ஆட்சியாளர்கள் சமூக அனுபவம்

பெற்றவர்களாதல் வேண்டும். குழவிக் கல்வி முதல் முதியோர் கல்வி வரையிலும் ஏட்டுக் கல்வி முதல் நுணுக்கமான பொறியியற் கல்விவரையிலும், இன்னும் பலப்பல கல்விக் கலைகள், உடற்கல்வி, சுகாதாரக் கல்வி, குடிமைக் கல்வி இன்னோரன்ன பல துறைகளை ஆட்சி புரிவதற்கு ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் ஆகிய பல்லோரும் கலந்த தொடர்புநிலை கல்வியாட்சியின் உறவு நிலையாகின்றது. இப் பல தொடர்புகளை ஒருமைப் பாடாக்கிக் கல்விப் பயனை அவரவர்களுக்கு அளிப்பதே கல்வி ஆட்சி முறையின் சீரிய குறிக்கோளாகும். இக் காலங்களில் கல்வி எந்திரத்தை இயக்குவதற்குப் பல பொருள்கள் தேவைப் படுகின்றன. கட்டிடங்கள், பள்ளிப் பெருநிலங்கள், பள்ளித் தளவாடங்கள், ஆசிரியத்துக்குரிய உபகரணங்கள் இவற்றிற்கெல்லாம் பணம் வேண்டற்பாலது. இப் பணத்தைப் பொது மக்களிடமிருந்து வரியாக வசூலிப்பதால் கல்வி ஆட்சியாளர்கள் பொது மக்கள் சார்பாளிகளாகிய சட்டசபை உறுப்பினர்களுக்குப் பொறுப்பாவார்கள். எனவே கல்வி யாட்சி ஓர் ஒழுங்கு முறையில் திட்டமாக்கப்பட வேண்டும். திட்டத்தின்படி ஆட்சி எந்திரம் அமைக்கப்பட வேண்டும். எந்திரம் உயிரற்றதன்று. அது மனிதத்தயமானது. மாணவர்கள், ஆசிரியர்கள், ஆட்சியாளர்கள், பெற்றோர்கள் ஆகியோர் அடங்கியது. இவர்களேயன்றி ஏவுதற் கருத்தாக்களாக இயக்குநர்கள் தலைமை ஏற்றுக் கல்வி எந்திரத்தை இயக்கிக்கொண்டே இருத்தல் வேண்டும். பல உறுப்புக்களையும் ஒன்றுக்கி எதுவும் முரணிக் கொள்ளாமலும் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொன்றின் தேவைப்பாடுகளைச் சரிப்படுத்துவதில் தட்டுப்படாமலும் இயக்குவதே இயக்குநர்களுடைய அருமைப்பாடாகும். ஆனல் கல்வி யாட்சி கடைப்பிடிப்பது யாதென்று அறிவிக்கும் மக்கள் தேவைப் பாடுகளுக்கு ஏற்பக் கல்விப் பயன்களை மாற்றி அமைத்து ஒவ்வொரு துறையின் சாதனைகளை அறிதற்கும் அடிக்கடி மதிப்பீடு செய்கிறுர்கள். அங்ஙனம் செய்தால் குறைகளை நீக்கி நிறைகளைப் பெருக்க ஏதுவாகும்.

மதச் சார்பற்ற மக்களாட்சிக்குத் தகுதியுள்ள குடிமக்களை உருவாக்குவதே இந்தியக் கல்வியின் நோக்கம் என்று அனைத்திந்திய உயர்நிலைப் பள்ளி அறிக்கையில் கூறியுள்ளார்கள். எனவே வருங்காலக் குடிமக்களை உருவாக்க வேண்டியது கல்வியின் பரந்த குறிக்கோளாக விளங்குகிறது. மக்களாட்சி உருப்பெற வேண்டுமானுல் அதற்குரிய பரந்த பண்பாடுகளைக் கல்வி நிலையங்கள் அளித்து உதவவேண்டும். மக்களாட்சி வெறும் அரசியல் மன்றங்களாக அமைந்துவிட முடியாது. மக்களாட்சியில் மக்கள் தங்கள் வாழ்க்கையை உய்த்துணர்ந்தாலன்றி ஆட்சி மன்றங்களில் குடியாட்சிப் பண்புகள் உருப்பெற மாட்டா. பள்ளிகளில் இளமை முதல் பிள்ளைகள் மக்களாட்சியின் வாழ் முறையைக் கற்க வேண்டியதாகின்றது. அதனுல் கல்வி முறையே மக்களாட்சியின் அடிப்படையில் அமைந்து வளர வேண்டியதாகிறது. இந்நோக்கத்

தைக் கொண்டே நம் நாட்டின் கல்வித் திட்டம் மாற்றியமைக்கப் பெற்றுள்ளது. ஆசிரியர்கள் உதவி இன்றி மக்களாட்சிக் கல்வி உருவாகாதாகையால், ஆட்சியாளர்கள் மக்களாட்சி முறையில் அவர்களுடைய உதவியை நாடுகிருர்கள். கல்வி ஏற்பாடுகள் பாடப் புத்தகங்களை அமைத்தல், கால அட்டவணை முதலிய பள்ளி உள்ளாட்சித் திட்டம் ஆகியவை முழுவதும் ஆசிரியர்களுடைய ஆலோசனையைக்கொண்டே அமைக்கப் பெறுவது காண்க. ஆட்சியாளர்களும் தணிக்கையாளர்களும் ஆதரவாளர்களாகவும் வழிகாட்டிகளாகவும் விளங்குகிருர்கள். அவர்கள் பொது மக்களோடு தொடர்பு கொண்டு பள்ளிகளுக்கு வேண்டிய நன்மைகளை அளிக்க முற்படுகிருர்கள். ஆசிரியர்களும் ஒருமனப்பட்டுப் பிள்ளைகளின் நன்மைகளையே ஒருமுகமாகக் கோருகிருர்கள். பிள்ளைகளும் இன்று ஆசிரியர்கள்பால் தவருன அச்சத்தைக் கொண்டு தயங்குவதில்லை. அவர்கள் ஆசிரியர்களோடு ஒத்துழைக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுவதோடு அவர்களைத் தமது வழிகாட்டிகளாகக் கொள்ளுகிருர்கள். தலைமை யாசிரியர்களும் ஆசிரியர்களோடு தோழமை பாராட்டித் தோளொடு தோள் நின்று தமக்குரிய தொண்டில் ஈடுபடுகிருர்கள். பள்ளியாட்சி குடியாட்சி முறையில் நடைபெறுகிறது. தலைமையாசிரியர் ஆசிரியர்களோடு ஒருவராக எல்லாப் பொறுப்புக்களையும் அவர்களோடு பகிர்ந்து கொள்ளுகிருர். மக்களாட்சியைக் கோரி மாணவர்க்கும் பொறுப்பளிக்க வேண்டி, அவர்களுக்கும் பள்ளி ஆட்சியில் ஓரளவு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. இதை ஒட்டியன்ருே பள்ளிகளில் மாணவர் ஆட்சி மன்றங்கள் செயற்படுகின்றன. ஆட்சி மன்றங்களும் குடியாட்சி முறையில் அமைக்கப் பெற்று நடைபெறுவதால் பிள்ளைகள் தமது பள்ளி வாழ்க்கையில் குடியாட்சியைக் குதூகலத்தோடு காண்கின்ருர்கள். பள்ளிக் கட்டுப்பாடுகளும் ஒழுங்கு முறைகளும் மாணவர்களே அமைக்கின்றமையால் இடர்ப்பாடு குறைவாகிவிட்டது. பிள்ளைகள் தமது பொறுப்புணர்ந்து தாமேற்கும் பணிகளைப் பொறுப்போடு ஆற்றுகிருர்கள். கல்வி கற்றலிலும் கற்பித்தலிலும் குடியாட்சிப் பண்புகள் வளர்க்கப் பெறுகின்றன. பள்ளியாட்சியின் பொறுப்பிற்கும் கல்வியின் குறிக்கோளுக்கும் நெருங்கிய தொடர்பு மிக முக்கியம். ஒவ்வொரு நாட்டிலும் இன்று நடைபெறும் கல்வித் திட்டம் அந்த நாட்டின் பற்றுக்கோட்டினையும் அந்நாட்டினர்கள் விரும்பும் கல்விக் குறிக்கோள்களையும் எதிரொளிக்கக் கூடியவை. எனவே கல்விக் குறிக்கோள்களுக்கும் கல்விச் செயற்பாட்டிற்கும் வேற்றுமை கூடாதென்க. இரண்டாவது உலகப் போர்க்காலத்தில் செர்மனி, இத்தாலி, உருசிய நாடுகளில் அவரவர்களுடைய கருத்துக் கொள்கைகள் அந்தந்த நாட்டின் கல்வித் திட்டத்தில் தாண்டவமாடின. குடியாட்சி நாடுகளில் பிள்ளைகள் நன்ருக உடலோம்புதற்கு வேண்டிய உணவும் உள்ளத்தைச் செம்மைப் படுத்துதற்கு வேண்டிய கல்வியும் அளிக்க வேண்டிய கடமை உண்டு. எனவே மக்களுடைய தேவைப் பாடுகளும்

கல்வி அமைப்பும் இயைபுபெற வேண்டும். நமது நாட்டில் உரிமை பெற்ற காலம் தொடங்கி மக்களின் தேவைப் பாடுகளுக்கு ஏற்ற முறையில் கல்வித் திட்டம் மாறிக்கொண்டே வருதல் கண்கூடு.

பள்ளிகள் நன்றாக நடைபெறுவதற்கு அவற்றின் நிறுவன அமைப்பு நல்ல முறையில் அமைய வேண்டும். நிறுவனமென்றால் பள்ளியின் கட்டட அமைப்பு, துணைக்கருவிகள், நடைமுறை உறுப்புக்களான கால அட்டவணை, பாடத்திட்டம், பதிவேடுகள் முதலியவற்றை ஒழுங்காக அமைத்துக் கொள்ளுவது மட்டுமன்று. பள்ளியில் இவற்றைக் காட்டிலும் ஆசிரிய மாணவ உறவு முக்கியமாகையால் ஆசிரியர்கள் தமது பணிகளில் கொள்ளும் நாட்டம், மாணவர்கள் மதிக்கும் தன்மை ஆகியவை நிறுவனத்தின் உயிர் நாடிகளாகும். பிள்ளைகள் வளர்ச்சியில் ஆசிரியர் காட்டும் பரிவும் இரக்கமும் நிறுவனத்தின் அடித்தளங்களாகும். ஆசிரியர்களுக்கும் தமது பணிகள் சமூகத் தொண்டின் பாற்பட்டவை என்ற கொள்கையின் அடிப்படையில் தந்நலம் பாராட்டாது பிறர் நலம் பேணுவதே குறிக்கோளாதல் வேண்டும். இதனாலன்றோ நல்ல நிறுவனங்கள் சிறந்த ஆசிரியர்களின் பெயரோடு கூறப்பெறுகின்றன. அத்தகைய பெரியாரன்றோ பள்ளி நிறுவனங்களுக்கு உயிரளிப்பவர்கள்!

ஒவ்வொரு பள்ளியும் ஓர் ஒற்றுமைக் கழகமாக விளங்குதல் வேண்டும். ஒற்றுமைக்குரிய உறுப்பினர்கள் தலைமையாசிரியரும் ஆசிரியர்களும், தலைமையாசிரியரும் மாணவர்களும், ஆசிரியர்களும் மாணவர்களும் பள்ளியும் பெற்றோருமாவர். எனவே இவர்கள் எல்லோரும் ஒன்றிய ஓர் இனமாக இயங்குவதே பள்ளிக் காட்சியாகும். ஓர் இனமாக இயங்கும் பள்ளியில் பிள்ளைகள் நல்ல முறையில் வளர்ச்சி பெறுவார்கள். பள்ளியில் தொடங்கும் இனவாழ்க்கை பள்ளிக்குப் புறத்தே சிறந்ததொரு சமூக வாழ்க்கையாக மாறுவதற்கு உதவும். பள்ளிநிலையம் ஓர் இன நிலையமாகவும் விளங்கும். இனத்தின் உதவியின்றிப் பள்ளி இயங்குதல் கடினம். ஆசிரியர்களும் நிர்வாகிகளும் மட்டுமே பள்ளியை நடத்திவிட இயலாது. சுற்றுப்புறச் சமூகத்தோடு தொடர்பு காணும் பள்ளிகள் பெயரோடும் புகழோடும் நடைபெற முடியும். ஆசிரியர்கள் முதற்கண் பெற்றோர்களுடைய தொடர்பினை நாடவேண்டும். பெற்றோர்கள் சமூகத்தின் பெரும்பான்மையோர் ஆவர். அவர்கள் ஆதரவு பெறும் பள்ளி மீத்திறம் பெறும். பள்ளிகள் சமூகத்தின் பல வழிவழிக் கொள்கைகளுக்கும் பண்பாடுகளுக்கும் தமது கல்வி ஏற்பாட்டில் இடமளித்து மாணவர்களை அச்சமூகத்தோடு ஒட்டி வாழ்வதற்கான ஆக்கத்தை அளித்துதவ வேண்டும். சமூகத் தேவைப் பாட்டுக்கும் பாட ஏற்பாட்டிற்கும் தொடர்பற்ற கல்வித் திட்டம் பள்ளிகளுக்கேற்ற தன்று. சமூகத்தோடு வாழ்வதற்கு வாழும் வகைகளைப் பள்ளிகளில் பிள்ளைகள் பழகிக் கொள்ளுதல் வேண்டும். எனவே பள்ளிகள் பிள்ளைகளுக்குப் பாடப் புறச்செயல்களில் ஈடுபாடு அளித்தல்

நன்று. சமூகப் பண்பாடுகள் பிள்ளைகளின் செயற்பாடுகளின் அடிப் படையில் அமைந்தால் வருங்காலத்தில் நல்லதொரு சமூகம் உரு வாகும்.

ஆசிரிய உலகம் இற்றை நாட்களில் புதிய கல்வி என்ற ஓர் தொடர் மொழியினை பறைசாற்றுகின்றது. புதிய கல்விக்கும் பழைய கல்விக்கும் வேறுபாடு அறிதற்குரியது. அன்று ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவா தென்று நம் மக்கள் கருதினர்கள். பழங்கல்வி ஏற்பாட்டில் மாணவர் புத்தகப் புழுக்களாயினர். ஆனல் புதிய கல்வி "பிள்ளைகள் ஏடு களுக்கா" அல்லது "ஏடுகள் பிள்ளைகளுக்கா" என்று ஆராய்கின்றது. பிள்ளைகளின் தேவைப்பாடுகளை ஒரு சிறிதும் கருதாது அன்றைய ஆசிரியர்கள் தாம் விரும்பியதைச் கற்பித்தார்கள். ஆசிரியர் சர்வாதி காரியாக வகுப்பறைகளில் கொடுங்கோன்மை வழங்கினர். ஒரு கரத்தில் ஏடும் மற்றொரு கரத்தில் பிரம்பும் கொண்ட அவர் கோலத்தை இன்று குழவியோடு குழவியாய் மாணவரோடு மாணவராய்ப் புதிய கல்வி மாற்றி விட்டது. பிள்ளை விரும்பாததைப் புதிய கல்வி வழங்காது. ஆசிரியரும் வழங்கமாட்டார். எனவே பிள்ளையை மையமாகக் கொண்ட புதிய கல்வியின் உண்மைகளை ஆசிரியர்கள் அறிந்து வருகின்றார்கள். கல்வி கற்பித்தற்கன்று என்ற கொள்கையின் அடிப்படையில் ஆசிரியர் வழி காட்டியாகிவிட்டார். இன்றைய பள்ளிகளில் பிள்ளைகள் தமது திறமைக் கேற்ப அடக்குமுறையில் வளர்ச்சியடையும் வாய்ப்பினைப் பெறுகின்றார் கள். தமது முழு ஆளுமைத் திறனை வளர்த்துக் கொள்ளுவதற்குப் புதிய பள்ளிகள் வழிகாட்டுகின்றன. செய்தறிந்து கற்றுக் கொள்ளுவதும் வாழ்க்கையை வாழ்ந்து கற்றுக் கொள்ளுவதும் ஒவ்வொரு செயலிலும் திறமை பெறுவதும் புதிய கல்வியின் கோட்பாடுகளாகிவிட்டன. ஒரு தொழிலை மையமாகக் கொண்டு கல்வி கற்பிப்பதை ஆதாரக் கல்வி வற் புறுத்துகிறது. தனி ஒவ்வொரு பிள்ளையும் தத்தமக்கு உரிய வளர்ச்சி யினைப் பெறும் வாய்ப்பைப் பெறுவதே புதுக்கல்வியின் திட்டமாகி விட்டது. தேர்வுகள் ஒவ்வொரு பிள்ளையின் முழு ஆளுமைத் திறனை அளவிட முற்படுகின்றன.

2. பள்ளிக் கட்டடங்கள்

நல்ல பள்ளியின் அமைப்பிடம் எது? பழம் பள்ளிகள் பல வற்றினை நாம் இன்று காண்கின்றோம். அன்று பள்ளிகளுக்கென தேடிய அமைப்பு, கட்டிய கட்டடம், சுற்றுப்புற வசதிகள் ஆகியவை நம்மை வியப்புறுத்துவன. ஒவ்வொரு பள்ளிக்கும் உடலும் உயிரும் உண்டு. பள்ளியின் கட்டட அமைப்பு உடலமைப்பு; பள்ளியின் உயிர் மாணவர்கள்; பள்ளி இன்றேல் மாணவர் இரார். மாணவர் இன்றேல் பள்ளி இராது. எனவே பள்ளியின் அமைப்பிடமும், கட்டடமும், அவற்றின் பலவகை வசதிகளும் மிக முக்கியமானவை. இன்றைய பெரும் பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் மக்கள் வாழ் இடங்களுக்குத் தொலைவில் கட்டப்பெற்றுள்ளன. அமைப் பிடம் போக்குவரத்து வழிகளில் அமையவேண்டும். பெருஞ்சாலை களில் அமைந்த பள்ளிகளாயின் போக்குவரத்து வண்டிகளின் இரைச் சல்களால் பாதிக்கப்பெறும். அதனால் சாலைக்குச் சிறிது தூரத்துக்கு அப்பால் கட்டடம் உள்ளடங்கி இருத்தல் நன்று. சாலை ஓரங்களில் உள்ள பள்ளிகள் மீது சாலை மண் படிந்து அசுத்தப்படுத்தும். பள்ளி யின் முகப்பில் நல்லதொரு தோட்டம் அமைந்திருந்தால் கட்டடத்தின் மீது மண்படியாது. சில பள்ளிகள் நம் நகரங்களில் நகரங்களுக்கொப்பக் கிடக்கும் சுற்றுப் புறங்களுக்கு நடுவண் அமைந்துள்ளன. பள்ளியின் பக்கலில் நான்கு புறங்களிலும் இல்லங்கள் அல்லது அங்காடிகள், பள்ளி ஓரத்தில் செல்லும் கழிநீர்ப் பாதைகள் இவை யாவும் பள்ளித்தளங்க ளுக்கு உகந்தவையல்ல. நகரிலாயினும், நகர்ப்புறங்களிலாயினும்— சிற்றூர்களிலாயினும், பேரூர்களிலாயினும் பள்ளிகள் அமைதி உள்ள இடத்தில் கட்டப் பெறுதல் வேண்டும். நமது மாநிலத்தில் சில பள்ளி கள் அமைந்துள்ள இடங்கள் சுற்றுப் புறத்தில் இயற்கை எழிலோடு காட்சி அளிக்கின்றன. சில பள்ளிகள் சுற்றுப் புறங்களில் குன்றுகள், பரந்த திடல்கள், ஆற்றங்கரைகள், ஊருக்கு வெளிப்புறம் அமைதி நிலவும் பகுதி, ஆலயத்தின் அண்மை, கோயிற் குளத்துக்கரை இன்னோ ரன்ன பல தலைசிறந்த இடங்களில் அமைந்துள்ளன. அமைதியுற்ற சூழ்நிலையில், எழிலுற்ற பகுதிகளில் பள்ளிப்பணி பாங்கு பெறுகிறது. ஆசிரியரும் மாணவரும் தமது முழுத்திறனை வெளிப்படுத்திக் கற்பித் தலையும் கற்றலையும் இரண்டறக் கலக்கச்செய்ய ஏதுவாகிறது. பிள்ளை கள் மட்டுமன்றி ஆசிரியர்களும் மற்றோர்களும் பள்ளிகள் அழகாக இருந்தாலன்றி ஈர்க்கப்பெற மாட்டார்கள்.

கட்டப்பெறும் பள்ளிகள் மேட்டுப் பாங்கில் கட்டப்பெற்றால் உயர்ந்து விளங்கும். பள்ளிகளை அழகுபடுத்துதல் என்ற ஓர் இயக்கம் நம் நாட்டில் பரவி வருகிறது. பள்ளிக் கட்டடங்கள் என்றும்

புத்தம் புதிய காட்சியளிக்க வேண்டுமென்று முனைகின்றனர்கள். கட்டடம் உயர்ந்த, பரந்த அறைகளைக் கொண்டதாகவும் நல்ல வெளிச்சத்துக்கும் காற்றோட்டத்துக்கும் வேண்டிய காலதர்கள் அமைந்ததாகவும் விளங்கல் நன்று. பகர எழுத்தைப் போன்றும் ஐ என்ற ஆங்கில எழுத்தைப் போன்றும் கட்டடத்தினை அமைத்தல் நன்று. பள்ளியைச் சுற்றிலும் பரந்த விளையாட்டுத் திடலும் அமைதல் வேண்டும். தொடக்கத்தில் ஏற்பட்ட கட்டடம் நாளடைவில் பெருகு வதற்கும் உயரத்தில் உயருவதற்கும் வேண்டியவகையில் ஆழ்ந்த அகன்ற அடித்தளம் போடவேண்டும். எனவே எதிர்காலத்திலுங்கூடப் பள்ளியின் வளர்ச்சியை முற்கூட்டியே கருதித் திட்டமிடுவது நல்லது. மேலை நாடுகளைப்.போன்று நம் நாடுகளிலும் ஒரு சில பள்ளிகளும் கல்லூரிகளும் நன்றாக அமைந்திருக்கின்றன. ஆயிரம் பிள்ளைகள் படிக்க வேண்டிய ஓர் உயர்நிலைப் பள்ளிக்கு இருபது ஏக்கர் நிலப் பரப்பு வேண்டுமென்று கருதுகிறார்கள். வகுப்பறைகள் எத்தனை என்று அறிந்து அதற்கேற்பக் கூட்டறைகளை அறுதியிட வேண்டும். இன்று கற்பிக்கும் முறைகளெல்லாம் மாறிவருகின்றதால் அவற்றிற்கேற்ப வகுப்பறைகள் அமைதலும் நன்று.

அமெரிக்கர்கள் பள்ளிக் கட்டடத்தைப் பற்றிக் கொண்டுள்ள சில கருத்துக்கள் கருதத் தக்கவை. கட்டடம், பாட ஏற்பாடு, பாடப் புறத் திட்டங்கள், பள்ளி ஓர் இன நிலையமாக விளங்குவதற்கு வேண்டிய பல வசதிகள் ஆகியவற்றைக் கருதியும் கற்பித்தலுக்கும் கற்றலுக்கும் ஏற்பவும் வேண்டிய இடவசதியோடு அமைய வேண்டுமென்று சொல்லு கிறார்கள். கட்டடத்தில் காற்றோட்டம், வெளிச்சம் நல்ல முறையில் அமைவுற்றுப் பள்ளியில் பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள், வருவோர் போவோர் ஆகிய எல்லோருக்கும் உடல் நலச் சூழலை அளிக்க வேண்டும். பள்ளியில் பயில்விக்கும் பாடங்கள் ஒன்றோடொன்று தொடர்புள்ளவை. ஆகையால் கட்டப்பெறும் அறைகள் ஒன்றுக்கு ஒன்றாக அமைந்தால் பல செயற்பாடுகள் ஒன்றன் பின் ஒன்றாக ஒன்றுக்கொன்று முரணின்றி ஒருங்கே நிகழும். காட்டாக, விஞ்ஞான அறை ஒருபுறமும், சோதனை அறை மற்றொரு புறமும், பாட அறை பிறிதொரு புறமும் அமையாது ஒருங்கே தொடர்ச்சியாக அமையலாம். நில்நூற் பாட அறையோடு கற்றல் கருவிகள் அறையும். இன்னும் அதனோடு தொடர்புள்ள மற்றவை எல்லாம் மாறி இராது ஒன்றன் பின் ஒன்றாக இருத்தல் நன்று. பள்ளி அறைகளின் அமைப்பு நிர்வாகத்துக்கு எளிதாகவும் பிள்ளைகளுக்கு வசதியாகவும் இருக்கவேண்டும். பள்ளிக் கட்டடம் பார்வைக்கு அழகாகவும், எளிமை யான முறையிலும் வசதிப் பெருக்கத்தோடும் இருத்தல் வேண்டும். பள்ளியோடு சார்ந்த பள்ளி மண்டபம் பொதுக்கூட்டங்களுக்கெல்லாம் இன்றியமையாதது. அதற்கு வேண்டிய தட்டுமுட்டுச் சாமான்கள் மண்டபத்திலேயே இருக்கவேண்டும். அடிக்கடி வகுப்பறையிலிருந்து

மண்டபத்துக்கும் மண்டபத்திலிருந்து வகுப்பறைக்கும் சாமான்களை மாற்றிக்கொண்டே இருந்தால் மரச்சாமான்களின் கட்டு நெகிழ்ந்து விடுவதோடு ஒரோவழி உடைந்தும் விடும். பெரும்பாலும் பள்ளி மண்டபங்கள் மாடியிலமையாது அடித்தளத்தில் பள்ளி முகப்பிலிருந்து நேராக நுழையும் வசதியோடு அமையவேண்டும். இக்காலங்களில் பயண ஊர்திகள் தங்க ஏற்ற இடம் ஒரு புறத்தே வசதியாக இருத்தலும் வேண்டும். மண்டபத்தில் உயர்ந்த மேடையும், இரு பக்கங்களில் தாழ்வாரமும், சுற்றுப்புறங்களில் தோட்டங்களும் அவற்றிற்கப்பால் முப்புறங்களிலும் வகுப்பறைகளும் அமைந்தால் மண்டபங்கள் நற்காட்சி தரும். மண்டபம் பொதுக்கூட்டத்துக்கும், மாணவர்கள் பல நோக்கோடு கூடுவதற்கு மென்றும், சிறப்பாகத் திரைக்காட்சி வகுப்புக்களுக்கும், பொது மக்கள் கூட்டங்களுக்கும் பல விழாக்கள் கொண்டாடுவதற்கும் பயன்படும்.

தொடக்க நிலைப்பள்ளிகள் நமது மாநிலத்தில் ஒவ்வொரு கிராமத் திற்கும் ஒன்றாக ஏற்பட்டு வருகின்றன. பழம்பள்ளிகள் கோவில்களி லும், மடங்களிலும், சத்திரங்களிலும் நடைபெற்று வந்தன. இன் றைய தொடக்கப் பள்ளிகள் தனிப்பட்ட கட்டடங்களைக் கொண்டுள்ளன. இடங்களைத் தேர்ந்தெடுப்பதில் சில கோட்பாடுகளைக் கருதுகின்றார்கள். பொதுப்பட அவை யாவை என்பதை முன்னர் குறித்தோம். விசால முள்ள இடங்களில் மனையைத் தேர்ந்தெடுத்துச் சுற்றிலும் சதுப்பு, குப்பை கூளங்கள் கொட்டுமிடம்—புதர்கள், சப்பாத்தி, காட்டுப்புறம், நெடுஞ்சாலைகள், நிழல்தரும் மரங்கள் அடர்ந்துள்ள இடங்கள் இவை அல்லாத கிராமத்துக்குச் சிறிது ஒதுக்குப் புறத்தில் கட்டட மனையைத் தேர்ந்தெடுக்கிறார்கள். பள்ளியைச் சுற்றிலும் திறந்தவெளி இருத்தல் காற்றோட்டத்துக்கும் சூரிய வெளிச்சத்துக்கும் நல்லது. மற்றும் இயற்கைக் காட்சிகள் சில இடங்களில் அமைவதுண்டு. அத்தகு இடங்களில் பள்ளிகள் தோன்றுவது நன்று. கட்டடங்களின் முகப்பை அமைத்தற்கு முன் காற்றடிக்கும் திசை, சூரிய வெளிச்சம் படும் பக்கம், மழை வீசும் திக்கு, ஆகியவற்றை அறிந்து அமைத்தல் நலம். மழைக் காலத்தில் சில கட்டடங்களுக்குள் வகுப்புக்களை நடத்த இயலுவதில்லை. வகுப்பறைகள் முழுதும் மழைக்காற்றாலும் மழையாலும் பாதிக்கப்பெறு வதுண்டு. தொடக்கப்பள்ளிகளில் ஒரு மாணவனுக்கு $9\frac{1}{2}$ சதுர அடிவீதம் தளப்பரப்பு அமைத்து வகுப்பறைகள் கட்டுவது விதியாகும். ஒவ் வொரு வகுப்புக்கும் தனித்தனி அறைகள் நன்று. சதுரப்பரப்புள்ள அறைகள் இருபத்தைந்து அடிக்குக் குறையாது அமைதல் நன்று. கூரை வேண்டிய அளவு உயரமாக இருத்தல் வேண்டும். காற்றோட்டம் கூரைப் புறத்திலும் வருவதற்குக் கூரையை ஒட்டிய காலதர்கள் வைத் தால் காற்றுப் போக்குவரத்து நன்றாக இருக்கும். வகுப்பறைகளைச் சுற்றியும் வாயிற்படி நீங்கலாகச் சன்னல்கள் நாற்பக்கங்களிலிருந்தும் வெளிச்சத்தைத் தரக்கூடியவையாக அமையவேண்டும். பிள்ளைகளுக்கு

நேராக வெளிச்சம் வந்தால் கண்கூசும். அதனால் ஒவ்வொரு வகுப்பிலும் இடப்புறத்திலிருந்து வெளிச்சம் வருவதே பிள்ளைகளின் கண்களுக்கு நன்று. சில பள்ளிகளில் வகுப்பறைகளெல்லாம் இருண்டு கிடக்கும்; கூரை தாழ்ந்திருக்கும்; காற்றுப் போக்கு வரத்து குறைந்திருக்கும்; ஒரு புறத்திலிருந்து வரும் வெளிச்சத்தைக் கொண்டு அங்கே வகுப்பு நடக்கும்; வகுப்பறைக்குள் நுழைந்தால் அங்கே கெட்ட காற்று வீசும். இஃதன்றிப் பிள்ளைகள் இடவசதிக் குறைவால் நெருங்கி உட்காருவார்கள். நெருக்கங் காரணமாக ஒரு பிள்ளைக்கு உற்ற தொற்று நோய் மற்ற பிள்ளைகளுக்கெல்லாம் எளிதில் பரவுகின்றது. ஒரு சில பள்ளிகள் நீண்ட ஒரே மண்டபத்தில் காலங்கழிக்கின்றன. வகுப்புக்களைப் பிரிக்க அடைப்புக்கள் கிடையா. ஐந்து வகுப்புக்கள் அல்லது பத்து வகுப்புக்கள் ஒரே மண்டபத்தில் நடைபெறும். ஒரு வகுப்பில் சொல்லிக் கொடுக்கும் பாடம் மற்றொரு வகுப்பில் மட்டுமல்லாது எல்லா வகுப்புக்களிலும் கேட்கும். மண்டபம் முழுதும் ஒரே இரைச்சல். வகுப்புக்கள் ஒழுங்கும் கட்டுப்பாடும் அற்ற நிலையில்தான் காணப்படும். இது பல பள்ளிகளில் காணும் காட்சி. சுற்றுப்புறங்களும் அசுத்தமாக இருக்கும். பள்ளிச் சுவர்கள் சுண்ணம்புப் பூச்சு அற்று அழுக்கோடு காண்பதுண்டு. இற்றைக் காலங்களில் இத்தகைய பள்ளிகள் இருத்தலில் இராமை நன்று. நல்ல கட்டடமாயின் நல்ல பள்ளிகள் உருவாகின்றன. மிகக் கேவலமான கட்டடங்களில் பள்ளியும் கேவல நிலையில் காணப்பெறுகிறது. அத்தகைய பள்ளிகளின் நிர்வாகிகள் வானமே கூரையாக ஒரு பள்ளியை நடத்தி விடுவார்கள்.

நல்ல பள்ளிகள் நல்ல கட்டடங்களைப் பெரும்பாலும் பெற்றவை. பிள்ளைகள் வளரும் இல்லங்களைப் போன்று பள்ளிகளை ஆசிரியர்கள், நிர்வாகிகள் உதவியோடு எழிலுற அமைத்துக் கொள்ள வேண்டும். நாள் முழுவதுமன்றோ பிள்ளைகள் பள்ளிகளில் இருக்கின்றார்கள்! மாலைப் பொழுதில் விளையாட்டுக்களில் ஈடுபடுகிறார்கள். அதனால் அவர்களுடைய உடலுக்கும் வளர்ச்சிக்கும் ஊறு விளையாவண்ணம் அவர்களுடைய சுகத்தைப் பேணுதல் அவசியமாகும். தொடக்கநிலைப் பள்ளிகளாயின் அடித்தளம் ஒன்றே போதும். உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தளங்கள் அமையலாம். தலைமையாசிரியர் அறை, அலுவலகம், ஆசிரியர் அறைகள், நூலகம் இன்னோரன்ன பிற பள்ளி முகப்பில் அமைதலே பள்ளி நிர்வாகத்துக்கு ஏற்றது. சிறுநீர், மலங்கழிக்குமிடங்கள் பள்ளி மனையின் ஓர் ஒதுக்குப் புறத்தில், அக்காற்று கட்டடத்தின் மீது படாத திசையில் அமைக்கப்பெற வேண்டும். சிறுநீர் கழிக்குமிடத்தை மட்டும் தனியாகப் போதிய மறைவோடு கட்டுதல் வேண்டும்.

அறிவியற் சோதனைச் சாலைகள் இற்றை நாட்களில் மிக முக்கியமானவை. பிள்ளைகள் தாமே சோதனை செய்து பல அறிவியற் கருத்

துக்களைப் பெறுவதற்கு இவை வாய்ப்பளிக்கும். ஓர் அறிவியற் பொருளை அறிந்து கொள்ளுவதற்கும் அதற்கு வேண்டிய திறனைப் பெறுவதற்கும் அதன்மீது நாட்டம் கொள்ளுவதற்கும் சோதனைச் சாலைகள் வேண்டற்பாலவை. தனித்த அறைகள் வகுப்புக்காகவும், சோதனைக்காகவும், பல பொருள்களைச் சேகரித்து வைப்பதற்காகவும் ஒன்றன் பக்கலில் ஒன்ருக ஓரறையிலிருந்து மற்றோர் அறைக்கு நுழையும் வசதியோடு அமைதல் வேண்டும். சோதனை செய்யும் அறை மட்டும் நீண்டதாகவும் அகன்றதாகவும் இருத்தல் வேண்டும். ஒரே சமயத்தில் ஒரு மேசையின் மீது நான்கு பிள்ளைகள் சோதனை செய்தலுக்கு வசதி தரவேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் அத்தகைய பத்து மேசைகள் இருந்தால் ஒரு வகுப்பின் நாற்பது பிள்ளைகள் ஒரே சமயத்தில் நாற்பது வேறுபட்ட சோதனைகளைச் செய்யலாம். ஆசிரியர் தாமே சோதனை செய்து விளக்குவதற்கு நீண்டதொரு மேசை பலவகை வசதிகளோடு வேண்டும். சன்னல்களுக்கெல்லாம் வெள்ளைக் கண்ணுடி நல்லது. மற்றும் பீங்கான் நீர்த்தொட்டிகள், தண்ணீர்க் குழாய்கள், கழிநீர்க் கால்வாய்கள் ஆங்காங்கே பிள்ளைகள் சோதனை செய்யும் மேசைகளுக்குப் பக்கலில் அமைதல் வேண்டும். சில உயர்நிலைப் பள்ளிகளிலுங்கூடப் பௌதிகம், இரசாயனம், உயிரியல், பயிரியல் இவற்றிற்குத் தனித்த அறைகள் உண்டு. பிள்ளைகள் அறிவியற் பகுதிகளைத் தொடக்கநிலைகளில் பொதுப்பட அறிந்தாலும் உயர்நிலைகளில் தனித்தனியே ஒவ்வொரு பகுதியிலும் மீத்திறம் பெறுவதற்குத் தனி அறைகள் போதிய ஊக்கத்தைத் தரக்கூடியவை. தனித்தனி அறைகள் அந்தந்தப் பாடத்தின் மயமாக விளங்கலாம். ஒவ்வோர் அறையிலும் அடங்கிய அதனதன் துறையில் மேம்பாடு பெற்ற அறிஞர்களின் படங்களும் அவரவர்கள் கண்ட உண்மைகளும் பிள்ளைகளுக்கு ஆர்வமூட்டக்கூடியவை. உயிரியல் அறையைப் பயிர் நூல், விலங்கு நூல், மனித உடல் நூல் ஆகியவற்றிற்கெனத் தனிப் பகுதிகளாகப் பிரித்துக் காட்சிப் பொருள்களைச் சேகரித்துக் கற்பிக்கும் கருவிகளாகப் பயன்படுத்தலாம். சோதனைச்சாலை அமைப்பதற்கு முன் அறிவியல் ஆசிரியர்களும் தலைமையாசிரியரும் நல்ல சில பள்ளிகளைக் கண்ணுற்று அவற்றில் அமைந்துள்ள சோதனைச்சாலைகளின் குறைகளை நீக்கி நிறைகளை மட்டும் அறிதல் நல்லது. வேதியல் அறை எப்போதும் அதன் ஆசிரியருடைய நேர்ப்பார்வையில் இருத்தல் வேண்டும். ஆங்குள்ள பல இரசாயனப் பொருள்கள் பிள்ளைகளுடைய உயிர்க்கு ஊறு செய்பவை. அவற்றைப் பகிர்ந்து கொடுக்கும்போது மிக்க விழிப்பாக இருக்க வேண்டும்.

3. கலைக்கூடம்

எல்லாப் பிள்ளைகளுக்கும் கைத்திறன் வேண்டுமென்று இன்றைய கல்வியாளர்கள் கருதுகின்றனர். அதனால் பிள்ளைகளுக்கு இளமையிலிருந்து பல கலைகளில் ஆர்வம் ஊட்டப் பெறுகின்றது. பிள்ளைகள் தாமாகவே தமது கைத்திறனை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். மனிதனுடைய கைகளன்றோ பலவற்றை இன்று சாதித்துள்ளன. உலகில் நாம் கண்டு களிப்பவை எல்லாம் மனிதன் தனது கைகளால் இயற்றியவை. எனவே அதற்கு வேண்டிய ஆற்றலை இளமையிலிருந்து பள்ளிகள் வளர்க்க வேண்டும். கலைத்துறையில் பணிபுரியும் கல்வியாளர்கள் ஆறுமாதக் குழந்தையிலிருந்து மூன்று நான்கு வயது வரையில் குழந்தைகளுடைய கீறலைக் கண்டு அதன் கலையின் ஆர்வத்தையும், படைப்பாற்றல் திறனையும் பகுத்தறிந்து பாராட்டுவது மேனுடுகளில் கண்கூடு. பிள்ளைகளுடைய கைத்திறன் வெறும் கீற்றல்களோடு நில்லாது களி மண்ணுல் உரு அமைத்தல், வர்ணங்களினுல் பல்வகை ஓவியங்களைத் தீட்டுதல், இவை யாவையும் வெறும் கீற்றுகளாகக் கருதாது ஒவ்வொன்றுக்கும் கற்பனைக்கண் செலுத்தி உருவங்களைக் கண்டு பாராட்டினுல் பிள்ளைகள் பல்வகை ஆற்றல்களைப் பெற்றுக் கலைகளில் மீத்திறம் பெறுவார்கள். தொடக்கநிலைப் பள்ளிகளிலிருந்து—குழவிப் பள்ளிகளிலுங்கூட—பிள்ளைகள் வாய்ப்புப் பெற்ருல் தமது படைப்பாற்றலில் திளைத்துக் களிப்புக் காண்பார்கள். நடுநிலை உயர்நிலைப்பள்ளிகளில் வாரத்துக்கு ஓரகவை ஓவிய வகுப் பென்று பெயரளவில் நமது பாட ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது. இப்போது இரு அகவைகளாகக் கலை என்ற பெயரால் நடைபெறுகிறது. இஃதல்லாது விருப்புத் தொழில்கள் என்ற பெயரில் பிள்ளைகளுடைய விருப்புக்களை அறிந்து அவர்களுக்கேற்ற தொழில்களை வகுத்துக் கொடுத்து ஊக்குகிருர்கள். சில பள்ளிகளில் கலைக்கூடம் சிறந்த காட்சியளிக்கிறது. பிள்ளைகள் பல திறமைகளைப் பெறுகிருர்கள். தரையில் உட்கார்ந்து சாய்வு மேசையின்மீது பல உருவப்படங்களை வரைந்தும், வர்ணம் தீட்டியும், ஆர்வமும் திறமையும் பெறுகின்ருர்கள். அவர்கள் வரையும் படங்கள் கூடத்தினை அலங்கரிக்கின்றன. அவை மட்டுமா ? களி மண் வேலை, பிரம்பு வேலை, ஒட்டுப்பலகை அறுத்தல், தச்சு, படங்களுக்குக் கண்ணுடி போடுதல், கண்ணுடியின்மீது கீற்று ஓவியம், லினேலியம் என்ற தகட்டின் மீதும், செப்பு–பித்தளை முதலிய உலோகங்களின்மீதும் வேலைப்பாடுகளோடு செதுக்குதல், ஓலை பின்னுதல், நூல் பின்னுதல், நூல் நூற்றல், நெய்தல் முதலிய பலப்பல விருப்பத் தொழில்களெல்லாம் பிள்ளைகளை ஈர்த்துத் திளைக்கச் செய்கின்றன. விருப்புத் தொழில்களைப் பெரும்பாலும் பிள்ளைகள் தாமாகவே அவற்றில் ஈடுபாடு உள்ளவர்களோடு கலந்து ஆர்வத்தோடு கற்றுக் கொள்ளுவதால் அவற்றில் பெறும் திறன்கள்

வியத்தற்குரியவை. கலைகளும் விருப்புத் தொழில்களும் நல்லிடம் பெற்ற சில உயர்நிலைப் பள்ளிகளில் பிள்ளைகள் திறமையோடு கைவேலைகளில் ஈடுபடும் காட்சி மிக்க மகிழ்ச்சிக் குரியது. பள்ளிகளின் கீழ்த்தளத்தில் பெறும் ஊக்கமே வளர வளரத் திறனை அளிக்கக் கூடியது. எனவே நம் பள்ளிகளில் கலைக்கெனக் கட்டத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி அதைக் கண்ணைக் கவரும் வனப்புக் கூடமாக வகை செய்ய வேண்டியது கடமை. இன்றைய கல்வி ஏற்பாட்டுக் கொப்ப கைத் தொழில் அறையென்று ஒன்று ஒதுக்கப் பெறுகிறது. பெரும்பாலும் பள்ளிகளில் நூல் நூற்றல், நெய்தல், நாடாப் பின்னுதல், தச்சு ஆகிய அரசினரால் அங்கீகரிக்கப் பெற்ற சில கைத்தொழில்களில் பள்ளிகள் ஒன்றை மட்டும் ஏற்றுக் கொள்ளலாம். பெரும்பாலும் இவ்வகுப்பில் பிள்ளைகள் தனித்தனியாக வேலை செய்வதற்கு வாய்ப்பிராது. அதனால் பிள்ளைகள் இவ்வகுப்பு நேரத்தைச் சோம்பியிருத்தற்கு உரிய நேரமென்று கருதுகிறார்கள். கைத்தொழில் ஆசிரியர்களும் தமது கடமைகளை மிக ஆர்வத்தோடு ஆற்றினால் பிள்ளைகள் உண்மையாக ஆர்வம் பெறுவது திண்ணம். கைத்தொழிற் பணிகள் பல பாடங்களோடு ஒட்டியவையாயின் பொருளுள்ளவையாகும். அல்லாது ஒரு சில பள்ளிகளைப் போன்று ஒரே வகையான பொருள்களையே எல்லாப் பிள்ளைகளும் நாள்தோறும் செய்தால், அவர்களுக்கு ஆற்றல் குறைவுறும். எனவே பிள்ளைகளுக்கு வேண்டிய பொருள்கள் யாவை என்று வினவி, அவற்றை அவர்களே செய்வதற்கு வாய்ப்பளித்தால் அவர்கள் அக்கறை கொள்ளுவார்கள். மாணவர் பொருளைச் செய்யும்போது ஆசிரியர் தமது திறமையை ஊட்டி நன்றாகச் செய்ய உதவி அதைச் செய்யும் அப்பிள்ளைக்கே பொருளுக்கு விற்றுவிடலாம். தாம் செய்த பொருளைக் கண்டு பிள்ளைகள் தாமே பாராட்டுவார்கள். பெற்றோர்களும் வியந்து பெருமை கொள்ளுவார்கள். எனவே கைத்தொழில் அறையும் ஒரு கலைக்கூடமாக விளங்கவேண்டும். ஆசிரியர்களுடைய ஊக்கம் பிள்ளைகளுக்குப் பரவ வேண்டும்.

சமூக அறிவியல் என்னும் பாடத்துக்கும் தனி ஓர் அறை வேண்டற்பாலது. இப்பாடத்தை ஒட்டிய துணைக் கருவிகள் பல செய்து கொண்டே இருத்தல் வேண்டும். ஆசிரியரும் வரலாற்றுப் பகுதி, நிலநூற் பகுதி, நகராட்சிப் பகுதி, பொருளாதாரம் முதலிய பிற பகுதிகளுக்குத் தனித்தனியாக வரைபடங்கள், நாட்டுப் படங்கள், நகரப் படங்கள், கால அட்டவணைகள் ஆகியவற்றினைக் கற்பிக்கும் கருவிகளாகச் செய்து அந்தந்தப் பாடப்பகுதிகள் நடைபெறும்போது அறையில் அவற்றினைக் கண்காட்சியாக வைத்தல் வேண்டும். அப்போது பிள்ளைகள் அவற்றினைப் பார்த்துக் கற்றறிந்து கொள்ளுவார்கள். அவை மட்டுமன்றிப் பிள்ளைகள் செய்வனவற்றுள் சிறந்தவற்றினையும் காட்டுகளாக அமைக்கலாம். பல பகுதிகளை விளக்கக் கூடிய துணைக்கருவிகளையும் விலை கொடுத்து வாங்கி அங்குக் காட்சிப்

பொருளாக வைத்தலும் நன்று. ஒரு பாடத்திற்குத் தனி அறை என்றால் அதற்குற்ற காட்சிகளோடு அது விளங்கக் கூடும். அத்தகைய அறையில் அப்பாடத்தினைப் பயிலும் மாணவர்கள் அதற்கேற்ற உணர்வினைப் பெறுவார்கள்.

கணிதம், மொழிகள் ஆகியவற்றிற்குங்கூடத் தனித்த அறைகளை ஒதுக்கி வைக்கலாம். அதனதன் பயன் அறை உருவான பிறகு ஆசிரியர்களுக்குத் தோற்றத்தையும், மாணவர்களுக்குப் பயனையும் அளிப்பது திண்ணம். இவையன்றி ஒவ்வொரு பள்ளியிலும் நிரந்தரமான கண்காட்சி அமைத்தலும் உண்டு. அதன் உருவாக்கத்தில் ஈடுபட்டவர்களும், அதன் பயனை உணர்ந்தவர்களும், அதைப் பார்த்துக் கற்றுத் திளைத்த பிள்ளைகளும் அதன் நன்மையினை உணர்வார்கள். சொற்களுக்குமுன் பொருள் என ஆசிரியம் கூறும். பல கருத்துக்களை விளக்குவதற்குச் செய்பொருள்கள் வேண்டற் பாலவை. அவை பல வகையினவாக அமையலாம். அவை யாவும் கருத்தினை விளக்குவதற்கேசெய்து கொள்ளுபவை. அவற்றைத் தனித்தனிப் பாடமாக'வகுத்துத் தனித்தனிக் கண்ணாடி அமைத்த கூண்டறைகளில் சேகரிப்பதுண்டு. அவை பெரும்பான்மை பள்ளிப் பாடங்களையும் புறவாழ்க்கையினையும் ஒட்டிக் காட்டுபவை. பெரிய நகரங்களில் அரசினரால் அமைக்கப்பெற்ற பொருட்காட்சி சாலைகள் பொதுமக்களுக்கென உள்ளன. சென்னை நகரிலுள்ள பொருட்காட்சி சாலையில் பலப்பல பிரிவுகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் விளக்கம் தரும் ஆசிரியர்கள் உள்ளார்கள். அங்குள்ள ஒவ்வொரு பொருளையும் அறிந்து கொள்ள முயன்றால் பொது மக்களுடைய பொது அறிவு மீத்திறம் பெறும். பள்ளிகளில் ஆசிரியர் மாணவர்களால் சேகரிக்கப் பெற்றவையும் அப்போதைக் கப்போது ஒவ்வொரு பாடத்தின் விளக்கத்துக்காக இயற்றப் பெற்றவையும், பள்ளிக் கண்காட்சிச் சாலையில் ஒழுங்காக அமைக்கின்றார்கள். பள்ளியின் சுற்றுப் புறத்திலும் அந்த மாவட்டத்தில் கிடைக்கக் கூடியனவுமான பொருள்களை வகைப்படுத்தியும், வரிசைப் படுத்தியும் வைப்பார்கள். விலை கொடுத்து வாங்கப் பெற்றவையும், பல தொழிற்சாலைகளிலிருந்து மாதிரிப் பொருள்களாகப் பெற்ற பொருள்களும் காட்சிப் பொருள்களாகலாம். இவற்றை வைக்கும் அலமாரிகளும், சுவர்மாட்டிகளும் கண்ணாடிக் கதவுகள் உள்ளவையாதல் வேண்டும். இவற்றினை அக்கறை உள்ள 'கைத்தொழில் ஆசிரியர் தச்சுக்கூடத்தில் சிறிது சிறிதாகச் செய்து உதவலாம். அடைப்பு உயிரினங்களைப் புட்டிகளில் திராவகங்கள் ஊற்றிக் காப்பாற்றலாம்: இவற்றினைச் சேகரிப்பதற்கு ஒரு குறிக்கோளும் வேண்டும். சிறப்பாகப் பொது அறிவியல் பாடத்திட்டம் பரிசீலனை செய்யப் பெறுதல் நல்லது. அவற்றில் குறிக்கப் பெற்றுள்ள ஒவ்வொன்றும் இயற்கை அல்லது செயற்கையின்பாற் பட்டவை. இயற்கைப் பொருளாயினும் அதனை மாணவர்களைக் கொண்டு தருவிக்கலாம். தாவரப் பொருள்களைக்

காட்சிப் பொருள்களாக வைக்காது அவற்றினைப் பள்ளித் தோட்டத்தில் ஒரு புறத்தே பாடங்களில் செப்பியுள்ள பல செடி, கொடி முத லானவற்றைப் பிள்ளைகளைக் கொண்டு பயிரிடுதல் நல்லது. உலோகப் பொருள்களை விலை கொடுத்து வாங்க வேண்டும். கற்கள் முதலானவை ஆங்காங்கே கிடைக்கக் கூடியவை. பௌதிக விஞ்ஞான விலங்கு மனித உடலமைப்புப் பொருள்களைச் சிறிது சிறிதாகச் சேர்க்கலாம். பல பறவைகளின் மூக்கு, கால், எலும்புக்கூடு, பற்கள், தோல், விலங்கின் நகங்கள், கொம்புகள் ஆகியவற்றைப் பிள்ளைகள் வாயிலாகவே சேகரிக்க இயலும். அறிவியல் பாடங்கள் எதுவாயினும் அதனைச் காட்சிப் பொருளாக்குவது கடினமாகாது. அறிவியல் பாடம் மட்டுமேயன்றிப் பிற பாடங்களுக்கும் காட்சிப் பொருள்களைத் தயாரிப்பதற்கு இயலும். வரலாறு, நிலநூல் ஆகியவற்றிற்காகவும் பல காட்சிப் பொருள்களைச் சேகரிக்க இயலும். இவை யாவும் சிறப்பாகப் பாடங்களை ஒட்டியவை யாகவும், பொதுவாகப் பொது அறிவினை ஊக்குவனவாகவும் விளங்க வேண்டும்.

பிள்ளைகள் தமது பாடங்களைப் புத்தகங்களில்தான் காண்கின்றார் களேயன்றி வேறு தம்மைச் சுற்றி உள்ள பல பொருள்களில் காண்ப தற்கு விருப்பம் கொள்ளுவதில்லை. பாடங்களுக்கு வெளிப்புறங்களில் சான்றுகளைக் காட்டினால் நேர்முகமான அறிவினைப் பெறுவதற்கு அவர் களுக்கு ஊக்கம் பிறக்கும். அவர்கள் தாமாகவே பல பொருள்களைக் கண்டு அறிவினைப் பெருக்கிக் கொள்ளுவர். அப்போது பள்ளிப் பாடங் டங்களுக்கும் தமது சூழ்நிலைக்கும் தொடர்பு காண்பார்கள். சுற்றுப் புறத்திலுள்ள இயற்கைகளிலும், செயற்கைகளிலும் ஈடுபாடு கொள்ளு வார்கள். வெளிப்புறத்தவை புத்தகத்தவை என்று அறிவார்கள். புத்தகத்தைக் காட்டிலும் வெளிப்புறப் பொருள்கள் ஊக்கமளித்தற்கு உரியவையாகும். மேலும் பாடங்களை ஒட்டிய பொருள்களைத் தாமே தேடுவதால் உற்று நோக்கலும் பல பொருள்களை அறிந்து வேறுபாடு காணும் திறனும் அதிகமாகும். வெறும் புத்தகங்களைப் படித்துப் படித்து நெட்டுருச் செய்து மறந்து விடுவதற்குப் பதிலாகப் பல வகைப் பொருள்களே அனுபவப் புத்தகங்களாகும். புலன்கள் வழிக் கல்வி என் பது உண்மைக் கூற்றாக விளங்குவதற்குப் பல பொருள்களைக் கண் களால் பார்த்தும், கைகளால் தொட்டும், சிலவற்றை நாவினால் சுவைத்தும், மூக்கினால் முகர்ந்தும் தமது மெய்களோடு ஈடுபடுத்திக் கொண்டும் அறிவார்கள். உருவங்கள், ஓவியங்கள் முதலியவற்றைத் தீட்டுவதால் கைத்திறன் வளரும். எனவே ஒவ்வொரு பள்ளியிலும் நிரந்தரமான கண்காட்சிசாலை ஒன்று இருப்பது வேண்டற்பாலது. ஆனால் அதன் பெயரால் இங்கு ஒன்றும், அங்கு ஒன்றுமாக ஒருவித ஒழுங்குமின்றிக் குப்பைகளோடு பொருள்களையும், பொருள்களோடு குப்பைகளையும் சேர்த்து, அழுக்கும் தூசும் நிறைத்து வைத்துப் பள்ளி யின் கண்காட்சிசாலை என்று சொல்லிக் கொள்ளுவது தவறு.

4. நூலகம்

ஒரு நூலகமே பல்கலைக் கழகம் என்கிறார் தாமஸ் கார்லைல். பல நூல்களைக் கண்டறிந்து பொருள்களைத் தேடுவது கல்வியின் பாற்படும் என்றார் ஆலிவர் லாட்ஜ் என்பார். எனவே ஒவ்வொரு பள்ளிக்கும் நூலகம் இன்றியமையாதது. நூலகமே பள்ளியின் திலகமாகும். அதனால் நூலகம் பள்ளியின் நடுவண் சிறந்த மண்டபத்தில் விளங்குவது நல்லது. அது தனித்து வகுப்பறைகளுக்கு ஒரு சிறிது தூரத்தில் அமைதி நிலவும் இடத்தே அமைய வேண்டும். பள்ளிகளில் எல்லா வகுப்புக்களும் அதற்குச் சம தூரத்தில் அமைவதும் சாலச் சிறந்தது. அது நீளமாகவும், அகலமாகவும், உயர்ந்தும், நான்கு பக்கங்களில் வெளிச்சத்தோடும் இருத்தல் சிறந்தது. அதன் தரை ஓசைப் படுத்தாததாயும், கூரை எதிரொலியைத் தடுத்து ஒலிக் கோளாறுகள் அற்றதாயும் இருத்தல் வேண்டும். நூலகப் பகுதி சுத்தமாக இருக்க வேண்டும். சுவர் ஓரங்களில் புத்தக அலமாரிகள் பிள்ளைகள் உயரத்திற்கு மிகாமல் அமைதல்வேண்டும். ஒன்றின்மேல் ஒன்று அடுக்கினால் பயனில்லை. பிள்ளைகள் அலமாரிக் கருகில் நின்றால் எல்லாப் புத்தகங்களையும் பார்க்கவும் வேண்டியதை எடுத்துப் படிக்கவும், ஒவ்வொரு புத்தகமாக எடுத்து புரட்டிப் பார்த்து வேண்டியவற்றினை மட்டும் எடுக்கவும், இன்னோரன்ன பல வசதிகளைப் புத்தக அறைகள் அளிக்க வேண்டும். பிள்ளைகள் புத்தகங்களை எடுத்து உட்கார்ந்து படிப்பதற்கு மேசைகள் வரிசையாகவும் அவற்றிற்கேற்ற நாற்காலிகளும் அமைந்திருக்கவேண்டும். புத்தகங்களை வெளியிலெடுத்துச் செல்லக் கூடாது. புத்தகங்கள் தனி அலமாரிகளில் இருத்தல் நன்று.

பிள்ளைகளுக்குப் புத்தகங்களா? அல்லது புத்தகங்களுக்குப் பிள்ளைகளா என்ற ஒரு வினா உண்டு. நூலகங்கள் பிள்ளைகளை ஈர்க்க வேண்டும். புத்தகங்களை ஈர்க்கக்கூடிய முறையில் அமைக்க வேண்டும். பிள்ளைகளுடைய ஓய்வு நேரங்களில் உட்சென்று விரும்பிய புத்தகங்களை எடுத்து அகமகிழ வேண்டும். எல்லா நிலைகளுக்கும் உரிய புத்தகங்களும், பிள்ளைகளுடைய கண்களைக் கவரக்கூடிய புத்தகங்களும்தான் வேண்டும். புத்தக அகர வரிசைப் பட்டியல் அச்சிடப் பெற்றுப் பிள்ளைகளுக்குக் கொடுப்பது வழக்கம். இற்றை நாட்களில் அங்ஙனம் அல்லாது அஞ்சல் அட்டைகளைப் போன்ற அட்டைப் பட்டியல்கள் அவற்றிற்கென உரிய இழுப்பு அறைகளில் நூலாசிரியர் அகர வரிசையாகவும், நூலின் பெயர் அகர வரிசையாகவும் கோத்துக் காணப்பெறும். அவற்றை ஒவ்வொரு அறையாக இழுத்து அட்டைகளைத் தனித்தனியாகத் தள்ளி விரும்பும் புத்தகம் உண்டா என்று அறிந்து கொள்ளுவது

இப்போதைய வழக்கம். நூலகங்களில் மாரிக் காலங்களில் இருளை நீக்குவதற்குக் குழாய் மின்விளக்குகளும், கோடை காலத்தில் வெப்பத்தைப் போக்குவதற்கு மின் விசிறிகளும் மேலும் வசதிகளாம். பொறுப்பேற்கும் அலுவலர்கள் மிக்க ஆர்வமுள்ளவர்களாதல் வேண்டும். சோம்பி அமர்ந்த இடத்தை விட்டு அகலாதவர்கள் நூல்களைத் தேடும் பிள்ளைகளுக்குப் பணி புரிய மாட்டார்கள். நூலகங்களின் அமைப்புக்களும், ஆங்கு உண்டாக்கப் பெறும் ஊக்கங்களும் பிள்ளைகளுக்கு நற்றிறனை அளிக்கக் கூடியவை. நூல்களைத் தாமாகவே எடுத்துப் படிக்கும் திறனன்றோ ஆயுள் முழுவதும் நீடிக்கும் திறன்!

5. மரச்சாமான்கள்

ஒவ்வொரு வகுப்பறைக்கும் கரும்பலகை இன்றியமையாதது. ஆனால் அன்று போல் இன்று மரப்பலகையில் அதைச் செய்வதில்லை. வகுப்புச் சுவரில் வேண்டிய அளவு சிமிட்டியால் வழவழப்பாகப் பூசிக் கருப்பு கலந்து கரும்பலகையை உண்டாக்கிக் கொள்ளுகிறார்கள். இத் தகைய கரும்பலகை சிக்கனமாகும். வேண்டுதலுக்கு அதிகமாக உள்ள பகுதியினை நிரந்தரப் படங்கள் வரைவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். சில பள்ளிகளில் ஒரு பகுதியில் சோற்றட்டையினைப் பதித்துப் படங்களை இறுக்குவதற்குப் பயன் படுத்துகிறார்கள். தேசப் படங்கள் முதலியவற்றினைத் தொங்க விடுவதற்கும் மரத் தொங்கிகள் வேண்டும். வரை படம் வரைவதற்குச் சதுரங்களிட்ட கரும்பலகை நன்று. இவை யாவும் பிள்ளைகளுக்கு நேர்முகமாக அமைதல் வேண்டும். வகுப்பறையில் அமர்ந்த வண்ணம் கரும்பலகையில் எழுது வதைக் கண்ணுறுவதற்குத் தடையிருத்தலாகாது. சில வகுப்புக்களில் பிள்ளைகள் கரும்பலகையைக் காண இயலாது வருந்துவதுண்டு. இந் நாட்களில் கரும்பலகையை உபயோகிக்கும் ஆசிரியர் சிலரே யாவர். சிலர் எழுதுவதையுங் கூடக் கண்ணால் காண இயலாத நிலை அவல நிலை யாகும். அதனால் பிள்ளைகளுக்கு இடங்கொடுத்து உட்கார வைக்கும் போது அவர்கள் அமர்ந்த இடத்திலிருந்து கரும்பலகையைப் பார்க்க இயலுகின்றதா என்பதை ஆசிரியர் அறியவேண்டும். அங்ஙனம் கவ னிக்காது விட்டுவிட்டால் பிள்ளைகள் இடர்ப்படுவர்.

அடுத்தபடியாகப் பிள்ளைகள் அமரும் மேசை, நாற்காலிகள் முக்கிய மானவை. தொடக்கநிலைப் பள்ளிகளில் பிள்ளைகளுக்குத் தாழ்ந்த பலகைகளும், தாழ்ந்த மேசைகளும் விரும்பத் தக்கவை. பெரும் பான்மை பிள்ளைகள் தரையிலேயே உட்காருகிறார்கள். எழுத வேண் டியவைகளை எல்லாம் மடியில் வைத்துக்கொண்டு எழுதுகிறார்கள். அதனால் அவர்களுடைய கையெழுத்துக்கள் நன்றாக வளருவதில்லை. மேலும் தரையின் மீது சாய்வின்றி உட்காருவதினாலும் முதுகு கோண லாகின்றது. அல்லது கூன் முதுகு உண்டாகின்றது. நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் நல்ல நாற்காலிகளும், மேசைகளும் பிள்ளை களுக்கு வேண்டும். மேசையும் நாற்காலியும் இணைந்தவையாயினும், பிரிந்தவையாயினும் நல்லவை. இவை பிள்ளைகளுடைய உயரத்திற்கு ஏற்றவையாக வேண்டும். நெட்டைப் பிள்ளைகள் குட்டை நாற்காலி களில் உடலை வளைக்க வேண்டியதாகிறது. குட்டைப் பிள்ளைகள் நெட்டை நாற்காலிகளில் உடலை வளைக்கவேண்டியதாகிறது. இதனால் முதுகுக் கோணல்; தோட்கோணல் விளைவாகும். நீண்ட மேசைகள் நீண்ட விசிப்பலகைகளுக்குப் பதிலாகத் தனித்தனி சாய்ந்துகொள்ளக்

கூடிய நாற்காலிகளும் அவற்றோடு இணைந்த மேசைகளும் விரும்பத் தக்கவை. நல்லபள்ளிகளில் பிள்ளைகளுடைய வயதுக் கேற்றபடி சாய்வு மேசைகளும், நாற்காலிகளும் அளிக்கப் பெறுகின்றன. இவற்றினை நெருக்கமாக வகுப்பறைகளில் போக்குவரத்துக்கு வசதி யில்லாது அடைப்பதுண்டு. நல்ல விசாலமான வகுப்பறைகளில் சுவருக்கப்பால் பதினெட்டங்குலம் இடைவெளி விட்டும், ஒரு பிள்ளைக்கும் மற்றொரு பிள்ளைக்கும் பதினெட்டங்குலம் இடைவெளி விட்டும், ஒரு வரிசைக்கும் மற்றொரு வரிசைக்கும் பதினெட்டங்குலம் இடைவெளி விட்டும் மேசைகளை நேர் வரிசையாக அமைத்தால் பிள்ளைகள் போக்குவரத்துக்கும், ஆசிரியர் சுற்றி வருவதற்கும், ஒவ்வொரு பிள்ளையை அணுகுவதற்கும், பிள்ளைகள் ஒருவரோ டொருவர் உராய்ந்து கொள்ளாதும், நெருக்கமில்லாதும், வகுப்பில் உட்காருவதற்கும் வசதி உண்டாகும். சாய்வு மேசைகளெல்லாம் பதினைந்து பாகை சாய்வோடு இருத்தல் நலம். எழுதுவதற்குச் சாய்வு மேசையின் உள்ளோரமும், உட்காரும் பலகையின் உள்ளோரமும் ஒரே நேர்க்கோட்டில் இருக்கவேண்டும். இத்தகைய இணைந்த மேசை நாற்காலிக்கு [1]சுன்னம் மேசை என்பார்கள். உட்காரும் பலகை மேசை ஓரத்துக்கு உட்புறமாயினும், வெளிப்புறமாயினும் நீண்டாலும், குறுகி னாலும் அம்மேஜைகளுக்கு [2]—மேசை, [3]+மேசை என்பர். +மேசைகள் நிற்பதற்கும், படிப்பதற்கும் பயன்படும். —மேஜைகள் எழுதுவதற்கு மட்டும் பயன்படும். பிள்ளைகள் உட்காரும் பலகை, கால்கள் நன்றாக ஆடக்கூடியவையாக அமையவேண்டும். அதிகமாக நீண்டிருந்தால் அவர்களுடைய கால் முட்டிகள் அசைவற்று விடும். மேசைக்கும், நாற்காலிக்கும் இடைவெளி தாராளமாக இருக்கவேண்டும். அப்போது தான் பிள்ளைகளுடைய தொடைகள் நெருக்கமுறாது தாராளமாக அசை வதற்கும், திரும்புவதற்கும் வசதியளிக்கும். நாற்காலியின் பின்புறம் சாய்வுப் பகுதியில் புட்டத்தை பின்னால் தள்ளியும் முதுகின் ஒரு பாதி நாற்காலியின் சாய்வு உயர ஓரத்தின் மீது முட்டுவதற் கேற்பவும் அமையவேண்டும். சாய்வுப் புறக் கழுத்து தலையின் வரையில் உயராமல் முதுகின் பாதி வரையில் குறைந்து இருத்தல் நன்று. சாய்வின் நடுவண் இடைவெளி இருப்பதும் நல்லது. மேசையின் மேல்தளம், உட்கார்ந்த பிள்ளையின் முழங்கைக்குச் சிறிது உயரத்தில் அமையவேண்டும். எனவே பிள்ளைகளுக்கு அளிக்கப்பெறும் உட்காரும் வசதிகள் வகுப்பிற்கு ஏற்றதாகவும், பிள்ளையின் வயதுக்கு உற்றதாகவும் வேண்டும். வகுப்பறைகளின் சுவரில் சுவர் அலமாரிகள் இரு பக்கங்களிலும் இருக்கலாம். இரு அலமாரிகளிலும் வகுப்பறை நூலக நூல்கள், பிள்ளைகள் செய்யும் துணைக்கருவிகள், ஆசிரியர் செய்பவை ஆகியவற்றை வகுப்பறையின் கண்காட்சியாக அமைக்க

1. Zero desk 2. Minus desk 3. Plus desk.

லாம். வகுப்பறைச் சுவர்களை மனம்போன போக்கெல்லாம் படங்களை ஒட்டிப் பாழ்படுத்தக் கூடாது. கண்ட இடங்களில் ஆணி அடித்தலாகா. ஒவ்வோர் வகுப்பறைக்கும் இற்றை நாட்களில் தேசீய மாநிலத் தலைவருடைய பெயர்கள் இடுவது வழக்கம். அத்தகைய பெரியாருடைய படம் வகுப்பறையின் முகப்பில் அணி செய்யலாம். இஃது அல்லாது வகுப்பறைச் சுவரில் ஓர் ஒழுங்காக ஆணிகளை அடித்துச் சிறந்த பாடத்தை யொட்டிய படங்களை ஒரே அளவில் கண்ணாடியும் சட்டமும் இட்டுப் பார்வைக்கு அழகாக ஓர் வரிசையில் மாட்டலாம். ஒவ்வொரு வகுப்பறைக்கும் மரத்தால் செய்த ஒரு குப்பைத் தொட்டி இருத்தல் வேண்டும். மாணவர்கள் கண்ட இடத்தில் காகிதத் துண்டுகள், நிலக் கடலைத்தோல், பட்டாணித்தோல், பழத்தோல் ஆகிய அவர்கள் தின்பவற்றை வீசி எறிந்து பல இடங்களை அசுத்தம் செய்யாத வண்ணம் வகுப்பாசிரியர் காக்கவேண்டும். வகுப்பறையில் ஆசிரியருடைய நாற்காலி, மேசை, பிள்ளைகளுடைய மேசை, நாற்காலிகள் ஆகியவற்றின் இடவசதிக்கு ஏற்றவாறு ஆசிரியர் சிறிது கவனம் செலுத்தி வரிசையாகவும், ஒழுங்காகவும் இருத்தலை வற்புறுத்த வேண்டும். பிள்ளைகள் கண்டவண்ணம் வகுப்பறைத் தட்டு முட்டுச் சாமான்களை அலங்கோலமாக வகுப்பறைகளில் தள்ளிவிட்டுச் செல்லுவது குடிமைப் பண்புகள் வற்புறுத்தப்பெறும் இற்றை நாட்களிலும் காணப்பெறுகிறது. துப்புரவுக் குழு என ஒன்றை வகுத்திருந்தும் ஆசிரியர்கள் பிள்ளைகளுடைய பொறுப்பினை அடிக்கடி எடுத்துக் காட்டத் தவறுதலால் பிள்ளைகளுடைய ஊக்கம் நெகிழ்ந்து விடுகிறது. வகுப்பறையின் துப்புரவு மிக முக்கியமானது. அது மாணவர்களுடைய பொறுப்பாகும். ஆசிரியர்கள் துப்புரவு செய்ய வேண்டியதில்லை. ஆனால் பிள்ளைகள் துப்புரவு செய்வதைக் கண்காணிக்க வேண்டும். பிள்ளைகளுக்கு ஊக்கமளித்துக் கொண்டே இருந்தால் அவர்கள் செய்ய இயலாதது ஒன்றுமில்லை. வகுப்பறையின் துப்புரவு, சுற்றுப்புறத்தின் துப்புரவு, பள்ளிப் பெருநிலத்தின் துப்புரவு ஆகிய எல்லாவற்றையும் அவர்கள் காத்துக் கொள்ள இயலும்.

அலுவலகங்கள் ஒழுங்காகவும், துப்புரவாகவும் இருப்பது அலுவலர்களுடைய கடமையாகும். சில பள்ளிகளில் அலுவலகம், தலைமையாசிரியருடைய இடம், நூலகம், ஆசிரியர் அறை எல்லாம் ஒரே அறையில் அமைவதுண்டு. அத்தகைய அறையில் காணப்பெறுவது ஒரே அலங்கோலம். பள்ளியின் பல பதிவேடுகள், கணக்கேடுகள், ஆகியவெல்லாம் சிதறிக் கிடக்கும். ஆசிரியர் அறை, நூலகம், தலைமையாசிரியர் அறை ஒவ்வொன்றும் வேருக அமைந்தால் ஓரளவு ஒழுங்கு காணலாம். இம்மூன்று அறைகளும் மிகத் துப்புரவாக இருக்க வேண்டும். அலுவலகத்தின் ஒரு பகுதியினைத் தலைமையாசிரியர் தமக்கென வகுத்துக் கொள்ளலாம். அவருடைய பகுதியும், அலுவலகத்தின் பகுதியும் பார்ப்பதற்கு எவ்வளவு ஒழுங்காக இருக்கின்றனவோ அந்த

அளவுக்கு ஆசிரியர்கள் அங்கு நுழைந்தால் அவர்கள் துப்புரவோடு நடந்து கொள்ளுவார்கள். அல்லாக்கால் சில பள்ளிகளைப் போன்று ஆசிரிய அறையும், அலுவலகமும் ஒன்று வேறு என்று அறிதற்கு அரிதாய்க் காணப்பெறும். ஆசிரியர்கள் அலுவலகப் பகுதியில் புகுந்து தலைமையாசிரியர் இல்லாதபோது அவர்களுக்கு வேண்டிய பள்ளிப் பதிவேடுகளை மறைவாக எடுத்துப் பார்ப்பதற்கு நுழைந்துகொண்டே இருப்பது வழக்கம். பள்ளியின் அலுவலகம், பள்ளி நடைமுறைக்கே எடுத்துக் காட்டாக விளங்க வேண்டும். அலுவலகத்துக்குள் பெற்றோர், மற்றோர், கல்வியதிகாரிகள், கல்வியாளர்கள் எல்லாம் நுழைவார்கள். ஆகையால் அலுவலகத்தில் ஒழுங்கே காட்சியாக வேண்டும். விருப்பம் போல் ஆசிரியர்கள் உள்ளே நுழைந்து உரத்த குரலில் பேசிக் கொண்டும், களித்துக்கொண்டும் இருப்பதெல்லாம் விரும்பத்தகாதது. பள்ளிகளில் ஆசிரியர்கள் நடந்துகொள்ளும் முறையே பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டாகும். வகுப்போரங்களில் நின்று பேசுவது, ஒரு வகுப்புக்குள் ஓர் ஆசிரியர் பாடஞ்சொல்லும்போது மற்றோர் ஆசிரியர் அவருடைய வகுப்பிற்குள் சென்று பேசுவது, இரண்டல்லது மூன்று ஆசிரியர்கள் ஒன்றாக நின்று வகுப்புக்குச் செல்லும் வழிகளில் நின்று கொண்டு இரைச்சலிட்டுப் பேசுவது, ஒருவரை யொருவர் குறைகூறிக் கொள்ளுவது, அரசியல் பேசுவது, சிக்கலானவற்றைப் பிள்ளைகளுக் கெதிரே பேசுவது, ஓர் ஆசிரியர் மற்றோர் ஆசிரியரோடு முரணிக் கொள்ளுவது இவையாவும் துப்புரவுள்ள பள்ளிகளில் ஆசிரியத் தூசுகள். நல்ல பள்ளிக்கட்டடங்களில் இத்தகைய தூசுகள் நிறைந்தால் அழகு குறைவுறும். கட்டடத்துக்கு அழகு செய்வது அதன் உடலமைப்பு மட்டுமன்று; நல்ல ஆசிரியர்கள் நன்மாணவர்கள் ஆகியோர் சேர்ந்த கட்டடமே அழகு பெறுகிறது.

6. பள்ளி விடுதிகள்

சில பள்ளிகள் மாணவர் தங்கும் விடுதிகளோடு இணைந்துள்ளன. விடுதிகளில் கட்டுப்பாடும் ஒழுங்கும் அமைந்த வாழ்க்கை அளிக்கப் பெறுகிறது. ஆங்கு மாணவர்கள் வைகறைத் துயிலெழுவதிலிருந்து இரவு உறங்கச் செல்லும் வரையில் ஓர் ஒழுக்கத்திலும் ஒழுங்கிலும் அமைந்த வாழ்க்கையில் கட்டுப்பெறுகிறார்கள். அத்தகைய வாழ்க்கை பிள்ளைகளுக்கு இன்றியமையாதது. ஏனெனில் கல்வியின் இலட்சியத்தைப் பள்ளி ஏற்று நடத்துகிறது. ஆனால் பள்ளிகளில் பிள்ளைகள் காலை பத்து முதல் மாலை நான்கு வரையில் மட்டுமே இருக்கின்றார்கள். மற்ற நேரங்களில் அவர்கள் பெற்றோர்களோடும், மற்றவர்களோடும் பழகுகிறார்கள். ஒரோவழி அவர்களுடைய சூழ்நிலை சரியற்றிருந்தால் மாணவர்களுடைய பண்பாடு தாழ்ச்சியுறும். மேலும் குடும்பங்களில் வெவ்வேறு நன்மைகளும் தீமைகளும் உண்டு. அதனால் கல்வியின் இலட்சியம் பள்ளியில் ஆக்கம் பெற்றாலும் இல்லங்களிலும், பள்ளிப் புறங்களிலும் பழுது அடைந்து விடும். எனவே பள்ளிகள் பிள்ளைகளின் முழு வளர்ச்சிக்குப் பொறுப்பேற்க வேண்டியதாகிறது. ஆசிரியர்கள் அவர்களுடைய 24 மணி நேர வாழ்க்கையினைக் கண் காணித்துக் காப்பாற்றுதல் கடமையாகும். 'நல்ல பள்ளிகளோடு இணைக்கப்பெற்றுள்ள நல்ல விடுதிகளில் வளரும் மாணவர்கள் விடுதி ஒழுக்கங்களில் பழகி நல்ல கருத்துக்களோடும், ஒழுங்குற்ற செயற் பாடுகளோடும் ஒழுகுகிறார்கள். விடுதி மாணவர்கள் பல குடும்பங்களி லிருந்து வந்தவராயினும் ஒரு குடும்பத்தினரைப்போல் ஒருவர்க் கொருவர் உதவி புரிந்துகொண்டும், ஒன்றிய வாழ்க்கை நடத்திக் கொண்டும், கல்விக்கொரு நேரம், விளையாட்டுக்கு ஒரு நேரம், அமை திக்கு ஒரு நேரம் என வகுத்துக் கொண்டும் வளர்ச்சி பெறுகிறார்கள். பிள்ளைகள் தாமாகவே தமது கடமைகளை உணர்ந்து ஒழுக்கநெறி நிற் கின்றார்கள். பெற்றோர்களுடைய துணையைக் கொள்ளுவார்களே யன்றி அவர்களைச் சார்ந்த வண்ணமாகத் தமது சுமையைத் தரமாட்டார்கள். தான் தொடங்காற்றல், பொறுப்பேற்றுக் கொள்ளுதல், திட்டமிடுதல், தமது அறிவைப் பயன்படுத்துதல், தலைமை ஏற்றுக் கொள்ளுதல், தலைவரைப் பின்பற்றுதல் ஆகிய பல நல்ல பழக்கங்களை விடுதிகள் அளிக்கின்றன. எனவே பள்ளி விடுதிகள் வசதி உள்ள இல்லங்களுக்கு மேல் வசதியாக இருத்தல் வேண்டும். அறைகள் காற்றோட்டம், வெளிச்சம், சுகாதாரம் அளிப்பவையாக அமைய வேண்டும். பிள்ளைகள் இல்லங்களைக் காட்டிலும் மேலாக விடுதிகளில் தங்க விழைதல் வேண்டும். அங்ஙனம் பிள்ளைகள் பலர் வசதியுள்ள இல்லங்களை விட்டு விடுதி களிலேயே இருத்தற்கு விரும்புகின்றனர். விடுதிக் காப்பாளர் பிள்ளை

களுக்கு ஒரு தந்தையாக விளங்குதல் வேண்டும். தலைமையாசிரியரே அப்பொறுப்பாளியாயின் அவர் பள்ளியோடு விடுதியிலும் விழிப்புள்ளவராவார். அது தலைமையாசிரியருக்குப் பெருஞ்சுமையாகும். சில பள்ளிகளில் ஓரிரு ஆசிரியர்கள் அப்பொறுப்பு ஏற்றுக் கொள்ளுவார்கள். அவர்களுக்கு அதற்கென ஊதியம் தருவதுமுண்டு. பள்ளிப் பணியோடு இப்பொறுப்பையும் கூட்டுவது கூடாது. விடுதித் தந்தை என்பார் ஒருவர் தனித்துப் பொறுப்பேற்றல் நல்லது. அவர் அப்பொறுப்பினை நன்றாகச் செலுத்த ஓய்வும் நேரமும் இருக்கும். விடுதித் தந்தை உடல் முழுவதும் கண்களும் காதுகளுமாக உள்ளவராதல் வேண்டும். அவர் பிள்ளைகளைப் பற்றி நன்றாக அறிவதோடு பொறுமையும் திறமையும் பெற்றவராதல் வேண்டும். அவருக்கு விடுதியில் நடைபெறும் எல்லாப் பணிகளையும் கண்காணிக்கும் கடமை உண்டு. அவர் ஒழுங்குகளெல்லாம் ஒரு திட்டத்தைச் சார்ந்தவை. பிள்ளைகள் விடுதியில் நுழையும் நேரம்முதல் விடும்நேரம் வரை அவர்களைக் கண்காணிக்க வேண்டும். பள்ளியிற் போன்று அவர்களுடைய உள வளர்ச்சியையும் பண்பாட்டு வளர்ச்சியையும் கவனித்தல் வேண்டும். பிள்ளைகள் அவரைத் தந்தையைப்போல் கருதவேண்டும். அத்தகையோர் ஆட்சியில் விடுதி விடுதியாகாது ; இல்லத்தைப் போன்று பிள்ளைகளுக்கு விளங்கும். பிள்ளைகளுடைய ஓய்வு நேரங்களில் அவர் மாணவரது ஒழுங்கினைக் காப்பதோடு ஒழுக்கம் குன்றாதபடியும் காக்க வேண்டும். பிள்ளைகள் விளையாடும்போதும் ஓய்வுநேர விருப்புத் தொழில்களில் ஈடுபடும்போதும் மேற்பார்வை வேண்டியதாகின்றது. பிள்ளைகள் படுக்கும் அறைகளில் நோய்க்கு இடங்கொடாதபடி படுக்கைகளைச் சுத்தமாகவும், அறைகளைச் சுகாதார வசதிகளோடும் காக்க வேண்டும். அறையிலுள்ள மாடங்கள் முதலியவை நல்ல முறையில் சுத்தமாக இருப்பதற்கும் ஒவ்வோர் அறையிலும் அழுக்குத் துணிகள் நீக்கப் பெறுவதற்கும் கண்காணிப்பு வேண்டும். பிள்ளைகள் சுத்தமான ஆடையை அணிவதும், நீராடி உடற்றூய்மை பெறுவதும் அவர்களுக்கு நோய் வாராத வண்ணம் காப்பதும் விடுதித் தந்தையின் பொறுப்பாகும்.

7. பள்ளியின் சுகாதாரம் அல்லது பள்ளியின் நல்வழி

பள்ளியின் நல்வழி என்பது பிள்ளைகளின் உடல் நலத்தைப் பேணப் பள்ளி யாங்ஙனம் வழி வகுப்பது என்பதேயாகும். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்றும் உடல் நலமே உள நலத்துக்கு வழி என்றும் கூறுவது மரபு. பள்ளிப் பிள்ளைகள் உடல் நலத்தோடு வளர வேண்டியது முக்கியம். பள்ளி அதற்கேற்ப அதன் சுற்றுப்புறத்தையும் சூழ்நிலையினையும் வகுப்பறைகளையும் கட்டட முழுவதையும் பிள்ளைகளின் உடல் நலத்துக்கு ஊறு நேராதபடி வழி வகுத்துக் காக்க வேண்டியது கடமையாகும். மேலும் பிள்ளைகளிடையே நோயைத் தடுக்கக்கூடிய பழக்கங்களும் அவர்கள் உடலோம்பலுக்குரிய முறைகளும் பள்ளி அளிக்க வேண்டும். எந்தப் பள்ளியும் எங்கும் தூய்மையான காட்சியை அளிக்க வேண்டுவது பள்ளியின் முதலாவது கடமை. பள்ளிச் சுவர்கள், தரை, சுற்றுப்புறங்கள் ஆகியவை எப்போதும் சுத்தமாக இருக்கத் தலைமையாசிரியரும், உதவியாசிரியர்களும் கண்காணிக்க வேண்டும். தலைமையாசிரியர் பள்ளி முழுவதுக்கும் பொறுப்பாவார். அவருடைய பொறுப்பைப் பகிர்ந்து கொள்ளும் முகத்தான் ஒவ்வொரு வகுப்பாசிரியரும் தமது வகுப்பறையைச் சுத்தமாக வைத்துக்கொள்வது நன்று. அறைகளையும் மற்ற புற வட்டங்களையும் சுத்தப்படுத்துவதற்கு ஏவலாளர் இருப்பினும் அவர்கள் தமது வேலையை நன்றாகச் செய்வதில்லை. அதனால் இன்று குடிமைப் பயிற்சித் திட்டத்தில் வகுப்பறையின் தூய்மைக்கெனவே மாணாக்கர் ஐவர் அல்லது அறுவர் அடங்கிய ஒரு சிறு குழுவினர் அதைக் கவனிக்கவேண்டும் என்று வகுத்துள்ளனர். பிள்ளைகள் எப்பணியை ஏற்றுக்கொண்டாலும் அதனை நன்றாகச் செய்து முடிப்பதற்கு முயற்சி செய்வர். ஆனால் ஆசிரியரும் அவர்களோடு ஒன்றி அவர்கள் பொறுப்பினைத் தாமும் பகிர்ந்து கொள்ளுவதைப் போன்று காட்டி அவர்களுக்கு ஊக்கத்தை மட்டும் அளித்துக்கொண்டே இருந்தால் அவர்கள் சிறிது சிறிதாகப் பொறுப்பு மீதுற்றுத் தமது பணியினை நன்றாக நடத்துவார்கள். வகுப்பறைகள் மட்டுமன்று. ஒரு சில மணித்துளிகளில் பள்ளி முழுவதையுமே சுத்தம் செய்து விடுவர். புறத்தே அசுத்தங்கள் நிகழாத வண்ணம் தடுத்தும் காப்பார்கள். பெரும்பாலும் பள்ளிகள் சுத்தமாக இருப்பதில்லை. வகுப்பறைகள் வெள்ளை அடிக்கப் பெறுவதில்லை. சில அறைகளில் மழை ஒழுக்கல் உண்டு. சுவரில் சுண்ணம்பும் இடிந்துகிடக்கும். இவற்றினை எல்லாம் பள்ளி நிர்வாகத்தினர் கவனிப்பதற்கு நேரம் இராது. இதைப் பள்ளித் தலைமையாசிரியரும் ஆசிரியர்களுமே கவ

னிக்க வேண்டும். உடனுக்குடன் பழுது பார்த்தல் நலம். பள்ளிப் பிள்ளைகளுடைய தந்தையர் ஒருசிலர் கொத்தராக இருப்பர். அவர்களை அறிந்து சிறுசிறு அளவில் அவர்களுடைய உதவியைக் கொண்டு பழுதுகள் பார்த்துவிடலாம். அஃது அல்லாது சிறிய பழுதினைப் பெரிதாக்கி அதை நிர்வாகத்தினர் செய்யவில்லை என்று தலைமையாசிரியரும் சேர்ந்து குறைகூறுவது வழக்கம். ஒரு சில பள்ளிகளில் வகுப்பறைகளின் சுவர்களெல்லாம் ஆணி அடித்துப் பாழாக்கப்படும். சுண்ணம்பு இடிந்த இடங்கள் காட்சி அளிக்கும். தணிக்கையாளர் வரும் ஒவ்வொரு காலமும் அவருடைய வருகையை நோக்கிச் சுவரெல்லாம் கண்டவாறு படங்களை ஆணி அடித்தும் பசை தடவி ஒட்டியும் பாழ்படுத்துவதுண்டு. வகுப்பறைச் சுவர்களில் கற்பிக்கும் கருவிகளின் பெயரால் சுவரைப் பாழாக்குவது மிகமிகத் தவறு. தொடக்க நிலைப் பள்ளிகளில் தொடங்கிய இப்பழக்கம் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் படையெடுத்துவிட்டது. எந்தத் தணிக்கையாளரும் இவற்றைக் கண்டு ஆசிரியரின் பெருமையினை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்த மாட்டார். எனவே அன்றாடம் வேண்டிய துணைக்கருவிகளை மட்டும் அவற்றிற்குரிய அட்டையிலோ அல்லது நெட்டிப் பலகையிலோ அழுந்தும் ஊசிகளால் இணைத்துப் பயன்படுத்திய பிறகு சுருட்டித் தனி இடத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமே யன்றி வேண்டியவற்றையும் வேண்டாதனவற்றையும் ஓர் ஒழுங்குமின்றிச் சுவரில் அடித்தும் கதவுகளில் அடித்தும் பாழாக்கும் பழக்கத்தை அறவே கடிதல் நல்லது. வகுப்பறைகள் எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும். நல்ல காற்று வகுப்பறையில் ஓட வேண்டும். காலதர்கள் திறந்த வண்ணம் இருக்கவேண்டும். வெளிச்சம் இடது பக்கத்திலிருந்து வரவேண்டும். பிள்ளைகள் உட்காரும் இருக்கைப் பலகைகளும் மேசைகளும் வரிசையாக ஒழுங்காக அமைந்திருக்க வேண்டும். ஆசிரியர் அமரும் நாற்காலியும் மேசையும், கரும் பலகையும் சுத்தமாக இருத்தல் வேண்டும். வகுப்பறையின் வெளிப்புறங்கள் இருமருங்கும் துப்புரவாக இருக்க வேண்டும். இவையன்றிப் பிள்ளைகளும் சுத்தமாகப் பள்ளிக்கு வரவேண்டும். "கந்தையானாலும் கசக்கிக் கட்டு" "கூழானாலும் குளித்துக் குடி" என்பவை பிள்ளைகள் பால் வற்புறுத்தப் பெற வேண்டியவை. தொடக்கநிலைப் பள்ளி முதல் இப்பழக்கம் வளர வேண்டும். நமது வெப்ப மாநிலத்தில் நாள்தோறும் பிள்ளைகள் தூய உடலோடும் தூய்மையான ஆடையோடும் பள்ளிக்கு வரவேண்டியது கடமை. அல்லது பிள்ளைகள் அழுக்கடைந்த ஆடைகளோடு தலைமுடியைத் திருத்திக் கொள்ளாமல் குளியாமலும் வருவது கண்கூடு. இந்தப் பழக்கத்தைத் தொடக்க நிலையில் நீக்கி விட்டால் பிள்ளைகள் ஒரு பழக்கமாக தூய்மையோடு பள்ளிக்கு வருவார்கள். ஆசிரியர்களும் தூய்மைக் காட்சியினைப் பிள்ளைகளுக்கு அளித்தல் வேண்டும். ஆசிரியர்கள் அங்காடிக்குச் செல்லும் வண்ணமாகப் பள்ளிக்குள் நுழைந்து விடுகிறார்கள். தூய்மை ஆசிரியரிடத்துத்

தொடங்கிப் பிள்ளைகளிடத்துப் பரவினுல் வகுப்பு அறைகளும் தூய்மை எய்திவிடும். பள்ளியின் நீர்கழிக்கு மிடங்கள் சுத்தமாக இருக்க வேண்டும். நகரத்துப் பிள்ளைகள் அதற்குரிய இடத்தைப் பயன்படுத்துவார்கள். ஆனுல் கிராமத்துப் பிள்ளைகள் அதற்கென ஓர் இடத்தை வகுத்துக்கொண்டு அதை உபயோகிக்க வேண்டியமை வற் புறுத்த வேண்டும். கண்ட விடங்களில் மலம் கழிப்பதையும் நீர் கழிப் பதையும் சுகாதார விதிக்குப் பாதகமானவையென்று எடுத்துக் காட்ட வேண்டும். அதனுல் ஏற்படும் அசுத்தங்களும், அசுத்தத்தில் உண் டாகும் நச்சுயிர்களும் யாங்ஙனம் மக்களுக்கு ஊறு விளைவிக்கின்றன என்பதனைத் திரைப்படங்களின் வழியாக விளக்கித் தடுக்க வேண்டும். எல்லாப் பள்ளிகளிலும் கழிப்பகங்கள் கட்டினுல் அசுத்தங்கள் கண்ணுக் குப் படாமல் மண்ணுக்கு அடியில் மறைந்து தேங்கிவிடும். மேலும் பிள்ளைகள் கண்ட இடத்தில் துப்புவதையும் தவிர்க்க வேண்டும். மூக்குப்பொடி போடும் ஆசிரியரும் புகையிலை குதப்பிக்கொண்டிருக்கும் ஆசிரியரும் கண்ட இடத்தில் மூக்கைச் சிந்துவதும் நின்ற இட்த்தில் துப்புவதும் நாகரிகமற்ற பழக்கங்கள். பள்ளியின் மூலையில் சளி துப்புவதையும் அதைச்சுற்றி ஈக்கள் மொய்த்துக்கொண்டிருப் பதையும் சில இடங்களில் காணலாம். ஆசிரியர்களே இங்ஙனம் செய் வதைக் காணும் பிள்ளைகள் தட்டுத்தடையின்றித் தாம் அசுத்தப்படுத்து வதற்கு அஞ்சுவதில்லை.

மற்றும் சில பழக்கங்கள் பள்ளித் தூய்மைக்கு மாருனவை. ஒவ் வொரு வகுப்பறையிலும் நாள்தோறும் பிள்ளைகள் காகிதங்களைத் துண்டுதுண்டாகக் கிழித்துப் போடுவதும் உருட்டிப் போடுவதும் வழக்கம். இரண்டாவது உலகப் போர்க்காலத்தில் காகிதப் பஞ்சம் அதிகமாயிருந்தது. நோட்டுப் புத்தகங்களே கிடைக்காத காலம். கற்பலகைகளை உயர்வகுப்புப் பிள்ளைகளும் பயன்படுத்திய காலம். அப்போது காகிதக் குப்பைகள் வகுப்பறைகளில் இன்று காணப்பெறு வதைப்போல் அன்றும் காணப்பட்டன. இதைத் தடுக்க ஆசிரியர்கள் வழிவகை செய்தல் வேண்டும். காகிதத் துண்டுகள் பள்ளிச் சுற்றுப் புறத்தில் எங்கும் காணலாம். இதைத் தடுப்பதற்கு வழி யாது?

சென்னை மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் குடிமைப் பயிற்சி, கல்வி ஏற்பாட்டில் உள்ளதொன்று. அப் பயிற்சி ஒழுங்காக அளிக்கப் பெற்ருல் பள்ளித் தூய்மை ஒரு சிக்கலாகாது. அதன் திட்டப்படி இரண்டு அகவை நேரங்களில் ஓர் அகவை வகுப்பறையின் சுத்தத்துக் கென்று ஒதுக்கப் பெற்றுள்ளது. வாரத்துக்கு ஒரு முறை பிள்ளைகள் இதனை மேற்கொண்டால் வகுப்பறைகள் நன்ருகிவிடும். பள்ளியின் புறவட்டங்கள் நாள்தோறும் குடிமைப் பயிற்சி அகவைகளில் அந்தந்த வகுப்பின் சுகாதாரக் குழுவினரால் தூய்மைப் படுத்தப் பெற வேண்டும். வாரத்துக்கு ஒரு முறை ஒவ்வொரு வகுப்பறையையும் நீர் கொண்டு அலம்பினுல் துகள்கள் இல்லாது ஒழியும். பிள்ளைகள்

தாமாகவே இப்பணியை மேற்கொண்டால் அவர்கள் ஒரு போதும் அசுத்தம் செய்ய மாட்டார்கள். இக்குழுவினரே மற்ற பிள்ளைகளின் உடல், நகம், ஆடைச் சுத்தங்களையும் கவனிக்கலாம். இத்தகைய திட்டம் இல்லாத பள்ளிகளில் வகுப்பு ஆசிரியர் இதனைக் கவனிக்க வேண்டியது கடமை. அவர் கவனிப்பதைக் காட்டிலும் தம் மேற்பார்வையில் பிள்ளை தம் பணியை மேற்கொள்ளுவது நல்லது. பள்ளியில் உள்ள ஒவ்வோர் ஆசிரியரும் இதனை நாள்தோறும் கவனித்தல் நன்று. புறத்தூய்மை அன்றோ அகத் தூய்மைக்கு வழி வகுக்கும் ?

பள்ளிகளில் உள்ள எல்லாப் பிள்ளைகளையும் ஆண்டுக்கு ஒரு முறை ஒரு தகுதி பெற்ற மருத்துவரைக் கொண்டு அவர்களுடைய உடலைச் சோதித்துக் குறைகளையும் நிறைகளையும் குறிப்பிக்கச் செய்தல் வேண்டும். இதை ஒரு புத்தகத்தில் பதிவு செய்வது வழக்கம். இதுவன்றிப் பெற்றோருக்கு அவரவர்களுடைய பிள்ளைகளின் நிலையைப் பற்றி அறிவிப்பது உண்டு. அஃதாவது பிள்ளைகளுக்கு வேண்டிய மருத்துவ உதவியைக் காலம் தாழ்த்தாது பெற்றோர்கள் அளித்துப் பிள்ளைகளுடைய உடலக் குறைபாடுகளை நீக்க வேண்டுமென்பதே இதன் நோக்கம். பதிவேட்டில் பிள்ளையின் பெயர், பால், முகவரி, வயது, வகுப்பு, உயரம், எடை, மூச்சடக்கும்போதும் விடும்போதும் உள்ள மார்புச் சுற்றளவு, ஐம்புலன்களின் நிலை, தோல், எலும்பமைப்பு, இருதயத் துடிப்பு, நுரையீரலின் தன்மை, வாய் நாற்றம், பற்களின் சுத்தம், கண்களின் பார்வை, மூக்கு செவிக் குறைவு அல்லது நிறைவு, தலைமுடியின் சுத்தம், சுரப்பிகள், வயிறு, மண்ணீரல் இன்னோரன்ன பிற இடம் பெறும். அந்த உறுப்புக்களை எல்லாம் சோதனை செய்வார்கள். இத்தகைய சோதனை நடத்த வேண்டியது மிகவும் வேண்டற்பாலது. பிள்ளைகள் குறைபாடுகளோடு வளர்ந்தால் அவற்றின் விளைவு அவர்களுடைய வளர்ச்சியைப் பாதிக்கும்.

சில ஆண்டுகளுக்கு முன் மருத்துவச் சோதனை கட்டாயமாக நிகழ்ந்தது. அதற்கெனத் தனிக் கட்டணமும் வசூலிக்கப் பெற்றது. அக்கட்டணமும் பள்ளி மருத்துவரென அமர்த்தப் பெற்றவருக்கு அளிக்கப் பெற்றது. தணிக்கையாளர்களும் அமர்த்தப் பெற்ற மருத்துவரின் தகுதிகளை ஆய்ந்து ஒப்புதல் அளித்தார்கள். மருத்துவச் சோதனையோடு மட்டுமல்லாது சில பள்ளிகளிலும் மருத்துவருக்கென ஓர் அறை ஒதுக்கப்பெற்று அங்கு நாள்தோறும் குறித்த நேரத்தில் அமர்ந்திருந்து வேண்டிய மாணவர்களுக்கு முதலுதவி, பணி விடைகள் முதலியவற்றையும் செய்வதுண்டு. அவர் தங்கும் அறைக்குப் பள்ளியின் [1] மருத்துவ விடுதி எனவும் பெயரிடப் பெற்றது. பள்ளி மருத்துவர் பொதுவாகப் பள்ளியின் சுகாதாரங்களையும் கண் காணிப்பது உண்டு. அவர் வழியாகச் சுகாதாரக் கருத்துக்களைப் பெறுவது

1. School Clinic

நல்லது. நாட்டில் கொள்ளை நோய் யாதாகிலும் இருந்தால் அதைத் தவிர்ப்பதற்கு மருந்தூசி போடுவது வழக்கம். பிள்ளைகளுக்கு மருந்தூசியின் நன்மையையும், பரவும் நோயைத் தடுக்கும் வழியையும் விளக்கிக் கூறினால் அதை அறிந்து கொண்டு அதன்வழி நடந்து நோயைத் தவிர்த்துக் கொள்ளுவார்கள். பள்ளி மருத்துவர் ஆசிரியர்களுக்கும் பேருதவி புரிவார்.

சுகாதாரக் கல்வி, வளரும் பிள்ளைகளுக்கு மிகவும் இன்றியமையாதது. அதைத் தனியாக அளிக்க வேண்டுமா என்பது வினா? பொதுக் கல்வியோடு சுகாதாரக் கல்வி இணைந்ததல்லவா என்றும் வினவுவார்கள். 'பள்ளிச் சூழ்நிலையும், ஆசிரியர்களுடைய எடுத்துக் காட்டுக்களும் அவர்கள் அப்போதைக்கப்போது கூறும் பல மெய்க் கருத்துக்களும் சுகாதாரக் கல்வியாகாதா என்று வினவுவர். சுகாதாரக் கல்வி முதற்கண் மனித்த உடலமைப்பைப் பற்றியும் நோய்கள் உண்டாவதற்குக் காரணங்களைப் பற்றியும் அவற்றைப் போக்குவதற்கு வழிகளைப் பற்றியும் அறிவிப்பது. நோயுற்ற பிறகு நீக்கு முறை தேடுவதைக் காட்டிலும் நோய் வாராது தடுப்பது சிறந்த கல்வியாகும். தொத்து நோய் பெரும்பான்மை இளம் பிள்ளைகளிடையே அவர்களையும் அறியாது பரவுவதுண்டு. குழந்தைகள் ஒருவருக்கொருவர் நோயைப் பரவவொட்டாது தடுத்துக் கொள்ளத் தெரிதல் வேண்டும். தமது உடல் வளத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் தெரிய வேண்டும். இளமையில் அவர்கள் பெறும் சுகாதாரப் பழக்கங்கள் ஆயுள் முழுவதும் நீடிக்கக் கூடியவை. பள்ளியில் வற்புறுத்தப் பெறும் சுகாதர முறைகள் பிள்ளைகளுடைய இல்லங்களையும் எட்டிப் பிடித்தல் வேண்டும். சுகாதாரப் பழக்கங்கள் பள்ளியோடு நில்லாது இல்லங்களில் பரவினால் மட்டுமே இடைவிடாது நன்மையளிக்கும். பள்ளியின் ஒரு வகைப் பழக்கங்களும் இல்லங்களில் அவற்றிற்கு மாறுனவைகளுமானால் சுகாதாரக் கல்வி பயனற்றுவிடும். எனவே பிள்ளைகள் வழியாக ஒவ்வொரு இல்லத்திலும் நல்வழிகள் பரவ வேண்டும். இல்லங்கள் ஒழுங்காகி விட்டால் சமூகத்தில் நல்வழிகள் பரவும். கல்வி நிலையங்களாகிய நமது பள்ளிகள் சுகாதாரக் கண்காட்சிகளையும் நோய்த் தடுப்பு முறைகளையும் அப்போதைக்கப்போது பொது மக்களுக்கு விளக்கலாம். மாணவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய பல சமூகத் தொண்டுகளில் துப்புரவுச் சேவையும் சுகாதார வற்புறுத்தலும் நல்லவை.

பள்ளியில் நடைபெறும் குடிமைப் பயிற்சியின் வழியாகச் சுகாதார முறையில் பழக்குவதும் ஒரு வழியாகும், வகுப்பு மாணவர்களுக்குள் ஒரு குழுவினையும் பிரித்துச் சுகாதாரத்தை ஒப்படைக்கலாம். இச் சுகாதாரக் குழுவின் உதவியைக் கொண்டு பள்ளி மருத்துவர் தொத்து நோயுற்ற பிள்ளைகளையும், பிற நோய்களால் வருந்தும் பிள்ளைகளையும் சில பிள்ளைகளுடைய இல்லங்களில் அல்லது சுற்றுப் புறங்களிலுள்ள

கொள்ளை நோய் முதலியவற்றினையும் அறிந்து ஆவன செய்யலாம். மாணவர் குழுவோடு ஆசிரியரும் கண்ணும் கருத்துமாக ஒத்துழைக்க வேண்டும். பெரியம்மை, டிஃப்தீரியா, குடற் காய்ச்சல், காலரா ஆகிய நோய்களைத் தடுப்பதற்குப் பள்ளி மருத்துவர் மருந்தூசிகள் போட லாம். பெரியம்மையைத் தடுப்பதற்கு அம்மை குத்துதல் ஐந்தாண் டுக்கு ஒரு முறை அவசியம் என்று கருதுகிறார்கள். டிஃப்தீரியா என்னும் தொண்டைப் புண் நோய் சிறு பிள்ளைகளிடையே வெகு எளிதாகப் பரவுவதொன்று. பிள்ளைகள் இனிப்பு மிட்டாய்களைச் சப்பிக் கொண்டு ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டிருத்தலால் நச்சுப் பூச்சிகள் தொத்தியும் அல்லது வேறு வழிகளிலும் பரவிப் பிள்ளைகளைக் கொன்று விடுகின்றன. பள்ளிப் புறங்களில் குளிர்க் குடிவகைகள், குளிர்ந்த பாற்கட்டிகள், அழுகிய பழங்கள், ஈக்கள் மொய்க்கும் பண் டங்கள் ஆகியவை விற்பனை செய்யாதபடி தடுக்க வேண்டும். இளைஞர்கள் அவற்றின் கொடுமையை அறியாது வாங்கித் தின்று விடுகின்றார்கள். அதனால் நச்சுப் பூச்சிகள் உட்சென்று பல நோய்களை உண்டாக்குகின்றன. பெற்றோர்களுக்குற்ற தொத்து நோய்களைப் பிள்ளைகள் பெறுகின்றார்களாகையால் அவர்கள் வளரும் பருவத்தே அவையும் வளர்ந்து பிள்ளைகள் பிறருக்கும் பரவி விடுகின் றன. இவற்றை அறிந்தவுடன் மருத்துவருக்கு அறிவித்தல் நலம்.

மருத்துவச் சோதனையில் பிள்ளைகள் நல்லுணவுக் குறைவால் பல உடற்குறைபாடுகளோடு இருப்பார்கள். அத்தகைய பிள்ளைகளுக்கு இன்று அமெரிக்க நாட்டிலிருந்து வரும் பாலுணவினைப் பள்ளி அளிக்க வேண்டும். பாலுணவினைப் பங்கிடுவதிலும் பங்கீட்டுத் தவறுகள் நிகழாத வண்ணம் கண்காணிக்க வேண்டும். அத்தகைய பிள்ளை களுக்கு மதிய உணவு அளித்தல் வேண்டும். நல்லுணவு உண்டால் நன்றாக வாழலாம். எளிய உணவால் அளவுக் குறையும் சத்தின்மை யும் உடலுக்கு தீமை விளைக்கும் பண்டங்களும் சேரலாம். சம அளவு உணவு வேண்டியவற்றைப் பற்றி அறியாதவர்கள் இல்லை. பள்ளியில் அளிக்கும் மதிய உணவாவது நன்றாக இருத்தல் நலம்.

சுகாதாரக் கல்வியென்று ஒன்று தனித்து நமது கல்வி ஏற்பாட்டில் பள்ளி நிலையில் உள்ளது. இதனைப் பாடமாகக் கற்றுக் கொடுத்தல் நலமன்று. ஏனென்றால் பல பாடங்கள் கற்று மறக்கப் பெறுகின்றன. ஆனால் சுகாதாரக் கல்வி பழக்கத்திலன்றோ உறுதி பெற வேண்டும். பழக்கத்தின் .வழியாகவும் ஓரளவு பாடமாகவும் எடுத்துரைக்க வேண் டும். வாழ்வில் எது சரி, எது தவறென்று ஆய்ந்தறியும் பழக்கமும் பள்ளியில் ஒரோவழி வேண்டும். முதலுதவி, சுகாதாரம் ஆகியவை ஓரளவு பொது அறிவுப் பாடங்களில் இடம் பெறுகின்றன. சில பள்ளிக ளில் சுகாதார விதிகளை விளம்பர அட்டைகளில் பொறித்து அறிவிக்கின் றார்கள். ஆனால் அவற்றை நெட்டுருச் செய்து ஒப்பித்தல் வெற்றுப் பாட மாகத் தொடங்கி முடிவுறும். இங்ஙனம் அல்லாது நல்ல பழக்க வழக்

கங்களாகிய படுக்கைக்கு முன்னர் செல்லுவதும், வைகறைத் துயி லெழுவதும், நல்ல காற்ரேட்டமுள்ள வெளிப்புறத்தில் விளையாடுவதும் நல்ல சத்துள்ள உணவை உண்ணுதலும், நிமிர்ந்து நிற்றலும், ஒழுங் காக நடத்தலும், நல்ல முறையில் உட்காருதலும் ஆகிய பலப்பல பிள்ளைகளிடையே இயற்கைப் பழக்கங்களாக வளருவது நல்லது. இவற் ரோடு சமூகத்தில் சுகாதார ஒழுங்குகளோடு நடந்து கொள்ள வேண்டிய வற்புறுத்தலும் வேண்டும். சுகாதாரத்துக்கென ஏற்பட்டிருக்கும் நிலை யத்தின் விதிகளுக்கும் திட்டங்களுக்கும் பணியுமாறு பழகுதல் வேண் டும். பிள்ளைகள் பலர் சிறுநீர் கழித்தலுக்கு அதற்குரிய இடத்துக்குச் செல்லுகின்றனர்கள். ஆனல் சிலர் பள்ளிக்கு வெளியில் கண்ட இடங் களில் அசுத்தம் செய்கின்றனர்கள். அத்தகைய பழக்கம் சமூகத்தின் சுகாதார விதிகளுக்கு மாறுனது. மேலும் பிள்ளைகள் சுகாதாரத்தைத் தேடிக்கொள்ளக்கூடிய இடவசதிகளையும், மருத்துவ நிலையங்களையும் மருத்துவர்களைப் பற்றியும் சமூகச் சுகாதாரத்தோடு ஒட்டி வாழக்கூடிய வழிகளைப் பற்றியும் அறிந்து கொள்ளுதல் முக்கியம். இவற்றை நன் ருக அறிந்தாலன்றிப் படித்த பிள்ளைகள் தமது இல்லத்திற்கும் சமூகத் திற்கும் நல்லவை செய்ய இயலாது. சமூகமும், சூழ்நிலையும் சுகாதாரத் தில் அமைந்தாலன்றிச் சுகாதாரம் அச்சமூக வட்டத்தில் வளராது. அஃது இல்லாததே பெருங் குறையாகும். அதனை உருவாக்குவதே பெரும்பணி. அதற்கு பள்ளியும் ஒரு சிறிது பொறுப்பேற்க வேண்டும். நோயற்ற ஒரு சமூகத்தில் ஒருவர் நோயுற்ருல் அவர் குற்றவாளியாகவும் கருதப் பெறலாமென்று ஓராசிரியர் கூறுகின்றனர். இஃது சுகாதாரப் பழக்கத்தின் உச்சநிலையை எடுத்துக் காட்டுகின்றது.

பாட ஏற்பாட்டோடு ஒன்றித் தனித்து இயங்காத சுகாதாரக் கல்வி சில பாடங்களாகிய பொது அறிவு, உயிரியல், சமூக அறிவியல், வரலாறு ஆகியவற்ரேடு இணைந்தால் ஒவ்வொன்றிலும் கற்க வேண்டி யவை உடல் நலனேடு ஒட்டியவை என்று தெளிதலும் கற்கும் பொருள் நற்செய்தி என்று உணர்தலும் நன்று. காட்டாகப் பல சமூக அமைப்புக் களும், நிலையங்களும் சுக வழிக்கு உதவுபவை என்று சமூக அறிவிய லில் அறிந்தால் சமூக அறிவேற்பாடும் மாணவருக்குப் பொருளுடைய தாகும். வரலாற்றுப் பாடங்களில் பெரும்பான்மை நோய்களைப் பற்றிய மருத்துவ இயல் வளர்ச்சியைப் பற்றியும் மருத்துவத் துறையில் பல வகையில் நன்மை செய்தவர்களைப் பற்றியும் சமூக அறிவியல் விரிவாற் றினுல் அவற்றின் அறிவு உண்மையான சுகாதாரக் கல்வியின் அடிப் படையாகும். பொது அறிவியல் ஆசிரியர்கள் சத்துள்ள சம அளவு உணவைப் பற்றி விதந்து கூறினுலும் களைப்படைவதைப் பற்றியும் களைப்பு நீக்குவதைப் பற்றியும் விரிவாற்றினுலும் பொது அறிவு என்னும் பாடத்தின் பெயரால் நன்மை பயப்பதாக ஆகும். எனவே பாடங்களின் வழியாகச் சுகாதாரக் கருத்துக்களின் நுணுக் கங்களை அந்தந்தப் பகுதிப் பாடத்தோடு இணைத்தளித்தால்

வேண்டிய அளவு உளத்தகத்தே தெளிவு உண்டாகும். எனவே பள்ளி பல சுகாதாரச் செயற்பாடுகளை வரிசை முறையாக்க வேண்டும். செயற்பாடுகளன்றி மனித்தப் பழக்கம் தொடங்காற்ருல் பெருது. எத்துணை ஏட்டறிவினைப் புகுத்தினுலும் அது கறிக்குதவாது. பல கருத்துக்களை ஒன்றன்பின் ஒன்ருக அளிக்கலாம். சுகாதார ஏடுகளைத் தயாரித்து விளம்பரம் செய்யலாம். ஆனுல் அடிப்படை பழக்கங்களன்ருே இன்றியமையாதன? பிள்ளைகளுக்கு அவர்களுடைய உயரத்தையும் எடையினையும் உணர்ந்து விட்டால் அவை இரண்டும் தம்மைச் சார்ந்தவை என்றும் உரியவை என்றும் அவற்ருல் தமக்கு நன்மை என்றும் அறிந்து கொண்டால் எடையையும் உயரத்தையும் வளர்த்துக் கொள்ள முற்படுவார்கள். அவற்றிற்கு வழியையும் தேடுவார்கள். நாள்தோறும் பள்ளித் தொடக்கத்தில் ஒரு சில பழக்கங்களை வற்புறுத்தலாம். கைச்சுத்தம், நகச்சுத்தம், நகத்தைக் கடிக்கும் தீயபழக்கம், உடற்சுத்தம், பற்களின் சுத்தம், முடிச்சுத்தம், ஆடைச் சுத்தம் ஆகியவை சோதனை பெறலாம். இவை எண்ணிக்கையில் அதிகமாகலாம். மேலும் இல்லத்தே நிகழும் சுகாதாரப் பழக்கங்களையும் நோய் முதலியவற்றின் காரணங்களையும் அறியலாம். பிள்ளைகளின் களைப்பினை அறிந்து அவர்களுக்கேற்ற பால் முதலிய உணவுகளை அளிக்கலாம். உண்ணல், உறங்குதல், விளையாட்டு ஆகியவற்றில் திருத்தங்கள் செப்பலாம். பிள்ளைகள் சிலருக்கு அடியண்ணத்தில் தசை வளருதல், மூக்கால் பேசுதல், செவிக்குறை, பார்வைக்குறை ஆகியவற்றைக் கண்டறிந்து ஆவன செய்யலாம். ஊரில் தொத்து நோயிருந்தால் அது பரவாவண்ணம் பள்ளியில் தடுப்பு முறைகள் தொடங்கலாம். இவை யாவும் பழக்கங்களாகத் தொடங்குதல் வேண்டும்.

பள்ளியின் சுகாதாரச் செயற்பாடுகள் பள்ளிக்கு அப்பால் பரவ வேண்டுமென்று முன்னர்க் கண்டோம். ஆசிரியரும் மாணவரும் பொதுநலத்துறையினரோடு ஒத்துழைக்க வேண்டும். பொதுநல விதிகளை வற்புறுத்தும் சூழ்நிலைகளோடு பிள்ளைகள் இணைந்து செல்ல வேண்டியது கடமை. பிள்ளைகள் அறிவுத் , திறனேடு சுகாதாரச் சூழ்நிலையினை அறிதல் வேண்டும். பள்ளிக்குப் பலதுறை மருத்துவர்களை அழைத்து அவரவர்களுடைய துறையினைப்பற்றி விளக்கம் தருமாறு கேட்டுக் கொள்ளலாம். அவர்களுடைய வருகை பிள்ளைகளுக்கு மட்டுமல்லாது ஆசிரியர்களுக்கும் பல கருத்துக்களை அறிவிப்பதும் நினைவூட்டுவதுமாகும். அத்தகையோர் ஒரு தொத்து நோய்க்காலத்தில் தாமாகவே அந்நோயினைப் பற்றியும் அதிலிருந்து தப்பித்துக் கொள்ளும் முறையினைப் பற்றியும் கூறுவார்கள். ஒரு பிள்ளையினுடைய பார்வைக் குறைவினை ஆசிரியர் கண்டறிந்தால் அண்மைப் பார்வை, சேய்மைப் பார்வை, கோணப் பார்வை ஆகியவற்றைப்பற்றி அறிவிப்பதோடன்றி அவற்றை

நீக்கும் முறைகளைப்பற்றியும் பேசலாம். கண்ணோயுள்ள பிள்ளைகள், கண் சிவந்த பிள்ளைகள், ஒவ்வொரு பொருளையும் விழித்துப் பார்க்கும் பிள்ளைகள், தொலைப்பொருளை மிகவும் நெருங்கிப் பார்க்கும் பிள்ளைகள், அடிக்கடி தலைவலிக்கும் பிள்ளைகள், புத்தகத்தைத் தூரத்தில் பிடித்துக் கொண்டு படிக்கும் பிள்ளைகள், கண்ணை சிமிட்டிக் கொண்டிருக்கும் பிள்ளைகள் ஆகியோரைப் பார்க்கும் ஆசிரியருக்கு ஐம்புலன்களில் ஒன்றாகிய கண்களைப்பற்றியும் அவற்றின் நலனைப் பற்றியும் பேசுவதற்கு வாய்ப்பும் பொறுப்பும்உள. உடல் நூல் ஆசிரியர் தனிப்பாடமாகக் கண்களைப் பற்றிக் கற்பித்துப் பல ஆரவாரம் செய்தலை விட்டு ஒரு நிகழ்ச்சியிலிருந்து காரண காரியங்களை விவரித்தால் கற்கும் தூண்டுதல்கள் பலவாகும். சொறி சிறங்கோடு வகுப்பில் ஒரு பிள்ளை காணப்பெற்றால் அதைத் தடுப்பதற்கும் போக்குவதற்கும் அஃது உண்டாகும் காரணத்தைப் பற்றியும் கூறலாம். வகுப்பறையில் நேராக நிமிர்ந்து உட்காராத பிள்ளைகளைச் சுட்டிக் கோணலாக உட்காருவதின் விளைவை விவரிக்கலாம். மருத்துவர்கள், நாற்காலி, எழுது நாற்காலி செய்பவர்கள், பணச்செலவு செய்யும் அரசாங்கம் ஆகியோரைக் காட்டிலும் ஆசிரியருடைய கண்காணிப்பு மாணவர்களுடைய முதுகெலும்பு வளையாத வண்ணம் நேராக வளரச்செய்யும். நல்ல எழுது நாற்காலிகள் இருந்தாலும் மாணவர்கள் கோணாது உட்காருவதற்கு ஆசிரியரல்லவோ பொறுப்புள்ளவராவார்! மாணவர்கள் நடக்கும்போது நேராக நடைபோடுவதில்லை. சிலர் வலது காலை அதிகமாக ஊன்றியும் தலையினை இடது பக்கம் சாய்த்துக் கொண்டும் நடப்பார்கள். இங்ஙனம் தவறாக நடைபோடுவது ஆசிரியர் ஒருவரால் மட்டுமே அடிக்கடி கண்டித்துத் திருத்தக் கூடியது. பற்களை நன்றாகச் சுத்தம் செய்யாது பிள்ளைகள் வகுப்புக்கு வருகின்றார்கள். வாய்நாற்றம் அதனால் உண்டாகிறது; பல் சொத்தையாகிறது; அல்லது பல்லைச் சுற்றிலும் வீக்கம் ஏற்பட்டுப் பல்நோய் வருகிறது. போதிய சுண்ணும்புச் சத்துக் குறைவினால் பல்நோய் வருகிறதென்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். நூற்றுக்கு எண்பது பிள்ளைகளுக்குப் பற்சொத்தை நோய் உண்டென்று கண்டுள்ளார்கள். பிள்ளைகள் சிலருக்குப் பற்களில் இரத்தம் வடிவது வழக்கம். இத்தகைய நோயுள்ள பிள்ளைகள் பக்கலிலுள்ள பிள்ளைகளுக்கு மிகவும் அருவருப்பைத் தருவார்கள். பற்கள் தொடக்கநிலைப் பருவத்தில் பிள்ளைகள் படிக்கும்போது தான் உருவாகின்றன. பால் பற்கள் விழுந்து மீண்டும் பற்கள் முளைக்கின்றன. அதனால் தொடக்கநிலை ஆசிரியர்கள் பிள்ளைகளுடைய பற்களைச் சோதித்து அவர்கள் பல் தேய்த்து வருமாறு வற்புறுத்த வேண்டும். அல்லது அவர்களுக்கும் உப்பும் பொருசும் கொடுத்துப் பள்ளியிலேயே பற்களைச் சுத்தம் செய்வித்தல் வேண்டும்.

பள்ளிகளுக்கு வெளியே பிள்ளைகளை ஈர்க்கும் பல சிறு தீனிக் கடைகளை யாங்கணும் பார்க்கலாம். அழுகிய பழங்கள் தீமை பயக்கும்

மிட்டாய் வகைகள், குளிர்வூட்டியில் உருகிய பாற்கட்டிகள் ஆகியவை பெரும்பான்மையின. இவற்றைப் பிள்ளைகள் காசுகள் கொடுத்து வாங்கி உண்கிறார்கள். இவற்றின்மீது ஈக்கள் மொய்த்துக் கொண்டிருக்கும். இச்சிறு அங்காடிகளை கழிநீர் ஓடையின் பக்கலிலே காணலாம். சுகாதார விதிகளை அறியாப் பிள்ளைகள் இவற்றின் தீங்குகளை உணராது அவற்றை வாங்கித் தின்கிறார்கள். ஒரு பிள்ளை கடித்த பழத்தை மற்றொரு பிள்ளையும் கடிப்பதுண்டு. இதெல்லாம் பலவகைத் தொத்து நோய்களுக்கு வழியாகும். எனவே முதற்கண் இக்கடைகள் அங்கு வைப்பதைப் பள்ளியினர் தடுக்க வெண்டும். இரண்டாவதாகப் பிள்ளைகள் அவை தீங்கானவை என்பதை அறியுமாறு விளக்கவேண்டும். இவற்றோடு வீதிகளில் விற்கும் எத்தகைய பண்டங்களையும் வாங்கித் தின்னுதபடியும் பழக்குதல் நல்லது. சில நகராண்மைக் கழகங்கள் இனிப்புப் பண்டக் கடைகளில் ஈக்கள் மொய்க்காத வண்ணம் கண்ணாடிச் சட்டங்களால் மூடப்பெற்றிருக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றன. மற்றும் நமது நாட்டிலுள்ள பெருவாரியான சிற்றுண்டிச் சாலைகளுக்குச் சென்று உண்பதைத் தவிர்க்கப் பறை சாற்றுவதும் நல்லது. வருவாயைப் பெறுவாயாகக் கொண்டு நடைபெறும் சிற்றுண்டிச் சாலைப் பண்டங்கள் ஒவ்வொருவருடைய வயிற்றையும் கெடுப்பதோடு பல கோளாறுகளுக்குக் காரணமும் ஆகின்றன. பண்டங்கள் செய்யப்பெறும் அடுப்படிகள் மிக அசுத்தமாக இருக்கக் காண்கிறோம். இத்தகைய இடங்களில் செய்யப்பெறும் பண்டங்கள் விற்பனையாகி இளம்பிள்ளைகளின் நோய்களை வளர்க்கின்றன.

பள்ளியின் சூழ்நிலையையும் பள்ளி உள்ள நகரம் அல்லது பட்டணத்தின் சுகாதார நிலையையும் அறிந்து பொதுப்படக் கூறும் காப்பு முறைகளுள் சிறப்பாக அப்போதைக்கப்போது வேண்டப்பெறும் தடுப்பு முறைகளையும் சுட்டிக் கூறுதல் நன்று. தொத்து நோய்கள் பிள்ளைகளை வெகு எளிதில் தாக்கக்கூடியவை. அவற்றுள் ஒரு சில முன்னர்க் கண்டோம். தொத்து நோயுள்ள ஒருவர் நோய் இல்லா ஒருவரோடு பழகுவதால் அவரது நோய் நோயற்றவரைப் பற்றிக் கொள்ளுகிறது. இத்தகைய நோயை நேர்முகத் தொடர்பால் உண்டாகும் ஒட்டு நோய் என்று கூறுவர். இங்ஙனமின்றி நோய், காற்றின் வழியாகவும் நோயுற்றவரின் பல பொருளின் வழியாகவும், உணவு, குடிநீர் வழியாகவும் பரவுவது கண்கூடு. இவற்றைத் தொத்து நோய் என்பர் : பெரியம்மை, குளிர் காய்ச்சல், டிஃப்தீரியா, கக்குவாய், இருமல், காசநோய் முதலியவை. குடற்காய்ச்சல், காலரா என்னும் வாந்திபேதி, சீதபேதி, ஆகியவை குடிநீர் வழியாகப் பரவுகின்றன. பாலுணவின் வழியாகவும் டிஃப்தீரியா, காசநோய் உண்டாகின்றன. ஈக்கள் வழியாகக் குடற்காய்ச்சல், காலரா, சீதபேதியும், கொசுக்களின் வழியாக மலேரியா என்னும் முறைக் காய்ச்சலும் மக்களைப் பீடிக்கின்றன. ஒரு சில நோய்கள் எப்போதும் குறைவாகவோ மிகுதியாகவோ, எப்போதும் இருந்த

வண்ணம் உள்ளன. மற்றும் சில ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குப் பரவியும் பல இடங்களுக்குப் பரவியும் மக்கள் பலரைத் தாக்கியும் துன்புறுத்துகின்றன. எல்லாத் தொத்து நோய்களும் அவற்றிற்குரிய நச்சுப் பூச்சிகளாற் பரவுகின்றன. நச்சுப் பூச்சிகள் இரத்தத்தோடு கலந்தவுடன் நோய் தொடங்குகிறது. உடல் வன்மையோடு இருப்பவர்களை அவைகள் வெகுவாகத் தாக்குவதில்லை. மருந்தூசிகளைக் குத்திக் கொண்டால் அவை நேராக நச்சுப் பூச்சிகளைத் தாக்குகின்றன.

தொத்து நோயுற்றவர்களை மற்றவர்களோடு கலவாது ஒதுக்கி வைப்பது நலம். தொத்து நோயுள்ள இல்லத்திலிருந்து பிள்ளைகளை மூன்று வாரங்களுக்கு நீக்கி வைப்பதுண்டு. நோயுற்றவருடைய இல்லங்களைச் சுகாதார விதிப்படி [1]நச்சுக் கொல்லிகளால் சுத்தம் செய்ய வேண்டும். பள்ளிகளின் வழியாகப் பிள்ளைகளிடையே தொத்து நோய்கள் வெகு எளிதில் பரவுகின்றன வென்று கருதுகிருர்கள். வகுப்பறைகளில் பிள்ளைகள் நெருக்கமாக உட்காருவதால் வெகு எளிதில் மூச்சுக் காற்றுகளின் வழியாக நோய்கள் பரவுகின்றன. பெருந் தொத்து நோய்க்காலங்களில் பள்ளியை மூடிவைப்பதும் உண்டு. ஃப்ளூ என்னும் குளிர்க்காய்ச்சல் மிகப் பரந்த நோயாக அடிக்கடி மக்களைப் பீடிக்கின்றது. 1918ஆம் ஆண்டில் முதலாவது உலகப் போரின் இறுதிக் காலத்தில் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றுவிட்டது. 1958ஆம் ஆண்டில் மீண்டும் பெருவாரியாகப் பொது மக்களோடு பள்ளிப் பிள்ளைகளையும் துன்புறுத்திற்று. இக்காலங்களில் பள்ளிகள் மூடப் பெற்றன. நோய் நிலையை அறியக்கூடிய பொதுநலத் துறையினர் முன்னேற்பாடாகப் பள்ளிகளின் வழியாகப் பரவவொட்டது மருந்தூசிகளைப் போட்டுத் தடுக்கின்ருர்கள். வகுப்பு ஆசிரியர் வெகு விழிப்பாக இருந்தால் எந்தத் தொத்து நோயையும் கண்டறியலாம். அவர் ஐயுற்ருல் மருத்துவரிடம் அனுப்பி விளக்கிக் கொள்ளலாம். கம்மிய குரல், வீங்கிய கழுத்து, தும்மல், சிவந்தகண்கள், மூக்கில் நீர்வடிதல், இருமலோடு வாயிலெடுத்தல், காய்ச்சல், நடுக்கம், தலைவலி, புண் முதலியவை பல தொத்து நோய்களின் தொடக்க நிலைகளாகும். இவற்றைக் கண்டறிந்து உடனடியாக இவை உள்ள பிள்ளைகளை நீக்குதல் வேண்டும்.

காப்பு முறைகளும் முதலுதவியும் :

ஒருவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு வேண்டிய காப்புக் கல்வி அண்மைக்காலம் முதல் இன்றி யமையாத ஒன்ருக அரசினராலும் பள்ளிகளாலும் அளிக்கப் பெறுகின்றது. நெடுஞ்சாலைகளிலும், சிறு தெருக்களிலும், மூலைச் சந்துகளிலும், இல்லங்களிலும், பொது நிலையங்களிலும் இன்னேரன்ன பலப்பல இடங்களிலும் மக்களுக்குப் பல ஆபத்துக்கள் விபத்துக்களாக மாறி தீமை புரிகின்றன.

1. Disinfectants

இவற்றிலிருந்து சிறு பிள்ளைகள் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய கடமை உள்ளது. காப்பாற்றிக் கொள்ளுதல் யாங்ஙனம் என்று கற்பதே காப்புக் கல்வியாகும். அங்ஙனம் விபத்து ஏற்பட்டால் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள வழி வகுப்பதே முதலுதவியாகும். காப்புக் கல்வியும், சுகாதாரக் கல்வியும் வேறல்ல. ஒருவன் தன்னைப் பல விபத்துக்களிலிருந்து காத்துக் கொண்டாலன்றிச் சுகாதாரத்துக்கு வழி ஏற்படுத்திக் கொள்ள இயலாது. வளரும் பிள்ளைகள் தம்மைத்தாம் காத்துக்கொள்ள விழிப்போடு இருத்தல் வேண்டும். இவற்றின் வழிகளை ஸ்பானிய மக்கள் முதல் முதலாகத் தமக்குள் வற்புறுத்திக் கொண்டார்களென அறிகின்றோம். பள்ளிகளில் இது கடந்த பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளாகச் சிறப்பிடம் பெற்றுள்ளது.

இன்று எங்கும் மக்கள் நெருக்கம். நாடுகளிலும் நகரங்களிலும் ஊர்திகள் பலப்பல வெகு வேகமாகச் சென்ற வண்ணம் உள்ளன. தெருக்களில் சிறு குழவிகள் முதல் பெரும் பிள்ளைகளும் மனிதர்களும் நடந்த வண்ணம் உள்ளார்கள். நமது இல்லங்களில் மின்சாரம் பாய்வதானல் மின் விளக்குகள், மின்னுற்றலால் இயங்குவன. இல்லத்துக்கொத்த பொறிகளும், உணவு சமைப்பதற்கு உதவும் அடுப்படித் தீயும் விழிப்பற்றிருந்தால் ஆபத்து விளைவிப்பவை. இவையன்றிக் கேணிகள், குளம், ஏரி, ஆறு, நீர்நிலைகள், நீர்த்தேக்கங்கள், கடல் ஆகியவற்றால் ஏற்படும் ஆபத்துக்களும் உள. குழவிப் பருவம் முதல் இவற்றிலிருந்து பிள்ளைகள் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். தீபாவளி, கார்த்திகைக் காலங்களில் பட்டாசுக் கட்டுகள் வெடிப்பதால் ஏற்படும் விபத்துக்கள் அதிகம். பிள்ளைகள் ஓடி ஆடி விளையாடும் போது கைகால்களை முறித்துக்கொள்ளுகிறார்கள். சாலைகளில் செல்லும் போது ஒருவரை யொருவர் இடித்துக் கொள்ளுகிறார்கள். பள்ளிகளில் பிள்ளைகள் குதித்தும் தாவியும் விளையாடும்போது விபத்துக்கள் ஏற்படுகின்றன. கைத்தொழில் அறையில் தக்கிளியில் நூல் திரிக்கும் போது மற்றொரு பிள்ளை பின்புறமாக வந்து அவன்மீது விழுந்ததால் அவன் உள்ளங்கையிலிருந்த தக்கிளி ஊடுருவி மற்றொரு புறம் வந்துவிட்டது. இவை எல்லாம் விபத்துக்கள். இவற்றைத் தடுப்பதற்கும் இவை ஏற்பட்டபோது முதலுதவி அளிப்பதற்கும் மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். சாலைகளைக் கடக்கும்போதும் மின்சாரத்தின் அருகே செல்லும்போதும் விரைவு ஊர்திகளைக் காணும்போதும் நீரில் மூழ்கிக் குளிக்கும்போதும் மேற்கொள்ள வேண்டிய விதிகளை நன்றாக நடைமுறையில் பழகுதல் வேண்டும். பள்ளியில் இடது பக்கமாகச் செல்லுதல், ஒருவர்பின் ஒருவராகச் செல்லுதல், வகுப்பறைக்குள் மேசைகளின் மீது தாண்டாது அறைக்குள் ஒழுங்காகச் செல்லுதல், சாலைகளில் நடக்கும்போது பள்ளம், மேடு, பழத்தோல் முதலியவற்றைப் பார்த்து நடத்தல், எழுதுகோல் கூராக்கும்போது விரலை அறுத்துக்கொள்ளாதிருத்தல், தொழில் அறையில் வேலை செய்யும்போது உளி, சுத்தி முத

லியவற்றைப் பயன்படுத்துங்கால் விரலை நறுக்கிக் கொள்ளாதிருத்தல் இவை யாவும் பிள்ளைகளுக்கு எடுத்துக்கூற வேண்டியவை. அவர்கள் பழக்கத்தில் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வழிகளைத் தேடிக் கொள்ளுதல் முக்கியமாகும்.

விளையாட்டுத் திடலில் சிறு பிள்ளைகளும் பெரும்பிள்ளைகளும் விளையாடும்போது சிறியவர்களைப் பெரியவர்கள் ஓடும்போது தள்ளிவிட நேரும். அல்லது பெரும் பிள்ளைகள் உதைக்கும் பந்து சிறு பிள்ளைகளைத் தலைகீழாக்கிவிடும். விளையாட்டுத் திடல் மேடு பள்ளங்கள் இல்லாமல் புல் வெளியாகவாவது அல்லது சுத்தமான மண்வெளியாகவாவது இருத்தல் வேண்டும். அந்தந்த வயதுக்கேற்ப விளையாட்டுக் கருவிகள் வழங்க வேண்டும். நாள்தோறும் திடலிலுள்ள கற்கள், முட்கள் ஆகியவை களைந்தாக வேண்டும். அந்தந்த வயதுப் பிள்ளைகள் விளையாடும் நேரங்கள் வேறுதல் வேண்டும். முதலுதவி உடனடியாக அளித்தல் வேண்டற் பாலது. விளையாடும் நேரங்களில் மருத்துவர் அல்லது முதலுதவி யாளர் அண்மையில் இருத்தல் வேண்டும். இல்லங்களில் சிறு பிள்ளைக் கருகில் கூர்மையான பொருள்களை வைக்கக்கூடாது. எரியும் விளக்கு, நெருப்பு, தீக்குச்சி ஆகியவை பிள்ளைகளுக்கு அருகில் இருக்கக்கூடா. மின்சாரத்தின் ஆபத்தைப் பற்றிப் பிள்ளைகள் அறியவேண்டும். மருந்து, திராவகங்கள் ஆகியவை அடையாளமிடப் பட்டிருத்தல் வேண்டும். நீர்த்தொட்டிகள் ஆபத்து விளைவிக்கக் கூடியவை. பள்ளிகளிலுள்ள மின்சாரக் கம்பிகள் கண்ணுக்குப் படாமல் மரமூடிகளில் மறைத்திருக்க வேண்டுமென்ற அரசினர் கட்டளையும் உண்டு. விசைப் பெட்டிகள் வகுப்பறைகளில் மூடப்பெற்றுத் தாழிட்டிருக்க வேண்டும். பிள்ளைகள் அவற்றைத் திறக்காதபடிப் பூட்டியிருத்தல் நல்லது. பள்ளியின் கேணிகள் மூடப்பெற்றிருத்தல் நன்று. பள்ளியிலுள்ள அறிவியல் ஆய்வுக் களங்களைக் கண்காணித்தல் இன்றியமையாதது. இரசாயனச் சாலையில் பல மருந்துகளும் நச்சுப் பொருள்களும் நச்சுக்காற்றடைப்புக் களும் உள்ளன. அவற்றை வெகு விழிப்பாகப் பிள்ளைகள் பயன்படுத்த வேண்டும். விளையாட்டுத்தனமாக அவற்றோடு சோதனைகள் செய்தல் கூடாது. ஒரு மருந்துப் பொருளின் அளவு ஒரு சிறிது அதிகமாகி விடும். சோதனை முறையில் ஆபத்து உண்டாக்கிவிடும். திடீர் என்று வெடிப்பதால் மாணவனின்மீது படுகாயங்கள் ஏற்படலாம். அல்லது சோதனை நடைபெறும் குழாய்கள் சூட்டு மேலீட்டினால் வெடித்துவிட லாம். அல்லது வெளியாகும் நச்சுக்காற்று உயிரைப் போக்கக் கூடிய தாகவும் அமைவதுண்டு. ஆசிரியர்கள் மருந்துள்ள அலமாரிகளைப் பூட்டிவைக்க வேண்டும். திராவகங்கள் உள்ள புட்டிகளைத் தனியாகப் பூட்டிவைக்க வேண்டும். அவற்றின் விளைவை அறியாத பிள்ளைகள் துன்பம் தேடிக் கொள்ளுவார்கள். முதலுதவி இத்தகைய சோதனைச் சாலைகளுக்குப் பக்கலில் இருத்தல் மிக அவசியம். தீயணைக்கும் கருவி கள் வேண்டற்பாலவை.

முதலுதவி, பள்ளியின் மருத்துவ நிலையத்தின்பாற் பட்டது. திடீர் என்று ஏற்படும் ஓர் ஆபத்துக்கு மருத்துவர் வந்து காணும் வரையில் முதலுதவிப் பணிவிடை மிக இன்றியமையாதது. வெட்டுக் காயம் அல்லது கீழே விழுந்து கைமுறிவு, கால் முறிவு முதலியவற்றிற்குப் பணிவிடை உடனடியாகச் செய்ய வேண்டிய கடமை இருத்தலால் உரிய மருந்துகளைப் போட்டு நோய் முற்று வண்ணம் தடுத்து அதன் பிறகு மருத்துவரிடம் அழைத்துச் சென்று வேண்டிய உதவி புரிதல் நன்று. முதலுதவி செய்வோர் அதற்கெனப் போதிய பயிற்சி பெற்றவராதல் வேண்டும். அல்லாக்கால் மருந்துகளை மாற்றிக் கொடுத்து விடின் நோய் அதிகமாகும்.

8. பள்ளியின் ஆட்சித் துறைகள்

தலைமையாசிரிய—ஆசிரிய—மாணவ உறவு

ஒரு பள்ளி சிறந்த முறையில் நடைபெறுகின்ற தென்றல் அது தலைமையாசிரியரைப் பொறுத்ததேயாகும். பள்ளியின் உயர்வு, அதன் பெருமை, சமூகத்தாருடைய மதிப்பு ஆகியவை அன்னர் தமது உடனு சிரியரோடும், மாணவரோடும், பெற்ருேரோடும், பொது மக்களோடும் பழகும் தன்மையை ஒட்டியன. சிறப்பாகத் தலைமையாசிரியர் ஆசிரிய ரோடும் மாணவரோடும் நல்லுறவு கொள்ளுதலே, பள்ளியின் நடை முறைக்கு நன்மை நல்குவது. ஓர் ஆசிரியருடைய உறவு சிறிது தளர்ச்சியுற்ருலும் மாணவர்களுடைய நடத்தைகளில் ஒரு சிறிது தாழ்வு ஏற்பட்டாலும் அவை தலைமையாசிரியரைப் பாதிக்கக் கூடியவை. எனவே அவர் வெகு விழிப்பாக ஒவ்வொருவருடைய உள்ளப் போக் கினை உணர்ந்தவராதல் வேண்டும். ஆசிரியர்கள் மனக்குறைவு உள்ளவர்களாயினும் அதனை வெளிப்படுத்தாது நல்லுறவோடு நடிப்ப துண்டு. உட்பகையை வளர்த்துக் கொள்ளுவது இயல்பு. பெரும் பாலும் தலைமையாசிரியருடைய திட்டங்கள் தமக்குக் கடுமையை விளை விப்பவை என்று கருதுவதில் அவர்கள் தயங்குவதில்லை. அதனுல் ஆசிரியர்கள் தமக்குள் ஒவ்வொரு திட்டத்தைப் பற்றியும் குறை கூறிக் கொள்ளுவது வழக்கம். தலைமையாசிரியரும் தமக்கென இரண்டு மூன்று ஆசிரியர்களைக் கொண்டு துப்பறிந்து கொள்ளுவதும் உண்டு. இத்தகைய உறவால் பள்ளியின் கட்டுப்பாடு தளருவதும் தலைமையா சிரியர்கள் உதவியாசிரியர்களைக் குறை கூறிக்கொண்டு காலங் கழிப்ப தும் வழக்கமாகி விட்டது. அல்லது அழுக்காறு இரு திறத்தாரிடை யிலும் பிறப்பது உண்டு. அதனுலும் உறவு கெடுகின்றது. தலைமை யாசிரியர் தமது பதவியை மறந்து ஆசிரியரோடு ஒருவராக உறவு பூண்டுப் பள்ளித் திட்டங்கள் எல்லாவற்றையும் ஆசிரியர்கள் வாயிலா கவே செயலாற்றினுல் அழுக்காறு, வெகுளி, உட்பகை ஒன்றுமின்றி நல்லுறவு உண்டாகலாம். ஒவ்வொரு திட்டத்துக்கும் ஆசிரியர் ஒவ் வொருவரும் உடன்படுதல் வேண்டும். ஒருவர் இருவர் முரண்பட்டா லும் அவர்களைப் புறக்கணிக்காது அவர்களுடைய ஒற்றுமையை உள்ளத் திலிருந்து பெறவேண்டும். உள்ளத்தோடு ஒட்டாத ஆசிரிய ஒழுக்கம் நன்மை பயக்காது. நல்லுறவினை நாட்டாது. தலைமையாசிரியர் பொறுமையே வடிவமாக இருத்தல் வேண்டும். தனது தொடங் காற்றலை ஆசிரியர்களுடையதாகவும் உரிமையாக்க வேண்டும். ஒவ் வோர் ஆசிரியருடைய நண்பராகவும் வழிகாட்டியாகவும் நலம் நாடியாக வும் தான் நடந்து கொள்ளுவதோடு ஆசிரியர்களும் அங்ஙனமே கருது

மாறும் நடந்து கொள்ள வேண்டும். அப்போது ஓர் ஐக்கியம், கூட்டு மனப்பான்மை, நம்பிக்கை உண்டாகும். ஆசிரியர் தலைமையாசிரியர் பால் கொள்ளும் நல்லுறவு மாணவர்களிடத்தில் எதிரொலிக்கும். பள்ளி ஆசிரியர்கள் எல்லாரும் எந்தக் கட்டுத் திட்டத்தையும் ஒரு சிறிதும் நெகிழவிடாது ஒரே முகமாக வற்புறுத்துவார்களானால் மாணவர்கள் எக்கட்டுக்கும் அடங்கி நடப்பர். அல்லாது ஒரு சிலர் திட்டத்தைப் பற்றிப் பாராட்டியும் மற்றவர்கள் வகுப்பறையில் குறை கூறிக்கொண்டு மிருந்தால் பள்ளிக் கட்டுப்பாடு தளர்ந்து விடும். மாணவர்கள் தலைமையாசிரியரைக் காட்டிலும் தமது ஆசிரியர்களுக்கே கடமைப் பட்டவர்கள் என்று கருதுவது இயல்பு. தலைமையாசிரியரைப் பாராட்ட வேண்டியது ஆசிரியர்கள் கடமை. ஆசிரியர்களைக் குறை கூருது பாராட்ட வேண்டியது தலைமையாசிரியர் கடன். அப்போது மாணவர் உறவு குறைகள் நீங்கி நிறைவு பெறும். பள்ளியின் நன்மையை மாணவர்கள் நாடுவதற்கு வேண்டிய அறிவுறுத்தல் ஆசிரியர்கள் பால் எழவேண்டும். இளைஞர்களாகையால் சில பண்புகளை அவர்கள் அறிவது கடினம். அதனால் ஆசிரியர்கள் அவற்றை எடுத்து விளக்கியும் வற்புறுத்தியும் வருதல் நல்லது. பெரும்பாலும் மாணவர் களுடைய ஒழுக்கக்கட்டு நெகிழ்வதும் அல்லது பழுது உறுவதும், வகுப்பை அடக்கி ஆட்சி கொள்ள இயலாததும் ஆசிரியருடைய குறை பாடுகளால் விளைவன. சிலர் வகுப்பில், பிள்ளைகள் கட்டோடு காட்சி அளிப்பார்கள். சிலர் வகுப்பில் ஐயகோ, பிள்ளைகள் பாடத்தைக் கவ னிக்காது இரைச்சலிட்டுக் கொண்டிருப்பார்கள். இதற்கெல்லாம் ஆசிரி யரே காரணமாவார். தலைமையாசிரியர் இத்தகைய ஆசிரியருடைய வகுப்புக்களுக்கு அடிக்கடி சென்று பிள்ளைகளை அடக்கினும் ஆசிரிய ருக்கு இழுக்கேயாகும். இதனாலும் தலைமையாசிரிய—மாணவ—ஆசி ரிய உறவுகள் பாதிக்கப்படுவதோடு பள்ளியின் கட்டுப்பாடே தளரும். இத்தகைய ஆசிரியர் தம்மைத் திருத்திக் கொண்டாலன்றிப் பள்ளியில் பணிபுரிய இயலாது. அவர் பள்ளியை விட்டு நீங்குதலே நலம். எது வாயினும் தலைமையாசிரியர், ஆசிரியர், மாணவர் ஆகிய மூவருடைய நல்லுறவு, நம்பிக்கை, பள்ளியின் உட்பாட்டில் தலையாயவை.

அலுவலக—தலைமையாசிரிய—ஆசிரிய உறவு

அலுவலகம் பள்ளியின் எந்திரப் பகுதியாகும். அதனை இயக்குபவர் தலைமையாசிரியராவார். அலுவலர்கள் திறமையுள்ளவர்களாதல் நன்று. கணக்காளர் தனது பணியைத் அறிந்தவராகவும் பணத்தைத் தொகுப்ப திலும் உத்தரவு பெற்ற பணத்தைச் செலவு செய்வதிலும் மிக்க நேர்மை உடையராகவும் இருத்தல்வேண்டும். அன்றாட வரவு செலவுகளைக் கணக் கிட்டு இருப்பினை வங்கிக்கு அனுப்பிக் கணக்கைச் சரிக்கட்ட வேண்டும். இற்றை நாட்களில் தலைமையாசிரியருக்குத் தலைநோய் உண்டாக்குவ தெல்லாம் வரவு செலவும் கணக்குகளுமேயாகும். கணக்காளர் திறமை

உள்ளவராதலோடு நேர்மையாளராகவும் அமைந்தால் சிறப்பு. மோசடியாளராக இருந்தால் தலைமையாசிரியர் தமது பணியை ஆற்ற முடியாது. சிலர் நம்பிக்கைக் குறைவுள்ளவராக இருத்தலால் தலைமையாசிரியர்கள் தமது அருமையான நேரத்தைக் கணக்கைப் பார்ப்பதிலேயே கழித்து விடுகிறார்கள். அதனால் பள்ளிப் பிற அலுவல்களைக் கவனிப்பதற்கு நேரம் இருப்பதில்லை. ஆனால் நம்பிக்கையுள்ள கணக்கு எழுத்தாளராயின் தலைமையாசிரியர் தமது பணிகளைப் பார்வையிடுவதற்கு நேரமிருக்கும். ஆயினும் கணக்கை அடிக்கடி பரிசோதித்தலே தலைமையாசிரியருக்கு நலம். அவர் பரிசோதிக்கவில்லை என்றால் பள்ளிப் பணத்தை எவ்வளவு நம்பிக்கையுள்ளவராயினும் மேற்பார்வை இல்லை என்ற காரணத்தால் ஒரோவழி கையாளுதலுக்கும் தூண்டுதல் நிகழும். பின்னர் அதை நிறுத்துவது கடினம். தலைமையாசிரியரும் அன்றாடம் கணக்கைச் சரிபார்த்து விட்டால் கணக்கெழுத்தாளருடைய நல்லுறவுக்குப் பாதகம் ஏற்படாது. இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வர். தலைமையாசிரியரும் பணப் பொறுப்பில் ஒரு சிறிதும் மற்றவர்களுக்குச் சந்தேகப்படும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது. அல்லாக்கால் பொதுப்பணத்தைக் கையாளுவதற்குக் கணக்காளரும் முயலுவார். அப்போது ஒருவரை யொருவர் தாக்கிக் கொள்வர். வரவு செலவினைப் பரிசோதிக்கும் அரசாங்கத் தணிக்கையாளர்களும் ஆண்டுதோறும் தணிக்கை செய்கின்றார்கள். அவர்கள் ஆண்டுக் கணக்குகளில் பலவகைக் குற்றங்களைக் கண்டுபிடித்து விடுகிறார்கள். குற்றங்கள் இருப்பின் பள்ளி பெறும் அரசாங்கக் கொடைப்பணம் பெறுவதில் தடை நிகழ்வதன்றித் தொகையிலும் குறைவு உத்தரவாகும். அதனால் ஆண்டுத் தணிக்கையின் அறிக்கை நல்லதாக அமைவதற்குப் பள்ளிக் கணக்குகளும் அவற்றைச் சார்ந்த பதிவேடுகளும் ஒழுங்காக இருத்தல் வேண்டும். பள்ளிக் கணக்குகள் சரிவர அமைதல் இன்றியமையாதது.

ஏனைய அலுவலகர்கள் பிற பொறுப்புக்களுக்கு உள்ளாவார்கள். பிள்ளைச் சேர்க்கை-நீக்கம், மதிப்பெண்கள் பதிவு, பலவகைப் பொருளுதவிகள், பிள்ளைகள் வருகைப் பதிவுப் பேரேடு-முதலியனவெல்லாம் பிற பொறுப்புக்கள். எவற்றிலும் எவ்விதக் கோளாறுகள் இருத்தல் கூடாது. தலைமையாசிரியருடைய இற்றை நாட்பொறுப்புக்கள் பலவாகையால் அலுவலகப் பொறுப்பைத் தான் கண்காணித்தல் கடினமாகும். ஆனால் கண்காணிப்பு இல்லை என்றால் அலுவலர்கள் தமது பொறுப்புக்களில் நெகிழ்வுறுவார்கள். அலுவலர்கள் நடந்துகொள்ளும் ஒழுக்கத்தையும், ஒழுங்கையும் காணும் ஆசிரியர்கள் அலுவலகத்துக்கு மதிப்புச் செலுத்துவார்கள். அதன் உள்ளே நுழைய அஞ்சுவார்கள். தலைமையாசிரியர் தன்மதிப்போடு தமது பல பணிகளிற் சிலவற்றை அலுவலகத்தால் எளிதாக்க இயலும். அலுவலர்களின் ஆதரவு, மதிப்பு, அடக்கமுடைமை, சுறுசுறுப்பு, பணிவு ஆகியவை தலைமையாசிரியருக்கு

மிகவும் வேண்டற்பாலவை. அலுவலக நல்லாதரவுள்ள தலைமை யாசிரியர் நல்ல வேரூன்றிய ஆட்சி செலுத்த இயலும். அலுவலகர், தலைமையாசிரியருடைய இரு கண்களும், செவிகளும், உள்ளமும் சிந்தனையும் ஆவார். மாணவர்கள் நல்ல அலுவலகத்தில் ஒழுங் காக நடந்துகொள்ளுவார்கள். கண்டிப்புத் தளர்ந்தால் மாணவர் கள் அலுவலகர்களோடு கேலி பேசத் தொடங்குவார்கள். ஆசிரியர் கள் அலுவலகர்களை மிரட்டுவார்கள். தத்தமக்கு வேண்டிய சலுகை களை மட்டும் பறித்துப் போக முயல்வார்கள். எனவே அலுவலகம் பள்ளி ஆட்சியின் ஆணி வேராக அமைய வேண்டும். அதன் தளத் தில் தலைமையாசிரியர் தமது ஆட்சியை நிலைக்கச் செய்ய வேண்டும்.

9. தலைமையாசிரியரும் கல்வித் துறையும்

தலைமையாசிரியர் பள்ளியின் உட்பாட்டினைப் பொறுத்த வரையில் கல்வித் துறைக்குப் பொறுப்பாவார். பள்ளியின் அங்கீகாரம், பள்ளிக்கு முதலீடு, பள்ளியின் வரவு செலவு, பொதுப்பட்ட நிர்வாகம், பள்ளியின் முன்னேற்றம் ஆகியவற்றிற்கு நேரடியாகத் [1] தாளாளர் பொறுப்பாவார். ஆனால் இவை யாவும் பல பள்ளிகளில் தலைமையாசிரியருடைய பொறுப்பாக அமைந்துள்ளதால் இவற்றிற்குத் தாளாளரும், தலைமையாசிரியரும் இணைந்த பொறுப்பாளராகி விடுவார்கள். பள்ளியின் நிர்வாகத்தின் குற்றம் எதுவாயினும் அதற்குத் தலைமையாசிரியரே பல இடங்களில் பழியேற்கிறார். ஆனால் பள்ளிக்குப் பெருமை ஏற்படுங்கால் அதைப் பகிர்ந்து கொள்ள எல்லோரும் முனைவர். அரசினர் கல்வி நிலையங்களுக்குப் பல கோட்பாடுகளை ஏற்படுத்தியுள்ளார்கள். நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் [2] சென்னைக் கல்விக் கோட்பாடுகள் உண்டு. அவற்றோடு [3] உதவிக் கொடைப் பணம் வழங்குதலுக்குத் திட்டம் உண்டு. இவையன்றி அப்போதைக்கப்போது அரசினர் பிறப்பிக்கும் கட்டளைகளும், மாநிலக் கல்வி இயக்குநர் பிறப்பிக்கும் ஆணைகளும் சேர்ந்து பள்ளி நடைமுறைகளுக்கு வழிகாட்டியாகின்றன. இவை யாவும் தலைமையாசிரியருக்கு வேண்டற்பாலவை. இவை ஒவ்வொன்றையும் அறிந்து பள்ளியின் நடைமுறைகளைச் செலுத்த வேண்டும். இவற்றினை அலுவலகர்களும் அறிந்திருக்க வேண்டியது கடமை. பிள்ளைகளைச் சேர்த்தல், விடுவித்தல், வருகைப் பதிவு, தேர்வுத் திட்டங்கள், [4] ஆசிரியர் பணி அட்டவணைகள், பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்தல், பள்ளிப் பொருள்கள், தட்டுமுட்டுச் சாமான்கள் எல்லாவற்றைப் பற்றியும் அரசினர் விடுக்கும் ஆணைகளைச் சிரமேற்கொண்டு நிறைவேற்ற வேண்டியது தலைமையாசிரியரின் கடமை. எதைச் செய்தாலும் அஃது அரசாங்கக் கோட்பாட்டுக்கு மாறாக இருத்தல் கூடாது. உயர்நிலைப் பள்ளிகள் மாநிலக் கல்வி இயக்குநரோடு நேர் தொடர்பு கொள்ளுதல் கூடாது. அவர்கள் மாவட்டக் கல்வி ஆணையாளரோடு மட்டுமே தொடர்பு கொள்ளவேண்டும். ஆணையாளரும் அடிக்கடி பல விவரங்களைக் கேட்பார். அவை ஒவ்வொன்றுக்கும் உடனடியாகப் பதிலளிக்க வேண்டியது தலைமையாசிரியருடைய கடமை. தலைமையாசிரியருக்குத் தமது நிர்வாகத்தில் இடர்ப்பாடு நிகழ்ந்தால் மாவட்டக் கல்வி ஆணையாளருக்கு அறிவித்து விளக்கம் பெறலாம். மாவட்டக் கல்வி ஆணையாளர் ஒவ்வொரு பள்ளியையும்

---

1. Correspondent 2. Madras Educational Rules 3. Grant-in-aid 4. Teacher's work Tables.

ஆண்டுக்கு ஒருமுறை மேற்பார்வை செய்துவருவது எல்லாரும் அறிந்ததே. அப்போது அவரோடு பேசிப் பல சிக்கல்களைத் தலைமையாசிரியர் தீர்த்துக் கொள்ளலாம். அல்லது தணிக்கையாளரின் அலுவலகத்துக்குச் சென்று ஆங்கு தமது ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளலாம். எதுவாயினும் உத்தரவுகளை எழுத்து மூலம் பெறுவதே நல்லது. ஆணையாளரிடம் அனுவசியமாக அவருடைய அருள் நோக்கைப் பெறுவதற்கு அடிக்கடி அணுகுவார்கள். ஆணையாளர்கள் ஒவ்வொரு தலைமையாசிரியரைப் பற்றியும், பள்ளியைப் பற்றியும் தணிக்கை அறிக்கைகளின் வாயிலாகவும் அஞ்சல்களின் வழியாகவும் கூட மதிப்பிட முடியும். தலைமையாசிரியர் சிலர் தங்கள் ஊழல்களை மறைத்துக் கொள்வதற்கு ஆணையாளர் தயவை நாடுவதுண்டு. தலைமையாசிரியர் பள்ளி நிர்வாகத்தைத் திறம்பட நடத்துவாராயின் அவர் ஆணையாளருடைய அதிக நேரத்தை வீணுக்க வேண்டியதில்லை. அதனுல் ஒரு சிலர் தமது திறமையைத் தாமே மதிப்பிட்டுக்கொண்டு தமக்குத்தாமே நிகரென்று கருதிக்கொண்டு யாரையும் மதிப்பதில்லை. எவ்வளவு திறமையுள்ளவராயினும் பணிவும் அடக்கமும் இருத்தல் வேண்டும். அப்போதுதான் நல்லுறவு கல்வித் துறையினரோடு கொள்ள இயலும். தனியார் பள்ளியாயினும் சமயச் சார்புடைய பள்ளியாயினும், எதுவாயினும் எல்லாப் பள்ளிகளும் அரசாங்கத்துக் குரியவை. அரசாங்கக் கொடைப்பண மின்றி பள்ளிகள் நடைபெற இயலாது. கல்வித் துறையினர் ஆணைகளை நிறைவேற்ற வேண்டியது தலைமையாசிரியரின் கடன். பள்ளிக் கணக்குகளை ஆண்டுதோறும் அரசாங்கத் தணிக்கையாளர்களே சரிபார்க்கின்றுர்கள். அவர்கள் கேட்கும் பள்ளிப் பதிவேடுகளைப் பழுதில்லாது அளிக்கவேண்டியது தலைமையாசிரியருடைய பொறுப்பு. கணக்குகளில் தவறு கண்டறியப் பெற்ருல் தலைமையாசிரியரைப் பாதிக்கும். பள்ளியின் பெயர் தாக்குறும். எல்லாப் பள்ளிப் பணிகளும் மாவட்ட அதிகாரிக்குத் தெரிந்தவையாக வேண்டும். மறைவாக எதையாகிலும் நடத்திஞல் தலைமையாசிரியர் அதற்குப் பதிலளிக்க வேண்டும். பள்ளியின் நடப்பு, ஆசிரியர்களின் ஒழுங்கு, மாணவர்கள் ஒழுக்கம், பள்ளியில் கல்வி வளர்ச்சி இன்னேரன்ன பிற எல்லாம் கல்வி இலாக்காவினருடைய பார்வைக்கு உரியவை. ஆண்டுத் தணிக்கையில் எடுத்துக் காட்டும் குற்றங்கள் அப்போதைக்கப்போது நீக்கப்பெற வேண்டும். எனவே பள்ளி நடைமுறையின் பாற்பட்ட பதிவேடுகளை எல்லாம் ஒழுங்காகப் பள்ளி அலுவகத்தில் அமைத்திருத்தல் வேண்டும். எந்த நேரமும் எந்த ஒன்றினையும் மாவட்ட ஆணையாளர் கேட்டனுப்பினுல் தடையில்லாது அனுப்ப வேண்டும். மாவட்ட ஆணையாளரையும், கல்வித்துறையினரையும் தமக்குப் பேருதவி புரிபவரும் வழிகாட்டியாளரென்றும் கருதுதலே நல்லுறவுக்கு அடிப்படை.

10. பள்ளிப் பகுதிகளின் இணக்கம்

இன்றைய பள்ளிகள் சிறியவையாயினும், பெரியவையாயினும் பல பகுதிகளைக் கொண்டவை. சிறு பள்ளிகளில் வகுப்புக்கு முப்பது பிள்ளைகளுக்குக் குறையாது புதிய திட்டப்படி ஆறுவது வகுப்பு முதல் பத்தாவது வகுப்பு வரை ஐந்து வகுப்புக்களுக்கு நூற்றைம்பது பிள்ளைகளோடும், பெரும் பள்ளிகளாயின் ஒவ்வொரு வகுப்புக்கும் எட்டு அல்லது பத்துப் பிரிவுகளோடும் ஏறக்குறைய இரண்டாயிரம் பிள்ளைகளோடும் உள்ளன. ஒவ்வொரு வகுப்புக்கும் ஓர் ஆசிரியர் வகுப்பாசிரியராக விளங்குகிறார். இவர்கள் பாட ஆசிரியர்கள்; இவர்களன்றித் தாய்மொழி ஆசிரியர்கள், பிறமொழி ஆசிரியர்கள், கலை ஆசிரியர், கைத்தொழில் ஆசிரியர், உடற்பயிற்சி ஆசிரியர் ஆகிய பாட ஏற்பாட்டில் அடங்கிய பாடம் ஒவ்வொன்றுக்கும் ஒருவராக ஆசிரியர்கள் அமைவர். பாடங்கள் ஏட்டுப் பாடங்களாகவும், பயிற்சிப் பாடங்களாகவும் பிரிவதால் பிள்ளைகள் ஒவ்வோர் அகவைக்கும் வகுப்பறைகளைவிட்டு மாறிக் கொண்டே உள்ளனர். சில பள்ளிகளில் தனிப்பட அறைகள் உண்டு. அங்ஙனமாயின் அந்தந்த அறைக்குச் செல்லவும் நேரிடும். மாலை நேரங்களில் குடிமை வகுப்புக்கள் அல்லது உடலோம்பல் வகுப்புக்கள் நடைபெறும். அவை வகுப்பறைக்குப் புறத்தே வெளிப்புறங்களில் கூடும். ஆசிரியர்கள் பாட அட்டவணைப்படி ஆங்காங்கே அவர்கள் இருக்கவேண்டிய வகுப்புக்களில் பணியாற்றுவார்கள். பிள்ளைகளும் தமக்குரிய வகுப்புக்களில் இருக்கமாட்டார்கள். தலைமையாசிரியர் தமது ஆசனத்தில் அமர்ந்த வண்ணம் எல்லாவற்றையும் கண்காணிக்க வேண்டும். அவர் தமது உதவியாசிரியர்களைப்போல் பத்து அகவைகளாவது பாடஞ் சொல்லுதல் வேண்டும். அலுவலகப் பணி அவரை எதிர்நோக்கி நிற்கும். அலுவலர்கள் உதவாதவர்களானாலும் தூண்டுதல்கள் எல்லாம் தலைமையாசிரியருடையனவேயாகும். அலுவலர்கள் சரிவரத் துலங்காவிட்டால் தலைமையாசிரியரின் பாடு பெரும்பாடாகும். இவ்வளவு பொறுப்புக்களோடு பள்ளியின் பல பகுதிகளில் நடைபெறும் பணிகளை அறியவும் வேண்டும். ஒரோவழி ஒரு வகுப்பறையில் ஆசிரியரின் தவறுவது மாணவனின் பிழையாவது நிகழும். அவற்றிற்கும் தலைமையாசிரியர் பொறுப்பாவார். அதைப்பற்றி அறிந்து ஆவன செய்யவேண்டும். நூலாசிரியர் தலைமையாசிரியராகப் பணியாற்றிய காலத்தில் பழியோரிடம் பாவம் ஓரிடமாக ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. முதற்படிவ ஆசிரியர் ஒரு வகுப்புப் பிள்ளையை ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்குப் பிரம்பால் ஓரடி அடித்தார். பிள்ளையின் பாதுகாப்பாளர் பள்ளியின் செயலரிடம் முறையிடத் தலைமையாசிரியர் அந் நிகழ்ச்சிக்கு மன்னிப்பு கேட்கவேண்டியதாயிற்று. தனியார் பள்ளி

களில் வெகு திறமையோடு மட்டுமன்றிப், பள்ளியாட்சியாளர், பெற்றோர்கள், பொதுமக்கள் ஆகிய எல்லோரிடமும் வெகு திறமையாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

பல இடங்களில் பள்ளி முழுவதிலும் பலபடியான பணிகள் நடைபெறுவதே இன்றைய பள்ளிகள் அளிக்கும் காட்சி. அவற்றையெல்லாம் தலைமையாசிரியர் கண்காணிப்பது யாங்ஙனம்? தலைமையாசிரியர் பள்ளி முழு நாளும் சுற்றிக்கொண்டிருத்தல் இயலுமா? தாம் ஓர் பாட ஆசிரியராகையால் அவர் வகுப்பில் அவர் பாடம் கற்பிக்க வேண்டாமா? அலுவலகப் பணிகளை முடிக்க வேண்டாமா? நாள்தோறும் வகுப்பு முழுவதும் சுற்றிக் கொண்டிருத்தல் இயலுவது எப்படி? ஒவ்வொரு பகுதியிலும் நடைபெறுவதை அவர் அறியவும் வேண்டும். ஒவ்வொரு பகுதியும் சுயேச்சையாக இயங்குதலும் கூடாது. சில பள்ளிகள் அங்ஙனம் நடைபெறுகின்றன. ஆசிரியர் சிலர் தமது விருப்பம்போல் உள்ளே நுழைவதும் வெளிச் செல்லுவதும் பிள்ளைகளைக் கவனிக்காமல் விடுவதும் உண்டு. இதற்குக் காரணம் தலைமையாசிரியருடைய பார்வைக்கு அவரவர்கள் சிறிது சேய்மையில் இருப்பதேயாகும். ஆசிரியர்களும் பொதுவாகத் தலைமையாசிரியருடைய சுற்றுப்பார்வை இராதிருப்பின் அவர்கள் நோக்கம்போல் நடந்து கொள்ளுவதுண்டு. இவற்றைக் கண்காணிக்க ஒரு வழியினை மேற்கொள்ளுவதுண்டு. தலைமையாசிரியர் துப்பு வைத்து ஆசிரியர்களுடைய பணிகளை அரையும் பாதியுமாகவும் புனைவும் புழுகாகவும் அறிந்துகொண்டு அவர்கள் மீது தப்பெண்ணம் கொள்ளுவதும், அவர்களைக் கண்டு சீறிவிழுவதும் தவறு. தலைமையாசிரியர்கள் எல்லா இடங்களிலும் கண்களைச் செலுத்திக்கொண்டு இருக்கவும் இயலாது. ஒரு நாளைக்கு ஒரு முறை அல்லது இருமுறை மட்டுமே பள்ளி வட்டம் முழுவதையும் சுற்ற இயலும். தலைமையாசிரியருள் சிலர் தமது அறையை விட்டு வெளியே அசைவதில்லை. இத்தகைய போக்கும் பெருந்தவறாகும். பள்ளியின் பல பகுதிகளைத் தலைமையாசிரியர் தமதகத்தே இணைத்துப் பேசுவதற்கு அவர் அறையில் [1] பேச்சு வாங்கியின் வழியாகத் தமது பல அறிக்கைகளை பிள்ளைகளுக்குமட்டுமன்றி ஆசிரியர்களுக்கும் அறிவிக்கின்றனர்கள். இஃது ஒரு வகையில் நன்மை பயக்கிறது. இதனோடு காலைப் பள்ளித் தொடக்கத்தில் இறைவணக்கக் கூட்டத்தின்போது பிள்ளைகளுக்கு அறிவுறுத்தவேண்டிய பல கட்டளைகளை இதன்மூலம் எடுத்து இயம்பலாம். அங்ஙனமே நேர்முகமாகக் கூட்டத்தின்போது பிள்ளைகளுக்கு அறிவுறுத்தவேண்டிய பல கோட்பாடுகளையும் இதன்மூலம் எடுத்து இயம்பலாம். அப்போதே மறைமுகமாக ஆசிரியர்களுக்கும் தமது பணியைச் சுட்டிக் காட்டலாம். இவையன்றி வேண்டிய போதெல்லாம் ஆசிரியர் கூட்டங்களைக் கூட்டித் தான்

1. Mike

கண்ட இழுக்குகளை இடித்துரைக்கலாம். ஆசிரியர்களுடைய பொறுப்புக்களை உணர்த்திக்கொண்டே இருப்பதன் மூலம் பல வகுப்புக்களில் பள்ளி ஒழுங்குகள் ஓரளவு உருவெடுக்கும். ஆசிரியர்களுக்குள் பல வேற்றுமைகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் வளர்க்கக் கூடாது. ஒவ்வொருவரும் அவருடைய [2]வகுப்புப் பணிப் புத்தகத்தைத் தலைமை ஆசிரியரிடம் ஒப்புவித்தல் கடமை. அதைப் புரட்டிப் பார்த்து ஒவ்வொரு பள்ளி நாளிலும் ஒரு குறித்த பாடநேரத்தில் பாடம் நடந்தேறிய அளவை அறியலாம். பள்ளி ஒழுங்கு முறைகளை ஆசிரியர்பாலாயினும் மாணவர்பாலாயினும் ஒரு சிறிதும் தளர்த்தலாகாது. ஆசிரியர்பால் குறை காணப்பெறின் ஆசிரியர் சங்கம் அதற்கு ஆலோசனை கூற வேண்டும். மாணவர்கள் குற்றங்களைத் தீர்க்க மாணவ நீதிபதிகள் வழி வகுப்பது நல்லது.

1. Class Progress Diary

11. தலைமையாசிரியர்

தலைமையாசிரியரைத் தழுவியே பள்ளியின் முன்னேற்றம் அமைந்துள்ளது. ஒரு பள்ளியின் பெருமையும் சமூகத்தில் அது அடையக் கூடிய உயர்நிலையும் தலைமையாசிரியர் தமது உதவி ஆசிரியர்களையும் மாணவர்களையும், பெற்றோர்களையும், பொதுமக்களையும் தக்கபடி தகைமையோடு நடாத்திச் செல்லும் ஒழுங்கைப் பொறுத்தது. இங்ஙனம் உயர்நிலைக் கல்விக் குழுவினர் அறிக்கை ஆணித்தரமாகக் கூறியுள்ளது. பள்ளியின் ஒழுங்கும் கட்டுப்பாடும் அங்கு நிலவக்கூடிய ஒருமைப்பாடும் தலைமையாசிரியருடைய தனிப் பொறுப்பாகும். தலைமையாசிரியர் பள்ளியில் மட்டுமன்றிச் சமூகத்தோடும் நல்லுறவு கொள்ள வேண்டும். பெற்றோர்கள் பொதுமக்கள் ஆகியோருடைய உறவு பள்ளியையும் சமூகத்தையும் இணைக்கக் கூடியதொன்று. அரசாங்கக் கல்வித் திட்டங்களைப் பொறுப்போடு ஏற்று நடைமுறையாக்கக் கூடியவர்கள் தலைமையாசிரியர்களே. தணிக்கையாளர்கள் இவற்றினை மேற்பார்வை செய்யவேண்டுமென்று முன்னர்க் கூறினோம். தனி ஒவ்வொரு பள்ளியிலும் திட்டங்கள் நன்றாக நடைபெற்றாலன்றி அவற்றின் பயன்களைப் பள்ளிகள் பெற இயலாது. எனவே அவற்றினைப் பொறுப்பேற்று நடத்தக்கூடியவர்கள் தலைமையாசிரியர்களே யாவார்கள். அதனால் ஒவ்வொரு பள்ளிக்கும் நல்லதொரு தலைமையாசிரியரைப் பொறுக்கி எடுத்து நியமிக்கவேண்டியது இன்றியமையாதது. ஆசிரியர்களுக்குள்ள திறமையைக் கண்டு ஒருவரைத் தலைமையாசிரியராக அமர்த்தலே சிறந்தமுறை என்று ஒரு சிலர் கருதுகிறார்கள். ஒரு பள்ளியில் உள்ள மூத்த ஆசிரியரே தலைமையாசிரியர் பதவிக்கு உரியவராவார் என்று கருதுவது தவறென்றும் சொல்லுகிறார்கள். ஏனென்றால் மூத்த ஆசிரியர் ஆசிரியத் தகுதிபெற்றவராக இருந்தாலும் அவருக்கு நிர்வாகத் தகுதி இருந்தாலன்றித் தலைமையாசிரியராகப் பணியாற்ற முடியாது. எனவே அரசாங்கமும், உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தலைமை ஆசிரியர்களைப் பொறுக்கி எடுப்பதா அல்லது ஆசிரியர்களுக்குள் அனுபவம் உள்ளவர்களுக்கு அப்பதவியை அளிப்பது நல்லதா என்ற வினாவினை ஆய்ந்து வருகிறார்கள். எதுவாயினும் தலைமையாசிரியர் தக்கவராகவும் தக்காராகவும் இருந்தாலன்றிப் பள்ளி ஒழுங்கு நன்றாக அமையாது. தலைமையாசிரியரே பள்ளி ஆட்சியை ஏற்றும் பண்படுத்தியும் நடத்தவேண்டியவர். பள்ளிக்கூடமே ஓர் இயங்கு பொறி. அந்தப் பொறி ஒழுங்காக இயங்கவேண்டும்; இடர்ப்பாடின்றி இயங்கவேண்டும்; பயனுற இயங்கவேண்டும். எந்திரத்தைச் செலுத்துபவர் தலைமையாசிரியர். எந்திரத்தின் பல பாகங்கள் ஒன்றோடொன்று இடருறாது அதனதன் கட்டுக்குள் அடங்கி இயங்கவேண்டும். பள்ளி

நிர்வாகத்தினர், தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் ஆகியோர் பள்ளி எந்திரத்தின் பகுதிகளாவர். ஒருவருக்கொருவர் முரண்பட்டால் ஆட்சியில் இழுக்குண்டாகும். எனவே இவற்றின் ஒற்றுமையை ஒரு சிறிதும் குறைவுறாது நடத்திச் செல்லவேண்டியது தலைமையாசிரியர் கடன். பள்ளியின் பண்புத்தரம் தலைமையாசிரியரால் உண்டாகுவது. அவருடைய ஆட்சியின் உரைகல் பள்ளியின் கல்வித்தரம். எல்லா அங்கங்களையும் ஒருமைப்படுத்திப் பள்ளியை நடத்தும் அவருடைய பண்புடைமையே வெற்றிக்கு வழியாகும். ஒரு சிறிதாகிலும் அவருடைய ஒழுக்கம் இழுக்காயின், அவருடைய மனத்திட்பம் மாசுடையதாகவும், வினைத்திட்பம் வீறற்றதாகவும் கருதப்பெறும்; அவருடைய ஆட்சியின் வன்மை திண்மையை இழந்துவிடும். எனவே எல்லாவற்றைக் காட்டிலும் அவருடைய பண்புகள் மிக முக்கியமானவை. பண்புகளின் தூய்மை மனத்தூய்மையையும் வினைத் தூய்மையையும் உண்டாக்கித் தரும். ஒரு சிலர் தலைமைப் பதவியை ஏற்றவுடன் தம்மை ஓர் ஆசிரியக் கூட்டத்தினரென்று கருதுவதில்லை. தாம் பெற்ற பதவி ஓர் இந்திரப் பதவி என்றே நினைத்துக்கொள்ளுகிறார்கள். தமது மனம்போன போக்கில் பள்ளி ஆட்சியை நடத்துகின்றார்கள். உதவி ஆசிரியர்களைக் காட்டிலும் தாமே எல்லாம் தெரிந்தவரென்று மனப்பால் குடிப்பதோடு தமக்குத் தாமே நிகர் என்று கருதிக்கொள்ளுகிறார்கள். எல்லாத் தகுதியும் உற்றவர்களாயினும் அங்ஙனம் தம்மைத் தாம் நினைத்துக்கொள்ளுவது குற்றமாகும். உதவி ஆசிரியர்களைக் கடிவதும், கடுமையாகப் பேசுவதும், அவர்களைக் கலவாது பள்ளித் திட்டங்களை வகுப்பதும் முறையல்ல. எனவே ஒரு தலைமையாசிரியன் தன்னாட்சிக்காரன் என்று நினைத்துக்கொண்டு தமது கட்டளைகளைப் பிறப்பித்தும் வற்புறுத்தியும் வந்தால் அவனுடைய ஆட்சி அல்லலுறும். உதவியாசிரியர்கள் உயிரற்ற ஒத்துழைப்பைக் கொடுத்துக் கொண்டே இருந்து சமயம் பார்த்துக் கவிழ்த்துவிடுவார்கள். எனவே எச்செயலையும் அவர்களுடைய உடன்பாடு பெறாமல் தொடங்கக் கூடாது. ஆசிரியர்கள் இலரேல் தலைமையாசிரியர் இல்லை. ஆசிரியர்களுடைய உள்ளத்தெழுந்த ஒத்துழைப்பு இன்றேல், பள்ளித் திட்டங்கள் வெற்றுக்காகும். தலைமையாசிரியர் தன்னை ஓர் ஆசிரியராகவே கருதி ஆசிரியர்களை முன்னணியில் அமர்த்தி தான் பின் நிற்கவேண்டும். அப்போது ஆசிரியர்களுடைய ஆற்றல் முழுவதும் வெளியாகும். ஒரோ வழி அவர்கள் தவறிவிட்டால் அதைமட்டும் தலைமையாசிரியர் செய்து முடிக்கலாம். இதனால் தனது பொறுப்பு முழுவதையும் ஆசிரியர்கள்பால் விட்டுவிட்டுத் தான் ஒன்றிலும் படாமல் விலகி இருக்கவேண்டுமென்று பொருளன்று. எந்தத் திட்டமும் தலைமையாசிரியரால் வகுக்கப் பெற்றால் அஃது ஆசிரியர்களுடைய திட்டமாக அமைந்தால் ஆசிரியப் பொறுப்பு மீதூறும். இதனால் தலைமையாசிரியர் தம்து நெறியிலிருந்து பிறழ

வேண்டியதில்லை; கொள்கைகளையும் விட்டுக் கொடுக்கவேண்டியதில்லை. ஆசிரியர்களுடைய அனுசரணையை மட்டும்தான் நழுவவிடக் கூடாது. அவர்களோடு பழகுவதிலும் ஆங்கமல நீர் போல் ஒட்டுதலுமின்றி எட்டுதலுமின்றி அவர்களுடைய மரியாதையையும் வணக்கத்தையும் உரியவராக்கிக் கொள்ளவேண்டும். ஆசிரியர்கள் அவர்பால் நம்பிக்கை இழத்தல் கூடாது. ஒரிருவர் ஒரு திட்டத்தைக் கடுமையாகத் தாக்கலாம். அழுக்காறு காரணத்தால் குறை கூறலாம். ஆனால் தொடங்கிய எந்தத் திட்டத்தையும் எந்தக் காரணத்தைக் கொண்டும் நழுவவிடக் கூடாது. ஆர்வத்தோடு தலையாட்டும் ஆசிரியர்கள் தொடக்கத்தில் சூரத்தனத்தோடு செயலாற்றும் ஆசிரியர்கள், தலைமையாசிரியர் விழிப்போடு வற்புறுத்தாவிட்டால் திட்டத்தை நழுவவிட்டு விடுவார்கள். பள்ளிக்கு ஒரு மரபுநிலை உண்டாக்கவேண்டுமானால் நல்ல பல திட்டங்களைச் செயல்முறையில் உருவாக்க வேண்டும். இன்றைய நல்ல பள்ளிகளெல்லாம் அன்று பணியாற்றிய தலைமையாசிரியர்கள் வகுத்த திட்டங்கள் வழியில் அமையப் பெற்றன. அவை அத்திட்டங்களினால் நன்மை எய்தின. நல்ல பள்ளிகளாகக் கருதப்பெற்றன. அவற்றில் பயின்ற பிள்ளைகள் நல்லவர் எனக் கருதப் பெற்றார்கள். இன்னும் அவை பழைய மணத்தோடு பொலிகின்றன. அதற்குக் காரணத்தை அறிவது எளிது.

> "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்"

என்பதே. பழந்தலைமையாசிரியர்கள் முதன்மையாகப் பண்பாட்டிலும் இரண்டாவதாக ஆசிரியத் தகுதியிலும் மூன்றாவதாக ஆளுமைத் திறத்திலும் திண்ணியராயினோராகையால் தாம் பணியாற்றிய பள்ளிகளுக்குத் தம்மைக் காணிக்கை ஆக்கிக் கொண்டவர்களாகையால் திண்மையோடு பல நல்வழிகளை வகுத்துத் தந்தார்கள்.

தலைமையாசிரியர்கள் தமது தலைமைநிலை பிறழாது தாம் கொள்ளும் நல்லெண்ணங்களை நடைமுறையாக்குவதற்குத் தமது ஆசிரியக் குழாத்தின் உதவியோடு செயலாற்ற வேண்டும். அத்தகைய தலைமையாசிரியருடைய தரத்தைக் கூறும் [1]பர்சிவல் ரென் என்பார் ஆணித்தரமாகத் தலைமையாசிரியத் தகுதியையே சுருங்கச் சொல்லி விளங்கவைத்து விட்டார். ஒரு தலைமையாசிரியர் அமர்த்தப்பட்டவர் என்று ஆசிரியர்களும் அறிஞர்களும் கருதக்கூடாது. அவர் தமது மீத்திறத்தாலும் ஆற்றலாலும் உயர் பண்புகளாலும் அவர்களுடைய தலைவரெனக் கருதுதல் வேண்டும். இம்மூன்று குணங்களையும் உதவியாசிரியர்களுக்கு எடுத்துக் காட்டுதல் வேண்டும். கல்லாத பேர்களே நல்லவர்கள்! நல்லவர்கள்!! என்பது தாயுமானுர் வாக்கு. ஆசிரியர்கள் கற்றறிந்தவர்கள். அவர்களை ஒருமுகப்படுத்தி ஆசிரியப் பணிகளைப்

1. Percivel Wren

பெறுவதே தலைமையாசிரியருடைய பெரும்பணி. கற்றறிந்தவர்கள் எளிதில் ஒருமுகப்பட மாட்டார்கள். எந்தக் கருத்தினையும் உடன் பாடாக்கிக்கொள்ள மாட்டார்கள்; தலைமையாசிரியர் தம்மைக்காட்டிலும் அதிகத் தகுதி உடையவராயிருந்தால் ஒரோவழி உடன்படுவார்கள்.

ஆசிரியர்களுடைய வகுப்பறைப் பணியைக் கண்காணிக்க வேண்டியது தலைமையாசிரியருடைய கடமை. ஆசிரியர் பாடம் நடத்தும்போது பாடக் குறிப்புப் புத்தகம், கற்பிக்கும் கருவிகள், வரலாறு அல்லது நில நூல் பாடமாயின் தேசப்படங்கள், பாட விளக்கப் படங்கள்; அறிவியலாயின் மெய்ப்பித்தற் கருவிகள் ஆகியவற்றையும் அல்லது பொதுவாகச் சுண்ணும்புத் துண்டைக்கொண்டு கரும்பலகையையாவது ஓர் முதற் கருவியாக ஆசிரியத்துக்குப் பயன்படுத்துமாறு செய்ய வேண்டும். தலைமையாசிரியர் ஒவ்வொரு வகுப்புக்கும் பாட நேரங்களில் சென்று ஆசிரியர் கற்பிக்கும் முறைகளைப் பார்வையிடல் வேண்டும். ஆசிரியத்தின் குறை நிறைகளைக் கண்டறிந்து குறிப்புப் புத்தகத்தில் வரைந்து ஒய்வு நேரத்தில் ஆசிரியரைத் தமது அறைக்கு அழைத்து அவரோடு தாம் குறித்தவற்றைக் கலந்து பேசவேண்டும். குறை அதிகமானுல் நிறைவு முறைகளை உணர்த்துதல் வேண்டும். அங்ஙனம் உணர்த்தும்போது உதவி ஆசிரியருடைய மனம் புண்படாதவாறு "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே, இடுக்கண் களைவதாம் நட்பு" என்பதற் கிணங்க ஆசிரியருக்கு வழிகாட்டி ஆர்வமூட்டுதல் நல்லது. அல்லாது சிலரைப் போன்று வகுப்பறையில் பிள்ளைகள் முன்னிலையில் ஆசிரியரைத் திருத்தியும் கடிந்தும் நடந்து கொள்ளுவது தக்கதன்று. அதனுல் கடிதலுக் குள்ளானவர் தமது குற்றத்தை மறைத்துத் தலைமையாசிரியருடைய கடிதலைக் கொடுமை எனவும் கொடுங்கோல் எனவும் பறைசாற்றித் தமக்கென ஒரு கட்சியை உண்டாக்கிக்கொண்டு ஆசிரிய ஒற்றுமையைக் கலைத்துத் தலைமையாசிரியர் மீது எதிர்ப்பை உருவாக்குவர். மேலும் தம்மோடு ஒத்த தகுதியும் அனுபவமும் உள்ள உதவியாசிரியர்களைத் தலைமையாசிரியர்கள் நல்ல முறையில் நடத்த வேண்டும். அவர்களிடமும் குறைகள் இருந்தால் அவர்களுடைய நிறைகளைப் பாராட்டி அவர்கள் குறைகளைச் சுட்டாது குறைகளைத் தீர்க்கும் தம்து கருத்துக்களைத் தமது விருப்பமாகக் கூறி அவர்களுடைய சிந்தனைக்கு விட்டுவிட வேண்டும். அல்லது ஆசிரியக் கூட்டங்களில் பொதுப்பட நிறைமுறைகளைத் தமது விருப்ப முறைகளாகக் கூறி ஆசிரியர்கள் சிந்தனை செய்து செயலாற்ற வேண்டுமென்று எடுத்துரைக்கலாம். தலைமை ஆசிரியர் அனுபவம் மிக்கவராயின் உதவி யாசிரியர்கள் அவர் எதை எடுத்துரைத்தாலும் குற்றமாகக் கொள்ளமாட்டார்கள்.

மாதத்துக்கு ஒருமுறை அல்லது இருமுறை ஆசிரியர்களைக் கூட்டி அவர்களோடு அளவளாவிய பிறகு தலைமையாசிரியர் பள்ளிச் சிக்கல்களை அவர்களுக்குக் கூறி அவர்கள் வழியாகவே அவற்றிற்குச் செய்ய

வேண்டியவற்றைக் கேட்டறிந்து தமது கருத்துக்களையும் உதவி அவர்கள் வாயிலாக அவற்றிற்கு ஆவனவற்றை அறுதியிடலாம். இதனால் பள்ளிப் பொறுப்பு தலைமையாசிரியருடையது மட்டுமன்றி ஆசிரியர் எல்லாருடையதுமாகும். எல்லாவற்றையும் தமது பொறுப்பாகத் தலைமையாசிரியர் ஏற்றுக் கொண்டால் தம்மால் நீடித்துச் செயலாற்ற இயலாது. ஒரோவழி தவறிவிட்ட ஆசிரியர்கள் தலைமையாசிரியரையே பொறுப்பாக்குவார்கள். அதனால் தலைமையாசிரியர் ஆசிரியர்களின் பொறுப்பெனத் தாம் பொறுப்பற்று இருக்கக்கூடாது. எல்லாப் பொறுப்பும் தனதென்று உள்ளத்தில் இறுத்தி அதனைச் செயலாற்றுவதற்கு உதவியாசிரியர்களோடு பொறுப்பினைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். ஆசிரியர்களிடத்துத் தனித்தனியாகவும் பொதுவாகவும் சிக்கல்கள் ஏற்படுவதற்கு வழி உண்டு. அவற்றைத் தலைமையாசிரியர் தனது அனுபவத்தாலும் தனது நட்பு உணர்வாலும் தீர்க்கலாம். நாளடைவில் தான் ஒரு நல்ல வழிகாட்டியாகவும் ஆசிரிய நண்பனாகவும் தன்னை உண்டாக்கிக்கொள்ள வேண்டும். ஆசிரியர்களிடையே ஒரு குழு மனப்பான்மையை உண்டாக்கித் தாமும் அவர்களும் பள்ளியின் நன்மையாகிய ஒரே குறிக்கோளைக் கடைப்பிடிப்பவர்களாகவும் அதற்காக உழைப்பவர்களாகவும் கருதச் செய்யவேண்டும். ஆசிரியர்களுடைய நட்பு மட்டும் போதாது. அவர்களுடைய நம்பிக்கையும் தலைமையாசிரியரை உயர்த்தக் கூடியது. எந்த ஆசிரியருக்கும் வேண்டுமென்று விட்டுக் கொடுத்தல் நலமன்று. வெளியாரிடத்து விட்டுக் கொடுக்காமல் தாம் மட்டும் குறையைக் கண்டித்தால் ஆசிரியர்கள் வெறுக்காது நன்றி காட்டுவார்கள்.

தலைமையாசிரியர் சுற்றிப் பார்ப்பதென்பது வகுப்பறையை மட்டுமன்று. பள்ளி முழுவதையும் சுற்றிப் பார்த்து உட்புறம் ஒரு முறை எல்லாப் பகுதிகளையும் கண்காணித்து ஒவ்வொன்றும் அதனதன் இடத்தில் உள்ளதா என்று பார்க்கவேண்டும். இன்றைய பள்ளிகள் பல துறைகள் உள்ளவை. ஒவ்வொரு துறைக்கும் கட்டடத்தில் ஒரு பகுதி உண்டு. அல்லது தனிக் கட்டடமே உண்டு. அதனால் ஒவ்வொரு பகுதிக்குள்ளும் தான் நுழைந்து ஒவ்வொன்றின் ஒழுங்கினையும் பார்த்தறிய வேண்டும். ஒரு சிறிது ஒழுங்கு வழுவி இருந்தாலும் உடனடியாக அதனைத் திருத்துமாறு வற்புறுத்தவேண்டியது கடமை. மேற்பார்வையற்ற பகுதிகளில் பொறுப்பற்ற ஆசிரியராக இருந்தால் அவருடைய பார்வை சீரற்று விடும். அதனால் அடிக்கடி நாளுக்கு ஒரு முறையாவது ஒவ்வொன்றையும் பார்வையிட வேண்டும். முக்கியமாக அலுவலகம் தலைமையாசிரியருடைய மேற்பார்வையில் இருத்தல் நலம். அவர் அறை ஒரு புறமும் அலுவலகம் மற்றொரு புறமும் இருத்தல் நல்லதன்று. அவருடைய மேற்பார்வையில் எழுத்தர்களும் ஏவலாளர்களும் பணி புரிதல் நன்று. வரவு செலவுக் கணக்குகள், பல குறிப்புப் புத்தகங்கள், பல ஏடுகள் முதலியன வெல்லாம் ஒழுங்காகப் பதிவு

செய்யப் பெறவேண்டும். அங்ஙனம் பதிவுகள் நடைபெறுகின்றனவா என்பதை நாள்தோறும் அறிவது நல்லது. நாள்தோறும் பண இருப்புக்களை அறுதியிடுவதற்கு வரவு செலவுகளை ஒத்திட்டுப் பார்க்க வேண்டும். அடிக்கடி பல விபரத் தாக்கல்கள் செய்யவேண்டியவற்றை நேர் முகமாக கவனித்துச் செய்ய வேண்டும். என்றும் அஞ்சல்களை ஒழுங்காகக் கவனிக்கவேண்டும். அலுவலகத்தை நன்ருகத் திருத்த முற அமைத்து நடாத்தக்கூடிய தலைமையாசிரியரே இற்றை நாட்களில் அவரது ஆட்சித் திறமையை அளவிடும் பணியாகக் கொள்ளுகின்ருர்கள். காரணம் பள்ளிக் கணக்குகள் ஆண்டுக்கு ஒருமுறை தணிக்கை பெறுகின்றன. தணிக்கையாளர்கள் பண சம்பந்தமான எல்லாப் பதிவுகளையும் புரட்டிப் பார்த்துப் பிழைகளைத் திட்டவட்டமாக வரைந்து விடுகிருர்கள். அதனுல் கணக்குகள் ஒரு பிழையுமின்றி அமையவேண்டும். கல்வி இயக்குநர் உத்தரவுகளின்படி பல செலவுகள் செய்யவேண்டும். விதி வரம்புக்கு மீறிய செலவுகள் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. அதனுல் தலைமையாசிரியர் வெகு விழிப்போடு செலவுகளைக் கைச்சாத்துகள் பெற்றுச் செலுத்த வேண்டும். இதை யாரும் அலுவலகத்திலுள்ள எழுத்தர்களின் பொறுப்பென்று ஒதுக்கக் கூடாது. முதல் நிலையில் அஃது அவர் பொறுப்பேயாயினும் தலைமையாசிரியருடைய இறுதிப் பொறுப்பு உண்டாகையால் இவற்றிற்கு தடையீடுகள் அப்போதைக் கப்போது செய்யவேண்டியது பெருங்கடமையாகும்.

அலுவலகத்தினருடைய நேர்மையும் ஒழுங்கும் கண்காணிக்கப் பெறவேண்டும். அலுவலகத்திற்கு வரும் மாணவர்களுடைய ஒழுங்கு ஆங்கே அவசியம். பெற்ருேரும் மற்ருேரும் வருவார்கள். அவர்களுடைய தேவைப்பாடுகளை அறிந்து அவர்களை நிறைவோடு அனுப்பவேண்டிய கடமை உண்டு. தலைமையாசிரியரைப் பார்ப்பதற்கும் மாணவர்களும் மற்றவர்களும் வருவார்கள். மாணவர்கள் தமக்கு வேண்டியவற்றை எல்லாம் அவரவர்களுடைய ஆசிரியர்கள் பால் பெற்றுக்கொள்ளுவது நலம். ஆசிரியர்களும் அடிக்கடி தலைமையாசிரியரிடம் பிள்ளைகளை அனுப்பக்கூடாது. தலைமையாசிரியர்கள் ஒவ்வொன்றுக்கும் பிள்ளைகளிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ளுதல் சிறந்ததன்று. அங்ஙனமாயின் ஆசிரியர்களுக்கு மதிப்புக் குறைந்து விடும். பிள்ளைகள் தமது தேவைப் பாடுகளுக்கெல்லாம் தலைமையாசிரியரையே நாடுவார்கள். ஆசிரியருக்கு வணக்கம் செலுத்த மாட்டார்கள். தலைமையாசிரியர் உதவியாசிரியர்கள் மூலம் மாணவரோடு பழகுதல் நல்லது. எதுவாயினும் மாணவர்கள் தமது ஆசிரியர்களை அற்பமாக நினைப்பதற்குத் தலைமையாசிரியர் எவ்வகையினும் காரணமாகக் கூடாது. அங்ஙனம் அவர் அப்படித் தவறி நடப்பாராயின் ஆசிரியர்கள் மாணவர்களை ஏவித் தலைமையாசிரியர்களுடைய தலைமைப் பதவியைக் குறைக்க முயலுவார்கள். எனவே தலைமையாசிரியர்கள் ஆசிரியர்களோடு மட்டும் நேர் தொடர்பும்

மாணவர்களோடு நேரல் தொடர்பும் கொள்ளுவது நல்லது. காலை வணக்கக் கூட்டங்களில் பொதுப்பட ஒரோவழி உடனடி அறிவுப்புக் களை அறிவிக்கலாம். அத்தகையவற்றையுங்கூட ஆசிரியர்களுக்கு முதற்கண் அறிவித்துவிட்டுப் பிறகு மாணவர்களுக்கு அறிவிப்பது நல்லது. ஆசிரியர் வழியாகவே மாணவர்களை அறியவேண்டும் என்றதனால் தலைமையாசிரியருக்கும் மாணவர்களுக்கும் தொடர்பு கூடாதென்பதன்று. எத்துணை அளவு தலைமையாசிரியர் தொடர்பு கொண்டாலும் அவருக்கும் நன்மை—பிள்ளைகளுக்கும் பயன். பள்ளிக்கும் பெருமை. ஆனால் ஆசிரியரைப் புறக்கணித்த தொடர்பு மட்டும் தவறானது. தலைமையாசிரியர் சிலர் எல்லா வகுப்புப் பிள்ளை களையும் தனித்தனியாக அறிய முயலுவர். தமது அறையில் அமர்ந்த வண்ணம் பிள்ளைகளை அறிய இயலாது. தான் அடிக்கடி ஒவ்வொரு வகுப்புக்கும் செல்லவேண்டும். தான் அறிந்த பாடத்தினைப் புகட்ட வேண்டும். வகுப்பாசிரியர் பள்ளிக்கு வாராத நாட்கள் தலைமையாசிரிய ருக்கு வாய்ப்பளிக்கக் கூடியவை. அவர் செல்ல வேண்டிய வகுப்புக் களுக்குத் தான் சென்று பாடங்களை நடத்தலாம். பிள்ளைகளை அறிமுகப் படுத்திக் கொள்ளலாம். சிறிய வகுப்புக்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தல் நல்லது. சிறு பிள்ளைகள் தலைமையாசிரியரை நன்றாக அறிந்து கொள்ளுவர். ஒழுங்கோடும் கட்டுப்பாட்டோடும் ஒழுகுவர். தலைமையாசிரியருடைய மதிப்பு சிறு பிள்ளைகளின் உள்ளங்களில் வளர்ந்து கொண்டே வரும்.

தலைமையாசிரியர் பெற்றோர்களிடத்துக் கொள்ளவேண்டிய தொடர்பு மிகவும் இன்றியமையாதது. பள்ளியோடு பெற்றோர் தொடர்பினைப் பற்றிக் கல்வியாளர் பெரிதும் பேசுவர். பிள்ளையைச் சேர்க்கும்போது பள்ளிக்குத் தந்தையார் வராது விட்டால் பிள்ளையைச் சேர்க்கக் கூடாது. தந்தை இல்லாதிருந்தால் தாய் வருதல் வேண்டும். இரு வரும் இல்லாத காலத்தில் இவர்கள் உத்தரவு பெற்ற பாதுகாப்பாளர் வருதல் வேண்டும். வழிப்போக்கரை எல்லாம் அழைத்துப் பிள்ளையைப் பள்ளியில் சேர்க்கச் சொல்லுவது பெற்றோர்கள் சிலருடைய பழக்கம். அல்லது அவர்கள் பள்ளியைப் பற்றிக் கொண்டிருக்கும் மதிப்பும் அது வாகலாம். எனவே பிள்ளையின் படிப்புக் காலத்தில் பெற்றோருடைய தொடர்பின் இன்றியமையாமை வற்புறுத்தப் பெறல் வேண்டும். பெற்றோரை நேர்முகமாகப் பார்த்து அறிவதால் தலைமையாசிரியர் பிள்ளையின் இல்லச் சூழ்நிலையை ஒரோவழி அறிந்துகொள்ள இயலும். பெற்றோர்களுக்குள் பெரியோர் இருப்பாராயின் அவர்களால் பள்ளிக்குப் பல நன்மைகளைப் பெற இயலும். மேலும் பள்ளிகளின் நடை முறையைப் பெற்றோர்கள் அறிய வேண்டியது கடமை. பிள்ளை களுடைய படிப்பிலும் பெற்றோர்களுடைய ஒத்துழைப்பு இல்லாவிட்டால் முற்போக்கு நன்றாக நிகழாது. பள்ளி நேரம் கழிந்த பிறகு பள்ளியின் பொறுப்பைப் பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அடுத்த நாள்

பிள்ளைகள் பள்ளிக்கு வரும் வரையில் அப்பொறுப்பு பெற்றோர்களுடைய தாகும். விடுதிகள் உள்ள பள்ளிகளாயின் முழுப் பொறுப்பினையும் பள்ளி ஏற்கும் கடமை உண்டு. விடுதியில் சேர்ந்த பிள்ளையாயின் அப் பிள்ளைகளுடைய பெற்றோர்களோடு முழுத் தொடர்பு வேண்டியதாகின்றது.

பெற்றோர்களே அன்றிப் பொதுமக்களையும் தலைமையாசிரியர் அறிதல் வேண்டும். பொதுமக்களுள் பலர் பள்ளிக்கு நன்மை செய்பவர்களாக இருக்கலாம். அவர்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுதல் மிகவும் வேண்டற்பாலது. இன்று சென்னை அரசினரால் நடைமுறையில் உள்ள நண்பகல் உணவுத் திட்டம், பள்ளிச் சீரமைப்புத் திட்டம், இரவுப் பள்ளித் திட்டம் ஆகிய மூன்றையும் வெற்றிகரமாக நடத்துவதற்குப் பொதுமக்களுடைய ஈடுபாடு மிகவும் வேண்டற்பாலது. தலைமையாசிரியர் பெற்றோர்களையும் பொதுமக்களையும் நட்புக்கொண்டு பள்ளிக்குப் பல நன்மைகளைத் தேடித் தரலாம்.

தலைமையாசிரியர் பள்ளியில் வகிக்கும் பதவி பள்ளிக்கே உயிர்ப்புத் தரும் ஒன்று. பள்ளி மண்டலத்தில் நடுவண் வான் மதியாக விளங்குபவர் அவரே யாவர். பள்ளியின் பல உறுப்புக்களை அழிய விடாது வளர்ப்பவரும் அவரே. ஒவ்வோர் உறுப்பும் வேண்டிய அளவு மிகாமலும் குறையாமலும் இயங்குவதற்கு இயக்குநர் அவரே யாவர். பள்ளிச் சூழ்நிலையில் அவருக்கு மிக்காரும் ஒப்பாரும் அவரே யாவர். தலைமையாசிரியரோடு ஆசிரியராகவும் ஆசிரியர்களுக்குள் தலைமையாசிரியராகவும், ஆசிரியர்களுடைய மேற்பார்வையாளராகவும், பெற்றோர்களுக்குத் துணையாளராகவும், பொதுமக்களுக்கு நண்பராகவும், பள்ளிக்குக் காவலராகவும், அரசினரின் தாளாளராகவும், பொதுவாகக் கல்வியின் பணியாளராகவும் விளங்குகிறார். பள்ளியை ஆட்டிவைப்பவரும் அவரே; பள்ளித் தேரை ஓட்டுபவரும் அவரே; பள்ளியின் பல முனைகள் கூடும் கூடலும் அவரே; பள்ளியின் உறுப்புக்கள் பல இயங்கும் நிலையினைத் தமது அலுவலகத்திலிருந்து அறியக் கூடியவரும் அவரே; பள்ளியின் பல்லாற்றல்களைத் தம்மகத்தே அடக்கக்கூடியவரும் அவரே; தாம் வகுக்கும் பல நன்மைகளைப் பள்ளி முழுவதும் பெறுவதை அறியக் கூடியவரும் அவரே. பள்ளியின் சார்பாக எதையும் அறியக் கூடியவரும், பள்ளிக்காக விழைபவரும் அவரே யாவர். பள்ளி உயர்வுற்றால் அவருடைய நிலை உயருகின்றது. அவர் உயர்வு பள்ளியின் பலபடியான உயர்வேயாகும். பொதுவாக ஆசிரியத்தின் உயர்வு, ஆட்சி முறையின் உயர்வு என்று கூறுவார்கள். இவ்விரண்டு உயர்வுகளும் பள்ளியின் இரு கண்களாகும். தலைமையாசிரியரின் இரு கண்களும் அவையே எனல் மிகையாகாது. அவர் இளைஞராயின் முதிய அறிவு உள்ளவராதல் வேண்டும். முதியவராயின் இளைஞர் உள்ளம் பெற்றவராதல் வேண்டும். அவருடைய சுறுசுறுப்பு, உடல் வளம், தூய உள்ளம், முதுமையிலும் இளமை, தமது ஐம்புலன்களின்

மெய்த்திறம், பள்ளி முழுவதும் கண்ணோட்டம், செவிநாட்டம் ஆகியவை இன்றியமையாதவை. அவர் பிள்ளைகளைப் போலாவது ஆசிரியர்களைப் போலாவது பள்ளிக்கு வாராது விடுமுறை எடுத்துக் கொள்ளுதல் கூடாது. பள்ளியாகிய உடலுக்கு அவர் உயிராகையால் அவர் பள்ளிக்கு வாராத நாட்கள் வாழா நாட்களாகும்.

பள்ளித் தலைமையாசிரியரைப் பொதுமக்கள் ஒரு பொதுமகனாகவும் ஒரு தாழ்ந்த பணியாளராகவும் கருதலாம். அற்றன்று. பள்ளிக்குத் தலைமையாசிரியர் வாராத நாட்களில் பள்ளியின் காட்சியிலிருந்து தலைமையாசிரியர் பெருமையினை அறிந்து கொள்ளலாம். அந்நாட்களில் ஆசிரியர்கள் கட்டவிழ்ந்தவர்களைப் போலவும், பிள்ளைகள் விடுதலை பெற்றவர்களைப் போலவும், அலுவலகத்தினர் அல்லல் நீங்கியவர் போலவும் களிதுளும்புவர். எனவே தலைமையாசிரியர் பள்ளிக்கு வாராத நாட்களில் பள்ளிப் பணிகளெல்லாம் இப்படியும் அப்படியுந் தான். ஒரு சிலர் பள்ளிகளில் தலைமையாசிரியருக்கெனப் பள்ளியைச் சேர்ந்த ஒரு கட்டடத்தை அவருடைய குடியிருப்புக்கு அளித்து அவருடைய பார்வையிலேயே பள்ளி இருக்குமாறு வசதியளிப்பதுண்டு.

மீத்திறம் பெற்ற தலைமையாசிரியர்கள் பல பொதுப் பணிகளுக்கு அழைக்கப் பெறுவர். அரசினரும் அவரை மதித்துக் கல்விச் சம்பந்தமான கருத்துக்களைப் பெற அழைப்பார்கள். அல்லது கல்விக் குழுக்களின் உறுப்பினராக்குவார்கள். சிறந்த சொற்பொழிவுகட்காகப் பல கழகங்கள் பேச்சுரை நிகழ்த்த அழைக்கும். இங்ஙனம் பலபடியாக வெளிப் பணிகள் நாளடைவில் வளர்ந்துவிடும். அப்போது தலைமையாசிரியர் வெகு சுறுசுறுப்பாக இருத்தல் வேண்டும். பொதுப்பணி எதுவாயினும் பள்ளிப்பணி புறக்கணிக்கப் படல் கூடாது. பள்ளிப் பணிகளின் கண்காணிப்பு ஒரு சிறிதும் குறைதல் கூடாது. பள்ளிப் பணிக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். பள்ளிப் பணிக்குத் தடை உண்டாகாதிருந்தால் பொதுப் பணிகளை ஏற்றுக் கொள்ளலாம். ஒரு சிலர் பள்ளிப் பணியினை ஒதுக்கிவிட்டுப் பொதுப் பணிகளில் ஈடுபாடு கொள்ளுவதுண்டு. அத்தகையோர் தமது பள்ளிப் பணிகளில் பல இழுக்குகள் உண்டாகி விடுவதைக் காண்பார்கள். அதனால் தனக்குத் தலையாயது பள்ளி என்று கருதுதல் முதற்கடமை. பள்ளியில் சிறந்தாலன்றிப் புற ஒழுக்கங்களில் சிறக்க இயலாது. இரண்டிலும் சிறந்தால் கல்வி உலகில் தலைமை பெற இயலும்.

தலைமையாசிரியருடைய பொறுப்புக்கள் பல. ஒவ்வொரு பொறுப்பையும் ஒழுங்காக நிறைவேற்ற வேண்டியது கடமை. யாதாகிலும் ஒன்றில் ஒரு சிறிது வழு ஏற்பட்டாலும் அவருடைய பள்ளியாட்சி குறைவுறும். பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்கும்போது அரசினர் விதிகளுக்கு ஒரு சிறிதும் வழுவாதபடி பிள்ளைகளைச் சேர்க்கவேண்டும். சட்டத்தை ஒதுக்கி வைத்துத் தனது விருப்பம்போல் ஒரு வகுப்பு உயர்வாக ஒரு பிள்ளையைச் சேர்த்து விட்டால் கல்வி இயக்குநரால்

தண்டிக்கப்படுவார். அங்ஙனம் பிள்ளைகளை மேல் வகுப்புக்களுக்கு மாற்றும்போது விதிகளுக்கு ஒரு சிறிதும் பிறழாமல் மாற்ற வேண்டும். கள்ளத்தனமாக ஒரு பிள்ளையைத் தகுதியிருந்தும் மாற்ருமல் விட்டும் மற்ருெரு பிள்ளையைத் தகுதியற்றிருந்தும் மாற்றி விட்டால் தண்டனை விதிக்கப் பெறும். தான் தொடங்காற்றல் எந்த அளவாயினும் தனது புதிய கருத்துக்கள் எதுவாயினும் தனது திட்டங்களைக் கல்வி இயக்கு நருக்கு அறிவித்து நடைமுறையில் ஆக்குவது நல்லது. கல்வித் துறையினரும் புத்துணர்ச்சியுள்ள தலைமையாசிரியர்களைக் காண்ப தற்கும் அவர்கள் ஆற்றல்களை அறிவதற்கும் அவர்கள் திட்டங்களைச் சோதனைக்குள்ளாக்குவதற்கும், வெற்றி காண்பதற்கும், வெற்றி கண் டால் பாராட்டுவதற்கும் விழைந்த வண்ணம் உள்ளார்கள். எனவே பள்ளியின் நன்மையைத் தனது கனவாகவும் நனவாகவும் கொண்டு பணியாற்றல் தலைமையாசிரியருடைய தலைக் கடன்.

12. ஆசிரியர்

கல்வியின் தரம் உயரவேண்டுமானல், கல்வி ஏற்பாடு ஆக்கம் பெறவேண்டுமானல் ஆசிரியர் அதற்குப் பொறுப்பாளியாக வேண்டும். அவருடைய ஆளுமைத் திறன்கள், கல்வித் தகுதிகள், ஆசிரியப் பயிற்சி, அவர் பள்ளியின் சமூகத்தில் வகிக்கும் மதிப்பு ஆகியவை இன்றியமையாதவை. ஒரு பள்ளியின் பெரும் புகழும், அது சமூகத்தில் பெறக்கூடிய மதிப்பும் அப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியரைச் சார்ந்தவை. ஆசிரியர்கள் நிலை உயரவேண்டும். மனநிறைவற்ற ஆசிரியர்கள் தாம் எதிர்பார்க்கும் வண்ணம் பொறுப்பாற்ற இயலவில்லை என்று நேர்முகமாகவும் தமது கழகங்கள் வழியாகவும் கூறுகின்றுர்கள் என்பது அறிந்ததே. தம்மைக் காட்டிலும் தகுதிகளில் குறைந்தவர்கள் உயரிய பதவிகளை வகிப்பதைக் கண்டு புழுங்குகிருர்கள். அல்லது அவர்களைப் போன்ற தகுதியுடையார் பிற துறைகளில் தம்மைக் காட்டிலும் மிகு வருவாய் பெறுகிருர்களென்று எடுத்துக்காட்டுகிருர்கள். தகுதி குறைந்தார் தம்மினும் மிகு வருவாய் பெறுவதும் அவர்களை உறுத்துகின்றது. ஆனல் இன்றைய நிலையில் அரசினர் அத்தகைய வேறுபாடுகளைப் பெரிதும் நீக்கி உள்ளார்கள். தகுதியைத் தரமாகக் கொண்டு வேறு துறையினர்களையும், ஆசிரியர்களையும் ஊதிய நிலையில் வேறுபாடின்றி அமைத்துள்ளது வரவேற்கத் தக்கது. சென்னை மாநிலத்தில் ஆசிரியர்கள் அரசினருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டவர்கள். மேலும், தமது பணிகளிலிருந்து அடிக்கடி நீக்கம் பெறும் பழைய அவல நிலை இன்று நீங்கி உள்ளது. தொடக்கநிலை ஆசிரியராயினும் தணிக்கையாளர் அனுமதியின்றி ஓர் ஆசிரியரை நீக்க இயலாது. அங்ஙனமே உயர்நிலை ஆசிரியர்களைக் காரணங் காட்டாது நீக்க இயலாது. காரணமின்றி ஓர் ஆசிரியர் நீக்கப்பெற்றுல் கல்வி இயக்குநருடைய ஆதரவு அவருக்கு உண்டு. மேலும் ஆசிரியரும், பள்ளி நிர்வாகத்தினரும் ஓர் ஒப்பந்தத்தில் ஈடுபட வேண்டுமென்பது அரசினர் கட்டளை. ஒப்பந்தம் வழுவாதபடி இரு திறத்தாரும் நடந்து கொள்ளவேண்டும். எனவே ஆசிரியர்கள் இன்று பல தொல்லைகளினின்றும் விடுபட்டுள்ளார்கள். ஆனல் அவர்களுடைய வறுமை நீங்கியபாடில்லை. பெரும்பான்மையோர் பெருங் குடும்பிகள். அவர்களுக்குக் குறைகள் தீர்ந்தபாடில்லை. புதிதாக ஆசிரியத்தில் நுழைபவர்களுக்குப் புதிய சம்பள விகிதங்கள் நன்மை பயக்கலாம். ஆனல் பழைய ஆசிரியர்கள் புதிய விகிதத்தின் பயனைப் பெறுவதற்கில்லை. பயனைப் பெறுவதென்றல் அவர்களுடைய அனுபவத்துக்கு ஏற்றவாறு புதிய விகிதம் அளிக்கப் பெறவேண்டும். அங்ஙனம் அளிக்கப் பெருது பத்தாண்டுகள் அனுபவம் உள்ளவரும் புதிதாக ஆசிரியத்தை ஏற்றுக்கொண்டவரும்

ஒரு சிறிது ஊதிய வேறுபாட்டிற் பணி புரிகிருர்கள். இங்ஙனமே இருப தாண்டு அனுபவம் உள்ளவர்களும் புதிய திட்டத்தின் பயனைப் பெற வேண்டிய அளவுக்குப் பெறவில்லை. ஒருதரப்பட்ட ஆசிரியர்கள் அவர்களுடைய தொடக்க ஊதியத்திலிருந்து பதினைந்து ஆண்டுகளுக்குள் ஆண்டுக்கு ஒரு முறை விகித ஏற்றம் பெற்றுப் பதினைந்தாவது ஆண்டு இறுதியில் அத்தரத்தின் ஊதியத்தைப் பெறுவதென்று திட்டமிருந்தாலும் அந்த விகிதப்படி அத்தரத்து ஆசிரியர்களுக்கு அவரவர்களுடைய அனுபவ ஆண்டுகளின் எண்ணிக்கையை அறிந்து அவர்களுக்கு ஊதிய ஏற்றம் அளிக்கப்பெற வேண்டும். பதினைந்தாண்டுக்கு மேற்பட்ட அனுபவம் வாய்ந்த ஆசிரியராளுல் அவருக்கு உச்ச ஊதியத்தை அளிக்கவேண்டியது நீதியாகும். இங்ஙனம் இல்லாததால் ஆசிரியர்கள் இன்னும் ஊதியக் குறைபாட்டில் உழலுகின்ருர்கள். இதை அரசினர் அறிந்தவர்களேயாவர். அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் நிறையோடு பணியாற்ற வழி வகுத்தல் மிகவும் வேண்டற்பாலது. ஊதியத்தை அதிகப்படுத்திச் சிறந்த தகுதியும் ஆற்றலும் உள்ளவர்களை ஆசிரியத்துக்கு ஈர்க்கலாம். ஆசிரியத் தொழிலில் வெறும் வருவாயை மட்டும் நாடுபவர்கள் தகுதியற்றவர்கள். உலகில் யாரும் வருவாய் அற்று வாழ இயலாது என்பது சொல்லாமலே விளங்குவது. ஆனுல் ஆசிரியத்துக்கு வருபவர்கள் ஒரு சிறிது தன்னலம் அற்றவர்களாக இருந்தாலன்றி ஆசிரியம் எந்தக் காலத்தும் தழைக்காது. ஆசிரியத் தொழில் சோம்பிக் கிடக்கும் தொழிலென்று அதைத் தேடுவாரும் உளர். ஓர் ஆண்டில் பல நாட்கள் விடுமுறை என்று நாடுவாரும் உளர். பொறுப்பற்றுப் பணி புரிந்தாலும் காலம் போகுமென்று நினைப்பவரும் உளர். வேலை செய்யாமலே சம்பளத்தை வாங்குபவரும் உளர். ஆசிரியப் பணி பாவமற்ற பணி. விரும்பினுலும் அப்பணியில் பாவம் இழைக்க முடியாது. கடவுட் பணி ஒன்றே பாவமற்ற பணி. எழுத்தறிவித்தவன் இறைவனுகும் என்று கூறியது இங்கு நோக்கத் தக்கது. இறைவன் என்பது கடவுள் ஒன்றையே குறிக்கும். பிள்ளைகளுடைய உள்ளங்களில் இருளைப் போக்கி ஒளியைப் பெருக்குவது ஆசிரியப் பணி. கடவுள் ஒருவரே ஒளி வடிவானவர். ஆசிரியர்கள் ஒளி உள்ளவர்கள். ஒளி ஒன்றே மற்ருெரு ஒளியை உண்டாக்கக் கூடியது. அதனுல் கடவுட் பணியை மேற்கொண்டு ஆசிரியப் பணி புரியும் ஆசிரியர்கள் உள்ளத்தாலும், நாவாலும், மெய்யாலும் ஒளி அற்றதை நாடுதல் கூடாது. உள்ளத்தில் உள்ளுவது உண்மை. நாவால் பேசுவது வாய்மை. மெய்யால் இயங்குவது மெய்மை. எனவே இம்மூன்றும் ஒளியினைச் சார்ந்தவை. எல்லாம் வல்ல இறைவன் உண்மையே வடிவாகக் கொண்டவன். அதனுல் உண்மை வடிவத்தின் பணியை மேற்கொள்ளும் ஆசிரியர் உண்மையையே உருவாகக் கொண்டவராக விளங்குதல் வேண்டும். எனவே ஆசிரியப் பணி ஓர் உண்மைப் பணி. உண்மையை உள்ளமொன்றே அறிய இயலும்.

ஆசிரியர் நாள்தோறும் பள்ளிக்கு வரலாம். முப்பது நாட்கள் கையெழுத் திடலாம். வேலை செய்ததாக வெளிப்படுத்தலாம். ஆனால் தமது உள்ளத்தை ஏமாற்ற இயலாது. உண்மையாகப் பணி புரியவேண்டும். பிள்ளைகளுடைய உள்ளங்களோடு தமதுள்ளம் உறவாட வேண்டும். ஆசிரியருடைய உள்ளம் உண்மையான உள்ளமாயின் அஃது உண்மை யாகவே மாணவர் உள்ளங்களோடு மாட்சிமை புரியும். பிள்ளைகளிடம் உண்மை உள்ளம் பிள்ளைகளிடையே நன்மையையே நாடும். நல் லாசிரியர்கள் நமது ஆசிரியர்களைப் போன்று ஒரு வகுப்பில் ஒரு பாதி எண்ணிக்கை தேறிவிட்டால் போதுமென்று நிறைவு கொள்ளார். கடவுள் எல்லா மக்களையும் பாதுகாக்கின்றார். எண்ணறிய பிறவி என்றும் 84 கோடி பிறவி என்றும் அவற்றிற்கெல்லாம் கடவுள் அளித்துக் காக்கின்றார் என்றும் நமது நூல்கள் கூறும். எனவே ஆசிரியர் தம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள் எல்லோரையும் ஊக்கத் தோடு கருதி ஆக்கத்தை அளிக்க வேண்டியது கடமை. ஆசிரியப் பணி கடவுட் பணி என்று கருதாதவர்கள் ஆசிரிய வாழ்க்கையில் வெற்றி காண முடியாது. ஒரோவழி வெற்றி கண்டால் வேறு வகை யில் இன்னல்களும் இடர்ப்பாடுகளும் உறும். என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதே ஆசிரியருடைய இலக்கணமாக அமைய வேண்டும்.

ஆசிரியத்துக்கு அருகர் யார்? அந்தந்த நிலைக்கேற்ற கல்வித் தகுதி உடையவர்களும் ஆசிரியப் பயிற்சி பெற்றவர்களும் என்று அரசாங்கம் கூறும். அல்லது சட்டங்கள் வரையறை செய்யும். ஆனால் கல்வித் தகுதியும் ஆசிரியப் பயிற்சியும் பெற்றிருந்தால் மட்டும் நல் லாசிரியராக ஆதல் எளிதன்று. ஆசிரியத்தில் உள்ளத் தெழுந்த ஆற்றல் சிலருக்குப் பூக்கும். அதுவே ஆசிரியத்தின் அறிகுறியாதல் காண்க. இதனாலன்றோ! ஆசிரியராகப் பிறவாதார் ஆசிரியராகார் என ஒரு சாரார் கருதுவர். ஆனால் இன்று நமது நாட்டிற்கு ஆசிரியர் ஆயிரக் கணக்கில் வேண்டுமென்கிறார்கள். எனவே ஆசிரியராகுவோர் ஒவ்வொருவரும் ஆசிரியப் பணியின் மென்மையையும், மேன்மையையும் கருதி ஆற்றலோடு விளங்கவேண்டும். ஆசிரியராகார் யாவரென்று நன்னூல் கூறும் கருத்து ஈண்டும் கருதத் தக்கது.

“ மொழிகுண மின்மையு மிழிகுண வியல்பும்
அழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலும்
கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோ ரிலரா சிரியரா குதலே.”

பாடஞ் சொல்லும் இயல்பு அற்றவரும் இழிந்த குணத்தை உடைய வரும், மாணக்கர் தம்மை விஞ்சி விடுவதைக் கண்டு பொறாமையுடைய வரும், பேராசை பிடித்தவரும் வஞ்சக நெஞ்சமுடையவரும், அச்

சுறுத்தும் பேச்சினையுடையவரும் மாறுபாடு கொண்ட மனத்தை உடையவரும் கற்பித்தல் பணியை மேற்கொள்ளத் தகாதவர். தாம் கற்றுக்கொண்ட முறையினால் அல்லாது முன் பின்னாக வெகு விரைவில் கற்றுக்கொடுப்பவர் ஆசிரியராகாதவராகையால் அவர் கழற்காய் பெய்த குடத்தின் தன்மையுடையவர். மடற்பனை தானாகவே பழத்தைக் கொடுக்கும். அதன்மீது ஏறிப் பறித்துக்கொள்ள அதனுடைய கூரிய கருக்குகள் இடம் கொடா. அதைப்போல் தானாகவே கற்பித்தாலன்றி மாணவர் நெருங்கிக் கற்றுக்கொள்ள இடம் கொடாதவர் ஆசிரியராகார். ஆசிரியர் தாம் கற்கும்போது சிறிது சிறிதாகவே கருத்துக்களை முயன்று திணித்துக் கற்றவராகையால் தாம் கற்பிக்கும்போதும் அந்த அளவிலேயே அரிதில் முயன்று வெளிப்படுத்திக் கற்றுக்கொடுப்பார். அத்தகையோர் ஆசிரியராகார். அதனால் அவர் பருத்திக் குண்டிகைக்கு ஒப்பாவார். சில தென்னைமரங்கள் வேலிக்கு வெளிப்புறத்தே வளைந்த தன்மையவாகித் தமக்கு நீர் பாய்ச்சி வளர்த்தவர்களுக்கல்லாது பிறர்க்குத் தன் காய்களைத் தருவதைப் போன்று பொருள் முதலியவற்றைப் பொறுத்துப் போற்றும் மாணாக்கர்களை நீக்கிப் பிறர்க்குக் கற்றுக் கொடுப்பவர் ஆசிரியராகாதவராகையால் முடத்தெங்குக்கு ஒப்பாவார்.

ஆசிரியர் என்பவர் மிகவும் கடுமையான உள்ளம் படைத்தவர் என்ற கருத்து நமது நாட்டில் மட்டுமன்று, மேலை நாடுகளிலுங்கூட அன்று இருந்துள்ளது. நம் நாட்டில் ஆசிரியரென்றால் ஓர் அலங்கோல உருவம்; கையில் அவருடைய அடிப்படையான ஒரு பிரம்பு; ஒரு மூக்குக் கண்ணாடி என்ற இத்தகைய ஒரு கேலிச் சித்திரமே ஆசிரியர் என்ற எண்ணமும் அவரைப் பிள்ளைகள் பார்த்து ஒரு சமயம் நடுங்குவதும், மற்றொரு சமயம் அவரைக் கேலி செய்வதும் ஆகிய பழக்கமும் நிலவி வந்தன. ஆனால் இன்று அங்ஙனமன்று. [1] ஆலிவர் கோல்டு ஸ்மித் அவருடைய [2] சிற்றூர் ஆசிரியரைச் சித்தரித்துள்ளதை நாம் படித்துள்ளோம். அத்தகைய சித்திரம் நமது நாட்டுக்கும் பொருத்தமுறும். ஆனால் அன்றுபோல் இன்று ஆசிரியர்கள் கிராமத்துக்கு உரியவரல்லர். அன்னார் பலராவர். இன்று ஆசிரியத்தின் தத்துவம் வேறு. ஆனால் நமது நாட்டைப் பொறுத்தவரையில் இன்றும் அன்றும் ஒன்றேதான். அது நமது பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது. மேலை நாட்டுக் கல்வி முறைகள் நமது நாட்டகத்தே பரவி இருந்தன. அவை யாவும் ஆசிரியர்களுடைய பண்பாடுகளில் ஊறி ஒரு புதிய திருப்பத்தைப் பெறுகின்றன. எனவே நம்நாட்டு ஆசிரியர்கள் நமது வழிவழிப் பண்புகளில் ஊறியவர்கள். கல்வி கற்பித்தவன் ஒரு தந்தை என்று நமது சதகங்கள் கூறும். அந்நிலையினை உணராத ஆசிரியர்கள் ஒரு சிலரேயாவர். ஆசிரியர் எப்படியோ அப்படியே மாணவர்கள்

1. Oliver Gold smith 2. The Village School master

என்பது உலகத்து ஒரு மறை மொழி. ஏனெனின் ஆசிரியர் வருங்கால மனிதர்களை உருவாக்குபவர். பிள்ளைகளோடு தொடர்பு கொள்ளும்போது பிள்ளைகளுடைய உள்ளங்களைக் கவர்வதோடு மட்டு மல்லாது தமது கருத்தாலும், தம்மைப் பின்பற்றுதலாலும், தமது அன்பாலும் அவர்களைத் தாம் அறியாமலே உருவாக்குகின்றனர். பெரும்பாலும் மாணவர்கள் ஒவ்வொரு செயலிலும் ஆசிரியர்களைப் பின்பற்றுகின்ற காரணத்தால் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக எடுத்துக் காட்டாதல் வேண்டும்.

குழவிகளைப் பேணுதல், பிள்ளைகளைக் கண்டு மகிழ்தல், அவர்கள் கூட்டத்தில் திளைத்தல், தமது குழந்தைகளைப் போன்று மாணவர் களையும் உண்மையாகவே கருதுதல், அவர்களுடைய இடுக்கண்களை அறிந்து நீக்குதல், அவர்களுடைய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உதவுதல், தாம் உண்மையாகவே ஒரு கல்வித் தந்தை போன்று நடந்துகொள் ளுதல்—இவை ஆசிரியரிடத்தே இயற்கையாக அமையவேண்டியவை. வகுப்பறையில் ஆசிரிய மாணவ உறவு செம்மையாக இருந்தாலன்றிக் கற்பித்தலும், கற்றலும் களிநடம் புரியா. ஆசிரியர் ஒவ்வொரு மாணவரையும் அறிதல் வேண்டும். ஒவ்வொருவரது இல்லச் சூழ்நிலை, பெற்றோரது பொருளாதார நிலை, அவர்கள் பிள்ளைகள்பால் கொள்ளும் பொறுப்பு, பிள்ளைகளுடைய நாட்டம், திறன், கவர்ச்சி ஆகியவை எல்லோரும் அறிதல் வேண்டும். வெறும் பாட ஆசிரியர் என்று ஒவ்வொருவரும் கருதிக்கொண்டு பாடத்தை மட்டும் நடத்தும் பொறுப் பினை ஆற்றிப் பிள்ளைகளை அறிதற் கடமையை நழுவ விடல் கூடாது. பிள்ளைகள் தம்மைக் கண்டவுடன் உவகை கொள்ளவேண்டும். ஆசிரி யர் ஒரு சிலருடைய வகுப்பைப் பிள்ளைகள் அவாவி விரும்புகிறார்கள். ஒரு சிலரை வெறுக்கின்றார்கள். சிலர்பால் மதிப்புக் காட்டுகின்றார்கள். சிலரைக் கண்டு வணங்குகின்றார்கள். சிலரைப் பற்றிப் பாராட்டிப் பேசுகின்றார்கள். சிலருக்கு மதிப்புத் தருவதில்லை. ஏனென்றால் அவ்வாசிரியர்கள் ஆசிரியத்தில் குறைபாடுற்றவர்களேயாம். அல்லது குண நலன்களில் இழுக்குடையவர்களாவார்கள். அதனால் ஆசிரிய ருடைய ஆளுமைத் திறனும் ஆசிரியமும் பிரிக்க இயலாதபடி ஒருமைப் பாடு பெறவேண்டும். ஆளுமைத் திறனே ஆசிரியமாகவும் ஆசிரியத் திறமையே ஆளுமைத் திறமையாகவும் ஒன்றி இயங்கவேண்டும். ஆசிரியரை மாணவர்கள் மட்டும் மதிப்பிடுவதில்லை; சமூகமே நாள் தோறும் மதிப்பிடுகின்றது. வேறு எந்தத் துறையினராவது எத்தகு குறைபாடுடையவராயினும் சமூகத்தின் வாய் அசைந்து நின்றுவிடும். ஆனால் ஆசிரியருடைய குறைபாடு ஒரு சிறிதேயாயினும் அதைச் சமூகம் ஏனோ பெரிதாக்கி அலர் தூற்றுகின்றது. அதனால் ஆசிரியர் வெகு விழிப்போடு தம்மை நடாத்திக் கொள்ளவேண்டும். ஒரு சிறிதும் குறைபாடற்றவராயின் அவரை யாரும் அசைக்க முடியாது. அன்னாரை

மாணவ உலகம் காக்கும். சமூகம் அரண் அளிக்கும். அத்தகையோர் சமூகத்தில் ஓர் உயரிய நிலையை எளிதிற் பெறுவர். அவர்களுடைய தலைமையைச் சமூகம் நாடும். பள்ளியின் நன்மையைக் கருதி அவர் சமூக உறவினை நாடும்போது சமூகம் அவரை விருப்போடு வரவேற்கும். அத்தகைய ஆசிரியர் தனித்து ஒதுங்காமல் சமூகத்தோடு உறவு கொள்ளுவார். சமூக நலத்தில் ஈடுபாடு கொள்ளுவார். அவரால் பள்ளிக்குப் பெருமையோடல்லாது நன்மையும் உண்டாகும்.

ஆசிரியர் சிலர் பள்ளியின் வழியாகச் சமூக உறவு கொண்ட பிறகு பள்ளிப் பணியில் நெகிழ்வு காட்டிப் பள்ளியைப் பற்றிய கவலையற்று நேரம் முழுவதையும் பள்ளிசாராப் பல வேலைக்குச் செலவிடுகிறார்கள். ஆசிரியர்கள் தமது பணி முதற்கண் ஆசிரியப் பணி என்று கருதுதல் வேண்டும். அதற்குரிய தகுதிகளைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். இப்பணியில் தனது கடன் உண்மையாக அமையற்பாலதென்று உணர வேண்டும். அது வயிற்றுப் பிழைப்புக்கென்று மட்டும் கருதுதல் தவறு. அத்தகைய ஆசிரியம் உயிரற்றதாகும். ஒவ்வோர் ஆசிரியரும் ஆசிரியத் துறையில் தமது பங்கு உண்டென்று திடமாக நம்பவேண்டும்; நம்புதலோடல்லாது அதன்படி நடந்துகொள்ளவும் வேண்டும். அங்ஙனம் கருதுபவரே ஆசிரியராவர். வேறு எப்பணியாயினும் அத்தகைய கருத்து வேண்டற்பாலதன்று. ஆசிரியம் ஒன்றுக்கே அஃது உரியது. ஏனென்றால் அஃது உள்ளத்தைச் சார்ந்தது. ஆசிரியருள்ளத்தில் படைப்பாற்றல் நிகழ்வதற்கு அதுவே ஏவுதற் கருத்தாவாகும். எனவே ஆசிரியருக்குத் தமது பணி உணர்ச்சி தலையாயது. ஆசிரியத் தொழிலை ஏற்றுக்கொண்டவர்கள் ஆசிரியம் ஒன்றினை மட்டுமே நாட வேண்டும்; வேறொன்றிலும் நாட்டம் கொள்ளக்கூடாது; மேலும் மேலும் அவருடைய தகுதி அஃது ஒன்றிலேயே வளரவேண்டும்.

ஆசிரியத் தகுதி பெறுவதற்கு ஆசிரியர் தாம் கற்பிக்கும் பாடத்தில் சிறப்பாக வல்லுநராதல் வேண்டும். பொதுப்படப் பல கற்கவேண்டும். ஆசிரியர் பாடத் தகுதியோடு தமது மாணவர்களை அறிதற்கு வேண்டிய உளநூல் அறிவும் பெற்றிருத்தல் வேண்டும். மாணவர் உள்ளங்களையும் அவர்கள் நடத்தைகளையும் உணர்ந்து அவற்றிற் கேற்பத் தமது கற்பித்தலை நிகழ்த்துதலே முறை. அந்தந்த வயதுக் கேற்பக் கற்பித்தல் நிகழ வேண்டும். பிள்ளைகளின் பருவத்துக்கேற்ப முறைகள் வேறுபடும். எனவே அவற்றிற்கேற்ற பெற்றி கற்பித்தல் நடைபெற்றாலன்றிக் கற்றல் நிகழாது. ஆசிரிய முறை சிறிது வழுவினாலும் பிள்ளைகள் கற்க இயலாது. தகுதியற்ற ஆசிரியர்களால் பிள்ளைகள் கடைத்தேறாது பின்தங்கி விடுகின்றனர். ஒரு மருத்துவர் தவறினால் ஒரு நோயாளியைக் கொல்லுகின்றார். ஆனால் ஆசிரியர் தவறுதலால் இளைஞர்கள் பலருடைய வாழ்க்கையே வழுவிப் போகும். மாணவர்களுக்குக் கற்றுக்கொடுப்பது ஒரு பகுதி என்றால் ஆசிரியர் அறிய வேண்டியது பதின் மடங்காகும். "பாடை ஏறினும் ஏடது

கைவிடேல்" என்பது ஆசிரியருக்கே உரித்தாகும். தனது பாடத்தில் அகலமும் ஆழமும் கொண்ட அறிவினைப் பெற்றுக வேண்டும். அது மட்டுமன்று. ஆசிரிய முறைகளிலும் தேர்ச்சி மிக மிக இன்றியமையாதது. தமது பாடத்தில் வல்லுநராக இருக்கலாம். ஆனால் கற்பித்தற் கலையை அறியாவிட்டால் கற்பித்தல் சிறவாது; கற்பிக்கவும் இயலாது. கற்பித்தல் நிகழ்வதற்குப் பலப்பல முற்போக்கு முறைகளை நன்குக அறிந்திருக்க வேண்டும். ஆசிரியர்களுக்குச் சோதனை உள்ளம் வேண்டற்பாலது. பிள்ளைகளையும் தாம் கற்பிக்கும் பாடத்தையும் இணைக்கும்போது பல கருத்துக்கள் ஆசிரியருள்ளத்தில் பிறக்கும். அவற்றினைச் சோதனை செய்து அவற்றின் தரத்தினை மதிப்பிடலாம். வெறும் பாடப் புத்தகத்தை மட்டும் கையேந்தும் ஆசிரியரும் மாணுக்கரை நோக்காத ஆசிரியரும் ஆசிரியத்தில் மாண்பு பெற இயலாது. மாணவருடைய பல உள்ளங்கள் ஆசிரியருக்குப் பல காட்சிகளை நல்கக் கூடியவை. அவற்றை நவில்தொறும் நவில்தொறும் ஆசிரியத்தில் நயம் பெருகும்; இன்பம் உண்டாகும். அத்தகைய இன்பம் வேறு எந்தத் துறையினருக்கும் கிட்டாது. தாம் கற்பித்த பாடத்தை மாணவர்கள் கற்றுத் தேர்ச்சி பெறுவதால் ஆசிரியர் பெறும் இன்பம் அளவு கடந்தது. பொறுமை, இரக்கம், ஒத்துப்போதல், பற்றற்றநிலை, ஒன்பான் சுவைகள் பொருந்திய பேச்சும் அளவளாவுதலும், தன்னம்பிக்கை, மாணவர்களோடு நல்லுறவு, பெருந்தன்மை, சொல்லிலும் செயலிலும் வேறுபாடின்மை—ஆகியவை ஆசிரியருடைய ஒரு சில குணங்கள். தன்னை அறிந்தவனே அறிந்தான் என்பான் தன் உண்மை என்பது ஆசிரியர்க்கு வேண்டற்பாலது. அடிக்கடி தன்னை மதிப்பிட்டுக் கொள்ளவேண்டும். தம் குறைகளைத் தாம் உணர வேண்டும். தமது குறைபாடுகள் மாணவரிடையே குறைபாடுகளை உண்டாக்கும். எனவே தம்மைத் திருத்திக் கொள்ளுதல் மிக மிக அவசியம். மாணவர்களை உணர்ந்து நடந்துகொள்ளுதல் ஒரு முறை. ஆனால் தன்னைத் தான் அறிந்து பிறகு மாணவரை அறிந்துகொள்ளுதல் தகை சான்றது. ஆசிரியர் நாள்தோறும் தான் செய்தவற்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மனவெழுச்சி சார்ந்த அதையற்ற ஆசிரியர்கள் மனக்களிப்பைப் பிள்ளைகளுக்குப் பயக்க இயலாது. மன அமைதி உள்ளவர்களே பிறருக்கு மன அமைதி தரக்கூடும். ஆசிரியருக்குப் பணிவும் பணிவன்பும் மீதூறத் தமது பணியில் வளங் காண்பது திண்ணம்.

ஆசிரியர் சிலர் தமக்குத் தாமே உறுதிபட நின்று மனவுரம் பெறுவதில்லை. ஒன்றும் அறியாப் பிள்ளைகளிடையே தமது கல்வித் திறமையைக் காட்டிக் காட்டித் திறமையின் தரமறியாதவர்களுடைய கைதட்டலைப் பெற்றுப் பெற்றுத் தனக்குத்தானே நிகரென்று கருதிக் கொள்ளுவது வழக்கம். இதனால் பிறரைக் குறை கூறுவதும், அவர்களுடைய தகுதியில் குற்றம் காண்பதும், அழுக்காறு கொள்ளுவதும் பெருகும்.

உடனுறையாசிரியர்கள் வாழப் பொருத உள்ளப் பாங்கையும் அடிக்கடி வெகுளியும் உண்டாகித் துன்புறுத்துவார்வள். இத்தகைய அசுர குணங்கள் அறவே நீங்கி வாழ்ந்தால் நல்லாசிரியராக விளங்க முடியும். ஒருவரையொருவர் நன்ருக அறிந்து கொண்டு பிள்ளைகளின் நன்மைக்கும் பள்ளியின் பண்புத் தரத்துக்கும் உழைப்பதே சிறந்த பண்பு. ஆசிரியர் கடவுட் பணியாளரென்று கண்டோம்.

> தெளிவு குருவின்
> திருமேனி காண்டல்,
> தெளிவு குருவின்
> திருநாமம் செப்பல்,
> தெளிவு குருவின்
> திருவார்த்தை கேட்டல்,
> தெளிவு குருஉரு
> சிந்தித்தல் தானே !

எனத் திருமூலர் திருமொழி கூறு நிற்கும். தெளிவு என்பது ஞானத்தையும் அதைப் பெறும் முறைகளையும் குறிக்கும். விளக்கம் என்பதும் அதுவாகும். திருமேனியைக் காண்பதும் திருநாமம் செப்புவதும் திருவார்த்தை கேட்பதும் திருஉருவைச் சிந்திப்பதும் ஞானத்துக்கு வழி என்று கூறிய அதனுல்—ஆசிரியனுகிய ஆச்சாரியனை எங்ஙனம் வழுத்த வேண்டுமென்று திருமந்திரம் செப்புகின்றது. இத்தகைய நிலைக்கு நமது ஆசிரியர்கள் உயர இயலுமன்ருே !

நம் பள்ளிகள் ஆசிரியர்களை அமர்த்து முன் எண்ணித் துணிய வேண்டும். பெரும்பாலும் நிர்வாகத்தினர் தலைமையாசிரியரைக் கலவாது உதவியாசிரியர்களை அமர்த்துகிருர்கள். தகுதிகளை மட்டும் கருதி ஆசிரியர்களை வேலைக்கமர்த்தல் ஒரு வழி. தகுதிகளைக் காட்டிலும் அவருடைய ஆளுமைத் திறமும் நல்ல குணத்தின் நற்சான்றுகளும் எல்லாவற்றைக் காட்டிலும் ஆசிரியத் திறமையும் மிகவும் வேண்டற்பாலவை. பல்லாண்டுகளுக்கு முன் ஆசிரியர்களை அமர்த்துவதற்கு முன் தேர்ந்தெடுத்தவர்களை ஒவ்வொரு வகுப்பறைக்கும் அனுப்பிக் கற்பிக்கச் செய்து அவர்களுடைய திறமையைக் கண்டு பிறகு பணியிலமர்த்துவது உண்டு. ஆசிரியப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாயினும் பயிற்சியோடு ஆசிரிய அனுபவம் உள்ளவராயினும் இத்தகைய தேர்வு முறையில் வேலையமர்வு நடைபெறுவது வழக்கம். போட்டிச் சிபாரிசுகளைக் கொண்டு தகுதிகளை ஒதுக்கித் திறமையைக் கருதாது அமர்வு பெறும் ஆசிரியர் பள்ளிக்குப் பயன்பட மாட்டார். ஒரோவழி ஓரிரு திறமையற்ற ஆசிரியர்கள் பணிபுரிந்தாலும் பழுதில்லை. தீநெறி ஆசிரியன் ஒருவன் ஒரு பள்ளியில் நுழைந்து விட்டால் அவன் பள்ளிச் சூழ்நிலையைப் பாழ்படுத்தி விடுவான். நன்னூலார் இலக்கணப்படி ஆசிரியராகாதார் ஆசிரியராதல் பெருந்தீது.

வகுப்பு ஆசிரியர்களும் பாட ஆசிரியர்களும் :

அன்று பாடங்கள் எல்லாம் எண்ணும் எழுத்தும் என இரு வகைத்து. "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும், கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்றதனால் எண்ணும் எழுத்தும் இரண்டு கண்களாகக் கருதப் பெற்றன. எண்ணென்பது இலக்கமாக வும், எழுத்தென்பது இலக்கியமாகவும் தொன்று தொட்டுத் தலையாய வாய்க் கற்பிக்கப் பெற்றன. ஆனால் இன்று பாடங்கள் பலவாகியுள்ளன. ஒவ்வொரு பாடமும் பல பிரிவுகளைப் பெற்று வருகின்றது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஓராசிரியர். அந்த ஆசிரியர் அஃது ஒன்றில் மட்டும் சிறப் பெய்தியவர். அவர் மற்றவற்றை அறியார். பள்ளி நிலைகளில் பாட ஆசிரியர்கள் வேண்டுமா அல்லது எல்லாப் பாடங்களையும் கற்பிக்கும் வகுப்பாசிரியர் வேண்டுமா என்றதோரு வினா எழுதல் கண்கூடு. இதன் படி ஒரு பாட ஆசிரியரை அப்பாடத்தில் பல வகுப்புக்களுக்குப் பொறுப் பாக்குவதும் ஓர் ஆசிரியரைப் பல பாடங்களுக்குப் பொறுப்பாக்குவது மாகிய இருநிலைகள் உண்டு. இதனைப் பலபடியாக ஆராய்ந்துள்ளார் கள். ஒரு பாடத்தில் தேர்ச்சி பெற்றவர் அப்பாடத்தை நன்குகக் கற்றுக் கொடுப்பாரென்பது ஒரு கருத்து. ஆனால் அத்தகைய தனிப் பாட ஆசிரியர் கீழ் வகுப்புக்களுக்கு வேண்டுமா என்பதும் ஆராயற் பாற்று. கீழ் வகுப்புக்களுக்கு அத்தகையோர் வேண்டாமென்று கருது வாருண்டு. கீழ் வகுப்புக்களுக்கு எல்லாப் பாடங்களையும் அதனதன் நிலைக்கேற்பத் திட்டப்படி கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் போதுமானவ ரென்று கருதுகிறார்கள். கீழ் வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அமைந்துள்ள பயிற்சி முறை எல்லாப் பாடங்களையும் கற்பிக்கும் வழி களில் அளிக்கப் பெறுகின்றன. மேலும் பாட அறிவு அந்நிலை ஆசிரியர் களுக்கு வேண்டிய அளவு போதுமானதென்றும் கருதுகிறார்கள். அதனால் தொடக்க நிலையில் வகுப்பாசிரியர்கள் எல்லாப் பாடங்களையும் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று ஒருவாறு அறுதியிட்டுள்ளது. அந்நிலை யின்கண் வகுப்பாசிரியர் பிள்ளைகளை ஒவ்வொருவராக அறியவேண்டிய கடமை உண்டு. ஓரகவைக்கு ஓர் ஆசிரியர் வந்தால் அவர் பாடத்தை மட்டும் கற்பித்துச் செல்லுவதற்கு நேரம் இருக்குமேயன்றிப் பிள்ளை களை அறிந்து அவர்களுக்கு உற்ற முறையில் மீத்திறம் அளிப்பதற்கும் திருத்துவதற்கும் போதிய வாய்ப்பு இராது. அதனால் தொடக்கநிலை வகுப்புக்களுக்கு எல்லாப் பாடங்களையும் கற்பிக்கக்கூடிய வகுப்பாசிரி யர்களும் அதற்கு அப்பாற்பட்ட நிலையில் தனித்தனிப் பாட ஆசிரியர் களும் பொறுப்பேற்றல் நலமென்று கருதுகிறார்கள். மேலும் பல்கலைக் கழகப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் தமது விருப்பப் பாடத்தில் மட்டும் திறமை பெறுவதோடு ஆசிரியக் கல்லூரிகளிலும் அந்தப் பாடத்தில் கற்பிக்கும் பயிற்சி பெறுகிறார்கள். எதுவாயினும் எந்த ஆசிரியரும் அவர் தொடக்க நிலைப் பயிற்சி பெற்றாலும் உயர்நிலைப் பயிற்சி பெற்றாலும் தனது நாட்டமும் விருப்பமுமுள்ள பாடத்தை மட்டுமே

நன்ருகக் கற்பிப்பார். ஆனால் அத்தகையோர் தமது பாடத்தையே பாட ஏற்பாட்டில் முக்கியமென்று கருதி மற்றப் பாடங்களின் முக்கியத்தைக் குறைத்துக் கூறுவது இயல்பு. ஒரு வகுப்புக்குப் பல பாட ஆசிரியர்கள் ஒவ்வொருவராக வந்து சென்ருல் அவரவர்கள் தமக்குரிய பாடத்தை மட்டும் சிறப்பாகக் கூறிப் பிள்ளைகளைக் குழப்பிவிடுவார்கள். பிள்ளைகள் பலரால் ஈர்க்கப் பெற்று அதிகமாகக் குழம்புவார்கள். இதைத் தடுப்பதற்குத் தலைமையாசிரியர் பல பாட ஆசிரியர்களை ஒன்ருகக் கூட்டி ஒருவரோடொருவர் கலந்துகொண்டு வீட்டு வேலை கொடுப்பதையும் தேர்வுகள் நிகழ்த்துவதையும் ஒரு திட்டத்தில் அமைத்துப் பிள்ளைகளுக்கு அதிக இடுக்கண் இழைக்காமல் தடுப்பதுண்டு. ஒரு சில பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்பிலும் அறிவுப்புப் பலகையில் அந்தந்த ஆசிரியர் பிள்ளைகளுக்குக் கொடுத்த பணிகளைக் குறித்து விட்டுச் செல்வார். அதை மற்ருேர் ஆசிரியர் கண்ணுற்று ஏற்றபடி தாம் கொடுக்கும் பணிகளை வேருெரு நாளைக்கு திட்டமிடுவார். இம்முறையில் பிள்ளைகள் அதிகமாகத் துன்புறுத்தப் பெருது ஒரு நேரத்தில் ஒரு பாடத்திற்கு வேண்டிய பணிகளை எளிதாகச் செய்து தேர்ச்சி பெறுவார்கள்.

பாட ஆசிரியர்கள் தமது பாடத்தால் உந்தப் பெற்றுத் தமது பாடம் ஒன்றினையே தலையானதாகக் கொண்டு பிள்ளைகளைக் கவனிக்காது பிள்ளைகளுக்குக் கற்பிக்காமல் பாடத்தை மட்டும் சொல்லிக் கடனைத் தீர்த்துக் கொள்ளுவார். மேலும் அவர்கள் ஒரே பாடத்தினை ஒரு வகுப்புப் பல பிரிவுகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டிய காரணத்தாலும் அல்லது அதே பாடத்தைப் பல வகுப்புக்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டிய காரணத்தாலும் பாடத்தில் சலிப்பும் வேலையில் வெறுப்பும் அவர்களுக்கு ஏற்படுமென்றும் கருதுவதுண்டு. மேலும் ஒரே பாடத்தினைக் கற்பிக்கும் காரணத்தால் கற்பிக்கும் முறையும் ஒரே முறையாக உருவாகிக் கற்பிக்கும் முறை ஓர் எந்திரம் போன்று மாறுவதும் இயல்பு. ஆனால் ஒரோவழி அத்தகைய ஆசிரியர்கள் தமது பாடத்தை மேலும் மேலும் கற்பிப்பதனுல் அதில் மீத்திறம் பெற்று வெகு எளிதாகக் கற்பிக்கும் முறைகளைக் கற்பனை செய்துகொண்டு சிறந்த அனுபவம் பெறுவதும் உண்டு. ஆசிரிய அனுபவம் பெருகப் பெருக ஆசிரியம் மிளிருமன்ருே! அத்தகைய ஆசிரியர் தமது பாடத்தின் தரத்தை உயர்த்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து தமது பாடத்திற்கென ஒரு தனி அறையைப் பெற்றுப் பாடத்தின் காட்சிப் பொருள்களையும் அதனைக் கற்பிக்கும் கருவிப் பொருள்களையும் சேர்க்கப் பிள்ளைகளுக்குத் தனித்த ஒழுக்கத்தினை அளித்தலும் கூடும். தனித்தனிப் பாட ஆசிரியர்கள் தனிப்புலமை பெற்ற காரணத்தால் பிள்ளைகளுக்கு ஒவ்வொரு பாடமும் நன்ருகக் கற்பிக்கப் பெறும். பிள்ளைகளும் பல ஆசிரியர்களுடைய திறனைப் பெறுவார்கள். எந்தப் பாடத்திலும் அவர்களுக்குக் குறை இராது.

வகுப்பு ஆசிரியர் ஒருவரே பல பாடங்களைக் கற்பித்தாலும் பாட ஆசிரியரைக் காட்டிலும் அவர் பிள்ளைகளோடு நாள் முழுவதும் பழகும் வாய்ப்புண்டு. பாடங்கள் மைய முறையில் கற்பிக்கப் பெறுவதால் கீழ் வகுப்புக்களில் பாடச்சுமைகள் குறைவேயாகும். பாடத்தைக் காட்டிலும் பிள்ளைகளுடைய உளவளர்ச்சியை நாள்தோறும் அறிவதே நன்று. பாடத்தின் வேகமும் விருப்பமும் சிறுபிள்ளைகளுக்கு வேண்டியவையல்ல. அவர்கள் பொதுப்பட அறிவைப் பெற்றுத் தமது சூழ்நிலையை அறிந்துகொள்வதோடு பிள்ளைகள் ஒருவரோடொருவர் நன்ருகப் பழகுவதற்குக் கற்றுக் கொள்ளுதலே வேண்டற்பாலது. இளமையில் பிள்ளைகளைத் தனித்தனிப் பாடத்துக்கு அடிமையாக்கிஞல் அவர்களுக்குப் பொதுப்பயிற்சிக் கட்டுப்பாடாவது ஒழுங்காவது தமது ஆசிரியருடைய ஆளுமைப் பண்பாவது பழக்க வழக்க எடுத்துக் காட்டுக்களாவது அறிதற்கிடமிராது. அப்பருவத்தில் அவர்கள்மீது பற்ருேடுள்ள ஆசிரியரோடு பழகுதலே பெருங் கல்வியாகும். பாட ஆசிரியர் அவர்களைப் பாடத்தில் ஈடுபடுத்துவாரே அன்றித் தம்மோடு ஈடுபடுத்த இணங்கமாட்டார். பெரும் பிள்ளைகள் பெரும்பள்ளிகளில் பல பாட ஆசிரியர்களோடு பழகுவதோடு அவர்களால் நன்மை பெறவும் இயலும். ஆஞல் இளமையில் வகுப்பாசிரியர் ஒருவரே ஒவ்வொரு பிள்ளையையும் நன்ருக உற்று நோக்கி அவர்களுடைய உள்ளத்தைத் திருத்துவதோடு மட்டுமல்லாது தமதுள்ளத்தை அவர்களுடைய உள்ளங்களோடு ஒட்ட வைப்பார். பாட ஆசிரியர் தமது திட்டத்தை வற்புறுத்துவார். எல்லாப் பிள்ளைகளும், அவருடைய திட்டத்துக்கு இணங்க இயலாது. எனவே மீத்திறம் பெற்றவர்கள் மட்டுமே பயனுறுவார்கள். மெதுவாகக் கற்பவர்கள் பின்தங்கு வாங்குவார்கள். அவர்களைத் தம்மோடு ஈர்த்துச் செல்ல ஆசிரியர் வேண்டும். ஆஞல் வகுப்பாசிரியர் பிள்ளைகளை உற்று நோக்குபவ ராகையால் அவரவர்களுடைய வேகத்துக்கு விட்டு ஒரு பாடத்தை நன்ருகக் கல்லாதவர்களுக்கு சில அகவைகளை அவருக்கு உரிய தாக்கி அரிய பாடத்தை நீட்டித்தும் எளிய பாடத்தைக் குறுக்கியும் எல்லாப் பிள்ளைகளையும் தம்மோடு ஈர்த்துச் செல்லுவார். மீத்திற முள்ள பிள்ளைகளுக்கும் அவர்களுக்குக்கேற்றவாறு தனித் தனிக் குழுக் களாகப் பிரித்தும் கற்றுக்கொடுக்கலாம். அல்லது வேகமாகக் கற்கும் பிள்ளைகளை மெதுவாகக் கற்கும் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கும் வாய்ப்பளித்து அவர்களுக்கு அதிகத் திறமையையும் அளிக்கலாம். அவரவர்களுக்கு ஏற்றவாறு பாடங்களை வகுக்கலாம். அவரவர் களுடைய வளர்ச்சியைத் தனித்தனியாக அறிந்து ஏற்றவாறு உதவியும் அளிக்கலாம். பாட ஆசிரியர்கள் கற்பிப்பதால் பிள்ளைகள் இரண்டு மூன்று பாடங்களில் மட்டும் தேர்ச்சி பெற்று மற்ற பாடங்களில் குறை வுறுகிருர்கள். ஒரு வகுப்பில் தொடங்கும் இக்குறைபாடு பிள்ளையின் கல்விக் காலம் முழுவதும் நீடிக்கின்றது. இதஞல் இறுதித் தேர்வுகளில்

அத்தகைய பிள்ளைகள் தவறிவிடுகிறார்கள். ஒருபடித்தான வளர்ச்சி ஏற்படாதொழிகின்றது. வகுப்பாசிரியர் பல பாடங்களைக் கற்பிப்பதால் வேலையில் வெறுப்புக் கொள்ளுவாரெனக் கருதக்கூடாது. அவர் ஒரே பாடத்தைக் கற்பிக்காது பல பாடங்களைக் கற்பிப்பதால் அவருடைய வேலையில் வேறுபாடு நிகழ்ந்துகொண்டே உள்ளது. அதனால் அவர் நிலையாக ஒரு வகுப்பில் இருத்தலால் நன்றாகத் தாமறிந்த பிள்ளைகளுக்கு நல்ல முறையில் எப்பாடத்தையும் கற்பிக்க இயலும். அவரிடத்தில் சமநிலை காணப்பெறும், பாட உயர்வு தாழ்வு இராது. பிள்ளைகளும் சம நிலையில் பாடத்தேர்ச்சி பெறுவார்கள். வீட்டு வேலை கொடுப்பதிலும் தேர்வுகள் நடத்துவதிலும் வகுப்பாசிரியர் பிள்ளைகளுடைய நாட்டத்தையும் விருப்பையும் நாடி அவர்கள் வெறுப்புறா வண்ணம் வகுத்துக்கொடுப்பார். கால அட்டவணைச் சிக்கல் வகுப்பாசிரியர் முறையில் கிடையாது. ஒரு நாளைக்குள்ள ஏழு அகவைகளுக்கும் ஏழு பாடங்கள் இருந்தாலும் நேரத்தைப் பகிர்ந்து கொள்ளுவதற்கு வகுப்பாசிரியருக்கு உரிமை உண்டு. பிள்ளைகளுடைய நாட்டமும் கவர்ச்சியும் எப்பாடத்துக்கும் தேவையாதலால் அவற்றைக் கடைப்பிடித்துப் பிள்ளைகள் விரும்பும் பாடத்தை நடத்த வகுப்பு ஆசிரியருடைய உரிமை பெரிதும் விரும்பத் தக்கது. ஆண்டு முழுவதும் வகுப்பாசிரியர்க்குத் தொடக்க முதல் இறுதி வரையில் ஈடுபாடு இருக்கும் காரணத்தால் ஒவ்வொரு பிள்ளையின் வளர்ச்சி வரலாற்றினை வகுப்பாசிரியர் ஒருவரே நன்றாகக் கூற இயலும். வகுப்பிலிருந்து வகுப்புக்கும் ஒரு வகுப்பின் ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவுக்கும் தாண்டிக் கொண்டே செல்லும் பாட ஆசிரியர் பிள்ளைகளை அறிதல் அரிது. ஆயினும் பெரிய வகுப்புக்களிலும் சிறிய வகுப்புக்களிலும் ஒரோவழி ஆசிரியர்கள் மாறி வருவது பிள்ளைகளுக்கு நல்லது. ஒரே வகுப்பில் அமர்ந்திருக்கும் ஆசிரியர் ஒரே வகையான பணியைச் செய்து களைத்து விடுவார். பிள்ளைகளுக்கும் அத்தகைய களைப்பு உண்டாவது இயல்பு. பிள்ளைகளைப் பல ஆசிரியர்கள் கண்ணுற்றால் அவர்களைப் பற்றிப் பலப்பல கருத்துக்களைக் கொள்ளுவார்கள். ஒரு மாணுக்கனைப்பற்றி ஓராசிரியர் கொள்ளும் கருத்து மற்றோர் ஆசிரியர் கொள்ளுவதோடு வேறாகலாம். கருத்து வேறுபாடு கொள்ளுதல் நல்லதே யன்றித் தீதன்று. ஓராசிரியர் ஒரு முறை ஒரு கருத்தைக் கொண்டால் அதை மாற்றாது அதன் அடிப்படையிலேயே புதிய கருத்துக்களையும் கொள்ளுவார். பிள்ளைகளின் ஆளுமைத் திறன்களை மதிப்பிடுவதற்குப் பலருடைய கருத்துக்களே நல்லவை. எனவே ஓராசிரியரைக் காட்டிலும் வேறுபட்ட ஆசிரியர்கள் பிள்ளைகளோடு பழகுவது நல்லது. ஆனால் ஒவ்வோர் ஆசிரியரும் ஓர் எடுத்துக் காட்டாக விளங்க வேண்டியது இன்றியமையாதது.

13. தணிக்கையாளர்கள்

எல்லாவகைப் பள்ளிகளும் அரசாங்கத்துக் கல்வித் துறையினரிட மிருந்து ஒப்புதல் பெற்றிருந்தாலன்றி மானியம் பெறுவதில்லை. மானியம் பெறும் பள்ளிகள் கல்வித்துறை ஒழுங்கு முறைப்படி நடை பெற வேண்டும். எனவே கல்வியாளர்களான தணிக்கையாளர்கள் ஆண்டுக்கு ஒரு முறையாவது ஒவ்வொரு பள்ளியையும் சுற்றிப் பார்த்து அதன் நடைமுறையை மதிப்பிட்டு அறிக்கை அளிப்பது வழக்கம். ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமல்லாது திடீர் என்று எப்போதும் தணிக்கை அதிகாரிகள் பள்ளிக்குள் நுழைந்து பார்வை யிடுவதற்கு அதிகாரமுண்டு. ஒவ்வொரு பள்ளியைப் பற்றியும் அவர்கள் தயாரிக்கும் அறிக்கை பள்ளியின் தரத்தை அதிகார பூர்வமாக எடுத்துரைக்க வல்லது. இத்தகைய கண்காணிப்பு நன்மையே அளித் துள்ளது. ஆண்டுத் தணிக்கையைப் பற்றிச் சுற்றறிக்கை பெற்றவுடன் பள்ளி ஆசிரியர்களும், தலைமையாசிரியரும் நடுக்கமுறுவதுண்டு. வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் தணிக்கையாளர்கள் இட்டது சட்டமாக இருந்தது. இவர்கள் மனத்தை நிறைவு செய்தாலன்றி ஆசிரியர்கள் பள்ளியில் வாழ முடியாது. தணிக்கையாளர் தலையை அசைத்தாலும் புன்னகை பூத்தாலும் போதும். அவர் முன்னர் கற்பிக்கும் ஆசிரியர் களுக்கு உள்ளத் துடிப்பு ஒருவாறு அமைதி பெறும். அங்ஙனமே தலைமையாசிரியர் தனது பணிகளில் குற்றம் கண்டறியாதபடி தப்பித் துக்கொள்ள முயலுவார். தணிக்கையாளர்கள் சிலர் ஒவ்வோர் ஆசிரியரையும் அவர் சொல்லிக்கொடுக்கும் ஒவ்வொரு பாடத்தையும் கண்காணிப்பதுண்டு. அன்னார் மிக்க விழிப்போடு ஒவ்வோர் ஆசிரியரது குறை நிறைகளைக் கண்டறிவார்கள். தணிக்கை யாளர்கள் இறுதியில் பயிற்றுமுறைத் தரங்களைப்பற்றித் தாம் குறித்த வற்றை எடுத்துக் கூறிக் குறைகளை நீக்க வழிகளை மிகத்திறமையோடு பயனுறும்படி எடுத்துக் கூறுவார்கள். அத்தகைய கல்வி அதிகாரிகள் உண்மையாகவே பல திறம் பெற்றவர்கள். குறைபாடுகளை மட்டும் கூறிச் செல்லாது அந்தந்தப் பள்ளிக்கு ஏற்ப வழிபாடுகளையும் உடனடி யாக வகுத்துக் கூறும் ஆற்றல் பெற்றவர்கள். அத்தகையோரை ஆசிரியன்மார்கள் போற்றுவதும் பாராட்டுவதும் உண்டு. ஆசிரியர்கள் தமது திறமையைப் பற்றித் தணிக்கையாளர்களிடமிருந்து பாராட்டுதல் பெறுவதற்கு விழைவார்கள். பாராட்டுப் பெற்றுவிட்டால் மேலும் ஊக்கத்தோடும் ஆர்வத்தோடும் தமது பணியாற்றுவதுண்டு. தணிக்கையாளர் ஆசிரியத்திலும் பள்ளி நிர்வாகத் துறையிலும் சிறந்தவராக இருந்தார். அவர் முதிர்ந்த அனுபவம் பெற்றவராகவும் இருப்பர். கல்வி ஏற்பாட்டில் சிறந்தவர். ஒவ்வொரு பள்ளியின்

சூழ்நிலைக்கேற்ப கற்பித்தல் முறைகளையும் கற்றல் நிலைகளையும் தலைமையாசிரியரோடு கலந்து வகுத்து உதவக்கூடிய திறமை உள்ளவர். பள்ளி நிர்வாகத்தில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வழிவகை கூறக்கூடிய ஆற்றலுடையவர். தன் பார்வையிலுள்ள பள்ளிகள் ஒவ்வொன்றினைப் பற்றியும் நன்ருக அறியக்கூடியவர். அதனதன் தரத்தை மதிப்பிட்டு அவ்வவற்றிற்கு ஏற்ற அரசாங்க உதவிகளைப் பெற்று அளிக்கக்கூடியவர். பள்ளிக் கட்டடம், மரச் சாமான்கள், கற்பித்தலுக்கு வேண்டிய துணைப்பொருள்கள் ஆகிய வற்றின் தேவைகளை வேண்டுதல் வேண்டா என அறுதியிட்டு ஆணை பிறப்பிக்கக் கூடியவரும் அவரே. ஆசிரியர்களுடைய தகுதிகளையும் அளவிட்டுப் பதவிக்கு உரியவர் உரியவரல்லர் எனச் சொல்லக்கூடிய வரும் அவரே. அவரால் தகுதியற்றவர் என்ற ஆசிரியர் பணியாற்ற இயலாது. தலைமையாசிரியரும் தமது நிர்வாக ஆற்றலின் மதிப்பினை ஆண்டுதோறும் அவரிடமிருந்து பெறுதல் வேண்டும். பொதுவாகப் பள்ளியின் முற்போக்கு பிற்போக்குகளைக் கண்டறிந்து அதன் பொதுத் தரத்தையும் மதிப்பிட்டு அறுதியிடுவதற்கும் அதிகாரம் உண்டு.

ஆண்டுத் தணிக்கை அரசாங்கத் தணிக்கையாளர்களால் வேண்டுமா என்று கேட்பார் உளர். உடனடியாக இது வேண்டற் பாலது என்று கூறிவிடலாம். இன்று நமது நாட்டில் கல்விச் சாலைகள் பெருகிக்கொண்டே வருகின்றன. மேலைய நாடுகளைப் போன்று நமது நாட்டிலும் எல்லாப் பிள்ளைகளும் வேறுபாடின்றிப் பத்தாண்டுகள் கட்டாயமாகவும் இலவசமாகவும் கல்விபெற்று நாட்டின் குடியாட்சியைச் செப்பமுறச் செய்யவேண்டும் என்ற பொறுப்புள்ளது. அதன் வழியே ஐந்தாண்டுத் திட்டங்கள் அடிகோலுகின்றன. புதிய பள்ளிகளில் பணி யேற்கும் ஆசிரியர்களும் தலைமையாசிரியர்களும் அனுபவம் அற்றவர் களாவார்கள். அதனுல் அனுபவமும் பொறுப்பும் உள்ள தணிக்கை யாளர்கள் பள்ளிகளின் வளர்ச்சியைப் பாங்குறச் செய்வதற்கு வேண்டும். அவர்கள் அடிக்கடி புதிய பள்ளிகளுக்குச் சென்று கண் காணிக்க வேண்டும். ஆசிரியர்களோடு அடிக்கடி கலந்து ஆசிரியத் தரத்தை உயர்த்த வேண்டும். தலைமையாசிரியர்களும் அனுபவம் அற்றவர்களாக இருப்பார்களாகையால் உதவி ஆசிரியர்கள் ஒவ்வொரு வரும் மீத்திறம் பெற்றவர்கள் என்று கருதிக் கொண்டு உண்மை யாகவே தலைமையாசிரியர் வகுக்கும் திட்டங்களை ஆர்வத்தோடு நடை முறையிற் செய்யமாட்டார்கள். இன்றைய தலைமையாசிரியர்கள் தமது வளத்தால் உயர்வு பெற்ருலன்றி அவர்களுக்குப் பதவித் தகுதி இன்றைய நிலையில் இல்லை. எனவே ஆசிரியர்கள் கண்காணிப்பு இருந்தாலன்றித் தமது பொறுப்பினை வளர்த்துக்கொள்ள வாய்ப்பிராது. அதனுல் பிள்ளைகள் நன்மையின் பொருட்டும், பள்ளியின் முற் போக்கின் பொருட்டும் தணிக்கையாளர்களுடைய மேற்பார்வை அடிக் கடி இருத்தல் பள்ளிக்கு நலமாகையால் ஆசிரியர்களுக்கும் நலமாகும்.

அதனால் பிள்ளைகளுக்கும் நலமுண்டாகிறது. அவர்களை நன்மாணாக்க ராக்கவும் உதவும். எனவே ஆசிரியத் தரம் உயர்ந்தால் கற்றல் திறன் உயரும். ஆசிரியர்களுடைய படைப்பாற்றல் பெருகினால் மாணாக்கர் களுக்கு நன்மை உண்டாகும். எனவே தணிக்கையாளர், பிள்ளை களுடைய கற்றல் நிலைகளையும் ஆசிரியர்களுடைய கற்பித்தல் திறனை யும் அப்போதைக் கப்போது மதிப்பிட்டுக் குறைகளைத் திருத்தியும் நிறைகளைப் பாராட்டியும் ஊக்க மூட்ட வேண்டியது கடமை. பள்ளி யைப் பார்வை யிட்டாலன்றிப் பள்ளிக்கு வேண்டிய பொருள்கள், கட்டட வசதிகள் துணைப் பொருள்கள் ஆகியவற்றின் தேவைகளை அறிந்து ஆவன செய்ய இயலாது. எனவே தனிப்பட்ட முறையில் ஆசிரியர்களை யும் தலைமை ஆசிரியர்களையும் குழுக்களாகக் கூட்டியும் மாநாடுகளாகத் திரட்டியும் அவர்களுக்கு வேண்டிய தொழிலார்வத்தையும் ஊக்கத்தை யும் அளித்து அவர்களுடைய பள்ளிச் சேவையைப் பாங்குறச் செய்ய வேண்டிய கடமை தணிக்கையாளர்கட்கு உள்ளது.

தணிக்கையாளர்கள் வெறும் அதிகாரத்தை மட்டும் செலுத்திக் குற்றங்களைச் சுட்டிவிட்டால் மட்டும் ஆக்கத்துக்கு வழி வகுக்க இயலாது. குறைகள் தீர்வதற்கு அந்தந்தப் பள்ளி ஆசிரியர்களோடு தமது ஆலோசனைகளை அலசிப்பேசிச் செய்ய வேண்டியவற்றை அறுதி யிடுதல் வேண்டும். தணிக்கை அறிக்கையில் மட்டும் வரைந்து விட்டால் அவற்றைப் படிக்கும் ஆசிரியர்கள் குறைகளைத் தீர்த்துக் கொள்ளுபவர்களைப் போலப் பாவனை செய்வார்களே அன்றி உள்ளத்தில் உள்ளித் தொழில் உணர்ச்சியோடு குற்றத்தைக் களைய முற்படுவதில்லை. தணிக்கை அறிக்கையிலுள்ள பாராட்டுதல்களை மட்டும் பறைசாற்றிக் கொள்ளுவார்கள். பெரும்பாலும் அவர்களுடைய வீரமெல்லாம் இத னோடு நின்றுவிடும். அதனால் தணிக்கையாளர்கள் தணிக்கை முடிந்தவுடன் தாம் கண்டனவற்றைத் தட்டிப்பேசி ஆசிரியர்களுக்கு அவர்கள் செய்யவேண்டியவற்றை அறிவுறுத்தி அவர்கள்பால் அரசாங்கம் எதிர்பார்ப்பதை எடுத்துரைக்க வேண்டும். தணிக்கை யாளர்கள் சிலர் தமது அனுபவ மிகுதியால் தங்கு தடையின்றிப் பள்ளி யில் தாம் கண்டவற்றைப் பாராட்டியும் கடிந்தும் பேசுகிறார்கள். அதனால் ஆசிரியர்கள் நன்மையுறுவதுண்டு. பள்ளியும் ஒழுங்காக நடைபெறும். ஆனால் தணிக்கையாளர் ஆசிரியப் பண்புகள் மிக்க வராகவும், தணிக்கைத் திறம் பெற்றவராகவும், ஆசிரியத்தில் மேம் பாடுற்றவராகவும் இருத்தல் வேண்டும். திறமையுள்ள தணிக்கை யாளர் கடுமையானவராயினும் அவரை ஆசிரியர்கள் பாராட்டு வதோடு புகழ்வார்கள். அவர் மொழிகளைப் பொன்னே போல் ஏற்றுக் கொள்ளுவார்கள். வெறும் அதிகாரமும் ஆரவாரமும் மட்டும் உள்ளவர்களை வெறுப்பார்கள். தணிக்கையாளர் ஒரு சிலர் வகுப் பறையில் சிறிது நேரம் கற்பிப்பதுண்டு.

புதிதாகத் தொடங்கும் தணிக்கையாளர் திறமையற்றவராயினும்

ஆசிரிய நாட்டம் மிக்குற்றவராய் இருந்தால் ஒருசில ஆண்டுகளில் பல பள்ளிகளைப் பார்வையிடுவதால் தனது தகுதியையும் அனுபவத்தையும் உயர்த்திக் கொள்ளக்கூடும். பலதரப்பட்ட பள்ளிகளுக்குச் செல்லு வதால் அவர் மீத்திறம் பெறுவது உண்மை. நல்ல பள்ளிகளில் காண் பனவற்றைப் பிற பள்ளிகளுக்கு உரைத்து உதவுதல் நலம். சில பள்ளி களில் மீத்திறம் பெற்ற ஆசிரியர்கள் சோதனை முறைகளால் புதிய முறைகளைக் கையாண்டு இவற்றில் வெற்றி காண்பார்களானால் அன்னா ருடைய முறைகளை மற்றவர்களுக்கு அறிமுகப் படுத்தி, அவர்களும் அங்ஙனம் செய்யுமாறு ஊக்குதல் வேண்டும். இங்ஙனம் செய்வதால் ஆசிரியர்கள் தமது ஒரே பழக்கத்தில் வந்த பழைய முறையை விட்டுப் புதிய முறைகளைப் பற்றி சிந்திப்பதோடு, தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டு புதிய முறைகளை வகுத்துக் கொள்ளுவார்கள்.

நமது குடியாட்சித் தணிக்கையாளர்கள் புதியதோர் உறவோடு பள்ளிகளைத் தணிக்கை செய்கின்றார்கள். அயலார் ஆட்சிக் காலத்தைப் போன்று அவர்கள் கடுமையாக நடந்து கொள்ளுவதில்லை. தணிக்கை நாட்களில் ஆசிரியரோடும் தலைமையாசிரியரோடும் தோழமையோடு தொண்டாற்றுகின்றார்கள். இன்று பள்ளித் தணிக்கை யென்றால், அன்றுபோல் ஆசிரியர்கள் நடுக்கமுறுவதில்லை. தணிக்கையாளர்களைப் புன்னகையோடு வரவேற்கின்றார்கள். அவர்கள் முன்னர் வகுப்பறை யில் பாடங்களைக் கற்பிக்கின்றார்கள். தணிக்கையாளர்களும் அவர்கள் மீதுள்ள குறைகளை நேர்முகமாகச் சுட்டுவதில்லை. தணிக்கை அறிக்கை களில் நேரல் முறைகளில் ஆசிரியர்களுடைய பெயர்களிலல்லாது பாடங்களின் தலைப்பில் குறைகளைப் பொதுப்படச் சுட்டுவதும் அதைத் தீர்க்க வழிகாட்டுவதும் வழக்கமாகி விட்டது. பள்ளியின் பல குறிப் பேடுகளை அவருடைய அலுவலகத்தினர் முழுவதும் பார்த்துத் திறனாய்ந்து விடுகிறார்கள். பள்ளிக் கணக்குகளைத் தனித் தணிக்கை யாளர் திருத்தமுறப் பார்த்து விடுகிறார். அதனால் பள்ளித் தணிக்கை யாளர் பொதுப்பட்ட முறையில் பள்ளிகளின் நலனுக்காக ஆங்காங்கே தமது ஆலோசனையைக் கூறி உதவியும் அரசாங்கக் கல்வித் திட்டங்களை வற்புறுத்தியும் கல்வி ஏற்பாடுகளை ஆசிரியர்களிடையே பரப்பியும் கல்வியின் முற்போக்கினை நாடுகின்றார். ஆசிரியர்கள் அவரைத் தமது தொழில் தலைவராகக் கருதுகிறார்கள்.

கல்வித் தணிக்கையாளரோடு கல்வி முன்னேற்றத்திற்காக ஒத்துழைக்கக் கூடியவர்கள் ஆசிரியர்களே யாவர். ஆசிரியர்களுடைய உள்ளத்தே எழும் ஊக்கமின்றி எந்தக் கல்வித் திட்டத்தையும் செயல் படுத்த முடியாது. எனவே தணிக்கையாளர் ஆசிரியரோடு தோளோடு தோள் ஒன்றி எதையும் தொடங்கவேண்டும். தமது பதவி இறுமாப் போடு எட்டி நின்றால் ஆசிரியர்கள் அவரை எட்டிக்காயாக எண்ணுவர். தோழமை பூண்டும் தொண்டாற்றியும் தணிக்கையாளர்கள் இன்று பணியாற்ற வேண்டியதாகிறது. சென்னைப் பல்கலைக் கழகம் 1937-ஆம்

ஆண்டில் பள்ளித் தணிக்கைகளைப் பற்றிப் பரிசீலனை செய்தபோது பொதுப்படப் பள்ளி நிர்வாகத்தைக் கண்காணிப்பதற்குத் தணிக்கையாளர் வேருகவும் தனித்தனிப் பாடங்களுக்குத் துறைபோய தணிக்கையாளர் வேருகவும், அந்தந்தப் பாட ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக ஏற்படுத்த வேண்டுமென்று எடுத்துரைத்துள்ளார்கள். இம்முறையில் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. எல்லாத் தணிக்கையாளர்களும் பள்ளியின் எல்லாப் பாடங்களிலும் வல்லுநர் அல்லராகையால், தனித்தனிப் பாடத்துக்கு வழி காட்டிகள் வேண்டப் பெறுகிருர்கள். இங்ஙனம் பாடத் தணிக்கையாளர்கள் தனி ஒவ்வொரு பாடத்தையும் நன்கு கவனித்தால் பாடம் கற்பித்தலின் தரம் உயர்வுறும் என்பதில் ஐயமில்லை. தனித்தனிப் பாட ஆசிரியர்கள் தமது ஐயங்களை நீக்கிக் கொள்ளுவதோடு புதிய கற்பித்தல் முறைகளையும் கற்றுக்கொண்டு பிள்ளைகளுக்கு அவற்றின் நலன்களை அளிப்பார்கள். மேலைய நாடுகளில் தணிக்கையாளர்கள் பள்ளி நிர்வாகத்திற்கும் பள்ளிக் கல்வி சார்புற்ற ஆசிரியப் பணிகளுக்கும் வேறு வேருக கண்காணிப்பாளர்கள் உள்ளார்கள். அமெரிக்காவில் இருதிறத்தார் உண்டு. இங்கிலாந்து தேசத்தில் தணிக்கையாளர்கள் பள்ளிகளுக்கு வழிகாட்டியாக விளங்குகிருர்கள். ஆசிரியர்களுக்கு ஆலோசகர்களாகவும் அவர்களுடைய திறமையை உயர்த்துவதற்கு வழி வகுப்போராகவும் கல்வியின் பல பொருள்களைப்பற்றி அப்போதைக்கப்போது அவர்களுக்கு அறிமுகப் படுத்துவோராகவும் பணியாற்றுகின்றனர். இங்ஙனம் இருதிறத்தாரை நமது நாட்டில் பணியிலமர்த்துவதற்குப் பணச் செலவு அதிகமாகுமென்று அரசாங்கங்கள் கருதலாம். ஆனல் கடந்த ஏழாண்டுகளாக மத்திய அரசாங்கத்தார் ஆதரவில் நாடு முழுவதும் ஆங்காங்கே ஆசிரியக் கல்லூரிகளோடு ஒரு [1] விரிவுப் பணித்துறை இணைக்கப் பெற்றுள்ளது. அதன் வழியாக மாவட்டங்களிலுள்ள பள்ளிகளும், ஆசிரியர்களும் நலனடையும் பொருட்டுப் பல பணிகள் ஒப்படைக்கப் பெற்றுள்ளன. அத்தகைய ஆரிசியக் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்கள் தமக்கென வகுத்துள்ள வட்டத்துப் பள்ளிகளோடு நல்லுறவு கொண்டு ஆசிரியர்களோடும் நட்புக்கொண்டு அவர்களுக்கு வேண்டுவனவற்றை அறிந்து இயன்ற வரையில் கருத்துதவி செய்தல் அவர்கள் கடமை. அங்ஙனமே பாட ஏற்பாட்டின் பொறுப்புக்களையும் ஓதல் முறைகளையும் தமது கல்லூரிகள் அவர்கள் மூலம் ஏற்றுக் கொண்டால் திறமையோடு பணிபுரியலாம். தணிக்கையாளர்கள் பள்ளி ஒழுங்கு முறைகளையும் நிர்வாகத்தின் பணிகளையும் தணிக்கை செய்யலாம். ஆசிரியக் கல்லூரிப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் தத்தமது பாடங்களில் தேர்ச்சி பெற்றவர்களாகையாலும் ஓதல் முறைகளைப் பலபடியாக அறிந்தவர்களாகையாலும் அவர்களுடைய அனுபவம் பள்ளிகளுக்குப்

1. Department of Extension Services.

பயன்படுவது நல்லது. பள்ளி ஆசிரியர்கள் அவர்களோடு உறவாடிப் பழகுவதால் அடிக்கடி புதிய உணர்வுகளைப் பெறுவார்கள். பாடங்களைப் பொறுத்த வரையில் ஆசிரியக் கல்லூரிகள் தலைமை ஏற்பது சாலச் சிறந்தது.

பள்ளித் தணிக்கைகளை இங்ஙனம் இரு கூறாகப் பிரித்தால் மேற் பார்வையை அரசாங்கத் தணிக்கையாளர்களிடத்து அதிகார பூர்வமாக ஒப்படைத்தலே நல்லது. நம் பள்ளி ஆசிரியர்கள் அரசாங்க உத்தர வின்றி அசைவதில்லை. அல்லது அரசாங்கம் ஆசிரியக் கல்லூரிகளி லுள்ள விரிவுப் பணித்துறைகளில் ஆண்டுக்கு ஒரு முறையாவது ஆசிரியர்கள் தத்தம் பாடங்களிற் புதிய தகுதிகளைப் பெற்றாலன்றி ஊதிய ஏற்றம் பெற இயலாதென்ற திட்டம் வகுத்தால் ஒரோவழி ஊக்கம் பெறுவார்கள். ஆசிரியத் தரம் உயருவதற்கு இதுவே முறை. அரசாங்கத் தணிக்கையாளர்கள் விரிவுப் பணித்துறையோடு தொடர்பு கொண்டு ஆசிரியர்களை ஊக்க வேண்டியது அவசியம். உயர் நிலைக்கல்வித் தலைமை தாங்குவதாலும், பொறுப்பேற்றுள்ளதாலும், அவ ருடைய அதிகாரத்துக்கு ஆசிரியர்களும் தலைமையாசிரியர்களும் நிர்வா கத்தினரும் பணிவார்களாகையால் மாவட்டத் தணிக்கையாளருக்கு இப்பொறுப்பினை அரசாங்கம் அளிக்க வேண்டியது கடமை. பள்ளித் தணிக்கையின்போது குறைபாடுள்ள ஆசிரியர்களை விரிவுப் பணித் துறையில் குறைகளை நீக்கிக் கொள்ளுவதற்கு அனுப்புதல் வேண்டும். இங்ஙனம் செய்வதால் பயனற்ற முறையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் திருத்தம் பெறுவார்கள். பள்ளிகளின் நிர்வாகத்தைப் பற்றியும் ஆலோ சனை கூறுவதற்கு விரிவுப் பணித்துறைகள் உதவலாம். எனவே தணிக் கையாளர்களுடைய பணிகள் பயனுறுவதற்கும் உயர்நிலைக்கல்வி உயர்வு பெறுவதற்கும் அரசாங்க பூர்வமாக ஆசிரியக் கல்லூரிகள் உதவி புரிய வேண்டும். ஆசிரியக் கல்லூரிகளும் தமது புதிய பொறுப்பினைச் சரிவர இயற்றுவதற்குத் தமது தரத்தினை உயர்த்திக் கொள்ள முற்படுமென்பது திண்ணம். ஆசிரியப் பயிற்சி பெறுபவரோடு ஆசிரியத் துறையில் உள் ளோர்க்கும் நன்முறையில் பயனுறுத கல்லூரிகள் இருத்தலில் இராமை நன்று. தணிக்கையாளர்களுடைய ஆர்வமன்றோ பள்ளிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் வேண்டற்பாலது! கல்வியின் முற்போக்குக்கு உயிர் நாடியாக உள்ளவர் அவரே. அரசாங்கக் கல்வித் துறைக்கும் கல்வி நிலையங்களுக்கும் இடையே ஒரு நடுவிடத்தை அவர் பெற்றுள்ளார். அவர் பள்ளிகளின் நன்மையை நாடிப் பல உதவிகளை அரசாங்கத்தி லிருந்து பெற்று உதவலாம். அவருடைய ஒழுக்க முறைகளினின்றும், அவருடைய அலுவலக ஒழுங்கினின்றும் பள்ளி ஆட்சி முறைகளை நன் ருக அறிந்து கொள்ள முடியும். பள்ளிகளெல்லாம் மாணவர்களை நோக்கி நடைபெறுகின்றன. எனவே பள்ளியாட்சி எவ்வகையானும் அவர்களுக்கு நன்மை பயப்பதாயின் அதனை நல்லாட்சியாகக் கருது தல் வேண்டும். தணிக்கையாளர் சிலர் சூழ்நிலை எதுவாயினும் அர

சாங்கக் கோட்பாடுகளுக்கு வழுவிய பள்ளிகளின் மீது சினங் கொள்ளு கிறார்கள். எந்தச் சூழ்நிலையில் கோட்பாடுகள் வழுவப் பெற்றன என் றறிந்து பள்ளியின் பொது நன்மையை முதன்மையாக்கிச் சிறிய வழுக் களைப் பெரிதாக்கினால் தலைமையாசிரியருடைய ஆற்றல் குறைவுறும். எனவே பள்ளி நிர்வாகத்தினைத் திறனாய்வு செய்யும்போது தணிக்கை யாளர்கள் ஒருமுகமாக மதிப்பிடாது தலைமையாசிரியரோடு கலந்து அறிந்துகொண்டு மதிப்பிடுதல் நல்லது. ஆசிரியர்களுடைய கருத் தினை முதலில் பெற்றுப் பிறகு தமது கருத்தினை வற்புறுத்தாது அவர் களுடைய சிந்தனைக்கு விட்டுவிடவேண்டும். தணிக்கையாளர் எவரும் எல்லாம் தெரிந்தவரல்லர். குற்றம் காண்பது எளிது. ஆனால் குற்றத் துக்குத் திருத்தம் கூறுவது கடினம். எக்காரணத்தாலும் தவற்றை தவறென்று கூறாது சரியென்று சொல்லுவது சரியாகாது. பள்ளி ஒழுங் காக நடைபெற வேண்டும். பிள்ளைகளிடையே ஒழுக்கங்கள் வளர வேண்டும். கல்வி நலனைக் காக்கவேண்டும். முற்போக்கினைத் தேட வேண்டும். தணிக்கையாளர்கள் இத்தகைய பொறுப்புக்களுக்குத் தயங்கக் கூடாது. தணிக்கை அறிக்கைகள் மட்டும் செலுத்துவது அவர்கள் கடமையன்று. அவர்களைக் கல்வித் துறையின் கண்களென் றும் செவிகளென்றும் சொல்லுவதுண்டு. இவ்விரு புலன்களோடு அவர்கள் தமது உள்ளங்களை நாட்டின் நன்மைக்காகப் பள்ளிகள்பால் செலுத்த வேண்டும். பள்ளிகள் பொது நலனைக் கருதிப் பணியாற்று கின்றன. அதனால் அவை பொது மானியங்களைப் பெறுகின்றன. பொது மானியங்கள் நல்ல முறையில் செலவாக வேண்டும். பொது மக்கள் பள்ளிப் பயன்களைக் கண்கூடாகக் காண வேண்டும். இதனால் பெற்றோர் சங்கங்களோடும் மாநில ஆசிரியக் கழகங்களோடும் தொடர்பு கொள்ள வேண்டும். கல்விக் கருத்தரங்குகளில் பங்கு கொள்ள வேண் டும். கல்வி மாநாடுகளில் கலந்துகொள்ள வேண்டும். பள்ளி ஆண்டு நிறைவு விழாக்களில் தம்மை அறிமுகப் படுத்திக் கொள்ளுதலும் நன்று. பெரும்பாலும் பொது மக்களும் பெற்றோர்களும் மாவட்டக் கல்வி அதிகாரி, தாம் கூறும் குறைகளை ஏற்றுக் கவனிப்பவர் என்றே கருதுகின்றார்கள். ஆசிரியர்களையும் தலைமையாசிரியர்களையும் தண் டிக்கும் அதிகாரி என்றே கொள்ளுகிறார்கள். • உடன்பாட்டு முகத்தான் அவரோடு ஒத்துழைத்துப் பள்ளிகளுக்குப் பல நன்மைகளை அவர் இயற்றலா மென்ற எண்ணம் கொள்ளுவதில்லை. இற்றை நாட்களில் மத்திய உணவுத் திட்டத்திலும், பள்ளிச் சீரமைப்பு முயற்சியிலும் தணிக்கையாளர்கள் பெரும் பங்கு கொள்ளும் காரணத்தால் ஒரோவழி ஆசிரியர்களுடைய கூட்டத்தில் பொதுமக்களோடு ஈடுபாடு பெறுகிறார் கள். கல்வித் திட்டங்களை வகுப்பவர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் இடையே உள்ள இடைவெளியை நிரப்புபவர் தணிக்கையாளர். தணிக்கையாளர்களுடைய ஆற்றலின்றிப் பள்ளிகளில் எந்தத் திட்டமும் நடைபெறாது. பள்ளி ஆசிரியர்கள் தமக்கும் அத்தகைய ஆற்றல்

உண்டென்று கூறுவார்கள். அவர்கள் எத்தகைய கண்காணிப்பு மில்லாமல் தாமாகவே திட்டங்களைச் செயலாற்ற இயலுமென்று கூறுவது இயல்பு. அவர்களுக்கு எத்துணைதான் ஆற்றலிருந்தபோதிலும் ஒரு சிறிதும் நெகிழாமலும், அயர்வுறாமலும், பணிகளை ஆற்றுவதற்குத் தூண்டுகோலுக்காகவும், கண்காணிப்புக்காகவும் மாவட்டக் கல்வி அதிகாரிகள் தேவைப்படுகின்றார்கள். தலைமையாசிரியர் ஒரோவழி எதையும் வற்புறுத்தலாம். ஆயினும் அவரையும் விஞ்சிவிடும் ஆசிரியர்கள் உண்டாகையால் ஊக்கத்தினை ஊட்டுவதற்கும் ஓர் ஒழுங்கினை வற்புறுத்துவதற்கும் அதிகார நிலையில் ஒருவர் வேண்டிய தாகி உள்ளது. எனவே தணிக்கையாளர்கள் தேவைப்படுகிறார்கள். அரசாங்கம் கல்வித் துறையிலும் ஆசிரிய அனுபவத்திலும் நிர்வாகத் திறமையிலும் மேம்பாடுற்றவர்களை அமர்த்த வேண்டும். நேரடியாக அமர்த்தப்பெற்றவர்களும், அனுபவம் அற்றவர்களும், வகுப்பில் கற்றுக் கொடுத்த பழக்கமே இல்லாதவர்களும், பேச்சுத் திறமை இல்லாதவர் களும், தணிக்கையாளர் பதவிக்குத் தகுதியுடையவரல்லர். பள்ளித் தணிக்கையாளர்களுக்குப் பல பள்ளிகளை ஒப்படைத்தல் கூடாது. நமது நாட்டில் தணிக்கையாளர்களுக்கு உயர்நிலைப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகள் தொடக்கநிலைப் பள்ளிகள் ஆகிய எல்லாம் சேர்ந்து இரு நூற்றுக்கு மேல் சராசரியாக மேற்பார்வையில் உள்ளன என்று அறி கிறோம். தொடக்கநிலைப் பள்ளிகளைப் பார்வையிடுவதற்கு உதவித் தணிக்கையாளர்கள் உள்ளார்கள். ஆயினும் ஒரோவழி அவற்றையும் சென்று மேற்பார்வை செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. மூலை முடுக்குகளில் இப்போது தொடங்கி இருக்கும் உயர்நிலைப் பள்ளிகளைப் பார்த்தறிந்து பல நன்மைகளைப் பயக்க வேண்டும். இவையன்றி இதர பல பொறுப்புக்கள் உள்ளனவாகையால் அவர்கள் நல்ல முறையில் தமது பணிகளை ஆற்ற முடியாது. அதுவுமன்றி மந்திரிகள் சுற்றுப் பிரயாணத்தின் போதும், ஏனைய மேல்நிலை அதிகாரிகள் வருகையின் போதும் ஆங்காங்கே இவர்கள் பேட்டி அளிக்க முற்பட்டு விடுவதால் தமது பணிகளை நன்றாகக் கவனிப்பதற்குப் போதிய நேரமில்லை. பள்ளித் தணிக்கைகள் சரிவர நடைபெறுவதில்லை. தணிக்கையின் பெயரால் வருவதற்கும் போவதற்குமே நேரங்கடந்து விடுகிறது. இத்தகைய மேற்போக்கான கண்காணிப்பு ஒரு சிறிதும் பயன் தருவ தில்லை. ஆசிரியர்களும் தணிக்கையைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. தணிக்கை, தணிக்கையாளர்களுடைய கடன் என்று கருதுகிறார்கள். தமது பணிகளிலும் ஒரு சிலர் தவிர மற்றவர்கள் பள்ளித் திட்டத்துக்குக் கடனாற்றுகிறார்கள். இவர்களைப் போன்றவர்களைத் தட்டி எழுப்புவதற் கும் அவரவர்களுடைய பொறுப்புக்களில் ஈடுபடுத்துவதற்கும் அதிகார பூர்வமாக உள்ள தணிக்கையாளர் தேவை. ஒவ்வொருவருக்கும் இருபது உயர்நிலைப் பள்ளிகளும் ஐம்பது தொடக்க நிலைப் பள்ளிகளும் கண்காணிப்புக்கு இருந்தால் போதுமானது. உயர்நிலைக் கல்விக் குழு

வினர் இன்றைய தணிக்கை முறைகளை நன்ருக ஆய்ந்து தமது கருத்துக்களைக் கூறியுள்ளார்கள். தணிக்கைகள் நன்ருக நடைபெறுவதில்லை. தணிக்கை நடைபெறும் நாட்கள் ஒன்ருயினும் இரண்டாயினும் தணிக்கையாளர்கள் ஓரிரு மணி நேரங்களுக்குமேல் பள்ளிகளில் இருப்பதில்லை. இருக்கின்ற நேரத்தில் பள்ளி நிர்வாகம் நடைபெறுவதை மட்டும் ஓரளவு அறிந்துகொண்டு அறிக்கையை எழுதிவிடுகின்ருர்கள். பள்ளியின் கல்வித் தரத்தினை மேற்போக்காகவும் கூட அறிய விழைவதில்லை. ஆசிரியர்களோடு நன்ருகக் கலந்து அவரவர்களைப் பற்றி மதிப்பிடுவதில்லை. தணிக்கை இறுதியில் சிற்றுண்டியோடும் பொதுப்பட ஒரு சிறிது தணிக்கையாளர் பேச்சோடும் தலைமையாசிரியருடைய நன்றி நவிலலுமாகத் தணிக்கை தணிந்துவிடுகிறது. தணிக்கையாளர் என் செய்வார்? அவருக்கு ஒப்படைத்திருக்கும் பள்ளிகளோ பல. அவற்றுக்குள் ஆண்டுக்கு ஒருமுறையாவது நுழைந்து திரும்ப வேண்டும். அவருக்கு ஓய்வு கிடையாது. பள்ளிகளின் பல சிக்கல்களைக் கேட்பதற்கும் நேரமில்லை. தமது வட்டத்திலுள்ள ஒவ்வொரு பள்ளியையும் நன்ருக அறிந்து கொண்டாலல்லவோ ஒவ்வொன்றுக்கும் ஏற்ப முன்னேற்ற வழிகளை வகுத்துதவ முடியும். எனவே தமது தணிக்கையைக் குற்றமும் குணமும் காணுத ஒரு போக்கில் முடித்துக் கொள்ளுகிருர்கள். பள்ளிகளின் அலுவலக ஏடுகள் பதிவுகள் முதலியவற்றினைத் தணிக்கையாளர்களின் எழுத்தர் ஒருவர் அல்லது இருவர் அலசிப் பார்த்துக் குற்றங்களை வரைந்துவிடுகின்ருர்கள். ஆசிரியர்களுடைய தகுதிகளையுங்கூட அவர்கள் அலசிப் பார்த்துவிடுகின்ருர்கள். எனவே மிஞ்சியவை எல்லாம் பொதுப்படப் பள்ளியின் ஆசிரியத் தரத்தையும் நிர்வாகத்தையும் மட்டும்தான் தணிக்கையாளர் கவனிக்க வேண்டியவை. அவற்றையும் ஒழுங்காகப் பாராது விட்டால் பயனில்லை. தணிக்கையாளரைக் கல்விக் குழுவின் கல்வி ஆலோசகர் எனப் பெயரை மாற்றி அன்னர் ஒவ்வொரு பள்ளிச் சிக்கல்களைத் தனித் தனியாக அறிந்து அதனுடைய பல பணிகளைப் பொதுப்பட ஆய்ந்து ஆசிரியர்களுக்குப் பல கருத்துக்களைத் தந்துதவ வேண்டுமென்று கூறியுள்ளார்கள். தனிப்புலமை வேண்டிய பாடங்களாகிய உடற்கலை, வீட்டுக்கலை, இசைக்கலை முதலியவற்றிற்குத் தனித்தனி தணிக்கையாளர்கள் அப்போதைக் கப்போது பள்ளிகளுக்குச் சென்று அவற்றின் தரத்தினை உயர்த்த வேண்டுமென்றும் கூறியுள்ளார்கள். தணிக்கையாளர் பதவிக்குக் கல்வித் தகுதியோடு பத்தாண்டுகளாவது ஆசிரிய அனுபவம் அல்லது மூன்ருண்டுகளாவது உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றிய அனுபவம் வேண்டும். பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவமுள்ள ஆசிரியர்கள் மிக்க அனுபவமுள்ள தலைமை ஆசிரியர்கள் அல்லது ஆசிரியக் கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர்கள் ஆகியவரைப் பொறுக்கி எடுத்தல் வேண்டும். தணிக்கையாளர்கள் மூன்று அல்லது ஐந்தாண்டுக்கு ஒரு முறை மீண்டும்

தலைமையாசிரியர்களாகவும் பேராசிரியர்களாகவும் பணியாற்றுதல் நன்று. இங்ஙனம் மாறி மாறி ஆசிரியக் கல்லூரியிலும் உயர்நிலைப் பள்ளித் தலைமைப் பகுதியிலும் பயிற்சி பெற்றால் தணிக்கையாளர் களுடைய தகுதியும் அனுபவமும் பலவாகப் பெருகிப் பள்ளிகளுக்கு நன்மையைப் பயக்கும். பள்ளியின் பாடங்கள் இற்றை நாட்களில் பலவாகி விட்டதனால் ஒவ்வொரு பாடத் துறையிலும் மீத்திறம் பெற்ற வர்கள் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையாவது பள்ளிகளுக்குச் சென்று அவரவர் பாடத்தின் தரத்தினை உயர்த்திக்கொள்ள வேண்டும். அல்லது தணிக்கையாளரோடு பாடத்தில் பெருந்திறமை வாய்ந்த ஆசிரியர் களாவது தலைமையாசிரியராவது மூவர் தணிக்கையாளரோடு பள்ளி களுக்குச் சென்று கற்பித்தல் முறைகளையும் ஆசிரியர்களுடைய இடுக்கண், இழுக்குகளையும் நன்றாக அறிந்து வேண்டிய ஆலோசனை களை வழங்க வேண்டும். இங்ஙனம் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளைக் கண்காணிக்கின்றன. எனவே தணிக்கையாளர் ஒருவரோடு ஏனைய பாட ஆசிரியர்களும் ஒருங்கே சென்று தணிக்கை செய்தால் பள்ளிகள் நன்மை எய்துவது திண்ணம்.

14. ஆசிரியர் சங்கம்

ஒவ்வொரு பள்ளியிலும் அப்பள்ளி ஆசிரியர்களை உறுப்பினராகக் கொண்ட ஒரு சங்கம் அமையவேண்டும். எல்லா ஆசிரியர்களும் அதன் உறுப்பினர்கள். தலைமையாசிரியர் அதன் தலைவர். தேர்ந் தெடுக்கப்பெற்ற ஓர் ஆசிரியர் செயலர் ஆவர். இத்தகைய சங்கத்தின் ஒரே நோக்கம் ஆசிரியர்களுக்குள் ஒரு கூட்டு மனப்பான்மையை வளர்த்தலும், அவர்கள் பள்ளியைத் தமது பள்ளியாகக் கருதக்கூடிய மனப்பான்மையைப் பெருக்குதலும் ஆகும். பள்ளியின் பல பணிகளைத் தமதாகக் கொண்டு ஒவ்வொருவரும் ஒரு பொறுப்பு ஏற்கத் தூண்டு தலும் அவற்றிற்கேற்ற முறையில் பணியாற்றுதலுமாகும். பகல்நேரம் முழுவதும் ஆசிரியர்கள் பள்ளிகளிலேயே கழிக்கின்றூர்கள். சிலர் இரவுக் காலத்திலும் பள்ளியில் வெகுநேரங் கழித்துச் செல்லுகிறுர்கள். அவர்கள் தம் குடும்பத்தோடு கழிக்கும் நேரம் மிகக் குறைவு. பெரும் பாலும் இல்லத்திற்கு உண்பதற்கும் உறங்குவதற்குமே செல்லுகிறுர்கள். இன்றைய பள்ளிகள் ஆசிரியர்களைப் பல பொறுப்புக்களுக்கு ஆளாக்கு கின்றன. மேலைநாட்டு ஆசிரியர்களுக்கு ஆசிரியப் பொறுப்போடு வேறு பல பொறுப்புக்கள் சுமத்தப்படுகின்றனவாம். எனவே ஆசிரியர் கள் பொறுப்புக்கள் பலவற்றுள் தமக்குரியவற்றை விருப்போடு ஏற்று மிக்க கருத்தோடு நடத்தவேண்டும்.

ஆசிரியக் கழகங்களிற் பள்ளியின் பொது நிர்வாகப் பணிகள் பல வற்றைப் பேசி முடிவு கட்டலாம். தலைமையாசிரியர் அப்போதைக் கப்போது எழும் பள்ளியாட்சிச் சிக்கல்களைத் தமது தோழர்களோடு கலந்து தீர்த்துக் கொள்ளலாம். பாடக் குழுக்கள் தமது அறிக்கை களைச் சங்கத்தில் சமர்ப்பிக்கலாம். அல்லது தமது நடவடிக்கையில் தாம் கண்ட சில தீர்மானங்களைப்பற்றி எடுத்துப் பேசலாம். ஒருவர் இருவர் பள்ளிப் பொதுச் சிக்கல்களைப் பற்றிப் பேசலாம். அல்லது தமது தனிச் சிக்கல்களை எடுத்துக்கூறி விளக்கம் அறியலாம். பாடப் புறச் செயல்களைப் பற்றித் திட்டம் வகுக்கலாம். அல்லது முக்கியமான பள்ளி விழாக்களைப்பற்றி அறுதியிடலாம்.

இது ஒரு சமூகக் கூட்டமாக நடைபெற வேண்டும்; வாயடைப்புக் கூடாது; அல்லது கருத்துக்களைக் கபடமற்று எடுத்துரைக்கவும் தயங்கக் கூடாது. ஆனல் ஒருவரை யொருவர் தாக்கிப் பேசுதலும், சுட்டிப் பேசுதலும் குறை கூறுதலுமாகிய பழக்கங்கள் கூடாது. கூட்டங்களில் உடன்பிறப் புணர்வு நிலவ வேண்டும். பேசுவதிலும் பழகுவதிலும் பெரியவர்கள் சிறியவர்களுக்கு வழிகாட்டிகளாக வேண்டும். பொறுப்புக்களைப் பங்கிட்டுக் கொள்ளுவதில் எல்லோரும் சமமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். சிலர் ஒரு பொறுப்பினை விருப்

போடு ஏற்றுக்கொள்ள முற்படுவார்கள். பலர் மற்ருெரு பொறுப்பினைக் குறித்த ஓர் ஆசிரியர் மீது சுமத்துவதற்காக அவர்மீது நயவஞ்சக மாகப் புகழுரை பகர்வார்கள். அப்பொறுப்பு அவரிடம் ஒப்படைத்த பின் மறைமுகமாக நகைத்துக் கொண்டிருப்பார்கள். குறித்த இருவர் மூவர் நீங்கலாக மற்றவர்கள் ஒதுங்கி நிற்பது வழக்கம். பள்ளிப் பொதுப் பணிகளில் வெற்றி கண்டால், எல்லோரும் பணியாற்றி யிருந் தால் பெற்ற புகழிற் பங்கு எல்லோருக்கும் உரித்தாகும். ஆனல் இருவர் மூவர் உழைப்பினல் ஏற்பட்ட வெற்றிக்கு மற்ற ஆசிரியர்கள், உழைத்த ஆசிரியர்களுக்குப் பாராட்டுக் கூறவேண்டும்.

சங்கக் கூட்டங்கள் சரியான முறையில் நடைபெறுவதற்குத் தலைமையாசிரியரே தக்க பொறுப்பாளியாவார். வெற்றிகரமாக நடை பெறும் ஒவ்வொரு கூட்டமும் அவரது திறமையை வெளிப்படுத்தக் கூடியது. தலைமையாசிரியர் ஒவ்வொரு பணியிலும் தலைமைப் பொறுப்பை ஏற்கவேண்டியது கடமை; ஆனல் அது தமது அதிகாரத் தைச் செலுத்துவதற்கு ஏற்கும் தலைமையாகக் கூடாது. மக்களாட்சிப் பண்பு தலைமையாக அமையவேண்டும். ஒவ்வொரு பணியையும் தாம் ஏற்று நடத்துவது திறமையாகாது. எல்லா ஆசிரியரையும் இயக்கி அவரவர்கள் தகுதிக்கேற்பப் பொறுப்பளித்து அவர்கள் செய்வன வற்றை மேற்பார்வை செய்து காரியவாதியாக நடந்துகொள்ள வேண்டும். சிலர் வீரிய வாதியாகப் பல பிணக்குகளை உண்டாக்கிக் கொள்ளுவதும் உண்டு.

15. பாடக் குழுக்கள்

பள்ளி ஆசிரியர்கள் எல்லாம் பாட ஆசிரியர்களாவர். பல பாடங்களின் வழியாகப் பள்ளிகள் பிள்ளைகளுக்குப் பலவற்றைக் கற்பித்தல் வேண்டும். தத்தமது பாடத்தில் ஆசிரியர்களும் சிந்தனை பெறுதல் வேண்டும். தாம் கற்பிக்கும் பாடங்கள் ஒன்றே யாயினும் ஆண்டு தோறும் பிள்ளைகள் வெவ்வேறுகின்றனர். அதனால் பிள்ளைகளுக் கேற்பக் கற்பிக்கும் முறைகளை மாற்றியமைக்க வேண்டும். மேலும் ஓர் ஆண்டில் தமது திறமையால் வெற்றிகண்ட ஆசிரியர் அடுத்த ஆண்டு வெற்றி காண்பதில்லை. ஆசிரியர் சிலர் வெற்றிகாணும் ஆண்டுகளில் தமது திறமையே காரணம் என்று அறிவித்துக் கொள்ளுகிறார்கள். வெற்றி கிட்டாவிட்டால் பிள்ளைகளுடைய குறை என்று குற்றஞ் சாட்டுகிறார்கள். எந்த ஆசிரியரும் குறைபாடு மாணவருடைய தன்றென்று அறியவேண்டும். நிறைவிற்கும் குறைவிற்கும் காரணம் ஆசிரியரேயன்றி மாணவர் என்று மல்லர். அப்போதைக்கப்போது ஆசிரியர் தமது திறமையை மாணவர்கள் கற்றல் வாயிலாக அறிந்து தமது தரத்தையும் திறத்தையும் உயர்த்திக் கொள்ளுதல் வேண்டும். ஒரே தரப்படுத்திய மாணவர்கள் பல பிரிவுகளில் பல திறன்களோடு வளர்ச்சியுறுவதற்குக் காரணம் யாதென்றறிய வேண்டும். D தரமுள்ள பிள்ளைகள் குறிப்பிட்ட ஓர் ஆசிரியர் கையாளும் முறைகளால் B தரத்திற்கு உயர்வு பெறுவார்களாயின் அவ்வாசிரியர் கையாளும் முறைகளைப் பிற பிரிவு ஆசிரியர்கள் அறிதல் நன்று. அங்ஙனமே தொடக்கத்தில் உயர்தரத்தோடு தொடங்கிய பிள்ளைகள் நாளடைவில் தரங் குறைவார்களாயின் அதன் காரணத்தை ஆய்ந்தறிதல் ஆசிரியர் கடன்.

ஆசிரியர் பலர் தமது குறைகளை மறைத்துக் கொள்ளுவான் வேண்டிப் பிள்ளைகளது தரக்குறைவினை அவர்கள் படித்த கீழ்வகுப் பாசிரியர்களுடைய தரக்குறைவென்று கூறிக் கொள்ளுவது வழக்கம். இங்ஙனம் நடுநிலை ஆசிரியர்கள் தொடக்கநிலை ஆசிரியர்கள் மீது குறை கூறுவதும், உயர்நிலை ஆசிரியர்கள் நடுநிலை ஆசிரியர்மீது குறை கூறுவதும் கல்லூரி ஆசிரியர்கள் உயர்நிலை ஆசிரியர்கள் மீது குறை கூறுவதும் வழக்கமாகி விட்டன. எனவே இவையாவற்றையும் ஓரளவு தீர்த்தற் பொருட்டுப் பாட ஆசிரியர்கள் ஒவ்வொரு பள்ளியிலும் தமது குழுக்களை அமைத்துக் கொள்ளுகிறார்கள்.

பாடக் குழுக்கள் ஒவ்வொரு பள்ளியிலும் மிகமிக இன்றியமையாதவையாகின்றன. அவற்றால் பல பள்ளிகள் தமது தரத்தை உயர்த்திக் கொண்டிருக்கின்றன. பாடக் குழுக்கள் அமைத்து நடத்துவதற்கு ஆற்றலும் ஆர்வமும் ஆசிரியர்களுடைய உழைப்பும் தேவை. அவர்களுடைய உள்ளார்வமே குழுக்கள் பல பயன்களை அளித்தற்கு

உதவக்கூடியவை. சிறு பள்ளியாயினும் பெரும் பள்ளியாயினும் ஒவ்வொரு பாடத்திற்கும் மூவர் நால்வர் முதல் பத்துக்கு மேற்பட்டவர்களும் இருப்பார்கள். ஒவ்வொரு பாட ஆசிரியரும் மிக்க அனுபவம் பெற்றவராயும் எல்லாரைக் காட்டிலும் அனுபவம் பெற்றவர் தலைமை ஏற்பவராயும் அமையவேண்டும். அவர் தலைமையில் அப்பாட ஆசிரியர்கள் எல்லோரும் ஆண்டுத் தொடக்க முதல் கூடத் தொடங்க வேண்டும். ஒவ்வொரு வகுப்புப் பாட ஆசிரியரும் தத்தமது வகுப்பு அல்லது வகுப்பின் பிரிவில் அடங்கிய பிள்ளைகளின் அடைவுத்திறனை அறியவேண்டும். ஒரு வகுப்புப் பிரிவின் பிள்ளைகள் தமது கீழ் வகுப்பில் பெற்ற மதிப்பெண்களை ஆய்ந்தறிதல் மூலமாகவும் அவை நம்பிக்கை அற்றவையாயின் ஆண்டுத் தொடக்கத்தில் ஒரு தேர்வினை நிகழ்த்தி மதிப்பெண்களைக் கொண்டு ஆய்ந்தறிதலின் மூலமாகவும் மாணவர்தம் அடைவுத் திறனை அறிந்து அதற்கேற்பக் கற்பித்தல் முறைகளையும் கற்றல் வழிகளையும் அமைக்க வேண்டும். இவை ஆசிரியர்களுக்குத் தமது முறைகளை அமைத்துக் கொள்ளக்கூடிய வழி வகைகளைக் காட்டக் கூடியவை. இவற்றின் அடிப்படையில் பிள்ளைகளுக்கு ஏற்ற முறையில் அவரவர்களைத் தனித்தனியாகக் கவனிக்கும் வழிகளை வகுக்கலாம். ஆசிரியர்கள், தமது பாடக் குழுவில் அவரவர்கள் கையாளும் முறை முதலியவற்றைப் பற்றிப் பேசி விவாதிக்கலாம். பலர் முறைகளைச் சீர்தூக்கிப் பார்க்கலாம். ஒவ்வொன்றல் ஏற்படும் நன்மைகளை மற்றவர் பெறலாம். பாடக்குழுத் தலைவர் தமது அனுபவத்தை மற்றவர்க்கு அளித்து உதவலாம். காலாண்டு, அரையாண்டு முழு ஆண்டுத் தேர்வுகளின் மதிப்பெண்களை ஆராய்ந்து ஒவ்வொரு வகுப்பின் தரத்தையும் மதிப்பிடலாம். பாடத்தை நன்கு கற்பிப்பதற்கு வேண்டிய பல துணைக் கருவிகளைக் குழுவினர் தயாரித்துத் தலைமையாசிரியரின் வழியாக அரசாங்க உதவி பெறலாம். ஒவ்வொரு பாடத்திற்கும் பிள்ளைகள் செய்யும் கைவேலைகளைத் திரட்டி ஒரு கண்காட்சி அமைக்கலாம். பிள்ளைகளும் ஆசிரியர்களிடமிருந்து அதில் ஊக்கம் பெறுவார்கள். ஆசிரியர்களும் பிள்ளைகளுடைய தேவைகளால் உந்தப் பெற்றுத் தமது திறனைப் பெருக்கிக் கொள்ளுவார்கள். தலைமையாசிரியரும் பாடக்குழுத் தலைவரின் வழியாக ஒவ்வொரு பாடத்தின் நிலையினைப்பற்றி அறிந்துகொள்வார்.

பாடக்குழுக்கள் மாதத்திற்கொரு முறையாவது கூடவேண்டும். இடையில் வேண்டுமானாலும் கூடலாம். குழுத் தலைவர் ஒவ்வொரு கூட்டத்தின் குறிப்புக்களைச் சீர்பார்த்துத் தனிப்பட்ட ஏட்டுப் புத்தகத்தில் வரைந்து வைக்கலாம். இங்ஙனம் ஒவ்வொரு பாடக் குழுவின் கூட்டக் குறிப்புக்கள் பள்ளியின் பாட வரலாற்றுக் குறிப்பாகும். பள்ளியில் அமர்த்தப் பெறும் புதிய ஆசிரியர்களும் தணிக்கையாளர்களும் பிறரும் இவற்றைப் புரட்டிப் பார்த்து ஆசிரியர்களின் சிந்தனைக் களஞ்சியத்தை அறியலாம்.

பாடக் குழுக்கள் ஆசிரியர்களுக்குள் கருத்து வேற்றுமைகளை வளர்த்தல் கூடாது. குழுத் தலைவர் வேற்றுமைகள் வளராதபடி கண் காணிக்க வேண்டும். எல்லா ஆசிரியர்களும் திறமையுடையவர்கள் என்ற பெருமிதமும் யாரும் எல்லாவற்றையும் அறிந்தவரல்லர் என்ற பணிவும் குழுவினரிடையே வளரலாம். பொறையுணர்ச்சி, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஆகியவை மிகமிக அவசியம். குழுவினர் யாரும் தமது கருத்தை வற்புறுத்தல் கூடாது. எக்கருத்தாயினும் எல்லோருக்கும் உடன்பாடாயின் அதை ஏற்றுக்கொள்ளலாம். குழு நட வடிக்கைகளில் "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு", "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு", என்ற இரண்டு குறள்களை யும் வழிகாட்டிகளாகக் கொள்ளவேண்டும். சில பள்ளிகளில் பாடக் குழுக்கள் பெயரளவில் உள்ளன. குழுக் கூட்டங்கள் குழுவினருடைய ஒத்துழைப்போடு நடைபெறுவதில்லை. தலைமையாசிரியர் கூட்டங்களை ஒழுங்காகக் கண்காணிப்பதில்லை. ஒவ்வோர் பாடக் குழுக் கூட்டத் திலும் தலைமையாசிரியர் ஓர் உறுப்பினராக அமர்ந்து உதவலாம். பாடக் குழுக்கள் ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்றால் பள்ளியின் தரம் உயர்வுறும் என்பதில் ஐயமில்லை. ஆசிரியர்களுக்குள் வேறுபாடுகள் நீங்கி ஒருமைப்பாடுகள் உண்டாகலாம். ஒவ்வோர் ஆசிரியரும் தத் தமது தனித் திறமையை வளர்த்துக்கொள்ளலாம். இன்று கையாளப் பெறும் ஆசிரிய முறைகள் எல்லாம் பல நாட்டு ஆசிரியர்கள் கண்டறிந்த முறைகளேயாகும். நம் நாட்டுப் பிள்ளைகளுக்கேற்பப் புத்தம் புதிய முறைகளை உருவாக்கி உதவவேண்டியது கடமை என்று கருத வேண்டும். இத்தகைய முயற்சியே ஆசிரியத்தின் முற்போக்குக்கு அறிகுறியாம்.

16. கால அட்டவணையும் வகுப்புப் பாடங்களும்

ஒரு பள்ளிவேலையை அறிவதற்கு அதன் கால அட்டவணை ஒரு கண்ணாடியாகும். பாட ஏற்பாட்டின் நிகழ்ச்சிகளை விளக்கி அவற்றை நடைமுறையாக்கவே கால அட்டவணை வகுக்கப் பெறுகிறது. பணிகளைப் பங்கிடுவதற்கும், பள்ளி நேரங்களுக்குள் அவற்றினை அமைப்பதற்கும் தலைமையாசிரியர்பால் மிக்க திறன் வேண்டும். ஆசிரியர் தகுதிகளையறிந்து அவரவர்கள் எளிதாக ஏற்கக்கூடிய பணிகளை அவரவர்கள் தகுதிக்கும் திறமைக்கும் ஒப்பப் பகிர்வது மிக முக்கியம். பல ஆண்டுகளுக்குமுன் ஒவ்வோர் ஆசிரியரும் ஒவ்வொரு வகுப்பில் நான்கு ஐந்து ஆண்டுகள் கற்பித்துப் பழக்கமும் திறமையும் பெற்ற பிறகு மேல் வகுப்பு ஆசிரியராக அமர்த்துவது வழக்கம். சிற்சில பெரும் பள்ளிகளில் ஆசிரியர் சிலர் ஒரே வகுப்பில் பணி செய்தும் தமது காலத்தைக் கழித்துள்ளார்கள். காட்டாக, எட்டாவது வகுப்பிலிருந்து ஒன்பதாவது வகுப்புக்கு ஓராசிரியர் உயர்த்தப்பட்டால் அவ்வுயர்வினை அவர் பெருமையாகக் கருதுவார். வகுப்பாசிரியர்களும் பாட ஆசிரியர்களும் தமக்குத்தாமே நிகராவர். அவ்வகுப்புக்களுக்குக் கற்பிக்கும் திறமை அவர்களுடையதேயாகும். பி.ஏ., பி.டி., பட்டம் பெற்றோர் பள்ளி இறுதி வகுப்புக்கு ஆசிரியராதற்குப் பதினைந்தாண்டுகளாவது கீழ் வகுப்புக்களில் பணி புரிவார்கள். அத்துணை ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவர்கள் பண்பட்டவர்களாவர். இற்றை நாட்களிற் பள்ளி இறுதி வகுப்புக்கு அமர்த்தப் பெறும் ஆசிரியர்கள் ஒரு சிறிதும் அனுபவம் இல்லார். அதனால் அவர்கள் தமது பொறுப்பினை உணர்ந்து பணியாற்ற வேண்டும்.

பள்ளிக் கால அட்டவணை ஆசிரியர்களின் பணிகளை ஒழுங்கு படுத்துபவை. கடிகாரத்தில் முள் அசைவதைப் போல் ஓர் அகவைக்கு அகவை ஆசிரியர்கள் அசைந்துகொண்டே இருப்பர். குறித்த நேரத்தில் அதாவது ஓர் அகவையில் குறித்த ஓர் ஆசிரியர் எவ்வகுப்பில் இருப்பர் என்பதைக் காட்டுவது பள்ளிக் கால அட்டவணை. மேலும் ஓர் அகவையில் ஒரு குறித்த வகுப்பில் நடக்கும் பாடம் யாதென்றும் அறியக்கூடும். கல்வி ஏற்பாட்டின்படி அந்தந்த வகுப்பிற்கு ஏற்ற பாடங்கள் ஒழுங்காதல் வேண்டும். பள்ளி நேரம் எவ்வகையிலும் வீணாகக் கூடாது.

பள்ளிக் கால அட்டவணையைப் பள்ளியின் இரண்டாவது கடிகாரமாகவும் கருதுவது உண்டு. பள்ளிகளில் ஓர் அகவையின் நேரம் நாற்பத்தைந்து நிமிடங்கள். பள்ளி முழுவதும் எல்லா வகுப்புக்களுக்கும் எல்லாப் பாடங்களுக்கும் நேர அளவு ஒத்ததாகும். பள்ளிக் கால அட்டவணை பள்ளி நேரத்தைச் சிக்கனமாகவும் ஒழுங்காகவும் ஒரு

வகுப்புக்கும் மற்ருெரு வகுப்புக்கும் முரண்பாடின்றியும், குறித்த பாடத்துக்கு ஒரே எண்ணிக்கை உள்ள அகவைகளில் பாடங்களே ஒருவார அளவுக்குப் பகுத்து அளிக்கும் ஒரு சாதனம்.

இற்றை நாட்களில் ஒவ்வொரு பாடத்துக்குரிய அகவைகளே அரசினரே வகுத்துத் தருகின்ருர்கள். ஒவ்வொரு பாடத்திலுள்ள பகுதிக்கும் இத்துணே அகவைகள் என்றும் வகுத்துவிடுகிருர்கள். அவற்றிற்குப் பிறழாது கால அட்டவணேயை வகுக்கவேண்டியது பள்ளியின் கடமை. கல்வித் துறை, ஆண்டிறுதிப் பெரும் பிரிவு, சிறு பிரிவு நாட்களென்று வரையறை செய்துள்ளது. அதனுல் அதற் கொப்பப் பள்ளி நாட்கள் வகுத்தாக வேண்டும். ஒவ்வோர் ஆசிரியரும் இத்துணே மணி நேரங்கள் வாரத்துக் கற்பிக்க வேண்டு மென்றும் திட்டமுள்ளது. பாடங்களேப் பகிர்வது அரிய வேலே. ஒரே ஆசிரியருக்கு இரண்டுக்கு மேற்பட்ட பாடங்களே ஒப்படைத்தால் அவருக்குத் தகுதியிருந்தாலும் கற்பித்தலில் திறமை குறையும். ஆசிரியர் எல்லாருக்கும் வேலே ஏற்றக் குறைவு இல்லாதபடி பாடங்களேப் பகிர்தலே நல்லது. வகுப்புக்களில் பாடங் கள் ஒன்றன்பின் மற்ருென்ருக அமையவேண்டும். அல்லாக்கால் ஒரே பாடத்தினே ஒரு அகவைக்கு மேல் பிள்ளேகள் கற்பதற்கு வெறுப்புக்கொள்வர். அதனுல் ஒன்றன்பின் ஒன்ருகப் பாடங்கள் மாறிக்கொண்டே அமையவேண்டும். பிள்ளேகள் வாரத்தின் முதற் பகுதியில் வெகு சுறுசுறுப்பாகக் காணப்பெறுவார்கள். ஆனுல் வார இறுதி நாட்களில் களேத்துக் காண்பார்கள்; பாடங்களில் கவனக் குறைவடைவார்கள். அவர்களுடைய தான்தொடங்காற்றல், கற்கும் வேகம் ஆகியவை குறைவாகக் காணப்படும். அதனுல் உள நூற்பாங்கில் பாடங்கள் கால அட்டவணேயில் இடம் பெறவேண்டும். கடினமான பாடங்கள் காலேப்போதின் முதல் இரு அகவைகளுக் குள் இடம் பெறுதல் நன்று. பிள்ளேகளுடைய கவனமும் சிந்தனேயும் கவனிக்கற்பாலவை; பாடங்களும் கவனம் பெற வேண்டும். கடினப் பாடங்கள் ஒவ்வொன்றுக்கிடையில் இடைவேளே வேண்டும். பாடங்கள் மாறி மாறி வருவதே கற்றலுக்கும் கற்பித்த லுக்கும் நன்று. எப்பாடத்திலும் பிள்ளேகள் களேப்புருத வண்ணம் காத்துக்கொள்வதே கால அட்டவணேயின் சீரிய நோக்கமாக வேண்டும். மொழி ஆசிரியர்கள் ஓர் அகவையில் கற்பித்தால் மற்ருேர் அகவையில் மேற்பார்வைப் பணிபுரிதல் நல்லது. தொடர்ந்து பேச் சாவியை வெளிப்படுத்தும் ஆசிரியர் எளிதில் களேப்படைந்து விடுவார். பிள்ளேகளும் அகவைதோறும் வேறுபாடு ஒன்றும் இல்லாது பேச்சுக் களேயே கேட்டுக்கொண்டிருந்தால் களேப்புறுவர். ஆசிரியரும் பிள்ளே களும் பங்கெடுத்துக் கொள்ளும் பாடமே தலே சிறந்தது. கற்பித்தலும் கற்றலும் ஒருங்கே நிகழுமாறு பாடங்கள் நடைபெற்ருல் ஆசிரியர் பாலும் மாணவர் பாலும் களேப்பு நிகழாது. செயல்முறை வகுப்புக்கள்

பிள்ளைகளுடைய கவனத்தை ஈர்த்த வண்ணமாக இருக்கும். பள்ளி தொடங்கியவுடன் கடினப் பாடங்களைத் தொடங்குவதும் சரியன்று. பிள்ளைகள் வகுப்பறையில் அமர்ந்தவுடன் சிறிது சிறிதாகத் தமது சோம்பலை நீக்கிக் கொள்ளுகிருர்கள். இரண்டாவது மூன்ருவது அகவை களில் மட்டுமே அவர்களுடைய நாட்டம் உச்சநிலை எய்துகிறதென்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ளனர். நான்காவது அகவையில் கவனம் குறைவுற்று வயிற்றுப் பசி மீதூர்கிறது. அங்ஙனமே வாரத் தொடக்க நாளாகிய திங்களன்று சோம்பல் சிறிது நீடித்துப் பின்னர் அடுத்த நாட்களாகிய செவ்வாய் புதனன்று கவனமும் நாட்டமும் உச்சத்தை அடைகின்றன. காலைப்பள்ளியிலும் மாலைப்பள்ளியிலும் இறுதி அகவை களில் பிள்ளைகள் தமது இல்லத்தை நாடுகிருர்கள். அதனுல் கூர்ந்து கவனிக்க வேண்டாத பாடங்களை அந்த அகவைகளுக்கு ஒதுக்கலாம். சில பள்ளிகளில் பள்ளி தொடங்கியவுடன் உடற் பயிற்சி வகுப்பும் தொடங்குகிறது. இது மிகவும் கண்டிக்கத் தக்கது. மாலை வேளைகளில் உடற் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறலாம். உடற் பயிற்சி செய்து விட்டுப் பிள்ளைகள் உடல் முழுவதும் வியர்வையோடும் தமது ஆடைகள் வியர்வையில் நனைந்தும் மீண்டும் வகுப்பறையில் ஒருவர் பக்கலில் மற்ருெருவர் அமர்ந்து பாடங்களைக் கவனிக்க இயலாது; கவனிக்கவும் கூடாது. சிறப்பாக எழுத்து வேலையில் ஈடுபடுவது கடினம். மேலும் தொடக்க நிலைகளில் காலையிலும் மாலையிலும் ஒரு முறையாவது ஓர் ஐந்து மணித்துளிகளுக்குக் குறையாது விடுபாடு இருத்தல் நல்லது. தொடர்ந்து வகுப்பறையில் அமர்ந்த இடத்தில் அடங்கிச் சிறு பிள்ளைகள் இருக்க இடர்ப்படுவார்கள். அதனுல் ஓர் அகவை முடிந்து மற்ருேர் அகவை தொடங்குவதற்குள் பிள்ளைகள் இயற்கையாகவே தமது இடத்தைவிட்டு ஓரளவு நெகிழ்ந்து கொள்ளு கிருர்கள். சிலர் மேசையின் மீது தாவியும் ஓடியும் விளையாடுகிருர்கள். பிள்ளைகளுடைய அசைவற்ற கவனம் பயனற்றது. தொடக்க நிலைகளில் ஓர் அகவை முப்பது மணித் துளிகளுக்கு மிகாது இருத்தல் நல்லது. நடுநிலை உயர்நிலைகளில் தற்போதுள்ள நாற்பத்தைந்து மணித்துளிகளே போதுமானவை. நமது பள்ளிகளிலிருந்து கால அட்டவணையும் அதை ஒட்டிய மணி அடித்தலுமாகிய கொடுங் கோன்மையும் ஒழிய வேண்டும் என்று கல்வியாளர் கருது கின்றனர். பிள்ளைகளைக் கருதிப் பாடங்களையும் பாடங்களின் நேரத்தையும் அளவிடுவதா அல்லது பாடங்களைக் கருதிப் பிள்ளை களின் நேரத்தை அறுதியிடுவதா என வினவுகிருர்கள். பிள்ளை கள் எல்லாரும் ஒரு குறித்த வேகத்தில் கற்றுக்கொள்ளுகிருர்கள் என்றும் கற்பித்தலும் கற்றலும் அதே வேகத்தில் நிகழ்கின்றன வென் றும் பள்ளிகளின் கால அட்டவணை காட்டுகிறது. இஃது உண்மை அன்று. நமது பள்ளிகளில் தனி ஒவ்வொரு பிள்ளையையும் ஆசிரியர் கவனிக்க வேண்டுமென்ற விதி இற்றை நாட்களில் வற்புறுத்தப்

பெறுகிறது. எல்லாப் பிள்ளைகளும் ஆசிரியர் குறிக்கும் வேகத்தில் கற்றுக்கொள்ளுவது கடினம். சிலர் ஆசிரியர் வேகத்தைக் காட்டிலும் அதிக வேகத்தில் கற்றுக்கொள்ளுவர். சிலர் ஆசிரியர் வேகத்தையே பின்பற்றுவர். சிலர் பின்தங்கி மெதுவாகத்தான் கற்றுக்கொள்ள முடியும். இதனை நம் பிள்ளைகளிடையே காணலாம். ஆசிரியர் வேகத்தில் செல்லாத பிள்ளைகள் உண்மையாகவே அவலமடைகின்றனர் கள். ஆசிரியர்கள் அவர்களை மந்தமானவர்கள் என்று கருதுகிறார்கள். நாளடைவில் அவர்களைப் புறக்கணிக்கின்றார்கள். இது கால அட்டவணையால் உண்டான கேடு; பிள்ளைகளுடைய குறைபாடு அன்று. பள்ளி ஒழுங்குக் கால அட்டவணைப் பயன்படலாம். ஆனால் அது பிள்ளைகளுக்கு அன்று முதல் இன்று வரை ஊறு விளைவித்துள்ளது. ஒரு குறித்த பாடம் அல்லது பாடப் புத்தகம், அதனை ஆசிரியர் கற்பிக்க வேண்டிய கடமை, கற்பித்த பகுதிகளில் தேர்வு நிகழ்த்த வேண்டிய பொறுப்பு, விடைத்தாள்களைத் திருத்துவது ஆகிய ஒரு முறையுள்ள மரப்பாவைப் போக்கிற்குக் கால அட்டவணை தொன்று தொட்டு இடம் தந்துள்ளது. தனி ஒவ்வொரு பிள்ளையையும் கவனிக்க அஃது இடந்தராதொழிந்தது; ஆசிரியர்களையும், மாணவர்களையும் காலச் சிறையில் அடைப்பது போன்றது என்று ஒரு மாபெரும் கல்வி அறிஞர் கூறியுள்ளார். தனித்தனிப் பாடங்கள், கற்றல் அனுபவங்களில் மொத்தத் திறனை வளர வொட்டாமலும் பாடங் களுக்கு இடையே உள்ள தொடர்புகளைக் காட்டாமலும் ஒழிகின் றன. மாணவர்கள் எந்திரங்களாகக் கருதப் பெறுகிறார்கள். ஒரு மாணவ எந்திரம் முதல் அகவையில் ஆங்கிலமும், மணி அடித்துத் தொடங்கும் மறு அகவையில் கணிதமும், மூன்றுவது அகவையில் விஞ்ஞானமுமாக ஏழு அகவைகளுக்கு ஏழு வேறுபட்ட பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் நியதி உளது. நாற்பத்தைந்து மணித்துளி களுள் ஓர் ஆசிரியர் நாற்பது, நாற்பத்தைந்து மாணவர்களோடு தனித் தொடர்பு கொள்வதாவது அல்லது அவர்கட்கு வழி காட்டுதலாவது இயலுமா என்பதை அறிய வேண்டும். பிள்ளைகள் செயற்பாடுகளில் ஈடுபடும்போது திடீர் என்று மணி அடித்து விட்டால் அவற்றை அரையுங் குறையுமாக விட்டு அகலவேண்டும். பிள்ளைகளுக்குரிய உரிமைகளை இத்திட்டம் பிடுங்கிவிடுகிறது. பிள்ளைகள் தமது ஆற்றலுக்கேற்ப, தகுதிக்கொப்ப, விருப்பு வெறுப்புகளுக்கு இணங்கப் பல பாடங்களைத் தமக்குரிய வேகத்திலன்றோ கற்க இயலும்! 'டால்டன் முறை', 'செயல்திட்ட முறை' ஆகியவை கால அட்ட வணையின் கொடுங்கோன்மையையும் அதன் கட்டுப்பாட்டினையும் நீக்குவதற்கு ஏற்பட்டவை. டூயி கல்வி ஏற்பாட்டினைப் பல பாடங் களைக் கொண்டதென்று கருதுவதில்லை. பிள்ளைகளுடைய ஆற்றலும் நாட்டமும் கொண்ட தொடர்ந்த செயற்பாடுகளே கல்வி ஏற்பாடு என்றும் அவர்கள் செயல்பாடுகளில் தனித்தனிப் பாடங்கள் குறுக்கிடப்

படாதென்றும் எடுத்துக்காட்டியுள்ளார். கண்வழி வகுப்பில் ஒரு படம் திரையிட்ட வண்ணம் இருக்கும்போது அகவை முடிந்து மணி அடித்து விட்டால் திரைக்காட்சி முடிந்தாக வேண்டும். பிள்ளைகள் எல்லாரும் அக்காட்சியில் ஈடுபாடு கொண்டு திளைக்கும் நேரத்தில் அவர்கள் மற்ருெரு பாடத்தைக் கற்பதற்குத் தமது மனத்தை மாற்ற வேண்டும். கால அட்டவணை கடியதாகாது நெகிழ்தலுக்குத் திட்டம் வேண்டும். ஒவ்வொரு நாளும் ஆசிரியர்கள் வகுப்புகளை எங்ஙனம் பிள்ளைகளுடைய தேவைப்பாடுகளோடு இணைக்கக்கூடுமென்று அவர்களுக்குள் திட்ட மிட்டுக் கொள்ளலாம். இரண்டு மூன்று பாடங்களின் எப்பகுதி களை ஒன்ருகத் தொடர்பு படுத்த இயலும் என்பதனை அறிந்து ஆவன செய்யலாம். அங்ஙனம் தொடர்பு படுத்தும்போது வகுப்பினைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஒரு பொறுப்பினை உணர்த்த லாம். பாட ஆசிரியர்கள் தத்தமக்குரிய பகுதிகளை மாணவர்களுக்கு விளக்கலாம். பின்னர் மாணவர்கள் தனித்தனிக் கற்றல் அனுபவங்களை வகுப்பில் விளக்கலாம். இங்ஙனம் பள்ளிப் பாடங்களின் ஒற்றுமைகளை உறுதிப்படுத்துவதோடு பிள்ளைகள் பல பாடங்களின் ஒற்றுமைகளைக் காண்பதற்கும் அவர்கள் பல ஆசிரியர்களிடமிருந்து கேட்டறிந்து கொள்ளுவதற்கும் கற்றலைத் தாம் ஆய்ந்து அறிந்து கற்பதற்கும் வழி உண்டாக்கிக் கொடுக்கலாம். பள்ளி இறுதித் தேர்வுக்கு ஒன்பதாவது வகுப்புப் பாடங்களும் உளவாகையால் பத்தாவது வகுப்பில் அவற்றைத் திருப்பும்போது ஒன்பதாவது வகுப்புப் பிள்ளைகளும் அவற்றைச் சேர்ந்து கற்கலாம். எனவே கால அட்டவணை ஒரு வழிகாட்டியே யன்றி விதிகாட்டி யன்று. அதனை விதிகாட்டியாகக் கொண்டால் பள்ளிப்பணி உயிரற்றுக் காணப்படும். மேலும் பிள்ளைகளின் தேவைப்பாடுகளுக்கு ஏற்பக் கால அட்டவணைகளை அடிக்கடி மாற்றி அமைப்பதே நல்லது. ஒரு தேர்வில். எல்லாப் பிள்ளைகளும் தனி ஒரு பாடத்தில் தவறிவிட்டார்களென்ருல் அந்தப் பாடத்தை அதிகமாகக் கவனிக்க வேண்டியது ஆசிரியருடைய கடமை. ஆகையால் எந்தப் பாடத்தில் அதிகத் தேர்வெண்கள் பிள்ளைகள் பெற் றிருக்கிருர்களோ அதற்கு ஓரிரு அகவைகளைக் குறைத்துத் தேர்வுக் குறைவுள்ள பாடத்துக்கு அதிக அகவைகள் கொடுக்க வேண்டியது கடமை. இஃது உண்மையான தேவைப்பாடு. இதனை ஒவ்வொரு வகுப்புப் பிரிவிலுமுள்ள பிள்ளைகளுடைய ஒவ்வொரு தேர்வெண்களை மதிப்பீடு செய்து வேண்டிய திருத்தங்களைக் கால அட்டவணையின் மூலம் தேடுவதே சிறந்த முறை. அல்லாது தேர்ச்சி மிக்குற்ற பாடங் களுக்கும் தேர்ச்சிக் குறைவுள்ள பாடங்களுக்கும் ஒரே எண்ணிக்கை அளவைகள் ஆண்டு முழுவதும் அளித்தல் கண்மூடித்தனம். எனவே ஒவ்வொரு தேர்வுக்குப் பிறகும் ஆசிரியர்கள் தலைமையாசிரியரை அணுகிப் பாட அகவைகளை வேண்டியபோதெல்லாம் மீண்டும் மீண்டும் மாற்றிப் பகிர்ந்து கொள்ளவேண்டும். எந்தப் பள்ளி தேவைப் பாட்டுக்

கேற்ப வேண்டிய போதெல்லாம் கால அட்டவணையை மாற்றி அமைக்கின்றதோ, அது முற்போக்குப் பள்ளியின்பாற் பட்டதாகும். பள்ளியின் தேவைப்பாடு—சிறப்பாக மாணவரின் தேவைப்பாட்டுக்கே கால அட்டவணை குறிக்கப் பெறுகின்றதன்றிப் பள்ளியின் வேலையை ஓர் ஒழுங்குக்குக் கொண்டுவந்து அந்த ஒழுங்குக்காக அதன் உயிர்ப்பினைப் போக்குவதற்கன்று. தேவைப்பாட்டுக் கேற்பக் கால அட்டவணையை மாற்றினல் ஆசிரியருக்கு ஏற்படும் வேலையில் மந்தமும், மாணவருக்கு ஏற்படும் கற்றலில் வெறுப்பும் விரைந்து நீங்கும். அப்போதுதான் பிள்ளைகளும் தமது தேவைப்பாட்டினை அறிவதோடு தேவைப்பாட்டுணர்ச்சியையும் பெறுவர். தலைமையாசிரியர் ஒவ்வொரு தேர்வுக்குப் பிறகும் ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்கும் வேண்டியவற்றைப் பற்றிக் கலந்து பேசிப் பள்ளித் தேவைகளைப் பற்றிச் சிந்தித்தல் வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு பாடமும் ஆசிரியரின் கவனத்தையும் பிள்ளைகளின் கவனத்தையும் பெறுதற்குரியதாகும். ஆசிரியர்கள் பாடதிட்ட மிடுவதற்கும் பிள்ளைகளுக்கு வழிகாட்டுதற்கும் கல்வி ஏற்பாட்டின் மொத்த அனுபவங்களைத் தருவதற்கும் உதவுதலே சிறந்தது.

17. காலைக் கூட்டம்

எல்லாப் பள்ளிகளும் காலைக் கூட்டத்தோடு தொடங்குகின்றன. இதை வழிபாட்டுக் கூட்டம் என்றும் கூறுவர். இக்கூட்டம் மிக முக்கிய மானது. பல பள்ளிகள் காலை பத்து மணிக்குத் தொடங்குகின்றன. பிள்ளைகள் நேரத்தோடு பெரும்பான்மை வந்துவிடுவார்கள். சிலர் நேரங்கழித்து வந்துகொண்டே இருப்பார்கள். ஆசிரியர்களும் எத்த கைய கட்டுப்பாடிருப்பினும் நேரத்திற்கு வராது யாதாயினும் காரணங் காட்டி மன்னிப்புக் கோருவர். அல்லது விதிவிலக்கையும் பெறுவதற்கு விதி விளக்கமும் செய்வர். பள்ளிக் கடிகாரம் இரண்டு மணித்துளிகள் முன்னோடுகின்றதென்பர். தலைமையாசிரியராயினும், ஆசிரியராயி னும், மாணவராயினும், யாவராயினும் குறித்த பள்ளி நேரத்திற்குள் வருதல் கடமை. பத்து மணிக்குப் பள்ளித் தொடக்கமாயினும் ஒன்பது நாற்பத்தைந்துக்கு முதல் மணி அடிக்கலாம். பிள்ளைகள் எல்லோரும் பள்ளிக்குள் நுழைந்து விடுவார்கள். பள்ளிக்கு வந்த பிள்ளைகளும் வெளித்திடல்களில் விளையாடுவது வழக்கம். அவர்களும் மற்றவர் களும் பள்ளிக்குள் வந்தாக வேண்டும். நுழைவுற்ற பிள்ளைகள் தமது வகுப்புக்களுக்குள் நுழைந்து தமது இடத்தில் அமருவதற்கு ஐந்து மணித்துளிகள் கொள்ளுமாகையால் ஒன்பது ஐம்பதுக்கு இரண்டாவது மணி அடிக்கலாம். ஆசிரியர்களும் அந்த நேரத்துக்குள் பள்ளிக்குள் நுழைந்துவிட வேண்டும். நாட் பதிவு ஏட்டினை எடுத்துக் கொண்டு தமது வகுப்புக்குச் சென்றுவிட வேண்டும். ஒன்பது ஐம்பது முதல் ஒன்பது ஐம்பத்தைந்துக்குள் வருகைப் பதிவு ஆசிரியர் செய்து விடலாம். பிறகு பிள்ளைகளை ஒழுங்காகச் செலுத்திக்கொண்டு இறை வணக்கக் கூட்டத்தில் தமது வகுப்புக்கென வகுத்திருக்கும் இடத்தில் பிள்ளைகளை வரிசைப்படுத்தி நிற்கச் செய்து தாம் அவர்கள் பக்கலில் நிற்றலே சிறந்த எடுத்துக்காட்டு. ஆசிரியர் நிற்றலைக் காணும் பிள்ளை கள் தாமும் அவர்களைப் போன்று நிற்பார்கள். இங்ஙனம் ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும், ஆசிரியர்களும் ஒன்பது ஐம்பத்தைந்துக்குள் வந்து நிற்றல் வேண்டும். எல்லா வகுப்புக்களும் பகர வடிவத்தில் நிற்றலை வரவேற்கிறோம். பகர வாயிலில் மாணவர் தலைவனும் தலைமை ஆசிரியனும் இறைவணக்கம் பாடும் பிள்ளையும் நிற்றலே சிறந்த காட்சி. பிள்ளைகள் எல்லோரையும் நிற்க வைத்து விட்டு ஆசிரியர்கள் நிழலில் நின்று கொள்ளுவது கண்டிக்கத் தக்கது. பிள்ளைகளோடு ஆசிரியர்கள் நின்றாலன்றி, ஆசிரியரை இறைவணக்கத்தின் கோலத்தில் கண்டாலன் றிப் பிள்ளைகள் கூட்டத்தில் இறைவணக்க நாட்டத்தோடு காட்சி அளிக்கமாட்டார்கள். கூட்டத்தின் குறிக்கோள் இறைவணக்கத்தின் பெயரால் பள்ளி அமைதியைத் தொடங்கிப் பள்ளித் தொடக்கத்தினை அறிவுறுத்துவதேயாகும். எனவே இறை வணக்கத்தின் நாட்டம் இன்றியமையாதது.

இறைவணக்கத்திற்காக நீண்ட இசைப் பாடல்களைப் பாட வேண்டியதில்லை. மேள தாளத்திற்குரிய பாடல்கள் பள்ளி இறை வணக்கத்திற்குத்தகா. நான்கடிகள் உள்ள ஒரு விருத்தப் பாவினை உள்ளத்தைத் தொடும்படி இசைத்தால் போதும். இரண்டு மணித் துளிகளுக்கு மேல் இறைவணக்கம் நீடிக்க வேண்டியதில்லை. அதன் பிறகு சில பள்ளிகளில் நாளுக்கு ஒரு பொருளென ஒரு வள்ளுவக் குறளினை ஓதி அதன் விளக்க உரையினை ஒரு மாணவன் நிகழ்த்துவதுண்டு. இதனாலும் நேரம் அதிகமாகலாம். ஏனெனில் மாணவர்கள் சிலர் பேச்சினை நீட்டிவிட்டால் பிள்ளைகள் பொறுமையை இழந்து விடுவர். அதனால் அமைதி குலைவுறும். எனவே இறை வணக்கம் முடிந்தவுடன் தலைமையாசிரியர் விடுக்க வேண்டிய செய்திகளை விடுத்துப் பிள்ளைகளை வகுப்புக்களுக்கு அனுப்பிவிடுவது நன்று. மூன்று மணித்துளிகளுக்கு மிகாது கூட்டம் நடைபெறலாம். எஞ்சியுள்ள இரண்டு மணித்துளிகளுள் பிள்ளைகள் அமைதிக் கோலத்தோடு தத்தமது வகுப்பறைக்குள் சென்று அமர்தல் வேண்டும். ஆசிரியரும் அவர்கள் வரிசை இறுதியில் சென்று சரியாகப் பத்து மணிக்குப் பள்ளி மணி அடித்தவுடன் பாடத்தைத் தொடங்கினால் அதைக்காட்டிலும் பள்ளி அளிக்கக்கூடிய காட்சி வேறில்லை. அல்லாது நிழலடியில் நின்ற ஆசிரியர்கள் மீண்டும் நேராக ஆசிரியர் அறைக்குள் சென்று அங்கு சிறிது நேரம் வாயாடிவிட்டு மெதுவாக வகுப்பறைக்குள் செல்வது மிக மிகக் கண்டிக்கத் தக்கது. வகுப்பறையில் பாடஞ் சொல்லும் ஆசிரியரை யாரும் அழைத்து நேரத்தை வீணாக்குதல் கூடாது.

காலைக் கூட்டத்தை நீண்ட நேரம் நீட்டிக் கொள்ளுதல் மிகத் தவறு. தலைமையாசிரியர் சிலர் தாம் பேசிப் பழகுவதற்கு நீண்ட நேரம் ஓர் அறிவிப்பினை நீட்டிக்கொண்டே இருப்பார்கள். பிள்ளைகள் எல்லோரும் வெய்யிலில் நின்றுகொண்டே இருந்தால் சிலர் மயக்கம் போட்டு வீழ்வார்கள். உதவி ஆசிரியர்கள் அத்தகைய வெற்றுப் பேச்சினை வெறுப்பார்கள். மாணவர்கள் அமைதி இழப்பார்கள். இறை வணக்கம் அலங்கோலமாகும். பள்ளி இறைவணக்கத்தின் காட்சி நல்லதாக அமையும்படி ஆசிரியர்கள் ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

சென்னை மாநிலத்தில் புதிய ஆணையொன்று கல்வி இயக்குநரால் பிறப்பிக்கப் பெற்றுள்ளது. அதன்படி வாரத் தொடக்க நாளாகிய திங்களன்று காலைக் கூட்டம் சிறப்பாக நடைபெறவேண்டும். அப்போது கூட்டத்தில் பிள்ளைகளை அணிவகுத்த பிறகு கொடியேற்று விழா நடத்தி நாட்டு வாழ்த்துப் பாடவேண்டும். சில பள்ளிகளில் அஞ்ஞான்றுப் பிள்ளைகளைப் பள்ளிச் சீருடையில் வரும்படிப் பணிக்கின்றார்கள். பள்ளிச் சீருடைக் காட்சி நல்லதொரு காட்சியேயாகும். ஏழை என்றும் செல்வர் என்றும் பாகுபாடின்றிப் பிள்ளைகள் ஒரே உடையில் அளிக்கும் காட்சி விரும்பத்தக்கது. இதுவே பள்ளிச் சமூக ஒருமைப்பாட்டினுக்கு அடிகோலுவதாகும்.

18. பாடப் புறச் செயல்கள்

பண்டைய ஆசிரியர்கள் தமது வகுப்பில் தாம் கொண்டதே கோலம் என்றும் தாம் பாடங்களில் அளித்ததே பிச்சை என்றும் கருதி வந்தார்கள். அங்ஙனமே மாணவர்களும் வகுப்பறையில் கற்றதே கல்வி பள்ளியில் பெற்றதே அறிவு என்று முடங்கிக் கிடந்தனர். வகுப்புதோறும் அவர்களுக்குக் கற்ற பாடங்கள் தவிர வேறென்றும் தெரியாது. தம் வகுப்பு மாணவத் தோழர்களைத் தவிர அவர்கள் வேறு யாரையும் தெரிந்துகொள்ள மாட்டார்கள். பள்ளியும் வீடும் தவிர வேறு எதுவும் தெரியாது. ஆனால் அவர்கள் பள்ளிப் படிப்பில் நல்ல தேர்ச்சி பெற்றார்கள். இற்றை நாட்களில் கல்வியின் குறிக்கோள்கள் மிகப் பரந்து விளங்குகின்றன.

கற்பித்தல் வெறும் பாடங்களோடுமட்டும் நின்றுவிட்டால் அதனாற் பெறும் பயன்கள் சிலவென்றே கருதுகிறார்கள். கல்வி, மாணவர்களது ஆளுமைத் திறன்களையும் பண்பாடுகளையும் வகுக்க வழி செய்ய வேண்டுமென்ற ஒரு திருப்பம் பெற்றுள்ளது. கல்வி வாழ்க்கைப் பயிற்சியை அளித்தாலன்றிக் கல்வி ஆகாதென்றும் கருதப்படுகிறது. ஏட்டுக்கல்வி தேர்வுக்கு மட்டும் உதவுகின்றதேயன்றி வாழ்க்கைக்கு உதவாதொழிகின்றது. ஒரு மாணவன் கொள்ளும் தொடர்பு, அவனுடைய இல்லம், உற்றார், உறவினர், நண்பர், அவன் படிக்கும் புத்தகங்கள், அவனுடைய பொழுதுபோக்கு, விளையாட்டு, அவனுடைய பள்ளி ஆகியவற்றோடாகும். இவை யாவும் புறச்சூழ்நிலைகள். இவை ஒவ்வொன்றும் மாணவன்பால் செல்வாக்குப் பெறுகின்றன. இவற்றிற்கும் பள்ளிப் பாடங்களுக்கும், ஆசிரியர் பணிக்கும் தொடர்புள்ளதாயினும் இவற்றின் செல்வாக்கு மிகுந்த காரணத்தால் இவை நன்மையாக அமைதற் பொருட்டும் இவை நல்ல முறையில் பிள்ளைகளுடைய வளர்ச்சிக்கு வழிகோலும் பொருட்டும் நம் பள்ளிகள் மாணவர்களின் முழு வளர்ச்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளன. இப்பொறுப்பு மிகப் பெரியதாகும். இதனால் ஆசிரியர்கள் தமது பொறுப்பெல்லாம் பாடப்படிப்பு ஒன்றினை மட்டும் ஒட்டியதென்று நினைக்காது, பிள்ளைகளின் முழு வளர்ச்சியினைச் சார்ந்ததென்றும் அம்முழு வளர்ச்சி உடல், உள்ளம், ஆன்மா ஆகிய மூன்றையும் விரவியதென்றும் கருதுகிறார்கள். பழைய கல்வி ஏற்பாடுகளில் பாடக்கல்வி ஒன்று மட்டுமே இடம்பெற்றது. பாட அறிவு ஒன்றினை மட்டுமே பிள்ளைகளுக்கு அளிப்பது என்னுது இப்போது உள்ள கல்வி ஏற்பாடுகள் பிள்ளைகளின் முழு வளர்ச்சியினையும் பற்றிக்கொண்டுள்ளன. இதனால் புதிய கல்வி ஏற்பாடு மாணவர்களை உருவாக்கும் பொறுப்பினை ஏற்றுள்ளது. எனவே அவர்களுடைய ஆளுமைப் பகுதிகள் எல்லாவற்றையும் ஆசிரியர் கண்காணிக்க

வேண்டியதாகின்றது. அதனால் பாடங்களேயன்றிப் பல செயற்பாடுகள் வாழ்க்கை அடிப்படையில் பள்ளிப் பொறுப்பில் சேர்க்கப்பெறுகின்றன. இவை ஒவ்வொன்றும் மாணவர்களுக்கு ஈடுபாட்டின் பயனால் பல சமூகப் பழக்கங்களைத் தந்து குறிக்கோள்களைத் தோற்றுவித்து நல்ல குடிமக்களாக்கக் கூடும். கல்வியே வாழ்க்கை என்ற கருத்துப் புறமாகா தென்ற உண்மையால் இவை கல்வி ஏற்பாட்டோடு இணைந்த செயல்க ளென்று கருதப்பெறுகின்றன. சில காலம் அவை புறச் செயல்களாகவே இயங்கி வந்தன. ஆனால் தற்போது பள்ளியோடு இணக்கமுற்ற செயல்களாகி விட்டன.

மாணவர்களுக்குப் பல துறைகளில் தக்கப் பருவத்தில் பயிற்சி யளிக்கக் கூடியது பள்ளி ஒன்றே என்று அறுதியிட்டுள்ளார்கள். பள்ளி வாழ்க்கைக்கும் சமூக வாழ்க்கைக்கும் வேறுபாடு காண முடியாதிருத் தலே நலமெனக் கண்டுள்ளார்கள். அல்லாக்கால் பள்ளி நடைமுறை யும் புறவாழ்க்கை நடைமுறையும் வேறுபட்டுக் காணப் பெறுமன்றோ? பள்ளிப் புறச்செயல்களில் அவர்கள் பெறும் பங்கு அவர்களுடைய விருப்பங்களை ஒட்டியது. அத்தகைய செயல்களில் அவர்களுடைய வெளி ஆற்றல், விருப்பாற்றல் ஆகிய வழிகளால் அவர்கள் பெறும் அனுபவங்களே உண்மைக் கல்வியாகும். நட்புக் கொள்ளுதல், கூட்டத்தோடு ஒத்துழைத்தல், போட்டி மனப்பான்மை, திறமை வெளிப்பாடு, சுயநல மின்மை ஆகிய சில பண்புகள் இளமைக்குரியவை. இவற்றாலான பண்பாடுகள் வளருகின்றன. புதிய உணர்ச்சிகள் ஏற்பட்டு அவை பற்றுக்கள் ஆகின்றன. புறச்செயல்கள் நல்ல ஈடுபாடு பெறும் மாணவர்களுக்கு ஒத்துழைத்தல், தலைமை ஏற்றல், பிறர் நலம் பேணுதல், தன்னடக்கம், பொதுப் பண்பாடுகள் ஒழுங்குணர்ச்சி ஆகிய வற்றை வளர்க்கக் கூடியவை. எனவே செயல் முறைகளை வகுப்புப் பாடங்களோடு ஒட்டியும் அவற்றைப் புற நிகழ்ச்சிகளாக விடாது பாட நிகழ்ச்சிகளாக அமைத்தும் விடுகிறார்கள். எனவே வகுப்புப் பாடங்கள் வேறு, செயல்கள் வேறு என்று வேறுபாடின்றி ஒன்றாகவும் அமைக்கப் படுகின்றன. மாணவர்கள் தமது உரிமையிலும் விருப்புக்களிலும் பள்ளிப் பழக்கம் ஏற்படுவதற்கு முன்னர் அக்கறை பெறுகின்றனர். ஆகையால் பள்ளிகளில் அவற்றிற்கு வழிவகுத்தல் அவர்களுடைய இயற்கை வளர்ச்சிக்கு ஏதுவாகும்.

கல்வியாளர்கள் பள்ளிப் புறச் செயல்களைக் கல்விக் கண்களோடும் ஆராய்ந்துள்ளார்கள். பள்ளிச் சமூகத்தில் ஏற்படும் பொருத்தப்பாடு புறச் செயற்பாடுகளினால் நல்ல முறையில் அமையக் கூடுமென்று கொண்டுள்ளார்கள். இது புறச் சமூகத்தோடு பொருத்தப்பாடு கொள்ளு வதற்கு உதவும். சமூகப் பண்பாடுகளை வளர்ப்பதே கல்வியின் முக்கிய கட்டம் என்று கருதுபவர்கள் சமூகத் திறமையால் வளம் பெருகு மென்று பள்ளிகளில் பாடத்திற்குப் புறம்பான செயல்களைப் புனிதமாக்கு கின்றார்கள். பண்டைப் பள்ளிகளில் உடன் பிறப்புணர்வு, ஒற்றுமை

வாழ்வு, மனிதனை மனிதனுகக் கருதுவது, சமத்துவம் ஆகியவற்றை உயர்ந்த குறிக்கோள்களாக ஆசிரியர்கள் அறிவுறுத்தினர். ஆனுல் அவை வெறும் பேச்சளவில் நின்றன. மாணவர்கள் அவற்றைத் தமது வாழ்க்கை அனுபவங்களில் அறிவதற்கு வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. நல்ல குடிமகனுக வாழ்வதற்கும் வாழ்வாங்கு வாழ்வதற்கும், அனுபவம், நற்பழக்க வழக்கங்கள், நல்வழிகள், நன்னெறிகள் ஆகியவற்றை வாய் வழியாகப் புகட்டாமல் அனுபவங்களில் காண்பதற்குச் செயற்பாடுகள் மூலமாகப் பயிற்சி அளித்தல் நன்று. எத்துணையளவு அவற்றை வாயால் மொழிந்தாலும் ஒரு சிறிதளவு அனுபவத்தில் பெறுவது உணர் வினைத் தொடக்கூடியது. ஓய்வு நேரங்களை நமது மாணவர்கள் ஒழுங்கற்ற முறைகளில் செலவிடாமல் தமக்கும் பிறருக்கும் பயன்படும் படி அமைத்துக்கொள்ளப் புறச்செயல்கள் உதவும். பள்ளிகளில் தலைமை ஏற்பதற்கு வாய்ப்பினையும் அதில் வெற்றியும் பெற்ற மாணவர்கள் வாழ்க்கையிலும் தலைமைப் பணிகளைப் பெறுவதற்கு முயல்வார்கள். குமரப்பருவத்தில் பல நலப்பாட்டிற்கும் அவற்றிற்கு நல்ல திருப்பம் தருவதற்கும் அவற்றை வாழ்க்கைக்குப் பயனுறச் செய்வதற்கும் புறச் செயல்கள் உதவுபவை. இத்தகைய நன்மைகள் யாவற்ருலும் ஆளுமைத்திறனும் பலபடியாக வளர்ச்சியுறும் என்பதில் ஐயமில்லை. மாணவர்கள் சமூகத்தில் தொண்டாற்ற வேண்டியிருக்கிறது. பள்ளியில் தொண்டாற்றிப் பழக்கம் பெற்ருலன்றிச் சமூகத் தொண்டாற்றுவதற்குத் தயக்கம் ஏற்படும்.

பள்ளிச் சமுதாயத்தில் பலபடப் பழகுவதால் பிள்ளைகள் சிலர்பால் ஓரளவு எதிர்மறைக்குணங்கள் இருந்தாலும் அவை நீக்கம் பெறும். தான் வேறு, பிறர் வேறு என்று கருதும் மனப்பான்மை சில இல்லங் களில் வளர்க்கப் பெற்ருலும் பள்ளியில் பெறும் சமூகப் பழக்கத்தால் மாறுபட்ட மனப்பான்மை நீக்கம் பெற்றுத் தாம் பழகும் குழுக்களோடு தாமுமொன்றென்ற உளப்பாங்கு உண்டாகிச் சமூகப் பொருத்தப்பாட் டினுக்கு அடிகோலும். இங்ஙனம் பாடத்துக்குப் புறம்பான செயல்கள் நல்ல பண்பாடுகளை வளர்க்கக் கூடியவை. அவை மாணவர்களுக்கு ஏட்டுக் கல்வியின் பயனை அருவமாக விடாது பலவகை ஆக்கங்களாக வாழ்க்கை நிலைகளோடு வாழவைப்பதற்கு வழி செய்பவை. இவை பாடங்களுக்குப் புறம்பென்று அன்று தொடங்கப் பெற்று இன்று பாடங் களோடு ஒன்றியவையாக ஆகிவிட்டன. இன்றைய பள்ளிகளில் ஏட்டுக் கருத்துக்கள் செயல்களைக் கருக்கொள்ளவேண்டிய கடமை ஏற்பட் டுள்ளது. ஒவ்வோர் ஆசிரியரும் மாணவர்களை ஆட்டிப்படைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆட்டிவைத்தால் ஆடி ஆக்கங் கொள்ளுவது இன்று நம் பள்ளிகளில் கண்கூடு. எனவே ஆசிரியர் கடமை வெறும் ஏட்டுப் படிப்போடு நிறுத்திவிடாது பிள்ளைகளுக்குப் பலவகை அனுபவங்களை அளித்து அவர்களுக்கு ஐம்புலன்களின்

வழியாகப் பல ஆற்றல்களோடு கூடிய பழக்கங்களை உருவாக்குதலே யாகும்.

பாடப்புறம்பான செயல்களைப் பாடங்களோடு இணைந்த செயல்கள் எனக் கருதுவதை ஒரு சாரார் கண்டிக்கிறார்கள். பாடங்களைக் கற்பித்த பிறகு கற்றல் தகுதிகளை அளவிடுவதற்கு அளவு கோல்கள் உண்டு. ஆனால் செயற்பாடுகளில் தகுதிகளை அளவிடுவதற்குக் கருவி கள் இல்லாக் காரணத்தால் அவற்றைப் பாடங்களினின்றும் பிரிக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். பெரும்பாலும் ஆசிரியர்கள் ஏட்டுப் படிப்பில் ஈடுபாடு கொண்டவர்களாகையால் அதற்குப் புறம்பானவற் றைச் சிலர் குறை கூறுகிறார்கள். மேலும் பெற்றோர்களும் பிள்ளைகள் புத்தகங்களை ஏந்தாமல் செயற்பாடுகளில் இயங்குவதைக் கண்டால் பள்ளிகள் தமது பொறுப்பினை நழுவவிட்டதாகக் கருதுகிறார்கள். அதனால் மேலை நாடுகளில் சிறப்பாக அமெரிக்காவில் முற்போக்குப் பள்ளிகளைக் கண்டிப்பவர்களும் உள்ளாரன்றோ! செயற்பாடுகள் மேலிட் டால் பிள்ளைகள் தமது பாடங்களைப் புறக்கணிப்பார்கள் என்றும் ஓர் அச்சம் நிலவுகின்றது. ஆனால் அனுபவத்தை ஒட்டிய கல்வி ஆணித் தரமான கல்வி என்று கொள்ளுதல் ஏற்புடைத்து. அத்தகு பாட ஏற் பாட்டால் ஆசிரியர்கள் தமது பாடப் பொறுப்புக்களினின்றும் தவறி விடுவார்களென்ற ஓர் ஐயப்பாடுமுளது. ஆனால் நமது பள்ளிகள் பாடங்களை விற்பனை செய்யும் நிலையங்களல்லவாகையால் அத்தகைய ஐயப்பாடு வேண்டியதில்லை.

1. மாணவர் குழு

நம் பள்ளி நடப்பெல்லாம் ஆசிரியர்களுக்கேயன்றி மாணவர்களுக் கும் உரியவை. மாணவரில்லையேல் பள்ளி இல்லை. பள்ளி ஆட்சியில் ஓரளவு மாணவர்களுக்குப் பங்களிப்பது கல்விப் பயிற்சியின் ஒரு தலையாய கடன். மாணவர்கள் தமது பள்ளிகளைத் தமதென்றே கருது வது நல்லது. சில மாணவர்கள் தம் பள்ளிகளைப் பெருமையோடு நினைவுபடுத்திக் கொள்ளுகின்றனர். அங்ஙனமே மாணவர்களையும் பள்ளி ஆசிரியர்கள் பெருமை பாராட்டிக் கொள்ளுகிறார்கள். இவை இரண்டுக்கும் அடிப்படையில் உள்ளது பள்ளிக்கும் மாணவர்களுக்கும் ஏற்படும் அன்பு நிலை. மாணவர்கள் பள்ளிக் கட்டடத்தின்மீது அன்பு செலுத்துபவர்கள் அல்லர். பள்ளிக் கட்டடத்தை விரும்புவது இயல்பு. அதன் துணைக்கருவிகளைப் பாராட்டுவது மரபு. ஆனால் அவர்கள் அங்குப் பணியாற்றும் ஆட்சியினரை, ஆசிரியப் பெருமக்களை அன்போடு காணல் விரும்பத்தக்கது. அன்பு அன்பினைப் பெறுமேயன்றி வெறுப் பினைப் பெறாது. அதனால் மாணவர்களுக்கு ஈடுபாடு அளிப்பதற்கு ஆசிரியர்களுடைய அன்புறவு வேண்டும். தாங்கள் படிக்கும் வரையில் பள்ளியினைத் தமது பள்ளியென்று மாணவர்கள் கருதுதல் வேண்டும். தமது இல்லம் என்ற ஒரு பற்று வளருகிறது. அதைப் போன்று தமது

பள்ளி என்ற பற்றும் வளருவது நல்லது. அதனுல் மாணவர் குழு ஒன்று அமைத்து அக்குழுவில் பள்ளியைக் குறித்த பல சிக்கல்களைப்பற்றி ஆலோசனை செய்வது நன்று. குழுவின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். தேர்தல் நிகழ்த்துவதற்குப் பள்ளி மாணவர்களைப் பல தொகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதிக்கும் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தலும் நல்லது. தேர்தல் குடியாட்சி முறையில் நடைபெறுவதே நன்று. தொகுதிகள் பள்ளியின் பல செயல்களை அடிப்படையாகக் கொண்டவையாக இருத்தலே சிறந்தது. மாணவர் குழுவின் நோக்கங்களையும் செயல் முறைகளையும் வரைந்து தெளிவு படுத்துதல் நல்லது.

மாணவர் குழு பொதுவாகப் பள்ளியின் நன்மையைக் கருதுவதாக வேண்டும். பள்ளியின் பல துறைகளை ஒட்டியதாகவும் வேண்டும். ஒரு துறைக்கு மற்ருென்று முரண்படாது ஒற்றுமையை நாடுதல் வேண்டும். பள்ளி ஒழுங்கும் கட்டுப்பாடும் மாணவர்கள் பொறுப்பாக இருத்தல் வேண்டும். பொதுவாகப் பள்ளி நிகழ்ச்சிகளில் ஏதாவதொன்றினை எந்தப் பகுதியிலாயினும் மாணவர்கள் வேண்டுமென்று கருதினுல் அதனைப் புலப்படுத்துவதற்கு இக்குழு ஒரு வாயிலாக வேண்டும். நல்ல முறையில் குழுவின் வழியாக மாணவர்கள் நிறைவினைப் பெறலாம். பொதுவாக மாணவர்களுடைய ஒற்றுமைக்குள்ள ஒவ்வொரு பள்ளி நிகழ்ச்சியும் நன்ருக ஒளிவிடும். ஆசிரியர்கள் கோல் கொண்டு அரட்டியும் கூவியும் சாதிப்பனவற்றில் மாணவர்களுடைய பேரார்வத்தைக் காணமுடியாது.

மாணவர் குழுவிற்கு அவர்களைப் பற்றிய எல்லாச் சிக்கல்களையும் விவாதிக்குமாறு விட்டுக் கொடுக்கலாம். பொதுவாக மாணவர் நலன்கள், புறச் செயற்பாடுகள் ஆகியவை மாணவர்தம் பொறுப்பாகவே இருந்தால் இடர்ப்பாடு ஒன்றும் நிகழாது. இக்குழுக் கூட்டங்களில் தலைமையாசிரியரும் ஓரிரண்டு உதவி ஆசிரியர்களும் நிலைத்த உறுப்பினர்களாக இருந்து மாணவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறலாம். மாணவர்கள் தவறுதலாகக் கருத்துக்களைத் தெரிவித்தால் அவற்றைக் கோபத்தோடு கண்டிக்காதும் பிழைகளைச் சுட்டிக்காட்டாதும் அவர்களை மாணவர்களென்று எளிதாகக் கருதாதும் அவர்களுக்குச் சமத்துவம் அளித்துக் கருத்துக்களுக்குச் செவிசாய்த்த பிறகு ஆசிரிய உறுப்பினர்கள் தமது கருத்துக்களை அவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தி அவர்களுடைய உடன்பாட்டினை ஒருமனதாகப் பெறுவதே ஏற்புடைத்தாம். மாணவ உறுப்பினர்களைத் துச்சமாகத் தூற்றினுல் அவர்கள் நல்லுணர்ச்சியை இழந்து விடுவார்கள். இத்தகைய குழுக்களின் நடைமுறைகள் சரிவர நடைபெறுவதற்கு அவற்றின் கூட்டங்கள் வேண்டியபோதெல்லாம் கூறவேண்டும். ஒவ்வொரு செயலைப் பற்றியும் பிள்ளைகள் தாமாகவே தீர்மானம் செய்வதாக வேண்டும். அவர்களுடைய ஒருமன முடிவுகள் இல்லையென்ருல் செயற்பாடு நன்ருக

நிகழாது. ஆசிரிய உறுப்பினர்கள் அல்லது தலைமையாசிரியர் தமது கருத்துக்களை வற்புறுத்தினும்கூடப் பிள்ளைகள் வற்புறுத்தலுக்கு ஆட்படாது பல கருத்துக்களைத் தரும் ஆற்றல் உடையவர்கள்.

அவர்களுடைய குறிக்கோள்கள் எல்லாம் சிறந்தவையாகக் காணலாம். ஆனால் தீர்மானங்கள் செய்வதைத் தவிர செயலாற்றும் அனுபவம் குறைந்தவர்களாகையால் வயது முதிர்ச்சியினால் அனுபவம் அதிகமாக உள்ள தலைமையாசிரியர் தீர்மானங்களை உருவாக்குவது சிறந்தது. எனவே அவற்றில் அவர் விழிப்பு வேண்டற்பாலது. எத்தீர்மானத்தாலும் இடர்ப்பாடு உண்டாதல் கூடாது. தலைமையாசிரியரின் வேறு பொறுப்புக்கள் இத் தீர்மானத்தால் பாதிக்கப்படலாகாது. ஏனென்றால் அவர் அரசாங்கம், நிர்வாகம், பொதுமக்கள் ஆகிய மூன்று திறத்தினருக்கும் பொறுப்பாவார். அதனால் மாணவர்களுடைய செயல்கள் அவ்வுறவுகளைக் கெடுக்கலாகாது. எனவே தலைமையாசிரியர் மாணவர் குழுவின் இழுக்குற்ற தீர்மானங்களை விலக்கி ஒதுக்கவேண்டும். ஒதுக்குவதோடு பிள்ளைகள் கொள்ளும் தீர்மானங்களினால் அவர்களும் பாதிக்கப்பெறுவர் என்ற ஓர் எண்ணத்தையும் தூண்டுதல் வேண்டும். அப்போதுதான் பொறுப்பு மிகுதாரப் பொறுப்பினை ஆற்றுவார்கள். பெயரளவில் மாணவர் குழுவினை அமைத்துக் கொள்ளுவதும் அல்லது பணியாற்றுகையில் ஆசிரிய உறுப்பினர்களும் மாணவர்களும் முரண்பட்டுக் கொள்வதும் மாணவர் குழு ஒரு கட்சியாகிச் சதி செய்தலும் விரும்பத் தகாதவை. ஒரோவழி ஆசிரிய உறுப்பினர்கள் மாணவர்களைப் பொறுப்பேற்க விட்டு விட்டு ஒதுங்கி நின்று தம்மீது தவறு வராதபடி தவிர்த்துக் கொள்ளுவது மிகக் கண்டிக்கத் தக்கது. ஆசிரியர்கள் குழுவின் தீர்மானங்களோடு பங்கு கொள்ளுவதோடு நில்லாது மாணவர்களுடைய செயற்பாடுகளில் உதவவும் வேண்டும். மாணவ உறுப்பினர் தமக்குக் கிடைத்த வாய்ப்பினைத் தமது பொறுப்பாக மட்டும் நினைக்காது அது தமக்குத் தொண்டாற்றும் வாய்ப்பினையும் தர வல்லதென்று கருத வேண்டும். வேண்டிய போதெல்லாம் தலைமை ஆசிரியர் கூட்டத்தைக் கூட்டிப் பள்ளியின் அன்றாடச் சிக்கல்களை மாணவர்களோடு கலந்து ஆலோசித்தல் நல்லது. மாணவர்களுடைய கருத்துக்களைப் பெற்று அவற்றிற்கேற்ப அவர்களுடைய செயற்பாடுகளை அமைத்தலும் நன்று.

செயற்பாடுகள் நிகழும்போது மாணவர்கள்பால் நம்பிக்கை வேண்டும். அவர்களுடைய திறமையை ஐயுறுதல் ஆகாது. வேண்டுமென்றால் பெரியோர்கள் பின்னிருந்து கருத்துக்களைத் தரலாம். அவர்கள் பெயரால் ஆசிரியர்கள் பொறுப்பேற்றால் மாணவர்கள் அதை வெறுப்பார்கள். பள்ளியின் நன்மை அவர்களுடைய நன்மை என்று வற்புறுத்திக் கொண்டிருந்தால் போதும். மாணவர்கள் தாமாகவே பொறுப்பேற்றுப் பழகினாலன்றி அவர்கள் உற்ற அனுபவங்களைப் பெற இயலாது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் விரும்புபவர்களை யெல்லாம்

இணைத்துக் கொள்ளுவது நல்லது. முதற்கண் சிறிய பொறுப்புக்களை யும் நாளடைவில் பெரிய பொறுப்புக்களையும் அவர்கள் பெறும் அனுப வங்களை அடிப்படையாகக் கொண்டு தரலாம். நல்ல பள்ளிகளில் பள்ளிப் பொறுப்புக்கள் எல்லாம் மாணவர்கள் தமதென்று ஏற்றுக் கொள்ளுகின்றார்கள். அத்தகைய பள்ளிகளில் பிள்ளைகள் பெறும் அனுப வங்கள் மிகவும் சிறந்தவை. ஆசிரியர்கள் ஆங்கே கொண்டுள்ள விழிப்பும் கண்காணிப்பும் மிகவும் பாராட்டத் தக்கவை. ஆசிரியர்களு டைய பொறுப்புணர்ச்சியையும் மாணவர்கள் தமது சார்பில் கண்டு மதிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆசிரியர்கள் மறத்த லாகாது.

மாணவர்களுக்கு அளிக்கக்கூடிய ஒரு சில பொறுப்புக்கள் பின்வரு மாறு :—வகுப்பறைகளின் துப்புரவு, பள்ளிப் பெருநிலத்தின் துப்புரவு, பள்ளியின் நலப்பாங்கு, [1] முற்காப்பீடு, பள்ளிப் பொருட்களைக் காத்தல், பள்ளி ஒழுங்கு, பள்ளித் தோட்டவேலை, பள்ளி விழாக்கள், பள்ளியை அழகுபடுத்துதல், விழாக்களில் அமைதி, நோய்வாய்ப்பட்ட மாணவர் களைக் காத்தல், பள்ளியின் வெளிச் செலவு, புதிய மாணவர்களை வர வேற்றல், பள்ளிக்கு ஒழுங்காக வருதலைக் கண்காணித்தல், காலந் தாழ்த்தி வருதலைக் கண்டித்தல், பள்ளிக்கு வரும் விளையாட்டுக் குழுவி னரை உபசரித்தல், கலைக்கூடம், வீட்டுத் தொழில், கதம்ப நிகழ்ச்சி கள், நாடகங்கள், இசைப் பயிற்சி, நூல் நிலையம், பள்ளிப் படிப்பகம் ஆகியவற்றை மாணவர்களுக்கு ஒப்படைக்கலாம். சில பள்ளிகளில் நீதிமன்றம் ஒன்று நிறுவி அதனை மாணவர்களுக்கே ஒப்படைக்கிறார் கள். நீதிபதிகள் மாணவர்களே. ஒழுக்கக் கேடாக நடந்துகொள்ளு பவர்களையும் குற்றம் நிகழ்த்துபவர்களையும் வாரத்திற்கு ஒரு முறை அல்லது இரு முறை அவர்கள்மீது குற்றம் சாட்டி அவர்களுக்கு மாணவ நீதிபதி தண்டனை விதிப்பதுண்டு. பல பள்ளிகளில் இது நடைபெறு கின்றது. மாணவர்களுடைய தீர்ப்புக்களை ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

2. பள்ளிப் பொதுக் கூட்டம்

பல பள்ளிகளில் காலை வணக்கக் கூட்டமே பள்ளிப் பொதுக்கூட்ட மாக நடைபெறுகிறது. அக் கூட்டத்தில் பள்ளி மாணவர்களும் ஆசிரி யர்களும் ஒருங்கே தலைமையாசிரியரின் தலைமையில் கூடுகிறார்கள். அத்தகைய கூட்டம் பள்ளிக் குடும்பக் கூட்டத்திற்கு ஒப்பானது ஆகும். நாள்தோறும் கூட்டம் கூடுவதும் நன்றேயாகும். அவசர நிமித்தமாகவும் அக்கூட்டம் கூட்டப் பெறலாம். எதுவாயினும் அக் கூட்டத்தின் சிறப்பு அதற்கே உரியது. பிள்ளைகள் பல வகுப்புக்கு உரியவராயினும் அத்தகைய கூட்டத்தில் பொதுவாகப் பள்ளிக்கு

1. Safety First

உரியர் என்ற எண்ணத்தைப் பெறுகிருர்கள். ஆசிரியர் குழாத்தினை தமதாசிரியர் என்று உள்ளத்தில் கருதுவார்கள். இறைவணக்கக் கூட்டமாயின் முதலில் அக்கூட்டம் இறை வாழ்த்தோடு தொடங்கு கின்றது. வேருயின் தலைமையாசிரியர் அக்கூட்டத்தில் எல்லோரையும் கூவிப் பேசுகிருர். பிள்ளைகள் அமைதியைக் காப்பாற்றுகிருர்கள். அங்கு நிலவும் அமைதி அல்லது கட்டுப்பாடு பள்ளி ஒழுங்கின் அடையாளமாக விளங்கும். அக்கூட்டத்தில் தலைமையாசிரியருடைய பேச்சு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பொதுவாகும். அக் கூட்டங்களில் தலைமையாசிரியர் மாணவர்களைத்தான் சுட்டுவாரே அன்றி உதவி ஆசிரியர்களைச் சுட்டமாட்டார். ஆனல் உதவி ஆசிரி யர்கள் அவருடைய .அறிவிப்புக்களும், உத்தரவுகளும் தமக்கும் என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும். அறிவிப்பு நேரத்தில் மாண வர்களுடைய எதிரூன்றல் வெளிப்படுவது இயற்கை. அஃது உடன் பாடாயின் கூட்டத்தினர் எல்லோரும் குதூகலமடைவர். அறிவிப்பில் எச்சரிக்கையாயினும் பிள்ளைகள் அமைதியைக் கடைப்பிடிப்பர். எதி ரூன்றல் எதிர்மறையாயின் தலைமையாசிரியர் உடனடியாக எதிர்ப் பினைச் சமாளித்து உடன்பாட்டினைப் பெறவேண்டும். அஃது அவரு டைய திறமையை ஒட்டியது. எதிர்ப்பை எதிர்ப்பதால் நன்மை விளை யாது. எதிர்ப்பின் காரணத்தை அறிந்து ஒப்புக்கொள்ளக் கூடியதா யின் அதை ஒப்புக்கொள்ளுதலே முறையாகும். எதிர்ப்பு சரியற்ற தாயின் பிள்ளைகளுக்கு அதன் குற்றத்தை அறிவுறுத்த வேண்டியது கடமை. கூட்டத்தின் விளைவு நன்மையாதலே நலம். தீமை விளை யாதபடி காத்துக் கொள்ளுதல் தலைமையாசிரியருடைய கடமை. ஒரோ வழி அத்தகைய கூட்டங்களின் வழியாகப் பள்ளி நிறுத்தங்களும் நடை பெறுகின்றன. அதற்குக் காரணம் பெரும்பாலும் தலைமையாசிரிய ருடைய திறமையின்மையே ஆகும்.

பள்ளிப் பொதுக்கூட்டங்கள் பள்ளிக்கு வருகை புரிந்த ஓர் பெரிய வருடைய பேச்சினைக் கேட்பதற்கும் கூடுவதுண்டு. அல்லது ஒரு விழாவினை நடத்துவதற்காக நடைபெறும் கூட்டத்தில் சிறப்புற்ற பழைய மாணவர் ஒருவர் பேச்சுரை நிகழ்த்தலாம். சிறப்புப் பொருட்களைப் பற்றிய சிறப்புப் பொழிவுகளுக்காகவும் கூட்டம் நடைபெறலாம். கூட்டத்தில் கலந்துகொள்ளும் எல்லாப் பிள்ளை களுக்கும் நன்மையுண்டாதல் முக்கியம். பிள்ளைகள் ஒரு சிலருடைய வீரச் செயலையாவது தீரச் செயலையாவது அல்லது ஒரு நல்ல செயலை யாவது நலம் பாராட்டுவதற்கும் அல்லது குற்றத்தைக் கண்டிப்பதற் கும் கூட்டம் நடைபெற்ருல் அதனுல் பின் விளைவு ஒன்றுமில்லாது காப்பதே தலைமையாசிரியருடைய கடமை. கூட்டங்கள் நிகழும் போதெல்லாம் அவை கூட்டுணர்ச்சியையும் பள்ளியின்மீது பாசத்தை யும் பள்ளி ஒற்றுமையையும் உண்டாக்கவேண்டும். தமது பள்ளி என்ற ஓர் உணர்வு அத்தகைய கூட்டங்களில் நிலவுவதைக் காத்தல்

வேண்டும். மாணவர் குழு மாணவர் சிலரையே கொண்டது. ஆனால் பள்ளிப் பொதுக்கூட்டம் யாரையும் புறக்கணிக்காது. எல்லோரையும் கொண்டது. மாணவர் குழுத் தீர்மானங்களைப் பொதுக் கூட்டங்களில் மாணவ உறுப்பினரைக் கொண்டே அறிவித்து அவற்றைச் செயலாற்றும் முறைகளைப் பற்றி அவர்களே பேசுவதற்கும் பொதுக் கூட்டங்கள் பயன்படும். ஆனால் ஆசிரியர்களாவது தலைமை ஆசிரியராவது மாணவர்களின் குறைபாடுகளை அதிகமாக விளக்கிக் கொண்டிருந்தால் தவறாத பிள்ளைகளும் கூட ஒரு சிலர் தவறிய வழிகளில் தாமும் தவறினால் கண்டனத்தோடு நின்றுவிடுமென்று கருதுவதற்கு வழியுண்டு. அதனால் பொதுக்கூட்டங்களில் நல்லனவற்றையே நயம்பட உரைத்தல் நலன்.

இற்றை நாட்களில் வகுப்பறை கல்வி குறுகியதாகவே மதிக்கப் படுகிறது. எல்லாக் கல்வியும் சமூகத்தோடு பொருத்தப்பாடு பெற வேண்டுமானால் பள்ளிச் சமூகத்தோடு பொருத்தப்பாடு பெறுவது முதற் கட்டமாகும். அத்தகைய பொருத்தப்பாட்டிற்குப் பள்ளிக்கூடம் முதற்கட்டமாகின்றது. சமூகத்திலுள்ள வாழ்க்கைக்கும் பள்ளி வாழ்க்கைக்கும் ஒற்றுமை காண முயன்றதில், இப்போதைய பள்ளியே ஒரு சிறிய சமூகமாகையால் அதில் பொருத்தப்பாடு பெறுவது இன்றியமையாததாகின்றது. பள்ளியின் பொது நோக்கங்களும் குறிக்கோள்களும் பண்புத்தரமும் பொதுக்கூட்டத்திலன்றோ காட்சியளிக்க வாய்ப்புப்பெறும். இன்றைய பள்ளிகளின் சிக்கலான அமைப்பு எல்லாப் பிள்ளைகளுக்கும் தெற்றென விளங்வேண்டும். பள்ளியே ஒரு குடியாட்சி நிலையமென்றால் மாணவர்களே அதன் குடிமக்கள். அவர்கள் சிறியவராயினும் பெரியவராயினும் அவர்கள் பள்ளிக் குடிமக்களே ஆவர். ஆசிரியர்கள் பெருங்குடிகள் ஆவர். பள்ளிப் பொதுக்கூட்டம் அக்குடியாட்சியின் பொதுக்கூட்டமாகும். பள்ளிக் குடிமக்களுக்குக் கடமைகள் வகுக்கப் பெறுவதைப் போன்று உரிமைகளும் வழங்கப்பெறுமாகையால் அவற்றை அறிந்து கொள்ளுதல் பள்ளிப் பொதுச் சூழ்நிலையில் மட்டுமே இயலும். இக் கூட்டங்கள் வாரத்திற்கொருமுறை நிகழ்தல் நன்று. தலைமையாசிரியர் இக்கூட்டத்திற்குத் திலகம் போன்றவர். அவரே பள்ளி வாழ்க்கையின் ஊற்றுவார். அவரைச் சுற்றிப் பள்ளியின் பண்புமணம் வீசும். அவருடைய பரந்த உள்ளம், நல்லெண்ணம், உளம் நிறைந்த உண்மை, ஆற்றல்-இவை யாவும் அவர் வழியாகப் பள்ளி முழுவதும் பரவுதல் வேண்டும். அவருடைய பண்புகள் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எப்போதும் எடுத்துக் காட்டாக விளங்கவேண்டும். ஆயினும் கூட்டங்களில் அவரே பெரும் பங்குகொள்ளுதல் குடியாட்சி முறையாகாது. அவர் வேண்டியபோது மட்டுமே கருத்துக்களை நன்கு விளக்குவதற்கு நடுவண் வருதல் வேண்டும். மாணவர் தலைவர்கள் பள்ளியின் உறுதிப்பாடுகளை உரைக்கலாம். ஆனால் எப்போதும் இக்கூட்டங்கள் நன்கு நடைபெற்றால் பிள்ளைகள் அவற்றினைப் பெரிதும் விரும்புவர்.

3. வெளிச் செலவு

வகுப்பறைக்கல்வி இன்று ஆக்கம் குறைந்து வருகிறது. ஏட்டுக் கல்வி எதற்கு உதவுமென்று கூறுகிருர்கள். புத்தகங்களிலுள்ள கருத்துக்கள் தரம் அற்றவை என்று கருதுகின்றனர். புத்தகக்கல்வி மறைமுகக் கல்வியாகும். வகுப்பறைக்கு வெளியே கல்வி, இயற்கையில் கல்வி அல்லது நேர்முகக்கல்வி என்று இன்று வற்புறுத்துகிருர்கள். எத்துணை அளவுதான் ஒரு பொருளைச் சொற்களால் வருணித்தாலும் அப்பொருளை நேர்முகமாகக் கண்டறிதலுக்கு ஒப்பாகாதென்று கூறுகிருர்கள். மலை, மன்னனுகினும் அவனிடம் செல்லாது. மன்னன்தான் மலையிடம் செல்லவேண்டும் என்ற பொன்மொழி கற்போருக்கும் கற்பிப்பவர்களுக்கும் பெரிதும் பொருத்தமுடையது. அதனுல் மாணவர்கள் நேர்முகமாகப் பல பொருள்களைக் கண்டு அனுபவங்களைப் பெறுவதற்கு வெளிச் செலவு நடைபெறுகின்றது. கற்பவற்றை நேர்முகமாகக் காண்பதற்கும் தேடி அறிவதற்கும் கண்கூடாகக் கற்பதற்கும் வெளிச் செலவு உதவுகின்றது. வெளிச் செலவால் ஏற்படும் அனுபவத்தை வகுப்பறை அளிக்காது. மாணவர்களிடம் தேடிக் கண்டறியும் திறம் இளமையிலேயே உண்டு. பள்ளியில் சேர்ந்த முதல் நாளிலேயே பள்ளிக்கட்டடம் முழுவதையும் சுற்றி ஒவ்வொரு பகுதியைப்பற்றியும் அறிய விழைவது மாணவர் இயல்பு. இல்லத்திலிருந்து பள்ளிவாயில் வரையில் காணக்கூடிய எல்லாவற்றையும் தாமாகவே தமது நண்பர்கள் துணையைக் கொண்டு அறிந்து கொள்வதும் இயல்பு. இன்றைய திட்டத்தில் வெளிச்செலவு ஒரு கட்டாயப் பிரிவாகின்றது. பள்ளிக்கு வெளியே குறித்த இடத்திற்குத் திட்டமிட்டுக்கொண்டு வகுப்பாசிரியராவது பாட ஆசிரியராவது பிள்ளைகளை அழைத்துச் செல்லுகின்ருர். அங்ஙனம் அழைத்துச் செல்வதற்குமுன் பிள்ளைகள் கண்டறியவேண்டியது யாதென்றும் அறிவிப்புச் செய்யப்படுகிறது. நினைத்தவண்ணம் ஒரு வெளிச்செலவு நிகழ்வதில்லை. எங்காகினும் சென்று நேரத்தைக் கடத்தித் திரும்பிவருவதும் இல்லை. வெளிச் செலவில் காணவேண்டியவை பெரும்பாலும் பாடத்தை ஒட்டியவை ஆகும். கற்பித்த பாடத்தை விளக்கமாகக் கற்றுக்கொள்ளுவதற்கும் வெளிச்செலவுத் திட்டம் வகுக்கவேண்டும். அல்லது கற்பிக்காத ஒரு பாடத்தினை அறியக்கூடிய இடத்தையடைந்து அங்கு நேர்முகமாகப் பிள்ளைகள் பார்த்துக் கற்பதுமுண்டு. இடத்தையாகிலும் பொருளையாகிலும் கண்ணுற்ற பிறகு பிள்ளைகளுக்கு அவர்கள் சொற்களைக் கொண்டே கற்கவேண்டியதை விளக்கவேண்டும். எடுத்துக் காட்டாகப் பல்லவ மன்னர்களைப்பற்றிப் பாடஞ்சொல்லும் ஆசிரியர் அவர்களை மாமல்லபுரத்திற்கு அழைத்துச் செல்லுகின்ருர். அங்கு காணவேண்டியதைப் பிள்ளைகள் தாமாகவே காண்கின்ருர்கள். அல்லது ஆசிரியர் அழைத்துச் செல்ல அவர்கள் ஒவ்வோரிடத்திற்கும் செல்லுகிருர்கள். ஒவ்வோரிடத்திலும் காணவேண்டியவற்றைக் கண்டறிந்

தார்களா என்று அறிந்து கொள்வதற்கு ஆசிரியர் அந்தந்த இடத்தில் தக்க வினாக்களை விடுப்பர். விடை கூறுவான் வேண்டிப் பிள்ளைகள் நன்றாக ஆராய்ந்து பார்த்து நேர்முகமாக விடை காண்கின்றார்கள். பிள்ளைகளுடைய விடை முழுவதாக இல்லாவிட்டால் ஆசிரியர் தமது விளக்கத்தைத் தருகிறார். மாமல்லபுரத்தில் கற்கள் பேசுகின்றன என்ற கூற்று பிள்ளைகளுக்குத் தெற்றென விளங்குகிறது. புத்தகம் தரும் விளக்கத்தைக் காட்டிலும் அவர்கள் நேர்முகமாக அறிவது பன்மடங்காகிறது. திட்டம் சரிவர இயற்றாவிட்டால் பிள்ளைகள் சென்ற இடத்தில் சில பகுதிகளைப் பாராமல் விட்டுவிடுவார்கள். பார்த்த வற்றையும் நுட்பத்தோடு பார்க்கத் தவறிவிடுவார்கள். சென்ற இடத்தில் கண்ட பகுதிகளுக்கெல்லாம் செல்லாது தம் திட்டத்தில் கொண்ட பகுதிகளுக்கு மட்டும் சென்று அறிய வேண்டியவற்றைத் துருவி அறிந்து அறிவிற்கொள்ள வேண்டியவற்றைக் கொண்டு குறித்துக் கொள்ளவேண்டிவற்றைக் குறித்துக் கேட்டறிந்து கொள்ள வேண்டியவற்றைக் கேட்டறிந்து இவற்றாலான அனுபவங்களைப் பெறுவதே வெளிச்செலவின் பயனாகும். பயணத்துக்குமுன் பிள்ளை களுக்குத் தூண்டுதல்களைப் பலவாகத் தந்து அவர்களது ஆற்றல்களை எழுப்பி ஆர்வத்தால் உந்தப்பெற்ற நிலையில் ஆவலை மீதூரச் செய்தால் அவர்கள் வெளிச் செலவின் பயனை வேண்டுமளவு கொள்ளுவார்கள். அல்லது பிள்ளைகளைக் கண்டவற்றைப் பார்க்குமாறு விட்டுவிட்டால் அவர்கள் முக்கியமானவற்றை விட்டுவிட்டு மற்றவற்றைக் கண்டு பயனைப் பெறுதுவிடுவர். முக்கியமான பகுதியைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது ஆசிரியர் அதைப்பற்றிய ஒரு வினாவைக் கிளப்பிவிட்டால் பிள்ளைகள் அந்த இடத்திலேயே சிந்தனையைத் தொடங்கிவிடுவார்கள். மேலும் பிள்ளைகள் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது அவர்கள் எல்லாவற்றையும் பார்த்துவிடுவார்கள் என்று நினைக்கக்கூடாது. அவர்கள் பார்க்கவேண்டிய முக்கியமானவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஆசிரியர் சுட்டிக் காட்டாது அவர்களைச் சுட்டும்படியாகச் சொல்லுவது நல்லது. அவர்களே பார்த்துக்கொள்ளுவார்கள் என்று விட்டுவிட்டால் அவர்கள் பார்க்க வேண்டியவற்றைப் பார்க்காது விட்டுவிடுவார்கள். பார்வையிடும் போதே பார்க்கவேண்டியவற்றைப் பார்க்கின்றார்களா என்று அப்போதைக்கப்போது கேட்டுவிடுதல் நல்லது.

வெளிச் செலவுக்கு முன்பு ஆசிரியர் மாணவர் குழுவினை அமைத்து குறித்த பொருள்களைப்பற்றி ஒரு வினாத் தொகுதி ஒன்றினைத் தொகுத்து முற்கூட்டியே இதர மாணவர்களிடம் தந்து அவர்களுடைய சிந்தனையைத் தூண்டி அவர்கள் காணவேண்டியதைக் குறித்து ஓர் ஆர்வ நிலையை உண்டுபண்ணுதல் நல்லது. பிள்ளைகள் ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டே இருப்பவர்கள் அல்லர். அவர்களுக்குச் சுற்று வதிலும் திரிவதிலும் இயற்கையான ஆர்வம் உண்டு. புதியனவற்றைப்

பார்ப்பதில் புத்துணர்ச்சி அவர்களுக்கு இயற்கையானது. எனவே ஆங்காங்கே திரிதலும் நினைத்ததைச் செய்யக்கூடியதுமான இயல்புகள் சிறு வயது முதல் உண்டு. அதைப் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு ஆசிரியருடையது. அங்ஙனம் அவர்கள் ஆசிரியர் கட்டுக்கு மீறிச் செல்வதைப் பள்ளிச் சமூகம் கண்டிப்பதும் சரியன்று. அவற்றினைப் பிள்ளைகளின் இயற்கை வெளியீடாகக் கருதிப் பயனுள்ள வழியில் திருப்பி விடுதல் நலனையளிக்கும். பள்ளியில் பயிலும் மாணவர்கள் மட்டுமின்றிக் கல்லூரி மாணவர்களும்கூடப் பள்ளித்தலத்திற்கு அப்பால் செல்வதில்லை. அவர்கள் வீடும் பள்ளியுமே அவர்கள் அறிந்தவை. இக்காலங்களில் பல இடங்களுக்குச் சென்று பலவற்றை அறியவேண்டியது மாணவர்களின் கடமை. வெளிச் செலவுத் திட்டம் ஒரு சில இடங்களுக்குச் செல்லுவதற்கும் அவற்றை அறிந்து கொள்ளுவதற்கும் வாய்ப்பளிக்கின்றது. வெளியில் செல்லாவிட்டால் மாணவர்கள் பள்ளி வாழ்க்கை வேறு, சமூக வாழ்க்கை வேறு என நினைத்துக் கொள்ளுவர். பள்ளிப் படிப்பினைச் சமூகத்தில் துலங்கக் காண்பதே நல்ல முறை ஆகும். சமூகத்தில் பெறக்கூடிய அனுபவங்கள் எல்லாவற்றையும் பள்ளி அளிக்க இயலாதாகையால் பெற்ற ஒரு சிலவற்றைச் சமூகத்தில் காண்பதால் பல அனுபவங்கள் தெளிவாகும். அல்லாக்கால் பள்ளிப் படிப்பெல்லாம் கருத்தளவில் நின்றுவிடும். பள்ளிக் கல்வி புள்ளிக் குதவாது. நாம் கற்பிக்கும் கல்வி பெரும்பாலும் சமூகத் திரள்களாகையால் அனுபவங்களை நேரடியாகப் பெறுதலே சாலச் சிறந்தது. உள் நாட்டில் வசிக்கும் பிள்ளைகள் கடலைக் கண்டிருக்க மாட்டார்கள். எனவே அதைப்பற்றி எவ்வளவுதான் சொற்களால் வருணித்தாலும் மாணவர்கள் துலக்கம் பெறமாட்டார்கள். ஆனால் ஒரு வெளிச் செலவில் கடலைக் கண்டுவிட்டால் அதன் அனுபவத்தின் பெருமை அதைப் பெறும் மாணவர்களுக்குத்தான் தெரிதாகும். கண்வழிக் கல்வி வற்புறுத்தப்பெறும் இக்காலத்தில் நேரடியாகப் பெறும் அனுபவம் கண் வழிக் கல்வியின் உறுபயன் ஆகும்.

கல்விப்பயனேயன்றி வெளிச்செலவுக் காலத்தில் மாணவர்கள் வேறு பயன்களையும் பெறுவார்கள். வகுப்பறையில் நடந்துகொள்ளும் முறையும் வெளியில் நடந்துகொள்ளக்கூடிய முறையும் வேறென்று அறிவதற்கும் வெளியில் கூட்டமாக ஒழுகவேண்டியது யாங்ஙனம் என்பதைப் பழகுவதற்கும் வெளிச் செலவு பயனளிக்கும். வெளிச் செலவுக் காலத்தில் பிள்ளைகள் கூட்டம் கூட்டமாகக் கூடிக் கண்டறிந்து கற்கின்றனர்; தாமாகவே கற்கின்றார்கள்; ஆசிரியர் பின் நிற்கின்றார்; வழிகாட்டுகின்றார். மாணவர்கள் ஒவ்வொருவரும் கூட்டமாக அறிந்து கொள்ளுபவற்றைத் தனித்தனியாக உளத்தகத்தே பதித்துக் கொள்ளுகிறார்கள். தமக்கு விளங்காதவற்றை ஒருவரை யொருவர் கேட்டுக் கொண்டும் கற்றுக் கொள்ளுகின்றார்கள். கற்பித்தல் இன்றி வெளிச் செலவுக் காலத்தில் கற்றல் நிகழ்கின்றது. குறித்த பொருளோடு

கற்பது நிற்பதில்லை. அதன் சார்புற்ற பல பொருள்கள், வழியில் செல்லும்போது காணும் காட்சிகள், வேறு பாடங்களோடு தொடர்புள்ள பொருள்கள் இவை யாவும் மாணவர்களின் ஐம்புலன்களை இயக்கி அறிவினைப் பெருக்குகின்றன. குறித்த பொருள்மீது மட்டும் தொடங்கிய நாட்டம் வேறு பல பொருள்களை நாடா நிற்கின்றது. எனவே புதிய நாட்டங்களில் அக்கறைகள் தோன்றுகின்றன. வகுப்பறைகளில் பிள்ளைகள் அசைவற்றுக் காட்சியளிக்கின்றார்கள். ஆனால் வெளிச் செலவின்போது அவர்களுடைய அசைவும் துடிப்பும் அளவு கடந்து விடுகின்றன. தாமாகவே கண்டறிகின்றவற்றில் தமக்கு இன்பம் பிறக்கின்றது. சிந்தனை வளருகின்றது.

பிள்ளைகளின் வெளிச் செலவினை ஆசிரியர்கள் கடனாற்றுவதாகக் கருதக் கூடாது. பள்ளிகளில் வெளிச் செலவுக் கட்டணம் ஒவ்வொரு பிள்ளையினிடமிருந்தும் ஆண்டுக்கு இருமுறை பெரும் பிரிவுத் தொடக்கத்திலும் சிறுபிரிவுத் தொடக்கத்திலும் வசூலிக்கிறார்கள். இப் பணத்தைச் செலவு செய்ய ஒரு குழு அமைக்கப்படுகிறது. இக்குழுவோடு ஓர் ஆசிரியரும் பொறுப்பேற்கிறார். ஆனால் நடைபெறுவது வேறாகின்றது. பாட ஆசிரியர்களும், மொழி ஆசிரியர்களும், ஒவ்வொரு வகுப்புக்கெனத் தனித்தனியாக உளர். அவர்கள் மாணவர் பாடங்களை ஒட்டி வெளியே சென்று பார்க்கவேண்டிய இடங்களை முன்னரே குறித்துத் திட்டமிடுவதில்லை. ஒரோவழி திட்டமிட்டாலும் திட்டத்தின் படி ஒழுகுவதுமில்லை. எந்த ஆசிரியரும் பிள்ளைகளை வெளியே அழைத்துச் சென்று அவர்கள் பாடப் பொருளினை நேரடியாக அறிதற்கு வாய்ப்பிருக்குமாயின் அதை அளிக்காது விடுதல் பெருந் தவறாகும். அஃது பள்ளித் திட்டத்திற்கு இழுக்காகும். ஆசிரியர் சோம்பற்றன்மையால் வாய்ப்புக்களை அளிக்காது விடுதல் பெரும் பாவம். சில பள்ளிகளில் பெரும் பிரிவையும் கடத்திவிட்டுச் சிறு பிரிவில் எல்லா வகுப்புப் பிள்ளைகளையும் குறித்த ஓர் இடத்திற்கு ஈர்த்துச் சென்று மீண்டும் கொண்டுவந்து பள்ளியில் சேர்த்துவிடுதல் கடமையாற்றுதலாகக் கருதப்படுகிறது. மேலும் வெய்யிற் காலங்களில் சிறு பிள்ளைகளைக் காலணி இன்றிச் சாலைகளில் அழைத்துச் சென்று அவர்களுக்கு உணவு வசதியையும் நன்றாக அளிக்காது அவர்களைக் களைக்கச் செய்வது கண்கூடாகின்றது. அரசாங்கத் தணிக்கையாளர்கள் சிறப்புக் கட்டணங்களின் திட்டங்களையும் செலவினங்களையும் துருவி ஆராய்ந்தால் பள்ளி ஆசிரியர்கள் பொறுப்புக்களை நழுவவிடமாட்டார்கள். ஆசிரியர்கள் வெளிச் செலவுக் காலங்களில் தமக்கென வசதிகளைத் தேடுவதோடு நின்று, பிள்ளைகளுக்கு வேண்டற்பாலனவற்றை அக்கறையோடு கவனியாது விட்டால் அது தொழிற்குற்றமெனக் கருதவேண்டும்.

4. ஓய்வு நேரவுக் கல்வி

ஓய்வு நேரத்தைப் பயன்படக்கூடியவகை வகுப்பது எங்ஙன மென்று ஒவ்வொரு மாணவருக்கும் தெரியவேண்டும். வாழ்க்கையில் வேலை நேரமும் ஓய்வு நேரமும் ஒத்த மதிப்பினவாகும். வேலை நேரத்தையே முக்கியமாகக் கருதுவதும் ஒய்வு நேரத்தை வீணுக் கெனக் கருதுவதும் கூடாது. இளைஞராயினும் முதியவராயினும் ஓய்வு நேரத்தைப் பயன்தரும் வகையில் செலவு செய்ய அறிந்து கொள்ளுவதே நன்று. நமது பள்ளிகள் பிள்ளைகளுடைய பல நாட்டங் களுக்கும் தகுதிகளுக்கும் ஏற்றபடி பல செயற்பாடுகளை உருவாக்கி உள்ளனர். அவற்றுள் ஓரிரண்டைப் பிள்ளைகள் தமதாக்கிக் கொள்ளு கின்றனர். ஏனென்றால் அவற்றால் அவர்கள் பெறும் இன்பங்கள் பல வாகும். ஓய்வு நேரத்தைப் பயன்படும் முறையில் திட்டமிட்டுக் கொண்ட யாருக்கும் உடல், உள்ளம், ஆன்மா ஆகிய மூன்றும் ஒருமைப் பாட்டினைப் பெறும். வாழ்க்கையில் கசப்பு நீங்கும். மேற்கொள்ளும் ஓய்வுநேரப் பணிகளால் உளப்பாட்டுத் தன்மை உயர்வு அடையும். ஓய்வுக் காலங்களில் முருகுணர்ச்சியை ஊட்டக்கூடியவை: இலக்கியம், சமூக இயல், பருக்கலை, நுண்கலை முதலானவை. இவற்றை ஓய்வு நேரக் கழிவுக்கு ஏற்றுக்கொண்டால் மாணவர்களுடைய நடத்தைகள் பண்பாடு பெறும். அவர்கள் முதிர்ச்சி பெற்ற காலத்தில் மனிதத் தன்மையோடு நடந்து கொள்ளுவது திண்ணம். அதனால் கல்வி ஏற்பாட்டில் இத்தகைய பாடங்கள் இடம் பெறுவது இன்றியமையாதது.

வேலை செய்யும் நேரம் குறைந்தால் ஓய்வு நேரம் அதிகமாகின்றது. இளைஞர்கள் பெரும்பாலும் ஓய்வு நேரங்களை வீணாகக் கழிக்கின்றார்கள். அதுவுமன்றி அவர்கள் பொழுதுபோக்கு நேரங்களில் தம்மைக் கெடுத் துக் கொள்ளுகிறார்கள். பெரும்பாலும் உள்ளத்தில் தடைபட்டுக் கிடப் பது ஓய்வு நேரத்தில் வெளிப்படுகின்றது. அதனால் ஜான் டூயி மாண வர்களின் ஓய்வு நேரங்களுக்கு ஒரு திட்டம் வகுக்கவேண்டுமென்றார். அவர்களுக்கு இன்ன பொழுதுபோக்குகள் இன்பத்தைத் தருவதோடு அவர்களுடைய எதிர் காலத்திற்கும் நன்மை பயப்பன என்றும் இவை யிவை இன்பத்தைத் தந்து அவர்களைக் கெடுத்து விடுகின்றனவென்றும் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார். இளைஞர்கள் வெற்றி காணவேண்டுமானால் அவர்களுடைய நுண்ணறிவைக் கொண்டு ஓய்வு நேரத்தைக் கழிக்கவேண்டும். இளைஞர்கள் தாமாகவே ஓய்வு நேரக் கழிப்பில் சிந்தனை செய்து கொள்ள இயலாது. பள்ளியில் பாடப்புறச் செயல்கள் வழியாக மாணவர்கள் பல திறன்களை வளர்த்துக்கொண்டு தமக்குப் பிடித்தமான ஒன்றினைத் தமதாக்கிக் கொள்ளுவார்கள். ஓய்வுக்களிப்பிற்கும் விருப்புத்தொழிலை வளர்ப்பதற்கும் ஏற்படும் நிலையங்கள் ஒரோவழி பிள்ளைகளுக்குப் பல வழிகளைக் காண்பிக் கின்றன. பள்ளியிலும்கூடப் பொழுதுபோக்குக்காக ஓய்வு நேரத்திட்ட மொன்றை வகுத்தால் அது பிள்ளைகளுக்குப் பல வழிகளைக் காட்டி

அவர்கள் விருப்புக்கு ஏற்ற முறையில் வழிப்படுத்தும். பலருடைய விருப்புத் தொழில்கள் பள்ளியில் தொடங்கி அவர்களுக்கு மட்டுமே யன்றிச் சமூகத்திற்கும் நன்மையைப் பயக்க வல்லவை.

மாணவர்கள் தமக்கு விருப்புள்ள ஈடுபாடுகளில் படைப்பாற்றல் பெறுவது திண்ணம். பிள்ளைகள் சிலர் இசைக்கல்வி கற்றுக்கொள்ளு கிருர்கள். நடிக்கும் திறமை பெறுகிருர்கள். கவி பாடவும் முயற்சி செய்கிருர்கள். ஒரு மாணுக்கன் கவிபாடக்கூடிய ஆசிரியரோடு தொடர்பு கொண்டான். அவ்வாசிரியர் இயற்றும் பாக்களைப் படித்து இன்புறுவது அவன் வழக்கம். ஒரு நாள் தான் படிக்கும் பாடத்தின் கருத்தினை ஒரு பாட்டாக இயற்றினுன். அதை ஆசிரியரிடம் காண்பித் தான். அதைப் படித்து ஆசிரியர் அதில் இருந்த குற்றங்களைக் கூறுது அதன் குண நலனைப் பாராட்டினுர். மாணுக்கனுக்கு ஆர்வம் பிறந்தது. தனது ஓய்வு நேரத்திலெல்லாம் பாக்கள் இயற்றுவதையே தனது பொழுதுபோக்காக மேற்கொண்டான். தான் பட்டதாரியான பிறகும் அப்பழக்கம் நீடித்து வருகின்றது. இன்று பாக்களை இயற்றுவதில் மிக்க ஆற்றல் உடையவனுக விளங்குகின்ருன். ஆங்கிலப் பாக்கள் பலவற்றை தமிழ் யாப்பில் மொழி பெயர்த்துள்ளான். அவனுடைய ஓய்வு நேரப் போக்குக்கு வித்திட்ட ஆசிரியரை வாயாரப் புகழ்கின்ருன். இது வன்ருே வாழ்க்கையில் இன்பம் காணக்கூடிய ஓர் ஓய்வு நேர வழியாகும். இத்தகைய படைப்பாற்றலுக்கு வழிவகுக்கும் செயற்பாடுகளைப் பள்ளிகள் படைத்துதவினுல் பிள்ளைகள் தமது திறமையைத் தாமே உணர்ந்து கொள்ளும் வாய்ப்புக்கள் உண்டாகும். வகுப்பறைத் திட்டங் களிலும் வேறு வழிகளிலும் பிள்ளைகள் தமது திறமை வெளியீட்டைப் பெறுவது நல்லது. இவ்வாய்ப்பு புறச்செயல்களிடையே வெளியாக உதவி அவர்களுக்குப் பல நன்மைகளைத் தருகின்றது. ஆசிரியர் சிலர் பாடங்களல்லாத வேறு பள்ளி மேற்கொள்ளும் புறச்செயல்களை வெறுப்பது வழக்கம். அவர்கள் வற்புறுத்துவதெல்லாம் ஓய்வு நேரங் களிலும் கல்வி ஈடுபாட்டினையேயாம். ஆனுல் நாள் முழுவதும் ஒரு மாணவன் படித்துக்கொண்டே இருந்தால் அவனுக்குப் பித்துப்பிடித்து விடும். அதனுல் வேறுபாடுள்ள ஈடுபாடு ஒன்றே வாழ்க்கையில் ஓர் இன்பத்தைக் கொடுக்கும். ஓய்வு நேரங்களைப் பயனேடு கழிக்கின்ற வர்கள் தம்மை உயர்த்திக் கொள்ளுகிருர்கள். அவர்கள் மேற்கொள்ளு வது விருப்புத் தொழிலாகையால் தமது கவனம் முழுவதையும் பிறர் வற்புறுத்தலின்றிக் கடமையைக் கருதிமட்டும் அன்றித் தாமாகவே நாட்டங்கொண்டு நலன்களைக் காண்கின்ருர்கள். அங்ஙனம் நாட்டங் கொள்ளுவதால் பல திறன்கள் வளருகின்றன. அவை ஆக்க வழிகளில் பயன்பெறக்கூடியவை என்பது கூருமலே விளங்கும். தனது திறனைத் தானே அறிதலால் தன்னைத்தான் உணரமுடியும். அங்ஙனம் ஓர் இயற்றுதற் கருத்தாநிலையில் தன்னை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பு

உண்டாகின்றது. அல்லது இலக்கியத்துறையில் ஈடுபட்டால் இலக்கிய இன்பம் மீதூர்வதைக் காண்கின்றோம்.

பிள்ளைகளை ஓய்வு நேரங்களில் வாளாவிருக்க விடுதல் சரியன்று. ஓய்வு நேரத் திட்டங்களினின்றும் விடுபட்டவர்கள் தீயாரோடு நட்புக் கொண்டு பல கெட்ட பழக்கங்களை வளர்த்துக் கொள்ளுகிறார்கள். அத்தகைய பிள்ளைகளால் பள்ளியின் ஒழுங்கு கெடுகிறது. அவர்களால் நன்மாணாக்கர்களும் தீய பழக்கங்களைக் கைக்கொள்ளுகிறார்கள். மாணாக்கர்கள்மீது குறை கூறுவது தவறு. பள்ளியின் குறையே பிள்ளைகளின் குறையாக உருவாகின்றது.

இளைஞர்கள் வாளாவிருக்க முடியாது. எதையாகிலும் ஒன்றை அவர்கள் செய்தாகவேண்டும். பல வழிகள் காட்டிவிட்டால் அவர்களுக்குப் பிடித்த ஒரு வழியில் நன்மை பெறுவார்கள். இதற்கு வழி வகுக்கவேண்டியது பள்ளியின் கடமை. பள்ளி நேரத்தில் மட்டும்தான் பள்ளியின் கடமை உண்டென்று கருதுவது தவறு. பள்ளி வேலை அல்லாத நேரத்திலும் பிள்ளைகளைப் பள்ளி ஈர்க்கவேண்டும். ஓய்வு நேரத்திட்டம்தான் பிள்ளைகளை ஈர்க்கக்கூடியது. ஏழைப் பிள்ளைகளுக்குத் தமது ஓய்வு நேரங்களைக் கழிப்பதற்குப் போதிய வசதி இராது. பள்ளி நேரம் கழிந்த பின்னரும் பிள்ளைகள் பள்ளியிலேயே சுற்றிக்கொண்டிருப்பது கண்கூடு. அவர்களை ஆசிரியர்கள் விரட்டுவதும் கண்கூடு. இத்தகைய ஆசிரியர்கள் கடமையிலிருந்து தவறியவர்களாவார்கள்.

பொதுப்படையாக மாணவர்கள் கல்வித்திறனை வளர்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு ஒருபுறமிருக்க அவர்கள் பெறும் உள்ள வளர்ச்சியோடு, அவர்கள் சிலவற்றில் நாட்டங்கொள்ளுகிறார்கள். அவர்கள் கொள்ளும் நாட்டம் அவர்கள் உள்ளத்தில் வளரும் விருப்பினை அடிப்படையாகக் கொண்டது. நாம் விரும்புவதைத்தான் கண்கொண்டு பார்க்கின்றோம். விரும்புவதைத்தான் பெற முயல்கின்றோம். நமது உள்ளம் நமது நாட்டங்களின் நோக்கங்களே நிரம்பியது. எனவே அவற்றிற்கு வாய்ப்பளிக்க வேண்டிய வழியைப் பள்ளி வகுக்க வேண்டியது கடமை.

ஓய்வு நேரமே இல்லாத ஒருவன் தான் மேற்கொண்டுள்ள பணிக்கு ஆட்பட்ட அடிமைக்கு ஒப்பானவன். பாட்டாளிகள் ஓய்வில்லாமல் வேலை செய்வதை முதலாளிகள் விரும்புவார்கள். பெற்றோர்களும் தமது பிள்ளைகள் இடைவிடாது படித்துக் கொண்டிருப்பதையே விரும்புகிறார்கள். இடைவிடாது படித்துக்கொண்டிருக்கும் மாணாக்கனை நன்மாணாக்கன் எனக் கருதுகிறார்கள். எந்திரங்கள் இன்றைய நாகரிகத்தை வளைத்துக் கொண்டிருக்கின்றன. பலவற்றை மனித உதவி இன்றிச் செயற் படுத்திக்கொள்ளலாம். அதனால் மனிதன் ஓய்வு நேரத்தைக் கழிக்கப் பல வழிகளைத் தேடுகின்றான். மாணவர்களும் அன்று ஒரு பாடத்தை உணருவதற்குப் பல நூல்களைத் துருவி ஆராய்ந்தார்கள்.

இன்று பலநூல்களிலுள்ள கருத்துக்களைத் திரட்டிய குறிப்புப் புத்த கங்கள் பல உள. அதனால் மாணவர்கள் மூலப்புத்தகத்தைப் படிப்ப தில்லை. மூலப்புத்தகங்களைப் படிக்காததனால் அவற்றைப்போன்ற வேறு புத்தகங்களைப் படிப்பதற்குத் தூண்டுதல் இல்லா தொழிந்து விட்டது. முற்காலங்களில் ஓய்வு நேரங்களில் பிள்ளைகள் புதினங்களை ஆங்கிலத்திலாவது தமிழிலாவது படித்த வண்ணம் காட்சியளிப்பார்கள். ஆனால் இன்று எதையும் படிப்பதில்லை. காரணம் என்னவென்றால் புத்தகங்களைப் படிப்பதில் இளமையிலிருந்து பள்ளிகள் பிள்ளைகளுக்கு ஊக்கம் அளிப்பதில்லை. அதனால் அவர்கள் ஓய்வு நேரங்களில் என்ன செய்வதென்று அறியாமல் காலத்தை நினைத்த வண்ணம் தொடக்கத்தி லேயே வீணாக்குகிறார்கள். எனவே பள்ளிகள் மாணவர்களுடைய பல நாட்டங்களைக் கருதி அவர்களுக்குச் சிறந்த அனுபவங்களை இளமையி லிருந்து ஓய்வு நேரங்களுக்கென வகுத்துத்தரவேண்டும். ஒவ்வொரு மாணவனும் ஒரு விருப்புத் தொழிலை மேற்கொண்டால் மாணவர்கள் தம் ஓய்வு நேரங்கள் பயனுடையவையாக அமைந்துவிடும்.

ஓய்வு நேர அனுபவங்கள் கல்வியைச் சார்ந்தவை என்பது இன்றைய கல்வியாளர் கருத்து. இன்று கல்வியின் நோக்கம் மிகப் பரந்தது. முழுத் தன்மையை அதன் குறிக்கோளாக வற்புறுத்துவது. தொட்டில் முதல் இடுகாடு வரை வேலை நேரங்களும் ஓய்வு நேரங்களும் மனித நடத்தையைப் பல அனுபவங்களாக மாற்றிக் கொண்டே உள்ளன. ஒழுக்கம், உணர்வு, தன்னடக்கம் ஆகிய பல பண்பாடுகள் ஆளுமைக்கு அடிகோலுகின்றன. அதனால் இளமையில் தரும் அனுப வங்கள் நன்மையின் அடிப்படையில் ஆக்கம் தரவேண்டும். எனவே ஓய்வு நேர அனுபவங்கள் கல்வியின் பாற்பட்டவை.

ஓய்வு நேரத்தில் மாணவர்கள் கொள்ளும் ஈடுபாடுகள் அவர்களுக்கு விருப்பமுள்ளவையாகவும் கட்டுப்பாடற்றவையாகவும் தன்னுரிமை வழங்குபவையாகவும் மனிதப் பருவத்திற்கு உதவுபவையாகவும் அவர் களுடைய தகுதிக்கு ஏற்றவையாகவும் உள்ளத்திற்கு உவகையும் ஆர்வத்தையும் அளிப்பவையாகவும் ஆளுமைத் திறனை வளர்ப்பவை யாகவும் அமைதல் வேண்டும். பல கைத்தொழில்கள், மகிழ்ச்சிச் செலவு, இசை முதற் பலகலைகள், சாரணம், சமூகத் தொண்டு, செஞ்சிலுவை இயக்கம், இலக்கியம், கணிதம், நிலநூல், பொருளாதாரம், வரலாற்றுத்துறை, நிழற்படம் பிடித்தல், நாடகம் இன்னோரன்ன பிற கல்விச் சார்புற்றவையாகவும், தொழிற் சார்புற்றவையாகவும், ஓய்வுக் கலைகளாக அமையலாம். இன்று இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் திரைவானமாக உருவெடுத்து மக்கள் மனத்தில் கவிந் துள்ளன. இன்றைய இளைஞரும் முதியவரும் ஆண்பாலரும் பெண் பாலரும் திரைப்படத்தில் திளைக்கிறார்கள். அதுவே இன்றைய ஓய்வு நேர ஈடுபாடாக உள்ளது. பள்ளிகளும் கல்லூரிகளும் ஓய்வு நேரத் துறைக்கு என்ன செய்ய இருக்கின்றன எனப் பார்ப்போம்.

5. பள்ளி வெளியீடுகள்

மாணவர்களுடைய வாக்குத்திறன்களை ஏற்று அவர்களை ஊக்குவிக்கும் பள்ளி வெளியீடு சிறந்ததொரு பாடப் புறச்செயலாகும். அதில் பங்கு கொள்ளும் மாணவர்கள் தமக்கு மட்டுமே யன்றிப் பொதுவாக மற்றெல்லாப் பிள்ளைகளுக்கும் ஆக்கம் அளிக்க இயலும். பள்ளி வெளியீடுகள் பள்ளியைப் பற்றிப் பள்ளி உலகத்துக்கும் பொது மக்களுக்கும் பள்ளியின் குறிக்கோளினை எடுத்துக் கூறி அதன் தகுதியினைப் பறைசாற்றி அறிவிப்பவை. பள்ளி மாணவர்கள் தமது கூட்ட ஒருமையினைத் தமது பள்ளி வெளியீட்டில் உணர்வார்கள். அவர்களுடைய கருத்துக்கள் ஒன்றுகி உருவெடுத்து வேறுபாடின்றிப் பள்ளியின் திருவினை வெளிப்படுத்தும். பள்ளியின் பல செயற்பாடுகள் வெளியீடாகும். அதனுல் ஆசிரியர்களும் மாணவர்களும் தமது பள்ளி வெளியீட்டினை ஒழுங்காக நடத்துவதற்கு ஏற்ற திட்டத்தை வகுத்தல் கடமையாகும்.

தலைமையாசிரியர் தமது தலைமையில் இரண்டு மூன்று ஆசிரியர்கள் நான்கைந்து மாணவர்களை ஒரு குழு வாக்கி அதற்கு வெளியீட்டின் பொறுப்பினை ஒப்படைக்க வேண்டும். தனி ஆசிரியர் அல்லது திறமையுள்ள ஓர் உதவி ஆசிரியர் வெளியீட்டு ஆசிரியராக அமர்வு பெறலாம். சில பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு வெளியீட்டினை ஏற்படுத்துவதும் உண்டு. மாதத்துக்கொரு முறை அவ்வெளியீடுகள் வெளிப்படலாம். வகுப்பு வெளியீடென்றுல் ஒவ்வொரு வகுப்புக்கும் வகுப்பு வெளியீட்டுக்குழு ஒன்று வேண்டும். குழுவில் ஆசிரிய உறுப்பினர் ஒருவர் இருக்கவேண்டும். வகுப்பாசியர் மேற்பார்வையாளராக இருக்கலாம். வகுப்பு வெளியீடு மாதத்திற்கொரு முறை வெளியிடுதல் நன்று. அல்லது மூன்று மாதத்திற்கொரு முறையென ஆண்டுக்கு நான்கு வெளியீடுகளாவது வெளியிடுதல் வேண்டும். வகுப்பு வெளியீடு கையெழுத்துப் படியாக இருத்தலே சிறந்தது. வெளியீடு யாங்ஙனம் அமைய வேண்டு மென்பதைப்பற்றிக் குழு நன்றுக ஆராய வேண்டும். ஒவ்வொரு வகுப்புக்கும் வெவ்வேருக அமைப்பு வேண்டும். ஒவ்வொரு வகுப்புக் குழுவும் தனித்தனியாகச் சிந்தனை செய்தல் வேண்டும். வகுப்பு வெளியீடுகளில் வெறும் கட்டுரைகளேயன்றி ஓவியங்கள், வண்ணச் சித்திரங்கள், நகைத் துணுக்குகள், புதிர்கள், வகுப்பறிக்கைகள் ஆகிய எல்லாம் இடம் பெறலாம். அதன் முகப்பு கண்ணைக் கவருவதாக வேண்டும். கட்டுரைகள் முதலியவற்றை எழுதும் ஒவ்வொரு மாணவனும் தானே அவற்றை நல்ல கையெழுத்தில் தூய தாளில் எழுதித் தரவேண்டும். ஒவ்வொரு வெளியீட்டினையும் வகுப்பாசிரியர் ஒரு வகுப்பில் பாராட்ட வேண்டும். முதலில் வகுப்பு மாணவர்கள் அதைப் படித்த பிறகு படிப்பகத்திற்கு எல்லா மாணவர்களுடைய பார்வைக்கும் அதை வைக்கவேண்டும். பின்னுல் எல்லா வகுப்பு வெளியீடுகளையும் தலைமையாசிரியரும் மற்ற ஆசியர்களும் பார்வையிட்டு அவரவர்க

ளுடைய சுவைக் குறிப்புக்களை ஒரு புத்தகத்தில் குறிப்பது நல்லது. தமது ஆசிரியர்களுடைய சுவைக்குறிப்பினைப் படிப்பதற்கு மாணவர்கள் விழைவார்கள். அவர்களுடைய கருத்துக்களை அறிவதற்கும் ஆவல் கொள்ளுவார்கள். இங்ஙனம் வகுப்பிதழ்களிலுள்ள சிறந்த கட்டுரைகளைப் பொறுக்கி ஒரு பள்ளி வெளியீட்டினை உருவாக்கலாம். அதனை அச்சிட்டுப் பள்ளி வெளியீடாகப் பதிப்பதே சிறந்த முறையாகும். ஆசிரியர்களே கட்டுரைகளை எழுதிப் பல பிள்ளைகளின் பெயரால் வெளியிடுவது நன்றன்று. இத்தகைய பணியில் மாணவர்களை ஆசிரியர்கள் தொடர்ந்து இடைவிடாது ஊக்கிக்கொண்டே இருந்தால் வெளியீடுகள் நல்ல முறையில் அமைதற்கு இடமுண்டு. திறமையுள்ள தலைமையாசிரியர் பலவகைத் திட்டங்களை வகுத்து ஆசிரியர்களுக்குப் பொறுப்புக்களைப் பங்கிட்ட பிறகு ஆசிரியர்கள் வாளாவிருந்து விடுவது வழக்கம். அந்நிலையில் அவர் தம் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கும் பள்ளியின் தரத்தைக் கடைப்பிடிப்பதற்கும் தாமே எல்லாவற்றையும் கவனிக்கும்படியான ஒரு நிலையும் ஏற்படுவதுண்டு. பொறுப்பேற்றுக்கொண்ட ஆசிரியர்கள் எப்பொறுப்பினையும் நழுவவிடுதல் கூடாது. ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு பொறுப்பினையும் பற்றிச் சிந்தித்தல் வேண்டும். சிந்தனை அதிகமாக அதிகமாகப் புதுமைகளைக் காண முடியும். புதுமைகளின் வழியாகப் படைப்பாற்றல் உண்டாகும். இப்பணிகளில் மாணவர்களும் பங்கு கொள்ளுவதால் தமதாசிரியருடைய ஆற்றலை அவர்களும் பின்பற்றுவார்கள். இவற்றுல் பெறும் அடைவு இன்பத்தைத் தரும். வகுப்பு வெளியீட்டின் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு ஆசிரியரும் அதைத் தமது திறமையின் கருவூலமாகக் கருதலாம். மாணவர்கள் பெறும் இன்பம் அவர்களுக்கும் உரியதாகும்.

திங்கள்தோறும் வெளிவரும் வகுப்பு வெளியீடுகள் பிள்ளைகளை இயக்கக் கூடும். அவற்றை உருவாக்கிய பிள்ளைகள் அடுத்த வெளியீடுகளிலும் இடம் தேடுவார்கள். அவற்றை எடுத்துப் பார்த்து அகமகிழ்வார்கள். இத்தகைய வெளியீடுகள் ஒரு சிலருக்கே வாய்ப்பளிக்கின்றன. ஆகையால் எல்லாப் பிள்ளைகளுக்கும் வாய்ப்பளிக்காதது பற்றி அதைக் குறை கூறுவதுண்டு. பள்ளியிலுள்ள எல்லாப் பிள்ளைகளும் எழுத்துவன்மை பெறுதலை எதிர்பார்க்க முடியாது. ஆனல் எழுத்துவன்மையுள்ளவர்களுக்கு இஃது அளிக்கும் வாய்ப்பினை மறுக்க இயலாது. சில பள்ளிகள் அவற்றின் வெளியீடுகளை இடைவிடாது நடத்துகின்றன. அங்ஙனமே வகுப்பறை வெளியீடுகளும் இடைவிடாது வருகின்றன. சில பள்ளிகளில் இத்துறை மேம்பாடு பெற்றுள்ளது.

பிள்ளைகளின் பெயரால் ஆசிரியர்கள் இத்தகைய வெளியீடுகளைப் பிள்ளைகளின் ஈடுபாடின்றி வெளியிடுதல் கூடாது. இங்ஙனம் ஆசிரியர்கள் மேற்கொண்டால் இதை ஒரு வற்புறுத்தும் கடமையாகக் கருதிச்

செயலாற்றுவார்கள். பிள்ளைகள் எதை எழுதிக் கொணர்ந்தாலும் அதைத் திருத்தி ஏற்றுக் கொள்ளுதலே நன்று. வேறு வெளியீடு களிலிருந்து அவர்கள் அப்படியே பார்த்து எழுதி வருதலை மட்டும் தடுத்தால் போதும். கருத்துக்களை ஏற்றுக்கொண்டு சொற்களைத் தாமாக அமைத்துக் கொள்ளுதலை ஒரு வழியாகத் தொடக்க நிலையில் காட்டலாம். வேறு வெளியீடுகளிலிருந்து பெயர்த்தெழுதியவை அல்ல என்று ஒவ்வொரு கட்டுரைக்கும் கட்டுரை அளிக்கும் மாணவனிட மிருந்து ஓர் உறுதி மொழியினைப் பெறுதல் வேண்டும். வெளியிட்ட கட்டுரைகளைப்பற்றி ஆசிரியர்கள் இழிவாகப் பேசுதல் கூடாது. அங்ஙனம் பேசுவதால் மாணவர்கள் ஊக்கம் குறைந்து விடுவார்கள். குற்றமிருப்பின் அதைப் பொருட்படுத்தாது அதிலுள்ள குணத்தையே பாராட்ட வேண்டும். ஆசிரியர்களும் தமது பங்கினைப்பற்றிப் பெருமை பேசிக் கொள்ளுதல் கூடாது. அவர்கள் பங்கு பெரும்பங்காயினும் அதை மாணவர்களுக்கே உரித்தாக்க வேண்டும். நாளடைவில் ஆசிரியர்களுடைய பணியெல்லாம் வழிகாட்டுதலோடு நின்றுவிட வேண்டும். பள்ளி வெளியீடுகளுக்கு ஆக்கம் தருபவை பள்ளியின் நூல் நிலையமும் படிப்பகமும் என்பதை மறந்துவிடுதல் கூடாது. அதனுல் பள்ளி வெளியீடுகளில் கலந்துகொள்ளும் பிள்ளைகள் பல நூல்களையும், பத்திரிகைகளையும் படிக்குமாறு தூண்டுதல் வேண்டும்.

பள்ளி வெளியீடுகள் பள்ளியையும் மாணவர் இல்லங்களையும் இணைக்கக்கூடியவையாகும். பொதுமக்கள் பள்ளி வெளியீடுகளைக் கண்டு பள்ளியின் தரத்தினை எளிதில் மதிப்பிடுவார்கள். பொதுவாக ஆசிரியர்களின் திறன்களை அறிவதற்கும் பள்ளி வெளியீடுகள் ஒரு வாய்ப்பினை அளிக்கக் கூடியன.

6. சாரணர் இயக்கம் :

பாடப்புறச் செயல்களில் சாரணக் குழுவினர் செயற்பாடுகள் நம் மைக் கவருபவை. பிள்ளைகள் நன்மையைக் கடைப்பிடிக்க வேண்டு மென்று வற்புறுத்துவதைக் காட்டிலும் அவர்களை நற்செயல்களில் ஈடு படுத்துவதே நல்லதாகும். பண்பாடுகள் பல நல்ல முறையில் வளர வேண்டிய திட்டங்களைச் சொல்லளவில் வீகுத்து விட்டால் மட்டும் போதாது. சொற்களையெல்லாம் செயலாக்கவேண்டும். நன்மை கடைப் பிடி, இணக்கமறிந் திணங்கு, பெரியாரைத் துணைக்கொள், உற்றுழி உதவு என்றெல்லாம் வாயளவில் வற்புறுத்திக் கொண்டிருந்தால் பிள்ளை கள் அவற்றை அறிவதற்குப் போதிய உளவளர்ச்சி பெற்றிருக்க மாட்டார்களாகையால் செயல்கள் மூலமாக அவற்றை அறிந்து உணர்ந் தாலன்றி அவை மாணவர்களுடைய பழக்கங்களில் ஒன்ருக்மாட்டா. சாரணர் இயக்கம் பிள்ளைகளைப் பல நல்வழிகளில் ஈடுபடுத்துவதற்குப் பல்லாண்டுகளாக உதவியுள்ளது. ஆண்பாலருக்கு மட்டும் அன்றிப் பெண்பாலருக்கும் இத்தகைய இயக்கம் உரித்தாகும்.

சாரணர் இயக்கம் [1] சர் ராபெர்ட் பாடன் பவெல் என்பவரால் உருப் பெற்றது. அவர் பிரிட்டிஷ் இராணுவத்தில் தளபதியாக விளங்கியவர். கல்வியாளர் அல்லராயினும் மனிதத் தன்மையை நன்ருக அறிந்தவர். இராணுவத்தினராயினும் அன்றி வேறு எவராயினும் நன்னடத்தையும் தொண்டாற்றும் உள்ளமும் மனிதனுக்கு வேண்டற்பாலவை என்று கருதினர். ஒவ்வொருவரும் உடன்பிறப்புணர்வோடும், தொண்டு மனப் பான்மையோடும், தனித் தன்மையோடும் வளரவேண்டுவது கடமை என்று கருதினர். சாரணர்கள் ஒழுக்கத்தையே முதன்மையாகக் கருதினர்கள். இளமையிலேயே பிள்ளைகளை நல்ல செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதே சாலச் சிறந்தது. சாரணர் இயக்கத்தில் பிள்ளைகள் வெகு ஆர்வத்தோடு சேர விரும்புகிருர்கள். அவர்கள் சாரணக் குழுக் களாகப் பணியாற்றுவதில் அவர்களுக்கு ஆற்றல் உண்டாகிறது. குழு மனப்பான்மையும், அதற்குத் தலைமை ஏற்கும் திறனும், கடமையைச் செய்யும் உள்ளமும், தொண்டாற்றும் ஆர்வமும், என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற நேர்மையும் உயர்ந்த பண்பாடுகளாகச் சாரண இயக்கத்தினரிடையே வளருபவை. இவையெல்லாம் சாரண ருடைய வாக்குறுதியாகவும், சட்டமாகவும் கோட்பாடுகளாகவும் செயல் களில் வற்புறுத்தப்படுகின்றன. இளமையில் வளரும் இப்பழக் கங்கள் முதுமையில் நன்மையைப் பயக்கின்றன. பிள்ளைகள் பிறர்க் குதவி செய்வதையே தமது பெருங் கடமையாகக் கருதுவது நல்ல தன்றே! பொறுமையும், அருளுடைமையும் பிறர் இடுக்கண்களை அகற்றும் மனப்பான்மையும் ஒவ்வொருவருக்கும் வேண்டற்பாலவை. பெரும்பாலும் இவ்வியக்கத்தினர் இடுக்கண் வருங்கால் நகுக என்பதற் கிணங்க அதனை அடுத்தூர்ந்தும் அடுக்கிவரினும் அழிவிலான் உற்ற இடுக்கண் இடுக்கண்படும் என்பதற்கிணங்கவும் நடந்துகொள்ளுவார் கள். இவை தற்கொடை உணர்ச்சியின்பாற்படும். இவைபோன்ற கொள்கைகளே உயர்ந்த வாழ்க்கையின்பாற்பட்டவை. கடவுள் வழிபா டென்பதும் பிறர்க்குதவி செய்வதேயாம். சாரணத் தலைவர் இவை போன்ற உயரிய பண்புகளை அகத்தும் புறத்தும் கொண்டவர்களாக இருப்பர். அத்தகையோருடைய தலைமையில் இளைஞர்கள் எடுத்துக் காட்டுக்களைப் பின்பற்றி ஒழுக்க எழிலோடு ஒழுகுவார்கள். சாரணர்கள் தூய உயர்ந்த நோயற்ற வாழ்க்கையை வகுத்துக் கொள்ளுவது விரும் பத் தக்கது. அவர்கள் தன்மானமுடையவர்கள். பொறுமை, அடக்கம் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளுபவர்கள். கடவுள் வழிபாடு, நாட்டுப்பற்று, நாட்டினர்மீது அன்பு ஆகியவை அவர்களுக்குரிய ஒழுக்கங்கள். நாள்தோறும் நன்மை செய்ய வாய்ப்புத் தேடுவதே அவர்கள் நல்லறம். சாரணர் பணியாற்றுதலின் வாய்ப்பினை நாடிக் கொண்டே இருப்பர். அஃது அவர்களுக்கு இயற்கையாகிறது. அது

1. Sir Robert Baden Powel

மதச்சார்பு உடையதன்று. அரசியற் சார்பும் உடையதன்று. பிறர்க்குதவி செய்தல் என்ற ஒரே கோட்பாட்டினைக் கொண்டது. அதனால் இஃது உலகத்திற்கே உகந்தது.

சாரணர்கள் வாரத்திற்கொரு முறை அல்லது இருமுறை கூடுவார்கள். சாரண ஆசிரியரும் தலைமை ஏற்பார். அவர்களுடைய கோட்பாடுகளை வகுப்புக்களில் பழகிக்கொள்ளுவார்கள். சாரணத் திறனோடு [1] முதலுதவி செய்யும் திறனையும் பெறுவதுண்டு. இதனோடு ஏனைய திறன்கள் பல உள. அவற்றையும் வளர்த்துக்கொண்டு அவை ஒவ்வொன்றுக்கும் [2] தனித்தனி மதிப்படையாளங்கள் பெற்று மகிழ்வார்கள். பாடப்புறச் செயல்கள் பலவற்றில் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு அதிகமாக உண்டு. அவர்களுடைய செயல்களெல்லாம் வகுப்பறைக்குப் புறத்ததே ஆகும். ஒவ்வொரு திறனையும் சாரணக் கோட்பாட்டின்படி அவர்கள் வளர்த்த வண்ணம் இருப்பார்கள். அவை ஒவ்வொன்றாக அவர்களுடைய ஆளுமையை வளர்க்கக் கூடியவை; அவர்களிடையே நிகழும் போட்டிச் செயற்பாடுகளின் வழியாக நிகழக் கூடியவை; அவர்ளுடைய எச்செயலையும் வற்புறுத்துதல் கிடையாது. மாணவர்கள் தாமாகவே ஒவ்வொன்றிலும் ஈடுபாடுகொள்ள விரும்புவார்கள். அவை ஒவ்வொன்றும் திறமையை அளிக்கக்கூடியதாகையால் மாணவன் தன்னை ஒரு மனிதனாக்கிக் கொள்ளுகிறான்.

சாரணர் இயக்கம் ஒவ்வொரு பள்ளிக்கும் அணிகலனாக விளங்குகிறது. சாரணர் குழு இல்லாப் பள்ளியைக் காண்பதரிது. அதன் நன்மைகளைத் தொடக்கத்தில் ஆசிரியர்களும் அறியாது விடுத்தனர். இன்று அது பள்ளிப் பிள்ளைகளை நல்ல குடிமக்களாக்கும் பண்பினைக் கொண்டதென்று ஒத்துக்கொள்ளப்படுகிறது. இன்று பள்ளி ஆசிரியர்கள் பலருக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

மகளிருக்கென சாரணத்தைப் போன்ற தனிப் பயிற்சியும் உண்டு. அது பெண்களுக்கு விளையாட்டாகவே அமையும். நல்ல குடிமகளாகப் பயிற்சி பெறுவதற்கு வழிவகுக்கும். இதற்குள்ள செயற்பாடுகள் நோயாளிகளைப் பேணுதல், இசைத்தல், பலவகை விளையாட்டுக்கள், சமைத்தல் இன்னோரன்னவையாம். இவை யாவும் அவர்களுக்குரிய பல திறன்களை வளர்த்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பினை அளிக்கின்றன. இதனால் தனித்தனியாகச் சமூகத் தொண்டாற்றும் உள்ள ஊக்கமும் வளரும். இவற்றால் ஓய்வு நேரத்திற்கும் பணிகள் உண்டாகும்.

பதினொரு வயதுக்குக் குறைந்த சிறுமிகளுக்கு ஒரு பயிற்சி; பதினொரு வயது முதல் பதினாறு வயதுவரை உள்ளவர்களுக்கு ஒரு பயிற்சி; பதினாறு வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஒரு பயிற்சியாக முறையே [3] புளு பர்ட்ஸ் என்றும், [4] கரல் கைட்ஸ் என்றும், [5] ரேஞ்சர்

---

1. First Aid 2. Proficieney Badges 3. Blue birds 4. Girl Guides 5. Ranger

என்றும் இப்பயிற்சி மூவகைப்படும். இங்ஙனமே மாணவச் சாரணர் களுக்கும் இதே வயது அளவில் [1] கப்கள் என்றும், [2] ஸ்கௌட்கள் என்றும் [3] ரோவர் என்றும் பிரிவுகள் உண்டு.

மகளிர் இத்தகைய இயக்கத்தில் ஈடுபட்டால் அவர்களுக்குத் தமது பள்ளி என்ற உணர்வும் ஒற்றுமை எண்ணமும் ஒத்துழைக்கும் நோக்கமும் உண்டாகும். ஒருமை மனப்பான்மை, கூட்டுறவு ஆகிய இரண்டும் பள்ளி மக்களிடையே ஓர் ஒருமைப்பாட்டினை உண்டாக்கியும் அவர்களுக்குரிய பண்புகளை வளர்த்தும் பல நலப் பாங்களிக்கின்றன.

இங்ஙனம் நுண்ணுணர்வோடும் நல்ல பண்புகளோடும் வளரும் மகளிர் நாட்டுக்குரிய ஒழுக்கங்களில் மீத்திறம் பெற்று நன்மகளிராகத் தமக்கும் தமது இனத்துக்கும் பயன்படுவார்கள்.

7. மாணவர் மன்றம்

தொடக்க நிலை முதல் கல்லூரி இறுதிநிலை வரை நமது கல்வி நிலையங்களில் மாணவர் மன்றங்கள் ஆட்சி புரிகின்றன. ஆண்டுத் தொடக்கத்தில் இற்றை நாட்களில் உயர்நிலைப் பள்ளிகளிலும்கூடப் பெரும் பரபரப்பினைக் காணலாம். மாணவர்த் தலைவர் தேர்தல், செயலர் தேர்தல், உட்குழுத் தேர்தல் ஆகிய மன்றத் தேர்தல்கள் பள்ளிகளில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்குகின்றன. இத்தேர்தல்களில் மாணவர்கள் மிக்க ஆர்வத்தோடு கலந்துகொள்ளுகிறார்கள். தேர்தல் நடைபெற்றவுடன் மன்றத் தொடக்க விழா நடைபெறும். அப்போது பெருத்த ஆரவாரம் எழும். ஆனால் பெரும்பாலும் தொடக்க விழாவிற்குப் பிறகு சில பள்ளிகளில் மன்றம் உறங்கத் தொடங்கிவிடும். ஆண்டு இறுதிக் கூட்டத்திற்குச் சில பள்ளிகள் விழித்துக்கொள்ளும். பல அதையும் மறந்துவிடும்.

மாணவர் மன்றம் மாணவர்களுக்குப் பல நன்மைகளை அளிக்க வல்லது. பிள்ளைகள் தமது பேச்சுத் திறனை வளர்த்துக்கொள்ளுவதற்கு மன்றத்தை நாடவேண்டுமேயன்றி வெளியாரையும் அரசியலாரையும் கல்வித் தொடர்பு அற்றவரையும் கூட்டத்தில் பேசுமாறு அழைத்துப் பணத்தையும் காலத்தையும் வீணாக்குவது கூடாது. ஆனால் அஃது இப்போது வழக்கமாகிவிட்டது. பள்ளிக்கெனப் பொதுவாக ஒரு மன்றம் இருக்கலாம். அம்மன்றக் கூட்டங்களில் பள்ளி மாணவர்கள் எல்லோரும் உறுப்பினராகையால் யார் வேண்டுமானாலும் பங்கெடுத்துக்கொள்ளலாம். ஒரு மாணவன் தலைமையேற்று விரும்பும் மாணவர்கள் பேசிப் பழகலாம். விவாதிக்கலாம். இத்தகைய பொது மன்றக் கூட்டங்கள் ஒரு பருவத்திற்கொரு முறை நிகழ்வது போதும். ஆனால் இப்பொது மன்றத்தில் எல்லாரும் பங்குகொள்ளுவதில்லை. குடியரசு நாட்டில் ஒவ்வொருவரும் பேச்சுத் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டியது

---

1. Cubs 2. Scouts 3. Rover

இன்றியமையாதது. முதற்கண் தாய்மொழியிலன்றோ பேச்சுத்திறன் வளரவேண்டும். இன்று தாய்மொழியில் மாணவர்கள் பேராற்றல் பெற்று விளங்குகிறார்கள். அவர்களுடைய ஆற்றல் குன்றாதபடி வளர்க்க வேண்டியது பள்ளிகளின் கடமை. பள்ளிகள் வகுப்பறைகளில் பாடங்களைக் கற்பிக்கும்போது இந்த நோக்கத்தினைக் கொண்டு ஒரோவழி பேச்சுத்திறனை வளர்க்கலாம். ஆனால் சிறப்பாக அதற்கென வகுக்கக்கூடிய இடம் இலக்கிய மன்றமேயாகும். வகுப்பறையில் ஆசிரிய மாணவர் உறவு ஓர் உரிமைச் சூழ்நிலையைத் தருவதில்லை. மாணவர்கள் ஆசிரியரைக் கண்டவுடன் அவர்கள் நா எழுவதில்லை. வாய்விட்டுப் பேசுவதற்குத் தயங்குகிறார்கள். எனவே தொடக்கத்தில் ஆசிரியர்கள் மன்றக் கூட்டங்களில் தலையைக் காட்டக்கூடாது. கூட்டத்திற்குப் புறத்தே மாணவர்கள் அறியாத வண்ணம் ஒதுங்கி நின்று அவர்களுடைய பேச்சினைக் கேட்கலாம். குற்றம் கண்டால் அதனை மாணவனைச் சுட்டாமலும் குறைகூறாமலும் பொதுப்படக் குற்றத்திற்குத் திருத்தம் கூறுதல் நன்று. அல்லாது குற்றத்தைப் பெரிதாக்கி மாணவர்களை எள்ளி நகையாடுவது தவறாகும். அவர்களுடைய பேச்சுப் பிழைகள் அல்லது கருத்துப்பிழை எதுவாயினும் குற்றத்தை மறந்து குணத்தைப் பாராட்டுதலே நன்று. பள்ளிப் பொது மன்றத்தில் கல்வித் திறமையுள்ள பேச்சாளர்களைப் பயனுள்ள பேச்சினைப் பேசுமாறு கேட்டுக்கொண்டு அவர்கள் சொற்பொழிவைக் கேட்டுப் பயன்பெறலாம். நல்ல பேச்சாளர்கள் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குவார்கள். அரசியல்வாதிகள் தமது கருத்தினை வற்புறுத்தினாலும் பிள்ளைகள் பேச்சுத் திறனை மட்டும் கூர்ந்து அறியுமாறு பிள்ளைகளுக்கு முற்கூட்டியே அறிவுறுத்தல் நல்லது. அல்லது ஆசிரியர் அக்கூட்டத்தில் அமர்ந்திருந்தால் அவர் பேச்சின் பல திறன்களைப் பிள்ளைகளுக்கும் விளக்கிக் கூறலாம்.

தாய்மொழியில் முதற்கண் பேச்சுத்திறன் வளரவேண்டியது முக்கியமென்று கூறினோம். தொடக்க நிலையிலிருந்து உயர்நிலை வரை பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு வேண்டியது அவசியம். அதனால் ஒவ்வொரு வகுப்புக்கும் ஓர் இலக்கிய மன்றம் வேண்டற்பாலது. வாரத்திற்கொரு முறை பள்ளி நேரத்திற்குப் பிறகு மன்றம் கூடவேண்டும். எனவே வகுப்பு இலக்கிய மன்றத்திற்கு மாணவர் தலைவர் ஒருவரும் செயலர் ஒருவரும் தேர்ந்தெடுத்து அவர்களிடம் கூட்டம் கூட்டும் பொறுப்பினை ஒப்படைக்கலாம். வகுப்புக்கென ஓர் அறிவிப்புப் பலகை இருந்தால் கூட்டத்தைப் பற்றி அறிவித்தல் ஒரு நல்ல பழக்கம். ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு மாணவர் தலைவரைத் தேர்ந்தெடுப்பதோடு பேச்சாளர்களையும் முற்கூட்டியே நியமித்துக் கொள்ளவேண்டும். குறித்த பொருளைப் பற்றி அவர்கள் நன்றாகத் தமது பேச்சினைத் தயாரித்து வருதல் வேண்டும். வகுப்பு இலக்கிய மன்றமும் ஒரு நல்ல கூட்டமாக நடைபெறுதல் வேண்டும். தொடக்கத்தில் வகுப்பாசிரியர்

கூட்டத்தை நடத்தும் முறைகளை விளக்கவேண்டும். பின்னர் அவர் ஒதுங்கிவிடலாம். ஆனால் பிள்ளைகளை விட்டுவிட்டு அவர் போய்விடுதல் கூடாது. கூட்டம் முடியும் வரையில் மாணவர்கள் கண்களுக்குப் படாமல் மறைவாகக் காத்திருக்கவேண்டும். பிள்ளைகள் திடீரென்று அவருடைய உதவியை நாடலாம். ஆசிரியர் சிலர் மாணவர்களைத் தனியாக விட்டுவிட்டுத் தமக்கு ஓய்வு நேரமென்று கருதிச் சென்றுவிடுதல் மிகவும் கண்டிக்கத் தக்கது. அத்தகையோர் ஆசிரியர் குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்புகள் என்று கூறுவது பொருந்தும். மாணவர்களுடைய செயற்பாடுகளைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளுதலும் அவர்களுக்கு வேண்டிய ஊக்கம் கொடுத்தலும் ஆசிரியர்களது தலையாய கடமை. இங்ஙனம் வாரந்தோறும் வகுப்பு மன்றம் கூடினால் வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் வாயைத் திறக்கவாவது கற்றுக்கொள்ளும். பிறகு சிறிது சிறிதாகப் பேச்சுத் திறனை வளர்த்துக் கொள்ளுவார்கள். கருத்துக்களை பறிமாறிக் கொள்ளுவார்கள். நன்றாகப் பேசிப் பழகிக் கொள்ளுவார்கள். கூட்டங்களில் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் ஒழுங்குகளையும் அறிந்து கொள்ளுவார்கள். இத்தகைய ஒழுக்கப் பழக்கமே நல்லது. சிறிய கூட்டங்களில் பெறும் ஒழுங்கு பெருங் கூட்டங்களில் இயற்கையாக விளங்கும். பெரும்பான்மையாகப் பள்ளிக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மாணவர் சிலர் கூட்டத்திலிருந்து நழுவுவது கண்கூடு. இத்தகைய பழக்கத்தைக் கண்டிக்க வேண்டும். வகுப்பு மன்றத்தில் பேச்சுத் திறனை வளர்த்துக் கொள்ளும் பிள்ளைகள் பள்ளிப் பொது மன்றத்தில் பல பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளுவதற்கு முன் வருவார்கள். இன்றைய பள்ளிகளில் வாய்விட்டுப் பேசும் பிள்ளைகள் நூற்றுக்குப் பதின்மருக்குமேல் இல்லை. அதனால் வகுப்பு மன்றங்கள் நன்றாக நடைபெற்றால் பிள்ளைகளிடையே பேச்சுத் திறன் நன்றாக வளரும். ஆசிரியர்கள் பேசும் பொருளைப் பற்றித் தனித்தனி மாணக்கருக்குக் கருத்துக்களையும் தந்துதவலாம்.

இலக்கிய மன்றங்களில் இற்றை நாட்களில் தாய்மொழியில் மட்டும் மாணவர்கள் பேச்சுத் திறனை வளர்த்துக் கொள்ள முற்படுகிறார்கள். ஆங்கிலத்தின் பழைய உயர்வு நிலை நமது பள்ளிகளில் நீடித்த வண்ணம் இருக்கின்றதேயன்றிச் சிறிதும் குறைந்தபாடில்லை. அதன் நிலையை ஒரு சமயம் உயர்த்தியும் மற்றொரு சமயம் தாழ்த்தியும் பல வழியாக அரசியற்றலைவர்கள் பேசிக்கொண்டிருப்பதால் ஆசிரியர்களும் மாணவர்களும் அதன் அசைவற்ற நிலையை அறியாது தம்மைக் குழப்பிக்கொண்டு அதை ஒரு தேர்வு மொழியாகக் கருதித் தேர்வில் தப்பித்துக் கொள்ளும் அளவுக்கு அம்மொழியில் தகுதி பெறுகிறார்கள். ஆனால் இன்றைய பாடத்திட்டத்தில் தொடக்கநிலை முதல் பட்டத் தேர்வுகள் நிலை வரை அம்மொழி பழைய ஆதிக்கத்தை வகித்து வருகிறது. அதை அறியாது பிள்ளைகள் அதை நன்றாகக் கற்றுக் கொள்ளுவதில்லை. அம்மொழியை நன்றாகக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களும்

குறைந்துவிட்டார்கள். எனவே இம்மொழி வகுப்பறைகளிலும் தேர்வு களிலும் ஊசலாடிக் கொண்டிருப்பதை மறுக்க முடியாது. உயர்நிலை களில் அம்மொழியில் பண்பட்ட ஆசிரியர்களுக்கு அதன் நிலை நன்ருகத் தெரிந்ததொன்றே. கல்வித் துறையினர் மட்டும் காணப்படும் குறை களை எடுத்துக் கூறி வருகிருர்கள். ஆனல் அம்மொழி ஆசிரியர்கள் என்று பதவி ஏற்பவர்கள் தமது தகுதிகளை உயர்த்திக் கொண்டாலன்றி மாணவர்களுடைய மொழித் திறனை வளர்க்க இயலாது. ஆயினும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு மொழியின் முக்கியத்தினை இன்னும் காலம் தாழ்த்தாது உணர்வித்து வேண்டிய பணியைத் தொடங்க வேண்டும்.

எல்லா மொழிகளும் பேச்சுப் பழக்கத்தில் முதற்கண் வளர்ச்சி பெறுதல் வேண்டும். இளமையில் மாணவர்கள் இரண்டு மூன்று மொழி களைக் கற்றுக் கொள்ளும் ஆற்றலுடையவர்கள். ஆனல் அவற்றை நெடுங்கணக்கு முதல் தொடங்கக்கூடாது. சொல்லையும் பொருளையும் இணைத்தும், செயலையும் பேச்சையும் தொடர்பு படுத்தியும் உரையாட லைத் தொடங்கி மொழியினைக் கற்பித்தால் பிள்ளைகள் அறிந்து கொள்ளு வதற்கும் பேசுவதற்கும் ஆர்வம் கொள்ளுவார்கள். பள்ளிகளில் கற்பிக் கும் பிறிதொரு மொழி தாய்மொழியாகையால் பிள்ளைகள் அதில் பேசக் கற்றுக் கொள்ளுவதற்கு ஒரு தனிச் சூழ்நிலை வேண்டியதில்லை. ஒரு புதிய மொழிக்கு மட்டுமே சூழ்நிலை இன்றியமையாதது. எனவே ஆங்கில மொழியைப் பேசக் கற்றுக் கொள்ளுவதற்கு ஒரு தனிச் சூழ்நிலை வேண் டற்பாலது. இதை உணர்ந்த ஒரு சில பள்ளிகளில் ஆங்கில ஆசிரியர் கள் ஆங்கிலத்திலேயே பேசுகிருர்கள். வேருெரு மொழி குறுக்கிடுதல் கூடாது. பிள்ளைகள் பழக்கமாக ஒருவருக்கொருவர் ஆங்கிலத்திலேயே பேசப் பழகுதல் வேண்டும். பேசப் பழகிவிட்டால் எம்மொழியையும் எளிதில் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். வகுப்பு மன்றங்கள் தொடக்கத்தில் பாடப் புத்தகத்தின் ஒவ்வொரு பாடத்தையும் பேசியும் உரையாடியும் பிள்ளைகள் பழகலாம். ஆங்கில ஆசிரியர் அந்நேரத்தில் பிள்ளைகள் பக்கலில் நின்று உதவலாம். எனவே மாணவர் மன்றம் ஆங்கிலத்துக்கும் ஆக்கம் தேடினலன்றி மாணவர்களிடையே ஆங்கிலம் வளராது. இதற்கு வேண்டிய சூழ்நிலையை அப்போதைக்கப்போது ஆங்கில ஆசிரியர் ஏற்படுத்துதல் கடமை.

இலக்கிய மன்றங்கள் பேச்சுத் திறனை அளிப்பதோடு பேச்சு வன் மையையும் அளிக்க வல்லவை. ஒருவர் தமது கருத்தினைத் தெளிவாகப் புலப்படுத்தி அறிந்துகொள்ள வேண்டியது கடமை. பேசிப் பேசிப் பழகினல் பேச்சு தெளிவு பெறும். பேச்சுக்கள் மட்டுமின்றிச் சொற் போர்களையும் நிகழ்த்தலாம். இலக்கிய மன்றத்தில் பேசுவதற்குக் கருத் துக்கள் பலவற்றினைப் பிள்ளைகள் நாளிதழ்களிலிருந்தும் நூலகத்தி லுள்ள புத்தகங்களிலிருந்தும் பொறுக்கியெடுக்கலாம். நன்ருகப் பேசக் கற்றுக்கொண்டால் பேச்சினைக் கேட்பதற்கு மற்றவர்கள் விழைவார்கள்.

மாணவர்கள் கருத்துக்களைத் தொகுக்கவும், விரிக்கவும், திறனையவும் கற்றுக்கொள்ளுவார்கள். பேசும் பிள்ளைகள் தட்டுத் தடையின்றிப் பேசத் தொடங்கிவிட்டால் அவர்கள் சொற் பெருக்கத்தை அடைவார்கள். விவாதங்களில் வெகு எளிதாகக் கலந்துகொள்ள முற்படுவார்கள். இப்போது மாணவர் மன்றங்களில் [1] போலிச் சட்டசபை போன்ற கூட்டமும் நடைபெறுகிறது. பொதுவாக மாணவர் இலக்கிய மன்றங்கள் பெரும் பேச்சாளர்கள் பலருக்குப் பயிற்சியளித்துள்ளன.

[2] 8. நாடகம் நடித்தல்

மாணவர்களுக்கு நடிக்கக் கற்றுக் கொடுத்தால் நன்றாக நடிப்பார்கள். நடிப்பு இயற்கையாகவே பிள்ளைகள்பால் மிக்குள்ளது. அன்று நாடகங்களுக்குச் சென்று நடிப்புக்களைப் பார்த்து மகிழ்வதுண்டு. பலர் நாடகங்களைக் காண வாய்ப்பு இருப்பதில்லை. ஆனால் இன்று நாடகங்களை எல்லாம் திரையில் காணக்கூடுமாகையால் சிறு குழவிகள் முதல் முதியவர் வரை பல நடிப்புத் திறன்களைக் கண்டு மகிழ்கிறார்கள். திரைப் படங்களில் ஒன்பான் சுவைகளும் காட்சியாக்கப்படுகின்றன. பல நடிப்புக்களைப் பார்த்துவிட்டுக் களிக்கும் சிறுவர்களும் சிறுமிகளும் தாம் ஒவ்வொருவரும் நடிகர்களைப் போன்று நடிக்க விழைகிறார்கள். திரைப் படங்களில் இசைக்கப்பெறும் ஒலியும் நமது பிள்ளைகளின் செவிகளை ஈர்ப்பதோடு இசையும் ஒட்டிக் ,கொள்ளுகிறது. எனவே இன்றைய பிள்ளைகளுக்கு நடிப்பிலும் இசையிலும் ஊக்கமளிக்க வேண்டியதில்லை. திரைப்படங்கள் இவ்வகையில் நன்மைகளை நல்கியுள்ளன.

நடித்துக் கற்றுக்கொள்ளுவது ஒரு சிறந்த கற்றல் முறையாகும். ஆசிரியர் தாம் கற்பிக்கும் பாடங்களை நடிப்பு முறையில் கற்றுக் கொடுக்கலாம். மிகக் கடினமான பாடத்தையும் ஒருமுறை நடித்துவிட்டால் வெகு எளிதாக அதைக் கற்றுக் கொள்ளலாம். நடிக்கும் பிள்ளைகள் தமது உணர்வின்றி நடிக்கக் கற்றுக்கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு நடிப்புக்கும் வேண்டிய உணர்ச்சியை வளர்த்துக் கொள்ளுவதோடு [3] நாடக மாந்தர்கள் நிலையில் கற்றுக்கொள்ளுகிறார்கள். முத்தமிழில் ஒன்று நாடகம். எல்லா மொழிகளுக்கும் நாடகம் உரியதாகும். நடிக்கும் பிள்ளைகள் நாடகக் கலையின் பல நுணுக்கங்களை யறிந்து கொள்ளுகிறார்கள். அகநோக்குடைய பிள்ளைகளும் புறநோக்குடையவராக ஒரோவழி மாறிவிடவும் முடியும். எனவே பள்ளிகள் தொடக்க நிலையிலிருந்து பிள்ளைகளுக்கு நடிக்கக் கற்றுக்கொடுக்கலாம். குழவிப் பள்ளி நிலையில் கூடப் பிள்ளைகள் திறமையோடு நடிக்கின்றனர். எல்லாப் பாடங்களையும் ஓரளவு நடிக்க இயலும். கடினமான எம்மொழி இலக்கியமாயினும் அதை நடிக்கும் வகையில் திருப்பி விட்டால் வெகு எளிதாகிவிடும். [4] ஷேக்ஸ்பியருடைய நாடகங்கள், [5] மில்டனின் காவியங்கள்

---

1. Mock Parliament 2. Dramatisation 3. Professional dramatists 4. Shakespeare 5. Milton

இன்னும் பெரும் புலவர்களுடைய இலக்கியங்கள் ஆகியவற்றைப் பிள்ளைகள் நெட்டுருச் செய்து நடிக்கத் தொடங்கினால் அவர்கள் தாமாகவே பொருளை உணர்ந்து கொள்ளுவார்கள். அங்ஙனமே தாய் மொழியிலும் பல நூல்களை நடிக்கலாம். சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டினை உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம். அவற்றி லுள்ள நேரல் கூற்றுக்களை நீக்கி நேர் கூற்றுக்களை மட்டும் நடித்தால் பிள்ளைகள் பொருளை விளங்கிக்கொள்ள முடியும். கற்றோர் நடித்தால் புதிய பொருள்களைக் காணமுடியும். ஆனால் நடிப்புக்கள் யாவும் கல்விச் சார்புற்றவையாக அமைதல் வேண்டும். எல்லாப் பிள்ளைக ளும் நடிப்புத்திறனைப் பெறுதல் இயலாதாயினும் சிலருக்காவது அஃது இயல்பாகிவிடும். அவர்கள் நடிப்பைக் கண்டு இன்புறுவதோடு கல்விப் பயனையும் பெறுவார்களன்றோ !

இக்காலங்களில் தாய்மொழியின் வளர்ச்சி காரணமாகப் பிள்ளைகள் தாய்மொழியில் நாடகம் அமைக்கும் திறனைப் பெற்றிருப்பதை ஆங் காங்கே நாம் காண இயலும். பள்ளிப் பாடங்களை நாடக அமைப்பில் எழுதுமாறு ஊக்குதல் நல்லது. இத்தகைய பணி படைப்பாற்றலுக்கு வழிகோலும். தாய்மொழியில் நாடகங்கள் பலவற்றைப் பலர் இயற்றி யுள்ளார்கள். அவற்றை ஆசிரியர்கள் பொறுக்கியெடுத்துக் கல்விச் சார்புற்றவற்றையும் நல்வழி புகட்டுவனவற்றையும் பிள்ளைகளுக்கு அளித்து நடிக்கச் செய்யலாம். தொடக்கத்தில் பிள்ளைகளுக்கு நடிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். நடிக்கும் வழியைக் காட்டிவிட்டால் பிள்ளைகள் எளிதில் நடிக்கக் கற்றுக்கொள்ளுவார்கள். பிள்ளைகள் திறமையோடு நடிக்கும் காட்சிகளை ஆசிரியர் குழாம் கண்டு களித் துள்ளது. ஆண்பள்ளிகளில் பொறுக்கி யெடுக்கப்பெறும் நாடகங்களில் மகளிர் பாத்திரங்கள் பெரும்பாலும் இல்லாதிருத்தல் நன்று. ஆண்கள் பெண்களாகவும் பெண்கள் ஆண்களாகவும் நடிப்பதைப் பலர் நகைப் பார்கள். எனவே எள்ளுவதற்கும் நகைப்பதற்கும் காட்சிகள் இருத் தலில் இராமையே நன்று.

பள்ளிகள் சிலவற்றுள் நிலை நாடக மேடை உள்ளது. எந்த ஆசிரி யரும் ஒரு பாடத்தினை நடிக்கவேண்டுமென்று நினைத்தால் உடனே வகுப்பினை நாடக மண்டபத்திற்கு அழைத்துச் சென்று அங்கு நடிக்க லாம். வகுப்புப் பாடங்களை நடிப்பதற்குத் தனி ஆடைகளும் அணி கலன்களும் வேண்டா. விழாக்காலங்களில் நன்றாக நடிக்கப்பெறும் பகுதிகளைக் [1] கதம்பக் காட்சிகளில் இணைக்கலாம். சில பள்ளிகளில் நாடக உடுப்புக்கள் இன்னும் மற்ற நடிப்புக்கு வேண்டிய கருவிகள், திரைகள் யாவும் உள்ளன. அவற்றைப் பெட்டியில் பூட்டி வைக்காது பிள்ளைகளுக்காக ஆசிரியர்கள் பயன்படுத்தவேண்டும். ஒரோ வழி ஆசிரியர்களும் ஆண்டுக்கொருமுறை ஆங்கிலத்திலாவது தாய்மொழியி

1. Variety entertainments

லாவது ஒரு நாடகத்தை நடித்துப் பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்டாக விளக்கலாம்.

19. இசை[1]

இசைக்கலை இசைவாணர் சிலருக்கு மட்டுமே உரித்தாயினும் இசை பயிலாதவர்களையும் இசை ஈர்க்கக்கூடியது. அஃது உள்ளத்தையே பண்படுத்தக்கூடியதன்றோ! இசைக்கு இசையாதார் இருக்கமாட்டார். பிள்ளைகள் இளமையில் இசை வயப்படுகின்றார்கள். குழவிப் பருவத்தில் தாயின் தாலாட்டிசையில் பிள்ளைகள் ஈடுபடுகின்றனர். அதை வளர்க்க வேண்டியது கடமை. இதற்குப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் பொறுப்பாவார்கள். சிலர் மட்டுந்தான் இசை பயில இயலும் எனக் கருதுவது தவறாகலாம். மகளிருக்கு மட்டுந்தான் இசை இன்றியமையாதது எனக் கருதுவதும் தவறு. இருபாலர் பள்ளிகளிலும் இசைக் கலைக்கு இடமுண்டு. இன்று திரைப்படங்களில் ஒலிக்கப் பெறும் இசை சிறியவர்களையும் முதியவர்களையும் கவர்கின்றது. இன்று வீடுகள்தோறும் திரைக் காட்சிகளின் இசை இடம்பெறுகின்றது. எனவே பள்ளிகளில் இளமை முதல் இசை வகுப்புக்களுக்கு இடமுண்டு. இசையில் ஈடுபடும் பிள்ளைகளுடைய பண்பாடுகள் இசையோடு வளர்ச்சிபெறும். இளமையில் இசையில் ஊக்கம் பெறும் பிள்ளைகள் நாளடைவில் இசையைத் தமது ஒரு விருப்புப்பணியாக ஏற்றுக்கொள்ளலாம்.

இசையறிவு பெறும் பிள்ளைகளின் பண்பாடுகள் வேறுபட்டிருப்பதைக் காணலாம். இசை அறிவை வளர்க்கும் பிள்ளைகள் எம்மொழியிலாயினும் அவர்கள் விரும்பும் பாட்டினைக் கற்றுக்கொள்ளுவார்கள். இசைக்கு மொழி வரம்பில்லை. ஒலியே இசையின் மொழி. எம்மொழியும் உடன்பாடு. இசை வகுப்புள்ள பள்ளி இசை சூழ்ந்து ஒலிக்கும். பிள்ளைகளும் இசையில் ஈடுபட்டு அகமகிழ்வார்கள்.

10. கலை விழா[2]

இன்று கலைவிழா ஆண்டுக்கொரு நிகழ்ச்சியாகப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கொண்டாடப்பெறுகிறது. சில பள்ளிகளில் முத்தமிழ் பெறு விழாவாக நடத்துகிறார்கள். மூன்று நாட்களுக்கு முறையே இயற்றமிழ் இசைத் தமிழ், நாடகத் தமிழ் ஆகியவற்றைப் பற்றிப் பெரும் பேச்சாளர்களை அழைத்து அவர்களைப் பேசுமாறு செய்கின்றனர். இவ்விழாக்கள் பிள்ளைகளுக்குச் சிற்றிலக்கியங்களிலும் பேரிலக்கியங்களிலும் ஓரளவு பற்றுக்களை உண்டாக்குகின்றன. பல பேச்சாளர்களுடைய பேச்சுத்திறனையும் அறிந்து கொள்ளுகிறார்கள். மாணவர்களுக்கு ஆர்வம் வளருகிறது. ஒவ்வொரு நாளும் இரவில் அத்தகைய

1. Music 2. Art Festival

விழாக்காலங்களில் கலைநிகழ்ச்சிகளில் மாணவர்களுக்குக் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிட்டுகின்றது. அதனால் பெறும் பயிற்சியின் பயன் போற்றற்கு உரித்தாகும்.

சில பள்ளிகளில் கலைவிழா என்னும் பெயரால் திரைப்படத்தில் நடிக்கும் நடிகர்களை அழைத்து வேண்டாக் கூட்டத்தினைச் சேர்த்துக் கொண்டு பணத்தையும் நேரத்தையும் வீணாக்குகிறார்கள். உண்மையாகக் கலை வளர்ச்சியில் ஈடுபாடு கொள்ளுபவர்கள் ஒவ்வொருவரும் தமது கலைத் திறனைக் காட்சியாக அளிப்பார்களாயின் அதைப் பெற்றோரும் மற்றோரும் விழாவுக்கு வந்து கண்டு களித்துப் பெருமை கொள்ளுவார்கள். உண்மையான கலைவாணர்களை ஒரோவழி வழி காட்டுவதற்காக நாடி அழைக்கலாம். கலை நிகழ்ச்சிகள் ஒன்றல்ல; பல. நம் நாட்டின் கலைகள் கணக்கற்றவை. ஆயகலைகள் அறுபத்து நான்கு என்ற ஒரு வரையறையும் உண்டு. பருக்கலைகளிலும், நுண்கலைகளிலும் பிள்ளைகள் தமக்கு விருப்பமுள்ள கலைகளை வளர்த்துப் பிறர் அறியும்படி தமது திறமையைக் காட்டி ஊக்கம் பெறுவதற்கே கலை விழாக்கள் நடைபெறவேண்டும். ஒவ்வொரு மாணாக்கரும் ஒரு கலைஞர் ஆகலாம். தமிழ் இலக்கியங்களில் கூறும் கலைகள் எண்ணிறந்தவை. அவற்றைத் தமிழ்ப் புலவர்கள் மேற்போக்காக வரிசைப்படுத்தியுள்ளார்கள். ஆனால் நாம் பண்டைய இலக்கியங்களில் கூறப்பெற்றுள்ள ஒவ்வொரு கலையையும் அறிய வேண்டியது நம் கடன். அவற்றை விளக்குவார் இலர். ஒரு சிலவற்றை விளக்கினாலும் ஆர்வத்தோடு அறிந்துகொள்ள விழைபவர்கள் மிகச் சிலர். இவற்றைப் போன்ற நமது பெட்டகங்களையெல்லாம் புறக்கணித்து எதற்கு வேண்டுமென்றாலும் கலையென்ற பெயரைத் தந்து கலை விழாக்களைக் கல்வி நிலையங்களில் நடத்துகிறோம். உலகக் கலைகள் பலவற்றையும் நாம் அறிவதற்கு இற்றை நாட்களில் வாய்ப்புக்கள் பல இருக்கின்றன. நமது நாட்டின் பல பகுதிகளில் விளங்கும் கலைகளையே நாம் அறிந்து கொள்ளுவதில்லை. நமது சுற்றுப்புறத்தே காட்சியளிக்கும் எவற்றையும் கலையெனக் கண்டு மனநிறைவு அடைந்து விடுகின்றோம். கல்வி நிலையங்களிலாவது உண்மையான கலையார்வம் கொண்டு அவரவர் தாம் விருப்புக் கொள்ளும் கலையினை வளர்ப்பதோடு கலையாராய்ச்சி செய்து அதன் பயனைப் பொதுமக்களுக்குத் தருதல் வேண்டும். சில கலை விழாக்களில் கவியரங்கு நடைபெறுகின்றது. இது மிகவும் வரவேற்கத் தக்கது. கவிபாடும் இயல்புள்ள மாணவர்களுக்கு இஃது ஓர் அரிய வாய்ப்பாகும். கவியரங்குகள் கவிபாடுவோர் சிலரை மட்டும் சமூகத்திலிருந்து அழைத்து அவர்களுக்கு வாய்ப்பளிப்பதால் கவியரங்காகா. ஒரு பள்ளியில் எத்துணைப் பிள்ளைகள் கவிபாடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்களோ அவர்களுக்குக் கவியரங்கில் வாய்ப்பளிக்க வேண்டும். பாடிய கவிகளில் குறைபாடிருப்பின் குறை கூறலாகாது. குறைகளைக் காணும் ஆசிரியர்கள் குறைகளைத் தீர்க்கும் வழியினைப்

பின்னர் தெளிவுபடுத்த வேண்டும். கவி பாடுவது ஓர் அரிய கலை யாகும். கலை விழாக்களில் கவியரங்கமைப்பது நன்றே.

[1] 11. மதிய உணவு

நண்பகலில் உணவின்றிப் பசியால் வாடும் பிள்ளைகளுக்கு உண வளிக்க ஒரு திட்டம் நமது பள்ளிகளில் நடைபெற்று வருகின்றது. பல இல்லங்களில் இரவில் மட்டுமே உணவு சமைக்கிறார்கள். அத்தகைய இல்லத்தில் பிள்ளைகள் பகலுணவு இல்லாமல் வாடுவது கண்கூடு. அவர்களுக்கு உணவளித்தல் பெருந்தொண்டன்றோ! மதிய உணவுத் திட்டம் கல்வி வளர்ச்சியை விரைவு படுத்தியுள்ளது. பள்ளி வயதுக் குட்பட்ட ஏழைப் பிள்ளைகள் அன்று தமது உணவுக்காகப் பாடுபடச் சென்றார்கள். இன்று பிள்ளைகள் பள்ளிகளில் அளிக்கும் அவ்வுணவை உண்டு கல்வி கற்கின்றார்கள்.

மதிய உணவுத் திட்டத்தை அரசினர் ஏற்றுக் கொண்டுள்ளனர். நமது மாநிலத்தில் உள்ள எல்லாத் தொடக்க நிலைப் பள்ளிகளிலும் மதிய உணவு படைக்கிறார்கள். இத்தொண்டில் பொதுமக்களுக்கும் பொறுப்பளிப்பதற்கு அவர்களுடைய தொடர்பும் வரவேற்கப் பெற் றுள்ளது. இத்திட்டத்தைச் சரிவர நடத்துவதற்குப் பொதுமக்களுடைய ஈடுபாட்டினை நமது அரசினரே ஒப்புக்கொண்டுள்ளனர். பொதுமக்களுள் செல்வர்கள் இத்திட்டத்தை நன்றாக நடத்தலாம். பள்ளி ஆசிரியர் களும் மாணவர்களும் இதைத் தமது பணியாகக் கருதுதல் நலமாகும். ஓர் ஆசிரியர் இப்பொறுப்பினை ஆர்வத்தோடு ஏற்றுக்கொள்ளலாம். மாணவர்கள் ஒரு சிலரும் ஆசிரியருக்குத் துணை புரியலாம். பணம் தொகுத்தலை மாணவர் குழு ஏற்றுக் கொள்ளுதல் ஒரு முறை. பொது மக்கள் தமது தொகையினைப் பள்ளிக்கு அனுப்பலாம். அன்றாட வரவு செலவுகளை விடாது எழுதவேண்டும். மாதக் கணக்கினை வெளிப் படுத்தவேண்டும்.

மதிய உணவுத் திட்டத்தில் எக்குறையும் இலதேனும் அதன் நடை முறையில் ஈடுபடுபவர்களுள் ஒருசிலர் தமது பண்பற்ற வழி காரண மாகத் திட்டத்தையே குறைகூறுமளவுக்கு நடந்துகொள்ளுகிறார்கள். மதிய உணவில் ஆசிரியர்கள் தமக்கென ஒரு பங்கினை எதிர்பார்த்தல் தவறு. பிள்ளைகளல்லாத பலரைச் சேர்த்துவிடுதலும் தவறு. பொய்க் கணக்கெழுதிப் பொய்யை மெய்யாக்கிக் காட்டுவதும் தவறு. உண்மை யான தொண்டார்வம் உள்ளவர்கள் திட்டத்திற்கே இழுக்கினைத் தேட மாட்டார்கள்.

நமது மாநில மதிய உணவுத் திட்டத்தை நமது நாடு முழுவதும் புகழ்கின்றது. நமது முதலமைச்சர் அதன் புகழ் பாடிய வண்ணமாக இருக்கின்றார். அதனை வெற்றி கிட்டுமாறு நடத்த வேண்டியது ஆசிரி

---

1. Mid-day meal

யர்களுடைய கடமை. அதில் ஈடுபடும் ஆசிரியர்கள் தமது வகுப்புப் பணியைச் சரியாக நடத்துவதில்லை. வகுப்புப் பணி இல்லா நேரங்களில் மட்டுமே இப்பணியை நடத்தவேண்டும். தமது பள்ளி வேலைகளுக்கு மதிய உணவுத் திட்டம் இடையூருக உள்ளதென்று சிலர் மறைவில் பேசுவது நேர்மையற்றதாகும். இத்திட்டம் மிக்க மாண்புடையது. இதன் பயனை இன்று நமது பள்ளிகளில் பெருவாரியாகப் பிள்ளைகள் சேர்ந்து படிப்பதைக் கண்டே நாம் அறியலாம். பிற்பகற் பள்ளிகளில் பிள்ளைகளுடைய முகங்கள் பசி வாட்டமின்றி மலர்ச்சியோடு காணப்படுகின்றன. இத்திட்டத்தில் பெண் மக்களுடைய பெருந் தொடர்பும் ஆதரவும் ஏற்பட்டுள்ளதால் இதன் மாபெரும் வெற்றி நாளடைவில் காணப்பெறும். ஆசிரியர்களுக்கு இதனுல் வேலைப்பாடு அதிகமாகுமென்று குறை கூறத் தொடங்கிவிடுகிருர்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்ருர்கள். தன்னலம் பாராது பிள்ளைகளுடைய நலத்தை நாடும் நல்லாசிரியர்கள் இத்திட்டம் பிள்ளைகளுக்கு நலமென்றே கருதுவார்கள்.

இத்திட்டத்தோடு ஒட்டியது பிள்ளைகளுக்குச் [1] சீருடை வழங்கும் திட்டம். பள்ளிப் புறத்தே சமூகத்தில் செல்வர்கள் பலர் உள்ளார்கள். அவர்களை அணுகி ஏழைப் பிள்ளைகளுக்கு உடைகளை வழங்குவதற்குப் பணம் வசூலிப்பது ஆசிரியருக்கு அதிகப்படியான வேலையாக இருந்தாலும் ஆடையில்லாப் பிள்ளைகளுக்கு ஆடை வழங்குவது ஓர் அருந்தொண்டென்று ஆசிரியர்கள் கருதவேண்டும். தமக்கு வேண்டுமென ஒரு நலனை நாடினுல் அவர்கள் வெற்றி காணமுடியாது. ஆனுல் தன்னலம் பாராது பிள்ளைகள் நலத்தை நாடிச் செய்யும் முயற்சியில் வெற்றியைக் காணலாம். இத்தொண்டுக்கு உதவி செய்பவர்களும் தொண்டாற்றும் ஆசிரியர்களைப் பாராட்டுவார்கள். எனவே தன்னலமற்ற பணி இதுவாகின்றது. இதை ஆசிரியர்கள் தயக்கமின்றி ஏற்றுக் கொள்ளலாம். அதனுல் தமது மாணவர்களுக்கு நன்மை புரிவதோடு தம்மை உயர்த்திக் கொள்ளுவார்கள். அவர்களை மாணவர்களும் பாராட்டுவார்கள். அவர்களுக்குப் பெற்ருேர்களும் நன்றி செலுத்துவார்கள். இப்பணியில் பணம் படைத்தார் பிள்ளைகளையும் ஈடுபடுத்திக் கொள்ளலாம். அத்தகைய பிள்ளைகளும் இத்தகைய பணியாற்றுவதற்கு அக மகிழ்வார்கள்.

இராப்பள்ளிகள் என்ற ஒரு திட்டமும் இன்று நமது மாநிலத்தில் நடைமுறைக்கு வந்துள்ளது. இதில் வாரத்திற்கோர் ஆசிரியர் இரண்டு மணிநேரம் பிற்போக்குப் பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிப்பதெனத் திட்டமாம். இதனை ஓர் அதிகப்படியான வேலையென்று ஆசிரியர்கள் கருதக்கூடாது. முற்போக்குப் பிள்ளைகளைக் கொண்டு இப்பணியை எளிதில் ஆற்றிவிடலாம். பள்ளி இடைவேளைகளில் முற்போக்குப்

1. School uniform

பிள்ளைகளை ஊக்கிவிட்டால் அவர்கள் பிற்போக்குப் பிள்ளைகளுக்குப் பிள்ளை முறையில் கடினமான பாடங்களை எளிதாக்கி விடுவார்கள். ஆசிரியர்களுடைய மேற்பார்வை ஒன்றுமட்டும் இருந்தால் போதும். இத்திட்டமும் மிகவும் வரவேற்கக் கூடியது. இதில் தொடர்புகொள்ளும் பிள்ளைகள் அவர்களுடைய பிற்காலத் தொண்டுக்கு வித்திட்டுக் கொள்ளுவார்கள். அவர்களுக்கு இதை ஓய்வு நேரப் பணியாகவும் வகுத்துத் தரலாம்.

[1] 12. பள்ளி விழாக்கள்

நம் பள்ளிகளில் இன்று விழாக்கள் பலவாகி விட்டன. ஒவ்வொரு நாளும் பள்ளிப் பெரு நிலத்திற்குள் யாதானும் ஒரு விழா நடந்தேறிய வண்ணமாக இருக்கும். விழா என்றால் பெருத்த அளவில் நடைபெறுவதுமட்டுமன்று. சிறிய அளவில் நடைபெற்றாலும் ஒரு விழாவேயாகும். சில ஆண்டுகளுக்கு முன் பள்ளிகளில் ஆண்டு நிறைவு விழா ஒன்று மட்டுமே நடைபெறும். அவ்விழாவில் பிள்ளைகள் பரிசு பெறுவார்கள். சில பள்ளிகளில் விளையாட்டு விழாவும் அன்றே நடந்து விடும். ஆனால் இன்று பல விழாக்கள் நடைபெறுகின்றன. அவை மாணவர்களுக்குப் பல அனுபவங்களைத் தருகின்றன என்று கொள்ளுதல் மிகையாகாது. ஆண்டுத் தொடக்கத்தில் மாணவர் மன்றத் தொடக்க விழா நடைபெறுவது யாவரும் அறிந்ததே. சில பள்ளிகளில் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு விழா நடைபெறும். தாய்மொழிக் கொன்று, சமஸ்கிருதத்திற்கொன்று, ஆங்கிலத்திற்கொன்று, இந்திக் கொன்று என நடைபெறும். அதன் பின்னர் நவராத்திரி விழாவும் உண்டு. ஒன்பது நாட்களும் பிள்ளைகள் பல கலைகளைக் காட்சியாக அளிப்பார்கள். பெற்றோர்கள் ஒவ்வொரு நாளும் தமது குழந்தைகளின் நடிப்பினைக் கண்டு உளம் களிப்பார்கள். இதற்கிடையே விநாயகர் சதுர்த்தியையும் ஒரு முக்கியமான விழாவாகக் கொண்டாடுவதுண்டு. பிள்ளைகள் தொடக்க நிலைகளில் வேழமுகம் படிப்பார்கள். சில பள்ளிகளில் கந்தர் சஷ்டி விழாவும் நடைபெறுவதுண்டு. இஃதன்றி ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியும் ஸ்ரீராம நவமியும் பள்ளி விழாக்களாகும். பொங்கற் பண்டிகையை ஒட்டித் தமிழ்த் திருநாள் விழாவும் இப்போது எங்கும் நடைபெறுகிறது. விளையாட்டு விழா ஆண்டு விழாக்களில் மிகவும் முக்கியமானதொன்று. மற்றொன்று ஆண்டு விழா. இவ்விழாவோடு கல்விக் காட்சியை இணைப்பதும் உண்டு. பள்ளிப் பாடங்கள் பலவற்றைக் கண்வழிப் புலனாக்கிச் சிலவற்றை இயக்கியும் பிள்ளைகள் பெரும் பங்கு கொண்டு நடத்துவதுண்டு. இன்னோரன்ன பல இந்திய மதத் திருநாட்கள் கொண்டாடப்படுகின்றன. நபிநாயகத்தின் திருநாள், ஏசுபெருமான் பிறந்த நாள், புத்த ஜயந்தி, ஜீனர் திருநாள்,

---

1. School Celebrations

மற்றும் பல சமயப் பெரியார்களுடைய, திருநாட்களையும் விழாக்களாகச் சில பள்ளிகளில் கொண்டாடுகிறார்கள். நூலாசிரியர் தலைமையாசிரியராகப் பணியாற்றிய பள்ளியில் ஒரு புதுமையான விழா ஆண்டு முழுவதும் நடைபெற்றது. வகுப்பாசிரியர்கள் ஒவ்வொருவரும் மாணவர் பிறந்த தேதியை அறிந்துகொண்டு ஒரு வாரத்தில் எத்துணை பிறந்த தேதிகள் வருகின்றன என்று அறிந்து வார இறுதிநாளில் அவர்களுடைய பிறந்த நாள் விழா கொண்டாடுவார்கள். அம்மாணவர்களுடைய பெற்றோர்க்கும் அழைப்பு விடுத்து அவர்களும் விழாவில் கலந்து கொள்வார்கள். பிள்ளைகள் ஒரு கட்டணம் செலுத்தி எல்லோரும் தேநீர் அருந்திப் பிள்ளைகளுக்குப் பரிசுகள் வழங்குவார்கள். குறிப்பிட்ட மாணவர்களின் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு விழா நடத்துவதைப் பாராட்டு முகத்தான் விழாவுக்கும் பணங்கொடுத்து வகுப்புப் பிள்ளைகளை மகிழ்விக்க முற்படுவார்கள். பள்ளியின் மீது அவர்களுக்கு நல்லுறவு உண்டாகும். வாழ்த்துப் பெறும் பிள்ளைகள் தமது வகுப்பு மாணவர்களோடும் ஆசிரியர்களோடும் நன்றியோடு பழகுவார்கள். பெற்றோர்க்கும் பள்ளிக்கும் நல்லுறவு நிலையாக ஏற்பட்டது.

பள்ளி விழாக்களில் பிள்ளைகளுடைய பங்கு மிகுதியாக அமைய வேண்டும். பிள்ளைகள் ஒற்றுமையோடு ஒவ்வொரு விழாவும் தமதெனக் கருதி நாட்டம் கொள்ளவேண்டும். அப்போது அவர்கள் கூடிப்பழகவும் ஒற்றுமையோடு தொண்டாற்றவும் தமது பணிகளில் பெருமை கொள்ளவும் இவ்விழாக்கள் வாய்ப்புக்களை அளிக்கும். விழாக் காலங்களில் வெளியாரை வரவேற்கவும் அவர்களுக்கு இடமளித்து அவர்களுடைய நலத்தைக் கண்காணிக்கவும் பழகிக் கொள்ளுதல் நல்லது. சில பள்ளிகளில் விழாக் காலங்களில் நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் பிள்ளைகள் வெளியார் வந்தவுடன் தாமாகவே எழுந்து அவர்களுக்கு இடமளித்து மரியாதை செலுத்துவதுண்டு. இத்தகைய பழக்கங்கள் மாணவர்களுடைய நன்னடத்தைக்கு அடிப்படையாகும். விழாக்களுக்கு முன் மாணவர் குழுவோடு ஆலோசித்துத் திட்டங்கள் வகுப்பது நல்லது.

[1] 13. குடிமைப் பயிற்சி

குடிமைப் பயிற்சித் திட்டம் பள்ளி ஒழுங்கில் நன்றாக நமது மாநிலத்தில் நமது நாடு உரிமை பெற்ற காலந் தொடங்கி ஏற்பட்டுள்ளது. கல்வியின் ஒரு பயன் நல்ல குடிமகனாக்குவது என்பது நாம் அறிந்தது. தனிப்பட்ட முறையில் கல்வி ஏற்பாட்டில் இதனை ஒரு பாடமாக நமது பள்ளிகளில் நுழைத்தது மிகவும் வரவேற்கத் தக்கது. அன்று வெள்ளையர் ஆதிக்கத்தில் படித்தவர்கள், குடிமை என்பதைப் பற்றி ஐயம் திரிபு அறப் பழக்கத்தில் அனுபவங்களாகப்

1. Citizenship training

பயிற்சி பெற்ருர் அல்லர். நமது மாநிலம் குடிமை அனுபவங்களைப் பிள்ளைகளுக்குத் தரவேண்டுமென்று பள்ளிகளில் இத்திட்டத்திற்கு இடம் தந்தது. குடிமைப் பயிற்சி பல கருத்துக்களைச் செயல்முறைகளாக அமைத்துதவுகிறது. அரசினரும் அப்பயிற்சி அளிப்பதற்கென ஓர் அலுவலரை நியமித்தார்கள். முதற்கண் ஆசிரியர்கள் பலர் ஆங்காங்கே பல இடங்களில் பயிற்சி பெற்ருர்கள். அவர்கள் பெற்ற பயிற்சி பள்ளிகளில் பிள்ளைகளுக்குப் பயனளித்துள்ளது.

குடிமைப் பயிற்சித் திட்டம் தொடக்கத்தில் ஐந்தாறு ஆண்டுகள் பள்ளிகளில் கண்கொள்ளாக் காட்சியளித்தது. பிள்ளைகள் நல்ல புத்துணர்ச்சி பெற்றுப் பல பண்புகளை வளர்த்துக் கொண்டார்கள் என்று கூறுவது மிகையாகாது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் பெரும் பங்கு கொண்டு தமது பொருத்தப்பாட்டினையும் திறனையும் வளர்த்துக் கொண்டார்கள். பள்ளிகளில் எங்கும் பிள்ளைகள் துடிப்போடு காட்சியளித்தார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் குடிமைத் தொண்டுகள் நன்ருக நடைபெற்றன. பிள்ளைகள் வகுப்பறைத் துப்புரவு, வகுப்பணி செய்தல், பள்ளிச் சுற்றுப்புறத் துப்புரவு, வகுப்பறைத் துப்புரவு, வகுப்பறையைத் தன் இல்லத்தறையைப் போன்று கவனித்தல், அறையில் குடிநீர் வசதி, தலைவாரிக் கொள்ளுவதற்குக் கண்ணுடி சீப்பு வகுப்பறையில் வைத்தல், ஆகியவை குடிமைப் பயிற்சி வேலைகள். வகுப்பறையில் இவற்றையெல்லாம் ஒரு குழுவினர் கவனிக்க, வகுப்பு பள்ளிக்குப் புறத்தே வெட்டவெளியில் சிறப்பாக ஒரு மரத்தடியில் தொடங்கும். ஒரு குழுவினர் வகுப்பு நடைபெற இருக்கும் பகுதியைச் சுத்தம் செய்து நாட்டுக் கொடி ஏற்றுதலில் ஈடுபடுவார்கள். கொடி ஏற்றம் நடைபெற்ற பிறகு பிற குழுக்கள் பல செயல்களில் ஈடுபடும். ஒரு சில செயல்பாடுகள் பின்வருமாறு: [1]முடிச்சுகள் போடக் கற்றுக்கொள்ளுதல், [2]முதற்காப்புப் பழகுதல், [3]கூடாரம் அடிக்கக் கற்றுக்கொள்ளுதல், [4]நாட்டுப் பாடல்கள் கற்றல், [5]திசை அறி கருவியைப் பார்க்கக் கற்றுக்கொள்ளுதல், நாட்டுப் பாடல்களைப் பாடிப் பழகுதல், [6]புலப்பயிற்சி பெறுதல், [7]கொடிகாட்டிச் செய்தி அறிவித்தல், முதலுதவி, [8]புதையல் தேடுதல், [9]சமூகத் தொண்டு, விளையாட்டுப் பயிற்சி, சிறு கைத்தொழில்கள், தோட்டம் அமைத்தல், சுகாதாரம் பழகுதல், [10]நெருப்பணைத்தல், சமையல் செய்தல், [11]நாட்டுக் களியாட்டங்கள் பழகுதல், [12]இயற்கைப் பொருள்களைச் சேகரித்தல், சமூக நலனை அறிதல், பொருளாதார நிலையறிதல், ஆகிய இன்னோரன்ன பல வேலைப்பாடுகளில் ஈடுபாடு கொண்டு சிறுசிறு கூட்டங்களாக ஆர்வத்தோடும் இன்பத்தோடும் பலபடியாகப் பழகி

---

1. Knots 2. First Aid 3. Pitching tents 4. National songs 5. Mariner's 6. Sense training 7. Signalling 8. Treasure hunting 9. Social service 10. Fire fighting 11. Folk dances 12. Nature collections.

நலம் பெறுதல் முதலியவை. ஆசிரியர்கள் ஓரளவு திறமையோடு குடிமைப் பயிற்சி தந்தார்கள். இன்றும் ஆசிரியர் கல்லூரியில் ஆண்டு தோறும் பத்து நாட்களுக்குக் குடிமைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கல்லூரிகளிலும் இப் பயிற்சியின் பயனை நன்ருகக் கடைப்பிடிப்பதில்லை.

குடிமைப் பயிற்சியை ஒட்டிய ஆட்சி மன்றப் பழக்கங்களும் முன்னர் மாணவர்களுக்கு நல்கப் பெற்றன. ஓரளவு குறைபாடுகள் இருந்தாலும் ஆட்சி மன்ற நிகழ்ச்சிகளில் பிள்ளைகள் ஆர்வங் கொண்டதோடு பல திறன்களை வளர்த்துக் கொண்டார்கள். பயிற்சிகளே அன்றி மாணவர்கள் பெறும் நாட்டங்களும் தகுதிகளும் பெரும்பான்மையாகப் பிள்ளைகளுக்கு மனிதப் பருவத்தில் மிகவும் பயன்படக்கூடியவையாக இருந்தன.

இன்று அரசாங்கத் தணிக்கையாளர்கள் குடிமைப் பயிற்சித் திட்டத்தை வற்புறுத்தாது வாளாவிட்டு விடுகின்ற காரணத்தால் பள்ளி ஆசிரியர்களும் அதை நழுவவிடுகிருர்கள். பள்ளிகளில் பெயரளவில் இத்திட்டம் பாட ஏற்பாட்டில் உள்ளது. அதன் நலனை ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு நல்குவார்கள் என்று எதிர்பார்க்கிருேம்.

பாடப்புறச் செயல்கள் பலப்பலவாக ஆசிரியர்களுடைய சிந்தனை யில் உருவாகின்றன. ஒவ்வொரு புறச்செயலும் பள்ளியின் சூழ்நிலைக்கும் மாணவர்கள் விருப்புக்கும் பிள்ளைகள் பிற்காலத்தில் பெறும் நன்மைக் கும் அடிகோலுபவையாக அமையவேண்டும். ஓர் ஆண்டில் பல செயல்களைப் புகுத்திவிட்டு மறு ஆண்டில் ஒரு செயலும் நிகழாது எல்லாவற்றையும் நழுவ விட்டுவிடுவது கண்கூடு. இங்ஙனம் நடை பெறுமாயின் அப்பள்ளியின் திட்டம் கட்டவிழ்ந்துவிடும். புதிதாகப் பணியேற்கும் தலைமை ஆசிரியர் பலர் தொடக்க உறுதிகள் கொண்டு பல திட்டங்களை நுழைத்துப் பிறகு எதையும் கவனிக்காது விட்டு விடுவதும் கண்கூடு. ஆசிரியர்கள் இப்போது தமக்கு அதிகப் பாட்டினைத் தரும் இத்திட்டத்தைச் சிலர் விருப்போடும் சிலர் உவகை யோடும் ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆனல் மற்றும் சிலர் நயவஞ்சகத் தோடு திட்டத்தில் கட்டுப்படுவார்கள். முப்பது ஆசிரியர்கள் உதவி யோடு தொடங்கும் ஒரு திட்டம் நிகழ்வுற்றுப் பற்றுக்கோடுள்ள மூன்று ஆசிரியர்களோடு நின்றுவிடும். தலைமை ஆசிரியர் தம்மால் வகுக்கப் பெற்ற இத்திட்டத்தை நழுவ விடாதபடி ஆசிரியர்களைக் கண்காணிக்க வேண்டும். மாணவர்களுடைய ஆற்றல் என்றும் குறைவுருது. அவர் களை ஈர்த்து ஆட்டக்கூடிய ஆசிரியர்கள்தாம் வேண்டும். அவர்களுடைய ஆற்றல் அளவு கடந்ததென்று அறிதல் கடமை. அவர்களுக்கு ஓரளவு உரிமையும் வழங்கவேண்டும். அவர்களைக் குறைவாக மதித்தல் கூடாது. அவர்களோடு தமது நிலையினைக் குறைவுபடுத்திக் கொள்ளாது வழிகாட்டியாக நிற்றல் வேண்டும். பிள்ளைகளிடையே இப்போது தன்மானம் தன்மதிப்பு ஆகியவை அதிகமாகியுள்ளன. இவற்றைக் குறைக்கவும் குறை சொல்லவும் கூடாது. இவை

உரிமை நாட்டுக் குடிமக்களுக்கு உரிய பண்பாடுகள். இவற்றேடு பள்ளிகள் கடமை உணர்ச்சியை ஊட்டவேண்டியதும் கடமையாகும். எல்லாத் தகுதியுமுள்ள பிள்ளைகளுக்கும் அவரவர்களுக்கு ஏற்ற பணிகளை வகுத்தல் வேண்டற்பாலது. பிள்ளைகள் சிலர் அல்லது பலர் தாம் ஒதுக்கம் பெற்றுவிட்டதாக நினைத்தல் கூடாது. ஒதுக்கம் பெற்றதாகக் கருதும் பிள்ளைகள் தமக்குரிய ஆற்றல்களைக் குறைத்துக் கொள்ளுவார்கள். எனவே பாடப் புறச்செயல் திட்டங்கள் பள்ளி மாணவர்கள் பலரையும் நாட்டமுறச் செய்தல்வேண்டும். பெரும்பாலும் இவை பாடத்தோடு ஒட்டியவையாக அமைந்தால் மிகமிக நன்று. அதைப் போன்று திட்டத்தை வகுக்கக்கூடிய ஆசிரியரே திறமையுள்ளவர். இங்ஙனம் பாடத்தோடு பல செயல்களை ஒட்டிவிட்டால் எல்லா ஆசிரியர்களுக்கும் வேலைப் பங்கீடு சமமாகும். ஒருவருக்கொருவர் குறைகூறிக் கொள்ள மாட்டார்கள். பாடப் புறச்செயல்கள் எவ்வகையானும் பிள்ளைகளுடைய பள்ளிப் பாடங்களுக்கு இடையூருகக் கூடாது. அறிவு வளர்ச்சியினை உடல் உள்ள வளர்ச்சியினை ஒருங்கே ஆக்கத்துக் குள்ளாக்கக்கூடிய செயற்பாடு கல்வி ஏற்பாட்டுக்கு அகத்தும் புறத்தும் அமைவதே நன்மை தரக்கூடியதாகும்.

[1]19. உடற் கல்வி

உடற்கல்வி என்று ஒன்று உண்டென்பர் கல்வியாளர். அவர்கள் உடற்கல்வியும் கல்வியின்பாற் பட்டதென்பர். உடற்கல்வி வேறு, உளக்கல்வி வேறு, பண்பாட்டுக் கல்வி வேறு, அறக்கல்வி வேறு என்றெல்லாம் வேறுபாட்டினைக் கற்பிப்பது தவறென்பர். உடற்கல்வி யாளர் உள்ளத்தைப் புறக்கணிப்பாரல்லர். இன்று கல்வி முழு ஆளுமைத் திறமை அளிக்கக்கூடியது. எனவே உடற்கல்வியும் கல்வி யின்பாற் பட்டதேயாகும். இன்றைய ஆசிரியர்கள் குழந்தைகளின் உடலுக்கும் உள்ளத்துக்கும் இயைந்த கல்வியைக் கற்பிக்கப் புகுகின் றனர். நம் பள்ளிகளில் உடற்கல்வியாசிரியர்கள் வேருகவும், பாட ஆசிரி யர்கள் வேருகவுமுளர். ஒரே ஆசிரியராக உடலத்துக்கும் உள்ளத்துக் கும் அமைந்தால் நன்ருகும். உடல் வேருகவும் உள்ளம் வேருகவும் இயங்குதல் இயலுமா? உடலன்றி உள்ளமில்லையன்ருே! ஆயினும் தனிப் பயிற்சி பெற்ற உடற்கல்வியாளர்கள் உடலோம்புதல் வழிகளை வகுத்து இரு பாலர்களுக்கும் திறனை அளிக்கின்ருர்கள். ஒவ்வொரு துறையிலும் தனித்தனிப் புலமை இன்று இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. எனவே உடற்கல்வியாளர், சுகாதாரக் கல்வியாளர், ஓய்வு நேரக் கல்வியாளர் என மூன்று துறையினர் உள்ளனர். ஆனல் உடற்பயிற்சியின் பயனுக உடல் வன்மை உண்டாகிறது. உடல் வன்மையினுல் நோயற்ற வாழ்க்கை கிட்டுகிறது. நோயற்ற வாழ்க்கை யில் நாம் ஓய்வு நேரங்களைக் களைப்பு நீக்கும் முகத்தான் பயனுடைய தாக்கிக் கொள்ளுகின்ருேம். பள்ளிகளில் உடற்கல்வியோடு சுகாதாரக் கல்வியும், ஓய்வு நேரக் கல்வியும் அளிக்க வழி வகுக்கின்ருர்கள். எல்லாப் பள்ளிகளிலும் இம்மூன்று துறைகளும் இன்று தனித்தனி யாகக் கவனிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நல்ல பள்ளி களில் முத்துறைக்கும் தனிப்புலமை உள்ளவர்கள் அமர்த்தப் பெறு கின்றனர்.

உடற்பயிற்சி என்று கூறுவது குறையுடைத்தென்று கருதி இன்று உடற்கல்வி என்று கூறி கல்வியோடு உடற்கல்வியும் ஒன்ருகக் கருதப் பெறுகிறது. பழங்காலங்களில் உடற்கல்வியும், உள்ளக் கல்வியும் சமன் பாடு பெற்றிருந்தன. ஆசிரியர் சிலர் உடற்கல்வியை வெறுக்கின்றனர். அத்தகையோர் அதன் பயனை அறியாதவரென்றே கருதவேண்டும். உடற்கல்வி தனி ஒவ்வொருவருக்கும் உடல் வன்மையை அளிக்கக் கூடியது. நாட்டு மக்கள் எல்லாரும் உடல் வன்மையோடு வாழ்ந்தா லன்றி மக்கள் வளம் பெருகாது. உடல் வன்மையற்றவர்களுக்கு உள

1. Physical Education

வளத்தோடு ஒழுக்க வளமும் குறைவுறும் என்பர். உடல் வன்மை அடிப்படையில்தான் உள்ளம் பண்பாடு பெறுவதோடு உயரிய பற்றுக்களையும் சார்புறச் செய்யும். உடல் வன்மை உள்ளவர்கள் சோம்பாது மிகச் சுறுசுறுப்போடும், களைப்பின்றியும் பணியாற்ற முற்படுவார்கள். உடல் வன்மை உள்ளவர்கள் நுண்ணறிவோடும் கூடி இருப்பர். ஆனால் உடல் வன்மை அற்றவர்கள் உளத்திண்மை பெற்றவர்கள் அல்லர். மேலும் உளவன்மையும் நுண்ணறிவும் ஒழுக்கத்தின் அடிப்படையில் வளராவிட்டால் ஒருவர் ஒழுக்கமற்றுத்தான் இருப்பார். எனவே உடற் பயிற்சி கல்வி ஒழுக்கத்தின்பாற்பட்டது. அது பொதுக் கல்வியோடு ஒன்றுகிப் பிள்ளையின் முழு ஆளுமைத் திறனை அளிக்கவல்லது. அதன் பயனால் உடல் வன்மை, உளவன்மை, ஆன்மீக வளர்ச்சி ஆகியன பெருகும்.

இதை அறிந்தே ஃப்ரோபெல் என்னும் கல்வியாளர் முழு ஆளுமையை வளர்க்கவேண்டுமாறு முழு ஆளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்றார். ஆகையால் உட்டல், உள்ளம், பண்பாடு ஆகியவற்றைப் பிரித்துப் பிரித்துப் பயிற்சி அளிப்பது முறை அற்றது. உடலோடு உள்ளம் ஒட்டியது. ஆன்மாவோடு ஒழுக்கம் ஒட்டியது. இவை யாவற்றையும் ஒன்றுகக் கருதவேண்டியது ஆசிரியர் கடமை. இவை ஒன்றி வளர்ந்தாலன்றி வாழ்க்கை வளம் பெருது. நல்லவராக வளர்ந்தாலன்றி வாழ்க்கையில் வெற்றி இல்லை. நல்ல குடிமக்கள் தோன்றினாலன்றி நாட்டுக்கு நன்மை இல்லை. எனவே மனித வளர்ச்சி ஒரு முழு வளர்ச்சியாகும். அதைப் பகுத்துப் பகுத்துத் தனிப்பயிற்சி அளித்தல் தவறுற்றதாகும். ஒரு காலத்தில் உள்ளொளி பெருகுவதற்கு ஊனினை உருக்கவேண்டுமென்றார்கள். ஊன் அடங்கினாலன்றி உள்ளம் பெருகாதென்றார்கள். இன்றைய கல்வி முறைகள் உடலை வாட்டுகின்றன. உள்ளத்தை வளர்த்தவர்கள் உடல் குன்றிக் காணப்படுகிறார்கள். உடலையும் உள்ளத்தையும் ஒன்றுகப் பேணுதலால் இரண்டும் ஒன்றுக வளர்ச்சியடைகின்றன. நற் கல்வி நிலையங்கள் தேர்வுகளையே வேண்டி நிற்பதால் நம் பிள்ளைகள் உடற்கட்டற்றும் உருக்குலைந்தும் காணப் பெறுகிறார்கள். மாணவர்கள் சிலர் ஒவ்வொரு தேர்வுக்குப் பிறகும் நோயுற்று உடல் மெலிந்துவிடுகிறார்கள். அதனால் எக்கல்வி ஏற்பாட்டோடும் உடற்கல்வி தக்க இடம் பெறவேண்டும். நல்லதொரு உடல் உருப்பெற்றவனையே நல்ல ஆளுமை உள்ளவனென்று கருதுகின்றோம். அத்தகைய உடல் ஆளுமை உள்ளவனும் உளவளம் பெற்றிருந்தால் அவன் தலைமைக்கு ஏற்றவனாகின்றான். நல்லுணவும் நாடிய மருத்துதவியும், நல்வாழ்வும் மட்டுமே சிறந்த உடலத்தை அளிக்க மாட்டா. எனவே உடற்பயிற்சி வேண்டியதாகின்றது.

நம் பள்ளிகளில் உடற்பயிற்சி அல்லது உடற்கல்வி பெயரளவில் உள்ளது. உடற்பயிற்சி வகுப்புக்கள் எல்லாப் பிள்ளைகளுக்கும் உரித்தாயினும் பிள்ளைகள் சிலரே ஆற்றலோடு பயிற்சி பெறுகிறார்கள்.

பெரும்பான்மை ஏழைப் பிள்ளைகளாகையால் உடற்பயிற்சி அளிக்கும் மாலை நேரத்தில் அவர்கள் பசி வேட்கை பெறுகிறார்கள். பள்ளி ஒழுங்குப்படி அவர்களுக்கு உடற்பயிற்சி அளிக்கப்படுகிறது. அந் நேரத்தில் அவர்கள் அதில் விருப்பில்லாது ஈடுபடுகிறார்கள். பயிற்சி நேரம் எப்போது முடியுமென்று ஏங்குகிறார்கள். மற்றும் சில பள்ளிகளில் முற்பகல் நேரங்களிலும், பிற்பகல் வெப்ப வேளைகளிலும் உடற் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. அவற்றில் கலந்துகொள்ளும் பிள்ளைகள் வயிற்றின் கொடுமையால் உடற்பயிற்சி செய்து வளம் பெறாது வாடிவிடுகின்றனர். உடற்பயிற்சி நேரங்கள் காலையிலும் மாலையிலுமே அன்றிப் பள்ளி அகவை நேரங்களாகிய வெப்ப நேரங் களில் அமைதல் தவறு. இக்கொடுமையை ஆசிரியர்கள் நீக்குவதற்கு வழி வகுப்பார்களாக!

உடற்கல்வி முழு ஆளுமைக்கு வேண்டிய உடலத்தை அளிக்க உதவுவதேயாகும். ஒருவருக்கு வேண்டிய உடலமைப்பு இல்லாவிட்டால் தமது வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்த இயலாது. உள ஆற்றல் எவ்வளவு மிகுதியாயினும் உடலாற்றல் இன்றேல் வாழ்க்கைப் பணிகளை இயற்றி நடத்தல் அரிதாகும். நம் பிள்ளைகளுக்கு வேண்டியது கீதை அன்று—விளையாட்டிடம் என்றார் சுவாமி விவேகானந்தர். நம் பிள்ளைகள் ஒரே இடத்தில் அசையாது அமர்ந்து இன்று கல்வி கற்கின்றார்கள். ஆசிரியர் மாணவர்களுடைய அசைவினைத் தவறென்று கருதுகின்றார். அவர்களுடைய உடலங்கள் கட்டுண்டு காணப்பெறுகின்றன; கட்ட விழ்தலை நாடுகின்றன. கட்டவிழ்ந்த நேரமே விரும்பப் பெறும் நேரம். அவர்கள் கட்டவிழ்ந்த காட்சியே இயற்கைக் காட்சி. அத்தகைய இயற்கையன்ன காட்சியிடம் விளையாட்டுத் திடல். விளையாட்டுத் திடலே அவர்கள் உடற்பயிற்சி பெறும் வகுப்பு. அதையும் வகுப்பென்று கருதுவதா என்பர் சிலர். அங்கும் கட்டுப்பாடு நிகழ்கின்றது. ஒரே வகையான பயிற்சி அளிக்கப் பெறுகின்றது. வகுப்பிலும் ஒரே வகைப் பாடம். விளையாட்டுத் திடலிலும் ஒரே வகைப் பயிற்சி. அப்பயிற்சி சிலருக்கு நன்மை பயக்கலாம். மற்றவருக்கு உடல் நலம் பயவாதவை யாகின்றன. உடற்பயிற்சிக்கென ஆசிரியக் கல்வி நிலையங்கள் உள. அவை இதனைச் சிந்திக்கவேண்டும்.

உடற்பயிற்சியை ஒரு பாடமாகக் கருதுதல் தவறு. அப்படியும் சிலர் கருதுகின்றார்கள். உடற்பயிற்சியால் நோயுறாது வாழ்தல் விரும்பத்தக்கது. நல்ல பயிற்சி உள்ளத்துக்கும் உடலத்துக்கும் நல்ல பொருத்தப்பாட்டினை அமைத்துத் தருவது. அதனால் உட்பாடும் சமநிலை அடையும். உடற்கட்டுள்ள ஒருவன் விரும்பத்தக்க குடிமக னாவான். உடற்கல்வி வகுப்புக்கள் விரும்பத்தக்கவையாக ஆதல் வேண்டும். இளமையிலிருந்து உடற்பயிற்சி தொடங்கவேண்டும். சின்னஞ்சிறு பிள்ளைகள் ஓடி விளையாடுவதே அவர்களுக்குரிய உடற் பயிற்சியாகும்.

“ ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—நீ
ஒரு குழந்தையை வையாதே பாப்பா
காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்லபாட்டு
மாலை முழுதும் விளையாட்டு—என
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா ”

என்றெல்லாம் பாரதியார் குழந்தைகளுடைய உடலோம்பலை உள்ளி உரைத்துள்ளார். உடலத்தின் இயற்கையான வெளிப்பாடு விளையாட்டேயாகும். ஒரு வேலை செய்வது ஒரு முடிவினைக் காண்பதற்கேயாகும். அது காரணத்தோடு கூடியது. ஆனால் பிள்ளைகள் விளையாடும்போது அவர்கள் ஒன்றைப்பற்றியும் சிந்திப்பதில்லை. விளையாட்டை விளையாட்டுக்காகவே விளையாடுகின்றார்கள். விளையாடும்போது வேறொரு எண்ணம் கிடையாது. ஒரு பணி புரியும்போது பணியின்மீது நாட்டம் செல்லுகிறது. ஆனால் விளையாடும்போது உள்ளமும் விளையாடுகின்றது. விளையாட்டே உரிமைக் காட்சியை அளிப்பது. பிள்ளைகள் விடுமுறை நாட்களை விரும்புகிறார்கள். விடுமுறை நாட்களெல்லாம் அவர்களுடைய உரிமை நாட்கள். விளையாட்டுத் திடலில் நன்றாக ஓடி விளையாடும் உரிமையைப் பிடுங்கி, அங்கும் ஒரு வகுப்பினைக் கற்பனை செய்து பயிற்சி என்னும் பெயரால் கட்டுக்களுக்கும் திட்டங்களுக்கும் பிள்ளைகளை ஒடுக்குவதும் நடைமுறைப் படலங்கள்.

நந்தமிழ் நாட்டில் ஆண்களும் மகளிரும் நல்ல உடற்கட்டோடு வளர்ந்தார்கள். ஆண்மகன் வீரனாகவும், பெண்மகள் வீரத்தாயாகவும் வளர்ந்தாள். “களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே” என்று புறநானூறு வழங்குவதால் களிறோடும் மட்டுமன்று கடுவாயோடும் தமிழ் இளைஞர்கள் கடும்போர் புரியும் வண்ணம் வன்மை பெற்றவர்கள் என்பது வெளிப்படை. கிரேக்கர்களும், உரோமானியர்களும் தமது உடல் வளர்ச்சியை உயர்நிலையாகக் கண்டார்கள். அவர்களுள் உடலழகர்கள் மெச்சப்பட்டார்கள். இற்றை நாட்களில் மற்போர்களிற் பங்கு கொள்ளுபவர்களைக் கண்டால் உடற்கட்டற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். பள்ளிகள் இளைஞர்களுக்கு இளமையிலேயே உடற்பயிற்சியில் ஈடுபாடு கொள்ளுமாறு ஊக்கமளித்தல் வேண்டும். அவர்களுக்குத் தமது உடற்கட்டில் ஆர்வம் பிறந்துவிட்டால் தமது மனக்கிளர்ச்சியால் உந்தப்பெற்று உடலோம்புவார்கள். பள்ளிகளில் மட்டும் வாரத்துக்கு ஈரகவைகள் அல்லது ஒன்றரை மணி நேரமும் பெயரளவில் பயிற்சி அளித்துவிட்டால் அது உடற்பயிற்சியாகாது. இன்றுள்ள நிலையில் பிள்ளைகளுக்கு அத்தகைய பயிற்சியில் விருப்பமே இல்லை. அதனால் வைகறைத் துயிலெழுந்தவுடன் உடற்பயிற்சியை ஓர் உரிய பயிற்சி

யாக நாள்தோறும் பள்ளிகள் வற்புறுத்த வேண்டும். இப்போது நடை பெறும் முறையில் அது பள்ளிப் பாடங்களுள் ஒன்ருகப் பொருளற்ற முறையில் நடைபெறுகின்றது. எல்லாப் பள்ளிகளிலும் உடற்கல்விக் கட்டணம் ஒவ்வொரு பிரிவுக்கும் தொகுக்கின்ருர்கள். அப்பணத்தைக் கொண்டு விளையாட்டுக் கருவிகள் வாங்குகின்ருர்கள். கட்டணம் செலுத்துவோர் எல்லோருமாவர்; ஆனல் விளையாட்டுக் கருவிகளின் பயனைப் பெறுவோர் சிலரேயாவர். சிலர் பங்குபெறும் விளையாட்டுக் காகச் சிலர் பெறும் வெற்றிகளுக்காகப் பலர் கட்டணம் செலுத்து கின்ருர்கள். இதனல் பிள்ளைகள் விளையாட்டுக்களிலும் போட்டிகளிலும் எல்லாரும் சேர இயலாது ஒதுங்கி விடுகிருர்கள். எனவே விளை யாட்டுக்களில் ஏற்படும் பயன் எல்லோருக்கும் கிட்டுவதில்லை. நல்ல பள்ளிகளில் எல்லோருக்கும் விளையாட்டு என்ற திட்டம் வகுக்கப்படு கிறது. மாலை நேரங்களில் ஒரு பிள்ளையும் ஒதுங்காது எல்லாப் பிள்ளை களும் அவரவர்களுக்கு ஏற்றவாறு தமது விருப்புள்ள விளையாட்டுக் களில் பங்குகொள்ளுகிருர்கள். உடற்கல்வியாசிரியர்கள் வகுக்கும் விளையாட்டுக்கள் ஒன்றல்லாது பலவாகும். சில பள்ளிகளைப் போன்று [1] காற்பந்து, [2] கைப்பந்து, [3] மட்டைப்பந்து ஆகிய இரண்டு மூன்று விளையாட்டுக்களை மட்டும் வகுப்பதில்லை. பள்ளிப்பிள்ளைகள் எல் லோரும் பங்கெடுக்கும் வாய்ப்பிருந்தால் ஒவ்வொருவருக்கும் வெளிக் காற்றில் உடலசைவு தருவதற்கும் அசைவினல் ஏற்படும் பயன் பெறு வதற்கும் ஓடி ஆடுவதற்கும் விருப்பம் ஏற்படும். ஒரு விளையாட்டில் தேர்ச்சி உள்ள மாணக்கர்களோடு கற்றுக்கொள்ளும் மாணக்கர்களைச் சேர்த்துக் குழுக்கள் பிரிக்கலாம். மேலும் பலவகை நம் நாட்டு உடற் பயிற்சி விளையாட்டுக்களையும் இணைத்துக் கொள்ளுதல் நலம். அடிப் படையில் பிள்ளைகள் ஓடி ஆடுவதற்குப் பள்ளிகள் என்ன திட்டம் வகுக்கின்றன என்பதுதான் வின. அரசாங்கத்தின் பாடத்திட்டம் பள்ளி நேரங்களில் உடற்பயிற்சிக்கு இடந்தந்து அதன் இடத்தைச் சுட்டத்தான் செய்கிறது. ஆனல் அந்தப் பள்ளிச் சூழ்நிலைக்கேற்பவும், பள்ளி விளையாட்டு வசதிகளுக்கு ஒப்பவும் எல்லாப் பிள்ளைகளும் ஒரே நேரத்தில் விளையாடும் திட்டத்தினை வகுப்பு நமது கடமையாகும். வளரும் பிள்ளைகளுக்கு மாலை நேரத்தில் விளையாடும் பழக்கம் பள்ளிகள் அளிக்காவிட்டால் அவற்றின் கடமையிலிருந்து அவை வழுவியவையா கும். விளையாட்டுக்கள் பிள்ளைகளின் வயதுக்கும், அவர்களுடைய உய ரம், எடை ஆகியவற்றிற்கும் பொருத்தமானவை ஆதல் அன்றே விரும் பத்தக்கது. நல்ல பள்ளிகளில் உடற்கல்வி முறைகள் நல்ல முறையில் தொகுக்கப் பெற்றிருப்பதைக் காணலாம். அங்குள்ள பிள்ளைகளின் விளையாடும் ஆற்றலும், உடலோம்பலில் உறுதியும் உடற்கல்வியின் உறு பயனகிய கூட்டு மனப்பான்மையும் தன்னலமின்மையும், ஒழுக்கத்தின்

---

1. Foot ball 2. Volley 3. Cricket

மேன்மையும் காணலாம். இதனாலன்றோ 1815ஆம் ஆண்டில் நிகழ்ந்த [1] வாட்டர்லூ எனும் போரின் வெற்றி [2] ஈட்டன் பள்ளியின் விளையாட்டுத் திடல்களில் உருவாயிற்றென்று ஒரு பழமொழி உலவுகிறது. உடற்பயிற்சியின் நன்மையை உணர்ந்தோர் நல்ல குடிமக்களாக வாழ்வதோடு தமது வாழ்க்கையிலும் வளனைக் காண்பார்கள். நமது பிள்ளைகளுக்குப் பெரும்பான்மை உடலோம்பலைப்பற்றித் தெரியாது. இளமையிலன்றோ அதைப் பழக்கத்தில் உணர்த்த வேண்டும். இத்துறையில் பிள்ளைகளை ஈர்த்து வழிப்படுத்த வேண்டியது பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தலையாய கடமையாகும்.

உடற்கல்வி அங்கங்களை நீட்டுவதும் மடக்குவதும், உடலை நிமிர்த்துவதும், வளைப்பதுவும் மட்டுமன்று. பலப்பல விளையாட்டுக்களாகிய [3] தாவுதல், [4] தாண்டுதல், குதித்தல், ஓடுதல், [5] வளையமெறிதல், [6] ஈட்டி எறிதல், [7] குண்டெறிதல், [8] தடைகளைத் தாண்டுதல், [9] கட்டைப் பந்தெறிதல் இன்னோரன்ன பல விளையாட்டுகள் மட்டுமன்றிக் காற்பந்து, கைப்பந்து, மட்டைப்பந்து, கூடைப்பந்து, பூப்பந்து, வளையப்பந்து ஆகிய விளையாட்டுக்களும் அவற்றோரன்ன மற்றும் காலநடை, [10] பாடி வாழ்க்கை ஆகியவையும் வெளிக்காற்று உடலுக்கு அளிக்கும் பயிற்சிகளுமெல்லாம் உடற்கல்வியின் பாற்படும். இளம் பிள்ளைகளுக்கு உடற்கல்வி பல நன்மைகளைத் தரக்கூடியது. பிள்ளைகள் சுறுசுறுப்பாக இருக்கவும் மனத்திண்மையை வளர்க்கவும் எப்போதும் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று சொல்லவும் தமது உடலத்தை நன்றாக இயக்கிக் கொள்ளவும் நடத்தல், ஓடுதல், அமருதல் ஆகியவற்றில் மந்தமின்றி முந்தவுமாகிய பல பயிற்சிகளையும் பெறுவார்கள். இளம் பிள்ளைகள் இசையுள்ள ஓசைக்கு இயங்குவதில் விருப்பமுண்டு. அவர்களுக்குரிய பாப்பாப் பாட்டினைப் பாடிக்கொண்டே அதற்கேற்ப இயற்கையாகவே பொருள் விளங்க உடலசைவு செய்வார்கள். இசையோடு நடப்பதும் அவர்களால் இயலும். இசைத்தட்டுகளை இயக்கியும் அல்லது ஆசிரியை பாட்டிசைத்தும் அவர்களுக்கு ஏற்றபடி அவர்களை இயக்கிப் பொருளை விளக்குவது உண்டு. அவர்கள் பருவத்தில் கல்வி கற்பதும் ஒரு விளையாட்டாகும். உடலாற்றலோடு வளரும் பிள்ளைகள் அசைவற்றுக் காணமாட்டார்கள்; ஓரிடத்தில் உட்காரமாட்டார்கள்; சிறு குழவிப் பள்ளிகளில் அவர்களுக்கென ஒரு வகுப்பறையை உண்டாக்கி அங்கு ஒடுக்கி உட்கார வைத்தல் தவறு. அவர்களுக்கு ஓடவும் ஆடவும் உரிமை வேண்டும். உடலோடு உள்ளமும் இயங்குதல் அவர்களுடைய இயற்கையின்பாற்படும். அவர்களுடைய உணர்ச்சிகளெல்லாம் ஓட்டத்திலும் ஆட்டத்திலுந்தான் வெளிப்படுபவை.

---

1. Waterloo 2. Eton 3. High jump 4. Long jump 5. Ring tennis 6. Javeline throw 7. Shot put 8. Obstacle race 9. Cricket ball throw 10. Camp life

எனவே அவர்களுக்கு உடற் கல்வி வேறு, உளக் கல்வி வேறு என்ற பாகுபாடு வேண்டியதன்று. அவர்கள் கூடி விளையாடுதல் சமூகப் பழக்கத்தினுக்கு வித்தாகும். எனவே தொடக்கநிலை வரையில் பிள்ளைகளுடைய இயற்கை விளையாட்டினையே அடிப்படையாகக் கொண்ட கல்வியன்றோ அவர்களுக்கு இயற்கையாக உரித்தான கல்வியாகும்? தொடக்கத்தில் தனி உரிமையோடு தொடங்கும் விளையாட்டுக்கள் நாளடைவில் ஒழுங்கோடு கூடிய விளையாட்டாக ஆசிரியருடைய நேர் முறையில் கட்டுப்பாடும் அமைவும் பெறவேண்டும். தனித்தனி விளையாட்டுக்களைத் தரத்தோடு விளையாடப் பழக்கம் அளிக்க வேண்டும். ஒழுங்கோடு வரிசையாக விளையாடுதலும் நற்பழக்கமாகும். விளையாட்டில் புதியவற்றை ஆசிரியர் கற்பனை செய்தால் பிள்ளைகள் பெறும் ஆர்வம் அளவு கடந்து மிகும். நாள்தோறும் புதிய விளையாட்டுக்கள் வேண்டுமென்று விரும்புவார்கள். பலப்பல விளையாட்டுக்களின் ஒழுங்குகளை அவர்கள் அறிதல் நலம். செய்வன திருந்தச் செய் என்பதனை அவர்கள் பருவத்திலேயே அறிதல் நல்லது. பாடங்களில் விளையாட்டு, இசையோடு விளையாட்டு, ஓடுதல், கயிற்றைப் பிடித்துத் தாவுதல், விலங்குகளைப் போன்று நடித்தல், விலங்குகளின் குரல்களைப் போன்று கூவுதல், எக்காளம் செய்தல், நாட்டியமாடுதல், அசைவற்ற காட்சிகளில் ஈடுபடுதல் ஆகியவை பிள்ளைகளுக்கு நல்லவை. இவற்றால் அவர்கள் நல்லுடல் அமைப்பைப் பெறுவதோடு நிமிர்ந்து நடக்கவும், ஒழுங்காக வளரவும், ஆட்ட நற்றிறங்களை அடையவும் இயலும். பத்துப்பதினொரு வயது வரையில் பிள்ளைகளை வகுப்பறைகளில் போட்டு அடைக்காது அவர்களுடைய உடலசைவோடு ஒன்றிய உள வளர்ச்சியினை அவர்களுக்கு அளித்தல் அன்றோ அவர்களுக்குரிய கல்வியாகும். ஒரு நாளைக்குரிய ஏழு அகவைகளுக்கும் அவர்களுக்கு ஏட்டுக் கல்வியைச் சமைப்பது நம் பள்ளிகளில் காணப் பெறும் காட்சிக் கொடுமை. அதனை நீக்கி உடலுக்கும் உள்ளத்துக்கும் இயைந்ததொரு கல்வி ஏற்பாட்டினை உருவாக்க வேண்டியது நம் கடமை.

உயர்நிலைப் பள்ளிகளிலும், பெயரளவில் உடற் கல்வி நிகழாது காத்தல் நன்று. அவர்களுக்கும் பல விளையாட்டுக்களில் திறன்கள் வேண்டும். முன்னர் கூறியதைப் போன்று சிலருக்கு மட்டும் திறன்களும் மற்றவர்களுக்கு உடற் கல்வியினையே வெறுக்கும் வகையில் புறக்கணிப்பும் நீடித்து வருதல் நன்றன்று. வாரத்திற்கு இரு அகவைகளில் உடற் கல்வியின் பெயரால் கால் கைகளை அசைத்து விடுவது போதாது. உடற் கல்வி வகுப்பென்று அமையாவிட்டாலும் மாலை நேரங்களில் விருப்ப விளையாட்டுக்களும், காலை நேரங்களில் உடற்கட்டுக்கேற்ற பயிற்சிகளும் திட்டங்களாதல் வேண்டும். பிள்ளைகளுக்குப் புதிய விளையாட்டுக்களில் ஆர்வம், அவற்றின் புதுமைக் காரணத்தால் உண்டாவது திண்ணம். உடற்பயிற்சிகளிலுங்கூடப்

புதிய பயிற்சி முறைகள் வேண்டற்பாலன. நம் நாட்டுப் பழைய பயிற்சி முறைகளை இக்காலத்துப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க லாம். அவற்றில் திறன் பெறுவார்களானல் அவற்றிற்குரிய அறிவுக் கூர்மையும் உடற்கட்டும் பெறுவார்கள். மேனாட்டு விளையாட்டுக்கள் நீங்கத் தகுவன அல்ல. அவற்றால் திறன்கள் வளர்வதோடு உடல் திண்மையும் உண்டாகிறது. பள்ளியில் நன்னடத்தைகளையும் ஒழுங்கு முறைகளையும் கற்பிக்கின்றார்கள். விளையாட்டுத் திடலிலன்றோ அவை சோதிக்கப் பெறுகின்றன? நற்றிறம் பெற்றவர்கள் விளையாட்டினை மட்டும் கருதுவார்களே யன்றி அதில் உண்டாகும் வெற்றி தோல்வி களைச் சிந்திக்கமாட்டார்கள். எல்லா விளையாட்டுக்களின் குறிக்கோள் களும் வெற்றிக்கோ அல்லது தோல்வியினைக் குறித்து தோளொடுதோள் முட்டிக்கொள்வதற்கோ அன்று. விளையாட்டுத் திடலில் வளரும் குறிக் கோள் வெற்றி தோல்விகளைச் சமநிலையில் கருதுவதே. எனவே விளையாட்டுடையார் விளையாடுவதைத்தான் தமது இலக்கணமாகக் கொள்ளுகின்றனர். எனவே ஆசிரியர் பிள்ளைகளுக்கு அறிவுறுத்த வேண்டியது. "விளையாட்டுக்கள், ஆடுக, ஆடுக, ஆடுகவே" எத் தகைய விளையாட்டாயினும் சரி; அவற்றில் பங்குகொண்டு தமது முழுத் திறனைக் காட்டுவதே ஒரு மாணவருடைய கடமை. அக்கடமையைச் செலுத்துவது அவர் மேற்கொள்ள வேண்டிய ஒழுங்கு. அங்ஙனம் உடலோம்புவதால் மாணவன் நேராக நடப்பான்; நிமிர்ந்து நடப்பான்; அண்ணாந்து நடப்பான்; தான் தனது பரந்த உள்ளத்தினைத் திறந்து கொண்டு நடப்பான்; பெரும்பான்மை அவன் உண்மையே பேசுவான்; நீதி வழுவான்; நெறி முறையோடு பழகுவான்; தன் மதிப்பு வகுப்பான்; பிறரை மதித்து உறவாடுவான்; வெற்றி தோல்விகளைச் சமநிலையில் கருதுவான்; மிரட்டலுக்கு அஞ்சான்; தொண்டாற்ற விழைவான்; அவனுடைய நேர்மை தனிப்பட்டது; நோயற்று வாழ் வான்; நோயுற்றாலும் அஞ்சான்; நேர்மையற்றவர்களைத் தண்டிப்பான்; அவனுடைய பண்பாடுகள் தனிப்பட்டவை.

இன்று நம் நாட்டில் உடற் கல்வி பெரிதும் ஓம்பப்படுகிறது; உடற் கல்விக் கல்லூரிகளும், பயிற்சிப் பள்ளிகளும் ஆதரவு பெறு கின்றன. ஆண்டுதோறும் உடற்பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பெருகுகின்றார்கள். ஆனால் பள்ளிகளிலன்றோ உடற் கல்வி புதிய திருப்பம் பெறவேண்டும்! பள்ளியிலுள்ள பிள்ளைகளுக்கு உடற் கல்வி யாசிரியர்கள் பெயரளவில் ஒரு திட்டத்தை யொட்டி நெட்டைப் பிள்ளைகள், குட்டைப் பிள்ளைகள்—வயதில் சிறியவர்கள், பெரியவர்கள் —மென்மையுடையவர்கள், திண்மையுடையவர்கள் ஆகிய எல்லோரை யும் ஒன்றாகக் கூட்டி வரிசைப்படுத்தி எல்லோருக்கும் ஒரே வகையில் ஒரே பயிற்சி அளித்து மென்மைதான் என்ன என்று சிந்தனை செய்யாது வகுப்பை நடத்துகின்றார்கள். உடற் கல்விக்கு வகுப்புப் பிரிவு வேண்டியதன்று. நல்ல முறையில் உடற் கல்வி அளிக்க

வேண்டுமென்றால் பள்ளிக்கூடத்தின் எல்லாப்பிள்ளைகளையும் வயது, உயரம், எடை ஆகிய மூன்றையும் கருதி அவற்றால் அறியக்கூடிய ஈவினை அறிந்து இளங்குருளையர்களாகவும், காளைகளாகவும், பெருங் காளைகளாகவும் பிரித்து அந்தந்த வகையினரைத் தனித்தனியாகக் கூட்டி அவர்களுக்கு ஏற்ற பயிற்சிகளை அளித்தால் அவர்கள் பயனடை வார்கள். உடற் கல்விக்கென இந்த வகையில் புதிய வகுப்புக்களை யன்றோ உடற் கல்வியாசிரியர் உருவாக்க வேண்டும். வாரத்துக்கு இரு அகவைகள் மட்டும் அளிக்கும் பயிற்சி பயிற்சியாகாது. நாள் தோறும் உடற்கட்டுப் பயிற்சியும் விளையாட்டுப் பயிற்சியும் வேண்டும். உடற்கட்டுப் பயிற்சி கட்டாயப் பயிற்சியாக அமைதல் சிறந்தது. விளையாட்டுப் பயிற்சி விருப்பப் பயிற்சியாக இருத்தல் நன்று. ஆனால் பிள்ளைகள் சிலர் மட்டும் விளையாட்டுக்களில் ஈடுபட்டுப் பலர் ஓடிவிடுவது நன்மை பயக்காது. பள்ளிக்கூட முழுவதற்கும் எல்லாப் பிள்ளைகளை யும் கருதி எல்லாப் பிள்ளைகளும் விளையாடுவதற்கு "[1] எல்லாப்பிள்ளை விளையாட்டுத் திட்டம்" வகுக்க வேண்டும்.

உடற் கல்வியாசிரியருடைய வேலை பொறுப்பு மிக்கது. பாட ஆசிரியர்கள் தவறிவிட்டாலும் இன்றைய பாடத்தை ஒருவாரம் அல்லது ஒரு மாதங்கழித்துக் கற்றுக் கொள்ளலாம். ஆனால் உணவைப் போன்று உடற்கல்வி இன்றியமையாதது. நாள்தோறும் பயிற்சி பெறும் மாணவன் நல்லதொரு வளர்ச்சியைப் பெறுவான். இன்று பாடச் சுமைகளால் நமது மாணவர்கள் எலும்பும் தோலுமாகக் காட்சி அளிக் கின்றார்கள். அவர்களுடைய உடலை உருப்படுத்துவது பெற்றோரோடு பள்ளியின் கடமையுமாகும். பள்ளிப் பிள்ளைகளுக்குச் சோற்றுணவு, கோதுமையுணவு, பாலுணவு, மேனாட்டு நிலையங்கள் அளித்து உதவு கின்றன. அவற்றைப் பெற்றுப் பிள்ளைகளுக்கு அளித்து, விளையாட் டிடங்களுக்கு அனுப்பினால் சிறந்த ஆர்வத்தோடு விளையாடுவார்கள். ஏழைக் குழந்தைகளையும் மதிய உணவு இல்லாது பட்டினியால் வாடும் குழந்தைகளையும் உடற்கல்வியின் பெயரால் மீண்டும் வதைத்தலும் தவறு. மாலை நேரங்களில் அறநிலையங்களிலிருந்து எத்தகைய உணவும் கிட்டாதுவிட்டால் பிள்ளைகளிடமிருந்து வசூலிக்கும் உடற் கல்விப் பணத்திலிருந்து அவர்களுக்குச் சிற்றுண்டியாவது அளித்து அவர்களை விளையாடச் செய்யலாம். பல பள்ளிகளில் குடிகள் நெருக்கத் தினால் விளையாட்டிடங்கள் இல்லை. இப்பெருங் குறைபாட்டினைத் தீர்க்க அரசாங்கம் உதவவேண்டும். புதுப் பள்ளிகள் அனுமதிக்கு முன் ஒவ் வொரு பள்ளிக்கும் விளையாட்டிடத்தை வற்புறுத்தவேண்டும். நல்ல விளையாட்டிடம் பள்ளிக் கட்டடத்தை அடுத்து அமைந்திருத்தலே நல்லது. வாரத்துக்கு ஒருமுறை பள்ளிப் பிள்ளைகள் எல்லோரையும் சேர்த்து ஒரு [2] கூட்டப் பயிற்சியும் சில பள்ளிகளில் அளிக்கின்றார்கள்.

---

1. Play for all 2. Mass drill

அவர்களுடைய அணிவகுப்புக் காட்சி விளையாட்டிடத்தையே அணி செய்கின்றது. இத்தகைய பயிற்சியால் பிள்ளைகள் பல ஒழுங்குகளைப் பெற இயலும். ஒரு பள்ளியில் ஆயிரம் பிள்ளைகள் படித்தால் அவர்கள் எல்லோரும் ஊதுகுழலின் ஒலிக்கு இயங்கி ஓர் இரைச்சலும் இன்றிக் குறிப்பிட்ட அணிவகுத்து நிற்கும் காட்சி, கண்கொள்ளாக் காட்சி யாகும்.

நாம் உரிமை பெற்ற பிறகு அனைத்து இந்திய உடற் கல்விக் கழகம் ஒன்று அமைத்துள்ளார்கள். ஆண் பெண் பள்ளிகள் இரு பாலாருக்கும் உடற் கல்விக்குரிய பாடத் திட்டத்தை அக்குழுவினர் ஆக்கியுள்ளார்கள். ஒவ்வோர் ஆசிரியரும் அதைப் படித்து அறிந்து கொள்ளவேண்டியது கடமை. அவை மிகவும் சிறந்தவை என்றும் அந்தந்தப் பள்ளிச் சூழ்நிலைக்கேற்ப மாற்றிக் கொள்ளத் தக்கவை யென்றும், அதில் வரிசைப்படுத்தியிருக்கும் விளையாட்டுக்களில் வேண் டியவற்றைப் பிள்ளைகளுக்கேற்பத் தேர்ந்தெடுத்துக் கொள்ளக் கூடியவையென்றும், அதில் நம் நாட்டுப் பழைய விளையாட்டுக்களும், யோகாசனங்களும் நாட்டு நடிப்புக்களும் இடம் பெற்றுள்ளன வென்றும் கருதுகிறார்கள். ஆசிரியருடைய எண்ணிக்கை விகிதம் 250 பிள்ளை களுக்கு ஓர் ஆசிரியரென்றும், 400 பிள்ளைகள் இருந்தாலும் இரண் டாசிரியர்களை அமைத்துக் கொள்ளலாம் என்றும் அறிகிறோம். விளையாட்டிடம் 160, 320, 480 பிள்ளைகளுக்கு முறையே 3, 4, 7 ஏக்கர் நிலங்கள் வேண்டுமென்றும் செப்பியுள்ளது. வகுப்பறையில் பிள்ளைகள் அமர்வதற்குரிய இடம் ஒரு பிள்ளைக்குப் பத்துச் சதுர அடி என்றால் விளையாட்டிடம் 250 முதல் 500 சதுர அடி வரையில் வேண்டியதா கின்றது. மக்கள் நெருக்கமுள்ள நகரங்களில் விளையாட்டிடங்கள் இல்லாத பள்ளிகள் இருந்தால் கட்டிடத்தைச் உயர்த்திப் பரந்த காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ள விளையாட்டுக்கென மண்டபத்தை யாவது கட்டி உதவ வேண்டும். நம் நாட்டில் சில பள்ளிகளில் விளையாட்டுத் திடல்கள் பிள்ளைகளை ஈர்க்கக்கூடிய வண்ணம் சுற்றுப் புறங்களில் அடுக்குப் படிகளோடு அமைக்கப் பெற்றுள்ளன. அவற்றைக் கண்காணித்து என்றும் ஒரே சீரோடு இருப்பதற்கு நாள் தோறும் திருத்தி அமைக்கிறார்கள். அத்தகைய திடல்களுக்குப் பக்கலில் விளையாட்டுக் கருவிகள் வைக்கும் அறை, [1] மருத்துவ நிலையம், [2] இளைப்பாறும் அறை ஆகியவை அமைக்கப் பெற்றுள்ளன. மாலை நேரங்களில் பிள்ளைகள் பலவகை விளையாட்டுக்களை அத்தகைய பரந்த திடலில் ஆடி மகிழும் காட்சி பிள்ளைகளையே யன்றி மற்றவர்களையும் மகிழ்விக்கும் காட்சியாகும். திடலில் உடற்பயிற்சி நிலையம் அமைக்கப் பெற்று உடலுக்கெனத் தனிப் பயிற்சி அளிக்கின்றார்கள். இஃது ஒரு பரந்த மண்டபமாகவும் அமையலாம். ஆனால் அதன்மேல் தளம்

1. Clinic 2. Rest room

உயர்ந்திருக்கவேண்டும். அடித்தளம் மரப்பலகைகளால் அமைக்க வேண்டும். நம் நாட்டுப் பழைய உடற்பயிற்சி வகைகளை இப்போது மீண்டும் உடற் கல்வியாசிரியர்கள் விரும்புகிறார்கள். தோப்புக் கரணம் போடுதல், தண்டால், குச்சி விளையாட்டு, பெருங்கம்பு விளையாட்டு, வன்மைப் போர், குத்துச் சண்டை ஆகிய இன்னோரன்ன பிற நமது நாட்டுக்கு உரியவை. அவற்றால் பெறக்கூடிய பயன்கள் தொன்று தொட்டு விளங்கியவை. நாள்தோறும் காலை அல்லது மாலையில் இப்பயிற்சிகளைப் பெறும் பிள்ளைகள் திடமுள்ளவர்களாக வளரு கின்றார்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு வகையான விளையாட்டுக்கள் வேண்டற்பாலவை. பெண்களும் உடல் வன்மையோடு வளரவேண்டும். நமது இலக்கியங்களில் தாயார்களை வீரத்தாய் என்றே புலவர்கள் விளித்துள்ளார்கள். நம் நாட்டுப் பண்பாட்டுக்கு இசைவுள்ள பயிற்சிகள் யாவை என நமது இலக்கியங்களில் புரட்டிப் பார்த்து அறிதல் கடமை.

20. உளநலன்

உடல்நலம் உளநலத்துக்கு வழி வகுப்பதற்கு உதவக்கூடியது உளநலனுடையார் நல்வழியை நாடுவர்; பிறர்க்குதவி செய்வர்; அவர்கள் பணியாற்ற விரும்புவார்கள். உளநலன் என்பது உடல் நலத்திலிருந்து வேருகக் கருதுவதொன்றன்று. உளநலன் உடல் நலத்தையுடைய ஆளுமையைக் குறிப்பதுமாகும். மனிதன் உடலமும் உள்ளமும் இணைந்த ஓர் உயிரி. ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கி என்ற நமது தமிழ்க் கொள்கையை மேனுட்டார் ஏற்றுக்கொள்ளார். ஊனினைச் சுருக்கிவிட்டால் உள்ளம் நலிவுறும் என்பர். உடலும் உள்ளமும் ஒன்றினை மற்ருென்று சார்ந்தவை. நோய்கள் உடலத்தின் பாற்பட்டவை என்பதைப் போன்று உள்ளத்தைச் சார்ந்தவையுமாகும். உடல் நலமுள்ளவர் என்று ஒருவரைக் குறிப்பிட்டால் அவர் உடல் நலத்தோடு உளநலத்தையும் பெற்றவர் என்பது போதரும். ஆரோக்கியம் எனக் கூறுவதற்கு உடல், உள்ளம், ஆன்மா ஆகிய மூன்றும் ஒருங்கே நலனேடு உள்ளன என்று பொருள். உளநலமென்ருல் உள்ளத்தில் உவகை பூத்துக்கொண்டு இருக்கும் ஓர் நிலை. உளநலம் என்பது ஒருவர் தன்னைப் பொறுத்த வரையிலும் ஓர் உள்ள அமைதியைப் பெறுதலைக் குறிக்கும். தனது குறிக்கோள்களைக் கருதி வழுவாது வாழ்க்கை நடத்துபவரும், தனது தகுதிகளையும், திறன்களையும் பயனுறுமாறு பயன்படுத்துபவரும், மதிப்போடு வாழ்க்கை நடாத்துபவரும், பிறர் தன்னை அன்போடு மதிக்கக்கூடிய உறவுடையவரும், தன்மதிப்பு, தன்னம்பிக்கை, தனது வேலை என்றிருப்பவரும், யாரோடும் மாறுகோள் அல்லாது அன்போடும் அமைதியோடும் வாழ்பவரும் உளநலன் உடையவராவார். அவருடைய உணர்ச்சி, வெறுப்புக்கள், அவா, குறிக்கோள்கள் ஆகியவை சமநிலை எய்தியவை. அவர் தனது நண்பரோடும் சமூகத்தாரோடும் முரண்படாது தமது வாழ்க்கையில் கவனம் காண்பவர். தனது உள்ளத்தில் ஒரு பொருத்தப்பாடு காண்பவர். அப்பொருத்தப்பாட்டினைத் தனது சமூக உலகில் பெற்ருலன்றி அமைதி நிலையாகாது. சமூகம் அடிக்கடி பல்வகை ஆற்றல்களால் அதன் பண்பாடுகளை மாற்றிக்கொண்டு இருக்கும். அதற்கேற்ற பெற்றி தனி ஒருவனுடைய உள அமைதி சமூக மாறுபாட்டினை ஏற்றுக்கொண்டும், தன்னைத் திருத்திக்கொண்டும் தொடர்ந்து பல மாறுதல்களுக்கிடையே வளர்ந்தும் வருவது. எனவே உளநலனை அமைத்துக்கொள்ளுவது தனியாளின் பொருத்தப்பாட்டின் திறனென்று கூறுவது மிகையாகாது. சூழ்நிலையில் ஏற்படும் பல மாறுதல்களுக்கிடையே ஒருவன் தன் அமைதியையும், இன்பத்தையும் காண்பது திறமையால் உண்டாகுவது. நாள்தோறும் நடாத்தும் வாழ்க்கை பல

கோளாறுகளுக்கு இடையே நிகழலாம். அவை தனது குணத்தாலும் நடத்தையாலும் அல்லது சூழ்நிலையாலும் உண்டாகலாம். ஆனால் அவற்றை எல்லாம் சமாளித்துக்கொண்டு தனது பொருத்தப்பாட்டினை மேலாக்கித் தனது பண்பாட்டினை உயர்வாக்கித் தனது குறைபாட்டினை உணர்ந்து தனது அளவுக்கு மீருமல் தான் நடந்துகொள்ளுதல் உயர்ந்த தன்மைத்து. பிறருடைய சிக்கல்களை அறிந்து அவர்களுக்கு உற்ற வழியில் தனது உள்ளத்தை நெகிழவிடுதலும், தனது குறிக்கோளினுக்கு ஊறு விளையாதபடி தான் நடந்துகொள்ளுதலும், வாழ்க்கையில் உண்மையை உணர்ந்து அதன்படி ஒழுகலும், வாழ்க்கையில் உறும் பல ஏமாற்றங்களையும், இடர்ப்பாடுகளையும் கண்டு அழுங்காது தனது குறிக்கோளினை நழுவவிடாது, உணர்ச்சி வயப்படாது, சமநிலை வழுவாது தான் தொடங்காற்றல், தனது நினைவாற்றல், தனது வழிகளைத் தானே வகுத்துக் கொள்ளுதலும் ஆகிய குணங்கள் எய்தப் பெற்ருல் உளநலன் கிட்டுவதோடு உடல் நலமும் நன்கு அமையும்.

ஒருவருடைய உளநலன், அவருடைய வாழ்வு, உடல்நலம், சமூகச் சூழ்நிலை, ஆகிய மூன்றினையும் சார்ந்தது என்று கருதுவர். ஒருவருடைய உளநலன் அவருடைய மக்கண்மையையும், உறவினையையும் பாதிக்கக் கூடியது. அது தனது இல்லத்தார் அல்லது தமது நண்பர் அல்லது தன்னுடைய தொழில் ஆகியவற்றையும் பாதிக்கும். இல்லாளோடு கோளாறு ஏற்படின் உளநலன் கெட்டு இல்லத்தாரைப் பாதிக்கும். ஒரோ வழி தனது வெளி உறவையும் குறைவுபடச் செய்யும். அதனுல் அமர்வு பெறும் ஆசிரியர்கள் உளநலன் வாய்ந்தவர்களாக இருத்தல் அவசியம். அவர்கள் உளநலக் குறைவால் கடுகடுப்பரேயாயின் உட்பாட்டுச் சிதைவு பெறுவர். ஆசிரியர் ஒரு நாளைக்கு உளநலன் கெட்டிருந்தால் பல பிள்ளைகளுடைய உள்ளங்களில் புயற்காற்றை வீசி விடுவார். இத்தகைய நிலை பிள்ளைகளின் பொருத்தப்பாட்டினையும் கெடுக்கும். முதற்கண் இல்லத்தில் ஏற்படும் பொருத்தப்பாடு பின்னர் பள்ளியில் ஏற்படும்போது இல்லத்தோடும், சமூகத்தோடும் பொருத்தப்பட்டு நிகழ்ந்துகொண்டே வருகிறது. இல்லத்தில் பெற்ருர், உடன் பிறந்தார், உறவினரோடும் பள்ளியில் ஆசிரியர், தோழர்கள் ஆகியவர்களோடும் பொருத்தப்பாடு தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. பெரும்பான்மை இல்லாமை காரணத்தால் உள்ளம் உறுதியாகித் தனக்கும் தனது சூழ்நிலைக்கும் ஒரு பற்றற்ற நிலையினை ஒரு பிள்ளை உண்டாக்கிக் கொள்ளும். இரண்டாவதாகப் பாதுகாப்பின்மையால் எப்போதும் இடர்ப்பாடு, உதவியற்ற நிலை ஆகியவை ஒரு பிள்ளையைத் தன்னம்பிக்கையை இழக்கச் செய்துவிடும். தான் தொடங்காற்றல் குன்றிவிடுகிறது; படைப்பாற்றல் அற்று வீடுகிறது; ஆளுமைத் தன்மையில் ஊறு ஏற்படுகிறது. எனவே அச்சத்தோடு வாழ்க்கை நடத்தும் பிள்ளைகள் ஓர் உயிரற்ற உடலைச் சுமந்து இன்றைக்கெப்படியோ, நாளைக்கெப்படியோ என்று வாழ்கின்ருர்கள்.

மூன்ருவதாகப் பிள்ளைகளிடையே தாழ்வுணர்ச்சி ஏற்பட்டு விட்டாலும் எதிர்மறைப் பயன்கள் விளையும். வகுப்பிலுள்ள பிள்ளைகள் மற்ற வரைக் காட்டிலும் தம்மறிவு குறைவென்று கருதும் பிள்ளைகள் தமது இயற்கையாற்றல்களைக் குறைவாக மதித்துக்கொண்டு வாடி வதங்கி விடுவார்கள். இதற்குக் காரணம் ஒரு சிறிது பெற்ரோரும், மிகுதி ஆசிரியருமே ஆவார்கள். பெற்ரோர்கள் அக்கம் பக்கத்துப் பிள்ளைகளை உயர்த்திப் பேசியும், தமது பிள்ளைகளைத் தாழ்வாகப் பேசியும் குறை கூறுவது வழக்கம். இத்தகைய பழக்கம் தமது பிள்ளைகளுக்குக் கெடுதி விளைவிக்குமென்று கருதுவதில்லை. இத்தகைய கேடு விளைவிப்பவர்களும் ஆசிரியர்கள். மெதுவாகக் கற்கும் பிள்ளைகளை மதியற்றவர்கள் என்று கருதி அவர்களுடைய குறைகளை இடித்து இடித்துக்கூறி அவர்களுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை உண்டாக்குகின்ருர்கள். இதனுல் பிள்ளை கள் பலர் முதலில் வருந்திப் பின்னர் தம்மால் ஒதுக்கப் பெற்றவரென்று தம்மைக் கருதி விடுகின்றனர். அதனுல் அவர்கள் இயற்கை ஆற்றல் குறைவுற்று மந்தமாகி விடுகின்ருர்கள். இத்தகைய உளநிலை பிள்ளைகளுடைய அடி உள்ளத்தில் உறைந்து விடுகிறது. இது வாழ்க்கை முழுவதும் முன்னேற்றத்திற்குத் தடை செய்யும். இதன் தீவினையை உணர்ந்து ஆசிரியர்கள் இக்கொடும் பழக்கத்தினை விடுவார்களாக! ஒரு நல்லாசிரியர் மாணவனுடைய நிலையை உணர்ந்து ஆவன செய்வதற்கு முற்படவேண்டும். அதுவே அவர் செயற்குரிய செயலாகும். இதனை விடுத்துப் பிள்ளைகளை விருப்பு வெறுப்போடு கருதி அவர்களுடைய உளப்பாங்கினைக் கெடுத்து வகுப்பறையில் உயர்ந்தவர் தாழ்ந்தவரென்ற பிரிவுகளைப் புகுத்திச் சிலரை உயர்த்தியும் தாழ்த்தியும் கருதுவதோடல்லாது விளம்பரப்படுத்தும் நிலை வளரும் உள்ளங்களை வளப்படுத்தாது அழுங்கச் செய்துவிடும். அது நல்லாசிரியத்துக்கு இழுக்காகும். எனவே ஏழைக் குடும்பங்களின் பிள்ளைகளும் எளிமையால் வருந்தி அவர்கள் உட்போக்குகளில் தடைகளைக் காண்கின்ருர்கள். வாழ்க்கையிற் பெருமிதமின்மை, பிறருக்கு அடங்குதல், ஒடுங்குதல், ஒதுங்கி வளர்ச்சியடைய வேண்டிய நிலைமை ஆகியவை உள்ளத்தில் தடைகளை உண்டாக்குகின்றன. தாழ்வுச் சிக்கலால் உண்டாகும் தீங்குகள் வறுமையைக் காட்டிலும் மிகக் கொடியன. அதற்கு ஆசிரியர்களே பொறுப்பாவார்கள். பிள்ளைகள் பால் ஒவ்வொருவரிடமும் ஒரு குணத்தைக் காண்பவரே எந்தப் பிள்ளையின் தாழ்வுச் சிக்கலுக்கும் காரணமாக மாட்டார். மாணவர் சிலர் பொருத்தப்பாடின்மையால் துன்புறுவர். தாயர் அல்லது தந்தையர் அல்லது இருவரும் பிள்ளையைப் புறக்கணிப்பதாலும், பிள்ளைகளுக்கு உளநலன் கெட்டுவிடும். மற்றும் பெற்ரோர் பிள்ளைகளுக்கு அளவுக்கு மிஞ்சி ஆதரவு அளித்தாலும் அவர்களுக்குத் தன்னம்பிக்கைக் குறைவுற்று அவர்கள் அவர்களுடைய ஒவ்வொரு செயலுக்கும் பெற்ரோருடைய உதவியை நாடுகின்ருர்கள். பெற்ரோர்கள் மணமுறிவு செய்து பிள்ளை

களை வேறு மணம் செய்துவித்த இரண்டாவது மனைவியிடம் விட்டு விடுவார்கள். அப்பிள்ளைகள் தமது பெற்றோருடைய புதிய குடும்பங் களில் சிக்கித் துன்புறும். சாதி, மதம், இனம், மொழி வேறுபாடுற்ற சமூகத்தில் சிக்கிய பிள்ளைகள் தன்னுரிமையற்றுக் கவலுறுவார்கள். செல்வருடைய பிள்ளைகள் ஏழைப் பிள்ளைகளை இழிக்க வைத்துவிட்டு அவர்கள் கூடிக் குலாவுவார்கள். விரைவாகக் கற்கும் பிள்ளைகள் மெது வாகக் கற்கும் பிள்ளைகளைக் குறைவாக மதித்தலாலும் உள்ளம் துடிக் கும். தேர்வுகள் அடிக்கடி நம் பள்ளிகளில் நிகழ்வதால் தனி ஒவ்வொரு மாணுக்கனும் தன்னலத்தால் உந்தப்பெற்று பிற நலத்தில் அழுக்காறு கொள்ளுகின்ருன். எல்லாப் பிள்ளைகளும் ஒரே வகையான பாட ஏற்பாட்டில் சிக்குவதால் சிலருக்கு அது கடினமாகி அவர்களுக்கு இன்பத்துக்குப் பதிலாக துன்பத்தையே அளிக்கின்றது. அதனுல் பள்ளியின் மீதும் பாடத்தின் மீதும் வெறுப்பு உண்டாகிறது. அதிகப் பாடங்கள் அவர்களுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்டு விடுவதால் அவர்களுக்குத் தாழ்வுணர்ச்சி ஏற்பட்டுவிடுகிறது. சில பள்ளிக் கூடங்களின் கட்டுத் திட்டங்கள் கடுமையாக வற்புறுத்தப் பெறுவதால் பிள்ளைகள் தமது பிறப்புரிமையை இழந்தவர்கள்போல் கவலையுறுகிருர் கள். கடுமையான ஆசிரியர் பிள்ளைகளோடு கடுமையாகப் பழகு கிருர்கள். அல்லது ஓராசிரியர் தனியாகப் பிள்ளைகள் சிலரை இழிவாக விளம்பரப்படுத்துகிருர். வகுப்பறையில் ஏற்படும் இடர்ப்பாடுகளுக்கு ஆசிரியரே பொறுப்பாளுலும் அவ்வாசிரியரே இடருற்ற உள்ளங்களுக்கு அமைதி அளிக்க இயலும். எழுத்தறிவித்தவன் இறைவனுடைய நிலையை எய்துதற்கு இயலாவிட்டாலும் கல்வி கற்பித்தவன் ஒரு தந்தை என்ற நிலையையாவது உள்ளத்தில் கொள்ளுதல் வேண்டும். பிள்ளை களுக்கு இளமையில் வேண்டியவை எல்லாம் ஆசிரியருடைய நல்லுறவும் நல்லெண்ணமுமே ஆகும். மனவெழுச்சியின்பாற்பட்ட பொருத்தப் பாடின்மையுங்கூட ஆசிரியரால் திருப்பம்பெற முடியும். பிள்ளை களுக்குக் கவலையும் மனமுறிவும் உண்டாதல் கூடாது. பிள்ளைகள் சிலர் தமது பணிவையும், அடக்கத்தையும் முரட்டுத்தனமாக மாற்றிக் கொள்ளுகின்ருர்கள்.

உளநலத்தோடுள்ள பிள்ளைகள் பள்ளி 'வாழ்க்கையில் இன்பம் காண்பார்கள். அவர்கள் கல்வி நலம் பெறுவார்கள். எனவே ஆசிரியர் பிள்ளைகளுடைய பல இயல்பூக்கங்களைத் தூய்மை செய்தல் வேண்டும். அவற்றை நல்லூக்கங்களாக மாற்றி நல்வழியில் சேர்க்கவேண்டும். நல்லெண்ணங்களைப் பிள்ளைகளுக்கு நல்குதல் வேண்டும். இளமையில் பெறும் நல்லெண்ணங்கள் அவர்களுக்கு எத்தகைய இன்னல்களிலும் நன்னெறிக்கே வழியாகும். உளநலனே ஆளுமையை வளரச் செய்வது. குன்றிய உள்ளம் குன்றிய உடலை உருவாக்குகிறது. பிள்ளைகளுக்கு எத்துணை பணிகள் அளித்தாலும் உளஉவகை உந்து தலைத் தரும். ஆனுல் உளநோய் ஒருவரைக்கொன்று விடும். உள

உவகை கடினமான வேலையையும் எளிதாக்கித் தரும். ஆசிரியர் மாணவரோடு நட்புள்ளவராதல் வேண்டும். மாணவன் தனது ஆசிரியரைத் தனது உறுதுணையாக மதித்தல் வேண்டும். ஆசிரியர் பால் அன்புள்ள பிள்ளைகள் எத்தகைய அறிவுக் குறைபாடுடைய வராயினும் அறிவுப் பெருக்கம் பெறுவர். ஆசிரியருடைய அன்பில்லாத வர்கள் எவ்வளவு அறிவுடையவராயினும் அறிவுப் பெருக்கத்தில் தடைப் படுவர். பிள்ளைகளுடைய உரிமைகளைப் பிடுங்கக் கூடாது. அவர் களிடையே தன்னடக்கம், களிப்பு, விழிப்பு, தன்னம்பிக்கை, உண்மை ஆகியவற்றிற்கு ஊக்கம் அளிக்கவேண்டும். அவர்களுடைய விருப் போடு பள்ளிப் பணிகளையும், இல்லப் பணிகளையும் உசாவி அமைக்க வேண்டும். தனித்தனிப் பிள்ளைகளைத் தனித்துக் கவனிக்கவேண்டும். அப்போது அவரவர்களுடைய இடர்ப்பாடுகள் நீங்கும். பாலுணர்ச்சி யைப் பக்குவமாகப் படைப்புப் பணிகளில் திருப்பிவிட வேண்டும்.

21. பால் வகைக் கல்வி

பால் வகைக் கல்வி பல கோணங்களிலும் இளைஞர்களுக்கு இன்றி யமையாதது. இளைஞர் வாழ்க்கையில் பாலுணர்வு மீதூர்கின்றது. இதன் பல கோணங்கள் அறநெறி, சமூகச்சார்பு, இருபாலர்களின் தன்மை, மதம், இனம் ஆகிய பலவற்றைச் சார்ந்தவை. பாலுணர்வு இயல்பானது. அதன் போக்கினை எளிதில் தடுத்துவிட முடியாது. நன்மை பயப்பதும் அதுவே; அல்லது இன்னல் இழைப்பதுவும் அதுவே. அஃது ஆக்க முறையில் அமைந்து விட்டால் அதன் நன்மை கள் பலவாகும். இழிவுப் பாதையில் சென்றுவிட்டால் அழிவு அதை விடப் பலவாகும். ஆனால் அதன் வெளியீட்டினைத் தடைப்படுத்தல் தகாது. தடைகளால் இன்னல்கள் பல உண்டாகலாம். பாலுணர்வின் தன்மையினை நன்றாகப் பிள்ளைகள் அறியவேண்டும். அதனால் உணர்வு பெறுபவர்கள் அடையக்கூடிய நன்மையும் அவர்களால் ஏற்படும் சமூகத் தொண்டும் விளக்கம் பெறுதல் வேண்டும்.

“ உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு ”

இருபாலருக்கும் உள்ள நட்பு முறைகள், உடம்பொடு உயிர்க்குள்ள தொடர்புகள் போன்றன. இத்தகைய வள்ளுவப் பண்பாடு பால் வகைக் கல்வியின் குறிக்கோளாகும். ஒருவருடைய சான்றாண்மையை உண்டாக்குவதும் அதுவே. ஆளுமையை ஆக்குவதும் அதுவே. பாலுணர்வின் மேலீடு வேறு இயல்புகளோடு ஒருமைப்பாடு பெறாமலும் சமூக நெறியோடு உடன்பாடு பெறாமலும் இயங்கினால் அதன் விளைவு சொல்லொண்ணாதது.

நெடுங்காலம் வரையில் பால்வகைப் பேச்சுக்களே நாகரிகக் குறை வாகக் கருதப்பெற்றன.. சிறுவர்களுக்குக் பால்வகைக் கல்வி வேண்டிய தில்லை. ஆனால் பெருங்காளையர் பருவத்தில் இயற்கையாக உந்தப்பெறும் பாலுணர்வு தூய்மையாதல் வேண்டும். அல்லாக்கால் அதன் விளைவு பலவாகும் என்று கருதினோம். பாலுணர்ச்சி இருபாலரின் புணர்ச்சி ஒன்றினை மட்டும் குறித்ததன்று. அதன் பெரும்பொருளை விளக்கிக் கொள்ளுவதன்றோ பால்வகைக் கல்வியின் இலக்கணமாகும்! நாகரிக மேலிட்டால், அன்றாட வாழ்க்கை இருபாலர்களும் பாலுணர்வின்றி வேறு உணர்வோடு நெருங்கிக் கூடிப் பழகவேண்டிய நிலை அடைந்து விட்டது. மணவாழ்க்கையுங்கூட இன்பப்பெருக்கத்துக்கு மட்டுமன்று என்றும் அதன் அடிப்படையில் மனித வாழ்க்கையே வளம்பெறக்கூடிய வழி வகுப்பது அதன் விழுப்பமென்றும் கருதுகின்றனர். சிறிய குழந்தைகளுக்கும் பாலுணர்வு, பால்வேட்கை, பால்நினைவு ஆகியவை

உளவென்று கூறுவர். அவர்கள் உற்றுநோக்குவதிலும் மறைவுற்று இருப்பதைக் காண விழைவதிலும் அவர்களை நீக்கிப் பேசப்படும் பொருள்களை அறிந்துகொள்ள முனைவதிலும் ஆர்வம் மிக்கவர்கள். எனவே பிள்ளைகளுக்குப் பாலுணர்வு இல்லை என்று கருதுதல் பிழையாகும். பாலுணர்வு ஆண்பாலாயினும், பெண்பாலாயினும் தனியாளுமைத் திறனுக்கு வழிகோலுவதாகும். பால்வகை பற்றிய நடத்தைகள் ஒருகாலத்தில் வெறுக்கப் பெற்றவையாயினும் இன்று அவற்றின் இலக்கணங்களை அறியாமையால் உண்டாகும் தீமைகள் பலவென்று கண்டறிந்து அவற்றை அறிந்துகொள்ளும் வழிகளை வகுத்துள்ளார்கள். இவற்றினை அறியவொட்டாது தடுத்து வைத்தால், இளைஞர்கள் தமது குறிப்புத்திறனால் அறிந்துகொண்டு நல்வழியை நாடாமல் தீயவழியில் மறைவாக வளர்வார்கள். அன்றியும் சமூகத்தில் தாழ்வுற்ற மக்களுடைய தீயவழிகளைக் கண்ணுறுவதாலும், அவர்களுடைய பேச்சுக்களைச் செவியுறுவதாலும், இளம் பிள்ளைகளுடைய அறியாமை உள்ளங்கள் கலைக்கப்பெற்று பாலுணர்வு உந்துதலாலும் தீமைகள் நிகழ்கின்றன. ஒரு தாய் தனது மகளைப் பலவகைக் கட்டுத் திட்டத்தில் பாலுணர்வு இன்றி வளர்த்து வந்தாலும் ஒரு சிறிது நேரத்தில் ஒரு பண்பற்ற வேலைக்காரி அவளுக்குப் பாலுணர்ச்சியை ஒரு சொல்லாலோ அல்லது ஒரு செயலாலோ ஊட்டிக் கெடுத்துவிட முடியும். அதனால் பிள்ளைகள் தீயவர்களிடமிருந்து அத்தகைய உணர்ச்சிகளைப் பெற்று அறியாமை காரணமாகப் பல விளைவுகளைத் தேடிக் கொள்ளுவதற்கு முன்னர் அவர்களுக்கு வேண்டிய பால்வகைக் கல்வியை அளித்து அவர்கள் தற்காத்துக்கொள்ளும் வண்ணம் வகை செய்வது நன்மையாகும்.

கல்வியாளர்களும் உளநூல் வல்லுநர்களும் பால்வகைக் கல்வியின் வழியாகத்தான் ஒவ்வொரு பிள்ளைக்கும் சமூகத்துக்கும் நன்மையை வருக்க இயலுமென்று கருதுகிறார்கள். பால்வகைக் கல்வியைப்பற்றிய எல்லாப் பொருள்களையும் விளக்கிவிட்டால், அதனால் உண்டாகும் விளைவுகள் அதன் அறியாமையினால் ஏற்படும் தீமைகளுக்குக் குறைந்தவை என்றே கருதுகிறார்கள். உண்ணும் உணவைப்பற்றி உணர்ந்து கொள்ளுவதைப் போன்று நம் பிள்ளைகள் வாழ்க்கையைப்பற்றி அறிதல் வேண்டுமென்பார் பெர்னாட்ஷா அவர்கள். மனித வாழ்க்கையின் அடிப்படை பாலுறவாகையால் அஃதறியாத வாழ்க்கை வளமற்ற தொன்றாகும். ஆகையால் உயிர் வாழ்வின் அடிப்படை உண்மைகள் அறியாது இருப்பது உயிரின் உயர்வினை அறியாதிருப்பதாகும். பால்வகை இயல்பூக்கத்தைச் சார்ந்தது. இந்த இயல்பூக்கத்தினைத் தூய்மைப்படுத்தி வளரும் பிள்ளைகளை வெகு விழிப்போடு நல்ல சூழ்நிலையில் தம்மைப் பேணி வளர்க்கும் வழியினைத் தாமே தேடிக் கொள்ள உதவுதல் வேண்டும்.

பால்வகைக் கல்வி எல்லாக் கல்வி நிலையங்களுக்கும், நிலைக்களன்

களுக்கும் உரித்தாகும். அது பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மட்டும் கற்பித்தற்கன்று. இல்லங்களில் தொடங்கவேண்டும். பள்ளி, தொழில், சமூகம், இறைவழிபாட்டுக் கோயில் ஆகியவெல்லாம் இப்பொறுப்பிற்கு உறைவிடமாகும். இவ்வறிவினை அறிவுள்ள பெரியோர்கள் யாராகிலும் கொடுப்பதற்கு உரிமை உண்டு. அறிவு மிகுந்தவர்களாயின் அனுபவம் மிகுந்தவர்களாவர். சிலர் பால்வகைக் கல்வி பெருங்காளைப் பருவத்தில்தான் அளித்தற்குரியதென்று கருதுவர். இதை விளக்கமாக விரிக்காது சுருக்கமாகக் குறுக்கி ஒரு முறை அளித்துவிட்டால் போதுமென்று கருதுகின்றனர். ஆனால்.பால்வகைக் கல்வியை உடலையும், உள்ளத்தையும், நாட்டத்தையும், பண்பாட்டையும் குழவிப் பருவ முதல் நிலைக்கேற்றவாறு முதிர்ச்சிப் பருவம் வரையில் தொடர்ந்து அளித்து வருவதே சிறந்த முறையாகும். இளமைப் பருவத்தில் தொடங்கினால் பிள்ளைகளுடைய குறும்பால் தீமை விளையாது. பாலறிவுப் பெருக்கத்தினால் பக்குவப் பருவம் அடைவதற்குள் தகாதவற்றைத் தடுத்துக் கொள்ள மனத்திட்பம் பெற்று விடுவார்கள். பிள்ளைகள் மட்டும் தீயவர்களிடமிருந்து பால்வகைப் பொருள்களை அறிதல் கூடாது.

பிள்ளைகளிடையே பழக்கங்கள் சில தம்மை அறியாமலும் பிறருடைய தூண்டுதலாலும் உண்டாகின்றன. ஆண்பிள்ளைகள் இயற்கையாகப் பாலுணர்வு மீதூரப்பெற்றுப் பல பிழைகள் செய்து தமது ஆண்மையைத் தாம் அறியாமலே இழந்து விடுகிறார்கள். பெண்களும் தமது பூப்பின் உண்மையை உணராது அதனால் தமது உள்ளத்தையும் உடலத்தையும் கெடுத்துக் கொள்ளுகிறார்கள். இவற்றைத் தடுப்பதற்குப் பெற்றோர்களும் உற்றோர்களும் வெகு விழிப்பாக இருத்தல் வேண்டும். அவர்கள் உணர்வுகளைப் பெருத வண்ணம் அவர்களுடைய உடலையும், உள்ளத்தையும் வேறு வழிகளில் உள்ளுமாறும், உழைக்குமாறும் வழிப்படுத்த வேண்டியது கடமையாகும். காளைப்பருவத்தில் கடுமையான வாழ்க்கையைப் பிள்ளைகளுக்கு அளித்து அவர்களை வேறு பணிகளில் திருப்பவேண்டியது பெரியவர்கள் கடமையாகும்.

பண்பாடற்ற வாழ்க்கையாலும், விலங்கினங்களைப்போல் பரத்தையரைப் புணர்தலாலும், சிறுநீரகங்களில் பல்வகை நோய்கள் பெருகி அவற்றால் தீமைகள் உண்டாகி வழிவழியாக அவை செலுத்தப்பெற்றுச் சந்ததிகள் நோயோடு பிறத்தலுக்குக் காரணமாகின்றன. அதனால் தீமையைத் தடுக்கும் வழியும் மருத்துவ வழிகளும் நோய் பரவவொட்டாது கட்டுப்படுத்தத் தடுப்பு முறைகளும் மிகவும் இன்றியமையாதவை. சமூகமும் அரசும் பரத்தையர் வாழ்க்கையை நிறுத்தி அவர்களுக்குப் பிழைக்கும் வழி வேறு பலவற்றைத் தந்து அவர்களுக்கு நரக வாழ்க்கையில் இருந்து மீட்சி அளிக்கவேண்டும். இத்தகைய வாழ்க்கைக்குக் காரணம் அறியாமையும், பலவகைப் பாலுணர்ச்சி பெருகக் கூடிய பண்பற்ற இலக்கியங்களுமேயாகும். இதனால் உதவியற்ற தாய்மார்களும், தந்தையற்ற குழந்தைகளும் சமூகங்களில் பெருகுவதைத்

தடுக்கவேண்டும். பல நாடுகளில் பாலுறவின் பண்பாடு பலவகைத்தது. நம்நாட்டில் ஒருவர் இரு மனைவிகளை மணக்கக்கூடாதென்று சட்டம் ஓரளவு நன்மை பயந்து வருகிறது. திருவள்ளுவரும் அவர் காலம் முதல் வரைவின் மகளிர் நட்பினைக் கடிந்துள்ளார். பிறனில் விழையாமையை வற்புறுத்தியுள்ளார். அதனை ஆன்ற ஒழுக்கென்றும் பாராட்டியுள்ளார். திரு. வி. க. அவர்களின் பெண்ணின் பெருமை என்ற நூலினையும், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காவியப் பெண்மணிகளின் கடப்பாட்டையும், கண்ணியத்தையும் உணர்வார்களேயானால் பழந்தமிழ்ப்பாற் பண்பாட்டினைப் பான்மையோடு விளக்கிக் கொள்ளுவார்கள். அதனால் பெண்குலம் அல்லது ஆண்குலம் பாலுணர்ச்சிக்கே இருவகையினர் என்று கருதாது அவர்களுடைய பண்பாட்டு வாழ்க்கையால் இயற்கையின் பேரின்பத்தினை எய்துவதற்கென்று அறிவுறுத்தல் கடமையாகும். விலங்கினங்களைக் காட்டிலும் மனிதப் பாலுணர்ச்சியின் உயர் பண்பாடுகளையும் சிறப்பினையும் இலக்கிய இலக்கணங்களாலும், முன்னோருடைய வாழ்க்கை வரலாறுகளாலும் விளக்குதல் நலனாகும்.

பால்வகைக் கல்வி சிற்றின்பத்தை ஊட்டுதற்கன்று. அல்லது பால்வகை உணர்வுகளை எழுப்புதற்கன்று. அதை மறைபொருளாக—மதிக்கும் பொருளாக—அதன் மாண்பினை வாழ்க்கைப் பொருளாக அளிக்க வேண்டியே. அதன் பயனால் உட்பாடு மட்டுமன்றிப் பண்பாடு சமூக உறவு ஆகியவை பெருகி வாழ்க்கையில் இடரற்ற நிலையினை அளிக்கும். பால்வகைக் கல்வியினை அளித்தற்குரிய முதல்வர்கள் பெற்றோர்களே யாவர்: தாயர் அல்லது தந்தையர் அல்லது குழவிகளோடு பழகும் முதுமையினரும் அளிக்கலாம்; பெரும்பான்மை தாயர் இப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ள உரியவர். எனவே இல்லம் பால்வகைக் கல்விக்கு முதற் கல்வி நிலையமாகும். சிலர் இல்லமன்றி வேறோரிடத்தில் வேறோர் நிலையம் இதனை ஏற்கத் தக்கதன்று என்று கருதுகின்றனர். ஆனால் எத்துணை பெற்றோர்கள் இப்பொறுப்பினை உணர்ந்து ஆற்றவல்லவர்களாவது அல்லது ஓய்வுள்ளவர்களாவது உள்ளார்கள்? ஆனால் இல்லத்தின் பொறுப்பு மிக இன்றியமையாதது. இல்லம் தமது இளைஞர்களுக்கு மட்டும் தனித்தனியாகப் பாலறிவினை உணர்த்தினால் பிற நிலையங்கள் சமூகத்தின் ஒழுக்கங்களை உணர்த்தலாம். எனவே தனிப் பிள்ளைகளுக்கு ஆணாயினும், பெண்ணாயினும் இளங்காளைப் பருவத்தில் இன்றியமையாத பால் ஒழுக்கங்களை உணர்த்திப் பிள்ளைகளைத் திருத்த முறச் செய்யலாம்.

பால் வகைக்கல்வி பிள்ளைப் பிறவியின்போதே தொடங்குகிறது. தாயன்பு, தந்தையின் பரிவு, பிள்ளையின் வளர்ச்சியில் அவர்களுக்குள்ள விழைவு, பிள்ளையின் பெற்றோருக்குச் செலுத்தும் பணிவன்பு, இவர்களுக்கிடையே நிகழும் பொருத்தப்பாடுகள், வளரும் பிள்ளையின் விருப்பு—வெறுப்புக்கள், பெற்றோர் வழி நிற்றல், உரிமை அல்லது

கடுமையில் அமைந்த வளர்ச்சி, தமது உட்பாட்டினை வெளிப்படுத்தக் கூடிய உரிமைநிலே, அல்லது தமது பெற்ருேர் தமது உளப்பாங்கினை வினவி அறிந்து ஆவன செய்யும்பேறு ஆகியவை பிள்ளேயின் ஆளுமைப் பண்பையே உருவாக்கக் கூடியவை. அவன் காளேப் பருவத்தின் நடத்தைகள் பிள்ளேப் பருவத்தின் வளர்ச்சியைச் சார்ந்தவையாகும். பெற்ருேரோடு கொள்ளும் உறவு பிள்ளேயின் உட்பாட்டினுக்கு உடன்பாடாக அமைதல் நல்லது. நமது நாட்டுப் பெற்ருேர்கள் தமது பிள்ளேகளுக்கு உற்ற பருவத்தில் மணக்கோலம் புனைந்து காண்பதற்கு ஆசைப்படுகின்றனர். அதுபோழ்து மகனுகிலும் மகளாகிலும் அவர்களின் அறியும் வேட்கையில் பெற்ருேர்கள் வேண்டிய அளவு பால் ஒழுக்கங்களே நன்கு உணர்த்தலாம். இவர்கள் உணர்த்தும் வழி ஆசிரியர்கள் வகுப்பறையில் கற்பிப்பதைப் போன்றன்று. எதைக் கற்பித்தாலும் பெற்ருேர்களுடைய இயற்கையான ஆசிரிய முறைக்கு எந்நோக்க முறையும் ஈடாகாது. பிள்ளேகளின் பாலுணர்வுக் குறிகளே அறிந்து கருத்துக்களே அப்போதைக்கப்போது உதவுவது நல்லது. சில குழவிகள், வீட்டில் பெற்றெடுத்த குழந்தை எங்கிருந்து வந்தது என்றும் தான் எப்படிப் பிறந்தேன் என்றும் வினவுவது உண்டு. இவ்விஞக்களேப் புறக்கணித்தல் தவறு. பிறந்த குழந்தை அதன் தாய் வயிற்றிலிருந்து வந்ததென்று கூறலாம். பிள்ளேகள் மீண்டும் மீண்டும் தாய் மடியில் தவழ்ந்து கொண்டே பல விஞக்களே விடுத்தால் ஏற்ற பெற்றி அவர்களுக்கு உரிய விடைகளே அவர்கள் அறியும் வண்ணம் விளக்குதல் கடமையாகும். பள்ளியில் ஆசிரியர் தரும் விளக்கம் உயிரியல் விளக்கமாக அமையலாம். தாயின் பெருமையைத் தகவோடு எடுத்துரைக்கலாம். ஆசிரியர் தமது தாயைத் தமது வழிபடும் கடவுளாகக் கொண்டு விளக்கலாம். தாம் உணர்ச்சியோடு தாய்மையைப் பற்றியும் தாயன்பைப் பற்றியும் தாயே முதற்கடவுள் என்றும் தந்தை, தாயோடு கலந்த கடவுளென்றும், அன்னேயும் பிதாவும் முன்னறி தெய்வமென்றும் ஒவ்வோர் ஆண்மகனும் கடவுளின் ஆண் வடிவமென்றும், பெண்மகள் கடவுளின் பெண் வடிவமென்றும் எடுத்துக்கூறி ஆண் பெண் உறவின் பண்பாட்டினை ஆர்வத்தோடு விளக்கலாம்.

ஆணும் பெண்ணும் முதிர்வுப் பருவம் எய்தும் நிலேயில் அவர்கள் முதிர்ச்சியின் அடையாளங்கள் இயற்கையோடிணைந்தவை என உணர்த்தி அவர்கள் அடையும் மாறுதல்கள் இயற்கையின் பாற் பட்டவை என்றும், வளர்ச்சியின் குறிகளென்றும் பொதுப்படப் பெற்ருேர்களும் அவர்கள் தவறிஞல் ஆசிரியர்களும் விளக்குதல் முறையாகும். முதிர்வுப் பருவத்தின் அடையாளங்களேப்பற்றி அறிந்துகொள்ளாத பிள்ளேகள் அவற்றைப்பற்றியே சிந்தனே செய்து பாலுண்ர்ச்சியை உண்டாக்கிக்கொண்டு தவறுகளில் இறங்கிவிடுவார்கள். அவர்கள் அடைந்த முதிர்வுப் பருவம் அவர்களுக்குப் புதிய பொறுப்புக்களே உண்டாக்கியுள்ளது என்று உணர்த்துதல் வேண்டும். ஆண் காளேப்

பருவத்தையும், பெண் மங்கைப் பருவத்தையும் எய்துவது வாழ்க்கையின் திருப்பமென்றும், பொறுப்பும் கடமையும் உள்ள வாழ்வின் தொடக்கமென்றும் அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது. இரு பாலருக்கும் குமரப்பருவம் மிக்க இடர்ப்பாடுள்ளது. அப்பருவத்தில் தாயரும் தந்தையரும் ஆசிரியன்மார்களும் இருபாலர்களையும் மிக்க விழிப்போடு கண்காணிக்க வேண்டும். பிள்ளைகள் தம்மைப்பற்றி அதிகமாக நினைத்துக்கொள்ளும் பருவம் அது. கோபம், வஞ்சகம், வஞ்சினம் ஆகியவற்றோடு மற்றும் பெருமிதம், பாலுணர்ச்சி, தான் தொடங்காற்றல் ஆகியவையும் உடனடியாக நிகழாநிற்கும். இவற்றை எல்லாம் அறிந்து ஒவ்வொரு பிள்ளையின் உட்பாட்டினைச் சரிப்படுத்தி நல் வழியில் திருப்புவது பெருங்கடமையாகும்.

பெற்றோர்கள் கல்வியறிவு இல்லாதவர்களாயின் பால்வகைக் கல்வியின் பொறுப்பு பள்ளியைச் சார்ந்தது. பால்வகைக் கல்விக்கென்று ஓர் அகவையை ஒதுக்குவதன்று பள்ளியின் பொறுப்பு. அது பள்ளியின் நடைமுறையில் இடம் பெறுதல் வேண்டும். பள்ளிப் பாடங்கள் சில பால்வகைக் கல்விக்கு இடந்தரக்கூடியவை. அதனதன் சந்தர்ப்பங்களில் பல கருத்துக்களைப் பாடங்களின் பெயரால் நன்றாக விளக்கலாம். உயிரியல், சமூக அறிவியல், [1] பயிரியல், [2] விலங்கியல், இலக்கியம் ஆகியவை எல்லாம் பால்வகைத் தத்துவங்களை உணர்த்தக்கூடிய சந்தர்ப்பங்களை அளிக்கின்றன. விலங்கு நூல்களின் வழியாக இயற்கையின் படைப்புப் பணியை விளக்கி விலங்கினங்களுக்கும் ஆறறிவு படைத்த மனித இனத்துக்கும் வேறுபாடுள்ள அறிவு நெறியை உணர்த்துதல் சாலச் சிறந்தது. விளக்குங்கால் இடக்கரடக்கலாகப் பேசி ஐயங்களை அதிகப்படுத்தி விடக்கூடாது. குமரப் பருவம் எய்துவதற்கு முன் பால்வகை ஒழுக்கங்களைப் பாங்குற உணர்த்துவது முதியோர்களுடைய கடமையாகும். பால்வகைப் புத்தகங்களைப் பிள்ளைகள் மறைவாகப் படிப்பது வழக்கம். அவை பாலுணர்வினைத் தூண்டாது பால் அறிவினை உணர்த்துவதாயின் நலம். அத்தகைய புத்தகங்களைப் பிற புத்தகங்களைப் போல் வெளிப்படையாகப் படிப்பது குற்றமில்லை. தாய்மொழியில் உள்ள நல்லிலக்கியங்கள் சில பால்வகைக் கல்வியைப் பண்பாட்டின் அடிப்படையில் அளிப்பவை. மதச் சார்புற்ற நூல்களும் பாலுறவின் அறப்பண்பினை உணர்த்தக் கூடியவை. அத்தகைய நூல்களை ஆசிரியர் பயன்படுத்தி அவற்றின் விளக்கங்களை நடைமுறை ஒழுக்கங்களாக உணர்த்தவேண்டும். திரைப்படத் துண்டுகள் வழியாகப் பல விளக்கங்களைக் கூறலாம். ஆனால் அவை பாலுணர்வினைத் தூண்டுதல் கூடாது. நமது நகரங்களிலும் பட்டணங்களிலும் நடைபெறும் சுகாதாரக் கண்காட்சிகளில் இவற்றோரன்ன படங்களைத் திரைகளில் விடுத்து விளக்கங்களைக் கூறுகின்றார்கள்.

1. Botany 2. Zoology

பால்வகை இயல்பூக்கங்கள் இயல்பானவை என்று கூருமலே விளங்கும். அவற்றினை நல்வழியில் நாட்டமுறச் செய்வது பெற்ருேரும், ஆசிரியரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய கடமையாகும். சிறு குழந்தைகள் தமது குறிகளில் கை வைக்கும்போது காணும் பெற்ருேர்கள் அவர்களுக்குக் கையில் விளையாட்டுப் பொருள்களைக் கொடுத்துத் திருப்பிவிடுவார்கள். ஏழு முதல் பத்து வயது வரை பாலுணர்வுகள் ஏற்படுவதையும் கண்காணித்துத் திருப்பங்கள் அளித்தல் வேண்டும். பதின்மூன்று வயது வரையில் இருபாலர்களும் ஒருவரோடொருவர் கூடி விளையாடுங்கால் பெரும்பான்மை பாலுணர்வால் உந்தப் பெறுவதில்லை. பதின் மூன்று வயதுக்குப் பின்னர் தத்தமக்குரிய குறிகளில் அமைப்பு வேறுபாடுகளாலும், உள்ளுணர்வுகளாலும் ஒரோவழி தத்தமது மேம்பாட்டினை அறிவிக்கும்படி நடந்து கொள்ளுவார்கள். அப்பருவத்தில் அவரவர் பாலுக்குரிய அவர்களுக்கு விருப்பமுள்ளவர்களைத் தமக்கு எடுத்துக்காட்டாகக் கொண்டு இயங்குவது இயல்பு. இப்பருவத்தில் அவர்கள் நேரம் முழுவதும் பயன்படும் வண்ணம் பல ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்தி அவர்களுடைய உடல் உழைப்பையும், உள்ளத்தின் உள்ளுதலேயும் கல்வி கேள்வித் துறைகளில் திருப்பி அதனதன் குறிக்கோள்களை எய்துமாறு ஊக்கமளித்துவிடுதல் நன்று. பெண்பாலர்களைக் காட்டிலும் ஆண்பாலர்களை அடக்கித் திருப்புவது மிகக் கடினம். அவர்களைக் கண்காணித்துத் தீய பழக்கங்கள் உள்ளவராகக் காணப்படின் அவற்றின் விளைவுகளை நேர்முகமாகக் கூறித் திருத்த வேண்டியது கடமை. இருபதாவது வயதில் பாலுணர்வுகள் மீதூர்கின்றன. இப்பருவத்திலும் வாழ்க்கைப் பாதைகளைப் பெரியவர்கள் வகுத்தளித்து அவற்றின் குறிக்கோள்களையும் எதிர்காலப் பயன்களையும் பல எடுத்துக்காட்டுகளின் வழியாகப் பெற்ருேர்கள் உணர்த்துவர்களேயாயின் இருபாலரும் இடர்ப்பாடுருது, உற்ற காலத்தில் மணக்கோலம் காண்பர். பிரம்மச்சரியத்தின் இலக்கணங்களை நன்ருக அறிவுறுத்த வேண்டியது ஆசிரியரின் கடமை. நம் நாட்டில் திரைப்படங்கள் மல்கிவிட்டன. அவற்ருல் இளைஞர்களுடைய உள்ளங்கள் தீய வழிகளில் ஈர்க்கப் பெறுகின்றன என்று கருதுகின்ருர்கள். இஃது மறுக்கப்படாத கருத்தாகும். இளம்பிள்ளைகளுடைய பிஞ்சு உள்ளங்களிற் காட்சியின் வெளிப்படைப் பாலுணர்வுகள் பாய்ந்து அவர்களுடைய உட்பாட்டினைச் சிதைத்து விடுகின்றன. அதனுல் பிள்ளைகள் பலர் பிஞ்சியில் பழுத்தோர்களாகக் காட்சி அளிப்பது கண்கூடு. வயதுக்கு ஏற்ற படங்கள் வரவேற்கத் தக்கவை. இத்தகைய படங்கள் இல்லற வாழ்க்கையினருக்கு ஒரோவழி உடன்பாடாகும். ஆனுல் வளரும் பருவத்தே தீய நாட்டங்களை உந்தக்கூடிய உணர்வுகள் உருவண்ணம் பிள்ளைகளுடைய வளர்ச்சிகளைக் காக்கவேண்டியது பெரியோருடைய பெருங் கடமையாகும். மேலை நாடுகளில் முதியவர்களுக்குள்ள படங்களை இளைஞர்கள் பார்க்கக் கூடாதபடி தடுப்புச் சட்டங்கள் உண்டு. அத்தகைய தடுப்பு முறைகள் நமது நாட்டுக்கும் வேண்டற்

பாலவை. இளைஞர்களுக்குரிய திரைப்படங்கள் உடலோம்பல், உடற் கட்டு, உடற்பயிற்சி, பலவகை வீரதீரச் செயல்கள், ஆண்மைக் காட்சி கள், உலகப் பெரியார்களின் உழைப்புக்கள், அவர்களுடைய குறிக் கோள்கள், அவர்கள் சாதித்தவை ஆகியவற்றைப் போன்ற திரைப் படங்கள் வளரும் பிள்ளைகளுக்குப் புத்துணர்ச்சிகள் உண்டாக்குபவை. பிள்ளைகளிடையே போட்டி மனப்பான்மை, விளையாட்டுக்களிலும் படிப் பிலும் போட்டி, நாள் முழுவதும் உழைப்பது, உடல் வழியாயினும் உள்ள வழியாயினும் இயங்கிக்கொண்டே இருத்தல் ஆகியவை பிள்ளை களை மிடியுறுதவாறு அவர்களுடைய உள்ளம் பாலுணர்வில் படியாத வாறு காத்துப் பல குறிக்கோள்களை உண்டாக்கும். வளரும் பிள்ளை களுக்கு உடல் வன்மையும் உள்ளத்தில் ஊக்கமும் உண்டு. அவை இரண்டையும் முதலாக்கி அவற்ருல் பெறக்கூடிய பயனை அவர்களுக்கு நல்குதல் நன்று. கல்வி வழி, சமூகப் பணி வழி, தனது வெற்றியில் திளைப்பு, படைப்பாற்றல், கலைகளில் பயிற்சி ஆகியவற்ருல் பாலுணர் வினைப் பக்குவப்படுத்த இயலும். இல்லங்களின் ஒழுங்கு முறைகள் சிறந்த ஒழுக்கங்களை உண்டுபண்ணக் கூடியவை. பெற்ருேர்கள் பிள்ளைகள் மீதுள்ள அன்புப் பெருக்கத்தை அளவுக்கு மீறி வெளிக் காட்டாது உள்ளத்தில் அடக்கிப் பிள்ளைகளுடைய ஒழுக்கத்தைக் கட்டுப்பாட்டோடு வற்புறுத்தவேண்டும்.

22. [1]தலைமைப் பயிற்சிக் கல்வி

தலைமை ஏற்பது பல நிலைகளுக்கு உரித்தானது. அந்தந்த நிலைக் கேற்பப் பொறுப்பாற்றுவது அதன் பணியாகும். மக்களாட்சியில் தலைமை ஏற்பதென்பது ஒவ்வொருவரும் அவரவர்கள் திறமைக்கேற்பத் தலைமை ஏற்கும் பழக்கம் பெறுவதாகும். சில ஆண்டுகளுக்கு முன் ஒரு சிலரே தலைமை ஏற்கக்கூடிய பழக்கத்திற்கு உரியவரானார்கள். ஆனால் இன்று மக்களாட்சிப் பள்ளிகளில் அங்ஙனம் பிள்ளைகளைப் பொறுக்கி எடுத்தல் தவறாகக் கருதப்படுகிறது. எல்லாப் பிள்ளைகளுக் கும் அவரவர்களுடைய ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிப்படுத்த உதவுவதே கல்விப் பொறுப்பாகின்றது. தொடக்கநிலை முதல் உயர்நிலை வரை தலைமைப் பண்பாடுகளை உரிமையாக்கிப் பழக்கப்படுத்துவதே பள்ளிப் பொறுப்பாகின்றது. மக்களாட்சியில் நல்ல தலைமை வேண்டற் பாலது. அதற்கேற்ற அறிவும் அனுபவமும் எல்லோருக்கும் உரித்தா கின்றன. ஆசிரியர்கள் அதற்குரிய பண்பாடுகளில் தாம் பயிற்சி பெற் றிருந்தாலன்றி அவர்கள் அவற்றை நல்ல முறையில் நல்கமாட்டார்கள். தலைமை என்றால் கட்டளை இடுவதென்றும் அடக்குமுறை என்றும் பழங் கருத்துக்கள் விட்டபாடில்லை. [2]தலைமை ஏற்குமுன் பணிவினைக் கற்றும் பழகியும் கட்டுக்கடங்கி நடந்தும் பண்பட்டாலன்றி மக்களாட்சித் தலை மைக்குத் தகுதி பெற முடியாது. ஆசிரியர்களும் அடக்குமுறையில் ஆட்சி செலுத்தாது அன்பு முறையில் நடந்துகொள்ள வேண்டியது கடமையாகிறது. எனவே மக்களாட்சிப்பள்ளி பிள்ளைகள் தலைமை ஏற்பதற்குப் பல வழிகளை அளிக்கவல்லது. எல்லாப் பிள்ளைகளுக்கும் வேறுபாடின்றித் தலைமை அனுபவம் பெறுவதற்கு வாய்ப்பு அளித்தல் வேண்டும். தலைமைப் பதவி வகிக்கும் முறைகளிலும் படிக்க வேண் டும். பள்ளிப் பணிகள் பல. செயற்பாடுகள் பலப்பல. எனவே ஒவ் வொரு பணிக்கும் தலைமைப் பணியாற்றும் வாய்ப்புக்கள் உள்ளன. வகுப்பறையில் பிள்ளைகள் நன்றாக வாய்விட்டு ஒருவரோடொருவர் உசாவியும் பேசியும் தமக்குள் பல சிக்கல்களை விவாதிக்கலாம். ஒவ் வொரு செயலுக்கும் திட்டமிடுவது, திட்ட உறுப்பினர்களைத் தேர்ந் தெடுத்து வட்டமேசைக் கூட்டம் கூடுவது ஒன்றுபட்ட செயல்முறை களை வகுத்தல் மற்றும் மாணவர் கழகக் கூட்டம், தன்னாட்சித் திட் டம், இசை, நாடகம், விளையாட்டுக் குழுக்கள், சமூகநிலை ஆராய்ச்சி, சமூகத்தொண்டு இன்னோரன்ன பல வாய்ப்புக்கள் பள்ளியில் உள்ளன. இவை யாவும் எல்லாப் பிள்ளைகளுக்கும் பல அனுபவங்களைத் தரக்கூடி

---

1. Education for leadership 2. To learn obeying is the fundamental art of governing

யவை. ஒவ்வொன்றிற்கும் தலைமை ஏற்கும் வாய்ப்பும் உண்டு. இவற்றை எங்ஙனம் எல்லாப் பிள்ளைகளுக்கும் அளிப்பதென்பதை ஆராய்ந்தறிதல் ஆசிரியர்களின் கடமையாகும். எல்லாப் பிள்ளைகளுக்கும் வாய்ப்பளிப்பதென்றால் ஒவ்வொரு பணியாற்றவும் மாணவருக்குள் ஒரு சுற்றுகிலும் வாய்ப்பளிக்க வேண்டும். அதிகமாக வாய்விட்டுப் பேசும் மாணவர்களைச் செயலாற்றும் பணிகளில் திருப்ப வேண்டும். இயற்கையாகச் சின மிக்க பிள்ளைகளைத் தனித்து ஆக்க வேலையில் திருப்பவேண்டும். நன்றாகக் கலவாத பிள்ளைகளைக் குழுக்களில் இணைத்துவிட்டு அவர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டவேண்டும். குழுக்களும் மாறிமாறிப் பல பணிகளை ஆற்றிப் பழக்கம் பெறுதல் நன்று. உறுப்பேற்கும் பிள்ளைகளையும் குழுக்கள்தோறும் மாற்றிக் கொண்டே இருக்கவேண்டும். பல திறன்களில் பழக்கம் பெறும் பிள்ளைகள் ஊக்கம் பெற்று அச்சம் தவிர்த்து ஆளுமையை வளர்த்துக் கொள்ளுவார்கள்.

மக்களாட்சித் தலைமையின் பண்பினை உயர்நிலைப் பள்ளியை விடுவதற்கு முன் மாணவர் நன்கு அறியவேண்டும். அவற்றை அறிவதோடு தாமே பயிற்சி பெற்றிருக்கவும் வேண்டும். தலைமை ஏற்கும் பழக்கத்தில் தலைமையைப் பின்பற்றும் ஒழுக்கமும் வேண்டும். ஆசிரியர்கள் இவ்விரண்டிலும் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். மக்களாட்சியில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பொறுப்புண்டு. ஆட்சியாளர் தமது தன்னலத்தையாவது அல்லது தமது அனுபவத்தையாவது வற்புறுத்தல் கூடாது. எல்லாப் பணிகளிலும் தலைமை ஏற்பார் பிறர் கருத்துக்களுக்குச் செவி சாய்த்தலோடு யாரும் தம்மை அணுகிப் பேசுவதற்கும் வாய்ப்பளிக்கவேண்டும். தலைமை ஏற்றாலும் அல்லது ஆட்சி மேடையில் அமர்ந்தாலும் பல உறுப்பினரோடு ஒன்றி ஒருமைப்பாட்டுடன் நன்மையைக் கடைப்பிடிப்பதே நன்று.

உயர்நிலைக் கல்வித் திட்டத்தில் தலைமை ஏற்பு இன்றியமையாதது. ஆதாரக் கல்வியின் அடிப்படையில் வளர்ச்சியுறும் பிள்ளைகள் பல திறன்களை வளர்த்துக்கொள்ளுவதோடு பல சமூகப் பண்பாடுகளிலும் பயிற்சி பெறுகிறார்கள். ஆதாரக்கல்விச் சார்புற்ற உயர்நிலைப் பள்ளிகள் நமது மாநிலத்தில் இரண்டு மூன்று தவிர வேறு இல்லாததால் ஆதாரக் கல்விச் சார்பற்ற உயர்நிலைப் பள்ளிகளில் அப்பயிற்சிகள் தொடருமாறு திட்டமிடவேண்டும். இவையன்றிக் கல்லூரிக்கு வேண்டிய தாமாகவே நூல்களைப் படிக்கும் பழக்கத்தையும் தொடங்குதல் வேண்டும். கல்லூரிக்குச் செல்லாத மாணவர்கள் பள்ளி இறுதித் தேர்வோடு நின்று விடுவார்களானால் அவர்கள் சமூகத்தில் பல பணிகளைத் திறமையோடு ஆற்றுவதற்கு அவர்களுக்கு வேண்டிய பயிற்சி உயர்நிலைப் பள்ளி அளித்து உதவவேண்டும். நமது நாட்டில் பத்துக்கும் குறைந்த சதவீதமே உயர்நிலைப் பள்ளியிலிருந்து கல்லூரிக்குச் செல்லுகிறார்கள். ஆனால் அமெரிக்கா நாட்டில் ஐம்பது சதவீதம் கல்லூரிக்குச் செல்லு

கிருர்கள். எனவே நூற்றுக்குத் தொண்ணூறுக்கு மேல் உயர்நிலே யோடு நின்றுவிடுவதால் ஒரு [1] நடுத்தரமான தலைமை வகிப்ப தற்கு வேண்டிய பொறுப்பாற்றும் திறன்களைப் பள்ளிகள் அளிக்க வேண்டியது கடமை. தொடக்க நிலையில் பிள்ளைகள் கட்டுக்கடங்கும் பழக்கத்தினைப் பெறவேண்டும். கல்லூரி நிலையில் பெருந் தலைமைப் பதவிகளுக்கு வேண்டிய பயிற்சிகள் பெறுகிருர்கள். அதனுல் உயர் நிலைப்பள்ளிப் பருவத்தில் சமூகம், அரசியல், கைத்தொழில், பண்பாடு ஆகிய பிரிவுகளில் நடுத்தரத் தலைமை ஏற்கப் பயிற்சியளிக்க வேண் டும். இதனுல் தொடக்க நிலையில் பயிலும் மாணவர்கள் தலைமை ஏற்பதற்குத் தகுதியற்றவர்கள் என்று கருதுவதற்கில்லை. பெருந் தொகுதியினராகிய மக்களிலிருந்து தலைவர்கள் தோன்றுவதுண்டு. அரசியல், சமூகம் ஆகிய இரு துறைகளிலும் அத்தகைய தலைவர்கள் தோன்றியுள்ளார்கள். ஆனுல் வாணிபம், கல்வி முதலிய பெரும் பதவிகளுக்குத் தலைமை ஏற்கக் கல்வி கேள்விகளில் சிறந்தவ ராக இருத்தல் நன்று. உயர்நிலைப் பள்ளிகள் இத்தகைய தலை மைக்கு வேண்டிய சூழ்நிலையை அளித்து உதவுதல் நன்று. தொழிற் கல்வி ஆட்சிமுறைக் கல்வி ஆகியவற்றில் தரங்குறையாத தகுதி நலன் களைப் பெறுமாறு அவர்கள் பயிற்சி பெறுவதற்குப் போதிய வாய்ப் புக்கள் வேண்டற்பாலவை. பெரும்பான்மை உயர்நிலைக் கட்டத்தைக் கடந்த பிள்ளைகள் ஒன்றுக்கும் உதவாதவர்களாகத் தம்மைக் கருதிக் கொள்ளுகிருர்கள். அவர்கள் நிலைமையும் அதுவாதல் காண்க. எனவே அவர்களுக்குப் போதிய வாய்ப்புக்கள் அளிக்கவேண்டும். தொடக்கநிலைக் கல்வியோடு பள்ளியை விடுபவர்களுக்குத் தலைமைப் பதவி வேண்டுவதில்லை என்று கருதுதல் தவருகும். மக்களாட்சி உயர் நிலையில் நடைபெற்ருல் தலைவர்கள் பெரும்பாலும் பொதுமக்கள் கூட் டத்திலிருந்து திரளுவார்கள். தலைமை என்பதற்கு அரசியலில் தலைமை என்று கொள்ளுதல் கூடாது. கல்வியில் மேம்பாடுடையவர் களாகவும் நாட்டுக்கு நன்மை நல்கக்கூடிய ஒரு துறையில் சிறந்தவர் களாகவும் சமூக ஒருமைப்பாட்டுக் குணங்களை அறிந்தவர்களாகவும் இருத்தலே நல்ல தலைமைத் தகுதிகளாம். இவற்றினை உயர்நிலைப் பள்ளிகள் பெரிதும் அளிக்கக் கடமைப்பட்டவை. குடிமை, தொழில் திறமை இவை இரண்டுக்கும் அடிப்படையாக அமைய வேண்டிய நன்மைகள் ஆகியவை உயர்நிலைக் கல்வியின் பொறுப்பாகி விட்டால் நாட்டு வாழ்க்கை வளமாகிவிடும். அன்றி உயர்நிலைப் பள்ளியை விடும் இளைஞர்கள் பிழைக்க வழியற்று மனம்போன போக்கெல்லாம் சிதறுண்டு தாம் என்ன செய்வதென்று அறியாது சிலர் கல்லூரிகளை நாடியும் சிலர் வேலையைத் தேடியும் பலர் வேலை கிடைக்காது திண் டாடித் தெருவில் நின்றும் காட்சியளித்தல் கண்கூடு. ஐந்தாண்டுத்

1. Junior leadership

திட்ட வளத்தால் தொழிற் கல்வி பெற்றுள்ளவர்களுக்கு எங்கும் பரபரப் போடு வேலைகள் கிட்டுகின்றன. மற்றவர்கள் வாழ வழியின்றித் தயக்கம் பெறுகின்றனர். ஆயினும் இப்போது தொடங்கப் பெறும் பல்நோக்குப் பள்ளிகள் நமது மாணவர்களுக்குப் பல வாய்ப்புக்களை அளித்துப் பல துறைகளில் நன்மை அளிக்குமென எதிர்பார்க்கலாம்.

தலைமை ஏற்பவர்களுள் பெருந்தலைமை ஏற்பவர்களும் அதற்குத் தகுதியுள்ளவர்களும் ஒரு சிலரே ஆவர். அத்தகையோர் நமது நேரு, பாதுகாப்பு அமைச்சர் முதலியவர்களைப் போன்றவர்கள். அத்தகை யோருடைய பெயரும் புகழும் நம்நாட்டுக்கு அப்பாற்பட்டவை. அவர் கள் கருவிலேயே திருவினைப் பெற்றவர்கள் எனக் கருதுவது மிகை யாகாது. இரண்டாவது தரமாக நாடு முழுவதும் பெயர் பெற்றவர்கள் நாட்டுத் தலைவர்களாக மதிக்கப்படுகின்றார்கள். ஒவ்வொரு மாநிலத் திலும் தலைவர்கள் உள்ளார்கள். இவர் வெறும் அரசியற்றலைவர்கள். அமைச்சர்கள் மட்டுமல்லர். பல தொழில் துறைகளில் வல்லுநர்கள் உள்ளார்கள். அவர்கள் ஏற்கும் தலைமை வேறு தலைமைகளுக்குக் குறை வுற்றதன்று. ஒவ்வொரு மாவட்டத்திலும் நகரங்களிலும் கிராமங்களி லும் தலைவர்கள் கிளம்புகிறார்கள். செல்வர்கள் செல்வ வளத்தால் தலைமையைத் தேடுகிறார்கள். அறிவு வளத்தாலும் குணச்சிறப்பாலும் தலைமை பலரை நாடுகின்றது. மக்கள் குரல் தலைவரைத் தோற்றுவிக் கிறது. பல தகுதிகளோடு தலைமைப் பொறுப்பை ஏற்கவேண்டுமாயின் அதற்கு வித்திடவேண்டியது பள்ளியின் கடமை. கல்லூரிக் கல்விதான் தலைமைப் பண்பாடுகளை அளிக்கவல்லது, கல்லூரிக் கல்வி பெற்ற வர்கள்தான் தலைமை ஏற்க வல்லவர்கள் என்ற கருத்துக்கள் மிகப் பழமையானவை.

ஆனால் மக்களாட்சி எல்லோருக்கும் ஆக்கம் அளிக்கக்கூடியது. நல்லவர்களைத் தேடக்கூடியது. மக்கள் தமது தகுதிக்கு ஏற்ற படி மட்டுமே தமது தலைவர்களைப் பெறுவார்கள். தகுதியுள்ள தலைவர் களை உண்டாக்குவதும் அவர்கள் பணியாற்றச் சூழ்நிலையைத்தருவதும் மக்கள் நிலையே ஆகும். எனவே மக்களாட்சிக் கல்வி தலைசிறந்து அமைய வேண்டியது கடமை. அத்தகைய கல்வி தலைமை வளர்ச்சிக் கும் வித்திடுதல் வேண்டும்.

தலைமை ஏற்கக் கல்வி உடல், அறிவு, பண்பாடு ஒவ்வொன்றும் தனிமுறையில் பயிற்சியளிக்கப்பெற்று அவை ஆளுமையை ஒருங்கே வளர்க்கக்கூடியதாக அமையவேண்டும். உடல் நன்றாக அமைந்தாலன்றி அறிவு வளர்ச்சி உண்டாகாது. அறிவு வளர்ந்தாலன்றி அறவழி நிற்க இயலாது. இம்மூன்றும் ஒன்றையொன்று சார்ந்தவையாகும். பள்ளி களில் பாடப் புறச்செயல்களினால் பிள்ளைகளின் பலதிறப்பட்ட வளர்ச்சி கள் உண்டாகின்றன. இன்றுள்ள கல்வி பரந்த நோக்குப் பாட ஏற் பாட்டினையும் பாடப் புறச்செயல்களையும் ஒருங்கே கொண்டது. இதன் திட்டத்தில் வளரும் பிள்ளைகள் எண்ணும் ஆற்றலைப் பெறுவார்கள்.

மக்களாட்சியில் பள்ளிச் செயற்பாடுகள் எவையாயினும் அவை ஒவ்வொன்றும் பிள்ளைகளின் சிந்தனையைத் தட்டி எழுப்பித் தமக்குத் தாமே சிந்திக்கக்கூடிய ஆற்றலை அளித்துதவ வேண்டும். பலர் சொல்லுவதைக் கேட்டாலும் தாம் கேட்பதைத் தமது அறிவோடு சேர்த்து ஆழ்ந்து சிந்தனை செய்தல் வேண்டும். ஐயமேற்பட்டால் தாம் நேர்முகமாகக் கண்டு அறியவேண்டும். பிறர் சூழ்ச்சிகளுக்கு இடங் கொடாமலும் மற்றவர் பேச்சுக்களை உண்மையென்று நம்பாமலும் தமதறிவைக்கொண்டு நடந்துகொள்ளும் பிள்ளைகள் வளர்ந்தாலன்றித் தலைமைப் பொறுப்பை ஏற்க இயலாது. பலர் கருத்தினை இருவர் மூவர் மறுத்தால் சிறுபான்மையோர் கூறுவது உண்மை என்று அறியப்பெற்றால் அவர்களிடையே உண்மையைத்தான் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் பெரும்பான்மையோர் கூறுவது சரியென்று சாய்தல் அடிமைத்தனமென்றும் ஓர் ஆங்கிலப் பழமொழியுளது. எனவே உண்மையை நாடுவதே அறிஞனுக்கு அடையாளம். உண்மையைக் கடைப்பிடிப்பவனே நன்மையைக் கடைப்பிடிப்பவனாவான். நன்மையைக் கடைப்பிடிப்பவனே நல்ல குடிமகனாவான். நன்மையைக் கடைப்பிடிப்பவன் தன்னலம் கருதமாட்டான். எனவே தமக்கென வாழாது பிறர்க்குரியராக இசைபட வாழப் பழகிக் கொள்ளுபவர்களே தலைமை ஏற்கத் தக்கார் ஆவர். அத்தகையோரை ஈந்துள்ளது இவ்வுலகம். அவர்கள் பெருங்கல்வி பெற்றவர்கள் அல்லர். பெரும்பள்ளிகளில் படிப்பவர்களுமல்லர். சிறு குடில்களில் பிறந்தவர்கள். சிறிய பள்ளிகளில் படித்தவர்கள். அவர்களுடைய ஆசிரியர்கள் பெரும் பட்டதாரிகளல்லர். ஆனால் அறிவுசான்றவர்கள். நன்மை தீமை அறிந்தவர்கள். அவர்கள் உள்ளத்தில் இளமையில் இட்ட வித்துக்கள் அவர்களைப் பெரியவர்களாக்கின.

23. [1]பால் பகாக் கல்வி

ஆண், பெண் இருபாலர்களும் ஒன்றாகக் கல்வி நிலையங்களில் மாணவர்களாகப் படித்தலைப்பற்றிய கருத்துக்கள் பல. இருபாலரும் பால் பகாப் பள்ளிகளில் ஒரே உரிமையோடு பள்ளிப் பணிகளில் பங்கு கொண்டு ஒரே சமூகமாகப் பள்ளி வாழ்க்கை நடத்துதல் இயல்பு. பெரும்பான்மை ஆண்பாலர் பள்ளிகளில் பெண்களைச் சேர்த்துக் கல்வி கற்பித்தற்குத் தனி வகுப்பாகவும், கலப்பு வகுப்பாகவும் நடத்துவதும் உண்டு. பள்ளிப் பொறுப்பாளர்கள் இருபாலர்களையும் அத்தகையப் பள்ளிகளில் பிரித்து ஒருவிதத் தொடர்பின்றிக் கண்காணித்து வருவதும் உண்டு. சம வெப்ப நாடுகளிலும், குளிர் சூழ்ந்த நாடுகளிலும், பால் பகாக் கல்வி பிள்ளைகளுடைய நன்மைக்கும், சமூகப் பண்பாட்டிற்கும் உதவுவதாகப் பெருமிதம் பேசுகிறார்கள். அதனால் விரும்பத்தக்க கல்விப் பயன்களும் கூடுவதாகக் கூறுகிறார்கள். அமெரிக்காவில் சம உரிமையோடு கல்வி பயிலுகிறார்கள். அத்தகைய உரிமை குடியாட்சிக்கு நன்மை பயக்கின்றதாம். ஐரோப்பிய நாடுகளிலும், இங்கிலாந்திலுங்கூட இங்ஙனம் பால் பகுப்பற்ற கல்வி நிலையங்கள் நன்மையே பயக்கின்றனவாம். இதனால் இருபாலருக்கிடையே சம உரிமைப் பண்பாடுகளும், சமூக இணக்கமும், எழுச்சி இசைந்த உட்பாடும் ஏற்படுகின்றனவாம். மேலை நாடுகளைப் பின்பற்றி நம் நாட்டிலுங்கூட இருபாலருக்கிடையே அத்தகைய நற்பயனை நம் நாடும் பெறுவதற்குப் பலர் ஆண் பெண் இணை முறைக் கல்வி நிலையங்களை விரும்புகிறார்கள். ஆனால் பலர் ஆண் பெண் கலந்த பள்ளிகளை விரும்புவதில்லை. அவற்றால் உறும் பயன் தீமையே என்று கருதுகிறார்கள்.

நம் நாட்டில் பொருளாதாரக் காரணத்தால் இரு பாலர்களுக்கும் வெவ்வேறு பள்ளிகள் அமைக்க இயலாத நிலையில் நகர்ப்புறங்களில் இருவரும் கலந்த பள்ளிகளைத்தான் அமைக்க முடிகின்றது. நாட்டுப் புறங்களில் படிக்கும் பெண்கள் மிகக் குறைவு. அதனால் அவர்களுக்குத் தனிப் பள்ளிகள் ஏற்படுத்துவது வீண் செலவாகையால் ஆண் பள்ளியிலேயே பெண்களைச் சேர்க்கின்றார்கள். சில பகுதிகளில் ஆண்களுங்கூட சிறுபான்மையினரே. அத்தகைய இடங்களில் இருபாலருக்கும் தனித்த பள்ளிகள் வேண்டியதில்லை. ஆங்கு இருபாலரையும் ஒன்றாகச் சேர்த்து நல்லதொரு சூழ்நிலையை உண்டாக்கி அவர்கள் நல்ல முறையில் வளர்ச்சி பெறுவதற்கும், பண்புள்ள நாட்டங்களோடு உறவாடுவதற்கும் வழி வகுத்தல் நல்லது. இருபாலரும் ஒருவரை

---

1. Co-education

யொருவர் பண்புற்ற முறையில் அறிந்துகொள்ளவும், அமைவோடு உறவாடப் பழகவும், ஒருவரையொருவர் மதித்துத் தன்மதிப்போடு அளவளாவவும் வாய்ப்பு அமையுமேல் இடர்ப்பாடுகள் நிகழா. இளமையிலிருந்து நட்புக்கொண்டு வளர்ந்தால் அவர்களுக்குள் சிக்கல்கள் பெரிய பருவத்தே உண்டாகா. பற்றற்றுப் பழகுவதாலும், ஒரே குறிக்கோளோடு ஒத்துழைப்பதாலும் போட்டி மனப்பான்மை உந்துவதாலும் அவர்கள் இயல்பாகக் கல்வி வழியில் ஊர்ந்து செல்வார்கள். ஆண் பாலர்கள் இயற்கையாக வன்மை மேலீட்டால் சில வேளைகளில் அநாகரிகமாக நடந்துகொள்ளும் வழக்கம் நீங்கி பெண்பாலர்களிடையே பழகுவதால் மென்மை பெற்று விளங்குவார்கள். அவர்கள் நடையுடை பாவனைகளில் உயர்வு காணப்படும். அதுவன்றி வகுப்பறைகளிலும் தங்கள் மதிப்புக் குறையாமல் நடந்துகொள்ள முற்படுவார்கள். பெண்களும் ஆண்கள் கூட்டத்தில் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவற்றோடு நடந்துகொள்ளப் பழகிக்கொள்ளுவார்கள். பெண் தன் மதிப்பைக் காத்துக்கொள்ளுவாள். ஆண், பெண்ணோடு நடந்துகொள்ளும் பக்குவத்தை அறிந்து கொள்ளுவான். பொது மக்கள் பால் பகாப் பள்ளிகளைக் கண்காணித்த வண்ணமாக இருப்பார்களாகையால் ஆசிரியர்கள் அச்சத்தோடு நடந்து கொள்ளுவார்கள். அதனால் ஒழுங்கு பொது நிலையில் வளர ஏதுவாகும். இரு பாலர்களையும் பிரித்துப் பெண்பாலரை மறைத்து வைத்தால் பால் வகைச் சிக்கல்கள் உண்டாகிக் கேளிக்கைகளும் எதிர்ப்புக்களும் உருவெடுக்கும். அன்றி எதிர்பாராத இன்னல்களும் உண்டாகலாம். கூடிப் பழகினால் பால் வகை உணர்ச்சிகள் பற்றற்ற நிலையில் பாங்கு பெற்றுத் தன் மதிப்பினை வளர்க்க உதவும். மற்றும் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் அதிக அக்கறையோடும், பொறுமையோடும், உழைப்போடும் படிப்பார்களாகையால் அவர்களுக்குப் போட்டியாக ஆண்களும் தமது களியாட்டங்களை விட்டுப் பாடங்களை நன்றாகப் படித்து அவர்களை மிஞ்சுவதற்கு முயலுவார்கள். பெண்பாலர்கள் சில பாடங்களாகிய மொழி, இசை ஆகியவற்றில் மீத்திறம் பெறுவது இயற்கை. அங்ஙனமே ஆண்களும் சில பருக்கலைகள், கணிதம், இரசாயனம் முதலிய பாடங்களில் மீத்திறம் பெறுவதுண்டு. இங்ஙனம் பல கலைகளும், பாடங்களும் இருபாலர்களிடையே உச்சநிலை பெறுவதுண்டு. இதனால் ஒருவரையொருவர் அறிந்து நற்றிறம் பெறுவார்கள். இருபாலர்களும் தன்முனைப்புக் குறைந்து தன்மதிப்புப் பெற்றுத் தம்மை வளர்த்துக் கொள்ள இயலும். ஆண்களோடு படிப்பதால் பெண்கள் அவர்களைப் போன்று வன்மையும் வளமும் பெறுவார்கள்.

பால் பகாப்பள்ளிகளில் ஆசிரியர்கள் இரு பாலராகவே அமைவர். அவர்கள் நடைமுறைகள் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது நன்று. பள்ளியின் பாடப்புறச் செயற்பாடுகள் ஒரு முழுமையை எய்த இயலும். கல்வி ஏற்பாடும் அதை ஒட்டிய இணைப்புச் செயற்

பாடுகளும் நல்ல.முறையில் திட்டம் பெற்றுச் செயல்படலாம். இரு பாலர் அமைந்த பள்ளி ஒரு பெருங் குடும்பத்தைப் போல் நடைபெற்றால் எல்லா நலன்களும் கிட்டுவது திண்ணம்.

பால் பகாக் கல்வி நம் நாட்டில் பொருளாதாரக் காரணத்துக்காக மிக அவசியமாகி உள்ளது. பெண்பாலர் கல்வி முன்னேற்றம் பெற்று வருகிறது. ஆனால் அரசினர் போதிய கட்டிடங்கள், துணைக்கருவிகள், நல்லாசிரியர்கள் இல்லாது இடர்ப்படுகின்றனர். அதனால் பால் பகா உயர்நிலைப் பள்ளிகளும், கல்லூரிகளும் விரவி உள்ளன. இருக்கும் ஆண் பள்ளிகளில் பெண்களும் சேர்ந்து படிக்கின்றார்கள் என்று கண்டோம். கல்வி, வாழ்க்கையை அறிவதென்றால், பால் பகாக் கல்வி இரு பாலர் கலந்த சமூகப் பண்பினை அளிக்கவல்லது. இரு பாலர்களும் களவுக் கூட்டத்துக்கு முனையாது அறிவுத்திறனை வெளிப்படுத்துவர்; ஆற்றலில் அழுங்கல் நீங்கும். பள்ளிகளில் ப்ரசன்னம் நூறுக்கு நூறாக விளங்கும். ஆசிரியர்கள் இருபாலரும் வகுப்பறைகளில் வெகு அக்கறையோடு ஈடுபாடு கொள்ளுவார்கள். பள்ளியின் ஒழுங்கு முறைகளும், நிர்வாகத்திலிருந்து வற்புறுத்தப்பெறாது, அகத்திலிருந்தே ஆளுமை ஒழுங்கினைச் சார்ந்த ஒழுக்கம் எல்லாப் பிள்ளைகளிடத்தும் உண்டாகி வகுப்பில் காட்சி அளிக்கும்.

சிலர் பால்பகாக் கல்வி நமது நாட்டுக்கு நன்மையைக் காட்டிலும் தீமையே பயத்தற்குரியது என்று கருதுகின்றார்கள். வெப்பமிக்க நாட்டில் பூப்பு இளமையில் நிகழ்வது இயல்பு. அதனால் உடல் வளர்ச்சியும் பெருமிதம் அடைகிறது. [1] பாலீர்ப்பு எளிதில் உள்ளாகி இருபாலருக்கிடையே பிழை நிகழ்கிறது. இளைஞர்கள் மனத்திண்மை இழந்து மாண்பை இழக்கிறார்கள். இளமையிலேயே பெற்றோர்களும், மற்றோர்களும் வெறுக்கின்றார்கள். பால் பகாக் கல்வியின் பெயரால் இருபாலர்களையும் ஒரே வகுப்பறையில் கூட்டி அடைத்து அவர்களிடையே நெருக்கத்தை உண்டாக்குவது தவறாகும். ஆண்கள் எக்காளமிடவும், பெண்கள் அடங்கி இருத்தலுமே காட்சியாகின்றது. அதனால் பெண்களுடைய வளர்ச்சி குறைவுறுகிறது. சில உயர் வகுப்புக்களில் மாணுக்கியர் இருவர் அல்லது மூவராகவே உள்ளார்கள். அல்லது தனித்த ஒரு மாணுக்கி மட்டும் படித்தால், தான் யாரோடும் பழக இயலாது தனித்து நின்று விடுகின்றாள். துணிந்து ஒரு மாணவனோடு பேச்சளவு தனது கல்வித் தேவைப்பாட்டுக்குத் தொடர்பு கொண்டாலும் அதனால் ஏற்படும் அலமரல் உள்ளத்தை உருத்திக்கொண்டே இருக்கும். இருபாலர்களும் தமக்குள்ள மாணவ உரிமையிலுங்கூடத் திறந்த உள்ளத்தோடு பழகுதல் கடினம். அங்ஙனம் பழகுங்கால் பல உள் தடைகள் நிகழும். நம் நாட்டில் பால் பகாப் பள்ளிகளில் நமது பழைய மரபுகளின் காரணத்தால் புதிய மரபுகளை உண்டாக்கிக்கொள்

1. Sex attraction

ளத் தயங்குகின்றோம். இருபாலர்களையும் பிரித்து வைப்பதே நமது வேரூன்றிய மரபு. அவர்களது களங்கமற்ற தொடர்பிற்குக் குற்றம் சொல்லுவதே நமது குறுகிய நோக்கம். எத்துணை அளவுதான் மேனாட்டுக் கோலங்களைச் செய்துகொள்ள முனைந்தாலும் நமது வழிவழிப் பழக்கங்கள் புதிய வழிகளைத் தடுக்கின்றன. எனவே பால்பகாப் பள்ளிகள் இன்றியமையாத வகையில் பல இழுக்குகளோடு பணியாற்றுகின்றன. அத்தகைய பள்ளிகளில் ஆசிரியர்களுடைய வாழ்க்கை முள்ளின்மீதும் கல்லின்மீதும் நடைபெறுவதொன்றாகும். மேலும் பால்பகாப் பள்ளிகளில் ஒரே வகையான கல்வி ஆண்களுக்கும் பெண்களுக்குமாக அமைகின்றது. கல்வியாளர்கள் ஒரே வகைக் கல்வி சரியற்றதென்கிறார்கள். வேறுபட்ட கல்வியையே வற்புறுத்துகிறார்கள். இன்று அத்தகைய வேறுபாடு இல்லாமல் கல்வித் திட்டங்கள் உருவாகி வருகின்றன. இருபாலர்களும் ஒரே வகைத் திட்டத்தில் திளைக்கிறார்கள். ஒருவருக்கொருவர் சிறிதும் குறை வுற்றவரல்லர் என்ற கருத்து உண்மையாகிவிட்டது. ஆண் வன்மை, பெண் மென்மை என்ற பழைய கொள்கையும், இருபாலருக்குரிய பணிகள் வேறு என்ற விளக்கமும் இப்போது ஏற்றுக்கொள்ளப்பெறுவதில்லை. எதுவாயினும் பெண்கள் ஆண்களோடு கற்பதால் பெண்களுக்கு ஆண் வன்மைத் திறன் ஓரளவு உண்டாகிறது. ஆனால் ஆண்கள் பெண்களைப் பார்த்து ஒரோவழி தம்மை அழகு படுத்திக்கொள்ளுவதும், மடமை கொள்ளுவதும், நாணமுறுவதும் ஓரளவு கண்கூடாகும். ஆண் பள்ளிகளில் பெண்கள் பெறும் சலுகைகள் அதிகம். அவற்றைக் கண்டு ஆண் பிள்ளைகள் அழுக்காறு கொள்ளுவதோடு வெறுப்பும் கொள்ளுகிறார்கள். இருவருக்கும் வெவ்வேறு பள்ளிகளே சாலச் சிறந்தவை. நம் நாட்டுப் பண்பாடுகளுக்கு ஒப்ப இருபாலருக்கும் ஒரேவகைக் கல்வி ஏற்றதன்று.

> “ மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுதன்
> நன்கலம் நன்மக்கட் பேறு ”
> “ மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை ”

என்ற திருவள்ளுவர் இலக்கணங்களுக்கு மாறாக இல்லங்கள் அமையாத வண்ணம் காப்பது கல்வியின் கடப்பாடாகும். மேலை நாடுகளின் பண்பாடுகளுக்கு ஏற்ப ஆங்கு கல்வித் திட்டங்கள் நன்றாக உள்ளன. நம் நாட்டிலும் குடும்பக் கலை ஒன்று மட்டும் பெண்களுக்கென வேறாகிப் பாட ஏற்பாட்டில் உள்ளது. மருத்துவம் இருவகையினருக்கும் பொதுவாகி விட்டது. பொறியியல், பல்தொழிலியல் ஆகியவை அவர்களுக்குமென வகுக்கப் பெறுகின்றன. புத்தம் புதிய பழக்கங்கள் நம் நாட்டுச் சமூகங்களில் தோன்றி வருகின்றன. பழமைக்கும் புதுமைக்கும் இன்று முற்றிலும் முரண் ஏற்பட்டு வருகின்றது. ஆனால் பழமையைப் பேணு

பவர் பழமைக்கு ஆக்கம் அளிக்கின்றார்கள். புதுப்போக்குடையார் புதுமையை அவாவுகின்றனர்.

தொடக்க நிலையில் பால் பகாப் பள்ளிகள் குற்றமற்றவையாகும். ஆனால் ஏனைய நிலைகளில் ஊறுகள் பல விளைகின்றன. [1] ஹார்டாக் அறிக்கை பால் பகாக் கல்வியை வற்புறுத்துமுன் மக்களுடைய சமூக விருப்பு வெறுப்புக்கள் பழக்கங்கள் ஆகியவற்றினைக் கருதவேண்டு மென்று கூறும். பெண்களை ஆண்கள் பள்ளியில் படிக்க வைத்தால் பெண் கல்வியின் முன்னேற்றம் தடைப்படுவதென்றும் கூறுகின்றது. முதிர் பருவத்தில் இருபாலருக்கும் தனித்த பள்ளிகளே நன்மை பயக்கக்கூடியவை. பால் பகாக் கல்வி என்ற பெயரால் இருபாலரும் சேர்ந்த வகுப்புக்களில் அளிக்கப்பெறும் கல்வியோடு மட்டும் நின்றுவிடுதல் போதாது. இருபாலர்களும் பள்ளியின் சமூக உறவுகளிலும் செயற்பாடுகளிலும் பெறும் அனுபவமே பயன் தரக்கூடியது. பள்ளியின் பண்புத்தரம் அத்தகைய உறவுகளிலன்றோ உயர்வு பெற வேண்டும்! அங்ஙனமன்றி இருபாலர்களும் அவரவர்களுக்குரிய கல்விப் பணியை ஆற்றிக்கொண்டு பள்ளி வாழ்க்கையில் ஈடுபடுவது பால் பகாக் கல்வி யின் பாங்கன்று. சமூக வாழ்க்கையின் பொறுப்புக்களோடும் சிறந்த பண்பாடுகளோடும் தகுதி வாய்ந்த திட்டங்களிலும் தொடர்ந்த ஆணை களிலும் வளர்வதற்குப் பால் பகாப் பள்ளிகள் திட்டம் வகுக்க வேண்டும். பாலீர்ப்பு பிள்ளைகளிடையே நிகழ்ந்துகொண்டிருப்பது இயற்கையின் பாற்பட்டது. அதைச் செம்மைப்படுத்துவதே பால் பகாக் கல்வியின் முக்கியக் குறிக்கோள். அதை ஆழ்த்தித் திட்டங் களினால் ஒடுக்கிவிட்டால் பாலுணர்ச்சி மிக இடர்ப்பாடுறும். நல்ல தொரு உளப்பாங்கு பிள்ளைகளிடையே அமையாது. ஓரளவு கட்டுண்ட திட்டத்தில் பால் பகாக் கல்வி நம் நாட்டிலும் நன்மை பயக்கலாம். ஆனால் அது நம் நாட்டின் பண்பாட்டுக்கு உற்றதும் ஏற்றதும் அன்று.

1. Hartog Report

24. பிள்ளைகளின் பாகுபாடு

நம் பள்ளிகளில் உள்ள வகுப்புக்கள் யாங்ஙனம் அமைய வேண்டும் என்றறிய வேண்டியது ஆசிரியர்களது கடமை. தொன்று தொட்டு ஒரு வகுப்பில் சேர்த்தலும், அவ்வகுப்பிலிருந்து மேல் வகுப்புக்குத் தேர் வளித்தலும், தேர்வு பெருவிட்டால் அதே வகுப்பில் தேக்குதலும், ஒரே வகுப்பில் பல பிள்ளைகள் படித்தலும், பலதரமுள்ள பிள்ளைகள் ஒரே வகுப்பில் அமைவதும், ஆசிரியர் ஒரே முறையில் பாடங்களைக் கற்பிப் பதும், வகுப்புப் பிள்ளைகளுள் சிலர் விரைவாகக் கற்றுக்கொள்ளுதலும், பலர் ஒரு குறித்த வேகத்தில் கற்றுக் கொள்ளுதலும், மற்றும் சிலர் தயக் கத்தோடு கற்றுக் கொள்ளுதலும்—இங்ஙனம் பலவகையாக அமைவுற்று நாலாறு கோலமாய் ஏழாறு பாதையில் வகுப்புக்கள் இயங்குதல் எங்கும் காணும் காட்சியாகும். ஆனல் பள்ளியின் தரம் உயர்வதற்குப் பிள்ளை களை நன்ருகப் பாகுபடுத்த வேண்டியது மறுக்க முடியாதது. ஒரு வகுப்பென்ருல் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள பிள்ளைகளைக் கொண்ட தென்று கூறிவிடுவதும், ஒரு வகுப்பில் இருநூறு பிள்ளைகள் இருந்தால் அவர்களை ஒரு பிரிவுக்கு 40 பிள்ளைகள் என ஐந்து பிரிவுகளாகப் பிரித் தலும் நாட்காட்சி. ஆனல் நல்ல பள்ளிகளில் ஓர் வகுப்புப் பிள்ளைகள் ஓர் ஒருமைப்பாட்டோடு விளங்குவார்கள். அவர்களது வயது, உடல், உளவளர்ச்சி, உணர்வு, சமூகத் தன்மை, இன்னோரன்ன பிற வேறுபாடு மிக்கின்றி ஒருமைப்பாடு மிக்குற்று அமைந்து காணப்படும். பிள்ளை களைத் தரப்படுத்தாது கூட்டம் கூட்டமாகக் கூட்டி வைத்த தொகுப் புக்கள் வகுப்பாகமாட்டா. நமது பள்ளிகளிலுள்ள வகுப்புக்கள் ஓரளவு அங்ஙனம் அமைந்தவையேயன்றி ஒரு தரத்திற்கு உட்பட்டவையன்று. ஆனல் மாணவர்கள் விதிப்படி அவரவர்களுடைய வகுப்புக்குரிய வர்களாவர்.

வகுப்புக்கள் வேண்டுமா ?

மாணவர்களைப் பாகுபாடு செய்தல் மிகக் கடினமான ஒரு பணி யாகும். சில பள்ளிகளில் ஒரு வகுப்பிலிருந்து மற்ருெரு வகுப்புக்குத் தேர்வு பெறும் பிள்ளைகளை அவரவர்களுடைய பிரிவில் இருந்து மாற்றுவ தில்லை. வேண்டிய எண்ணிக்கைக்குப் புதிய பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வார்கள். சில பள்ளிகளில் ஆசிரியர்கள் தத்தமது பிரிவுகளின் பிள்ளைகள் தரத்தை ஆராய்ந்து அறிந்து தரப்படி எல்லாப் பிரிவுகளுக் கும் பங்கீடு செய்யவேண்டுமென்று முரண்டிக் கொள்ளுவார்கள். தலைமையாசிரியர் இதை அனுமதித்தால் ஆசிரியர் ஒவ்வொருவரையும் மன நிறைவு செய்ய முடியாது. இதனல் ஆசிரியருக்குள் ஒரோவழி

பகையுமுண்டாகும். இத்தகைய பாகுபாட்டில் பெரும்பாலும் முனைதல் இறுதி வகுப்புப் பிள்ளைகளைப்பற்றிய பாகுபாட்டில் மட்டும் ஆசிரியர்களிடையே நிகழ்வதுண்டு. இறுதி வகுப்பில் பொதுத்தேர்வில் பிள்ளைகள் தரமுயர்ந்தவராக இருந்தால் தேர்வுபெற்று ஆசிரியர்களுக்குப் புகழ் தேடுவார்கள் என்ற காரணத்துக்காகவே இது நடைபெறுவது. தேர்வுகளில் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டால் பள்ளி நிர்வாகத்தினரும் அரசினரும் குறை கூறுவார்கள் அல்லவா? அதனால் நமது ஆசிரியர்கள் தம்மைக் காத்துக் கொள்ளுவதற்காக நல்ல பிள்ளைகளைத் தமது பிரிவில் சேர்த்துக்கொள்வதற்கு ஆத்திரப்படுவார்கள். பிற வகுப்புக்களில் இத்தகைய பாகுபாட்டினைச் சிந்திப்பவர்களும் இருக்கமாட்டார்கள். ஏனென்றால் அவ்வகுப்புக்களின் இறுதித் தேர்வுகளெல்லாம் பள்ளித் தேர்வுகளே. அதனால் மற்ற வகுப்புக்களின் தரவிகிதத்தைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. பிள்ளைகள் பலவகைகளில் வேறுபட்டிருப்பினும் அவர்கள் தமது பாடத்தைக் கற்பித்தால் போதுமென்ற குறுகிய நோக்கோடு வாளா இருந்துவிடுகிறார்கள். மேலும் பள்ளி இறுதி வகுப்புக்குக் கீழ் வகுப்புக்களில் கற்பித்தல், கற்றல் அடைவு ஆகிய எதைப்பற்றியும் பெரும்பாலும் நிர்வாகம் கவனிப்பதில்லை. தலைமையாசிரியர் கீழ் வகுப்புக்களின் வேலைகளை நடைமுறையாகக் கருதுகிறார். ஆசிரியர்களோ மாணவர்களுக்குக் கற்பித்தல் என்று கருதாது குறித்த நேரங்களில் எந்திரங்கள் வேலை செய்வதைப் போலத் தமது வேலைகளைச் செய்கிறார்கள். மாணவர்கள் எத்தரமுடையரேனும் அவர்கள் அதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

கல்வியுலகில் எத்துணை அளவுதான் முன்னேற்றம் எய்தினாலும் நம் ஆசிரியர்கள் தமது பழைய பாதையில் செல்கிறார்களேயன்றிப் புதிய பாதைகளைப் பற்றிச் சிந்திப்பதில்லை. மாணவர்களைப் பாகுபாடு செய்வது மிக்க அவசியம் என்பது கூறாமலே விளங்கும். ஆனால் அது மிகக் கடினமான பணி. ஒவ்வொரு வகுப்பிலுமுள்ள பிள்ளைகளை ஒரே தரப்படுத்துவதும், பல தரமும், திறமும் வாய்ந்த பிள்ளைகளை ஒரே தரப்படுத்துவதும் வகுப்பின் பிரிவுகள்தோறும் சமப்படுத்துவதும் பொறுமையைச் சோதிக்கின்ற வேலைகள். இன்றைய கல்வி, வகுப்புப் பிள்ளைகளுக்குக் குழுநிலை [1]கூட்டு மொத்தமாகக் கற்பிப்பதொன்றன்று. தனித் தனிப் பிள்ளைகளை உளநூல் துணைக்கொண்டு ஆராய்ந்தறிந்து உளப்பாங்கிற்கேற்ப கல்வி கற்பித்தல் வற்புறுத்தப் பெறுகின்றது. எனவே தனி ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வியேயன்றிக் கூட்டத்திற்குக் கல்வி என்ற நிலை மாறிவிட்டது. அதனால் பள்ளிகளில் வகுப்பறைகளுக்கு இடம் அற்று விடுமென்று கருதுகிறார்கள். தரப்படுத்துவதற்கு மட்டும் பலப்பல நிலைகள் வேண்டப்படுமேயன்றிக் கற்பித்தலுக்கு வகுப்புக்கள் வேண்டியதில்லை என்று கருதுகிறார்கள்.

---

1. Mass Teaching

வகுப்பில் உள்ள பிள்ளைகள் பலதரப்பட்டவர்களாயினும் ஒரு நாட்டமுடையவர்கள். அவர்களுக்குள் ஒரு போட்டி மனப்பான்மை உண்டாவது நன்று. ஒவ்வொருவரும் தத்தமது தகுதியை மற்றவர்களோடு ஒப்பிட்டுக் கொள்ளுவார்கள். வகுப்பில் கூட்டு வாழ்வு நிகழ்வதே சமூகப் பண்பை வளர்க்கக்கூடிய பயிற்சியாகும். ஒவ்வொரு வகுப்பிலும் ஓர் இனவாழ்க்கை பல்வேறு இனமுள்ள பிள்ளைகளிடையே வளர்ச்சியடைவது நன்மையைத் தரும். மிகச் சிக்கலான சமூகத்தில் வாழ்வதற்கு முதற்கண் வகுப்பிலும் இரண்டாவதாகப் பள்ளிச் சமூகத்திலும் பழகிக் கொள்ளுவது நன்மையைத் தரும். வகுப்பில் ஆசிரியர் புத்தம் புதிய முறைகளைப் பயன்படுத்திப் பிள்ளைகளைத் தனிமையாகவும் குழுக்களாகவும் செயற்பாட்டில் ஈடுபடுத்தினும் பொதுப்படப் பல கருத்துக்களை விளக்கவேண்டும். அல்லது பல மாணவர்களுடைய இடர்ப்பாடுகளை அறிந்து அவை பிறருக்கும் நிகழாவண்ணம் மாணவர் எல்லோருக்கும் விளக்குதலில் நன்மையுண்டு. சில பாடங்களை வகுப்பை நோக்கிக் கற்பித்தால் பிள்ளைகள் ஆசிரியருக்குச் செவி சாய்த்து உள்ளக் கிளர்ச்சி பெறுவார்கள். தனித்து ஒவ்வொரு பிள்ளைக்கும் உணர்வைத் தட்டி எழுப்பும் வகையில் பாடங்களை நடத்த இயலாது. வரலாற்றுப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் மாணவர் கூட்டத்தில் உணர்ச்சி ததும்பப் பல நிகழ்ச்சிகளை விரிவுரையாற்ற இயலும். இசை ஆசிரியர் அங்ஙனமே ஒரு வகுப்பில் நிறைந்த மாணவர்களுக்கு இசை கற்பித்தால் அவருடைய திறமை முழுவதையும் வெளியாக்குவார். மேலும் மாணவர்கள் ஆசிரியரிடம் மட்டுமே யன்றிப் பிற மாணவர்களிடமிருந்தும் கற்றுக் கொள்ளுகிறார்கள். தமது ஐயப்பாடுகளை ஆசிரியரிடமிருந்து விளக்கிக் கொள்ள அச்சமுறும் மாணவர்கள் தமது நண்பர்களிடம் ஐயங்களை வெகு எளிதாக நீக்கிக் கொள்ளுகிறார்கள்.

வகுப்பில் கற்கும் மாணவர்கள் சில நன்மைகளைப் பெற்றாலும் அவர்களுக்குச் சில தீமைகளும் நேர்தல் உண்டு. ஒரு வகுப்பு மாணவர்கள் பலதரப்பட்டவர்கள். ஆகையால் ஆசிரியர் கற்பிக்கும் நிலையில் அவரால் எழுப்பப் பெறும் பல தூண்டல்களுக்கு ஒரே வகையான துலக்கங்கள் எல்லாப் பிள்ளைகளிடத்தும் ஏற்படாதென்பது நாம் அறிந்ததே. ஒவ்வொரு பிள்ளையும் ஒரு சிக்கல் என்று ஓர் ஆசிரியர் கருதுவது தவறன்று. வகுப்பறைகளில் தனித்தனிப் பிள்ளைகளை ஆசிரியர் கவனிப்பதற்கு இயலாது. எனவே தனித்தனிப் பிள்ளைகளின் தேவைப்பாடுகளை வகுப்பாசிரியர் புறக்கணிக்கின்றார் என்று கூறுவது மிகையாகாது. பொதுப்படக் கற்பிக்கும் பாடங்களைக் கற்றலுக்கு மாணவர்கள் கையாளும் நெட்டுருச் செய்யும் முறை ஒன்றே கைகண்ட பலனைத் தந்துள்ளது. தனித்தனிப் பிள்ளைகள் தமது உணர்வு, சிந்தனை, செயல் ஆகியவற்றிற்கு வகுப்பறையில் வாய்ப்புக்கள் கிட்ட முடியாது. திறமையுள்ள பிள்ளைகளும் நடுத்தரப் பிள்ளைகளும் திறமை

யற்ற பிள்ளைகளும் எல்லாம் ஆசிரியர் தம்மை ஈர்த்துச் செல்லும் வேகத்திற்கு மட்டுமே கட்டுப்பட்டு விடுகிருர்கள். அவர்கள் கற்றல் நிலையில் செவிப்புலன் ஒன்று மட்டும் இயங்குமேயன்றித் தமது ஆற்றல்களுக்கும் திறன்களுக்கும் வகுப்பில் இடமில்லை.

வகுப்பறையில் ஆசிரியர்கள் கற்பிக்கும் முறைகள் சராசரிப் பிள்ளையைச் சார்ந்ததென்று ஒரு நம்பிக்கை உண்டு. ஆனல் சராசரி மாணவன் என்று ஒருவன் உளனு என்பது வினு. ஒரு வகுப்பிலுள்ள இரண்டு பிள்ளைகள் ஒரு தரத்தினராக இருக்க முடியாது. ஒவ்வொரு பிள்ளைக்கும் திறமை, ஆற்றல், விருப்பு, வெறுப்புக்கள், நாட்டம், அக்கறை யாவிலும் வேறுபடுவது இயல்பு. எனவே ஆசிரியர் அளிக்கும் சராசரிப் பிள்ளையைக் கருதிய பாடங்கள் பல பிள்ளைகளுக்குப் பயனற்றவையாகலாம். ஆசிரியர் மீத்திறம் பெற்றவர்களைக் கவனிப்பாரா? அல்லது நடுத்தரமான பிள்ளைகளைக் கவனிப்பாரா? அல்லது மெதுவாகக் கற்கும் பிள்ளைகளைக் கவனிப்பாரா? யாரைத்தான் கவனிப்பார்? ஒரே அகவையில் பல வேறுபாடுற்ற பிள்ளைகளைக் கவனித்து அவர்களுக்கு ஏற்ற பெற்றி கற்பிப்பது இயலாது. எனவே தனித்தனிப் பிள்ளைகள் அவரவர்களுடைய நுண்ணறிவுக்கு ஏற்றவாறு கற்றலே அவரவர்களுக்கு நன்மை பயக்கும். தனித்தனிப் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதால் ஆசிரியர் பிள்ளைகளுடைய அடைவை மதிப்பிடுவதோடு தமது ஆசிரியத் திறனையும் மதிப்பிட்டுக்கொள்ள இயலும். இங்ஙனம் மாணவர்களுக்கு ஆசிரியர் தம்மால் இயன்ற உதவியை நல்ல முறையில் பயனை எதிர் நோக்கிச் செய்யலாம். ஆனல் தனித்தனிப் பிள்ளையைக் கவனிப்பது ஆசிரியருக்குக் கடினம். ஆயினும் அவர் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு ஏற்ற பயன் கைக்கூடும். மேலும் தனித்தனிப் பிள்ளைகளுக்குக் கற்பித்தால் எல்லாப் பாடங்களையும் ஒரே அளவு நேரத்திற்குக் கற்பிக்க வேண்டியதில்லை. சில மாணவருக்கு ஓரிரு பாடங்கள் சிறிது நேரத்திலும் சில பாடங்கள் அதிக நேரத்திலும் கற்பிக்க வேண்டியதாக இருக்கும். எல்லாப் பாடங்களும் குறித்த ஒரே நேரத்தில் கற்பிப்பதென்ருல் விரைவாகக் கற்றுக்கொள்ளும் பிள்ளைகள் தயக்கமுறுவார்கள்.

பிள்ளைகளை எங்ஙனம் பாகுபாடு படுத்துவது?

அரசாங்கத்தார் ஒவ்வொரு வகுப்புக்கும் மாணவர்களுடைய வயதினை நிர்ணயித்துள்ளார்கள். குழவிப் பள்ளிகளுக்கு இரண்டரை முதல் ஐந்து வயது வரையிலென்றும் தொடக்க நிலைகளுக்கு ஆறு முதல் பதினெரு வயது வரையிலென்றும் உயர்நிலைக்கு பதினெரு வயது முதல் பதினறு வயது வரையிலென்றும் திட்டமிட்டுள்ளார்கள். இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் உயர்நிலைப் பள்ளிகளில் இருத்தல் கூடாதென்றும் வரையறை உண்டு. முன்னுட்களில் பெரும் பிள்ளைகள் சிறுபிள்ளைகளோடு சேர்ந்து படித்தால் சிறு பிள்ளைகள் கெட்டுவிடுகிருர்கள் என்ற எண்ணமே கிடையாது. ஆனல் தற்போது

அதன் தீமையையகற்ற ஒவ்வொரு வகுப்பிலும் ஏறக்குறைய ஒரே வயதுப் பிள்ளைகள் படிக்குமாறு திட்டமுள்ளது. இதற்கு மாருகச் சில வகுப்புக்களில் மிக்க வயது குறைந்த மாணவர்கள் பெற்றேர்களுடைய பேராசையாலும் ஆசிரியர்கள் அதற்கு இணங்குவதாலும் இடம் பெற்று விடுகிருர்கள். நான்கு வயதுப் பிள்ளையை ஐந்து வயது என்று பிறந்த தேதியைப் பொய்யாக்கிக் கொடுக்கிருர்கள். அதை ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளுவதுதான் தவறு. ஒரோவழி ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டால் அத்தகைய பெற்றேர்கள் ஆசிரியரோடு சண்டை பிடிப்பார்கள். ஆசிரியர்களுக்கு, முடியாதென்றும் தக்க சான்றுகள் இல்லாமல் சேர்க்க மறுப்பதற்கும் கூறுவதற்கும் போதிய மன உறுதி பெற்றிலர். இதனல் மூன்று முதல் நான்கு வயதுள்ள பிள்ளைகளைத் தொடக்க நிலைப்பள்ளிகளில் காணலாம். உடல் வளர்ச்சியும் நன்ருகப் பெறு வதற்குமுன் பிள்ளைகள் எத்துணை உயர்வு மதிப்பெண்கள் பெற்ருலும் அவர்கள் கற்றவற்றைத் தமது அனுபவங்களில் பெருதவர்களாகி வெறும் புத்தகப் புழுக்களாக மாறிவிடுகின்ருர்கள். இன்றைய கல்வி நிலை அதற்குப் பெரும் வசதியளிக்கின்றது. இன்றைய கல்வித் திட்டம் தேர்வுகளில் வெற்றி பெறுவதையே குறிக்கோளாக உண்டாக்கியுள்ள தென்று பன்முறை எடுத்துக் காட்டியுள்ளோம். எனவே இன்றைய நிலைப் பிள்ளைகளை இரண்டு வகையில் பாகுபாடு செய்யலாம். ஒன்று தேர்வுகளில் வெற்றி பெறக்கூடிய பிள்ளைகள்; மற்றென்று தேர்வு முறை களுக்கு இணக்கம் பெருத பிள்ளைகள். முதலாவது வகைப் பிள்ளைகள் வெற்றி பெற்றுக்கொண்டே முன்னேறுகிருர்கள். இரண்டாவது வகை யினர் வெற்றி பெற வகை அறியாதும் தேர்வுகளுக்கு ஏற்றபடித் தம்மை வகைப்படுத்திக் கொள்ள முடியாதும் ஆங்காங்கே தேர்வுகளில் நின்றுவிடுவதோடு அல்லலுறுகின்ருர்கள். அப்பிள்ளைகளுடைய வாழ்க் கையே தாழ்ந்துவிடுகின்றது. அதனல் தேர்வுகளில் வெற்றி பெறு வதற்குப் பல வழிகளை வகுக்க ஆசிரியர்கள் முற்படுகின்ருர்களேயன்றிக் கல்வி கற்பிப்பதைக் கைவிட்டு விடுகின்ருர்கள். எல்லா நிலைகளிலும் கல்வியின் குறிக்கோள் தேர்வில் வெற்றி பெறுவதே என்ருகி அதற்கு வழிகளை வகுப்பதே பெரிய வேலையாகிவிட்டது. பெற்றேர்கள் தமது பிள்ளைகள் கல்வி அனுபவம் பெற்ருலும் பெருவிட்டாலும் பருவம் முதிராவிட்டாலும் பெரிய தேர்வுகளில் வெற்றி பெற்ருல் போதுமென்று அவாவுகின்றனர். எனவே இன்றைய போட்டி நிலையில் வயதினைப் பற்றிக் கண்டிப்பாகப் பல்கலைக் கழகத்தார் வரையறை செய்துள்ளனர். வகுப்புக்கு ஒரு வயதினைக் குறித்துள்ளார்கள். பிறந்த தேதி பொய் யாகக் கொடுத்தவர்களும் உண்மையாகக் கொடுத்தவர்களும் பல்கலைக் கழகத்தின் மீது மோதுகிருர்கள். பெற்றேர்கள் தம் பிள்ளைகள் பெறும் கல்வி வயது வரம்புக்குட்பட்டதென்று அறியவேண்டியது கடமை. சில மாணவர்கள் வளர்ச்சிக்கு மேற்பட்ட கல்வியளவைப் பெறுவதால்

தேர்வுகளில் உயர்வு பெற்ற கல்வி வாழ்வில் பயனளிக்காது ஒழிகின்றது. இன்றைய வேலைகளும் தேர்வுகளை நாடி அளிக்கப்பெறுகின்றன.

உரிய வயதுக்கும் உள வயதுக்கும் இயைபு காணுதல் இன்றைய கல்வியாளர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சியாகும். உரிய வயது எதுவாயினும் உள வயதினைக் கொண்டே பிள்ளைகளைப் பாகுபாடு படுத்துதல் முறையாகின்றது. பிள்ளைகளை வகுப்பில் சேர்ப்பதற்கு நுண்ணறிவு அளவை பயன்படுகிறது. ஆனால், பிள்ளைகளை மேல் வகுப்பில் சேர்ப்பதற்கு நுண்ணறிவு அளவை மட்டும் போதாது. பள்ளிப் பாடங்களில் பெற்ற அளவைகளும் தேவை. ஆனால் தொடக்க நிலைகளில் நுண்ணறிவு ஈவு பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு மிக முக்கியம். உயர் வகுப்புக்களில் பல பாடங்களில் பெற்றுள்ள அடைவுத்திறனும் நுண்ணறிவும் அறிந்தாலன்றிப் பிள்ளைகளை அவரவர்கள் தகுதிக்கேற்ப வகுப்புக்களில் சேர்க்க இயலாது.

மேனாடுகளில் இவற்றோடு இன்னும் பல விளக்கங்களை அறிந்து பிள்ளைகளைச் சேர்க்கிறார்கள். பழம் பள்ளிகளில் குறித்துள்ள திரட்டுப் பதிவேட்டினைப் பரிசீலனை செய்து பிள்ளைகளைச் சேர்க்கிறார்கள். ஆளுமையின் பல நுணுக்கங்களை ஆராய்கிறார்கள். நம் நாட்டிலும் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு முன் உடல்நிலை விளக்கங்களைப் பார்வை யிட்டுச் சேர்க்கிறார்கள். ஆயினும் திரட்டுப் பதிவுகளே மிக முக்கிய மானவை. திரட்டுப் பதிவேடுகளில் ஒவ்வொரு மாணவரின் பல்வகை வளர்ச்சி நுணுக்கங்களை அறிந்து அவற்றிற் கேற்பவும் வகுப்புகள் தோறும் மாணவர்களைப் பாகுபாடு படுத்தலாம். இவற்றைக் கொண்டு அவரவர்கள் தகுதிக் கேற்பப் பாடவகைகளையும் அறுதியிடலாம்.

பாகுபாடுகளால் பிள்ளைகள் ஒரு வகுப்பிலாவது ஒரு பாட ஏற்பாட்டிலாவது நிரந்தரமாக ஒதுக்கம் பெறவேண்டியதில்லை. பாட ஏற்பாட்டில் ஓரளவு நெகிழ்வு இருத்தல் நன்று. பிள்ளைகளுடைய தகுதி களும் உயர்வுகளும் மாறிக்கொண்டே இருப்பன. அவற்றிற்கேற்ப அவர்களை ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்புக்கு மாற்றும் அல்லது ஒரு பாட ஏற்பாட்டிலிருந்து நாட்டம் அதிகமுள்ள மற்றொரு பாட ஏற் பாட்டிற்கு மாற்றும் வழிவகைகள் இருக்கவேண்டும். பிள்ளைகளுடைய திறமைக்கேற்பப் பாகுபாடு அமைந்தால் அவர்கள் கற்றல் வேகத்திற்கு இசைவு பெறக் கற்பித்தல் அமையும். இங்கிலாந்து தேசத்தில் பதினொரு வயதுள்ள பிள்ளைகளை மூன்று கூறுகளாகப் பிரிக்கின்றார்கள். ஏட்டுப்படிப்புத் திறம் பெற்றவர்கள் ஒரு பிரிவினர். நடுத்தரமான வர்கள் மற்றொரு பிரிவினர். தொழில் வகையில் திறமையுள்ளவர்கள் மூன்றாம் பிரிவினர். ஆனால் ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவுக்கு மாறுதல் உண்டு. இங்ஙனம் பாகுபாட்டுக் காரணத்தால் பிள்ளைகள் அவரவர்கள் தகுதிக்கேற்ப வளர்ச்சி உண்டு. வீணாகக் காலம் போக்காது பிள்ளைகள் அவரவர்களுக்குற்ற பயனை அடைவது திண்ணம். ஆனால் இத்தகைய பாகுபாட்டில் ஓர் இழுக்கு உண்டு. அறிவுத்திறம்

பெற்றவர்களைத் திறமையற்றவர்களினின்றும் பிரித்துவிட்டால் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ளும் வாய்ப்பு இராது. மேலும்ஒதுக்கம் பெற்ற பிள்ளைகள் தாம் ஒதுக்கம் பெற்றதாக நினைத்தால் அவர்கள் கவலுறுவார்கள்.

பிள்ளைகள் பாகுபாட்டினால் எய்தக்கூடிய பயன்கள் பல. நம் நாட்டில் பழங்காலங்களில் தனித்தனி மாணவருக்குக் கல்வி கற்பிக்கப்பட்டது. அங்ஙனம் பண்டைய குருகுலங்களிலும் தமிழ் நாட்டில் சிற்றூர்களிலும் பட்டணங்களிலும் இருந்த 'திண்ணைப் பள்ளிக்கூடங்களிலும் தனித்தனி மாணாக்கருக்குப் பாடங்கள் கற்பிக்கப் பெற்றன. ஆசிரியர் ஒருவரே. ஆயினும் சட்டாம்பிள்ளை முறையில் தனித்தனி மாணாக்கர்கள் தத்தமது பாடங்களை நிரல் நிறையாகக் கற்றார்கள். எதையும் ஐயம் திரிபு அறக் கற்றுக் கற்றவற்றை நெட்டுருச் செய்தார்கள். இதனோடு பள்ளியின் கட்டுக்களையும் திட்டங்களையும் அறிந்து ஒழுகினார்கள். நம் பள்ளிகளைப்போன்று வகுப்புக்களின் இலக்க எண்ணிக்கையில் அப்பள்ளிகளில் கிடையாது. ஆனால் அவரவர்கள் படித்த பாடப்புத்தகங்களின் பெயர்களே வகுப்புக்களின் பெயர்களாயின. எடுத்துக்காட்டாக அரிச்சுவடி வகுப்பு, ஆத்திசூடி வகுப்பு, உலகநீதி வகுப்பு, கொன்றைவேய்ந்தோன் வகுப்பு, வாக்குண்டாம் வகுப்பு, எண்சுவடி வகுப்பு, கெட்டிலக்க வகுப்பு, நெல்லிலக்க வகுப்பு, என்று பாடமாயினும் இலக்கமாயினும் அதனதன் பெயர் விளங்கின. இந்நூல்களைக் கற்பிக்கும்போது பிள்ளைகள் அவரவர்கள் ஆற்றலுக்கேற்பக் கற்றார்கள். ஒருநாட் பாடத்தைக் கல்லாத பிள்ளைக்கு மேற்பாடம் சொல்லிக் கொடுப்பதில்லை. மாணாக்கர் ஒரு பாடம் முழுவதையும் நன்றாகக் கற்றபிறகே வேறு பாடப்புத்தகத்தைக் கற்றுக்கொள்ளுவான். எனவே பண்டைப் பள்ளிகளில் இன்றுபோல் எந்திர ஓட்டம் இல்லை. எண்ணும் எழுத்தும் கண்களாகப் போற்றப்பெற்றன. பிள்ளைகள் அவரவர்கள் தரத்திற்கு ஏற்ற பாடங்களைப் பயின்றார்கள். ஆனால் இற்றைநாட்களில் பள்ளியில் பயிலும் மாணவர்கள் பலராகிவிட்டார்கள். எனவே வகுப்புக்கள் இன்றியமையாததாகிவிட்டன. பாடங்கள் பலவாகிவிட்டன. ஆசிரியர்களும் ஒவ்வொரு பாடத்திற்கும் பல நிலைகளுக்கும் பல்லாசிரியர்களாகிவிட்டார்கள். உளநூல் இன்று தனித்தனி மாணவனுக்குக் கற்பிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறது. ஆயினும் பள்ளிகளில் வகுப்புக்களும் வகுப்பு முறைகளும்தான் நீடிக்கின்றன.

வகுப்புக்கள் பள்ளிகளில் இன்றியமையாதனவாயினும் அவற்றின் மாணாக்கர் எண்ணிக்கை உயர்ந்த அளவு குறைந்த அளவு என்ற பாகுபாட்டோடு இலங்கலாம். வகுப்பு முறையேயாயினும் மாணவர் எண்ணிக்கை குறைவாக இருந்தால் ஆசிரியர் ஒவ்வொருவரையும் ஓரளவு அறிந்து அவர்களுக்குப் பாடம் கற்பிக்க இயலும். அல்லது அவரவர்களுடைய தேவைப்பாடுகளை உணர்ந்து கற்பிக்கும் முறைகளை

மாற்றிக்கொள்ள இயலும். பிள்ளைகளின் எண்ணிக்கையை முடிவு செய்வதற்கு அவர்களுடைய வகுப்பு நிலை, பாடம், வகுப்பறையின் பரப்பு, ஆசிரியர்களின் திறமை ஆகியவை கருதற்பாலவை. தொடக்க நிலைகளில் இருபதுக்கு மேற்பட்ட பிள்ளைகளை நன்ருக ஆசிரியர் கவனிக்க முடியாது. சிறிய பிள்ளைகளையன்ருே தனித்தனியாகக் கவனிக்க வேண்டும். உயர்நிலை வகுப்புக்களில் இருபத்தைந்து முதல் முப்பதிற்கு மிகாமலிருந்தால் ஆசிரியர் பிள்ளைகளை நன்கு அறியலாம். ஆனல் பல மாநிலங்களில் எல்லா நிலைகளுக்கும் குறைந்த எண்ணிக்கை நாற்பது பிள்ளைகளாகத் திட்டமிட்டுள்ளார்கள். ஆனல் சில பள்ளி களின் வகுப்புக்களில் ஒவ்வொரு வகுப்புப் பிரிவிலும் தொடக்க நிலை யிலுங்கூட நிர்வாகிகள் ஐம்பது பிள்ளைகளை அடைத்து வைக்கின்றனர். சில பள்ளிகளில் நாற்பது பிள்ளைகளுக்கு மேல் எக்காரணத்தாலும் ஒரு வகுப்புப் பிரிவில் சேர்ப்பதில்லை.

25. தேர்வுகளும் அவற்றின் பயன்களும்

இன்றையத் தேர்வுகள் வெறும் ஏட்டுத் தகுதிகளைத்தான் அளிக்கின்றனவென்று அவலுறுகின்றார் உலக ஆசிரியர் சங்கத் தலைவரான சர் ரோனல்டு கௌல்டு என்பார். ஏட்டுத் தகுதியினைப் பெறுவதற்குப் பள்ளிகள் வழி வகுக்கின்றன; மாணவர்கள் முந்துகிறார்கள்; அதற்கு வேண்டியவற்றைப் பல வழிகளில் பெற்று அத்தகுதியினைப் பெறுவதே கல்வியாகிவிட்டது. இதனால் தேர்வுக்குரிய தகுதிகளைப் பெறுபவர்கள் தேர்வில் வெற்றி பெறுகின்றார்கள். அந்நுணுக்கங்களைப் பெற இயலாதவர்கள் தேர்வில் தோல்வியுறுகின்றார்கள். எனவே எல்லாப் பிள்ளைகளும் தேர்வுக்குரியவர்கள், தேராமைக்குரியவர்கள் என இருவகை ஆகி உள்ளார்கள். உலகமெங்கும் ஏட்டுத் தகுதிக்கு முந்தும் கோலத்தைப் பள்ளிகளும் கல்லூரிகளும் பூண்டுள்ளன. ஏட்டுத்தகுதி அத்தகுதியினைக் கொண்டு பதவிகளைப் பெறுவதற்கு உதவிபுரிகின்றன. அவை அல்லாதவர்கள் எத்துணை தகுதி உள்ளவராயினும் தேர்வுக்குரிய தகுதி ஒன்றினை மட்டும் பெறாத காரணத்தால் தாழ்வுற்ற நிலையில் பாட்டாளிகளாகப் பணியாற்றுகின்றனர். இப்போதுள்ள தேர்வுகள் ஏட்டுப் படிப்பினை மட்டும் அளவிடுதற்கு உரியவை. இதனால் தேர்வுகள் மாணவர்களுக்குப் பகை என்றும் ஒருவர் பெறும் கல்விக்குத் தடை என்றும் காரணமின்றிப் போட்டியையும் பிணக்கையும் உண்டாக்குபவை என்றும் கருதுகின்றனர். இவை தகுதிகளை அளவிடுகின்றனவா அல்லது அறியாமையின் ஆழத்தை அளக்கின்றனவா என்றும் ஐயுறுகின்றனர். வெறும் பாடக்கருத்துக்களின் நினைவாற்றலை அன்றோ இன்றைய தேர்வுகள் மதிப்பிடுகின்றன! ஒரு வினாவுக்குப் பத்துக் கருத்துக்கள் என்றால் பத்தினையும் நினைவில் கொண்டு தேர்வில் எழுதுபவர் முதற்தகுதியாளரென்றும் ஐந்து ஆறு எழுதுபவர்கள் இரண்டாம் தகுதி உள்ளவர்களென்றும் நான்கோடு முடித்துக்கொள்ளுபவர்கள் மூன்றும் தகுதியினர் என்றும் பாகுபாடு பெறுகின்றனர். [1] ஐன்ஸ்டீன் என்ற விஞ்ஞானப் பேரறிஞர் கணிதத் தேர்வில் தவறிவிட்டாராம். மற்றும் பேரறிஞர்களாகப் புகழுடம்பு பெற்றவர்கள் எல்லாம் தாம் எழுதிய தேர்வுகளில் இகழ்வு பெற்றுள்ளார்கள். ஆண்டு முழுவதும் படித்த ஒரு பாடத்தின் தகுதியினை ஐந்து வினாக்களின் விடைகளில் தகுதி காண்பதால் பெற்ற அறிவின் ஒரு சில மாதிரிகளைத் தான் சோதிக்க இயலுகின்றதே யன்றிப் படித்த எல்லாவற்றையும் தேர்வுகள் பரந்தும், நுணுகியும் சோதிப்பதில்லை. சில தேர்வாளர்கள் தேர்வுப் பாடத்தின் முக்கியமானவற்றைப் புறக்கணித்து முக்கிய

---

1. Einstein

மற்றவற்றை வினக்களாகக் கேட்டுப் பெருவாரியாகப் பிள்ளைகள் தவறு வதைக் கண்டு அகமகிழ்வர். கல்வியின் இறுதிக் கோலமே தேர்வுக் கோலமாகையால் ஆசிரியர்கள் தேர்வினையே தமது குறியாகக் கொண்டு நன்ருகப் பயிற்றுவித்தற்குரிய பாடங்களை எல்லாம் தேர்வுக் குரிய பாடங்களாக மாற்றிப் பிள்ளைகளை வற்புறுத்துகின்ருர்கள். ஆசிரியர்களும் தமக்குக் குறைவுருதபடி தத்தமது பாடத்தில் பிள்ளைகள் அதிகத் தேர்வு பெறுவதற்கு வேண்டிய முறையிலும் அளவிலும் தாம் பாடாற்றுகின்ருர்கள். பிள்ளைகளும் தேர்வு வினக்களைத் தேடுவதிலும் அவற்றினை யூகித்து அறிவதிலும் தமது காலத்தை வீணுக்குகின்ருர்கள். விடைகளை நெட்டுருச் செய்வதே தேர்வுக்குரிய ஆயத்தமாகின்றது. பிள்ளைகளுடைய சிந்தனையாற்றல், புத்தம் புதிய கருத்துக்களைத் தந்துதவுதல், தாமாகவே திருத்தமாக கருத்துக்களின் திறனுய்தல், கற்றலில் இன்பங் காணுதல் இவையாவும் மாணவர்களை அணுகுவ தில்லை. தகுதியற்ற பிள்ளைகள்—இல்லை ஆனுல் தகுதியற்ற பள்ளிகளும், தகுதியற்ற பாடப் புத்தகங்களும், தகுதியற்ற பாடங்களும், தகுதியற்ற தேர்வுகளும் இன்றைய கல்வியின் கருவூலங்கள் என பர்க் என்பார் கூறியுள்ளார். இன்றைய தேர்வுகளால் பிள்ளைகளுடைய உடலும் உள்ளமும் பீடிக்கப்பெறுகின்றன. பிள்ளைகள் சிலருக்குத் தேர்வுக் காய்ச்சல் உண்டாகிறது. போட்டிப் பெருக்கத்தால் பெற்ருேர்கள் பிள்ளைகளை வருத்துகின்றனர். எதுவாயினும் இத்தேர்வுகள் வாழ்க் கையை வெற்றியோடு ஒரு மாணவன் நடத்த உதவுபவையா என்பதனைக் காட்டாது ஒழிகின்றன. தேர்வாசிரியர்களும் மதிப்பெண்கள் தருவதில் மாறுபடுகின்றனர். ஒரு தேர்வாசிரியர் தேர்வளித்தால் மற்ருெருவர் அதே தேர்வாளனுக்குத் தேர்வளிக்க மறுக்கின்ருர். இன்றைய தேர்வுத் தகுதிகள் வாழ்க்கையில் எத்திசையிலாயினும் பிழைக்க வழி வகுத்து விடுகின்றன.

இற்றை நாட்களில் தேர்வுகளில் தேர்வு பெறுவது வெகு எளிதாகி விட்டது. மாணவர்கள் பள்ளி நாட்களில் கற்பிக்கும் பாடங்களைக் கவனிப்பதில்லை. தேர்வுக்கு ஓரிரு மாதங்களுக்கு முன்னர் வினக்கள் வேட்டை தொடங்குகின்றனர். வினக்களுக்கு விடைகள் தீட்டிய குறிப்புக்கள் மலிந்து விட்டன. எனவே அவற்றிற்கு வேண்டிய விடைகளை மட்டும் நெட்டுருச் செய்து விடுகிருர்கள். தேர்வாசிரியர்களும் தேர்வு விடைகளில் ஒரு சிறிது பாட அறிவினைக் கண்டால் போதுமென்று தேர்வு மதிப்பெண்கள் தந்து விடுகின்ருர்கள். நமது நாட்டில் சில மாநிலங்களில் நடைபெறும் தேர்வுகளின் அலங்கோலங்களை நாளிதழ் களில் படிக்கின்ருேம். தேர்வு நாட்களை ஒத்திப்போடுவதற்கு ஒரு கிளர்ச்சி! தேர்வு கடினமாயின் பிள்ளைகள் தேர்வு மண்டபத்தை விட்டு வெளியேறி விடுகிருர்கள்! தேர்வு அதனுல் நடைபெரு தொழிகின்றது. தேர்வு முடிவுகள் மன நிறைவு தராவிட்டால் பெற்ருேர்களும் பொது மக்களும் கிளர்ச்சி செய்கின்ருர்கள். இக் கிளர்ச்சியை நீக்க

அதிகத் தேர்வுகளும் அளிக்கப் பெறுகின்றன. தேர்வாசிரியர்களைக் காண மாணவர்களும் பெற்றோர்களும் விழைகின்றார்கள். இவ்வளவு அலங்கோலத்தில் இறுதித் தேர்வுகள் நடைபெறுவதும் நடைபெரு தொழிவதும் ஒன்றே யாகும். இதனால் தேர்வின் நிலையினைத் தாழ்த்து வதற்கு இன்று கல்வியாளர்கள் முனைந்துள்ளார்கள். தேர்வு பெரியதா, அல்லது கற்றல் அனுபவங்களும், பிள்ளைகள் பெறும் ஆளுமைத் திறனும் முக்கியமானவையா எனச் சீர்தூக்கிப் பார்க்கின்றார்கள். பிள்ளைகள் ஏன் பல பாடங்களைப் படிக்கவேண்டும் என்றும் அவற்றின் குறிக்கோள்கள் யாவை என்று காணவேண்டுமென்றும் வற்புறுத்து கின்றனர்.

தேர்வு மாணவர் குலத்துக்கே கூற்றுவன் என்றும் கல்விப் பாதையின் ஒரு குறுக்கீடென்றும் நினைவாற்றலைச் சோதிக்கும் ஓர் எந்திரம் என்றும் அஃது அறிவாற்றலையும் படைப்பாற்றலையும் பழுது படுத்தக் கூடியதென்றும் எடுத்துரைப்பாருமுளர். தொன்றுதொட்டுத் தேர்வுகளை மாணவருலகம் வெறுத்து வருவதே வரலாறு. இத்தேர்வு களில் தலைமாணுக்கர்கள் தவறி விடுவதும் கடை மாணுக்கர்கள் கடைத் தேறுவதும் உண்டு. இவை யாவும் அறிவிப்பது யாதெனின் தேர்வு களின் அமைப்புக்கள் ஏற்புடையவை அல்ல என்பதே. கல்வி நிலை யங்களும் ஆசிரியர்களும் அவர்களோடு மாணவர்களும் தேர்வில் வெற்றியினையே குறிக்கோளாகக் கொண்டு கல்வி வழிபாடு செய்தனர். இதனால் கல்வி ஏற்பாட்டின் இலக்கணங்கள் இடரிவிடுகின்றன. கல்வி கற்றலும் கற்பித்தலும் தொடர்ந்த ஒரு காலத்தில் நிகழ்வதாயினும் கற்ற திறனை ஒரு சிறிது நேரத்திற்குள் ஆய்ந்தறிதல் என்பது இன்றைய தேர்வுகளுக்கு இயலுமாவெனின் அஃது இயலுவதன்று. குறுகிய நேரத் தேர்வுகள் நிகழ்வதால் மாணவர்கள் தமது உடலைமட்டு மின்றி உள்ளத்தையும் உருக்கிக் கொள்ளுகிறார்கள். அதனால் அவர்கள் படும்பாடு பார்க்கொணுதது. இதன் காரணத்தால் சிலர் நோய்வாய்ப் படுவதுமுண்டு. மாணவர்கள் சிலர் நல்ல கல்வியறிவு மிதூர்ந்தவராக இருந்தும் தேர்வில் தேர்வதற்குத் தவறிவிடுகிறார்கள். சாதாரணமான வர்கள் தமது விடைகளை எடுத்தியம்புதல் திறனோடு வரைந்து தேர்ச்சி பெற்றுவிடுகிறார்கள். இத்தகைய தேர்வு வாய்ப்புக்கள் பெற்றும் தமக்கென வாழ்வில் நுழைகையில் திறனைக் காட்டாது தவறிவிடு கின்றனர். ஆனால் கடை மாணுக்கர்கள் பலர் தமது வாழ்க்கைப் பணிகளில் திறமையோடு தெளிவும் பெறுகிறார்கள்.

இதனால் தேர்வுகளை ஒழித்துக் கட்டுவதுதான் நல்லதா என ஆராய் தல் வேண்டும். தேர்வுகள் வேண்டாமென்று கருதுவது தவறு. ஏனென்றால் அவற்றிற்குப் பதிலாக அறிவுலகம் வேறென்றினை வகுக்க வில்லை. கல்வியோடு தேர்வுகள் இயைபுடையன. நெடுங்காலமாகக் கற்பித்தலும் தேர்வு நிகழ்த்தலும் ஒன்றோடொன்று பிணைந்து வருகின்றன. புறத்தேர்வுகளால் போட்டிக் கேதுகள் வேண்டா

தொழியலாம். ஆனால் ஒரோவழி எவ்வகைத் தேர்வாயினும் வேண்டற்பாலது. ஏனென்றால் கற்றலையன்றிக் கற்பித்தலையும் அளவிடுதல் இன்றியமையாதது. தேர்வுகள் மாணக்கரின் அடைவினை மட்டும் அறிவதொன்றன்று. கற்பித்தல் திறனையும், தேர்வுகள் அறியக்கிடக்கின்றன. தேர்வுகளைக் கைவிடுவதென்றால் மாணவர்களுடைய தகுதிகளை அறிய முனையாது விடுத்தல் வேண்டும். கல்வி கற்கும் மாணவன்பால் சில பல மாறுதல்களை அவனுடைய உடலத்திலும் உள்ளத்திலும் கல்வி உண்டாக்குகின்றது. அவற்றை யாதாகினும் ஒரு வழியில் காணவேண்டும். அவற்றைக் காண்பதற்குத் தேர்வுகளேயன்றி வேறு வழிகள் இல. கற்பிக்கும் கல்வித்திறனைக் காண்பதற்கும் தேர்வுகளேயன்றி வேறு வழிகள் இல. தேர்வுகளால் மட்டுமே மாணவர்களுடைய நுண்ணறிவு, கற்ற கல்வியின் அளவு, திறன்கள் ஆகியவற்றை அளவிடுதலும் மதிப்பிடுதலும் முடியும். அவற்றை அறிந்தாலன்றிக் கல்வியின் தரத்தை உயர்த்த இயலாது. கல்வியின் பயன்களை அறிய வேண்டியது ஆளுமையைத் தரப்படுத்துவதற்கும் வேண்டற்பாலது. ஆளுமையை அறிந்து அளவிட்டாலன்றி ஆளுமைத்திறன் உயர்விற்கு அடிகோலுவது அரிது. நமது அரசாங்கம் ஒவ்வொரு பொறுப்புக்கும் ஒரு திறனை நாடுகின்றது. அங்ஙனம் திறன்களை அறிதற்குத் தேர்வுகளே உற்ற வழிகளாகும். எக்காலத்தும் மாணவருலகத்தில் தேர்வென்றால் பரபரப்பு நிகழ்வதுண்டு. அத்தகைய பரபரப்பு கல்வியின் வளர்ச்சிக்கு நல்லது. பரபரப்பையும் சுறுசுறுப்பினையும் உண்டாக்குகிறது. சுறுசுறுப்பினால் உள்ளம் ஒரு மனப்பட்டு ஆக்கம் தேடுகின்றது.

தேர்வுகள் ஆசிரியர் கற்பிக்கும் முறைகளுக்கு உதவுபவை. தேர்வு நிகழ்த்தும் ஆசிரியர்கள் தமது மாணவர்களைப் பற்றித் தனித்தனியாக அறியும் வழியினைப் பெறுகின்றனர். அங்ஙனம் பெறுவதனால் மாணவன் தனிக்குறை அறிந்து குறையை நிறை செய்தற்கான வழிவகைகளைக் கையாள இயலும். தேர்வுக்காலங்களில் பிள்ளைகள் தாமாகவே அறிந்து கொள்ளுவதற்கும் கற்றல் திறன்களை வளர்த்துக்கொள்ளுவதற்கும் வாய்ப்புண்டாகிறது. தாம் கற்றவற்றைத் திறமையோடு பயன்படுத்துவதற்கும் தெளிவு உண்டாகிறது. மாணவர்கள் தாமே தேர்வுகளின் பயனால் தமது திறன்களின் அளவுகளை அறிவதற்கும் தெளிவு உண்டாகிறது. இவற்றாலன்றோ தேர்வுகளைவிடாது கடைப்பிடிக்கின்றார்கள். எனவே தேர்வுகளின் இன்றியமையாமை தேற்றமாகும். தேர்வுகளின் குறைபாடுகளை நீக்கலாமேயன்றித் தேர்வுகளை வேண்டாமென்று தடுத்தல் சரியன்று.

தேர்வுகளின் குறைபாடுகளை நீக்குவதற்குப் பல வழிகள் ஆராயப் பெற்று வருகின்றன. நுண்ணறிவினை நுணுகி அறிவதற்கு நுண்ணறிவுத் தேர்வுகள் ஏற்படலாயின. பாடங்களில் பெற்ற அறிவினை அறிவதற்குப் பாடத் தேர்வுகள் பயன்படுகின்றன. திறனறி தேர்வுகள், நாட்டத்தேர்வுகள் இன்னோரன்ன இயற்றப் பெற்று நடைமுறையில்

கல்வியுலகத்துக்குப் பயன்படுகின்றன. இவையாவும் அமைப்புக்களே. பழைய குறைபாடுகள் நீங்கியுள்ளன. பெரும்பாலும் நாள்தோறும் நடைபெறும் பாடத்தில் கற்றவை ஒரு சிறிதும் விடுப்பாது பலவகை வினக்களின் வழியாகச் சில மணித்துளிகளில் சோதிக்கக்கூடிய தன்மை யுடையவை. அத்தகைய வினக்களின் வகை பல உள. அவற்றைத் தொகுப்பது ஆசிரியரின் முதற்கடன். பாடம் கற்பித்தபின் அவற்றைக் கொண்ட அச்சிட்ட தாட்களைப் பிள்ளைகளிடத்துக் கொடுத்து அவற்றின் விடைகளின் வாயிலாக அறிந்த திறனை எளிதில் அறிவதோடு கணக் கிட்டு அளவிட்டுத் தரம் படுத்தவும் வரிசைப்படுத்தவும் வழிகள் வகுத் துள்ளார்கள். மேலை நாடுகளில் எந்திரங்களே இவற்றைச் செய் கின்றனவாம். இங்ஙனம் நாள்தோறும் மாணவருடைய தரத்தை அறிந்து கொள்ளும் ஆசிரியரன்றோ நாள்தோறும் தமது முறைகளைத் தேவைக்கேற்றபடி மாற்றியமைத்துக் கொள்ளமுடியும். ஓர் அகவை யில் 25 மணித்துளிகள் பாடத்தைக் கற்பித்துவிட்டு எஞ்சிய நேரத்தில் இத்தகைய புதுமுறை வினக்களைப் பயன்படுத்தித் தேர்வு நடத்தினல் கிட்டும் பயன் பயனுடைத்தாகுமன்றோ! இத்தேர்வுகளில் மாணவர்கள் சரி தவறு என்ற விடைகளுள் ஏதாவது ஒன்றைத்தான் தர முடியுமே யன்றி வேறு தமது மனம்போன போக்கில் எதையும் எழுதி உளர முடியாது. ஆசிரியர் தமது மனம்போன போக்கில் விடைகளுக்கு மதிப்பெண்கள் தருவதற்கும் முடியாது. ஒன்று முழு மதிப்பெண்ணை யும் தரவேண்டும்; அல்லது மதிப்பெண் தராது நிறுத்திக்கொள்ள வேண்டும். பழைய தேர்வாசிரியர் பெருங் கேள்விகள் சிலவற்றைத் தேர்வுக்குத் தருவார். புதிய தேர்வாசிரியர் சிறிய கேள்விகள் பல வற்றைத் தருகிருர்.

நமது கல்வியாளர்கள் புறத்தேர்வுகளைக் கண்டிக்கிருர்கள். புறத் தேர்வுகள் பெரும்பாலும் பொதுத் தேர்வுகளேயாம். பொதுத் தேர்வு களுக்குப் பயிலும் மாணவர்கள் அத்தேர்வினையே குறிக்கோளாகக் கொள்கிருர்கள் என்று கண்டோம். இத்தேர்வுகளில் வெற்றி காண வழிகோலுவதே ஆசிரியரின் பெரும் பாரமாகிறது. மாணவர்களும் வெற்றியையே இலக்காக்கிக் கொண்டிருக்கிருர்கள். ஆசிரியர் தம் கடமை ஆகிய மாணவர்களுடைய உள்ளாற்றலை வெளிப்படுத்துவதை விட்டுப் புறத்தேர்வின் வினக்களுக்கு ஆற்றுப்படுத்தும் ஆற்றலை மிகுத்துக் கொள்ளுகின்ருர். இதனல் மாணவர்களுக்கிடையே வளரக் கூடிய படைப்பாற்றல் வளங்குன்றி வாடி ஒழிகின்றது. புறத்தேர்வு களின் முறைகளுக்கு, வகுப்பறை நடைமுறை இல்லாது வினக்களுக்கு விடைகளைமட்டும் தந்துதவினல் பிள்ளைகள் தாமாகவே தமது இல்லங் களில் அவற்றினை நெட்டுருச் செய்து தேர்வுகளில் நலங் காண்பார்கள். இத்தகா முறையன்ருே கல்வியாளர்களால் கண்டிக்கப்படுகிறது.

புறத்தேர்வுகளுக்கு ஈடுபாடு செய்தலே கடமை என்று கருதும் ஆசிரியர்கள் உணர்ச்சி வயப்பட்டுவிடுகின்ருர்கள். உணர்ச்சி வழி

கனி இருப்பக் காய்கவர்ந்தற்று என்றதற்கன்றே இலக்காகின்றது. இதனால் புறத்தேர்வுகளின் ஆட்சியினைக் குறைத்துப் பள்ளித் தேர்வுகளுக்குப் பயனளிக்க வேண்டுமென்று கருதுதல் இயல்பாகின்றது. தேர்வுகள், கற்பித்தல் முறைகளோடு இணங்கிவிட்டால் அவை பேய்க் கோலம் பூண்டு பள்ளிகளில் தாண்டவமாடா; மாணவர்களும் அவற்றால் அதிர்ச்சி கொள்ளமாட்டார்கள். அவை நாள்தோறும் நடைபெறுகின்ற நடைமுறைகளோடு நயம் பெற்றுவிடுதல் நன்று. எல்லா ஆசிரியர்களும் இதனை நன்கு உணருதல் வேண்டும். மேல்வகுப்புக்குத் தேர்ச்சி அளித்தல் ஓரிரண்டு தேர்வுகளில் முடிவுகளைக் கொண்டே ஆதல் முறையாகாது. நடைமுறையாக நாள்தோறும் நடைபெறும் தேர்வுகளை அடிப்படையாகக் கொண்டால் மாணவர்கள் இப்போது கொள்ளும் அதிர்ச்சியினைப் பெறுவதற்குப் பதிலாக இணக்கத்தினைப் பெறுவார்கள். இதற்காக நம் பள்ளிகளில் பல தேர்வுப் பதிவேடு ஒவ்வொரு மாணவனுக்கும் வேண்டும். இத்தகைய திறள் பதிவுகளால் ஒரு மாணுக்கன் ஊழ்வயத்தால் தேர்வு பெற்றுவிட்டான் என்று கூறுதல் பொய்யாகும்.

தொடர்முறை மதிப்பெண்கள் நம்பகம் வாய்ந்ததாக இருக்குமென்பதற்கு ஐயமில்லை. ஆனால் தேர்வுகளில் வெறும் [1] தகவல்களைமட்டும் சோதிக்காது உளவளர்ச்சியின் கூறுகளையும் சோதிக்க வேண்டும். சிந்தனையாற்றலைச் சோதித்தலும் வேண்டும். கற்றவற்றைப் பயன்படுமாறு ஆக்கிக்கொள்ளுதற்குரிய ஆற்றலையும் சோதிக்கவேண்டும். புறத்தேர்வு ஆசிரியர்கள் பெரும்பாலும் மாணுக்கர் நிலையினை அறியாதவராகின்றார்கள். அவர்கட்கு எளியதாகிய வினாக்கள் மாணவர்களுக்கு எளிதாகமாட்டா. எனவே புறத்தேர்வாசிரியர்கள் பள்ளி ஆசிரியர்களைக் கலந்து மாணவர்கள் தரத்தினையும் திறத்தினையும் அறிந்து வினாக்கள் குறிக்கவேண்டும். வாய்முறைத் தேர்வுகள் இற்றை நாட்களில் கைவிடப்பட்டுள்ளன. அவை வினாவுக்குரிய விடையினை நேர்முகமாகப் பெறக்கூடியவை. பிள்ளைகள் அறிந்தவற்றைத் தேர்வாசிரியர்கள் அப்போதைக்கப்போது அறியலாம். மாணவர்களுடைய விழிப்பு, உள்ளத்தார்வம், ஆளுமைத்திறம் ஆகியவற்றை நேரடியாக அறிந்து மதிப்பிட முடியும். இப்போது வரையும் தேர்வுகளோடு செயல்முறைத் தேர்வுகளையும் ஒரு பகுதி இணைத்தல் நன்று. இற்றை நாட்களில் பல பொருள்களை அறிந்தார் அவற்றைச் செயலாற்றுதற்குத் திறன் பெறுதலும் வலியுறுத்தப் பெறுகிறது. செயலாற்றுதற்குத் திறன் அற்றவர்கள் ஏட்டுப் படிப்பினர் ஆகின்றனர். ஒருசிலர் ஒவ்வொரு அடைவுத் தேர்வோடு நுண்ணறிவுத் தேர்வும் நிகழ்தல் நன்றென்று கருதுகிறார்கள். மாணவர்களுடைய கற்றல் திறன் அளவைக் கண்டறிய நுண்ணறிவுத் தேர்வு பயன்படும் என்பதற்கு ஐயமில்லை. நுண்ணறிவுத் தேர்வேயன்றி முன்னறிவுத் தேர்வும் பயன்படக்கூடும். ஒவ்வொரு

1. Facts

பாடமும் நடைபெற்றவுடன் ஒரு தேர்வினை நடத்துவது ஒரு முறை. ஆனால் ஆசிரியர் நினைத்தபோதெல்லாம் தேர்வுகள் நிகழ்த்தலாகாது. அல்லது எல்லாப் பாட ஆசிரியர்களும் அவரவர்கள் அகவையில் ஒரே நாளில் தேர்வுகளை நிகழ்த்துவதும் சரியல்ல. அவை பிள்ளைகளுக்கு அயர்வைத் தருமேயன்றி ஊக்கத்தையும் இழக்கச் செய்யும். ஆசிரியர்கள் கற்பித்துவிட்டால் மட்டும் ஆசிரியர் கடன் முடிந்ததாகக் கருதுவது தவறு. ஆசிரியர் கற்பித்தவுடன் மாணவர்கள் கற்றாலன்றித் தேர்வுக்கு இடமில்லை. தேர்வென்னும் கடமைக்காகத் தேர்வு நிகழ்த்தினால் தேர்வால் கண்டறிவதொன்றும் கிட்டாது. கற்பிக்கும் பாடங்களைப் பாகுபடுத்தி மாணவர்கள் அடைவுத்திறனைச் செம்மைப்படுத்தி அவர்கள் கற்றல் நிலையை அறிந்து தேர்வுகளை நடத்தினால் நன்மை உண்டு. நம்நாட்டில் ஆண்டாண்டுதோறும் ஒவ்வொரு நிலையிலும் தேர்வுகள் நடைபெறுகின்றன. தேர்வாசிரியர்கள் அவரவர்கள் பாடத்தில் பாடத்திற்குரிய மதிப்பீடுகளைத் தருகின்றார்கள். ஆனால் தேர்வுத்தாள்களின் திறனாய்வுகளைக் கல்விநிலையங்களுக்கு உதவிக் கற்றுத்தரு முறைகளை ஏற்றபெற்றி மாற்றுவதற்கு உதவலாம். ஒவ்வொரு தேர்வாசிரியரும் தேர்வுத் தாள்களை மதிப்பிட்டபிறகு தமது அறிக்கைகளைத் தலைமைத் தேர்வாசிரியருக்கு அனுப்புகின்றார்கள். அவர் எல்லாவற்றையும் திரட்டித் தமது கருத்தோடு சேர்த்து கல்வி நிலையங்களுக்கு உதவினால் ஆசிரியர்களுக்கு எத்துணையோ பயனுள்ளதாகும். சென்னை மாநிலக் கல்வித்துறையினர் முன்னர் அத்தகைய அறிக்கையைப் பள்ளி இறுதித்தேர்வுக்குப் பிறகு அனுப்பியிருந்தார்கள். அதைக் கண்ணுற்ற ஆசிரியர்கள் பலர் அதன் பொருள்களை உணர்ந்து மாணவர்களுக்கு நன்மையைப் பயந்தார்கள். ஒவ்வொரு நிலையிலும் புறத் தேர்வுகளின் அறிக்கை விரிவாகக் கிடைப்பின் ஆசிரியர்களும் மாணவர்களும் நன்மையைப் பெறுவார்கள்.

தேர்வுகளில் காணப்பெறும் குறைபாடுகளைப் பள்ளிகள் நீக்குகின்றனவா என்று கல்வித்துறையாளர்கள் கவனிக்க வேண்டும். அல்லது பள்ளித் தணிக்கையாளர், ஆசிரியர்க் கல்லூரியினர் ஆகியோர் இப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டு ஆவன செய்யவேண்டும். எந்தத் தேர்வுக்கும் ஏற்புடைமை வேண்டும். அது மதிப்பிடுவது யாது என்பதனைக் கொண்டே தேர்வு அமைதல் வேண்டும். அது நம்பகத் தன்மையோடிருத்தல் வேண்டும். பாடத்து வினாக்கள் பாடம் முழுவதை மட்டும் பரவியதாக அமையாமல் அது புறவயத்ததாகவும் இருத்தல் வேண்டும். வினாக்களில் அகவயத்தவை அகற்றப்படவேண்டும். குறிக்கோளுள்ள ஒரு தேர்வு நிலநடுக் கோட்டினைப்போன்று நடுநிலை வகித்தலும், ஓர் அளவைக் குடம் போன்று அளவிடுதலும், ஓர் வெப்பமானியைப் போன்று திருத்தமுறக் குறிக்காட்டுதலும் வேண்டும் என்று பல்லார்ட் ஐயம் திரிபற மொழிகின்றார். தேர்வுகளின்மீது எத்தகைய குறைபாடுகள் கூறினும் தேர்வுகள் கல்வித் தளத்தின் பலபடி நிலை

களைக் குறிப்பவை என்பதை மறுக்க முடியாது. ஒவ்வொரு படியினையும் தேர்வின் வழியாக மட்டுமே தகுதியோடு கடப்பது ஒழுங்கு முறை யாகும். கற்றல் முக்கியமேயன்றித் தேர்வுத்தடைகள் முக்கியமானவை அன்று. தேர்வுகள் தடைகளல்லாது துணைகளாயினும் நன்று. ஆசிரியர்களும் மாணவர்களைப் போன்று தேர்வுகளைப் பொறுக்கின்றனர் களல்லர். ஆனால் தேர்வுகளை நீக்கிவிடுதல் இயலாது. அவை வேண்டற் பாலவை. அவைதான் இங்கு ஒரு மதிப்பீட்டுக் கருவியாக உள்ளன. அவற்றைத் திருத்தி அமைக்க ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் எங்ஙனம் திருத்துவதென்ற முறையைத்தான் யாரும் காண வில்லை.

கற்றலைப்போன்றே தேர்வும் எளிதாகிவிட்டால் அல்லது கற்றலும் தேர்வும் இரண்டறக் கலந்துவிட்டால் தேர்வு தனித்து அச்சுறுத்தாது என்றும் புறத்தேர்வுகள் அதிகமாகக் கூடாதென்றும் ஒரு கருத்து நிலவு கின்றது. அகவயத் தேர்வுகள் ஆகாதென்றும் ஒரு சிலர் கருதுகின்றனர் கள். கட்டுரை வகையினால் காணும் பயன்கள் எத்துணையாயினும் அதன் அகவயக் குறைபாட்டினை அகற்ற முயலுகின்றனர்கள். அகவயத் தேர்வோடு புறவயத்தேர்வும் நிகழ்ந்தால் ஒப்புநோக்குதலும் சரிபார்த் தலும் அகவயத் தீமையை அகற்றுதலும் இயலும் என்று கருதுகின்றனர் கள். நெட்டுருச் செய்தலை நேர்மைக் கல்வி அல்லவென்று புறக்கணிப்ப தற்கு அறிவாற்றல் அடிப்படையில் தேர்வுகள் வேண்டுமென்கின்றனர்கள். பொதுப்பட ஒவ்வொரு பாடத்தையும் அறிவதே நிறைவு என்று நினைக் கின்றனர்கள். இஃதன்றி ஒரே நாளைக்குக் காலையில் மூன்று மணி நேரமும், மாலையில் மூன்று மணி நேரமும் மாணவர்களை வாட்டுதல் கொடுமை என்றெண்ணுகின்றனர்கள். மாணவர்களிடையே தேர்ச்சி புறத் தேர்வு களின் மதிப்பெண்களைமட்டும் கொண்டு கருதாமல் பள்ளியில் நடை பெறும் பல தேர்வுகளின் மதிப்புக்களையும் இணைத்துத் தேர்வளிக்க வேண்டுமென்று எடுத்துக்காட்டியுள்ளார்கள். எனவே புறத்தேர்வு களோடு பள்ளித் தேர்வுகளும் சமநிலை பெற்றுவிட்டால் பொதுவாகத் தேர்வுகளின் அபாய அறிவிப்பு நீங்குமென்றும் நினைக்கின்றனர்கள். பள்ளித் தேர்வுகளும் ஆண்டுக்கொருமுறை நிகழ்வதில் பயனில்லை. வாரத்திற்கொருமுறையாவது தேர்வுகள் நடத்துவதே நலம் என்று கருதப்படுகிறது. தேர்வுகள் அடிக்கடி நிகழ்ந்தால் அவற்றினை மாணவர்கள் பள்ளி நடைமுறையென்று கருதுவார்கள். பள்ளித் தேர்வுகளில் பெரும்பாலும் புதிய முறைகளைக் கையாளுவது நலமாகும். புதுமுறைகள் உண்மையான மதிப்பீட்டினைத்தர இயலும். எனவே பள்ளிகளில் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் பதிவேடுகள் வேண்டும். ஏட்டிலுள்ள மதிப்பெண்கள் மாணவருடைய குறைவு நிறைவுகளை விளக்கிக் காட்டும். பதிவேடுகள் பலவாகின்றனவென்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்கள். அவர்களுடைய நேரங்களெல்லாம் பதிவுகளில் வீணாகின்றன என்றும் நினைக்கின்றனர்கள். ஆனால் பதிவுகளைச் செய்து

வரும் ஆசிரியர் பெறும் இன்பம் அவருக்கே உரித்தாகும். அவற்றின் பயனை அவர் அடைந்து தமது ஆசிரியப் பணியைத் தலைசிறந்த தாக்கிக் கொள்ளக் கருதுவதே ஆசிரியர் கடமையாம்.

தேர்வுகளுக்கு இற்றை நாட்களில் மதிப்பினை எண்களாகத் தராது [1] ஐந்து புள்ளி அளவில் ஆங்கில நெடுங்கணக்கில் முதல் ஐந்து எழுத்துக்களைக் கொண்டு ஐந்து தரங்களாகப் பிரிக்கின்றார்கள்.

A என்ற எழுத்து மிக நல்ல விடைக்கும், B நல்ல விடைக்கும், C சராசரித்தரமுள்ள விடைக்கும், D தாழ்ந்த விடைக்கும், E மிகத் தாழ்ந்த விடைக்குமாக விடைகள் தரமாக்கப் பெறுகின்றன. எண்களாக அளித்தால் எந்த அளவுகோலைக்கொண்டு எண்கள் அளிக்கப் படுகின்றன என்று வினவுகிறார்கள். அங்ஙனம் வினவுவதிலும் பொருளுளது. ஒரு மாணவனுக்கு 100க்கு 45ம் மற்றொருவனுக்கு 47ம் அளித்தால் இருவருக்கும் உள்ள தகுதி வேற்றுமை இரண்டென்று கூறுவது பொருளற்றதாகின்றது. அதனால் ஐம்புள்ளி அளவில் மதிப்பீடு செய்கிறார்கள். இம்முறை மாணவர்களைத் தரப்படுத்துவதற்கும் நல்லதாகின்றது. இம்முறையால் ஆசிரியர்கள் தம் மனம்போன போக்கில் ஒன்றிரண்டு மதிப்பெண்களைக் குறைப்பதும் கூட்டுவதும் இயலாததாகிவிடும். ஆகவே விடைகளின் மதிப்புக்களைச் செவ்வனே அளிக்க இயலும்.

தேர்ச்சியும் தேக்கமும்

நம் பள்ளிகளில் முதலாவது வகுப்பில் சேரும் மாணவர்களுள் எத்துணைபேர் தொடக்கநிலைக் கட்டத்தின் இறுதியான ஐந்து வகுப்புக்களையும், இரண்டாவதாகப் பழைய எட்டு, அல்லது புதிய ஏழாவதையும் முடிக்கின்றார்கள். 5ஆவது வகுப்பு வரையில் இலவசக் கல்வி என்று வரையறை செய்யப்பெற்றுள்ளது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியிலாவது 6 முதல் 11 வயதுவரை உள்ள பிள்ளைகள் 100க்கு 100 எண்ணிக்கை தொடக்கநிலைக் கல்வி அளிப்பதற்கு நமது அரசாங்கம் ஏற்பாடுகள் செய்ய முனைந்துள்ளது. போதிய பள்ளிகளும் ஆசிரியர்களும் ஏற்பட்டாலன்றி 100க்கு 100 இயலாததாகும். அதனாலன்றோ கட்டாயக்கல்வி வற்புறுத்தப்பெறாது இருக்கின்றது. சிறுவர்களையும் சிறுமிகளையும் பள்ளி வசதிகள் உள்ள இடங்களுக்கு ஈர்க்க வேண்டியதாகிவிடுகிறது. குக்கிராமங்களில் பிள்ளைகள் சிறு பருவம் முதல் பெற்றோர்களோடு உழைத்துத் தமது வயிற்றுப் பிழைப்பைத் தேடிக்கொள்ளுகிறார்கள். அதனால் அவர்களுக்குப் பள்ளிப் படிப்பினைக் காட்டிலும் வயிற்றுப் பிழைப்பன்றோ முக்கியமாகின்றது. பள்ளியில் பயில்வதற்கு உடுக்கையே இல்லாது அல்லலுறுகின்ற பிள்ளைகள் வாரா. ஒருநாளைக்கொருவேளைகூட உணவின்மை, ஆடையின்மை, பசிப்

---

1. Five Point Scale

பிணி, வறுமை, பெற்ருேருடைய விருப்பின்மை ஆகிய பல காரணங்களால் பிள்ளைகள் பள்ளியை நினைப்பதே அரிதாகின்றது. இத்தகைய இடர்களைச் சிறிது சிறிதாக நீக்கிப் பிள்ளைகளை இப்போது பள்ளிகளில் சேர்க்கின்ருர்கள். சென்னை மாநிலத்தில் மூன்று பெரும் திட்டங்கள் மாநிலக் கல்வி இயக்குனர் உள்ளத்திலிருந்து உருவாகி வெளியாகி உள்ளது. அவற்றை நடைமுறையில் கொண்டுவந்து கல்வி நலம் காட்டி வருகின்றனர்.

1. மதிய உணவுத் திட்டம்.
2. சீருடைத் திட்டம்.
3. இராப் பள்ளித் திட்டம்.

இவை மூன்றும் கல்வி நிலையங்களுக்கு உறுதுணையாகிக் கல்விப் பெருக்கத்திற்கு வழி செய்து வருகின்றன. மதிய உணவுத் திட்டம் பகலுணவு இன்றி வாழும் குழந்தைகளுக்குப் பெரும் நன்மை செய்து வருகின்றது. உணவு கிடைக்காத பிள்ளைகள் பள்ளிகளுக்குச் செல்லுகின்ருர்கள். பகலுணவுக்காகவே படிக்கச் செல்லுகிருர்கள். உண்பதற்கு முன்னும் பின்னும் படித்துக் கல்விப் பயனைப் பெறுகின்ருர்கள். உடுக்க உடையில்லாத பிள்ளைகளுக்கு இரண்டாவது திட்டம் பயனளிக்கிறது. அப்போதைக்கப்போது பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளில் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஆண் பெண் இரு பாலருக்கும் சீருடை வழங்குகின்ருர்கள். இவற்றை அணிந்துகொண்டு உடையின்மையைப் போக்கிக் கொள்ளுகிருர்கள். இல்லங்களில் தகுந்த வசதி அற்ற பிள்ளைகள் பள்ளியிலேயே இரண்டு மணி நேரம் மாலையில் படிப்பதும் நடைபெற்று வருகிறது. ஒரு நாளைக்கு ஓர் ஆசிரியர் மேற்பார்வை செய்கிருர். பிள்ளைகளுடைய ஐயங்களைப் போக்குகிருர். பாடங்களைக் கற்பிப்பதோடு இம்மூன்று திட்டங்களும் பிள்ளைகளுடைய முக்கியமான இடுக்கண்களைப் போக்கியும் வருகின்றன.

நமது பள்ளிகளில் பள்ளிப் பதிவு செய்த பிறகும் வாராது நின்று வரும் நிலைமையினுல் வருகை குறைந்துவிடுகிறது. ஒழுங்காக வாராத பிள்ளைகள் ஒழுங்காகப் படிக்க இயலுவதில்லை. பள்ளிப் பாடங்களில் பிற்போக்கடைகின்ருர்கள். அங்ஙனம் பிற்போக்கடைந்தார் தேர்வுகளில் தவறிவிடுகின்ருர்கள். அத்தகைய மாணவர்கள் ஒரே வகுப்பில் தங்கிவிடுகிருர்கள். அல்லது முந்திய ஆண்டுகளில் அரையும் குறையுமாக விலகியவர்கள் மீண்டும் வந்து படித்த வகுப்பிலேயே சேர்ந்து படிக்கின்ருர்கள். இங்ஙனம் தேக்கக் காரணங்கள் பலவாகும். ஒவ்வோராண்டு இறுதியிலும் ஆண்டுத் தேர்வுகள் நடைபெறுகின்றன. தேர்வுகளில் ஒரு வகுப்பிலுள்ள எல்லாப் பிள்ளைகளும் தேர்வு பெறவேண்டும். ஒவ்வொரு வகுப்பிலும் 40 மாணவர்களில் பதின்மராவது தேர்வு பெறுவதில்லை. அதனுல் அடுத்த ஆண்டிலும் அதே வகுப்பில் தேங்கிவிடுகின்ருர்கள். இத்தகைய தேர்வுப் பெருமையே தேக்கம் எனப்படும். இங்ஙனம் நிகழ்வதைத் தடுப்பதற்குப் பல முறைகள் கையாளப்படுகின்

றன. தேர்வுகளில் பிள்ளைகள் ஏன் தவறவேண்டும் என்று ஆசிரியர்கள் இற்றை நாட்களில் சிந்திக்கின்றூர்கள். பல தேர்வுகளில் பிள்ளைகள் பால் காணப்பெறும் குறைகளை அப்போதைக்கப்போது கண்டறிந்து நீக்க முயல்கின்றூர்கள். தேர்வுகளில் தவராவண்ணம் பல வழிகள் மேல் நாடுகளில் கையாளப் பெறுகின்றன. ஆங்கே தவறுபவர்கள் வெகு குறைவு. அதே முறைகளை நம் நாட்டிலும் கைக்கொண்டால் நம் பள்ளி வகுப்புக்களில் தேர்வுத் தவறுகளால் தேக்கம் ஏற்படாது.

தேக்கத்தினுல் பணமும் காலமும் வீணுகின்றன. ஆனுல் பிள்ளை கள் சிலர் இளம் பருவத்தில் தவறியும் தேக்கம் பெற்றும் தேறி வந்தால் குமரப் பருவத்தில் நுண்ணறிவு வளர்ச்சி பெற்று அவர்களுக்கு அடைவுத்திறன் அதிகமாகிறது. அதனுல் மாணவர்களுக்குத் தொடக்க நிலையிலேயே கண்டனம் செலுத்தி பள்ளியை விட்டு நீக்கிவிடக் கூடாது. வயது சென்று முதிர்ச்சி பெறக்கூடிய பிள்ளைகளுக்கு இத்தேக்கத்தினுல் தீமையுண்டாகும்.

பள்ளித் தேர்வுகள்

மாணவர்களைப் பாகுபாடு செய்து வகுப்புக்களாகப் பிரித்து அவரவர்களுடைய நிலைக்கேற்ப அவரவர்களைப் பொருத்திய பிறகு அவர்கள் திறமையாற்றலுக்குற்ற கல்விப் பயனை அளித்து முற்போக்குக்கும் அவரவர்களுக்கு ஏற்ற உயர் நிலைகளுக்கும் செலுத்த வேண்டியது பள்ளியின் கடமை. எனவே பிள்ளைகள் பாட ஏற்பாட்டில் படிப்படியாக முன்னேறுவதற்கு வேண்டிய வகைகளைப் பள்ளிகள் ஆண்டுக்கொரு முறை தேர்வுகளின் வழியாக வகுத்துள்ளன. ஆண்டுதோறும் பிள்ளைகளுக்குத் தேர்வளிப்பது ஊக்கமளிக்கக் கூடிய ஒரு வழியாகும். பிள்ளைகள் மட்டுமின்றிப் பெற்றேர்களும் ஊக்கம் பெறுவார்கள். ஆனுல் தேர்வில் தவறிவிட்டால் பிள்ளைகள் துன்பப்படுகின்றனர். அவர்களுடைய பெற்றேர்கள் தவறிய பிள்ளைகளுக்கு மேல் துன்பப்படுகின்றனர். ஒரோவழி தவறியவர்கள் புதிய ஆற்றலோடு தமது குறைகளை நீக்கி நிறைவு பெறுகிறுர்கள். ஆனுல் மேனுடுகளில் நிகழ்ந்த ஆராய்ச்சியில் தேர்வில் தவறிய பிள்ளைகள் பயன்பெறுவதில்லையாம். அதனுல் பிள்ளைகளை ஒரே வகுப்பில் தேக்குவது சரியல்லவென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறுர்கள்.

வேறெரு வகைப் பள்ளிகள் உள்ளன. அவை ஒரு வகுப்புப் பிள்ளைகளை அதே வகுப்பில் எல்லாப் பாடங்களுக்கும் அமர்த்திக் கற்பிக்காது அவரவர்கள் திறமை வளர்ச்சியை நோக்கிமேல் வகுப்புக்களுக்கு அந்தந்தப் பாடங்களுக்காக அனுப்பிப் பயன் அளிக்கிறுர்கள். உதாரணமாக எட்டாவது வகுப்பு என்று எடுத்துக் கொள்வோம். அதில் படிக்கும் பிள்ளைகள் சிலர் ஆறுவது வகுப்பு ஆங்கில அறிவைப் பெற்றுள்ளதாகக் காணப்பட்டால் அவர்களை ஆங்கில அகவையில் ஆறுவது வகுப்புக்கு அனுப்பி அங்கு கற்றுக்கொடுப்பதைக் கற்றுக்கொள்

ளச் செய்யலாம். எட்டாவது வகுப்பில் படிக்கும் சில பிள்ளைகளுக்கு ஒன்பது அல்லது பத்தாவது வகுப்புக் கணக்கைக் கற்றுக்கொள்ளும் ஆற்றல் இருந்தால் அவர்களைக் கணக்கு அகவையில் அந்த வகுப்புக்குச் சென்று கற்க ஏற்பாடு செய்யலாம். இத்தகைய திட்டப்படி ஒரே அகவையில் ஒரே பாடம் பள்ளி முழுவதும் நடைபெற்றால் பிள்ளைகள் ஒரு வகுப்புக்குரியவர்களாயினும் பலவகுப்புக்களுக்குச் சென்று அவரவர்கள் தரத்திற்கும் திறமைக்கும் ஏற்பத் தமது வகுப்பிலேயே தயக்கமுறாமலும் தேக்கமுறாமலும் வகுப்பு வேறுபாடின்றியும் தமது தகுதிக்கு ஒத்த வகுப்பில் அமர்ந்தும் கற்கலாம். இத்தகு முறையை நம் பள்ளிகள் சோதனையாகச் செய்து பயன்களைப் பெறலாம். எந்தப் பாடத்தைக் கற்றாலும் பிள்ளைகள் தமக்கு அஃது எளிதாக இருந்தாலன்றிக் கற்றல் நிலையைக் கடைப்பிடிக்கமாட்டார்கள். அதனால் இம்முறை ஓரளவு நன்மை பயக்கக்கூடியது. இப்போதுள்ள நிலையிலும் பள்ளி இறுதி வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பிள்ளைகள் கீழ்த்தரமாக இருந்தால் சிறப்புத் தனி வகுப்புக்களில் சிறிய வகுப்புப் பாடங்களை எல்லாம் திருப்பிக் கற்பித்துத் தரத்தை உயர்த்தலாம். இத்துணை வழிகளில் ஆசிரியர் முயன்றாலன்றிப் பிள்ளைகள் தேர்ச்சி பெறுவதில்லை. பல தரமுள்ள பிள்ளைகளுக்கு ஒரே முறையில் கற்பித்தால் பிற்போக்குப் பிள்ளைகள் தேர்வுகளில் தவறுவதில் வியப்பில்லை.

சில பள்ளிகளில் தேர்வுகள் நடத்தினாலும் பிள்ளைகளை ஒரே வகுப்பில் தேக்குவதில்லை. பிள்ளைகள் தேக்கத்திற்கு யார் காரணம் என்று வினவுவார் உளர். ஆசிரியர் பிள்ளைகளைச் சுட்டுவார்கள். ஆனால் கல்வியாளர்கள் ஆசிரியர்களே காரணம் என்று கூறுவர். ஆசிரியர், மாணவர்கள் ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டாலன்றித் தாம் கற்பித்ததாகக் கருதுவது தகுதி அன்று என்று கூறுவர். எனவே கற்காத பாடம் கற்பியாத பாடம் என்பர். அதனால் மாணவர் பொறுப்புக்களை ஆற்றுதற்கு ஆசிரியர் பொறுப்பேற்கவேண்டும். ஆசிரியர் சிலர் இவ்வகையில் எடுத்துக் காட்டாக விளங்குகிறார்கள். அவர்களுடைய பாடம் எதுவாயினும் அதில் எல்லாப் பிள்ளைகளையும் தேர்ச்சி பெறச் செய்துவிடுகின்றார்கள். அவர்களன்றோ நல்லாசிரியர்கள். அத்தகையோருடைய வகுப்புக்களில் பிள்ளைகள் இகழ்ச்சி பெறமாட்டார்கள். முற்போக்கில் முனைவார்கள்.

இன்றைய தேர்வு முறைகள் பலதிறப்பட்டவை. ஆண்டுத் தொடக்கம் முதல் இறுதி வரை ஆசிரியர்கள் முனைந்து தத்தமது பாடங்களைக் கற்றல் நிகழும்படியாகக் கற்பித்தால் எல்லாப் பிள்ளைகளும் தேர்ச்சி பெறுவார்கள் என்பது கூறாமலே விளங்கும். அது நடைமுறையில் இல்லா தொழிவதால் தேர்வு அறிவிப்புக் காலங்களில் பல இடர்ப்பாடுகள் நிகழா நிற்கின்றன. நல்ல சில பள்ளிகளில் தேர்வுச் சிக்கல் என்றுமே எழாது. ஆசிரியர்களும் ஒழுக்கமற்றுத் தேர்வுக் காலங்களில் நடந்து கொள்ள மாட்டார்கள். எல்லாச் சிக்கல்கட்கும்

ஆசிரியர்களே வித்திடுபவர்கள். தேர்வு வினுக்களை ஒரு சிலர் தமது அந்தரங்க மாணவர்களுக்கு வழங்கியிருந்தால் அச்செய்தியும் தேர்வு அறிவிப்புக் காலத்தில்தான் வெளிவரும். அல்லது ஓர் ஆசிரியர் குறிப்பிட்ட ஓரிரு மாணவருக்கு மதிப்பெண்கள் தகுதிக்குமேல் வழங்கி இருந்தால் அச்செய்தியும் தேர்வு அறிவிப்புக் காலத்தில்தான் வெளியிடப் பெறும். தலைமையாசிரியர் மீதும் பழி சுமத்தப்படும். பழிகளும் குற்றச் சாட்டுகளும் பெரும்பாலும் பொருளற்றவையாகவே இருக்கும். ஆயினும் ஒழுக்கமற்ற சில ஆசிரியர்கள் பலவிதக் கிளர்ச்சிகளை உண்டு பண்ணிவிடுவது வழக்கம். தேர்வு பெருத மாணவர்களைத் தூண்டி விடுவதும் உண்டு. ஆசிரியர்களுடைய ஒழுக்கம் எதுவாயினும் தலைமையாசிரியர் மட்டும் மாசுமறுவிலரேல் எக்கிளர்ச்சியையும் தடை செய்யமுடியும்.

தேர்வுக்கு மதிப்பெண்கள் திட்டமிடுவதில் ஆசிரியர்கள் தமது தன்னலத்தை நாடுவது வழக்கம். தாம் விரும்பும் பிள்ளைகள் பெற்றுள்ள மதிப்பெண்களை வரம்பாகக்கொண்டு தேர்வுத்திட்ட மதிப்பெண்களை வற்புறுத்துவார்கள். அவர்கள் காரியம் தீர்ந்துவிட்ட பிறகு எதைப் பற்றியும் கவனிக்கமாட்டார்கள். இச்செயல்பாடுகளில் தலைமையாசிரியர் மிக விழிப்பாக இருத்தல் வேண்டும். பள்ளித்தரம் உயரவேண்டுமானல் தேர்வு மதிப்பெண்களின் சதவீதம் ஆண்டுதோறும் உயரவேண்டும். அல்லது சராசரி விகிதத்திற்காவது குறையாமல் குறிக்கவேண்டும்.

பிள்ளைகளுக்குத் தேர்வளிக்கும்போது தனித்தனிப் பிள்ளையின் தகுதியை அறிந்து தேர்வளிக்கவேண்டும். சிலர் பாடங்களில் மதிப் பெண்கள் குறைவாகப் பெற்ருலும் ஏனைய ஆளுமைத் தகுதிகளை அறிந்து அவர்களுக்குத் தேர்வளிக்கின்ருர்கள். எல்லாப் பிள்ளை களுக்கும் ஒரே தகுதியை நிர்ணயித்து மதிப்பெண்கள் திட்டமிட்டால் வேறு பல திறன்கள் உள்ள பிள்ளைகள் தவறிவிடுவார்கள். இத்தருணத் தில் திரட்டுப்பதிவேட்டில் உள்ள குறிப்புக்கள் பல நிலையில் உதவும். தனித்தனிப் பிள்ளைகளின் திறன்களையன்ருே நாம் இன்று அறிய வேண்டுமென்று உளநூலார் வற்புறுத்துகின்றனர். அவர்களின் தனி ஆளுமை வளர்ச்சியன்ருே கணிக்கப்படுகிறது. பல பிள்ளைகளுக்குத் தேர்வுகள் அளிக்கும்போது பள்ளியின் பொதுத் தரத்தைத் தாழ்த்தி விடக்கூடாது. ஒரு நிலையிலிருந்து அதற்கடுத்த உயர்நிலைக்கு வேண்டிய தகுதிகள் உள்ளனவா என்று மதிப்பெண்களின் வழியாக ஆசிரியர்கள் அறிகின்ருர்கள். எனவே மதிப்பெண்கள் கூடியதாக வேண்டும். ஆசிரியர்கள் கூடிப் பிள்ளைகளை மேல் உயர்நிலைக்கு மாற்றிய பிறகு அவர்கள் தகுதியற்றவர்கள் என்று பறைசாற்றுவது ஒரு பழக்கமாக உள்ளது. தேர்வளிக்கும்போது ஆசிரியர்கள் வள்ளல் களைப் போன்று தேர்வுகளை வழங்கிவிட்டுப் பின்னர் பிள்ளைகள் மீது குறை கூறுவது தம்மையே குறை கூறுவதற்கு ஒப்பாகும். பிள்ளைகள் ஆண்டு இறுதித் தேர்வில் மட்டும் தமது பூப்பு நிலையைக் காட்டிவிட

முடியாது. ஆண்டு முழுவதும் அவரவர்கள் வகுப்புக்கு ஏற்ப முதிர்வு நிலையைப் பெறுதல் வேண்டும். இதை ஆசிரியர் திரட்டுப் பதிவேட்டைக் கொண்டும் அவரவர்களுடைய பேரேட்டுக் குறிப்பைக் கொண்டும் அறிந்து அப்போதைக்கப்போது ஆவன செய்யலாம். இக்குறிப்புக்கள் ஆணித்தரமாக ஒவ்வொரு பிள்ளையைப் பற்றியும் எடுத்துரைக்கக் கூடியவை. வெறும் மதிப்பெண்கள் என்றால் அவை எந்த அளவைக் குறிக்கின்றதென்று நாம் திட்டவட்டமாக அறிந்து கொள்ள முடியாது. பிள்ளைகள் நாள்தோறும் தமது தகுதிகளை அறிந்துகொள்ளும் வாய்ப்பினை வழங்கினால் அவர்கள் தமது திறமையை உயர்த்திக் கொள்ளுவதற்கு முயற்சிப்பார்கள். பெற்றோர்களுக்கு அறிவிக்கும் அறிவிப்புக்கள் வெறும் மதிப்பெண்களோடு நின்று விட்டால் பலர் தமது பிள்ளைகளின் திறமைகளை அறியமுடிவதில்லை. அத்தகைய அறிவிப்புக்களில் பெற்றோர்களிடம் ஆசிரியர்கள் எதிர்பார்ப்பது என்ன என்பதை அடிக்கடி விளக்கவேண்டும். ஆசிரியர்களும் முற்போக்குப் பெறாத பிள்ளைகளைக் கண்டனஞ் செய்துவிட்டு விடுவது தவறாகும். ஆண்டு முழுவதும் அவர்களுடைய குறைகளைக் களைந்து கொண்டே வந்தால் நிறைவு பெறுவது திண்ணம். பிள்ளைகள் தமது தேர்வுகளை அறிவதற்குத் தாம் ஒரு சிறிதும் அச்சப்பட வேண்டியதில்லை. தமது தேர்வினைத் தாமே அறிந்து கொள்ள வேண்டிய தன்னம்பிக்கையை வளர்க்கவேண்டும்.

பெரும்பாலும் பள்ளிகளில் ஆண்டுக்கொருமுறை தேர்வுகள் அளிக்கப் பெறுகின்றன. அதுவே தொன்றுதொட்ட முறையாக நீடித்துள்ளது. பள்ளித் திட்டத்திற்கும் அது சிறந்ததாகக் கருதப் படுகிறது. பாடங்களில் ஒரு குறித்த அளவையைப் பிள்ளைகள் அறிந்து கொள்ளுவதற்கு ஓராண்டு காலமாவது வேண்டுமெனக் கருதுகிறார்கள். பிள்ளைகளும் தமது ஏற்றத் தாழ்வுகளைச் சரிப்படுத்த ஓராண்டு தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. ஓராண்டாவது பழகினாலன்றி ஆசிரியர் பிள்ளைகளை நன்கு அறிந்து கொள்ளுவதோடு அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முடியாது. ஓராண்டினை இரு பிரிவு களாகப் பிரித்து மீத்திறம் பெறும் பிள்ளைகளை ஒரு பிரிவு முடிந்தவுடன் மேல் வகுப்புக்குத் தேர்வளிப்பதும் பிற பிள்ளைகளை ஓராண்டு கழிந்த பிறகு மேல் வகுப்புக்குரியவராக்குவதும் ஓர் பழக்கம் உண்டு. இம் முறையினால் பாடங்களில் எளிதில் முதிர்வு பெறும் பிள்ளைகள் ஆண்டு முழுவதும் தேங்கிக்கிடக்காமல் அவர்களுடைய திறமையை நாடி உயர் வகுப்புக்களுக்குத் தம்மை உரியவர்களாக்கிக் கொள்ள முடியும். இம்முறையினால் ஓரளவு மீத்திறம் பெற்ற பிள்ளைகள் அவர்கள் செல்லும் வேகத்தில் செல்ல இயலும். அவர்களே ஒரு வகுப்பில் திறமை இழந்து விட்டால் அவர்களும் தயங்கிச் செல்லலாம் அல்லவா?

இம்முறையை ஒட்டிய மற்றொரு கருத்தும் உலவுகிறது. கல்வி ஆண்டுக்கு ஒரு முறை தேர்வுகள் அளிக்காது இருமுறை அளித்

தால் பிள்ளைகள் விழிப்போடு தமது தகுதிகளை வளர்த்த வண்ணமாக இருப்பார்கள். இம்முறையின்படி ஒவ்வொரு வகுப்பையும் இளமைப் பிரிவு முதுமைப் பிரிவு என்று பிரிக்கவேண்டிய நிலையுண்டு. இதற்குரிய திட்டங்களை வகுக்கப் பள்ளிகள் முற்படவேண்டும். சில தொடக்க நிலைப்பள்ளிகளில் இம்முறையைக் காணலாம்.

பல ஆண்டுகளுக்கு முன் சில மீத்திறம் பெற்ற பிள்ளைகளுக்கு இரட்டைத் தேர்வளிப்பது வழக்கமாக இருந்தது. அத்தகைய பிள்ளைகளின் தகுதிகளைக் கல்வித் தணிக்கையாளர் ஒப்புதல் செய்வதுண்டு. ஆனால் அத்தகைய முறை இன்றைய கல்வியாளர்களுடைய தத்துவங்களுக்கு முரணாகும். அன்று அத்தகைய பிள்ளைகளின் பாடத் திறன்களை மட்டுமே இரட்டைத் தேர்வுக்காகக் கவனித்தார்கள். இன்று பாடத் திறன்களோடு அத்தகைய பிள்ளைகள் அந்தந்த நிலைக்கு வேண்டிய அறிவு முதிர்வும் சமூகப் பொருத்தப்பாடும் பெற்றிருக்க வேண்டியது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. அல்லாவிட்டால் மீத்திறம் பெற்ற பிள்ளைகள் இளைஞராக இருந்தால் அவர்கள் உயர் வகுப்புகளிலுள்ள முதிர்வு பெற்ற பிள்ளைகளோடு பழகுதல் திண்ணம். அதனால் இரட்டைத் தேர்வளிப்பதற்கு முன் அதற்குரிய பிள்ளைகளுக்கு ஏனைய திறன்கள் உள்ளனவா என்று அறியவேண்டும். இற்றை நாட்களில் இரட்டைத் தேர்வுகள் வழங்குவது நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் கைவிடப் பட்டுள்ளது. மேலும் அது புதிய கல்விக் கொள்கைக்கு மாறானது. புத்தகப் புழுக்களாக விளங்கும் மாணவர்கள் ஒரோவழி பள்ளிப் பாடங்களில் மீத்திறம் பெறலாம். ஆனால் அவர்கள் தமது உடல் உள்ள வளர்ச்சியும் வேறாக நிற்றல் பொருந்தா.

ஆண்டு இறுதியில் பிள்ளைகள் எல்லாப் பாடங்களிலும் கூடிய மதிப்பெண்கள் பெற்றாலன்றி அவர்களுக்குத் தேர்வளிப்பதில்லை. பள்ளிப் பாடங்கள் ஐந்தென்றால் ஒவ்வொரு பாடத்திற்கும் சமத்துவம் கொடுப்பார்கள். எந்தப் பாடத்திலாவது குறைந்த மதிப்பெண் பெற்றாலும் தவறிய பிள்ளைகளுக்குத் தேர்வளிக்க மறுத்துவிடுவார்கள். ஓரிரண்டு எண்கள் குறைந்தாலும் தேர்வு தருவதில்லை. பண்டை நாட்களில் இது ஆசிரியர்களின் கொடுமை. ஒரு பாடத்தில் இரண்டு மதிப்பெண்கள் குறைந்ததற்காக மீண்டும் ஓராண்டு நன்றாகக் கற்ற பாடங்களையும் படிக்க வேண்டிய கட்டாயம் இன்று முளதென்பது கண்கூடு. இதனால் பிள்ளைகள் இரண்டாம் ஆண்டு படிப்பின்மீது நாட்டம் குறைவுற்று அவர்களுக்குள்ள ஆற்றல் மட்கிவிடுமன்றோ! இக்காரணத்தால் ஒரே வகுப்பில் தேக்கம் பிள்ளைகளுக்கு ஊறு செய்யும் எனக் கருதுவது நோக்கத் தக்கது. சில பாடங்களில் அதிகத் திறமை அத்தகைய தவறிய பிள்ளைகள் பெற்றிருந்தால் அவர்கள் அத்திறமையில் குறைந்துவிடுவார்கள். இதனால் ஓரிரு பாடங்களில் தவறினாலும் அப்பிள்ளைகளுக்கு மேல் வகுப்புத் தேர்வளித்துத் தவறிய பாடங்களை ஓராண்டு இறுதிக்குள் நிறைவு காட்டுமாறு எச்சரிக்கை விடுத்துத் தேர்வளிக்கலாம். அங்ஙனம்

தேர்வு பெற்ற பிள்ளைகள் புத்தார்வங் கொண்டு மீத்திறம் பெற்றவர்களையும் மிஞ்சிவிடுவார்கள். எனவே ஓரிரு பாடங்களில் தவறினும் தேர்வு தந்து விடுவது நன்று.

அமெரிக்காவில் ஆளுமையை நோக்கிச் சில பள்ளிகளில் தேர்வுகள் ஆண்டுதோறும் எல்லாப் பிள்ளைகளுக்கும் அளிக்கின்றனர்கள். பாடங்களின் திறமை மட்டும் முக்கியமன்று. ஓராண்டு முழுவதும் ஒரே தரமுள்ள பிள்ளைகள் ஏறக்குறைய ஒரே வயதுடையவர்கள் பள்ளிகளில் பயிற்சிபெற்று சமூகப் பண்பாடுகளை வளர்த்துக் கல்வியுங் கற்று எந்த வகுப்பிலும் தேக்கம் இல்லாது மாணவர்கள் எல்லோரும் தொடக்க நிலை முதல் இறுதிநிலை வரையில் பள்ளி ஆண்டுகளைக் கழித்து வெளியேறுகிறார்கள். இத்தகைய பள்ளிகளில் முழு ஆளுமை வளர்ச்சியே முக்கியமாகும். அவ்வளர்ச்சிக்குப் பள்ளிகள் சிறிதும் தவறாது வேண்டிய எல்லாப் பயிற்சிகளையும் அளிப்பதோடு அப்பயிற்சிகளை மாணவர்கள் பெறுவதை அப்போதைக்கப்போது கண்டு பிழையைத் திருத்திக் குறைவை நிறைவுபடுத்தி அவரவர்களுடைய தேவைப்பாடுகளை அறிந்து ஆவன செய்து பிள்ளைகளோடு நல்லுறவு பூண்டு கற்பிக்கும் முறைகளை வேண்டியவாறு மாற்றிப் பிள்ளைகளுடைய மீட்சியைக் கண்காணித்து நடத்தினால் தேர்வில் தவறுவதற்கு வழியில்லை.

பிள்ளைகளுக்கு வளர்ச்சி அளிக்க வேண்டிய பொறுப்பு பள்ளிகளுடையதென்பதை முதற்கண் ஆசிரியர்கள் உணரவேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் தேர்வில் தவறிய பிள்ளைகளுடைய அவலக் காட்சி, தோல்வியால் அடைந்த உடைந்த மனம், பள்ளியின் மீது வெறுப்பு, கல்வியின்மீது காழ்ப்பு எல்லாம் ஆண்டுக்கொரு முறை நிகழ்வன. தேக்கம் பெற்ற பிள்ளைகள் தமது மதிப்புக் குன்றி நல்வழியை நீத்துத் தீயவழியில் திளைக்க முற்படுகிறார்கள். பெற்றோரும் உற்றோரும் அவர்களைப் புறக்கணிக்கிறார்கள். அத்தகைய நிலை உற்றால் வருங்காலச் சமூகம் எவ்வளவு பாழ்படும் என்பது கூறாமலே விளங்கும். ஒரு முறை தவறிய பிள்ளைகள் மீண்டும் மீண்டும் தவறினால் பள்ளியிலிருந்து விலகிவிடுகிறார்கள். பிழைக்கும் பல வழிகளை நாடுகிறார்கள். பிழைப்பும் கிட்டாவிட்டால் தீயவர்களாக மாறிவிடுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் ஆசிரியர்கள்தான் என்பதை அறியவேண்டும். ஆசிரியர்கள் தமது விருப்பு வெறுப்பை ஒட்டி வகுத்த திட்டப்படியும் அல்லது நிரந்தரமாக வகுத்த ஒரு திட்டப்படியும் தேர்வுகளைக் கணித்தால் அவற்றிற்கு உட்படாத பிள்ளைகள் எல்லாம் தவறியவர்களே ஆவார்கள். அவரவர்கள் உளவளர்ச்சிக்கேற்பக் கற்பித்துத் தேர்வு நடத்தவேண்டியது ஆசிரியர்கள் கடமை. அல்லாது பிள்ளைகளை மந்தைகளாகக் கருதி மந்தைக்குரிய முறைகளைச் செயல்படுத்திக் கற்பித்தாலும் தேர்வு நடத்தினும் பிள்ளைகள் பல துன்பங்களுக்காளாகின்றனர்கள்.

26. வீட்டு வேலை

பள்ளியில் வேலை போதாதா? வீட்டிலும் பிள்ளைகளை வேலைகள் செய்யச் செய்ய வேண்டுமா என்று கருதும் கல்வியாளர்களே உளர். காலையில் தொடங்கும் பள்ளி மாலையிலன்றோ முடிவடைகின்றது. அதனால் பிள்ளைகள் சிறிது நேரங்கூட விளையாடுவதற்குப் பள்ளி விடுவதில்லை. கால அட்டவணை கடுமையாக அமைந்திருப்பதால் பிள்ளைகள் அதிலிருந்து தப்பித்தல் கடுமையாகின்றது. எனவே வேலை நாட்களின் பகல் நேரத்தில் பிள்ளைகளுக்கென ஒரு நேரம் இருப்ப தில்லை. பள்ளி நேரம் மட்டும் ஆறு மணிக்குக் குறையாமல் அமை கின்றது. பள்ளி விளையாட்டுக்கென $1\frac{1}{2}$ அல்லது 2 மணி நேரங்கள் சில பள்ளிகளில் கழித்தாக வேண்டும். உண்மையில் அந்நேரம் பிள்ளை விளையாட்டுக் கல்லாது பள்ளி விளையாட்டுக்கே அமைக்கப்பெற்றுள்ளது. எனவே எட்டு மணி நேரத்திற்குக் குறையாது பிள்ளைகள் பள்ளிகளில் கழிக்கின்றனர்கள். பிள்ளைகளின் இல்லச் சூழ்நிலைகள் பல வசதிகள் அற்றிருக்கின்றமையால் அவர்கள் காலையில் உணவருந்தியவுடன் பள்ளிக்குப் புறப்பட்டுவிடுகின்றனர்கள். அந்நேரத்தில் பள்ளி வாயில் அடைபட்டிருக்கும். அதனால் பள்ளியின் வெளிப்புறங்களில் பள்ளி திறக்கும் வரையில் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அல்லது பள்ளியின் வெளிவாயில் திறந்திருந்தால் பள்ளிக்குள் சுற்றுவதும் விளையாடுவதும் இரைச்சலிட்டு எக்களிப்பதுமாகக் காட்சியளிக்கின்றனர்கள். பலருடைய இல்லங்கள் மிகச் சிறியவை. சிறு அறைகளில் ஐவர் அல்லது அறுவர் குடியிருப்பார்கள். நகர்களிலும் பட்டணங்களிலும் ஓர் இல்லத்தில் பத்துக்கு மிக்க குடும்பங்கள் வசிப்பார்கள். அவர்கள் வசிக்கும் இல்லங்கள் மிகவும் குறுகியவை. வீதிகளில் சிறுநீர் கழிப்பு அசுத்தங் கள் இருப்பதால் சிறுபிள்ளைகள் எங்ஙனம் ஓடி விளையாடுவார்கள். இரவில் ஏழைக்குடும்பங்களில் ஒரே விளக்குத்தான் எரியும். அந்த வெளிச்சமும் போதாதது. பள்ளிப் பிள்ளைகள் அத்தகைய குடும்பங் களில் அவர்கள் ஓரிடத்தில் உட்கார்ந்து படிப்பதற்கு இடமும் இராது. படிக்க வெளிச்சமும் போதாது. இந் நிலையில் பிள்ளைகளுக்கு வீட்டு வேலை என்ற சிக்கலை அலசி அறியவேண்டும்.

பிள்ளைகள் பள்ளிகளில் கற்பது போதாதா? கற்கும் சூழ்நிலைகள் இல்லங்களில் இராத நிலையில் எங்ஙனம் பிள்ளைகள் தாமாகவே கற்றல் இயலும்? பள்ளியில் அவரவர்க்குரிய பணிகளைப் பள்ளியிலேயே செய்து முடித்தல் போதுமானது. இவற்றோடு இல்லத்தில் 'செய்யவேண்டிய பணிகளென்று தனிப்பட வகுப்பது எற்றுக்கு என்பர். தேர்வுக் காலங் களிலாவது பிள்ளைகள் இல்லங்களில் படிக்கவேண்டாவா என்பர். மற்ற காலங்களிலும்கூடப் பிள்ளைகள் தாமாகவே பல பள்ளிப் பணி

களைச் செய்தால் அவர்களுக்குத் தன்னம்பிக்கை உண்டாகுமல்லவா? இளைஞர்களைச் சோம்பியாக விடுதல் தவறு. அவர்கள் எந்நேரமும் தமக்குரிய வேலையைச் செய்தாலன்றித் தீயவழியில் சென்று விடுவர்.

வீட்டு வேலைகளால் பிள்ளைகளுக்குப் பல நன்மைகள் உண்டு. ஆனால் வீட்டு வேலைகளுக்கெனப் பள்ளி ஆசிரியர்கள் ஒழுங்கான திட்டம் வகுக்கவேண்டும். திட்டத்தின்படி பிள்ளைகள் வீட்டுவேலை களைப் பெறுவர். வீட்டுவேலைகளைக் கொடுத்த பிறகு அவற்றை வற்புறுத்தாமலே விட்டுவிடுவது ஆசிரியர் சிலரது பெருங்குற்றம். வீட்டுவேலைகளை வற்புறுத்திப் பெற்ற பிறகு அவற்றை நன்றாகப் பார்வையிடவேண்டும். அவற்றால் பிள்ளைகள் பயன்பெறாவிட்டால் ஆசிரியர்தான் குற்றவாளி. எனவே விரும்பும் பயனைக் கோரி வீட்டு வேலைகள் வகுக்கவேண்டும். ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோருக்கும் ஒரே வேலையை அளித்துத் தமது வேலையை முடித்துக்கொள்ளுவது வழக்கம். பிள்ளைகள் தாம் பெறும் வேலைகளைத் தாமே இயற்றுதற் குரிய ஆற்றலுடையவர்களாக இருந்தாலன்றிப் பெரும்பாலும் அவர்கள் பயனடைவதில்லை. எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரே வேலை யானால் ஒருவரையொருவர் பார்த்து ஆசிரியருடைய கடுமைக்குப் பயந்து சரிகட்டிவிடுகிறார்கள். அவரவர்களால் இயற்றக்கூடிய வேலை யாயின் தாமாகவே இயற்றுதற்கு முனைவார்கள். அப்போது பிள்ளைகள் தத்தமக்கெனத் திட்டமிட்டுக் கொள்ளுவார்கள். தமது வேலையை ஆசிரியருடைய உதவியின்றித் தாமாகவே செய்து முடிப்பர். அப்போது வகுப்பறையின் ஒடுக்கமின்றி மாணவர்கள் உரிமையோடு வகுப் பறையில் கற்றவற்றை விளக்கிக்கொள்ளுவார்கள். இதனால் வகுப் பறைக் கல்வி திண்மை பெறுகிறது. தாமாகவே முயற்சி செய்யும் திறனும் தமக்குத் தாமே வழிகாட்டிக்கொள்ளும் முயற்சியும் தாம் தொடங்காற்றலும் பிறக்கின்றன. ஆசிரியர் அளித்த பணிகளுக்குள் தமது நாட்டம் பெறக்கூடியவை ஏற்படுமானால் அவை பற்றுக்கோடா கின்றன. அவற்றில் தம் முயற்சி உண்டாகின்றது. எதுவாயினும் இன்று கற்பிக்கப்பெறும் பள்ளிப் பாடங்கள் பலவகையால் அவற்றை எல்லாம் பள்ளிகளிலேயே ஆசிரியர்கள் நடத்தவும் முடிக்கவும் இயலாது. பிள்ளைகளுக்குத் தனிப்பட்ட முறையில் பணிகள் அளித்தாலன்றிப் பாட ஏற்பாட்டின் இறுதியைக் காணமுடியாது. மேலும் பிள்ளைகள் தமது இல்லங்களில் தமது பாடங்களைப் படிக்கும்போதும் பள்ளிப் பணிகளை ஆற்றும்போதும் பெற்றோர்கள் அவற்றைக் காண்பதற்கு ஒரு வாய்ப்பு உண்டாகிறது. கற்றுள்ள பெற்றோர்கள் பிள்ளைகளுடைய பாடப் பணிகளைக் கண்ணுற்றுப் பள்ளியின் தரத்தினையும் ஆசிரியப் பணிகளின் திறத்தினையும் மதிப்பிட முடியும். குறைபாடுகளைக் காணும் பெற்றோர்கள் ஆசிரியர்களோடு கலந்து ஆவனசெய்ய இயலும். பிள்ளைகளும் நாள்தோறும் பள்ளிவிட்டபின் கற்கவேண்டியதில்லை என்ற கருத்து கெட்டுத் தமது மாணவப் பருவத்தில் கற்றலே தமது

கடனென்று கருதுவார்கள். இத்தகைய கருத்தும் அக்கருத்தை ஒட்டிய பழக்கமும் மாணவர்களோடு வளர்ந்தால் பாடை ஏறினும் ஏடது கைவிடேல் என்ற முதுமொழிக்கு இலக்காவர். ஆனால் வீட்டு வேலைகள் அளிப்பதில் ஆசிரியர்களுக்குப் பிள்ளைகள்மீது இரக்கம் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு வகுப்பறையிலும் வீட்டு வேலை அறிவிப்பு ஒன்று வேண்டும். ஒவ்வொரு நாளும் எல்லாப் பாட ஆசிரியர்களும் வீட்டு வேலைகளைச் சுமத்திவிட்டால் மாணவர்கள் எந்த வேலையையும் செய்யமுடியாது. பிள்ளைகள் இல்லங்களுக்கு வந்தவுடன் கண்ணைக் கவிழ்ந்துகொண்டு எதையாகிலும் எழுதியவண்ணம் உள்ளார்கள். பாடங்களைப் படியாது எழுதுவதன் காரணம் யாதென்று வினவினால் அவர்கள் பள்ளிவேலை என்று கூறுவார்கள். பிள்ளைகள் சிலர் எல்லா வேலைகளையும் முடிக்க இயலாது வருந்துவார்கள். ஆசிரியர் கோபிப்பார் என்று கதருவார்கள். அவர்கள் நாள்தோறும் பாடங்களைப் படிப்பதற்கே நேரம் இராது. எனவே வீட்டுவேலைகளை அளவுமீறிச் சுமத்துதல் தவறு. வீட்டுவேலை அளிப்பதற்குமுன் அதற்குரிய அறிவிப்புப் பலகையைப் பார்க்க வேண்டும். ஒரு நாளைக்குப் போதிய அளவு பிற ஆசிரியர்கள் வேலைகளைப் பணித்திருந்தால் புதிய பணிகளைச் சுமத்துதல் கூடாது.

அதிகப் பணிகளைச் சுமத்தினால் ஒரு சிலர் தவிர மற்றவர்கள் தமது பணிகளைத் தாறுமாறாகச் செய்து கடனைக் கழிக்கும் மனப்பான்மையைப் பெறுவார்கள். அதனால் பள்ளிப் பணிகளின் நன்மைகள் கிட்டா. ஒரு நாளைக்கு ஓரிரண்டு மணி நேரங்களுக்கு மேற்பட்ட வேலைகளை எல்லா ஆசிரியர்களும் சுமத்தக்கூடாது.

வீட்டுப் பணிகள் வெறும் பாடங்களை நெட்டுருச் செய்வதும் அல்லது நோட்டுப் புத்தகங்களைத் திருத்தி எழுதுவதும் ஆகிய ஒரு சில ஆசிரியத்தை எடுத்துக் காட்டக்கூடிய வகையில் மட்டும் அமைதல் உண்டு. ஆனால் பள்ளிப் பணிகளால் பிள்ளைகளுடைய கற்றல் நிலை மீத்திறம் பெறவேண்டும். பாடங்களை ஒட்டிய பிற நூல்களைப் படித்தறிதல், பிள்ளைகளுடைய விருப்பை ஒட்டிய பாடங்களில் அக்கறை பெறுதல், பிள்ளைகள் தாமாகவே செய்யக்கூடிய பணிகளைச் செய்து தமது தன்முயற்சியையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ளுதல், நூல்நிலையத்திலுள்ள ஆசிரியர் அறிவித்த நூல்களைப் படித்து அறிவைப் பெருக்கிக்கொள்ளுதல், பிள்ளைகளுடைய விருப்புத் தொழில்களில் திறம்பெறுதல், பெற்றோர் மற்றோருடைய உதவியின்றித் தாமாகவே பணியாற்றித் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுதல், அங்ஙனம் தாம் ஆற்றிய பணியில் வெற்றியைக் கண்டு இன்புறுதல், ஆசிரியர் கற்பித்த அளவிற்கு மிக்கு அறிதல் ஆகிய பலவகைகளில் பள்ளிப் பணிகள் அமையவேண்டும். பள்ளியில் படித்தவற்றையே திருப்பித் திருப்பிப் படிக்கும்படியும் எழுதும்படியும் பணிகள் அமைந்தால் பிள்ளைகளுக்கு வெறுப்பு உண்டாகும். பாடச் சிக்கல்களைப்பற்றி

சிந்தித்தல், அவற்றைப்பற்றி விவாதிப்பதற்கு ஆயத்தம் செய்தல் ஆகிய பணிகள் பிள்ளைகளுக்கு ஊக்கமளிப்பவை. தேர்வுகளுக்காகப் பிள்ளைகளுக்குப் பல பணிகளைக் கூட்டிச் சுமத்தி அவர்களை வாட்டுவது ஆசிரியர்களுடைய இன்றைய பெறும் கூற்ருகிவிட்டதால் பிள்ளைகள் பாடங்களை எட்டிக்காயைப் போன்று கருதுகிருர்கள். பள்ளிப் பாடங்கள் தவிர மற்றவை எதுவாயினும் அவர்களை ஈர்க்கின்றன. புத்தகப் புழுக்களாகிய சில மாணவர் நீங்கலாகப் பெரும்பான்மையோர் தமது பாடங்களைத் தேர்வுக்கு இரு திங்கள்களுக்கு முன்னர் மட்டுமே நினைவுபடுத்திக்கொள்ள விரும்புகிருர்கள். மற்ற காலங்களில் ஆசிரியர் களாவது அல்லது அவர்கள் கற்பிக்கும் பாடங்களாவது அல்லது கற்பிக்கும் முறைகளாவது அவர்களை ஈர்க்க முடிவதில்லை. இவை நமது கல்வி நிலையங்களில் கண்கூடு.

நல்ல முறைகளில் பிள்ளைகளுடைய அறிவைத் தட்டி எழுப்பக் கூடிய பாங்கினில் அமைக்கப் பெறும் பள்ளிப் பணிகள் பிள்ளைகளை உண்மையாகவே பற்றக்கூடியவை. பெற்ருேர்களும் அவற்றைக் கண்டு பிள்ளைகளுக்கு ஊக்கமளிப்பார்கள். வீட்டிலும் நல்ல சூழ் நிலைகளை உண்டு பண்ணி உதவுவார்கள். ஆனால் ஆசிரியர்கள் சில சமயங்களில் அளிக்கும் பயனற்ற பணிகளை அறியக்கூடிய பெற் ருேர்கள் அவற்றை வெறுத்துத் தமது பிள்ளைகளின் விதிப் பயன் என்றும் பாடத்திட்டங்களின் குறைபாடுகளென்றும் பழிக்கிருர்கள். தொடக்க நிலைகளிலும் விளையாடும் குழவிகளுக்கு வீட்டுவேலைகள் கொடுத்துப் பழி வாங்குகிருர்கள். வீட்டுவேலைகள் அளிக்காது பயனற்ற பாடங்களைக் குறைத்துப் பயனுள்ள பணிகளைத் தந்து ஆசிரிய மேற்பார்வையில் அவற்றைப் பிள்ளைகள் செய்தால் நன்மைகள் கிட்டு மென்று கண்டுள்ளார்கள். பள்ளிப் பிடியினின்று விடுபடும் குழந்தை கள் தமது இயற்கை இயல்புகளால் உந்தப்பெறுகிருர்களேயன்றி ஆசிரியர் அளித்த வீட்டுப் பணிகளைச் சுமந்து தமது இல்லங்களிலும் கட்டுண்டு கிடக்க விரும்புவதில்லை. பள்ளியை விட்டபின் ஏட்டுக் கல்வியிலிருந்து அவர்கள் விடுபடுகிருர்கள். ஆனால் பள்ளிப் பணி களைச் சுமந்து வந்தால் தமது சுற்றுப்புறங்களையும் சூழ்நிலைகளையும் சமூக உறவுகளையும் எதையும் அறிய முடியாது. பள்ளிகளில் மட்டும் பிள்ளைகள் தமது நடத்தைகளைத் தாமாகவே உருவாக்கி தூண்டல் களுக்கேற்றவாறு துலங்கும் தன்மை பல கற்றதனால் ஆய பயனைப் பெறுகின்ருர்கள். வீட்டுவேலைகள் பிள்ளைகளைக் கலந்த திட்டம் பெற்ருல் நன்மை பயக்கும். ஆசிரியருடைய கட்டளைகளின் பிறப்பாக அமைந்தால் பயனளிக்க மாட்டா. பெற்ருேர் சிலர் ஆசிரியக் கட்டளை களுக்கு அடிபணிந்து பிள்ளைகளை வறுத்துவதுண்டு. இங்ஙனம் வெறும் பாடங்களை வீட்டுக்கும் சுமத்தியனுப்பாமல் பிள்ளைகளுக்கு உரித்தாகக் கூடிய பணிகளை வகுத்தளித்தால் பிள்ளைகள் தமது தகுதிக்கேற்ப விருப்போடு பணியாற்றுவார்கள். அல்லது பாடங்களை ஒட்டிய

அனுபவங்களைப் பெறுவதற்குப் பணிகள் அமைந்தால் பிள்ளைகள் விருப்புக் கொள்ளுவார்கள். இத்தகைய பணிகளில் பெற்ருேர்களும் பங்குகொள்ள விரும்புவார்கள். பிள்ளைகளுடைய தனித்திறனையும் காண விழைவார்கள். படைப்பாற்றலைக்காணும் பேறுபெற்ருல் மகிழு வார்கள். ஏட்டுப் பாடங்களைச் செயல்படுத்தும் பணிகளாக அமைத் தாலும் ஓரளவு பயன் கிட்டும். அவை நன்கு கற்கும் திறனை அளித்து உதவும். அல்லது சமூகத்திலும் இயற்கையிலும் சுற்றுப்புறங்களிலும் கண்டறியக்கூடியவையாக அமைந்தாலும் அவர்களுக்கு விருப்ப முண்டாகும். எனவே வீட்டுப் பணிகள் உள்ளத்தையும் உடலத்தை யும் ஊக்குபவையாக அமைதல் நன்று. களைப்பையும் வெறுப்பையும் உண்டாக்குதல் தீது. இதை ஆசிரியர்கள் நன்கு கவனித்தல் வேண்டும். இது சிந்தித்தற்குரிய ஒரு கட்டம். பள்ளிகளில் நடை பெறும் ஆசிரியத்தில் புதிய மாறுதலை உண்டாக்கக்கூடிய கட்டமும் ஆகும். சிந்தனை உள்ள ஆசிரியர் வீட்டுப் பணிகளை நல்ல முறையில் பள்ளைகளுக்கு ஊக்கமளிக்கக்கூடியவகையிலும் திறனை வெளிப்படுத்தக் கூடிய முறையிலும் அவர்களுடைய பல ஆற்றல்களை ஒருமைப்படுத்தி ஆக்கத்திற்கு ஆற்றுப்படுத்தும் வகையிலும் அமைக்கலாம். பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல.

27. பள்ளியும் இல்லமும்

நாகரிகத் தொடக்கத்தில் பள்ளியும் இல்லமும் ஒன்ருயின. தாயும் சேயும் அல்லது தந்தையும் தனயனும் ஆசிரிய மாணவ நிலையில் சிறு குழவிப் பருவத்திலிருந்து மனிதப்பருவம் வரையில் உறவு கொண்டார்கள். பெற்ருேர்களே ஆசிரியர்களாகவும் வழிகாட்டிகளாகவும் விளங்கினுர்கள். இன்றும் எவ்வளவுதான் கற்ற மகனுயினும் மகளாயினும் பெற்ருேர்கள் அவர்களைக் குழந்தைகளாகவே கருதிப் பல அறிவுரைகளையும் அறவுரைகளையும், பலரோடு உறவுகொள்ளவேண்டிய முறைகளையும், ஒவ்வொரு நிலையில் அவர்கள் நடந்துகொள்ளவேண்டிய வழியினையும் சுட்டிக்காட்டிக்கொண்டே இருப்பது நாம் அறிந்ததே. நன்ருகப் படித்த மேதைகளும்கூடத் தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்றும் தாய்சொற் துறந்தால் வாசகமில்லை என்றும் அறிந்து ஒழுகுகிருர்கள். பள்ளி ஆசிரியர் பாடங்களைத்தான் கற்பித்தற்குரியவரென்றே பெற்ருேர்கள் கருதுகின்றனர். எனவே பிற பழக்கவழக்கங்கட்கெல்லாம் தாமே பொறுப்பென்றும் நினைக்கின்ருர்கள். ஆனுல் சில சமயங்களில் கற்றும் கசடனு என்று இரங்குகிருர்கள். ஆசிரியர்களைப் பழிக்கிருர்கள். முழு ஆளுமையை வளர்ப்பதற்குப் பள்ளி பொறுப்பேற்றுள்ளதென்று சிலர் கருதுகின்றனர். பள்ளிக் கல்வி எதுவாயினும் ஒவ்வொரு மாணவனது இல்லப் பழக்க வழக்கங்கள் ஒரு கல்வியாக அவனேடு வளர்ச்சியடைகின்றன.

பிள்ளைப்பேறு மிக்குற்ற இல்லங்கள் கல்விப் பொறுப்பினைத் தொடர்ந்து நடத்த இயலாது. சில இல்லங்களில் சிறு பிள்ளைகளைக் கூடப் "பள்ளிக்கு அனுப்பித் தொலைக்கிருர்கள்". பிள்ளைகள் இல்லங்களில் அதிகமாக இருந்தால் தாய்தந்தையரால் சமாளிக்க முடிவதில்லை. அதனுல் பள்ளிகளை நாடுகிருர்கள். பள்ளி நேரத்துக்காவது தமது பொறுப்பை ஆசிரியரிடம் ஒப்படைக்கவே சிறு குழந்தையாயினும் ஆசிரியரிடம் ஒப்படைத்து விடுகிருர்கள். தமது பொறுப்பை ஆசிரியர் ஏற்றுக் கொள்ளுவார் என்பதே அவர்களது நம்பிக்கை. ஆசிரியன்மார்களும் பள்ளி நேரங்களில் நாற்பது பிள்ளைகளேயாயினும் பொறுப்பேற்று அடக்கிக் காப்பாற்றுகிருர்கள். முற்காலங்களில் குருகுலங்களிலேயே பிள்ளைகளைப் பெற்ருேர்கள் விட்டுவைத்தார்கள். குருகுல வாசம் தொடர்ந்தது. ஆசிரியர் தந்தை நிலையில் மாணவர்களைக் காப்பாற்றினுர். இன்று அத்தகைய குருகுல வாசத்தைக் கல்வியாளர்கள் வருந்தி அழைக்கின்ருர்கள். இன்று மாணவர்விடுதி நிலையங்கள் சில கல்விநிலையங்களோடு இணைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் உள்ள ஆசிரிய மாணவத்தொடர்பு போதாதென்று குறை கூறுகிறேம். பழங் குருகுலங்கள் உண்டானுல் இக்காலத்தில் இல்லங்களுக்கும் குருகுலங்

களுக்கும் ஏற்படக்கூடிய தொடர்பு எப்படி அமையுமென்று நம்மால் கூறமுடியாது. இன்று பள்ளிப் பிள்ளைகள் பள்ளிநேர மாணாக்கர் என்றும் விடுதி மாணாக்கர் என்றும் இருகூறுகின்றனர். பல மாணாக்கர் பள்ளிநேர வரையிலும் ஆசிரியருடைய முழுப் பொறுப்பில் இயங்கு கிறார்கள். பள்ளிநேரத்திற்குப் பிறகு பெற்றோருடைய பொறுப்பு தொடங்கிவிடுகிறது. பள்ளிநேரங் கழிந்த மற்ற நேரத்திற்குப் பள்ளி ஆசிரியர் பொறுப்பேற்க மறுக்கின்றார். ஆனால் ஆசிரியர் எவ்வளவு தான் மறுத்தாலும் பெற்றோர் ஆசிரியரையே பொறுப்புக்கிழுக்கின்றனர். பள்ளி நேரத்திலல்லாது மற்ற நேரங்களில் மாணவன் இழைக்கும் குற்றங்களுக்குப் பெற்றோர்கள்தான் பொறுப்பு என்று ஆசிரியர்கள் கருதுவதும் பெற்றோர்கள் ஆசிரியர்களைப் பொறுப்புக்கிழுப்பதும் நடை முறை. இல்லத்தாருடைய பண்பாட்டில் நல்ல குணங்களோடு பிள்ளைகள் வளர்ந்தால் அவர்களுடைய நற்குணங்களுக்கு ஆசிரியர் தமக்குப் பாராட்டினைத் தேடுகிறார். பெற்றோர் ஆசிரியருக்கு அதை வழங்குவதற்குத் தயங்குவதில்லை. இல்லமும் பள்ளியும் நீங்கலாகப் பிள்ளைகள் வயது ஏறஏற அவர்கள்மீது சுற்றுப்புறமும் சமூகமும் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே வளரும் பிள்ளைகள் மூன்று கோணங்களுடைய மோதல்களுக்கு ஆளாகின்றார்கள். எல்லா இல்லங் களும் நல்லவை என்று கருதுதற்கில்லை. பல இல்லங்கள் வளரும் பிள்ளைகளுடைய வாழ்க்கைக்கு ஊறு செய்கின்றன. இல்லறம் நல்லற மாக அமைந்தாலும் சில பள்ளிகள் நல்லன அல்ல; எல்லாச் சமூகங் களும் நல்ல பண்பாடுகளைக் கொண்டதாகக் கூற முடியாது. பெரும் பாலோர் நல்லவராயினும் தீயவர் சிலரேயாயினும் சமூகத்தைக் கெடுத்து விடுவார்கள். இல்லமும் பள்ளியும் நலமுற்றவையாயினும் பிள்ளைகளைச் சமூகம் தீயநெறியில் ஈர்த்துவிடும். எனவே வளரும் பிள்ளைகளுக்கு இல்லம், பள்ளி, இனம், அல்லது சமூகம் ஆகிய மூன்று நிலையங்களும் ஒருமைப்பாட்டோடு இயங்கினால் வளரும் பிள்ளைகள் வளமுறுவார்கள். எனவே பள்ளியின் பொறுப்பும் சிறியதாகக் குன்றி விடுவது கண்கூடு. மேலும் ஒரு நாளைக்குரிய இருபத்து நான்கு மணி நேரத்தில் பிள்ளைகள் பள்ளியில் கழிக்கும் நேரம் ஆறு மணிகளே ஆகும். ஆண்டுக்குரிய முன்னூற்றறுபத்தைந்து நாட்களில் பிள்ளை கள் பள்ளியோடு தொடர்பு கொள்ளும் நாட்கள் இருநூறேயாகும். தொடக்க நிலையாயின் இருநூற்றிருபது நாட்கள். கல்லூரியாயின் நூற்றெண்பது நாட்கள். எனினும் பள்ளிகள் தமது பொறுப்பு மூன்றி லொரு பங்கென்று பின்வாங்கிவிடக் கூடாது. அவை இல்லத்தோடும் சமூகத்தோடும் கொள்ளக்கூடிய உறவு பலவாகும். பிள்ளைகளுக்கு நாடும் நலம் கைக்கூடும்.

மனித உயிரினங்கள் மட்டுமேயன்றி மற்ற உயிரினங்களும்கூட இல்லம் வகிக்கின்றன. மனிதப் பிறவியில் குழவிப் பருவம் எட்டு ஒன்பது வயது வரையில் நீடிக்கிறது. ஆகவே தந்தையின் தலைமை

யில் தாயும் சேய்களும் குடும்பம் நடாத்த வேண்டியது கடப்பாடா கின்றது. மனிதக் குடும்பங்கள் நடைபெருவிட்டால் மனிதப் பிறவியே பயனற்றுப்போகும். குடும்பங்கள் நடைபெறுவதால் தாயின் அறுசுவையையும் தந்தையின் கல்வியையும் பிள்ளைகள் பெறு கின்ருர்கள். தொட்டிலிலிருந்து பழக்கங்கள் குழந்தைகளிடையே வளருகின்றன. ஏறக்குறைய பத்து வருடங்கள் பிள்ளைகள் பெற்ருேர் களைத் தழுவிக்கொண்டிருக்கிருர்கள். மற்றும் பிள்ளைகள் சிலர் ஆண் பெண் இரு பாலரும் பதினறு பதினேழு வயது வரையிலும்கூட பெற் ருேர்கள் துணையை நாடுகிருர்கள். இல்லத்தில் தொடங்கும் பழக்கங்கள் பிள்ளைகளைப் பற்றிக்கொள்ளுகின்றன. இல்லத்தில் தாய் தந்தையரைப் பார்த்துத் தமது பணிகளையாற்றக் கற்றுக்கொள்ளுகிருர்கள். சமூகத் தினரோடு பழகுவதற்கும் பார்த்துக் கற்றுக்கொள்ளுகிருர்கள். பெற் ருேர்கள் படிப்பதற்குக் கொடுக்கும் பழக்கங்கள் பள்ளிகளிலும் எதி ரொலிக்கின்றன. சுருங்கக் கூறின் பிள்ளைகளுடைய ஆளுமை வளர்ச்சி இல்லத்திலன்ருே தொடங்குகின்றது. எனவே பிள்ளைகளைத் திருத்தும் பொறுப்பு இல்லத்ததாகும். ஒரு பிள்ளை [1] சிக்கற் பிள்ளையாக மாறிவிட்டால் அதன் காரணத்தைப் பெரும்பான்மை இல்லத் தில் தேடிக் காணலாம். இல்லத்தின் பண்பாடுகளே பிள்ளைகளுக்கு உண்டாகின்றன. ஆகையால் வளரும் பருவத்தே பெற்ருேர்கள் தமது பிள்ளைகளை நன்ருக அறிந்துகொண்டு அவர்களுக்கேற்ப நன்மைகளை வகுத்துத் தருதல் வேண்டும். தாயிற்கோர் பெண், தந்தையைப் போலப் பிள்ளை என்பது நம் நாட்டின் பழமொழி. தொடக்கத்தில் பிள்ளைகள் பெற்ருேர்களைப் பெற்ருேர்களாக மட்டுமின்றி அவர்களுடைய கட்டளைகளைச் சிரமேற் கொள்ளுவதற்கும் விழைகிருர்கள். குழவிப் பருவத்தில் பெற்ருேர்கள் ஆசான் நிலையில் இருப்பதால் பெற்ருேரும் ஆசிரியரும் ஒன்றிய ஓர் நிலை உண்டாகிறது. அந்நிலையில் பிள்ளைகள் பழகுகிருர்கள். அந்நிலையினைப் பள்ளிகளிலும் எதிர்பார்க்கிருர்கள். இதனுல் ஆசிரியன்மார்களும் பிள்ளைகளுடைய இல்லச் சூழ்நிலையை உணரவேண்டிய நிலையுண்டு. பிள்ளைகள்பால் பெற்ருேர் கொள்ளும் நோக்கமும் பள்ளியின் நோக்கமும் ஒன்ருக அமைதல் வேண்டும். பெற்ருேரும் ஆசிரியரும் ஒன்றிய ஒரு நிலையில் பிள்ளைகளுடைய வாழ்க்கை புதுமணம் பெறுகிறது. நல்ல குடும்பமே பள்ளிகளின் நல்ல குறிக்கோள்கள். நல்ல இல்லங்களின் உயரிய குறிக்கோள்களுக்குச் சிறிதும் தாழ்வுருது பள்ளிகள் நலம் படவேண்டும். பள்ளிகள் ஓரளவா வது நல்ல இல்ல நிலைகளுக்குத் தாழ்வுற நேரின் பிள்ளைகள் பள்ளி களில் இருக்க விரும்பமாட்டார்கள். தொடக்கநிலையிலாவது பள்ளிகள் இல்லங்களைப்போல் காட்சியளிக்கவேண்டும். சுற்றுப்புறங்கள் இல்லங் களைப்போல் அமையவேண்டும். பிள்ளைகள் தமது இல்லங்களுக்கும்

---

1. Problem child

பள்ளிகளுக்கும் வேறுபாடு காணுதல் கூடாது. நடுநிலைப் பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் கூட ஓரளவு இல்ல வசதிகள் அளித்தல் நன்று. இன்றைய பள்ளிகள் இல்லத்திற்கப்பால் அமைந்த ஓர் இல்லமாக உண்டாக்கப்படுகின்றன. இல்லங்களில் தாயர் தந்தையர் பிள்ளைகள்பால் அன்பு செலுத்துகிருர்கள். ஆனல் பள்ளிகளில் ஆசிரியர் தாயுமாய்த் தந்தையுமாய் உடன் தோன்றினவராய் அவர்களுக்குள்ள பிறப்புப் பற்றுக் கோடின்றிச் சிந்தனைப் பற்றுக்கோடோடு விளங்க வேண்டும். ஆசிரியர் சிலர் சிறப்பாகப் பாதிரிமார்கள் பள்ளிப் பிள்ளைகள் மீது கொள்ளும் அன்பும் அக்கறையும் பெற்ருேர்களையும் மிஞ்சியது. பிள்ளைகள் ஆசிரியரைக் கண்ணுற்றபோது கலக்கங் கொள்ளாது உவகை கொள்ளவேண்டும். இல்லச் சூழ்நிலை இருந்தாலன்றிப் பிள்ளைகள் இரங்கமாட்டார்கள். எனவே ஆசிரியர் பிள்ளையின் உண்மையான பெற்ருேர் ஆக வேண்டும். அங்ஙனமே பெற்ருேர் பிள்ளையின் உண்மையான ஆசிரியராவர்.

பள்ளிக்கும் இல்லத்திற்கும் தொடர்பு ஏற்படுத்துவதற்குப் பல வழிகள் கையாளப்படுகின்றன. ஆசிரியர்கள் பிள்ளைகளுடைய இல்லங்களுக்குச் சென்று பெற்ருேர்களிடம் பிள்ளைகளைப் பற்றி உரையாடுவது ஓர் வழியாகும். ஆகையால் ஆசியர்கள் பெற்ருேர்களைத் தமது நண்பர்களாகவும் தமது ஆசிரியப் பணிக்குத் துணை புரிபவராகவும் கருத வேண்டும். பெற்ருேர்களைக் காண்பது ஒருமுறையாக அமைய வேண்டும். இரு வாரங்கட்டு ஒருமுறை சென்று பார்ப்பது நல்லது. சிலர் ஒரு பிள்ளையைப் பற்றிய சிக்கல் கிளம்பியபோது மட்டுமே பெற்ருேர்களைக் காண்கிருர்கள். அச்சமயங்களில் பெற்ருேர் தம் பிள்ளையின் சார்பில் வாதிடுவர். அதனல் ஆசிரியருக்கும் பெற்ருேர்க்கும் முரண் ஏற்படும். பெற்ருேர் ஆசிரியரை விரும்பமாட்டர்கள். அதனல் ஆசிரியருடைய வருகை வெறுக்கப்படும். தமது பிள்ளையைப்பற்றிப் பெற்ருேர் நல்லுரையைக் கேட்க விழைவது இயல்பு. அதனல் தீயவற்றைக் கூறுவதற்கு வந்து காணும் ஆசிரியருக்கு வரவேற்பு நன்ருய் இராது. எனவே ஆசிரியர் தமது பிள்ளையைத் திருத்துகின்ருர் என்று அறியும் வரையில் பெற்ருேர் ஆசிரியரை அன்போடு அழைக்க மாட்டார்கள். பிள்ளைகளுடைய இல்லங்களிலிருந்து அழைப்புக்கள் வந்தால் அவற்றை ஏற்று ஆசிரியர் பெற்ருேரோடு உறவு தொடங்கலாம். சிலர் பெற்ருேருடைய பண உதவி அல்லது பிற உதவிகளை நாடிச் சென்று பார்ப்பது தகா வழிகளாகும். பெற்ருேர்கள் ஆசிரியரை மரியாதையோடு நடத்தவேண்டுமானல் ஆசிரியர்கள் தமது மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். ஆசிரியப் பணி பெற்ருேருடைய உதவியோடு நடைபெறுவதென்று பெற்ருேர் உணரும்படியாக உணர்த்தவேண்டும்.

ஆசிரியர், பிள்ளைகள் இல்லத்திற்குச் செல்லுவதைப் போன்று பெற்ருேர்களையும் பள்ளிக்கு வரக்கூடிய வாய்ப்புக்களை ஆசிரியர்கள்

ஏற்படுத்தவேண்டும். பள்ளிகள் சில குறித்த நாட்களில் பெற்றோர்களை அழைக்கின்றன. குறித்த நாட்களில் மட்டும் வருவது அவ்வளவு நன்மையைத் தராது. பள்ளி விழாக்காலங்களில் பெற்றோர்கள் எல்லோரும் வரவேண்டியது விரும்பத்தக்கது. ஆனால் மற்ற நாட்களில் பெற்றோர்கள் குறித்த நாட்களில்தான் வரவேண்டுமென்று திட்டமிட்டால் அவர்கள் பெருங்கூட்டமாக வருவார்கள். அப்போது ஒவ்வோர் ஆசிரியரையும் கண்டு தமது பிள்ளையைப் பற்றி பேசுவதற்கு இயலாது. பெற்றோர்கள் பள்ளிக்கு வந்தால் தமது பிள்ளைகளது தொடர்புள்ள ஒவ்வொரு ஆசிரியரையும் பார்த்துத் தமது பிள்ளையைப் பற்றி அறிந்து கொள்ளுவதோடு பொதுவாகப் பள்ளியின் குறிக்கோள்களையும் அறிந்து கொள்ளுவர். பெற்றோர் சிலர் வகுப்பறையில் உட்காருவதற்கு விழைவார்கள். எனவே குறித்த இருவர் மூவரையழைத்து அவர்களோடு பேசலாம். ஆசிரியர் சிலர் பள்ளியின் குறைகளைப் பற்றித் தம் வெறுப்புத் தீரும் வரையில் பேசுவதுமுண்டு. இன்று ஓரிரு ஆசிரியரைப்பற்றிக் குறைகூறி மூன்ருவது ஆசிரியர் பேசினுல் மற்ருெரு நாளைக்கு அவ்வாசிரியர்மீது பிறர் குறை கூறுவார்கள். எனவே பெற்றோர்களிடம் பள்ளியின் நிறையைப்பற்றிப் பேசவேண்டுமேயன்றிக் குறைகளைப்பற்றி ஆசிரியர்கள் பேசுவது தவறு. தலைமையாசிரியரும் ஆசிரியர்களுடைய குறைகளைப் பெற்றோர்களிடம் பேசுவது பெருந்தவறு. ஓர் ஆசிரியர் தமது பள்ளியையாவது உடன் ஆசிரியர்களையாவது ஒரு பெற்றோரிடம் குறைவாகப் பேசினுல் அவரைப் பற்றி அறிவுள்ள பெற்றோர் குறைவாகவே நினைப்பார்கள்.

இற்றைநாட்களில் பெற்றோர்களுடைய உதவியைப் பள்ளிகள் நாடுகின்றன. தம் பிள்ளைகள் படிக்கும் பள்ளி நல்ல பள்ளி என்று எண்ணம் இருந்தாலன்றி விரும்பமாட்டார்கள். நமது மாநிலத்தில் பள்ளிச் சீரமைப்புத்திட்டம் பெற்றோர்களையும் பொதுமக்களையும் நாடுகின்றது. பெற்றோர்களில் பேரறிவாளர்கள் இருந்தால் அவர்களுடைய ஆலோசனைகளைத் தலைமையாசிரியர் ஒருவர் மட்டும் கேட்டுக்கொள்ளலாம். சிறந்த கல்வியாளர்களாக இருந்தால் அவர்களை அழைத்து ஆசிரியர் அல்லது மாணவர் கூட்டங்களில் பேசுவதற்கு வாய்ப்பளிக்கலாம். பெற்றோர்களிலும் பொதுமக்களிலும் உள்ள நல்லோருடைய உறவு எப்போதும் நாடுதற்குரியது. மகளிர் பள்ளிகளில் தாயர் கூட்டம் ஒரு திங்களுக்கொருமுறை நடைபெறுவதுண்டு. அப்போது தாயர்கள் தமது மகளிரைப் பற்றிப் பொதுவாகப் பேசுவார்கள். ஆண் பள்ளிகளில் பெற்றோர் சங்கம் அமைப்பதுண்டு. சங்கக் கூட்டங்களில் தலைமையாசிரியர், ஆசிரியர் ஓரிருவர் பள்ளியின் குறிக்கோள்களைப் பற்றியும் இன்னேரன்ன பலவற்றைப்பற்றியும் பேசுவது நல்லது. அல்லாது சில பள்ளிகளில் பெற்றோர் சங்கக்கூட்டத்தில் ஓரிருமணி நேரத்திற்குப் பல கதம்ப நடிப்புக்களைக் காட்டிவிட்டு முடித்துவிடுகிருர்கள். கதம்பக் காட்சிகள் வேண்டியவைதான். ஆனுல் அத்தகைய

கூட்டங்களில் பெற்றோர் ஒத்துழைப்பைப்பற்றியும் பிள்ளைகள் மூலம் நடித்துக் காட்டலாம். பெற்றோர்களுக்குள் ஆசிரியர் பொறுப்புணர்ந்தோர் இருந்தால் அவரை அழைத்தும் பேசச் சொல்லலாம். எத்துணையளவு பெற்றோர்களுடைய உதவியைப் பள்ளியின் நன்மைக்காகப் பெற இயலுமோ அத்துணையளவு பள்ளிகள் பெறவேண்டும். அங்ஙனம் பள்ளியும் பெற்றோர்களுக்குப் பல உதவிகளைப் புரியலாம். பள்ளி ஆசிரியர்களின் பல திறன்களை பெற்றோர்களுக்களித்துதவலாம். பொதுவான பல பொருள்களைப்பற்றி அவர்களுக்கு அறிவுறுத்தலாம். பள்ளியின் நூலகங்களையும் படிப்பகங்களையும் அவர்களுக்குப் பயன்படுத்தலாம். முதலுதவி வகுப்புக்கள் நடத்தலாம். மகளிருக்கு மனையியலைப்பற்றி விளக்கலாம். பொது அறிவு வகுப்புக்கள் நடத்தலாம். இவையாவும் பெற்றோர்களுக்கும் பள்ளிக்கும் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தும்.

பெற்றோர்களைக் கூட்டங்களுக்கு அழைத்துப் பேசுவதற்கு இயலாவிட்டால் பள்ளி அறிவிப்புக்களை அனுப்பி அவர்களுடைய கருத்துக்கள் அல்லது இசைவுகளைப் பெறலாம். பள்ளியின் பல திட்டங்களை அறிவிக்கலாம். பள்ளியின் செயல்பாடுகளைப் பெற்றோர்கள் அறிந்த வண்ணமாக இருப்பது நல்லது. திடீரென்று ஒரு திட்டத்தைப் பள்ளியார் வகுத்தால் அதனைப் பெற்றோர்களுக்கு அறிவித்தலே நல்லது. அல்லாக்கால் அத்திட்டத்திற்கு முரண்படும் சிலர் பல சிக்கல்களைக் கிளப்பிவிடுவார்கள். அல்லது பெற்றோர் சங்கக்கூட்டங்களில் புதிதாக வகுக்கப்பெறும் திட்டங்களைப் பெற்றோர்களுக்கு நேர்முகமாக அறிவித்து அவர்களுடைய இசைவினைப் பெறுவது நன்று. இதுவே மக்களாட்சி முறையாகும். பின்வரும் எதிர்ப்புக்களை முற்கூட்டியே நிறுத்திவிடலாம். அல்லது இத்திட்டங்களைப்பற்றிப் பெற்றோர் ஒருவரை அணுகி அவரை முன்மொழியச் செய்து பின் மொழியச் செய்யலாம். மேனாடுகளில் சிறப்பாக அமெரிக்காவில் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்துவிட்டால் மட்டும் போதுமென்று கருதுவதில்லை. கற்றறிந்த பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு எதிர்காலத்தை யாங்ஙனம் வகுத்துள்ளார்கள் என்பதைப் பற்றியும் அறிந்துகொள்ளுவது தேவையாகின்றது. எனவே எல்லாப் பெற்றோர்களுக்கும் தமது பிள்ளைகளுக்கு இத்தகைய பொறுப்பினை உணர்த்தவேண்டியது பள்ளியின் கடமையாகக் கருதப்படுகிறது. பெற்றோர்களும் தொடக்க ஆசிரியர்களாகையால் பெற்றோர்களுக்குப் பிள்ளைகளின் வளர்ச்சியைப் பற்றியும் உணர்த்தவேண்டியதைப் பள்ளிகள் கடமையாகக் கொள்ளுகின்றன. அமெரிக்காவிலும் ஜப்பானிலும் பெற்றோரோடு தொடர்பு கொள்ள வேண்டிய திட்டம் கல்வித்திட்டத்தில் இடம் பெற்றுள்ளது. இந்நாடுகளில் பெற்றோர்கள் பிள்ளைகளுடைய பல சிக்கல்களை அறிந்துகொள்ளுகிறார்கள். ஒலிபெருக்கிகள் வழியாகவும் திரைப்படங்கள், தனிப்பட்ட அறிவிப்புக்கள், நாட்டுப் பத்திரிகை ஆகியவற்றின்

வழியாகவும் பிள்ளை வளர்ப்பைப்பற்றியும், குணவேறுபாடுகளைப் பற்றியும், உளநலத்தைப்பற்றியும் ஆசிரியக் குழாங்கள் அறிமுகப் படுத்துகின்றன. இவற்றையெல்லாம் அறிந்துகொண்டு பெற்றோர்கள் பிள்ளைகளோடு நல்ல முறையில் ஒத்துழைக்கின்றார்கள். அமெரிக்கா நாட்டில் பெற்றோர் சங்கத்தின் விளைவாகப் பெற்றோர்க்குக் கல்வி ஒன்று உருவாகியுள்ளது. அதில் கல்வியைப்பற்றிய சிக்கல்களை வேருகவும் உடல் உள்ள வளர்ச்சியைப்பற்றிய சிக்கல்களை வேருகவும் தனித்தனிப் பாடங்களாகப் பெற்றோர்கள் கற்கின்றார்கள். பெற்றோர்களுக்கெனத் தனிப்பட்ட பாடத்திட்டம் ஒன்றும் உருவாகியுள்ளது. உளநூல், சமூக அறிவியல் மக்கண்மை ஆகியவற்றோடு ஒரு சிறிது மருத்துவமும் பெற்றோர்கள் கற்கின்றார்கள். வகுப்பாகக்கூடாது சிறு சிறு குழுக் களாகப் பல சிக்கல்களைப்பற்றி விவாதிக்கின்றார்கள். இக்குழுக்களில் கருவுற்ற தாயர்கள், பிள்ளைத் தாயர், படிக்கும் தாயர்கள் ஆகியோர் அவரவர்கள் சிக்கல்களைப்பற்றித் தனித்தனியாகக் கூடி அவரவர்கள் அறியவேண்டியவற்றை அறிந்துகொள்ளுகிறார்கள். முதியோர் கல்வியில் பெற்றோர் அறிய வேண்டியதை இணைத்துக்கொள்ளுகிறார்கள்.

நமது நாட்டில் மட்டுமேயன்றி எல்லா நாடுகளிலும் பெற்றோர் களுக்குத் தமது பிள்ளைகளைப்பற்றி அறிவிப்பு அனுப்புவது உண்டு. பெற்றோர்கள் தத்தமது பிள்ளைகளைப் பற்றி பள்ளி வாயிலாக அறிய வேண்டிய கடப்பாடு உண்டு. பள்ளிகளும் அங்ஙனமே பெற்றோர்களுக்கு அறிவிப்பு செலுத்தவேண்டிய கடமையும் உண்டு. பெற்றோர் அறி விப்புக்கள் ஆண்டுக்கு மும்முறை நான்கு முறைகள் அனுப்பு வதோடல்லாமல் அப்போதைக்கப்போது தனிப்பிள்ளைகளைப் பற்றிய சிக்கல்களைப் பற்றியும் அறிவிப்புக்கள் அனுப்பலாம். இவையன்றித் தனி ஆசிரியர்கள் தமது பாடங்களில் பிள்ளைகளின் மதிப்பீட்டை வரைந்து உதவுவதும் உண்டு.

சாதாரணமாக அறிவிப்பு அட்டைகளில் பிள்ளைகள் அந்தந்தப் பாடங்களில் பெற்றுள்ள மதிப்பெண்களை மட்டும் எழுதி அனுப்பிவிட் டால் கடமை தீர்ந்துவிட்டதென்று ஆசிரியர்கள் கருதலாம். ஆனால் நம் நாட்டில் மதிப்பெண்களின் பொருள்களை உணர்ந்துகொள்ளக் கூடிய நிலையில் பெற்றோர்கள் இல்லை. பெரும்பான்மையோர் படியாத வர்கள். அதனால் கடனாற்றுவதற்காக இதைப் பெற்றோர்க்கு அனுப்பி விட்டுப் பள்ளிகள் வாளா இருக்கக்கூடாது. இல்லங்களுக்குச் சென்று பெற்றோரைக் காணும்போது ஆசிரியர்கள் பிள்ளையின் கல்வித் தரத் தைப் பற்றிப் பெற்றோர்களுக்கு உணர்த்தலாம். பெரும்பாலும் பெற் றோர்கள் தமது பிள்ளைகளைப் பற்றி நல்லவற்றைக் கேட்பதற்கே விழை வார்கள். அல்லாது ஆசிரியர்கள் அவர்கள் மீது குறை கூறினால் அதை ஏற்றுக் கொண்டாலும் தமது பிள்ளையை ஆசிரியர் நன்ருகக் கவனிக்க வில்லை என்றே கருதுவார்கள். அதனால் பெற்றோர்களைக் கண்டு தம்மா லான உதவியைச் செய்வதாக உறுதி அளித்து அவர்களுடைய உதவி

யையும் நாடவேண்டும். அப்போது பெற்ருேர்களுக்கு ஆசிரியர்பால் நம்பிக்கை உண்டாகும். அடிக்கடி பெற்ருேர்களைப் பள்ளிக்கழைத்துப் பேசுவது நன்று. கூட்டங்களில் பேசுகையில் பொதுப்பட எல்லாப் பிள்ளைகளுக்கும் பொருந்தியதாகப் பேசவேண்டும். ஒரு தனிப் பிள்ளையைப் பற்றிக் கூட்டத்தில் மிகுந்து பேசுவது தவருகும். அத்தகைய பேச்சு பிள்ளைகளுக்கு ஊறு செய்யும். பெற்ருேர்க்கு மனத்தாங்கல் உண்டாக்கும். பெற்ருேரைத் தனியாக அழைத்துப் பேசுவதே நல்லது.

கல்வித் திட்டத்திலும் பள்ளித் திட்டத்திலும் மாறுதல்கள் உண்டாகிக் கொண்டிருக்கின்றன. அவை பெரும்பாலும் பெற்ருேர்களுக்குத் தெரிவதில்லை. சிலர் மட்டும் அதைத் தெரிந்து கொள்ளுகிருர்கள். தெரியாதவர்கள் பல திட்டங்களைக் கேள்விப்பட்டுப் பள்ளியைப் பகைக்கிருர்கள். அல்லது திட்டங்களை எள்ளி நகையாடுகிருர்கள். அவர்கள் காலத்திய திட்டங்களைப் பற்றி மேலாகக் கூறியும் இக்காலத் திட்டங்களைப் பற்றிக் குறை கூறியும் தமது பிள்ளைகளையே நம்பிக்கை இழக்கச் செய்கிருர்கள். இதனுல் பிள்ளைகள் சிலர் தாம் கற்கும் கல்வியைப் பற்றிக் குறைவாக நினைப்பது தவறு. கற்கும் கல்வியில் மதிப்பில்லாதிருந்தால் பிள்ளைகளுடைய அக்கறையும் நாட்டமும் தளர்வுறும். அது பிள்ளைகளுக்கு நல்லதன்று. மற்றும் பெற்ருேர் சிலர் தம் பிள்ளைகள் எதிரில் ஆசிரியர்களைக் குறைவாகப் பேசுகிருர்கள். இதுவும் பெரும் தவருகும். அப்பிள்ளைகள் ஆசிரியர்களைக் குறைவாகவே மதிப்பார்கள். இதனுல் ஆசிரியர்கள் தமது உயர்வினைக் குறைத்துக்கொள்ளக்கூடாது; தமது மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். பெற்ருேர்கள் முன்னர் தம்மைக் குறைவுபடுத்திக் கொள்ளவும் கூடாது. அல்லது உடன் ஆசிரியர்களையும் குறைவாக மற்றவரிடத்தில் பேசக் கூடாது. இன்று பெற்ருேர்கள் ஆசிரியர் கற்பிக்கும் திறனையும் செயல்பாட்டு முறைகளையும், வெளிச் செலவு, கண்வழிக் கல்வி, சமூகப் பண்புத் திட்டங்கள், பாடப் புறச் செயல்கள் ஆகிய பலவற்றைக் குறை கூறுகிருர்கள். ஒரு சிலர் நல்ல முறையில் தமது கருத்துக்களைத் தெரிவிக்கின்ருர்கள். பலர் குறைகளை மட்டும் கூறுகிருர்கள். பழைய கல்வித் திட்டத்திற்கும் புதிய கல்வித் திட்டத்திற்கும் உள்ள மாறுபாட்டினைப் பெற்ருேர்கள் அறிவதற்குப் பொறுமை இல்லாதொழிகின்றது. ஆனுல் புதிய திட்டங்களைப் பற்றிப் பெற்ருேர்களுக்கு எடுத்துக் கூறவேண்டியது அவசியம். நமது மாநிலத்தில் பெற்ருேர்கள் கல்விக்காகச் செலவழிக்கும் செலவினைக் குறித்து வருந்துகிருர்கள். பல கட்டணங்களைப் பள்ளிகள் தொகுக்கின்றன. பெற்ருேர் சிலர் அவற்றை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. ஏழைகளும்கூடப் பள்ளிக் கட்டணம் செலுத்தி விடுகிருர்கள். ஆனுல் பெரும்பான்மையோர் கட்டணத்தை வெறுக்கும் போது பள்ளியையும் சேர்த்து வெறுக்கின்ருர்கள். இதனுல் பெற்ருேர்க்கும் பள்ளிக்கும் நல்லுறவு நடைமுறையாக வேண்டும். கல்வி கற்றல் ஒரு தொடர்ந்த செய்வினையாகும். அது பள்ளியில் மட்டுமின்றிப்

பள்ளிப் புறத்திலும் நடைபெறுகின்றது. பள்ளியில் ஆசிரியர்களும் புறத்தே பெற்ருேர்களும் அதன் காப்பாளர்களாவர். எனவே பள்ளிக்குப் பெற்ருேர் தொடர்பு வேண்டியதைப் போன்று பெற்ருேர்க்கும் பள்ளித் தொடர்பு இன்றியமையாதது. அமெரிக்க நாட்டில் இல்லத்தைப் பள்ளியோடு சேர்ப்பதற்கு இல்லச் செயல் திட்டங்கள் வகுத்துள்ளார்கள். பலவகைத் தொழில்களைப் பிள்ளைகள் இல்லத்தில் செய்வதற்குத் திட்டங்களை வகுத்து அவற்றிற்கு வேண்டிய திறமைகளை வகுத்துத் தந்து அவற்றிற்கேற்ற திறமையைப் பள்ளியில் அளிக்கின்ருர்கள். பெற்ருேர்களுக்குப் பெரும்பாலும் அவை தெரிந்தவையாகையால் பிள்ளைகளுக்கு அவர்களும் உதவி செய்கிருர்கள். பல கைவேலைப் பாடுகளில் அவர்கள் உதவி செய்கிருர்கள். அவையன்றி இல்லக் கலைகள், மனையியல், தோட்டவேலை, உழவு இன்னேரன்ன பல பணிகளை இல்லப் பணிகளாகத் திட்டமிடுவதால் பிள்ளைகளோடு பெற்ருேர்கள் தமது ஓய்வு நேரங்களில் உதவி புரிந்து பள்ளிக்கு நன்மை புரிகிருர்கள். எனவே நல்ல முறையில் பெற்ருேர் தொடர்பைப் பெறுவதற்கு ஆசிரியர்களுடைய ஆர்வம் அவசியம். நல்லாசிரியர்கள் நல்ல பள்ளித் திட்டங்களை அமைக்கலாம். நல்ல திட்டங்கள் பெற்ருேர்களுடைய நல்லுறவை நாடக்கூடியவை ஆகும்.

28. பள்ளியும் இனமும்

அறிவு சான்ற பெற்ருேர் தமது பிள்ளைகளுக்கு என்ன வேண்டுமென்று விரும்புவார்களோ அதைத்தான் இனத்தாரும் தமது பிள்ளைகளுக்கு வேண்டுமென்று விரும்புவார்கள். வேறுென்றினைப் பள்ளிகள் விரும்புவது இனம் விரும்பாததாகும். விருப்பற்ற ஒரு பள்ளியின் செயல்பாடு மக்களாட்சியை அழிக்கவல்லது. எனவே இல்லம் தமது குழந்தைகளின் விருப்புக்களை நாடுவதைப் போன்று அரசும் இனத்தின் நாட்டத்தினை அறிந்து உதவவேண்டும். பொதுப்பட எல்லாக் குழந்தைகளுக்கும் அரசாங்கம் சில வாய்ப்புக்கள் தர வேண்டிய கடப்பாடுள்ளது. மக்களாட்சிச் சமூகத்திற்கு மக்களாட்சிக் கல்வித்திட்டமே உடன்பாடானதென்பது கூருமலே விளங்கும். நம் நாட்டிலும்கூட எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வி வாய்ப்பு அடி முதல் நுனி வரையில் வேண்டுமென்று வற்புறுத்துகிருர்கள். எந்தப் பிள்ளையும் வறுமைக் காரணத்தால் உயர்தரக் கல்வி இல்லாது வருந்தக் கூடாதென்று கூறுவர். குடியரசு அடிப்படையில் பிள்ளைகளுக்கு வேண்டிய கல்வியும் மக்களாட்சியில் பிள்ளைகளுக்கு வேண்டிய கல்வியும் பயிற்சியளிக்கக்கூடிய கல்வியாக இருத்தலை நாடுகிறது. சமூகத்தோடு ஒட்டி வாழ்வதற்கு வேண்டிய பழக்கங்களையும் திறன்களையும் திட்டம் அளிக்க வேண்டியது கடமையாகின்றது. பள்ளிக்கும் சமூகத்திற்கும் தொடர்பற்ற ஒரு நிலை மக்களாட்சிக்கு முரணுனது. எனவே ஒவ்வொரு பள்ளியும் ஒரு சுற்றுப்புற இனத் தொகுதி நிலையமாக விளங்கினுல் பள்ளியோடு இனமும் இனத்தோடு பள்ளியும் பாங்குபெற முடியும். இதனுல் பள்ளிகள் வெறும் அறிவு நிலையங்களாகப் பணிபுரியாது சமூகத் தொடர்பினை உருவாக்க இயங்குகின்றன.

பள்ளிகள் இன நிலையங்களாகவும் இயங்குவதற்குப் பள்ளித் திட்டம் சுற்றுப்புறங்களின் வாழ்க்கையினை ஒட்டியதாக அமைதல் வேண்டும். பள்ளிப் படிப்புக்கும் சுற்றுப்புற வாழ்க்கை அமைப்புக்கும் இயைவு வேண்டும். சமூகச் செயல்பாடுகளோடு பள்ளிச் செயல்பாடுகளும் ஒத்திருக்க வேண்டும். பள்ளி நிலையத்தில் சமூகத்தினர் கூடித் தமது சிக்கல்களை விவாதம் செய்வதற்கு இடம் தரவேண்டும். சமூகத்தினருக்குப் பலபடியான பயிற்சி பள்ளி அளித்து உதவலாம். முதியோர் கல்வி, பொது அறிவு வகுப்புக்கள் நடத்தலாம். தொழிற்கல்வி அதன் சூழ்நிலைக்கேற்பப் பயிற்றலாம். நகர்ப்புறமாக இருந்தால் உழவுத் தொழிலைப் பற்றி வகுப்புக்கள் நடத்தலாம். மகளிருக்கு மனையியல், இசை, சிறு கைத்தொழில்கள் கற்றுக்கொடுக்கலாம். தாய்மொழியில் பற்றுண்டாக்கலாம். சமூகத்தினருக்கு அடிக்கடி ஓய்வு நேரங்களில் களியாட்டங்கள் காட்டி மகிழ்வுறச் செய்யலாம். மாலை நேரத்தில் பள்ளி

நிலையப் பொது மண்டபத்தில் பொது மக்கள் வந்துகூடி அளவளாவலாம். அப்போது அவர்கள் பள்ளி நிலையம் தமதென்றும் தமது மக்களுடையதென்றும் உறவு பாராட்டுவார்கள். ஆசிரியர்களும் அச் சமூகத்தினராகையால் அவர்களோடும் நெருங்கிய தொடர்பு கொள்ளுவார்கள்; அதனால் பள்ளியைப்பற்றி ஆசிரியர்கள் வாயிலாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு உண்டாகும். சமூகத்தில் உள்ள பெரியவர்கள் நிதம் பள்ளிக்குப் பல நன்மைகளைத் தேடலாம். அவர்களுடைய நெருங்கிய தொடர்பால் பள்ளிக்கு நன்மையே உண்டாகும். பள்ளி விழாக்களுக்கு இன நிலையமாக உள்ள பள்ளிக்குப் பெற்றோர்கள் மட்டுமேயன்றி மற்றோரும் வருவார்கள். பள்ளியும் ஒரு பெரிய சமூகத்தினுள்ள ஒரு சிறிய சமூகம் என்று ஆசிரியர் உணரவேண்டும். பெருஞ் சமூகத்திலுள்ள சிறந்த பழக்க வழக்கங்கள் பள்ளிகளில் எதிரொலிக்க வேண்டியது இன்றியமையாதது. சமூகத்தில் திருத்தப்பாடு வேண்டுமென்று அறிந்தால் ஆசிரியர்கள் பள்ளியின் வழியாகச் சமூகத்தின் தரத்தைத் திருத்தி அமைக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும். சமூக உயர்வும் சமூகத்தினருடைய நலனும் ஆசிரியர்களுடைய பொறுப்பாகும். இப்பணிகளை ஏற்றுக்கொண்டு தன்மதிப்புக் குறையாது தந்நலம் கருதாது அறநெறி வழுவாது பணியாற்றினால் ஆசிரியச் சமூகம் பாராட்டு பெறுவது திண்ணம்.

சமூகத்தோடு நல்ல தொடர்பு கொள்ளும் பள்ளி ஒரு சமூகப் பல்கலைக்கழகமாகச் சிறிய அளவில் வளர இயலும். பகல் நேரத்தில் பள்ளிக் கட்டடம் சிறுவர்க்குதவுகின்றது. மற்ற நேரங்களில் அடைபட்டிராது யாரும் அணுகாது தாழிட்டிராது சமூக மக்களுக்குப் பல வகையில் பயன்படுவது எத்துணை நல்லதாகுமென்பதை ஆசிரிய மாணவர்கள் சிந்தித்தல் வேண்டும். நம் ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு வாழ்க்கையோடு தொடர்பற்ற ஒருவகை ஏட்டுக் கல்வியைப் பல பாடங்களின் வழியாக அவர்கள் நினைவில் அடைப்பதோடு நின்றுவிடுகின்றார்கள். எத்தகைய கல்வியும் வளர்ச்சிக்கு வழி செய்ய வேண்டும். அறிவுக் கல்வியை மட்டும் புகுத்திவிட்டால் கல்வி வளர்ச்சி போதுமானதென்று கருதுவதற்கில்லை. சமூகத்தோடு பொருத்தப்பாடு மக்களாட்சியில் உறுப்பேற்கும் பொறுப்பு, வன்மை, பிழைக்கும் திறம், ஓய்வு நேரத்தை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் ஒட்பம் ஆகியவற்றை நம் பள்ளிகள் கவனிப்பதில்லை. இத்தகைய பழக்கங்களை அளிப்பதற்குப் பள்ளியைச் சார்ந்த இன நிலையமே உறுதுணையாகும். பள்ளியின் இன நிலையத்தின் வழியாக நம் உணர்ச்சி எல்லாம் நமக்கென்ற ஓர் உரிமைப்பாட்டினை முகிழ்க்கவேண்டும்.

நமத் நாடு சிற்றூர்களும் பேரூர்களும் நிறைந்ததொன்று. ஐந்நூறு மக்கள் குடியேற்றமுள்ள ஒவ்வொரு ஊரிலும் ஒரு பள்ளியை நமது மாநிலத்து அரசாங்கத்தார் நிறுவத் திட்டமிட்டுள்ளார்கள். கடந்த சில ஆண்டுகளாகப் பள்ளிகள் பெருகி வருகின்றன. அவை

யெல்லாம் நகர்ப்புறங்களிலும் உள்ளூர்களிலும் உள்ளவை. காந்தி அடிகளும் கிராம முன்னேற்றங்களுக்கு வழிவகுத்துதவினர். இன்று கிராமங்கள் பள்ளிகள் பெற்றுள்ளனவாகையால் ஒவ்வொரு பள்ளியும் ஒவ்வொரு இன நிலையமாக விளங்குமென்பதற்கு ஐயமில்லை. இப் பள்ளிகளின் வழியாக ஒவ்வொரு கிராமமும் நாகரிகத்திலும் கல்வி அறிவிலும் மக்களாட்சி உணர்சியிலும் முன்னேற்றம் பெறவேண்டும். பள்ளித்திட்டங்கள் புறச்சமூகத்தோடு ஒட்டியவையானல் சமூகம் பள்ளியைப் பாராட்டும். சமூகத்தோடும் சமூக வாழ்க்கையோடும் இயைபுபெருத கல்வி பயனற்றதாகும். அக்கல்வி பிள்ளைகளை நகரங் களுக்கு ஒட்டிவிடும். கிராமங்களில் படிக்கும் பிள்ளைகள் நகர வாழ்க் கையில் மோகங்கொள்ளுதல் கூடாது. அல்லது நகரங்களில் உயர் கல்வி பெற்ற பிறகு மீண்டும் கிராமங்களில் குடியேறினுல் அவர்கள் பல நன்மைகளைச் செய்யலாம். இன்றைய நிலையில் நகர்ப்பள்ளி களுக்கும் கிராமப் பள்ளிகளுக்கும் ஒரேவகைத் திட்டங்கள் வகுக்கப் பெற்றுள்ளன. அதனுல் பயன் ஒன்றும் இல்லை. கிராமப் பள்ளிகளுக்கு வேறு திட்டங்கள் வகுக்க வேண்டியது கடமையாகும். நகர்களுக்கு வேண்டிய திட்டங்கள் கிராமப் பண்பாட்டைக் குறைத்து விடுகின்றன. எனவே உயர்நிலைக் கல்வி பெற்ற பிள்ளைகளும் தத்தமது கிராமங்களில் வாழ்ந்து தமக்குரிய வருவாயைப் பெருகிக்கொண்டு தம்மாலான சேவையைச் செய்யாமல் மீண்டும் நகரங்களுக்குச் சென்று செயற்கைச் சூழ்நிலையில் வாழ்வதற்கு விரும்புகிருர்கள். எனவே கிராமங்களில் உள்ள பள்ளிகளுக்கு ஓரளவு பொதுவான மூலக் கல்வியோடு அந்தந்த சுற்றுப்புறத்திற்கேற்பக் கிராமியக் கல்வி அளிக்கவேண்டியது கடமை. எனவே கிராமப் பள்ளிகள் நாட்டு வாழ்க்கையோடு ஒட்டி நடைபெறு வதற்கு நாட்டின் வாழ்க்கையை நலம்படுத்தக்கூடிய கல்வித் திட்டம் வேண்டற்பாலது. கிராமங்களில் நாள் முழுவதும் நகரங்களைப் போன்று பள்ளி நேரம் வேண்டியதில்லை. கிராமப் பிள்ளைகள் பள்ளி வாழ்க்கைக்கும் தமது கிராம வாழ்க்கைக்கும் வேறுபாடு காணுதல் கூடாது. ஆசிரியர் கிராமப் பிள்ளையினுடைய தேவைப்பாட்டினையும் அவனுடைய பெற்றோரையும் இல்லச் சூழ்நிலையையும் நன்கு அறிய வேண்டும். பள்ளியும் ஓர் இனநிலையமாகின்ற காரணத்தால் கிராமச் சேவையிலும் சமூகத் தொண்டிலும் பள்ளி தலைமை ஏற்கவேண்டும். பள்ளியால் பாடிவாழ்க்கைப் பலபடியாக உயர்வு பெறுதல் வேண்டும். சமூகத்தொண்டு கிராமிய இல்லங்களுக்கு ஒரு புத்துணர்ச்சி அளிக்கும் கடப்பாடுடையது. வழிவழியாக வந்த பல கிராமியத் தொழில்களும் புத்துணர்வு பெறவேண்டும். கிராமியப் பண்பாடு தற்காலப் போலி நாகரிக வெள்ளத்தில் அழிவுருதபடி காக்கவேண்டிய கடமை கிராமப் பள்ளிகளுக்கு உண்டு. இவை எல்லாம் கிரரமப்பற்றுக்கோடுகளாகப் பற்ருமல் ஆசிரியர்களும் ஒரு போலி நாகரிகத்தில் தம்மை உயர்வாகக் கருதிக்கொண்டு கிராமப் பள்ளிகளில் நல்லுணர்வோடும் பொறுப்

போடும் பணியாற்றுவதில்லை. தமது உயரிய நிலைக்குக் கிராமச் சேவை தாழ்வுற்றதென்று தவருகக் கருதிக்கொண்டு தம்மைக் கண்காணிக்கின்றவர்கள் நேர்முகமாக இல்லாத காரணத்தால் தமது கடமைகளைச் சரியாக ஆற்றுவதில்லை. எனவே கிராமப் பள்ளிகள் விரும்புபவர்களுக்கும் விரும்பாதவர்களுக்கும் ஒன்ருக நல்ல பணிகளை ஆற்ருது விடுகின்றன. கிராமங்களில் அடங்கிய சிறிய சமூகங்களில் மதிப்புப் பெற இயலாத ஆசிரியர்கள் மற்ற சூழ்நிலையிலும் மதிப்புப்பெற மாட்டார்கள். தமது பணியாலன்ருே ஆசிரியர்கள் சிறக்கவேண்டும். முதியோர் கல்வியின் வழியாக நாட்டின் நட்பு முறையை எடுத்துச் சொல்லியும் நாட்டு வரலாற்றின் வழியாக நாட்டுப்பற்றையும் நாட்டு இலக்கியத்தையும் நல்கி ஒவ்வொரு கிராமத்திற்கும் ஆசிரியர்கள் தமது பள்ளியின் இனநிலையத்தின் வழியாக நன்மை இயற்றலாம். கிராமத்தார்களை அறிவிலும் ஆற்றலிலும் சமூக மனப்பான்மையிலும் பொருளாதாரத் துறையிலும் இனநிலையத்தின் வழியாக ஆசிரியர்கள் உயர்த்தலாம். அவர்களுடைய உயர்வே ஆசிரியர்களுடைய உயர்வுமாகும்.

பள்ளியே ஒரு சமூக நிலையமாகும். நல்ல சமூகத்தினரை உருவாக்குவதே பள்ளியின் குறிக்கோள்களில் ஒன்று. பள்ளிகளே சமூகத்தின் ஓர் அங்கம் என்று கூறுவர். எனவே சமூகத் தேவைப்பாட்டுக்கு உரியவற்றைப் பள்ளிகள் ஆக்கித்தரவேண்டும். பள்ளியினுடைய குறிக்கோள்களைச் சமூகம் அறியவேண்டும். சமூகத்திற்கு அவற்றின் தேவைப்பாடுகளையும் அவைகள் பிள்ளைகளுக்கு அளிக்கும் பயன்களையும் தெரிவிக்கவேண்டும். பள்ளியினரும் சமூகம் தம்மைப்பற்றி என்ன கருதுகின்றதென்பதையும் அறியவேண்டும். இதற்காகப் பல நாடுகளில் ஆண்டுக்கொருமுறை கல்வி வாரம் கொண்டாடுகிருர்கள். கல்வி வாரக்காலத்தில் பொதுமக்களைப் பள்ளியோடு தொடர்புபடுத்துகிருர்கள். பொதுமக்களேயன்றிப் பெற்ருேர்களும் பள்ளிக்குச் சென்று கல்வி வார விழாக்களில் கலந்து கொள்ளுகிருர்கள். பள்ளிகளைப்பற்றி அறிந்து கொள்ளுகிருர்கள். ஆசிரியர்கள் பொதுக்கூட்டங்களில் பள்ளிகளுடைய பணிகளைப்பற்றி விவரிக்கின்ருர்கள். சென்னை மாநிலத்தில் கடந்த முப்பத்தோராண்டுகளாகக் கல்வி வாரம் கொண்டாடப்படுகிறது. சமூகத்தோடு ஒட்டிய கல்வியே சிறந்த கல்வி என்று கல்வியாளர் கருதுகின்றனர். சமூகச் சூழ்நிலைக்கு ஒவ்வொரு குடிமகனும் ஏற்றபெற்றி பொருத்தப்பாடு பெறுவதன்ருே சிறந்த கல்வி முறையாகும். பள்ளிப் பிள்ளைகள் நல்ல குடிமக்களாக விளங்குவதற்கு நல்ல பயிற்சிகள் அளிக்கவேண்டியது பள்ளிகள் கடமை. அதனுல் பள்ளிகள் பழமையில் பதுங்கி நிற்காமலும் நடைமுறையை மட்டும் நாடாமலும் எதிர்காலத்தையும் எட்டிப் பார்க்க வல்லதாகப் பணியாற்ற வேண்டிய கடமை உள்ளது. பள்ளியே ஒரு சமூகச் சூழ்நிலையை அளிப்பதன்ருே! பள்ளிச் சூழ்நிலையில் நன்கு பழகும் பிள்ளைகள் புறச் சூழ்நிலையில் தமது ஆளுமையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

தனித்திறன் மட்டும் தனித்தியங்க முடியாது. தனித்திறன் சமூகத்தில் விளங்கவேண்டும். எனவே சமூக உறுப்புக்கள் பலவற்றின் தனி ஆளுமைத்திறன் வளர்ச்சியுறுவதற்குச் சமூகப் பண்பாடுகளைப் பள்ளிச் சமூகம் வகுத்துத் தரவேண்டும். பள்ளிப் புறச்சமூகம் சிறியதானால் பெருஞ் சமூகத்தில் இயைபு பெறுவதற்குப் பள்ளிகள் வழிகாட்ட வேண்டும். இக்காலத்தில் உலகமே ஒரு சமூகமாகத் திரண்டு வருகின்றது. எனவே உலகச் சமூகத்திற்கு உருவாக்கவேண்டிய பொறுப்பு பள்ளிகள்மீது சிறிது சிறிதாக உண்டாகி வருகிறது. ஒவ்வொரு பிள்ளையும் தனது குறுகிய சூழ்நிலையிலிருந்து பெருஞ் சூழ்நிலைகளுக்கு ஏற்பப் பழக்கம் பெறவேண்டும். பேரளவுப் பள்ளிகள் நல்லனவற்றையே பிள்ளைகளுக்கு நல்கவேண்டும். சமூக மாறுதல்கள் புரட்சிகரமானவையாயினும் பள்ளிகள் பெருத்த விழிப்போடு அவற்றை ஆய்வு செய்யவேண்டும். எனவே பழமையின் அடிப்படையில் புதுமையை வளர்க்க வேண்டியது பள்ளிகளின் கடமை. சமூகத்தின் நன்மைகளை நழுவவிடாதும் நல்வழிகளை நயம்படப் பேணியும் நல்லனவற்றில் பிள்ளைகளின் நாட்டத்தை இறுத்தியும் காக்கவேண்டிய கடமையும் பள்ளியைச் சார்ந்தது.

பள்ளியும் சமூகமும் ஒன்றோடொன்று இணைந்தனவாகையால் ஒன்று மற்றொன்றை நீக்கி இயங்குதல் முடியாது. பள்ளிப் பணிகள் சமூகத்திற்கும் சமூக வாழ்க்கைப் பள்ளிக்கும் வேண்டற்பாலவை. சமூகமன்றோ பள்ளியைக் காத்து நடத்துவது. பள்ளித் திட்டங்களை எடுத்துக் கூறுவதற்குச் சமூகத்தினருக்கு உரிமை உண்டு. பள்ளியாளர்களும் தமது தேவைப்பாடுகளையும் கல்வியைப்பற்றிய தமது கருத்துக்களையும் சமூகத்தினருக்கு எடுத்துக் கூறலாம். சமூகத்தினருடைய சேவையைப் பள்ளி மாணவர்களும் சமூகத்தில் கலந்து பல தொண்டுகளாற்றலாம். இங்ஙனம் பள்ளியும் சமூகமும் ஒருங்கே ஒன்றிக் காட்சி அளிக்கலாம்.

29. பள்ளிகளின் பல ஏடுகளும் பதிவுகளும்

பெரும்பான்மை நமது பள்ளிகள் அரசினர் ஒப்புதல் பெற்றவை. எனவே நமது மாநிலத்துக்கெனக் கல்வி நிலையங்களுக்குக் குறித்த சட்டங்கள் இயற்றப் பெற்றுள்ளன. தொடக்க நிலைப் பள்ளிகளுக்குச் சட்டங்கள் வேறு. அவை தொடக்க நிலைக்கான கோட்பாடுகள் எனப் பட்டவை. உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் சென்னை மாநிலக் கல்விக் கோட்பாடுகள் என்பவை உள. இவையன்றி அரசாங்க மானியக் கோட்பாடுகள் என்பவை வேறு. இவை முறையே Rules relating to the Elementary Schools எனவும் Madras Educational Rules எனவும் Grant-in-aid Code எனவும் பெயர் பெறும். இவையன்றி வேண்டியபோதெல்லாம் அரசாங்கத்தாரும் மாநிலக் கல்வி இயக்குநரும் பல கட்டளைகளைப் பிறப்பிப்பதுண்டு. இவை யாவும் கல்வி நிலையங்களைக் கட்டுப்படுத்துபவை. அவற்றை மீறக் கூடாது. மீறினால் காரணங் கூறவேண்டும். அடிப்படைச் சட்டங்களை அனுசரிக்கத் தொடங்கினால் அரசாங்க ஒப்புதல் தள்ளுபடியாகும். அதுவன்றி அரசாங்க மானியமும் நிறுத்தப்பெறும். அதனால் அரசாங்கக் கல்வித் துறையோடு நல்லுறவு கொள்ள வேண்டுமெனப் பள்ளிச் செயலாளரும் தலைமையாசிரியரும் சட்ட திட்டங்களுக்கு அடங்கி நடக்க வேண்டும்.

தலைமையாசிரியரும் நிர்வாகச் செயலாளரும் தமது பள்ளியாட்சி அரசாங்கக் கோட்பாடுகளுக்கு வழுவாமல் நடத்தவேண்டும். ஆசிரியர் களும் வழுவாதபடி காக்கவேண்டும். பள்ளியைப் பற்றிய வரலாறு வளர்ச்சிகளை அறிவிக்கும் பல ஏடுகள் பதிவுப் புத்தகங்கள் மிகவும் இன்றியமையாதவை. பிள்ளைகளைப் பற்றி வரலாற்றுப் பதிவுகள் முக்கியமானவை. பள்ளியின் பல தளவாடங்களைப் பற்றிய பதிவுப் புத்தகங்களும் வேறு பல உரிமைச் சொத்துக்களைப் பற்றிய விவரங்களும் வேண்டியபோது எடுக்கக்கூடிய நிலையில் சேர்த்திருக்கவேண்டும். ஒவ்வொரு பதிவேட்டின் முகப்பில் பள்ளியின் பெயர், பதிவேட்டின் எண், பதிவின் பெயர், பதிவில் உள்ள மொத்தப் பக்கங்கள், தொடங்கிய தேதி, முடிவுற்ற தேதி தலைமையாசிரியருடைய கையொப்பம் ஆகியவை வேண்டும். எந்தப் பதிவேடும் பக்க எண்ணிக்கையோடு இருத்தல் வேண்டும். அதில் உள்ள பதிவுகள் மையால் எழுதப் பெற்றிருத்தல் வேண்டும். திருத்தங்கள் ஒவ்வொன்றிற்கும் கையொப்பம் அவசியம்.

கீழ்க்கண்ட பதிவேடுகளும் புத்தகங்களும் ஒழுங்காகப் பள்ளியின் பெட்டகத்தில் தாழிட்டிருக்கவேண்டியவை. அவை தீக்கிரையாகா வண்ணம் அவற்றை எஃகு அலமாரியில் வைக்கவேண்டுமென்ற கல்வி

இயக்குநர் கட்டளை உள்ளது. எக்காரணத்தாலும் அவற்றை வெளியில் வைத்தல் தவறு. [1] பள்ளிநாள் காட்டி [2] பள்ளி நடவடிக்கைப் பதிவேடு. [3] ஆசிரியர்கள் பேரேடு [4] பள்ளிக்கு வருகை புரிபவர், பள்ளியைப்பற்றி வரையும் கருத்துப் புத்தகம் [5] ஆசிரியர்களுடைய சேவைப் பதிவு [6] மாணவர் சேர்க்கைப் பதிவு [7] மாணவர் மாற்றப் பதிவுச்சீட்டு [8] ABC பதிவேடுகள் [9] ஆசிரியர் சம்பளப் பட்டியல் [10] ஆசிரியர்களுடைய நலக்காப்பு சம்பந்தப்பட்ட பதிவேடுகள் [11] நாள்தோறும் சம்பள வரவுப் பதிவேடு [12] மாணவர் சம்பளப் பதிவுப் பேரேடு [13] சம்பளச் சலுகைப் பதிவேடு [14] மாதாந்திர வரவு செலவுப் பதிவு [15] வரவு செலவுப் பதிவு [16] நன்கொடை வரவுப் பதிவு [17] மாணவர்கள் வருகைப் பதிவு [18] மாணவர்கள் வருகை மாதாந்திர மொத்தப் பதிவு [19] ஆசிரியர் வருகைப் பதிவு [20] ஆசிரியர் விடுமுறை எடுத்தற் பதிவு [21] ஆசிரியர் வேலை அட்டவணை [22] மாணவர் வகுப்பு வேலை அட்டவணை [23] வகுப்பு தோறும் ஆசிரியர் கற்பித்தற்பதிவு [24] வகுப்புப் பாடத்திட்ட அட்டவணை [25] மதிப்பெண் பதிவேடு [26] தேர்வுப் பதிவேடு [27] மாணவர் திரட்டுப் பதிவேடு [28] ஆசிரியர் சிறப்புக் கற்பித்தல் பதிவேடு [29] பள்ளியின் மரச்சாமான்கள் இருப்புப் பதிவேடு [30] பள்ளியின் ஒவ்வொரு துறையின் தட்டுமுட்டுச் சாமான் கள் பதிவேடு [31] பாடத்துணைக்கரு இருப்புப் பதிவேடு [32] நூல்நிலையப் புத்தகப் பட்டியல் [33] புத்தகங்கள் கொடுத்தல் பெறுதல் பதிவேடு [34] விளையாட்டுப் பொருள்கள் இருப்புப்புத்தகம் [35] விளையாட்டுப் பொருள்

---

1. School Calendar 2. Log Book 3. Teachers' Personal Record 4. Visitors' Book (பார்வையாளர் கருத்துப் பதிவேடு) 5. Teachers' Service Register 6. Admission Register 7. Transfer Certificate Book 8. ABC Registers 9. Pay and Acquittance Roll 10. Teachers' Provident Fund Register 11. Daily Fee Collection Register 12. Term Fee Register 13. Register of Scholarships 14. Monthly Abstract of Receipts and Payments 15. Cash Book 16. Register of Donations 17. Attendance Registers 18. Register of Monthly Abstract of Attendances 19. Teachers' Attendance Register 20. Register of Teachers' Casual and other Leaves 21. Teachers' Time Table 22. Class Time Table 23. Class Progress Diary 24. Syllabuses Class-war 25. Marks Register 26. Promotions Register 27. Cumulative Record Register 28. Register of Teachers' Private Tuitions 29. Register of Stock of Furniture 30. Register of Stock of Articles in the Departments 31. Register of Stock of Teaching Aids 32. Library Catalogue 33. Register of Issue and Collections 34. Register of Stock of Sports Materials 35. Register of Issue of Sports Materials

கள் செலுத்துதல் குறிப்பேடு [1] தலைமையாசிரியருடைய சுற்றறிக்கைப் புத்தகம் [2] தண்டனை விதித்தல் பதிவேடு.

பள்ளிக் கட்டடங்களும் அரசாங்க மானியத்தைப் பெற்றுப் பெரும் பாலும் கட்டப்பெறுகின்றன. அதனால் கட்டடத்தைப் பொறுத்த வரையில் வரவு செலவுகள் ஒழுங்காக இருத்தல் வேண்டும். அங்ஙனம் மரச் சாமான்களும் இதர தளவாடங்களும் அரசாங்க மானியம் பெற்று வாங்கப் பட்டவையாகும். அவற்றிற்கெல்லாம் இருப்புப் பதிவேடு தொகை உட்படவும் அரசாங்க உத்திரவுச் சீட்டின் எண் தேதி உட்படவும் குறித்து வைக்கவேண்டும். அப்பொருள்களுக்கெல்லாம் அரசாங்க உதவியால் பெற்றவை என்பதைக் குறிக்க ஒவ்வொரு தளவாடத்தின் மீதும் G. G. என்று பொறிக்கப் பெற்றிருக்க வேண்டும். நிர்வாகத்தார் உதவியால் பெற்றவற்றிற்கு M. F. என்று பொறித்துக் கொள்ளலாம். தலைமை ஆசிரியரும் ஆசிரியர்களும் பள்ளிப் பொருள்களைத் தமது சொந்தப் பொருள்களைப்போல் காப்பாற்ற வேண்டும். மாணவர்களுக்கும் அவை தமது சொந்தப் பொருள் என்ற மனப்பான்மையை வளர்க்க வேண்டும். சில பள்ளிகளில் உடைந்த தளவாடங்கள் மூலைகளிலும் முடுக்குகளிலும் கேட்பாரற்றுக் கிடக்கும் காட்சி உண்டு. பழுதுபார்க்க வேண்டியவற்றை அப்போதைக்கப்போது பழுது பார்ப்பதே நலம். இவற்றில் தலைமை ஆசிரியர் மிக விழிப்போடு இருத்தல் நன்று. உதவி ஆசிரியர்களுக்கு இப்பொறுப்பினை அடிக்கடி சுட்டுதல் வேண்டும். எல்லாப் பொருள்களும் பொன்னே போல் போற்றப் பெற்றால் பிள்ளைகளுக்கு உதவும்.

பதிவேடுகளையும் பதிவுப் புத்தகங்களையும் சரிவர வைத்துக் கொள்ளாத பள்ளிகள் பல இடுக்கண்களுக்கு உள்ளாகின்றன. தலைமையாசிரியர் இங்கு கூறப்பெற்றுள்ள 37 பதிவுகளோடு இன்னும் பலப்பல வகிக்க வேண்டியதாகும். எனவே இவை யாவற்றையும் ஒழுங்காக வைத்துக் கொள்ளுபவரே தலைமை ஆட்சியில் ஓரளவு வெற்றி காண முடியும். எல்லாவற்றிற்கும் தமது நேர்ப்பார்வை மிகமிக முக்கியம்.

1. Circular Book 2. Corporal Punishment Register.

30. CUMULATIVE RECORD

CUMULATIVE RECORD CARD FOR THE YEAR 19   19

Name.. *Date of Birth*...................... *Sex*.............. *Class/Form*..............

Expansion of Initials.................. *Age*.................................... *Admission No*......................

I HOME ENVIRONMENT	Position in family ______
Father's Name ______	Elder brothers (name and age) ______
Father's Occupation ______	Elder sisters (,,) ______
Mother's Name ______	Younger brothers (,,) ______
Mother's Occupation ______	Younger sisters (,,) ______
Guardian's Name ______	Economic status ______
Special Home conditions ______	Pupil's ambition ______
	Parent's ambition regarding the pupil } ______
	Vocational and educational attainments of others in the family influencing pupil's level of aspiration } ______

II EDUCATIONAL HISTORY OF THE PUPIL (Before admission to school)

Schools attended	Date of admission	Date of withdrawal	Attendance	Progress	Reasons for withdrawal
(a)					
(b)					
(c)					
(d)					

III PHYSICO - MEDICAL REPORT

(a) Past history (Specify dates or year where possible }

	I Term	II Term	III Term
(b) Present state Height (in inches) Weight (in pounds) Chest—normal (in inches) Chest—contracted (,,) Chest—expanded (,,)			

	I Term	II Term	III Term
Personal cleanliness			
General health			
Posture			
Strength			
Stamina			
Medical history during the year			
IV ATTENDANCE			
Present			
Out of			
V SCHOLASTIC ATTAINMENTS			
Regional language Part I			
" Part II			
Sanskrit / Hindi			
English			
Hindi			
Mathematics General / Composite			
General Science			
Social Studies			
....			
....			

VI OTHER ACTIVITIES

1. Craft
   - Name of craft
   - Skill in craft
   - Application to craft
   - Originality

2. Aesthetics
   - Drawing, painting etc.
     - (a) Interest
     - (b) Degree of imagination
     - (c) Perfection of technique
   - Music
     - (a) Interest
     - (b) Degree of imagination
     - (c) Perfection of technique
   - Dance
     - (a) Interest
     - (b) Degree of imagination
     - (c) Perfection of technique

3. Physical activities
   - Fundamental skills
   - Proficiency in games
   - Peoficiency in athletics
   - A. C. C./N. C. C./ Scouting

4. Citizenship activities
Projects within School
Social Service
Excursion

5. Hobbies
(a) Actually pursued
(b) Would like to pursue but is unable to do so

6. Responsibilities shouldered	Degree of success in discharging the responsibilities	Probable causes for failure
(a)		
(b)		
(c)		

VII ABILITIES AND SKILLS

(Basic to school work)

Reading
(a) Comprehension
(b) Speed
Speech
Writing
(a) Handwriting
(b) Composition
Reasoning
Intelligence

VIII SPECIAL INTERESTS

1. Physical
2. Intellectual
3. Practical
4. Artistic
5. Social

IX PERSONALITY TRAITS

1. Disposition
2. Self-confidence
3. Persistence
4. Perseveration
5. Co-operativeness
6. Emotional stability
7. Emotional control
8. Sense of responsibility
9. Habits of work
10. Courtesy
11. Sociability
12. Leadership
13. Integrity
14. Initiative

15. Attitudes to
   (a) Home
      (i) Parents
      (ii) Siblings
   (b) School
      (i) Teacher
      (ii) Schoolmates
   (c) Self

16. Temperament
    Degree of introversion

X SYMPTOMS OF MALADJUSTMENT

Class teacher

Initials and date

Headmaster
Supervisor

Problem	Diagnoses	Guidance		Results	Remarks	Signature & designation
		Recommendation	Follow up			

31. திரட்டுப் பதிவேடு

திரட்டுப் பதிவேட்டு அட்டை—ஆண்டு 19 —19

பெயர்.. பிறந்த நாள்......................... பால்............... படிவம்/வகுப்பு.................

தலை எழுத்தின் விளக்கம் .... வயது............................... பதிவு எண்...............................

I வீட்டுச் சூழ்நிலை

தந்தையின் பெயர் ______

தந்தையின் தொழில் ______

தாயின் பெயர் ______

தாயின் வேலை ______

பாதுகாப்பாளர் பெயர் ______

வீட்டுச் சிறப்பு நிலைகள் ______

குடும்பத்தில் தன் நிலை ______

மூத்த சகோதரர்கள் (பெயர், வயது) 1 ______ 2 ______ 3 ______

மூத்த சகோதரிகள் (பெயர், வயது) 1 ______ 2 ______ 3 ______

இளைய சகோதரிகள் (பெயர், வயது) 1 ______ 2 ______ 3 ______

பொருளாதார நிலை ______

மாணாக்கரின் ஆர்வம் ______

மாணாக்கரைப்பற்றி பெற்றோரின் ஆர்வம் ______

மாணாக்கரின் ஆர்வத்தைத் தூண்டக்கூடிய குடும்பத்திலுள்ள பிறருடைய தொழில் திறன்களும் கல்வித் திறன்களும் ______

II மாணுக்கர் கல்விபெற்ற வரலாறு (பள்ளியில் சேர்வதற்கு முன்பு)

படித்த பள்ளிகள்	சேர்ந்த நாள்	நீங்கின நாள்	வருகை விவரம்	தேர்ச்சி	நீங்கியதற்குக் காரணங்கள்
(அ)					
(ஆ)					
(இ)					
(ஈ)					

III உடல் - மருத்துவ அறிக்கை

(அ) கடந்த கால வரலாறு (முடிந்தவரை நாள், ஆண்டு ஆகியவற்றைக் குறிப்பிடுக.)

	முதற் பருவம்	இடைப் பருவம்	இறுதிப் பருவம்
(ஆ) தற்போதைய நிலை உயரம் (அங்குலத்தில்) எடை (இராத்தலில்) மார்பு - இயல்பான நிலை (அங்குலத்தில்) மார்பு - சுருங்கிய நிலை (,,) மார்பு - விரிந்த நிலை (,,)			

4613—36

	முதற் பருவம்	இடைப் பருவம்	இறுதிப் பருவம்
உடல் தூய்மை			
பொதுவான நலம்			
உடல் கோலம்			
வன்மை			
கடும் உழைப்பைத் தாங்கும் ஆற்றல்			
நடமுறையாண்டின் மருத்துவ வரலாறு			
IV பள்ளிக்கு வருகை			
வந்த நாள்			
மொத்த நாள்			
V பாடத் தேர்ச்சி			
மண்டல மொழி முதற் பகுதி			
,, இரண்டாம் பகுதி			
வடமொழி / இந்தி			
ஆங்கிலம்			
இந்தி			
கணிதம் பொது / கலவை			
பொது அறிவியல்			
சமூக இயல்			
....			
....			

VI பிற வேலைகள்

1. கைத்தொழில்கள்
   தொழிலின் பெயர்
   அத்தொழிலில் கைத்திறன்
   தொழிலில் ஊக்கம்
   புதுப்போக்குடைமை

2. நுண்கலைகள்
   ஓவியம், வண்ண வேலை முதலியவை
   (அ) அக்கறை
   (ஆ) கற்பனை அளவு
   (இ) திறனில் முழுமை

   இசை
   (அ) அக்கறை
   (ஆ) கற்பனை அளவு
   (இ) திறனில் முழுமை

   நாட்டியம்
   (அ) அக்கறை
   (ஆ) கற்பனை அளவு
   (இ) திறனில் முழுமை

3. உடற்பயிற்சி வேலை
   அடிப்படைத் திறன்கள்
   விளையாட்டுகளில் திறன்
   உடற்பயிற்சிகளின் திறன்
   A. C. C./N. C. C./ சாரணர்

4. குடிமைப்பயிற்சி வேலை
பள்ளியினுள் தன்னேக்க வேலைகள்
சமூகத் தொண்டு
சுற்றுலா

5. ஈடுபாட்டுக் கலைகள்
(அ) மேற்கொள்ளப் பெற்றிருப்பவை
(ஆ) மேற்கொள்ள விரும்புபவை, ஆனல் இயலாத நிலை

6. பொறுப் பேற்றிருப்பவை	பொறுப்புக்களை ஆற்றுவதில் வெற்றியின் அளவு	நிறைவேற்றுவதற்குரிய உத்தேச காரணங்கள்
(அ) (ஆ) (இ)		

VII திறன்களும் கைத்திறன்களும்

(பள்ளி வேலைக்கு அடிப்படையானவை)

படிப்பு
(அ) பொருளுணர் திறன் (கருத்து)
(ஆ) வேகம்
பேச்சு
எழுத்து
(அ) கையெழுத்து
(ஆ) கட்டுரை
அனுமானித்தல்
அறிவுநிலை

VIII சிறப்பான அக்கறைகள்

1. உடல் பற்றியவை
2. அறிவு பற்றியவை
3. செய்முறை பற்றியவை
4, கலைகள் பற்றியவை
5. சமூகம் பற்றியவை

IX ஆளுமைப் பண்புகள்

1. மனோ நிலை
2. தன்னம்பிக்கை
3. விடாப்பிடி
4. விடாமுயற்சி
5. ஒத்துழைக்கும் தன்மை
6. உள்ளக்கிளர்ச்சியின் நிலைத்த தன்மை
7. உள்ளக்கிளர்ச்சியின் ஆட்சி
8. பொறுப் புணர்ச்சி
9. வேலைப் பழக்கங்கள்
10. மரியாதை
11. கலந்து பழகுந் தன்மை
12. தலைமைத் தன்மை
13. நேர்மை
14. தொடக்க ஆர்வம்

15. மனப் போக்கு

(அ) வீடு

(i) பெற்ருேர்

(ii) தனக்குச் சிறியவர்களாகவுள்ளவர்கள்

(ஆ) பள்ளியைப்பற்றிய மனப்போக்கு

(i) ஆசிரியர்

(ii) பள்ளித் தோழர்கள்

(இ) தன்மேல் மனப்போக்கு

16. மீப் பண்பு

உள்ளடக்க அளவு

X தவருன பொருத்தப்பாட்டின் அறிகுறிகள்

வகுப்பு ஆசிரியர் கையெழுத்து
(தேதியுடன்)

தலைமையாசிரியர் கையெழுத்து
(தேதியுடன்)

பிரச்சினை	குறையறிதல்	வழி காட்டல்		முடிவுகள்	குறிப்புக்கள்	கையெழுத்தும் உத்தியோகமும்
		சிபாரிசு	தொடர்ந்த வேலை			

கல்விக் கலையும் பள்ளி ஆட்சியும்

பல்கலைக் கழகத் தேர்வு வினாக்கள்

செப்டம்பர் '56

அ

1. கல்வி என்பது 'புகுத்துவினை' என்ற கருத்தினைக் கல்வி என்பது 'இயக்குவினை' என்ற கருத்தோடு ஒப்பிடுக.
(கல்வி என்றால் 'கருத்துக்களைப் புகுத்தல்' என்ற கருத்தினைக் கல்வி என்றால் 'உள்ளத்தை இயக்குதல்' என்ற கருத்தோடு ஒப்பிடுக).
2. இன்றைய பள்ளிக் கல்வி புள்ளிக் குதவாது என்ற கூற்றினை ஆய்க.
3. எத்துணையளவிற்குப் பள்ளிவாழ்க்கை மாணவரிடையே நல்லொழுக்கத்தையும் ஆளுமையையும் வளர்க்க முடியும்?
4. "கற்றலிற் களிப்பை ஊட்டக் கல்வியை நடைமுறைப் பயனுடையதாக்க வேண்டும்". இக்கூற்றினைப் பள்ளிப் பாட ஏற்பாட்டிலுள்ள பாடமொன்றுடன் வைத்துக் காட்டுக.
5. மாணவத் தனியாள் வேற்றுமைக் கருத்தினை மிதமிஞ்சி வலியுறுத்துவதால் வரும் கேடுகள் யாவை?
6. "எண்ணிவகுத்த மிகச்சிறந்த எத்தகைய புதிய பாட ஏற்பாடும் தனித்து நின்று கல்வி முறையை மாற்றியமைத்துவிட முடியாது" ஆய்க.

ஆ

7. பள்ளிக்கும் சமூகத்திற்கும் இடையே நிலவும் ஒதுக்கத்தைப் போக்க ஆசிரியர்கள் யாது செய்யலாம்?
8. பாடப் புறச்செயல்களின் தேவைப்பாட்டு மிகுதிக்குக் காரணங்கள் யாவை?
9. உரியமுறையில் ஓய்வுநேரத்தைக் கழிப்பதற்கு நீவிர் வகுக்கும் திட்டம் யாது? சிறப்பாக நாட்டுப்புறச் சிறுவர்களின் உடலுள்ள வளர்ச்சிக்கான திட்டத்தை எவ்வாறு வகுப்பது?
10. கீழ்க் கண்டவற்றில் எவையேனும் இரண்டினைப் பற்றிக் குறிப்பு வரைக:
    (அ) தொழில் மரபு (பணிநலப் பாங்கு)
    (ஆ) பள்ளித் தோட்டங்கள்
    (இ) இளைஞர் கழகங்கள்
    (ஈ) ஆசிரியத் துறை மன்றங்கள்

ஏப்பிரல் '57

1. " அனைத்துக் கல்வியும் ஆளுமை முழுவளர்ச்சிக்கே " ஆய்க.
2. உம்முடைய உளவியலறிவு நுமது ஆசிரியப் பணிக்கும் மாணவத் தலைமைக்கும் உதவுமாறு யாங்ஙனம் ?
3. " கல்விப் பணியின் ஒரு பெருஞ்சிக்கல் விரியும் அறிவை வெறுங் கருத்துக் குவியலாக மாறுமல் தடுப்பதாகும் ?" இச்சிக்கல் எங்ஙனம் எழுகிறது ? சிக்கலைத் தீர்த்தற்குரிய வழிகள் யாவை ?
4. சமுதாய வாழ்வு பள்ளியில் மலர எவ்வகைச் செயல்களைப் பள்ளியிற் புகுத்துவீர் ?
5. தலை, இடை, கடை மாணவர்கட்கென்று தனித்தனிக் கல்வித் திட்டங்கள் வேண்டுமா ? அத்திட்டங்களை முந்நிலை மாணவர்களும் உள்ள வகுப்பிற் கொண்டுவருதல் எத்துணை அளவிற்கு இயலும் ?
6. இயக்கவினை எவ்வாறு கல்வி வினையாகும் ? (செயற்பாடு எவ்வாறு கல்வியாகும் ?)
7. முற்றிலும் குறைவற்ற கால அட்டவணை ஒன்று இருக்கமுடியா தென்று கூறுவதேன் ?
8. " பாடப் புறச் செயல்கள் என்பவை காலத்தை வீணக்கிப் பல மாணவர்களைக் கல்வியின் நோக்கத்திலிருந்து வழி விலக்கிக் கெடுப்பவை ". ஆய்க.
9. நாட்டு விழாக்களையும் உலக விழாக்களையும் பள்ளியிற் கொண்டாடுவதால் அடையும் பயன் யாது ?
10. பள்ளி வாழ்க்கையில் பள்ளி நூல் நிலையம் பெறவேண்டிய பங்கு என்ன ? பள்ளி நூல் நிலையத்தின் மூலம் இயன்றளவு முழுப்பயனை எய்துதற்கு நீவிர் வகுக்கும் திட்டம் யாது ?

செப்டம்பர் '57

அ

1. " கல்வியின் முடிந்த முடிபும் உட்கிடையும் ஓதலிற் சிறந்தது ஒழுக்கமுடைமை என்பதே " ஆய்க.
2. ஆசிரியப் பணியை 'விரும்பி ஏற்பதற்கும்' 'வேண்டி ஏற்ப தற்கும்' உள்ள வேறுபாடு யாது ?
3. பாட ஏற்பாட்டு அமைப்பின் தலைமை விதிகள் யாவை ? அவ் விதிகளின் துணைகொண்டு இந்நாள் உயர்நிலைப் பள்ளியின் பாட ஏற்பாட்டை ஆராய்க.
4. நம் உயர்நிலைப் பள்ளிகளில் நம்முடைய கல்விப் போக்கு இயற்கையிலேயே வல்ல தலைமாணுக்கரைப் புறக்கணிப்பதா

யுள்ளது. வல்லார் திறன்காணவும், கண்டதிறனை வளர்க்கும் வாய்ப்பளிக்கவும் கையாளத்தகு முறைகள் யாவை?

5. "கல்வி முறையில் நாம் நாள்தோறும் கண்டுவருங் குற்றம் ஏட்டுப் படிப்பிற்கும் ஆக்கவினைக்கும் தொடர்பின்மையே" இரண்டையும் வகுப்பறையில் ஒன்றுவிப்ப தெங்ஙனம்?

6. "ஆசிரியரும் மாணவர்களும் மிகையுங் குறையுமின்றி ஒருங்கியைந்து செயற்படுதலே நல்லாசிரியமாகும்" சான்று காட்டி விளக்குக.

ஆ

7. "குழந்தையின் ஒய்வுநேரக் கழிப்பிற்கு வழிகாட்டாப் பள்ளி, கெடுப்பாரின்றிக் கெடும்". ஆய்க.

8. எவ்வழிகளில் ஓராசிரியன் மாணவர்களிடம் அவர்தம் பருவத்திற்கேற்ற பொறுப்புக்களை ஒப்படைக்கலாம்?

9. ஒரு வகுப்பாசிரியன் பயனுடையவனா? ஒரு துறை (பாட) ஆசிரியன் பயனுள்ளவனா?

10. பள்ளி வெளிச்செலவு மூலம் சிறந்த பயனடைவதற்கு நீவிர் செய்வன யாவை?

ஏப்பிரல் '58

அ

1. "குழந்தையை நடுப்பொருளாகக் கருதும் கல்வி" பற்றி ரூசோவும், பெஸ்டலாசியும் கூறும் கருத்துக்கள் யாவை?

2. 'வாழ்க்கைப் பொருத்தப்பாடே கல்வி' என்பதன் பொருள் என்ன? அக்கொள்கையின் மூலம் கல்வியாளர்கள் எய்த விழையும் பயன்கள் யாவை?

3. உயர்நிலைப் பள்ளிநிலையில் பல்துறைக் கல்வித் திட்டத்தின் அவசியம் என்ன? பள்ளிக் கல்வியில் பல்துறைக் கல்வியை மேற்கொள்ளுவதால் ஏற்படும் விளைவு யாது?

4. "முடிந்த நிலையிற் காணுங்கால் கல்வித் தரம் கற்பிக்கும் முறையால் அமைகின்றது; கற்பிக்கும் முறையும் பணி மேற்கொள்ளும் ஆசிரியன்மாரைப் பொறுத்தமைகின்றது" என்ற கூற்றினைத் திறனாய்க.

5. பாட ஏற்பாட்டில் கலைபெறும் இடத்தை ஆய்க. மாணவரிடையே கலையுணர்வினை வளர்ப்ப தெங்ஙனம்?

6. கல்வி வழிகாட்டல், தொழில் வழிகாட்டல் என்றவற்றின் பொருளை விளக்குக. வழிகாட்டுதலின் இன்றியமையாமையைத் தனியார் நிலையிலும் சமூக நிலையிலும் வைத்து ஆய்க.

ஆ

7. குழந்தைகட்குத் தக்க கல்விமுறையை அமைக்க ஆசிரியர்கட்குப் பெற்ருேரின் கூட்டுறவு மிகமிகத் தேவை ஏன்? அத்தொடர்பு நம்நாட்டில் பெருகி வளராததற்குக் காரணம் என்ன? அக்கூட்டுறவை எய்துவ தெங்ஙனம்?
8. மாணவரிடையே பொறுப்புணர்ச்சியையும், தாமும் சமுதாயத்தின் உறுப்பினர்களே என்ற உணர்ச்சியையும், எவையேனும் இரண்டு, பள்ளி விழாக்களின் மூலம் எவ்வாறு வளர்க்கலாம்?
9. ஆசிரியத் தொழில்மரபினைக் காக்கும் விதியொழுங்கொன்றினை வரைக.
10. பள்ளிப் பொருட்காட்சி சாலை ஒன்றினை மாணவர் கைவண்ணம் தோன்றுமாறு உருவாக்குவ தெங்ஙனம்?

செப்டம்பர் '58

அ

1. பள்ளியைத் தவிர வேறு நிறுவனங்களின் கல்விச் செல்வாக்கை விளக்கி வரைந்து பள்ளி அவற்ருேடு இணைந்தியங்கு முறையினைச் சுட்டுக.
2. குழந்தைகளுக்கு மக்களாட்சி முறையில் வாழப் பயிற்சி அளிப்பதற்குப் பள்ளி எவ்வாறு பணிபுரியலாம்?
3. "குழந்தை தூக்கப் பள்ளியை விரும்பவில்லை; ஆக்கப் பள்ளியை விரும்புகிறது" இக்கூற்றினைத் திறனாய்க.
4. பள்ளியில் சமுதாய வாழ்வுப் பயிற்சிக்கான திட்டமொன்றினைத் தீட்டுக.
5. "கைத்தொழிலைப் பல பள்ளிகள் கல்விசாராப் பள்ளிப் புறச் செயல் என எண்ணுகின்றன" இக்கூற்றை நீர் ஒப்புகிறீரா? கல்வியில் கைத்தொழிலுக்குரிய இடம் யாது?
6. கற்பித்தல் மனித அடிப்படையில் தொடர்பு கொள்ளுவதாகையால் ஆசிரியர் துறைபுகும் ஒருவருக்கு அமையவேண்டிய குண நலன்களைக் குறிப்பிடுக.

ஆ

7. வகுப்பிலும் பள்ளியிலும் நல்ல சுவையுணர்வையும், பண்பாட்டொழுக்கத்தையும் மாணவர்பால் வளர்த்தற்குரிய செயல் முறைக் கருத்துக்களைக் கூறுக.
8. நாட்டுணர்வினையும், சமூகத் தொண்டுள்ளத்தையும் மாணவர்பால் வளர்க்கப் பள்ளியில் எத்தகு பண்பியற் செயற்பாடுகளை உருவாக்கலாம்? (கலை விழாக்களை)

9. “ஒருபாட ஆசிரியர் மாணவரின் அரைகுறை ஆர்வநிலையில் பாடத்தைத் துவங்கி முடிக்கிறார்” என்பது உண்மையா? பாட ஆசிரியரைக் காட்டிலும் வகுப்பாசிரியரை மிகவும் நீர் விரும்புவீரா?
10. 'கால அட்டவணை அமைப்பில் கருதவேண்டியவை யாவை? ஏதாவதொரு வகுப்பைக் கூறி அதன் ஒருவாரப் பாடத் திட்டத்திற்குக் கால அட்டவணை வரைக.

ஏப்பிரல் '59

அ

1. கல்வியென்பது “பல்துறை யாக்கம்” என்ற விளக்கத்தை ஆராய்க.
2. முன்குமரப் பருவத்தினரின் உடலுள்ளத் தேவைகட்கு ஏற்பப் பள்ளி வாழ்க்கையில் ஏற்படுத்தும் செயற்பாடுகள் யாவை?
3. பாட ஏற்பாட்டில் நடைமுறை செயற்பாட்டுத் திட்டத்தைப் புகுத்த நீவிர் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை? நும்முடைய விருப்பப் பாடங்களினின்றும் காட்டுக்கள் தருக.
4. “ஆசிரியரும் மாணவர்களும் மிகையுங் குறையுமின்றி ஒருங்கியைந்து செயற்படுதலே நல்லாசிரியமாகும்” நும் முடைய விருப்பப் பாடங்களிலிருந்து சான்றுகாட்டி விளக்குக.
5. கற்பித்தலில் வெற்றிக்கு வழிகோலும் ஆசிரிய நற்கூறுகள் யாவை? அவற்றைத் தொகுத்து வரைந்து அவற்றின் இன்றியமையாமையை ஆய்க.
6. “கைத்தொழிலைப் பல பள்ளிகள் கல்விசாராப் பள்ளிப் புறச் செயலென ஒதுக்குகின்றன” இக்கூற்றின் திறன் காண்க.

ஆ

7. நீர் கற்பித்த பள்ளிகளில் பள்ளித் திட்டத்திற் கண்ட சில மக்களாட்சிப் பழக்கமுறைகளைக் கூறுக. அம்முறைகள் எத்துணையளவிற்கு வெற்றிபெற்றன?
8. நெடுங்காலமாக வகுப்பமைப்பு முறையே குழந்தைகள் பள்ளிக்கு விருப்பின்றி வருவதற்குக் காரணமாகும் என்று சொல்லுகின்றனர். வகுப்பறையில் கவர்ச்சியையும் ஆர்வத்தையும் மிளிரச் செய்வது எங்ஙனம்?
9. கல்வித் திட்டங்களை நன்கு நிறைவேற்றச் சமுதாய உடைமைகளைப் பயன்படுத்தல் மிகமிகத் தேவை ஏன்?
10. பள்ளிக்கும் இல்லத்திற்குமிடையே நல்லிணக்கத்தை வளர்க்க ஆசிரியன்மார் யாது செய்யலாம்?

செப்டம்பர் '59

அ

1. "கல்வியின் முடிந்த முடிவும் உட்கிடையும் ஓதலிற் சிறந்தது ஒழுக்கமுடைமை என்பதே" ஆய்க.
2. "கூறியது கூறும் மனமுடக்கம் வேறுபணிகளைக் காட்டிலும் ஆசிரியப் பணியில்தான் எளிதில் நேரும். அதன் விளைவும் அப்பணியில்தான் மிகவும் ஆபத்தானது." ஆய்க. ஆசிரியத்தை நிலைதாழாமல் காப்பதற்குரிய வழிகள் யாவை?
3. பல்நோக்குப் பள்ளியின் செயல்கள் யாவை? அவற்றின் இன்றியமையாமையை மதிப்பிடுக.
4. "கல்விமுறையில் நாம் நாள்தோறும் கண்டுவருங் குற்றம் ஏட்டுப் படிப்பிற்கும் ஆக்கவினைக்கும் தொடர்பின்மையே" இரண்டினையும் வகுப்பறையில் ஒன்றுவிப்பதெங்ஙனம்?
5. "அழகைச் சுவைக்கப் பழக்குதல் அழகைப் படைக்க வாய்ப் பளிக்கும்" இக்கூற்றினைப் பள்ளியின் கலைக்கல்வியில் வைத்து ஆராய்க.
6. நும்முடைய வகுப்பறை நடைமுறை அறிவிலிருந்து கீழ்க் கண்டவற்றிற்குக் காட்டுக்கள் தருக :—
   (1) கூட்டு முயற்சி (கூடிச் செய்தல்)
   (2) தனி முயற்சி (தனித்துச் செய்தல்)

ஆ

7. "குழந்தையின் கல்விப்பணியைப் பள்ளிமட்டுமன்றிச் சமுதாய முழுதுமே ஆற்றுகின்றது" ஆய்க.
8. கல்வியைப் புகட்டும் ஒரு நல்ல கருவியாகப் பள்ளிநூல் நிலையத்தை எங்ஙனம் உருவாக்கலாம்?
9. நல்லாசிரியக் குழுவையும் சிறந்த கல்விக் கருவிகளையும் நுமது பள்ளிக்கு அமைத்துக்கொள்ளத் தலைமையாசிரியர் நிலையில் நீர் செய்வது யாது?
10. உலகப் பொது எண்ணத்தை வளர்ப்பதற்குப் பள்ளியில் அமைக்கும் இரண்டு செயல் திட்டங்களைக் கூறுக.

ஏப்பிரல் '60

அ

1. "இருபதாம் நூற்றுண்டுக் கல்விமுறை, எல்லை விரிந்ததாகவும், பல்வகை அறிவை அளிப்பதாகவும் அமைய வேண்டியிருக்கிறது" ஆய்க.
2. எத்துணையளவிற்குப் பள்ளிவாழ்க்கையால் குணநலச் சிறப்பையும், ஆளுமை மாண்பையும் உண்டாக்க முடியும்?

மாணவர்கள் குண நலவளர்ச்சி எய்த நீவிர் வகுக்கும் செயல் திட்டங்கள் யாவை?

3. பள்ளியின் செயல்திட்டம் பள்ளிவாழ்க்கை முறையிலிருந்து, தானே அரும்பவேண்டும்; ஆசிரியர்கள் அவற்றை வலிந்து புகுத்தக் கூடாது என்ற கூற்றினை ஆய்க.
4. வழிகாட்டுதலுக்கும் கல்விபுகட்டுதலுக்கும் உள்ள தொடர் பென்ன? நம் ஆசிரியர்கள் எவ்வகை வழிகாட்டலை மேற் கொள்ளலாம்?
5. கற்பிக்கும் கலை எவ்வாறு கண்டுபிடிக்கத் தூண்டும் கலையா கிறது என்பதனைக் காட்டுக.
6. "இல்லச் சூழலில் கண்ட பொருள்களை நெருக்கித் திணித்தல் உடல் நலத்தைக் கெடுப்பதைப் போலக், கல்வி முறையில் கண்டவற்றையெல்லாம் திணித்தல் பள்ளியை வெற்றறிவுக் கிடங்காக மாற்றிவிடுகிறது" என்ற கூற்றினைப் பள்ளியின் பாட ஏற்பாட்டில் வைத்து ஆய்க.

ஆ

7. பெற்றோர் ஆசிரியக் கழகம் எந்நோக்கத்தை நிறைவேற்று கின்றது? அக்கழகத்தின் ஆக்கவேலைக்குரிய சில வழிகளைக் கூறுக.
8. "ஒரு பாட ஆசிரியர் மாணவரின் அரைகுறை ஆர்வநிலையில் பாடத்தைத் துவங்கி முடிக்கிறார்" ஆய்க.
9. உலகப் பொதுமை எண்ணத்தை வளர்க்க எவ்வாறு பள்ளிகளிற் செயல்திட்டங்களை வகுப்பீர்கள்?
10. கீழக்கண்டவற்றில் எவையேனும் இரண்டினுக்குக் குறிப்பு வரைக:
    (அ) மாணவர் இதழ்கள்
    (ஆ) பள்ளி நாடகக் குழு
    (இ) பள்ளி நூல்நிலையம்

செப்டம்பர் '60

அ

1. "பள்ளிக்கூடம், எழுதப் படிக்க எண்ணப் பயிற்றுவதைக் காட்டிலும், மாணவர்களின் வாழ்க்கைப் பொருத்தப் பாட்டையும், அதற்குத் தேவையான குணங்களாகிய, நேர்மை, தன்னடக்கம், ஆளுமை ஆகியவற்றையும் முதலில் வலியுறுத்த வேண்டும்" ஆய்க.
2. மாணவத் தனித்திறமையைக் கண்டறிய எவ்வழிகளைக்

கையாளுவீர்? திறமையான மாணவர்கட்கு வாய்ப்பளிக்கும் விதம் யாது?

3. பள்ளியில் மாணவர்கட்கு இரக்கவுணர்வும், சமூகப்பண்பும் விரிவடையுமாறு செய்யக் கையாளும் செயல்முறை வழிகளை விவரிக்க.

4. பல்நோக்குப் பள்ளியின் நிலைக்களத்தையும் செயல்களையும் ஆய்க.

5. "ஆசிரியன் கற்றலைத் தூண்டுபவன்; பாடத்தைத் திரும்பக் கேட்பவன் அல்லன்" இக்கூற்றினை நும்விருப்பப் பாடங்களிற் சான்றுகள் காட்டி விளக்குக.

6. கல்வியின் எல்லா நிலைகளிலும் கைத்தொழிலை ஒரு பாடமாக அறிமுகப் படுத்துவதன் தேவையை ஆய்க.

ஆ

7. நல்லாசிரியக் குழுவையும் சிறந்த கல்விக் கருவிகளையும் உம்முடைய பள்ளிக்கு அமைத்துக்கொள்ளத் தலைமையாசிரியர் நிலையில் நீர் செய்வது யாது?

8. இளைஞர் விழாக்களால் நிறைவேறும் நோக்கங்கள் யாவை? இளைஞர் விழாவொன்றினை நீர் நடத்துவது யாங்ஙனம்?

9. பள்ளித் திட்டங்களைச் செயற்படுத்துதற்கு ஏதுவாகச் சமுதாய உடைமைகளைப் பயன்படுத்தும் சில செயல்முறைகளைக் கூறுக.

10. கீழ்க்கண்டவற்றில் மாணவப் பயிற்சிக்கு உறுதுணைபுரியும் எவையேனும் இரண்டு செயல்களின் இன்றியமையாமையை எழுதுக.

(அ) நாடுகாவற் படைக் கழகம்
(ஆ) சேவைப் படை
(இ) இளையர் செஞ்சிலுவைச் சங்கம் (இளைய மாணவர் செஞ்சிலுவைச் சங்கம்)

ஏப்பிரல் '61

அ

1. பள்ளியின் வேலை அறிவை வளர்த்தல் மட்டுமன்று; முழு ஆளுமையை வளர்த்தலே. எத்துணையளவிற்கு நம் பள்ளிகள் இந்நோக்கத்தை நிறைவேற்றுகின்றன?

2. கல்விபற்றிய கருத்துக்களிலும் கல்வியின் நோக்கங்களிலும் சிறந்த கல்வியாளரிடம் உலகம் ஒப்பும் கருத்தொப்புமை நிலவுகிறது. யாரேனும் மூன்று பெருங்கல்வியாளர் நூல்கள் வாயிலாக இக்கருத்திற்கும் சான்று தருக.

3. கல்விக்கலையில் ஆசிரியரின் உரிய பங்கு யாது? இப்பொறுப்பை ஆற்ற அவர் பெறத்தகும் தகுதிகள் யாவை?
4. மாணவர்களின் இரக்கவுணர்வையும், சமூகப் பண்பையும் வளர்க்க நீர்கண்ட ஏதேனும் ஒருபள்ளி எடுத்த முயற்சிகளை விவரிக்க.
5. காலங்கடந்து வாழும் பாட ஏற்பாடொன்றினை வகுக்க இயலாமைக்குக் காரணம் என்ன? பாட ஏற்பாட்டு அமைப்பில் என்றும் நினைக்கத்தகும் பொதுவிதிகள் யாவை?
6. "கலை, கைத்தொழில்களை அரிய பாடங்களுக்கு அடுத்துவரும் அலுப்பு மருந்தாக ஆக்கக்கூடாது; அவை பாட ஏற்பாட்டின் முதலிடத்தைப் பெறவேண்டும்" இன்றைய கல்வி முறையில் இக்கூற்றை நடமுறையாக்கிக் கையாளும் முயற்சிகளை ஆய்க.

ஆ

7. "உயர்நிலைப்பள்ளியின் எத்தகைய கால அட்டவணையும் முற்றிலும் முறையற்றதன்று" இக்கூற்றினை நீர் ஒப்புகிறீரா? சான்ருேடு விடை தருக.
8. பள்ளித் தணிக்கையாளர் உண்மையிலேயே "பள்ளியின் தோழர்; பள்ளிக் கலைஞானி; பள்ளி வழிகாட்டி" மேலைக் குறிக்கோளை அடைய முயலும் ஒரு பள்ளித் தணிக்கையாளராக எவ்வாறு நும் கடமைகளை ஆற்றுவீர்கள்?
9. பள்ளியோடு சேர்ந்தும், தனித்தும், வாழும் மாணவ வாழ்க்கையின் நிறைகுறைகளை ஒப்பிடுக.
10. கீழ்க்கண்டவற்றில் எவையேனும் இரண்டினுக்குக் குறிப்பு வரைக :—
    (அ) பாட நூல் நிலையங்கள்.
    (ஆ) மாணவர்கட்கு வீட்டுவேலை.
    (இ) கல்வி ஒலிபரப்புக்கள்.

TECHNICAL TERMS

Abilities - திறன்கள்
Aborigines - ஆதிமக்கள்
Absorption - அறிவொடு புணர்தல்
Abstract concept - வெற்றுநிலைக் கருத்து
Abstraction - பொதுமை பிரித்தல்
Abstract words - கருத்தியல் மொழிகள்
Academic ability - நூல்களைக் கற்கும் திறன்
Acceleration - தளர்த்துதல் முறை
Achievement - சாதனை
Achievement quotient-அடைவுத் திறன் ஈவு
Achilles - அகிலெஸ்
Acquired interests - பயின்ற கவர்ச்சிகள்
Activity methods - இயக்க முறைகள்
Adjective - அடைமொழி
Adjustment - பொருத்திக் கொள்ளுதல்
Adolescence - குமரப் பருவம்
Adulthood - முதிர்வுப் பருவம்
Advertisement - விளம்பரம்
Aesthetics - முருகியல்
Afferent nerves - உட்செல் நரம்புகள்
Age - வயது
Agencies - நிறுவனங்கள்
Agriculture - பயிர்த்தொழில்
Algebra - எழுத்துக் கணிதம்
Analytical geometry - பகுத்தறி வடிவக் கணிதம்
Anger - வெகுளி
Animate - உயிருள்ளவை
Animate world - உயர்திணை உலகம்
Anthropology-மனித இன நூல்
Apperception - உட்புலக் காட்சித் திறன்
Application - செயற்படுத்தல்
Aptitude - நாட்டம்
Aptitude test - நாட்டத் தேர்வு
Area - பரப்பு
Aristotle - அரிஸ்டாடில்
Arithmetic - கணக்கறிதல்
Armstrong - ஆம்ஸ்ட்ராங்
Art - கலை
Art of teaching - கற்பிக்கும் கலை
Ascendance - ஆட்சிமை
Assignment - பாட ஒப்படை
Assimilation - தன்வயப்படுத்தல்
Association - தொடர்புறுத்தல்
Astronomy - வான நூல்
Athens - ஏதென்சு
Attention - கவனம்
Attitude - உளப்பான்மை
Audio-education - செவி வழிக் கல்வி
Automatic response - எண்ணாது விடையளித்தல்
Autonomic system - தன்னாட்சி மண்டலம்
Backward pupils - பிற்போக்கு மாணவர்
Beauty - அழகு
Bender visual motor gestalt test - பெண்டர் பார்வை இயக்க முழுநிலைத் தேர்வு
Bible - விவிலியம்
Biological sciences - உயிரியற் கலைகள்
Biologists - உயிர் நூலார்
Biology - உயிர் நூல்
Blind alley - முட்டுச் சந்து
Botany - தாவர நூல்
Boxing - குத்துச்சண்டை
Brain is the organ of the mind - மூளையே உள்ளத்தின் நிலைக்களன்
Brutes - காட்பார் (விலங்கனையர்)
Calculus - நுண்ணியற் கணிதம்

Capacities - ஆற்றல்கள்
Casei De Bambini - குழந்தை இல்லம்
Cattel - காடல்
Censorship - தணிக்கை
Central nervous system - நடு நரம்பு மண்டலம்
Cerebellum - சிறுமூளை
Cerebrum - பெருமூளை
Changes - மாற்றங்கள்
Character - ஒழுக்கம்
Character and discipline - ஒழுக்கமும் கட்டுப்பாடும்
Charles Dickens - சார்லசு டிக்கன்ஸ்
Charters - சார்டர்ஸ்
Check list - ஒப்பிடு பட்டியல்
Chemistry - இரசாயனம்
Chinese education - சீனத்துக் கல்வி
Chivalry - மறப்பண்பு
Chronological age - காலவயது
Church - ஆலயம் (கிறித்தவர்)
Cinema houses - திரைப்பட நிலையங்கள்
Citizenship training - குடிமைப் பயிற்சி
Civic administration - நகராட்சி
Civil engineering - கட்டட இயல்
Clarity - தெளிவு
Classification - பாகுபாடு செய்தல்
Cleanliness - துப்புரவு
College of Light - ஒளிக் கல்லூரி
Comedy - இன்பியல்
Comenius - காமினியஸ்
Commercial arithmetic - வாணிபக் கணிதம் [யம்
Community centre - இன நிலை
Comparative philology - ஒப்பியல் மொழிநூல்
Comparison - ஒப்பு நோக்கம்
Complex - சிக்கல்
Composite mathematics - கலவைக் கணிதம்
Comprehensive - எல்லாம் பொருந்திய
Conation - உணர்தல்
Concentration - ஒருமுகப்படுத்தல்
Concentric - மைய வட்டம்
Concrete object - காட்சிப் பொருள்
Concrete to abstract - உருவத்திலிருந்து அருவத்திற்கு
Conditioned reflex - ஆக்கநிலையுற்ற மறிவினை
Conduct - ஒழுகலாறு
Confucious - கண்பூசி (பெயர்)
Consciousness - நனவுநிலை
Continental classroom - பெருநாட்டு வகுப்பறை
Constitution - அரசியலமைப்பு
Consultant - கலந்துரையாளர்
Controlled environment - கட்டுப்படுத்திய சூழ்நிலை
Co-operativeness - ஒத்துழைக்கும் தன்மை
Cognition - அறிதல்
Core - உட்கரு
Correlative subjects - தொடர்புப் பாடங்கள்
Correspondent - தாளாளர்
Cosmopolitan - எல்லோருக்கும் பொருந்திய
Counselling - அறிவுரை பகர்தல்
Courtesy - மரியாதை
Creative skill - படைப்பாற்றல்
Creative tendency - படைக்கும் உளப் போக்கு
Culture aim - பண்பாட்டு நோக்கம்
Culture Epoch Theory - பண்பாட்டு வரன்முறைக் கொள்கை
Comulative progress record - திரட்டுப் பதிவு
Curriculum - பாட ஏற்பாடு
Czeck - செக்
Dalton plan - டால்டன் முறை
Day dream - பகற் கனவு
Deductive method - பகுத்தறி முறை

Definite to indefinite - திட்டமானதிலிருந்து திட்டமற்றதற்கு
Delta class - கிளைமுக வகுப்பு
Democracy and education - குடியாட்சியும் கல்வியும்
Demonstration - விளக்குதல்
Demonstration lesson - விளக்கப் பாடம்
Dialectic - சொற்போர்
Diction - சொல்லழகு
Direct education - நேர்முகக் கல்வி
Direct method - நேர்முறை
Director - வழிகாட்டி
Disciplinary conception - ஒழுங்குமுறைக் கல்வி
Discipline - கட்டுப்பாடு
Discussion - சொல்லாடல்
Discus throw - உருளை எறிதல்
Documentary - கல்விப் படம்
Doctor Adams-டாக்டர் ஆடம்ஸ்
Doctor Arnold - டாக்டர் ஆர்னால்டு
Doctor Bloom - டாக்டர் ப்ளூம்
Drama - நாடகம்
Dramatisation - நாடக முறை
Drill - பன்முறைப் பயிற்சி
Economics - பொருளாதார நூல்
Educated talent - கல்விசார் திறமை
Educational administration - கல்வி ஆட்சிமுறை
Educational agencies - கல்வி நிறுவனங்கள்
Educational broadcasts-கல்வி ஒலிபரப்புக்கள்
Educational environment - கல்விச் சூழ்நிலை
Educational institution - கல்வி நிலையம்
Educational philosophers - கல்விச் சிந்தனையாளர்கள்
Educational philosophy - கல்வியின் தத்துவம்
Educational psychologists - கல்வி உளநூலார்
Educational psychology - கல்வி சார் உளநூல்
Educational supervision - கல்வி மேற்பார்வை
Education for all - எல்லோருக்கும் கல்வி
Education for gifted children - மீத்திறப் பிள்ளைக்குக் கல்வி
Education for leisure - ஓய்வு நேரக் கல்வி
Education of effort - முயற்சிக் கல்வி
Education of interest - அக்கறைக் கல்வி
Efferent nerves - வெளிச்செல் நரம்புகள்
Electives - விருப்பப் பாடங்கள்
Elementary - தொடக்கநிலை
Emotion - மனவெழுச்சி
Emotional control - உள்ளக் கிளர்ச்சியின் அடக்கம்
Emotional stability - உள்ளக் கிளர்ச்சியின் நிலைத்த தன்மை
Emotional tone - மனவெழுச்சி உட்பாடு
Emotional mal-adjustment - மனவெழுச்சி இடர்ப்பாடு
Emile - எமிலி
Engineering - பொறியியல்
Enjoyment - நுகர்தல்
Enrichment - விழுப்பம் தருதல்
Epic - காவியம்
Epidiascope - வரைபட ஒளி
Equality - ஒருமை நிலை
Ethics - அறிவியல்
Evaluation - மதிப்பிடுதல்
Exhibition - காட்சி சாலை
Experiment - செய்து காணல்
Experimentalism - செய்காட்சிக் கொள்கை
Experimental method - சோதனை முறை
Experimental psychologists- சோதனை முறை உளநூலார்
Expression - வெளியீடு
Extroversion - புறமுக இயல்பு
Extroverts - புறமுகர்கள்
Faculties - மனப் பெற்றிகள்
Faculty psychology - பெற்றி உளவியல்

Fagin - ஃபாகின்
Fatigue - சோர்வு
Feeling - உள்ளுதல், உணர்தல்
Film strips - திரைப்படத் துண்டுகள்
Film libraries - படச் சுருள் களின் நிலையங்கள்
Film show - திரைக் காட்சி
Fine arts - நுண்கலை
Five steps - ஐந்து படிகள்
Flexibility - நெகிழ்ச்சி
Foot print - அடிச் சுவடு
For adults only - சிறுவர்களுக் கன்று (முதியோருக்கே)
Forgetting - மறத்தல்
Formal - முறைமை
Formal discipline - முறை மைக் கட்டுப்பாடு
Forward pupils - முற்போக்கு மாணவர்கள்
Franklin Bobbit-ஃப்ராங்கிளின் பாபிட்
Freedom - உரிமை
French - ஃப்ரெஞ்சு
Freud - ஃப்ராய்டு
Friendship chart - நட்பு வரை [படம்
Froebel - ஃப்ரோபல்
Frontal lobe - நெற்றிப் பிரிவு
Gall - பித்தப் பை
General education - பொதுக் கல்வி
General factor (intelligence)- பொது நுண்ணறிவு
Generalisation - பொது விதி காண்டல்
General objectives - பொதுக் குறிக்கோள்கள்
General psychology - பொது உளநூல்
General Science - பொது அறி வியல்
Geology - நில உட்கூற்றியல்
Geometry - (கோண கணிதம்) வடிவக் கணிதம்
Geomorphology-நில அமைப்பு நூல்
George Combe - ஜார்ஜ் கோம்பே

Goal - இலக்கு
Golden age - பொற்காலம்
Good music - நல்லிசை
Goodness - நன்மை
Government - அரசாட்சி
Gramaphone records - ஒலித் தட்டுகள்
Grammar - இலக்கணம்
Grammar school - ஏட்டுக் கல் விப் பள்ளி
Graphs - வரைபடங்கள்
Great men - அறிஞர்
"Guess who"? - யார் என்று நினைத்துப் பார்
Guidance - வழி காட்டுதல்
Gymnastic school - உடற் பயிற்சிப் பள்ளி
Habit of work - வேலைப் பழக் கங்கள்
Halo effect - ஒளி வட்டம்
Heart - இதயம்
Heavy industries - பெரு முறைத் தொழில்கள்
Herbart - ஹெர்பார்ட்
Herbartium - ஹெர்பார்ஷியம்
Herbert Spencer - ஹெர்பெர்ட் ஸ்பென்சர்
Heredity - குலக் கூறு
Higher secondary education- மேல் உயர்நிலைக் கல்வி
History of atom - அணு வர லாறு
History of education - கல்வி வரலாறு
Homer - ஹோமர்
Home Science - குடும்பக் கலை
Horizontal - குறுக்கொருமைப் பாடு
House of children - குழந்தை இல்லம்
Hughes - ஹியூஸ்
Humanistic studies - மக்கண் மைக் கல்வி [கள்
Humanities - மக்களியல் நூல்
Idealism - கருத்துக் கொள்கை (கொள்கை நிலை)
Idealistic concepts - உயர் குறிக்கோள்கள்.

Ideals - குறிக்கோள்கள்
Ideational learning - கருத்துக் கல்வி
Illustrative pictures - கருத்துப் படங்கள் (விளக்கப் படங்கள்)
Impression - உள்ளப் பதிவு
Inanimate - உயிரற்றவை
Inanimate world - அஃறிணை உலகம்
Indirect education - மறைமுகக் கல்வி
Indirect method - நேரல் முறை
Individual - தனியொருவன்
Individual consciousness - தன்மையுணர்ச்சி
Individual differences - தனியாள் வேற்றுமைகள்
Individuality - தனித்தன்மை
Indoctrination - தன் கோட் புகுத்தல்
Inductive method - தொகுத்தறி முறை
Industrial chemistry - தொழில்துறை இரசாயனம்
Industrial establishments - தொழில் அமைப்புக்கள்
Inference - உய்த்துணர்வு
Initiative - தன்தொடங்காற்றல்
Insight - உட்காட்சி
Inspector - தணிக்கையாளர்
Inspiration - அகத்தெழுச்சி
Instinct - இயல்பூக்கம்
Instinct of collection - ஈட்டு ஊக்கம்
Instinct of possession - உடைமை ஊக்கம்
Instinct of pugnacity - போர் ஊக்கம்
Instrumentalism - கருவிக் கொள்கை
Integration - ஒருமைப்பாடு
Integrity - நேர்மை
Intellectual aim - அறிவுப் பயன்
Intelligence - நுண்ணறிவு
Intelligence quotient - நுண்ணறிவுத் திறன் ஈவு
Intelligence tests - நுண்ணறிவுச் சோதனைகள்
Intensity - உறைப்பு
Interaction - இடைவினை
Interest - அக்கறை
Interpretative - விளக்கம் கூறுவகை
Interview - பேட்டி
Introspection - அகக் காட்சி
Introversion - அகமுக இயல்பு
Introverts - அகமுகர்கள்
Jack of all trades master of none-அரைகலி முழுமொட்டை
James - ஜேம்ஸ்
Javeline throw - வாசி வீசுதல்
Juvenile delinquents - இளங் குற்றவாளிகள்
Jerusalem - எருசேலம்
John Dewey - ஜான் டூயி
John Locke - ஜான் லாக்
John Milton - ஜான் மில்டன்
Junior College - இளங் கல்லூரி
Kilpatrick - கில்பாட்ரிக்
Kindergarten - கிண்டர்கார்டன்
Knowing - அறிதல்
Knowledge subjects - அறிவுப் பாடங்கள்
Known to unknown - அறிந்தவற்றின் வழியாக அறியாதவற்றை நாடுதல்
Kuder preference record - க்யூடர் தொழில் தேர்தல்
Large scale industries-பேரளவாக்கச் சாலைகள்
Laughter reaction test - நகைப்பு எதிர்வினைத் தேர்வு
Law of effect - பயன் விதி
Law of exercise - பயிற்சி விதி
Law of readiness - ஆயத்த விதி
Laws of learning - கற்றல் விதிகள்
Leadership - தலைமைத் தன்மை
Learning - கற்றல்
Learning by imitation - பார்த்துக் கற்றல்
Learning by insight - உள்நோக்கு வழிக் கற்றல்

Learning by observation - உற்று நோக்கிக் கற்றல்
Learning process - கற்றல் வழி
Learning by trial & error - முயன்று தவறிக் கற்றல்
Lecture - விரிவுரையாற்றல்
Leonard and Gertrude - லியோனர்டும் கெர்ட்ரூடும்
Lesions - புண்கள்
Liberal education - பரந்த கல்வி
Libraries - நூல்நிலையங்கள்
List - பட்டியல்
Liver - ஈரல்
Literature - இலக்கியம்
Logic - தருக்க நூல்
Logical order - தருக்க அளவை ஒழுங்கு
Loud-speakers - ஒலிபரப்பிகள்
Love of freedom - விடுதலையுணர்ச்சி
Lungs - மூச்சுப் பை (நுரையீரல்)
Mal-adjustment - தவறிய பொருத்தப்பாடு
Man drawing test - மனித உரு வரைதல்
Many-sided interests - பல்வழி ஆர்வங்கள்
Master sentiment - முதன்மைப் பற்று
Mathematics - கணிதம்
Maturation - முதிர்ச்சி (பருவமடைதல்)
maturity - முற்றுதல் நிலை
Mean - எண்ணியல் இடை
Measurement - அளந்தறிதல்
Mecaulay - மெக்காலே
Median - மைய நிலை
Medicine - மருத்துவக் கலை
Medicine man - முனிசிரேட்டன்
Medulla oblangata - முகுளம்
Memory - நினைவாற்றல்
Mental age - மன வயது
Mental discipline aim - உளப் பயிற்சி தரும் பயன்
Metallurgy method - உலோகக் கலை
Method - முறை
Method of discovery - கண்டறி முறை
Middle age - நடுப் பருவம்
Minerology - சுரங்கக் கலை
Minnesota clerical aptitude test - மின்னசோட்டா எழுத்தர் திறன் நாட்டத் தேர்வு
Mobile library - சுற்று நூல் நிலையம்
Mode - மேட்டு நிலை
Model lesson - மாதிரிப் பாடம்
Monasticism-மடத்து வாழ்க்கை
Moral education - அறக் கல்வி
Morality - அறவழி
Moses - மோசஸ்
Motivation - ஊக்கு நிலை
Motor learning - இயக்கக் கல்வி
Motor skill - செயல் திறன்
Motor tests - இயக்கத் தேர்வுகள்
Mind - உள்ளம்
Multi-purpose schools - பல் நோக்குப் பள்ளிகள்
Music school - இசைப் பள்ளி
Mysticism - அனுபூதி வாழ்க்கை
Nation - நாட்டினர்
Naturalism - இயற்கைக் கொள்கை
Natural science - இயற்கை அறிவியல்
Neo Greek education - புதிய கிரேக்கக் கல்வி
Neurasthenia - மூளை மீச்சோர்வு
Newspapers - செய்தி இதழ்கள்
Newsreel - செய்திச் சுருள்
Non-moral education - மறக் கல்வி
Non-verbal tests - சொல்லில்லாத் தேர்வுகள்
Normal growth - இயல்பான வளர்ச்சி
Normal pupils - பொதுநிலை மாணவர்கள்
Norms - தரங்கள்
Nursery school - குழந்தை வளர்ப்புப் பள்ளி
Objective - புறத்தது
,, method - புறவயமுறை
,, states - புறநிலைகள்

Observation - உற்று நோக்கல்
Obsession - பீடிப்பு
Occupation - தொழில்
Odysseus - ஒடீசியஸ்
Old age - கிழட்டுப் பருவம்
Oliver Twist - ஆலிவர் டுவிஸ்ட்
Oneness - ஒத்துணர்வு
Oratory - மேடைப்பேச்சுக் கலை
Organic unity - உறுப்பின ஒற்றுமை
Organism - உயிரி
Oriental countries - கீழை நாடுகள்
Originality - புதுப்பாங்குடைமை
Ourang outang - மனிதக் குரங்கு
Pansophism - அனைத்தறிவுக் கொள்கை
Paper-pencil test - காகிதம் எழுதுகோல் தேர்வு
Perception of intellect - அறிவாற்றற் காட்சி
Perception of the senses - புலக் காட்சி
Pericles - பெரிக்ளீஸ்
Period - அகவை
Peripheral nervous system - வெளி நரம்பு மண்டலம்
Permissive discipline - தன் விருப்பத்திற் கிணங்கிய அடக்கம்
Perseverance - விடாப்பிடி
Personality traits - ஆளுமை வீறுபாடுகள்
Personal stage - தன்னிலை
Pestelozzi - பெஸ்டலாசி
Philology - மொழி நூல்
Philosopher king - மெய்யறிவாளர் ஆட்சி
Philosophers - தத்துவ ஞானிகள்
Philosophy - த்த்துவம்
Phoebia - கிலி
Physical science - பௌதிக அறிவியல்
Physics - பௌதிகம்
Physiology - உடல் நூல்
Pilgrimage - இறைமைச் செலவு
Plato's Dialogues - பிளேடோவின் உரையாடல்கள்
Political animal - அரசியல் உயிரி
Polytechnic - பல்நோக்குப் பொறியியற் பள்ளி
Practical - நடைமுறை
Practical men - நடைமுறையினர்
Practical method - செய்து காட்டு முறைகள்
Pragmatism - பயன்வழி
Pragmatists - பயன்வழிக் கொள்கையினர்
Pre-engineering - புகுமுகப் பொறியியல்
Preparation - முன்னேற்பாடு
Presentation - எடுத்துக் கூறல்
Primitive people - பண்டை மக்கள்
Printing technology - அச்சக இயல்
Progress - முன்னேற்றம்
Progressive Education Association - முற்போக்குக் கல்விக் கழகத்தினர்
Progressive educators - முற்போக்குக் கல்வியாளர்கள்
Progressive school - முற்போக்குப் பள்ளி
Project - திட்டம்
projection - (வெளிப்பாடு) புறத்தோற்றம்
Projective techniques - புறத்தேற்று நுண் முறைகள்
Prolonged infancy - நீண்ட குழவிப் பருவம்
Propaganda - நாப்பறை
Protogores - ப்ரோரடோகாரஸ்
Prudential stage - பகுத்தறி நிலை
Psychologise - உளநூல் மயமாக்கு
Psychologists - உளவியல் அறிஞர்கள்
Psychology - உளநூல்

Psycho neurotic inventory - உளவழி நோய் வினாப் பட்டியல்
Public mess - பொது உண்டி
Pupil leader - மாணவர் தலைவன்
Purposive activity - நோக்குடைத் தொழிற்பாடு
Quadrivium - நாற்பாடம்
Quarrel - பூசல்
Questionnaire - வினா அறிக்கை
Quintilian - குயின்டிலியன்
Radio stations - வானொலி நிலையங்கள்
Ralph Tyler - ரால்ப் டைலர்
Reading - படித்தல்
Realism - புறவுண்மைக் கொள்கை
Realistic movement - காட்சி இயக்கம்
Realistic pragmatism - பயன்வழி உண்மைக் கொள்கை
Reasoning - பகுத்தறிவாற்றல்
Recall - மீட்டுக் கொணர்தல்
Recapitulation - புனராக்கம்
Recapitulation theory - புனராக்கக் கொள்கை
Refined instincts - நல்லூக்கங்கள்
Reflex action - மறிவினை
Regulations - கோட்பாடுகள்
Reliability - நம்பகம்
Religious practice - சமய வழிபாடு
Remembering - நினைவாற்றல்
Republic - ரிபப்ளிக்
Resource - தகுவழி
Response - துலங்கல்
Rhetoric - சொற்கோப்புக் கலை
Roger Ascham - ரோஜர் ஆஷாம்
Rorschack - ரோர்ஷாக் புறத்தேற்று நுண்முறை
Rousseau - ரூசோ
Routine tendency - ஒரேவகைப் போக்கு
Rugby school - இரக்பி பள்ளி
Rusk - ரஸ்க்
Sacrifice - தியாகம்
Salvation - வீடுபேறு
Sarvodaya philosophy - சர்வோதயப் பண்பு
Scale - அளவை
Scale of values - உறுதிகளின் அளவைகள்
Schaffer - ஷாஃபர்
Scholasticism-புலமை இயக்கம்
School - பள்ளி
Science - அறிவியல்
Secondary - உயர்நிலை
Secondary modern school - கைத்திறன் அளிக்கும் பள்ளி
Secretarial practice - செயலக அலுவல்
Secular - சமயச் சார்பற்ற
Selection - பன்னுடை முறை
Self-activity - தன்னியக்கம்
Self-confidence - தன்னம்பிக்கை
Self-development - தன்னியல் வளர்த்தல்
Self-diary - தற்குறிப்பு
Self-introspection - தற்காட்சி
Self-knowledge - தன்னையறிதல்
Self-rating scales - தன்னளவை அளவைகள்
Self-realisation - தன்னையுணர்ந்து கொள்ளுதல்
Self-regarding sentiment - தன்மதிப்புப் பற்று
Senescence - முதுமைப் பருவம்
Senior college - முதிர் கல்லூரி
Sensation - புலன் உணர்வு
Sense of touch - தொடு புலன்
Sense of responsibility - பொறுப்புணர்ச்சி
Senses - புலன்கள்
Sensory nerves - புலனரம்புகள்
Sex-education - பால்வகைக் கல்வி
Sex-instinct - காதலூக்கம்
Shakespeare - சேக்சுபியர்
Simple to complex - எளிதிலிருந்து சிக்கலுக்கு
Sir John Adams - சர் ஜான் ஆடம்ஸ்

Sir Percy Nunn - சர் பெர்சி நன்
Size of the cerebrum - மூளை யின் அளவு.
Sociability - கலந்து பழகுந் தன்மை
Social consciousness - சமூக உணர்ச்சி
Social contract - சமுதாய ஒப் பந்தம்
Social interplay - நட்பின் உறவுநிலை
Social science - சமூக அறிவியல்
Social stage - சமூக உணர்வு நிலை
Social welfare schemes - சமூக நலத் திட்டங்கள்
Society - சமூகம்
Sociology - கூடி வாழியல்
Socio-metric scales - சமூகத் தன்மை அளவைகள்
Sophi - சோஃபி
Sophists - சோஃபிஸ்ட்டுகள்
Source traits - அகக் கூறுபாடு கள்
Sparta - ஸ்பார்டா
Special factor (in intelligence) - சிறப்பு நுண்ணறிவு
Speculative method - மனப் போக்கு முறை
Spirits - ஆவிகள்
Spiritualism-ஆன்மீக வளர்ச்சி
Spleen - மண்ணீரல்
Squads - குழுக்கள்
Stages of child growth - குழந்தையின் வளர்ச்சிப் படி கள்
Standardised - தரப்படுத்திய
State - அரசு
Statistical method - புள்ளி விவர முறைகள்
Statistical techniques - புள்ளி நுணுக்கங்கள்
Statistics - புள்ளி விவரம்
Stenquist Mechanical Assembly Test - ஸ்டென்குவிஸ்ட் பொறிச் சேர்வுத் தேர்வு
Stimulus - தூண்டல்
Style - நடையழகு
Subjective - அகத்தது
Subject matter - கருத்துப் பொருள்
Submissive - அடக்கமுடைய வன்
Submissive stage - அடங்குதல் நிலை
Suggestion - குறிப்புணர்தல்
Surface traits - புறக் கூறுபாடு கள்
Swan song - இறுதிப் பாட்டு
System - ஒழுங்கு
Tapula rasa theory - வெற் றேட்டுக் கொள்கை
Tape recorder - பதிவு நாடாக் கருவி
Teacher friend - ஆசிரியன் நண்பன் (என்ற இரு நிலை)
Teacher guide - ஆசிரிய வழி காட்டி
Teaching machine - கற்பிக்கும் இயந்திரம்
Technical school - தொழிற் கல்விப் பள்ளி
Television - தொலைக் காட்சி
Tendencies - உளப் போக்குகள்
Text-book - பாடப் புத்தகம்
Textile technology - பஞ்சாலை இயல்
The citizenship aim - குடி மைப் பயன்
The complete living aim - முழு வாழ்வுப் பயன்
The Educationalists' aim - கல்வியாளர்கள் கண்ட பயன்
The Great didactic - மிகப் பெருங் கல்வி நூல்
The harmonious development aim - ஒருபடித்தான வளர்ச்சியின் பயன்
The living aim - பிழைக்கும் வழிப் பயன்
Thematic apperception test - நிகழ்ச்சிக்குப் படவிளக்க ஆளு மைத் தேர்வு
Theoritical sciences - கொள் கைத் திரட்டு அறிவியல்

Theorists - கொள்கை முறையினர்
Theory - கொள்கை முறை
Theory of formal discipline- முறைமைக் கட்டுப்பாட்டுக் கொள்கை
The social aim - சமூகப் பயன்
The social welfare aim - சமூக நலப் பயன்
Things before words - சொற்களுக்கு முன் பொருள்
Thorndike - தார்ன்டைக்
To know - அறிதல்
To see - பார்த்தல்
Torches - பந்தங்கள்
Tradition - வழிவழி, மரபு
Traditional aim - வழி வழி நோக்கம்
Tragedy - துன்பியல்
Traits - பண்புக் கூறுகள்
Transfer of training - பயிற்சி மாற்றம்
Trigonometry - முக்கோணக் கணிதம்
Trivium - முப்பாடம்
Trumen Kelley - ட்ரூமன் கெல்லி
Unity - ஒருமைப்பாடு
University of California Institute of Child Welfare - கலிபோர்னியா பல்கலைக் கழகக் குழவி நல நிலையம்
U. N. O. - உலக அரங்கு
Unsplit personality - ஒற்றுமை எய்திய தனித்தன்மை
Validity - ஏற்புடைமை
Values - மதிப்புக்கள்
Vertebral nerves-முதுகெலும்பு நரம்பு
Vertebrates - முதுகெலும்புப் பிராணி
Vertical-நெடுக்கொருமைப்பாடு
Vicarious experience - பிறர் நிலை அனுபவம்
Vocational guidance - தொழில் முறை வழிகாட்டல்
Volition - திருவினையாக்கம்
Voluntary actions - விருப்பச் செயல்கள்
Voluntary attention - விருப்பக் கவனம்
Warren - வாரன்
Weather - வானநிலை
Wrestling - கட்டிப் புரளுதல்
Yellow literature - பாலுணர்வுத் தாள்கள்
Zoology - விலங்கு நூல்

கலைச் சொற்கள்

அஃறிணை உலகம் - Inanimate world
அகக்காட்சி - Introspection
அகக்கூறுபாடுகள் - Source traits
அகத்தது - Subjective
அகத்தெழுச்சி - Inspiration
அகமுக இயல்பு - Introversion
அகமுகர்கள் - Introverts
அகவை - Period
அக்கறை - Interest
அக்கறைக் கல்வி - Education of interest
அச்சக இயல் - Printing technology
அடக்கமுடையவன்-Submissive
அடங்குதல் நிலை - Submissive stage
அடிச்சுவடு - Foot print
அடைமொழி - Adjective
அடைவுத்திறன் ஈவு - Achievement quotient
அணுவரலாறு - History of atom
அரசாட்சி - Government
அரசியல் அமைப்பு - Constitution
அரசியல் உயிரி - Political animal
அரசு - State
அரைகலி முழுமொட்டை - Jack of all trades master of none
அழகு - Beauty
அளந்தறிதல் - Measurement
அளவுகோல் - Scale
அறக்கல்வி - Moral education
அறவழி - Morality
அறவழிப் பயன்-The moral aim
அறிஞர் - Great men
அறிதல் - Knowing to know
அறிந்தவற்றின் வழியாக அறியாதவற்றை நாடுதல் - Known to unknown
அறிவாற்றற் காட்சி - Perception of intellect
அறிவியல் - Science
அறிவுப்பயன் -Intellectual aim
அறிவுப்பாடங்கள் - Knowledge subjects
அறிவுரை பகர்தல் - Counselling
அறிவொடு புணர்தல் - Absorption
அனுபூதி வாழ்க்கை - Mysticism
அனைத்தறிவுக் கொள்கை - Pansophism
ஆக்கநிலையுற்ற மறிவினை - Conditioned reflex
ஆசிரிய வழிகாட்டி - Teacher guide
ஆசிரியன் நண்பன் (என்ற இரு நிலை) - Teacher friend
ஆட்சிமை - Ascendancy
ஆதி மக்கள் - Aborigines
ஆய்த்த விதி - Law of readiness
ஆராய்ந்தறி முறை-Speculative method
ஆலயம் (கிறித்தவர்) - Church
ஆவிகள் - Spirits
ஆளுமை வீறுபாடுகள் - Personality traits
ஆற்றல்கள் - Capacities
ஆன்மீகவளர்ச்சி - Spiritualism
இசைப்பள்ளி - Music school
இடைவினை - Inter action
இதயம் - Heart
இயக்கக் கல்வி - Motor learning
இயக்கத் தேர்வுகள் - Motor tests
இயக்க முறைகள் - Activity methods
இயல்பான வளர்ச்சி - Natural growth
இயல்பூக்கம் - Instinct
இயற்கை அறிவியல் - Natural Science
இயற்கைக் கொள்கை - Nationalism
இயற்கைப் பொருள் சேகரித்தல் - Nature collection
இரக்பி பள்ளி - Rugby school

இரசாயனம் - Chemistry
இருசேலம் - Jerusalem
இலக்கணம் - Grammar
இலக்கியம் - Literature
இலக்கு - Goal
இளங் கல்லூரி - Junior college
இளங் குற்றவாளிகள் - Juvenile delinquents
இறுதிப் பாட்டு - Swan song
இறைமைச் செலவு - Pilgrimage
இன நிலையம் - Community centre
இன்பியல் - Comedy
ஈட்டி எறிதல் - Javeline throw
ஈட்டு ஊக்கம் - Instinct of collection
ஈரல் - Liver
உடல் நூல் - Physiology
உடற்பயிற்சிப் பள்ளி - Gymnastic school
உடைமை உணர்ச்சி - Instinct of possession
உட்கரு - Core
உட்காட்சி - Insight
உட்செல் நரம்புகள் - Afferent nerves
உட்புலக் காட்சித்திறன் - Apperception
உணர்தல் - Conation
உயர் குறிக்கோள்கள் - Idealistic concepts
உயர்திணை உலகம் - Animate world
உயர்நிலை - Secondary
உயிரி - Organism
உயிரியற் கலைகள் - Biological sciences
உயிர் அற்றவை - Inanimate
உயிர் உள்ளவை - Animate
உயிர்நூலாசிரியர் - Biologist
உயிர்நூல் - Biology
உய்த்துணர்வு - Inference
உரிமை - Freedom
உருவத்திலிருந்து அருவத்துக்கு - Concrete to the abstract
உருளை எறிதல் - Discus throw
உலோகக் கலை - Metallurgy
உளநூல் - Psychology
உளநூல் மயமாக்கு - Psychologise
உளப்பயிற்சி தரும் பயன் - Mental discipline aim
உளப்பான்மை - Attitude
உளப்போக்குகள் - Tendencies
உள மீச்சோர்வு - Neurasthenia
உளவழி நோய் வினாப்பட்டியல் - Psycho neurotic Inventory
உளவியல் அறிஞர்கள் - Psychologists
உள்நோக்கு வழிக் கற்றல் - Learning by insight
உள்ளக் கிளர்ச்சியின் ஆட்சி - Emotional control
உள்ளக் கிளர்ச்சியின் நிலைத்த தன்மை - Emotional stability
உள்ளப்பதிவு - Impression
உள்ளம் - Mind
உள்ளுதல் - Feeling
உறுதிகளின் அளவைகள் - Scales of values
உறுப்பின ஒற்றுமை - Organic unity
உறைப்பு - Intensity
உற்றுநோக்கல் - Observation
உற்றுநோக்கிக் கற்றல் - Learning by observation
ஊக்குநிலை - Motivation
எடுத்துக் கூறல் - Presentation
எண்ணாது விடையளித்தல்-Automatic response
எண்ணியல் இடை - Median
எமிலி - Emile
எல்லாம் பொருந்திய - Comprehensive
எல்லோருக்கும் கல்வி - Education for all
எல்லோருக்கும் பொருந்திய - Cosmopolitan
எழுத்துக் கணிதம் - Algebra
எளிதிலிருந்து சிக்கலுக்கு - Simple to complex
ஏட்டுக்கல்விப் பள்ளி - Grammar school
ஏ. பி. சி. பதிவேடுகள் - ABC Registers

ஏற்புடைமை - Validity
ஐந்து படிகள் - Five steps
ஒத்துணர்வு - Oneness
ஒத்துழைக்கும் தன்மை - Co-operativeness
ஒப்பிடு பட்டியல் - Check list
ஒப்பியல் மொழிநூல் - Comparative philology
ஒப்பு நோக்கம் - Comparison
ஒருபடித்தான வளர்ச்சியின் பயன் - The harmonious developement aim
ஒருமுகப்படுத்தல் - Concentration
ஒருமைப்பாடு - Unity, integration
ஒரே வகை உளப்போக்கு - Routine tendency
ஒலித்தட்டுகள் - Gramophone records
ஒலிபரப்பிகள் - Loud-speakers
ஒழுகலாறு - Conduct
ஒழுக்கமும் கட்டுப்பாடும் - Character and discipline
ஒழுக்கம் - Character
ஒழுங்கு - System
ஒழுங்குமுறைக் கல்வி - Disciplinary conception
ஒளிக்கல்லூரி - College of light
ஒளிவட்டம் - Halo effect
ஒற்றுமை எய்திய - Unsplit
தனித்தன்மை - Personality
ஓய்வுநேரக் கல்வி - Education for leisure
ஃபாகின் - Fagin
ஃப்ராய்ட் - Freud
ஃப்ரான்கிளின் பாபிட் - Franklin Bobbit
ஃப்ரெஞ்சு - French
ஃப்ரோபெல் - Froebel
கதம்பக் காட்சிகள் - Variety entertainments
கட்டட இயல் - Civil engineering
கட்டிப் புரளுதல் - Wrestling
கட்டுப்படுத்திய சூழ்நிலை - Controlled environment
கட்டுப்பாடு - Discipline
கணக்கறிதல் - Arithmetic
கணிதம் - Mathematics
கண்டறி முறை - The method of discovery
கண்பூசி - Confucious
கருத்தியல் மொழிகள் - Abstract words
கருத்துக் கல்வி - Ideational learning
கருத்துக் கொள்கை - Idealism
கருத்துப் படங்கள் - Illustrative pictures
கருத்துப் பொருள் - Subject matter
கருவிக் கொள்கை - Instrumentalism
கலந்து பழகும் தன்மை - Sociability
கலந்துரையாளர் - Consultant
கலவைக் கணிதம் - Composite mathematics
கலிபோர்னியா பல்கலைக் கழகக் குழவி நல நிலையம் - University of California Institute of Child Welfare
கலை - Art
கல்வி ஆட்சிமுறை - Educational administration
கல்வி உளநூலார் - Educational psychologists
கல்வி உறுப்புக்கள் - Educational agencies
கல்வி ஒலிபரப்புக்கள் - Educational broadcasts
கல்விசார் உளநூல் - Educational Psychology
கல்விசார் திறமை - Educated talent
கல்விச் சிந்தனையாளர்கள் - Educational philosophers
கல்விச் சூழ்நிலை - Educational environment
கல்வி நிலையம் - Educational institution
கல்விப் படம் - Documentary
கல்வி மேற்பார்வை - Educational supervision

கல்வியாளர்கள் கண்ட பயன் - The educationalists' aim
கல்வியின் தத்துவம் - Philosophy of education
கல்வியின் பாங்கு - The nature of education
கல்வி வரலாறு - History of education
கவலை - Anxiety
கவனம் - Attention
கற்பிக்கும் இயந்திரம் - Teaching machine
கற்பிக்கும் கலை - Art of teaching
கற்றல் - Learning
கற்றல் வழி - Learning process
கற்றல் விதிகள் - Laws of learning
காகிதம் எழுதுகோல் தேர்வு - Paper-pencil test
காடல் - Catel
காட்சி இயக்கம் - Realistic movement
காட்சி சாலை - Exhibition
காட்சிப் பொருள் - Concrete object
காதலூக்கம் - Sex instinct
காமினியல் - Cominius
கால வயது - Chronological age
காவியம் - Epic
கிண்டர்கார்டன் - Kindergarten
கிலி - Phoebia
கில்பாட்ரிக் - Kilpatric
கிழட்டுப் பருவம் - Old age
கிளைமுக வகுப்பு - Delta class
கீழை நாடுகள் - Oriental countries
குடியாட்சியும் கல்வியும் - Democracy and education
குடிமைப் பயன் - The citizenship aim
குடிமைப் பயிற்சி - Citizenship
குடும்பக்கலை - Home science
குத்துச்சண்டை - Boxing
குமரப்பருவம் - Adolescence
குயின்டிலியன் - Quintilian
குலக் கூறு - Heredity
குழந்தை இல்லம் - House of children (Casei de Bambini)
குழந்தையின் வளர்ச்சிப்படிகள் - Stages of child growth
குழந்தை வளர்ப்புப் பள்ளி - Nursery school
குழுக்கள் - Squads
குறிக்கோள்கள் - Ideals
குறிப்புணர்த்தல் - Suggestion
குறுக்கு ஒருமைப்பாடு - Horizontal
கூடி வாழியல் - Sociology
கைத்திறன் அளிக்கும் பள்ளி - Secondary modern school
கொடைப் பணம் - Donations
கொள்கைத் திரட்டு அறிவியல் - Theoritical science
கொள்கை முறை - Theory
கொள்கை முறையினர் - Theorists
கோட்பாடுகள் - Regulations
க்யூடர் தொழில் தேர்தல் - Kuder preference record
சட்டம் - Law
சமயச் சார்பற்ற - Secular
சமய வழிபாடு - Religious practice
சமய வாழ்க்கை - Monasticism
சமுதாய ஒப்பந்தம் - Social contract
சமூக அறிவியல் - Social science
சமூக உணர்ச்சி - Social consciousness
சமூக உணர்வு நிலை - Social [stage
சமூக நலப் பயன் - The social welfare aim
சமூகப்பயன் - The social aim
சமூகம் - Society
சர்வோதயப் பண்பு - Sarvodaya philosophy
சாதனை - Achievement
சிக்கல் - Problem-complex
சிறப்பு நுண்ணறிவு - Special factor (in intelligence)
சிறுமூளை - Cerebellum
சீனத்துக் கல்வி - Chinese education

சுரங்கக் கலை - Minerology
சுற்றுநூல் நிலையம் - Mobile library
செயலக அலுவல் - Secretarial practice
செயல்திறன் - Motor skill
செயற்படுத்தல் - Application
செய்காட்சிக் கொள்கை - Experimentalism
செய்தி இதழ்கள் - Newspapers
செய்திச் சுருள் - News reel
செய்துகாட்டு முறைகள் - Practical methods
செய்து காணல் - Experiment
செவிவழிக் கல்வி - Audio education
சொல்லழகு - Diction
சொல்லாடல் - Discussion
சொல்லில்லாத் தேர்வு - Non-verbal test
சொற்களுக்கு முன் பொருள் - Things before words
சொற்கோப்புக் கலை - Rhetoric
சொற்போர் - Dialectic
சோசியோ மெட்ரிக் அளவைகள் - Socio-metric scales
சோதனை உளநூலார் - Experimental psychologists
சோதனை முறை - Experimental method
சோர்வு - Fatigue
சோஃபி - Sophi
டால்டன் முறை - Dalton plan
தகுவழி - Resource
தணிக்கை - Censorship
தணிக்கையாளர் - Inspector
தத்துவ ஞானிகள் - Philosopher
தத்துவம் - Philosophy
தரப்படுத்திய - Standardised
தரங்கள் - Norms
தருக்க அளவை ஒழுங்கு - Logical order
தருக்க நூல் - Logic
தலைமைத் தன்மை - Leadership
தவறிய பொருத்தப்பாடு - Maladjustment
தளர்த்துதல் முறை - Acceleration
தற்காட்சி - Self-introspection
தற்குறிப்பு - Self-diary
தனித்தன்மை - Individuality
தனியாள் வேற்றுமைகள் - Individual differences
தனியொருவன் - Individual
தன் ஆட்சி மண்டலம் - Autonomic system
தன் இயக்கம் - Self-activity
தன்கோட் புகுத்தல் - Indoctrination
தன் மதிப்புப் பற்று-Self-regarding instinct
தன்மையுணர்ச்சி - Individual consciousness
தன்வயப்படுத்தல் - Assimilation
தன் விருப்பத்திற்கிணங்கிய அடக்கம் - Permissive discipline
தன்னம்பிக்கை-Self-confidence
தன்னளவை அளவைகள் - Self-rating scales
தன்னியல் வளர்த்தல் - Self-development
தன்னிலை - Personal stage
தன்னை அறிதல் - Self-knowledge
தன்னை உணர்ந்துகொள்ளுதல் - Self-realization
தார்ன்டைக் - Thorndike
தாவர நூல் - Botany
தாளாளர் - Correspondent
தான் தொடங்காற்றல்-Initiative
திட்டமானதிலிருந்து திட்டமற்றதற்கு - Definite to indefinite
திட்டம் - Plan
தியாகம் - Sacrifice
திரட்டுப் பதிவு - Cumulative record
திருவினை யாக்கம் - Volition
திரைக் காட்சி - Film show
திரைப்படத் துண்டுகள் - Film strips
திரைப்பட நிலையங்கள் - Cinema houses
திறன்கள் - Abilities
துப்புரவு - Cleanliness

துலங்கல் - Response
துன்பியல் - Tragedy
தூண்டல் - Stimulus
தெளிவு - Clarity
தொகுத்தறி முறை - Inductive method
தொடக்க நிலை - Elementary stage
தொடர்புள்ள பாடங்கள் - Correlative subjects
தொடர்புறுத்தல் - Association
தொடுபுலன் - Sense of touch
தொலைக்காட்சி - Television
தொழில் - Occupation
தொழில் அமைப்புக்கள் - Industrial establishments
தொழில்துறை இரசாயனம் - Industrial chemistry
தொழில்முறை வழி காட்டல் - Vocational guidance
தொழிற்கல்விப் பள்ளி - Technical school
நகராட்சி - Civil administration
நகைப்பு எதிர்வினைத் தேர்வு - Laugh reaction test
நச்சுக் கொல்லிகள். - disinfectants
நடு நரம்பு மண்டலம் - Central nervous system
நடுப் பருவம் - Middle age
நடைமுறை - Practical
நடைமுறையினர் - Practical men
நடையழகு - Style
நட்பின் உறவு நிலை - Social interplay
நட்பு வரைபடம் - Friendship chart
நம்பகம் - Reliability
நல்லிசை - Good music
நல்லூக்கங்கள் - Refined instincts
நனவுநிலை - Consciousness
நன்மை - Goodness
நாடக முறை - Dramatization
நாடகம் - Drama
நாட்டத் தேர்வு - Aptitude test
நாட்டம் - Aptitude
நாட்டினர் - Nation
நாப்பறை - Propaganda
நாற்பாடம் - Quadrivium
நிகழ்ச்சிக்குப் பின் பட விளக்க ஆளுமைத் தேர்வு - Thematic apperception test
நில உட்கூற்றியல் - Geology
நிலநூல் - Geomorphology
நிறுவனங்கள் - Agencies
நினைவாற்றல்-Memory remembering
நீண்ட குழவிப் பருவம் - Prolonged infancy
நுகர்தல் - Enjoyment
நுண்கலை - Fine arts
நுண்ணறிவு - Intelligence
நுண்ணறிவுச் சோதனைகள் - Intelligence tests
நுண்ணறிவுத் திறன் ஈவு - Intelligence quotient
நுண்ணியற் கணிதம் - Calculus
நூல்களைக் கற்கும் திறன் - Academic ability
நூல் நிலையங்கள் - Libraries
நெகிழ்ச்சி - Flexibility
நெடுக்கு ஒருமைப்பாடு-Vertical
நெற்றிப் பிரிவு - Frontal Lobe
நேரல் முறை - Indirect method
நேர்முகக் கல்வி - Direct education
நேர்முறை - Direct method
நேர்மை - Integrity
நோக்குடைத் தொழிற்பாடு - Purposive activity
பகற்கனவு - Day dream
பகுத்தறி நிலை - Prudential stage
பகுத்தறி முறை - Deductive method
பகுத்தறி வடிவக் கணிதம் - Analytical geometry
பகுத்தறிவாற்றல் - Reasoning
பஞ்சாலை இயல் - Textile technology
படச் சுருள்களின் நூல் நிலையங்கள் - Film libraries
படித்தல் - Reading

படைக்கும் உளப்போக்கு - Creative tendency
படைப்பாற்றல் - Creative skill
பட்டியல் - List
பண்டை மக்கள் - Aborigines
பண்பாட்டு நோக்கம் - Culture aim
பண்பாட்டு வரன்முறைக் கொள்கை - Culture epoch theory
பண்புக் கூறுகள் - Traits
பதிவு நாடாக் கருவி - Tape recorder
பந்தங்கள் - Torches
பயன்வழி - Pragmatism
பயன்வழி உண்மைக் கொள்கை - Realistic Pragmatism
பயன்வழிக் கொள்கையினர் - Pragmatists
பயன் விதி - Law of effect
பயிர்த் தொழில் - Agriculture
பயிற்சி மாற்றம் - Transfer of training
பயிற்சி விதி - Law of exercise
பயின்ற கவர்ச்சிகள் - Acquired interests
பொருத்திக் கொள்ளுதல்-Adjustment
பரந்த கல்வி - Liberal education
பரப்பு - Area
பல்நோக்குக் கல்விச்சாலைகள் - Multi - purpose schools
பல்நோக்குப் பொறியியற் பள்ளி - Politechnic
பல்வழி ஆர்வங்கள் - manysided interests
பன்முறைப் பயிற்சி பன்னுடை முறை - Selection
பாகுபாடு செய்தல் - Classification
பாட ஏற்பாடு - Curriculum
பாட ஒப்படைகள் - Assignments
பாடப் புத்தகம் - Text - book
பாட்டு - Lyric
பாடி வாழ்க்கை - Camp life
பார்த்தல் - to see
பார்த்துக் கற்றல் - Learning by imitation
பாலுணர்வுத் தாள்கள் - Yellow literature
பால்வகைக் கல்வி - Sex education
பால்பகாக் கல்வி - Co-education
பித்தப் பை - Gall
பிழைக்கும் வழிப் பயன் - The living aim
பிளேட்டோவின் உரையாடல்கள் - Plato's Dialogues
பிறர்நிலை அனுபவம் - Vicarious experience
பிற்போக்கு மாணவன் - Backward pupils
பீடிப்பு - Obsession
புகுமுகப் பொறியியல் - Pre-engineering
புண்கள் - Lesions
புதிய கிரேக்கக் கல்வி - Neo Greek education
புதுப் பாங்குடைமை - Originality
புலக்காட்சி - Perception of the senses
புலமை இயக்கம்-Scholasticism
புலனரம்புகள் - Sensory nerves
புலன் உணர்வு - Sensation
புலன்கள் - Senses
புள்ளி நுணுக்கங்கள்-Statistical techniques
புள்ளி விவர முறைகள் - Statistical method
புள்ளி விவரம் - Statistics
புறக்கூறுபாடுகள் - Surface traits
புறத்தது - Objective
புறத்தேற்றம் - Project
புறத்தேற்று நுண் முறைகள் - Projective techniques
புறநிலைகள் - Objective states
புறமுக இயல்பு - Extroversion
புறமுகர்கள் - Extroverts
புறவய முறை - Objective method
புறவுண்மைக் கொள்கை - Realism

புனர் ஆக்கம் - Recapitulation
புனர் ஆக்கக் கொள்கை - Recapitulation theory
பூசல் - Quarrel
பெண்டர் பார்வை இயக்க முழு நிலைத் தேர்வு - Bender Visual Motor Gestalt Test
பெருநாட்டு வகுப்பறை - Continental class - room
பெருமுறைத் தொழில்கள் - Large scale industries
பெருமூளை - Cerebrum
பெற்றி உளவியல் - Faculty psychology
பேட்டி - Interview
பொது அறிவியல் - General science
பொது உண்டிச்சாலை - Public mess
பொது உளவியல் - General psychology
பொதுக் கல்வி - General education
பொதுக் குறிக்கோள்கள் - General objectives
பொதுநலத் திட்டங்கள் - Public welfare schemes
பொதுநிலை மாணவர்கள் - Normal pupils
பொது நுண்ணறிவு - General factor (in intelligence)
பொதுமை பிரித்தல் - Abstraction
பொது விதி காண்டல்-Generalization
பொருளாதார நூல் - Economics
பொறியியல் - Engineering
பொறியியல் திறன்-Engineering skill
பொறுப்புணர்ச்சி - Sense of responsibility
பொற்காலம் - Golden age
போரூக்கம் - Instinct of pugnacity
பௌதிக அறிவியல் - Physical science
பௌதிகம் - Physics
ப்ரோடோகாரஸ் - Protogorus
மக்கண்மைக் கல்வி-Humanistic education
மக்கள்இயல் நூல்கள் - Humanities
மண்ணீரல் - Spleen
மதிப்பிடுதல் - Evaluation
மதிப்புக்கள் - Values
மரியாதை - Courtesy
மருத்துவக் கலை - Medicine
மருத்துவன் - Medicine
மறக் கல்வி - Non-moral education
மறத்தல் - Forgetting
மறப்பண்பு - Chivalry
மறிவினை - Reflex action
மறைமுகக் கல்வி - Indirect education
மனப் பெற்றிகள் - Faculties
மனவயது - Mental age
மனவெழுச்சி - Emotion
மனவெழுச்சி இடர்ப்பாடு - Emotional mal-adjustment
மனவெழுச்சி உட்பாடு - Emotional tone
மனித இன நூல்-Anthropology
மனித உரு வரைதல் - Man drawing test
மனிதக் குரங்கு-Ourang outang
மாணவர் தலைவன் - Pupil leader
மாதிரிப் பாடம் - Model lesson
மாற்றங்கள் - Changes
மிகப் பெரும் கல்வி நூல் - The Great didactic
மின்னசோட்டா எழுத்தர் திறன் நாட்டத் தேர்வு - Minnesotta clerical aptitude test
மீட்டுக் கொணர்தல் - Recall
மீத்திறப் பிள்ளைக்குக் கல்வி - Education for the gifted
முகுளம் - Medulla oblangata
முக்கோணக் கணிதம் - Trignometry
முட்டுச் சந்து - Blind alley
முதன்மைப் பற்று - Master sentiment
முதியோர்க்கு மட்டும் - For adults only

முதிர் கல்லூரி - Senior college
முதிர்ச்சி - Maturation
முதிர்வுப் பருவம் - Adulthood
முதுகெலும்பு நரம்பு - Vertebral nerves
முதுகெலும்புப் பிராணி - Vertebrates
முதுமைப் பருவம் - Senescence
முப்பாடம் - Trivium
முயற்சிக் கல்வி - Learning by effort
முயன்று தவறிக் கற்றல் - Learning by insight
முருகியல் - Aesthetics
முழு வாழ்வுப் பயன் - The complete living aim
முறை - Form
முறைமை - Formal
முறைமைக் கட்டுப்பாடு - Formal discipline
முறைமைக் கொள்கை - Theory of formal discipline
முற்போக்குக் கல்விக் கழகத்தினர் - Progressive Education Association
முற்போக்குக் கல்வியாளர்கள் - Progressive educationists
முற்போக்குப் பள்ளி - Progressive school
முற்போக்கு மாணவர் - Forward pupil
முற்றுதல் நிலை - Maturity
முன்னேற்பாடு - Preparation
முன்னேற்றம் - Progress
முனி சிரேட்டன் - Medicine man
மூச்சுப் பை - Lungs
மூளையின் அளவு - The size of the brain
மூளையே உள்ளத்தின் நிலைக்களன் - Brain is the organ of the mind
மெய்யறிவாளர் ஆட்சி - Philosopher king
மேடைப் பேச்சுக் கலை - Oratory
மேல் உயர்நிலைக் கல்வி - Higher secondary education
மைய நிலை - Median
மைய வட்டம் - Concentric
மொழி நூல் - Philology
யார் என்று நினைத்துப் பார் - Guess who
ரோர்ஷாக் புறத்தேற்று நுண்முறை - Rorschach
வடிவக் கணிதம் - Geometry
வயது - Age
வரைபட ஒளி - Epidiascope
வரைபடங்கள் - Graphs
வழுக்கிடை - Mode
வழிகாட்டி - Director
வழிகாட்டி மகளிர் - Girl guides
வழிகாட்டுதல் - Guidance
வழிவழி நோக்கம் - Traditional aim
வழிவழி (மரபு) - Tradition
வாணிபக் கணிதம்-Commercial arithmetic
வாரன் - Warren
வாள் வீசுதல் - Javeline throw
வான நிலை - Weather
வான நூல் - Astronomy
வானொலி நிலையங்கள் - Radio stations
விடாப்பிடி - Perseverance
விடுதலையுணர்ச்சி - Love of freedom
விரிவுரையாற்றல் - Lecture
விருப்பக் கவனம் - Voluntary attention
விருப்பச் செயல் - Voluntary action
விருப்பப் பாடங்கள் - Electives
விலங்கனையர் - Brutes
விலங்கு நூல் - Zoology
விவிலியம் - Bible
விழுப்பம் தருதல் - Enrichment
விளக்கங் கூறுவகை - Interpretative
விளக்கப் பாடம் - Demonstration lesson
விளக்குதல் - Demonstration
விளம்பரம் - Advertisement
வினா அறிக்கை - Questionnaire
வீடுபேறு - Salvation
வெகுளி - Anger

வெளிச்செல் நரம்புகள் - Efferent nerves
வெளிநரம்பு மண்டலம்-Peripheral nervous system
வெளியீடு - Expression
வெற்றுநிலைக் கருத்து - Abstract concepts
வெற்றேட்டுக் கொள்கை-Tapula rasa theory
வேலைப் பழக்கங்கள் - Habit of works
ஹெர்பாஷியம் - Herbatium
ஸ்டென்குவிஸ்ட் பொறிச் சேர்வுத் தேர்வு - Stenquist

BIBLIOGRAPHY

BOAZ (G.D.) ... General Psychology.

GATES ... Educational Psychology.

TIRUKKURAL ... Tiruvalluvar.

WATTS (A.F.) ... Language and mental development of children.

KOCHHAR S.K. ... School Organization.

REV. SIQUEIRA (T.N.) ... History of the problems of Education.

JACKS L.P. ... Education of the whole man.

THOMSON G.H. ... Modern Philosophy of Education.

JOAD C.E.M. ... About Education.

JACKS M.L. ... Total Education.

UNIVERSITY EDUCATION COMMISSION ... Report of the University Education Commission V. 1, V. 2 Part–I; Part III.

GORDON D.S. ... Principles and Practice of Education.

MUKERJI S.N. ... Education in India.

" ... Education in India in the XX Century.

THIRUMANDIRAM ... Tirumular.

Report of the All India Secondary Education Commission.

Report of the Elementary Education Committee of the Madras State.

FERNALD G.M. ... Remedial Techniques.

MORT (PAUL. R.) AND VINCENT ... Modern Educational Practice.

MURSELL, J.L. ... Development Teaching.

MURSELL JAMES L. ... Successful Teaching.

WARD H ROSCOE F. ... Approach to Teaching.

PINSENT A. ... Principles of Teaching Method.

GREENOUGH A. ... Theory and Practice in the new Schools.

ADAMS JOHN ... Modern Educational Practice.

BOSSING N.L. ... Progressive Methods Teaching in Secondary Schools.

DUMVILLE B.	...	Teaching its nature and varieties.
MOCHLMAN A.B.	...	School Administration.
BROWNELL C.L.	...	Health Problems how to solve them.
STEAD H.G.	...	Modern School Organization.
NASH JAY B.	...	Physical Education Interpretions and Objectives.
DAVIES M.B.	...	Physical Training Games and Athletics in schools.
SHARMAN J.R.	...	Introduction to Health Education.
,,	...	Modern principles of physical education.
SELMON A.C.	...	Health and Longevity.
HOPE E.W.	...	Manual of School Hygiene.
GAIND D.N. AND SHARMA R.P.	...	School Administration.
RYBURN W.M.	...	Organization of Schools.
CHAUB S.	...	Some Great Western Educations.
RAWAT D.	...	Statistics and Measurement in Education.
JAMES WILLIAM	...	Pragmatism.
ALBERTY	...	Re-organizing the High School Curriculum.
GROUT	...	Health Teaching in Schools.
SEARS	...	Public School Administration.
MCFARLAND	...	Psychology and Teaching.
MUNN NORMAN L.	...	Psychology : The Fundamentals of Human Adjustment.
		Year Book of Education 1953.
UNESCO	...	World Survey of Education.
AHUJA R.L.	...	Philosophical and Sociological Bases of Education.
SAIYIDAIN K.G.	...	Problems of Educational Reconstruction.
KOCHHAR S.K.	...	Educational Guidance and Counselling.
MUKERJI S.N.	...	Secondary School Administration.
MONROE J.	...	Encyclopaedia of Educational Research.

JAYASURYA J.E. ... Statistical Calculation for Teachers.

RUSK R. ... Doctrines of the Great Educators.

NATIONAL SOCIETY FOR THE STUDY OF EDUCATION ... Community Education. 58th Year Book.

GREAT BRITAIN BOARD OF EDUCATION ... Hand book of suggestions for teachers.

MELVIN A.G. ... General Methods of Teaching.

SMITH F. AND HARRISON A.S. ... Principles of Class-Room Teaching.

YOAKAM G.A. ... Modern Methods and Techniques of Teaching.

EYSENCK H.J. ... Sense and Non-sense in Psychology.

ROSS JAMES (S) ... Ground work of Educational Psychology.

THOMPSON M.M. ... An outline of the History of Education.

CHAUB S.P. ... Some Great Western Educators.

SINGH M.P. ... Students' History of Educational Thought Vol. I.

LAYTON E. ... The School Looks Around.

COCK A.A. ... Practical Hints for Junior Teachers Vol. IV.

LIVINGSTONE R. ... Some thoughts on University Education.

LODGE RUPERT C. ... Philosophy of Education.

RATNANAVARATNAM ... New Frontiers in East-West Philosophies of Education.

DURANT WILL ... Story of Philosophy.

MYERS A.R. AND WILLIAMS ... Education in a Democracy.

HORNE ... Democratic Philosophy of Education.

CUNNINGHAM W. F. ... Pivotal Problems of Education.

NUNN P.C. ... Education—its data and First principles.

RYBURN W.M. ... Suggestions for the organisation of schools in India.

STEAD H.G. ... Modern School Organization.

VERGHESE PAUL ...	School Organization.
BRUBACHER J.S. ...	Modern Philosophies of Education.
RAYMONT T. ...	Modern Education.
FRAISER G.W. ...	Introduction to the study of Education.
QUILLEN I.J. HANNA L.A. ...	Education for Social Competence.
MONROE P. ...	Text-book in the History of Education.
WILDS ELMER H. LOTTICH KENNETH V. ...	The Foundations of Modern Education.
LIMAYE D.T. ...	The dynamics of Education.
SKINNER CHARLES E. ...	Educational Psychology.
PUBLICATIONS DIVISION ...	India 1961.
BOGARDUS E.S. ...	Sociology.
RAYMONT T. ...	Creative Education.
CROW AND CROW ...	Introduction to Education.
ADAMS J. ...	Modern Developments in Educational Practice.
BHATIA KAMALA AND BHATIA ...	The Principles and Methods of Teaching.
COLE P.R. ...	Method and Technique of teaching.
RICHMOND W.D. ...	Apology for Education.
UNESCO ...	Humanism and Education in East and West.
RUSK ...	An outline of Experimental Education.
HUGHES AND HUGHES ...	Learning and Teaching.
BYRENE ...	The teacher and his pupils.
GLASSEY AND WEEKS ...	The Educational Developments of children.
THORNDIKE AND GATES ...	Principles of Education.
GILBERT HIGHEST ...	The Art of Teaching.
FINDLAY ...	The Foundations of Education. Mary Land Teacher.
BLAIR ...	Educational Psychology.
THOULESS ...	General and Social Psychology.